நாடா-ஓர் கயிறு, நூலுழி, பின்னற்கயிறு.
நாடாட்சி - நாடாளுதல். [பாராது.
நாடாது - ஆராயாது, ஆய்ந்தோய்ந்து
நாடாத்தி-சான்றூர் பெண்ணுக்குரியசாதிப் பெயர்.
நாடாப்பூச்சி - வயிற்றுப்புழு வகை.
நாடாவி - நாடான். [ள்ள ஒரு சாதியார்.
நாடாள்வார் - பழனிமலைப் பிரதேசத்திலு
நாடான் - சாணருக்குரிய பட்டப் பெயர்.
நாடி - தாது, ஆண்மயிர், தாது, இருபத்து நாலு நிமிடங் கொண்டது, இலை நரம்பு, உட்டுளை, தாடி, துவாளிப்பு, நரம்பு, நாசி, நாழிகை, பூவிற்றூள், மூக்கு, யாழ் நரம்பு, ஆராய்ந்து, ஆராய்பவள், ஆராய்பவன், சோதிடநூல், சுக்கிரநாடி, மோவாய், மாளிகையின் மேற்பாகத் தோர் உறுப்பு.
நாடிகூடம்-விவாகம் நிச்சயிக்கையிற் பார்க்கும் கிரகச்சேர்க்கை.
நாடிகோர்ப்பம் - மரமஞ்சள். [காய்.
நாடிகேளம் - நாரிகேளம், தென்னை, தேங்
நாடிக்கட்டி - நாடிவித்திரதி.
நாடிக்கிரந்தம் - பதினேந்து நாடிக்கிரந்தங்கள். அவை: சூரியநாடி, சந்திரநாடி, குசநாடி, புதநாடி, சுக்கிரநாடி, குருநாடி, சாமிநாடி, ராகுநாடி, கேதுநாடி, சர்வசங்கிரகநாடி, பாவநாடி, துருவநாடி, சர்வநாடி, சுகநாடி, தேவிநாடி என்பன. இங் நாடிக்கிரந்தங்களிலே உலகத்திலேயுள்ள மாந்தர் பெரும்பாலார்க்கும் ஜாதகங்களும், பலன்களும்கூறப்பட்டுள்ளன [ணல்.
நாடிசுத்தி-யோகத்திற்குத் தாதுசுத்தி பண்
நாடிதாரணை - நவதாரணையி லொன்று.
நாடிநரம்பு - நாடியோட்ட நரம்பு.
நாடிபார்த்தல் - நாடிக் குறியறிதல்.
நாடிப்பயிற்சி / நாடிப்பரீட்சை } தாதறியு மறிவு.
நாடிமண்டலம்-ஆகாய சமரேகை, சூர்யவீதி.
நாடியர் - நாட்டிலுள்ள பெண்டிர், ஆராய்பவர்.
நாடியுப்பு - வளையலுப்பு.
நாடியெழும்புதல் - தாதுகிளம்புகை.
நாடியைத்தாங்குதல் - இரத்தல்.
நாடியொடுக்கம் - நாடித்தூக்கம்.
நாடியொடுங்குதல் - நாடிவிடுதல்.
நாடியோடுதல் - நாடியியங்குதல்.
நாடியோட்டம் - தாதுநடக்குமியல்பு.
நாடிவிதி - நாடித்திட்ட மறிவிக்கும் நூல்.
நாடிவிழுதல் - நாடியொடுங்கல்.
நாடு-இடம், உலகம், ஊர், நாடென்னேவல், பக்கம், பூமி, மருதநிலம், மென்புலம்.
நாடுதல்-தேடுதல், விசாரித்தல், நினைத்தல், விரும்புதல், ஒத்தல், அளத்தல், கிட்டுதல், மோப்பம் பிடித்தல், அளவுபடுதல்.
நாடுபடிதல் - நாட்டார் வசப்படுதல், தேசம் ஆணைக்குக் கீழ்ப்படிகை.
நாடுபடுதிரவியம்-நாட்டிலுண்டாகுந் திரவியம், அஃது: கரும்பு, சிறுபயறு, செங்நெல், செவ்விளநீர், வாழை, ஆனெய் என்பன.
நாடுபிடித்தல் - குத்தகை யெடுத்தல், தேசத்தை வென்று கைக்கொள்ளுதல்.
நாடுரி-நாவுரி, நாழியுரி, என்பதின்குறுக்கம்.
நாடேயன் - நாடகக்கணிகை புத்திரன்.

நாடோடி - நிலையற்றவன், ஊர் சுற்றி.
நாடோடிச்சொல் } உலக வழக்கச்சொல்.
நாடோடிப்பேச்சு } பொறுப்பற்றசொல்.
நாடோறும்-நாள்தோறும், தினந்தோறும்.
நாடோன்-நாடகக்கணிகை புத்திரன். [தல்.
நாட்கடத்துதல்-நாள்விடுதல், காலந் தாழ்த்
நாட்கணக்கு-அன்றூடக் கணக்கு. [ணம்.
நாட்கால் - மங்கலப் பந்தருக்கு முதலூட்டுங்
நாட்குறித்தல் - நன்முகூர்த்தம் நியமித்தல்.
நாட்கூலி - அற்றைக்கூவி, தினச்சம்பளம்.
நாட்கொள்ளுதல் - புதிதாய்த்தொடங்கல்.
நாட்செய்தல் - நாட்கொள்ளல், முகூர்த்த நாள் நியமித்தல்.
நாட்செலவு-அன்றன்று செல்லுஞ் செலவு, நாட்செல்லுதல், காலந் தாழ்த்தல்.
நாட்டமிர்தம்-நாடுபடுபொருள், நாட்டிலமிர்தம், நாட்டிற் கிடைக்கும் பொருள்.
நாட்டமிலி - குருடன், கவனமற்றவன்.
நாட்டமைதி - நாட்டுச் சிறப்பிற்குடையன, அவை: குறும்பின்மை,செங்கோல்,செல்வம், செழிப்பு, நோயின்மை, விளைநிலம்: என்பன.
நாட்டம்-அசைவு, ஓர்பண், கண், நோக்கம், வான், விருப்பம், ஆராய்ச்சி, சோதிடம், அசைவு, குறிப்பு.
நாட்டம்பாட்டம் - செங்கல்லைக் குறிக்கும் நெடுக்குமாக வைப்பது.
நாட்டல் - ஆடல், நாட்டுதல், தாபித்தல்.
நாட்டவத்தனம் - நாட்டுப்பாங்கு, நாட்டு வழக்கம்.
நாட்டவன் - நாட்டான், கிராமவாசி.
நாட்டர-நாட்டுப்பசு, கிராமப்பசு, ஊர்ப்பசு.
நாட்டாசாரம்-தேசவழக்கம் சுதேச முறை.
நாட்டாண்மை - ஊராதிகாரம். [பெயர்.
நாட்டார்-ஊரார், சில ஜாதியாரின் பட்டப்
நாட்டியக்காரன் - கூத்தன், இடம்பன்.
நாட்டியசாலை - நடனசாலை, நாடகசாலை.
நாட்டியப்பிரியன் - சிவன், நடனப்பிரியன்.
நாட்டியம்-கருத்து, குறிப்பு,கூத்து,நடனம்.
நாட்டிலமிர்து } நாடுபடுதிரவியம் ஐந்து
நாட்டிலமிழ்து } வகை.
நாட்டு-நாட்டென்னேவல்,தாபிப்பு,தரிப்பு, ஊன்றுதல், நிலை.
நாட்டுக்கடுக்கன்-இலங்கையில் வடபாகத்திலுள்ள ஊர்களில் வசிப்போர் அணியும் கடுக்கன் வகை.
நாட்டுக்கணக்கன் - ஊர்க்கணக்கன்.
நாட்டுக்குற்றம் - ஊருக்குத் தீது செய்வன. அவை: கள்வர்,கிள்ளை,தன்னரசு,தொட்டியர், நட்டம், பன்றி, பெருமழை, மிகு காற்று,மிகுமழை, யானை,விட்டில்,வேற்றரசு.
நாட்டுச்சவுண்டல் - பெரிய தகரை.
நாட்டுச்சார்பு-மருதநிலம்,அஃது:நாட்டைச் சார்ந்திருப்பதாகிய வயல்கள் சூழ்ந்த நிலம். [பு.
நாட்டுச்சிறப்பு-நாட்டுவளம், நாட்டுச்செழிப்
நாட்டுதல் - தாபித்தல், நடத்தல், நிறுத்தல்.
நாட்டுநிலாவிரை - நாட்டுநிலாவரை, நிலவாகை.
நாட்டுப்புறம் - பட்டிக்காடு, கிராமச்சார்பு.
நாட்டுப்பெண் - மருமகள், மகன் மனைவி.
நாட்டுபோக்கு - நாட்டுக்கடுத்த விதம்.
நாட்டுவழக்கம் - தேசநடை, தேசவழக்கம்.
நாட்டுவளப்பம்-நாட்டின்சீர்,நாட்டுவளமை.
நாட்டுவளம் - நாட்டுச் சிறப்பு, நாட்டுச் செழிப்பு. [வாரம்.
நாட்டுவெள்ளரி . ஓர் வெள்ளரி, நாட்டுரு
நாட்டை - ஓர் பண், ஓரிராகம். [தல்.
நாட்படுதல் - நாட்செல்லுதல், காலந்தாழ்த்
நாட்பட்டது-நாட்சென்றது,பழமையானது
நாட்பணிவிடை - அன்றூடக வேலை,தினக்கட்டளை, நன்முகூர்த்தத்திற் செய்யும் வேலை.
நாட்பார்த்தல் - சுபதினம் பார்த்தல்.
நாட்பு-ஞாட்பு, வலி, போர், போர்க்களம்.
நாட்பூ - அன்றலர்ந்த பூ, நாண்மலர்.
நாட்பொருத்தம்-சென்மநட்சத்திரப் பொருத்தம்,இஃது: தசப்பொருத்தத் தொன்று.
நாண-கூச, பின்னிட, அடங்க,வாட, அஞ்ச, பிணங்க.
நாணகம் - நாணயம், வாய்மை, மெய்ம்மை.
நாணக்கேடு-வெட்கமின்மை,மானமின்மை.
நாணப்படுதல்-அடங்குதல், மதித்தல்,வெட்கித்தல், அச்சப்படுதல், வெருவுதல்.
நாணம்-அச்சம்,அடக்கம், மதிப்பு,வெட்கம். இஃது: மகடூஉக்குணம்நான்கிலொன்று.
நாணமுற்றோனவிநயம் - வணங்கிய தலையும், மறைந்த செய்கையும், வாடிய முகமும், கோடிய வுடம்பும், கெட்ட வொளியும், கீழ்க் கண்ணோக்கத்தோடு நடித்தல் என்ப.
நாணயக்கயிறு - மூக்கணங்கயிறு. [ரன்.
நாணயக்காரன் - நிதானி, காசுக்கடைக்கா
நாணயங்குத்துதல்-மிருகங்களுக்கு மூக்குத்துளைத்தல், நாணயமடித்தல்.
நாணயங்குலைதல் } மானமழிதல்,மதிப்
நாணயங்கெடுதல் } பழிதல்.

நாணயசில்லம்-அவமானம், அவமரியாதை.
நாணயச்சரக்கு-நல்லசரக்கு, விலைச்சாமான்.
நாணயஞ்செலுத்துதல், உண்மை தவறாமல் நடத்தல், பேச்சை யுண்மைப்படுத்தல்.
நாணயத்தப்பு - நாணயப்பிழை, வாக்குத் தவறு.
நாணயம் } உண்மை, உயர்வு, ரோசம்,
நாணியம் } கட்டுப்பாடு, காசுநாணயம், நிதானம், நேர்மை, வழக்கம், வாக்குப் பிசகாமை, மூக்குக்கயிறு. [னி.
நாணயவான்-உண்மை தவறாதவன், நிதா
நாணறை-நாணற்றவன், வெட்கமற்றவன்.
நாணல் - ஓர் புல், நாணுதல், அடங்குதல்.
நாணவங்தான்-நாணுவம், நாகணவாய்ப்புள்
நாணற்கரும்பு - ஓர்வகைக் கரும்பு, பேய்க் கரும்பு. [செடி.
நாணுங்கள்ளி - ஓர் கள்ளி, இலைக்கள்ளிச்
நாணுன் - நாளுக்குநான், நாடோறும். [ரி.
நாணி-நாணமுடையாள், வில்நாண், வின்னு
நாணிக்கண்புதைத்தல்-அகப்பொருட்டுறை யிலொன்று, அகப்பாட்டுறுப்புளொன்று.
நாணித்தல் - நாணுதல், வெட்கமடைதல், அஞ்சுதல்.
நாணிலி - வெட்கமில்லாதவன், அவமானி.
நாணு-நாண், வெட்கம், வெட்குதல், நாணம், அச்சம், நாணு என்னேவல்.
நாணுகம் - குதிரை, கந்துகம், புரவி.
நாணுதல் - அடங்குதல், மதித்தல், வெட்குதல், அஞ்சுதல், பின்னிடுதல், வெருவுதல்.
நாணுவத்தான் }
நாணுவம் } நாகணவாய்ப்புள்.
நாணுவான் }
நாணேற்றிடுதல் } வில்லேற்றல், விற்
நாணேற்றுதல் } றெறித்தல்.
நாணேயம்-நாணயம், வாக்குறுதி, நேர்மை.
நாண்-கயிறு, நாணென்னேவல், வில்லின் நாண், வெட்கம், மாங்கிலியச் சோத்த சரடு, நரம்பு, சந்தி.
நாண்மகிழிருக்கை - திருவோலக்கம்.
நாண்மதி - பூரணசந்திரன்.
நாண்மலர் - புது மலர், அன்று பூத்த மலர்.
நாண்மீன் - நட்சத்திரம், உடுக்கூட்டம்.
நாண்முகப்புல் - ஓர் புல், நாணமுகப்புல்.
நாதகம் - வேதமோதலின் முடிவில் பிரமராச்சிய பட்டாபிஷேகம் பேரல்வ தொன்று. வேதத்தை மாத்திரம் முடிப்பது. முதலாவது விரதத்தை மாத்திரம் முடிப்பது. இரண்டாவது இரண்டினையும் முடிப்பது. மூன்றாவது.

நாதகிருத்தியர் - கடவுளது கிருத்தியத்தை யவனருளாற் புரிபவர், கடவுளுக்குத் தொண்டர்.
நாதக்குடம் - சங்கு, இடம்புரி, நந்து.
நாததத்துவம்-நாதம், நாதேந்திரியம், ஓசை.
நாதபருணி - மலம்.
நாதம்-அப்பிரகம், இந்திரியம், ஒலி, நாணயக் கயிறு, மந்திரலிபியின் பாதிவட்டம், உமை, சங்கோசை முதலிய நாதம், கந்தசுகம்.
நாதயம் - இந்துப்பு.
நாதரவி-சரீரக்கொழுப்பு, உடற்கொழுப்பு.
நாதரூபம் - சிவனதருவி லொன்று. [சில்.
நாதவத்தம் - பெருநெருஞ்சில், யானை நெரு
நாதவடிஉப்பு - கறியுப்பு.
நாதவிந்து - நூற்றெட்டுபேதங்களுள் ஒன்று. சத்தியும் சிவமும்.
நாதன் - அரசன், அருகன், எப்பொருட்கு மிறைவன், கடவுள், கணவன், குரு, சிவன், தலைவன், முனிவன், மூத்தோன், புத்தன்.
நாதா - புருஷன், சிவன், விஷ்ணு.
நாதாக்கள் - சுத்தவான்கள், பெரியோர்.
நாதாங்கி - கதவுநிலைச் சங்கிலி, பூட்டுக்களி லேருறுப்பு, பூட்டுச்சங்கிலி.
நாதாந்தஜோதி - கடவுள், விஷ்ணு, சிவன்.
நாதாந்தம் - ஞானநெறிகளி லொன்று.
நாதாந்தவிளக்கம்-ஓர் ஞான நூல். [வன்.
நாதாந்தன்-சிவன், பஞ்ச கருத்தாவி லொரு
நாதாந்தி - பொன்னிமிளை, பராசத்தி.
நாதார் - ஏழைக்குடி, அனுதிக்குடி.
நாதி - ஓர் பெருங்காயம், ஞாதி, சுற்றம்.
நாதித்தல் - ஒலித்தல், சப்தித்தல்.
நாதேயம்-இந்துப்பு, சீந்திற்கொடி, நதியிற் பிறப்பன, நீலாஞ்சனம், கல்லீயம், திருசு.
நாதேனி - மணித்தக்காளி, மணத்தக்காளி.
நாத்தழும்பல் } நா வப்பியாசப் பட்டி
நாத்தழும்பேறுதல் } ருத்தல், நாப்பழக்கம்
நாத்தனர் - நாத்தி, கணவன் சகோதரி
நாத்தாங்கி - இலைக்கள்ளி, நாதாங்கி.
நாத்தாங்கிப்பேசுதல்-எண்ணிப்பேசுதல், நா வெறுத்துப்பேசல், நாவடக்கிப்பேசுதல்.
நாத்தி - கணவன் சகோதரி, தாழ்வாரம்,
நாஸ்தி } இன்மை, சூன்யம். [நாசம்.
நாத்தி }
நாஸ்திகமதம்-சூனியவாதம், உலகாயமதம்.
நாஸ்திகம் - தெய்வமின்மை, நிரீஸ்வரம்.
நாஸ்திகன் - சூனியவாதி, உலகாயதன்.
நாத்திரம் - அதிசயம், புகழ், நாவன்மை.
நாத்திரன் - சிவன், நாவலன், பிரசங்கி.
நாத்தூண் - மைத்துனி, மச்சாள்.

நாகம்-மூழுக்கு, ஸ்நானம், அறிவு, கவரிமா, சுண்ணம், தாவிளரிக்கும் புழு, நீராடல், பூசுவன, நெய், மான்மதம், கத்தூரி, மூழுகல், வாசனை.

நாநா - பலபல, பலவித, அநேக.

நாந்தகம்-திருமாலின்வாள், வாள், கட்கம்.

நாந்தல் - ஈரம், சதுப்பு, நசநசப்பு.

நாந்தி-ஒருவனைப் புகழ்ந்து பாடிய கவி, பதினெழுகருமத்தொன்று, தற்சிறப்புப்பாயிரம்.

நாந்திகந்தரு - மாமஞ்சள்.

நாந்திகரன் } மங்கலப் பாடகன்.
நாந்திவாதி }

நாந்துதல் - நனைதல், ஈரமாதல்.

நாந்தெனி - ஓர்வகை மருந்துப்பூடு.

நாபம் - நாபி, கஸ்தூரி, கொப்பூழ்.

நாபாகன் (1) இக்ஷ்வாகு தம்பியாகிய திஷ்டன் புத்திரன். இவன் தனது கூத்திரியத் தொழிலை மேற்கொண்டொழுகி வைசிய ஞகிச் சுப்பிரபையென்னும் வைசியப் பெண்ணையே மணம்புரிந்தவன். இவன் புத்திரன் ஜலந்தான். (2) இக்ஷ்வாகு தம்பிகளுள் மற்றொருவனுகிய நபகன் புத்திரன். இவன் அம்பரீஷன் தந்தை. (3) சுகோத்திரன் புத்திரன் அம்பரீஷன்.

நாபி-(1) ஓர்விடமூலிகை, இதில் வற்சநாபி, பச்சைநாபி, வசம்பு, அந்தனநாபி, பிரம்மநாபி, சத்திரிய நாபி, வைசிய நாபி எனப் பலவகையுண்டு. (2) கஸ்தூரி, கொப்பூழ், வற்சநாபம். (3) ஆக்னீத்திரன் புத்திரர் ஒன்பதின் மருளொருவன். இவன் பங்காக ஜம்புத்துவீபங் கிடைத்தது. இவன் (பாரி மேருதேவி, புத்திரன் ரிஷபன். பரத கண்டங் காண்க.)

நாபிக்கமலம்-கொப்பூழ், தொப்புள்.

நாபிக்கொடி-கொப்பூழ்க்கொடி.

நாபிசன் } திருமால் நாபிக்கமலத்தில்
நாபிசன்மன் } உதித்தபிரமன். [கொடி.

நாபிருத்திரம் - நாபிக்கொடி, கொப்பூழ்க்

நாபித்தன் - அம்பட்டன், நாவிதன்.

நாபித்தானம்-கொப்பூழ், தொப்புள், உந்தி.

நாபிநாடி - உந்திக்கொடி, தொப்புட்கொடி.

நாபிநாளம் - கொப்பூழ், நஞ்சுக்கொடி.

நாபீலம் - கடிதடம், கொப்பூழ்க்குழி

நாபீலை - உத்தமஸ்திரீ, சற்குணவதி.

நாப்பண்-இடை, தேர்நடு, நடு, யாழினுறுப்பு

நாப்பு - எத்து, வமாப்பு, பரிகாசம்.

நாப்புற்று - நாவறளை, நாப்புண்.

நாப்பொடிதல் - நாவுலர்தல், நாவறட்டல்.

நாம - பயம், அச்சம், ஓர் உரிச்சொல்.

நாமகரணம் - நாமதேயம், பெயர், பெயரிடு

நாமகள் - சரச்சுவதி, சரஸ்வதி. [தல்.

நாமகார்த்தம் - பிநாமி.

நாமக்கட்டி-விட்டுணு பத்திக்காரர்கள் நெற்றியிலிடும் திருமண்கட்டி, வைஷ்ணவ நாமம், [வர்.

நாமக்காரர் - விட்டுணுபத்திக்காரர், வைண

நாமக்குச்சரி } ஓர் வகைப்புடவை.
நாமக்குச்சலி }

நாமசங்கிதை - சிற்பநூன் மூப்பத்திரண்டி லொன்று, ஓர் சிற்பசாத்திரம்.

நாமசாஸ்திரம் - நிகண்டு, சொற்பயன் விளக்கும் நூல்.

நாமசேடம் - மரணம், தேகவியோகம்.

நாமச்சி-நத்தை, கடைச்சாரணை, நாரத்தை.

நாமஞ்சாத்துதல் - நாமந்தரித்தல்

நாமடந்தை-சரச்சுவதி, கலைமடந்தை.

நாமதாரணை - நவதாரணையிலொன்று, அஃது: பூர்ணமாய்க் கடவுளைத் தியானித்தற்குக் கற்பித்தநாமத்தியானத்திலுலக்கடவுளே யெல்லைப்படுத்துமோர் நாமசிந்தனை.

நாமதாரி-நாமந்தரித்தோன், விட்டுணு, பத்திக்காரன், விசிட்டாத்துவைதி.

நாமதேயம் - பெயர், திருநாமம், பேர்.

நாமதேவர்-இவர், பண்டரிபுரத்தில் வசித்து வந்த ஓர் வைணவ பத்தர்.

நாமத்துத்தி - ஓர்வகை துத்திப்பூடு.

நாமப்பொருத்தம் - பெயர்ப்பொருத்தம்.

நாமமாலை-ஓர்பிரபந்தம், அஃது: அகவலடியுங், கலியடியும்வந்து மயங்கிய வஞ்சிப்பாவா லாண்மகனைப் புகழ்ந்து பாடுவது.

நாமமிடுதல் - நாமக்குறி தீட்டுதல், பெயர் கொடுத்தல், நாமதேயஞ் செய்தல்.

நாமம்-அதிசயம், இணக்கம், ஐயம், கோபம், நிச்சயம், நிந்தை, நினைப்பு, மாய்மாலமிவைகளைக் காட்டுஞ்சொல், கீர்த்தி, தும்பை, நிறைகோலினடு, பெயர், நிறைவு, எண்குற்றத்தொன்று, வைட்டிணவரிடுநாமம், அச்சம்.

நாமராசி - இராசிப்பொருத்தம், பெயர்ப் பொருத்தம், பெயரும், ராசியும் ஒன்றிய பொருத்தம்.

நாமர்தா } ஆண்மை யற்றவன், பயனற்ற
நாமிர்தா } வன். [பூடு.

நாமவந்தம் - பெருநெருஞ்சில், ஓர் மருந்துப்

நாமவெகுண்டம் } தும்பைப்பூடு.
நாமவைகுண்டம் }

நாமறல்-பேருமற்றுப்போதல், முற்றுமறல்,

அச்சம் நீங்கல். [ஸ்தலம்.
நாமணூரலவாய் - திருச்செந்தூர் என்னும்
நாமாது-சரச்சுவதி, நாமடந்தை, கலைமகள்.
நாமாபராதம் - நிந்தனை, நிந்தாட்சணை, நிந்திப்பு.
நாமாவளி - திருப்பெயர்வரிசை.
நாமி - நாமத்தை உடையது, நாமத்தன், பேருடையவன்.
நாமிதம் - வளவு, நெளிவு, கோணல்.
நாமுடி-நாதுனி,துனிநாக்கு,நாமுனி. [ரம்.
நாமோச்சாரணம்-நாமவுச்சரிப்பு, நாமமந்தி
நாம் - அச்சம், பால்பகாவுயர்திணைத் தன்மைப் பன்மை, ஓர் வகை உரிச்சொல், நாமம், பேர்.
நாம்பல் - இளைத்தல், இளைத்த மிருகம்.
நாம்பன்-இளவெருது, குருளை, கன்று, மறி.
நாம்பு - நாம்பென்னேவல், மெலிவு.
நாம்புதல்-மெலிதல், வேரூக்கல், நேமுதல்.
நாயகசுரம் - நாகசின்னம், நாதசுரம்.
நாயகச்சி } நாயகத்தி } தலைவி, தேவி, மனைவி, இல்லாள்.
நாயகத்வம் - தலைமை,பொறுப்பு. [பானை.
நாயகப்பானை - முதலுலைகட்டிப் பொங்கும்
நாயகமணி-மணிமாலைநடுவிலே கோத்திருக்கும் பெருமணி, பிரதானமணி.
நாயகம்-ஆளுகை, கிரந்திநாயகம்,சன்னிநாயகம், தலைமை,மாலையின் பிரதானமணி.
நாயகம்பண்ணுதல் - முதன்மை செலுத்தல்.
நாயகவளந்து - பொங்கல் செய்வோர் முதலுலைவைக்கும்பானை, முதற் பொங்கற், பானை.
நாயகன்-அரசன், எஜமான், எப்பொருட்கு மிறைவன், சிவன், நடத்துவோன், பாளயக்காரன்,புருடன்,கணவன்,உடையவன்.
நாயகாதிபன்-அரசன், வேந்தன், தலைவன்.
நாயகி - எசமாட்டி, பார்வதி, பெருமையிற் சிறந்தவன், மனைவி, பாரி, இல்லாள்.
நாயகிமேனி - மாகதப்பச்சை, உயர்பச்சை.
நாயகர்-சேனைத்தலைவர், தெலுங்கரிலோர் வகையார், வன்னியர், வேடர்.
நாயம் - நீதி, நியமம், நடுநிலை.
நாயாஞ்சி - நாயுருவி.
நாயர் - மலையாளர்களுள் ஒரு ஜாதியார்.
நாயனக்காரன் - நாகசுரம் வாசிப்போன்.
நாயனம்-நாயகச்சின்னம்.
நாயனுச்சியார் - உமையும், சிவனும், எசமான எசமாட்டிகள்.
நாயனுர் } நாயன் } அரசன், எசமான், ஐயனுர், கடவுள், சிவன், பெருமையிற் சிறந்தோன், பக்தர், தந்தையார்.
நாயன்தே - சுவாமி யென்று பொருள்படுந் தொடர்.
நாயன்மார் - தலைவர், துறவோர், பெருமையிற்சிறந்தோர்,நம்பகர்,பக்தர்,சிவபக்தர் களாகிய அறுபத்து மூவர் முதலியோர்.
நாயாடி-திருவிதாங்கூரிலுள்ள ஒரு காட்டுச் சாதியார்.
நாயாட்டம் - உலைச்சல், பேயாட்டம்.
நாயிகை - தலைவி.
நாயிந்தே - நாயன்தே.
நாயில் - ஞாயில், மதிலுறுப்பு.
நாயிறு - ஓர் கிழமை, சூரியன், ஆதித்தன்.
நாயிறுதிரும்பி - பொழுதுவணங்கிச் செடி.
நாயிறுபாடு - காலை.
நாயிறுபோது - மாலை.
நாயிறுவணங்கி - கொழிஞ்சி, ஓர்செடி.
நாயீ - சுவகையிலொன்று.
நாயுடு - வடுகர், தெலுங்கர்.
நாயுண்ணி - உண்ணி வகை.
நாயும்புலியும் - பதினேந்தாம் புலி விளையாட்டு.
நாயுருவி - ஓர் பூடு, வெண்ணுயுருவி.
நாயுறக்கம் - பொய்யுறக்கம், சிற்றுறக்கம்.
நாயெச்சில் - படர்தாமரை.
நாயெலுமிச்சை - நாய்விளா.
நாயோட்டம் - குதிரை நடையிலொன்று.
நாயோட்டுமந்திரம் - திருவைந்தெழுத்தில் 'சி' என்னும் எழுத்து.
நாய்-ஞமலி, குக்கல், சுனகன், சூதாடு கருவி, தென்மேற்றிசைப் பாலன்குறி, நயக்கன்.
நாய்கர் - செட்டிகள், ஓர் வர்த்தகஜாதியார்.
நாய்குருவி - நாயுருவி, வெண்ணுயுருவி.
நாய்க்கடுகு - நாய்வேளைப்பூடு.
நாய்க்கடுவான் - பிராமணத்தியிடம் சண்டாளனுக்குப் பிறந்த மகன்.
நாய்க்கரணை - சிறுகாஞ்சொறி.
நாய்க்கரந்தை-குன்றி, குன்றிமணிக்கொடி.
நாய்க்காசு-குழந்தைகளுக்கு இரவுகூயாகக் கட்டும் நாயுருவமைத்த காசு.
நாய்க்குட்டி - ஒரு பணிவு மொழி. [பூடு.
நாய்க்குட்டிச்செடி - ஓர்செடி, ஓர்மருந்துப்
நாய்க்குட்டிப்பாம்பு - கண்ணுடி விரியன்.
நாய்க்குமிழ் - ஆற்றுப்பூவரசு.
நாய்க்கெரித்தல் - இழிதொழில் செய்தல்.
நாய்க்கெளிறு - நாய்க்கெளுத்தி.
நாய்க்கொட்டி - கொட்டிச்செடி வகை.
நாய்க்குருவி - இலக்கள்ளி.
நாய்க்கடம்பு - வெள்ளைக்கடம்பு.

நாய்க்கடி
நாய்க்கடிஜன்னி } நாயின்கடிப்பு, நாய்க் கடியால்வந்த ஜன்னி நோய்.

நாய்க்கடிச்சை - வரிக்கற்றலை யென்னும் கடல்மீன்.

நாய்க்கெரிப்போன்-சண்டாளன். [கோலம்.

நாய்க்கோலம் - இழிவானகோலம், அலங்

நாய்ச்சி
நாய்ச்சியார் } எசமாட்டி, தலைவி. [று.

நாய்ச்சீரகம்-ஓர்சீரகம், சீரகவகையிலொன்

நாய்த்தயிர்வேளை-ஓர்செடி, தைவேளைப்பூடு

நாய்த்திசை-தென்மேற்குத்திசை. [துளசி.

நாய்த்துளசி-கஞ்சாங்கோரை, காட்டுவெண்

நாய்த்தேக்கு - புன்னை வகை.

நாய்நாக்கி } இலைக்கள்ளிப்பூடு,
நாய்நாக்கு } நாலுங்கள்ளி

நாய்ப்பயறு - ஓர்பூடு, ஓர்மருந்துச் செடி.

நாய்ப்பல் - கோரைப்பல், வக்கிர தந்தம்.

நாய்ப்பாகம் - ஓர் விதமானகாட்டுப் பாகற் செடி.

நாய்ப்பாலை-நீர்க்குறிஞ்சா, நீரைக்குறிஞ்சா.

நாய்ப்புடுக்கன் - ஓர்மரம், இருட்டி.

நாய்ப்புடோல் - நாய்ப்புடல், ஓர்கொடி.

நாய்முருகை - ஓர் முருகைக்கல்.

நாய்முன்-ஒருவகைச்சினப்பு, ஒருவகைப்பரு

நாய்முன்னி-ஓர்காட்டு முள்ளிச்செடி. [கல்.

நாய்விட்டைக்கல் - ஓர்வகைச் சுண்ணும்புக்

நாய்விருத்தி - ஊழியஞ்செய்யும் வாழ்வு, அடிமை வாழ்வு,

நாய்வெண்டை - நாய்த்தயிர்வேளைச் செடி.

நாய்வேம்பு - சிறுவேம்பு, நாட்டுவேம்பு.

நாய்வேலை - நாய்க்கடுகுச்செடி.

நாரகம் - நரகம், பாவலோகம்.

நாரகன் - நரகன், பாவஞ்செய்தவன். [ன்.

நாரகி-நரகவாசி, பாவவினை அனுபவிப்பவ

நாரங்கம் - நாரத்தை, நாரம், நரந்தை. தேன்றோடை,

நாரங்கி - ஒருவகைக் கிச்சிலி.

நாரசிங்கம்-இஃது: அட்டாதசவுபபுராணத் தொன்று, உபகிடத முப்பத்திரண்டி லொன்று. நரசிங்கம். இஃது: திருமாலவ தாரத்தொன்று.

நாரசிங்கன்-விட்டுஜீவு, மானிடமும், சிங்கமு மாக அவதரித்தவருவம் [களிலொன்று.

நாரசிம்மம் - காமிகத்தில மூவகைப்பேதத்

நாரணவள் - ஓர் சிருமி, மாட்டு நோயி லொன்று.

நாரணன் - விஷ்ணு, சமுத்திரசயனன்.

நாரணை - நெட்டி, நீர்ச்சுண்டிக்கொடி.

நாரணி - துர்க்கை, எண்டோளி, அந்தரி.

நாரதம்-பதினெண் புராணத்தொன்று, முகில்

நாரதன் - இவர் முந்திய மகாகற்பத்தில் உபவருணன் என்னும் கந்தருவலோகவிருந்து பிரமசிரேஷ்டர் என்னும் பிராமணர் செய்த யாகத்துக்குப்போய் அங்கேவீணை கானஞ்செய்து அங்கு வந்திருந்த ஒரு கன்னிகையை வசியஞ்செய்து அவளைப் புணர்ந்து போயினர். அம்முணர்ந்த பிராமணர் இவரைச் சூத்திர வருணத்திற் பிறக்கவென்று சபிக்க அவ்வாறே சூத்திரஞப்பிறந்து, மகாதவஞ்செய்து பிரமானச புத்திராராகப் பிந்திய கற்பத்திற் பிறந்தவர். இவர்கலகப் பிரியர். இவர் கிருஷ்ணபிராஜாபதி பிள்ளைகள் யாவருக்கும் ஞானோபதேசஞ் செய்து, சிருஷ்டிக்குப் பிரதி கூலஞ்செய்ய, அதுகண்ட கிருஷ்ண சந்ததியில்லாதவராய் நீலை யற்றலைக வென்று இவரைச்சபித்தான். அதனாலே இவர் திரிலோகங்களிலுஞ் செல்பவ ராயினர். இவர் தம் காதிலுற் கேட்டவற்றைப் பிறர்க் குரையாமலிருப்பதில்லை. தேவசபை, இராஜசபை, வேள்விச்சாலை முதலிய எவ்விடத்தும் தடையின்றிச் செல்லும் சுவாதீனமுடையவர். தனியிடங்களிலப் பட்டுத் திக்கற்றிருப்பவர்களுக்கு வெளிப்பட்டு உபாயங்களும், பின் நிகழ்வதுங் கூறுபவர். தூதுபோய்ச் சாதுரியமாகப் பேசுவதிலும் வல்லவர். தரும நூலிலும் சிறந்தவர்; வீணையிலே ஒப்பாரும்,மிக்காருமில்லாதவர். கிருஷ்ணனது அவதாரத்தைக் கஞ்சனுக் குணர்த்தினவரும், ராமாயணத்தை வான்மீகியாருக் குரைத்தவரும் இத் தேவ விருடியே. இவர் சம்பந்தப்படாத வைதிக சரித்திரங்கள் மிச்சில. இவர் திருமால் பதினெந் நாமதாரத் தொருவர். பஞ்சபாரதீய மென்னும் இசைத்தமிழ் நூலாசிரியர். பழைய புத்தர்களில் ஒருவர். கலக மூட்டுவோர்.

நாரதீயம் - அட்டாதசவுப புராணத்தொன்று. பதினெண் புராணத்தொன்று. இது நாரதப்போசதம். பெரிய கற்பதர்மங்களைக் கூறுவது. இது இருபத்தையாயிரம் கிரந்த முடையது. உபபுராணங்களுள்ளும் இப்பெயருடைய தொன்றுண்டு. (2) நாரதாள லக்ஷணங்களைக் குறித்து நாரதர் செய்த நூல். [கிய) நதி.

நாரதை - (புண்ணிய தீர்த்தங்களிலொன்று

நாரத்தகச்சல் - போசன கஸ்தூரி.
நாரத்தம்-சடாமாஞ்சி, சடாமஞ்சரி, வசம்பு.
நாரத்தம்புல் - வாசனையுள்ள ஓர்புல்.
நாரத்து - நாரத்தை. [வகை.
நாரத்தை-ஓர்தோடை, ஓர்மரம், கொழுஞ்சி
நாரப்புண் - நரம்புச் சிலந்தி.
நாரசிந்து - கடல், சாகரம், சமுத்திரம்.
நாரம்-அன்பு, சனத்திரள், நாண், நாரத்தை, நீர், நீர்வாழ் புன், பசுங்கன்று, பாசி.
நாரல் - நாராலநிக்கப்பட்டகள், கள்.
நாராங்கி - நாதாங்கி, கதவினிலைச் சங்கிலி.
நாராசபாணம் - இருப்பாணிபோன்ற ஓரத் திரம். [ஞென்று.
நாராசமுத்திரை - பூசாமுத்திரை வகையி
நாராசம்-அம்பு, இருப்பாணி, எழுத்தாணி, சலாகை, விட்டம், குறுக்குச்சந்து.
நாராயணகவசம் - நாராயண மந்திரங்களில் ஒன்று. இதைக் கிரமமாகச் செபிப் போர்க்கு நாராயணன் விரைந்து அருள் புரிவர்.
நாராயணகவுளம் - ஓர்பண், ஓர் இராகம்.
நாராயணகோபாலர் - திருமாலுருவுடை யோர்.
நாராயணகோபியவர் - பல பராக்ரமங்களில் கிருஷ்ணனுக்குச் சமமானவர்கள், இவர் கள் யாதவர்கள். இவர்கள் பதினாயிரவரும் பாரத யுத்தத்தில் துரியோதனனுக்குத் துணையாகச் சென்றிருந்தபோது அர் ஜுனனால் கொல்லப்பட்டார்கள். [நூல்.
நாராயணசதகம்-நாராயணரசரெழுதிய ஓர்
நாராயணத்தலம் - ஓர் குளிர்ச்சித்தலம்.
நாராயணப்பிரியன் - சிவன், சங்கரன்.
நாராயண மண்டூகம் - மருந்துவகை.
நாராணமுனி-இருடி குழாத்தோர்முனிவன்.
நாராயணம்-அரசமரம், உபநிடத முப்பத்தி ரண்டிலொன்று, மீன்முதலியசலசரங்கள்.
நாராயணரசம் - ஓர் குளிகைவகை.
நாராயணன்-சந்திரன், சிவன், பிரமன், வரு ணன், விட்டுணு, க்ஷீராப்திசயனன்.
நாராயணன் - திருமால், மஹாப்ரளயத்தில் எல்லாப் பொருள்களும் நீரிலொடுங்கின போது அதனை யிடமாகக்கொண்டுஎல்லா வற்றையும் தோற்றுவித்தானென்றுவேத புராணுதிகளின் துணிபு. ஆதலால், இவர் க்கு நாராயணன் என்னும் பெயர் வழங் கும். நாரம் நீர் அயனம்-இடம் இந்த நாரா யணபதம் சிவனுக்கும் வழங்குமென்பர். உலகம் அப்புவில் ஒடுங்கிய கற்பத்திலே அதனை மீளவும் தோற்றுவித்த பரப்பிர மத்தினது புருஷாமிசமே நாராயணன் எனப்பட்டது. நாரமென்பது: அப்பு வினது மூலப்பகுதி. அது எழுந்திட்டா டும் சர்ப்பவடிவினையுடையதா யிருக்கும். அதன் சந்திபாகம் சங்கினது வடிவினை யுடையது. அப்புவினிடத்து விளங்கும் புருஷாமிசம் ஆதிசேஷன் என்னுஞ் சர்ப் பத்தைப் பாயலாகக்கொண்டு அறிதுயில் செய்யும் நாராயணனுகக் கூறப்படும். ஒடு ங்கா தெஞ்சி நின்று மீளவும் சகத்துக்கு ஆதிகாரணமாய்க் கிடந்தது அப்புவினது மூலப்பகுதியாதலின், அ ஃ து ஆதிசே ஷன் எனப்பட்டது, (சேஷம்) எஞ்சிய அப்புவினது மூலப்பகுதி, மண்டல மிட் டெழுந்தாடுஞ் சர்ப்பவடிவின தென்பது அப்புவினது அணுவை யெடுத்துச் சோதி த்தால் இனிது புலப்படும். அவ்வணுவா னது ஸ்தூல நிலைவிட்டுச் சூக்குமித்துச் சூக்குமித்துப்போய் ஏழாவது நிலைய யடையும் அவதரத்தில் இவ்வடிவைப் பெறும். கமலவடிவுடைய அப்புவிடத்தே பிரமாவாகிய சிருஷ்டி புருஷன் தோன்று வன். அதுநிற்க: அப்புவின் மூலப்பகுதி யை ஆதிசேஷன் என்றும், அப்புவுக்குக் குறிகமல மென்றுங்கூறிய நமது பூர்வ வேதாந்த சித்தாந்த நூலாசிரியர்களது பூத பௌதிக ஞானமும், புத்தி நுண்மை யும், அநுபவமும் பெரிதும் பாராட்டப் படத்தக்கன வென்பது இக்காலத்து ஐரோப்பிய ரசாயன பரீக்ஷகர்கள் வெளி யிட்ட பரீக்ஷாவிஞ் ஞாபனங்களை ஊன்றி விசாரிக்குமிடத்து நன்கு துணியப்படும். விஷ்ணு புராணத்தில் இவற்றை விரி வாய்க் காண்க.
நாராயணன்சுழி - வெள்ளை முள்ளி.
நாராயணன்தும்பிலி - பதினறங்குலம் வளர் வதும், பொன்னிறங்கொண்டதுமானகடல் மீன் வகை. [பூண்டு.
நாராயணன் பூண்டு - சவரிக்கொத்துளனும்
நாராயணஸ்த்ரம் - ஓர்பாணம், திருமால அதிதேவதையாகவுடைய ஓரம்பு.
நாராயணி - இலக்குமி, ஓரிராகம், கங்கா தேவி, சத்தமாதர்களி லொருத்தி, தண் ணீர் விட்டான் கிழங்கு, துர்க்கை.
நாராயணிதம் - கௌரிபாஷாணம்.
நாராயணியம் - ஓர் சோதிட நூல்.
நாராயணீயம்-வேதாங்கங்கள்ஆறில்ஒன்று.
நாராயநாழி - நாராசநாழி.
நாராயம் - அம்பு, எழுத்தாணி.

நாரி - இடை, ஓர்பண், கள், சேனை, தேன், நன்னாரி, வின்னாரி, நாணி, பன்னுடை, பார்வதி, வாசனை, பெண், யாழ்நரம்பு.

நாரிகேரம் } தென்னைமரம், தேங்காய்.
நாரிகேளம் }

நாரிகேளபாகம்-வருந்திப் பொருளுணர்தற்கான செய்யுள் நடை.

நாரிகேளாஞ்சனம் - இளநீர் கொண்டுசெய்யும் கண்மருந்துவகை.

நாரிகை - பெண்.

நாரிபாகன் - சிவன், அர்த்தநாரீஸ்வரன்.

நாரிப்பிடிப்பு - இடுப்புப்பிடிப்பு.

நாரியங்கம் - தேன்மெழுகு, குளாஞ்சிமரம்.

நாரிவலி - நாரிக்குத்து.

நாரிவிரசு - நாய் நறுவிலி.

நாரீகவசன் - இக்ஷ்வாகு, மூலகன்.

நாரீசங்கன் - ஒரு கொக்காசன்.

நாரீதீர்த்தங்கள் - சௌபத்திரம், பௌலோமம், காரண்டலம், பிரசன்னம், பாரத்துவாஜம் என தக்ஷணத்திலுள்ள ஐந்து தீர்த்தங்கள். நந்தை, சௌரபேயி, சமீசி வகை, லதை யென்னும் ஐந்து அப்சரஸ்திரீகள், ஓரிருஷி சாபத்தினால் இத்தீர்த்தங்களிலே முதலைகளாகிக் கிடந்து அத்தீர்த்தங்களிற் படிவோரைப்பற்றி விழுங்கிவந்தனர். அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை சென்றபோது அவன் காலை அவர்கள் தின்டிய காரணத்தால் சாபவிமோசனம் பெற்றார்கள்.

நாரீஷோஷணம் - பதிவிரதா விரதத்திற்குப் தப்பானது. ஆஸ்தி: அன்யக் கிரகசயனம், அன்னியக் கிரகப்பிரவேசம், அன்னியக் கிரகாசனம், கணவனைப் பிரிந்திருத்தல், தற்கூட்டம், மதுபானம் முதலியன.

நாரை-வெண்கொக்கு, மாட்டின் அலைதாடி.

நாரைக்கொம்பு - நீண்டகொம்பு, கூரிய கொம்பு.

நாரைப்பசு-ஓர்வகைநீட்டமுள்ளசாதிப்பசு.

நாரை யெருது - ஒருவகை எருது, பாண்டில்.

நார்-அன்பு, கயிறு, கல்நார், தும்பு, மட்டை முதலியவற்றினூர், பன்னுடை, மரப்பட்டை, மரவுரி.

நார்க்கட்டில் - கட்டில் வகை.

நார்க்கட்டு - பனைநார்த்தொகுதி.

நார்க்கத்தி - மட்டையினின்றும் நாரெடுக்குங்கத்திவகை.

நார்க்கதுவுதல் - கத்தியால் பட்டை சீவி நாரேடுத்தல்.

நார்க்கயிறு - கொச்சைக்கயிறு.

நார்ச்சிலந்தி - புழுவகை.

நார்ப்பட்டடை - நாருரிக்கும் யந்திரம்.

நார்ச்சிலை-மரவுரி, வலைக்கோணி, வற்கலை.

நார்ப்பட்டு - நார்மடி, வெண்பட்டு.

நார்மடி - பட்டாடைபோல்வதும் நாராற் செய்ததுமான ஆடைவகை. [மட்டை.

நார்மட்டை-நார் உரிக்கத்தகுதியானபனை

நாலடி } ஓர் நூல், பதினெண்கீழ்க்
நாலடியார் } கணக்கினுள் முதலாவது நூல். சமணமுனிவர்களால் பாடப்பட்டது, பதுமனூரால் தொகுக்கப்பட்டது, நாற்பது அதிகாரமும், நானூறு செய்யுள்களு முடையது. இது அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என மூப்பால்களை யுடையது. இதற்குப் பதுமனூர் கடவுள் வாழ்த்தும், உரையும் செய்தனார்.

நாலகிர்தம் - நால்வகை உணவு.

நாலம்-தாமரைப்பூ முதலியவற்றின் காம்பு, தனகு.

நாலல் - தாழ்தல், தொங்கல், வீழ்தல்.

நாலறிவுயிர் - சுவை, ஒளி, ஊறு, நாற்றம், என்ற நான்கறிவுடைய நண்டு, தும்பி முதலியன.

நாலா - வாய்க்கால், கால்வாய், ஓடை.

நாலாகாரியம் - பலவகைக் காரியம்.

நாலாஞ்சடங்கு } விவாகத்தினாலாநாட்
நாலாநீர்ச்சடங்கு } பண்ணு முழுக்குச் சடங்கு.

நாலாநீராடுதல் - இருதுஸ்நானம் செய்தல்.

நாலம்பாதகன் - கொலைபாதகன்.

நாலாமுறைக்காய்ச்சல்-நாலு நாளைக்கொரு முறை நின்று நின்று வருங் காய்ச்சல்.

நாலாம்பொய்யுகம் - கலியுகம். [ணம்.

நாலாம்வருணம்-சூத்திரசாதி, சதுர்த்த வர்

நாலாம்வருணர்-சதுர்த்தர், சூத்திரசாதியார்

நாலாயிரப்பிரபந்தம் } பன்னிரு ஆழ்வார்
நாலாயிரம் } பாடிய வைணவப் பிரபந்தம், இது 4000 பாசுரமுள்ளது.

நாலாயிரச்சக்கரம்-சித்திரக் கவி வகை.

நாலாவான் - சூத்திரன்.

நாலாவிதம் - பலவிதம், நானாவிதம்.

நாலி - கார்த்திகைப்பூ, முத்து, நவமணியினொன்று, மறை.

நாலிகம் - எருமை, காகம், தாமரை.

நாலிகை-அடுப்புச்சந்து, தொளை, மூங்கில், குழை, உட்டுளைப்பொருள்.

நாலுகவிப்பெருமாள்-திருமங்கை யாழ்வார், இவருக்குப் பரகாலர் என்னும் பெயர்.

நாலு-நான்கு, பல(நாலு விஷயமும் தெரிந்தவன்) சில (நாலு வார்த்தைகள் பேசினான்) நாலடியார்.

நாலுதல் - தொங்குதல், தூங்குதல்.

நாலுதாக்கு-கிழமை (இசை வழக்கு)

நாலுபாதச்சைவம்-ஓர் சைவசமயம்.

நாலுமா - ஐந்தில் ($\frac{1}{5}$) ஒன்றைக் குறிக்கும் பின்ன எண்.

நாலை - நாளம், நாலூர்.

நாலைகிழாஅன் - பாண்டியவீரன்; கொடையாளி, நாகன் என்னும் பெயரான். வடநெடுந்தத்தனாரால் பாடப்பட்டவன்.

நாலைங்கள்ளி - இலைக்கள்ளி.

நால் - நாலென்னேவல், நான்கு.

நால்கு - நான்கு.

நால்வகைஅரண் - காடு, மலை, மதில், நீர்.

நால்வகைச்சாந்து - சாந்து வகை நாலு. அவை: கலவை, பீதம், புலி, வட்டிகை.

நால்வகைச்சேனை - யானை, தேர், பரி, காலாள்.

நால்வகைச்சொல்-பெயர், வினை, இடை, உரி.

நால்வகைத்தோற்றம் - நான்கு வகைப் பிறப்பு. அவை: நிலம், பை, முட்டை, வியர்வை இவைகளி லிருந்துசனிப்பு. இவற்றை அண்டஜம், சுவேதஜம், சராயுஜம், உற்பிஜம்என்பர் வடநூலார்.

நால்வகைப்பண் - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி. [நிலப்பூ.

நால்வகைப்பூ-கோட்டுப்பூகொடிப்பூநீர்ப்பூ,

நால்வகைப்பொருள்-அறம், பொருள், இன்பம், வீடு, இதனைப்புருடார்த்தம் நான்கு என்பர்.

நால்வகையாழ் - பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ்.

நால்வகையுபாயம்-சாமம், தானம், பேதம், தண்டம்.

நால்வகையூறுபாடு-சுத்தல், வெட்டல், எய்தல், எறிதல்.

நால்வர்-அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர். இந்நால்வரும்சைவசமயாசாரிய ரெனப்படுவர். இவர்களாற் செய்யப்பட்டவை தேவார திருவாசங்கள். இப்பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை, பக்திரசம் முதலியவற்றுற் பொலிந்துள்ளன. இப்பாடல்களால் முதலே விழுங்கின பிள்ளையை யுமிழ்ந்தது, என்பு பெண்ணைது, நரி பரியானது முதலிய அநேக அற்புதங்கள்நிகழ்ந்திருக்கின்றன. பெண்ணுசை யொழித்தவர்க்கே வீடு பேற்றை யருள்வோமென்று வேதாக மாதிகளால் விதித்த எல்லாம் வல்ல இறைவர் தாமே தமது ஏற்பாட்டை மறுத்துச் சுந்தரர் பொருட்டுப் பரவையென்னும் வேசையினிடத்திற்கு அர்த்தயாமத்தில் தூதுபோனதற்குக் காரணம் இந்தப் பாடலின்மீது அவர் வைத்த விருப்பமேயாமன்றே! அடியில் வரும் பாடலால் இவர்கள் மேம்பாடு இனிது விளங்கும். "சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தனும், சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - மூற்கோலி, வந்திலரே னீரெங்கே மாமறைதூ ரூரெனங்கே, எந்தைபிரா னங்தெழுத் தெங்கே," இதனால் தென்னாட்டிலே சமணரால் மயங்கிய சைவத்தை மீளவும் விளக்கினவர்கள் இந்நால்வரே யென்பது தெள்ளிதிற் புலப்படும். நாலுபோர், தூங்குவோர், பசுபத்தினி, நீத்தோர் குழவியர் என்னும் நால்வர், நால்வகை வண்டுகள், சிலர்.

நால்வாயன் - இந்திரன், விநாயகன்.

நால்வாய் - யானை, வேழம், கரி, களிறு.

நால்விதப்பண் - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி. [வணம்.

நால்வேதம்-இருக்கு, யஜுர், சாமம், அதர்

நாவடக்கம் - நாவொடுக்கம், மௌனம்.

நாவடம் - நாகவடம், ஓர் காதணி.

நாவடை-நீரிறைக்கும் துலையில் நீர்ச்சாலைச் சாய்க்குமிடம்.

நாவடைத்தல் - பேசக்கூடாதிருத்தல்.

நாவண்ம் - உண்ணுக்கு, நாக்கினுன்.

நாவமிர்தம்-பேச்சு, உபதேசம், அறிவுரை.

நாவரசர் - சிவத்தொண்ட ரநுபத்துமூவரி லொருவரான திருநாவுக்கரசர், புலவர்.

நாவரட்சி - நீர்த்தாகம், நீர்வேட்கை.

நாவரணை - நாப்புற்று என்னும் வியாதி.

நாவாளுதல் - நீர்விடாய்த்தல், தாகித்தல்.

நாவரணை - நாவரணை.

நாவர் - நாவினை உடையோர்.

நாவலந்தீவு - சத்ததீவிலொன்று.

நாவிலை - வெற்றிலை. [சர்.

நாவலர்-பாவலர், கற்றவர், புலவர், அமைச்

நாவலூரார் - திருநாவலூரார், சுந்தரர்.

நாவலோ-உரப்பற்குறிப்பு, இரக்கக்குறிப்பு.

நாவல்-இரக்கக்குறிப்பு, ஓர் மரம், அஃது: துவர்பத்திலொன்று, சத்ததீவிலொன்று,

நாம்புதல், நெல், குலவையிடல்.
நாவல்விலங்கல் - மேருமலை.
நாவழி - நாக்குவழிக்குங் கருவி, நாவுரி.
நாவழிவு - பேச்சு மாறுதல்.
நாவரட்சி-நாப்புலர்வு, நீர்வேட்கை, தாகம்.
நாவரளை - நாப்புற்று, நாப்புரை, நாப்புண்.
நாவாசித்தி - நாவேறு, வாக்குச்சித்தி.
நாவாய்-இரேவதிநாள், மரக்கலம், தோணி, நாவும்வாயும், நாவுவாய் (வி.மு)
நாவாள் - சரச்சுவதி, நாமகள், கலைமகள்.
நாவி-ஊமத்தை, ஓர்மருந்து, கத்தூரிமிருகம், நாபி, புழுகுப்பூனை, மரக்கலம், கொப்பூழ்.
நாவிகன்-கப்பற்காரன், மாலுமி, மீகாமன்.
நாவிகீ - இந்திரன் சபை, தேவசபை. [டம்.
நாவிச்சட்டம் - கத்தூரிச்சட்டம், புழுகுச்சட்
நாவிதச்சி - அம்பட்டத்தி, அம்பட்டச்சி.
நாவிதர் - அம்பட்டர், மயிர்களைவோர்.
நாவிதன் - அம்பட்டன், இராச்செல்லான், கார்த்திகை, பூரநாள், இடையெழுஞ்சனி
நாவித்தண்டை - எருமுட்டைப்பீநாறிப்பூடு, வெதுப்படக்கி.
நாவிநெய் - மயிர்ச்சாந்து, கூந்தற்றைலம்.
நாவிப்பின்னை-(மறுவி என்னும்) ஓர்மிருகம், கஸ்தூரி, மிருகக்குட்டி.
நாவிப்புழுகு - மான்மதம், மிருகமதம், கஸ்தூரி.
நாவிமிருகம் - கஸ்தூரிமிருகம்.
நாவியம் - கார்த்திகைப்பூ, காந்தட்பூ.
நாவிழுதல் - பேச நாவெழாது போதல்.
நாவு - நாக்கு, நா, தாரை, சிகுவை, நாம்பு என்னேவல், கொழி.
நாவுக்கரசு - திருநாவுக்கரசு நாயனார்.
நாவுதல் - நாக்கு வளைத்தல், நோம்புதல், கொழித்தல்.
நாவுரி-நாழியுரி, என்பதின் குறுக்கம்; அது: ஒன்றரைப்படி கொண்ட அளவு.
நாவுழலை - நாக்குழறுதல், நாஞ்ற, விடாய்.
நாவுழலையாடுதல்-நாக்குழறுதல், தாகித்தல்.
நாஞ்ற, நாவேறு } நாத்தோஷம்.
நாவை - கலப்பையிலை, கொழுதுனி.
நாவொட்டிக்காய்ச்சல்-நாவரட்சியுண்டாக்கும் சுரம்.
நாழம் - வசவு, ஏச்சு, திட்டு, இழிவுரை.
நாழி-உட்டுளைப்பொருள், ஒருபடி, கொத்து, நாழிகை, பூரட்டாதிநாள், அம்பறாத்தூணி.
நாழிகை - நாடா, உத்திரட்டாதி, விநாடியறுபதுகொண்டது, இருபத்துநான்கு நிமிஷம், ஆவநாழிகை, அம்புப்புட்டில்.
நாழிகைக்கணக்கர் - புரோகிதர், நாழிகையறிவிப்போர், கடிகையார்.
நாழிகைக்கல் - மைற்கல்.
நாழிகைத்தூம்பு - நீர்வீசுங் கருவி வகை, யந்திரநாழி.
நாழிகைப்பறை-நாழிகையறிவிக்கும் பறை.
நாழிகைவட்டம் } காலவளவைக் காட்டு
நாழிகைவட்டில் } மோர் சூத்திரம், சூரிய கடிகாரம்.
நாழிகைவெண்பா - பழைய முறைப்படி அரசர்க்கு நாழிகைதோறுஞ் சொல்லும் வெண்பா. [ளோடு.
நாழியோடு - குழலோடு, உட்டுளைப்பொரு
நாளகம் - இலாமிச்சம்புல். விழற்புல்.
நாளங்காடி-வைகறைக்கடை, காலைக்கடை.
நாளடகம் - நாடோறும், தினமும்.
நாளடைவில் - நாள் செல்லச்செல்ல.
நாளணி - புது அணி, புத்தலங்காரம்.
நாளத்தாணி - பகலோலக்கம், பகற்கொலு.
நாளத்தி - விடியற்காலம், வைகல்.
நாளம் - உட்டுளை, நாள், பூந்தண்டு, பொன்னரிதாரம், வட்டம், சரவுளைச்செடி.
நாளரம்-இலாமிச்சம்புல், ஓர் வாசனைப்பூடு.
நாளரும்பு - புதிய அரும்பு, தளிரரும்பு.
நாளவை-நாளிருக்கை, அரசிருக்கை மண்டபம், ஆஸ்தானம், ஆசாரம்.
நாளறுதி - } நாள்முற்றும், நாள்வட்டம்,
நாளாதிறுதி- } நாளறுதி, தினவட்டம்.
நாளாயணி } நாளாயணி (பார்க்க)
நானாயணி }
நாளாய்ந்தோர் - வைத்தியர், சோதிடர்.
நாளி-கள், நாய், குக்கல், சுணங்கன். [மிச்சை.
நாளிகம் - தாமரை, வள்ளிக்கொடி, இலா
நாளிகேரபாகம் - நாரிகேளபாகம்.
நாரிகேரம் } தென்னைமரம், இலாங்கலி.
நாரிகேளம் }
நாளிரை - காலையுணவு, பகலுணவு.
நாளினி - புளிமாமரம், புளிமாதிகமரம்.
நாளும் - நாடோறும், எப்பொழுதும்.
நாளுக்குநாள் - ஒவ்வொருநாளும்.
நாளுலத்தல் - இறத்தல், நாட்கழிதல்.
நாளெடுத்தல் - நன்முகூர்த்தங் குறித்தல்.
நாளெல்லை - அத்தமனம், மரணகாலம்.
நாளை - மற்றைநாள், பின்னைநாள்.
நாளைநின்று - நாளைவிட்டு மற்றைநாள்.
நாளோலக்கம் - நாளணி.
நாளோலை - சாதகம், சீதனக்குறிப்பு.
நாள் - இராப்பகல் கொண்ட பொழுது,

காலம், நன்முகூர்த்தம், பெருநாள், முகூர்த்தம், தினம், காலை, இளமை, முற்பகல், நட்சத்திரம், புதுமை, ஆனியம், அல்காலை, பூ.

நாள்தோறும் - நாளுக்குநாள், நாடோறும்.

நாள்வட்டம் - தினவட்டம், நாட்சுற்று.

நாள்வழிப்படுமடிசில் - கட்டுச்சாதம்.

நாள்விடுதல்-சீவியம் பண்ணுதல், வசித்தல்.

நான்வேலை - நாட்பணிவிடை, தினவேலை.

நாரணு
நாறணு } நெட்டி, சடைச்சிச் செடி.

நாறல்-நாறுதல், பதனழிதல், பதனழிந்தது, நாலுதல், தோன்றுதல், ஞாலுதல், மிகுதல், விளங்கல், மணத்தல்.

நாறற்பாக்கு-ஓர்வகை வாசனைப்பாக்கு. [சி.

நாறணு-சடைச்சிச்செடி, வாய்க்காற்சடைச்

நாறி - கற்பூழை, பாற்கொடி, நன்னாரி, மணத்துத் தோன்றி நாறுவது.

நாறிய-தோன்றிய, பரந்த, மணமுள்ளதான, தோன்றின.

நாறு-நாறென்னேவல், நாற்று, முளைப்பயிர்.

நாறுகட்டி - பெருங்காயம், ஓர் மருந்து.

நாறுகரண்டை - கொட்டைக்கரண்டை.

நாறுதல்-உண்டாதல், தோற்றுதல், மணத்தல், முளைத்தல், காணுதல், உதித்தல்.

நாறுமதம் - புழுகு, புனுகு, ஜவ்வாது.

நாற்கணம்-நான்கினம், அவை: உயிர், மெல்லினம், வல்லினம், இடையினம்.

நாற்கதி-தேவர், நரகர், மனிதர், விலங்கு.

நாற்கவி - நாலுவிதக்கவி, அவை: ஆசு, சித்திரம், மதுரம், வித்தாரம் என்பன.

நாற்கவிராசநம்பி - இவர் புளியங்குடி உய்ய வந்தார் குமாரர். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் எனும் நாற்கவிகளேயும் பாடுதலில் வல்லவராய் அகப்பொருளிலக்கணம் பாடிய ஓர் சமணப்புலவர். [கம்.

நாற்காலி-ஓர்வகையாசனம், நாற்கான் மிருகம்.

நாற்காற்சீவன்
நாற்கான்மிருகம் } நான்குகாலுள்ள மிருகம்.

நாற்குணம் - ஆதேக்குணம் நான்கு. அவை: அறிவு, ஓர்ப்பு, கடைப்பிடி, நிறைவு என்பன. மகதேக்குணம் நான்கு. அவை: அச்சம், நாணம், பயிர்ப்பு, மடம் என்பன.

நாற்கோணம்-நான்குகோணம், நாலுமூலை.

நாற்சதுரம் - சதுரங்கம், சமசதுரம்.

நாற்சந்தி - நாற்றெருக் கூடுமிடம்.

நாற்சாரும்வீடு - வீட்டின் சுற்றுக்கட்டு.

நாற்சி - ஞாற்சி, தொங்குகை, தொங்கல்.

நாற்படை-அரசர்க்குரியநால்வகைச்சேனை.

நாற்பது-நான்குபத்து, ஓர்பிரபந்தம். அது: இடம், காலம், பொருளென்பவற்றுளொன்றுனே நாற்பது வெண்பாவாற் கூறுவது.

நாற்பயன் - நாற்பொருளிலுல் வரும்பேறு.

நாற்பாலோர் - மூத்தோர், பெண்டிர், நீத்தோர், குழவியர், நாலுவருணத்தோர்.

நாற்பால்-சதுரம், நாலுபாகம், நாலுபக்கம், நால்வகை.

நாற்பால்மரம் - ஆல், அரசு, அத்தி, இத்தி.

நாற்பான் - நாற்பது, நாற்பஃது.

நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடெனப்படும் புருடார்த்தப் பொருள்.

நாற்பொன் - ஆடகம், இளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என நால்வகைப்பொன்.

நாற்றங்கால்
நாற்றங்கொல்லை } நாற்றுப் போட்டிருக்குமிடம், நாற்றிருப்பிடம்.

நாற்றத்தானி - ஊன், நிணம், மாமிசம்.

நாற்றமடித்தல் - நாற்றம் வீசுதல்.

நாற்றமெடுத்தல் - துர்க்கந்தம் வீசுதல்.

நாற்றம்-கள், கெந்தகம், துர்க்கந்தம், நற்கந்தம், மணம், வசம்பு, தோற்றம், தோன்றுதல்.

நாற்றம்வைத்தல் - நாற்றமெடுத்தல்.

நாற்றல் - தொங்கவிடுதல். [வுணவு.

நாற்றவுணவு - அவியாகியவுணவு, யாக

நாற்றி-நான் மடங்கு, தொங்கவிட்டு, தூக்கி, வீசி, கைவீசி.

நாற்றிசை-நான்குதிக்கு; கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு எனுந்திக்குகள் நான்கு.

நாற்றிய - கவித்த, தொங்கவிட்ட.

நாற்று - முளைப்பயிர், விரைப்பயிர், தொங்கவிடு, அசைவி, நாற்றென்னேவல், தூக்கு.

நாற்றுதல் - தூங்கவிடல், தொங்கவிடல்.

நாற்றுப்பிடி - நாற்றுமுடி.

நாற்றுப்பாவுதல்
நாற்றுப்போடுதல் } தானியம் முதலிய பதிபோடுதல், நடவுநடல்.

நானநீர் - ஸ்நானநீர், வாசனைத்தைலம், கழுநீர்.

நானமா - கஸ்தூரிமிருகம், புனுகுப்பூனை.

நானமுரைத்து - வாசவெண்ணெயை ஊட்டுவித்து.

நானம் - கத்தூரி, கத்தூரிமிருகம், கவரிமா, குளிப்பு, முழுக்கு, வாசனை, புனுகு.

நானு - பல, பலவித, அநேக.

நானுப்பிரகாரம்
நானுவிதம் } பலவிதம், பலமாதிரி.

நானர்த்தபதம் - பலபொருளொரு சொல்.

நாஞ்ஞைமாறன் - நாலாமுறைக் காய்ச்சல்.
நாணிலம்-நால்வகைநிலம், அவை: குறிஞ்சி, நெய்தல், மருதம், முல்லை என்பன.
நாணூறு - நான்குதரம் நூறு.
நானெறி-சதுர்க்கதி, நான்குவகைப் பதவி.
நான் - யான், தன்மை யொருமைப்பெயர்.
நான்கடிமடக்கு-மடக்கலங்காரத் தொன்று.
நான்கனுருபு - நாலாம் வேற்றுமையுருபு.
நான்காம்வேதம் - அதர்வணம், அதர்வம்.
நான்கு - நாலு என்னும் தொகை.
நான்மணிக்கடிகை-விளம்பி நாகனார் செய்த வோர் நீதிநூல். இது பதினெண் கீழ்க் கணக்கினுள் இரண்டாவதாகும். இதின் ஒவ்வொரு பாட்டிலும் நான்கு நீதி விஷயங்கள் அடங்கியிருக்கும்.
நான் மணிமாலை - ஓர் பிரபந்தம், அஃது: வெண்பாவுங் கலித்துறையும் விருத்தமும் அகவலுமாக அந்தாதித் தொடையாலாற்பது செய்யுட்கள் அமையப் பாடுவது.
நான்மருப்பியானை - ஐராவதம், ஐராவணம்.
நான்மருப்பியானையூர்தி - தேவேந்திரன்.
நான்மறை - சதுர்மறை, நான்குவேதம், அவை: இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம், அன்றியும்; உபவேதம் நாலு அவை: ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம் எனப்படும்.
நான்மறையோன் - பிரமன், முனிவன்.
நான்மாடக்கூடல் - மதுரை, திருவாலவாய்.
நான்முகப்புல் - சதுரப்பட்டைப்புல்.
நான்முகன் - அருகன், பிரமன்.
நான்முகன்கிழத்தி } சரச்சுவதி, மஞ்ஞைமேல்
நான்முகன்றேவி }
நான்முகன்வாழ்நாள் - பிரமகற்பம்.
நான்முலையாயம் - பகுக்கூடம்.
நான்று - தொங்கி, தூங்கி.

நி

நி - இன்மை, உறுதி, எதிர்மறை, ஐயம், சமீபம், நிச்சயம், நிலைபேறு, பூரணம், மிகுதி இவைகளைக் காட்டுமோ ருபசருக்கம், ஒரெழுத்து, விருப்பம், இடைச்சொல்.
நிக - நிர், நிரு, வெளி, ஒருபசருக்கம்.
நிகசம் - போசனம், சாப்பாடு, உணவு;
நிகசலாகம் - ஏகாந்தத்தலம், தனியிடம்.
நிகசோத்தியம் - பரிசுத்தம், சுசிகரம், சுயம்.
நிகடம்-சமீபம், அருகு, அணிமை, அண்மை.
நிகணம் - ஓமப்புகை, தூபம்.
நிகண்டவாதம் - சமண சமயம்போன்ற ஓர் சமயம், நிக்கந்தவாதம், திகம்பரவாதம், சமண சமயவாதங்களிரண்டி லொன்று.
நிகண்டவாதி - சைனரில் ஒரு சாரார்.
நிகண்டன் கலேக்கோட்டுத்தண்டனூர் - ஓர் சங்கப் புலவர்.
நிகண்டு - சொற்பயன் விளக்குநூல், தொகுதி, நிச்சயம், படலம், தேவாங்க மாறி லொன்று.
நிகண்டுபேசுதல்-எல்லாம் தெரிந்ததுபோல்
நிகதம்-சொல், பேச்சு, சாந்தம். [பேசுதல்.
நிகதி - நியதி, நியமிப்பு, முறைமை.
நிகப்பிரபை - இருள், கங்குல்.
நிகமம்-கடைவீதி, நிச்சயம், பட்டினம், வியாபாரம், வியபாரிக்கூட்டம், வேதம், வழி.
நிகமனம்-உறுதிப்படுத்தித் தீர்ப்புக்கூறல்.
நிகமாகமம் - வேதாகமங்கள், வேதப்பிரிவுகள்.
நிகமாகச்சுவன்-சிவன், பரமன், ஆதி, கடவுள்
நிகம் - பிரகாசம், வெளிச்சம், ஒளி.
நிகர - உவமைச்சொல், ஒப்புச்சொல், ஒளி.
நிகரணம் - விழுங்குதல்.
நிகரமைந்த-நிகராயமைந்த, நிகர்த்தமைந்த, ஒப்பற்ற.
நிகரம்-(ன்) ஒரெழுத்து, கூட்டம், கொடை, சுரம், திரவியம், மொத்தம், விழுங்குதல், முழுங்குதல்.
நிகரிடுதல்-ஒப்பிடுதல், சமானமாதல், நேரல்.
நிகரிலிசோழமண்டலம்- சோழநாட்டுக்குள் டங்கியிருந்த மைசூரி லொருபகுதி.
நிகரிலிசோழன் - முதலாம் ராஜ ராஜ சோழன் பட்டப்பெயர்.
நிகரில்பக்கம் - விபக்கம்.
நிகருஷணம் - அயல், முற்றம், முன்றில்.
நிகருமம் - நிகன்மம், நிற்பிரவர்த்தனம்.
நிகருவம்-அடக்கம், சாந்தம், கருவமின்மை.
நிகர் - உவமை, சமானம், நிகரென்னேவல், பிரகாசம், போர், ஒப்பு, ஒளி, மறுதலை.
நிகர்தல் - ஒப்பாயிருத்தல், சம்மாயிருத்தல்.
நிகர்தி - இருப்புலக்கை, இருப்புத்தண்டு.
நிகர்த்தல்-ஒப்பாதல், பொருதல், சமமாதல்.
நிகர்பக்கம் - உவமைப்பொருளிருக்குமிடம்.
நிகர்ப்பயோகினி - ஒருயோகினி.
நிகர்வை - ஒப்பு, ஒப்பாவாய், நிகர்வாய், நிகர்ப்பாய்.
நிகர்ப்பு - ஒப்பு, சமத்துவம், போர், யுத்தம்.
நிகர்ப்புதம்-நூறு கோடி. (1000000000.)
நிகர்வம்-தாழ்மை, வணக்கம், கர்வமின்மை.
நிகர்வர் - பிரமி, அகங்காரமற்றவர்.

நிகர்வி-தாழ்மையுள்ளோன், செருக்கிலான்.
நிகர்வு - ஒப்பு, சமத்துவம், ஓர் உவமவருபு.
நிகலம் - தோண்மேல், பிடரி, புறங்கழுத்து.
நிகழ்காலம் - வர்த்தமானகாலம், தற்காலம்.
நிகழ்காலவினையெச்சம்-அகரவிகுதிபெற்று இடைநிலையோடு கூடாது தானே நிகழ் காலம் காட்டி நிற்குஞ்சொல்.
நிகழ்ச்சி - ஒளி, சம்பவம், வர்த்தமானம்.
நிகழ்தல்-ஒளிசெய்தல், செல்லல், நடத்தல், நிறைவேறல்,உண்டாதல்,நடைபெறுதல்.
நிகழ்த்துதல் - சொல்லுதல், நடப்பித்தல்.
நிகழ்ந்தது - நடந்தது, நடந்தகாரியம், நடை பெற்றது. [நிகழ்க.
நிகழ்வது - நடக்கும் காரியம், நிகழ்தல்,
நிகழ்வினைவிலக்கு-ஓரலங்காரம், அது நிகழ் வினையைக்காட்டி விலக்குவது, (உ-ம்)மா தர் நுழைமருங்கு நோவமணிக்குழை சேர், காதின்மிசை நீலங்கவின்புனைவீர்-மீதுலவு-நீணிலவுவாட்கண்ணிமிர்கடையே செய்யாவோ, நானில்ஞ் செய்யு நலம்.
நிகழ்வு - சம்பவிப்பு, நடப்பு, நிகழ்ச்சி.
நிகழ்வுறல் - நடைபெறல்.
நிகளம் - சங்கிலி, யானைச்சங்கிலி, விலங்கு.
நிகற்பம் - நூறுகல்பம்கொண்ட ஓர் கால அளவு, 10000000000000 பத்துலக்கங்
நிகன்னம் - கொலை, சங்காரம் [கோடி
நிகா - குறிப்பு, சாக்கிரதை, கொழுப்பு
நிகாசம் - ஒப்பு, உவமை, சமம், நிகர்.
நிகாதம் - சொல், வஞ்சகம், நரகம்.
நிகாதன் - வஞ்சகன், சூன், கபடன்.
நிகாநம் - நிந்திப்பு, இகழ்வு, தூஷணை.
நிகாயம் - இலக்கு, கூட்டம், மருதஞ்சார்ந்த ஊர், வாசஸ்தலம், நகரம், பட்டினம்.
நிகாயன் - கடவுள், சின்மயன், அரூபி.
நிகாரணம் - காரணமற்றது, கொலை.
நிகாரணன் - கொலைகாரன், பழிகாரன்.
நிகாரம் - பனி, அவசங்கை, ஆகாய சுரூப மறிதல், இறைத்தல், உயர்த்துதல், தப்பி தம், தூற்றுதல், விரோதம், விழுங்குதல்.
நிகாலம்-கழுத்து, கண்டம், கந்தரம், களம்.
நிகாவா - பிரமி என்னுமோர் பூடு.
நிகிதம் - படை, இதன்னம, பொய்.
நிகிருட்டம் - இழிவு, பதக்கேடு.
நிகிருதி-தரித்திரம், நிந்தை, பொல்லாங்கு.
நிகிருந்தநம்-நிகுந்தநம் என்னும் ஒரு நரகம். இது: குயவன் திகிரிபோல இடையறாது சுழன்று திரிந்து பாவிகளுடம்பைத்துண் டிக்கும் சக்கரங்களை யுடையது.
நிகிருட்டம் - இழிவு.
நிகிருதி - வறுமை, பொல்லாங்கு, நிந்தை.
நிகிர்சம் - பிசி, அரும்பொருள், அன்னம்.
நிகிலம் - எல்லாம், அகிலம், சர்வம்.
நிகீயெனல் - குதிரைக் கனைப்புக் குறிப்பு.
நிகீனன் - கீழ்மகன், இழிகுணத்தான்.
நிகு - அறியுங்கருவி, மஞ்சள், அரிசனம்.
நிகுஞ்சகம் - ஓரளவு, நிகுஞ்சகமரம்.
நிகுஞ்சம் - குகை, சிற்றில், புதர், வீடு.
நிகுஞ்சனம் - கொலை, கூத்துக் கிரியை களிலொன்று.
நிகுட்டம் - தொனி, ஒலி, சத்தம், ஓசை.
நிகுதி - நியதி, ஒழுங்கு.
நிகுத்தை - கதவு. கபாடம்.
நிகுநிகுவெனல் - மினுமினுத்தற்குறிப்பு.
நிகும்பம் - நேர்வாளம். [செய்த இடம்.
நிகும்பலை - நிகும்பிலை, இந்திரசித்து யாகஞ்
நிகும்பன் - கும்பகர்ணன் மகன். (இக்ஷ்வு) ஹரியசுவன் மகன், இவன் மகன் பரி ஹிணுசுவன், அமிதாசுவன், சம்ஹதா சுவன் என்பன வேறு நாமம். (2) (ராம) கும்பகர்ணன் புத்திரன், இவன் போர் முகத்தில் அநுமானாற்கொல்லப்பட் டான். (3) சிவகணங்களுள் ஒருவன்.
நிகும்பிலை - நிகும்பலை.
நிகுரம்பம் - சமூகம், சனத்திரள், சங்கம்.
நிகூடம் - ஆழம், மறைவு, தூரம். [மரம்.
நிகேசரம் - இரத்த விர்த்தி தரத்தக்க ஓர்
நிகேசாயம் - குவித்தல், சேர்த்தல், கூட்டல்.
நிகேதகம் / நிகேதம் } வீடு, மாடம், புக்கில், மனை.
நிகேதனம் - தேவர்கோயில், மருதஞ்சார்ந்த ஊர், வீடு, நகரம், பட்டினம், பேரூர்.
நிகோடா - நெய்க்கொட்டை, பூவந்தி.
நிகோதம் - கொடிய நரகவகை.
நிக்கடஸ்தூர் - கப்பலின் முன்மரப்பாய்.
நிக்கந்தன்-அருக்கன், புண்ணியன், அண்ணல்.
நிக்கனன் - அநமித்திரன், மூத்தமகன்; இவன் புதல்வர் சத்திராசித்து, பிரசே னன், என்போர்.
நிக்கல் - கனமில்லாத ஓர் உலோகம்.
நிக்கா - முகம்மதியர் கலியாணம்.
நிக்கிரகணம் - கீழ்ப்படுத்தல், நிக்கிரகம்.
நிக்கிரகஸ்தன் - அழிப்பவன், சங்கரன்.
நிக்கிரகத்தானம் - தற்கத்திலெதிரியைச் சயிக்குநிலை.
நிக்கிரகம் - எல்லை கட்டுதல், குற்றப்படுத் தல், கொலை, தண்டம், வெறுப்பு, அதட்டல்.

நிக்கிரகன் - கிருட்டினன், சங்காரமூர்த்தி.
நிக்கிரகானுக்கிரகம் - இன்ப துன்பங்களூட்டல், தண்டனையு மிரக்கமும்.
நிக்கிரகித்தல் - கொல்லல், தண்டித்தல், பந்தித்தல், வாதியைச்சயித்தல், சங்கரித்தல்.
நிக்கிராகம் - சாபஞ் சொல்லல், சபித்தல்.
நிக்குவணம் } வீணை முதலிய வற்றின்
நிக்குவாணம் } தொனி.
நிக்குரோத்தம் }
நிக்ரோதம் } காட்டாமணக்குச் செடி.
நிக்குரோதம் }
நிசகரம் - நிச்சயம்பண்ணல், தீர்மானம்.
நிசகன் - அபிமன்யன் எழாஞ்சந்ததி யானவன்; இவன் காலத்திலேயே அஸ்தினாபுரியைக் கங்கை கொண்டது, அதன் பின்னர்க்கவுசாம்பி ராஜதானி யாயிற்று என்பர்.
நிசங்கம்-அம்புக்கட்டு, இணக்கம், ஒன்றிப்பு.
நிசஸ்தர் - நிசவான்கள், சத்தியவான்கள்.
நிசதம் - நான்தோறும்.
நிசத்தன் - நிசஸ்தன், சத்தியவான், சத்தமில்லாமை, சத்தஞ்செய்யாதவன்.
நிசப்தம் - ஒலியின்மை.
நிசமம் - நியமம், நிருமிப்பு, நிச்சயம்.
நிசமனம் - கேள்வி, பார்வை, நோக்கம்.
நிசமித்தல் - நியமித்தல், நிரூபித்தல்.
நிசம் - உண்மை, சொந்தம், நாணயம், நித்தியம், மெய், இயல்பாயுள்ளது, சத்தியம்.
நிசமம் - நியமம், முடிவு.
நிசயம் - தண்டவியூகத்தொன்று.
நிசரேதம் - தள்ளுதல், நீக்குதல், விலக்கல்.
நிசவான் - மெய்யன், சத்தியவான், நாணயன்.
நிசவு - நெசவு, நெய்வு, இணைவு, பிணைவு.
நிசற்கம் - உருவம், சிருட்டி, நிலைபரம், மாற்றுதல், விடுதல், வெறுப்பு, விலக்கு.
நிசற்கசம் - பிறவிச்சுபாவம், பிரகிருதி, இயல்பு.
நிசனம் - சனமின்மை, தனிமை, ஏகம்.
நிசா - இரவு, வகுஞ்சம், கங்குல், நிசி.
நிசாகசம் - வெள்ளாம்பல், வெள்ளையல்லி.
நிசாகம் - மஞ்சள், அரிசனம், காஞ்சனி.
நிசாகரம் - வெள்ளாம்பல், வெள்ளையல்லி.
நிசாகரன் - சந்திரன், சேவல், விந்தியமலை வாழ்இருடி. இவரால்சம்பாதி இறகுகள் பெற வரலாறு அறிந்தான். ஓர்கால்சம்பாதி தம்பியோடு சூரியமண்டலஞ் செல்லத் தம்பி பிழைக்கத்தன் இறகுகருகத் தரையில் மூர்ச்சையாய் விழுந்தான். இம் முனிவர்இக்கழுகரசுக்கு உணர்ச்சியுண்டாக்கினர். சீதையைத்தேடிவரும் அனுமார் முதலியோர் ராம நாம பஜனை பண்ணிக்கொண்டு உயிர் துறக்கப் போயினர், அது காலை உனக்குப் பழையபடி இறகுகள் உண்டாகும். அவர்களும் உன்னால் சீதைநிலை அறிந்து, உயிர்தவா தொழிவர் என்று கூறினவர்.
நிசாகேது - சந்திரன், திங்கள், களங்கன்.
நிசாசரம் - இரவினடமாடுவன, கூகை, பாம்பு.
நிசாசரர் - அசுரர், இராக்கதர், கள்வர்.
நிசாசரி - இராட்சத ஸ்திரி, கூகை, வேசி.
நிசாசலம் - பனி, ஏமந்தம், துகினம்.
நிசாடம் - ஆந்தை, பிங்கலை, கின்னரம்.
நிசாடு - மஞ்சள், அரிசனம், காஞ்சனி.
நிசாதனம் - இடம், மெய், வீடு, நகரம்.
நிசாதன் - கீழ்மகன், அற்பன், கீழ்.
நிசாநி - மாலைவெளிச்சம், அந்தியொளி.
நிசாநந்தம் - மனோலயமான யோகானந்தம்.
நிசாந்தகன் - சூரியன், ஞாயிறு, கதிர்.
நிசாந்தநாரி - இல்லாள், மனைவி, பாரி.
நிசாந்தம் - விடியற்காலம், வைகறை, வீடு.
நிசாபதி - கற்பூரம், சந்திரன், உடுவேந்து.
நிசாபிசா - மரமஞ்சள், குச்சிமஞ்சள்.
நிசாபுட்பம் - இரவலரும்பூ, உறைந்தபனி, செவ்வாம்பல், பனி, வெள்ளாம்பல்.
நிசாமணி - சந்திரன், மின்மினிப்பூச்சி.
நிசாமனம்-கேள்வி, நிழல், பார்வை, நோக்கு.
நிசாமானம்-இராத்திரிக்காலவளவு, இராவரை. [கொலை.
நிசாரணம் - இராப்போர், நிசிமுரண்,
நிசாரணன் - கொலைசெய்வோன், கொலையாளி.
நிசாரம் - சாரமற்றது, வருத்தம், கவலை.
நிசாரி - சூரியன், சந்திரன், அசத்தன்.
நிசாரியம் - போடல், வழுவவிடல், நழுவவிடல்.
நிசார் - நீண்டகாற்சட்டை.
நிசார்த்தம் - பாதிராத்திரி, மெய், சத்தியம்.
நிசார்த்துணன் - சந்திரன், இராக்கதர்.
நிசானம் - ஒருகட்பறை, ஒருசிறுவாத்தியம்.
நிசி - இரா, இருள், பொன், மஞ்சள்.
நிசிசரர் - அசுரர், இராக்கதர், அவுணர்.
நிசிதண்ணீர் - நீராகாரம்.
நிசிதம் - இகழ்ச்சி, இரும்பு, கூர்மை, நிறைவு. [வர்.
நிசிதர் - அசுரர், ஈனர், தைத்தியர், தானவர்.
நிசித்தம் - விலக்கு, இழிவானது.

நிசிந்தன் - சிந்தனையற்றவன், சிந்தனைக் கெட்டாதவன், பரமசிவன்.
நிசிந்தா - கோயிற் கணக்கன்.
நிசிமணி - சந்திரன், இராக்கதிர், இந்து.
நிசீதம் - அத்தசாமம், அற்பம், இரவு, கூர்மை.
நிசீதினி, நிசீத்தியை } இரவு, கங்குல், அந்தகாரம்.
நிசுந்தன் - சுந்தோபசுந்தர் தந்தை.
நிசும்பம், நிசும்பனம் } கொலை, சங்காரம்.
நிசும்பன் - கொலைஞன், கூற்றன், (இதிவம்சம்) சும்ப நிசும்பர் பார்க்க.
நிசுலகம் - மார்க்கவசம், மார்ச்சட்டை.
நிசுலம் - அலரி, கவசம், துப்பட்டி, போர்வை.
நிசுவாசம்-சிவாகமமிருபத்தெட்டிலொன்று, வெளியில்விடும் சுவாசம், வெளிமூச்சு.
நிசுளம் - நீர்க்கடம்பு.
நிசுளாபுரி - சோழர்தலைநகராகிய உறையூர்.
நிசுனம் - நீர்க்கடம்பு, சிறுகடம்பு.
நிசூதனம் - அழித்தல், சங்காரம்.
நிசேஷம் - எல்லாம், முழுதும், முற்றும்.
நிஷேதம், நிசேதம் } நிடேதம், நீக்கப்படுபொருள்.
நிசை - இரவு.
நிசோலகம் - மார்ச்சட்டை, மார்க்கவசம்.
நிசோலனம் - தரிசனம், காட்சி.
நிஸ்காரம் - நிந்தை, வசவு, இழிவு, வகை.
நிச்சத்தம் - சத்தமின்மை.
நிச்சத்தியமை - பொய், சத்தியமின்மை.
நிச்சத்துவம்-தத்துவமின்மை, பலமின்மை.
நிச்சம் - நித்தம், தினந்தினம், அன்றுடம்.
நிச்சயதாம்பூலம் - பெண்ணே விவாகம் பண்ணிக்கொடுப்பதற்கு உடன்படிக்கையாக மணவாளனுக்குக் கொடுக்கும் பாக்கு வெற்றிலை.
நிச்சயப்படுத்தல் - உறுதிப்படுத்தல், நிசப்படுத்தல், தீர்மானப் படுத்தல்.
நிச்சயம் - உறுதி, தீர்ப்பு, நியமம், மெய்.
நிச்சயார்த்தம் - நிச்சயதாம்பூலம்.
நிச்சயித்தல் - உறுதிப்படுத்தல், தீர்மானித்தல், நியமித்தல், தூணிதல், திட்டமாக்கல்.
நிச்சயிப்பு - தீர்மானம், நிச்சயம், திட்டம்.
நிச்சலத்தியானம் - அசைவற்ற தியானம்.
நிச்சலத்துவம் - சலியாமை, கலங்காமை.
நிச்சலபுத்தி - சலனமற்ற மனம், நிர்மதி.
நிச்சலம் - அசைவின்மை, நித்தம், பட்டினி.
நிச்சலன் - அசைவற்றவன், கடவுள், நிசலன்.
நிச்சலும் - எப்பொழுதும், அனவரதமும்.
நிச்சலை - பூமி, குவலயம், புவனம்
நிச்சள் - தாளி, தாளிதம், ஓர் கொடி.
நிச்சாரகம் - காற்று, கொண்டல், பவனம்.
நிஸ்ஸாரம்-நிசாரம், சாரமற்றது, வருத்தம்.
நிச்சாலங்கம் - மலை, விலங்கல், கல்லகம்.
நிச்சிதம் - நிசம், நிச்சயம், உறுதிப்பாடு.
நிச்சித்தம் - மனோலயம், விசார மின்மை.
நிச்சித்தல் - நிச்சயித்தல், உறுதிப்படுத்தல்.
நிச்சிந்தன் - அருக்கன், எண்ணமற்றவன்.
நிச்சிந்தை - எண்ணமற்ற சிந்தை, அமணம்.
நிச்சியம், நிச்சிரம் } வெள்ளுள்ளி.
நிச்சிரேணி - ஏணி, மேற்போகும் படி.
நிச்சிரேயசம் - முற்றத்துறத்தல், மோக்ஷம்.
நிச்சுவசனம் - பெருமூச்சு விடுதல், மூர்க்கங் கொள்ளுதல், கோபாவேசம்.
நிச்சுவாசம் - சுவாசம் அடக்கல், சுவாசம் வெளியிடல்.
நிச்சேடம் - மிச்ச மின்மை, மீதமின்மை.
நிஸ்தாரம் - ஈடேறல், கடைத்தேறல், வாழ்தல்.
நிஸ்தார ரத்நிலுகரம் - ஓர் சிறிஸ்தவநூல்.
நிஷக்கல்லு - தீதாங்கபாஷாணம்.
நிஷதம்-அட்டமலையிலொன்று, தேயமைம் பத்தாறி லொன்று, நிடததேசம்.
நிஷாதம் - சத்தசுரத்தில் கடைச்சுரம்.
நிஷித்தம் - இகழ்ச்சி, நிந்திப்பு, தவறு.
நிடதம் - நிஷதம், நிடதமலை, நிடததேசம், நிடதக்கை, இரட்டைக்கை வகையிலொன்று.
நிடதர்கோன், நிடதன் } நளன், நிடதநாட்டுமன்னன், வீரசேனன் மகன்.
நிடலம் - நெற்றி, உச்சி, நூதல்.
நிடலாட்சன் - சிவன், நெற்றிக்கண்ணன்.
நிடாதன் - சண்டாளன், மாயாவி.
நிடாலம் - நெற்றி, நுதல், உச்சி.
நிடுதம் - உமிழ்தல், உமிழ்வு.
நிடேதனம் - தற்கொலை, வதை, அதம்.
நிடேதனன் - கொலைகாரன் அதன்.
நிவேதம், நிடேதம் } மணவாளனும், மணப்பட்டியும் முதன் முதற்கூடுதல், ஒழிவு, தடை, வழு, விலக்கு.
நிவேதித்தல், நிடேதித்தல் } மணவாளனும், மணவட்டியும் முதற் கூடுதல், விலக்கல்.
நிட்கண்டகம்-தாட்சிணியமின்மை, தீமையின்மை.
நிட்கபடபத்தி - மெய்ப்பத்தி, உண்மைப்

பத்தி.

நிஷ்கபடம் } சத்தியம், மனச்சுத்தம்.
நிட்கபடம் }

நிஷ்கம் } இன்மைப் பொருடருமோ ருபச
நிட்கம் } ருக்கம், ஓர்பறை, இருபதுகுன்றி
யிடைப் பொன், மார்பணி, வராகனிடை.

நிட்கம்பம் - அசைவின்மை, சலனமின்மை.

நிட்கருடப்பத்திரிகை - உறுதி நடத்தைக்

நிஷ்கருஷம் [காகிதம்

நிட்கருடம் } நிச்சயம், முடிவடைந்தது.
நிட்கருஷ } உறுதிப்பட்டது, தீர்மா
நிட்கருடை } னம், துணிபு, தீர்ப்பு.

நிட்கலை - பிரசூதித் தடக்ககன்றவள்.

நிஷ்கலம் } உருவின்மை, கலப்பின்மை,
நிட்களம் } சுத்தம்.

நிஷ்களங்கம் } சுத்தம், கறையற்றது,
நிட்களங்கம் } கலப்பற்றது, பரிசுத்தம்.

நிஷ்களர் } கடவுன், சுத்தமுடையோர், பரி
நிட்களர் } சுத்தர். [மின்மை.

நிட்காபட்டியம் - சுபடமின்மை, வஞ்ச

நிஷ்காமியம் } விருப்பின்மை, ஆசையின்
நிட்காமியம் } மை.

நிஷ்காரணம் } காரணமின்மை,
நிட்காரணம் } அகாரணம்.

நிட்கிரமணம் - வெளியிற்போதல், வெளிப்

நிட்கிராமம் -கூத்தினோர்விகற்பம். [படல்.

நிட்கிரியன்-இகபரலோகச் சடங்கற்றவன்.

நிட்குடி - குடும்பமில்லாதவன், ஏலம்.

நிட்சணம் - முத்தம், முத்தங்கொடுத்தல்.

நிட்சிப்பியம் - போடல், எறிதல், வீசுதல்.

நிட்சேபம் - அடைவு, துடைத்தல், புதை
யல், விடுதல், நீக்கல், நிக்ஷேபம்.

நிட்டாபரன் } நியமநிட்டைதவறாதோன்.
நிட்டாவரன் }

நிட்டாநுபூதி - நிட்டையி லனுகூலப்படுந்
திவ்வியானுபவம், அனுட்டானவாசாரம்.

நிட்டீவனம் - வாந்தி, ஓமலிப்பு.

நிட்டுரதரர்-கொடுமைமிக்கவர், பழிகாரர்.

நிட்டுரம் } இடையூறு, கொடுமை,
நிஷ்டூரம் } விகற்பம்.

நிட்டூரி - கொடியவன், சண்டாளி, பாதகி.

நிட்டேகம்
நிட்டேவனம் } நிடுதம், உமிழ்வு,துப்பல்.

நிஷ்டை } அழிவு, இக்கட்டு, சந்தித்துத்
நிட்டை } துணிந்த பொருளுடன் உறுதி
யாய்நிற்றல், உறுதி,சாதகம்,நம்பிக்கை,
நன்னடை, நிலைபரம், வாழ்நாள்.

நிட்பத்தி - பிறப்பு, இறப்பு, முடிவு.

நிட்பரிக்கிரகன் - முற்றத் துறந்தோன்.

நிஷ்பலம் } பலமின்மை, வலியின்மை.
நிட்பலம் }

நிஷ்பவம் } அவரை, சிக்கடி, சிம்பை,
நிட்பவம் } மொச்சை. மொச்சைப்பயறு.

நிட்பன்னம் - பக்குவமானது, பாகமானது.

நிட்பாவம் - துரத்தல், விசைக்காற்று,
வைக்கோல், பாவமற்றது, அபாவம்,
அவரைப்பிஞ்சு, மொச்சைக்கொட்டை.

நிட்பிரகிருதி - பிரகிருதியற்றது, கரும
மற்றது.

நிட்பிரபஞ்சன் - சாந்தமுள்ளவன்.

நிட்பிரபை - ஒளியின்மை,பிரகாசமின்மை.

நிட்பிரயோசனம்-உபயோகமின்மை,வீண்.

நிணச்செருக்கு - மூர்க்கம், முரட்டுத்தனம்.

நிணத்தல் - கொழுத்தல், முடைதல்,
பிணித்தல்.

நிணத்திசு - இரத்தச்சவ்வு.

நிணப்பு - கொழுப்பு, நெய்ப்பு, மதப்பு.

நிணம் - கொழுப்பு, புண், ரணம்.

நிணவை - பின்னிச் செய்யப்பட்டவை,
பினிப்பு, மின்னல்.

நிணறு - உருக்கம், அன்பு, காருண்யம்.

நிண்டுதல்-நிமிண்டுதல்,கிள்ளல்,நன்னுதல்.

நிண்ணயபாதம்-தீர்ப்பு,முடிவு, தீர்மானம்.

நிண்ணயம் - உறுதி, தருக்கமுடிவு,தீர்ப்பு,
நிச்சயம், நியமம், முறை, தீர்மானம்.

நிண்ணயம்பண்ணுதல்-சத்தியம் பண்ணல்,
நிச்சயப்படுத்தல், நியமம்பண்ணல்

நிண்ணயி - நிருணயி,திடஞானி,தீர்மானி.

நிண்ணரம் - சூரியன்பரியிலொன்று.

நிண்ணித்தல்-நிசப்படுத்தல், திடப்படுத்தல்.

நிதகம்-நீகமுள்ளிச்செடி, நிதகாரிச்செடி.

நிதத்துரு - மனிதன், மானிடன்.

நிதம் - அதுதினம், நித்தியம், நஞ்சு.

நிதம்சூலை - ஓர்சூலை,நோய், வயிற்றுநோய்.

நிதம்பம் - அல்குல், இடைக்குந் தொடை
மூலத்துக்கு நடு, கரை, கற்பரி பாவா
ணம்,தோள்,மலைப்பக்கம்,வரைசாரிடம்.

நிதரிசநம் - காட்சியணி, அஃது:யாதொன்
றினிகழ்ச்சியானன்மையாவது,நிமையா
வது தெரிவித்தல். காணப்படா
மை, திருட்டாந்தம், கட்டளை, வகை,
ஓரலங்காரம்.

நிதரிசனப்பத்திரம் - நற்சாட்சிப் பத்திரம்.

நிதருக்கம் - அருத்தமில்லா வசனங்களைப்
பேசல், வீண் வம்பளத்தல்.

நிதலம் - கீழேழுலகிலொன்று.

நிதனம் - அழிவு,தரித்திரம்,தோற்றப்படா
மை, பிறந்தநாளுக்கேளாநாள், மரணம்.

நிதாககரன்-சூரியன், வெய்யோன், வெயில்.
நிதாகம்-முதிர்வேனில், வெப்பம், வெயர்வு.
நிதாந்தம் - மேன்மை, அதிகாலை, வைகறை.
நிதாந்தன் - மேன்மையுள்ளவன், கனவான்.
நிதார்த்தம் - உண்மை, சமஞ்செய்கை, நிசார்த்தம், நீதி, எதார்த்தம், இயல்பு.
நிதானம் - ஆதிகாரணம், கடவுண்மணிக்கும் நவமணிக்கும்பொது, சமம், சரி, சுத்தம், சுமித்திரை, நிச்சயம், நேர்மை, பசுக்கட்டுங்கயிறு, படை, பிரமாணம், பொன், மதிப்பு, முடிவு, மெய், யூகம், பகுத்துணர்வு, வைத்திய சாத்திரத்தொன்று.
நிதானவான்-நேராளி, அறிவாளி, சாந்தன்.
நிதானன் - கடவுள், பற்றுதவன்.
நிதானி-நேராளி, மூன்யோசனையுள்ளவன்.
நிதானித்தல் - நிச்சயித்தல், மதித்தல், ஆய்தல். [ஆராய்வு.
நிதானிப்பு - அருத்தாபத்தி, மதிப்பு,
நிதி - ஆபரணத்திற்றொங்கணி, கடவுண்மணிக்குநவமணிக்கும்பொது, சமுத்திரம், திரவியம், மறைவு, பொக்கிஷம், பொன்.
நிதிக்கிழவன் } குபேரன், அளகையாளி,
நிதிக்கோன் } தலைச்சங்கப் புலவருளொருவன். [திரம்.
நிதிசாத்திரம்-புதையல்கண்டெடுக்கும் சாத்
நிதித்திகம் - கண்டங்கத்திரி, முட்கத்திரி.
நிதித்தியாசனம்-சிந்திப்பு, விடாத்தியானம்.
நிதிநாதன் - குபேரன்.
நிதிநிட்சேபம் - பூமியின்கீழுள்ள புதையல்.
நிதிந்திகம் - கண்டங்கத்திரி.
நீசகன் - கீழ்மகன், அபிமன்யுவுக்குப் பிறகு வந்த ஏழாவது அரசன். இவன் அரசில் அத்தினபுரம், முழுகியது.
நீசகை - நீசப்பெண், கீழ்மகள், யாது.
நீசக்கிரகம்-இராகு,கேது, உச்சத்திற் கேழாமிடத்திரகம், நீசத்தானமமைந்த கிரகம்.
நீசசாதி - கீழ்ச்சாதி, தாழ்குலம், இழிகுலம்.
நீசத்தனம் - இழிதன்மை, கீழ்மை.
நீசத்தானம் - உச்சத்திற் கேழாமிடம்.
நீசநடை - தியொழுக்கம், கீழ்மைத்தனம்.
நீசபங்கராசயோகம் - ஓர்விதமான யோகம்.
நீசப்படுதல்-ஈனகுணமுடைத்தாதல். [மை.
நீசம்-ஈனம்,உச்சத்திற் கேழாமிடம், கொடு
நீசர் - கீழ்மக்கள், ஈனர், இழிகுலத்தவர்.
நீசவச்சிரம் - ஓர்மணி, மட்டவச்சிரம்.
நீசவாகனம் - கழுதை, கர்த்தபம், வேசரி.
நீசன் - ஈனன், கீழ்மகன், இழிகுலன்.
நீசாரம் - கம்பளிப் புடவை, திரைச்சீலை, திரைப்படம்,இடைச்சீலை,எழினி, படாம்.
நீசிகை - நற்பசு, அமுதசுரபி, பத்திரை.
நீச்சத்தானி-இரசம், சிவன், விந்து, சூதம்.
நீச்சல் - ஆழம், நீர்ப்பள்ளம், நீந்தல்.
நீச்சு - நீந்துதல், வெள்ளம், மீன்கவுச்சு.
நீச்சுத்தண்ணீர்-எட்டாநீர், நீராகாரம்,மீன், கழுவுநீர்.
நீஞ்சுதல் - நீந்துதல், நீரில் மிதத்தல்.

நீஞ்சும்பிராணி - நீந்துவன, நீர்வாழ்வன.
நீட்சம் - குருவி, சிறுபறவை, சிட்டு.
நீடகேந்திரன் - கருடன், பறவை வேந்து.
நீடம் - இருப்பிடம், குருவிக்கூடு. [தல்.
நீடல் - நீளல், நெடுத்தல், தரித்தல், கினைத்
நீடாணம் - கறி,குழம்பு, தொடுபதார்த்தம்.
நீடாமங்கலம்- நீண்டசம்பத்து, ஒரூர்; இது: கும்பகோணத்தருகே யுள்ளது.
நீடாலக்கோடு - சூடாலக்கல், அணிகல்.
நீடிக்கை - நீடிப்பு, நீடித்தல், கிலேபேறு.
நீடித்தல்-நெடுகுதல்-கிலேபெறுதல்,தரித்தல்
நீடித்திருத்தல் - நெடுங்காலத்திற் கிருத்தல்
நீடிப்பு - கிலேப்பு, தரிப்பு, நீட்பு, நீடித்தல்,
நீடு - நெடுங்காலமட்டும், நீண்டகாலமட்டும், நெடுநேரம், நெடுங்காலம், நெடுந்தூரம், சிறப்பு, உயர்வு, பெருமை.
நீடுதல் - செழித்தல், தாண்டல்,கிலேத்திருத்தல்,நீளுதல், நெடுங்காலத்திற் கிருத்தல், பொழுது கழிதல், தாமதித்தல்.
நீடுகினைந்திரங்கல் - அகப்பொருட்துறையி லொன்று; அஃது: தலைவியைப் பிரிந்த தருணத்து அவளை மிக கினைந்து தலைவ னிரங்கல்.
நீடூ - எவ்வியின் நகரம்.
நீரேம் - ஓர்வகைப் பாஷாண மருந்து.
நீழி, நீழிகாலம் } ஊழிக்காலம், நீண்டகாலம்.
நீடோத்பவம் - பறவை.
நீட்சி, நீட்சிமை, நீட்டம் } நீளம், விசாலம், நீட்பம், நெடுமன், நெடுமை. [தல்.
நீட்டலளவை-கோல் முதலியவற்று னளத்
நீட்டலளவையாகுபெயர் - நீட்டி யளத்தற் குரிய கருவியின் பெயர் அதனுளவக்கப் படுவதற்காகி வழக்குவது (உ-ம்) தடி.
நீட்டல் - ஈதல்,நீட்டுதல், மயிர் வளர்த்தல்.
நீட்டல்மானம் - நீட்டலளவை, நீட்டலளவு.
நீட்டாணம் - நீடாணம்,குழம்பு, தொடுகறி.
நீட்டாள் - நெட்டையாள், வேலையான்.
நீட்டித்தல் - தாமதித்தல்,நெடுகுதல், நெடும் பொழுது செல்லல், முடித்தல்.
நீட்டிநட - எட்டிநட, வேகமாய்நட.
நீட்டினவிரல்குறித்தான் - கிரந்திநாயகம்.
நீட்டு - நீட்டென்னேவல், நீளம், நெடும் பொழுது, தூரம், திருமுகவோலை.
நீட்டுதல் - ஈதல், தாமதப்படுத்தல், நாட் போடுதல், நீளச்செய்தல், காலந்தாழ்த்தல்.
நீட்டுப்பை - சுருக்கி விரிக்கக்கூடிய பை, பெரிய வயிறு.
நீட்டுப்போக்கு - அகல நீளம், வயல் நிலம் ஆகிய செல்வ முதலியவற்றின் விசாலம், திராணி, நெடுமை, வலிமை, நீளவாட்டு.
நீட்டுமுடக்கு-கொடுக்கல்வாங்கல், திராணி.
நீட்பம் - நீளம், நீட்சி, நீட்டுப்போக்கு.
நீணுளம்-நீண்டபுகைக்குழை,புகைக்கூண்டு.
நீணிதி-வற்றுதபாக்கியம்,பெருஞ்செல்வம்.
நீணிலை-ஆழம் - நீர்க்கிடங்கு, நீர்மடு.
நீணெறி-நீண்டவழி,நெடும்பாதை,தூரவழி
நீணெறிநாதேசுவரர் - திருத்தண்டலை நீணெறியில் கோயில் கொண்டிருக்கு மீசன்.
நீணோக்கம் - விடாது பார்த்தல்.
நீண்டகரை - நெடுங்கரை, நாடியகரை.
நீண்டகையானை-காண்டாமிருகக் கொம்பு.
நீண்டது - நெடியது, நெட்டையானது, நெடிது, வளர்ந்தது. [று.
நீண்டமயல்-பெருமயக்கம், பாசபந்தம், பற்
நீண்டவன் - வாமனன், உலகளந்தோன்.
நீண்டாயம் - நீளம், நீட்பம், நீட்டம், நீட்சி.
நீண்டோன்- விட்டுணு, உலகளந்த பெருமான்.
நீண்டமுடி - நீண்ட கிரீடம், அரசன்.
நீண்மை - பழமை, தொன்று தொட்டது.
நீண்மொழி-நெடுமொழி, போர்க்களத்துட் கூறிய சபதத்தைக்கூறுந் திறை.
நீதகம்-நீர்வல்லிக்கொடி,வெற்றிலைக்கொடி
நீதக்காரன்-நீதவான்,நியாயாதிபதி,நீதிபதி
நீதச்சிலேசுதம்- நீலாஞ்சனம், கல்லீயம்.
நீதத்தலம் - நீதம்.
நீதபரிமளம்-நீதாங்கபாஷாணம்,ஓர்மருந்து.
நீதம்-தானியம், நன்னெறி,நீதி,பேறு,தகுதி
நீதவான், நீதன் } நீதமுள்ளவன், நீதித்தலைவன், நீதிமான், நியாயவான்.
நீதி - நியாயம், முறைமை, மெய், பார்வதி.
நீதிக்கேடு-அநியாயம்,அநீதி,ஒழுக்கத்தவறு.
நீதிசாத்திரம் - கலைஞானமறுபத்து நான்கி லொன்று, நியாயநூல், நீதிநூல்.
நீதிசாரம்-நீதிவிஷயங்களைப்பற்றியஓர்நூல்.
நீதிச்செல்வம்- நியாயத்தேட்டம், சௌளம்.
நீதிஞ்சன் - நியாயசாத்திரி, நீதிக்கலைஞன்.
நீதித்தலம் - நீதத்தலம், நியாயமன்று.
நீதித்தவறு - நீதிப்பிழை, நியாயவழு.
நீதித்தீர்ப்பு-நியாயத்தீர்வை, நியாயமுடிவு.
நீதிநூலன், நீதிநூலி } அருகன், நியாயப் பிரமாணிகன், நீதிநூற் கிரந்த கர்த்தா.
நீதிநூல் - நீதிசாத்திரம், நியாயசாஸ்திரம்.
நீதிநெறிவிளக்கம் - குமரகுருபர சுவாமிகள் இயற்றிய நூல், சன்மார்க்கமுறை, சன்

மார்க்கம். [வரசன்.
நீதிநெறிச்சோழன் - நீதிவழாத ஓர் சோழ
நீதிபரன் - அரசன், கடவுள், நீதிமான்.
நீதிமான் - நீதியுள்ளவன், நியாயாதிபதி.
நீதியதிபதி-நியாயாதிபதி, நியாயத்தலைவன்.
நீதியறிந்தோன் - மந்திரி, நல்லமைச்சன்.
நீதியற்றவன்-அநியாயக்காரன், அக்கிரமன்.
நீதியாதிபதி- நீதியதிபதி, நியாயத்தலைவன்.
நீதியை - நீதியையுடையாய், குணத்தினை யுடையாய்.
நீதியொழுங்கு - நீதிமுறை, நியாயவொழுங்கு.
நீதிவழு-நியாயத்தப்பு, நியாயக்கேடு, அக்கிரமம், ஒழுக்கத் தவறு, தாமதக்குணத் தொன்று. [திப்பு
நீதிவிளக்கம் - நியாயவிசாரணை, நீதிவிபா
நீதிவிளங்குதல் - நியாயவிசாரித்தல், நியாயந் தெளிதல், நியாயந்துலங்குதல்.
நீத்த - பெருக்கத்தையுடையன, நீக்கின.
நீத்தம்-தண்ணீர்விட்டான், வெள்ளம், கடல், ஆழம், நீத்து.
நீத்தவன் - அருகன், துறவி, மெய்ஞ்ஞானி.
நீத்தார் - நீத்தோர், முனிவர், துறவிகள்.
நீத்து - நீந்தல், நீந்துபுனல், கடல், பெருக்கம், வெள்ளம்நீக்கி, ஆழம், நீச்சு.
நீத்தும்- தூரப்போம், நீங்குவோம், நீக்கியும்.
நீத்தோர் - பொறிபுலனடக்கினோர், துறவோர்,
நீந்தல் } கடத்தல், நீரினீஞ்சுதல், பெரு
நீந்துதல் } குதல், கழித்தல்.
நீந்துபுனல் - எட்டாநீர், பெருவெள்ளம்.
நீபம் - உத்திரட்டாதிநான், கடம்பு, வெண் கடம்பு, செங்கடம்பு, காரணம்.
நீபன்-(பர) பாரன் அல்லது பிருதுபத்திரன். இவனுக்கு தூறுபுத்திரர்கள் பிறந்தார்கள் அவர்களுள் மூத்தோனுமிய சமான் என்பவன் காம்பிலிய தேசத்தரசனுயினான்.
நீப்பிடம் - பிரிவிடம், பிரியுமிடம், பிரியும் காலம். நீப்புக்காலத்திருக்குமிடம்.
நீப்பு - துறவு, பிரிவு, நீக்கம், விலக்கம், விலக்கல், விலக்கு, பிரிவு, தவிர்கை.
நீப்புறவு - விலக்கப்படுதல்.
நீமம் - ஒளி, பிரகாசம், காந்தி, சோதி.
நீம்பல் - வெடிப்பு, விரிவு, பிளவு, கமர்.
நீயல் - நீங்கல், விடுதல்.
நீயாத - விடாத, நீயா.
நீயான் - மாலுமி.
நீயிர் - நீவிர், முன்னிலைப் பன்மைப் பெயர்.
நீர - குணத்தையுடையன, தரத்தையுடையன, தன்மையான.
நீரகம் - பூமி.
நீரங்காடி - நீர்விழாப்போது அமைக்கப் பட்ட ஆற்றயற்கடைகள்.
நீரசம் - தாமரை, மாதுளை, சுவையற்றது.
நீரடி - நீரெட்டி, நீரடிமுத்து, நீர்ச்சதுப்பு.
நீரசவஸ்து - பொன் முதலிய ஈரமற்ற உலோக வகை.
நீரடைத்தல் - சலமடைத்தல், நீரடைப்பு.
நீரடை - ஆவியில் வேகும் அடை.
நீரடைப்பான் - ஆட்டுக்கு வரும்நோய்.
நீரடைப்பு - சிறுநீர் அடைப்பு, ஓர்நோய்.
நீரணி - நீர்க்கோலம், நீராட்டத்திற்கேற்ற அணி.
நீரணிமாடம் - பள்ளியோடம், சிறுநாவாய்.
நீரதம் - மேகம், சலதரம், புயல், கந்சரம்.
நீரதி - கடல், மகராலயம், சலநிதி, சாறு.
நீரது - தன்மையது, நீரிலுள்ளது.
நீரத்தி - ஓர் மரம், பேயத்தி.
நீரதி - கடல், சாறு, சமுத்திரம், சாகரம்.
நீரம் - நீர், இரசம், தீர்த்தம், தண்ணீர்.
நீரரண்-அரண்; அஃது நான்காவனவென்று.
நீரமகளிர்-நீரில்வாழும்தெய்வப்பெண்கள்.
நீரவம் - நீர்ப்பாம்பு, நீரரா, நீரூரகம்.
நீருருகல்-நீர்ச்சிறுப்பு, நீருருந்தல், நீர்க்குறை.
நீரலரி - ஓரலரி, ஆற்றலரி.
நீரழி - சிறுநீர் சம்பந்தமான ஓர் நோய்.
நீராகாரம் - நீர்த்தன்மை, பழஞ்சோற்றுநீர். நிசித்தண்ணீர், நீராரம்.
நீராசனம் } ஆலாத்தி, கண்ணூறுதழிக்கு
நீராஞ்சனம் } மோர்வகையாலாத்தி [காய்.
நீராடல்- நானம்பண்ணல், நீருலுங்குதேங்
நீராடுங்காய் - முற்றின தேங்காய்.
நீராடுதல்- நானம்பண்ணல், நீர்விளையாடல்.
நீராட்டம்- நீராடல், குளித்தல். [வித்தல்.
நீராட்டு - நீர்விளையாட்டு, மஞ்சனஞ் செய்
நீராட்டுதல் - முழுக்காட்டுதல். [ஊழியன்.
நீராணிக்கன்-வயல்களுக்கு நீர்கட்டும் கிராம
நீராமம் - நீர் சம்பந்தப்பட்ட ஓர் நோய்.
நீராமை - ஓர்சிலந்தி, ஓர்நோய், கடலாமை.
நீராம்பல்-ஆம்பல், நீர்க்குமுதம், ஓர்நோய்.
நீராத்தி - மஞ்சணீராரத்து.
நீராரம் - நீராகாரம், நிசித்தண்ணீர்.
நீராரம்பம் - பாய்ச்சல் நிலம், நீரநிலம்
நீராரை } ஆரைக்கீரை.
நீருளாரை }
நீரார் - தன்மையார், நீரர். [நீர்த்துமி.
நீராலி- நீர்த்துளி, நீர்த்திவலை, நீர்த்தூவல்,
நீராவி - கேணி, நீரூற்று, புகை, ஆவிநீர்.
நீராவியந்திரம்- நீராவியினல்ஓடும்எந்திரம்.

நீராழி - கடல், சமுத்திரம், சாகரம்.
நீராழிமண்டபம் - குளத்தினடுவே கட்டிய மண்டபம், வசந்தமண்டபம். [கன்.
நீராளம் - நீராகாரமானது, மயக்கமில்லாத
நீரான் } நாராயணன்.
நீரான் }
நீரி - நீரில்வாழ்வது, நீர்மையது. [தருவது.
நீரது - நீர்மையுடையது, நீர் ஸ மை, நலங்
நீரிலாகிலம் - பாலைநிலம், பாழ்நிலம்.
நிரிழிவு - நீர்ப்பாடு, நீர் அதிகம் இரங்குதல்.
நீரிறக்கம் - நீர்வற்றம், நீர்வரள்வு, வரட்சி.
நீரிறைவன் - நீர்க்கடவுள், வருணபகவான்.
நீரின்வந்தகாரிகை - திருமகள்.
நீருடும்பு - நீரில் வசிக்கிற ஒருடும்பு.
நீருடை - ஓர்வகை வேலமரம், நனைந்த ஆடை, ஈரமான ஆடை.
நீருடைக்கொண்மூ - நீர்சுமந்தமேகம்.
நீருடைவரைப்பு - கடல்.
நீருதிபாசம். கடற்பாசி,வாருதிப்பாசி. [தம்.
நீருபம் - ஆகாயம், அநந்தரம், காற்று, மாரு
நீருமறி - சாயத்திற்குதவும் பூடு. [கேரை.
நீருளாரை - நீராரை, நீராரைக்கீரை, நீர்க்
நீருள்ளி - வெண்காயம், ஈருள்ளிப்பூடு.
நீரூபம் - காற்று, ஆகாயம்.
நீரூறி - கீழாநெல்லி, கீழ்க்காய்நெல்லி.
நீரூற்று - நீரூருதல், நீர்சுரப்பு, ஊற்று.
நீரெக்கல் - நீரைவீசுதல்.
நீரெடுத்தல் - நீர்பெருகுதல், நீர்மிகுதல்.
நீரெடுப்பு - நீர்ப்பெருக்கு, நீர்வெள்ளம்.
நீரெட்டி - நீரெட்டிமுத்து, பேயாமணக்கு.
நீரெரிப்பு - நீர்க்கடுப்பு, உஷ்ணத்தாலுமும் நோய். [ஓர் ஜந்து.
நீரெலி - எலியைப்போன்று நீரில்வசிக்கும்
நீரேற்றம் - ஒரு நோய், சலதோஷம், நீர்ப் பெருக்கு, நீர்வெள்ளம், தடுமன், சளி.
நீரை - தன்மையை, தன்மை உடையை.
நீரொட்டி-நீராரை,நீருளாரை,ஆரைக்கீரை.
நீரொழுக்கு - நீரிழிவு, நீர்ப்பாடு.
நீரோசை - கொண்டாட்டம், சந்தோஷம்.
நீரோடி- இருசாரையு மிணைக்குமரம்,மதகு.
நீரோடை- வடிகாற்பள்ளம்,நீர்வாய்க்கால்
நீரோட்டம் - நீர்ப்பாய்தல், மணியின் உள் ளொளி. [கம்.
நீரோருகம் - தாமரை, பங்கயம், அம்போரு
நீரோற்காரி - ஆவர்த்தம், சத்தமேகத் தொன்று.
நீர் - கடல், குணம், சாறு, தன்மை, நீரென் னேவல், நீவிர், புனல்; இஃது: அட்ட மூர்த்தத்தொன்று,பஞ்சபூதத்தமொன்று, பூராடநாள், நீர்மை, இரத்தினத்தின்ஒளி, மூத்திரம், தண்ணீர், முறைமை.
நீர்குடித்தல்- ஒருசூளுறவு, சபதஞ்செய்தல், ஆணையிடல்.
நீர்குடைதல் - நீராடல், குளித்தல். [வான்.
நீர்கொள்வான் - ஸ்போடகம், நீர்க்குளு
நீர்க்கடம்பு - நீரையடுத்துவரும் ஓர்கடம்பு.
நீர்க்கடன்- திலதற்பணம், சந்தியாவந்தனம்.
நீர்க்கடுப்பு - சலக்கடுப்பு, மூத்திரக்கடுப்பு.
நீர்க்கட்டி - பனிக்கட்டி, ஆலங்கட்டி. [கம்.
நீர்க்கட்டு - நீர்மறிப்பு, நீர்க்கோவை, நீர்வீக்
நீர்க்கட்டுதல் - கொப்பளமுதலிய நீர்ப்பிடித் தல், காயம் முதலியன சலங்கட்டுதல்.
நீர்க்கணம் - அட்டகணத்தொன்று; அஃது: ஒரு நேரசையு மிரண்டு நிரையசையு மடுத்தது.
நீர்க்கண்டகி - நீர்முள்ளி, செங்நீர்முள்ளி.
நீர்க்கமல்லி - நீரல்லி, நீரம்பற்செடி.
நீர்க்கரை- தண்ணீர்த்துறை, ஆற்றின்கரை.
நீர்க்கழிவு-நீரிழிவு,நீர்ப்பாடு,மூத்திரரோகம்
நீர்க்கனம் - சலதோசம், தடுமன்.
நீர்க்காகம் } சலராசிகளையுண்ணும்
நீர்க்காக்கை } ஓர்புள்.
நீர்க்காங்கு - காட்டுப்பூவரசு. [ஓர்காசம்.
நீர்க்காசம் - நீராகப்பிரிந்து உடம்புருக்கும்
நீர்க்கால் - நீரோடுங்கால், வாய்க்கால்.
நீர்க்காவி - கருங்குவளை, நாளுந்தோய்க்குந் தனியிற் பற்றும் செங்கிறம்.
நீர்கிராம்பு- நீர்க்கராம்பு, ஓர்மருந்துப்பூடு.
நீர்க்கீரி - நீரில் வசிக்கும் ஓர் பிராணி.
நீர்க்கீரை - ஓர்கீரை, நீரிலுண்டாகுங்கீரை.
நீர்க்கீழ் - உதயத்திற்கு நாலாமிராசி.
நீர்க்குடம் - பூரணகும்பம்; இஃது: அட்ட மங்கலத் தொன்று, இராசசின்னத்து ளொன்று.
நீர்க்குட்டம்- நீரரகவடியும் ஓர்குட்டநோய்.
நீர்க்குணம் - வெண்ணெய்சில்.
நீர்க்குண்டி - வெண்ணெய்சிச்செடி.
நீர்க்குதல் - நீராதல், நீர்ப்பிடித்தல்.
நீர்க்குதிரை - ஒருவகை ஜலசரம்,ஆபிரிக்கா வில் நீரிலும், நிலத்திலும் வசிக்கும் ஒரு வகைப் பெரிய மிருகம்.
நீர்க்குப்பி - நீர்முள்ளி, செங்நீர் முள்ளி.
நீர்க்குமிழி - நீரிலெழும்புங் குமிழ்ப்புவடிவு.
நீர்க்குளிரி - கல்லாரைச்செடி, கல்லாரிச் செடி.
நீர்க்குளுவான் - ஒருவகை அம்மை.
நீர்க்குறட்டை - ஒருவகை நீர்ப்பாம்பு. [சா.
நீர்க்குறிஞ்சா- கழுதைப்பாலை,வெண்குறிஞ்

நீர்க்குன்று - நீரிலூரும் நத்தை.
நீர்க்கொதி - நீரெரிவு, நீரெரிச்சல்
நீர்க்கொம்பு - வாந்திபேதி, கழிச்சல்.
நீர்க்கொழுக்கட்டை - நீராவியில் வெந்த ஒரு பலகாரம்.
நீர்க்கொழுந்து - நீர்த்தலை, நீர்த்திவலை.
நீர்க்கொன்வான் - கொப்புளிப்பான்.
நீர்க்கொள்ளுதல் } நீர்பிடித்தல், தடுமன்,
நீர்க்கோத்தல் } ஜலதோஷம் பிடித்தல்.
நீர்க்கோத்தை-ஓர்வகைத்தண்ணீர்ப்பாம்பு.
நீர்க்கோரை - பாய்க்கோரை,கோரைப்புல்.
நீர்க்கோலம் - மகளிர் நீர் விளையாட்டிற் கொள்ளும் கோலவகை.
நீர்க்கோவை - நீர்ப்பிடிப்பு, ஓர் நோய்.
நீர்க்கோழி - நீர்வாழுங்கோழி, நீர்க்குருகு.
நீர்செய்காந்தம் - சந்திரகாந்தம்.
நீர்ச்சங்கு - சங்குவடிவம்போன்ற ஓர் பூடு.
நீர்ச்சலவை - புடவையைத் தோய்த்தல்.
நீர்ச்சாணை - நீர்விட்டுத் தீட்டுஞ்சாணை.
நீர்ச்சாரை - தண்ணீர்ச்சாரை, தண்ணீர்ப் பாம்பு. [சேர்தல், நீர் வழிப்படுதல்.
நீர்ச்சார்வு - நீரிலுள்ள பொருள்கள், நீரிற்
நீர்ச்சால் - தண்ணீர்பூரிக்குஞ்சால், நீர்ப் பானை.
நீர்ச்சாவி-வெள்ளக் கெடுதியாலுண்டாகும் நெற்பதர், நீரின்மையாற்கெடும் பயிர்ச் சாவி.
நீர்ச்சிக்கு - நீரடைப்பு, நீர்ச்சிக்கல்.
நீர்ச்சித்திரம்-நீரடிமுத்து, நீரெட்டிமுத்து.
நீர்ச்சிரங்கு - சேற்றுப்புண், சகதிப்புண்.
நீர்ச்சிறுப்பு - சிறுநீர், நீர்ச்சுருக்கம்.
நீர்ச்சின்னி - சிறுசின்னிச்செடி, ஓர்பூடு.
நீர்ச்சிலை - குளிர்சிலை, கோவணம். [டி.
நீர்ச்சுண்டி-நீர்நெட்டிக்கொடி, நெட்டிச் செ
நீர்ச்சுழல் } நீரிலுண்டாஞ்சுரியல்,
நீர்ச்சுழி } நீர்ச்சுருள்வு.
நீர்ச்சுனை - நீர்த்தடாகம், நீரூற்று, சுனை.
நீர்ச்சூலை - அண்டவாயு, அண்டவாதம்.
நீர்ச்செம்பை - நீரில்முளைக்குஞ் செம்பைச் செடி, செங்கடை.
நீர்செய்காந்தமணி - சந்திரகாந்தக்கல்.
நீர்ச்செறிவு - நீர்ப்பரப்பு, நீர்வளம்.
நீர்ச்சேம்பு - நீர்க்கரிச்சேம்பு, ஓர்பூடு.
நீர்ச்சோறு - பழஞ்சோறு, நீர்விட்டசாதம்.
நீர்ஞாவந்தருத்தி - நீர்விடுவிதி, நீரெடுக்கு மியந்திரம்.
நீர்தொடல் - சுத்திசெய்தல், ஸ்நானம் செய்தல், குளித்தல்.
நீர்த்தலைப்படுதல் - சந்திபண்ணல்.
நீர்த்தல் - நீராதல், நனைதல், நீர்விடல்.
நீர்த்தளி - தண்ணீர்ப்பந்தல்.
நீர்த்தாரை - சலதாரை, நீரோட்டம், கழி நீரோடை.
நீர்த்தானம் - நீர்க்கீழ், உதயத்திற்கு நாலா மிராசி.
நீர்த்திப்பு - நீரிழிவு, நீர்ப்பாடு.
நீர்த்திவலை - நீர்த்துளி, நீர்க்கொழுந்து.
நீர்த்துளி - நீர்ச்சொட்டு, நீர்த்திவலை.
நீர்த்துறை - நீர்க்கரை, இறங்குதுறை.
நீர்த்தும்பு - மதகு, நீர்போகி.
நீர்த்தோஷம் - சலதோஷம், தடுமன்.
நீர்நக்கல் - எரியின் உள்வாய்நீர் தேங்கும் எல்லையிடம்.
நீர்நசை - தாகம், நீர்வேட்கை.
நீர்நாங்கல் - நீண்டமரவகை.
நீர்நாடு - சோழநாடு.
நீர்நாய்-நீரோரத்தில் வசிக்கும் ஓர்விலங்கு.
நீர்நாள் - பூராடம்,உடைகுளம்,முற்குளம், மீன்.
நீர்நிதி - கடல், பாவாரம், ஆர்கலி.
நீர்நிலை-குளம், தண்ணீரின்மட்டு, மடு, எரி.
நீர்நிலைகாட்டல் - ஆழம்பார்த்தல், மண் கொண்டு வருதல்.
நீர்நெட்டி - நீர்சுண்டி, கிடைப்பூடு.
நீர்நெருப்பு - கல்லுருவி, ஓர்பூடு.
நீர்நெல்லிக்காய் - ஓர்வகை ஊறுகாய்.
நீர்நொச்சி - நீரில்வளரும் ஓர்நொச்சி.
நீர்பிரிதல்-சிறுநீரிறங்கல் ஜலபாதைநீங்கல், குணமாறுதல், சிறுநீர் பிரிதல்.
நீர்பெய்கலன்-கமண்டலம், கெண்டிகை.
நீர்ப்பகண்டை - ஓர்பூடு,ஓர் மருந்துச்செடி.
நீர்ப்பஞ்சு - கடற்காளான், கடற்பஞ்சு.
நீர்ப்படலம் - கண்ணில் ஓர்நோய்.
நீர்ப்படுத்துதல் - தன்மையாக்கல்.
நீர்ப்படுவன்-தூர்நீர்சம்பந்தமான ஓர்நோய்.
நீர்ப்பரிசை-ஆமை, கூர்மம், உறுப்படக்கி.
நீர்ப்பறவை-நீரில்வாழும்பட்சி; அவை:கின்னரப்புள்,நீர்க்கோழி,நீர்க்காகம்முதலியன.
நீர்ப்பனை - புல்லாமணக்குச்செடி.
நீர்ப்பாக்கு - ஊறற்பாக்கு, நாறற்பாக்கு.
நீர்ப்பாசி-வைப்புப்பாஷாண முப்பத்திரண் டிலொன்று, தண்ணீர்ப்பாசி. [ணி.
நீர்ப்பாடு-நீரழிவு, நீர்க்குறைவு, விஷக்கிரா
நீர்ப்பாட்டுச்சன்னி-ஓர்வகைச் சுரச்சன்னி.
நீர்ப்பாம்பு-நீர்க்கோத்தை, தண்ணீர்ப்பாம்
நீர்ப்பாய்ச்சல்-ஓர்நோய், நீரோட்டம். [பு.
நீர்ப்பாய்மாடம்-வறிச்சென்று நீர்பாய்வதற் கானமாடம்.

நீர்ப்பிடி, நீர்ப்பிடிப்பு } நீர்கொண்டிருத்தல், தடிமன்.
நீர்ப்பிரமியம் - நீர்க்கடுப்பு, நீரெரிச்சல்.
நீர்ப்பினைவை - நீர்வெடிப்பு, ஓர்சிலந்தி.
நீர்ப்பீனசம் - ஓர்பீனசம், மூக்குப்பீனிசம்.
நீர்ப்பு - நீர்த்தல், நனைதல்.
நீர்ப்புடையன் - நீரில்வசிக்கும் ஓர்பாம்பு.
நீர்ப்புற்று - வெள்விழியிற் சதைவளரும் நோய்.
நீர்ப்பூ - நால்வகைப்பூவினொன்று, அஃது: சலத்திலுண்டுபடும் தாமரை, அல்லி போன்ற பூ.
நீர்ப்பூண்டு - நீர்முள்ளிச்செடி.
நீர்ப்பூலர, நீர்ப்பூல் } நீர்பூல்லாய், வாற்பூலா.
நீர்ப்பெயற்று-நீர்ப்பேர், ஒரு ஊரின் பெயர், (புனலூர்.)
நீர்ப்பெருக்கு-சலப்பெருக்கு, நீர்ப்பாய்ச்சல்.
நீர்ப்பை -சிறுநீர்ப்பை, மூத்திராசயம்.
நீர்ப்போர் - நீரில் நடக்கும் போராட்டம், நீரோட்டத்தின் போது ஏற்படும் பூசல், நீர்விளையாட்டுப்பூசல். [கருவி.
நீர்மட்டம் - சரிமட்டம், சமம் பார்க்குங்
நீர்மறிப்பு சிறுநீர்த்தடை, நீரடைப்பு.
நீர்மாங்காய் - நீரில்ஊறவைத்த மாங்காய்.
நீர்மாடம் - பள்ளியோடம், ஓர்சிறுநாவாய்.
நீர்மீட்டான் - தண்ணீர்விட்டான்.
நீர்முகம் - இறங்குதுறை, நீர்ப்பாய்ச்சல் முனை, சங்கமத்துறை, முகத்துவாரம்.
நீர்முள்ளி - ஓர்முள்ளி, நீர்ச்சுள்ளி:
நீர்மேற்செறிப்பு-கொட்டைப்பாசி,[மந்திரி.
நீர்மேனடப்பான்-திருமஞ்சை யாழ்வாருக்கு
நீர்மேனெருப்பு - கல்லுருவி, நீர்நெருப்பு.
நீர்மை - ஒப்புரவு, குணம, நிலைபரம், தண்மை, குளிர்ச்சி, தன்மை, இனிமை நீருடைமை, முறைமை.
நீர்மோர்-தண்ணீர் அதிகங்கலந்த மோர்.
நீர்யானை - நீரில்வாழும் ஓர்வகை மிருகம்.
நீர்வஞ்சி - ஓர்வகைப் பிரம்புக்கொடி.
நீர்வண்டு - நீரில்வாழ்வண்டு, நீர்த்தும்பி.
நீர்வயிற்கம்பலை-நீர்விளையாட்டு, ஆரம்பம்.
நீர்வரத்து-நீர்ப்பெருக்கு,நீர்ச்சுரப்பு. [பூமி.
நீர்வரைப்பு - கடலால் சூழப்பெற்றிருக்கிற
நீர்வல்லி-வெற்றிலைக்கொடி, தண்ணீர்விட்டான்.
நீர்வலயம்-நீரால் சூழப்பெற்றிருக்கிற பூமி.
நீர்வழுக்கை-ஓர்நீரடி,நீர்வட்டவழுக்கை
நீர்வளம்-நீர்ச்சிறப்பு, நீர்ப்பெருக்கு, நீர்ப்போகம், நீர்நயத்தினால் வருஞ்செல்வம்.
நீர்வள்ளி-சாற்றுவாரி, வெற்றிலைக்கொடி, வள்ளைக்கொடி. [சம்.
நீர்வற்றம் - நீர்வற்று, நீர்வறட்சி,நீர்ப்பஞ்
நீர்வற்றற்றேங்காய்-கொப்பருத்தேங்காய்.
நீர்வற்றுதல்-ஈரம் வற்றுதல், நீர்சுவறுதல்.
நீர்வாத்து-நீரில் வசிக்கும் ஓர் பறவை.
நீர்வாரம்-குளநெல், நீர்வஞ்சி, நீர்ப்பிரம்பு.
நீர்வாரி-யானையைக்கட்டுஞ் சங்கிலி.
நீர்வாழை - தண்ணீருதவும் வாழை.
நீர்வாழைக்காய்-மீன். (குழூஉக்குறி)
நீர்வாழ்சாதி - நெய்தனிலமாக்கள், நீரில் வாழும் மீன் முதலிய சலராசிகள்.
நீர்வாழ்வன-எழுவகைப் பிறப்பினொன்று; அஃது:மீன் முதலிய நீந்தும் பிராணி.
நீர்விடுதல் - பதனழிந்து நீராதல்.
நீர்விட்டான் - சாற்றுவாரி,தண்ணீர் மீட்டான்.
நீர்விட்டுப்போதல் - நீர்த்துப்போதல், பதனழிந்து சுவைகெடுதல்.
நீர்விழவு - நீர்விழா, இருப்பத்தோரு நாள் நடைபெறும் ஒரு திருவிழா, இப்போது பலரும் பல தருமங்கள் செய்து மகிழ்வர்; சிறைப்பட்டோரும் விடுதலை பெறுவர்; கூட்டத்தைக்காக்கும் காவலைத் தவிர வேறு காவலப்போது கிடையாது;நீராட்டக்கருவிகளேயன்றி, எவ்விதப் படைக்கலமும் யாரும், ஏந்தலாகாது; காவலருங்கூட ஆயுதமேந்தலாகாது. நீராட்ட உடைகளும், நீர்க்கரை கடைகளும் பிறவும், பெரும் மகிழ்ச்சியைத் தருவனவாயிருக்கும்; விரிவைப் பெருங்கதை,பரிபாடலிற்காண்க.
நீர்விழுதல் - இரத்தினகாந்திதளம்பல், நீர்விழவு,நீர்விளையாட்டு,தெப்பத்திருவிழா.
நீர்விளையாட்டு - சலக்கிரீடை, நீராட்டம்.
நீர்வீசுகருவிகள்-கொம்பு, சிவிறி, துருத்தி, சுருங்கை, வட்டு, இணைவட்டு.
நீர்வீழ்ச்சி-மலையிலிருந்துவீழ்நீர்,மலையருவி.
நீர்வேட்கை-நீர்த்தாகம், நீரிடாய்.
நீர்வேட்டல்-நீர்தாகித்தல்,நீர்வேட்கை.
நீர்வேம்பு - நீரில் உண்டாகும் காளான்.
நீலகண்டசாத்திரியார் - தருக்கசங்கிரக தீபிகைக்கு "நீலகண்டீயம்" என்னும் விபாகியானஞ் செய்தவர். இவர் அறுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே பல்லாரி ஜில்லாவில் பிறந்து வினவிய ஒருதெலுங்கர்.
நீலகண்டசிவாசாரியர் - இவர் வேதாந்த சூத்திரத்திற்குச் சிவாத்துவித பக்கமாகப்

பாஷியஞ் செய்தவர். இவர் திருக்கோகர்ணஸ்தலத்திலே பிறந்து விளங்கியவர்; தெலுங்கர். இவர் செய்த பாஷியம் ''நீலகண்ட பாஷியம்'' எனப்படும். மாதவாசாரியர் செய்த சங்கர விஜயத்திலே சங்கராசாரிய சுவாமிகள் நீலகண்ட சிவாசாரியாரை வாதத்திலே வென்றனரென்று கூறப்படுதலாலும், நீலகண்ட விஜயத்திலே சங்கராசாரிய சுவாமிகள் நீலகண்ட சிவாசாரியர் விஞ்ஞியவைகளுக்கு உத்தரங்கூற வியலாது நிசைத்தனரென்று கூறப்படுதலாலும், இருவரும் ஏககாலத்தவர்களென்பது பெறப்படுகின்றது; சரித்திரம் மாறு கொள்வண்வாயினும் இருவரும் ஒருவரை பொருவர் கண்டனென்பதுண்மையாதலின் ஓரே காலத்தவர்களென்பது நன்கு துணிபப்படும். இரு விஜயங்களுங் கற்பித நூல்களாகுமிடத்து ஏகாலத்தவர்க ளென்பதும் பொய்மையின் பாலதாம். நீலகண்டர் ராமாநுஜாசாரியரது கொள்கைகளை யெடுத்துக் கண்டித்தலாலே நீலகண்டர் ராமாநுஜருக்குப் பிற்பிவரென்பதும் அவர் காலம் எண்ணூறு வருஷங்களுக்கு முன்னரென்பதும், சங்கராசாரிய காலநிருபணஞ்செய்த பாஷியாசாரிய பண்டிதர் கருத்து. (Vide The Age of Sri Sankara Chariya, The Adayar Library Series.) அஃதுண்மையாயின், நீலகண்டருக்கு இருநூறு வருஷங்களுக்கு முன்னே யுள்ளவரென்று பாஷியாசாரிய பண்டிதராலே கூறப்பட்ட ஹரதத்தாசாரியர் நீலகண்ட பாஷியத்துக்குச் ''சமர்த்தனம்'' எனப் பெயரிய வியாக்கியானஞ் செய்தமை பொருந்தாதன்றே! ஆதலின் ஹரதத்தாசாரியர் நீலகண்டருக்குப் பின்னர்க் காலத்திலாயினும் ஏகாலத்திலாயினு முள்ளவராவர். ஆகவே பாஷியாசாரிய பண்டிதர் கருத்துப் பொருத்தமுடையதன்று. அற்றேல் முன்னிருந்த நீலகண்டர் தமக்குப் பின்னர் விளங்கிய ராமாநுஜரது கொள்கைகளை யெடுத்துக் கண்டித்தல் எங்ஙனங் கூடுமென்றாலோ, அக்கொள்கைகள் முன்னரு முள்ளனவே யாமாதலாலும் அந்நூலிலே ராமாநுஜர் பெயர் கேட்கப்படாமையாலும் அது விஞ்ஞாகாதென்க. நீலகண்ட சிவாசாரியர் வேதாகம புராணேதிகாசங்களிலே மிக வல்லுனரென்பது எடுத்துக்கூறவேண்டா. சங்கராசாரியரை வேதாந்திகள் எவ்வளவினராகக் கருதுகின்றார்களோ அவ்வளவாகச் சைவர்களும் நீலகண்ட சிவாசாரியரைத் தழுவுகின்றார்கள். சிவபரம் சாதித்த பிரபல ஆசாரியர்கள் நீலகண்டர், ஹரதத்தர், அப்பையதீக்ஷிதர் என்னும் மூவருள்ளே நீலகண்டர் எல்லாவகையாலும் முதன்மையுற்றவர். இந்த மூவரும் வடமொழிப் புலவர்களாக அவதரித்திலராயின் சைவசமயம் நிலைகலங்கி விடுமென்றாலும் குற்றமன்று; நீலகண்டர் சுவேதாசாரியருடைய மாணாக்கர். இவர் ஸ்ரீகண்டர் எனவும் அழைக்கப்படுவர்.

நீலகண்ட தீக்ஷிதர்-இவர் வேதியகுலத்தவர் இவர் 'கலிவிடம்பனம்' 'கங்காவதாரணம்' 'நளசரித்திரம்' 'நீலகண்டசம்பு' 'நீலகண்டதீக்ஷிதீயம்' 'வைராக்கிய சதகம்' 'சாந்தி விலாசம்' 'சபாரஞ்சனம்' என்ற சிறந்தவைகளை இயற்றியவர்.

நீலகண்டக்ஷேத்திரம்-இமாலயத்துக்குச் சமீபத்திலே கௌரிகாஸ்ரமத்திற்பத்திஸ்தானம்.

நீலகண்டராயனர் - திரு எருக்கத்தம்புலியூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.

நீலகண்டம்-மயில், சிகண்டி, கேகயம், பீலி.

நீலகண்டன்-ஓர்பூரம், கொடியவன், சிவன், துருசி, முருவகை, திருநீலகண்டநாயனர். அச்சுவக்கிரீவன் தம்பி.

நீலகண்டரட்சம்-உருத்திராக்கம், சிவமணி.

நீலகண்டி- - பாம்பினச்சுப்பல்லிஞெண்டு, பொல்லாதவன், துர்க்கை, எண்டோளி.

நீலகண்டேசர் - திருமண்ணிப் படிக்கரையிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.

நீலகண்டேசுவரர்-திருப்பாச் சிலாச்சிராமத்திலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.

நீலக்கி - ஓர்வகைக் கொம்பு, நீலமணி.

நீலகமலம் - நீலோற்பலம், கருங்குவளை.

நீலகம் - காருப்பு, துருசு, மயிற்றுத்தம்.

நீலகாசம் - கண்ணிறுபுளாஞ்று.

நீலகிரி - அட்டமலையி ஞெண்டு. (1) செங்குட்டுவன் வஞ்சி நகரத்திலிருந்து இமயமலைக்குப் போம்போது ஒருநாள் தங்கியிருந்த மலை. இது சேரநாட்டிலுள்ளது. (2) இளாவிருதவருஷத்துக்கு வடக்கிலுலையாகவுள்ள குளிர்வளந்தருகிய மலை.

நீலகேசி - பௌத்தம் முதலிய மதங்களைக் கண்டிக்கும் ஓர் சைன நூல்.

(1) காசியராசனின்மகள், மந்திரவாசனின் மனைவி, விரிசிகை தாய்.

நீலகேசிவிருத்தி - சமயதிவாகரம், நீலகேசியின் உரை

நீலக்கட்டி - அவுரிச்சாயக் கட்டி.

நீலக்கடம்பை - மேலாநெல்லி.

நீலக்கண்ணுடி - நீலநிறக்கண்ணுடி, நீலவாடி.

நீலக்கச்சு - நீலநிறமான கச்சை, நீராடுபவர் மணிகட்டியநீலக்கச்சையயணிவதுமரபு.

நீலக்கண்டம் - நீலநிறமான திரை.

நீலக்கத்தரி - ஓர்வகை வழுதுணைச்செடி.

நீலக்கல் - நீலரத்தினம், நீலமணி, நீலம்.

நீலக்காக்கட்டான் - நீலக்காக்கணக்கொடி.

நீலக்காரம் - துருசு, மயிற்றுத்தம்.

நீலக்காலி - அவுரி, நீலக்கால், நீலி, நண்டு.

நீலக்கிரான்தை - விஷ்ணுக்ராந்தை, ஓர்பூடு.

நீலக்கிரீவன் - சிவன், கைலையாளி, பசுபதி.

நீலக்கிரௌஞ்சம்-கருங்கொக்கு.

நீலக்கோலன் - மன்மதன்.

நீலங்கட்டுதல் - நீலந்தீர்த்தல், நீலம்பற்றுதற்காகச் சாயக்காரர் பெரும்பொய்கூறல்.

நீலங்கம் - வாழை வகை.

நீலசம்பூடம் - ஓர்வகை நாவல்.

நீலச்சால்-நீலநிறச்சாய மூறவைக்குஞ்சால்.

நீலச்செடி - சேங்கொட்டைச் செடி.

நீலத்தரு - தெங்கு, தென்னை, தாழை.

நீலத்தாமரை - கருங்குவளை, நீலோற்பலம்.

நீலத்திருவாத்தி - மந்தாரை, மந்தாரகம்.

நீலத்தோட்டி - நீலச்சால், நீலப்பாத்திரம்.

நீலநாகம் - கரும்பாம்பு.

நீலநிதி - குபேரனவநிதிகளி லொன்று.

நீலந்தர் - இராகம் பாடுவோர், பாணர்.

நீலந்தீர்தல்
நீலந்தேய்த்தல் } நீலநிறம் போடுதல்.

நீலபங்கம் - கருஞ்சேறு, கருங்கரம்பை.

நீலபடிகம் - நீலநிறங்காட்டும் பளிங்கு.

நீலபதுமம்
நீலபத்திரம் } நீலோற்பலம், கருங்குவளை.

நீலபம்-சந்திரன், தேனீ, முகில், கொண்டல்.

நீலபாஷாணம் - ஓர் மருந்துப் பாஷாணம்.

நீலபுட்பம்
நீலபுட்பிகை } அவுரி, எட்டிமரம், விட்டுணுக்கரந்தை, விட்டுணுக்கரந்தி.

நீலப்பணி - புடவையிலிடு நீலச்சாயம்.

நீலப்பறவை - மயில் தோகை.

நீலப்புடவை - காங்குச்சேலை.

நீலப்பைங்குடம் - பச்சைக்குப்பி.

நீலமணி - கண்ணிற்கருமணி, நீலரத்தினம், மாகதமணி, தென்னை, நாளிகேரம்.

நீலமணிகாயம் - கண்ணேறு வொன்று.

நீலமணிவோன் - முருகக்கடவுள்.

நீலமண்டலம் - சிற்றீச்சமரம், ஈச்சு.

நீலமதி - சோதரன்மகன், அத்திபதி மனைவி, இராகுலன் தாய்.

நீலமருந்து - அவுரி, அவுரிச்செடி.

நீலமலர்க்கண்ணி - திருவருக்கத்தம்புலியூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவி.

நீலமாதவன் - நீலமேகசாமளவண்ணன்.

நீலமார்க்கம் - கையாந்தகரை, கரிப்பான்.

நீலமீலிகை - மின்மினிப்பூச்சி.

நீலமுள்ளி - நீர்முள்ளி, ஓர் செடி.

நீலமேகம் - நீருண்டமேகம், கார்மேகம்.

நீலமேனியள் - மரகதவல்லி, பார்வதி.

நீலமேனியன்-இராமன், துருசு, விட்டுணு.

நீலம் - இருள், ஓர்நிறம், ஓர்மேகம், கருங்குவளை, கருப்பு, காற்று, துருசு, நஞ்சு, நவமணியிலொன்று, நீலக்கட்டி, பனை, நவநிதியிலொன்று, அட்ட குலாசலங்களிலொன்று, தருப்பை.

நீலம்பற்றவைத்தல் - பொய்க்கதைகட்டுதல்.

நீலம்பாரித்தல்-விஷத்தால் சரீரம்நீலவண்ணமாதல், விஷத்தால் நீல மேனியாதல், இருளடைதல்.

நீலம்பாலை - வெப்பாலை.

நீலம்பிடிபடுதல் - கைகூடாமற் போதல்.

நீலரதன் - அச்சுவக்கிரீவன் தம்பி.

நீலராசன் - ஓராசன், மேகங்களுக்கதிபதி.

நீலராசாவரத்தம்-தாழ்ந்தவைரக்கல். [தி.

நீலருத்திரன்-ஒருருத்திரன், நஞ்சுண்டமூர்

நீலர் - இராக்கதர், அரக்கர்.

நீலலோகிதன்-சிவன், பதினொரு ருத்திரரிலொருவன், கடுஞ்சினமுள்ளவன்.

நீலவசனம்-சனி, கதிர்மகன், மந்தன், காரி.

நீலவண்ணன் - சனி, விட்டுணு, மேகவண்ணன். [வோன்.

நீலவண்ணன் - சாயக்காரன், சாயமேற்று

நீலவத்திரம் - நீலங்கலந்து நெய்தபுடவை.

நீலவத்திரன்-பலராமன், பலபத்திரன்.

நீலவருணம்-சத்தமுகிலிலொன்று; அஃதுதீப்பொழிவது, நீலநிறம், மேகம், மங்குல்.

நீலவல்லி - நீலோற்பலம்.

நீலவழுதலை-நீலக்கத்தரி, நீலவழுதுணை.

நீலவாசன் - சனி, முடவன், நோய்முகன்.

நீலவாடையன்-பலராமன், பலபத்திரன்.

நீலவிதானம் - நீலப்பட்டுமேற்கட்டி.

நீலஷமத்தை - கருஷமத்தை.

நீலன் - (1) நீலியென்னும் பைசாசத்தால் கொல்லப்பட்ட ஓர் வணிகன். குரூரன், சனி. (2) (பு) அசமீடன் புத்திரன். (3) ராஜசூய யாகத்திலே சகாதேவனோடு யுத்தஞ்செய்த மாஹிஷ்மதி புரிராஜன்.

(4) ஆக்கினிக்குப்பிறந்த வாநரன், இவன் சுக்கிரீவனுக்குப் படைத்தலைவன், மாங் கனி வகையிலொன்று. திருமங்கையாழ் வார், செங்குட்டுவனது ஒற்றர்களுக்கு தலைவன்.

நீலா-அவுரி, அவரி, அவிரி, நீலப்பூண்டு.

நீலாக்காலி - ஓர் நண்டு.

நீலாங்கம் - மலைத் தேன், ஓர் விஷப் புழு.

நீலாங்கு - மலை நாட்டிலுள்ள ஓர் புழு.

நீலாசலநாதர் - இந்திர நீலபருவதத்தில் கோயில் கொண்டிருக்கும் சுவாமி.

நீலாஞ்சனம்-கல்லீயம், கருப்புக்கல், திருசு.

நீலாஞ்சனை - மின்னல், சஞ்சலை, சம்பை.

நீலாட்சம்-அன்னப்புள், எண்ணப்புள், ஓதிமம்.

நீலாப்பிரகம் - கருமுகில், கருமணல்.

நீலாம்பரம் - நீலநிறமுள்ள ஓர் பூச்செடி.

நீலாம்பரன் - பலபத்திரன்.

நீலாம்பிகை - இந்திர நீல பருவதத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்.

நீலாம்புசம் - கருங்குவளை, நீலோற்பலம்.

நீலாம்புரி - ஓர் பண், ஓர் இராகம்.

நீலாயதாக்ஷி-திருநாகைக் காரோணத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்.

நீலி - அவுரி, கருநொச்சி, கருப்பு, காளி, துட்டை, துருசு, துர்க்கை, பாம்பினச் சுப் பல்லியொன்று, பார்வதி, மேகவண் ணப் பூவுள மருதோன்றி மரம், சங் கமன் என்னும் வைசியன் மனைவி. கோவலன் கொலையுண்ணும்படி அவ னுடைய முற்பிறப்பில் அவனைச் சபித்த வள். பழையனூர் வணிகன் மனைவி. இவன் விவாகமாகிக் கொஞ்ச நாளில் இறந்து திருவாலவாட்டிலே போய்த் திரிந்துகொண்டிருந்தாள்; ஒரு நாள் அவன் கணவன் அக்காட்டு வழியே தனித்துச் சென்றபோது இந்த நீலிப் பேய் அவனது இரண்டாம் மனைவியைப் போல வடிவங்கொண்டு, ஒரு கள்ளிக் கட்டையைப் பிள்ளையாக்கி மருங்கிலே தாங்கிக்கொண்டு அவனைத் தொடர, அவன் அவ் வடிவைப் பேயென நிச்ச யித்து, அப்பேயினது வஞ்சக மொழிக ளுக்கு இணங்கா தோடினான். பேயும் இது முறையோ! என்னைக் காட்டில் தனியே விடுத்துச் செல்லா நின்றீரே என்று அழுதுகொண்டே பின்தொடர்ந்து காஞ்சீபுரத்தை யடைந்து அங்கே பொது விடத்தில் கூடியிருந்த வேளாளரிடத்திற் சென்று தன் வழக்கைச் சொல்லிற்று. அவ்வேளாளர் இவ்விருவர் வழக்கையுங் கேட்டுப் பேயைப் பார்த்துச் சொல்லு வதற்குச் சாக்ஷியாரென்று கேட்கப் பேய் இந்தப் பிள்ளையை விடுகிறேன். இது அப்பா வென்றழைத்துத் தந்தை மடிமே லேறுதோ பாருங்களென்று சொல்லி விடுக்கக் குழந்தை அவ்வாறே செய்ய, வணிகன் இது பேய்க்கூத்தென்றான். அது கேட்ட வேளாளர் அது உண்மை யானால் நாங்கள் பிணையாவோம். நீயும் இவளும் இந்த அறையினுள்ளே போய்ச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து வாருங்கள் என்று சொல்ல, வணிகன் அச் சொல்லைத் தடுக்கவொண்ணாதவனாய் அறையினுள்ளே செல்லப் பேயுந் தொ டர்ந்து உள்ளே புகுந்து கதவையடைத்து, அவனுயிர்குடித்து மறைத்தது. வேளாளர் எழுபதின்மரும் கதவைத் திறந்து பார்த் தத் தம்மாலிறந்த வணிகன் பொருட்டுத் தாமுந் தீப்பாய்ந்து உயிர் விட்டார்கள். சிவபெருமான் அவர்களுடைய சத்திய மார்க்கத்துக் கிரங்கி அவர்களெல்லாரை யும் பிழைப்பித்து வேளாளர் வாக்கைக் காத்தருளினார். இச் செய்தி தொண்டை மண்டல சதகத்திலும், சேக்கிழார் அரு ளிச்செய்த பெரிய புராணத்திலும் கூறப் பட்டுள்ளது.

நீலிசை - சண்டிசை, சன்னி, தழும்பு.

நீலித்தனம் - பாசாங்குத்தனம், கொடுஞ்சூரித் தனம்.

நீலினி - அவுரி, அவரி, அவிரி, நீலப்பூண்டு.

நீலோற்பலம் - கருங்குவளை, கருநெய்தல்.

நீல் - காற்று, நீலம், கருங்குவளை, கருப்பு.

நீவாகம் - பஞ்சம், சாமம், கருப்பு.

நீவாரம் - சேறு, நீர், வியாபாரம், நாடு.

நீவல் - நீவுதல், தடவுதல், வருடுதல், பூசல்.

நீவாரம் - செந்நெல், நாடு, வனநெல்.

நீவாரதர் - செந்நெல் வைத்தவர், (கூவத் துச்சிவன்) சிவனடியார்க்கு உணவு அருந் தும் தொண்டு புரிந்த ஒருவனுக்குப் பஞ் சத்தால் நெல்கிடையாது போனபோது, தினமும் அச்சிவபெருமான் ஒரு குடம் நெல் கோவிலில் கொடுத்து உதவினர். அதனால் அக்கடவுளுக்கு நீவாரதர் என்ற பெயர் ஏற்பட்டது.

நீவான் - மீகாமன், மாலுமி, கப்பலோட்டி.

நீவி-கொய்சகம், சேலை, சீலை, முதற்பணம், துடைப்பம், இறகு, வாருகோல், தூவி, தடவி, போக்கி, சோதி, பூசி, மடியிற்

கட்டிக்கொள்ளும் நீண்டபணப்பை.
நீவியம் - சேலை, சேலை, புடவை, வஸ்திரம்.
நீவிரம் - வீட்டிறப்பு, வீட்டுத்தாழ்வாரம்.
நீவிர் - நீங்கள், முன்னிலைப்பன்மைப்பெயர்.
நீவுதல் - தடவுதல், தட்டுதல், துடைத்தல், வருடுதல், சீவுதல், கோதுதல், பூசுதல், வளர்த்தல், போக்குதல். [பட்டார்.
நீழலவர் - ஆதரவுடையார், ஆதரவுக்குட்
நீழல் - ஒளி, நிழல், நோய், குளிர்மை, எவ்வியின் ஊர், நீடூர் எனவும்படும், ஆதரவு.
நீழை - ஒளி, பிரகாசம், மினிர்.
நீள - நெடுந்தூரமாக, நெடுங்காலமாக, பெரிதும்.
நீளங்கடை - நாட்செல்லல், காலங்கழித்தல்.
நீளப்பூச்சி-நாக்குப்பூச்சி, மண்ணுணிப்பூச்சி.
நீளமல்லிகை-ஓர்மல்லிகை, மன்மதபாணம்.
நீளமா - தூரமாக.
நீளம்-தாமதம், தூரம், நெடுமை, பறவைக்கூடு
நீளல் - ஓடுதல், போகுதல், தூரம், நீளுதல்.
நீளவாட்டு - நெடும்போக்கு.
நீளாதேவி-திருமால்தேவிமார்களுள் ஒருவர்
நீளி-நீளியென்னேவல், நெடியன், நெடுமை.
நீளிடை-சேய்மை, தூரம், தொலைவு, தூலை, காடு.
நீளித்தல் - தாமதித்தல், நாட்போதல், நீளுதல், நெடுநாளிருத்தல், காலந்தாழ்த்தல்.
நீளிப்பு - நீடிப்பு, தாமதம், காலவிரயம்.
நீளியசாரை - கானற்கல்லு, கானற்குன்று.
நீளியது - நெடியது, நீண்டது, நெட்டை.
நீளியன் - நெட்டையன், நெடியவன், நீண்டவன். [தல், நெடுகுதல், நீட்டமாதல்.
நீளுதல் - அதிகப்படுதல், ஓடுதல், நீளமா
நீளை - காற்று, நீளாதேவி, திருமால்மனைவி.
நீள் - உயரம், ஒளி, நீளம், நீளென்னேவல், ஆழம், பிரபை.
நீள்கை - உயர்வு, நீண்டகை, வளர்தல்.
நீள்சடையோன் - சாக்கிகொன்றை, சிவன், சடாதாரி.
நீறடித்தல் - எற்றுதல் தட்டுதல்.
நீறணிந்தோன் - சிவன், சாம்பர்பூசி.
நீறுடி - சிவன், நீறணிந்தோன்.
நீறுடுதல் - அழித்தல், உத்தூளனமாய்ப் பூசுதல், பொடிபடுத்தல், புழுதியாக்கல்.
நீறு - சாம்பர், சுண்ணம், துகள், நீறென்னேவல், புழுதி, விபூதி, பூதி, திருநீறு, நாறு, சேறு, நீற்றப்படுவது, குழைக்கப்படுவது. [காள்.
நீறுதரிக்கும்புதன்கிழமை-சாம்பலாடிப்பெரு
நீறுதல்-நீருதல்.பஸ்மமாதல், பொடியாதல்.
நீறுபடுதல் - அழிதல், நீருதல், தூளாதல்.
நீறுபூசிகன் - ஜைனர்கள் வேளாளருக் கிட்டழைக்கும் பட்டப்பெயர். [பொடி.
நீறுபூத்தல் - அழுக்குப்படிதல், சாம்பற்
நீற்றமுது-வெற்றிலையிற்றடவுஞ்சுண்ணம்பு
நீற்றல்-எரியிட்டுநீறச்செய்தல்,பஸ்பமாக்கல்
நீற்றறை - சுண்ணம்புச்சூளை.
நீற்றுக்கொட்டான் - சிறிய சுண்ணம்புப் பெட்டி.
நீற்றுக்கோயில் - விபூதிப்பை. [டை.
நீற்றுண்டை - எருவிபூதியுருண்டை, முட்
நீற்றுதல் - நீருக்குதல், பொடியாக்குதல்.
நீற்றுப்பூசணி - சாம்பர்ப்பூசணி, வெண்பூசணி.
நீற்றுப்பூசணிக்காய்த்தானம் - மிருத்துதானத்தொன்று, பிதிர்க்கன்சிரார்த்தத்தொன்று. [பிட்டவிக்கும்பெட்டி.
நீற்றுப்பெட்டி - எண்ணெயூற்றுங் கூடை,
நீனிறம் - நீலநிறம்.
நீனிறவியலகம் - கடல், முந்நீர், மகாலயம்.

நு

நு - ஆயுதப்பொது,ஐயம்,சங்கை,வினவென் பவைகளைக்காட்டுமோ ருபசருக்கம், கியானம், தோணி, கிந்தை, நேரம், புகழ்.
நுகக்கால்-எர்க்கால், கலப்பையிலேருறுப்பு.
நுகக்காற்குச்சி - நுகத்துமூலைக்குச்சி.
நுகத்தடி - நுகம், கலப்பையிலேருறுப்பு.
நுகம்-நுகத்தடி,கலையமரம், பாரம்,வலிமை, சோதிநான், மகரான், நடுநிலைமை, ஆட்சி.
நுகம்புரட்டி-ஒழுங்கு தவறுகிறவன், வாக்கு மாறுகிறவன், கட்டுக்கமையாத எருது.
நுகர்ச்சி - அனுபவம், உணவு, வேதனை.
நுகர்தல்-அனுபவித்தல்,புசித்தல், விழுங்கல்.
நுகர்பு - நுகர்தல், நுகர்ந்து.
நுகர்வு - நுகர்ச்சி, அனுபவம், புசிப்பு.
நுகும்பு - பனையினினங்காய், பனையோலை, குருத்து, புன்னுனி, நுனிப்புல்.
நுகும்போலை - குருத்தோலை.
நுகை - நுசை, சிவதை, மலம்போக்கிவேர்.
நுகைதல் - இளகுதல், தளர்தல், கனைத்தல்.
நுகைத்தல் } இளக்குதல், தளர்த்தல்,
நுகைப்பு } கனைப்பு.
நுகைவு - இளக்கம், தனிவு, தளர்வு, மிருது.
நுக்காங்குலை - காய்விழுந்த பனங்குலை.

நக்கிராயுதன் - திருதராட்டிரன் மகன்.
நக்கு-எட்டிமரம்,நுக்கென்னேவல், நங்கு, பொடி, குறுணை, சிறுமை, தூள்.
நக்குடம் - காஞ்சிரை, எட்டி.
நக்குதல் - மிகுதியாய்ப் பெய்தல்.
நங்கல் - பருகல், விழுங்கல், பட்சித்தல்.
நங்கள் - உங்கள், நீங்களென்பதன் திரிபு.
நங்கிற்கன் - பனங்கள்.
நங்கு-நங்கென்னேவல்,பனையினிளங்காய்.
நங்குக்கண் - நங்கினது உள்ளீட்டுக்குழி.
நங்குக்கோம்பை - நுங்கெடுத்த பனங்காய்.
நங்குதல்-குடித்தல்,விழுங்குதல், பருகுதல், உண்ணுதல்.
நங்கை - உன்றங்கை, உன்றாய், நுந்தாய்.
நசுப்பு - இடை, மருங்குல், மத்திமம், நடு.
நசை - இவறலேவர், மலம்போக்கிவேர்.
நடக்கம்-தள்ளாட்டம், நடப்பம், முடக்கம், வளைவு, கூத்து, மூடை, திண்டாட்டம்.
நடக்கல் - கழுவல், கரைத்தல், மூடுக்கல், ஒன்றுகலவைத்தல், மடித்தல்.
நடக்கு - மூடக்கு, மூடை, மூட்டுப்பாடு.
நடக்குதல் - கழுவுதல்.
நடங்கல் - நடங்குதல், முடங்குதல்.
நடங்கு - நடக்கம், நடங்கென்னேவல்.
நடங்குதல் - ஆடல், துவளல், முடங்கல், அசைதல்.
நட்பக்காரன் - புத்திக்கூர்மையுள்ளவன்.
நட்பம்-எளிது, ஓலங்காரம்; அரிது:குறிப்பாற்கருத்தறிவித்தல்,சூட்சுமம்,சொற்பம், நிட்பம், நண்மை, நுணுக்கம், அற்பம், கரந்துறைகோள்களிலொன்று.
நட்பவுரை- நண்ணியதாய் விளக்குமுரை.
நணகம்-பொன், ஐவகைலோகத்தொன்று.
நணக்கம் - நணங்கல், கூர்மை.
நணங்கல் - நுவலல், நண்மை, முடங்கல், அசைதல், நுடங்கல்,
நணங்கியோர் - அறிவுடையோர். [மை.
நணங்கு-தேமல், நணங்கென்னேவல், நண்
நணங்குதல்-நண்மையாதல், வளைதல், வாடல், தளர்தல், வருந்துதல், சோர்தல்.
நணலை-ஓர்மீன், கத்தும்தவளை, மண்டுகம்.
நணல் - தவளை, நுவளையினோர்பேதம்.
நணவம் - நுணு, மஞ்சணத்திமரம்.
நணவு - நணக்கமரம், நுணமரம், கட்டில்.
நணவை - நணக்கமரம், எள்ளுருண்டை.
நணு-மஞ்சணறிமரம், நணக்குமரம். [கம்.
நணக்காய்க்கிரந்தி - ஓர்கிரந்தி, கிரந்திநாய
நணுசுதல் - நடவுதல், நெருடுதல், நீவுதல்.
நணுவுதல்-நடவித்தெரிதல்,நெருடியறிதல்.

நணி - நணியென்னேவல், நுதி, நுனி.
நணித்தல்-குணம், நணுக்கல்,பொடித்தல்.
நணுகு - நணுகென்னேவல், நண்மை.
நணுகுதல் - நண்மையாதல், தளர்தல்.
நணுக்கம் - அடக்கம், சூட்சம், கூர்மை, நண்மை.
நணுக்கல்-நண்மையாக்கல்,பொடியாக்கல்.
நணுக்கன் - கூராக்கல், தேய்தல்
நணிக்கிஎழுதுதல் - பொடியாக எழுதுதல்.
நணுக்கு - அற்பம், நட்பம், நண்மை, எழுத்துநணுக்கம், நணுக்கென்னேவல்.
நணுக்குதல் - கூராக்குதல், அரைத்தல்.
நணுங்கல் - நண்மையாதல், பொடியாதல்.
நணுங்கு - நணுங்கென்னேவல், நண்மை.
நணை - கோடசொல்லல்.
நண்-அணு, நண்மை, நட்பம், கொஞ்சம்.
நண்கோல்-பிரம்பறிகோல், வெண்கடைக்கோல், மாக்கோல், பாணர் கைக்கோல், சிறுகோல், பிறப்பறுகோல்.
நண்சோறு - சிறுசோறு.
நண்டுகில் - பட்டாடை.
நண்டொடர் - நேர்சங்கிலி.
நண்ணறிவு - நண்ணியபுத்தி, நட்பமதி.
நண்ணுக்கை - சூக்குமசரீரம்.
நண்ணிச்சிறை - கொசுக்கட்டைக்குருவி.
நண்ணிடை-சிற்றிடை, குடியிடை, பெண்.
நண்ணிதன் - நட்பமாக, கூர்த்து.
நண்ணிது - நட்பமானது.
நண்ணிமை - நட்பம், நண்மை, அணு.
நண்ணியது - நண்மையானது, நட்பமானது.
நண்ணியர் - அறிவுடையோர், நட்பமானவர், பெரியோர், மந்திரிகள்.
நண்ணுநம் - பெருநகம், பெரும்பாலும்.
நண்ணுணர்வு - கூரிய அறிவு, நட்பஅறிவு.
நண்ணூல் - நண்மையானநூல், மெல்லிய நூல்.
நண்ணேலம் - ஓமாலிகை முப்பத்திரண்டனுள் ஒன்றுகுறி வாசனைப்பண்டம்.
நண்பிண்டி
நண்பொடி } புழுதி, தூசு, தூசி, பொடி.
நண்பு - நண்மை, நுணுக்கம், நட்பம்.
நண்பொருள் - நட்பமானகருத்து, நண்ணிய பொருள், ஆழ்ந்தயோசனை.
நண்பொறிவெள்ளை - சிலமரையினோடு.
நண்மணல் - மெல்லியமணல், சிறுமணல்.
நண்மருங்குல் - நண்ணிடை, சிற்றிடை.
நண்முறையாளர் - நண்ணறிவுடையோர்.
நண்மை - கூர்மை, நட்பம், நேர்த்தி,

மேன்மை.
நுண்வினை - நுட்மான வேலைப்பாடு.
நுதம் - நோத்திரம், நீராடுதுறை.
நுதம்பு - கள், சொல்விளம்பி, சோறு.
நுதம்புதல் - நினைந்திளகுதல்.
நுதலணி-சுட்டி,சுட்டிகை, உச்சிவெள்ளை.
நுதலல் - கருதல், குறித்தல், நுதலுதல்.
நுதலிப்புகுதல் - மூப்பத்திரண்டு தந்திரவுத் தியிலொன்று; அஃது: இது செய்ய இப் படியாகுமென்று கூறிப் புகுதல்.
நுதலுதல் - நுதலல், கருதுதல், உன்னுதல்.
நுதல் - சொல், மொழி, வாக்கு, நுதலென் னேவல், நெற்றி, புருவம், மேலிடம், உச்சி.
நுதலணி - நெற்றிச் சுட்டி.
நுதற்கண்ணன் / நுதண்விழியன் } சிவன், முக்கண்ணன்.
நுதற்குறி - நெற்றியிலிடுங்குறி.
நுதற்சுடிகை - சுட்டி, நெற்றிச்சுட்டி.
நுதலுட்டன் - சிவன், முக்கண்ணன்.
நுதி-புகழ், மூனை, வணக்கம், முன்பு, தலை, நுனி.
நுதுத்தல்-அடக்கல், அவித்தல், அழித்தல்.
நுதுப்பு - தணிப்பு, குறைப்பு, ஆற்றி.
நுந்தாவிளக்கு - ஒளி குன்ரு விளக்கு, நுண்டாவிளக்கு.
நுந்துதல் - தள்ளுதல், நுண்டுதல், ஏவல்.
நுந்தை - உங்கடந்தை, நும் தந்தை.
நுந்தையர் - உங்கள் தகப்பன்மார்.
நுபம் - நுபகம், அருக்களஞ் செடி, எருக்கு.
நுபுவருந்தி - ஆமையோடு, உறுப்படக்கியி னேடு.
நுப்பது - மூப்பது, மூப்பத்து, மூப்பான்.
நுமர் - உம்மவர், நும்மவர், உங்களவர்.
நுமன் - உம்மவன், நும்மவன், உங்களவன்.
நுமன் - நும்மவன்,நும்முடையவன்.
நுமையன் - உன் தமையன், உன் தந்தை.
நும் - விரவுத்திணை முன்னிலைப் பன்மைச் சாரியை (உ-ம்) எல்லீர் நும்மையும்.
நும்பி - உம்பி, உன்தம்பி, நுந்தம்பி.
நும்பியர் - உங்கள் தம்பியர்.
நும்மின்-உங்களது, உங்களைப்போல், உங்க ளைக்காட்டிலும்.
நும்முன்-உன் முன்னோன், உன் தமையன், உமக்கு முன்பாக.
நும்மோய்மார் - நும் தாய்மார்.
நும்மோரன்ன - உம்போன்ற, நும் மொ டொத்த.
நும்மோர் - உம்மவர்,உங்களவர்,உம்மோர்.
நுரம்பு - சேறு, சகதி, உதம்பல்.
நுரு - நொரு, முளியில், முளைக்குமட்டம்.
நுரை-குமிழி,நீர்முதலியவற்றினுரை,நுரை யென்னேவல், வெள்ளை, வெண்ணெய்.
நுரைதள்ளுதல்-வாயில் நுரை வெளிவரல், வயிரக்கல் குற்றத்தொன்று.
நுரைதெவிட்டல் - வாய்நுரையை அசை விடல் (குதிரை).
நுரைத்தல் - நுரைக்குதல், பொங்கல்.
நுரைநீர் - நுரைத்துவரும் நீர்.
நுரைப்பீர்க்கு - ஓர் பீர்க்கு, பேய்ப்பீர்க்கு.
நுரையாம்பூச்சி - ஓர்வகைப் பூச்சி.
நுரையீரல்-ஈரலிலோர்வகை, நுரையீருள்.
நுரைவாயன்-சாளைவாயன் வெளிர்வாயன்.
நுலேயிலி-ஊமை, மூகை, ஊமன், மூங்கை.
நுவணம் } கல்வினூல்,தினைமாவு,நுண்மை,
நுவணை } பஞ்சினூல், மலர்.
நுவலல்-சொல்லுதல், வியங்கோண்முற்று.
நுவலாச்சொல்-ஒன்றைப் பழிப்பதுபோற் புகழும் அணி.
நுவலாநுவற்சி - சொல்லிலோரலங்காரம், ஒட்டு, பிரிதுமொழிதல், உள்ளுறை உவமம், உவமைப்போலி.
நுவலுதல்-நுவலல், சொல்லுதல், கூறுதல்.
நுவல்-சொல்,வார்த்தை,நுவலென்னேவல்.
நுவல்கை-சொல்லுதல், பேசுதல், கூறுதல்.
நுவறுதல் - அராவுதல், செல்லல். [பம்.
நுவற்கிரி - கரகம், தலையிற் சுமந்தாடும் கும்
நுவற்சி - சொல்லுகை, பேச்சுவார்த்தை.
நுவ்வை - உன் தங்கை, நின்பின்னை. [கு.
நுழாய்ப்பாக்கு-முதிராப்பாக்கு,பிஞ்சுப்பாக்
நுழுந்தி - நழுவி, வழுவி, செருகி.
நுழுந்துதல் - திருடுதல், நகர்தல், நழுவுதல், பதுங்குதல், கூறுதுபோதல், மறைதல்.
நுழை-நுண்மை,நுழையென்னேவல்,நுழை வாயில், பலகணி, துவாரம், சிறுவழி, கூர்மை. [வாயில்.
நுழைகடைவை - நுழை கண்டாயம், சிறு
நுழைச்சல்-எழு,நுழைத்தல்,புகுத்தல். [ன்.
நுழைச்சற்புலு - எழுபது,எழுபத்து,எழுபா
நுழைச்சு - செருகு, தள்ளு,புகுத்து,செல்லு தல், புகுதல்.
நுழைதல் - சாடை சொல்லுதல், நுழைக்கு தல், மட்டுக்கட்டுதல், பதிதல், இடைச் செருகல்.
நுழைத்தல் - பதித்தல், நுழைவித்தல்.
நுழைநரி - தந்திரத்திற் சிறந்த நரி.
நுழைபு - நுழைந்து, நுழைவு, நுழைதல்.
நுழைவாயில் - சிறுவாயில், புகும்வாயில்.

நழைவு - கூரியபுத்தி, திட்டிவாசல்.
நளம்பம்பாடி-பாண்டியநாட்டு ஒரு பகுதி.
நளம்பு-கொசுகு,மசகம்,கொதுகு,மின்மினி
நளும்புதல் - அசட்டை பண்ணுதல்.
நளை - சணம், குருடு, வலைச்சாதி.
நளைச்சி - நெய்தனிலப்பெண், அளத்தி.
நளையர் - நெய்தனில மாக்கள், பரதவர்.
நளையன்-இழிந்தோன்,கழியன், நுளையன்.
நள்ளு - கிள்ளு, நுள்ளென்னேவல்.
நள்ளான் - மிகவும் நுட்பமான ஒரொழும்பு.
நள்ளு - நுள், கிள்ளு, நுள்ளென்னேவல்.
நள்ளுதல் - கிள்ளுதல், நிமிண்டுதல்.
நறுக்கல் - துகளாக்கல், பொடியாக்கல்.
நறுங்கு - குறுநொய், குறுமை. [தல்.
நறுங்குதல்-சிதைதல், பொடிபடுதல், நூறு
நனி-நுண்மை, நுனியென்னேவல், மூனை.
நனித்தல் - உற்றுராய்தல், கூராக்கல்.
நனித்தவன் - நுட்பமாகக் கற்றவன்.
நனித்து - கூர்த்து, நுனியிலுள்ளது, நுனி மையுடையது, கூரிது.
நனித்துநோக்கல்-கூர்மையாய்ப் பார்த்தல்.
நனிநா - மூனைநா, நாக்கின் நுனி.
நனிப்பந்தி-கடைப்பந்தி, இறுதிச்சாப்பாடு.
நனிப்பு - கூர்ந்தறிகை.
நனி - கூர், நுனிகூர்மை, மூனை.
நனிப்புல்மேய்தல்- மேலெழுந்தவாரியாகக் கவனித்தல்.
நன் - நுனது, உன்னுடையது, உனது.
நன்னை - நின்னை உன்னை.

நா

நா - ஆபரணம், ஒரொழுத்து, நாவென் னேவல். [கு-
நாக்கம்-தோதகத்திமரம், சுவாதகத்தி, நாக்
நாக்கல் - செலுத்தல், தள்ளல், நுழைப்பித் தல், புகுத்தல், நெய்வோர் கருவியி லொன்று,நிமிர்தல், முறித்தல்,போக்கல், தள்ளல், செலுத்துதல்.
நாக்கு - தள்ளு, நாக்கென்னேவல், நொய், மேல். [தல்.
நாக்குதல் - செலுத்துதல், தள்ளுதல், புகுத்
நாங்கர் - தேவர், உம்பர்.
நாங்கு-நாங்கென்னேவல், பெருமை,மிகுதி.
நாங்குதல்- பெருமையாயிருத்தல், மிகுதியா யிருத்தல், கௌரவமாயிருத்தல்.
நாங்குவனர் - நாங்குபவர்.
நாடி - சிற்றேலம், காட்டேலம்.
நாதல் - அவிதல், வேதல், புழுங்கல்.
நாதனகாரன்-நாதனச் செய்கையுள்ளவன்.
நாதனச்சட்டம் - புதியவற்பாடு, புதுக்கட் டளை.
நாதனச்சாலி - புது நெல், புதிய மனிதன்.
நாதனத்துவம் நாதனம் } புதுமை, நாதனம், அற்பு தம்.
நாதனமணம் - புதுமணம், புதுவேட்டல்.
நாதனவஸ்நம் நாதனவஸ்திரம் } புதுவஸ்திரம்,கோடிவஸ் திரம், புதியஆடை.
நாதனவிவாகம் - புதுமணம், புதுவிவாகம்.
நாதனன் - புதியவன்.
நாதனி - நாதனகாரன், புதுமையானவன்.
நாத்தல்-நொதுத்தல்,அவித்தல்,வேவித்தல்.
நாபம்-இடபவிராசி, எருக்கு, எருது,காளை.
நாபுரம்-காற்சிலம்பு,பாதகிண்கிணி,பரிபுரம்
நாப்பு - தணிப்பு, ஆற்றி, குறைப்பு.
நாரல்-அவிதல்,ஆறல்,பதனழிதல்,கெடுதல்.
நார்த்தல்-அணைத்தல், அவித்தல், ஆற்றல்.
நாலச்சு-இரும்பு முதலிய கம்பியிழுக்குமச்சு.
நாலடித்தல் - மரத்தில் நூலால் நேர் கோடிடல், எற்று நூலடித்தல்.
நாலறிவு - கல்வியறிவு, சாஸ்திர வுணர்ச்சி.
நாலாக்கலிங்கம் - பட்டாடை. [ன்.
நாலாசிரியன் - நூற்கருத்தா,நூலாக்கியோ
நாலாதாரம் - சாஸ்திராதாரம், முதல் புத்தகம்.
நாலாம்படை நாலான்புடை } ஒட்டடை, சிலம்பிக்கூடு.
நாலான்பூச்சி-நூற்கும்பூச்சி, சிலந்திப்பூச்சி.
நாலியாப்பு - நூலினிடத்தி யாப்பமைக்கும் விதம்; அது: தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு என்பன [கதை.
நாலில்லாமாலை - வைப்புக்கட்டு, பொய்க்
நாலிழந்தாள் - அமங்கலி, விதவை, கைம் பெண். [பஞ்சுநூல்.
நாலிழை-நூற்றநூல், நூலாலாகிய இழை,
நாலிழைத்தல்-நூனூற்றுதல்,நூல்நிரித்தல்.
நாலுண்டை - நூற்சுருள், நூற்கண்டு.
நாலுத்தி - தந்திரவுத்தி, சாஸ்திரயுத்தி.
நாலும்செவியும் - கல்வியும், கேள்வியும், அமைச்சரும், ஒற்றரும்.
நாலுரைப்போன்-உபாத்தியாயன், ஆசான்.
நாலுரையுணர்வோர் - ஒல்லோர், நூலாய்ந் தார்.
நாலுறி - சிமிலி.
நாலுறுஞ்சி - நெய்வார் கருவியிலொன்று.
நூலேணி - கயிற்றேணி, பாய்மரத்தேணி

நூலோடுதல்-தையலினூல்விட்டுப்பம்முதல்
நூலோர் - அறிஞர், பார்ப்பார், மந்திரிகள்.
நூல்-ஆண்குறி, ஆலோசனை, இழை, எண்ணல், எற்றுநூல், கல்விநூல், குறியைப் பற்றிய நரம்பு, சாஸ்திரம், நூலென்னேவல், பஞ்சிநூல், பூணூல், நாடகத் தமிழ் நூல்களுளொன்று, வேதாங்கம், இலக்கணநூல், கயிறு, எண்ணம், விதி.
நூல்சோர்த்தல் - நூல் பதனிடுதல்.
நூல்பரிதல் - நூலறுதல்.
நூல்போடுதல் - நேர்பிடிக்கக் கயிறடித்தல்.
நூல்போதல் - நூல் கைவருதல், கல்வியுடைமை.
நூல்யுத்தி-நூலுத்தி, சாஸ்திரயுத்தி. [னல்.
நூல்வலை-நூலினூண் முடியும்வலை, நூற்பின்
நூல்வல்லோர் - கற்றோர், அறிஞர், மந்திரிகள். [முறை.
நூல்வழக்கு - செய்யுள் வழக்கு, சாஸ்திர
நூல்வாங்கல் - நூல்கொண்டளத்தல், கயிறடித்தல், தாலியறுத்தல்.
நூல்விடுதல் - நூல்கோத்தல், சிலம்பி முதலியன நூலுண்டாக்கல், சாடுவிடுதல்.
நூல்வேண்டுஅவையம் - வித்யாமண்டபம், அரங்கேற்று மண்டபம்.
நூவு - எள், எண், நிலம், நூ.
நூவுநெய் - எண்ணெய், நல்லெண்ணெய்.
நூழல்-நூறல், நொறுக்குதல், பொடியாக்கல்
நூழிலர் - வாணிகர், செட்டிமார்.
நூழிலாட்டு-கொன்று குவிக்கை, வீரன் தன் மேற்றைத்த அம்பை எடுத்துப் பகைவர் மேல் எறிதல், ஒரு துறை.
நூழிலாட்டுதல் - கொல்லுதல், கோறல்.
நூழில் - குவித்தல், கொடிக்கொத்தான், கொலை, தன்மெய்புதைந்த படையைப் பறித்து நிற்கை, படற்கொடி, யானை, குவியு, போர், மிடைந்தோர் பிணக்கம், செறிவு, கொடிப்பிணக்கு, கொடிகள் பிணைந்து நிற்றல்.
நூழை-துவாரம், நுண்மை, குகை, பலகணி.
நூறல்-அழித்தல், நொறுக்குதல், நிலைதத்தல்.
நூறுயிரம் - இலட்சம், நியுதம் (1,00,000).
நூறு-ஒரெண், நூறென்னேவல், சுண்ணும்பு, பொடி, நீறு, சேறு.
நூறுதல்-அழித்தல், நசுக்குதல், நிலைதத்தல்.
நூறை - மலங்குமீன், நூற்றைக்கிழங்கு.
நூற்கண்டு - நூற்பந்து, நூலுண்டை.
நூற்கயிறு - நூலினூற்றிரிக்குங்கயிறு, நூற்சாடு.
நூற்கருத்து - நூற்பொருள், நூற்பயன்.

நூற்கல் } நூல் செய்தல், நூல் திரித்தல்,
நூற்றல் } கயிறு திரித்தல்.
நூற்கணனர் - அமைச்சர், அறிவுடையோர் ஞானிகள், ஞானம், கண் பெற்றோர்.
நூற்கழி-நூற்பந்து, நூற்செண்டு, நூற்கயிறு
நூற்கிடக்கை - சாஸ்திரவிதி.
நூற்குச்சு - நூற்குச்சம், நூற்கொத்து.
நூற்குதல் - நூற்றல், திரித்தல், முறுக்கல்.
நூற்சாடு - நூலினூற் செய்யுமோர் கயிறு.
நூற்சுருள் } நூற்பந்து, நூலுண்டை.
நூற்சுருளை }
நூற்பகந்திரம் - நூலடியிற்கட்டு.
நூற்படுகு - நெசவுபா, நூற்பாவு.
நூற்பயன்-நூலினது பலன்; அவை: அறம், பொருள், இன்பம், வீடு.
நூற்பவந்திரம்-நூற்பகந்திரம். நூலடிக்கட்டு
நூற்பழக்கம் - கல்விப்பயிற்சி, நூற்பயிற்சி.
நூற்பா - சிலவகை யெழுத்துக்களாலாகிய சொற்றொடராய்ப் பலவகைப் பொருள் களை விளக்கித்திட்பம் நட்பமமைந்துவருவது.
நூற்பாவகவல் - இலக்கணச்சூத்திரம்.
நூற்பாவை - நெசவுப்படைமரம்.
நூற்புறவடை - நூலின்புறத்தினடைக்குந் தெய்வவழி பாடாகிய காப்புமொழி.
நூற்பொருள்-நூற்கருத்து, நூலுரை, நூலிற் சொல்லப்படும் பொருள், நூலட்டவணை.
நூற்றந்தாதி-ஓபிரபந்தம்; அஃது: வெண் பாநூறினுனேனுவ கலித்துறை நூறினு னேனுமந்தாதித்துப் பாடுவதோர் நூல்.
நூற்றல் - நூற்குதல், நூல் செய்தல், நூல் திரித்தல். [அனவை.
நூற்றாண்டு-அப்தங்கள் நூறுகொண்டகால
நூற்றாறு } நூனுழி, (நெசவிற்குதவும்) நூல்
நூற்றூர் } சுற்றிய சிறுகுச்சி.
நூற்றிரள் - நூற்கண்டு, நூலுருண்டை, திரண்ட நூல்கள், சாஸ்திரத் தொகுதி.
நூற்றிரை - நூலாலாகிய திரை, நூலின் திரை.
நூற்றுவர் - துரியோதனனுடியர். [தங்கன்.
நூற்றுவரைக்கொல்லி-பீரங்கி முதலிய ஆயு
நூற்றுறை - நூற்கருத்து, நூற்பொருள்.
நூனம் - குறைவு, நிச்சயம், குன்றல், குறைவு படக் கூறுதல்.
நூனயம் - கல்விநயம், நூலின் மேன்மை.
நூனயம் - ஊனயம், சூது, தந்திரம்.
நூனுதிகம் } குறைவுநிறைவு, குறைசொல்
நூனுதிக்கம் } லுங் குணம்.
நூனுழி - நெசவுநாடா, நூனூடா.

நூனினவை - நூற்பின்னல். [து
நூனுட்பம் - நூலினது நுண்மை, நூற்கருத்
நூனெறி - நூல்வழி, நூல்களிற் கூறியவழி, நூல் கூறும் முறைமை.
நூனெறிமரபு - நூல்களிற் கூறிய ஒழுக்க முறை, நூன்மரபு, நூனெறி.
நூன்மடந்தை - சரஸ்வதி, கலைமகள்.
நூன்மாடம் } கூடாரம், பாடி வீடு,
நூல்வெண்மாடம் } படமாடம்.
நூன்முகம் - நூற்றுறை, பாயிரம், முகவுரை.
நூன்முடிபு } நூலினது பொருணோக்கம்.
நூன்முடிவு }

நெ

நெகல் - கனிதல், நெகிழ்தல், தளர்தல், கெடுதல், இளகல், மெலிதல், பிளத்தல்.
நெகவரைத்தல் - நேகவரைத்தல்.
நெகிடி - நெருப்புக்குவை, நீக்குவை.
நெகிழம் - பாதச்சிலம்பு, காற்சிலம்பு,
நெகிழி - நெகிழி, பாதச்சிலம்பு, நெருப்பு.
நெகிழிசை - வல்லெழுத்துவராது மற்றீரின வெழுத்திலொன்றுன் முடியுஞ்செய்யுள்.
நெகிழுதல்-நெகிழ்தல், குழைதல், மலர்தல்.
நெகிழ்கறியமுது - குழம்பு, ஆணம்.
நெகிழ்ச்சி - இளக்கம், தளர்ச்சி, அயர்ச்சி.
நெகிழ்தல் - அழுந்தல், அவிழ்தல், மனமிரங்குதல், இளகுதல், உருகுதல், குழைதல், தளரல், நழுவல், நுகைத்தல், பிரிதல், பொசிதல், பொடியாதல், மலர்தல், விட்டு நீங்குதல்.
நெகிழ்த்தல் } அவிழ்த்தல், உருக்கல், நீக்
நெகிழ்த்துதல் } கல், நசுக்கல், பிரித்தல், மலர்த்தல், குழைத்தல், தளர்த்தல்.
நெகிழ்பு - நெகிழ்தல், நெகிழ்ந்து, மெலிவு, மெலிந்து.
நெகிழ்ப்பு - நெகிழ்தல், குழைப்பு, தளர்வு.
நெகிழ்வு - குறைவு, தளர்வு, நுகைவு, பிரிவு, மலர்தல், விட்டுநீங்கல், விட்டுவிலகுதல், மென்மை, மெலிவு.
நெகிளம் - பொற்சிலம்பு, நெகிழம், நெகிழி.
நெகுதல் - உருகுதல், கரைதல், நுகைதல்.
நெக்கல் - உக்கல், உருகுதல், கனிதல், கனிந்தது, இளப்பல், தளர்ந்தது, தள்ளல்.
நெக்கு - நெக்குதல், நெக்கென்னேவல்.
நெக்குடைதல் - நெகிழ்ந்துருகுதல், நெகிழ்ந்துவிள்ளுதல், மனம் உருகுதல், இரங்குதல், கட்டுக்குலைதல்.
நெக்குதல் - உருகுதல், கனிதல், இளப்பல், தள்ளல், துகைதல், தூரத்தியடித்தல், விள்ளுதல், நெருக்குதல், வருத்துதல்.
நெக்குருகுதல் - விண்டுருகுதல், இளகுதல்.
நெக்குரோதம் - நியக்குரோதம், அகலம்.
நெக்குவிடுதல் - நுகைதல், விண்டுடைதல், மூச்சுவிடல், பொருத்துவாய் வீடுதல்.
நெசவு - நெய்குதல், முடைதல், பின்னல்.
நெசவுகாரர் - நெய்வார். [ணைச்சி.
நெச்சி - மஞ்சணைச்சி, கடுக்காய், வெண்
நெஞ்சகம் - நெஞ்சு, மனம், இருதயம், நடுவிடம்.
நெஞ்சடைப்பான் - மென்னேயடைப்பான், மாட்டுக்குவரும் ஓர் நோய். [படத்தல்.
நெஞ்சடித்தல் - அச்சத்தால் இதயம் பட
நெஞ்சடைப்பு } ஓர் நோய், மார்படை
நெஞ்சடைவாதம் } ப்பு.
நெஞ்சம் - மனம், மார்பு, இருதயம், உள்ளம்.
நெஞ்சழிதல்-ஏங்கல், மனமயங்கல், கவலல்.
நெஞ்சறிசுட்டு - தான்மட்டும் அறிந்த பொருளைச் சுட்டுஞ் சுட்டு.
நெஞ்சறிதல் - மனமறிதல், உளமறிதல், நெஞ்சாலறிதல், தெரிந்த விஷயம், நெஞ்சையழிதல்.
நெஞ்சறிவிளக்கம் - நெஞ்சறிவுறு, ஓர் நூல்.
நெஞ்சறிவுறுத்தல் - மனத்துக்கறிவித்தல், மனங்கொளப் புகலுதல்.
நெஞ்சன்-ஓர்மி, துணிவுடையான், திடசாலி.
நெஞ்சாங்கட்டை-சவஞ்சுவதற்கு நெஞ்சில் வைக்குங் கட்டை, தூராலோசனை, நெஞ்செலும்பு, நெஞ்சுக் கூட்டெலும்பு.
நெஞ்சாங்குலை-ஈரற்கொலை,இருதயம். [குழி
நெஞ்சாங்குழி-தொண்டைக்குழி, மிடற்றுக்
நெஞ்சாங்குற்றி - நெஞ்சாங்கட்டை.
நெஞ்சாங்கொழுந்து - நெஞ்சாங்குலை.
நெஞ்சார - மனமார, இதயமார.
நெஞ்சிடி-நெஞ்சு பதறுதல், நெஞ்சுத்திகில்.
நெஞ்சிற்கல்-நெஞ்சிற்பாசம், கவலை, துக்கம்.
நெஞ்சு - நெஞ்சகம், ஓர்மம், துணிவு தைரியம், தொண்டை, மனம், மார்பு, நடு.
நெஞ்சுகரித்தல் - ஆகாரம் செரிக்காததால் உண்டாகும்நோய், பொருமைகொள்ளல்.
நெஞ்சுகுதல் - மனஞ்சோர்தல்.
நெஞ்சுக்கண்டரை-உடம்பிற் சிவப்பிரத்தம் ஓடும் பெரிய குழாய்.
நெஞ்சுக்குத்து-மார்புவலி,மார்புக்குத்து.[ளி.
நெஞ்சுக்கோழை - நெஞ்சுக்கட்டு, நெஞ்சுச்ச
நெஞ்சுண - மனப்பட, மனதிற் பதியும்படி

யாக, மனம் பொருந்த.
நெஞ்சுணல் - மனம் பொருந்தல்.
நெஞ்சுத்தடிமல் - நெஞ்சுத்தடுமன், நெஞ்சி நீர்த்தோஷம். [தைரியம்.
நெஞ்சுத்துணிவு-நெஞ்சழுத்தம், மனவுறுதி,
நெஞ்சுநீவல் - மார்பைத்தடவுதல், தைரியங் கூறல், திருப்தி கூறல்.
நெஞ்சுநேர்தல்-மனமொப்பல், உடன்படல்.
நெஞ்சுநோ-நெஞ்சினோ, மனவிதனம், கவல்.
நெஞ்சுபுகல் - விரும்பப்படுதல்.
நெஞ்சுமாறல் - மனம் மாறுதல், நெஞ்சுறக் கழறல், மனதிற்பட எடுத்துரைத்தல்.
நெஞ்சுரம் - தைரியம், ஊக்கம், திடித்தனம்.
நெஞ்சுருகுதல் - இரங்குதல், மனமிளகல்.
நெஞ்சுவாட்சி - நெஞ்சு புகைதல்.
நெஞ்சுவிடுதூது - உமாபதி சிவாசாரியார் செய்தருளிய சைவசித்தாந்த சாத்திரம்.
நெஞ்சுறுத்தல் - நெஞ்சிலழுத்துதல், நெஞ்சி லுறைத்தல், நெஞ்சறியக் கூறல்.
நெஞ்சூன்றி - கவனசுபாவமுள்ளவன், ஒரு பக்கம்வளைந்து மறுபக்கம்மிதந்திருப்பது.
நெஞ்சொரிச்சல் - பொறுமை, சரியாமை.
நெஞ்சொரிதல் - எரிச்சற்படல், பொறுமைப் படல், பொச்சாப்புறல், மனநேர்ப்படல்.
நெஞ்சொரித்தல் - உடற்பிசகால் வருமோர் நோய், நெஞ்சொரி வாய்வு.
நெஞ்சொரிப்பு - நெஞ்சொரித்தல், பொறுமை.
நெஞ்செலும்பு-நெஞ்சுக்கூடு, மார்பெலும்பு.
நெஞ்சோர்மம் - நெஞ்சுத்துணிவு.
நெடநெடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
நெடலை - நாரை, கழுத்துநீண்ட பறவை.
நெடி - சின்வண்டு, நாற்றம், நெடியென்னே வல், மிளகாயின் காரம், துர்நாற்றம்.
நெடிசு - நெடிது, நீட்பம், நெட்டை.
நெடிதிருத்தல் - நீண்டநேரமிருத்தல், இரு, இருத்தல்.
நெடித்தல் - பொழுது நீட்டித்தல்.
நெடியவட்டம் - மாவட்டணம், பரிசை.
நெடியவன் / நெடியன் / நெடியான் / நெடியோன் } நெட்டையன், விட்டுணு, திருமால், வளர்ந்தவன், திரிவிக்கிரமனென விட்டுணு, துவசி, மூக்கிரட்டை, வடிம்பலம்ப நின்ற பாண்டியன்.
நெடியோன்குன்றம் - வேங்கடமலை, திருப்பதி மலை; இது: தமிழ் வழங்கு நிலத்தின் வடவெல்லையாயுள்ளது.
நெடிலடி - ஐஞ்சீரடுத்து நிற்பது. [ஞரை.
நெடிலி - கடற்பறவையிலொன்று, நெடுங்கா
நெடிலெதுகை - அடிதோறும் நெடிலெழுத்தெதுகையாய் அமைந்து வருவது.
நெடில் - நீளம், நெட்டெழுத்து, மூங்கில்.
நெடிற்றொடர்-குற்றுகரவீற்றிற்கயலிலோர் நெட்டெழுத்துத் தொடர்ந்து வருவது.
நெடின்மோனை - எழுவா யெழுத்தொன்று மோனை அடிதோறுமுதலெழுத்துவருவது
நெடு-நீண்ட, நெடுமையான, நெட்டையான.
நெடுக - நீளமாக, தொடர்பாக.
நெடுகலும் / நெடுகிலும் } எப்பொழுதும், தினமும்.
நெடுகல் - நீளுதல், போதல், தொடர்தல்.
நெடுகுதல் - உயருதல், சாதல், நீளித்தல், நீளுதல்.
நெடுக்கு - நீட்சி, நீட்பம், நீட்டம், நீளம்.
நெடுங்கடலோடுதல் - கரையோரமாய்க் கப்பல் செல்லுதல்.
நெடுங்கடல்-நீண்டகடல், கரையடுத்ததகடல்.
நெடுங்கடை - நீண்டவாயில், பெரியவாயில்.
நெடுங்கணக்கு-விரிந்தகணக்கு, நீண்ட கணக்கு, அரிவரி, பழங்கடன்;பெருந்தொகை.
நெடுங்கணவாய் - ஓர்கணவாய், நீண்ட மீன்.
நெடுங்கண் - தூரப்பார்வை, தேங்காயின் தாய்க்கண், நீண்டகண், நீளம், பெருமிடம்.
நெடுங்கண்விழுதல் - பன்னமொரு பக்கம் நெடுகி மறுபக்கந் தளர்ந்திருத்தல்.
நெடுங்கதை - நீண்டகதை, பழங்கதை.
நெடுங்கயிற்றில்விடுதல் - நாட்கடத்துதல்.
நெடுங்கரை - நீண்டகரை, நீள்வாரம்.
நெடுங்கல்நின்றமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள ஐவகைமன்றத்துளொன்று; இது: நஞ்சுண்டோர், பித்தேறினோர், பேய் பிடுக்கப்பட்டோர் ஆகிய இவர்கள் துன்பத்தை யொழிப்பது. [தை.
நெடுங்கழுத்தன் - ஒட்டகம், கோவேறுகழு
நெடுங்கழுத்துப்பரணர் - ஓர் சங்கப்புலவர்.
நெடுங்காலம் - வெகுகாலம், நீண்டகாலம்.
நெடுங்காலி - நீண்டசுரபி, கால்நீண்ட பசு.
நெடுங்கிடை - நீண்டகாலமாய்ப்படுக்கையிற் கிடத்தல், நெடுஞ்சாங்கிடை.
நெடுங்கிள்ளி - கோழ்கிழாரால் பாடப்பட்டவன், இவன் சோழபரம்பரையிற் சேர்ந்தவன்,காரியாற்றுத்துஞ்சியநெடுங்கிள்ளி.
நெடுங்குடர் - மணிக்குடர், நீண்டகுடல்.
நெடுங்குரலன் - கழுதை, கர்த்தபம், வேசரி.
நெடுங்குரல் - நீண்டகுரல், பெருங்குரல்.
நெடுங்குரல்பாய்ச்சுதல்-நீண்டசப்தமிடுதல்.
நெடுங்குளம் - பாண்டி நாட்டிலுள்ள வோரூர், இது உறையூரிலிருந்து மதுரைக்குப் போகும் வழியிலுள்ளது.

நெடுங்கூவிளி - பெருமுழக்கம்.
நெடுங்கேடு - தீராத கேடு, பெருங்கேடு.
நெடுங்கை - நீண்ட கரத்தையுடைய யானை, துதிக்கை, நீண்டகை, நீண்ட கைம்மரம், சிறந்த கை, நெடுங்கை வேண்மான்.
நெடுங்கோணி-ஒட்டகம், பாலைவனக் கப்பல்.
நெடுஞ்சட்டை - அங்கி, அங்கரக்கா.
நெடுஞ்சாணிகை } நெடுங்கிடை, படு
நெடுஞ்சாண்கிடை } கிடை.
நெடுஞ்சால் - நீட்டுப்போக்கான உழவு.
நெடுஞ்செழியன் - மதுரையிலிருந்த வொரு பாண்டியன், இவன் ஆராயாது கோவலனைக் கொலைபுரிவித்துக் கண்ணகிக்கு வழக்கிற்றோற்றுத் தனக்குண்டான பழியை நினைந்து உடனே உயிர்விட்டவன். மதுரைக்காஞ்சி முதலியவற்றிற் புகழப்பட்டவனும், தலையாலங்கானத்துச் செரு வென்றவனும் இப்பாண்டியனே.
நெடுஞ்சேரலாதன்-பதிற்றுப்பத்தினுள் இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன்.
நெடுஞ்சொல் - கீர்த்தி, நெடும்புகழ்.
நெடுந்தாள் - பெரிய அடிமரம், பெரு முயற்சி, நெடிய கால்.
நெடுத்தமண்டலி - தேன், நளிவிடம், நதளி.
நெடுத்தகை-நெல்லுடன்முளைக்கும் களைவகை.
நெடுத்தல் - நீளுதல், நெடுக்குதல், நெடும் பொழுதாதல், காலந்தாழ்தல்.
நெடுநல்வாடை - நெடுஞ்செழியனை நக்கீரர் பாடியது;இது:பத்துப்பாட்டுள் ஏழாவது.
நெடுநாவை - நீண்டநாவை, நெடியவான்
நெடுநான் - வெகுநாள், நெடுங்காலம்.
நெடுநீட்டு - வெகுநீளம், மிகுநீட்டம்.
நெடுநீர் - கடல், பாராவாரம், தாமதம்.
நெடுநீளம் - நேர்நீளம், நேர்நீட்டு.
நெடுநெடுகுதல் } நெடுகநீளுதல், நெடுகவள
நெடுநெடுத்தல் } ர்தல், நீண்டுவளர்தல்.
நெடுநெடெனல் - வளர்ச்சிக்குறிப்பு, இரட்டைக் கிளவி.
நெடுநேரம் - வெகுநேரம், நீண்டநேரம்.
நெடுந்தகை - பெரியோன், பெருந்தகை.
நெடுந்தகைமை - மேன்மை, மேம்பாடு.
நெடுந்தட்டு - ஓர் கடுதாசிப்படம், காற்றாடி.
நெடுந்தாயம் - அடுத்தடுத்து விழுந்தாயம்.
நெடுந்தாழ்ப்பாள் - கணையமரம்.
நெடுந்துயில் - சாவு, நீண்டதூக்கம்.
நெடுந்துருத்தி - நீர்வீசுங்கருவிவகை. [டது.
நெடுந்தூக்கு-தூக்கு ஏழனுள் எழுசீர்கொண்
நெடுந்தூரம் - வெகுதூரம், அதிகத்தொலை.
நெடுந்தெரு-இராசவீதி,நீண்டதெரு.[குசம்.
நெடுந்தோட்டி-நீண்டகொழுச்சி,பெரியஅங்
நெடுப்பம் - நீளம், நீட்சி, நீட்டம்.
நெடுப்பிணை - வங்கமணல், ஆற்றுமணல்.
நெடுப்பு - நீளிப்பு, நீட்டம், நீளம்.
நெடுமிணை - நீண்டபாகை, நீண்ட ஆதனம்.
நெடுமழை-பெருமழை,விடாமழை,பேராலி.
நெடுமன்-நீண்டது,நெட்டையானது,பாம்பு.
நெடுமால் - விட்டுணு, பரந்தாமன்.
நெடுமாந்தடி - உபயோகமற்றவன்.
நெடுமாராயவஞ்சி - அரசனுற் பெருஞ் சிறப்படையும் நிலை.
நெடுமாவளவன் - குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்.
நெடுமாறநாயனார் - திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் சுரநோயும், கூனும் நீரப்பெற்றுச் சமண சமயம்விடுத்துச் சைவ சமயப் பிரவேசமான கூன் பாண்டியனார்; இவரே வடதேயத் தரசரைத் திருநெல்வேலிப் போர்க்களத்தில் வென்று சைவசமயம் வளரும்படி நெடுங்காலம் அரசியற்றினவர்.
நெடுமி - நீண்டமரம், நீளியபெண், பனை,
நெடுமிசை - முனி, முனை, உச்சி. [மழை.
நெடுமிடல்-மிகுவலியோன், அரியமானெடுமானஞ்சி, மோட்சவீடு.
நெடுமுடிக்கிள்ளி - ஓர் சோழன், இவன் சேர பாண்டியர்களை வென்றவன்.
நெடுமுரல் - வேய்ங்குழல், ஓர்மீன்.
நெடுமுழம் - நீட்டமான புடவை.
நெடுமூக்கு - துதிக்கை.
நெடுமூச்செறிதல் - பெருமூச்சுவாங்கல்.
நெடுமூச்சு - பெருமூச்சு, எக்கத்தா லெழு மூச்சு;இம்மூ:யாக்கைக்குற்றத்தொன்று.
நெடுமை - அமிதம், உயரம், நீளம், பெண்மயிர், பெருமை.
நெடுமொழி-தன்மேம்பாட்டுரை, வஞ்சினம், ஒருதுறை, வஞ்சித்துறை, நெடுமொழி வஞ்சி.
நெடும்பகை - நீண்டகாலப்பகை.
நெடும்பயணம் - நெடும்பிரயாணம், மரணம்.
நெடும்பல்லியத்தனார் - ஓர் சங்கப்புலவர்.
நெடும்பல்லியத்தைகுமு - ஓர் சங்கப்புலவர்.
நெடும்பழக்கம் - வெகுகாலச்சாதனை.
நெடும்பழி - பெரும்பழி, தீராப்பழி.
நெடும்பா - ஆடாதோடை, கவீரகப்பூடு.
நெடும்பார்வை - கண்ணூன்றிப்பார்த்தல்.
நெடும்புகழ் - மிகுபுகழ், நீண்டகீர்த்தி.
நெடும்புணை - பெருமரக்கலம், பேராதரவு.
நெடும்புரிவிடுதல் - ஏய்த்தல், கடத்தல்.

நெடும்பொழுது - நெடுநேரம், வெகுநேரம்.
நெடுவசி - நெட்டுசியிட்ட தழும்பு.
நெடுவரி - நீண்டவரி, நேர்வரி, ஒழுங்கு.
நெடுவல் - நீளி, நெடுமை, நெடுவன்.
நெடுவழி - நீண்டவழி, பழமையான வழி, பரம்பரை, நெட்டாறு.
நெடுவாய் - வாய்நீண்டமீன், உள்ளாமீன்.
நெடுவாலூடகம் / நெடுவாற்றிரளி } வால்நீண்ட ஓர் கடல் மீன்.
நெடுவிடை - நெட்டிடை.
நெடுவிரல் - ஆடாதோடை, நாட்டுப்பாகல்.
நெடுவீடு - நித்தியானந்த மோக்ஷவீடு.
நெடுவெண்ணிலவினர் - ஓர் சங்கப்புலவர்.
நெடுவேர் - சாயவேர், தூணவேர்.
நெடுவேளாதன் - குன்றூர் கிழார் மகனு ராற் பாடப்பட்ட ஓர் வெற்றி பொருந்தியவன்.
நெடுவேள் - முருகன், காமன்.
நெடுவேள்குன்றம்-திருச்செங்குன்று, குமர வேள்மலை; இது சோழநாட்டலுள்ளது.
நெட்டகெடியது - மிகநெடியது, நீண்டது.
நெட்டம் - மிளகு, செங்குத்து, நெடுமை.
நெட்டாங்கு - நீளவாட்டு, நெடுமரம், வீட்டின் கூரைக்குப்பாவும் குறுக்குமரம்.
நெட்டாயம்-நீளம், செங்கல் அடுக்குமுறை.
நெட்டாறு - நெடுவழி.
நெட்டி - ஓர்புல், சடை, சுடக்கு, சோம்பல், நெட்டு, நெட்டை; அஃது: யாக்கைக் குற்றமைந்திலொன்று, மூளி, கிடேச்சு.
நெட்டிக்கோரை - ஓர்புல், கோரைவகை.
நெட்டிசை - நீண்டொலிக்குமிசை,நீளிசை.
நெட்டிடுதல் - சீத்தல், சீவுதல், நீத்தல்.
நெட்டிடை-நெடுந்தூரம், நெடுவழி, நீண்ட இடம், தாராளமான இடம்.
நெட்டிப்பூ - கிடைச்சியிற் செய்தபூ.
நெட்டிப்பொரி / நெட்டிமாலை } நெட்டிப்பூமாலை, கிடைச் சியாற் செய்தமாலை.
நெட்டிமூரித்தல் - நெட்டை முறித்தல், சோம்பல் முறித்தல்.
நெட்டிமையார் - பாண்டியன்பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய புலவர்.
நெட்டியெடுத்தல் - சுடக்கெடுத்தல்.
நெட்டிருங் கூந்தல் - நீண்ட கருங்கூந்தல்.
நெட்டிலிங்கு - வானமுட்டிமரம், அசோகு.
நெட்டில் - மூங்கில், முடங்கல், வரை.
நெட்டிவேலை - நெட்டியாற் செய்த அலங் காரவேலை.
நெட்டு - இணுக்கு, காம்பு, குலை, சீத்தல், தள்ளுதல், நெட்டென்னேவல், இறு மாப்பு, நெடுமை.
நெட்டுக்கட்டுதல் - குலைதள்ளுதல்.
நெட்டுக்குத்து - செங்குத்து, நேர்குத்து.
நெட்டுடைத்தல் - அவமானப்படுத்தல், செறுக்கையடக்கல்.
நெட்டுதல் - சீத்தல், தள்ளுதல், தாக்கல்.
நெட்டுயிர் - நெட்டெலியுயிரொழுத்து; அஃது: இரண்டு மாத்திரையளவொலிப்பது.
நெட்டுயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல்.
நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு, நெடுமூச்சு.
நெட்டுரு - நீடியரூபு, வாய்ப்பாடம்.
நெட்டுருப்படுத்துதல் / நெட்டுருப்பண்ணுதல் } வாய்ப்பாடமாக்கல், மனப்பாடமாக்கல்.
நெட்டேதி / நெட்டேத்தி } வாத்திய நாதத்துக்குதவும் ஓர் விதச் சங்கு.
நெட்டேரம்-நீட்டேரம், அவாந்திரம், அபாண்டம்.
நெட்டெழுத்து - உடல்வாசகம், கையொப்பம், நீட்டு, நெடிலெழுத்து, நெடில்.
நெட்டெழுத்துக்காரன்-வாசகமெழுதுவோன்.
நெட்டை - நெடுமை,நெட்டி, முழுவெலும்பு, நெடு, நெட்டுசி, ஓர் ஊசி.
நெட்டைக் கக்காளம் - நீண்டளலும்ப,மூதுகந்தண்டு, நெடுமையுள்ளது, நெட்டி, நெட்டை.
நெட்டைச்சி - நெடுமி, வளர்ந்தவள், நீண்டவள்.
நெட்டையன் - நெடுவல் நீண்டவன்,வளர்ந்தவன்.
நெட்டோடை - நீண்டவோடை, நேரோடை.
நெட்டோலை - நீட்டோலை, திருமுகம், நெளித்தல், வளைத்தல், கிண்டல்.
நெண்டுதல்-நெளித்தல், வளைத்தல், கிண்டுதல்.
நெதி / நெதியம் } திரவியம், முத்து.
நெத்தகர் - தேகபுஷ்டியளிக்குமோர்மருந்து
நெத்தலி / நெத்திலி } நெய்த்தோலி, நெத்திலி, ஓர் வகைப் பொடிமீன்.
நெத்தி - மீன் நீந்திச்செல்லுவதற்குக் காரணமான மிதவைப்பை.
நெத்திமூஞ்சி-உத்திரத்திற்கு மேற்பட்டகூரையின் முன்புறத்தமுக்கோணச் சுவர்.
நெப்பம் - மிருது, இலேசு, மென்மை.
நெமிரல் - சோறு, சாதம், அன்னம்.
நெம்பு - இரு கூராணி, எண்ப்பழு, ஏற்ற மடலாணி,நென்பு மிண்டி,விலாவெலும்பு.
நெம்புதல் - உயர்த்துதல், கிளப்பல், தூக்குதல்.

நெய் - இரத்தம், சித்திரைநாள், நறுநெய்; இஃது:பஞ்சகௌவியத்தொன்று,நிணம், நெய்யென்னேவல், தேன் மெழுகு, நேயம், நெய்ப்பு, தைலம்.

நெய்கை - நெய்தல்.

நெய்க்கடல் - சத்தசமுத்திரத்தொன்று.

நெய்க்குரணி - அங்கோலம், அழிஞ்சில்.

நெய்க்குறி - தேரையர் செய்த மூத்திரப் பரீக்ஷையைப்பற்றிக் கூறும் ஓர் வைத்திய நூல்.

நெய்க்கொட்டான் - பூவந்திமரம், மணிப் புங்கு.

நெய்க்கொட்டை - பூவந்திப்பழம், மணிப் புங்கு.

நெய்ச்சட்டி - நெய்யுருக்குஞ்சட்டி,செங்கழு நீர், பணிகாரச்சட்டி, பவளக்குன்றிமணி.

நெய்ச்சாதம்-நெய்ச்சோறு,நெய்ப்பொங்கல்.

நெய்ச்சிட்டி-சிற்றிலைச்செடி,காட்டுச்சீரகம்.

நெய்ச்சுட்டி - செங்கழுநீர்க்கீரை.

நெய்ச்சுண்டு - நெய்யளக்கும் ஆழாக்கு.

நெய்தமாலை - தொடுத்தமாலை.

நெய்தலங்கானல் - நெய்தலங்காலை; இது இளஞ்சேட் சென்னியினூர்.

நெய்தலஞ்சேறு - கோசர்கட்குச் சொந்த மான ஓர் ஊர்.

நெய்தலுரிப்பொருள் - இரங்கல், இரித்தல், ஊடல், பிரிதல், புணர்தல் இவற்றினி மித்தம்.

நெய்தலைப்பெய்தல் - தலைக்கு எண்ணெய் ஊற்றல் (அறம் 32-ல் ஒன்று)தொடுத்தல்.

நெய்தல் - ஆடைமுதலியநெய்தல், ஆம்பல், இரங்குதல், ஐந்நிலத்தொன்று; அஃது: கடலுங் கடல் சார்ந்த விடமும், சாப் பறை, புலர்ந்தோர்புலம்பல், கருங்குவளை.

நெய்தற்புலையன் - சுடுகாட்டுப் பறையன், நெய்தற்பறைகொட்டும் பறையன்.

நெய்தல்வினைவு - உப்பு, மீன், முத்து, பவளம்.

நெய்தற்கருப்பொருள் - நெய்தனில வினை பொருளாயஉப்பு,மீன்,முத்துமுதலியன.

நெய்தற்கார்கியார் - ஓர்சங்கப்புலவர்.

நெய்தற்சாய்த்துய்த்தஆவூர்கிழார் - ஓர் சங்கப் புலவர்.

நெய்தற்குப்பொருள் - நெய்தனிலத்துற் பத்திப்பொருள்கள்; அவை: வருணன் முதற்கடலாடலீறாய பதினொரு வகைப் படுவன.

நெய்தற்பதி - நெய்தற்றலைவன், நெய் தனிலத்தூர்,கடலும்கடல்சார்ந்தநிலமும்.

நெய்தற்பறை-சாப்பறை,நெய்தனிலப்பறை

நெய்தற்புறம் - தபுதாரநிலை, தாபதநிலை.

நெய்தற்றலைவன் - நெய்தனிலப்பதி, வருணன்.

நெய்தற்றினை - நெய்தனிலஞ்சூழிடம்.

நெய்தற்றிறம் - நெய்தற்பண், ஓர்பண்.

நெய்தற்றெய்வம் - வருணன்,புனல்வேந்து.

நெய்தனிலத்தலைவன்-சேர்ப்பன், கடற்பதி.

நெய்தனிலத்தியாழ் - விளரியாழ், ஓரிசை.

நெய்தனிலத்தினீர் - உவர்நீர், உப்புநீர்.

நெய்தனிலத்தூர் - பாக்கம், பட்டினம். [ன.

நெய்தனிலப்பறவை-கடற்காக்கை முதலிய

நெய்தனிப்பறை - சாப்பறை, சகண்டை.

நெய்தனிலப்பெண்-நெய்தனிலமாது, அளத்தி, நுளைச்சி, பரத்தி, வலைச்சி.

நெய்தனிலமரம்-அடம்பு, கோங்கு, தாழை, புன்னை, முள்ளி, முண்டகம் முதலியன.

நெய்தனிலமாக்கடொழில்-கடலாடல், மீன் பிடித்தல், வலைபின்னல்,உப்புப்படுத்தல், முதலியன.

நெய்தனிலமாக்கள்-அளவர், நுளையர்,பரத வர், வலையர், கடலிடம் வசிப்போர்.

நெய்தன்மாக்களுணை - விலைக்குப் பெற்றன.

நெய்தன்மாக்கள் - நெய்தனிலமாக்கள்.

நெய்தன்முதற்பொருள்-கடலுங் கடல் சார்ந்தவிடமுஞ்சிறுபொழுதாயவெற்பாடும், பெரும் பொழுதாறும் என்பன.

நெய்தாங்கி-விளக்குவகை.

நெய்தை-பெருமை, மேட்டிமை, மாட்சி.

நெய்த்தல்-கொழுத்தல், மதத்தேறுதல்.

நெய்த்துப்பு-ஆகுதிவிடுந்துவை, சுடுவம்.

நெய்த்தோர்-இரத்தம், ஓதி, ஓதியமரம்.

நெய்த்தோலி - நெத்தலி, நெத்திலி.

நெய்ந்நீவல் - நெய்தடவுதல்.

நெய்நெட்டி-சம்பம்புல், சம்பங்கோரை.

நெய்ப்பங்கல் - நெய்க்கிழி.

நெய்ப்பற்று - நெய்ப்பிடி, நெய்ப்பசை.

நெய்ப்பிலி - ஒருவகை மாணிக்கக் குற்றம்.

நெய்ப்பீர்க்கு-நுரைப்பீர்க்கு,மெழுகுபீர்க்கு

நெய்ப்பு-கொழுப்பு, மதர்ப்பு, சிதல், கறை யான், பளபளப்பு, எண்ணெய்ப்பசை, ஈரம், நேயம்.

நெய்ப்புச்சுவரி - மான்செவிக்கள்ளி.

நெய்ம்மிகி-நெய்யூற்றி மிகித்தசோறு. [ரல்.

நெய்ம்மீன் - வெள்ளிரால்மீன், வெண்ணி

நெய்ம்மூட்டை - நெய்யெடுக்குங்கரண்டி.

நெய்யகல்-நெய்யூற்றிய அகல், யாகக்கலன், ஆச்சியத்தாலி.

நெய்யடிசில்-நெய்ச்சோறு,நெய்ப்பொங்கல்.

நெய்யணிதல் - எண்ணெய்-தேய்த்துக் கொள்ளுதல்.
நெய்யரி-மரத்திலிருந்தரிக்கும் பண்ணுடை.
நெய்யல் - நெசவு, நெய்குதல், முடைதல்.
நெய்யற்கயிறு - நெய்வார்கருவியிலுண்டு.
நெய்யன்னம் - நெய்ச்சோறு, நெய்யடிசில்.
நெய்யாட்டு - தைலமாட்டு, எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல்.
நெய்யாடுதல் - நெய்பூசிமுழுகுதல்; இஃது: பிள்ளைப்பேற்றுச் சடங்கிலொன்று.
நெய்வண்டி-நெய்த்தவண்டி, மதர்த்தவண்டி
நெய்வார் நெசவுகாரர், சேணியர், காருகர்.
நெய்வான்மீன்-சித்திரை நாண்மீன். [தல்.
நெய்விழா - நெய்யாடுதல், நெய்பூசிமுழுகு
நெய்விழுது - உறைந்தநெய்.
நெய்விளக்கு - நெய்வார்த்தெரிக்கும் விளக்கு, தெய்வங்களுக்கு செய்யும்மாவிளக்கு.
நெய்வு - நெசவு, நெய்தற்றொழில்.
நெய்வைத்தல்-கொழுப்பேறுதல், மதர்த்தல்
நெரக்கு - நிரக்கு, நேர்மை.
நெரடு - வாசிக்கக்கடினமானது, கரடு.
நெரி-நெரியென்னேவல், நொருக்கு, நெரிவு, படைவைமுரிப்பு, புரி, மடக்கு, மடிப்பு.
நெரிகுழல்-சுரிகுழல், தாழ்குழல், பெண்.
நெரிகொட்டை - நெருங்குகொட்டை.
நெரிசல் - மனக்குறை, வெறுப்பு.
நெரிஞ்சி, நெருஞ்சில் } ஓர்முட் பூண்டு; இஃது: தசமூலத்தொன்று.
நெரிஞ்சிமுள்-ஓர்யுத்தாயுதம், குதிதீட்டி.
நெரிதரல், நெரிதல், நெரித்தல் } உடைதல், ஓடல், சாய்தல், நசிதல், நொருங்குதல், மேலே மேலே வரல். நெளிதல், சுரிதல், நசுக்குதல், நிமிட்டல், நொறுக்குதல், வருத்தல். நசுக்குதல், பொடித்தல், நெருங்குதல், நெருக்குதல்.
நெரிநெட்டி, நெரிநெட்டிக்கோரை } சம்பம்புல், சம்பங்கோரை.
நெரிபடுதல்-நசுங்குதல், இடிபடுதல். [தல்.
நெரிபிடித்தல் - புடவை கொய்சகம் வைத்
நெரிபுருவம்-கண்புருவம், கண்வரை.
நெரிப்பு - நெரிதல், நொருங்குதல்.
நெரிமயிர் - சுரிமயிர், சாய்மயிர்.
நெரிமீட்டான் - ஓர் மருந்துப் பூண்டு.
நெரியல் - மிளகு, திரங்கல். [மரப்பிசின்.
நெரியரிசிப்பால் - வாசனையுள்ள ஒருவகை
நெரியாசம், நெரியாசி } எரிகாசு, காசுக்கட்டி.
நெரிவருணசுக்கிரன்-கண்ணோயுளொன்று.
நெரிவிடுதல் - நெரிவிடல், நெரிபிடித்தல்.
நெரிவு - நெரிதல், பகை, நசுங்குதல்.
நெருக்கடி - இக்கட்டு, சங்கடம், நெருக்கிடை, கடுமை, பலவந்தம், வருத்தம்.
நெருக்கட்டியெனல் - சீக்கிரக்குறிப்பு.
நெருக்கம் - இடைஞ்சல், இடைவிடாமை, ஒடுக்கம், கிட்டுமானம், கொடுமை, சமீபம்.
நெருக்கல் - நெருக்குதல், வருத்துதல்.
நெருக்கவாரம் - தரித்திரம், நெருக்கிடை.
நெருக்கிடை-குரூரம், தரித்திரம், நெருக்கம்.
நெருக்கு-நெருக்கம், நெருக்கிடை, இக்கட்டு, நெரிசல், நெருங்கென்னேவல்.
நெருக்குண்ணுதல் - நெருக்குப்படுதல், சங்கடப்படுதல், இடைஞ்சற்படுதல், நெருங்குதல்.
நெருக்குதல்-ஒடுக்குதல், நெருங்கச் செய்தல், பலவந்தம் பண்ணுதல்.
நெருக்குவழி-சுருங்கைவழி, சுருக்குவழி.
நெருக்குவாரம்-நெருக்கிடை, குரூரம்.
நெருக்கெனல் - சீக்கிரக்குறிப்பு.
நெருங்கிப்பிசைதல்-இறுகப்பிசைதல்.
நெருங்கல்-உறுதிச்சொல், கொல்லை, செறிவு.
நெருங்குதல் - உறுதிப்படுதல், கடினமாதல், கிட்டுதல், சமீபித்தல், கொல்லல்.
நெருஞ்சி, நெருஞ்சில் } நெரிஞ்சில், சதமூலத்தொன்று.
நெருடல்-வருடுதல், நெருடுதல், இழைபொருத்தல், உறுத்துதல், வஞ்சித்தல்.
நெருடன் - வஞ்சகன், எமாற்றுக்காரன்.
நெருடி - கெட்டிக்காரி, விஷமக்காரி.
நெருடு - இழையின்பொருத்து, நெருடென்னேவல், வஞ்சனை, விஷமத்தனம்.
நெருடுதல் - நெருடல், தடவல்.
நெருட்டுப்புத்தி - வஞ்சகப்புத்தி.
நெருநல்-சற்றுமுன், முன்னைநாள், நேற்று.
நெருநெருத்தல் - பரபரத்தல், படபடத்தல், ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
நெருநற்று - நேற்று, நேற்றையத்தினம்.
நெருநெருப்பு - அடைசல், நெருக்கிடை, பலவந்தம், தொந்தரை, ஒலிக்குறிப்பு.
நெருநெரெனல் - நெருநெருத்தல்.
நெருநை- நெருநல், நெண்ணல்.
நெருப்பன் - கடுங்கோபி, பொல்லாதவன், பரமசிவன்.
நெருப்பாறு-அக்கினி மலையிலிருந்து ஓடும்
நெருப்பிடுகலம்-கணப்புச்சட்டி. [குழம்பு.
நெருப்பு-அக்கினி, இடி, தீ. [கொள்ளி.
நெருப்புக் கட்டை - கொள்ளிக் கட்டை,
நெருப்புக்கண் -சிவனது நெற்றிக்கண், தீக்கண்.

நெருப்புக்கண்ணன் - அக்கினிக்கண்ணன்.
நெருப்புக்கல்-காடிக்காரம், தீத்தட்டிக்கல்.
நெருப்புக்கொளுத்துதல்-அநீதஞ் செய்தல், கோபங்கொள்ளுதல், தீக்கொள்ளுதல்.
நெருப்புக்கொள்ளி - தீயன், தீயுறவிறகு.
நெருப்புக்கோழி-தீக்கோழி, வான்கோழி.
நெருப்புச்சட்டி - தீச்சட்டி,நெருப்புத்தாழி.
நெருப்புச்சயநீர்-ஓர்திராவகம், நெருப்புநீர்.
நெருப்புச்சாணை - ஓர் மருந்துக்கல்.
நெருப்புச்சிகை - அக்கினிக்கொழுந்து.
நெருப்புத்தண்ணீர் - எரிநீர், வெடியுப்புத் திராவகம்.
நெருப்புத்தழல் - தீக்கட்டி, தீத்தழல்.
நெருப்புத்திரள்-தீத்திரள், தீக்குவியல்.
நெருப்புத்திராவகம்-நெருப்புத் தண்ணீர்.
நெருப்புப்படுதல்-அழிதல்,தீப்படுதல்.[தல்.
நெருப்புப்பிடித்தல் - தீப்பற்றல், தீப்பிடித்
நெருப்புப்பொறி - தீப்பொறி, அக்கினிப் பொறி.
நெருப்புமழை-அக்கினிமழை, தணல்மழை.
நெருப்புவட்டம்-அக்கினிமண்டலம்,சூரியன்
நெருப்புவிழுதல் - தீவிழுதல், தீவளர்தல்.
நெருமுதல் - நருமுதல், நரும்புதல். [பு.
நெரேலெனல்-ஒவிக்குறிப்பு,விரைவுக்குறிப்
நெருள் - ஜனநெருக்கம், ஜனக்கூட்டம்.
நெர்க்குண்டி - நொச்சி, மூவிலைநொச்சி.
நெல் - நெல்லு, வாகை, சாலி.
நெல்லடை - பாகநெல், பகுதிநெல்.
நெல்லம்புல்-பல்லம், வழுதி, வைக்கோல்.
நெல்லரி - கைகொண்ட நெற்பயிர்.
நெல்லரிதினை - மருதநிலப்பறைவகை.
நெல்லி - நெல்லிக்காய் மரம்.
நெல்லிக்கந்தகம் - நெல்லிக்காய்க் கந்தகம்.
நெல்லிக்காய் - நெல்லி மரத்தின்காய்;இது: திரிபலையிலொன்று,துவர் பத்திலொன்று.
நெல்லிக்காய்க்கந்தகம் - நெல்லிக் கந்தகம்.
நெல்லிக்காய்மூட்டை-ஒற்றுமையற்ற செய்கை, ஒற்றுமையற்றவர்.
நெல்லித்துத்தி - ஆமலகத்துத்தி, ஓர்பூடு.
நெல்லிமுள்ளி - நெல்லிவற்றல், நெல்லி விரை.
நெல்லிலக்கம் - நெல்லளவை,வாய்ப்பாடு.
நெல்லினூர் - நெல்லூர்.
நெல்லுப்பிடித்தல் - நெல்வாங்கல்.
நெல்லு - ஓரளவு, சாலி, நெற்பயிர்.
நெல்லுப்புல்-சாமை.[குறிக்க இடும்பிடிநெல்.
நெல்லுவரை - நெல்லளவையின் எண்ணைக்
நெல்லூர் - ஒரூர், இருபத்தெட்டு ஜில்லாக்
நெல்லை - திருநெல்வேலி. [களில் ஒன்று.

நெளி-நெளிமோதிரம், நெளியென்னேவல்.
நெளிச்சலன்-வளைந்தவன்,கூன்பாய்ந்தவன்
நெளிச்சல்-வளைதல், கூனல், கூன்பாய்தல்.
நெளிதம் - அற்பம், இலேசு. [நகருதல்.
நெளிதல் - சுழிதல், புரளுதல், வளைந்து
நெளித்தல்-இறுமாப்புக்காட்டல், நெளிக்குதல், கோணச்செய்தல். [டை.
நெளிப்பு-இறுமாப்பு,பரிகாசம், அங்கசேஷ்
நெளியலன்-கூனன், வளையலன்,கோணன்.
நெளியல்-நெளிவுள்ளது, வளைவுள்ளது.
நெளியலெடுத்தல் - கோணல் நிமிர்த்தல்.
நெளிர் - பேசலானெழுமொலி,நெளிர்தல்.
நெளிவுசுளிவு - ஏற்றத்தாழ்வு, நோக்கா நோக்கம்.
நெளிவு } கர்வம், அகங்காரம், வளைவு,
நெளுவு } கோணல், கூனல்.
நெறநெறெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
நெறி - ஒழுங்கு, கண்மண்ணலடக்குழி, கற்பு, கோயில், சன்மார்க்கம், சுளுக்கு, செவ்வை, நரப்புத்திரட்சி, நீதி, முறை, வழி, விதம், அறம், முத்தி, வரிசை,முடக்கம், நெறிப்பு, பூ. [டி.
நெறிகட்டி-உடற்சந்துகளிலுண்டாகும் கட்
நெறிகேடன்- நெறிகெட்டவன், அநீதன்.
நெறிகேடு - முறைத்தவறு, நீதித்தவறு.
நெறிக்கல்-சுக்கான்கல், சுண்ணக்கல்.
நெறிக்கோரை - கோரைவகையைச்சார்ந்த ஓர் புல்.
நெறிதல்-நெளிதல், மாறிவிழுதல், நெளிவு.
நெறித்தல் - சிலிர்த்தல், பிசைத்தல், அழுத்தல், செவ்வேநிற்றல், முறிப்புக்கொள்ளல், மலர்த்துதல்.
நெறிநிற்போன்-நன்மார்க்கத்தில்நிற்பவன்.
நெறிநீர் - கடல்.
நெறிபிழைத்தல்-நெறித்தவறு, நீதிவழுவல்.
நெறிப்படுத்தல் - ஒழுங்குபடுத்தல், குணப்படுத்தல், வழிப்படுத்தல்,கட்டுப்படுத்தல்.
நெறிப்பு-சிலிர்ப்பு,முரிப்பு, முறிப்பு,பிடிப்பு.
நெறிமயிர்-சிலிர்த்தமயிர், திரண்டமயிர்.
நெறிமருப்பு - மான், எருமை முதலியவைகளின் வளைந்தகொம்பு.
நெறிமான் - நீதிமான், நியாயவான்.
நெறிமுறை-நீதியும் ஒழுங்கும், நீதிமுறை.
நெறிமை - நீதிநியாயம், நேர்மை.
நெறியிலார்-கீழ்மக்கள், நீதிகேடர்,அநீதர்.
நெறியிலி - தன்மார்க்கன், திட்டன்.
நெறியிற்றீர் ஒழுக்கத்து நீத்தார்-துறவிகள்.
நெறியின் - நெறிப்பட, வழியில், நெறியிலுள்ள, நெறியினின்று.

நெறியுணர்வோர்-ஒழுக்கமறிந்தோர்.
நெறியோன்-பெரியோன், நியாயவான்.
நெறிவு - நெறிப்பு, நெருக்கம், நெறுக்கம்.
நெறு - ஓசை, ஒலி, சத்தம், இரைச்சல்.
நெறுக்கட்டியெனல் - ஒலிக்குறிப்பு.
நெறுக்கிடுதல் / நெறுக்கெனல் } ஒலிக்குறிப்பு.
நெறுநெறுத்தல் / நெறுநெறுப்பு / நெறுநெறெனல் } இரட்டைக்கிளவியெண்ணும் ஈரடுக்கொலிக் குறிப்பு.
நெறுமுதல் - நெருமுதல், நருமுதல்,
நெற்கடை - மூலநாள், மூலநட்சத்திரம்.
நெற்கணக்கு - நெல்வாய்க் கணக்கு.
நெற்கழி - நெற்சாகுபடிக்கேற்ற நிலம்.
நெற்கனஞ்சியம்- நெல்லிட்டுவைக்கும்புரை.
நெற்காணி - நெல்விளைநிலம், நன்செய்.
நெற்குப்பை - நெற்போர், சோழநாட்டிலுள்ள ஓர் ஊர்.
நெற்குவியல் / நெற்குவை } நெற்போர், நெல்லம்பாரம்.
நெற்குறி - நெற்கொண்டுசொல்லுஞ்சோதியம்.
நெற்குன்றவாணர் - 12-ம் நூற்றாண்டிலிருந்த ஒரு பெரும் புலவர்.
நெற்கூர்-நெல்வால்,நெல்முனை,நெல்லுனி.
நெற்சப்பி - ஓர்புல், பயிரில்முளைக்கும் களை.
நெற்சிறுதாலி - நெற்சேர்த்ததாலி.
நெற்சோறு - நெல்லரிசிச்சோறு.
நெற்பயிர் - நென்முளை, நெல்நாற்று [ம்.
நெற்பரப்பு-பன்னிரண்டுகுழிகொண்டநில
நெற்பழம்- மதத்திலுலர்வெடித்தநெல், நெல்லில் உண்டாகும்ஓர்பூச்சி,நெல்லுப்பு.
நெற்பு - கீழ், மெலிவு, நலிவு, இளைப்பு.
நெற்பூமி - நெற்காணி, நன்செய்ப்பூமி.
நெற்பொலி - நெற்குவை. [அரிசி.
நெற்பொறி - நெல்லை வறுப்பதால் மலரும்
நெற்போர் - நெற்குவை, நெற்சும்மை.
நெற்றம் - நெற்று.
நெற்றகம் - புன்செய்த் தானியவகை.
நெற்றலன் - செத்தவன், மெலிந்தவன்.
நெற்றலி - நெய்த்தோலி, நெத்திலி.
நெற்றி-உச்சி,நுதல்,படைவகுப்பு, ஆகாசம், கொண்டை, சேவற்சூடு, நன்னுதல், மயிற்கொண்டை, முதல்.
நெற்றிக்கண்ணன் - சிவன், முக்கண்ணன்.
நெற்றிக்கல்- ஓர்வகைத் தண்டனை. [மாலை.
நெற்றிக்கட்டு - நெற்றிச் சூட்டு, ஒருவகை
நெற்றிக்குறி - நெற்றியிலிடும் திலகம்.
நெற்றிச்சுட்டி - நெற்றிக்கு நேரில் பூட்டும் ஓராபரணம், நெற்றியில் வெண்ணிறப் புள்ளி. [சுழிப்பு.
நெற்றிச்சுழி - விலங்கின் நெற்றியிலுள்ள
நெற்றிச்சூட்டு - நுதலணி, நெற்றிச்சுட்டி.
நெற்றிச்செகில் - செகிற்சுட்டியேறு.
நெற்றித்தலம் - நெற்றி, நெற்றியினிடம்.
நெற்றித்திலகம் - நெற்றிப்பொட்டு, நுதற் பொட்டு. [ராபரணம்.
நெற்றிப்பட்டம் - நெற்றியிற் சூட்டுமோ
நெற்றிப்புருவம் - நுதற் புருவம்.
நெற்றிப்பொட்டு - நெற்றித்திலகம்.
நெற்றிமாலை - ஓராபரணம், ஓர் மாலை.
நெற்றிமூட்டு - நெற்றிநேர், நெற்றிமட்டம், கிட்டுமானம், சரிநேர், முன்புறம்.
நெற்றியிற் கல்லுவைத்தல்-பழைய காலத்திலுள்ள ஓராக்கினை, தண்டனை, நெறுக்கிடை.
நெற்று- உலர்ந்தபழம், நெற்றென்னேவல்.
நெற்றுதல்- இடறுதல், தடுத்தல்,தவறுதல்.
நென்பு-பழுமரம் பிளக்குங்கருவி,மராஆப்பு.
நென்னல்- நெருநல்,முன்னர்,முன்னைநாள்.

நே

நே - ஒருமுத்து, நேயம், ஈரம், நட்பு.
நேக - துட்பமாக, மிகப்பொடியாக.
நேசகன் - வண்ணன், ஈரங்கோலியன்.
நேசநாயனார் - சாதியிற் சாலியராகிய ஒரு சிவபத்தர், இவர் சிவனடியார்க்கு உடையும் கீளும் நெய்துகொடுக்குந் திருத்தொண்டுபூண்டு காம்பிலிநகரத்திலிருந்தவர்.
நேசம் - நேயம், அன்பு, ஆர்வம், தருதி.
நேசன்-அன்பன்,சிநேகன்,பக்தன்,நண்பன்.
நேசி - அன்புள்ளான், நேசியென்னேவல்.
நேசித்தல்-அன்புவைத்தல், நட்புவைத்தல்.
நேசிப்பு - அன்பு, நட்பு, சிநேகம், நேயம்.
நேடல் / நேடுதல் } மூங்கில், நேடல், விரும்பல், அவாவல்.
நேதா - நாயகன், நடத்துவோன், தலைவன்.
நேதி - முறை, 'இன்னபடியன்று' எனப் பொருள்படும் வடமொழித்தொடர்.
நேத்தி - நேற்றி, செவ்வை, நல்லது.
நேத்திரகாரம் - கண்ணெய், கண்வலி.
நேத்திராசம் - கண்ணீர், விழிநீர்.
நேத்திரச்சதம் - கண்மடல், கண்மூடி.
நேத்திரநோக்கம் - கண்பார்வை, நோக்கு.
நேத்திரபரியந்தம் - கடைக்கண், கடாட்சம்.

நேத்திரபிண்டம் - விழி, கண்ணகம், பூனை.
நேத்திரபிந்து - ஓர் கண்மருந்து.
நேத்திரபேஷஜம் - கண்வைத்தியம்.
நேத்திரப்படலம்-ஓர்வகையானகண்ணோய்.
நேத்திரம்-கண்,பட்டாடை,வேர்,பீலிக்கண்.
நேத்திரயோனி - இந்திரன், சந்திரன்.
நேத்திரரோகம் - கண்ணோய், கண்வலி.
நேத்திரவாயு - கண்ணரம்புவலி.
நேத்திரவித்தி-கண்ணோய்களைப்பற்றிய நூல்.
நேத்திரவீட்சணம்-குருபையாய்ப்பார்த்தல்.
நேத்திரவைத்தியம் - நயனவைத்தியம்.
நேத்திரவைத்தியன் - கண்பார்க்கும்பரிகாரி.
நேத்திராஞ்சனம்-கண்மருந்து, விழிமருந்து.
நேத்திராமயம் - கண்ணோய், கண்வலி.
நேத்திராம்பு - கண்ணீர், விழிநீர்.
நேத்திராரி - கள்ளிமரம், பயற்றங்கள்ளி.
நேத்திராவுடதம்- கண்மருந்து, விழிமருந்து.
நேந்திரம்- ஒருவகை வாழை. [புனையுமிடம்.
நேபத்தியம் - அலங்காரம், வேடம், வேடம்
நேபம் - நீர், தீர்த்தம்,நாரம்,தண்ணீர். [ன்.
நேபன்-புரோகிதன், வருங்காரியமுரைப்பா
நேபாலிகை - ஓர் பாஷாணம், ஓர் மருந்து.
நேபாளம்- ஓர் நச்சுமரம், நேர்வாளக்கொட்டை,வாளம்,தேயமைப்பத்தாறினொன்று.
நேமகம் - நியமம், விவாக வாக்குத்தத்தம்.
நேமசிட்டை-நியமசிட்டை, அணுட்டானம்.
நேமம் - அணுப்பு, சாயங்காலம், நியமம், நேரம்,பங்கு,பிளப்பு,முறை,மேல்,வேர். வேலி, ஊழ், அணுட்டானம், ஆசாரம்.
நேமனம்-நியமனம், திருப்பி, பிறபிறபு,
நேமி- கடல்,சக்கரவாகப்புள், சக்கிரம, சக்கராயுதம், தேருருள், நேமியென்னேவல், பூமி, மூங்கில், மோதிரம், வட்டம், தீர்த்தங்கர்இருபத்துநால்வருள்ஒருவர்,சுற்று.
நேமிகாதகம் - நரகவகை.
நேமிக்கிறைவன் - சக்கரத்தாழ்வார், திருமால், அரசன்.
நேமிநாதன் - தொண்டைநாட்டில் கனத்தூரில் விளங்கிய குணவீரபண்டிதர் என்னும் ஆருகதர்செய்த தமிழிலக்கணநூல், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்னுமிரண்டுமேயுள்ளது. இது. தொண்ணூற்றாறுவெண்பாக்களால் முடிந்துள்ளது.
நேமிநாதசுவாமிகள் - சைனகுருமார்களில் இருபத்திரண்டாவது தீர்த்தங்கரர்.
நேமிநாதன் - அருகன், கடவுள், திருமால், வருணன், கடற்சேர்ப்பன், துறைவன்.
நேமிப்புள் - சக்கரவாகப்புள்.
நேமியஞ்செல்வன் - சக்கிரவர்த்தி.
நேமியான் / நேமியோன் } விட்டுணு, சக்கிரதரன்.
நேமியுருட்டல் - ஆட்சிபுரிதல்.
நேமிவலயம் - பூமண்டலம், புவனலோகம்.
நேமிவலவன் - அரசன், கடவுள், திருமால்.
நேயம் - அன்பு, எண்ணெய், நன்மை, நிலப்பசை, நெய், உறவு, நேசம், சத்து, ஈரம், நெய்ப்பு, பளபளப்பு, எண்ணெய்ப்பதம்.
நேயவை - இடுதிரை, திரைச்சீலை.
நேயன் - நேசன், ஜினேகன், நட்பானவன்.
நேர - ஓர் உவமைச்சொல், நிகர, ஒப்பாக.
நேரகாலம் - நற்காலம், ஏற்றகாலம்.
நேரங்கடத்துதல் - பொழுதுபோக்கல்.
நேரங்கெட்டநேரம் - ஒவ்வாதசமயம்.
நேரசை- குற்றெழுத்தேனுநெட்டெழுத்தேனுந் தனித்தும் ஒற்றடுத்தும் வருவது.
நேரசைக்கலித்துறை-அனவொத்தநெடிலடிநான்கிஞல் நேரசையாய்த் தொடங்குங் கலித்துறை. [போதல்.
நேரஞ்சாய்தல் - பொழுதுசரிதல், நேரம்
நேரடி - அளவடி, எதிர், ஓர்பாவினம்.
நேரஸ்தன் -குற்றவாளி, தவறுசெய்தவன்.
நேரந்தப்புதல் - காலந்தவறுதல்,
நேரப்பட - தாமதமாக, காலந்தாழ.
நேரம் - அபராதம், காலம், குற்றம், சமயம், தண்டிப்பு, நற்சமயம், பகலிற்பாதி.
நேரலர் - பகைவர், விரோதிகள், எதிரிகள்.
நேரல்- அமைதல், ஒத்தல், நேர்வு, ஒப்பாதல்.
நேரல்லார் - தாழ்ந்தவர், கீழோர்.
நேராக்கல் - சரிப்படுத்துதல், இணக்கல்.
நேராசனம்- சமஆசனம், சமஇருக்கை, நிகர் ஒத்த இருக்கை.
நேராதல்- இணங்குதல், சரியாதல், ஒப்புதல்.
நேராதார் / நேரார் } பகைவர், விரோதிகள், எதிரிகள்.
நேராளி- நேருள்ளவன், நேர்மையுள்ளவன்.
நேரான்- உடன்படான், உடன்படாதவன், ஒவ்வான், பகைவன்.
நேரி - சோழதேயத்தோர்மலை, விரதமலை.
நேரிசம் - அம்பு, எறிபடை, கைவிடுபடை.
நேரிசை - தனிசைசொல்கூடிய நேரிசை வெண்பா.
நேரிசைக்கலிப்பா - கலிப்பாவினேர்பேதம்.
நேரிசைச்சிந்தியல்வெண்பா - மூன்றடியாய் நேரிசை வெண்பாப்போல விரண்டாமடியினிறுதிதனிச் சொற்பெற்று வருவது.
நேரிசையாசிரியப்பா- ஈற்றயலடிமுச்சீராய் மற்றையடியெல்லாம்நாற்சீராய்வருவது.
நேரிசையொத்தாழிசைக்கலிப்பா-மூன்றையே

தாவு தாழிசை தனிச்சொல் சுரிதகமெனு நான் குறுப்புக்கொண்டு வருவது.

நேரிசைவெண்பா- நான்கடியாய், இரண்டா மடியினிறுதி தனிச்சொல்லாய் வர அடி முழுதும் ஒரெதுகையாயேனும் முன்னி ரண்டும் ஒரெதுகையும் பின்னிரண்டு மற்றொரெதுகை யாயேனும் வருவது.

நேரிடுதல் - எதிர்த்தல், எதிர்ப்படுதல், சம்ப விக்தல், கைகூடுதல், தொடங்குதல்.

நேரிட்டபடி - எற்பட்டபடி, எழுந்தமானம்.

நேரியது - நேரானது, நேர்மையானது.

நேரியல் - மினுகு.

நேரியர் - நேர்மையானவர், தோழர்.

நேரியன் } சோழன், நுண்ணறிவி
நேருவெற்பன் } னன்.

நேரியிறை-சோழன்,பொன்னித்துறைவன்.

நேரிவாயில் - உறையூர்க்குத் தெற்கிலுள்ள பெரியோர்களால் பாராட்டப் பெற்ற வோரூர்.

நேரிழை - ஆபரணமணிந்தவள்.

நேரீற்றியற்சீர் - நேரசையாலிறுமாசிரிய வுரிச்சீர்.

நேருக்குச்சீர் - செம்பாகம், நேர்ப்பாகம்.

நேருக்குநேரா-எதிர் எதிராக, பகிரங்கமாக.

நேருக்குநேர்வழி - குறுக்குவழி, கிட்டு பாதை. [ஒப்பாகுமோ.

நேரே - நேராக, செம்மையாக, செவ்வே,

நேரேடம் } நாவன்மரம், கவ்வல்மரம்.
நேரோடு }

நேரேஎன் - உடன்படேன், கொடேன்.

நேரொன்றுசிரியத்தளை - இயற்சீர்கள் ஒன் றும் பலவும் தம்முளொத்துநின்ற சீரினீற் றசை நேர்நிற்கவருஞ்சீர்முதலசைமுறை யே நேராய் ஒன்றிவருமாசிரியத்தளை.

நேரோடல் - நேராயோடல்; இஃது: துரக கதியிலொன்று, நேராய்ச்செல்லும் வீதி, ஆதி.

நேர்- உடன்பாடு, உண்மை, உவமை, சமம், ஒப்புரவு, கற்பு, சரி,செவ்வை, தகுதி,நீதி, கூடுதல், கொடை, நல்லொழுக்கம், நீளம், நுட்பம், நேரசை, நேரொன்னேவல்,பாதி, முன், மேல்வரிசை, மிகுதி, தனிமை, தேய்ந்துபோதலைக் குறிக்கும் ஓர் சொல்.

நேர்கடன் - நேர்ந்தகடன, நேர்த்திக்கடன்.

நேர்கட்டி-ஒருவிரை,அண்டவுறுப்பிலொன்று.

நேர்கட்டுதல் - சரிக்கட்டுதல், சமப்படுத்தல், பக்தயங்கட்டுதல்.

நேர்காட்டுதல் - சரிவனமாக்குதல், முன்கா ட்டுதல், விழுங்குதல், வரிசைவைத்தல்.

நேர்காற்று-வனக்காற்று,அனுகூலக்காற்று.

நேர்குநர் - ஒப்பவர், ஒப்பாவோர்.

நேர்கூறு - சரிபாகம். [கை.

நேர்சீர் - இணக்கம், தகுதிக்கேற்றநடைக்

நேர்சொல்லுதல் - சத்தியஞ்சொல்லுதல்.

நேர்சோழகம் - நேர்தென்றல்.

நேர்ச்சி - இணக்கம், சம்மதம், விசேகம், தகுதி, நேர், நேர்த்தி, பிரதிக்ஞை.

நேர்ஞ்சிராய்-நேரியசீராய்,மிகவொழுங்காய்

நேர்தல் - ஈதல், உடன்படல், எதிர்த்தல், கிட்டல், சம்பவித்தல், பொருதல், தெளி தல், வேண்டுதல், நெருங்குதல், ஒத்தல், வேண்டிக்கொள்ளல்,நுணுகுதல்,காலால் முற்முவித்தல், நேர்க, உடன்பட்டுக் கொடுப்பது.

நேர்திறம் - நேர்பாடு, நீதி, நேர்காரணம், பாலேப்பண்ணின்றிறமைந்தனுளொன்று.

நேர்த்தி - சிறபபு, திருத்தமுள்ளது, நேரு தல், நேர்ந்தபொருள், நேர்ச்சி, நேர்.

நேர்த்திக்கடன் - பிரார்த்தனைப்பண்டம்.

நேர்த்திக்குறிப்பு- தவறுமை, வழுவாமை.

நேர்நஞ்சு - கல்மதம், நல்நாதம், கல்லுருவி.

நேர்நிதானம் - சரிநிதானம், சரிசமம்.

நேர்நிறை - கற்பு, சரிபாரம், நீதி, நியமம்.

நேர்நிற்றல்-ஒழுங்காய்நிற்றல்,எதிர்நிற்றல்.

நேர்நெட்டி - நேர்நீர்ச்சுண்டி, ஓர் பூடு.

நேர்ந்தபடி } முறையின்றி, எதிரிட்டபடி,
நேர்ந்தபாடு } இஷ்டப்படி, முன்யோசனை
நேர்ந்தபார் } யின்றி.

நேர்ந்தபோக்கு - முரட்டுப் பிடிவாதம்.

நேர்ந்தது - ஒத்தது.

நேர்ந்தார்-நிகேதர், நட்பினர். [கட்டுதல்.

நேர்ந்துகட்டுதல்- பிரார்த்தனைக்குக் காப்புக்

நேர்ந்துகொடுத்தல் - கொடுக்க நியமித்தல்.

நேர்ந்துபோதல் } இளைத்துப்போதல்,மெலி
நேந்துபோதல் } ந்துபோதல்,சம்பவித்தல்.

நேர்பசை- நேர்கீழ்குற்றுகர முற்றுகரம் ஒரு சொல் விழுக்காடுபட வி சை த் து வருவது.

நேர்படுதல் - இணங்குதல், சந்தித்தல்,சம்ம தித்தல், நிகழ்ந்தல், வாய்த்தல்.

நேர்பண்ணுதல்-நேராக்குதல்,சத்தியம்பண் ணுதல், சமனாக்குதல், ஒழுங்குபடுத்துதல்.

நேர்பவர் - ஒப்பவர்.

நேர்பாடு - நீலம், சம்மதி, நினையாமல் வரு வது, நீளம், தற்செயலான நிகழ்ச்சி.

நேர்பாடுசெறிபாடு - சொற்படி வாய்ப்பு, நினைத்திராத காலத்துவந்து நிகழ்வது.

நேர்பு- எழுச்சி, ஒன்றிப்பு, நீளம், சந்திப்பு.

நேர்போதல்- இணங்குதல், குணமாதல், சரி போதல், சமாதானமாதல், ஒன்றல்.
நேர்ப்பிசின் - ஓர் பூடு, அரத்தைவகை.
நேர்ப்பு - நேர்த்தி, சிறந்தது, தகுந்தது.
நேர்முகம் - எதிர்முகம், பகிரங்கமுகம்.
நேர்மை - இணக்கம், செவ்வை, நிதானம், கண்ணிலை, துண்மை, நீதி, அறம், திருத்தம்
நேர்மையம் - சரிநடு, சரிபாதி, சமத்துவம்.
நேர்ம்புணை - நொய்யபுணை.
நேர்வழி - நல்லொழுக்கம், நேர்பாதை.
நேர்வளம் - செவ்வழியாழ்த்திறம், பாலையாழ்த்திறம், வேய்ங்குழல், மூங்கிற்குழல்.
நேர்வடம் - முத்துவடம்.
நேர்வது - உடன்பாடு, நேர்தல்.
நேர்வளை - ஒத்தவளை, நிகரமைந்தவளை.
நேர்வனர் - உடன்படுவோர், நேர்ந்துகொடுப்பவர்.
நேர்வாய்க்கட்டளை - எதிரெதிராயமைந்த சாளரம்.
நேர்வாளம் - நேபாளங்கொட்டை. [திரம்.
நேர்வான் - சித்திரைநாள், சித்திரைநட்சத்
நேர்வு - உடன்பாடு, எதிர்தல், கூடுதல், கொடை, சம்பவிப்பு, சருவுதல், பொருதல்.
நேளி - தாமரை, அம்போருகம், வனசம்
நேற்றி-நேர்த்தி, செவ்வை, செம்மை, நல்லது.
நேற்று - முன்னாள், இன்றைக்குமுன்னாள்.
நேனம் - இறுக்குத்தனம், பைத்தியம்.

நை

நை- இகழ்ச்சிக்குறிப்பு, கேலி, ஓரெழுத்து, நையென்னேவல், தெரிநிலைவினைப்பகுதி.
நைகரம் - துன்பம், வருத்தம், நெருக்கம்.
நைகொதி- நசிகொதி, உணவு பாகப்பழுது.
நைக்கல்-நைக்கை, நைக்காதே, வருத்துதல். அலட்டல்.
நைக்காட்டுதல் - நையாண்டிபண்ணல்.
நைக்கை - நைத்தல், சுடுதல்.
நைசர்க்கிகம் - சுபாவம்.
நைசல் - வியாதி, நோய், பிணி, நைவு.
நைசிகம் / நைசியம் } காக்கை, நாசியிற் புகுத்து மருந்து, நாசிகாரூரணம்.
நைச்சி - நைவு, மெலிவு, காகம், பாம்பு.
நைச்சிகம் / நைச்சியம் } தாழ்வு, தன்வயப் படுத்து கை. [கூறுகை.
நைச்சியானுசந்தானம்- தன்னைத் தாழ்த்திக்
நைஞ்சாகதி - பல்குனி.
நைஷதம் / நைடதம் } தமிழிலும்வட மொழியிலுமுள்ள ஓர் பிரபந்தம், நிடதம்.
நைட்டிகன் - நெட்டைக்காரன், பிரமசாரி.
நைட்டீரியம்- நிட்டேரம், அபாண்டம், கற்பனை.
நைதல் - இரங்கல், கெடுதல், தளர்தல், துக்கித்தல், துன்புறல், நசிதல், வதங்கல், வருந்தல், வாடல், நோதல், மெலிதல்.
நைதிகை - முல்லை, ஊசிமல்லிகை.
நைதெனல்-இரக்கக்குறி, மெலிவின்குறிப்பு.
நைத்தல் - கெடுத்தல், தளர்த்தல், துக்கப்படுத்தல், நசித்தல், வாட்டல், தின்னல்.
நைத்திகம் / நைத்தியம் } நித்தியம், நித்தியராதனை.
நைநையல்-சூழ்ந்தை விடாது அழுகைக் குறிப்பு.
நைந்திகை - நைதிகை, முல்லை.
நைபடல் - நசிபடல், நெருக்குறல்.
நைபத்தியம் - வேஷம்.
நைபாலி-நைபாளி, அடுக்குமல்லிகை, சிவந்த பாஷாணம், சீர்பந்த பாஷாணம், நீலம்.
நைபாலிகம் - தாமிரம், பித்தளை, ஊரகூடம்.
நைபாளி - அடுக்குமல்லிகை, நீலம்.
நைபுணம்-நிபுணத்துவம், சமர்த்து, வல்லமை.
நைபுணன்- நிபுணன், சமர்த்தன். [தனம்.
நைபுண்ணியம் - நிபுணத்துவம், கெட்டித்
நைமிசம் / நைமிசாரணியம் } கோமதி நதிதீரத்தை யடுத்துள்ள ஓர்வனம், தவசிகளுக்கு வாச யோக்கியமானவிடம். வடநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
நைமித்திகம் - நிமித்தம், விசேடாராதனை.
நைமித்திகதானம் - நிமித்தத்தாற் செய்யும் தானம், கத்துருத்துவவேதுவானதானம்.
நைமித்தியம்-நைமித்திகம், விசேஷஉற்சவம்
நைமியத்தியம் - நியதத்துவம், நியத்துவம்.
நைமியம்- மரீசி, அத்திரி, பிருகு, வசிஷ்டன், கிருது, அங்கிரசன் என்பவர்களின்வமிசத் தவர்கள் தவஞ்செய்த அரணியம்.
நையம் -நையியம், காகம், ஆகாயத்தோட்டி.
நையம்பாடுதல் - பல்லைக்காட்டிக் கெஞ்சல்.
நையல் - நோதல், கசங்குதல், வருந்துதல், கிரந்திவியாதி, துன்பம், மெலிவு, வருரி, வருந்தவேண்டாம்.
நையா - வருந்தாமல்வருந்தி, வருத்தாத. வருந்த மாட்டா.
நையாண்டி - இகழ்ச்சி, பரிகாசம், கேலி.
நையாண்டிப்புலவர்- இவர்ஓர்தமிழ்ப்புலவர்.
நையாயிகம்-ஞானத்தைப்போதிக்கும்மதம், ஒரு தர்க்கநூல், நியாய சாஸ்திரம்.
நையாயிகர் - கௌதமர், கணாதமத வாதிகள்

இவர்கள்: சித்துஞ்சடமுமாகிய இரண்டுமே நித்தியப் பொருள்களென்பார்கள். சடமாகிய இவ்வுலகம் பீஜத்தினின்றும் தோற்றுவிக்கப்பட்டதென்றும், தோற்றுவிப்பது சித்துப்பொருளென்றும், தோன்றும்போது பீஜம் எகாணுவாய்ப் பின்பு த்வயாணுவாய்ப்பின்புத்ரயாணுவாய்வடிவடைப் பொருளாகுமென்றும் ஒடுங்கும் போதும் அவ்வாறே யொடுங்கிச் சென்று, பீஜமாய் நிற்குமென்றும், அந் நிலையில் அது நித்தியமென்றும், வடிவுடையதாய் நிற்குங்காலக்கண் அழியுமியல்பிற் றென்றும், சித்தின்றிச் சடம் காரியப்படாதென்றும், ஆன்மகோடிகளெல்லாம் சகத்காரணமாகிய சித்துப் பொருளின் அமிசங்களேயாமென்றும், அமிசங்களாதலால் சிற்றறிவும், சிறு தொழிலுமுடையனவென்றும் சகத்காரணமாகிய சித்து முழுமுதலாதலால் முற்றறிவும், முற்றுத் தொழிலுமுடையதென்றும், ஆன்மாக்கள் சரீரத்தோடு கூடியிருக்கும்போது அஞ்ஞானமுடையதாயிருக்குமென்றும், இடையறாத முயற்சியால் ஞானத்தையடைந்தவிடத்து அவ்வான்மாக்கள் முழுமுதலோடு சேர்ந்து பேரானந்தத்தையநுபவிக்குமென்று கூறுவார்கள். இவையே நையாயிகமதக் கொள்கைகள்.

நையாயிகன் - நியாயசாத்திரி, நையாயிகமதானுசாரி, தருமமறிந்தோன்.
நைராந்தரியம் - இறுக்கம், பிசிறறித்தன்மை.
நைராக்கியம்-பரிகாசம், கேலி, விகடம் [மை.
நைராசியம் - ஆசையின்மை, நம்பிக்கையின்
நைருதி - நிருதி, தென்மேற்குத்திசை.
நைருதம்-பகலில்பன்னிரண்டாம்முகூர்த்தம்
நைர்க்குண்ணியம் - நிற்குணம், குணநீதம்.
நைர்மல்லியம் - சுத்தம், மாசின்மை.
நைலம் - கடற்பாசி, மருந்து. [தல்.
நைவரல் - இளைத்தல், மெலிதரல், வருந்து
நைவளம்-குறிஞ்சியாழ்த்திறம், நட்டபாடை, நட்டம், நட்டராகம்.
நைவணம் - நடனம், வீரத்தன்மை.
நைவு - நைதல், நோய், வருத்துகை.
நைவேதனம் - நிவேதனம், ஒப்புவித்தல்.
நைவேத்தியம் - கடவுளுக்கிடும் காணிக்கை, தேவர்க்குச் சமர்ப்பிக்கும் பதார்த்தம்.
நைஷதம் - ஸம்ஸ்கிருதத்தில் பஞ்சகாவியங்களுள் ஒன்று. இது ஸ்ரீ ஹர்ஷன் என்னு மஹாகவியால் செய்யப்பட்டது. நிஷத தேசத்தரசனிய நளமஹாராஜன் சரித்தைச் சொல்லுதலால் இந்தக்காவியத்துக்கு நைஷதம் என்று பெயராயிற்று. இது தமிழில் புகழேந்திப் புலவரால் வெண்பாக்களாலும், அதிவீரராம பாண்டியனால் விருத்தங்களாலும் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கிவருகின்றது. அன்றியும், இது கலித்துறையாலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது; மொழிபெயர்த்தவர் பெயர் முதலியவை நன்கு புலப்படவில்லை. இந்நூலில் இரண்டொரு செய்யுட்களேயன்றி நூல்முழுவதும் காணப்படவில்லை; இதில் முதற்காப்புச் செய்யுள் இங்குத்தருவாம். "தழைவிரி கொன்றைத் தனிமுதலோன்செஞ் சடையில் வைத்த, குழவி வெண் டிங்களே யிற்றைங் கோட்டின் குறையீ தென்னப் புழைநெடுங் கையாற் பற்றிப் பொற்புற நோக்கி நிற்கும், மழை மத யானை முகத்தோ னிருசரண் வாழ்த்து வேனே".

நொ

நொ - ஓரெழுத்து, துன்பம், நொவ்வென் னேவல், நோய், வருத்தம், நொய்ம்மை.
நொக்கு - வெடிப்பு, அடிப்பு, நொருக்கு.
நொக்குதல் - அடித்தல், நொருக்குதல். நொக்கிவிடுதல், உண்டுகுறைத்தல், நிழற்றல், அழித்தல்.
நொங்காங்குலை - காய்விழுந்த பனங்குலை.
நொங்கு - நுங்கு, பனையினிளங்காய்.
நொசி-மெல்லியது, இலேசானது, வளவு.
நொசிதல், நொசிவு - துவளல், நுண்மையாதல், வருந்தல், வாடல், நைதல், துவள்வு, நுண்மை, வருத்தம், கவலை.
நொசித்தல் - வருத்துதல்.
நொசிப்பு - அடக்கம், சமாதி, மனத்தினை ஒருவழிச் செலுத்துதல்.
நொச்சி-ஓர்செடி; அஃது: அட்டாதசமூலத்தொன்று, சிற்றூர், மதில், வீரர்மாலை. ஒருதினை, ஒருதுறை, மதில்காவல்.
நொச்சிநியமங்கிழார்- புறநானூற்றினுள்ளே ஒரு பாடல் பாடிய புலவர். [புலவர்.
நொச்சிநியமங்கிழார்மகனார்-இவர் ஓர் சங்கப்
நொச்சிமாலை-ஓர்பிரபந்தம்; அஃது: மாற்றூர்க்கெதிரூன்றி, நொச்சிப்பூமாலைசூடித் தம் மதில்காக்குந் திறங்கூறுவது. மாற்றூர்க்கெதிரூன்றித் தம்மதில் காப்போர்க்கு

வீரந்தோன்ற அணிவதோர் மாலை

நொடி-கணப்பொழுது, கைந்நொடி, சொல், நொடியென்னேவல், பள்ளம், விடுகதை, பிதிர், செய்யுள், வண்டிப்பாதையின்குழி, பொய், ஒலி, பரிகாசப்பேச்சு, பொய் சொல்லுதல்.

நொடிக்கதை - விளுமொழி, விடுகதை.

நொடிச்சொல்-குற்றங்கூறல், குறைகூறல்.

நொடிதல் - சொல்லல், விடுகதைகூறல்.

நொடித்தல்-அழித்தல், கையால் நொடிக்குதல், சொல்லல், பால்சுரத்தல், பழித்தல்.

நொடித்தான்மலை-கைலாயமலை. [படல்.

நொடித்துப்போதல்-நிலைகுன்றுதல், நட்டப்

நொடிபாராட்டுதல் - விடுகதைசொல்லல்.

நொடிபோக்குதல்-பொய் பரப்புதல், நொடி போக்கல்.

நொடிப்பு - நொடித்தல், கணப்பொழுது.

நொடிவிடல்-வெடித்தல் தாவித்தாவிச்செல்லல், தத்தித்தத்திச்செல்லுதல்.

நொடியவிழ்த்தல் - விடுகதைவிளக்குதல்.

நொடு - விலைகூறு.

நொடுத்தல் - விலைகூறல், விற்றல்.

நொடுநொடுக்கெனல்-ஒலிக்குறிப்பு, விரைவுக் குறிப்பு, சினக்குறிப்பு.

நொடுநொடுத்தல் - துடிப்பாய் நடத்தல், பரபரத்தல், முணுமுணுத்தல்.

நொடுநொடுப்பு-துடிப்பு, பரபரப்பு.

நொடுநொடெனல் - நொடு நொடுத்தல்.

நொடுத்து - விற்று.

நொடை-விலை,விற்றல்,வீக்கிரயஞ்செய்தல், பலபண்டம்.

நொட்டாங்கை - இடதுகரம், இடதுகை.

நொட்டை, நொட்டைச்சொல் } நொண்மை, சரசம், குறைச்சொல், குற்றிச் சொல்.

நொண்டல் - நொண்டுதல், முகத்தல், விழுங்கல்.

நொண்டி - கான்முடவன், பொய்க்கால், நொண்டு, முகந்து.

நொண்டிச்சிந்து - நொண்டி நாடகம். ஓர் வகைப்பாடல்.

நொண்டிநாடகம்-கவ்வலெருவன் படையிலுள்ள குதிரையொன்றைத்திருடமுயலுகையில் கால்தறியுண்டு பின் நல்வழிபெற்ற செய்தியைச் சிந்துச் செய்யுளாற் புனைந்துகூறும் நாடகநூல்.

நொண்டு - முகந்துகொண்டு. [தல்.

நொண்டுதல் - கால்முடப்பட்டுக் குந்திநடத்

நொதி-நொதியென்னேவல், பெருஞ்சேறு.

நொதித்தல், நொப்பு } -ஊறல், கொப்புளித்தல், சீக்கட்டல், துரைத்தெழும்பல்.

நொதுக்கல்-நொதுப்புன்னது, இளக்கமுறல்.

நொதுத்தல்-அவித்தல், தணித்தல், வதக்கல்.

நொதுநொதுத்தல், நொதுநொதுப்பு, நொதுநொதெனல் } -இளக்கக்குறிப்பு, குழைதல்.

நொதுப்பு - இளக்கம், தணிவு, துகைவு.

நொதுமலர்-அயலோர், அன்னியர்.

நொதுமலாளர்-குறளை கூறுவோர். [மை.

நொதுமல்-அயல், நொய்ம்மை, பற்றுதலின்

நொதுமற்கிளவி - குறளைப்பேச்சு, அனியாயமான வார்த்தை, வேறொருவன் மல்லாத்த வருகிறான் என்றபேச்சு.

நொத்தல்-நொப்புக்கட்டுதல், வருத்துதல்.

நொத்து - நொப்பு, ஆட்டுமடிச்சுற்றோலை.

நொந்தகைமை, நொந்தலை, நொந்தலைமை } -நோ, பலவீனம்,வறுமை.

நொந்தசாதம் - பதனழிந்த சோறு.

நொந்தநோயர்-நோயால் நொந்தவர். [வர்.

நொந்தார்-வருந்தினர், பகைவர், வருந்தின

நொந்து - வருந்தி, இளைத்து.

நொப்பு - ஆட்டின் மூலையிற் சுற்றிய ஓலை, தடை, வெள்ளத்தில் வரும் செத்தை கூளங்கள்.

நொய்-இலேசு, உடையுந்தன்மை, குறுநல், மிருதுத்துவம், மென்மை, இழிவானது.

நொய்சு-நொய்மை,மிருதுத்துவம்,மென்மை.

நொய்தல் - நுண்மை, அற்பம், இலேசு.

நொய்தாக, நொய்தின் } மெல்லிதாக, விரைவாக, கடிதின், அற்பமானதினும்.

நொய்து-மிருது, மெல்லிசு, விரைவு, நொய்யது, அற்பமானது.

நொய்தெனல் - மெதுமெதுத்தல், இலேசாயிருத்தல், விரைவின் குறிப்பு.

நொய்ந்நுரை - மெல்லியநுரை.

நொய்பாடியார் - ஓர்சங்கப்புலவர்.

நொய்ம்மை-உருக்கம், எண்வகையுறிஞ்னென்று, எளிமை,கேடு,தளர்வு,நொய்வு,மிருது, மென்மை, வறுமை, இழிவு, ஏழமை.

நொய்ய - அற்பமான, அற்பமானவை.

நொய்யசொல்-எளியசொல், வசைச்சொல்.

நொய்யரிசி - குறுநல், குறுணை, குறுநொய்.

நொய்யர் - பலமற்றவர், உறுதியற்றவர், அற்பமானவர்.

நொய்யவன்-எளியவன், பலவீனன், வறியவன், வெஞ்சாற்பொறுதவன்.

நொய்யர் - அற்பர், ஒய்யார்.

நொய்யெனல் - நுண்மைக்குறிப்பு.
நொய்வித்தின் - விரைவாக.
நொய்வு - இலகு, நொய்ம்மை, அற்பம்.
நொவ்வியார் - கீழ் மக்கள்.
நொவ்வு - விரைவு.
நொரு-நுரு, காய்ப்புமாறின பின்னரும்புபூம் பிஞ்சு, பயிரினடியில் முளைப்பது.
நொருகை - தின்பண்டம், சிறுதீனி.
நொருக்காரிசி - உக்கலரிசி, முட்டரிசி.
நொருக்கல் - நொருங்கப்பட்டது.
நொருக்காய் - நுருவிற்காய், முளைக்காய்.
நொருக்கு - அடி, நெரிவு, சிதைவு, தகர்வு, உடைவு, நொருக்கென்னேவல், முரிவு.
நொருக்குதல் - அடித்தல், நருக்குதல், தகர்த்தல்.
நொருங்குதல்-நருங்கல், முரிதல், சிதைதல்.
நொருநொருத்தல் / நொருநொருப்பு / நொருநொரெனல் } ஈரடுக்கொலிக்குறிப்பு.
நொருவல்-நொருகை, நொருங்குண்டதுள்.
நொருவெடித்தல் - பயிர்கள் கப்பித்தல்.
நொலை / நொலையல் } அப்பவருக்கம், நொளையல்.
நொவ்வு-தளர்வு, நொய்ம்மை, சிதைவு, நோவு, நொவ்வென்னேவல், நோ, வருத்தம்.
நொவ்வுதல் - நொய்தாதல், வருந்துதல்.
நொழுந்துதல் - நுழைத்தல், உட்புகுத்தல்.
நொளநொளத்தல் - நொளுநொளுத்தல், குழைவு.
நொளம்பர்-பல்லவர் வகையினர். [முதல்.
நொளையல் - அப்பவர்க்கம்.
நொளுக்கல் - இளம்பாகு, பிஞ்சுப்பாக்கு.
நொளுநொளுத்தல் / நொளுநொளுப்பு / நொளுநொளெனல் } நொளநொளத்தல், குழைவு.
நொளுவல் - நொளுக்கல், பிஞ்சுப்பாக்கு.
நொள்கல் / நொள்குதல் } அச்சக்குறிப்பு, ஞொள்கல், முகத்தல், சுருங்குதல்.
நொள்ளல்-குருடு, கொசுகு, நுளம்பு, முகத்த
நொள்ளாப்பு-குரோதம், மனஸ்தாபம். [ல்.
நொள்ளுதல் - நொள்குதல், விளுங்குதல்.
நொள்ளை-குருடு, நாகரவண்டு, பொன்வண்டு.
நொள்ளையினத்தை - நத்தையினத்தொரு பூச்சி.
நொள்ளைப்பயல்-அற்பன், தாமில்லாதவன்.
நொள்ளைமடையன் - பலபடியான கொக்கு வகை.
நொறிதல் / நொறில் } விரைவு, அவசரம், துரிதம், அடக்கம், சீக்கிரம்.
நொறுக்காரிசி - நொறுங்கிய அரிசி, பாதி வெந்த சோறு. [தல்.
நொறுக்கல் - நன்றாயடித்தல், நையப்புடைத்
நொறுக்கு - அடிக்கை, நருக்கு, சிதைவு, உடைவு.
நொறுக்குச்சக்கத்தம்-பரிகாசம், நிந்தனை.
நொறுக்குதல்-நருக்குதல், பொடியாக்கல்.
நொறுக்குநொருக்கெனல் - ஈரடுக் கொலிக் குறிப்பு, அடுக்குத்தொடரொலிக்குறிப்பு.
நொறுங்கல்-நொறுங்குதல், நொறுங்கினது, தகர்ந்தது, சிதைந்தது, உடைந்தது.
நொறுங்கு-குறுநல், நொய்மை, குறுநொய், குறுணை, நொறுங்கென்னேவல்.
நொறுங்குதல்-நருங்குதல், நொய்தாதல்.
நொறுநாட்டியம்-அற்பக்குற்றங்கள் காணுந் தன்மை, நோண்டுவட்டம்.
நொறுவை / நொற்பம் / நொற்பன் } நொய்து, சிற்றுண்டி.
நொன்றி - மான், சாரங்கம், அரிணம்.
நொன்னை - சரசம், பரிகாசம், நையாண்டி.
நொஷ்டு - குறைகூறுகை, குற்றச்சாட்டு.

நோ

நோ-இன்மை, ஒருழைத்து, சிதைவு, துக்கம், துன்பம், கவல், நோவென்னேவல், பலவீனம், வியாதி, வலி, நோய், நோக்காடு.
நோகு - நோவேன்.
நோக்கம் - கருத்து, அருமை, அழகு, உயர்ச்சி, எண்ணம், கண், காவல், புண்மை, தோற்றம், பார்வை, விருப்பம், அறிவு.
நோக்கர்-கழைக்கூத்தர், கம்பங்கூத்தர்.
நோக்கல் - காணல், காத்தல்.
நோக்கலோக்கம் - ஆழியகருத்து, குறிப்பறியுந்தன்மை, குறிப்பற்ற பார்வை, பொது நோக்கிய மனக்கோளுடன் பார்க்கும் பார்வை, பாராது பார்த்தல்.
நோக்காடு-தரித்திரம், நோ, பிரசுதிநோ.
நோக்கி-பார்த்து, கண்ணையுடையவன்.
நோக்கு-அழகு, எண்ணம், கண், ஓரகநிலைகளி னேழாமிடம், தயவு, அறிவு, அறிந்து மறியாதுபோலிருத்தல், நோக்கென்னேவல், பார்வை, விருப்பம், விஞ்ஞைக்கூத்து, ஓர் அணி, செய்யுளினோர் உறுப்பு, குறிப்பு.
நோக்குதல்-கடாட்சித்தல், காத்தல், தயவு செய்தல், பார்த்தல், விரும்புதல்.

நோக்குவித்தை-ஓர் தந்திரவித்தை.
நோசல்-நோவு, சிதைவு, மெலிவு, தளர்வு.
நோஞ்சல்-மெலிதல், தேய்தல், குறைதல்.
நோஞ்சி - மெலிந்தவன், சத்தற்றவன்.
நோடாலம் - நூதனம், நொன்னே.
நோட்டம்-கண்மதிப்பு, கண்திட்டம், விலே, நிதானம், தகுதி. [பார்த்தல்.
நோட்டம்பார்த்தல் - தகுதியறிதல், விலே
நோட்டம்பேசுதல் - பிறரைத் தன் பேச்சுக் குட்படுத்தும்படியான விதத்திற் பேசல்.
நோணுவட்டம் - நொருநாட்டியம், அற்பக் குற்றங்கள் காணுந்தன்மை.
நோண்டல் } உரித்தல், கிண்டல், கிள்ளு
நோண்டுதல் } தல், தோண்டல், முகத்தல், துருவிவிசாரித்தல், குடைதல். [வு.
நோதலே-தரித்திரம், நோ, மெலிவு, சிதை
நோதல்-கேடு, தின்புறல், நோயுறல், பெல வீனம், மரத்தின்சதா, வறுமை.
நோப்படுதல் - காயப்படல், விதனப்படுதல்.
நோப்பாளம் - குரோதம், மனஸ்தாபம்.
நோம்பு - நோன்பு, விரதம், தவம், சமம்.
நோம்புதல் - தூணுவுதல், கொழித்தல்.
நோம்புக்கயிறு - காப்புநாண், இரட்சாபந்தனம்.
நோயணுகாவிதி - தருமசௌமியர் மாணுக்க ராகிய தேரையர்செய்த ஆரோக்கியநூல்.
நோயமூகன் - வியாதியஸ்தன், பிணியாளி, சனி.
நோயர் - பிணியாளர்.
நோயாளி - வியாதிக்காரன், பிணியாளன்.
நோயான் } நோயாளி, பிணிபட்டவன், நோ
நோயார் } யாளன், பிணியாளி.
நோயின்மை-வியாதியின்மை, பிணியின்மை, நாட்டுப்பெருமை யாறுவகையிலுன்று.
நோய் - துன்பம், வருத்தம், இம்மை: மாய யாக்கைப் பதினெண் குற்றத்தொன்று, அச்சம், நோவு தருவது.
நோய்கூர்தல் - துன்பமிகல், பிணி மிகல், வருந்துதல்.
நோய்கொள்ளல் } வருந்துதல், வருத்தம
நோய்கொள்ளுதல் } டைதல், வியாதிகொ ள்ளுதல்.
நோய்ச்சல் - நோய்கொள்ளல். [வன்.
நோய்ஞ்சலன் - மெலிந்தவன், சீத்துவமற்ற
நோய்ஞ்சல் - நோஞ்சி, நோய், எலும்புருக்கி.
நோய்ஞ்சி - வியாதிகொண்டுமெலிந்தது.
நோய்ஞ்சியன் - நோய்ஞ்சலன், மெலிவாளி.
நோய்த்தல் - நோய்ச்சல், நோய்கொள்ளல்.
நோய்மருந்து - நோய்க்கு மருந்து, நோய்தீர் மருந்து, நோயும் மருந்துகளும்.
நோய்முகன் - நோயாளி, நோய்முகன்.
நோய்முதல் - நோயின் காரணம்.
நோலல் - நோற்றல், நோன்பிருத்தல்.
நோலாதார் - நேமநிட்டை விதிப்படி நடவாதார், தவமில்லார், பொறுமையுள்ளோர், தவமாற்றுதவர்,புண்ணியஞ்செய்யாதவர்.
நோலாமை - தவமின்மை, பொறுமை. [ல்.
நோலுதல் - நோற்றல், பொறுத்தல், சகித்த
நோலோர் - நோலாதார், தவமிலாதார்.
நோலை - எள்ளுருண்டை, எண்ணுண்டை.
நோல் - தவமியற்று, நோலென்னேவல்.
நோவல் - அப்பம், அடை, சிற்றுண்டி, வருந்துவேன், நோவேன்.
நோவாளி - நோவுள்ளான், பிடியன்.
நோவித்தல் - வருந்துதல்.
நோவு - நோய், மஞ்சள், மெலிவு, வருத்தம், பிரசவவேதனை.
நோழிகை - நூற்பந்து, நெசவுநூலின் தாறு.
நோனாமை - தவமின்மை, பொறுமை.
நோனே - பிணியுண்ட நிலே.
நோற்பு - தவம், பொறுத்தல், விரதம்.
நோற்றபயன் - தவத்தின் பலன், நோற்றதால் வந்த பயன்.
நோற்றபாவை - நோன்பாற்றிய பெண், புண்ணியஞ் செய்பவள்.
நோற்றல் - தவஞ்செய்தல், பொறுத்தல்.
நோற்றவர் - தவஞ்செய்தோர், பாக்கியசாலிகள், புண்ணியஞ்செய்தோர்.
நோற்றும் - நோன்பு மேற்கொள்வோம், விரதமனுஷ்டிப்போம்.
நோற்றோர் - நோன்பாற்றியவர்.
நோன்மை - தவமின்மை, பொறுமை.
நோன்றோர்-தவமில்லார், பொறுமையுள்ளோர்.
நோன்றன் - பொறுன்.
நோன்றல் - தவஞ்செய்தல், நிலைநிறுத்தல், பொறுத்தல், விரதமனுட்டித்தல்.
நோன்நிலே - வலியநிலே.
நோன்றாண்வினைஞர் - தூண்டில் வேட்டுவர், மீன் பிடிப்பவர்.
நோன்பி - தவத்தி, விரதமுடையாள்.
நோன்பு-நோம்பு, உபவாசம், தவம், விரதம்.
நோன்புணே - வலியதெப்பம், பேராதாவு.
நோன்புதறத்தல் } பாரணைபண்ணல்,
நோன்புவிடுதல் } பாரணை.
நோன்மை - தவம், பெருமை, பொறுமை, வலி.
நோன்மையவர் - வலியவர், வலிபுடையோர்.
நோன்றல் - தள்ளல், நிலைநிறுத்தல், பொ

றுத்தல். [கால்.
நோன்ருள் - புனிதபாதம், திருவடி, வலிய

நௌ

நௌ - மரக்கலம், நீர்மாடம், தோணி.
நௌகரி - வேலை, உழைப்பு.
நௌகர் - வேலைக்காரர்கள், பணியாளர்.
நௌகாதானம் - இறந்தவர்களைக் குறித்து பதினேராநாள் கரும்பாற் செய்த படகைத் தானஞ்செய்வது.
நௌவி - மான், குரங்கம், மறி, பிணை.

ப

ப - இருபதிலோர் பாகத்தைக்காட்டும் ஓர் கீழ்வாயிலக்கக்குறி, ஓரெழுத்து, காற்று, சாபம், பெருங்காற்று, எதிர்காலவிடைநிலை, குடித்தல், காவல் காத்தல்.
பஃதி - பகுதி, பங்கு, முதனிலைச்சொல்.
பஃது - பத்து, ஒருபது, ஒருபஃது.
பஃறளகவு - பலதையல்.
பஃறூரம் - பலசரக்கு, பல மனைவி.
பஃறூழிசைக்கொச்சகக்கலிப்பா - பலதாழிசைகளோடு மற்றையுறுப்புக்களையும் பெற்று மூறையே தனிச்சொல் வருவது.
பஃறி-இரேபதி, ஓடம், மரக்கலம், தோணி.
பஃறிக்கு - பலதிசை.
பஃறியர் - நெய்தனிலமாக்கள், பரதவர்.
பஃறுளியாறு - குமரியாற்றுக்குத் தெற்கிலோடிய வோர் புராதன நன்னீராறு.
பஃறொடைவெண்பா - பல விகற்பத்தான் நான்கடியின் மிக்க பலவடிகளைப் பெற்று வருவது.
பக - பிரிய, பிளக்க, பிரியும்படி.
பகசித்து - கண்ணன், வீமன், கதாயுதன்.
பகடக்காரன் - அதட்டி, எத்தன், தந்திரி, வெளிவேஷக்காரன், ஏமாற்றுக்காரர்.
பகடம்-சிலம்பம், தந்திரம், வெருட்டு, வெளிவேடம், மாறுபாடு, தில்லுமுல்லு.
பகடி - அகசியக்காரன், கூத்தாடி, விகடம்.
பகடு - ஆனை, எருமை, பசு இவற்றினுண், ஓடம், தெப்பம், பெருமை, பொதியெருது, சந்து.
பகடை - விகடம், இடம்பம், அதிட்டம், சதுரிலிச்சாதி, சூதுதாயங்களினொன்று.
பகடைதப்புதல் - ஆபத்தின் நெருக்கத்தில் தப்பித்துக்கொள்ளல்.
பகடையடித்தல்-இடம்பவார்த்தைபேசுதல்.
பகட்டு - அதட்டு, இறுமாப்பு, தந்திரம், பகட்டென்னேவல், பார்வை, பிரகாசம், மயக்கம், மினுக்கம், வெருட்டு, வெளிவேடம்.
பகட்டுதல்-அதட்டுதல், தந்திரம்பண்ணுதல், வெருட்டுதல், வெளிவேஷங் காட்டுதல், மயக்குதல், வஞ்சித்தல், ஏமாற்றுதல்.
பகண்டை - சிவற்பட்சி, கவுதாரி வகை.
பகதத்தன் - நரகாசுரனுடைய மூத்தமகன்.
பகநிசூதநன் - கண்ணன், வீமன், கதாயுதன்.
பகந்தரம் - பவுந்திரம், ஓர்குதநோய்.
பகந்திரம் - நூலடியிற்கட்டு, நூலடிமுடிப்பு.
பகபகெனல் - வேகக் குறிப்பு, விரைவுக்குறிப்பு.
பகம் - அவாவின்மை, ஈச்சுரத்தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியமென்னு மறுகுணம், அழகு, காக்கட்டான் கொடி, காந்தி, கொக்கு, பெண்குறி, மகத்துவம்.
பகரம் - அலங்காரம், ஓரெழுத்து, மினுக்கம்.
பகரி - ஆவிரை, ஆவரை, ஆவாரை.
பகரிப்பு - மினுக்கு, அலங்காரம், பகட்டு.
பகர் - பகரென்னேவல், பங்கம்பாளை.
பகர்குரல் - சத்தம்.
பகர்குழல் - சுருதியையுணர்த்துங் குழல்.
பகர்ச்சி - சொல், வார்த்தை, வாக்கியம்.
பகர்தல், பகர்வு } கூறல், சொல்லல், விற்றல்.
பகர்வனர், பகர்வர், பகர்விலைமாந்தர் } பகர்வார், கொள்பவர், விற்பவர், சொல்வர், பண்டம் விற்கும் வணிகர், விலைகூறி விற்பவர், தெருவில் விலைகூறி விற்பவர், வணிகர்.
பகலங்காடி - பகற்கடை.
பகலடி - சிங்கியடிக்கை, ஓர் விளையாட்டு.
பகலவன் - பகலோன், சூரியன், பரணிநாள்
பகலிடம் - பகல், பகலில்.
பகலோன் - சூரியன், தினகரன், பகலவன்.
பகல் - ஒளி, சூரியன், தினம், நடு, பகற்காலம், பகுதல், பிரிதல், பிளத்தல், மதியாணி, மத்தியானம், முகூர்த்தம், கமுக்கட்டு, வெளி, பிரிவு, உறி, கூடாமை.
பகல்மானம் - பகலுழிகை, பகல்நேரம்.
பகல்வேட்டி - மரியாதையாகப் பெரியோர்கள் முன் கொண்டுபோகப்படும் தீப்பந்தம், வெளிவேஷம்.
பகல்வத்தி - நான்வத்தி, ஓர்வினைதவிளக்கு.

பகல்வாயில் - வெயில்காலிடம், பகல் தோற்றுகிறவழி, கீழ்த்திசை, கீழ்த்திக்கு.

பகல்விளக்கு - ஒளியற்ற பொருள், பகற்பீவட்டி, வேண்டாச்செயல், பகல்போல் விளக்கமானது. [ன்.

பகல்வெளிச்சக்காரன் - போலிநடிப்புக்காரன்

பகல்வெள்ளிகாட்டுதல் - இன்மைப் பொருடருமோருவமைக் குறிப்பு.

பகல்வேஷம் - பகற்காலத்திருமாற்றல்.

பகலதி - தருமதேவதை, துர்க்கை, பார்வதி.

பகவதிநாள் - பூரநாள், இடையெழுஞ்சனி.

பகவத்கீதை } ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாரத
பகவற்கீதை } யுத்தத்தில் திருத்தேர்த் தட்டிலிருந்து அர்ஜுனனுக் குபதேசித்த ஞானநூல்; இது: பாரதத்தின் ஒரு பகுதியேயாயினும் தனி நூலாகவே வழங்கப்பட்டு வருகின்றது. இதில் பேரின்பத்துக்குச் சாதனமாகிய நிஷ்காம்ய கர்மமும், ஞானசாதனமாகிய யோகமுமேகூறப்பட்டுள்ளன. வேதாந்தமாகிய உபநிஷத்துக்களின் உண்மைப்பொருளே யுணரும் பக்குவம் இந்தக் கலியுகமாந்தர்க்குக் கைகூடாதென்பது கருதியே, இந்தயுகம் தொடங்குவதற்கு முன்பே, லோக சம்ரக்ஷணார்த்தமாகத் திருவவதாரஞ் செய்தருளின ஸ்ரீகிருஷ்ணபகவான் அவ்வுபநிஷத்ஸாரமாகிய இந்நூலை அர்ஜுனன் நிமித்தமாகச் சர்வான்மாக்களுடைய ஈடேற்றத்தின்பொருட்டு உபகரித்தருளினார்; பலர் பேகைபின்றிக் கர்மங்களைச் செய்துகொண்டும் ஒருவன் ஞானியாயிருக்கலாமென்பதே இந்நூற்றுணிபு. இந்த உபதேச நூலைக் கேட்டிருந்துவெளியிட்டவர்; சஞ்சயமுனிவர்; இந்நூலுக்குச் சங்கராசாரியர் அத்வைத பரமாகவும், ராமானுஜாசாரியர் விசிஷ்டாத்வைத பரமாகவும், மத்வாசாரியர் த்வைத பரமாகவும், பாஷ்யங்கள் செய்திருக்கின்றனர். இந்நூல் பாரதத்தில் ஓர் பகுதியன்றென்றும் பிற்காலத்தில் யாரோசெய்து பாரதத்திற் சேர்த்ததென்றும் கூறும் பிறசமயிகளும் சிலருண்டு; அவர்கூற்று ஆதாரமின்றி எழுந்ததென்று விவேகிகளாயினோர் ஒழித்துவிடுவர்; இந்நூலை ஐரோப்பியபண்டிதர்கள் பலர் புகழ்ந்தும், தமது பாஷையில் மொழிபெயர்த்தும் உச்சிமேற்கொண்டு கொண்டாடுவதே இதன் பெருமைக்குப் பொதியதோர் பெருஞ்சான்றாகும்.

பகவற்பத்தன் - தேவதொண்டன்.

பகவனார் - திருமால்.

பகவன் - அரன், அரி, அருகன், கடவுள், குரு, பிரமன், புத்தன், தலைவன், முதல்வன்.

பகவான் - கடவுள், பிரமன், விஷ்ணு, சூரியன், துவாதசாதித்தரிலொருவன்.

பகவிருக்கம் - நிலக்கடம்பு, சிறுகடம்புமரம்.

பகவு - துண்டு, பங்கு, பிளப்பு, வெடிப்பு.

பகவைரி - கண்ணன், வீமன், கதாயுதன்.

பகழி - அம்பிற்குதை, அம்பு, அத்திரம், பாணம்.

பகழித்திரள் - பற்றாக்கை, கட்டுக்கயிறு.

பகற்கமைந்ததுவர்க்காய் - சனிப்பாக்கு, பகற்போதுக்கேற்ற பாக்கு, கருங்காலிக் கனி கூட்டிச் செய்யப்பட்ட பாக்கு.

பகற்குருடு - கூகை, ஆந்தை, பெரும்புள்.

பகற்குறி-களவுப் புணர்ச்சியிற் பகற்காலஞ் சந்திக்கத்தக்கதாக நியமிக்குமிடம்.

பகற்கொள்ளை-பகலில் கொள்ளையடிப்பது.

பகற்சோறு - பகலுணவு, நாளிரை.

பகற்படை - பகலிற்செல்லும் படை.

பகற்பண்-பகற்காலத்தில் பாடப்படும்பண்.

பகற்பத்து - விட்டுணு தேவாலயங்களில் ஏகாதசிக்குமுன் தமிழ்வேத விரிவுரை நடத்தும் உற்சவம்.

பகற்பாடு - பகற்காலம், ஜீவனவேலை.

பகற்போது - பகற்காலத்தில் மலரும்பூ.

பகற்றூக்கம் - பகல் நித்திரை.

பகன் - (1) பிருந்தாவனத்தில் கஞ்சன் ஏவலால் ஸ்ரீ கண்ணபிராணைக் கொல்ல யத்தனித்துக் கொக்குப்போல் உருவுகொண்டு வந்து அவராற் கொல்லப்பட்ட வொரு ராக்ஷஸன், (2) கங்கன் மூத்தமகன், (3) துவாத சாதித்தருளொருவன், தக்கன் யாகத்தில் வீரபத்திரரால் தண்டிக்கப்பட்ட சூரியன்.

பகன்மாலை - ஊழிமுடிவு.

பகன்றை - கிலுகிலுப்பை, சிவதை, சீந்தில்.

பகா - தூதுவளை.

பகாக்காதல் - பிரியாத அன்பு.

பகாங்குரம்-பெண்யோனியுறுப்பிலொன்று.

பகாசுரன் - ஏகசக்ரபுரத்துப் பிராமணருக்குத் துன்பஞ் செய்துகொண்டிருந்த ஒரு ராக்ஷஸன்; அந்தப் பிராமணர் தத்தம் முறைப்படி தினந்தோறும் ஒரு வண்டி சாதமும், இரண்டு எருமைக்கடாவும், ஒரு பிராமணப்பிள்ளையும் உணவாகக் கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டு கொடுத்துவரு நாளில், அந்த அக்ரகாரத்தில் வீமன் தங்கியிருந்த வீட்டுக்காரன்

முறை வந்தது; சாதத்தை மாத்திரம் வண்டியி லேற்றிக்கொண்டு, வீமன் தானே சென்று, பகனைக் கண்டு சாதம் வந்தது ஒப்புக்கொள்க வென்றான்; சாதத்தோடு எருமைக்கடா முதலாயின வராமை கண்டு அவன் கோபித்து வீமனைச் சாட, அவன் அந்தப் பகனைக் கொன்று மீண்டான்.

பகாசுரவைரி - வீமன், வாயுமைந்தன்.

பகாநிலை - பிரிவுபடாது நிற்கும் நிலை.

பகாப்பதம் - பகுப்பிற் பயன்படாப்பதம்.

பகாப்பொருள் - பகுக்கப்படாத பொருள், கடவுள்.

பகாரம் - பகரம், அழகு. [ள்.

பகாரி-கண்ணன், வீமன், கதாயுதன், பொரு

பகார் - பகர்பவர், விற்பவர், விற்காதவர்.

பகாலம் - கபாலம், மண்டையோடு.

பகாலி - சிவன், கபாலமேந்தி, கபாலி.

பகாளபாத்து-தயிரிற்செய்தசித்திரான்னம்.

பகி - பகலிற் பதினேந்தாம் முகூர்த்தம்.

பகிண்டம் - பிடரி, பிடர், புறங்கழுத்து.

பகிசங்கை-மலங்கழிக்கை, மலம்போக்குகை.

பகிடி - பரிகாசம், விகடம், கையாண்டி.

பகிரங்கம்-மறைப்பின்மை, வெளியரங்கம்[ம்.

பகிரண்டம்-அண்டத்தின் வெளி, பேரண்ட

பகிரதன் - பகீரதன்.

பகிர் - பகிரென்னேவல், பகுப்பு, வெடிப்பு.

பகிர்ச்சி - பகுப்பு, பங்கு, பாகம், வகுப்பு.

பகிர்தல்-பங்கிடல், பிளத்தல், பாகமாக்குதல்.

பகிர்விடல் - பிளவாதல், வேறுதல், பிரிதல்.

பகிறு - செருக்கு, அகங்காரம், மமதை.

பகினி - உடன்பிறந்தாள் பெண், மருமகள்.

பகிஷ்காரம்-நீக்கல், விலக்கல், வெறுத்தல்.

பகீகனநேத்திரம் - கண்ணாரம்பைப் பற்றின ஓர் சன்னி, கண்ணாரம்பு வியாதி.

பகீரதப்பிரயத்தனம் - விடாமுயற்சி.

பகீரதன் - ஓர் சூரியகுலத் தரசன். (இக்ஷ்வாகு) இலீபன் புத்திரன். இவன் சகரன் புத்திரரும், தனக்குப் பாட்டன்மாருமாகிய சகரரைக் கபிலரது சாபத்தினின்றும் நீக்கிக் காக்கும்பொருட்டு, ஈஸ்வரனைக் குறித்துத் தவஞ்செய்து, ஆகாயகங்கையைப் பூலோகத்திற்குக் கொண்டு வந்தவன்.

பகீரதி-பகீரதனாற் கொண்டுவரப்பட்ட கங்கை.

பகீரிடுதல் - வெடித்தல், வேகக்குறிப்பு.

பகீரென்னல் - திடுக்கிடல், அச்சக்குறிப்பு.

பகு - பகுவென்னேவல், வகிர், பல, வெகு, பெருமை.

பகுகந்தன் } சுத்தியுவின் புத்திரன்.
பகுகவன் }

பகுசா - அனேகமாய், அதிகமாய்.

பகுதிக்கால்-ஙு, சு, பு, யு, வ என்ற எழுத்துக்களில் உகரவொலியின், குறியாக வரையப்படும் கீழ்க்கோடு.

பகுதி-இயல்பு, குடியிறை, சொன்முதனிலை, பகுபதத்தோருறுப்பு; அது: பகுக்கக் கூடாத வியல்புடையது. பங்கு, படை, பிரிவு, பிரகிருதி.

பகுதிகட்டுதல் - இறை கொடுத்தல்.

பகுதிப்பாடு - பகுப்பு, பிரிப்பு, பிரிவினை.

பகுதியெண் - பின்ன எண்ணின் கீழிருக்கும் எண்.

பகுத்தல்-ஈதல், தறித்தல், பங்கிடல், இது: வணிக ரெண்குணத்தொன்று. [தல்.

பகுத்தறிதல் - பிரித்தறிதல், மனனியாய மறி

பகுத்தறிவு - மெய்யறிவு, மனனியாயம்.

பகுத்து - பாகித்து, பிரித்து.

பகுபதம்-பகுதி விகுதி முதலிய வுறுப்பினையன்ற பதம், பிரிக்கக்கூடிய பதம்.

பகுபதவுறுப்பு - பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பவை.

பகுப்பு - பகுதி, பகுத்தல், பிரிவு, வகுப்பு.

பகுரதன் - புரஞ்சயன் மகன். [ஞென்று.

பகுவபஞ்சம் - நூற்றெட்டு பிடதங்களி

பகுவாய் - பிழா, தாழி, குடம், பேழ்வாய்.

பகுளபிழார்த்தமி - கிருட்டிணபக்கச்சதுர்தமி.

பகுளம் - கிருட்டிணபக்கம், அமரபட்சம்.

பகுளாசுவன் - மிதுலாபுரி வேந்தன், ஸ்ரீகிருஷ்ண பகவானுல் மோக்ஷமடைந்தவன்.

பகுளை-சுவாயம்புமனுவின் குமாரனுன உத்தானபாதன்புத்திரனுகிய உத்தமன்மனைவி

பகேஷிகை - சாயாமரம், காப்பிச்செடி.

பகை - பகையென்னேவல், விரோதம், வெறுப்பு, ஆறுவது, மூன்றுவதாகிய நரம்புகள், பகுதி, பகுப்பு, பகுத்தல், அபகாரம்.

பகைஞர் - விரோதிகள், சத்துருக்கள்.

பகைதணித்தல் - பகைமை தீர்தல்.

பகைத்தல் - பகைகொள்ளல், மூரணல்.

பகைதானம் - கிரகத்தின் சத்துருவீடு.

பகைத்தி - பகைக்கின்றாய், பகைத்தாய், பகைமையை உடையாய். [னம்.

பகைத்தொடை-மூரண்டொடை, ஓர் பாவி

பகைநரம்பு - சுனசுவரம், வல்லிசைக்கும் கருவி, யாழ்முறையி லொன்று.

பகைநாள் - பிறந்தநாட்கு முதலுன்.

பகைநிரைகவர்தல் - பகைவரது காலிகளைக் கோடல்; அஃது: போர் தொடங்கும் அரசர்களுக்குள் எண்வகை வெற்றியி னொன்று.
பகைப்படல் - முரணுகுதல், விரோதமாதல்.
பகைப்படை - பகைவர் படை.
பகைப்பு - விரோதித்தல், பகைத்தல்.
பகைப்புலம் - யுத்தக்களம். போர்க்களம், பகைவர் நிலம், பகைநிலம்.
பகைமூதல் - பகைமைக் காரணம்.
பகைமுன்னெதிரூன்றல் } பகைவர்க்கு
பகைமேற்செல்லல் } முன்னெதிர்த்தல்; அஃது: பாராளும் வேந்தர்க்குரிய எண்வகைவெற்றியினொன்று, மாற்றரசைப்பொரப் போதல்.
பகைமை - பகைத்தனம், விரோதம்.
பகையகம் - போர்க்களம், படைத்தளம்.
பகையாளி - பகைஞன், எதிரி, விரோதி.
பகையில்நோய்-தீர்க்கும் நோய், மருந்தில்லா நோய்.
பகைவரரண்வளைத்தல் - மாற்றரசது மதிலை வளைத்தல்; அஃது: உலகாளும் அரசர்க்குரிய எண்வகை வெற்றியினொன்று.
பகைவர் - சத்துருக்கள், விரோதிகள்.
பகைவர்க்கம் - ஆன்மாவின் உட்பகையா யுள்ளவை; அவை: காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம்.
பகோளம் - வானவட்டம்.
பக்ககம்- அண்மை, சமீபம், பக்கம், புறக்கதவு
பக்ககன் - கூட்டாளி, நேசன், பங்காளி.
பக்ககேசம் - நரைமயிர், வெண்மயிர், நரை.
பக்கக்குடுமி - சிலுப்பாக்குடுமி.
பக்கசம் - செட்டை, கைப்பட்டை. [யானை.
பக்கசரம் - துணைப்படை, சந்திரன், இராச
பக்கசன்மன் - சந்திரன், உடுவின் வேந்தன்.
பக்கசூலை - பக்கத்திலே வரும் சூலைநோய்.
பக்கச்செடில் - விலாவில் குத்தியாடும் செடிலாட்டம்.
பக்கச்சொல்-துணைச்சொல், உதவிச்சொல்.
பக்கணம் - கிராமம், பற்பலதிசைப் பண்டம் விற்குமிடமாகிய கடைவீதி, வேடர்வீதி.
பக்கதி - செட்டைமூலம், பிரதமை, முதல்.
பக்கத்தார் - அயலவர், அண்ணியச் சுற்றத்தார், இனத்தவர், கன்னையிலுள்ளவர், உழையிருப்பார், அமைச்சர், அருகிருப்போர், அயலார், கட்சிக்காரர்.
பக்கத்துணை - பக்கவுதவி, கூட்டுதவி.
பக்கத்தெலும்பு - பழுவெலும்பு, விலாவெலும்பு.
பக்கபகந்திரம்-குறியினருகு வருஞ் சிலந்தி.
பக்கபலம் - பக்கத்துணை, பக்க உதவி.
பக்கபாதம் - பட்சபாதம், ஓரவாரம்.
பக்கபாதிகை-சேர்மானம், ஒன்றிப்பு, கூட்டு.
பக்கப்பிளவை - முள்ளந்தண்டருகில் உண்டாகும் பிளவை, பக்கவிப்புருதி.
பக்கப்போலி-பொருளிருக்குமிடம், தீயபக்கம், பிரத்தியக்ஷ விருத்தம், முதலாக 8 வகைப்படும்.
பக்கமூலம்-செட்டைக்குழி, அக்குள், பகை, பகுதி, வகை, அன்பு, கட்சி.
பக்கம் - அம்பிறகு, அருகு, அருத்தாபத்திப் பொருள், அவயவம், இடம், இராசயானை, இறகு, உணு, எதிரிடை, ஓர் கையணி, கனிவு, சந்திரனுள், சமீபம், சுற்றம், செட்டை, சேனை, தகுதி, நட்பு, நாசை, பட்சம், பிரதமைமுதல் பதினைந்துநாட் கொண்ட காலம், புட்பொதி, புறம், வகிப்பு, வமிசம், வால், வீடு, அன்பு, புத்தகத்தின் உட்பக்கம், நரை, உணவு.
பக்கரசம் - மது, தேன், பிரசம், தேறல், உணவு.
பக்கரை - அங்கவடி, குதிரைச்சேணம், கல்லணை, மெத்தை, முகட்டின் கீழ்க்கட்டு.
பக்கரைக்கட்டு-முகட்டுக்கட்டு, உச்சிக்கட்டு.
பக்கர்-பாங்கர், சமீபம், சுற்றத்தார், பக்கல்.
பக்கல் - பாங்கர், பக்கர், இனம், பக்கம்.
பக்கவளை - முகட்டுவளையின் பக்கமரம்.
பக்கவாகணன் - பட்சி, சகுந்தம், பதங்கம்.
பக்கவாதம் - பாரிசவாதம், பாரிசநோய்.
பக்கவாத்தியம் - வாய்ப்பாட்டிற்குத் துணையான இசைக்கருவிகள்.
பக்கவாயு - பக்கத்தினெருக்கும் வாயு.
பக்கவாரி - வெங்கீர், சுடுநீர், செறிநீர்.
பக்கவெட்டு-சாடையாய்க்குத்திப் பேசுதல்.
பக்கறை - குழப்பம், பல்லில் கருப்புக்கறை.
பக்காசயம் - இரைகுடர், இரைப்பை.
பக்காச்சேர் - 24 பலமுள்ள நிறை, பெரிய படி அளவு.
பக்காந்தம் - பக்கத்தின் கடைநாள்.
பக்கான்னம் - சமைக்கப்பட்ட போசனம்.
பக்கி - பக்கியென்னேவல், பக்ஷி, பறவை, பிள்ளை, உலோபி, குதிரைவண்டி. [யம்.
பக்கிகை - அத்தாட்சி, தந்திரம், பெருமையா
பக்கிடுதல் - இடுக்கிடுதல், வெடித்தல்.
பக்கிணி - ஓர் இரவும், அதற்கு முன்னும், பின்னுமுள்ள பகலுஞ் சேர்ந்தது.
பக்கித்தல் - பட்சித்தல், புசித்தல்.
பக்கிராசன் - கழுகன், கருடன் உவணம்.

பக்கிரி - பிச்சைக்காரன். [நோய்.
பக்கிநேத்திரகம் - கொப்புளங்களாகிய ஓர்
பக்கு - உடைவு, ஊத்தை, பிளவு, புண்சழு, பொருக்கு, உரிதோல், மரப்பட்டை.
பக்குடுக்கைநன்கணியார்-ஓர் சங்கப்புலவர்.
பக்குப்பக்கெனல் - அச்சக்குறிப்பு, பயக் குறிப்பு, வெடித்த சிரிப்பு.
பக்குவகாலம் - தக்ககாலம், பருவகாலம்.
பக்குவசாலி-பக்குவவாளி, தகுதியுள்ளவன்.
பக்குவப்படுதல்-இருதுவாதல், தகுதியாதல்.
பக்குவமாக்குதல் - தகுதியாக்குதல்.
பக்குவமாதல் - ஏற்றதாதல், தகுதியாதல்.
பக்குவம்-தகுதி, திராணி, பருவம்,மூதிர்ச்சி, இருதுவாகை, அமைதல்.
பக்குவரசம்- சாராயம், அரக்கு, மதபானம்.
பக்குவர்- மோட்சபக்குவர்மூவகையானவர்; அவர்:கருமகாண்டிகர், ஞானகாண்டிகர், பத்திகாண்டிகர் எனப்படுவர்.
பங்கம் - பாகம், பக்கம்.
பக்குவவாளி } தகுதியுள்ளோன், பொருத்த
பக்குவன் } மானவன், வைத்தியன்.
பக்குவாசயம்-நற்குணம், அன்னமயகோசம்.
பக்குவாத்துவா - பரிபாகி, புண்ணியான்மா.
பக்குவி - பக்குவப்பட்ட பெண், பரிபாகி.
பக்குவிடுதல் - பிளத்தல், வெடித்தல்.
பக்கெனல் - அச்சக்குறிப்பு, ஒலிக்குறிப்பு.
பக்தவச்சலன் - நம்பினோர்க்கருள்வோன்.
பக்தன் - பத்தன், தெய்வபக்தியுள்ளவன்.
பக்தி - பத்தி, அன்பு, வழிபாடு. [கம்.
பக்தியோகம் - பயன் கருதாத நிஷ்காமயோ
பக்ரீத் - ஓர் மகமதியப் பண்டிகை.
பங்கக்கிரீடம் - பன்றி, வராகம், ஏனம்.
பங்கசம் - பங்கயம், பங்கஜம், தாமரை.
பங்கசாசனன் - பிரமன், மலரோன், வேதன்.
பங்கசாசனி-திருமகள், இலக்குமி, அலர்மகள்.
பங்கசாதம் - தாமரை, வனசம், அரவிந்தம்.
பங்கசார்த்தம் - அரிதார்த்தம், பிசுனத்தனம்.
பங்கசினி - தாமரைக்குளம், கமலாலயம்.
பங்கசூரணம் - தாமரைவேர், தாமரைமூலம்.
பங்கணம் - நீசர் வாழுஞ் சேரி, நீசர் குடி.
பங்கணி - பங்கம்பாழை, பங்கணிப்பாலை.
பங்கப்படுதல்-பின்னப்படுதல், சேதப்படுதல்
பங்கம்பாடு - ஈனம், தோல்வி, பழுது, வெட்கம்.
பங்கமழிதல்-மானம்போதல், மானமிழத்தல்.
பங்கம் - அசைவு, அச்சம், அலை, ஈனம், எத்தி, குழைசேறு, குளம், குற்றம், துண்டு, தீங்கு, தோல்வி, நீர்பாய்ச்சல், நோய், பந்தயம், பயம், பழுது, பாவம், பிளப்பு, பின்னம், புழுதி, மூடம், வத்திரம், வெட்கம், வேறுபாடு, விகாரம், மானபங்கம், அவமானம்.
பங்கம்பாலை } ஆடுதின்னுப்பாலை,பங்கமணி
பங்கம்பாளை }
பங்கயச்செல்வி - பூமடந்தை, இலக்குமி.
பங்கயத்தவன்-பிரமன், அயன், சதுர்முகன்
பங்கயம் - தாமரை, நாரை, ஓர் ஆயுதம்.
பங்கயன் - சூரியன், பிரமன், மலரோன்.
பங்கயாசனன் - பிரமன், கமலாசனன், போதன்.
பங்கருகம் - தாமரை, அம்போருகம்.
பங்கவாசம் - நண்டு, பங்கிகவாசம்.
பங்களம் - பதர்க்குவியல்.
பங்களா - தோட்டவீடு.
பங்கறை - அவலட்சணம்.
பங்கன் - உலோபி.
பங்கா - காற்றசைக்குமோர் கருவி.
பங்காசுவன் - நூறு புத்திரர்களையும், நூறு புத்திரிகளையும் பெற்றபின்பு இந்திரன் வரத்தால் பெண்ணுருக்கொண்டவரசன்.
பங்காரம் - படி, வரம்பு, எல்லை, வரையறை.
பங்காரு - பொன், பொலம், கனகம், மாடை.
பங்காலி - வெளவால், பட்சியில் மிருகம்.
பங்காளமூத்து - போலிமூத்து.
பங்காளம் - வங்காளதேயம், ஓர் பண்.
பங்காளன் } கூட்டாளி, பங்குக்காரன்,
பங்காளி } தாயாதி.
பங்காளா - ஓர்வகை வாழை.
பங்காளிச்சி - தாயாதியின் மனைவி.
பங்கி - ஆண்மயிர், சடைக்கஞ்சா, சாதிலிங்கம், பங்கியென்னேவல், பிரிவு, புறமயிர்.
பங்கிடுதல் - பகர்தல், பாகம் பிரித்தல்.
பங்கித்தல் - அரிதல், பிளத்தல், துணித்தல்.
பங்கியடித்தல் - கஞ்சாப்புகை குடித்தல்.
பங்கிலம் - தெப்பம், மிதவை, வத்தை.
பங்கீடு-உபாயம், திட்டம், பங்கு, பங்கு செய்தல், வழிவகை, பாகஸ்தம், பிரிவு, பாகம்.
பங்கு - கூட்டு, கூறு, சனி, பாதி, மூடம், பாகம், சுதந்திரம், பிரிவினை, தாயபாகம்.
பங்குக்காணி - கூட்டுப்பங்கான நிலம்.
பங்குக்கிரகம் - மகராராசி, கலை, சுரு, தை.
பங்குசம் - தலைக்கோலம், சிரக்கோலம்.
பங்குதாரன் - பங்குக்காரன்.
பங்குதை - அவலட்சணம், பங்கறை.
பங்குபடுதல்-பின்னப்படல், பொதுவாதல்.
பங்குபட்டநாள் - இரண்டுராசியிற்றன்னங்கி சஞ் சேர்ந்து நிற்கும் விசேஷப்பெருநாள்.
பங்குபாகம் - பாகப்பிரிவினை.

பங்குபாதன் - சனி.
பங்குரம் - ஆற்றுமுடக்கு, வளைவு, வட்டம்.
பங்குரை - அதிவிடயம், அத்தம், அவிருகம்.
பங்குவாளி - பிராசுதார்.
பங்குவித்து - கஞ்சாவிதை, பங்கிவிரை.
பங்குவீதம் - பங்கின்படி, பாகவிகிதப்படி.
பங்குனன் - அருச்சுனன், பற்குனன்.
பங்குனி - உத்திரநாள், 12-ம் மாதம்.
பங்குனியுத்தரம் - பங்குனிமாதப் பௌர்ணமையும், உத்தரமுங்கூடிய விசேஷ நாள்.
பங்கூரம் - மரமஞ்சள், பங்கூறம்.
பங்கேசம் / பங்கேருகம் } தாமரைக் கமலம்.
பசகள் - பயல்கள், பசங்கள்.
பசகன் - சமையற்காரன்.
பசக்க - பசமையாக, துன்பத்தானிறம் வேறுபட, மங்கிப்போக.
பசக்கெனல் - திடீரெனற் குறிப்பு.
பசண்டை - ஈரம், பச்சௌவு, நண்ணிலை.
பசதன் - இந்திரன், சூரியன், அக்கினி.
பசத்தல் - காமமுதலியவற்றூற் பொன்னிறப் புள்ளியுண்டாதல், உடம்பின் நிறம் மாறுதல், உடம்பு பசுமையாதல்.
பசந்தம்-நேரம், காலம், பொழுது, போழ்து.
பசந்து-பசுந்து, நேர்த்தி, உயர்ந்தமாம்பழம்.
பசபசக்க - தினவெடுக்க, முறுமுறுக்க.
பசபசப்பு - பசபசத்தல், தினவெடுத்தல். [பு.
பசபசௌனல்-அலப்புதல், மழைத்தூறற்குறிப்
பசப்ப - ஏய்க்க, ஓயாமற் பேச.
பசப்பல் - பசப்புதல், நளினம்பண்ணுதல்.
பசப்பு - ஈரடிப்பிடிப்பு, ஏய்ப்பு, சாரம், பசலை, பச்சைநிறம், பொன்மை, மயப்பு, பாசாங்கு. [தல்.
பசப்புதல் - ஓயாமற்பேசல், மயக்கல், ஏய்த்
பசமகத்திரம் - மாமஞ்மள், பசமருத்திரம்.
பசம்பை - கழுந்து, பொருத்து, சேர்மானம்.
பசர் - சமைத்தல், பாகம்பண்ணுதல்.
பசலி - 155-ஆம் வருடத்தில் அக்பர் சக்கரவர்த்தியால் ஏற்படுத்தப்பட்டதான வருடம். அதற்கு ஆடி முதல் தேதியாக இருந்ததை ஆங்கிலேயர் ஜூலை முதல் தேதியாக மாற்றியிருக்கின்றனர்.
பசலிமம் - வெந்தது, பாகமானது.
பசலை - வயலைக் கீரை, காமமுதலியவற்றூலுண்டாகும் பசப்பு, தேமல், வருத்தம், காமநோய், மயக்கம், பொன்னிறம், வெளுப்பு, வெண்ணிறம்.
பசலைபாய்தல் - பொன்னிறம் பரவுதல்.
பசலைமானம் - பசலைப்பொன்னிறம்.
பசலைவெண்ணிறம் - பசலையாகிய வெளுப்பு.
பசவன் - வீரசைவமத ஸ்தாபகர்.
பசவ்வியம் - பச்சைப்புல், சிறு தளிர்.
பசளி - பசளைக்கீரை, மடைமூகம்.
பசனை - ஏழு முதலியவுரம், பசளிக்கீரை.
பசளைக்கதை - முகமன்கதை, வீண்கதை.
பசளைமண் - உரமூள்ள மண்.
பசன் - பலா, பனசம், வருக்கை.
பசறு - பச்சிலைச்சாறு, பச்சிலைச்சத்து.
பசனம் - சங்கோசை, சமைத்தல், சிற்றின்பம், வணக்கம், சமையல், பாகம்.
பசனன் - அக்கினி, பாகம் செய்வோன்.
பசனை-கடவுளைத் துதித்துப் பாடுதல். [ம்பு.
பசாசம் - பேய், பிசாசு, குறள், கூளி, இரு
பசாசன் - பேயன், பேய்க்குணமுள்ளவன்.
பசாசு - பேய், பிசாசு, கூளி, பிசாசம்.
பசாடு - குற்றம், அழுக்கு, மாசு.
பசாடை / பசாசு } கண்ணிற்படலம், கண் மாசு.
பசாரி - விபசாரி, அக்குத்தொக்கற்றவள்.
பசார் - சாரமற்றது, கடைத்தெரு, பஜார்.
பசானம் / பசான் } ஓர்வகை நெல், ஓர்வசைச்சாலி.
பசி-அக்கினி, சமைத்தல், பசித்தல்: இஃது: உயிர்வேதனை பன்னிரண்டி லொன்று, மாயையாக்கை பதினெண் குற்றத்து மொன்று, பசியென்னேவல், வறுமை.
பசிதகனி - சோறு, அன்னம்.
பசிதம் - சாம்பர், திருநீறு, விபூதி.
பசித்தல் / பசிப்பு } பசிகொள்ளல், பசியெடுத்தல், பசிவினவு.
பசியம் - கயிறு, சரடு, நூல், நாண்.
பசியாற்றல்-அன்னமளித்தல், உண்பித்தல்.
பசியெடுத்தல் - பசியுண்டாதல், பசித்தல்.
பசிரி - பசளைக்கொடி, கோழிக்கீரை.
பசீது - அவமானம், கேவலம், இழிவு.
பசு - ஆன், இடபவிராசி, உயிர், எருது, கடவுள், சிவனுடையது, பலி, மிருகம், யாகத்துக்குரிய ஆடு, பல்லாங்குழியாட்டத்தில் குழியில் விழுந்து சேரும் ஆறு விதை.
பசுகரணம் - உயிர்க்கரணம், ஜீவகரணம்.
பசுகாதம் - மிருகபலி, விலங்கினப்பலி.
பசுகாயத்திரி - பலிகாயத்திரிமந்திரம், பலியிடப்படுமிருகத்திற்குபதேசிக்குமந்திரம்.
பசுகை - புன்மிருகம், சிறிய மிருகம்.
பசுகௌவியம் - மிருகபலி, பசுகாதம்.
பசுக்கன்று - பசுவின்கன்று, ஆக்கன்று.
பசுக்காத்தல் - உயிர் காத்தல், சூத்திரர், வைசியர்க்குரிய வறுதொழிலிலொன்று.

பசுக்காவலர் - இடையர், கோவையர்.
பசுக்கிரியை - புணர்ச்சி, சேர்க்கை, கலவி.
பசுக்கோசுரம் - சிறு நாகப்பூ.
பசுக்கோட்டம் - கொட்டில், மந்தை.
பசுங்கண் - பசுமை.
பசுங்கதிர் - இளங்கதிர், இளந்தளிர், சந்திரன், உதயசூரியன், பொன்னிறமான விளங்கிரணம், பசியதான்யக் கதிர்கள்.
பசுங்கதிர்த்தே - சந்திரன், அம்புலி, பிறை.
பசுங்கலை - பச்சைக்கல், மரகதம்.
பசுங்காய் - செங்காய், இளங்காய், பச்சைப் பாக்கு, பாக்கின் இளங்காய், கமுகினிளங் காய்.
பசுங்கிளி - பச்சைக் கிளி.
பசுங்குடி - போதிய குடி, விவசாயி.
பசுங்குழவி - இளங்குழந்தை. [வை.
பசுங்கூட்டு - வாசனைக்கலப்பு, வாசனைக்கல
பசுங்கொடி - துளிர்கொடி, அறுகு.
பசுங்கொற்றான் - ஓர் கொற்றான், ஓர் பூடு.
பசுங்கோரை - பச்சைக்கோரை, ஓர் புல்.
பசுஞானம் - தத்துவஞானம், ஆன்மஞானம்.
பசுண்டி - சீரகம், ஓர் வாசனைச் சரக்கு.
பசுதருமம் - ஆன்மதருமம், ஜீவதருமம், கைம மைப்புணர்ச்சி, பரதாரப்புணர்ச்சி, பொது மக்கடன்மை, மனுநீதிவழு, மிருகநடை.
பசுதை - மிருகத்தன்மை, விலங்குத்தன்மை.
பசுத்தக்காளி - தக்காளியின் ஓர்வகைச்செடி.
பசுத்துவம்-ஆத்துமதத்துவம், மிருகத்தனம்.
பசுத்தொழு - மாட்டுக்கொட்டில்.
பசுநரம்பு - பச்சைநிறநரம்பு, இளநரம்பு.
பசுநா-பசுநாமரம், பிராய்மரம், பசுவின்நாக்கு.
பசுநாகு - இளம்பசு, சிறுபசு, ஈனுநாகு.
பசுத்தொழு - பசுந்தொழு.
பசுநிரை-ஆநிரை, சுரபிக்கூட்டம், பசுமந்தை.
பசுநீகாரம் - ஆணவமலம், மூலமலம்.
பசுநூல் - மக்கள் முதலிய உயிரினங்களைப் பற்றிய உலகநூல்.
பசுந்தக்காளி - ஓர்வகைத்தக்காளி.
பசுந்தமிழ் - பைந்தமிழ், செந்தமிழ்.
பசுந்தரை - புற்றரை, பசும்புற்றரை.
பசுந்து-அழகு, நெற்றி, பசுமை, மேன்மை.
பசுந்தொழு - மாட்டுக்கொட்டில்.
பசுந்தோடு - மெல்லிய இதழ்கள்.
பசுபதி - சிவன், கங்காதரன், சீவேச்சுரன், அஷ்டமூர்த்திகளில் ஒருவர்.
பசுபதிகாயகி - திருப்பாச்சூரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பசுபதிநாயகேசுவரர் - திருச்சக்கரப்பள்ளி யிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.
பசுபதிநாயனூர்-நாயன்மார் அறுபத்து மூவ ருள் ஒருவர்.
பசுபதீசர் - திருப்பந்தண நல்லூரிலே கோ யில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பசுபதீசுரர் - ஜீவேஸ்வரர், திருஆவூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பசுபதீசுவரர் - திருக்கருவூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமியுடைய பெயர்.
பசுபந்தம்- ஜீவபந்தம், ஓர்யாகம்.
பசுபாசம் - மூலமலம், ஆணவமலம்.
பசுபாலனம் - பசுக்காத்தல், ஆக்காத்தல்.
பசுபாலன் - கோபாலன், கோவிந்தன்.
பசுபாவம்-ஆத்துமவியல்பு, உயிர்க்குச் செய் யும் பாவம், ஆத்துமத்துரோகம்.
பசுபிரேணம் - சாபம், சாபத்தீடு, சபித்தல்.
பசுபுண்ணியம் - ஆத்துமாக்கட்குச் செய்யுந் தருமம், சீவகாருண்ணியம், சீவகருணை.
பசுபோதம் - ஆன்மவறிவு.
பசுப்பட்டி - பசுத்தொழுவம், பசுப்புரை.
பசுப்பிரோணம்-ஆவோட்டல், பசுவிரட்டல்
பசுமம் - வினங்குவது, நீறு, பஸ்மம்.
பசுமஞ்சள் - பச்சைநிறஞ்சள், பச்சைமஞ்சள்.
பசுமடம் - கோபிற்பூசைக்குப் பாலுதவ வளர்க்கும் பசுச்சாலை.
பசுமந்தை - பசுத்தொழுவம்.
பசுமாடு - பசு, சுரபி, பெற்றம், கோ.
பசுமூல்லை - முல்லை வகையிலொர்வகை.
பசுமுன்னை - ஓர்வகை முன்னைக்கீரை.
பசுமெழுக்கு-பசுஞ்சாணியால் மெழுகப்பட் டஇடம், பசுஞ்சாணியால் மெழுகுதல்.
பசுமை - ஈரம், உண்மை, ஓர்புடவை, குளிர் மை, சாரம், சிறப்பு, செல்வம், செவ்வி, பச்சை, பொன்னிறம், மெய், கருணை, இளமை, நறுமை, புதுமை, செவ்வி, ஈரம்.
பசும்பதம் - இளம்பருவம், சிறுபருவம், விளைந்தநெல் முதலிய தானியங்கள்.
பசும்பயறு - பாசிப்பயறு, பச்சைப்பயறு.
பசும்பால் - ஆவின்பால், ஆவமிழ்து.
பசும்பிடி - பக்குவவிலை, பச்சிலைமரம், பச் சிலை. [ஞெண்டு. (சிந்)
பசும்பிறப்பு - ஐவகைப்பிறப்பிறப்பி
பசும்புல் - ஓர்புல், பச்சைப்புல், பயிர்.
பசும்பொன் - உயர்ந்தபொன், விளிச்சிறை.
பசுரட்சணம் - பசுக்காத்தல், ஆவோம்பல்.
பசுரம் - பசுமரம்.
பசுராசன் - சிங்கம், மிருகேந்திரன்.
பசுவதை - கோஹத்தி, ஆன்மவதை.
பசுவாசாரம்-ஆன்மவாசாரம், சத்திபூசை.
பசுவாட்டம்-பன்னெடுங்குழியாட்டம்.

பசுவுக்குவாயுறை - அறம் முப்பத்திரண்டி ஞொன்று.
பசுசகன்-சோதிடன், பஞ்சாங்கக்கணிதன்.
பசேரெனல் - பச்சைநிறமாயிருத்தல்.
பசேலிமன் - பசுமேனியன், சூரியன், தீ, அனலி.
பசேலுகன் - சமையற்காரன், மடையன்.
பசை - அன்பு, ஆசை, ஆதரவு, இரக்கம், சொத்து, இலாபம், ஈரம், ஒட்டும் பசை, குழைவு, சாரம், செந்தளிப்பு, தளைவு, பசையென்னேவல், பற்று, விருப்பம், பிசின், இரக்கம், ஈரம்.
பசைஇ - பற்றி, விரும்பி, விரும்புதல்.
பசைஇய-விரும்புதற்கு, விரும்ப.
பசைதல் - விரும்புதல்,நெகிழ்தல்,இரங்கல்.
பசைகாரம் - காரங்கூட்டியபசை.
பசைதல்-அன்புகொள்ளல், ஒட்டுதல், சார முடைத்தாதல், பசையாக்கல், பிசைதல்-
பசைந்தார் -நேசகர், நண்பர், நட்பினர்.
பசைந்துழி-பற்றுதலமைந்த இடம்.
பசைமட்டை-இரும்பைப் பசையுமட்டை.
பசையற்றவன்-அமித்திரன், வறியன்,வன் கண்ணன், இரக்கமற்றவன், மூர்க்கன்.
பசையாப்பு - உலகபந்தம், உலகபாசம்.
பசைவு-அன்பு, நட்பு, பிசைதல், பிரியம்.
பச்சகாளு-நேரதுணி, கூத்தாடிப்பையன்.
பச்சக்கம் - பிரத்தியட்சப் பிரமாணம்.
பச்சடி - துவையற்கறி, பாக்கியம்.
பச்சடியன் - வெள்ளோயிலே கருப்புப்புள்ளி யுள்ள மாடு முதலிய ஜந்துக்கள்.
பச்சநாவி - விடம், வசநாவி, நஞ்சு.
பச்சம் - பட்சம், பக்கம், இரத்தம், அன்பு.
பச்சரிசி - அவியாமற் குத்தினவரிசி, அம் மான்பச்சரிசி.
பச்சவடம் - பச்சைவடம், பச்சைவர்ணச் சேலை.
பச்சவாதசன்னி-நரம்புசம்பந்தமான நோய்.
பச்சன்-சூத்திரன், நான்காம் வர்ணத்தான்.
பச்சன்னியம்-குச்சிமஞ்சள், மரமஞ்சள்.
பச்சாது - பின்பு, பிறகு, பின்னர்.
பச்சாத்தாபம் - செய்த குற்றத்துக்கு மன மிரங்கல், மனந்திரும்புதல், அநுதாபம்.
பச்சிமகாண்டம்-புதுவேற்பாடு, புதுமுறை.
பச்சிமதோகரன் - கள்வன், வஞ்சன், தட்டான்.
பச்சிமப்பிறை - இளம்பிறை, சிறுபிறை.
பச்சிமம் - பின், பின்னர், மேற்கு, நெற்றி.
பச்சியம்-அதிசயக்குறிப்பு, வியப்புக்குறிப்பு.
பச்சிரும்பு - உருக்கியஇரும்பு, தேனிரும்பு.
பச்சிலை-ஓர்மரம்,பசுமருந்து, பச்சையிலை.
பச்சிலைப்பாம்பு - ஓர்பாம்பு, பசும்பாம்பு.
பச்சிலைமருந்து - மருந்தாக உபயோகப்படும் இலை.
பச்சிலையோணன்-பச்சோந்தி,பச்சோணன்.
பச்சிறைச்சி-பச்சையிறைச்சி, பச்சைக்கறி.
பச்சுடம்பு - குழந்தையினுடல், புண்ணுவிள மை பெற்றவுடல், பசுமையான மேனி.
பச்சுதி - நழுவுகை, நகருகை.
பச்சுளி - மருந்துக்குதவும் செடிவகை.
பச்செனல் - நிறப்பாயிருத்தல், பச்சையா யிருத்தல், வினயமற்றிருத்தல்.
பச்செனல் - பசுமையாதற்குறிப்பு.
பச்செனவு-ஈரம், தழைவு, பச்சை, பசுமை.
பச்சை - அவியாதது, இளமை, இன்பம், ஈரம்,உலராதது,இடக்கர்மொழி, தெய்வ முதலியவற்றிற்குப்படைப்பது,ஓர் நிறம், ஓர் புதர்,தோல்,பசுமை,புதன், மாகதம், மிகுதிக் குறிப்புச்சொல்; (உ-ம்) பச்சைப் பொய், மூலபலவருக்கம், வாசனை, விட் டுணு,பச்சைகுத்திய அடையாளம், சுத்தி பண்ணாதது, வெளிப்படையானது, கா மன்.
பச்சைகுற்றுதல்-பச்சைவண்ணம்பதித்தல்.
பச்சைக்கட்டு - சாந்திமருந்து, தாடாற்றி, ஆறுதல், சகாயம், பரிதானங்கொடுக்கை.
பச்சைக்கருப்பூரம் - ஓர் பசுங்கருப்பூரம்.
பச்சைக்கல் - மாகதம், காதணியிலொன்று, சுடாதசெங்கல்.
பச்சைக்கிளி-பசுங்கிளி,வெட்டுக்கிளி.[வை.
பச்சைக்கிளுவை-கோங்கிலவு, காட்டுக்கிளு
பச்சைக்குங்கிலியம்-ஓர்வகைக் குங்கிலியம்.
பச்சைக்குத்தி - குறவர்சாதிவகை.
பச்சைக்குழந்தை-இளங்குழந்தை, மதலை.
பச்சைக்குவடு-மாகதம்,நவமணியிலொன்று.
பச்சைக்குறவன்-பெரும் பாசாங்குக்காரன்.
பச்சைக்கூடு - தூலதேகம், தூலசரீரம்.
பச்சைக்கொம்பு - பசுங்கொம்பு, இஞ்சி.
பச்சைக்கோடு-மாகதம்,நவமணியிலொன்று.
பச்சைச்சடையன் - வயிரவமூர்த்தி.
பச்சைத்தண்ணீர் - குளிர்ந்தநீர். [ஷம்.
பச்சைநஞ்சு-நஞ்சுடையநீயன், கொடிய வி
பச்சைபரப்புதல்-பல்லியம் போடுதல், பல் லியம், படைக்கப்பட்டபலி. [தல்.
பச்சைபுகுதல் - கலியாணத்தில் வரிசை புகு
பச்சைநிறநிற்கனன் - துருசி.
பச்சைநீருள்ளி - வெள்ளைப்பூண்டு.
பச்சைபச்சையாய்ப் பேசுதல் - இடக்கர்ச் சொற்களேஅப்படியே சொல்லுதல்,இடக்

கர்ச் சொற்களால் வைதல்.

பச்சைபழுக்காயடைத்தல் - கருநிறமும் மஞ்சணிறமுங் கலந்தவண்ணமாக வூட்டல்.

பச்சைப்பசேரெனல் - பச்சைநிறவொளிக் குறி.

பச்சைப்படி - அவியாமற் கொடுப்பது.

பச்சைப்பட்டி - பச்சையாயிருக்கும் எரு.

பச்சைப்பதம் - இளம்பதம், இளம்பிராயம்.

பச்சைப்பயறு - பசும்பயறு, பாசிப்பயறு.

பச்சைப்பல்லக்கு - பிணமெடுக்கும் பாடை.

பச்சைப்பாம்பு - பச்சிலைப்பாம்பு.

பச்சைப்பாலன் - பிறந்த குழந்தை.

பச்சைப்பாவி - சுடாதபாவி.

பச்சைப்புண் - புதுப்புண், காயப்புண்.

பச்சைப்புல்-பசும்புல்,பசியபுல். [டையதாய்.

பச்சைப்பிள்ளைத் தாய்ச்சி - கைக்குழந்தை யு

பச்சைப்புழு - பச்சைநிறமான ஓர் புழு.

பச்சைப்புறு - பச்சைநிறமான ஓர் புறு.

பச்சைப்பெருமாள் - ஓர் நெல், திருமால்.

பச்சைப்பொட்டு-பசுந்திலகம்,பசும்பொட்டு.

பச்சைப்பொய் - மூழுப்பொய். [சிசு.

பச்சைமண் - எருவிடாமண், வேகாமண்.

பச்சையம்மாள் - ஓர் கிராமதேவதை.

பச்சையன் - திருமால், சாமனவர்ணன்.

பச்சையுடல் - புண்ணுடல்,மெலிந்த உடல்.

பச்சைவடம்-ஓர்வகைப் பசுமையான சீலை.

பச்சைவாழை - பச்சைநாடான்.

பச்சைவில்-பசுமையான சிலை, இந்திரதனு.

பச்சைவெட்டு - எரியூடா மருந்து, சுத்தி செய்யாத பாஷாணம், பழுக்காதகாய்.

பச்சைவெண்ணெய்-காய்ச்சாத பாலிலிருந்து எடுக்கும் வெண்ணெய்,வெண்ணெய்.

பச்சோணை, பச்சோந்தி } ஓந்தி, அடிக்கடி உடலினிறத்தை மாற்றும் ஓணான்.

பச்சோலை-பச்சை ஓலை, பசுமையான ஓலை.

பஞ்சம் - பஞ்சிலம், தொகுதி, நிரள்.

பஸ்பம், பஸ்மம் } சாம்பர், பற்பம், தூளிதம்.

பஸ்மகுண்டி - விபூதிமடல்.

பகி - பறவை, புள், பதகம்.

பஜமானன்-(1) (ய) சாத்துவதன் புத்திரன். (2) (ய) அந்தகன் ஜேஷ்டபுத்திரன்.

பஜி - (ய) சாத்துவதன் புத்திரன்.

பஞ்ச, பஞ்சம் } ஐந்து, பஞ்சகாலம்.

பஞ்சகச்சம் - ஆடவர் ஆடையை ஐந்து இடங்களிற் செருகி யுடுத்தும் வகை.

பஞ்சகஞ்சுகம் - ஆன்மதத்துவச்சட்டை ஐந்து; அவை:காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பன.

பஞ்சகந்தம் - ஐவகை வாசனைப்பண்டம். அவை:இலவங்கம், ஏலம், கர்ப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பவை.

பஞ்சகதி - தூரகதியையந்து, அவை: மயூரகதி, மல்லகதி, வானரகதி, இடபகதி, வியாக்ரகதி, பஞ்சதாரை.

பஞ்சகம் -ஐந்தின் கூட்டம், யுத்தக்களம்,

பஞ்சகம் - ஐவகை மருந்துப்பூடு; அவை: ஆடாதோடை, சிந்தில், கண்டங்கத்திரி, கையாந்தகரை, பெரும்பலா என்பன.

பஞ்சகம்மாளர்- அவர்: கன்னர், கொல்லர், சிற்பர், தச்சர், தட்டார்.

பஞ்சகருத்தாக்கள் - ஐவகைக் கருத்தாக்கள்; அவர்:(முறையே) அயன்,அரி,உருத்திரன் சதாசிவன், மகேசன் எனப்படுவார்கள்.

பஞ்சகருவி - பஞ்சமாசத்தம்; அவை:தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பன.

பஞ்சகலியாணி - பஞ்சகல்யாணி; அது: குதிரை நான்குகாலிலும்,நெற்றியிலும் வெண்மை நிறமுள்ளது.

பஞ்சகலை - அவை: சாந்தி, சாந்தியாதீதம், நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை.

பஞ்சகல்யாணன் - அருகக்கடவுள்.

பஞ்சகவ்வியம் - பஞ்சகௌயம்: கோமயம், கோமூத்திரம்,தயிர்,நெய்,பால் என்பன.

பஞ்சகற்பம் - (தலையில் தடவிக்கொள்வது); அவை: கஸ்தூரிமஞ்சள், மிளகு, வேப்பங் கொட்டை, கடுக்காய்த் தோல், நெல்லிப் பருப்பு.

பஞ்சகன்னிகள் - ஐந்து கன்னிகைப் பெண்கள்; அவர்கள்: அகலிகை, சீதை, தாரை, துரோபதை, மண்டோதரி எனப்படுவர்.

பஞ்சகாடு - சிறந்தகாடு.

பஞ்சகாயம்-கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெங்காயம், பெருங்காயம்.

பஞ்சகாரகம் - காயம், வெள்ளுள்ளி, வெங்காயம், கடுகு, வெந்தயம்.

பஞ்சகாரன் - கணிதசாஸ்திரி.

பஞ்சகாரியர் - ஐந்துவகை ஆசிரியர், (மணி) யாழாசிரியன், இசையாசிரியன் முதலியோர், இராமானுஜன் உபதேசம் பெற்ற ஐந்து ஆசிரியர். அவர்: பெரியநம்பி,பெரிய திருமலைநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலை ஆண்டான், அரையர்.

பஞ்சகாலம்- கருப்புக்காலம், பிராதக்காலம், சங்கமகாலம், மத்தியான்னகாலம்,அபரான்னகாலம், சாயங்காலம், இது காலை

முதல் மாலைவரையில் அவ்வாறு நாழிகை கொண்டது. கூமகாலம்

பஞ்சகாவியம் - ஐவகைக்காப்பியம்; அவை: குண்டலகேசி, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி என்பன.

பஞ்சகிருத்தியம் - பிரபஞ்சத் தொழிலைந்து; அவை: (முறையே) சிருட்டி, திதி, சங்காரம் திரோபவம், அனுக்கிரகம் எனப்படுவன.

பஞ்சக்கிலேசம் - ஐவகைத்துன்பம்; அவை, அவித்தை, ஆங்காரம், அவா, ஆசை, கோபம் முதலியவை.

பஞ்சகுத்தம் - ஆமை, உறுப்படக்கி, கூர்மம்.

பஞ்சகுரோசவல்லி - காசியில் தெய்வீகத் தன்மை பொருந்திய ஓரிடம், இந்த இடத்தில் இசையானவன், வேறுமதத்தன் வரக் கூடாது என்பர்.

பஞ்சகூடம் - ஆமை, கூர்மம், கச்சபம்.

பஞ்சகோசம் / பஞ்சகோஷம் } பஞ்சமயகோச சரீரம், அன்ன முதலிய வைந்நிலையாயகூடு; அவை: (முறையே) அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் எனப்படும்.

பஞ்சங்கூறுதல் - எழையைப்போல நடித்தல்.

பஞ்சகோணமண்டலம் - சுக்கிரமண்டலம்.

பஞ்சகோலம் - சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், திப்பிலி, திப்பிலிமூல மிவற்றின் சேர்க்கை.

பஞ்சகௌடம் - கவுடதேயத்தின், ஐந்து பகுதி; அவை- உற்கலம், கானகுச்சம், சாரசுவதம், சுத்தகௌடம், மைதிலை.

பஞ்சகௌடர்- பஞ்சவந்தணர்: சாரஸ்வதம், கன்யாகுப்ஜம், மிதிலம், கௌடம், உத்கலம் எனனும் இந்த ஐந்துதேசத்துப் பிராமணரையும் பஞ்சகௌடர் என்பர்.

பஞ்சகௌவியம் - பஞ்சகவ்வியம்.

பஞ்சக்கருவி - பஞ்சகருவி.

பஞ்சசதம் - ஐஞ்ஞூறு, ஐந்நூறு.

பஞ்சசத்தி- அவை: (முறையே) இச்சாசத்தி, கிரியாசத்தி, சிற்சத்தி, ஞானசத்தி, பராசத்தி, என்பன.

பஞ்சசயனம் - ஐந்தாலாயமெத்தை; அவை: அன்னத்தூவி, இலவம்பஞ்சு, பூ, கோரை, மயிற்றூவி என்பன. அழகு, குளிர்ச்சி, மார்த்தவம், பரிமளம், வெண்மை என்ற ஐவகைத்தன்மை கொண்ட படுக்கை.

பஞ்சசரன் - மன்மதன், சித்தசன், மதன்.

பஞ்சசரி - ஐந்துசரங்கொண்ட அணிவகை.

பஞ்சசனன் - கிருஷ்ணனால் கொல்லப்பட்ட ஓரசுரன்.

பஞ்சசன்னியம் - பாஞ்சசன்னியம், குதிரை.

பஞ்சசாகம் - முன்கை, உள்ளங்கை, அங்கை.

பஞ்சசாதனம் - யோகிகளுக்குரியவை; அவை: ஆசனம், தண்டம், கமண்டலம், யோகப்பட்டை, செபமாலை என்பன.

பஞ்சசாதி - பஞ்சகம்மாளர், பஞ்சகம்மியர்.

பஞ்சசாயகன் - மன்மதன், பஞ்சபாணன்.

பஞ்சசிகன் - மிதிலைக்காசனுக்கிய ஜனகனுக்கு உபதேசஞ் செய்த மஹாத்மா.

பஞ்சசிகை - கூவரம்பண்ணத்தகாத உச்சி, புருவங்கள், முழங்கைகள் என்ற ஐந்து இடங்கள்.

பஞ்சசியம் - சிங்கம், மிருகேந்திரன்.

பஞ்சசீலம் - காமம், பொய், கொலை, கள், சூதாடல் முதலிய பஞ்சமா பாதகத்தொழில் விட்டொழுகும் சமயநெறி.

பஞ்சசுகந்தம் - ஐவகைமணம், பஞ்சவாசம்.

பஞ்சசுத்தி - ஐவகைச்சுத்தி; அவை: (முறையே) ஆத்துமசுத்தி, இலிங்கசுத்தி, திரவியசுத்தி, பூதசுத்தி, மந்திரசுத்தி என்பன.

பஞ்சசூடை- ஓர் அப்ஸரஸ், நாரதருக்குப் பெண்கள் சுபாவம் உரைத்தவள்.

பஞ்சசூனை- அவை: அம்மி, உரல், உலக்கை, துடைப்பம், நீர்க்குடம் என்பன.

பஞ்சஜனன் - (தி) ஸம்ஹலாதன் புத்திரன், (தி) சாந்தீபன் புத்திரனைப் பிரபாச தீர்த்தத்துள்ளே யிழுத்துக்கொண்டு போன ராக்ஷஸன், அவனை ஸ்ரீகிருஷ்ணபகவான் தம் குருபுத்திரனை மோசஞ்செய்தானென்றறிந்துகொன்று அவன்கழுத்தெலும்பை யெடுத்துப் பாஞ்சஜந்யம் என்னுஞ் சங்காக்கினார். [தன்.

பஞ்சஜனாதன் - ஐம்பொறியவித்தவன், புத்

பஞ்சடைதல் - (பகிரேரய் இவற்றால்) கண் பஞ்சாடுதல்.

பஞ்சணை-பஞ்சாலாயமெத்தை, மெல்லணை.

பஞ்சதசப்பிரகாணம் - ஓர் புராதனமான வேதாந்தநூல்; இது: வசனரூபமாயுள்ளது.

பஞ்சதசகம் / பஞ்சதசம் } பதினைந்து என்னும் தொகை.

பஞ்சதசி - பூரணை அல்லது அமாவாசை, வேதாந்த சாத்திரங்களிலொன்று.

பஞ்சதத்துவம் - வாமபூசைக்கடுத்த தசாங்கமைந்து; அவை: இறைச்சி, சாராயம், ஸ்திரீசம்பாஷணை, புணர்ச்சியபிநயம், மீன்

பஞ்சதந்திரம்-ஐந்துவகைத்தந்திரம், அவை: அசம்பிரேட்சியகாரித்துவம், அர்த்தநாசம், சந்திவிக்கிரகம், சுகிர்லாபம், மித்திரபேதம்.

பஞ்சதம் - சாவு, மரணம், தேகவியோகம்.
பஞ்சதரு - சந்தானம், தேவதாரம், கற்பகம் மந்தாரம், பாரிசாதம், என்பன.
பஞ்சதன்மாத்திரம் } பஞ்சபூத மூலம்.
பஞ்சதன்மாத்திரை }
பஞ்சதாது - பஞ்சபூதம், ஐம்பூதம்
பஞ்சதாரை - சருக்கரை, கரும்பின்கட்டி.
பஞ்சதாரை-குதிரையின்நடைவகை; அஃது: விக்கிதம், வற்கிதம், உபகண்டம், சவம், உபசவம் எனப்படும்.
பஞ்சதிரவியம் - பஞ்சகவ்வியம்.
பஞ்சதிராவிடர் - விந்தியமலைக்குத் தெற்கேயுள்ளதேசத்தவர்: தெலுங்கர், திராவிடர், கன்னடர், மஹாராஷ்டிரர், கூர்ஜரர் என்பவர்கள். [மூக்கு.
பஞ்சநீர்க்கம் - உதரம், கண், கை, மார்பு,
பஞ்சநீர்த்தம் - தேவர், பிதிரர், இருடிகள், பூதம், மானிடர் ஆகிய ஐவருக்கும் பிரீதியாக இடும் நீர்.
பஞ்சது - குயில், நேரம், சமயம், தருணம்.
பஞ்சதுந்துமி - ஐந்தலைவாத்தியம், பஞ்சமாசத்தக்கருவி.
பஞ்சதூபம் - அகில், சாம்பிராணி, குந்துருக்கம், குக்குலு என்பன. [ஐம்பூதம்.
பஞ்சதை - சாவு, மரணம், பஞ்சபூதியம்,
பஞ்சத்துவம் - ஐந்தின் கூட்டம், மரணம்.
பஞ்சநகக்கூர்மையோன் - ஆமை, உறுப்படக்கி.
பஞ்சநகம் - சிங்கம், ஆமை, புலி, யானை.
பஞ்சநகாயுதம் - சிங்கம். மிருகேந்திரன்.
பஞ்சநகி - உடும்பு, முசலி, கோதா.
பஞ்சநதம் } ஐந்தாறு கூடிய திருவையாறு.
பஞ்சநதி }
பஞ்சநிம்பம்-வேம்பின் ஐந்துறுப்புக்களாகிய இலை, பட்டை, பழம், பூ, வேர்.
பஞ்சநிறக்கல்- சிலாநாகக்கல், சூடாலேக்கல்.
பஞ்சநீராஞ்சனம்-ஐவகையாலாத்தி; அவை: சாட்டாங்கம், சீலை, தளிர், தாமரை, தீபம்.
பஞ்சத்தாளி - கருவேம்பிலை, கருவேப்பிலை.
பஞ்சபசு-கோமாதாக்கள்; நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை, என ஐவகைப் பசு.
பஞ்சபட்சி - எழுத்துப் பொருத்தமறியு மைந்து பட்சி, அவை: வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்ப. அவைகட்கு முறையே எழுத்து அ, இ, உ, எ, ஒ, என்பவைகளாம். ஓர் சாத்திரம், வைப்புப் பாஷாணம் முப்பத்திரண்டிலொன்று.
பஞ்சபட்சிக்காதல்- ஓர் பஞ்சபட்சிசாத்திரம்.
பஞ்சபட்சியபரமான்னம் - கடித்தல், சுக்கல், பருகல், விழுங்கல், மெல்லல் என்னும் ஐவகைப் பொருள்களோடு கூடிய அமுது.
பஞ்சபத்திரகன் - வியசனமுள்ளவன்.
பஞ்சபரமேட்டிகள் - அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள்.
பஞ்சபலோதகம் - எலுமிச்சை, நாரத்தை, தமாத்தை, கொழுஞ்சி, மாதுளை என்ற ஐவகைப் பழங்களின் சாறு.
பஞ்சபல்லவம் - கடவுள் அருச்சனைக்கேற்ற ஐவகைப் பத்திரம்; அவை: ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, வில்வம், என்பன.
பஞ்சபன் - நீர்வேட்டுவந்த யக்ஷனுக்குத் தன் ரத்தத்தைக் கொடுத்துத் திருப்தி செய்வித்த சோழன்.
பஞ்சபாக்கியம் - மனிதரடையும் பாக்கியம் ஐந்து; அவை: தேகசுகம், தீர்க்காயுள், ஐஸ்வரியம், நல்லகுணம், கஷ்டமில்லாத மரணம் என்பன.
பஞ்சபாணச்செயல் - மன்மதனது பஞ்ச பாணங்களால் உண்டாகும் செயல் ஐந்து; அவை: உன்மத்தம், மதனம், மோகனம், சந்தாபம், வசீகரணம் என்பன.
பஞ்சபாணம்-மன்மதாத்திரமைந்து; அவை: முல்லை, அசோகு, வனசம், சூதம், நீலம். அவைகள்முறையே தைக்குமிடம்: உச்சி, நெற்றி, நெஞ்சு, மூலை, குய்யம் என்பன.
பஞ்சபாணன் - காமன், மன்மதன்.
பஞ்சபாணவத்தை - மன்மதாத்திரத்தினாலுண்டாமைந்துபாதி; அவை: சுப்பிரயோகம். விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம்.
பஞ்சபாணி - பார்வதி, விநாயகன்.
பஞ்சபாண்டவர்-பாண்டுவினைந்து புத்திரர்; அவர்: தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன் எனும் ஐவர்.
பஞ்சபாண்டவர்முல்லை - ஓர் முல்லைச்செடி.
பஞ்சபாதகம்-ஐந்துதோசம்; அவை: கனவு, கள்ளுண்ணல், விபசாரம், கொலை, பொய்.
பஞ்சபாதகன் - பஞ்சபாதகஞ் செய்வோன், முழுத்தறோசி, மகாபாதகன், சண்டாளன்
பஞ்சபாத்திரம் - பூசையில் உபயோகிக்கும் ஐந்துவகைப் பாத்திரம்.
பஞ்சபாரதீயம்-நாரதமுனிவர் செய்தருளிய புராதனமான இசைத்தமிழ்நூல்.
பஞ்சபூதச்சாரக்கு - இரசம், வீரம், பூரம், இலிங்கம், தானகம்.
பஞ்சபூதம் - ஐந்துபூதம்; அவை: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன.
பஞ்சபேதி - அன்னபேதி, சந்திரபேதி, ரூபபேதி, பரிசபேதி, மாக்ஷிகபேதி என

கெழித்தும் பொருள்கள் ஐந்து. [கூற்று.
பஞ்சப்பாட்டு - ஓயாதுழைத்தனங்கூறும்
பஞ்சப்பிரமம் - பஞ்சமுகேச்சுரன், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐம்முகங்களாம்.
பஞ்சப்பிராணன் - உடலிலுள்ள பிராணன்; அவை: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்னும்வாயுக்கள்.
பஞ்சமகதி - மோக்கம், மோட்சம், நற்கதி.
பஞ்சமம் - அழகு, ஐந்து, ஓர்பண், சத்ததானத்தொன்று, சப்தசுரங்களில் ஐந்தாவது சுரம், சமர்த்து. [தூல்.
பஞ்சமரபு - அறிவனூர் செய்த இசைத் தமிழ்
பஞ்சமலம் - ஐந்துமலம்; அவை: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்பன.
பஞ்சமன் - நால்வருணத்தாருக்குப் புறமான வருணத்தார்.
பஞ்சமாசத்தம் - பஞ்சக்கருவி.
பஞ்சமாசியம்-குயில், கோகிலம், கோரகை.
பஞ்சமாபாதகன் - பஞ்சபாதகன், மகாபாதகன்.
பஞ்சமாயெக்கியம் } ஐவகையாம்; அவை:
பஞ்சமாயெஞ்ஞம் } (முறையே) அக்கினி கருமம், தேவபூசை, பிதிர்பூசை, விருந்தோம்பல், வேதாத்தியயனம் என்பன.
பஞ்சமாரன் - பூல தேவன்மகன், மன்மதன்.
பஞ்சமி - அவிட்ட முதலைந்து நான், ஐந்தாந் திதி, சொக்கட்டான் மனை, துரோபதி, துர்க்கை, மாயை. [பேய்.
பஞ்சமிப்பேய் - பஞ்சமியிலிறந்துழி நிற்கும்
பஞ்சமிலெவவாதம் - சிற்ருமணக்கு.
பஞ்சமுகவாத்தியம் - துந்துபி, துந்துமி.
பஞ்சமுகன் - சிங்கம், சிவன், ஐம்முகன்.
பஞ்சமுத்திரை - சைவ சமயக்குறி; அவை: உருத்திராக்கம், கமண்டலம், காவிப்புடவை, சடை, தண்டு. (2) பாதங்களில் காணப்படும் பதுமம், சங்கம், மகரம், சக்கரம், தண்டம் என்பன.
பஞ்சமூர்த்தி - சிவனின் ஐந்து மூர்த்தங்கள்; அவை: விநாயகர், முருகன், சிவன், உமை சண்டேசுரன்.
பஞ்சமூலம் - ஐவகை மூலம்; அவை: சிறு பஞ்ச மூலம், பெரும்பஞ்சமூலம் என இருவகையானது.
பஞ்சமூலி-அவை:வெள்ளெருக்கு, மாவிலிங்கம்,சித்திரமூலம்,வாலுளுவை,முருங்கை.
பஞ்சமேனம் - (சாவில் வழங்கும்) சங்கு,ஜாலர், தவில், மத்தளம், பம்பை.
பஞ்சம் - ஐந்து, கருப்புக்காலம், விழுதல் ஓய்தல்.
பஞ்சயன் - பஞ்சாத்திரி, ஓர்வைணவன்.
பஞ்சயாகம்-ஐந்தியாகம்; அவை: சுற்றப்போவழிப்பு, தனக்குணவு, தேவபலி, பிதிர்பலி, யோகிகள்பலி என ஐவகைப்படும்.
பஞ்சரத்தினம்-ஐவகைநிதி; அவை: சுகந்தி, பொன், மரகதம், மாணிக்கம், முத்து. இரத்தினம் போன்றஐந்துவிடயங்களடங்கிய ஓர் பிரபந்தம்.
பஞ்சரம் - இடம், உடல், கழுகு, கூடு, செருந்திமரம், மட்கலம்வனையுங்கூடம்.
பஞ்சராகேடம்-மீன்களேக்கொல்லுமுபாயம்
பஞ்சராத்திரம் - வைணவமதத்தொன்று.
பஞ்சரி - ஒருவீசையளவு. [ட்க.
பஞ்சரிக்க - உபசாரமாய்ப்பேச, கெஞ்சிக்கே
பஞ்சரித்தல் } உபசாரமாய்ப்பேசல், குதலை
பஞ்சரிப்பு } பேசல், கெஞ்சிக்கேட்டல், விரிவாய்ப்பேசல், பஞ்சம்பாடுதல்.
பஞ்சரைத்தல்-பஞ்சில்கொட்டை எடுத்தல்.
பஞ்சலட்சணம் - இலக்கணமைந்து; அவை: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இதுவன்றி, புராணவுறுப்பைந்து; அவை: சருகைத்தலைவர்வமிசம், பிரபஞ்சத்தோற்றம், பிரபஞ்சநாசம், மனுக்களாசாட்சி, மனுவமிச வாலாறு.
பஞ்சலவணம் - ஐவகையுப்பு; அவை: காசலவணம், பிடாலவணம், சயிந்தலவணம், சவ்வர்ச்சலவணம், சமுத்திரலவணம்.
பஞ்சலிங்கம் - பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களிளுலும் தனித்தனியுண்டான லிங்கங்கள். அவை பிருதுவி லிங்கம் காஞ்சியிலும், அப்பு லிங்கம் ஜம்புகேசுரத்திலும், தேயுலிங்கம் அருணசலத்திலும், வாயுலிங்கம் காளத்தியிலும், ஆகாசலிங்கம் சிதம்பரத்திலும் உள்ளன. [மாறுதல்.
பஞ்சலித்தல் - மதுமயக்கத்தால் மனந்தடு
பஞ்சலிப்பு - பஞ்சங்கூறுதல், பஞ்சத்தின் வருத்தம், எளிமைகூறல், பஞ்சம்பாடுதல்.
பஞ்சலோகம் - ஐந்துலோகம்; அவை: இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி.
பஞ்சலோபி - மிகுபிசுனன், மிகுலோபி.
பஞ்சவண்ணத்தவிசு-ஐந்துவர்ணத்தாலாகிய பீடம்.
பஞ்சவண்ணம் - வெண்மை, கருமை, பசுமை, பொன்மை.
பஞ்சவண்ணத்துகில் - ஐந்து வருணமுள்ள ஆடை.

பஞ்சவண்ணப்படாம் - ஐந்நிறக்கொடி.

பஞ்சவமாராயன் - மூதலிலராசராசனுடன் எதிர்த்த ஒரு வீரன். இவன் போரை மெச்சி அவனுக்குப் பல கூற்றங்களைத் தந்து, தனக்குக் கப்பங்கட்டி வரச் செய்தவன்.

பஞ்சவன் - ஐவகைப் படைகளையுடையவன், பாண்டியன்.

பஞ்சவடம்-பூணூல், பூணுநூல், உபவீதம்.

பஞ்சவடி - மயிற்கயிற்றாலாகிய பூணூல்.

ஸ்ரீராமர்வனவாச காலத்தில் ஆசிரமம் அமைத்துக்கொண்டிருந்த இடம்; இது: கோதாவிரிநீரத்திலுள்ளது, வடம், ஆல மரம், ஐந்து ஆலமரங்கள்கூடி யொரு தோப்பா யிருப்பதால் பஞ்சவடியெனப் பட்டது. [ட்டும் வில்.

பஞ்சவட்டந்தடி-எழுக்குக்கோல், பஞ்சுகொ

பஞ்சவத்திரம் - ஐவண்ண வஸ்திரம்,சிங்கம்.

பஞ்சவத்திரன் - சிவன், புராந்தகன்.

பஞ்சவர் - பாண்டுமக்கள், பஞ்சபாண்டவர்.

பஞ்சவர்ணக்கிளி - ஐவர்ணமுடைய கிளி வகை.

பஞ்சவர்ணம் - வெள்ளை, கருப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை என்ற ஐவகை நிறம்.

பஞ்சவர்தூதன்-கிருட்டினன், வாசுதேவன்.

பஞ்சவற்கலம் - அத்தி, அரசு, ஆல், பூவரசு, வேல் என்பவற்றின் பட்டை.

பஞ்சவனநாதர் - திருமூக்கீச்சுரத்திலேகோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

பஞ்சவன்-பாண்டியன், வேம்பின்றாரோன்.

பஞ்சவன்னக்கிளி - பஞ்சவர்ணக்கிளி.

பஞ்சவன்னம் - பஞ்சவர்ணம்.

பஞ்சவாசம் - ஐவகைவாசம்; அவை: இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

பஞ்சவாதனம்-அனந்தாசனம், கூர்மாசனம், சிங்காசனம், பதுமாசனம், யோகாசனம்.

பஞ்சவிஞ்சதி - இருபத்தைந்து.

பஞ்சவிடயம்-பஞ்சப்பொறியிலு லறிபவை; இரசம், உரூபம், கந்தம், சத்தம், பரிசம்.

பஞ்சவில்வம் - கொச்சி, மாவிலங்கை, வில்வம், மூட்கிழுவை, விளா என்பன.

பஞ்சவெச்சம் - பஞ்சயாகம். [கிழவன்.

பஞ்சறைக்கிழவன் - அறக்கிழவன், தளர்ந்த

பஞ்சனம் - அழிவு, கைதவு, ஒழிவு.

பஞ்சனி - சொக்கட்டான் மனை, பஞ்சாரி.

பஞ்சஸ்கந்தம் - உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ற ஸ்கந்தங்கள்.

பஞ்சா - மகமதியருடைய விழாக்களிற் கொண்டாடுமொரு சின்னம்.

பஞ்சாக்கரம் - பஞ்சாட்சரம், ஐந்தக்கரம்.

பஞ்சாக்கரப்பஃறொடை - பண்டாரசாத்திரத்துள் பின்வேலப்பதேசிகர் இயற்றிய நூல்.

பஞ்சாக்கினி - ஐந்துவகை அக்கினி; அவை: (1) தவஞ்செய்வோர் அமைத்துக் கொள்ளும் ஐந்து அக்கினி (2) தேகத்திலுள்ள ஐந்து அக்கினி (3) தேகத்திலமையும்(அவத்தையாகிய) ஐந்து அக்கினி (4) மருந்து வகையாகிய ஐந்து அக்கினி.

(1) தவஞ்செய்வோர் நான்கு திக்கிலும் அக்கினிசூழ மேலே சூரியன்காய அமைவதாகிய ஐந்து அக்கினி.

(2)தேகாக்கினி: இராகம்,வெகுளி,காமம். சடம்,தீபனம்என்ற ஐந்து வேதையுமாம்.

(3) தேக அவத்தாக்கினி: உதராக்கினி, சூரியதாபாக்கினி, தவாக்கினி, நிதாககராக்கினி, இரவிகாந்தாக்கினி.

(4) மருந்துவகைபஞ்சதீபாக்கினி: சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், ஏலம்.

பஞ்சாக்கினிக்கொடி - வேலிப்பருத்தி,காட்டுக்கருணை, மரல், புளிநறளை, நறளைக்கிழங்கு என்னும் ஐவகைக்கொடிகள்.

பஞ்சாங்கக்காரன்-சோதிடன், புரோகிதன்.

பஞ்சாங்ககுத்தம்
பஞ்சாங்கக்கூர்மை } ஆமை, உறுப்படக்கி.

பஞ்சாங்கத்தெண்டன்-முழங்கால்கள், கைகள், தலையெனு மைந்துறுப்பு நிலத்தோய வணங்குதல். [டபலன்.

பஞ்சாங்கபலன்-பஞ்சாங்கநிருமித்தலிற்கண்

பஞ்சாங்கம் - ஆமை, குதிரை, சோதிடத்திற்குரிய வைந்துறுப்பு; அவை: கரணம், திதி,நட்சத்திரம்,யோகம்,வாரம்என்பன.

பஞ்சாங்கம்படித்தல் - வீண்கதை பேசுதல்.

பஞ்சாங்கம்வாசித்தல்-புதுவருஷப் பஞ்சாங்கத்தின் பலாபலன் படித்தல். [று.

பஞ்சாங்கவாக்கியம்-கணித முறையினென்

பஞ்சாங்கி - குதிரைக்கடிவாளம், பரிவார்.

பஞ்சாங்குலம் - ஆமணக்கு, கை, கரம்.

பஞ்சாசத் - ஐம்பது, பஞ்சமி.

பஞ்சாசயம் - ஆமாசயம்,இரத்தாசயம், கர்ப்பாசயம், சலாசயம், மலாசயம் என்பன.

பஞ்சாசியம் - சிங்கம், மிருகேந்திரன்.

பஞ்சாடித்திருக்கை-ஓர்வகைதிருக்கைமீன்.

பஞ்சாடுதல் - கண்பஞ்சடைதல்,கண்மங்கல்.

பஞ்சாட்சாக்காவடி - விபூதிக்காவடி.

பஞ்சாட்சரம் - சிவநாமாட்சரமைந்து.

பஞ்சாணியம் - மாமஞ்சள்.

பஞ்சாதலை-பஞ்சாக்கினிமத்தியிற்புரிதவம்
பஞ்சாப்ஸரஸ் - மந்தகர்ணன் தண்டகாரணியத்தி லுண்டாக்கினவோர் குளம்.
பஞ்சாமிர்தம் - ஐந்தமுதம்; அவை: சருக்கரை, தயிர், தேன், நெய், பால். (2) வாழைப்பழம், தேன், சருக்கரை, திராட்சை முதலியவற்றாலாய அபிஷேக பண்டம்.
பஞ்சாமிலம்-இலந்தை, மாதளை, புளியாரை, நெல்லி, எலுமிச்சை இவைகள் சேர்ந்தது.
பஞ்சாமுதம் - பஞ்சாமிர்தம், பஞ்சாமுது.
பஞ்சாயத்தார் - நியாயசங்கத்தார்.
பஞ்சாயத்து / பஞ்சாயம் } ஐவர்கூடி விசாரிக்கும்நியாய சபை, ஐந்துபேர்கூடியநியாய சங்கம்.
பஞ்சாயுதபாணி / பஞ்சாயுதன் } விட்டுணு, திருமால்.
பஞ்சாயுதம் - ஓராபரணம், விட்டுணுவினேந்தாயுதம், அவை: சக்கரம், சங்கு, தண்டு, தனு, வாள் என்பன.
பஞ்சாய் - கோரைவகை, தூபக்கால்.
பஞ்சாய்ப்பறத்தல் - வேகமாய் நடத்தல், மீலகுலைதல்.
பஞ்சாரகேடம்-மீன்கூடு, மீன்பிடிக்கும்வலை
பஞ்சாரம் - எருது, பரியிவற்றினுயுள்.
பஞ்சாரி - சொக்கட்டான்மனை, பஞ்சனி.
பஞ்சாரூடபத்திரம் - கொடுத்தவன், வாங்கியவன், சாட்சிகளிருவர், எழுத்துக்காரன் ஆகிய ஐவர் கையொப்பமிட்ட பத்திரம்.
பஞ்சார்க்கதோஷம் - ஐந்தார்க்கதோடம், ஐந்தருக்கத்தானும் வருந்தோஷம்.
பஞ்சார்க்கம் - ஐந்தருக்கம்; அவை: இந்திரவில், கேது, தூமம், பரிவேடம், விதிபாதம்.
பஞ்சார்த்தல் - பஞ்சாடுதல், கண்பஞ்சடைதல்.
பஞ்சாலம்-பாஞ்சாலம் என்னும் ஓர்தேயம்.
பஞ்சாலை - பஞ்சிற் கொட்டை எடுப்பதும், நூல் நூற்பதுமான சாலை.
பஞ்சாவடம் - பூணூல், பஞ்சவடம்.
பஞ்சாவத்தம் - பிரேதம், கனேபரம்.
பஞ்சாவத்தை - அவை: சாக்கிரம், சொப்னம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.
பஞ்சாவயவம் - தருக்க சாத்திரத்தில் வரும் மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு, உபநயம், நிகமம், என்பன.
பஞ்சாளர் - பஞ்சகம்மாளர்.
பஞ்சானனம் - சிங்கம், அரி, வயமா.
பஞ்சானனன் / பஞ்சானன் } சிவன், ஐம்முகன்.
பஞ்சானுங்குஞ்சும் - குழந்தை குட்டிகள்.
பஞ்சான் - பச்சைக்குழந்தை, செடிவகை.
பஞ்சான்மா - அந்தரான்மா, சீவான்மா, தத்துவான்மா, பூதான்மா, மந்திரான்மா.
பஞ்சி - சடைந்தது, நொந்தது, நைந்தது, சோம்பல், தூறு, பஞ்சாங்கம், பஞ்சு, வெண்துகில், ஆடை, நுங்கின்மேலிருக்கும்நார், பன்னுடை.
பஞ்சிகம் - தாளி, பனைமரத்தாளி.
பஞ்சிகாரகன் - கணிதன், சோம்பன், வருத்தக்காரன், சோதிடசாஸ்திர நிபுணன்.
பஞ்சிகை - கணக்கு, நமன், பஞ்சாங்கம், மயிர். வியாக்கியப் பண்ணப்பட்டநூல்.
பஞ்சிதம் - விண்மீன், தாரகை, உடுக்குவி.
பஞ்சிநாண் - பூணூல், உபவீதம்.
பஞ்சிபடுதல் - பெருமூயற்சி செய்தல், மனச் சோர்வடைதல்.
பஞ்சியூட்டுதல் - மகளிர் பாதங்களிற் செம் பஞ்சிக்குழம்பு அணிதல்.
பஞ்சிற்றுகள் - ஒரு சிற்றளவு.
பஞ்சிற்றொடர் - நூனூனி, நூற்சாடு.
பஞ்சிகரணம் - பஞ்சபூத வமிசக்கூட்டம்.
பஞ்சுகடைதல் - பஞ்சின் கொட்டை கோது களைப்பிரித்தல். [சுத்திரன்.
பஞ்சுக்கொட்டை-நூற்றறற்கு அமைத்த பஞ்
பஞ்சு-சீலை, தூறு, பருத்திப்பஞ்சுமுதலியன.
பஞ்சுலேப்பாணி - தூருசு, மயிற்றூத்தம்.
பஞ்சுரம்-பாலைநிலத்தைச் சார்ந்த ஓர்பண், குறிஞ்சியாழ்த்திறம், பாலைநிலத்திராகம்.
பஞ்சுருட்டான்-பஞ்சுருட்டி எனும் பறவை.
பஞ்சுருத்தான் - ஓர்குருவி.
பஞ்சுவணம் - பாகவகைகள். [தல்.
பஞ்சுவாய்க்கொள்ளுதல் - மூலைக்கொள்ளு
பஞ்சூகம் - பெருமை, மகிமை, கண்ணியம்.
பஞ்சேந்திரியம - ஐம்பொறி; அவை: கண், காது, தோல், நா, மூக்கு, என்பன.
பஞ்சை - இரப்போன், எளிமை, தரித்திரம், பலவீனன், பாண்டிய வேளாளர் வகை.
பஞ்சைக்கோலம் - தரித்திரம், பிட்சுவேடம்.
பஞ்சைத்தனம்-உலோபித்தனம், உலோபம்.
பஞ்சைமயிர்-மெல்லியரோமம், மிருதுமயிர்.
பஞ்சையன் - எளியன், தரித்திரன், பலவீனன்.
பஞ்ஞிலம்-மக்கட்டொகுதி, மாந்தர்கூட்டம்.
பட - அழிய.
படகம்-இரணபேரி, கலகம், கவரிமா, கோல், தம்பட்டம், திரைச்சீலை, படாம்வீடு, பரண், விஷ்ணுக்கரந்தை, பற்பாடகம்.
படகாரன் - ஓவியன், நெய்வோன், சேணியன்.

படகு - தெப்பம், சிற்றோடம், படவு.
படகுடி-கூடாரம்,படாம்வீடு,படமண்டபம்.
படகுவலித்தல் - படகு செலுத்துதல், பட கோட்டுதல்.
படக்குப்படக்கெனல்-அச்சக்குறிப்பு, ஈரடுக் கொலிக்குறிப்பு, பதைபதைத்தல். [தல்.
படங்கடித்தல் - பொய்யை மெய்போற்பேசு
படங்கம்-படங்கு, புடமாடம், கூடாரம்.
படங்கள் - ஓர்வகைக் கடல்மீன்.
படங்கு-கூடாரம், சலாகை, பெருங்கொடி, பெருவரிச்சல்,மெய்போற்பேசுதல்,மேற் கட்டி,பதங்கம்,படமண்டபம், படமாடம்.
படங்குந்திநிற்றல்-தவம்புரிமுறையிலொன் றுன காலின் பெருவிரலூன்றி நிற்றல்.
படச்சரம் - பழம்புடவை, சித்திரத்திரை.
படபடத்தல் - துடிதுடித்தல், உதடு துடித் தல், விரைதல், கோபக்குறிப்பு, ஈரடுக் கொலிக் குறிப்பு, அடித்தல்- [த்தல்.
படபடப்பு - துடிதுடிப்பு, விரைவு, படபட
படபடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு,விரை வுக் குறிப்பு, துடித்துப்பேசல், அசைதல், வெடித்தல், தீவரித்தல்.
படபம் - பாதாளம், கீழேழுலகம்.
படபை - வடவைத்தீ, வடவாக்கினி.
படப்பம் - மருங்கிலூர், சூழ்ந்தநகரம்.
படப்பு - கொல்லை, வைக்கோற்போர்.
படப்பை-பசுக்கொட்டில், கொல்லை, நாடு, மருதநிலத்தூர்,ஊர்ப்புறம்,பக்கம்,மனைப் பக்கம், தோட்டம், படப்பு.
படப்பொறி - துத்தி, பாம்பின்பட ஒடை யாளம்.
படமக்கி-படமடக்கி,தாழை,வெண்தாழை.
படமஞ்சரி - ஓரிராகம், ஓர்வகைப்பண்.
படமடக்கி - தாழை, ஓர் பூதவம்.
படமண்டபம் } கூடாரம், படாம்வீடு.
படமயம் }
படமரம் - நெய்வார் கருவியிலொன்று.
படமெடுத்தல்-பாம்புபடம் விரித்தல், படம் பிடித்தல். [வீடு.
படமாடம்-கூடாரம், படமண்டபம், பாடி
படம் - எழுத்துப்படம்,காற்றோட்டி, சீலை, திரைச்சீலை, பாம்பின்படம், யானைமுக படாம், விருதுக்கொடி, காலின்படம்.
படம்பிடித்தல்-கருவிகொண்டு உருபப்படம் பிடித்தல். [தல்.
படம்புகுதல் - சட்டையிடுதல், மேலங்கியிடு
படர - செல்ல, கொடிபடர, ஓட, பெருக, ஊர, பரவ, நினைக்க. [த்தலே.
படரடி - சிதறவடிக்கை,முழுதும்வேண்ட
படருபவர் - படர்வோர், செல்வோர்.
படருருக்கி-செந்நாயுருவி, செங்கரமஞ்சரி.
படரை-ஆவிரை, ஆவிரிப்பூடு.
படர் - இழிமக்கள், எவல்செய்வோர், கருத் து, செலவு, துகிற்கொடி, துன்பம், துன் புறுவோர், நடை,நினைப்பு,நோவு, பகை, படரென்னேவல், படைவீரர்,மேடு, வரு த்தம்,வழி, அகலம், விரிவு, விசாலம்.
படர்கொடி - பயிர்க்கொடிவகை, பீர்க்கங் கொடி. [ருமிடம்.
படர்க்கை-தன்மை முன்னிலையல்லாதமூன்
படர்ச்சி-நடை, பரப்பு, பரவுதல், விரித்தல்.
படர்தல் - அகலம், நடத்தல், நினைத்தல், பரவுதல், விரிதல், நிலத்தெழுதல்,வருந் தல், அடைதல், பாடுதல்.
படர்தாமரை } ஓர் சரப்பாணெய்
படர்தேமல் }
படர்நோய்-நினைவினுலுண்டாம் வருத்தம்.
படர்ந்தெரிதல்-விளக்கில் எண்ணெய்அற்ற போது திரிதொடர்ந்தெரிதல்.
படர்பயிர் - பற்றிப்படரும் கொடிவகை.
படர்மல்லிகை-பூமியிற்படரும்ஓர்மல்லிகை.
படர்வு-படர்ச்சி, விரிவு, அகல்வு, விசாலம்.
படலம்-அடுக்கு, அதிகரிப்பு, அரதனக்குற் றம், இலக்கியச்செய்யுட் கூறுபாடு, கூட் டம், திசை, திலகம்,நேத்திரப்படலம்,பரி வாரம், படல், மூடி, ஆணவமலம்.
படலி-கூட்டம்,குழாம்,வீட்டின்மேற்கூரை.
படலிகை - இளைப்பு, கைம்மணி, படலம், பூந்தட்டு, பெரும்பீர்க்கு, வட்ட வடிவு, குடலை, பூவிடும் பெட்டி.
படலிடம் - குடிசை, குடில், சிறுவீடு.
படலியம் - குதிரையணிகளிலொன்று.
படலை-தழை, கட்டுக்கதவு, கோத்தமாலை, தார்மணி,பரந்தவடிவு,பரந்தவாய்ப்பறை, பூமாலை, முடிமாலை, கிண்கிணிமாலை, குலையிலுள்ள சீப்பு, வெளிக்கதவு.
படலைமாலை-பச்சிலைமாலை,படலைக்கண்ணி.
படல் - ஓலைக்கதவு, மறைக்கும்படல்,அகப் படுத்தல், அத்தமித்தல், உண்டாதல், ஒன்றுடனே தோய்தல்,கெடுதல்,சாதல், தட்டி, தெறித்தல், படுதல், பதிதல், புல னிலேறுதல்,பூத்தல், மூட்டுதல், வீழ்தல், தாழ்தல்,வியங்கோண்முற்று,இணங்கல், படுதல், கைப்படல், இடுகு. [ன்.
படவன்-படகோட்டி, தோணியியக்குவோ
படவா - போக்கிரி, இழிந்தவன், வடவா முகாக்கினி.
படவாசகம் - கூடாரம், வாசனைத்தூள்.

படவாள்-படைவாள், குத்துவாள், வாளாயு
படவீடு - கூடாரம், பாடிவீடு. [தம்.
படவு-படகு, சிற்றோடம், தீர்மாடம், தோணி.
படவை - செருப்படை, செடிவகை, வடவா முகாக்கினி.
படற்றி - வாழைவகை, கதலிவகை.
படனம்-படித்தல், மனப்பாடம். [ரன், பேய்.
படன் - இழிகுலன், படைவீரன், யமகிங்க
படா-பெரிய, மெச்சத்தக்க, படாஅ, படாத, படமாட்டா, படாமல், படாதனப்பட்டு,
படாகவாசம் - தேவாலயக்கொடி. [உடல்
படாகா - பட்டாசு, சீனவெடி.
படாகி-கர்வி, பொய்சொல்வோன். [கொடி.
படாகை - கிராமம், விருதுக்கொடி, ஜெயக்
படாங்கு-பாசாங்கு, சிவப்புநிறமுள்ளஆடை.
படாச்சாரம் - சத்திச்சாரம். [பரம்.
படாடோபம்-நடை, உடைப்பகட்டு, ஆடம்
படாது - படாமல், படாதது, ஏற்படாதது.
படாதபடுதல் - அதிகத் தண்டப்படுதல்.
படாநிந்தை - அடாப்பழி, பெரும்பழி.
படாந்தரம் - கட்டுக்கதை, கோள், மூழுப் பொய், கற்பனைச்சொல், மிகுத்துக் கூறுகை.
படாபஞ்சனம்-தீர்க்கநாசம், படாவஞ்சனம்.
படாப்பழி - பெரும்பழி, படாநிந்தை.
படாமுரசு - ஓயாது ஒலிக்கும் பேரிகை.
படாம் } சீலை, திரைச்சீலை, பெருங்கொடி,
படாஅம் } விதானமுற்று, சேலை, கொடி.
படாம்வீடு-கூடாரம், படமண்டபம், படமயம்
படாய் - தடபுடல், இறுமாப்பு.
படாரமூக்கி - வெண்ணுயுருவி, நாயுருவி.
படாரர் - கடவுள், பூசியர்.
படாரன் - பிடாரன், பாம்பாட்டி.
படாரிடுதல் - சத்தமிடுதல், ஒலிக்குறிப்பு.
படாரூபம் - படாப்பழி, அபரண்டப்பழி.
படாரெனல் - படாரிடுதல், ஒலிக்குறிப்பு.
படார் - பாந்தட்படார், சிறுதூறு, படுகர், நீர்நிலை, காடு, தூறு, அகப்படார், உட்படார், கெடார், தோலார், ஒலிக்குறி.
படார்படாரெனல் - வெடித்தலொலிக் குறிப்பு.
படாவஞ்சனம் } கடும்பொய், கொடிய வஞ்
படாவஞ்சனை } சனை, கொடியகரவடம்.
படாஅன் - உடன்படாள், உடன்படாதவள்.
படாஅன் - தோலாதவன், அழியாதவன்.
படி - ஒப்பு, ஓரளவு, குணம், குதிரையங்க வடி, சம்பளம், சோபானம், தரம், தரம்வாரம், நாழி, நிறையறிபடி, நீர்நிலை, தூறு பலங்கொண்ட நிறை, ஆள்படி, உண்ணு மளவு, பகை, படியென்னேவல், பூமி, வாயிற்படி, விதம், படிகம், பிச்சை, குளித்தல், தகுதி, வமிசபரம்பரை, ஓர் உவம வுருபு, பிரதி. [தல்.
படிகட்டுதல் - இடைகட்டுதல், படிகொடுத்
படிகப்பச்சை - நவமணியி லொன்று.
படிகமணி - படிகக்கன்மணி.
படிகம் - கூத்து, பளிங்கு, பிச்சை, வெள்ளி லோத்திரம், விளாம்பட்டை.
படிகர் - வாயிலாளர், வாயிற்காவலர்.
படிகால் - தலைமுறை, பரம்பரை.
படிகை-படிவு, புடவை, யானைமேலிடுதவிசு, நந்தியாவட்டம்.
படிகொடுத்தல் - நாளுக்குநான் வேண்டிய செலவு கொடுத்தல், தினசரிகூலி யீதல்.
படிக்க - வாசிக்க, கற்க, பாடமாக்க, பழக.
படிக்கட்டளை - கோயின் முதலியவற்றிற் குள்ள நித்திய விருத்திச்செலவு, நியமிதம்.
படிக்கட்டி - தடைக்கட்டு, தடுக்கு.
படிக்கட்டு - நியமஅளவு, எறியிறங்குபடி.
படிக்கம் - துப்பற்பாத்திரம், அபிஷேக நீர் முதலியவற்றைச் சேர்க்கும் பாத்திரம்.
படிக்கல் - நிறைகல், திராசுப்படி. [பணம்.
படிக்காசு - நாட் செலவுக்குக் கொடுக்கும்
படிக்காசுப்புலவர் - இவர் தொண்டைமண்டலத்தில் பொன்விளைந்த களத்தூரில் செங்குந்தர் மரபிலுதித்தவர். 1686-1728 வருடங்களுக்கு இடையிட்ட காலத்திருந்தவர். தொண்டைமண்டலத்தின் பெருமைகளைச்சிறப்பித்து "தொண்டைமண்டல சதகம்" என்ற ஒரு நூலும், வைத்தீஸ்வரன் கோவிலைக்குறித்துப் "புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம்" என்ற நூலும் இயற்றியிருக்கின்றார். இவர் இன்னும் பல விடங்களில் பல பாடல்கள் பாடியிருப்பதோடு இராமநாதபுரம் இராஜ நாத சேதுபதியவர்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்டுள்ளார். இவர் மகமதிய வள்ளான சீதக்காதியைத் தேடிக் காயற்பட்டணம் சென்றபோது அவர் சமாதியடைந்துவிட்டதைக் கேட்டு, வருந்தி, அவர் சமாதி யண்டையிற் சென்று, அவரைப் புகழ்ந்துபாடச் சீதக்காதி சமாதிக்குழியிலிருந்தபடியே வெளியிற் கையை நீட்டி புலவருக்கு மோதிரமீந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவர்கடைநாளில் சிதம்பரத்தையடைந்து, அங்கு ஓர் மடத்தை ஸ்தாபித்து அறமியற்றிவரும் நாளில், அறமியற்றுதலுக்குப் பொருள் வேண்டி நடராஜர் சந்நி

தியில் முறையிட டராஜமூர்த்தி அருள் சுரந்து, சந்நிதியின் பஞ்சாட்சரப் படியில் தினம் ஐந்து பொற்காசு வைக்கப்பெற்று அறமியற்றிவந்தார், அதனால் இவருக்குப் "படிக்காசுப் புலவர்" என்ற பெயர் வழங்கி வரலாயிற்று. பலப்பட்டடைச் சொக்கநாதப் புலவர் என்பவர் இவரை மிகவும் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

படிக்காரம்-சீனக்காரம், சீனிக்காரம். [வோர்

படிக்காரர் - படிகொடுப்போர், படிவாங்கு

படிக்கால் - ஏணி, இறவை, கடவை.

படிக்குப்பாதி- நியமித்ததிற்பாதி, சரிபாதி.

படிக்கூண்டு - மெத்தைப் படிக்கட்டு, மேன் முகடாகக் கட்டும் கட்டடம்.

படிசம் - தூண்டில், கொக்கி, கொழுக்கி.

படிதவற்றம் - சிற்றேற்றம்.

படிதம் - நிலைபரம், நிலைமை, ஒத்தஅமைப்பு.

படிச்சந்தம் - ஒப்பு, படம், ஓவியம், பிரதி சந்தம், நகல்.

படிச்செலவு - தினசரிச்செலவு.

படிதம் - படித்தல், கூத்து, துதி.

படிதல்-அமருதல், அமைதல், கலத்தல், குளித்தல், கூத்து, திருந்தல், பொருந்துதல்.

படிதவ்வியம் - படித்தற்குரியது, வாசிக்கத் தக்கது. [ஒழுங்கு, நடுத்தரம்.

படித்தரம் - நிபந்தனை, தினசரிக்கட்டளை,

படித்தல்-சொல்லுதல், பழகுதல், வாசித்தல்.

படித்திறம் - சூட்டிறைச்சி, சுட்டவிறைச்சி.

படித்தீன் - படிக்கணக்கான சாப்பாடு, படியூண்.

படித்துறை - படிக்கரை, படிக்கட்டு, படி.

படிநிலம் - பாலைநிலம், (நீரில்லாநிலம்) மயானம்.

படிப்படியாய் - சிறுகச் சிறுக.

படிப்படை - கூலிப்படை, கூலிச்சனம்.

படிப்பணம் - தினச்செலவுக்குக் கொடுக்கும் பணம்.

படிப்பனவு - படிப்பு, போதனை, உபதேசம்.

படிப்பனை-சமர்த்து, படிப்பு, போதனை, கலை.

படிப்பாளி-கற்றோன், கல்விமான், புலவன்.

படிப்பித்தல் - கற்பித்தல், பழக்குதல்.

படிப்பினை - படிப்பனவு, வங்கமணல்.

படிப்பு - அறிவு, கல்வி, சொல்லல், பழக்கம், புத்தி, வாசனை, வாசிப்பு, போதனை, கலை.

படிப்புக்காரன் - தந்திரக்காரன்.

படிப்புரை - ஒட்டுத்திண்ணை.

படிப்புறம் - அர்ச்சனைபோகம். [போன்.

படிப்போன்-மாணாக்கன், கற்போன், வாசிப்

படிமகன் - செவ்வாய், குசன், பௌமன்.

படிமக்கலம் - கண்ணாடி, படிமக்களம், ஆடி.

படிமதாளம் - நவதாளத்தொன்று.

படிமத்தான் - படிமாத்தான், சன்னதகாரி, தேவராட்டி.

படிமத்தான் } தேவராளன், ஆவேசக்கா
படிமத்தோன் } ரன், சாமியாடி, வெறியாட்டுக்காரன்.

படிமம்-கண்ணாடி, சுத்தம், வெண்மை, வெறியாட்டு, பிரதிமை, தூய்மை, வடிவம், பூதம்.

படிமரத்துமோசிகீரனார் - ஓர் சங்கப்புலவர்.

படிமவிரதம் - பிரமசரிய விரதம்.

படிமாத்தாள்-மடிமாத்தான். [சங்கப்புலவர்.

படிமாற்றூர்மோசிகீரன் கொற்றனார் - ஓர்

படிமானம் - கீழ்ப்படிதல், தகுதி, திருத்தம், விலகுதறதல், சரிமானம், வணக்கச்

படிமுழுதிடந்தோன்- திருமால். [சுருக்கம்.

படிமுறை - சோபானக்கிரமம்.

படிமேடை-படிப்படியாயுள்ள ஆசனவரிசை.

படிமை-தவவேடம் தவச்சொரூபம், தவநிலை

படியகம் - படிக்கம், துப்பற்பாத்திரம்.

படியங்கொற்றன் - கடைச்சங்கப் புலவரிலொருவன்.

படியச்சு - ஓர்கருவி, நேரொப்புடையது.

படியப்பார்த்தல் - அடக்குதல், குறைத்தல், சேர்த்தல், பொருத்திப் பார்த்தல்.

படியரம் - ஓரரம், அராவுகருவி, ஓராயுதம்.

படியரிசி - கட்டளையாகக் கொடுக்கும் அரிசி.

படியர் - வடிவமுடையவர்.

படியவைத்தல் - படியப்போடுதல், அடங்கச் செய்தல். [தல்.

படியளத்தல் - படிகொடுத்தல், கூலிகொடுத்

படியளந்தோன்-விட்டுணு, உலகளந்தோன்.

படியாள் - படிகாரன், பண்ணையாள்.

படியோர் - பகைவர், எதிரிகள், முனிவர், விரதமுடையவர், படியார், கீழ்ப்படியாதவர், பிரதியார்என்பதின் திரிவு, அந்நியர்.

படிரம் - படரம், உயரம், உதரம், வாதம்.

படிலன்-வீரன், வேலைக்காரன், ஏவற்காரன்.

படிவம்-உடலுறுப்பு, சித்திரரூபம், நோன்பு, வடிவு, வழிபடு தெய்வம், தவ வேடம், வகுப்பு. [கள்.

படிவர் - சடைமுடியோர், முனிவர், துறவி

படிவு-அடங்குகை, அழுந்துகை, கீழ்ப்படிவு, குளித்தல், தாங்குதல், தாழ்தல், வணக்கம்.

படிறர்-திருடர், தூர்த்தர், பொய்யர், வஞ்சகர்

படிறன் - வஞ்சகன், திருடன், கொடியன்.

படிறு-வஞ்சனை, குறும்பு, திருட்டு, கொடுமைகளவு, பொய், குற்றம். [தை.

படிற்றுரை-பொய்வார்த்தை, வஞ்சகவார்த்

படிற்றொழுக்கம் - இழிதொழில், தீர்த்தர் கூடாவொழுக்கம், கள்ளநடை.
படினம்-பக்குவம்,மேன்மை,வெற்றி,கல்வி.
படின் - தாழின், பட்டால், ஏற்பட்டால்.
படீஇ - பட்டு.
படீஇய - பட்ட, படுத்த, பட.
படீஇயர் - பட, படுக.
படீரம் - உதரம், உயரம், சந்தனம், சிவப்பு, வயல், வாதக்கூறுணநோய், படிரம்.
படீரிடுதல் } வெடித்தலொலிக் குறிப்பு,
படீரென்றல் } ஓசைக்குறிப்பு.
படீரனம்-பறவைக்கதிவிசேடங்களிலொன்று.
படு - உப்பு, குலை, கன், குளம், கூர்மை, கொத்து,சம்பத்து, நன்மை, நீர்நிலை, மடு, படுவெண்ணெவல், மிகுதிக்குறிப்பு.(உ-ம்) படுபொய்,வெப்பம், பகை, பயன்,உவமை உருபு (போன்ற) [துண்டு.
படுகட்டை - கிழவன், கிழவி, உலர்ந்த மரத்
படுகரை - பெருங்கரை, பெருத்தகரை.
படுகர் - இழிந்தோரும்வழி, குளம். பள்ளம், மருதநிலம், வயல், ஓர்சாதியார்,நீர்நிலை.
படுகளம்-போர்க்களம்,யுத்தக்களம்,சமரிடம்.
படுகளி - பெருஞ்சேறு, மிகுமகிழ்ச்சி.
படுகள்ளன்-வலுகள்ளன், போக்கிரி. [காடு.
படுகாடு - கடுகாடு, மரங்கள் ஒருசேரவிழுந்த
படுகாயம்-உயிர்ச்சேதம் விளைவிக்கும்காயம்.
படுகாய்ச்சி- உபசாரமறியாதவன்,மரியாதை யறியாதவன், கட்டையிற் புகையிலை.
படுகாரம் - வெண்காரம்.
படுகாலை - அந்திப்பொழுது.
படுகால் - வணி, சேணி, படி, மேகலை.
படுகி - சீனக்காரம், படிக்காரம். [ஆழம்.
படுகிடங்கு - பொறிகிடங்கு, படுகுழி, மிக
படுகிடை - நோய்மிகுதியால் எழுந்திருக்க முடியாதநிலை.
படுகிழவன் - தொண்டுகிழவன்.
படுகு - வாக்குவிசேடம், சொல்விசேடம்.
படுகுடி - கெடுகுடி, நொந்தகுடி. [கிடங்கு.
படுகுழி - யானை முதலிய மிருகங்கள் படு
படுகை - ஆற்றங்கரையடுத்திருக்கும் நிலம்.
படுகையாமணக்கு - வயலையடுத்த ஓராமணக்கு.
படுகொலை - கொடுங்கொலை.
படுக்க - கிடக்க, போரடிக்க, தலைவரிசை செய்ய, பிடிக்க, செய்ய, கொல்ல.
படுக்கங்கொள்ளி - படுக்காளிமாடு.
படுக்கவைத்தல் - தோற்கடித்தல், அமர்த்தல்.
படுக்கனம் - படுக்குமிடம்.
படுக்காளி - தக்கிரி, பொய்யன், போக்கிரி.
படுக்காளிப்பயல் - பொய்யன்.
படுக்காளிவிசேஷம் - கட்டுக்கதை.
படுக்கை - அடிப்பட்டடை, படுத்தல், பல்லணம், மக்கட்படுக்கை, விலங்கின்படுக்கை, வள்ளத்தினடியிற் பரப்பும் புல்.
படுக்கையறை - பள்ளியறை, சயனவறை
படுசுட்டி - மிகுந்த புத்திகூர்மையுள்ளவன், கூர்மையுள்ளவன், பரமதுஷ்டன்.
படுசூரணம் - மருந்துத்தூள், முழுநாசம்.
படுஞாயிறு - அத்தம சூரியன், ஓர் நோய்.
படுதடி - பட்டதடி, முரட்டுத்தனம்.
படுதண்டம் - மிகு வணக்கம்.
படுதம் - கூத்து, நடனம்.
படுதல் - அகப்படுதல், அத்தமித்தல், இல்லாமை, மொய்த்தல் பொறுத்தல், உண்டாதல், ஒலித்தல், ஒன்றன்மீ தொன்று படுதல், சாய்தல், சகித்தல். சாதல், தாழ்தல், விளித்தல், பதித்தல், புலப்படுதல், பூத்தல், மூட்டுதல், பொருதல், தங்குதல், வீழ்தல், புண்படுதல், ஒத்தல்.
படுதா - ஒதுக்கிடம், திரைச்சீலை, மூடுசீலை.
படுதாமரை - படர்தாமரை, படர்வாரிசம்.
படுதிருமம்-வெள்வேல், பெருவேல்.
படுதேவடியாள் - பேர்போனவேசி.
படுத்தடி-முரட்டுத்தன்மை, மூர்க்கத்தனம்.
படுத்தலோசை-தாழ உச்சரிக்கப்படு மொலி.
படுத்தல் - அகப்படுத்தல், கொலை செய்தல், சயனித்தல், சேர்ப்பித்தல், பரப்புதல், தலைவரிசை செய்தல், துன்புறுத்தல். சயனிப்பித்தல், செறித்தல்.
படுத்திருமம்-வெள்வேலமரம், பெருவேல்.
படுத்துவம் - சமர்த்து, வலிமை, திறமை.
படுநஞ்சு - கொடிய விஷம்.
படுநிந்தனை - பெரும்பழி.
படுநிலம் - பாலைநிலம், மயானம்,யுத்த பூமி.
படுநீலி - முழுநீலி, கொடுமைக்காரி.
படுநெகம் - இராச்சியபாரம்.
படுநெருப்பு - கொடுந்தீ, பெருந்தீ.
படுபட்சி - பஞ்சபட்சி, சோதிட நூலிற் கூறும் பட்சிகளில் வலியிழந்த பட்சி.
படுபயன் - மிகுபொருள், பெரும்பொருள் விளையும் முடிவு. [வன்.
படுபழம் - முதிர்ந்தபழம், வஞ்சகன், கிழ
படுபழி - மிகுபழி, கொடிய தீச்செயல்.
படுபள்ளம் - பெரும்பள்ளம், கசபள்ளம்.
படுபாக்கு, படுமாறு, படுவான், படும்பொருட்டு, படுத்தல்.
படுபாவி - மிகக் கொடியவன்.
படுபுரளி - சுத்தப்புரளி, அண்டப்புரட்டு.

படுபுளுகு - மிகுபுளுகு, வீண்புகழ்ச்சி.
படுபொய் - முழுப்பொய், பெரும்புளுகு.
படுபொருள் - புதையல், நிகழ்வது.
படுபொழுது - மாலைநேரம், அந்திநேரம்.
படுபோர் - கொடியசண்டை.
படுப்ப - அமைக்க, அமைக்கப்படுகை, அமைக்கத்தக்கவை.
படுப்பு - அமைத்தல், சேர்த்தல், படுக்கை.
படுமணை - பெரும்பலகை, நாற்காலி.
படுமணைத்தானம் - சேணம்.
படுமரம்-பட்டமரம், வீழ்ந்தமரம், தளர்மரம்.
படுமலைப்பாலை - ஓரிசைப்பாலை, நிலப்பண்.
படுமுடிச்சு - அவிழா முடிச்சு, கெட்டிமுடி.
படுமுறை - தண்டம், தண்டப் பொருள்.
படுமோசம் - முழுமோசம், அநிவஞ்சம்.
படுவக்கால் - சேற்று நிலம்.
படுவங்கீரை - கீரைவகை.
படுவஞ்சினை - முழுதும் அழிகை.
படுவது - வருவது, வருபொருள், வருங்காரியம், வருதல். [சரிசி.
படுவநாயகி - பாற்சோற்றி, அம்மான் பச்
படுவம் - சேற்றுநிலம்.
படுவர் } கள் விற்போர், கள்ளிறக்கு
படுவன் } வோர்.
படுவன் - ஓர் நிலந்தி, ஓர்நோய், ஓர்பூண்டி.
படுவா - படவா, அயோக்கியன்.
படுவான்-அழிவான்,மேற்றிசை,மேற்றிக்கு.
படுவி-கள்விற்பான், குறியவள், தொழுதை.
படுவை - தெப்பம், மிதவை, வினைமுற்று.
படூஉ - பருத்து, பட்டு.
படே - பெரிய, மேன்மையான.
படை - அடக்கு, ஆயுதம், கருவி, கலப்பை, கல்லணை, செதில், தானை; இது: அரசியலிலொன்று, நிரன், நித்திரை, நிரை, படையென்னேவல், கலப்பையிலொரு றுப்பு, போர், போர்ப்படை, மெத்தை, பரிவாரம், சாதனம், யானைச்சூல், மேகப் படை, படுத்தல், கொல்லுதல், அடுக்கு மஞ்சில், சேணம், படைத்தல், அலங்காரம், தயாரிக்கப்படல், பொருத்துதல்.
படைகோள் - படைகொள்ளல், நிரளுதல், கொழு, படுதல், பதம்படல்.
படைக்கண் - மேற்கண், வாட்கண், படையில் போர்க்கணம், கொலைக்களம்.
படைக்கம் - சினைவெடி, டபாசு.
படைக்கலம் - ஆயுதப்பொது, எறிபடை, படைக்கும் பாத்திரம், கொல்கருவி, படைக்கமாட்டோம்.
படைக்கலக்காரணம் - ஆயுதப்பயிற்சி.
படைக்கல் - அழுதுபாறை, படைகல், உண்டாக்கல்.
படைக்குழப்பம் - படைவீரரின் குழப்பம்.
படைக்கை-படைத்தல், படைப்பித்தல்.
படைக்கோலம் - போர்க்கோலம், யுத்தக் கோலம்.
படைச்சனம் - படைவீரர்,பாளையம்,சேனை.
படைச்சால் - உழவுசால்.
படைச்சுவர்-மண்சுவர், படையாக வைக்கப் பட்ட சுவர், படைமதில். [வீரம்.
படைச் செருக்கு - படைவீரம், சேனையின்
படைச்சேரி-புறநகர், புறப்படைவீடு, படைகள் தங்குமிடம்.
படைச்சொல் - படைத்துமொழி நிழவி, பொய், கட்டுமானவார்த்தை, படுமொழி.
படைதிரட்டல்-சேனைக்கு ஆள்சேர்த்தல்.
படைத்தகை-படையின்ரூற்றப் பொலிவு, உண்டாக்கினகை, படைக்குந் தன்மை.
படைத்தலைவன் - சேனாபதி, இவன் அரசர்க்குறு துணைவரிலொருவன்.
படைத்தல் - உடைத்தாதல், சிருட்டித்தல்; இஃது: முத்தொழிலி லொன்று, சோறு முதலியயுண்கலத்திடுதல், நிவேதித்தல்.
படைத்தவன்-ஒன்றையடைந்தவன்,கர்த்தா, சம்பத்துடையவன், பிதா, பிரமன்.
படைத்திநிஞர்-படைத்தவர், கடவுள்.
படைத்துணை-போர்க்குதவி, போர்த்துணை.
படைத்தோன் - கடவுள், சிருட்டிகர்த்தா.
படைநர் - படைஞர்.
படைநாள் - படையெழுச்சிநாள்.
படைபயிற்றல் - நிலம்பம்பழக்கல்; அஃது: அரசாறுதொழிலிலொன்று,சமர்பயிற்றல்.
படைபிடித்தோர் - ஆயுதமேந்தியோர், ஆயுதத் தொழிலர், படைதரித்தோர்.
படைபேற்றல் - கீழறுத்தல், அடியறுத்தல்.
படைப்பண்டாரம் - சேனைக்குவேண்டிய சாமான் வைக்கப்பட்டிருக்குமிடம்.
படைப்பவுஞ்சு-படையொழுங்கு.
படைப்புணர்ப்பு - அணிவகுப்பு.
படைப்பு-சம்பாத்தியம், சாதமுதலிய படைத்தல், சிருட்டி, சிருட்டிக்கப்பட்டது.
படைப்பௌஞ்சு - படைப்பவுஞ்சு.
படைமடம்-வீரரல்லாதார் மீதும், முதுகிட்டார் மீதும், புண்பட்டார் மீதும் போரிடல்.
படைமயிர்-பாவாற்றி, நெய்வார்குச்சு.
படைமரம் - நெசவுக் கருவியிலொன்று.
படைமறத்தல்-கீழறுக்கை, சுரங்கமறுத்தல்.
படைமுகம் - போர்முகம், சமர்முகம்.

படைமுஸ்தீப்பு-சேனைக்குரிய சாதனங்கள்.
படைமூன்று - சம்மியற்கணைத்திராணம்,சம்மியற்க தரிசனம், சம்மியற்கசாரித்திரம்.
படையணி - தீப்பந்தம் வைத்து ஆடும் ஆட்டவகை, படைவகுப்பு.
படையல் - அடிக்குமடி,நிவேதனப்பொருள்.
படையறுவகை-அவை: மூலப்படை, கூலிப் படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை. [காரன்.
படையன் - அடித்தல், அடிமை, ஊழியக்
படையாச்சி - பள்ளிச்சாதியார், வன்னியர்.
படையாளர் - படைவீரர், யுத்தவீரர்.
படையிராசன்-படைத்தலைவன், வெடியுப்பு.
படையியங்காவம் - படைமுழக்கம், போ ரொலி, போராரவாரம்.
படையிறங்குதல் - பாளையம் தங்குதல். [கி.
படையுள்படுவோன்-சின்னமூதி, ஜெயமுழக்
படையுறுப்பு-படையணி, படையங்கம்.
படையுறை - ஆயுதவுறை, ஆயுதவைப்பு.
படையெடுத்தல் - சேனையெழுதல், படை புகுதல். [முதல்.
படையெழுச்சி - படையெழும்பல், போரெ
படையேறு - ஆயுதமெறிதல், ஆயுதவடு, ஆயுதம்படுதல்.
படைலோகம்-சிப்பி, கிளிஞ்சல், கிளிஞ்ஞில்.
படைவகுப்பு - தண்டம், மண்டலம், அசங் கதம், போகம் என்னும் நால்வகைச் சேனை வியூகம், அணிவகுப்பு.
படைவட்டம் - வளைதடி, பாராவலயம்.
படைவரம்-குதிரைச்சேணம், பரிமெத்தை.
படைவழக்கு-படைச்செலவு, ஆயுதங்கையா ளுதல், ஆயுதானஞ்செய்யல், பொய் வழக்கு.
படைவாணம் - ஆகாசவாணம்.
படைவாள்-கலப்பை, கலப்பையினேருயுப் பு, கொழு, காறு, அலகு.
படைவீடு - ஆயுதசாலை, இராசதானி, பாச றை(குமரக்கடவுளிருப்பிடமாகிய) திருப் பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவி னன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்கள்.
படைவீரர் - சேனைவீரர், யுத்த வீரர். [ரி.
படோலம் - யானைக்கட்டுத்தறி,முன்வெள்ள
படோலி - நிலவு, சந்திரப்பிரபை.
படோலிகை - புடல், வெள்ளரி.
படோலி } பேய்ப்புடல், காட்டுப்
படோல்ராசு } புடல்.
பட்கை - பாம்பின் மேல் வாயினேர்பல்.
பட்சகம் - திட்டிவாயில், ஒடுக்கவாயில்.
பட்சகன் - பேருண்டியன், பெருந்தீனியன்.
பட்சசரம் - பட்சி, பஞ்சபட்சிசரம்.
பட்சசரன் - பார்ப்பான், பட்சிசாஸ்திரன்.
பட்சணம் } இரை, உணவு, உண்டல், சிற்
பட்சனை } றுண்டி.
பட்சணம்பண்ணுதல்-உண்ணுதல்,புசித்தல்.
பட்சணி-உண்போன், பெருந்தீனிக்காரன்.
பட்சணித்தல் - உண்டல், புசித்தல்.
பட்சணீயம் - உண்ணத்தகுபொருள்.
பட்சதாபம் - உருக்கம், பரிதாபம், இரக்கம்.
பட்சத்தில் - ஆயின், ஆனால்.
பட்சத்துவாரம் - திட்டிவாயில்,சிறுவாயில்.
பட்சபாதம் - ஓரவாரம், ஒருதலைச் சார்பு.
பட்சபிந்து - நிலாமுகிப்புள், சகோரம்.
பட்சம் - உருக்கம், செட்டை, தரம், நேசம், பக்கம், பதினைந்துநாட்கொண்டது, பாட் டியமி, மீனம்பர், வகுப்பு,அன்பு,கிருபை.
பட்சயம் - போசனம், உணவு, சாப்பாடு.
பட்சவாதம் - பட்சபாதம், பக்கவாதம்.
பட்சவாதி - ஓரவாரஞ்செய்பவன்,வஞ்சகன்.
பட்சாந்தம் - பட்சத்தின் கடைநாள், அமா வாசை, பௌர்ணமி.
பட்சி - பட்சியென்னேவல்,பறவை,குதிரை.
பட்சிக்க - உண்ண, அழிக்க, விழுங்க.
பட்சிசாதி - பறவைக்குலம்,பறக்குமினம்.
பட்சிசாத்திரம் - பஞ்சபட்சிசாத்திரம் [லம்.
பட்சிசாலம் - பறவைக்கூட்டம், பறவைக்கு
பட்சிசிங்கம் - கலுழன், கருடன், உவணம்.
பட்சித்தல்-உண்ணல், விழுங்கல், அபகரித் தல், அழித்தல்.
பட்சித்தோஷம் - காலையில் பறவை நிழல் படுவதால் உண்டாவதாகக் கருதும் குழந்தை நோய், பறவையால் நேருந் தோஷம்.
பட்சிப்பு - பட்சித்தல், விழுங்கல், புசித்தல்.
பட்சியம் - மாப்பலகாரம், பணியாரம்.
பட்சியிராசன்-கலுழன், கருடப்பச்சைக்கல்.
பட்சியினெச்சம்-பொன்னம்பர்,பறவையின் மலம்.
பட்சிராஜன் - கருடன், பட்சியிராசன்.
பட்சு - பாகஞ்செய்வோன், பக்குவஞ்செய் வோன்.
பட்சேரி - பள்ளர் ஊர்.
பட்டகசாலை-பண்டசாலை, பொக்கிஷசாலை.
பட்டகம் - பண்டசாலை,ஆடுதின்னுப்பானை, புழுக்கொல்லிச்செடி.
பட்டக்கடம்பு - நீர்க்கடம்பு.
பட்டக்காரன் - வில்லைச் சேவகன், பட்டம் பெற்றவன், தொட்டியர்.

பட்டங்கட்டி - கைக்கோளரிற் றலை வன், நெய்தனிலமாக்களிற் றலைவன், பட்ட வத்தனன்.
பட்டங்கட்டுதல் - பட்டப்பேர் கொடுத்தல், முடிசூட்டுதல்,பதவியளித்தல்,கலியாணத் திற் பொற்பட்டங் கட்டல்.
பட்சம் - ஓர் ஆயுதம், பட்டாக்கத்தி.
பட்சாலை - பட்டகசாலை, பண்டசாலை.
பட்டச்சீட்டு-பட்டப்பேரொப்பம்,பட்டயம்.
பட்டச்சீலை - மெருகிடும் காகிதம்.
பட்டஞ்சூடுதல் - அபிஷேகமடைதல்,பட்ட மணிதல், மகுடந்தரித்தல்.
பட்டஞ்சூட்டுதல் - பட்டங்கட்டுதல்.
பட்டடை - கொல்லன்களரி, அதிர்வேட்டுக் குழாய்கள்பதித்தகட்டை, அடைகல், அடைகுறடு, கழுத்தணி, குவியல், தலைய ணையாக உதவுமணை, தாங்குபலகை, தா பரம், தானியவுறை, நரம்புகளின் இளி, இறைப்புப்பாசனத்தால் விளையுங்கழனி.
பட்டடைக்கழனி - தண்ணீரிறைத்துப் பயி ரிடுங்கழனி, தோட்டம். [தும்மரம்.
பட்டடைமரம் - இறைச்சி வைத்துக்கொத்
பட்டடையார்-முதல்வேலைக்காரர்,கம்மியர்.
பட்டணக்கரை - நகரப்பிரதேசம்.
பட்டணச்சுவாமி } பட்டணத்தார், பட்
பட்டணத்துப்பிள்ளை } டினத்தடிகள்.
பட்டணத்தார்-நெய்தனிலத்தார்.
பட்டணப்பிரவேசம் - நகர் வலம்வருதல்.
பட்டணம் - கடற்கரையூர், நகரம், இராச தானி, பட்டினம்.
பட்டணவர் - செம்படவர், வலைஞர்.
பட்டணை - பட்டுப்படுக்கை.
பட்டதாரி - சிறப்புப்பட்டப் பெயர் பெற்ற வன்.
பட்டது-நேரிட்டது, சம்பவம், உலர்ந்தது, அழிந்தது, அகப்பட்டது, தோன்றியது.
பட்டத்தியானை - இராசயானை, பட்டவர்த் தனம்.
பட்டத்தரசி - அரசனின் முதன்மனைவி.
பட்டத்திரி - நெருப்புத்திரி, தீப்பந்தம்.
பட்டத்திரீ } இராசாத்தி, பட்டத்தரசி.
பட்டஸ்திரி }
பட்டத்துக்குமாரத்தி - அரசன் றலைமகன்.
பட்டத்துக்குமாரன் - அரசன் றலைமகன்.
பட்டத்துத்தேவி - இராசாத்தி, இராணி.
பட்டத்துரை - பட்டவத்தனன், அரசன்.
பட்டந்தரித்தல் - பட்டப் பேர்கொடுத்தல், பட்டமணிதல், மகுடந்தரித்தல்.
பட்டந்தீர்தல் - ஆபரணம், துணி,கட்டிடம், மதில் முதலியவற்றிற் பட்டம் வகுத்தல்.
பட்டபாடு - அனுபவித்த துன்பம்.
பட்டபோது - அஸ்தமனம்.
பட்டப்பகல் - நடுப்பகல், நண்பகல்.
பட்டப்பேர் - குலமுறைப்பேர்,பட்டஞ்சூட் டற்பேர், இரண்டாம்பேர், செல்லப்பேர்.
பட்டமணி-பட்டை தீர்ந்தமணி, பட்டையடி
பட்டமரம் - உலர்ந்தமரம், படுமரம். [ரம்.
பட்டம்-ஆயுதம், எழுதும்படி செய்ததகடு, பருவகாலம், நெற்றிச்சுட்டி, கடுதாசிப்ப டம், கவரிமா, குளம், சதுக்கம்.சீலை,தீர்க் கம், நாற்காலி, நெற்றிப்பட்டம், பொன், பெட்டி மூலைகளை இணைக்கும் தகடு, பட் டினம், பரிசை, மனிதர்படுக்கை, வழி, வான்,விலங்கின்படுக்கை,ஆதிக்கப்பெயர், ஆளுகை, சீலை, பெருங்கொடி.
பட்டயம்-பிரசித்தபத்திரிகை,சாசனம்,வான்
பட்டரை - பட்டறை, கெற்போர்.
பட்டர் - பாடுவோர், அர்ச்சகர், கோயிற் பூசகர்.
பட்டவத்தனர் - பட்டந்தரித்த வரசர்.
பட்டவர்த்தனம்-அரசயானை,குதிரைச்சாதி.
கபடமற்றுப்பேசும் பேச்சு.
பட்டவியாமரம் - சிச்சிலிமரம்.
பட்டவிளக்கு - ஓர் விளக்கு, பட்டத்தீபம்.
பட்டறை - கண்டத்தணியு மோராபரணம், தொழிற்சாலை, நெற்போர்.
பட்டன் - சத்துரு, ஞானி, கவி பாடுபவன். ஓர்சாதிப் பிராமணன்.
பட்டா - பட்டயம், வண்டித்சில்லுகளுக்குப் போடப்படுமோரிரும்பு வளையம்.
பட்டா } வான், உரிமைப்பத்திரம்.
பட்டாக்கத்தி }
பட்டாங்கு-வழம், சித்திரச்சேலை, பரிகாசம், மெய், பழஞ்சாத்திரம், உள்ளநிலைமை, ஏற்பட்டபடி.
பட்டாசாரி - அர்ச்சகன்.
பட்டாசிரியன் - ஓர் சமயவாசிரியன்.
பட்டாசு - சீனவெடி, வாணம், வெடிவகை.
பட்டாடை - பட்டுவஸ்திரம்,பட்டுப்புடவை.
பட்டாணி - ஓர்கருவி, மகமதியரில் ஓர் வகுப்பார், ஓர்செடி.
பட்டாணித்தயிலம் - ஓர்சிரங்கெண்ணெய்.
பட்டாணிப்பயறு - ஓர்பயறு, பயறுவகையி லொன்று. [பாலை.
பட்டாணிப்பாலை - மகமதியர்க்குரிய ஓர்
பட்டாபிஷேகம் } பட்டந்தரித்தல், முடிசூ
பட்டாபிடேகம் } ட்டல், மகுடந்தரித்தல்.
பட்டாமணியக்காரன் - கிராமமுனிசீபு.

பட்டாம்பூச்சி - தட்டாரப்பூச்சி. [ரோர்.
பட்டாரகர் - கடவுளர், குருக்கள், பதவிபெற்
பட்டாரகன் - பதவிக்குரியவன், ஆசான், அரசன், அருகன், இருடி, கடவுள், குரு, சூரியன்.
பட்டாலிகம் - உறுதிப்பத்திரம், சாசனம்.
பட்டாளம் - படைவகுப்பு, சேனைவகுப்பு.
பட்டி - அட்டவணை, ஆட்டுக்கிடை, இடம், ஓர்செடி, ஓர்வித்தச் சிகிச்சை, களவு, கள்வன், கணைக்காலிலிருந்துமுழங்கால்வரையில் சுற்றிக்கொள்ளும் பட்டை, சிற்றூர், சீலை, தெப்பம், நெசிழ்ச்சி, படல், பலகறை, பின்னை, மந்தை, வாலியென்னுமோர்கருவி, சாமான்பட்டியல், நாய், நிலத்தினளவு, விக்கிரமாதித்தன் மந்திரி, பாக்குவெற்றிலைச்சருள், வேசி, காவாலி, சந்திரசர்மன் புத்திரன், விக்கிரமார்க்கன் தம்பி.
பட்டிகம் - பறவைகளின்கதி விசேடம்.
பட்டிகர் / பட்டிகள் } திருடர்கள், காவலாளிகள்.
பட்டிகன் - திருடன், கையன், சோரன்.
பட்டிகை - அரைநாண், சீந்தில், சீலை, சுவர்த்தலத்தின் சித்திரக்கம்பி, தெப்பம், தோணி, யோகப்பட்டை, செவ்வந்தி, தாழை, பாதிரி, எட்டிச்செடி, மூலைக்கச்சு, பத்திரிகை, பத்திரம்.
பட்டிக்கடா - மாப்பிள்ளைக்கடா, புணர்கடா.
பட்டிக்காடு - காட்டுக்குள் ஊர், சிறுகிராமம்.
பட்டிக்காரன் - கிராமப்பொதுஆழியக்காரன்
பட்டிக்கிடை - பட்டிக்கிடவை, கிராமக்கிடை.
பட்டிக்குறி - பாவணிக்குறி, வமிசக்குறி.
பட்டிசம் - ஓர்பாணம், ஆயுதவகை.
பட்டிடை - நந்தியாவட்டை, தேவதாரச்செடி.
பட்டிணி - பட்டினி, உபவாசம், விரதம்.
பட்டிதி - பார்ப்பனத்தி, போகமாது.
பட்டிப்படி - ஆடு மாடுமேய்ப்போர் செலவு.
பட்டிப்பயல் - திருட்டுப்பயல், காவாலி. [ம்பு.
பட்டிப்பார்த்தகொம்பு - முன்வளைந்த கொ
பட்டிப்பொங்கல் - மந்தையிற்பொங்கல்.
பட்டிமண்டபம் - பாடற்சபை, மண்டபம், ஓலக்கமண்டபம், வித்தியாமண்டபம்.
பட்டிமம் - கல்விபயில்மண்டபம்.
பட்டிமரம் - கள்ளமாட்டின் கழுத்திற் கட்டு மரக்கட்டை, மாட்டுவிலங்கு.
பட்டிமாடு - பயிரழிக்குமாடு, கொண்டிமாடு.
பட்டிமுறித்தல் - ஓர்விளையாட்டு, கட்டுக்கடந்துபோதல், கூட்டத்தைவிட்டுநீக்கல்.
பட்டிமேய்தல் - மிருகம் பயிரழித்தல், கண்டபடிதிரிதல்.
பட்டிமை - களவு, வஞ்சம், திருட்டுத்தனம்.
பட்டியடித்தல் - விபசாரம்செய்தல்.
பட்டியல் - வலிச்சல், விவரச்சீட்டு.
பட்டியூண் - பட்டிகாரனுக்கு வைக்கும் பங்கு.
பட்டியெருது - பட்டிமாடு, கள்ளமாடு.
பட்டிவாய் - வாய்ப்பட்டி, வாய்மூடி.
பட்டிவிடுதி - அந்திநேரத்தில் மழைவிடுதல்.
பட்டினச்சேரி - நூலையர்வாழிடம்.
பட்டினத்தடிகள் / பட்டினத்துச்சுவாமி } இவர், சோழநாட்டிலே, காவிரிப்பூம்பட்டினத்தில் வைசியகுலத்தில் ஆயிரத்திருநூறு வருஷங்களுக்குமுன்னே அவதரித்துத் திருவெண்காட் டீசனரிடத்தில் போன்புடையரா யொழுகின காரணத்தால்திருவெண்காடர்எனப்பெயர்பெற்றவர். இவர் கப்பல் வியாபாரத்தால்பெரும் பொருள் படைத்துக் குபேரனெனவும், சிவனடியாரைச் சிவனெனவே கொண்டு உபசரிக்கும் பத்தினிமேலீட்டால் சிறுத்தொண்டரெனவும் வாழ்ந்து, இல்லறம் நடத்திவருநாளில் புத்திரப்பேறில்லாமல் வருந்தியிருந்தார். இது கிற்க, திருவிடைமருதூரில் வசித்துவந்த ஆதி சைவராகிய சிவசருமரென்பார்தரித்திரத்தால்வருந்தி, மருதூரீசரிடம் முறையிடச் சிவபிரான் அருள் சுரந்து, ஓர் கிழவராக அவர் எதிர்தோன்றிச் "சிவசரும! நாம் ஓர் குழந்தை வடிவாக இங்குள்ளவில்வமரத்தின் கீழிருப்போம். நீ எம்மைக்கொண்டு சென்று, விற்று நின் கலிதீர்த்துக் கொள்" என்று கூற, ஆதிசைவர்அவ்வாறே அக்குழந்தையைக்கொண்டுசென்று, பட்டினத்தாரிடம் விற்றுப் பொருள் பெற்றுப்போயினர். பட்டினத்தடிகள் அக்குழந்தைக்கு "மருதவாணன்" என்று பெயரிட்டுப்புத்திரனைப் போலப்பாவித்து, வளர்த்துவந்தார். மருதவாணருக்குவயதுவந்தபோது அவர் விரும்பியபடி வர்த்தகத்திற்குப் பலகப்பல்கள் நிறையச்சரக்குடன்வெளிநாட்டிற்கு அவரை அனுப்பிவைத்தார். அவர் கொண்டுபோன பண்டங்களெல்லாம் விற்றுப்பெற்ற பெரும்பொருளை ஒரு தீவிலே ஆலயத் திருப்பணிக்கும், தருமத்திற்கும் செலவு செய்துவிட்டு மீளும்போது அந்த மரக்கலங்களில் நிரம்ப எருமூட்டைகளை ஏற்றிக்கொண்டுவந்து சேர்ந்தார். அவரோடுசென்ற சிலர் பட்டினத்தடிகளிடம் போய் மருதவாணர் உம்மை வஞ்சித்தார் என்று கூற, அவர் மருதவாணரைச்சிறை

யிட்டார். அங்கு அப்போது அவரிடத்து விளங்கிய அற்புதங்களே யறிந்து, பிள்ளே யார் அவரைச் சிறைநீக்கிவிட, மருதவா ணர் பிள்ளேயாருக்கு ஞானேபதேசஞ் செய்தருளினர். அவ்வளவில், பிள்ளேயார் துறவாமை கண்டு, மருதவாணராகிய பரம சிவன் ஒரு காதற்ற வூசியால் அவருக்கு ஞானமுதிக்கச் செய்து மறைந்தருளினர். உடனே பிள்ளேயார் துறவடைந்து, தலங் கள்தோறுஞ்சென்று, தரிசித்து, அற்புதப் பாடல்களேப் பாடியும், அநேக அற்புதங் களேச் செய்தும் இதுதியில் திருவொற்றி யூரையடைந்து, சமாதிகூடிச் சிவலிங்கா காரமாயினர்.

பட்டினப்பாக்கம் - காவிரிப்பூம் பட்டினத் தின் உள்நகரத்தைச் சார்ந்த ஒரு பகுதி.

பட்டினப்பாலே - பத்துப்பாட்டுள் ஒன்பதா வது; இது: கரிகாற்சோழனேக் கடியலூர் உருத்திரங்கண்ணனர் என்பார்பாடியது.

பட்டினம்-ஊர், நெய்தலிலத்தூர், பட்டணம்.

பட்டினவர் - நெய்தனிலமாக்கள், பரவர்.

பட்டினவர்சேரி- பட்டணவர் வசிக்குமிடம்.

பட்டினி - இராசாத்தி, உணவற்றிருத்தல், பார்ப்பனத்தி, உண்ணுதிருத்தல்.

பட்டினிகாத்தல் } பசிகிடத்தல், உண்ணு
பட்டினிகிடத்தல் } திருத்தல்.

பட்டினிபோடுதல் - இலங்கணம் போடுதல்.

பட்டினிப்பண்டம் - சாவீட்டுக்கணுப்பும்போ சனபண்டம், சாவீட்டில்உண்ணும்உணவு.

பட்டினிவிடல் - பாரணே, பட்டினி விரதம் மூடித்தல்.

பட்டீசம் - ஓர் ஆயுதம்.

பட்டீச்சுவரர்-திருப்பட்டீச்சுரத்திலே கோ யில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

பட்டு - உல்லாசம், ஓர்பருத்தி, சிற்றூர், பட் டாடை, கோணிப்பட்டை, மடிப்பு, மேற் போர்வை, வினேயெச்சம்.

பட்டுக்கயிலி-மகமதியர் அணியும்பட்டாடை.

பட்டுக்கரைச்சீலே - பட்டுக்கரை வஸ்திரம், பட்டுநூலா லருகுநெய்யப்பட்ட புடவை.

பட்டுக்கிடப்பான் - செத்துக்கிடப்பான் என் னும் வசைச்சொல்.

பட்டுக்குஞ்சம் - பட்டுத்தொங்கல்.

பட்டுச்சீலே - பட்டுநூலால் நெய்த மடிப்பு.

பட்டுத்தரித்தல் - பட்டனுபவித்தல், பட் டுடை தரித்தல்.

பட்டுத்தேறுதல் - நோய் நீங்கி உடம்பு வலி பெறுதல், அனுபவத்தால் மனவலிபெறு தல்.

பட்டுநூலி - செளராஷ்டிரர்பேசும்பாஷை.

பட்டுநூற்காரர் - செளராஷ்டிரர். [பூச்சி.

பட்டுநூற்பூச்சி - பட்டுநூல் உண்டாக்கும்

பட்டுப்படி - செலவின் தொகையளவு.

பட்டுப்பூச்சி-பட்டுநூல் உண்டாக்கும் பூச்சி.

பட்டுப்பட்டாவளி - பட்டு முதலிய விலேயு யர்ந்த ஆடை வகைகள்.

பட்டுப்பருத்தி - இலவம், இலவம்பஞ்சி.

பட்டுப்பழம் - பேயத்திப்பழம்.

பட்டுப்பாய் - கோரைப்பாய்.

பட்டுப்புடவை - பட்டுச்சீலே.

பட்டுப்போதல் - உலர்ந்துபோதல், சாதல்.

பட்டுமாய்தல் - செய்கைப்பலன் அனுபவித் தல்.

பட்டுருவுதல் - ஊடுருவுதல்.

பட்டுரை - பழையபேச்சு, பட்டிற்பொதிந்த ஓலே வாசகம்.

பட்டுவாடா } சம்பள முதலிய கொடுத்தல்.
பட்வாடா }

பட்டுழி - பட்டபோது, பட்டஇடம், செத்த இடம்.

பட்டென - பட்டதாக, நேரிட்டதுபோல பட்டாற்போல, ஒலிக்குறிப்பு.

பட்டை - ஆபரணத்தோ ருறுப்பு, காறை, சலாகை, தோன்மூட்டு, நீரிறைக்கும் பூட் டை, பட்டுநாடா, பிழா, போதிகை, மரத் தோல், (வாழைப்) பட்டை, (சரிகைப்) பட்டை, (கழுத்துப்)பட்டை, (பனம்) பட் டை, (பொடிப்) பட்டை, பட்டை (ச்சா தம்,) மரவுரி, பட்டினே.

பட்டைக்கிடங்கு - கிணற்றிற் பட்டையிட் டள்ளுங்குழி, கிணற்றின் கீழுற்றுக்குழி.

பட்டைக்காறை-ஓர்கழுத்தணி, ஓராபரணம்.

பட்டைக்கெம்பு - பட்டை தீர்த்தகெம்பு.

பட்டைக்கோடி-துலாக்கொடி, துலாக்கயிறு

பட்டைக்கொலுசு - காலிற்பட்டையாயணி யும் கொலுசு.

பட்டைச்சீலே - உப்புத்தான்.

பட்டைச்சாதம்-தளிகை,உருண்டைச்சாதம்.

பட்டைச்சாராயம் - வெள்வேலம் பட்டை யைக்காய்ச்சி இறக்கும் ஓர்வகைப்பானம்.

பட்டைச்சுருக்கு } ஓர்வகைத்தடம், சுருக்கு
பட்டைத்தடம் } முடி.

பட்டைநாமம் - விட்டுணுபத்திக்காரர் நெற் றியிலணியுமோர் குறி, அகன்ற நாமம்.

பட்டைநூல் - அட்டைநூல்.

பட்டைப்பெல்லி - பட்டைப்பிடி, ஓர்குரடு.

பட்டையம் - பட்டயம், வாள், பத்திரம்.

பட்டையரைஞாண் - பட்டையாய்ப் பின்

னிய அரைஞாண்.

பட்டைதீர்தல் - சுன்னம் முதலியவற்றால் பட்டையடித்தல், கெம்பு முதலியவற்றை வெட்டிச் சுத்தப்படுத்தல்.

பட்டைவிட்டுப்போதல் - வெயில் மிகக் கடுமையாயிருத்தல்.

பட்டோதீக்ஷிதன் - பாணினி வியாகரண சூத்திரங்களைச் சிந்தாந்த கௌமுதியென்னும் பெயராற் பிரகரணஞ்செய்த பண்டிதர். இவர் கௌடப் பிராமணர். இற்றைக்கு 800 வருஷத்துக்கு முந்தியவர்.

பட்டோலை - அட்டவணை, அரசர்விடுந் திருமுகம், காரியக்குறிப்பெழுதுமோலை. [ல்.

பட்டோலைகொள்ளல் - திருமுறையெழுதுதல்.

பட்மாஷ் - பத்மாஸ், அயோக்கியன்.

பணகரம் - பாம்பு, பன்னகம், சர்ப்பம்.

பணக்காரன் - செல்வன், தனவந்தன்.

பணக்கொழுப்பு - செல்வத்தாலாய செருக்கு.

பணசம் - கொள்முதல், வியாபாரச்சாமான்.

பணச்சலுகை, பணச்செருக்கு } பணப்பெருமை, செல்வச் செருக்கு, ஐஸ்வரியப் பெருமை.

பணச்செலவு - பொருள்விரயம், நட்டம்.

பணதாதரன் - சிவன், அரவாபரணன்.

பணதரம் - பாம்பு, சர்ப்பம், அரவம்.

பணதி - ஆபரணம், செவ்வை, செயல், சிருட்டி, கற்பனை, அலங்கரிப்பு.

பணத்தட்டு - பணக்குறைவு.

பணத்தூக்கம் - இரண்டு மஞ்சாடிகொண்ட எடுத்தலளவை.

பணநம் - விக்கிரயம், விற்கிரயம்.

பணப்பித்து - பணவாஞ்சை, காசாசை.

பணப்புரட்சி, பணப்புரட்டு } பணவரவு, செல்வமிகுதி, மோசம். [ம்.

பணப்பெட்டி - சொக்கத்தயிலா, போக்கிஷ

பணப்பேய் - காசுப்பிசாசு, பணவாஞ்சை.

பணப்பைத்தியம் - பணப்பித்து, காசுப்பைத்தியம்.

பணமணி - நாகமணி, பணமணி.

பணமிடுக்கு - பணப்பெலன், பணவலிமை.

பணமிதப்பு - செல்வமிகுதி.

பணமுட்டு - பணத்தட்டு.

பணம்-காசு, திரவியம், கிரகம், சூதாடுதல், பருமை, பாக்கியம், பாம்பின்படம், பாம்பு, பொற்காசு, வியாபாரச் சரக்கு, விலை, வேலை, சூதாடுபந்தயம், வீடு.

சென்னையில் 15 தம்பிடியும், தஞ்சாவூரில் 30 தம்பிடியும், திருநெல்வேலியில் 40 தம்பிடியுமான மதிப்புடைய நாணயம். திருவாங்கூரில் 4 சக்கரம்மதிப்புடையது. இதுவன்றிப் பூர்வம் 80 தம்பிடி(அல்லது) $1\frac{1}{4}$ ரூபாய் வெள்ளிக்குச் சமமான ஒரு தங்க நாணயமும் வழங்கிவந்தது.

பணம்பறித்தல் - பொருளையபகரித்தல்.

பணயம் - ஈட்டுப்பொருள், பந்தயப்பொருள், பணம், பொருத்தப்பணம். [ரு.

பணர் - மரக்கிளை, அடர்ந்த கொம்பு, பண

பணவம் - தம்பட்டம், திண்டி, படகம்.

பணவன் - பணிசெய்பவன், வேலைக்காரன்

பணவிடை, பணவெடை } வராகனிடை ஒன்பதில் ஒரு பாகம் எடையுள்ளது.

பணவை - அட்டாலை, ஓளவு, கழுகு, பரண்.

பணறு - பணர், பணர்த்த கொம்பு, பணரு.

பணங்கனை - வேசி, பரத்தை, பொதுமடந்தை

பணடவி - ஆதிசேஷன், அனந்தன்.

பணதரம், பணபவம் } பாம்பு, கட்செவி, மாசுணம்.

பணதரதரன் - சிவன், பணதரதரன்.

பணமகுடம் - பாம்பின்படம், பணமுடி.

பணமணி - நாகரத்தினம், பணமணி.

பணமரம் - கொப்பட்டத்தியான மரம்.

பணமுடி - பாம்பின் முடி, பன்னக படம்.

பணயிதம் - வணங்கல், வந்தனம் புரிதல்.

பணயை - கடைவீதி, தொழில், வியாபார ஆதாயம், வர்த்தகத்திற்கிடைக்கும் ஊதியம்.

பணன் - அடர்ந்த கிளை, பணர்.

பணி - ஆபரணம், ஈகை, எருமை, ஏவல், கட்டளை, செய்கை, சொல், தொண்டு, தொழில், விதி, தோற்கருவி, பட்டாடை, பணியென்னேவல், பாம்பு, வார்த்தை, வேலைப்பாடு, வருப்பு.

பணிகாரத்துத்தி - பெருந்துத்தி, ஓர் பூடு.

பணிகாரம் - அப்பவருக்கம், தின்பண்டம்.

பணிக்க - சொல்ல, கொடுக்க, கட்டளையிட, தாழ்த்த, குறைக்க.

பணிக்கம் - திருத்தம், தொழிலின்நேர்மை.

பணிக்கணம் - சர்ப்பக்கூட்டம், பாம்புக்குழு, எச்சில் உமிழும் கலம்.

பணிக்கல் - பணித்தல், கட்டளையிடல்.

பணிக்களரி - வேலைசெய்யுமிடம்.

பணிக்கன் - உபாத்தியாயன், கூத்து முதலிய பயிற்றுவோன், கொற்றர் தலைவன், சாராயங் காய்ச்சுகிறவன், நாவிதன், யானைப்பாகன், பள்ளர் சாதியார், விஷவைத்தியன், தச்சன். [லாளி.

பணிக்காயன் - உத்தியோகஸ்தன், தொழி

பணிக்கு - ஆசான்வேலை, பணிக்கை.

பணிக்குச்செலுத்துதல் - முற்கந்தம்பண்ணுதல்.
பணிக்குச்சொல்லல் - வேலைமுறை சொல்லல், குற்றங் கூறுதல்.
பணிக்குதல்-பணித்தல், செய்வித்தல், ஏவல்.
பணிக்கை-செய்கை, நேர்த்தியானசெய்கை, பணித்தல், நடத்துகை, ஏற்படுத்துகை.
பணிசாகரன் - வேலையாள், ஊழியக்காரன்.
பணிச்சக்கரம் - பரம்புருவச்சக்கிரம்; இது: வேளாண்மை செய்வோர் நாட்பொருத்தம் பார்க்குமோர் சக்கிரம், இயந்திரம்.
பணிச்சவன் } பணிச்சன் } பணிசெய்வோன், கல்யாணம் சாவு முதலிய நாட்களில் தாரை, சங்கு ஊதுவோன்.
பணிதம்-பங்தயப்பொருள், அடகு, பாத்தல்.
பணிதல் - இரங்கல், உண்டல், குறைதல், தாழ்தல், வணங்கல்; இஃது: புண்ணிய மொன்பதினொன்று, குனிதல், வளைதல்.
பணிதவ்வியம் - வி ற் ற ற்குரியது, விலைப் பொருள். [லகம்.
பணிதானம் - தோத்திரஞ்செய்தல், தொழி
பணிதி-பணதி, செல்வச்செருக்கு, சம்பத்து.
பணிதும் - பணிவோம்.
பணித்தட்டார்-பொற்கொல்லர், கம்மாளர்.
பணித்தலைவன் - ஆதிசேடன், அனந்தன்.
பணித்தல் - ஏவுதல், கட்டளையிடல் குறைத்தல், கொடுத்தல், சொல்லல், தாழ்த்தல், கற்பித்தல், மிதித்தல், பணிவித்தல்.
பணித்திறத்தல் - கீழேயிறக்கி வைத்தல்.
பணித்து - கற்பித்து, தாழ்த்தி, மிதித்து.
பணித்தூசு - அலங்காரவேலை, சுத்தம்.
பணிநர்-வேலைசெய்வோர், பணிசெய்வோர்
பணிபு - பணிவு, பணிதல், பணிந்து.
பணிப்பகை - கருடன், மயில், நகுலம்.
பணிப்படுத்துதல்-அலங்கரித்தல், செப்பனிடுதல், உண்டாக்கல், செய்தல், இயக்குதல்.
பணிப்பிரியம் - காற்று, பிரபஞ்சனன், மாருதம்.
பணிப்பு-பணிக்கை, பணிதல், தணிவு, ஏவல்.
பணிப்பெண்-குற்றேவற்காரி, வேலைக்காரி.
பணிமக்கள் - ஏவலர், தொண்டுபுரிவோர்.
பணிமாறுதல்-தொழில்மாறுதல், இரட்டல்.
பணிமின் - பணியுங்கள், வணங்குங்கள்.
பணிமுட்டு - தொழில்முடக்கம், தளபாடம்.
பணிமூப்பினார் - தேவரடியார், தாசிகள்.
பணிமொழி - நல்வார்த்தை, மென்மொழி, பணிந்தமொழி, வழிமொழி, பணித்தமொழி, சொல்லியசொல்.
பணிய - தாழ, வணங்க, இறங்க, குறைய.
பணியப்படுவார்-இறைஞ்சப்படுவார், வணங்கத்தக்க பெரியோர்.
பணியல் - வணங்கல், வழிபாடு செய்தல்.
பணியாரத்துத்தி - ஓர் துத்தி, பெருந்துத்தி.
பணியாரம்-பணிகாரம், தித்திப்புப்பண்டம்.
பணியாரக்குடம் - மணமகளைப் புருஷன் வீட்டிற்கு அனுப்பும்போது வரிசையாக அனுப்பும் பணியாரம், நிறைந்தகுடம்.
பணியார் - விரோதிகள், வணங்கார்.
பணியிறை-ஆதிசேடன், அனந்தன், பணிபதி
பணியிஞ்கு - தண்ணீர்விட்டான்பூடு, சதாவேரி.
பணியுலகு-நாகலோகம், நாகநகர், நாகர்பதி.
பணிராஜன் - ஆதிசேடன், அரவரசு.
பணிலம் - சங்கு, வலம்புரிச்சங்கு, வார்த்தை.
பணிவிடை - கட்டளை, குற்றேவல், வேலை.
பணிவிடைக்காரன் - தொழிலாளி.
பணிவில்லார் - பகைவர், படியார்.
பணிவு - தாழ்வு, பதங்குகை, கீழ்ப்படிகை, வணக்கம், சாந்தம், பணிதல்.
பணிணம் - பாம்பு, அரவு, சர்ப்பம், பன்னகம்.
பணீசுரன் - சேடன், பதஞ்சலிமுனிவர்.
பணை - அரசமரம், உயரம், கிளை, குதிரைப் பந்தி, தப்பிதம், பணை யென்னேவல், பருமை, பறைப்பொது, பிழை, பெருமை, மரக்கொம்பு, மருதநிலப்பறை, மருதநிலம், மூசு, மூங்கில், வயல், வாத்தியம், நீர்நிலை, வயல்சார்ந்த நிலம், விலங்கின் படுக்கை, பட்டடை, வேய்க்குழல், யானைக் கூட்டம்.
பணைக்க - பருக்க, தவற, செழிக்க.
பணைத்தல்-கிளைத்தல், பருத்தல், பிழைத்தல், செழித்தல், உண்டாதல், மிளிர்தல்.
பணைத்திராய் - பண்ணைத்திராய், ஓர்பூடு.
பணைப்பு-கிளைப்பு, பருமை, செழுமை, மிளிர்வு
பணையம் - பணயம், ஈடுவைத்த பொருள்.
பணையவன் - மூரசறைவோன்.
பணையான் - சாணைக்கல் செய்வோன்.
பணையூகி - கிருஷ்ணன், வேணுகானன்.
பண் - அமைவு, இசைப்பாட்டு, ஊழியம், குதிரைக்கல்லணை, சீர், செவ்வை, தகுதி, நிந்தை, நிறைநரம்புள்ள வீணை, நீர்நிலை, பகுதி, பண்ணென்னேவல், பாய்மரக் கயிறு, மகளிர்கூட்டம், கூத்துவகை, பருவம், நிறைநரம்புடையது, நகராகம், அலங்காரம், நல்லவை, நிறைவு.
பண்கொடி - பிரப்பங்கொடி, பிரம்பு.
பண்செய்தல் - பணிவிடை செய்தல், பண்படுத்தல், அலங்கரித்தல், அழகுசெய்தல்.

பண்டகசாலை-களஞ்சியம், பொக்கசச்சாலை.
பண்டகன் - பொக்கிஷசாலைக்காரன்.
பண்டகாஞ்சி - வேசி, பொருட்பெண்டு.
பண்டகி - நிப்பிலிவகை.
பண்டகுலம் - செட்டச்குலம்.
பண்டகேந்திரம்-ஓர்கணிதம், கணிதமுறை.
பண்டக்காரன் - செல்வமுள்ளவன்.
பண்டசாலை - பண்டகசாலை, களஞ்சியம்.
பண்டஞ்செயல்-பொருட்படுத்துதல், மகழிய ஞ்செய்தல்.
பண்டபதார்த்தம்-இரசவீரசவஸ்து, உணவுப் பொருள்கள். [துலாத்தல்.
பண்டப்பழிப்பு - தேட்டாக்கூறு, நிந்தித்
பண்டமண்டலி - சாரணவகை.
பண்டமாற்று - ஒன்றை றக்கொடுத்து மற்றொன்றை வாங்குதல்.
பண்டம் - அறிவு, உணவுப்பொருள், கலைக்கியானம், தானியம், பணிகாரம், நிதி, பழம்பொருள், பொன், வயிறு, பயன், ஆடுமாடு.
பண்டம்பாடி - சங்கமப்பொருள்கள்.
பண்டரங்கன் - சிவபிரான், கங்காதான்.
பண்டர் - கீழ்மக்களில் பாடும் வகையினர், அசுரர்.
பண்டவறை } பொக்கசச்சாலை, பண்ட.
பண்டவீடு } சாலை.
பண்டவாளம் - உள்ளநிலைமை, கைம்முதல், பலபண்டம், பல்பண்டம்,
பண்டறிசுட்டு-பழமைமையச்சுட்டுஞ் சுட்டு.
பண்டனம் - கவசம், போர், போர்க்கவசம்.
பண்டன்-ஆண்டன்மையில்லாதவன், பேடி.
பண்டாகி - சேம்பு, கத்தரி, கரிச்சேம்பு.
பண்டாக்கள்-தென்னாட்டுத் தலயாத்திரைக் காரர்களுக்கு உதவிபுரியும் வீடநாட்டுப் புரோகிதர்கள்.
பண்டாபீசு - ஐக்கிய நாணய நிதிச்சாலை.
பண்டாரக்குரு - ஆகமக்குரு, சுருதிக்குரு.
பண்டாரசன்னிதி-ஆதீனத்துப் பெரியோர் களின் சாத்திர விசாரணைத்தலம், ஆதீனத்துப் பெரியோர், ஆதீனத்தலைவன்.
பண்டாரசாத்திரம் - திருவாவடுதுரை ஆதீனக் காத்தர்களால் இயற்றப்பட்டுள்ள சாத்திரம். [பொதுநிதி.
பண்டாரச்சொத்து - பொதுச்சொத்து,
பண்டாரத்தி - பண்டாரப்பெண், ஞானப் பெண், பூவாணிச்சி.
பண்டாரத்தெரு - இராசவீதி, ஒலக்கவீதி.
பண்டாரத்தோப்பு - இராசமாதோட்டம்.
பண்டாரப்பிள்ளை-அதிகாரியினேவற்காரன்
பண்டாரமும்மணிக்கோவை - குமரகுருபரரால் செய்யப்பட்டவோர் பிரபந்தம்.
பண்டாரமேளம் - இராச விளம்பரப்பறை.
பண்டாரம் - பொக்கசம், குங்குமம், சிவனடியான், துரைத்தனம், பலபண்டம், பொது, மஞ்சட்பொடி, மடாதீனத்தான், இராசாங்கம், இனிய தின்பண்டம், பூக்கட்டிவிற்கும் சாதியார்.
பண்டாரவாய்க்கால் - பொது வாய்க்கால்.
பண்டாரவிடுதி - பொதுவிடுதி, சத்திரம்.
பண்டாரவிளக்கு - நிலாவெளிச்சம்.
பண்டாரஸ்ழியம் } அமஞ்சிவேலை, இராமப்
பண்டாரவேலை } பொதுஸ்ழியம்.
பண்டாரி-பண்டாரம் - பொக்கிஷக்காரன், வேளாண்மை செய்வாரிலோர் வகுப்பு, நாவாய்ச்சுயம்பாகி. [உடல், யானை.
பண்டி - உரோகணிநாள், வண்டில், வயிறு,
பண்டிகை-ஓர்வகைச்சிற்பவேலை, திருவிழா.
பண்டிதசாத்திரம் - வைத்தியநூல்.
பண்டிதப்பார்ப்பார் - மாத்துவப்பிராமணர்.
பண்டிதம் - கல்வித்திறம், வைத்தியம்.
பண்டிதவாய் - கடுக்காய், மஞ்சட்கடுக்காய்.
பண்டிதன்-சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன், மாத்துவப்பிராமணன் அம்பட்டன்.
பண்டிலன்-தூதன், செய்திதெரிவிப்போன்.
பண்டு - பழமை, முள், நிதி, தேட்டம்.
பண்டுகம் - அசமதாகம், செவ்வகத்தி, ஓமம்.
பண்டுபரிகாசம்-கேலி, விளையாட்டு. [சொல்.
பண்டை - கல்வி, ஞானம், பண்டு, அடாத
பண்டைக்காலம் } முன்னாள், ஆதிகாலம்.
பண்டைநாள் }
பண்டைய - பழைய, பழைமையான, பழையவை, பழையகொள்கைகள்.
பண்டையன் - பழையன், பழைய மனிதன்.
பண்டையர் } முன்னோர், பெரியோர்.
பண்டையோர் }
பண்டைவினை - முன்வினை.
பண்ணமைத்தல் - தயாரித்தல், சமைத்தல், ஆக்கல், அமைத்தல், யாழில் பண்ணமைத்தல்.
பண்ணல் - செய்தல், வியங்கோண்முற்று, அமைத்தல், ஏற்றல், ஆயத்தஞ்செய்தல், அழகுசெய்தல்.
பண்ணன் - சோழநாட்டுச் சிறுகுடியரசன், பெருங்கொடையாளி, வல்லூர்க்கிழான், பண்ணன்.
பண்ணவர்-கடவுளர், குருமார், திண்ணியர், தேவர், பாடகர், முனிவர், அறிவானவர்.

பண்ணவன் - அருகன், கடவுன், குரு, திண்ணியன், தேவன், பாடகன், மூனிவர்.
பண்ணவி - பாட்டுடைநாயகி, தேவி.
பண்ணி - பாண்டியநாட்டுக் கேரட மலைத் தலைவன், அமைத்து, சமைத்து, தயாரித்து.
பண்ணிகாரம் - அப்பவருக்கம், பலபண்டம், காணிக்கை, கைக்காணி.
பண்ணியங்கூலம் - பலபண்டம். [பாரவீடு.
பண்ணியசாலை - அப்பச்சாலை, சந்தை, வியா
பண்ணியஸ்திரீ - வேசி, பாத்தை, பொதுமாது.
பண்ணியபலத்துவம் - வியாபாரசித்தி.
பண்ணியம் - பலகாரம், பலபண்டம், விற்றற்குரிய பலபண்டம், இசைக்கருவி, நுகர் பொருள், சோறு.
பண்ணியவீதி - கடைத்தெருவு, அங்காடி.
பண்ணியாங்கனை - வேசி, பண்ணியஸ்திரீ.
பண்ணியாசீவகம் - தடை, மறியல், தடக்கு.
பண்ணு - பண்ணுதல். [பண்]
பண்ணுதல் - செய்தல், அலங்கரித்தல்.
பண்ணுநர் - தொழில்புரிவோர், செய்வோர்.
பண்ணுமை - பண்ணின்தன்மை, இனிமை, பண்மை.
பண்ணுரை - புனைந்துரை.
பண்ணுவர் - குதிரைப்பரகர், யானைப்பாகர்.
பண்ணுறுத்தல் - சீர்ப்படுத்தல், அலங்கரித்தல், வாகனங்களை ஆயத்தம்பண்ணல்.
பண்ணெகிழ்தல் - பண்விடல், பண்ணதிர்தல், சுவைகெட ஒலித்தல், மாறுபடல்.
பண்ணை - வாரக்குடி, குடும்பம், ஓர்செடி, ஓர்ஜாதி, குளம், சமூசாரம், நீர்நிலை, படகு, மனை, மகளிர்கூட்டம், மகளிர் விளையாட்டு, மரக்கலம், மருதநிலம், தொகுதி, கூட்டம், வயல், விலங்கின் படுக்கை, விலங்கின் மேற்சேணம், தோட்டம்.
பண்ணைக்காரர் - பறையரிற் றலைவர், வயற் செய்கைக்காரர், விவசாயிகள்.
பண்ணைக்காரியம் - கமக்காரியம், சமூசாரகாரியம், பொதுக்காரியம்.
பண்ணைபாய்தல் - நீரிற்பாய்தல், தானகமாட மேறி நீரிற்பாய்தல்.
பண்ணையார் - பூசொத்துடையவர்.
பண்ணையாள் - வயல்வேலைக்காரன், வீட்டு வேலைக்காரன், பண்ணைவேலைக்காரன்.
பண்ணைவீடு - தானியவீடு, மடைப்பள்ளி, பெரிய மிராசுதாரரின் வீடு.
பண்ணைவைத்தல் - உணவு சமைத்தல், படகு வைத்தல். சொந்தத்தில் ஆள்வைத்துப் பயிரிடல். [மையுறல்.
பண்படல் - பண்படுதல், வளப்படுதல், செழு
பண்படி - பண்புப்பகுதி, பண்பின் முதனிலை.
பண்படுதல் - அமைதல், உதவுதல், ஏவல் செய்தல், சீர்திருந்தல், செப்பமாதல்.
பண்படுத்தல் - செம்மைப்படுத்தல்.
பண்பட்டவன் - உலக அனுபவமுள்ளவன்.
பண்பாகுபெயர் - பண்பினலாய ஆக்கப் பெயர்.
பண்பாடு - செவ்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை, தண்மை, அமைதி, இயல்பு.
பண்பாளன் - குணவான்.
பண்பி - பண்பையுடையபொருள். [முறை.
பண்பு - குணம், தகுதி, விதம், சுபாவம்,
பண்புச்சொல் - உரிச்சொல், குணச்சொல்.
பண்புத்தற்கிழமை - பண்பி னொற்றுமையுடைமை, குணத்தற்கிழமை, (உ-ம்) கதிர் மணி.
பண்புத்தொகை - குணத்தொடு குணிக்குண்டாகிய வொற்றுமை, நயத்தை விளக்குமியல்புடைய ஆகியவென்னும் பண்புருபு தொக்குவருந்தொடர், (உ-ம்) ஆதிபகவன்.
பண்புப்பெயர் - உரிப்பெயர், குணப்பெயர்.
பண்புமறிநிலை - ஓரலங்காரம்; அஃது: ஒன்றன் குணத்தை மற்றொன்றற்குரைத்தல்.
பண்புரிச்சொல் - பொறிகளா லறியப்படுங் குணவுரிச்சொல், (உ-ம்) செம்மை.
பண்புரைப்பார் - ஆதர். [வயல்.
பண்புலம் - பண்படுத்திய நிலம், உரமிட்ட
பண்புவமை - குணவுவமை, ஒன்றின்பண்பை மற்றொன்றிற்கொப்பிடுவது.
பண்புளி - முறைப்பட, முறைப்படி, பண்பை நினைத்து.
பண்மகள் - விறலி, பாடுபவள்.
பண்மை - தகுதி, அந்தஸ்து, ஒப்புமை.
பண்மொழியம்மை - திருப்பாண்டிக் கொடுமுடியிலேகோயில்கொண்டிருக்குந்தேவி.
பண்விடல் - பண்ணதிர்தல், நிலைகுலைதல்.
பதகம் - பறவை, பாதகம் என்பதின் குறுக்கம், தஞ்சாவூர் ஜில்லாவில் மராட்டியர் ஆளுகைக்காலத்தில் பிரிக்கப்பட்ட சிராமத் தொகுதிக்கு வழங்கிய பெயர்.
பதகர் - சண்டாளர், பாதகர், கீழ்மக்கள்.
பதகளித்தல் - பதறுதல், மேனி நடுங்குதல்.
பதகளிப்பு - பதறுகை, படபடப்பு, நடுக்கம்.
பதகன் - கீழ்மகன், பாதகன், சண்டாளன்.
பதகை - திரிபதகை, பதாகை, விருது. [று.
பதக்கம் - மாதரணிவடம், மார்பணியினொன்
பதக்கிரமம் - காலடி, அடிவைக்குமுறை.

பதக்கு - இரண்டு குறுணிகொண்டஅளவு.
பதக்குப்பதக்கெனல் - அச்சக்குறிப்பு, நடுக்கம்.
பதக்கெடுதல்-தைரியங்கெடல்,பதனழிதல்.
பதங்கமம்-பறவைப்பொது,விட்டில்,வண்டு.
பதங்கம் - இரசம், சந்தனம், சாம்பிராணி முதலியவற்றினெடுக்கும் பதங்கம், பறவைப் பொது, விட்டில், பதகம், வண்டு.
பதங்கராஜன் - கருடன், செம்பருந்து.
பதங்கவைப்பு - பதங்கமெடுக்கை.
பதங்கன் - சூரியன், பாற்கரன், அருணன்.
பதங்கு - ஓட்டுவரிசைக்குழி, பிளவு.
பதசம் - சந்திரன், பட்சி, மயிர்ப்புழு.
பதசாரி - நாட்டியத்தில் காலடி யிடும்வகை.
பதச்சாயை - மக்களின் நிழல்.
பதச்சேதம்பண்ணுதல் - சொற்றொடரைத் தனிச்சொல்லாகப் பிரிக்கை, பதமுடித்தல்.
பதஞ்சலி-சேடன். (1) யோகசூத்திரம் செய்தவர்; இவர்: இளாவிருத வருஷத்தில் அங்கிரனுக்குச் சதியிடத்திற் பிறந்தவர்; இவர் பிறந்தவுடன் திரிகால ஞான முடையராய் எல்லாமுணர்ந்தவர்; இவர் பக்ஷியினமாகிய லோலுபையைச் சுமேருவிலிருந்த ஓரால மரத்துப் பொந்திலே கண்டு மணம் புரிந்தனர்; இவர் பாணினி வியாகரணத்துக்கு மகா பாஷியஞ் செய்தவர்; இரண்டாயிரத் தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவ ரென்பது சங்கராசாரிய கால நிரூபணத்தால் நன்றாக நிச்சயிக்கப்படும். இக்கால நிரூபணம் ஐரோப்பியப் பண்டிதருக்கு மொத்தத் துணிவாம். இப் பதஞ்சலிக்குப் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்தவர் (2) பதஞ்சலி முனிவர் எனப்படுவர்; அவர் ஆதிசேஷனுடைய அவதாரம், ஆதிசேஷன் சிவபிரானது திவ்விய நடனங்காணவேண்டிப் பதஞ்சலி முனிவராக அவதரித்துத் தில்லை வனத்திலே ஆனந்தத் தாண்டவ தரிசனம் பண்ணிக்கொண்டிருந்தவரென்பது கோயிற் புராண வரலாறு. மகா பாஷியஞ்செய்தவரும் யோகசூத்திரம் செய்தவரும் இருவேறு பதஞ்சலி என்பாருமுளர்.
பதஞ்சலியம்-பதஞ்சலிஎன்பார் செய்தநூல்.
பதடி - பதர், உமி, பயனின்மை, வில், கருக்காய், உள்ளீடற்றது, சிதடு.
பதடிவைகலார் - ஓர் சங்கப்புலவர்.
பதட்டம் - பதற்றம், உடனடுக்கம்.
பதணம் - மதிலுண்மேடை, மதில், சுவர்.
பதத்தல் - ஈரமாதல், நனைந்துபோதல்.
பதத்தன் - பருவத்தன், காலினன், நிலையினன், பக்குவன், காலிலுள்ளோன்.
பதத்திரம் - சிறகு, இறகு, இறை, பக்குவம்.
பதத்திரி - பறவை, பட்சிஜாதி.
பதநியாசம் - ஓர் பூடு, நடனத்தில் காலடி வைக்குமுறை, நடைமுறை.
பதநிறம் - மாங்கிஷசிலை, ஈரற்கல்லு.
பதநீர் - கருப்பநீர், சுண்ணும்பிட்டுப் புளிப்பேறுமற் செய்த கள், பதனி.
பதநெகிழ்த்தல் - பதச்சேதம் செய்தல்.
பதந்தவறுதல் - நிலை தவறுதல், இரவில் நக்ஷத்திரம் விழல்.
பதந்தன் - பூஜிக்கத்தக்கவன், உயர்ந்தோன்.
பதபஞ்சனம் - சொல்லிலக்கணம், சொற்பிரிவு விளங்கப்பண்ணுதல், பதவிலக்கணம்.
பதபதனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
பதபாகம் - தகுதி, அமரிக்கை. [சுவடு.
பதபாதம் - காலடி, காலினடிப்பாகம், காற்
பதபூர்த்தி - பதங்களில் வரும் சாரியை.
பதப்படுதல் - சீர்ப்படுதல், பக்குவமாதல்.
பதப்படுத்துதல்-சரிப்படுத்துதல், சீர்ப்படுத்துதல், பக்குவப்படுத்துதல், இணக்குதல்.
பதப்பலம் - பாதபலம், கால்பலம். [டை.
பதப்பர் - (நீரையடைக்க இடும்) மணல்மூட்
பதப்பாடு - மதிலுறுப்பு, பக்குவமாகை.
பதப்பிரயோசனம்-சொல்லின்பொருணயம்
பதப்புணர்ச்சி - பதமும், பதமும் சேருதல், நிலைமொழி யீறும், வருமொழி முதலும் இயல்பாயேனும்,விகாரமாயேனும் புணர்தல். [கம்.
பதப்பேறு - பதமுத்தி, நிலைபேறு, மோக்
பதப்பொருட்காட்சியணி - ஓரலங்காரம்; அஃது: உபமான உபமேயங்களுள் ஒன்றின் றருமத்தை ஒன்றினுரோபித்தல்.
பதப்பொருத்தம் - சொற்பொருத்தம்.
பதப்பொருள்-பதவுரை;அஃது: உரையிலக்கணமைந்தினொன்று; இன்பப் பொருள்.
பதமம் - சந்திரன், பட்சி, விட்டில், வண்டு.
பதமழிவு - பதனழிவு, பக்குவக்குறைவு.
பதமுடித்தல் - பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரமெனு மாறையுங் கொண்டு மொழிகளைப் பிரித்துக்காண்டல். [கம்.
பதமுத்தி - பதவிமுத்தி, பாதமுத்தி, மோக்
பதமை-அமைதி, இணக்கம், தாழ்மை, மந்தகுணம், மிருது, மெல்லோசை, பதுமை.
பதம் - அடையாளம், இனிமை, அழகு,

அறுகம்புல், தகுதி, ஆடை, இடம், இன்பம், ஈரம், உண்டல், எழுத்தாலாகிய பதம், ஒளி, ஓர்மொழியிற்பிரகிருதியாய்நிற்பது, கால், காவல், குழைவு, கூர்மை, கொக்கு, சிந்து, சொல், சோறு, தின்றல், தெரு, நாழிகை, பக்குவம், பதவி, பாவிலேறுறுப்பு, பூரட்டாதி, பொருள், பொழுது, முயற்சி, வரிசை, வழி, மாறுவேஷம், காலம், கள், மந்திரம், அளவு.

பதம்பார்த்தல் - சுவையறிதல்.

பதம்பிரித்தல் - சொற்பிரிப்புச் செய்தல்.

பதயுகம் - இணையடிகள்.

பதரி - இலந்தைமரம், பதரிகமரம்.

பதரி } சரஸ்வதி நதிக்குச் சமீபத்துள்ள
வதரி } ஒரு புண்ணிய வனம்.

பதரிகாச்சிரமம் - ஓர் தபோவனம், ஓர் சிறந்த விஷ்ணுஸ்தலம், வேதவியாசராச்சிரமம்.

பதர் - அறிவீனன், பிரயோசனமற்றவர், அற்பம், சப்பட்டை, பலனற்றது, குற்றம்.

பதர்ச்சொல்-பொருளில்லாத சொல். [னம்.

பதலம் - சர்வஜாக்கிரதை, பேணிப்பு, பத

பதலை - ஓர்கட்பறை, குண்டான், சிறுமலை, தாழி, மத்தளம், மரக்கலம், மலை, வாயகன்றபறை, தூபிகளில் வைக்கும் கலசம்.

பதலைவங்கு - மலைக்குகை, கந்தரம். [பதில்.

பதல் - வதில், மறுமொழி, பிரதிவாக்கு

பதவம் - அறுகு, இளம்புல், தர்ப்பை, பதம்.

பதவல் - குப்பை, கஞ்சல், குவியல்.

பதவாடை - மாக்களி, மாச்சாதம்.

பதவாயுதம் - சேவற்கோழி, ஆண்பறவை.

பதவி-இடம், உலகம், ஒழுங்கு, கதி, செல்வம், நிலை, நிலைபரம், மூத்தி, வழி, நீர்மை.

பதவிசு - அமைதியானது, பதவியது. [மை.

பதவியகுணம் - மெத்தெனவு, மிருமென்

பதவியடைதல் - கதியடைதல், பாதமடைதல்.

பதவியது - சாதுவானது, மிருது. [பகுதி.

பதவியல் - பதத்தின்இலக்கணமுணர்த்தும்

பதவியன்-சாதுவானவன், சாந்தமானவன்.

பதவு-புல், மெத்தெனவு, புன்மை, அமைதி.

பதவுரை-சொற்றோறும் பொருளுரைத்தல்.

பதவை - வழி, மார்க்கம், நதவல்.

பதறல் } தளம்புதல், திடுக்கிடல், நடுங்
பதறுதல் } கல், விரைதல், தவித்தல். [ப்பூ.

பதறை-வேங்தோன்றி, காந்தள், கார்த்திகை

பதற்றம் - பதறுதல், பதைத்தல், தவித்தல்.

பதனகேந்திரம் - அக்கசுன்னம், உதயத்திலிருந்து காலாம், ஏழாம், பத்தாமிடம்.

பதனம் - இறக்கம், இறக்குதல், கொதல், தாழ்தல், பத்திரம், பாவம், பேணல், போதல், வியோமாட்சரேகை, விழுதல்.

பதனழிதல்-ஊழ்த்தல், பக்குவங்கெடல்.

பதனழிவு - ஊழ்ப்பு, பதக்கேடு, பக்குவக்கேடு.

பதனி - பதநீர், பனைமரத்திலிருந்தெடுக்கும் சுண்ணும்பிட்ட கள். [கல்.

பதனிடுதல் - பதமையாக்கல், மிருதுவாக்

பதனிட்டதோல் - செப்பனிட்ட தோல்.

பதன் - பக்குவம், பதம், தகுதி, பருவம்.

பதன்படுதல்-பக்குவமாதல், பதமையாதல், பாகமாதல், தகுதியாதல், பருவமாதல்.

பதாகமுத்திரை - கரமுத்திரவகை.

பதாகன் - அரசன், பதாகையுடையோன்.

பதாகினி - படை, சேனை, சைனியம்.

பதாகை - அடையாளம், அதிட்டம், கூத்திலோர் விகற்பம், விருதுக்கொடி, பரதம்.

பதாசனம்-பாதபடி, பாதம்வைக்கும்ஆசனம்

பதாசி - பதாதி, சேனைத்தொகை.

பதாதி-அமைதியின்மை, அங்கலாய்ப்பு, ஏதுமற்றவன், காலாள்: சேனைத்தொகை பத்திலொன்று; அஃது: ஓர்தேர், ஓர் யானை, மூன்றுபரி, ஐந்து காலாளுங்கொண்டது.

பதாத்துவா - பதத்தின் தத்துவம்.

பதாயுதம் - கோழி, பஞ்சபட்சியில் ஒன்று.

பதாரம் - பாதாரம், காலிற்றுகள், தெப்பம்.

பதார்த்தம் - கறிகள், பொருள்.

பதார்த்தகுணசிந்தாமணி - பலபண்டங்களின் தன்மைகூறும் வயித்திய நூல்.

பதார்த்தசாரம்-வைத்திய சாத்திரத்திலொன்று, பதார்த்தங்களின் குணத்தைச் சொல்வது. [பொருள், போசனவஸ்து.

பதார்த்தம் - கறி, பதப்பொருள், பாக்கியம்,

பதி - அரசன், இடம், ஊர், நாற்று, எப்பொருட்கு மிறைவன், ஒளி, கடவுள், குதிரை, குரு, கொழுநன், சிவன், தலைவன், பட்டினம், பதித்தல், பதியென்னேவல், பதிவு, பூமி, மருதநிலத்தூர், நகரம், பேயோட்டவைக்கும் விளக்கு, மூத்தோன் வீடு, கோயில், வேர்.

பதிகசந்ததி - வழிச்செல்வோர் கூட்டம்.

பதிகம் - பத்துச்செய்யுளான் மூற்றுப்பெறுமோர் பிரபந்தம், பாசி, பாயிரம், பதியம்.

பதிகன் } காலான், வழிச்செல்வோன்,
பதிகி } பாட்டைசாரி.

பதிக்க-அழுத்த, இழைக்க, முத்திரிக்க, குழியாக்க, தாழ்த்த, எழுத, பதியம் போட.

பதிக்கினி - புருவநோக்கொல்லி, பாதகி.

பதிசத்திசாலம் - (சிவசத்தியாகிய) மாயை.
பதிசாத்திரம் - பதிநூல், மோட்சநூல்.
பதிசித்திரம் - கோபுரப்பதுமை. [தல்.
பதிசேவை - புருஷனுக்குத் தொண்டுசெய்
பதிச்சம் - வாலுழுவை, வாலானரிசி. [ம்.
பதிஞானம்-தெவவறிவு, துறவு,பிரமஞான
பதிஞை - பிரதிக்ஞை.
பதிட்டை - பிரதிஷ்டை, தாபித்தல்.
பதிதபாவனன் - பதிதர்களின் பாதித்தியத் தைப்பரிகரிக்கிறவன், பாவந்தீர்ப்பவன்.
பதிதம் - கூத்திஞேர்விசற்பம், தவறு, வருணச்சிரமந்தவறுகை, ஒழுக்கத்தவறு.
பதிதர் - தாழ்ந்தவர், தவறியவர்
பதிதல் - அழுந்துதல், ஆழ்தல், குறைதல், ஊன்றல், எழுத்துப் பதிதல், ஒடுங்குதல், கீழ்ப்படிதல், தங்குதல், தாழ்தல், பணிதல்
பதிதன் - குலம் சமயமுதலிய வொழுக்கத்திற் றவறினேன், கசடன், சண்டாளன்.
பதித்தல் - அழுத்தல், எழுதல், தரித்தல், தாழ்த்தல், பள்ளமாக்கல், புதைத்தல், வைத்தல். [த்தி.
பதித்திரி - உலைத்துருத்தி, நெருப்பூதுந்துரு
பதித்தெழுதல் - அழுந்த எழுதல்.
பதிநிச்சயம் / பதிநிண்ணயம் / பதிநிதானம் } கடவுளது தன்மை முதலியன அறிதல், பதிநிர்ணயம்.
பதிநூல் - கடவுளது தன்மையை விளக்கு நூல், உண்மையுரைக்கும் நூல். [டை.
பதிபடை - ஒளித்திருக்கும்படை, மூலப்ப
பதிபத்தி - நாயகவிசுவாசம், பதிவிசுவாசம்.
பதிபிம்பம் - பிரதிபிம்பம்.
பதிபுண்ணியம் - சிவபிரானுக்குச் செய்யும் திருப்பணி.
பதிபோடுதல்-பதுங்கல், பதியம், கிளைநடுதல்.
பதிபோதம் - இறைஞானம்-வீட்டுஞானம்.
பதிப்பிரஞ்ஞன் - வழியறிந்தவன், பிரமஞானி.
பதிப்பிராணை - பத்தினி, பதிவிரதை.
பதிப்பு - பதித்தல், நூல்அச்சிடல்.
பதிமினுக்கி - விளக்குமாறு, வாருகோல், துடைப்பம்.
பதிமை - பிரதிமை, பதுமை, பொம்மை.
பதிம்பரை - சுவயம்வரை, சுயம்பரை.
பதியம் - பதிக்கப்பட்டநாற்று, கொடி, கிளை முதலியவைகளைத் துண்டித்து நட்டுப் பயிர் செய்தல், பத்துச்செய்யுளான் முடியும் பிரபந்தம், பாசி, பாசிப்பூடு.
பதியரி - நாற்று, நாரு.
பதியான் - ஊன்றுன், மிதியான்.
பதியிலார் - கணிகையர், பரத்தையர்.
பதியிலான் - தற்பரன், வீடில்லான், நிலையில்லான்.
பதியெழுதல் - வலசைபோதல்.
பதிரன் - செவிடன், காதுகேளாதவன்.
பதிலி-பிரதியாக நியமிக்கும் ஆள் அல்லது பொருள்.
பதில் - வதில், பிரதி, விடை, உத்தரம்.
பதிவதம் - பதிவிரதை, கற்புடையாள்.
பதிவத்தினி - மங்கலை, சுமங்கலி, பத்தினி.
பதிவாகன்-சுமைகாரன், சுமை சுமப்பவன்.
பதிவி - பதியச்செய், நன்கு ஊன்றுவி.
பதிவிடம் / பதிவிடை } ஒளித்திருக்குமிடம், மறைவிடம்.
பதிவிதம் - பதிவிரதம், பதிவதம்.
பதிவிரதமூல்லை - கற்புக்கு அறிகுறியாக அணியும்மூல்லை.
பதிவிரதம் - கற்புத்தவறுமை, பதிபக்தி.
பதிவிரதாதருமம் - கற்புநெறி, கற்பொழுக்கம்.
பதிவிரதாபத்தினி - பதிவிரதை, கற்பரசி.
பதிவிரதாபுண்ணியம் / பதிவிரதாவிரதம் } கற்புநெறி, கற்பொழுக்கம்.
பதிவிரதி / பதிவிரதை } கற்புடையாள், பதிபக்தியுடையாள். [தல்.
பதிவிருத்தல்-மறைந்திருத்தல், ஒளிந்திருத்
பதிவிளக்கு-பேயோட்டுவதற்காகக் குடத்தின்மேற் பதியவைக்கும் விளக்கு.
பதிவு - குனிவு, சாய்வு, பதிதல், விலைதணிவு, பதுக்கம், பள்ளம், மனம்ஊன்றுகை, அமைதி, கணக்குப்பதிதல்.
பதிலவத்தல்-நாற்றுப்பதித்தல், வேர்வைத்தல், பதிபோடுதல், கடவுசெய்தல்.
பதிற்றந்தாதி-ஓர்பிரபந்தம்; அஃது:முறையே பத்து வெண்பாவும், பத்துக் கலித்துறையுந்தோன்றவந்தாதித்துப்பாடுவது
பதிற்றுப்பத்தந்தாதி- நூறுசெய்யுள்கொண்ட ஓர்பிரபந்தம்;அதன் ஒவ்வொருபத்தும் சந்தம் வேறுபட அந்தாதித்துப்பாடுவது.
பதிற்றுப்பத்து - நூறு. (2) கடைச்சங்கப் புலவரியற்றிய எட்டுத்தொகையுள் நான்காவது. இந்நூல் சேரர் புகழைக்கூறுவது
பதிற்றொன்பான் - தொண்ணூறு, ஓர் தொகை.
பதினயிரம்-ஒரெண், 10,000, பத்தாயிரம்.
பதினலுலோகம்-கீழேழுலகு மேலேழுலகு; அவை: அதலம், விதலம், சுதலம், தராதலம், இராசாதலம், மகாதலம், பாதலம் இவை ஏழுங்கீழுலகு. பூலோகம், புவர்

லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் இவை யேழும் மேலுலகு.

பதினறுகோணம் - எட்டுத் திக்குகளுடன் அவற்றிற்கு இடையிட்ட திக்குகள் எட்டையும் சேர்க்க கோணம் பதினறு.

பதினெட்டாம்படி - அழகர்கோவில் முதலியவற்றிற் பிரமாணஞ் செய்வதற்கு இடமாய் உள்ள பதினெட்டுப்படி, காலங் கடந்து பூப்படையும் பெண்.

பதினெட்டாம்படிக் கருப்பன் - பதினெட்டு படிகளுள்ள மேடையின் மீது உள்ள ஒரு தெய்வம்.

பதினெட்டாம் பெருக்கு - ஆடி மாதம் பதினெட்டாம் தேதியில் காவேரியிலேற்படும் பெருக்கு, ஆடி மாதம் பதினெட்டாம் காளில் கொண்டாடும் விழா.

பதினெட்டு - பத்துக்குமேல் எட்டுக் கொண்ட எண்.

பதினெண்கணம் - பதினெண்கூட்டம்; அவர்: அசுரர், அந்தரர், அமரர், ஆகாயவாசிகள், இயக்கர், உரகர், கருடர், கந்தருவர், கிம்புருடர், கின்னரர், சித்தர், நிருதர், பூதர், பைசாசர், போக பூமியர், முனிவர், விஞ்சையர், வித்தியாதரர்.

பதினெண்கீழ்க்கணக்கு - நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை யைம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி யைம்பது, திணை மாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம். முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை.

பதினெண்கண்ணன்-முருகன், அறுமுகன்.

பதினெண்குடிமை - ஓடாவி, கன்னர், குயவர். கொல்லர், கோவியர் சிவியார், தச்சர், தட்டார், நாவிதர், பள்ளர், பாணர், மாலைக்காரர், மூவாணிபர், வண்ணர், வலையர், வெட்டியான் என்னும் சாதியார்.

பதினெண்குற்றம் - யாக்கைக்குரு குற்றம்.

பதினெண்சித்தர்-திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டி, சட்டைமுனி, சுந்தரானந்ததேவர், குதம்பைச் சித்தர், கோரக்கர் என்பவராவர்.

பதினெண்ணுபுராணம் - பதினெண் புராணத்து மெடுத்து ஆக்கியோர் பெயராய் வழங்குஞ்சார்புநூல்; அவை: பிரமாண்டம் அவுசனம், காபிலம், காளிகம், சனற்குமாரம், சாம்பவம், சிவதன்மம், சௌரம், துருவாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பராசரம், பார்க்கவம், மாரீசம், மானவம், வாசிட்டலிங்கம், வாருணம் என்பனவாம்.

பதினெண்பாடை - பதினெண் தேசத்தார்க்குரிய பாஷை; அவை: அங்கம், அருணம், கலிங்கம், காம்போசம், கொங்கணம், கோசலம், கௌசிகம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பதினெண்புராணம் - சிவபுராணம் பத்தும், விட்டுணுபுராண நான்கும், பிரமபுராண மிரண்டும், அக்கினிபுராண மொன்றும், சூரியபுராண மொன்றுமாம். இவை: (முறையே) இலிங்கம், காந்தம், கூர்மம், சைவம், பிரமாண்டம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம், காருடம், நாரதீயம், பாகவதம், வைணவம், பதுமம், பிரமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம்.

பதிஞ்ஞாடல் - புறக்கூத்திற்குரிய ஒன்று.

பதினேந்தாம்புலி - கீறியகட்டத்தில் புலியென்று கூறும் 3 காய்களையும், நாயென்று கூறும் 15 காய்களையும் வைத்து ஆடும் விளையாட்டு. [மர்.

பதின்மர்-தசப்பிரஜாபதிகள், ஆழ்வார்பதின்

பதுகை-பழமுண்ணிப்பாலை, குளப்பாலை.

பதுக்கம் - ஒளிப்பு, கபடம்.

பதுக்கல் - பதுக்குதல், எதிர்மறை வினை முற்று, உடன்பாட்டு வினைமுற்று, தொழிற் பெயர். [வன்.

பதுக்காயன்-குள்ளமாய். பருத்தசரீரமுள்ள

பதுக்காய் - உள்ளான்குருவி, கூழை, வளர்ச்சியற்றது, குள்ளமாயுள்ளவன். [வல்.

பதுக்கு - பதுக்கை, மறை, பதுக்கென்னே

பதுக்குதல் - மறைத்தல், ஒளித்தல்.

பதுக்கை-சிறுதிட்டை, சிறுதூறு, பாறை, கற்குவியல், இலைக்குவியல்.

பதுங்கலன் - பதுங்கிப் பின்னிற்பவன்.

பதுங்கல் - ஒளித்தல், வியங்கோண்முற்று, ஒடுக்கம், பின்னிற்றல்.

பதுங்கி-பின்நிற்பவன், மறைந்துதிரிபவன்.

பதுங்குதல் - ஒளித்தல், பம்முதல்.

பதுங்குபிடித்தல் - மேற்றளத்திற்குச் சிறு கற்பரப்புதல்.

பதுமகருப்பன் - பிரமன், விட்டுணு, கடவுள்.
பதுமகாரிகை - பிரத்யோதனன் முதல் மனைவி, வாசவதத்தை, இலக்குமி, சரச்சுவதி.
பதுமகிரி - திண்டுக்கல், படைப்பின் தொடக்கத்தில் பத்மதீர்த்தம் ஒன்று உண்டாக, அதில் தாமரை தோன்றிப் பின் மலையாக மாறியது. அதனால் அது பதுமகிரி எனப்பட்டது. திண்டீச்சுரம், திண்டீ என்ற அசுரனை அம்பிகை அங்கே கொன்றபோது, அவன் தன் பெயரால் இந்நகர் விளங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி, அதற்குத் திண்டீச்சுரம் எனப் பெயர் ஏற்பட்டது.
பதுமடம் - மேனிலைக்கட்டும், சிகரங்களுமுடைய கோயில்.
பதுமகேசரம் - புன்னைமரம், சுரபுன்னை.
பதுமகோசம் - பதுமகூடம்.
பதுமகோசரம் - நாட்டியத்தில் ஐந்து விரல்களுமேனேக்க விற்போல் வளைத்துக் காட்டல்.
பதுமகோசிகம் - பதுமகோசரம்.
பதுமகோமளை - சூரபத்மன்மனைவி, இவளிடத்திற் பிறந்த புத்திரன் பானுகோபன், இலக்குமி.
பதுமசாரணி - ஓர் தாமரை, நளினசாரிணி.
பதுமதந்து - தாமரைநாளம்.
பதுமநாபன் } விட்டுணு, திருமால். [ந்து.
பதுமநாபி }
பதுமநாளம் - தாமரைக்கொடி, தாமரைத்த
பதுமநிதி - தாமரையுருவாய்க்கிடக்கும் பொருள்; அஃது: இந்திரனிருவகைநிதிகளிலொன்று, குபேரனவநிதிகளினு மொன்று.
பதுமபத்திரம் - தாமரையிலை, பதுமபர்ணம்.
பதுமபந்து - சூரியன், தேனீ, தேன்வண்டு.
பதுமபந்தம் - கமலபந்தம், ஓரலங்காரம்.
பதுமபர்ணம் - தாமரையிலை, பதுமபத்திரம்.
பதுமபாணி - சூரியன், பிரமன், புத்தன்.
பதுமப்பிரமர் - தீர்த்தங்கர் இருபத்திநால் வருளொருவர்.
பதுமபீடத்தன் - பிரமன், கமலாசனன்.
பதுமபீடம் - பதுமாசனம், புத்தன் பாதபீடம்.
பதுமபுரம் - மத்தியதேயத்து ஓர் ஊர்.
பதுமபுராணம்-பாத்துமபுராணம்; இது பதினெண் புராணத்தொன்று 55000-ம், கிரந்தங்களையுடையது, பிரம்மாவின் தோற்றமுதலாகக்கொண்டு கூறும் நூல்.
பதுமமணி-தாமரைக்கொட்டை, பதுமபீசம்.
பதுமம் - ஈயம், ஓர் குளிகை, 1,00,00,000, 00,00,000) கோடாகோடி, சோதிநாள், தாமரை, பதினெண் புராணத்தொன்று, பதுமாசனம், மூடியுறுப்பைந்தினொன்று, யானைத்துதிக்கைப்பொறி. [ன்.
பதுமயோனி - பிரமன், விரிஞ்சன், மலரோ
பதுமராகம் - கெம்பு. [கை யிரேகை.
பதுமரேகை - அதிட்டத்தைக் குறிக்கும்
பதுமரோகம்-கண்ணிரப்பைக்குள் சிகப்புநிறமான சதை வளரும் ஓர்வித நோய்.
பதுமர் - புத்தருள் ஒருவர்.
பதுமலாஞ்சனன்-அரசன், பதுமசிம்மாசனாதிபதி, குபேரன், சூரியன், பிரமன்.
பதுமலாஞ்சனை - இலக்குமி, சரசுவதி, மலர்மகன்.
பதுமவிரோதி - சந்திரன்; குமுதாண்பன்.
பதுமவியூகம் - தாமரை வடிவாக வகுக்கப்பட்ட படையணி. [ட்டு.
பதுமவீசம் - தாமரைக் கொட்டை, பொகு
பதுமனூர் - நாலடியாருக்கு அறம், பொருள் இன்பம் எனப்பாற்படுத்து உரை யெழுதின ஓர் ஆசிரியர்.
பதுமன் - அட்டநாகத்தொன்று, இராமன், ஓர் சக்கிரவர்த்தி, பதுமயோனி, பிரமன்.
பதுமாகரம் - தடாகம், தாமரைக்குளம்.
பதுமாக்கம் - பதுமவீசம், பதுமமணி.
பதுமாசனம் - பதுமபீடம். (1) தாமரைமலர் வடிவாகச் சமைத்த ஆசனம். (2) அட்டாங்க யோகாசனத்தொன்று; அஃது: இரு தொடைமேலுமிரண்டுள்ளங்காலையு மாறித் தோன்றவைத்திருத்தல். [ன்.
பதுமாசனன்-பிரமன், தாமரையலுத்தோ
பதுமாசனை - திருமகள், தாமரைச்செல்வி.
பதுமாதனம் - பதுமாசனம், பதுமபீடம்.
பதுமாதனி - இலக்குமி, கமலாசனி.
பதுமாந்தரம் - தாமரையிதழ், தாமரைமலர்.
பதுமாபதி - பதுமை, ஊர். பதுமாங்கை, பதுமாதேவி, தருசகனுடைய தாயின் சகோதரியான உதயையுடைய மகள், இவள் தந்தை காசிராஜன். இவள் பிராமணக் கோலத்திலிருந்த உதயணனைக் காதலித்துத் தனது பகைவரை யழித்தாள்; தனக்கு வெற்றி தந்து பகைவரை அழித்த உதயணனுக்குத் தருசகன் இவளை மணஞ்செய்வித்தான், இவள் மகன் கோமுகன்.
பதுமாப்தன் - சூரியன், பதுமநாயகன்.
பதுமார்க்கம்-கவிழ்தும்பை, பெருந்தும்பை.
பதுமாலயை - இலக்குமி, சரச்சுவதி.

பதுமாவதி - ஓர் நதி, ஓர் முனிவரது பத்தினி, பத்மாவதி.
பதுமினி - கூத்திஞேர் விகற்பம், பெண் வகை நான்கின் முதலாமவன். [ன்.
பதுமினிகாந்தன் - சூரியன், தாமரைநாயக
பதுமுகம் - ஓரிருக்கை, பதுமாசனம்.
பதுமுகன் - தனபாலன் மகன் ஜீவகன் தோழரிலொருவன்.
பதுமை-இலக்குமி, ஓரிதழ்த்தாமரை, காளி, பதிமை, பொம்மை, விக்கிரகம், ஒலியம், பதுமாவதி, பிரத்யோதனனுல் உதயணனிடம் அனுப்பப்பட்ட ஒரு ஸ்திரி, ஒரு குணம், சீதத்தன்மனைவி, சிவகன் மனைவி மாரிலொருத்தி.
பதுமைகதை-பதிமைகதை, விக்கிரமாதித்தனைப்பற்றிப் போஜனுக்கு முப்பத்திரண்டு பதுமைகள் கூறியதாக வழங்குங் கதை.
பதுமையாட்டம் - பரவைக்கூத்து.
பதுமோத்தரர் - பழைய புத்தருளொருவர்.
பதுமோற்பவன்-பிரமன்,உந்தியுதித்தோன்
பதைத்தல் - பதைப்பு, அச்சக்குறிப்பு, அசைத்தல், நடுக்குதல், நடுங்தல்.
பதைபதைத்தல் } மிகப்பதைத்தல், வருந்
பதைபதைப்பு. } துதல், செருக்கடைதல்.
பதைப்ப - பதைப்பவை, நடுங்க, அசைய.
பதைப்பு - இரக்கம், பதகளிப்பு, பதறுதல்.
பதோதகம் - சதக்கல், சகதி, சேறு, பாதப் பிரட்சாளன நீர்,வழிக்கரையிற்றண்ணீர்.
பத்தகணம் - பத்தர்கூட்டம், திருக்கூட்டம்.
பத்தகாரன் - சமையற்காரன், பரிசாரகன்.
பத்தகேசரி - கருப்பூரம், கற்பூரம், சூடன்.
பத்தங்கம் - செஞ்சந்தனம், செஞ்சாந்து.
பத்தங்கி - சம்பங்கி, ஓர்வகை மலர்க்கொடி.
பத்தங்கெட்டவன் - ஒழுக்கங்கெட்டவன்.
பத்தசந்தம்-போசனப்பிரியம், உணவாசை.
பத்தசனம்-தொண்டர், திருக்கூட்டத்தார்.
பத்தசாரம் - காடிச்சலம், புளித்த நீர்.
பத்தசை - அமுதம், சுரபி, சுரை.
பத்ததி-ஒழுங்கு,கிரியைகளோவிதிக்கிறநூல், சொற்பயன், வழி, சொற்பொருள்.
பத்தபராதீனன் - கடவுள், விஷ்ணு, சிவன்.
பத்தம் - உணு, உண்மை, கட்டு, நன்றியறிகை. [ழ்வார்.
பத்தரடிப்பொடி - தொண்டரடிப்பொடியா
பத்தரா - மூசுமூசுக்கை, பத்தரு.
பத்தராசு - அந்திமந்தாரை, அந்திமல்லி.
பத்தராய்ப்பணிவார் - திருவாரூரில் வசித்து வந்தவராகிய அறுபத்துமூன்று நாயன் மார்களில் ஒருவர்.
பத்தராவி - திருமால், முருகன்.
பத்தரூபி - கருப்பூரம், பத்தகேசரி.
பத்தர் - தட்டார், தேவதொண்டர், வர்த்தகர், அன்புடையார், குடிக்கை, வீணையினேர் உறுப்பு.
பத்தல் - ஓர் பாத்திரம், நீரிறைக்குஞ்சால், யாழினேருறுப்பு, மூங்கிற்பத்தல், போர்வை, குழி, கிணறு, கூனை. [ல்.
பத்தவத்தலேவன் - கடவுள், சிவன், திருமா
பத்தவற்சலன் - பக்தவத்ஸலன், கடவுள்.
பத்தவிராசி - குதிரைச் சாதிவகை,பத்தாயபெட்டி. [டி, பத்தரா.
பத்தரு - மொசுமொசுக்கை, மூசுக்கைச்செ
பத்தனம் - பட்டணம், பட்டினம், நகரம்.
பத்தன் - அன்புடையோன், தட்டான், தொண்டன், ஆஸ்திகன், நம்பகன், பூசிதன்.
பத்தா - கணவன், படிப்பணம், துப்பு.
பத்தாசி - மிட்டாய்வகை, பித்தான்.
பத்தாசு - ஓடம், மஞ்சி.
பத்தாசை - நன்றியும், அன்பும்.
பத்தாயம் - தானியக்களஞ்சியம், மஞ்சி.
பத்தாயி - சாராயவகை, கற்கண்டுவகை.
பத்தி-அடைப்பு, அன்பு, ஒழுக்கம், ஒழுங்கு, ஞாணினிடைவெளி, தொண்டு, நடை, நம்பிக்கை, நிரை, பங்கு, பதாதி, பாத்தி முறைமை, வரிசை,வழிபாடு, விசுவாசம், வீட்டிறப்பு, கடவுள்பத்தி, நம்பகம், பத்திக்கீற்று, வாசனைதரும் ஊதுபத்தி, கடவுளிடம் பக்தியையுடையவள்.
பத்திகாண்டிகர் - மூவகைப்பக்குவரிலொருவர்; அவர்: நேசப்பெருக்கமுடையோர்.
பத்திக்கீற்று - வரிக்கோலம், தொய்யில், மார்பிலெழுதும் வரிக்கோலம்.
பத்திசாரர் - திருமழிசை யாழ்வார், பக்தியுடையோர். [லியாதி.
பத்திசூலம் - ஓர்நோய், சூல சம்பந்தமான
பத்திச்சுவாலகர்-கடவுளைப்பற்றியபத்தியிற் பசுவாலிப்போர், வாஞேர் வகையினர்.
பத்திடை - (1000) ஆயிரம் பலங்கொண்ட நிறுத்தலளவை.
பத்திரச்சுரிகை - சேமவாள்.
பத்திரச்சேதம் - இலேமுறிப்பு, மகரமீன் முதலியனவாகச் சீலையைச் சேதித்தல்.
பத்திரடவு - நாற்றை ஒழுங்காய் நடல்.
பத்திரெறி - பக்திமார்க்கம், தெய்வநெறி.
பத்திரங்காரம் - ஆற்றுநீர்ப்பாய்ச்சல்.
பத்திரபாய்தல்-கதிர்வீசல், பிரதிவிம்பித்தல்.
பத்திமார்க்கம் - சன்மார்க்கம். [தாழ்வடம்.
பத்திமாலை - மணமக்களணியும் சிறு மாலை,

பத்திமான் - பத்தியுடையோன், ஆஸ்திகன்.
பத்திமை-அன்புடைமை, ஒழுக்கமுடைமை, தேவபத்தியுடைமை, காதலுடைமை.
பத்தியக்காரி - சிறுகீரை. [ந்தல்.
பத்தியங்காத்தல் - மருந்துக்கேற்ற உணவரு
பத்தியம் - ஆரியம், தெலுங்கு இவற்றின் பிரபந்தம், இலக்கணம், இதம், கடு, கடுக்காய், பூவாது காய்க்கும் மரம், தமிழ்ப் பாடல், போசனம், மருந்திற்கிசைந்த புசிப்பு, இலஞ்சம், பரிதானம்.
பத்தியம்பிடித்தல்-பத்தியமாக உண்ணுதல்.
பத்தியம்போடுதல் - பத்தியமிடல், பிரசவித்தவளுக்கு மூன்றாம் நாள் பத்திய உணவு கொடுத்தல்.
பத்தியாபத்தியம்-நோயாளருக்கு ஏற்றவையும், ஏலாதவையும் ஆகியவைகள்.
பத்தியுலாவுதல் - கடவுள் உலாவி வருதல், சாரிபோதல்.
பத்திரகம் - இலை, இறகு, சந்தனம் பூசுதல்.
பத்திரகாகலம் } புள் சிறகடித்தெழுமொலி.
பத்திரகாகலை }
பத்திரகாளி - பார்வதி அமிசமாகிய ஒரு தேவி, துர்க்காதேவி, மகிடற்செற்றாள்.
பத்திரகிரி - ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம்.
பத்திரகிரியார் - இவர் ஓர் அரசர், இவர் பட்டணத்துச்சுவாமிகளது உபதேசத்தாலே தாம் அனுபவித்துவந்த அரசபோகத்தை வெறுத்துத் துறவியானவர். இவர் பாடிய புலம்பல் ஞானமிர்தம் பொழிந்தது போல மனத்தை உருக்கும் தன்மையது.
பத்திரகும்பம் - முடிசூட்டுக்குச்சலம்பூரித்த கும்பம், மங்களகாரியங்களி லுபயோகிக்குங் கும்பம். [பிசனம்.
பத்திரங்கம் - செஞ்சந்தனம், செஞ்சாந்து,
பத்திரசியம் - சந்தனம், சந்திரதிலகம்.
பத்திரசிரேட்டம் - வில்வம், தேவதாமரம்.
பத்திரசுரம் - கட்டாரி, எழுத்தாணிப்பூடு.
பத்திரசூசி-இலையில் மூளைத்திருக்கும் முள்.
பத்திரசேனன் - (ய) மகிழ்மந்தன்புத்திரன்.
பத்திரதன் - (அம்) பம்பன் பௌத்திரன், பிருகத் கர்ணனுடைய தந்தை. [வாள்.
பத்திரதாரகம் - சட்டவாள், இலைகொய்யும்
பத்திரதாருகம் - தேவதாரம், தேவதாரி.
பத்திரதாலி-சாதிமல்லிகை,பெருமல்லிகை.
பத்திராடிகை - இலைநரம்பு, தழைநரம்பு.
பத்திரபதி - சிற்றாமுட்டி, சித்தாமுட்டி.
பத்திரபதை - இரேபதி, உத்திரட்டாதி.
பத்திரபத்தம் - வண்டியினோர் உறுப்பு.
பத்திரபாசு - அரம் இராவி, உராஞ்சகருவி.
பத்திரபலகம் - பலராமன், பலபத்திரன்.
பத்திரபாணி - பூசணி, பரங்கிக்கொடி. [ல்.
பத்திரப்படுத்தல் - பராமரித்தல், பாதுகாத்த
பத்திரப்பதிவு - சாஸனங்களை அரசாங்கப் பதிவு செய்தல்.
பத்திரமாலை - இலைமாலை, படலைமாலை அழகியமாலை.
பத்திரம் - அதிட்டம், அம்பிறகு, அம்பு, அழகு, இரும்பு, சீட்டு, இலை, இறகு, உடைவாள், உறுதிப் பத்திரம், எருது, குறிச்சி, குற்றுவான், சந்தோஷம், செல்வம், திராட்சி, திருமுகம், நன்மை, மடை, பத்திரவாகரணம், புத்தகத்தினெற்றையேடு, பூவிதழ், பேணம், பொன், மலை, முடியுறுப்பு, மெல்லிய தகடு, வாகனம், சாக்கிரதை, உறுதி, குதிரைப்பந்தி, மரக்கலம்.
பத்திரயௌவனம் - தளிர், துளிர், தழை.
பத்திரரதம் - பட்சியினம், பறவையினம்.
பத்திரரேணு - ஐராவதம், இந்திரன்யானை.
பத்திரலதை - பெரிய பட்டாக்கத்தி, பிடிவாள். [பூடு.
பத்திரவம் - பத்திரவாகரணம், புரண்டான்
பத்திரவருடம் - நவவருடத்தொன்று.
பத்திரவாகம்-அம்பு, பட்சி, பறவையினம்.
பத்திரவாகரணம்-வீட்டிக்கரணம்,பத்திரை.
பத்திரவாகன் - ஓலைகொண்டுபோவோன்.
பத்திரவாகு- (ய) வசுதேவனுடைய புத்திரன், சுபத்திரனுடைய சகோதரன்.
பத்திரவீரியகம் - கோணமுங்கில், பிரம்பு.
பத்திரன்-சிவன், வீரபத்திரன், வசுதேவன் புத்திரன், சுபத்திரன் சகோதரன்.
பத்திராகரணம் - சௌளஞ்செய்தல்.
பத்திராகாரன் - அழகிய வடிவினன்.
பத்திராக்கியம் - தாளிசபத்திரி, சிவபத்திரி.
பத்திராங்கம் - ஊமத்தை, செஞ்சந்தனம்.
பத்திராசலம் - ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம்.
பத்திராசனம்-அட்டாங்கயோகத் தோராசனம்; அஃது பீசத்தின் கீழ்ச் சிவனியிடத் திருகாற்பாட்டையும் வைத்ததை யிருகையா னிறுகப்பிடித் தசையா திக்குமோர் யோகம், இராசாசனம், அக்கிராசனம்.
பத்திராசனர்-வானோர் நவகண்டத்தொருவர், கடவுளாதனத்தைப் புகழ்ந்துறைவோர்.
பத்திராசிரியம் - சந்தனம், சந்திரதிலகம்.
பத்திராசிரியர் - பத்திராதிபர்.
பத்திராசுவம் - நவகண்டங்களிலொன்று.
பத்திராஞ்சனம் - மை, அஞ்சனமை, திலம்.
பத்திராட்சம் - அத்திமந்தாரை, ஓர் கொட்

டை, அந்திமல்லி, வீரபத்திரமணி.

பத்திராதனம் - பத்திராசனம், பதுமாசனம்.

பத்திராதிபர் - பத்திரிகைத் தலைவர். [பிலி.

பத்திராத்தியம் -திப்பிலிமூலம், கண்டத்திப்

பத்திராத்துமசம் - வாள், கட்கம், கண்டகம்.

பத்திராபதம் - ஏற்றூரி, இடபத்தேர்.

பத்திராபதி - குபேரன் நாடகமகளிரி லொருத்தி, அவனுடன் கருமதை யாற்றங் கரையில் பூப்பறிக்கச் சென்ற விடத்துப் பிடியுடன் குலாவும் களிற்றைப் பார்த்து வியந்து நின்றதால், அவளுல் சபிக்கப் பட்டுப் பிடியுருவெய்தினள். அவன் சாப விமோசனம் வேண்ட உதயணனுற் றீரு மென்றவாறே, பிரச்சோதனனுல் வாசவ தத்தையுடன் இப்பத்திராபதியும் கொடுக்கப் பட்டது. இதன்மீது வாசவதத்தை யுடன் உதயணன் நீர் விளையாட்டிற்குச் செல்ல, அங்குப் பத்திராபதி நோய்வாய்ப பட்டிறக்க, அதற்கு நீர்க்கடன் செய்து கோவில் கட்டப்பட்டது. இதுவும் முன் னைய உருவெய்தி, உதயணனுக்குப் புத் திரப் பேறு உண்டாகக் குபேரனே வேண்ட, அக்குபேரனும் இந்திரனே இரக்க, அவன் கௌதமன் என்ற முனி வனை அவன் மகளைப் பிறக்க வென அவ்வாறு வாசவதத்தை கருவுற்றிருக்க, அவளும் ஆகாயகமனம் விரும்ப, இப் பத்திராபதியே விமானமும் அமைத்து உதவினன். ஒரு யானையின் பெயர்.

பத்திராவதி - பாண்டவர்பதியாம் அஸ்தினு புரத்துக்கு ஐந்துகாதத்திலுள்ள ஒருநகரம்.

பத்திராவி-திருமால், வாசவன். [கொத்தனம்.

பத்திரி-அம்பு, இலை, காளி, குதிரை, பறவை,

பத்திரிகை - இலை, ஒற்றை, ஓலையுறுதி, திருமுகம், திருமணப்பத்திரிகை, விஷயப் பத்திரிகை. [வரக்கட்டுதல்.

பத்திரிப்பு - சுவற்றின் அடிப்பாகம் பிதுங்கி

பத்திரை - அவுரி, இரண்டாம், ஏழாம், பன்னிரண்டாந்திதி, கங்கை, காளி, கோரி புரண்டாண்பூடு, நற்பசு, மஞ்சள், துர்க்கா தேவி, (2) வசுதேவன்பாரி. (3) திருவஷ் ணன் பாரிகளிலொருத்தி, கேகயன்மகள், தேனு, குபேரன் நாடகமளிரிலொருத்தி.

பத்திரைகேள்வன்-வீரபத்திரன், உக்கிரன்.

பத்திரோதகம் - இலேயினீர், பச்சிலைச்சாறு.

பத்திரோர்ணம்-வெண்பட்டு, நார்மடிப்பட்டு.

பத்திரோல்லாசம்-இலேத்தளிர், சிறுதளிர்.

பத்திவான்-பத்தன், தொண்டன், நன்மகன்.

பத்திவிசுவாசம் - உறுதியான நம்பிக்கை.

பத்திவிரிப்பு - கோலக்கோணத்துச் சித்திரங்களி லொன்று. [தம்.

பத்திவைராக்கியம் - தெய்வபத்திப்பிடிவா

பத்தினி - இல்லாள், கற்புடையாள், மனைவி.

பத்தினிக்கடவுள் - கண்ணகி, இவளுக்கு இப்பெயர் சிலம்புகாரணமாகக் கோவல னுடு சுவர்க்கஞ் சென்றபின்பு வந்தது.

பத்தினித்தனம் - கற்புநெறி, பதிவிரதம்.

பத்திளிப்பின்னே-குடிப்பின்னே, குலப்பின்னே.

பத்து-ஒரெண், தேவபத்தி, பாதம், பற்று, மேற் பூசும் பத்து, இறந்தவர்க்குப் பத்தாம் நாள் செய்யும் பிரேதச் சடங்கு.

பத்துக்காலான்-நண்டு, அலவன்.

பள்ளக்காடு - தாழ்ந்த புன்செய் நிலம்.
பள்ளக்கால்-தாழ்ந்த பாய்வாய்க்கால், தாழ்ந்த நன்செய்நிலம்.
பள்ளக்கை - பதிந்த நிலப்பரப்பு.
பள்ளச்சி - பட்பெண், பள்ளி, பள்ளத்தி.
பள்ளச்சேரி - பள்ளக்குறிச்சி, பள்ளர்வீடு.
பள்ளத்தாக்கு - மலைகளின் இடைப்பட்ட தாழ்விடம். [பணிக்கப்பெண்.
பள்ளத்தி - பட்பெண், பள்ளச்சி, பள்ளி,
பள்ளமடை - தாழ்ந்தவிடத்தில் தண்ணீர் பாயவிடும் மடை. [தாழ்வு.
பள்ளம்-ஆழம்,தாழ்ந்தநிலம், டொக்கு,குழி,
பள்ளயம் - தேவதைகட்குச் செய்யுங் குளிர்த்தி, பச்சை பரப்புதல், பள்ளையம்.
பள்ளம்பறித்தல் - குழிதோண்டல், ஒருவனைக்கெடுக்க முயலுதல்.

பள்ளர் - உழவர், பள்ளர், பணிக்கர், பழன
பள்ளாடு பள்ளையாடு, வெள்ளாடு.[மாக்கள்.
பள்ளி-வண்ணியர் அறச்சாலை, சமண பௌத்த கோயில், அறை, ஊர், ஓர்சாதி, கல்லூரி,சிற்றூர்,தேவர் கோவில், நித்திரை, பட்பெண்,பள்ளிக்கூடம், குறும்பர்,மக்கட்பதுக்கை, மருதநிலத்தூர், முனிவர் வாசம், இடைச்சேரி, இடம், விலங்குதுயிலிடம். [அரியணை.
பள்ளிக்கட்டில் - சிங்காதனம், சிம்மாதனம்,
பள்ளிக்கணக்கர் - கற்போர்,மாணவர்.
பள்ளிகொண்டபெருமான் - விட்டுணு, திருமால்.
பள்ளிகொண்டான் - இவர் ஓர் பரதவர் குலத்துப் பிரபு; இவர் பல வித்துவான்களுக்குப்பொருள் வழங்கிஅவர்களால்புகழப்பாமாலை பெற்றிருக்கின்றார்; நையாண்டிப் புலவர் இவர்மீது "வள்ளிகொண்டான் மயிலேறிக் கொண்டான் மதி போலும்மலைவெள்ளிகொண்டான்விடையேறிக்கொண்டான் விண்ணவர்க்குமுதம் தள்ளிகொண்டான்புள்ளிலேறிக்கொண்டான் சுபசோபனஞ்சேர் பள்ளிகொண்டான் புகழேறிக் கொண்டானென்று பார்க்கவென்றே" என்று பாடியிருக்கின்றார்.
பள்ளிகொள்ளுதல்-படுத்துக்கொளல். [தல்.
பள்ளிக்குவைத்தல்-பிள்ளைகளைக்கற்கவைத்
பள்ளிக்கூடம் - கல்விபயிலிடம், கலாசாலை.
பள்ளிசெய்தல் - பள்ளிவளர்தல், துயிறல்.
பள்ளித்தாமம் - திருப்பள்ளித்தாமம்.
பள்ளித்தோழமை - பள்ளிக்கூடசினேகம்.
பள்ளிப்படுத்தல் - கட்டிலேற்றல், சிதையிலடுக்குதல்.
பள்ளிப்பழக்கம் - கல்லூரிப்பயிற்சி.
பள்ளிப்பிள்ளை - பள்ளிமாணவன்.
பள்ளிமண்டபம், பள்ளிமாடம், பள்ளியம்பலம் } துயிலிடம், படுக்கையிடம்.
பள்ளியடைத்தல் - சாலையுண்டாக்கல்.
பள்ளியயர்தல் - நித்திரைகொளல், பள்ளிவளர்தல்.
பள்ளியறை - சயனவறை, நித்திரைவீடு.
பள்ளியிற்பிள்ளை-கற்போன், படிப்போன்.
பள்ளியெழுச்சி - ஓர்பிரபந்தம், துயிலெழுப்புகை, நித்திரைவிழித்தெழுதல். [தல்.
பள்ளியெழுப்புதல்-நித்திரைவிழிக்கச்செய்
பள்ளியோடம் - ஒருவகை மிதவை, இருப்பதற்கு ஏற்ப அமைந்த ஓடம்.
பள்ளிவளர்தல்-நித்திரைசெய்தல், தூங்கல்.
பள்ளிவாசல் - முகம்மதியர் மசூதி.
பள்ளிவாளம் - விஷப்பூச்சிவகை.
பள்ளிவேட்டை-திருவனந்தபுரத்தில் பத்மநாபசுவாமி உற்சவத்தில் மகாராஜாவை முதன்மையாகக் கொண்டு சுவாமி வேட்டையாடுவதாக நிகழ்த்தும் விழா.
பள்ளு - பன், ஓர் நாடகத்தமிழ்நூல்.
பள்ளுவிலி - உழத்தியரைச்சார்ந்த ஓர்சாதி.
பள்ளை, பள்ளையாடு } ஆடு, குள்ளம், வயிறு பருத்த பிராணி, வெள்ளாடு.
பள்ளைச்சி - குள்ளமானவள், குள்ளி. [யம்.
பள்ளையம் - உண்கலம், தாம்பாளம், பள்ள
பள்ளையன் - குறுகிப் பருத்தவன், குள்ளன்.
பறக்கடித்தல்-அகற்றல், துரத்துதல், சிதறடித்தல், விரட்டியடித்தல்.
பறக்கவிடுதல் - ஆகாயத்திற் செல்லும்படி செய்தல், உதவிசெய்யாது கைவிடுதல், கெடுத்தல். [பறவாதி.
பறக்காளி - பறைக்காளி, பறப்புக்காரன்,
பறக்குதல்-பறத்தல்,அவசரப்படுதல். [ரன்.
பறங்கி-ஓர்மேகவியாதி,பறங்கிப்பாடைக்கா
பறங்கிக்காய் - பூசினிக்காய், பூசனிக்காய்.
பறங்கிக்காரன் - ஐரோப்பியன், பறங்கி, சட்டைக்காரன். [கொடி.
பறங்கிக்கொடி - பூசனிக்கொடி, பூசணிக்
பறங்கிக்கிழங்கு - சீனக்கிழங்கு.
பறங்கிக்கூர்மை-காசிசாரம், இலவணவகை.
பறங்கிச்சாம்பிராணி - ஓர் மருந்து, சாம்பிராணிவகை, குங்கிலியம்.
பறங்கிச்சிலேநிறம்-மாங்கிஷசிலே, ஈரற்சிலே.
பறங்கித்தாழை - அன்னதாழை, அன்னாசித் தாழை [சக்கை.
பறங்கிப்பட்டை - சீனக்கிழங்கு, பரங்கிச்
பறங்கிப்பாஷாணம் - மேகநிறப்பாஷாணம்.
பறங்கிப்பாஷை - ஆங்கிலேய பாஷை.
பறங்கிப்புண் - ஓர் தொற்றுவியாதி, மேகப்புண்.
பறங்கிப்பேட்டை - ஓர் வியாபாரத்தலம்.
பறங்கியணிநுணை - மஞ்சணத்திமரம். [க்கு.
பறங்கியாமணக்கு - பப்பாளி, சீமையாமண
பறங்கிவாழை - ரஸ்த்தாளி வாழை.
பறங்கிவராகன் - பரங்கிப்பேட்டையில் வழங்கிவந்த ஓர் பொன்னாணயம்.
பறங்கிவியாதி - கிரந்திநோய், பறங்கி.
பறங்கிவைப்பு - வைப்புப் பாஷாணம்.
பறட்டை - சடைவு, செழிப்பற்றது, தழைவற்றது, தூற்றுமயிர்.
பறட்டைக்காடு-தூறடர்ந்தகாடு, முட்காடு.

பறட்டைக்கீரை-ஓர்க்வீதகீரை, நிந்தைமொ
பறட்டைச்சி-சிலும்பிய மயிருள்ளவள். [ழி.
பறட்டைமரம் - சிலும்படர்ந்த மரம்.
பறண் - புரண், புரணி, புறணி, கோள்.
பறண்டுதல் - சுரண்டுதல், அபகரித்தல், கீறுதல்.
பறதி - அவசரம், பறத்தல், படபடப்பு. [ன்.
பறதிக்காரன்-அவசரக்காரன், ஆத்திரக்கார
பறத்தால் - பறத்தல்.
பறத்தல் - அவசரம்பண்ணல், கிளர்தல், ஆசை முதலிய கிளம்புதல், விரைவாயோடல், காற்றிற் சிதறியொழிதல்.
பறத்தி - பறைச்சி, ஆதிசத்தி.
பறநாட்டுப்பெருங்கொற்றனார் - ஓர் சங்கப் புலவர். [டுதல்.
பறந்தடித்தல் - அவசரப்படுதல், துரிதப்ப
பறந்தலை - சுடுகாடு, போர்க்களம், பாலை நிலம், பாசறை, பாழ், பாழிடம், பாழ் நிலம். [தல்.
பறந்துவிழுதல் - பறந்தடித்தல், துரிதப்படு
பறபறத்தல் } ஈரடுக்கொலிக்குறிப்பு, சீக்கி
பறபறப்பு } ரம்பண்ணுதல்,மிகவிரைதல்.
பறபறவிளையாட்டு - ஓர் விளையாட்டு. [ப்பு.
பறபறென்னல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறி
பறப்பன - பட்சிசாதி, சிறகுடைப் பிராணி.
பறப்பனன் - பறப்பவள். [கம்.
பறப்பன் - அவசரக்காரன், தேள், விருச்சி
பறப்பு - பறதி, அவசரம், படபடப்பு.
பறப்புக்காரன் - அவசரக்காரன்.
பறப்பை - யாத்திரை, நெய்விடு பாத்திரம், நெய்க்கிண்ணம்.
பறம்நாடு - பாரி என்னும் வள்ளலின் நாடு; இது: பாரிமலைஎனப்படுவதாகிய (பிரான்மலை என்னும்) கொடுங்குன்றமாயிருக்கலாமென்று கருதப்படுகின்றது.
பறம்பர் - தோல்வினைஞர், சக்கிலியர்.
பறம்பி - மோசக்காரி, விபசாரி.
பறம்பு-மலை, பாரியென்னும் வள்ளலுடைய மலையும் மலைசார்ந்த நாடும், ஸ்தனம்.
பறல் - பறுத்தல்.
பறவாதி-பறதிக்காரன், பேராசைக்காரன்.
பறவாப்பூவை - காயாமரம்.
பறவை - அவிட்டநாள், இறகு, ஓர் நோய், பறப்பு, புள்; பதத்திரி, பட்சிஜாதிகள், பருந்து.
பறவைமாகாகம் - குக்குடசர்ப்பம்.
பறவைத்தொகுதி - பறவைக்கூட்டம்.
பறவையணில் - பறக்குமணில். [மருந்து.
பறவையின்வச்சிரம் - பொன்னம்பர், ஓர்
பறவையுறவி - மீன்வகை. [று, உவணம்.
பறவைவேந்தன்-கருடன், கழுழன், புள்ளே
பறழ் - அணில் குரங்கு முதலிய கோட்டில் வாழ் விலங்கின் பிள்ளை; ஆடு, கீரி, நரி, நாய், பன்றி, பாம்பு, புலி, பூனை, வெருகு, நரவி, மான், முயல், எலி இவற்றின் குட்டி.
பறளிகை } குறடு, பற்றிரும்பு, தளவரிசைப்
பறளை } படை.
பறளைச்சந்தனம்-தட்டையாகத் தட்டிவைத் துலர்ந்த சந்தனம்.
பறுக்குருகு - கொல்லன் துருத்தி.
பறுப்பருந்து - வளை. [ண்டுதல்.
பறுண்டுதல் - பிறுண்டுதல், கீறுதல், பற
பறுரிடுதல் } ஒலிக்குறிப்பு, ஓசைக்குறிப்பு.
பறுரெனல் }
பறி - பறித்தல், பறியென்னேவல், பொன், மீன்பிடிக்குங் கருவி, மீன்பெய்யுங்கருவி, கொள்ளை, வழிப்பறி, பெட்டி, பாக்குப் பெட்டி, குடலை, ஓலைப்பாய், மொட்டையடித்தல்.
பறிகாரன்-வழிப்பறி செய்பவன், வலைஞன்.
பறிகுதல் - கடந்தோடுதல், பெயர்ந்து வழுவுதல், தப்பிப் போதல்.
பறிகொடுத்தல்-அழியக்கொடுத்தல், களவு கொடுத்தல், பறிக்கக்கொடுத்தல்.
பறிக்கல்லு - கற்கிட்டம், பறிச்சிட்டம்.
பறிக்கல் - கிட்டம், சிட்டம், உறுக்கு.
பறிக்குதல் - இறக்குதல், கொய்தல், சாய்த்தல், தோண்டுதல், பிடுங்குதல், வலாற்காரமாய்க் கவர்தல், கொள்ளையடித்தல்.
பறிதலையர் - சமணரிலோர் விகற்பிகள்.
பறிதல் - பறிகுதல், வெளிப்படல், ஓடிப் போதல், எய்யப்படுதல், கட்டவிழ்தல், அறுதல், தப்பிப்போதல், வேரறுத்தல், பல் விழுந்து முளைத்தல்.
பறித்தல் - பறிக்குதல், பிடுங்கல், வலிதிற் கவர்தல், நீக்குதல், கவர்.
பறிபோடுதல் - மீன்பிடிக்கப் பறிவைத்தல்.
பறிப்பு - பறித்தல், அவகரிப்பு, கொள்ளை.
பறிமணல் - பொன்மணல்.
பறிமுதல்-பறிக்கப்பட்டது, கவரப்பட்டது.
பறிய-தூரமாக, தொலைவாக, சேய்மையாக.
பறியலூர் - வீரட்டானம் எட்டனுள் ஒன்று.
பறியல் - பறிப்பு, அவதரிப்பு, கவர்ச்சி.
பறியவிடுதல்-தப்பவிடுதல், நெகிழவிடுதல்.
பறியோலை - ஓலைக்கூடை.
பறிவு - ஒட்டுகை, பறியல், கழிவு, கீழ்பெயர்கை.

பறிவை - சிந்திர்கொடி, சிவந்தி, நந்தியா வட்டை, தாழை. [ளன்,
பறுகன் - கட்டையன், சுறட்டையன், குன்
பறுகு - சிறுதூறு, பறட்டை, குள்ளம்.
பறுணி - கொள்ளு, சிந்தில் பெருங்குமிழ், பெருங்குரும்பை, வல்லாரை.
பறுவதம் - பருப்பதம், வெற்பு, சிலம்பு.
பறை - இறகு, ஓளவு, ஓளவுக்கருவி, பறைச்சாதி, சொல், பறையென்னேவல், வாச்சியப் பொது, ஓர்வகை நோன்பு, மூரசு, வட்டம், விரும்பிய பொருள், வரிக்கூத்துவகை, குகை, இறகு, பறத்தல், பறவை.
பறைகொட்டுதல்-மேனமடித்தல். [சோளம்.
பறைக்கம்பு - பறைவெட்டுங்கம்பு, பறைச்
பறைக்காலி
பறைக்கால்
பறைக்காளி } ஓர்வித புடவை.
பறைக்கும்பை - பறச்சேரி, சேரி. [வித்தல்.
பறைக்குறல் - போக்க நினைத்தல், போக்கு
பறைக்கொம்மட்டி - பேய்க்கொம்மட்டி.
பறைக்கோலம் - இழிவான கோலம்.
பறைசாற்றுதல் - பறையடித் தறிவித்தல், இரகசியத்தை வெளிப்படுத்தல்.
பறைசீவி - சிறுநன்ஞரி, நன்ஞரிக்கொடி.
பறைச்சல் - பேச்சு, சொல், வார்த்தை, மொழி.
பறைச்சி - பறைப்பெண், புலைச்சி.
பறைச்சேரி-பறையர் வசிக்கும் ஊர், பறைக்கும்பை.
பறைதட்டுதல் - பறை மூறையடித்தல், பறைவெட்டுதல், பிரசித்தப்படுத்தல்.
பறைதல் - சொல்லல், தேய்தல், அழிதல், கழல்தல், நெகிழ்தல், உலர்தல்.
பறைத்தப்பட்டை - பறைமேளம். [குதல்.
பறைத்தல் - சொல்லுதல், நீக்குதல், போக்
பறைத்தாதர்-வள்ளுவரில் ஒரு வகையினர்.
பறைநாகம் - ஓர் பாம்பு, கருநாகம். [ட்டல்.
பறைபோடுதல்-பறையடித்தல், மேளங்கொ
பறைப்பருந்து - கரும்பருந்து, கருஞ்சேனம்.
பறைப்பாட்டு - இழிந்தபாடல், வசவு.
பறைப்புடையன் - பறைப்பாம்பு.
பறைப்பூச்சி - ஓர் சிலந்திப்பூச்சி.
பறைப்பேச்சு - கொச்சை வார்த்தை, காரியம் நிறைவேறுத பேச்சு.
பறைமுழக்கு-பறையொலி, பறையோசை.
பறைமுழக்குதல் - பறையடித்தல்.
பறைமூறை
பறைமூறைசாற்றல் } பறையடித்துச் செய்தியறிவித்தல்.
பறைமேளம் - பறையர் தப்பட்டை, அலப்புவோன், வீண் பேச்சுப்பேசுவோன்.
பறைமை - வரிக்கூத்துவகை.
பறையடித்தல் - பறைமுழக்கிப் பிரசித்தம் பண்ணுதல், மேளமடித்தல், மனம் பதறல், பதைபதைத்தல். [வகையார்.
பறையர் - பதினெண் குடிமக்களுள் ஒரு
பறையலகு-பலகறை, சோழி, கவடி, சோகி.
பறையர்சாதிப்பிரிவு - பறையர் வகுப்பில் அம்மபறையன், கட்டிப்பறையன், கீழ்க்கட்டி, கோலியான், கொங்கு, கொறம், கோட்டை, மூரசு, மொட்டை, பச்சை, சாம்பன், சங்கு,சோழியன்,வலங்கமத்து, அறுத்துக்கட்டாதவன், வலை, தாதன், வள்ளுவன் முதலிய பல உட்பிரிவுகளுண்டு. இவர்களிற் சிலர் தொழிலால் வேறுபட்டவர்களாவர்.
பறையன் - பறையறைவோன்.
பறையாமை - கரியவாமை. கருப்பாமை.
பறையூர் - சேரநாட்டுள்ளதோரூர்.
பறைவிடல் - பறையடிக்க ஏவுதல். [கை.
பறைவு - பறைச்சல், சொல்லுகை, தெரிவித்
பறைவெட்டு-பறைதட்டுதல், பறைசாற்றல்.
பறைவேஷம் - பறைக்கோலம்.
பற்கடித்தல்-கோபத்தால் பல்லைக்கடித்தல்.
பற்கம் - பிரபை, திருவாசி.
பற்கன் - சிவன், சூரியன், பிரமன்.
பற்காட்டுதல் - சிரித்தல், பல்லைக் காட்டிக் செஞ்சுதல்.
பற்காவி
பற்காறை } பற்கிடுமோர் நூல், பற்கறை.
பற்குச்சி
பற்குச்சு } பற்கொம்பு, தந்தசுத்திக்கோல்.
பற்குதநி - பல்லிடுக்கிலுள்ளதைக் குத்தியெடுப்பதற்கு உதவும் குச்சி.
பற்குறி - தந்தரேகை, பற்கடி வடு.
பற்குரன்
பற்குனன் } பாண்டவரில்ஒருவனான அருச்சுனன், பங்குனி உத்தரத்திலே பிறந்தமையின் அவன் இப்பெயர் பெற்றான்.
பற்குனி - உத்திரநாள், பங்குனிமாதம்.
பற்கொம்பு - தந்தசுத்திக்கம்பு, பற்குச்சி.
பற்சர் - பகைவர், மாற்றலர், விரோதிகள்.
பற்சனம் - நிந்தை, இழிவு, பழிப்பு.
பற்சன்னியன் - வருணன், புனல்வேந்தன்.
பற்சிராய் - பற்கறன், பற்கறை, தந்தக்கறன்.
பற்சீவுங்கோல் - பற்குச்சி, பற்கொம்பு.
பற்சொத்தை - பல்லில் பூச்சிவிழும் நோய்.
பற்ணி - பற்றணி, பறைக்கொடி, வல்லாரை.

பற்படகம் } ஓர்பூடு, பற்படாகம்.
பற்படம் }
பற்பணம் - ஓர் பலம்கொண்ட நிறையளவு.
பற்பதம் - பருப்பதம், பருவதம். [மால்.
பற்பநாபன் - பதுமநாபன், பரந்தாமன், திரு
பற்பமாமுனி - ஓர்முனி.
பற்பம் } தாமரை, தூள், நீறு, பதுமம்,
பற்பம் } விபூதி.
பற்பம்-அட்டாதசபுராணத்தொன்று [ன்று.
பற்பராகம் - பதுமராகம், நவமணியி லொ
பற்பரீகம் - அகங்கை, இனிப்பு, சூரியன், தீ,
நீர். [ன்று.
பற்பரோகம்-பதுமரோகம், கண்ணேயிலெ
பற்பல - பலபல, மிகுதிக்குறிப்பு.
பற்பறிகொடுத்தோன்-சூரியன், ஆதித்தன்.
பற்பறித்தல்-பற்பிடுங்குதல், பல்லெடுத்தல்.
பற்பறை - ஒருவகைப் பறவை.
பற்பன் - பன்மன்.
பற்பாடகம் - பற்படகம், பற்படம், ஓர்பூடு.
பற்பித்தல் - பற்பமாக்கல், பொடியாக்கல்.
பற்பீர்க்கு - வெள்ளேப் பீர்க்கு.
பற்பேத்தை - மூரசிற்கட்டு, பல்லறணை.
பற்பொடி - பல்விளக்க உதவும் தூள்.
பற்மகாரன் - வண்ணன், வகாலி, ஈரங்
கொல்லி, காழியன், துசான்.
பற்மம் - பதுமம், பஸ்மம், பொன்.
பற்மராகம்-பதுமராகம், நவமணியிலொன்று.
பற்மவேதகம் - கருப்பூரம், பளிதம், சசி.
பற்மாசனம் - பதுமாசனம், யோகாசனம்.
பற்மீகரம் - பஸ்மீகரம், சாம்பராதல்.
பற்மீகரித்தல்-பஸ்பமாக்கல், சாம்பராக்கல்.
பற்ற - பிடிக்க, ஒட்ட, காட்டிலும்.
பற்றகற்றி-பாத்திரஞ்சுரண்டுங்கருவி. [தல்
பற்றடித்தல்-கல்லுமுசலியவற்றிற்குஒட்டிடு
பற்றம் - கனம், துணையாகப்பிடிக்கை, வீக்
கம், கற்றை.
பற்றம்பிடித்தல்-இருவர் கைவாளுய்த்தாங்
குதல்.
பற்றலம்புதல் - பற்றுக்கழுவுதல்
பற்றலர்-சத்துருக்கன், பகைவர், மாற்றலர்.
பற்றல் - ஆசைபெருகுதல், குறித்தல், தொ
டர்தல், பிடித்தல், வியங்கோண் முற்று,
அடுத்தடுத்துச்செய்தல்.
பற்றவைத்தல் - தீமூட்டல், பொருதவைத்
தல், கோள்மூட்டல்.
பற்றறுதல் - அன்பு கெடுதல், பாசபந்தம்
விடல், முழுதுமற்றுப்போதல், துறத்தல்.
வறுமைப்படல், ஆஸ்பதமின்மை, துறவு
புகல்.

பற்றற்றூர் } முனிவர், துறவோர், வறி
பற்றற்றோர் } ஞர், புகலற்றூர். [கூலி.
பற்றுக்கூலி-அற்பக்கூலி, நாட்கூலி, குறை
பற்றுக்கை - அம்புகன் கட்டுங்கயிறு, கயிறு.
பற்றுசு - இருகுறணேரிசை வெண்பாவிற்
கிடைவருவது, உலோகங்களேப் பொரு
த்த இடையிடும் பொடி, பற்றுக்கோடு,
தஞ்சம். [கொஞ்சம்.
பற்றுதது - அலட்சியமானது, போதாதது,
பற்றுதவர்-அலட்சியமானவர், ஒவ்வாதவர்.
பற்றுப்படி } அரும்பூட்டு, குறைவு
பற்றுப்பயணம் }
பற்றுபபோரி - சரியற்றவெதிரி, நேரலன்.
பற்றுமன்னன் - பகைவன்.
பற்றுயம் - பெரும்பெட்டி, பிராணி பிணிக்
கவும் அடைக்கவும்உதவுங்கூடு, பத்தாயம்.
பற்றுர் - பகைவர், பற்றலர், நேரார்.
பற்றுள் - அறியான்.
பற்றிலான் - கடவுன், புத்தன்.
பற்றி - குறித்து, பற்றுசு, பற்றுப்பொடி,
தொடங்கி, பிடித்து, உட்கொண்டு.
பற்றிக்கொள்ளல் } தொடர்ந்துநிற்றல், நன்
பற்றிப்பிடித்தல் } ருய்ப் பிடித்தல்.
பற்றியது - உட்கொண்டது.
பற்றியிழுத்தல் - பிடித்திழுத்தல். [னல்.
பற்றியெரிதல் - தீமூண்டெரிதல், சினம்மூ
பற்றிரும்பு - அன்னு, இணைப்பிரும்பு
பற்றிலி - துறந்தோன், பற்றலன், ஞானி.
பற்றினர் - உறவோர், சினேகிதர், நேசர்.
பற்று - அறவிட்டது, அன்பு. ஆசை, இசைவு,
உலோகங்களேப் பொருத்துங்கூட்டு, சம்
பந்தம், சிற்றூர், சேர்வை, தொடர்ச்சி,
சோற்றுப்பருக்கை, சோற்றுப் பருக்கை
யொட்டியுள்ள பாத்திரம், பசை, பற்றென்
னேவல், பிடி, பொச்சு, மண்டி, வாரப்
பாடல், உரிமையிடம், செல்வம், மருந்துப்
பூச்சு, மேகப்படை, பெற்றுக்கொண்டது,
தழும்பு, பின்பாட்டு, பக்கப்பாட்டு, வாரம்.
பற்றுக்கட்டு - குடியுரிமைநிலம்.
பற்றுக்கால் - தாபரம், ஒட்டிடம், தாங்குகட்
டை, பொய்க்கால்.
பற்றுக்குறடு - ஓர் கம்மக்கருவி, பிடிகுறடு.
பற்றுக்கொள்ளுதல் - அன்புவைத்தல், ஆசை
கொள்ளுதல், உரிமைகொள்ளுதல்.
பற்றுக்கோடு } ஊன்றுகோல், தஞ்சம், ஆதா
பற்றுக்கோல் } ரம், கட்டுத்தறி, ஈயம்பற்ற
வைக்கும்கருவி, சூட்டுக்கோல், பற்றுக்குறடு.
பற்றுச்சீட்டு - ஏற்புறுதி, உறுதிச்சீட்டு.
பற்றுதல் - அன்பு, ஊன்றிப்பிடித்தல், நீப்

பற்றுதல், நம்பிக்கை, பிடித்துக்கொள்ளுதல், பொருந்துதல், வாங்குதல், மனத்துட்கொள்ளுதல், நிறம்பிடித்தல், போதிய தாதல். [நட்பாளர், பற்றுபவர்.

பற்றுநர் - நண்பர், உறவினர், சுற்றத்தார்,

பற்றுபு - பற்றி.

பற்றுப்பூசுதல் } பற்றுப்போடுதல் } பொருந்தப்பசைபோடுதல் பூச்சுமருந்து தடவுதல், ஒட்டுப்போடுதல். [தேவி.

பற்றுவரவு - கொடுக்கல் வாங்கல், இலேவா

பற்றுவனர் - பற்றுவர், பற்றுவார்.

பற்றுவாய் - திரிவாய், பற்றுவைக்குமிடம்.

பற்றுவிடுதல் - பாசமறுத்துத் துறவு புகல், விரிதல், தளையவிழ்தல்.

பற்றுவீடு - இனமுதலிய துறத்தல்.

பற்றுவைக்குதல் - அன்பு வைக்குதல், ஆசை கொள்ளுதல், திண்டிட்டு வினக்குதல்.

பற்றை - சிறுதூறு, செங்காந்தன், அதமன்.

பற்றைச்சி - சோரஸ்திரி, வேசி, பரத்தை.

பற்றைப்பிள்ளை } பற்றையன் } சோரபுத்திரன்.

பற்றொடுபழகல் - அன்போடு பழகுதல்.

பனங்கட்டி - பனவெல்லம், கருப்பட்டி.

பனங்கதிர் - ஆண்பனைப்பூ, பனம்பிடுக்கு.

பனங்கந்து - பனைத்திரன், பனைக்கூட்டம்.

பனங்கள்-பனைமரத்திலிருந்து இறக்கும் கள்.

பனங்கறக்கு - இளம்பனை, சிறுபனை.

பனங்கற்றழை - பனந்தாழை.

பனங்காடி - அதிகம் புளித்தபனங்கள்.

பனங்காட்டீசர் - திருப்பனங் காட்டிலிலே கோயில் கொண்டிருக்குஞ் சாமிபெயர்.

பனங்காய் - பெண்பனைக்காய்.

பனங்காய்க்காடி- பனம்பழச்சாற்றிற்செய்த காடி.

பனங்கிழங்கு - பனைவித்திற்கிழங்கு, புற்கிழங்கு.

பனங்கிளி - அன்றில், ஓர்கிளி, பனங்கிள்ளை.

பனங்கீரை - தாலங்கீரை, தாளிக்கீரை.

பனங்குத்து - பனையினினங்கன்று.

பனங்குந்து - பனம்பழநார்.

பனங்குருத்து - பனையின் இளம் ஓலை.

பனங்குற்றி - பனைமரத்துண்டு.

பனங்கொடியோன்-பலராமன், அலாயுதன்.

பனங்கொட்டை-பனையின்விரை, பனைவித்து

பனங்கோரை - ஓர்புல், பனைக்கோரை.

பனசம்- ஈரப்பலா, பலாமரம், முன்னுப்பலவு.

பனசயித்தி - அரசு, அரசமரம், மரவேந்து.

பனசை - ஓர்பட்டினம், ஓர்பாம்பு, ஓர்வித்தக் கொப்புள அம்மை, வருக்கை, ஈரப்பலா.

பனஞ்சக்கை } பனஞ்சட்டம் } பனம்பட்டை.

பனஞ்சலாகை - பனைவலிச்சல். [பனங்கள்.

பனஞ்சாறு - பதநீர், பதனி, சுண்ணும்பிட்ட

பனஞ்சூலை - தூங்கு, நொங்கு.

பனஞ்செறும்பு-பனைமட்டையிலுள்ளசரம்பு.

பனஞ்சோறு } பனஞ்சோற்றி } பனையினுள் விருக்கும் வெளிறு.

பனநார் - பனைநார், பனைமட்டையின் நார்.

பனந்தாமன் - பலபத்திரன், நீலாம்பரன்.

பனந்தாரான்-சேரன், பலபத்திரன், வெள்ளை

பனந்தாழை - புல்லுருவிவகை. [று, பனூர்.

பனந்தும்பு-பனைநாராலாகிய மாடுகட்டும்கயி

பனம் - பருமை, பெருமை.

பனம்பட்டை - பனஞ்சக்கை, பனவாரை.

பனம்பழம் - பனங்கனி, பனம்பலம்.

பனம்பாகு } பனம்பாணி } பனங்கட்டிப்பாணி, பதனி காய்ச்சியபாகு.

பனம்பாரம் - பனம்பாரனார் இயற்றிய இலக்கணநூல்.

பனம்பாரனார் - இவரே தொல்காப்பியத்துக்குப் பாயிரஞ்செய்தவர்; பனம்பாரம் என்னும் இலக்கண சூத்திரம் செய்தாரும் இவரே; புறப்பொருட் பன்னிரு படலம் செய்த ஆசிரியர்; அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள்ஒருவர்; இவர் தொல்காப்பியரைப்போலவே தலைச்சங்கத் திறுதிக் காலத்திலிருந்தவர். [னைப்பூ.

பனம்பிடுக்கு - பனம்பூ, பனங்கதிர், பெண்

பனம்புடையல் - பனம்பூமாலை.

பனம்பூ - ஆண்பனைப்பூ, பனம்பிடுக்கு.

பனம்பெட்டி - கன்வைக்கும் பனையோலைப் பெட்டி.

பனம்பொச்சு - பனம்பன்னுடை, நாரி.

பனம்வரிச்சல் } பனம்வரிச்சு } பனம்வலிச்சல் } பனஞ் சக்கை, பனஞ் சட்டம்.

பனர் - கிளை, பணம், கொப்பு, கலை, கவர்.

பனலை- பூவந்தி, பொன்னங்கொட்டைமரம்.

பனல்குடை - குடையோலை, பட்டை, பனையோலையாலாகிய குடை.

பனவம்-சிறுதம்பட்டம், ஓர்வகைவாச்சியம்.

பனவர் - பார்ப்பார், வேதியர், மறையோர்.

பனவோலை-பனையோலை, பெண்ணையோலை.

பனுட்டு - பனங்களியிலட்டது, பனம்பழச் சாற்றினுலாய அடை, பினுட்டு.

பனுட்டுக்கூடை - பருத்தித் தடித்தகுள்ளன்.

பனுட்டுத்தோல் - தோற்பனுட்டு.

பனுட்டுப்பாய் - பனங்களி பெய்யும்பாய்.

பனர்-தும்பு, பனந்தும்பு, பெண்ணைத்தும்பு.
பனி - அச்சம், இக்கட்டு, குளிர், தக்கம், தூளி, நடுக்கம், பயம், பனியென்னேவல், பெய்யும் பனி, நீராவித்திவலை, நோய் வகை, துன்பம், துக்கம், சொல், பசலை, பசத்தல், குளிர்ச்சி, இனிமை, கண்ணீர்.
பனிகாலம்- மார்கழிமுதலிய நான்குமாசம்.
பனிக்கஞ்சி - தாமரை, அம்போருகம்.
பனிக்கட்டி - உறைந்தநீர், உறைந்தமழை, ஆலங்கட்டி. [ணவன்.
பனிக்கதிர் - சந்திரன், வெண்மணி, மதி, தண்
பனிக்காடு - பனிமூட்டம்.
பனிக்காற்று-குளிர்காற்று, வாடைக்காற்று
பனிக்குடம்-பன்னீர்க்குடம், பன்னீர்க்கூசா
பனிக்குடமுடைதல் - பிரசவத்திற்கு முற் குறியாகப் பனிக்குடநீர் வெளிப்படல்.
பனிக்குதல் - பனித்தல், தூறல், தூவல்.
பனிக்கூர்மை - இந்துப்பு, சிந்துலவணம்.
பனிக்கை - சூரியன், இருள்வலி.
பனிச்சங்காய் - காட்டத்தி.
பனிச்சா - கஞ்சாங்கோரை, திறற்கோரை.
பனிச்சாமை - ஓர்சாமை, சிறுதூமை.
பனிச்சவன் - பல்லக்குப்போகி.
பனிச்சை - காட்டத்திமரம், பின்னிமுடிக்கு மயிர்ச்சுருள்; அஃது: ஐம்பாலிலொன்று, கழுத்தின் பின்குழி, பின்குழி, பிடர்க் குழி, முன்குடிமிமயிர்.
பனித்தாங்கி-பனியேந்திப்பூடு, கிழவன்தாடி.
பனித்தலைப்பட்டானவிநயம் - நடுக்கமுடை மையும், நகைபடுநிலைமையும், சொற்றனர்ந்திசைத்தலும், அற்றமிலவதியும், போர் வைவிழைதலும், புந்திநோவுடைமையும், நீரும்விழியும், சேறுமுனிதலுமாம்.
பனித்தல் - இடைவிடாது மழைபெய்தல், தூளித்தல், தூறல், நடுங்கல், வருந்தல், குளிர்தல், கண்ணீர் வடித்தல், அஞ்சுதல், நடுங்குதல், பில்குதல்.
பனித்து - கர்ப்பூரம், பாளிதம். [நத்தை.
பனிநத்தை - மழைக்காலத்தில் தோன்றும்
பனிநீர் - ஓர்வாசனை நீர், பனித்தூளி.
பனிப்பகை - சூரியன், கதிரவன், ஆதித்தன்.
பனிப்படலம் - பனிச்செறிவு, பனி நிறைவு.
பனிப்பதம் - சரித்தகிலே.
பனிப்பயறு - ஓர் பயறு, சிறுபயறு.
பனிப்பருவம் - பனிக்காலம், மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்கள்.
பனிப்பலை - பனிப்பரலை, நிலா.
பனிப்பாறை - பெரும்பனிக்கட்டி. [லல்.
பனிப்பு - பனித்தல், அச்சம், நடுக்கம், சொல்
பனிப்புகட்டு - பனிகொட்டுகை.
பனிப்புகாரர் - பனிமேகம், பனிவானம்.
பனிப்புழு - சேற்றுப்புழு, கம்பளிப்பூச்சி.
பனிப்பூங்காரம் - பனிமங்குளம், பனிமந்தா
பனிப்பூடு-சுத்தகங்கை, நீர்ப்பூண்டு. [ரம்.
பனிப்பெயர்தல் - பனியுண்டுபடுதல், பனி கொட்டல். [டல்.
பனிப்பெய்தல்-பனிசொரிதல், பனிகொட்
பனிமப்பு - பனிமேகம்.
பனிமலை-இமயமலை, பனிக்குவடு, பனிவரை.
பனிமேகம் - வெண்மேகம், பனிப்புகாரர்.
பனிமேய்ச்சல்-காலைமேய்ச்சல். [யான்.
பனிமொழி-இனியமொழி, குளிர்ந்தமொழி
பனியடித்தல் - பனிப்பெய்தல்.
பனியவரை - ஓரவரை, பனிமுதிரை.
பனிவரை - இமயமலை, பனிமலை.
பனிவீசுகண்ணி - சந்திரன்.
பனிவெடிப்பு - பனியால் கைகாலில் உண்டாம்புண்.
பனிற்றல்-தாவுதல், தளித்தல். [சொட்டல்.
பனுக்குதல் - தெளித்தல், தளித்தல்,
பனுவலாட்டி - சரச்சுவதி, கலைமடந்தை.
பனுவல் - ஆகமம், கல்வி, சொல், நூல், பஞ்சிணூல், புலமை, பாட்டு, செய்யுள், ஆராய்ச்சி, கேள்வி, இசைப்பாட்டு.
பனுவல்வாழ்த்து - ஒரு நூலைப்புலவர் புகழ் தலைக்கூறுந்துறை.
பனை - அனுடநாள், ஓர்மரம், ஒருபேரளவு.
பனைக்கொடியோன்-பலபத்திரன், வீடுமன்.
பனைக்கோரை - பனங்கோரை.
பனைசை - பனையூர், பனங்காடு.
பனைப்போழ் - பனந்தோடு.
பனைமடல் - பனமட்டை, பனையோலை.
பனைமீன் - யானைமீன், பெருமீன். [முகிழ்.
பனைமுகிழ் - பனங்காய்முகிழ், பெண்ணை
பனையன்-ஓர் அம்மைவகை; ஓர் பாம்பு, ஓர் மீன்.
பனையிடுக்கி - பனையின் பாளையை யிடுக்கிக் கள்ளிறக்க உபயோகிக்கும் ஓர் ஆயுதம்.
பனையேறி - ஓர் குருநோய், ஓர் பாம்பு, சாணான்.
பனைவட்டு - பனைவெல்லம், பனைவெட்டு.
பனைவாரி - பெரியம்மைவகை.
பனைவாரை-பனைமரக்கீற்று, பனம்பட்டை.
பனைவெட்டு - பனைவெல்லம், பனைவட்டு.
பன்-நாணல், அரிவாட்பல், ஓர்புல், பத்தின் கிதைவு, (உ-ம்) பன்னொன்று. பன்மை, பன்னென்னேவல், ஒருவகை உரொட்டி; பருத்தி.

பன்பாய் - கொழும்புப்பாய், புற்பாய், கோரைப்பாய், பாய்.
பன்மம் - பத்மம், தாமரை, பஸ்மம்.
பன்மணிமாலை - ஓர் பிரபந்தம்; அது: ஒரு போகும், அம்மானையும், ஊசலுநீக்கி மற்றையுறுப்புக்கள் கலம்பகம் போலமையக் கூறுவது.
பன்மா } பலபடியாக, பலபட, பல
பன்மாண் } முறை, (பலமாட்சிமைப்பட).
பன்மினி - பதுமினி, தாமரை.
பன்முகம் } ப ல வ ழி, பலதடவை, பல
பன்முறை } வகை.
பன்முறைக்கருவியர் - போர்ப்படைக்கும், உற்சவத்துக்குங் கொட்டும் வாத்தியக் காரர்.
பன்மூன்று - பதின்மூன்று.
பன்மை - பலவாகியதன்மை; ஒன்றல்லாதன, தொகுதி, ஒருபடிப்பட்டிராமை, குறிப்பின்மை, ஒன்றுக்குமேற்பட்டவை.
பன்மைபண்ணுதல்-கண்டு சாய்த்துவிடுதல்.
பன்மைப்பால்-பலர்பால், பலவின்பால்.
பன்மைப் பொதுப்பெயர் - பன்மைப்பால் கட்குரிய பொதுப் பெயர், (உ-ம்) செவியிலிகள்.
பன்மையாய்விடுதல் - கண்டும், காணுதது போலிருத்தல்.
பன்மொழித்தொகைத்தொடர் - பலமொழி தொடர்ந்து, ஒருபொருள்காட்டி நிற்குந் தொகைநிலை, (உ-ம்) செங்நிறக்குவளை.
பன்றி - ஓர் மிருகம், கொடுந்தமிழ் நாட்டிலொன்று, பதினேர் காணத்தொன்று.
பன்றிக்காரணம்-ஓர்காரணம், கௌலவம்.
பன்றிக்கிடை - பன்றியடையுமிடம்.
பன்றிக்கிளி - கடலில் வசிக்கும் ஓர்மீன்.
பன்றிக்குறும்பு - நிலப்பனை, நிலவிப்பனை.
பன்றிக்கொம்பு - பன்றியின்கோரப்பல்.
பன்றிக்கொவ்வை - ஓர் கொவ்வை.
பன்றிக்கொடி - வேள்புலவாசராகிய சளுக்கியரது பன்றிக்குறிகொண்ட கொடி.
பன்றிக்கொழுப்பு - பன்றிநெய். [கட்டுதல்.
பன்றிச்சுருக்கு-ஓர்தண்டனை, கூண்வாங்கிக்
பன்றித்தகரை - கருந்தகரை, பூந்தகரை.
பன்றித்தும்பு - அழுக்கெடுக்க உபயோகிக்கும் பன்றியிராவ் கட்டியகுச்சு.
பன்றிநெல் - ஓர்நெல், காட்டுநெல்வகை.
பன்றிநாடு-கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்று;அது:பழனிமலையைச் சுற்றியுள்ள நாடு. [கொட்டும்பறை.
பன்றிப்பறை-காட்டுப்பன்றிகளை விரட்டக்
பன்றிப்புடல் - பன்றியைப்போல் குறுகிப்பருத்தகாயையுடையபுடல்,கொம்புப்பாகல்.
பன்றிப்புல்-ஓர்வகைப்புல், வலம்புரிப்புல்.
பன்றிப்பொறி - மதில்மேற்பொறிகளிலொன்று.
பன்றிமயிர் - எய்ப்பன்றிமயிர், பன்றிமுள்.
பன்றிமலை - பழனிமலை, திருவாவினன்குடி.
பன்றிமுகம் - நரகவகையிலொன்று.
பன்றிமுள்-எய்ப்பன்றிமுள், முள்ளம்பன்றிமுள். [ள மரவகை.
பன்றிமொத்தை - சிறுகுரட்டை, கிழங்குள்
பன்றிவாழை - ஆனைவாழை.
பன்றிவெட்டுதல் - ஓர்விளையாட்டு.
பன்னகசயனன் - விட்டுணு, சேஷசயனன்.
பன்னகசாலை - பன்னசாலை, புல்வீடு.
பன்னகண்டம் - மரம், தரு, விருக்ஷம்.
பன்னகந்தி - கருவேம்பு. [பன்னங்கு.
பன்னகம்-சீதாங்கபாஷாணம்,பாம்பு,இலை,
பன்னகவைரி-கருடன், பறவை வேந்தன்.
பன்னகாசனன் - கலுழன், விட்டுணு, திருமால்.
பன்னகாபரணன்-சிவன்,பன்னகப்பூணன்.
பன்னகாரன் } பன்னவேலை செய்பவன்,
பன்னக்காரன் } வெற்றிலை வாணிபன்.
பன்னசந்தரம்-இலைமெத்தை,சருகுமெத்தை
பன்னசாலை-புல்வீடு, முனிவர்வாசம்,பரணசாலை. [றல்மேடை.
பன்னசி-தாமரை, வசந்தமண்டபம், தென்
பன்னச்சத்தகம் - காம்புச்சத்தகம், சிறுகத்தி.
பன்னத்தண்டு - நெய்வார்கருவியிலொன்று.
பன்னத்தை - பனிநத்தை, மழைநத்தை.
பன்னரன் - சாச்சடங்கிற் இலையாற் செய்யப்பட்ட மனுவடிவு, பத்திரசரன்.
பன்னபோசனம் - இலையுணவு, இலையில் உண்ணும் உணவு.
பன்னமாசாலம்-ஓர் மரம், பன்னற்செடி.
பன்னமிருகம் - இலையுணும் ஓர்விலங்கு.
பன்னம் - இலை, ஓலைமுதலியவற்றுற் பின்னும் வேலை, பத்திரி, பலாசு, வெற்றிலை.
பன்னரிவான் - கருக்காரிவான், புல்லரிவான்.
பன்னலதை - வெற்றிலைக்கொடி.
பன்னல்-சொல்லுதல், தேர்தல், நெருங்கல் பருத்தி, சொற்றல், ஆராய்கை, தூற்றல், ஆராய்தல், வகைவகையாகச் சொல்லல், பஞ்சு, எஃகல்.
பன்னவல்லி - பன்னலதை, வெற்றிலைக்கொடி.
பன்னவேலை - ஓலை முதலியவற்றுற் பின்

னும் வேலை. [பணங்கள்.
பன்னன்சாறு-பனஞ்சாறு, சுண்ணும்பிட்ட
பன்னு - சாட்டை நுனியிற்கட்டும் வார்.
பன்னுங்கு - தண்டிகைப்பன்னணம், தென்னோலைப்பன்னுங்கு, பதினொன்கு எண்.
பன்னுங்குழி - பதினொன்கு குழியுள்ளதும், காய்போட்டு விளையாடுதற் குதவுவதுமான ஓர் பலகை, விளையாட்டுத்தட்டு.
பன்னுசம-துளசி, துழாய், குல்லை, துளவம்.
பன்னுசனம் - இலையுணவு,புற்பாய், முகில்.
பன்னுசி - ஓர்துளசி, பன்னுகச்செடி.
பன்னுடை - நெய்யரி, தென்னை பனைமுதலியவற்றின் மட்டையில் வலைபோன்றுள்ளது, வலைபோலுள்ள துணி.
பன்னுணம் - பன்னுங்கு. [பேசற்குறிப்பு.
பன்னுபன்னுவெனல் - ஒன்றைப் பலமுறை
பன்னுலம் - தெப்பம், புணை, மரக்கலம்.
பன்னுன்குழி - பன்னுங்குழி, பன்னுணம்.
பன்னி - குருவின்றேவி, சணல், மனைவி.
பனிநீர், சீபு, ஆராய்ந்து சொல்லி.
பன்னிணவிலோர் - ஆட்டுவாணிகர், கசாப்புக்காரர்.
பன்னிரண்டாதித்தர் - துவாதசாதித்தர்.
பன்னிருகரத்தோன்-முருகக்கடவுள்.
பன்னிருபடலம் - அகஸ்தியர் மாணாக்கர் பன்னிருவராலும் செய்யப்பட்ட புறப்பொருணூல்; இஃது: தற்காலம் எங்கும் இடைக்காமையால் முற்காலத்திலேயே இறந்தொழிந்ததுபோலும்.
பன்னீராயிரப்படி-திருவாய்மொழிக்கு அழகியமணவாளஜீயர் அருளிய வியாக்கியானம்.
பன்னீர் - ஓர்வாசனைநீர், கருப்பைநீர், காயத்திற்பாயும் சீழ்நீர், பன்னீர்மரம், பனிநீர், வெள்ளம், சொல்வீர், பன்னிரண்டு.
பன்னீர்க்குடம் - கருப்பத்தைச் சூழ்ந்த நீர்ப்பை.
பன்னீர்க்குப்பி
பன்னீர்ச்செம்பு
பன்னீர்த்துருத்தி } பன்னீர் தூவுகருவி, பன்னீர்ப்புட்டி.
பன்னீர்ப்பூ - ஓர்மாவகைப்பூ.
பன்னீர்வடித்தல் - பன்னீர்காய்ச்சுதல்.
பன்னு- இறுக்கப்படும் வரிப்பணம்,பன்னல்.
பன்னுதல் - பன்னல், ஆராய்ந்துசெய்தல், புகழ்தல், வாசித்தல், பின்னுதல்,நெருங்
பன்னுபு-சொல்லி, ஆராய்ந்து. [குதல்.
பன்னுமல்-புல்லாலமைத்தபை.
பன்னை-ஓர்செடி, கருப்பூரம், சூடன், தறி.
பன்னொன்று-பதினொன்று, பஃதொன்று.
பஃறுளி-குமரியாற்றிற்குத் தெற்கேயுள்ள தோராறு;இஃது: ஆதிகாலத்தில் கடல் கொள்ளப்பட்டது; இதனையுள்ளிட்ட நாற்பத்தொன்பது நாடுகள் கடல்கொண்டழிந்த காலத்தே தலைச்சங்கமிருந்த தென்மதுரையும் அவற்றோடு அழிந்த தென்பது சிலப்பதிகாரவுரையினால் இனிது விளங்கும். அது வருமாறு: "முதலூழியிறுதிக்கண் தென்மதுரையில் தலைச்சங்கத்துச்சயமாகீர்த்தியாலுகியநிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்தி வைத்தான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும், குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த எழ்தெங்கநாடும், எழ்மதுரைநாடும், எழ்முன்பாலை நாடும், எழ்பின்பாலைநாடும், எழ்குன்றநாடும், எழ்குணகாரைநாடும், எழ்குறும்பனை நாடு என்னும் இத்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலைநாடும்,காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண்டழிதலால்" என்பது "வடிவேலெறிந்தவன்பகைபொறாது பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு கொடுங்கடல் கொள்ள" என்பதனாலும் அது வலியுறுத்தப்படும்.
பஜார் - கடைவீதி, அங்காடி வீதி.
பஜாரி - விபசாரி, வாய்ப்பட்டி.
பஜீத்து - அவமானம், துன்பம்.
பஸ்தி - வளம், குடியடர்ந்த இடம்.
பஸ்மகவியாதி - யானைப்பசி நோய்.
பஸ்மம் - விபூதி, திருநீறு. [ஒன்று.
பஸ்மஜாபாலம் - நூற்றெட்டுபநிடதங்களில்
பஹிஷ்டை - பூப்பு, வீட்டு விலக்கானவள்.
பகூணம் - பலகாரபண்டம். [வஞ்சனை.
பகூபாதம் - பாரபட்சம், வேற்றுமை, ஓர
பகூம் - கொள்கை, பக்கம், பட்சம்.
பகூி - பட்சி, பக்கி, பறவை.
பகூிணி-பக்கிணி; ஓர் இரவும் அதற்கு முன்னும் பின்னுமுள்ள பகலும் கொண்டது.
பகூிராஜன் - பட்சிராஜன், கருடன்.

பா

பா - அழகு, ஒருமொழித்து, கடிகாரவூசி, இழை

குப்பா, கிழல், நெசவுபா, பஞ்சிநூல், பரப்பு, பரவுதல், பாட்டு, பாவென்னே வல், பிரபை, வெண்பா முதலியவைத்து பா; அஃது: இரண்டு முதலிய வடிகளா னுக்கப்பட்ட பிரபந்தம், தேர்த்தட்டு, கைம்மரம், தாய்மை, பாம்பு, பூனைக்கா லி, காத்தல், சுத்தம்.

பாஅய் - பரவி, பாய்ந்து, விரிப்பு.

பாகஎக்கியம் - அஷ்டகம், பாம்வணம், ஸ்தா லிபாகம், சிரார்த்தம், மாசிகம், சர்ப்பபலி, சாகபலி, ஆக்கிரஹாயணம் முதலியன

பாககம்-பிரிக்குந்தொகை, பங்குத்தொகை.

பாகசம் - ஓர்வகையுப்பு, சூலம், சூலாயுதம்.

பாகசாசனன் - பாகசாதனன், இந்திரன் வி ருத்திராசுரனைக் கொன்றதைக் கேட்டு அவன் தம்பியாகிய பாகன் என்பவன் இந்திரனை வந்தெதிர்க்க அவனையும் இந் திரன் கொன்றதனால் அவனுக்கு இப் பெயர் வந்தது.

பாகசாசனி } அருச்சுனன், இந்திரன்மகன்,
பாகசாதனி } சயந்தன், சயந்தவன்.

பாகசாதனன்-பக்குவம்பெற்றவன், சுங்கம் வாங்கி, பாகசாசனன்.

பாகசாத்திரம்-உணவுபக்குவம் பண்ணுதலே யுணர்த்தும் நூல்.

பாகசாலை-மடைப்பள்ளி, சமையலறை. [ன்.

பாகண்டன்-வெளிவேஷக்காரன், ஆடம்பர

பாகதம் - எல்லா நாட்டுமேலோர் மொழி, பிராகிருதம். [ன், மடையன்.

பாகதாரி - சமையற்காரன், பாகம்செய்வோ

பாகத்தானம் - மடைப்பள்ளி, பாகசாலை.

பாகத்தார் - பக்குவிகள், பக்குவம் உடை யோர், பங்காளிகள், தாயத்தார், ஒரு பாகத்திலுள்ளவர்.

பாகபத்திரம் - சொத்துப்பிரிவினைச் சீட்டு.

பாகபாண்டம் - சமையற்பாத்திரம்.

பாகபுடி - குயவன் சூளை, பாகப்புடி.

பாகப்படுதல் - சமைக்கப்படுதல், பக்குவப் படல், பதப்படுதல், தன்வயப்படுதல்.

பாகம்படுத்துதல் - சமைத்தல், பக்குவப் படுத்தல், தன்வயப்படுத்துதல்.

பாகமாகுதல் - பாகப்படுதல், உணவு சித்த மாதல், மருந்து பதமாதல், பங்கு பிரிக் கப்படுதல்.

பாகம் - அச்சம், ஆந்தை, ஓர் கணிதம், ஓர் பிசாசம், சபித்தல், சமைத்தல், தங்கை, செய்புன் நடை; அது: திராட்சபாகம், கதலிபாகம், நாரிகேளபாகம் என்ற மூ வகைத்து, தேசபயம், நரைமயிர், நான்கு முழங்கொண்டவளவு, பக்கம், பக்குவம், பங்கு, பாகை, பாதி, பாத்திரம், பிச்சை, புயம், கூறு, ஓர்வகைத் தோற்கருவி.

பாகம்பண்ணுதல் - சமைத்தல், பகுத்தல், பக்குவப்படுத்தல்.

பாகர் - யானை, குதிரை முதலியன நடத்து வோர், பாகு, குழம்பு, சேறு.

பாகலம் - குதிரை, யானை இவைகளுக்கு வரும் சுரரோய்.

பாகலன்-உன்மத்தன், மயக்கமுடையவன்.

பாகல் - ஓர்கொடி, பலா, வெட்பாவட்டை.

பாகவதம் - பதினெண் புராணங்களுள்ஒன் று. இது பன்னிரண்டு ஸ்கந்தங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பத்தாங்கந்தம் ஒன்றுமாத்திரம் பூர்வபாகம், உத்தரபாகம் என இருவகையாய்ப் பகுக்கப்பட்டிருக் கிறது. முதல் கந்தத்தில் மாயவன் அமி சாவதாரம், ஸ்ரீ நாரதர் தோற்றம், தர்ம புத்திரன் அரசியல் முதலியவைகளும், இரண்டாங்கந்தத்தில் மாயவன் நிலை, சௌநகாதியர் அன்பின் நிலை முதலிய வைகளும், மூன்றாங்கந்தத்தில் மைத்ரே யர் விதுரனுக்குத் தத்வம் உணர்த்தலும், மலரவன் தோற்றம் முதலியவைகளும், நான்காங்கந்தத்தில் மரீசி முதலியோர் படைப்பு, தக்கன் வேள்வியழிவுமுதலிய வைகளும், ஐந்தாங்கந்தத்தில் பிரியவி ரதன் மரபு, பரதன்சரித்திரம் முதலியவை களும், ஆறாங்கந்தத்தில் அஜாமிளன் கதை, தக்கன் படைப்பு, நாராயண கவசம் முதலியவைகளும், ஏழாங்கந்தத்தில் சி பாலன் வீடு பேறு, இரண்ய வதை முத லியவைகளும், எட்டாங்கந்தத்தில் மநுக் கள் வரலாறு, கஜேந்திரமோக்ஷம், க்ஷீராப் திமதனம் முதலியவைகளும், ஒன்பதாங் கந்தத்தில் இளன் கதை, சையாதி கதை அம்பரீடன் கதை, இக்ஷ்வாகுவின் கதை, ஹரிச்சந்திரன்கதை முதலியவைகளும், பத்தாங்கந்தத்தில் ஸ்ரீ கண்ணபிரான் திருவவதாரம், பூதனைவீடுபேறு, சகட முதைத்தசரித்திரம், மருதிடைத்தவழ்ந்த சரித்திரம், ப்ருந்தாவநமடைந்த சரித்தி ரம், அரவின்மேலாடிய சரித்திரம், வேய்ங் குழலிசைத்தல், கோபியர் துகில் கவர் தல், வேள்வி மங்கையர் உணவளித்தல், கோவர்த்தநமெடுத்தல், கோபியரை மணத்தல் முதலியவைகளும், பதினொன் றாங் கந்தத்தில் இருப்புலக்கை பெறல், வசுதேவர்க்கு நாரதர் தத்வம்உரைத்தல்,

உத்தவர்த்தத்வம் விளுதல், ஞாநகர்மம் உரைத்தல்,யோகசித்திஉரைத்தல்,இயம நியமாதி உரைத்தல் முதலியவைகளும், பன்னிரண்டாங்கந்தத்தில் கலிதர்மகற்கி அவதாரம், பரிக்ஷித்து வீடு பேறு, முத லியவைகளும் விசதமாகக் கூறப்பட்டுள் ளன. பாகவதபுராணம்.

பாகவதபுராணம்-மகாபாகவதம், பாகவதம்.

பாகவதகோஷ்டி - பகவானைக் குறித்துப் பசனை செய்யும் கோஷ்டி.

பாகவதர் - விட்டுணுசமயத்தவர், சங்கீதத் துடன் சமயநூல்களை எடுத்துரைப்போர், பாடகர்.

பாகவிரோதி, பாகவைரி, பாகசூதநன் } இந்திரன், மேகவாகனன், வாசவன், புரந்தரன்.

பாகவெண்மதி - அரைமதி, அங்குசம்.

பாகனம் - ஓர் வருடம்.

பாகன்-சுங்கம்வாங்கி, தேர் ஓட்டுவோன், புதன், யானைப்பாகன், விருத்திராசுரன் தம்பி.

பாகஸ்தன் - பங்காளி, கூட்டாளி.

பாகார் - இடம், கோட்டைமதில். [தல்.

பாகாரம்-பங்கிடுதல், பிரிவுக்கணக்கு, பகுத்

பாகாரி - இந்திரன், வெண்பொன்.

பாகி - சாரத்தியம் செய்யும் பெண், நாய், பக்குவன், பங்கிடுதல்.

பாகிடுதல் - பங்கிடுதல், பரிமாறுதல்.

பாகிநேயன் - மருமகன், சகோதரிமகன்.

பாகியசௌசம் - புறச்சுசம்.

பாகியதிரிசியாநுவித்தசவிகற்பசமாதி - கடாதி விஷய முகத்துள் ஒன்றனைக் குறித்து, அதனுடையநாமரூபமான மயாங்கி சங்களிரண்டையும் பிரித்து, அதனுள் பாதிப் பிரியமென்னும் சச்சிதாநந்தப் பிரமாங்கிசத்திரயங்களை அனுசந்தானம் செய்வது.

பாகியபோகம் - வெளிப்போகம்.

பாகியம் - புறம்பானது, மலங்கழிக்கை, பரைபூசையினொன்று, புறம்பு.

பாகியல் - பகுத்தறிவு.

பாகியேந்திரம் - புறவுறுப்பு, வெளியுறுப்பு.

பாகீடு - பங்கீடு, பங்குப்பொருள்.

பாகீரதி - பகீரதன் கொணர்ந்த கங்கை.

பாகு-கரை, கற்கண்டு, குழம்பு, சத்தி, சருக் கரை காய்ச்சிய குழம்பு, தலைப்பாகு, பங் கு, பரணிகான், பாகன், பாக்கு, பால், பிச்சை, புயம், பரணி, பகுதி, பாகன் ஒழில், பிளவு, தேரோட்டல்.

பாகுடம் - அரசிறை, கையுறை, நிர்வகிக்கும் திறன், அழகு.

பாகுடி - வெகுதானம், தொலைதூரம்.

பாகுடிகம் - கருஞ்சீரகம்.

பாகுதாயன் - பிராமணத்தி சூத்திரனைக் கூடிப் பிறந்த பிள்ளை.

பாகுபடுதல் - பகுக்கப்படுதல், பிரிதல்.

பாகுபாடு - பகுப்பு, வகைப்படுகை, பிரிவு.

பாகுரி - இலக்கணி, இலட்சணமறிந்தவன்.

பாகுலம் - கார்த்திகை மாதம்.

பாகுவலயம் - தோள்வளை, வாகுவலயம்.

பாகுவன் - மடையன், சமையற்காரன்.

பாகுளி - புரட்டாசி மாதத்துப் பௌர்ணமி.

பாகேக்கியம் - பிதிர்பூசை, வைசுவ தேவ பூசை.

பாகை - தலைப்பா, பகுதி, வட்டத்தின் மூந் நூற்றறுபது மடங்கிலொரு பங்கு. [ன்.

பாகோடன் - சூரியன், ஆதித்தன், கதிரவ

பாக்கபுரேசர் - திரு அச்சிறுபாக்கத்திலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

பாக்குக்கடிக்கும் நேரம் - மிகக் குறுகிய காலம். [யாடுதல்.

பாக்கடித்தல் - முழுப்பாக்குகொண்டு விளை

பாக்கம் - ஊர்ப்பொது, நெய்தனிலத்தூர், மருதநிலத்தூர், அரசனிருப்பிடம், பக்கத் திலுள்ள ஊர்.

பாக்கல், பாக்கல்லு } பாவுகல்,மேற்றளத்திற்குப் பா வுவதற்குதவும் கருங்கல்.

பாக்கழி - மருதயாழ்த்திறங்களுள் ஒன்று, நெசவு நூல். [சிற்றளவு.

பாக்களவு-சொற்பத்தைக் குறிக்கும் சொல்,

பாக்கன் - காட்டுப்பூனை, மண்டலி.

பாக்காணூல் - பாவினூல், இழைநூல்.

பாக்கி - மிஞ்சுவை, மிச்சம், பற்று.

பாக்கிசாக்கி - பாக்கி, சாக்கிபாக்கி.

பாக்கியசாலி - அதிட்டமுள்ளவன். [மிடம்.

பாக்கியத்தானம் - சென்மத்துக்கு ஒன்பதா

பாக்கியம்-அதிட்டம், கஷாயம், சித்தி, செல் வம், தனம், பேறு, நல்வினை, ஆகூழ்.

பாக்கியலட்மி - அட்டலக்குமியிலொன்று; இஃது: செல்வந்தருவது, தனலட்சுமி.

பாக்கியவதி - செல்வி, சம்பத்துள்ளவள்.

பாக்கியவான்-செல்வன், சம்பத்துள்ளவன்.

பாக்கியவீனன்-துரதிஷ்டசாலி,தரித்திரன்.

பாக்கியாதிபதி - சோதிடநூற்படி குறித்த இரண்டாம்,ஒன்பதாம்வீட்டுக்குடையவன்.

பாக்கியாநுகூலம் - செல்வப்பேறு.

பாக்கு - எதிர்கால விடைச்சொல், (உ-ம்) உண்பாக்குவந்தான்.துவர்க்காய்,அடைக்

காய். [யாட்டு.
பாக்குக்கட்டுதல்-ஓர் யோசனையான வினை
பாக்குக்கன்று - பாக்குப் பதி.
பாக்குச்சாரம் - பாக்குச்சாறு, பாக்கு வெற்றிலை, சுண்ணும்பு கூட்டி மென்ற தம்பலம்.
பாக்குச்சீவல்-பாக்கைப் பாக்குவெட்டியால் வெட்டுதல், வெட்டியசீவல், பாக்குச் செதிள்.
பாக்குச்சொக்கல்-வெற்றிலை பாக்குப்போடுக்கொண்டதால் உண்டாம் மயக்கம்.
பாக்குப்பட்டை - கமுகின் மடல்.
பாக்குப்பறித்தல்-மணமுடிக்க வருமணவாளனது சம்பிரதாயஞ் சோதித்தல்.
பாக்குப்பை - அடைப்பை, அடைப்பட்டி.
பாக்குப்போடுதல்-ஓர்வினையாட்டு, பிளவிலை யருந்தல்.
பாக்குவெட்டி - பாக்குச்சீவுங் கருவி. [பம்.
பாக்குவெற்றிலைப்பை-அடைப்பை, அடைப்
பாக்குவைத்தல் - சுபகாரியங்களுக்குத் தாம்பூலம் வைத்து அழைத்தல்.
பாங்கம் - பலண்டுறுவபாஷாணம், ஓர்மருந்து, பத்தி, பற்று, தினை, நூல்.
பாங்கர்-கணவன், இடம், தோழர், பக்கம், சமீபம், பணத்தை வட்டிக்குக்கொடுக்கும் நிதிச்சாலை வைத்துள்ளவர்.
பாங்கன் - தோழன், சிநேகிதன்.
பாங்கானவன் - மரியாதையுள்ளவன்.
பாங்கி - தலைவியின் தோழி, பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் நிதிச்சாலை.
பாங்கிலார் - உணர்விலார், நீதியிலார், பகைவர்.
பாங்கு - அழகு, இடம், இணக்கம், உரிமை, தகைமை,பக்கம், மாதிரி, முறை,நன்மை, தகுதி, சௌக்கியம், இயல்பு, தோழமை, வழி, தொழுமிடம்,உறவு, பகுதித்திறன்.
பாங்குபரிசனை-நன்னடை,ஒழுக்கமுடைமை
பாங்குபண்ணல்-சிறப்பித்தல், அலங்கரித்தல்
பாங்குமம் - கருஞ்சீரகம், கருப்புச்சீரகம்.
பாசகத்திரி - சமையற்காரி, பாசகஸ்திரி.
பாசகம் - சூதாடுகருவி, மடைத்தொழில், மூலாக்கினி, இரைப்பையில் உண்டாகும் நீர், வகுக்கும் எண். [யகன்.
பாசகரன் - காலன், நமன், வருணன், விநா
பாசகர் - சமையற்காரர், பந்தப்பட்டவர்.
பாசகர்ணன்-சுமாலிபுத்திரன், ஓரிராக்கதன்
பாசகன் - அக்கினி, சமையற்காரன், அஞ்ஞானி.
பாசகுசுமம் - இலவங்கம், சிராம்புப்பூடு.
பாசக்கட்டு - பிரபஞ்சக்கட்டு, மலபந்தம்.
பாசக்கயிறு - பாசம், சுருக்குக்கயிறு.
பாசங்களினீங்கல்-கிருமலமாதல்; இது: சிவனெண் குணத்தொன்று, மலபந்தமறல்.
பாசஞானம் - உலகஞானம், இலௌகீகம்.
பாசடம்-வெற்றிலை, தாம்பூலம், மெல்லிலை.
பாசடை - பச்சிலை, தளம், குழை. [லை.
பாசண்டத்துறை - சமயக்கட்டினிலை, சமய
பாசண்டம்-சமயக்கட்டு, தொண்ணூற்றாறு சமயங்களின் சாத்திரக்கோவை, வைதிக சமயக் கொள்கையோடு முரணியே அவைதிக சமயக் கொள்கையையும் எடுத்து விதிப்பது பாசண்டசமயமெனப்படும்.
பாசண்டர் - புறச்சமயிகள், புத்தமதஸ்தர்.
பாசண்டி - பாஷாண்டி, புறச்சமயி.
பாசண்டிகன் - பாசண்டகன். [கன்.
பாசதரன்-காலன், நமன், வருணன், விநாய
பாசத்தொடக்கு-அன்புப் பிணிப்பு, இனிய சொல்லாற் கட்டுதல்.
பாசநாசம் - பந்தநாசம், மும்மலமுமழிதல்.
பாசநாசன் - கடவுள், முதல்வன்.
பாசந்தினை } பாசக்கட்டு, கண்ணி, மும்மல
பாசபந்தம் } பதம், ஆசாபாசம்.
பாசபந்தர் } பாசம்நீங்காதோர்;ஆசாபாச
பாசபந்திகன் } கர்,பாசசம்பந்தர், மலசம்பந்தர்.
பாசபாணி - சிவன், யமதூதரிலொருவன், யமன், வருணன், விநாயகன், ஐங்கரன்.
பாசபெந்தர்-பாசபந்திகள்,மலபந்தமுற்றவர்
பாசபேயம் - ஓர்யாகம், ஓர்வேள்வி. [வன்.
பாசமோசநன் - கடவுள், இறைவன், முதல்
பாசமோசனம் - பாசநாசம், பாசநீக்கம்.
பாசம்-பாசு, அழகு; அன்பு, இருள், ஊசித்தினை, ஓரளவைப்பிரமாணம், ஓர் படைக்கலம், கட்டு, கண்ணி, கயிறு, கவசம், கற்பாஷாணம், சிவஞானிதம், சீரகம், சுற்றம், நமனுயுதம், நூல், பலபந்தம், பாசக்கயிறு, பாசி, பிசாசம், மாயை, விலங்கு, பேய், ஆசை, மென்மை, மெல்லிய சொல்.
பாசாதிதன்-கடவுள்,இறைவன்,முதல்வன்.
பாசருகம் - அகில்மரம், அகருமரம்.
பாசலம் - காற்று, நீர், நீயிலாப்பாகம்.
பாசவபாலன் - புற்றரை, பன்மைதானம்.
பாசவதைப்பரணி - சிவஞான தேசிகரைச் சிறப்பித்துப் பாடிய ஒரு பரணி; இந்நூலாசிரியர் வைத்திய நாததேசிகர் என்பர். (உறுதி இல்லை) பெரிதும் அஞ்ஞவதைப்பரணியே பின்பற்றி இருக்கும்.

பாசவர் - இலேவிற்போர், வெற்றிலேவிற் போர், கயிறு திரித்துவிற்போர், பச்சை யிறைச்சி, சூட்டிறைச்சிவிற்போர்.

பாசவிமுக்தன் } கடவுள், முதல்வன்,
பாசவிமோசநன் } இறைவன்,ஆண்டவன், பதி.

பாசவிமோசநம்-மூப்பாசவினே யொழிதல்.

பாசவினே - பந்தத்திற் கேதுவாகியவினே.

பாசவைராக்கியம் - பிரபஞ்ச வெறுப்பு.

பாசறை - ஓர்மரம், தின்பம், பகைமேற் சென்றோருறைவிடம், மணியாசிப் பல கை, புல்வேய்ந்த குடிசை.

பாசறைமுல்லே-ஓர்நூல்; அஃது: பாசறைத் தலேமகன் றலேவியை நினேக்குந்துறை.

பாசனகம்-பருகுவன,குடிப்பன,அருந்துவன

பாசனக்கால் - வயல்களுக்கு நீர்பாயுங்கால்.

பாசனம் - அக்கினி, உண்கலம், உறவு, ஓர் மருந்து, நிவர்த்தி, பங்கு, பாண்டம், பாத்திரம், பிரிவுக்கணக்கு, புளிப்பு, மட் கலம், மரக்கலம், ஆதாரம், சுற்றம், தங்கு மிடம், வெள்ளம், வயிற்றுப்போக்கு, நீர்பாய்ச்சல், நெருப்பு, பட்டாடை.

பாசனுங்கம் - பட்டாடை தரும் கற்பகம், பத்து வகைக் கற்பகத் தொன்று.

பாசன் - இயமன், ஓர்முநிவன், சிவன், வரு ணன்.

பாசாங்கடித்தல் - மாரீசம் பண்ணுதல், வெய்த்தல், இல்லதை யுள்ளதாய்க்காட் டல், பாவனே, மாரீசம், பசப்புதல்.

பாசாங்கு-மாரீசம்,போலித்தனம்,வஞ்சகம்.

பாசாங்குக்காரன் - எத்தன், தந்திரி, வெய்ப் போன்.

பாசாங்குக்கள்ளி - மாயக்காரி, வஞ்சகி.

பாசாங்குசன் - விநாயகன், கணபதி.

பாசாங்குசதான்-விநாயகன், பாசாங்குசன்.

பாசாங்குசை-சத்தி, பார்வதி, உமையவள்.

பாசாங்குபண்ணுதல் } மாரீசம்பண்ணுதல்,
பாசாங்குபோடுதல் } மாயம்பண்ணுதல்.

பாசாணபேதி - நெருஞ்சி, சிறுநெருஞ்சி.

பாசாண்டம் - பாசண்டம், சமயக்கட்டு.

பாசாண்டர் - பாசண்டர், பாசண்டி.

பாசாபந்தம்-மாயையால் மறைக்கப்படுதல்.

பாசாபாசம் - அம்புக்கட்டு, கயிறு, வடம்.

பாசி - கண்ணியேற்றுவோன், காியமணி, சடைச்சி, சமைத்தல், நமன், நாய், நீர்ப் பாசி, பாசி, சிறுபயறு, மேகம், ஆண்மா, நெட்டி, பலம், புல்லுருவி, மீன், வரு ணன், பூஞ்சாலான், கிழக்கு.

பாசிக்குத்தகை-மீன்பிடிப்பதற்குக் கொடுக் கும் வரி, பாசிவரி, மீன்வரி.

பாசிதம் - வகுத்தாவு, பிரிக்கப்பட்ட பங்கு.

பாசித்தீர்வை - மீன்றீர்வை.

பாசிபடர்தல் } பாசிபிடித்தல், பாசிவிழல்.
பாசிபற்றல் }

பாசிபந்து - தோளணிவகை, பாஜிபந்து.

பாசிபூத்தல் - பழமையாதல், பாசிபற்றல்.

பாசிப்படை - பலமுன்னபடை, திடீரென தாக்கும்படை. [பசும்பயறு.

பாசிப்பயறு-ஓர்வகைப்பயறு,பச்சைப்பயறு,

பாசிப்பருவம் - மீசையினிளம் பருவம்.

பாசிப்பாசம் - பச்சைக் கயிறு.

பாசிமணி - காியமணி, பச்சைமணி.

பாசிமறம் -மதிற்புறத்து அக்கரையில் நடக் கும் போர், பாசிபோல் ஒட்டிக்கொண்டு செய்யப் படுவதால் பாசிமறம் எனப்படும்.

பாசிழைவிலே - மணமகளுக்கு கணவன் அளிக்கும் பணம்.

பாசிலே - பச்சிலே, வெற்றிலே.

பாசிவரி - பாசிக்குத்தகை, மீன்பிடித்தற்குக் கொடுக்கும் வரி, மீன்குத்தகை.

பாசிவிலே - மீன்விலே.

பாசிழை - அலங்காரிக்கப்பட்ட பெண்.

பாசினம் - கிளிக்கூட்டம்.

பாசிகன் - சமையல்செய்வோன், பாசகன்.

பாசு - தைரியம், பசுமை, பச்சை, மூங்கில், பசுமை, செவ்வி, பச்சை, பதம்.

பாசுபதம்-உட்சமய மாறிலொன்று,பாசுபதா த்திரம், பசுபதியுடையது, சிவமல்லி.

பாசுபதர் - பாசுபத சமயத்தோர்.

பாசுபதன்-பாசுபதசமயி, சிவபிரான் விபூதி சடை முதலியவை தரித்த திருக்கோல மாய்த் தோற்றித் தன்னடியார்க் கருள் செய்பவன் என்பவன். இவன் அகப்புறச் சமயிகளு ளொருவன்.

பாசுபதாத்திரம்-சிவபெருமானேத் தேவதை யாகக் கொண்ட அத்திரம்.

பாசுபதி - ஓர்யாகம்.

பாசுபதேசுவரர்-திருவேட்களத்திலும், திரு மூல்லேவாயிலிலும் கோயில்கொண்டிருக் கும் சுவாமிபெயர். இது அருச்சுனனுக் குப் பாசுபதாஸ்திரங் கொடுத்தருளல் உண்டான பெயர்.

பாசுபாலியம்-பசுக்காத்தல். [சை, திருமுகம்

பாசுரம் - பாட்டு, வசனம், வேய்ங்குழலோ

பாசுவசுறோணி - காட்டாமணக்கு.

பாசூர்நாதர் - திருப்பாச்சூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

பாஸ்கரராமாயணம் - பாஸ்கரரால் செய்

யப்பட்ட ராமாயணம். இது பாஸ்கரர், அவர் குமாரராகிய மல்லிகார்ஜுநபட்டு, சிடனுகிய குமாரருத்ரதேவன், சிநேகித னுகிய ஐயலார்யன் என்னும் இந்நால்வ ரானும்செய்யப்பட்டது. ஆயினும்பாஸ்க ரர்முக்கியராதலால் பாஸ்கர ராமாயணம் எனப்பட்டது. இது இவ்வாறியற்றப்பட் டதற்குக் காரணம் அந்தக்காலத்தில் இவ ருக்கு ஆசிரியனுயிருந்த அரசனிடத்தில் இவரது உறவினனுகிய ரங்கநாதன் என் பவன் அரசனது கட்டளையால் த்விப த ராமாயண மொன்று செய்யத் தொடங் கும்போது அவரிடத்தில் தமக்குண்டா யிருக்கிற இயற்கையாகிய பொருமையா ல், அரசனேநோக்கி, உன் பெருமைக்கு த்விபதகாவியம் தகுந்ததன்று, நான் பத்ய காவியம் செய்துகொண்டு வருகிறேன். அதனே யேற்றுக்கொள். என்று சொல்ல, இவர் சொன்னசொல்லைத் தடுக்கவொண் ணுமையாலும், ரங்கநாதனது க்ரந்தத்தை யே யேற்றுக்கொள்ள வேண்டுமென்னுங் கருத்துண்மை யானும், 'எவர் முன்னே கொண்டு வருகிறார்களோ அவரது கிரந் தத்தையேற்றுக்கொள்வேன்'என்றுசொ ல்லி யனுப்பினன். அப்போது ரங்கநாத னது ராமாயணம் மூன்று பங்கு முடிந் திருந்தது. ஆகையால் இவர் அது முடிவ தற்கு முன்பே தனது ராமாயணத்தை முடித்துக்கொண்டு போகவேண்டும் என் னும் எண்ணங்கொண்டவராய், மேற் சொல்லப்பட்ட மூவரது உதவியாலும் வி ரைவில் முடித்துக்கொண்டு அரச னிடம் போயினர். அப்போழுது ரங்கநா தன் தனது ராமாயணத்தை முடித்து அரசனது ஆஸ்தானத்துக்குக் கொண்டு வந்திருந்தான். அதைப்பார்த்து அரசன் ரங்கநாதன் பக்கத்தில் வலது கையையும், பாஸ்கரர் பக்கத்தில் இடது கையையும் நீட்டினன். அதற்கு பாஸ்கரர் கோபங் கொண்டு, 'பக்ஷபாதமுள்ளஉன்னையொத் த அரசனுக்கு என் கவியை எற்பிப்பதைப் பார்க்கிலும் ஒரு குதிரைக்காரனுக்கு எற் பிப்பது நன்மையாம்' என்று சொல்லிக் கொண்டே ஆஸ்தானத்தை விட்டு வெளிப் பட்டுப்போகும்போது, அவ்வரசனுடைய குதிரைக்காரன் வந்து, 'கவிசார்வபௌ மனே, நீ சொன்ன சொல் தவருதே' என்று வழுத்துத்தி கும்பிட்டான். அவ் வளவில் இவர்அவனுக்குத் தன் க்ருதியை யேற்பித்தனர். அதனுலேயே காவ்யாரம் பத்தில், ''ஸாஹிணிமாரா'' என்று ஸம் போதித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

பாஸ்கராசாரியர்-இவர் ஒரு பிரபல ஜோதி ஷ நிரந்தகர்த்தா, பீஜகணிதம் செய்தவர் இவரே, இந்த பீஜகணிதத்தில் வருக்கச் சங்கரணவிதி யென்று சொல்லப்படுவதா கிய ஒரு அருமையாகிய கணிதவிதி சொல் லப்பட்டிருக்கின்றது. இவர் எழுநூற்றெ ழுபது வருஷங்களுக்கு முன்னிருந்தவர்.

பாஸ்கரர்-ஒருதேவகணத்தார். இவர் அறு பத்து நால்வர்.

பாசை - சமைத்தல், பாஷை, ஆணை, பாசி.

பாச்சல் - எழுச்சி, பாய்தல், தாண்டல்.

பாச்சா - வல்லமை, அரசன், பச்சை.

பாச்சான் - திருகுகள்ளி, கொடிக்கள்ளி.

பாச்சி - பாச்சிகை, தாய்ப்பால், பாசி.

பாச்சிகை } சொக்கட்டான் கவறு, சூதாடு
பாச்சிக்கை } கருவி.

பாச்சியம் - பங்கு, பிரிக்கப்படும் தொகை.

பாச்சுத்தி - பாற்சொற்றி, செடிவகை.

பாச்சுருட்டி } தறிமரம், வெட்டுமரம்.
பாச்சுற்றி }

பாச்சை - ஓர் வண்டு, தத்துப்பூச்சி வகை, சுவர்க்கோழி, கரப்பு. [யிரித்தல்.

பாச்சையடித்தல் - பொருள்களைப் பாச்சை

பாச்சொற்றி - பாற்சொற்றி, அம்மான் பச் சரிசி. [தம்.

பாஞ்சசத்திகம் - வாத்தியப்பொது, சங்கநா

பாஞ்சசன்னியதான் - விட்டுணு, திருமால்.

பாஞ்சசந்தியம் - விஷ்ணுசங்கம்; இஃது: பஞ்சசனன் என்னும் அசுரனது எலும்பி னுற் செய்யப்பட்டதாகையால் இதற்கு இப்பெயருண்டாயிற்று.

பாஞ்சசன்னியம்-ஒடு,ஓர்மீன், திருட்டிணன் உபயோகித்துவந்த சங்கு; அஃது: சலஞ் சலமாயிரஞ் சூழ்ந்தது, நீர், நாணல்.

பாஞ்சராத்திரம்-ஐந்துநாளளவும்பிரமாவுக்கு விட்டுணு உபதேசித்த ஓர்சமயம்; இஃது: புறச்சமயமாறினுன்று, வைணவாசம யிரண்டினுன்று, பாஞ்சராத்திரமதம்.

பாஞ்சராத்திரி } பாஞ்சராத்திர மதத்
பாஞ்சராத்திரிகன் } தைச் சார்ந்தவன்.

பாஞ்சராத்திரி - நாராயணன் தன்னே வழி பட்டவருடைய பந்தத்தை நீக்கி, அவர்களே வைராஜாகியில் மூழ்குவித்துப் பரிசுத்தர்களாகச் செய்து, வைகுண்டத் திலே தனது சாரூபபதவியைக் கொடுப் பவனென்பவன். இவன் புறச்சமயிகளு

ளொருவன். [விக்ரகம், பாஞ்சாலிகை.
பாஞ்சலிகை - சித்திரப்பாவை, பதுமை,
பாஞ்சார்த்திகன் - பாசுபதமதஸ்தன். [லன்.
பாஞ்சாலபுருஷன்-இலட்சணவான்,பாஞ்சா
பாஞ்சாலமட்டியம் - ஓர்வகைத் தாளம்.
பாஞ்சாலம்-அஸ்தினபுரத்துக்குவாயுதிக்கில் இமயமலைக்கும், சர்வதிக்கும் நடுவிலுள்ளது. திருபதஞல் ஆளப்பட்ட நாடு, லட்சணம், காற்று, கனல், இலாபப்பொருன்.
பாஞ்சாலன் - இலட்சணவான், பாஞ்சால தேயத்தான், மதனநூல் இயற்றியோன், ஆருணியரசன்.
பாஞ்சாலி - சித்திரப்பாவை, துரோபதி.
பாஞ்சாலிகம் - மரப்பாவை விளையாட்டு.
பாஞ்சாலிகை-சித்திரப்பாவை,பாஞ்சாலிகை
பாஞ்சை - பாஞ்சாலங்குறிச்சி.
பாடகம் - ஓர்வாத்தியக்கருவி, ஓர்கீட்டலளவை, கரை, பாதகடகம், பாடுமிடம், தெரு, கிராமத்திற் பாதி, வகை, சிவப்பு, கூலி, சூதுவிளையாடல், நட்டம், பாறை.
பாடகர் - பாடுவோர், சங்கீதவித்வான்கள்.
பாடகன் - உபாத்தியாயன், பாடுவோன், மாணக்கன், சொல்வன்மையுள்ளோன்.
பாடகாலம் - பாடவேளை, இரத்தினங்களை மதித்தற்குரியகாலம்.
பாடகி - பாடுபவள், பாணத்தி, விறலி.
பாடக்கிடம் - ஆடுதின்னுப்பாளை.
பாடங்கேட்டல் - ஆசிரியனிடத்தினூற்பொருள் விசாரித்தல், மாணாக்கன் கற்றதை ஆசிரியர் சோதித்தல், பாடஞ்சொல்லல்.
பாடசாலை - பள்ளிக்கூடம், கலாசாலை.
பாடச்சுரன் - கள்வன், திருடன், சோரன்.
பாடச்சுவடி - தாயேடு, மூலச்சுவடி.
பாடஞ்செய்தல்- பதப்படுத்தல், ஒளிவிடுதல்.
பாடஞ்சேர்தல் - அடைந்தமர்தல், பக்குவமாதல், பாடஞ்செய்யப்படல்.
பாடஞ்சொல்லல் - மாணாக்கர்க்கு நூற்பொருள் விளக்கல், மாணாக்கன் படித்த பாடத்தை ஆசிரியனுக்குச் சொல்லல்.
பாஷணம் } சம்பாஷணை, போதனை,
பாடணம் } போதிப்பு, பேசுதல்.
பாடபம் - பாடவம், பாடசம்.
பாடபேதம் - ஒரு நூலிற் கண்டவற்றிற்கு வேறான பாடம். [செய்தல்.
பாடமாக்குதல்-பாடம்பண்ணுதல், மனனஞ்
பாடம் - அடுக்கு, அழுத்தம், இடையர்வீதி, எழுதும் பாடம், ஓதும் பாடம், தெரு, இரத்தினம்முதலியவற்றின் ஒளிபடிதல், படியவைத்தது, பொன், முதலியவற்றினுரை, விரிவு, வீதி, வெற்றிலை, பதப்படுத்துகை, முடிமாலை, சம்மதி, கடுமை, ஒளி, உண்மை.
பாடம்பண்ணுதல்-மனப்பாடமாக்கல்,தோல் புகையிலைமுதலியவற்றைப்பதம்செய்தல்.
பாடம்போற்றல் - கேட்டபாடத்தைப் பல காற் சிந்தித்தல்; இஃது: நூல்கற்போரியல்பு.
பாடரி - மதுபானம். [புன்னகம்.
பாடலத்துருமம்-புன்னகமரம், புன்னகதரு,
பாடலம் - குதிரை, சபதம், இளஞ்சிவப்பு, குங்குமம்,சிவப்பு, சேரன்குதிரை, பாதிரிமரம், மழைகாலத்துப் பழுக்குநெல், வெண்சிவப்பு,பாடமாட்டோம்,பேசோம்.
பாடலர் - பேசாதவர், பாடாதவர், சொல்லாதவர், பாடுபவர். [ரவம், இரதபதம்.
பாடலாங்கிரி-புரு,தூதுணம்,கபோதம்,கள
பாடலாவதி - ருகூபர்வதத்தில் உற்பத்தியாகிப் பாயும் நதி, இடிமுழக்கமான மேகம்.
பாடலி - ஓர்நெல், ஓர்பூக்கொடி, ஓர்மரம், கள், கொடிவகை, பாதிரி.
பாடலிபுத்திரம்-பாடலிபுரம்; இது, பிரதிஷ்டாநகரம், உதயாசுவன் அமைத்தநகரம். இது குசுமபுரி எனவும் படும். சோணநதி கங்காநதியோடு கூடுமிடத்தி லிருந்ததாகிய ஒரு புராதன நகரம். இது பூர்வம் மகத தேயத்தின் தலைநகரா யிருந்தது. ஆயிரத்து நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னே கங்கைப்பெருக்கால் அழிந்து விட்டது. இவ்விடத்தில் பௌத்தமுனிவர் மடங்களும், நூற சிவாலயங்களும் இருந்தனவென்றும், அந்த மடங்களில் ஐயாயிரம் பௌத்தமுனிவர்களிருந்தார்களென்றும், மற்ற வைதிகசமயிகள் தொகைக்கு அளவில்லையென்றும், சீன தேசத்திலிருந்து ஆரியதேசத்துக்கு வந்து போன ஹியூன்சங்கன் என்பவன் சொல்லுகிறான். இதனால் இந் நகரம் சரித்திரசம்பந்தப்பட்டதாய் நெடுங்காலம் கீர்த்தி பெற்று விளங்கினதென்பதற்குச் சந்தேகமில்லை. [திட்டாநகரம்.
பாடலிபுரம்- பாடலிபுத்திரம், குசுமபுரி, பிர
பாடலை- ஓர்மரம், தர்க்கை, பாடல்வர்ணப்பசு,உதையாசுவன் அமைத்த பாடலிபுரம்.
பாடலோபலம் - மாணிக்கம், நவமணியி ளொன்று.
பாடல்-சங்கீதம்,செய்யுள்பாடுதல்,வாசித்தல் புகழல், பாடற்க, பாடுக, தாயம்பாடல், சாயங்கூறல், (திசை) பாராட்டல், ஒலித்

தல், பேசல் புகழ்தல்.
பாடவம்-களிப்பு, சமர்த்து, வல்லமை, சுகம், பெருமை, வடவாமுகாக்கினி, பாடபம்.
பாடவரை - வானவரை, போவரை.
பாடவன் - பாடன்மகனே, மிதுனவிராசி.
பாடவன் - பாடுபவன், மிதுனவிராசி.
பாடலிகன்-தூர்த்தன், கீழ்மகன், போக்கிரி.
பாடவேளை - இரத்தினங்களை மதிப்பிடுதற் கேற்ற ஒளியமைந்த வேளை.
பாடவை-பாடவன், அரங்கு, மிதுனவிராசி.
பாடறிதல் - இடமறிதல், தரமறிதல்.
பாடற்பயன்-இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம் என்னும் எண்வகையான இசைப்பயன்.
பாஷணம் } பாடுதல், பேச்சு, போதித்தல்,
பாடணம் } வெட்டல், சம்பாஷணை.
பாடனுபவித்தல் - வருந்தல், துன்பப்படல்.
பாடன்மகளே } பாடுவாள், பாணர்பெண்,
பாடன்மகன் } பாண்மகள்.
பாடன்மார் - பாடாதொழிக, பாடுவார்.
பாடா - பங்கம்பாளை, விறலி, கொடிவகை.
பாஷாசமம்-இரண்டுபாஷைக்கேற்றசொல்
பாடாணதாரகம் } கல்லுளி, கல்லுடைக்
படாணதாரணம் } குங் கருவி.
பாடாணத்தாபனம்- சவக்கிரியையிலொன்று
பாடாணமாரி-கல்மழை, ஆலங்கட்டிமழை.
பாடாணமுத்தி - கல்போற்கிடக்குமுத்தி.
பாடாணம் } கல், கச்சுச்சாக்கு, பிளக்கை.
பாஷாணம் }
பாடாணரூபி - கல்லாகச் சாபம் பெற்ற அகலிகை.
பாடாணவாதசவன் - ஆன்மா முத்தியிலும் சகசமலம், நீங்காது, கல்லைப்போலக் கிடக்கு மென்னும் அகச்சமயிகளுளொருவன், பாடாணவாதி.
பாடாண்டிணை - புறப்பொருட்டிணையிலொன்று, ஒருவனது, கீர்த்தி, வலி, கொடை அளிமுதலியவற்றைப் பாராட்டிச்சொல்லுந்திணை.
பாடாண் - பாடுதல் வினையையும், ஆண்மகனையும் உணர்த்தாமல், அவனது ஒழுக்கத்தை யுணர்த்தும்பாலின்கண்வரும் செந்துறைப் பாடாண்பாட்டு.
பாடாதல் - கெடுதல், பதங்கெடல், பழுது படல்.
பாஷாந்தரமாக்குதல்- பிறபாஷைப்படுத்தல்
பாஷாந்தம் - பலபாஷை, மறுபாஷை.
பாடாய்-பாடமாட்டாய்.
பாடாய்முடிதல்-கெடுதியாய் முடிதல்.
பாடாவதி } மிகுபாடு, பெருந்துன்பம்,
பாடாவாரி } கொடுந்துயரம்.
பாடாவதி-பயனற்றது, துன்பம்படாவிதி.
பாடாவிதி-கெடுவிதி, கெடுவினை, போகூழ்.
பாடாற்றல் - சகித்தல், பொறுத்தல், அடைக்கல்.
பாடி-ஊர், ஓரிராகம், கவசம், சேரி, சேனை, நகரம், நாடு, உளவாளி, பாசறை, பாடுபவள், முல்லைநிலத்தூர், பாடிவீடு, பாராட்டி, பூமி.
பாடிகம் - படிகலிங்கம்.
பாடிக்கதை-வீண்பேச்சு, வெட்டிவார்த்தை.
பாடிக்காப்பார் - ஊர்க்காவலர், தலையாரி.
பாடிக்கொடுத்தல்-பிறனுக்காகக் கவிபாடிக் கொடுத்தல்.
பாஷிதம் } சொல்லல், பேச்சு, வாக்கியம்.
பாடிதம் }
பாடிபரதேசி - ஊரூராய்த்திரியும் பிச்சைக்காரர், பாடிக்கொண்டு பிச்சை எடுக்கும் பரதேசி, இக்கற்றவர்கள்.
பாஷிபகாரன் - உரைகாரன், பாஷைப் படுத்துவோன், சூத்திரவிருத்தி யுரையாளன். [காரர்.
பாடியக்காரர் - பேருரைகாரர், பாடிய
பாடியம் } உரை, சூத்திர விருத்தியுரை.
பாஷியம் }
பாடியோடுதல் } ஓர் விளையாட்டு, பாடிக்
பாடியோட்டம் } கொண்டு ஓடுதல்.
பாடிரம் - பாடிரக்கிழங்கு, சந்தனம், துத்தநாகம், முகில், மூங்கிலரிசி. வாதம்.
பாடிலம்-நாடு, மண்டலம், தேயம், கண்டம்.
பாடிவீடு - பகைமேற்சென்றோருறைவிடம்.
பாடினம் - சித்திரமூலம்.
பாடினி-பரடுவாள், மட்பாண்டம், மட்கலம்.
பாடின்மை - அறிவின்மை, பெருமை இன்மை.
பாடீகம்-ஓர்கிழங்கு, சந்தனம், துத்தநாகம், முகில், மூங்கிலரிசி, வயல், வாதநோய்.
பாடீநம் - சித்திர மூலம், குங்கிலியம், வாளை மீன். [பண்டிதன்.
பாடீநன் - உபாத்தியாயன், பாடகஸ்தன்,
பாடீரம் } பாடிரம், சந்தனமரம், மலயசம்,
பாஷீரம் } மலயசமரம், சாந்து.
பாடு-அனுபவிக்கை. இடம், உண்டாகுகை, நிலைமை, முறைமை, கடமை, கூறு, பயன், ஒழுக்கம், பெருமை, விசாலம், உழைப்பு, தூக்கம், சாவு, குறைவு, அஸ்தமனம், நீசராசி, உதயத்துக்கேழாமிடம், ஏழாம் வேற்றுமையுருபு, ஓசை, குணம்,

கேடு, சுயகாரியம், நட்பு, பக்கம், படுதல், பாடென்னேவல், பெருமை, மலை, வருத்தம், விருத்தி, வேலை, நிகழ்ச்சி, துன்பம், படுக்கை, ஒலி, படிதல், படுதல்.

பாடுகாட்டுதல் - பக்கம்சரிந்துகிடக்குதல், பாட்டிலேவிழுதல், முயற்சி யெடுத்தல், உழைத்தல்.

பாடுகாயம் - படுகாயம், வெட்டுக்காயம்.

பாடுகிடத்தல் - வருங்கிடத்தல், நோன்பாற்றல், படுத்துக்கிடத்தல்.

பாடுசேதம் - பாடுவாசி, பொருள்நஷ்டம்.

பாடுதல் - இராகம் பாடுதல், கவிசெய்தல், பாடியோடுதல், வாசித்தல், இசைத்தல், சொல்லுதல், வசைத்தல், இகழ்தல், தாயம்பாடுதல், புகழ்தல்.

பாடுதுறை-தத்துவராயசுவாமிக ளியற்றிய ஒரு சமயநூல், புலவர் பாடுதற்குரிய போர்த்துறை. [லார், பாவலர்.

பாடுநர்-இசையிடுவோர், புலவர், இசைவல்

பாடுபடுதல்-ஆக்கினைப்படுதல், வருத்தப்படுதல், மிக உழைத்தல், பிரயாசைப்படுதல்.

பாடுபடுத்துதல்-ஆக்கினைபண்ணுதல், வருத்துதல், கடினவேலைவாங்குதல். [வேலை.

பாடுபறப்பு-கவலை, அதிகவேலை, பறப்பான

பாடுபார்த்தல் - தன் காரியம் கவனித்தல்.

பாடுவர் - பாடல் செய்வார், பாடுபடுபவர்.

பாடுவன்-பாடுவாள், பாட்டுக்காரி, பாடகி.

பாடுவன் - பாடுவான், பாட்டுக்காரன், பாடகன்.

பாடுவாசி-நெல்லையளத்தல், பொன்னையுருக்குதல் முதலியவற்றால் உண்டாகும் நஷ்டம், பாடுசேதம்.

பாடுவாள் / பாடுவிச்சி } பாடன்மகள், புகழ்பவள்.

பாடுவான்-பாணன், பாடகன், பாடுவோன்.

பாடுவி-பாடச்செய், பாடுவிஎன்னேவல்.

பாடுவித்தல் - பாடப் பழக்குதல், பாடச் செய்தல்.

பாடேடு-தாயேடு, மூலவேடு, மூலசாசனம்.

பாஷை-சபதம், சரச்சுவதி, பேச்சு, மொழி.

பாடை-ஆசங்கி, பருத்தி, பாடைமரம், பாஷை, வட்டத்திருப்பி, ஆணை, சபதம்.

பாடைகுலைத்தான்-பாகல், மிதிபாகற்கொடி

பாடைகுலைவான் - ஓர்வசைமொழி. [தல்.

பாடைகூறுதல் - சபதம்செய்தல், ஆணையிடு

பாஷைக்காரன் -பாஷையில் வல்லோன்.

பாஷைசொல்லுதல் - சபதஞ்சொல்லுதல், சத்தியம் கூறல். [படும் கெட்டசுழி.

பாடைச்சுழி-மாட்டின்முதுகின்மீதுகாணப்

பாடைப்படுத்தல் / பாஷைப்படுத்தல் } ஓர் பாஷையிலுள்ளதைவேறோர் பாஷையில் மொழிபெயர்த்தல்.

பாடைப்பாடல்-அகப்புற நாடகங்களுக்குரிய வுறுப்புக்கள். [யிடல்.

பாஷையிடுதல்-சபதஞ்சொல்லுதல், ஆணை

பாட்சா - முகமதிய அரசர் பெயர்.

பாட்சிகன் - குருவி வேட்டைக்காரன்.

பாட்டகம் - வைரூரி, சிச்சிலுப்பை யம்மை, சத்தியூகி என்பவனூர்.

பாட்டகன் - பாடகன், கவிராயன்.

பாட்டநிலம் - குத்தகை நிலம். [னுமதம்.

பாட்டப்பிரபாகரம் - வேதமேதெய்வமென்

பாட்டமதம் - பாட்டர் என்பவரால் தாபிக்கப்பட்ட ஓர் மதம்.

பாட்டம் - அச்சல் அச்சலாய்ப்பெய்யுமழை, பலகாரம், பாட்டாசாரிய மதம், மேகம், குத்தகை, குமாரில பட்டரால் பிரசாரம் செய்யப்பட்ட பூர்வமீமாஞ்சைமதம், வரி, தோட்டம். [அரம்.

பாட்டரம்-தட்டையான அரவகை, சப்பை

பாட்டலாக்குக் கம்மல் - மாட்டியணிவதற்குரிய கம்மல். [முன்னோன்.

பாட்டன் - பாட்டமதத்தான், மூதாதை,

பாட்டா - பாட்டான், புளித்தகள், புளிப்பு.

பாட்டாசாரியம்-பாட்டாச்சாரியர் வேதமே தெய்வமென்று ஏற்படுத்திய கொள்கை, பாட்டப்பிரகாரம்.

பாட்டாச்சாரியர்-பாட்டமதப்பிரிவுக்கு ஆசிரியரான குமாரிலப்பட்டர்.

பாட்டாப்பிரபாகரம் - பாட்டப்பிரபாகரம்.

பாட்டாளி / பாட்டாள் } பாடுவோன், வேலைப்பிரயாசி, வீணன், உழைப்பாளி.

பாட்டி-ஒருசார்விலங்கின்பெண்பொது, நரி, நாய், பன்றி இவற்றின் பெண், பாடன்மகளிர், பாடுவாள், பாண்மகள், மூதாய், பெற்றோரின் தாய், கிழவி.

பாட்டியமி / பாட்டியம் } பிரதமை, அமாவாசி, பௌர்ணமி இவைகளுக்குப் பின் வரும் முதல் திதி, பாட்டிமை.

பாட்டியர் - பாணிச்சியர், கீதம்பாடுவோர்.

பாட்டியல்-செய்யுளிலக்கணம் கூறுநூல், இந்நூல்கள் பலவுள. அவற்றுள் வச்சணந்தியால் செய்யப்பட்ட நூல். ''வச்சணந்திமாலை'' எனப்படும். குணவீரபண்டிதரால் செய்யப்பட்டது ''வெண்பாப்பாட்டியல்'' எனப்படும், அது, ''பண்பார்கவிஞர் வியந்தெடுத்த பாட்டியலை, வெண்பாவக்தாதி விளம்பினான்,

மண்பாவும், கோடாத சீர்த்திக் குணவீர பண்டிதனும் பீடார் களந்தைப் பிரான்'' என்னும் வெண்பாவால் அறியப்படும், இனியெஞ்சின்ற பலவற்றுள் ஒன்று தியாகராஜ தேசிகர் செய்தநூல். இது மங்கலப்பொருத்த முதலியவற்றைக்கூறுவது. இந்தத் தியாகராஜ தேசிகர் இலக்கணவிளக்கஞ்செய்த வைத்தியநாதாவலரின் புதல்வர். இவர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தவர்.

பாட்டிலோடு-உடைந்த கண்ணுடித்துண்டு.

பாட்டில் - ஒருவகைக் கையணி, பாட்டல்.

பாட்டில்விழுதல் - காலந்தாழல், பொழுது சாய்தல், நிம்மதியாதல்.

பாட்டு - இசைப்பாட்டு, சங்கீதம், இசை: அட்டபோகத்தொன்று, செய்யுள், சொல், வசைமொழி, கொய்சகவடுக்கு.

பாட்டுக்கச்சேரி - சங்கீதக்கச்சேரி.

பாட்டுக்காணி-பாட்டுநிலம், பாடல் மேடை.

பாட்டுக்காரன் - பாடுவோன், இசை வல்லான்

பாட்டுக்கேட்டல் - சங்கீதங்கேட்டல், வசை கேட்டல், திட்டுவாங்கல்.

பாட்டுடைச்செய்யுள்-பலபாக்களோடுரை ப்பாட்டையும், இசைப்பாட்டையு முடைய இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் (உ-ம்) சிலப்பதிகாரம்.

பாட்டுடைத்தலைவன் } பாட்டுடைத் தலை
பாட்டுநாயகன் } மகன், காப்பியத் தலைவன், கீர்த்தியாளன்.

பாட்டுண்டார்-பாடப்பெற்றூர், பாட்டுடைத் தலைவர்.

பாட்டுவாங்குதல்-வசைமொழி பெறுதல்.

பாட்டுவாளி - பாடுவோன், கவிராயன்.

பாட்டை - வழி, பாதை, ஒழுக்கம்.

பாட்டைசாரி - வழிப்போக்கன், பாதசாரி.

பாட்பம் } கண்ணீர், ஆனந்தக்கண்ணீர்.
பாஷ்பம் }

பாட்லாக்கு-நாதாங்கி, நாதாங்கிமூலிவகை.

பாணகோசரம் - சரகதி, அஸ்திரவேகம்.

பாணச்சி } பாணப்பெண், கீதம் பாடு
பாணத்தி } வாள்.

பாணபத்திரன் - இவன் வரகுண பாண்டியன் சபையிலே விளங்கிக்கொண்டிருந்த ஒரு யாழ்வல்லோன். தன் இசைப்பாட்டினாலே சிவபிரானை வசப்படுத்தி, அவரிடம் ஒரு பாசுரம் வரைந்த திருமுகமொன்று பெற்றுக்கொண்டு போய்ச் சேரமான்பெருமாணாயனாரிடங் கொடுத்து, அளவற்ற பொருள்பெற்றுப் பெருஞ்செல்வனாகவிளங்கினவன். அந்தப் பாசுரம், ''மதிமலி புரிசைமாடக்கூடற், பதிமிசை நிலவும் பானிறவரிச்சிற, கன்னம்பயில் பொழிலாலவாயில், மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம், பருவக்கொண்மூப் படியெனப் பாவலர்க் குரிமையினுதவி யொளிதிகழ், குருமாமதிபுரை குலவிய குடைக்கீழ்ச், செருமாவுகைக்குஞ் சோலன் காண்க, பண்பாலியாழ்பயில் பாணபத்திரன், தன்போலென் பாலன் பன்றன்பால், காண்பதுகருதிப்போந்தனன், மாண்பொருள்கொடுத்து வரவிடுப்பதுவே'' என்பது. இவ்வரகுணபாண்டியன் கூன்பாண்டியன் காலத்துக்கு இரண்டாயிர வருஷங்களுக்குப் பின்னேயிருந்தவன் என்ப.

பாணங்தொடுத்தல் - அம்பெய்தல், ஒருவன் மீது பொறாமைகொண்டு வம்பளத்தல்.

பாணம் - அம்பு, ஆகாசவாணம், இராம பாணம், கை, திப்பிலி, துகி, நாடக வகை பத்திலொன்று, பூம்பட்டு, மழை வண்ணக்குறிஞ்சி, வியாபாரம்.

பாணம்பழை - மேகவண்ணக் குறிஞ்சி.

பாணர்-சங்கீதம்பாடிப் புகழ்வோர், தையற்காரர்.

பாணர்மாலையர் - பாண்குலமகளிர்.

பாணலி - பொரிக்குஞ்சட்டி, பாணலை.

பாணலிங்கம் - வாணலிங்கம்.

பாணல் - வெற்றிலை, தாம்பூலம்.

பாணன்-காட்டாமணக்கு, (1) பாணுசுரன், (2) அநீகன்புத்திரன், பாழாகியவன், தமிழ்நாட்டுக்கு வடக்கேயிருந்த ஒரு நாட்டரசன், இசைப்பாணன், பாண் மகன், தையற்காரன், புலையன், மீன் விலைபகர்வோன், திருப்பாணழ்வார், யாழ்ப்பாணன், யாழ்ப்பாணர், பண்டைப் பாணர், சிறுபாணர், பெரும்பாணர், என நாலுவகைப்படுவர்.

பாணு - சால், பருத்தசட்டி, பருத்தபீசம், வயிறுபருத்தபானை, பாணுத்தடி, கம்பு.

பாணுசுரன் - வாணுசுரன், இவன் பலிச் சக்கரவர்த்தியின் மூத்த குமாரன். சோணிதபுரிக்காசன்; கம்சனுக்கு நண்பன். தவம்செய்து சிவனைவேண்டி அகண்டைஸ்வரியமும், ஆயிரங்கரங்களும்பெற்றவன். இவனுல் அநேககோடி சிவலிங்கங்கள் வைத்துப் பூசிக்கப்பட்டன. இவன் மகள் உஷை என்பவளைக் கிருஷ்ணனின்

போஜனை அரிருத்தன் என்பவன் களவி லடைய அவனைச் சிறையிட்டனன். அதனால் கிருஷ்ணனுக்கும், இவனுக்கும் போர்நிகழக்கிருஷ்ணனால் இவன் கொல் லப்படும் தறுவாயில்'கொட்டரி'என்னும் இவனுடைய தாய் கிருஷ்ணனிடம் உயிர்ப்பிச்சை பெற்று இவனை மீட்பித்த னன். இவன் பிறகு சிவபதம் பெற்றுக் கயிலையில் குடமுழா ஊதும் பணிச்சனுயி னன்.

பாண்டு-பாண்டன்நாடு, பாண்டனை வழியிற் கண்ட புலவன் அவனைத் தனக்குப் பரிசில் கொடுத்தானிடம், ஆற்று ப் படுத்துவதாகக் கூறும் துறை.

பாண்டிராஜன் - பலிவமிசத் தரசரிலொரு வன்.

பாண்டத்தடி - சிலம்பக்கம்பு,பாண்டக்கம்பு.

பாண்டம் - சூதிலோர்தாயம், பாணலி.

பாண்டம் } பத்துப்பாட்டைச்
பாண்டற்றுப்படை } சேர்ந்தது; இது: சிறுபாண்டற்றுப்படை, பெரும்பாண்டற் றுப்படை என இருவகைப்படும்.

பாண்டன் - தையற்காரஜாதியான், தேரின் ஓர் உறுப்பு, கைச்சரடு, விரற்புட்டில், விரற்கவசம், விரற்புதையரணம்,அங்குஸ் தான்.

பாணி - இலேச்சாறு, இசைப்பாட்டு, ஊர், ஊர்சூழ்சோலை, ஓசை,கடைவீதி, கருப்ப நீர் முதலியவற்றின் சாறு, கள்,காண்டக பஷாணம், கா, காடு, காலம், பருவம், பொழுது, கீதம், கூத்து, கை; இஃது: கருமேந்திரிய மைந்தனுளொன்று, தாம தம், சொல், தயிரோதனம், சருக்கரைக் கரும்பு, வீதி, நாடு, நீர், நெடுநேரம், படை, பலபண்டம், பழச்சாறு, பற்று, பாட்டு, பாணியென்னேவல், பூம்பந்தல், மலை, வாச்சியப்பொது, வாணிபன், அன்பு, தாளம், அழகு.

பாணிகன் - பாடன்மகன்,வாத்தியக்காரன்.

பாணிகை - அகப்பை, சட்டுவம், துடுப்பு.

பாணிகொட்டல் - கையொடுகைகொட்டல்.

பாணிக்கிரகணம் - கைப்பற்றல், விவாகம்.

பாணிக்கிரகீதி - விவாகமனைவி, இல்லாள்.

பாணிக்கிராகம் - கைப்பிடித்தல், விவாகம், பாணிக்கிரகணம், திருமணம்.

பாணிசம் - கைந்நகம், தாமரை, அரவிந்தம்.

பாணிசாரியை - கயிறு, தாம்பு, வடம்.

பாணிச்சி - பாணர்சாதிப்பெண்.

பாணிச்சீர் - கைத்தாளம், காகஞ்சனம்.

பாணிதம் - கருப்பஞ்சாறு, கற்கண்டு.

பாணிதலம் - இரண்டு துலாங்கொண்ட அளவு, உள்ளங்கை, அங்கை, காதலம்.

பாணிதூங்குதல் - தாளத்துக்கேற்றபடி ஆடுதல்.

பாணித்தல் - பொழுதுநீட்டித்தல்,மதித்தல், தாமதித்தல், பாவித்தல், பின்வாங்கல்.

பாணிநடை - தாளத்துக்கொத்த குதிரை நடை.

பாணிக்கியம் - கைமண்டையாய்க்குடித்தல்.

பாணிபாத்திரம் - கமண்டலம்,கெண்டிகை.

பாணிபீடனம்-விவாகம், பாணிக்கிரகணம்.

பாணிப்பல்லி - வலம்புரிமரம்.

பாணிப்பளுட்டு - பாணியிலிட்டபளுட்டு.

பாணிப்பிடி - பாணிப்பற்று, பூ முதலியன, சாறுள்ள கிலே.

பாணிப்பூ - இலுப்பைப்பூ, இருப்பைப்பூ.

பாணிமுகம் - உயிர் பேரும் கதிகளி லொன்று, முதலில் நேரோடிப் பின் விலகிப்போதல், ஒரு வினையுடையது, சமயம் இரண்டு, இக்கதி மனிதர்க்கும் தேவர்க்கும் பொது.

பாணிமுத்தம்-எறியாயுதம்,ஈட்டிமுதலியன.

பாணிம்பு-பாணித்தல்,தாமதித்தல்,மதித்தல்

பாணியம் - வலம்புரிக்கொடி.

பாணியொத்து - கைத்தாளம்போடுதல்.

பாணிருகம் - கைந்நகம், தாமரை, பங்கயம்.

பாணிவாதன் - வாணிகன், பர்த்தகன்.

பாணினன் - ஒரிலக்கண நூலாசிரியன்.

பாணினி - இவர் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னே காந்தாரதேசத்திலே சலாது நகரத்திலே பிறந்து, உரியகாலத்தே வித் தியாப்யாசஞ் செய்துவரும்போது மந்த மதியுடையரா யிருத்தலேக்கண்டு குரு வாலும், சகபாடிகளாலும் அவமதித்துத் தள்ளப்பட்டு மனம்வருந்தித் தமது வீடு நோக்கிச் செல்லாது, இமயமலையை நோக்கிநடந்து, அங்கே சிவனை நோக்கித் தவங்கிடந்து,அவர்பாற் சகல சாஸ்திரங் களுக்கும் மூலசாஸ்திரமாகிய மாகேசுவர சூத்திரோபதேசம் பெற்றுக் கலேயெல் லாம் வல்லவராயினவர். இவர் தந்தை யார் பெயர் பாணினி என்பர். தாயார் பெயர் தாக்ஷியென்பது. தாக்ஷி புத்திர னெனவும்,இவர் வழங்கப்படுவதால் நன்கு துணியப்படும். இவர் அம்மாகேசுவர சூத்திரங்களை ஆதாரமாகக்கொண்டு செய்த சம்ஸ்கிருத வ்யாகரணம் பாணி னீயம் எனப்படும். அஃது: எட்டு அத்தி

யாயங்களே யுடையதாதலின் 'அஸ்டாத் யாயி' எனவும்படும். இவரும், வரருசியும் ஒரே காலத்தவர்கள். பாணினி பகவான் வ்யாகரணஞ் செய்யுமுன்னே வரருசி 'காதந்திரம்' எனப்பெயரிய ஓரிலக்கணம் வகுத்தாரேனும், பாணினி பகவான் செய் தருளிய நூலே சிறந்ததெனக் கண்டு அதற்குத் தாம் ஒரு ரை யியற்றினர். அவரே பாணினீயத்துக்கு மூதலுரை யாசிரியர்.

பாணினீயத்துக்கு மிக விரிந்ததோ ருரைசெய்தவர் பதஞ்சலிபகவான். விரிவு நோக்கி, அதற்கு 'மஹாபாஷ்யம்' என்னும் பெயருளதாயிற்று. பதஞ்சலி பகவான் தாமிற்றிய பாஷ்யத்திலே இச்சூத்திரங்க ளின் பெருமையை நோக்குமிடத்துப் 'பொருளில்லாத ஓரெழுத்தையேனும் அவற்றினுள்ளே யான் காண்கின்றி லேன்' எனக் கூறிப்போவரேல், பாணி னீய சூத்திரங்களின் வன்மையும், நுட்ப மும், வனப்பும் எடுத்துரைக்க வேண்டா. ஐரோப்பிய பண்டிதர்களும் தாங்கண்ட பாஷைகளிற் பாணினீயத்திற் கிணை யான இலக்கண மொன்றில்லை யென்று கூறி, உச்சிமேற்கொண்டு பாராட்டுவார் கள். பாணினீயத்துக்கு முன்னரும் ஐந்திர முதலிய வ்யாகரணங்கள் பல தோன்றி கடைபெற்றனவேனும் அவையெல் லாம் அது தோன்றிய பின்னர்க் கற்றற்கெளிதலவென்று மாந்த ராற் கைவிடப்பட்டனவாயின. ஆகவே பாணினீயமே நின்று நிலவுவதாயிற்று. அது வேதமொழிக்கும், சாமானிய மொழிக்கும் இலக்கணங் கூறுவது. பூர்வ வியாகரணங்கள் எல்லாம் வேத மொழிக்கே இலக்கணங் கூறுவன. பாணினீயம் இரண்டிற்கு மர்தலின் மிகச் சிறப்பதாயிற்று. அதுவுமன்றி அது பூர்வ வியாகரணங்களைப்போல வேதத்திற்கும் அங்கமாயிற்று.

இத்தகைச் சிறப்புவாய்ப்ப வ்யாகர ணஞ் செய்த பாணினியாது அவதார காலம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னதென்பர் சிலர். பாணினீயத்தி னுள்ளேவரும் யவநபதம் கிரேக்கரைக் குறிப்பதென்பது அச்சிலர் கருத்து. அது கிரேக்கரைக் குறிப்பதன்றென்பது கௌதம தருமசூத்திரம். மநு, ராமாய ணம், பாரதம், காசிகாவிருத்தி முதலிய வற்றினுள்ளே கூறப்படும் "யவன வர லாற்றுற் பெறப்படும்." ராமாயணம் "யவனராவார் சகரனுலே விசுவாமித்திர ரது ஆணைப்படி முண்டிதஞ்செய்து ஓட்டிவிடப்பட்ட க்ஷத்திரியர் என்று கூறும். பாரதம் "யவனர் துர்வசுவினது சந்ததியாராவர்" என்று கூறும். காசிகா விருத்தியும், விஷ்ணுபுராணமும் "யவனர் தமது தலையை முண்டிதஞ் செய்து கொள்பவர்" என்று கூறும். கிரேக்கரோ தமது தலையை வழித்துக் கொள்பவ ரல்லர். அது கிரேக்கனுகிய "தெமாஸ் தெனே" என்பவன் தான் வெளியே செல்லாவகை தன் தலையை முண்டிதஞ் செய்துகொண்டு, ஓரறையினுள்ளே மறைந்திருந்து, நூலோதிவந்தான் என் பதனுல் நன்கு துணியப்படும். ஆதலின் பாணினி குறித்த யவனரும் வேறு; ஐரோப்பிய பண்டிதர் குறிக்கும் யவன ரும் வேறென்பது நாட்டப்பட்ட தாயிற்று. ஆதலின் கிரேக்கர் படை யெடுத்து ஆரியாவர்த்தத்தைத் தாக்கிய பின்னரிரப்பாணி விளங்கினுரென்னுங் கொள்கை ஏற்புடைத்தன்று. நிர்வாண பதத்திற்குப் பாணினியார் கொண்ட பொருளும் வேறு; பௌத்தர் கொள்ளும் பொருளும்வேறென்பது பாணினி பாஷி யத்தினுலே பதஞ்சலியாரெடுத்துக் கூறும் 'தீபங் காற்றினுல் நிர்வாண மூற்றது' என்பது முதலாய உதார ணங்களால் நாட்டப்படும். ஆதலின், அது கொண்டு அவர் காலம் புத்தர் காலத்துக்குப் பிற்பட்டது என்று சாதிப்பர்தது வாதமும், கொள்கையும் ஒரு பிரமாணமாகாது.

அதுநிற்க, பாணினி தாம்செய்த வியா கரணத்தைக் காஷ்மீரதேசத்தரசனுகிய காஷ்க மஹாராஜன் சபையில் அரங் கேற்றித் தம்மை முன்னே அவமதித்த புலவர்களையெல்லாம் வாதத்தில் வெற்றி கொண்டு, கலைகள் யாவும் முற்றுமுணர்ந் த பெரிய பண்டிதரென்று திசையெல் லாம்புகழ்செல்லவிளங்கினர். இவரதிரு வுருவைச்சிலையிலமைத்தும், பிரதிஷ்டை செய்து பூசித்தும் வந்தவனுகிய காஷ்க ராஜன் சந்திரகுப்தனுக்கு நெடுங்காலத் துக்கு முன்னே அரசு செய்தவன். இத னலும் பாணினி மூவிரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தினதென்பது

நன்கு விளங்கும். இவர் சரிதம் காலம் களம் முதலியன 'கதாசரித் சாகரம்' என்னும் நூலிலும் அதற்கு மூதனூலாகிய 'ப்ருஹத்கதை' யிலுங் கூறப்பட்டுள்ளது.

பாணினியம் } ஓர் இரந்தவிலக்கணம். பா
பாணினீயம் } ணினி முனிவர் செய்த ஸம்ஸ்க்ருதவ்யாகரணம்; இது: மூவாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றாறு சூத்திரங்களையுடைய புராதனமான நூல்.

பாணு - பாண், பாட்டு.

பாணெளகரணம் - விவாகம், திருமணம்.

பாண் - இசைப்பாட்டு, கள், பாணச்சாதி, பாழ், தாழ்ச்சி, இச்சக வார்த்தை.

பாண்டகம் - சாமான், பண்டம், தவசம்.

பாண்டம் - ஆபரணம், ஆற்றின் பரப்பு, உடம்பு, ஓடு, கையிருப்பு, பரிகாசம், பாத்திரம், மட்கலம், வாத்தியக்கருவி, விலங்கின் கழுத்தணி, வெண்ணெய்மணி, வயிற்று வீக்கம்.

பாண்டரங்கண்ணனூர் - சோழன் ராஜசூயம் வேட்ட அவனைப் புகழ்ந்து பாடியவர்.

பாண்டரங்கம் - சிவபிரான் திரிபுரதகனம் செய்ய அதனலுண்டாகிய பூதியை பூசிக் கொண்டு ஆடிய கூத்து.

பாண்டரங்கனூர் - புறநானூற்றின் 16-ம் பாடல் இயற்றிய ஓர் புலவர்.

பாண்டரங்கன் - சிவன். [வெண்மை.

பாண்டரம் - செஞ்சுண்ணும்பு, மல்லிகை,

பாண்டரம்பிடித்தல் - அழுக்குப்பிடித்தல்.

பாண்டலடித்தல் - துற்கந்தம் வீசுதல்.

பாண்டல் - பாழ்த்துப்போனது, பாசிபிடித்து நாறுகை, கெட்டுப்போனது.

பாண்டவதானம் - வாத்தியமியக்கல்.

பாண்டவர் - பஞ்சபாண்டவர், பாண்டுராஜ குமாரர்கள், இவர் ஐந்துபேர். இவர் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்பவர்; இவருள் மூன்றினை மூவரும் குந்திமைந்தராதலால் கௌந்தேயர் எனவும், பின்றின இருவரும் மாத்திரிமைந்தராதலால் மாத்ரேயர் எனவும் சொல்லப்படுவர். இவர்கள் பாண்டு ராஜன் இறந்தபிறகு அஸ்திநாபுரத்தில் திருதராஷ்டிரனிடத்தில்வளர்ந்து தநுர் வேத முதலிய வித்தைகளில் மிகு சமர்த்தர்களா யிருக்கையில், இவர்களுடைய மேன்மையைக் கண்டு, திருதராஷ்டிரனுடைய பெரிய மகனுகிய துரியோதனன் பொறுக்கமாட்டாமல் சகுனி, கர்ணன், துச்சாசனன் என்பவர்களோடு கூடிக் கொண்டு, இவர்களுக்கு இடையூறு செய்துகொண்டேயிருந்தான். அது எவ்வாறெனின்: ஒரு நாள் துரியோதனன் வீமன் கண்ணுறங்கும்போது அவனைப் பெருங்கயிறுகளாற்கட்டிக்கங்கையாற்று மடுவில் தள்ளுவித்தான். மற்றொருநாள் அவனுடைய உடம்பு முழுதும் க்ருஷ்ண சர்ப்பங்களைக் கொண்டு கடிப்பித்தான். மற்றொருநாள் போஜந சமயத்தில் அவனுக்கு நஞ்சுண்பித்தான். அவன் அளவற்ற பலமுள்ளவனும், திவ்ய புருஷனுமாதலால் துரியோதனன் செய்த கொடுமைகளெல்லாம் அவனையொன்றுந்தீமை செய்யாவாயின. மேலும் துரியோதனன் பாண்டவரெல்லாருக்கும் அபாயமுண்டு பண்ண யோசித்து, வாரணவதத்தில் அரக்கு மாளிகையொன்று கட்டுவித்து, அதில் பாண்டவரைச் சேர்த்து, நெருப்பு மூட்ட யத்தனிக்கும்போது; இந்தச் செய்தியைப் பாண்டவர் விதுரனால் அறிந்து, அவ்விடத்திலிருந்து தப்பித்துக் கொண்டுபோய்த்தாயாரோடுகூட வேறு வேஷதாரிகளாய் ஏகசக்ரபுரத்திலே கொஞ்சகாலமிருந்து, பின்பு திருபத ராஜனது பட்டணத்திற்குப் போய் அவ்விடத்தில் அர்ஜுனன் திரௌபதியின் சுயம்வரத்தில் மச்சயந்திரத்தை யெளிதிலறுத்து, எல்லா வரசரையும் வென்று, திரௌபதையைக் கைக்கொண்டு, குருவாக்யத்தால் அவளை ஐவரும் மணம் புரிந்தார்கள். அவ்வளவிலேயே அந்தச் செய்தியெல்லாம் திருதராஷ்டிரன் அறிந்து, பாண்டவரை வருவித்து, அவர்களுக்குப் பாதிராச்சியங் கொடுத்து, இந்திரப்பிரஸ்தபுரத்திலிருக்கும்படியனுப்ப, அவர்களுடைய ராஜ்யப்பெருக்கு, குணசம்பத்து முதலியவற்றைக் கண்ட துரியோதனன் பொறுக்கமாட்டாமல் சகுனியின் வஞ்சனையால் மாயச்சூதாடித் தருமனைத் தோற்பித்துப்பன்னிரண்டு வருடம் வனவாசமும், ஒரு வருடம் ஜநபதத்தில் அஞ்ஞாதவாசமும்செய்யும்படியேற்பாடு செய்து, ராஜ்யத்தை வீட்டோட்டினன். அவ்வாறே பாண்டவர் வனவாசஞ் செய்து, அஜ்ஞாதவாசமும் செய்து, மீண்டு வந்து, தமது பங்கைக் கேட்கக்கொடுக்காமல் துரியோதனன் அவர்களை விரோதித்து எதிர்த்துப் போர்செய்து மாண்டான்.

பாண்டவர்கள் பகைவரைக் கொன்று, ராஜ்யத்தைக் கைக்கொண்டு, ஜனங்களுக்குச் சந்தோஷமுண்டாக்கிக் கண்ணபிரான் திருநாடலங்கரித்த பிறகு, பரிக்ஷித்துவுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்து சுவர்க்கமடைந்தார்கள். [மஹாபாரதம்.

பாண்டவர்படக்கை - சைனத் துறவிகளின் கல்லறை.

பாண்டவர்முன்பிறந்தோன் } கன்னன்,
பாண்டவாக்ரஜன் } தருமன்.

பாண்டவாபீலன் } திருட்டினன், கோபாலன்.
பாண்டவாயாகன் }

பாண்டவிகை - பெண், ஊர்க்குருவி.

பாண்டவேயன் - பாண்டு வம்சத்தான்.

பாண்டாகாரம் - பண்டசாலை, பொக்கிஷசாலை.

பாண்டி - பாண்டியநாடு, எருது, மாட்டுவண்டி, தக்கேசிப்பண், ஓர் விளையாட்டு, பன்னுருக்குழிப் பலகை, வாகைமரம்.

பாண்டிகம் - பறவை வகை.

பாண்டிகன் - பள்ளியெழுச்சிபாடுவோன்.

பாண்டிக்குறவன் - மலைநாட்டுத் தமிழ்க் குறவன்.

பாண்டிக்கொடுமுடி - கொங்கு நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பாடல்பெற்ற சிவத்தலம்.

பாண்டிக்கோவை - நெடுமாறன் என்ற பாண்டியன்மீது பாடியுள்ள கோவை.

பாண்டிதேசம் - சோழதேசத்துக்குத் தென்மேற்கில் கன்னியாகுமரி வரையிலுள்ள தேசம். இதற்கு ராஜதானி மதுரை. பாண்டியன் அரசுசெய்தமையால் இதற்கு இப் பெயருண்டாயிற்று. இதுவே தமிழ் பிறந்தநாடு. இது மிக்க பழமையும், பெருங் கீர்த்தியும், அநேக சரித்திரங்களும், புண்ய க்ஷேத்திரங்களும், நதிகளும், மலைகளும் உடைய நாடு. முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூச்சங்கமிருந்ததும், சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல் நடந்ததும் இந்நாடே.

பாண்டிதேயஸ்தாபகன் - துஷ்யந்தன் புத்திரனுடைய திஷ்யந்தனது பௌத்திரனுடைய ஆரிரதனின் புத்திரன், பாண்டியன். (பாண்டியனிற் காண்க.) [றம்.

பாண்டித்தியம் - கல்வித்திறம், படிப்புத்தி

பாண்டிமண்டலம் } பாண்டியன் றேயம்;
பாண்டியம் } இஃது: தேயமைம்பத்தாறினொன்று, பாண்டியன் ராஜதானி.

பாண்டியம் - எருது, உழவு, வேளாண்மை, உழைப்பு, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிக்காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் முதலிய பலபுலவராற் பாடப்பட்ட ஒரு தேசம்.

பாண்டியவமிசேசன் - சேரவமிசாந்தகபாண்டியனுக்குப் பின்னிருந்த பாண்டியன்.

பாண்டியன் - தமிழ்நாட்டு மூவேந்தரிலொருவன். துஷ்யந்தன் தம்பியாகிய திஷ்யந்தனது பௌத்திரனுகிய ஆரிரதன் புத்திரன். இவனேபாண்டிதேய ஸ்தாபகன். இவன் வம்சத்து வந்தோர் பல்லாயிரம் பாண்டியர். இவனே குலசேகர பாண்டியன்போலும். இவன் தென் மதுரையை நகரமாக்கி, நான்கு வருணத்தாரையும்குடியேற்றிக்காசியிலிருந்து ஆதி சைவர்களையும், கோயிற் பூசைக்காகக் கொணர்ந்து, அகஸ்தியர் அநுமதிப்படியேஅரசுபுரிந்தவன். இவன்மகன் மலயத்துவச பாண்டியன், மலயமலையைத் தனது கொடியில் எழுதிக்கொண்டதனால் 'மலயத்துவசன்' என்னும் பெயர் இவனுக்குண்டாயிற்று. இவன் அகஸ்தியரைக் கேட்டே எந்தக் காரியமுஞ் செய்பவன் என்பது அக் கொடியின் குறிப்புப் பொருள். இந்தப் பாண்டியன் காலம் துவாபரயுகம் என்ப.

பாண்டியன் அறிவுடைநம்பி - இவன் தமிழ்ப் புலமையிற்சிறந்த ஓர் அரசன். படைக்க வேண்டிய செல்வங்களெல்லாவற்றையும் படைத்துப் பலருடனேயுண்ணும்பெருஞ் செல்வனுயினும், காலம் இடையே யுண்டாகக் குறுகக்குறுக நடந்துபோய்ச் சிறு கைநீட்டிக் கலத்தின்கட்கிடந்ததனைத் தரையிலிட்டும், கூடப்பிசைந்தும், வாயாற்கவ்வியும், கையால் துழாவியும், நெய்சோற்றை உடம்பிற்படப் பூசியும் தந்தை தாயாருடைய அறிவை மயக்கும் புதல்வரில்லாதவர்க்குத் தம் வாழ்நாட்பயன் வேறில்லையென்னுங் கருத்துடைய "படைப்புப் பலபடைத்துப் பல்லாரோடு முண்ணும், உடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக், குறுகுறு நடந்து, சிறு கைநீட்டி, இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்" நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்து, மயக்குறு மக்களில்லோர் பயக்குற வில்லோநாம் வாழுநாளே" என்னுஞ் செய்யுள் செய்த பெருந்தகையிவனே. இவனைப் பாடிய புலவர் பிசிராந்தையார், இவன் கடைச்சங்கக் காலத்திருந்தவன்.

பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் - இவனே கோவலனைக் கொல்லுவித்

தவனென்பது சிலப்பதி காரத்தாலினிது விளங்கும். இவன் கல்வியைப் பொருளாக வும்,கற்றோரைத் தனக்குறுதிச் சுற்றமாக வும் கொள்பவன். கோவலன் ஊழ்வினை வலியே இத்துணைச்சிறந்த இவ்வரசனைப் புத்திமயக்கி அவனைக் கொல்விக்கும்படி செய்ததுபோலும். இவ்வரசனுடைய கல் வியறிவும், உலகியலுணர்ச்சியும் பெரிதும் வியக்கற்பாலன வென்பதற்கு ''உற்றுழி யுதவியு முறைபொருள் கொடுத்தும், பிற் றை நிலைமுனியாது கற்றனன்றே, பிறப் போரன்ன வுடன் வயிற்றுள்ளும், சிறப் பின் பாலாற்றாயு மனந்திரியும், ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும், மூத்தோன் வருக வென்னுதவருள், அறிவுடையோனு ரசுஞ்செல்லும்,வேற்றுமைதெரிந்தநாற் பாலுள்ளும், கீழ்ப்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவனு மவன்கட் படுமே'' என்னும் இவ்வற்புதமான அநுபவப்பொ ருளையுடையசெய்யுளேசாக்ஷியாகும். இச் செய்யுள் இவனைப் பாடப்பட்ட தென்பது புறநானூற்றினுட்காண்க.சோழநாட்டில் படையேற்றி,வெற்றிபுனைந்து மீண்டகய வாகு ஆங்குப்புகுந்ததும், மீண்டதும் பா ண்டி நாட்டுவழியே யாமாதலால் இவன் இலங்காபுரத்துக் காசனுகிய அந்தக் கய வாகுவுக்குநண்பன்போலும். இவனும்கரி காற்சோழனும், கயவாகுவும் ஒருகாலத் தவர்கள். இவன் தனது நாட்டைச்செவ் வையாய்க் காக்கும்பொருட்டு உத்தரதேச த்திலிருந்து படைவீரரைக் கொணர்ந் தி ருத்தினவனுதலால் ஆரியப்படைதந்த நெ டுஞ்செழியன் என்னும் பெயர் பெற்றான்.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் -இவ்வரசன் நக்கீரனாலும், மதுரை மருதனிளநாகனார் முதலியோ ராலும் பாடப்பட்டவன். கடுஞ்சினத்தை யுடைய யானைப்படையும், வாயுவேகமுஞ் செருக்குமுடைய குதிரைப்படையும், பெருங் கொடிகளையுடைய தேர்ப்படை யும், வன்னெஞ்சும் போர்விருப்பு முள்ள காலாட்படையுமாகியநான்கினாலும் அரசு சிறந்ததாயினும் சிறந்த அறநெறியே அர சாதிவெற்றிக்குக்காரணமாகும். அதனால் இவர் நம்மவரெனக்கொண்டு,அவர் செய் யுங் கொடுஞ்செயல்களைப் பொறுத்து, நின் செங்கோலுக்குக்குற்றத்தையுண்டாக்கிக் கொள்ளாமலும், இவர் பிறரெனக்கொ ண்டு அவர்செய்யும் நற்செய்கைகளைக் கெடாமலும், சூரியனைப்போற் காய்ந்தும் சந்திரனைப்போற் குளிர்ந்தும்,மழையைப் போல் வழங்கியும் நீடூழி வாழ்கவென்னும் பொருளையுடைய ''கடுஞ்சினத்த கொல்க ளிறுங்கதழ்பரிய கரிமாவும், நெடுங்கொடி யகிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மற வரு மென, நாண்குடன் மாண்டதாயினுமாண் ட, அறநெறிமுதற்றே யரசின்கொற்றம், அதனுல், நமரெனக்கோல் கோடாதபிற ரெனக் குணங்கொல்லாது, ஞாயிறென் னவெந்திற லாண்மையும், திங்களன்ன தண்பெருஞ்சாயலும், வானத்தன்னவண் மையுமூன்றும், உடையையாகி நீடூழிவா ழிய''என்னும் இச்செவியறிவுறூஉச்செய் யுள் மதுரை மருதனிளநாகனால் இவனுக் குரைக்கப்பட்டது. இக்காலத்துப் புலவர் போலாது அக்காலத்துப் புலவர் அரச ருக்கு அறமுறையெடுத்து இடித்துரைக் கும்ஆண்மையும், அறிவும் உடையோரென் பதும், அவர்சொல்லை அரசரும் விரும்பி யேற்றொழுகும் இயல்பின ரென்பதும் இச்செய்யுளால் ஊகித்துணரற் பாலது.

பாண்டியன் எழுதிநெடுங்கண்ணனார்-இவர் ஓர் சங்கப்புலவர்.

பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும் பெயர்வழுதி-இவன்இரும்பிடர்த் தலையா ரால்பாடப்பட்டபெருங்கொடையாளன்.

பாண்டியன்கானப் பேரெயில் தந்த வுக்கிரப் பெருவழுதி - ''இரவலர்க்கருங்கல மரு காது வீசி, வாழ்தல்வேண்டு மிவண் வரைந்த வைகல், வாழச்செய்த நல்வினை யல்லது, ஆழங் காலப்புணை பிறிதில்லை, உயர்ந்து மேன்றோன்றிப் பொலிக நுந் நாளே'' என்றுஔவையாரால்பாடப்பட் டவன். இவனேவேங்கைமார்பனெ வென் றுகானப்பேர் என்னும் அரண்கொண்ட வன். இவனே திருவள்ளுவருக்குச் சிறப் புப் பாயிரஞ் சொன்னபாண்டியன்என்ப.

பாண்டியன் கீரஞ்சாத்தன் - இவன் ஆவூர் மூலங்கிழாரால் பாடப்பட்டவன். இவன் தன் வாயிலையடைந்த பெரியோரை'என் மேலாணையுரைமின்' என்று சூளுற்றிரக் துண்பிப்பவன்என்பதும், போரில்பிறர்க் குடைந்து முதுகிட்டோடும்வீரர்க்குமுன் னேசென்று,அவர்களுக்கு அபயங்கொடுத் துப் போரில் துணைசெய்து, மாற்றரை வென்றவெற்றிகொடுப்போன்என்பதும் ''மணன் மலிமுற்றம்புக்க சான்றோர், உண்ணாயினுந் தன்னெடுஞ்சுற்றம், முண்

மெனவிரக்கும் பெரும் பெயர்ச்சாத்தன், நெடுமொழிமறந்தறிறுபோராளர், அஞ்சி நீங்குங்காலை எம்மாகத்தான் முந்துறு மே" என்னுஞ் செய்யுளாற் பெறப்படும்.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி - இவன் ஐயூர் முடவனாராலும், மருதனிள நாகனாராலும் பாடப்பட்ட வொருபாண்டியன். இவன்கூட காரமென்னு மூரிலிறந்தவன். இவனதுபோராண்மையை ஐயூர் முடவனார் "நீர்மிகிற்சிறை யுயில்லைத் தீயிகின், மன்னுயிர் நிழற்று நிழலுமில்லை, வளிமிகின்வலியு மில்லை யொளிமிக் கவற்றோரன்ன சினப்போர் வழுதி, தண்டமிழ் பொதுவெனப்பொ ருன் போரெதிர்ந்து, கொண்டி வேண்டு வனுயிற்கொன்கெனக் கொடுத்தமன்னர் கடுக்கற்றனரே" என்னுஞ் செய்யுளாலெ டுத்துரைத்தனர் என்ப.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்-இவன் சீத்தலைச் சாத்தனாரா லே "காய்சினந்தவிராது கடலூர் பெழு தரு, ஞாயிறனையை நின் பகைவர்க்குத் திங்களனையை யெம்மனோர்க்கே" என்ற பாடப்பட்டவன். பகைவரிடத்தே பெ ருஞ்சினமும், புலவரிடத்தே பேரருளுமு டையவனென்பது இச்செய்யுட் கருத்து.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்றநெடுஞ்செழியன்-இவன் புலமை யிற் சிறந்தவனென்பது புற நானூற்றி னுள்ளேவரும் எழுபத்திரண்டாஞ் செய் யுளால் இனிதுவிளங்கும். இவன் புலமை யிற்சிறந்த புலவரைக்காத்தலினும் அவ ரால் பாடப்படுதலினும் மிகு விருப்புடை யவனென்பது மாங்குடிமருதனாரால் மது ரைக்காஞ்சிக்குத் தலைவனுக்கப் பட்டமை யாலும், கல்லாடர் இடைக்குன்றூர்கிழார் முதலியோரால் பாடப் பட்டமையாலும், இனிது புலப்படும். இவன் தலையாலங் கானத்திலே கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் பெரும்போரில் வென்றதலால் இந்தப் பெயர் உடையவனுயினன்.

பாண்டியன் பன்னுடுதந்தான்குறு - ஓர் சங் கப்புலவர், பாண்டியவரசப் புலவன்.

பாண்டியன் மதிவாணனார்-மதிவாணர் என் னும் நாடகத் தமிழ் நூலாசிரியர்.

பாண்டில்-அகல், இடபவிராசி, எருது, ஓர் வாத்தியம், கண்ணுடி, குதிரைச்சேணம், விளக்குத்தண்டு, சாத்துக்குடி, கட்டில், கைத்தாளம், நாடு, பண்டி, மூங்கில், வட் டம், வாகனம், வாகைமரம், தேர்வட்டை, கிண்ணி, வடக்காசு, வட்டக்கட்டில், வினக்கு. [க்கு.

பாண்டில்விளக்கு-கால்விளக்கு, குத்துவிள

பாண்டிவேளாளன்-பாண்டிய நாட்டிலுள்ள ஒருவகைவேளாளன், திருவாங்கூரிலுள்ள தென்பாண்டி நாட்டு வேளாளர்.

பாண்டீச்சுரன்-வமிசசிரோமணிப் பாண்டிய னுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.

பாண்டூரம் - ஆல், வெண்மை.

பாண்டு - ஓர்நோய், சிறுபூளை, நீர்க்கோவை, வெண்மை, ஓரரசன், பாண்டுராஜன், இவன் விசித்திர வீரியன் மனைவியிடத்து வியாசருக்குப் பிறந்த இரண்டாம் புத் திரன். இவன் தாய் அம்பாலிகை. திருத ராஷ்டிரனுக்குத் தம்பி. இவனுக்குக் குந்தி யும், மாத்திரியும் மனைவியர். இவன் காட்டில் வேட்டையாடச் சென்றபோது நெடுந் தூரத்தில் ஒரு முனிவர்மானுருக் கொண்டு, தமது பத்தினியோடுகலந்திருப் பதை நோக்காது, தனிமானெனக் கருதி, அம்பெய்து இருவரையுங் கொன்றான். முனிவர் பாண்டுவை நோக்கி, 'நீயும் கலவிக் காலத்தில் தலைபிளந்திறக்கக் கடவை யென்று சபித்தார். ஆதலாற் றான் இந்தப் பாண்டுராஜனுக்கு நேர் சந்தானமடையத் தகுந்த யோக்யதையில் லாமற் போயிற்று. அச்சாபத்தால் நெடு நாள் கலவியின்றி யிருந்தும் ஒருநாள் காமாதிகாரத்தில் மாத்திரியைப் புணர்ந் துயிர் துறந்தான். [டூரம்.

பாண்டுகம்-காமாலை, மங்கல்வெள்ளை, பாண்

பாண்டுகம்பளம்-ஓர்கல், யானைமேற்றவிசு, வெண்கம்பளம், இந்திரன் ஆசனம்.

பாண்டுசருமிலை-திருபதி, கவசன்புத்திரன்.

பாண்டுநாகம் - ஐராவதம், வெள்ளையானை.

பாண்டுபத்தினி - குந்திதேவி, பாண்டவர் தாய்.

பாண்டுபுத்ரர்-தருமன் முதலியஐவர், பாண் டவர், பாண்டுமைந்தர்.]கன்.

பாண்டுபூபதி - பாண்டுராஜன், குந்திநாய

பாண்டுமகள் - பாடுவாள், சாகித்தியன்.

பாண்டுமகன் - பாடுவான், சாகித்தியன்.

பாண்டுமைந்தர் - தருமன் முதலேவர், பாண் டுராஜனின் புத்திரர்கள்.

பாண்டுயாவநம்-பேரீச்சமரம், பேரீந்துமரம்,

பாண்டூரம் - ஓர்நோய், ஓர்மரம், வெண்மை.

பாண்டுரோகம் - வெண்மை, தவளம்.

பாண்டரோங்ககம் - தவநம், ஆசை, தாகம்.
பாண்டுருவன் - பெரியவருவுள்ளவன்.
பாண்டுரேட்சு- வெண்கரும்பு, வெண்கழை.
பாண்டுரை - பாதிரிமரம், மலையாத்திமரம்.
பாண்டுரோகம் - பாண்டுவியாதி, வெண்குட்டம், நீர்க்கோவை.
பாண்டுலா - கறிப்புடோல், நெடும்புடோல்.
பாண்டுவன்னம் - வெண்மை, வெள்ளே.
பாண்டுவியாதி-பாண்டுரோகம்,பித்தபாண்டு
பாண்டை, பாண்டைநாறி, பாண்டைநாற்றம் } ஊழ்த்தநாற்றம், துற்கந்தம், வடுக்கன், கெட்டநாற்றம்.
பாண்பாட்டு - பெரும்போர் செய்து வீழ்ந்த வீரர்க்குச் சாப்பண்பாப் பாணர்களுடன் களித்தலைக் கூறும் ஒருதுறை. [மகன்.
பாண்மகன்-பாணன், மீன்பிடிப்பவன், புலை
பாண்மூலை - பாழ்மூலை, வெறும்மூலை.
பாண்மை - தாழ்ச்சி, பாணன் தன்மை.
பாதகடகம் - பாடகம், பாதசரம்.
பாதகண்டூரம் - ஓதக்கால், யானைக்கால்.
பாதகத்தி - பாதகி, சண்டாளி, கொடுஞ்சூரி.
பாதகமலம்-திருவடித்தாமரை,பாதக்கமலம்.
பாதகம் - துரோகம், பெரும்பாவம், தடை.
பாதகன் - துரோகி, சண்டாளன், பாபி.
பாதகாணிக்கை-பாததட்சிணை,குருதட்சிணை
பாதகாப்பு-செருப்பு,பாதக்குறடு,பாதக்காப்
பாதகி - துரோகி, சண்டாளி, பாவி. [பு.
பாதகுறடு - மிதியடி, குமிழுள்ள பாதரக்ஷை.
பாதகேசம் - பாதாதிகேசம். [கை.
பாதக்காப்பு - பாதத்திலணியும்காப்பு, பாது
பாதங்கி - சனி, கதிர்மகன், மூடவன், காரி.
பாதசத்துவரம்-அரசமரம்,ஆடு,ஓலாங்கட்டி.
பாதசரம் - மகளிர்காலணிவகை,பாதபாசம்.
பாதசன் - சூத்திரன், நான்காம் வருணன்.
பாதசாகை - கால்விரல், பாதவிரல்.
பாதசாபலியம்- உதைத்தல், மிதித்தல், பாததாடனம்.
பாதசாரம்-சிரகங்கன் நக்ஷத்திரங்களில்செல்லும் கதி.
பாதசாயை-பதச்சாயை,மக்கள்நிழல். [சாரி.
பாதசாரி-காலாள், வழிபோக்கன், பாட்டை
பாதசாலம் - காலணிப்பொது, நூபுரம்.
பாதசிலை - தூண்டாங்குங் குழிக்கல்.
பாதசுத்தி - கால்கழுவல், பாதங்கழுவல்.
பாதசேடம் - கால்கழுவியநீர்,பாததீர்த்தம்.
பாதசேவனம்-ஊழியம், பாதவந்தனம்,பணி.
பாதசேவை - அடித்தொண்டு,பாதஊழியம்.
பாதச்சனி - வாக்குத்தானத்துச் சனி-
பாதச்சாயை - மிதித்தவடிநிழல், பாதநிழல்.
பாதஞ்சலம் } பதஞ்சலி செய்தநூல்.
பாதஞ்சலியம் } பதஞ்சலியோகமதம்.
பாததட்சிணை - பாதகாணிக்கை, பாதசமர்ப்பிப்பு. [திருவடிதெரிசனம்.
பாததரிசனம்- பெரியோரைத்தெரிசிக்கை,
பாததாடனம்-காலாலுதைக்கை, கால்மிதி.
பாததாரி - காலின்வெடிப்பு, பித்தவெடி.
பாததாமரை-பாதகமலம்,திருவடித்தாமரை.
பாததிரணம் - பாதரட்சை, பாதக்குறடு.
பாததீட்சை-பாதமுத்திரை,திருவடிதீட்சை. இஃது: தீட்சை வகையிலொன்று.
பாததீர்த்தம்- பெரியோர் பாதங்கழுவியநீர்.
பாததூளி- காலிலொட்டினமண், திருவடித்துகள், நடைப்புழுதி, பாதபராகம்.
பாதந்தனம்-தொழுவம், மாட்டுக்கொட்டம்.
பாதபங்கயமலை - மகததேசத்து இராஜக்கிருகநகரத்தில் புத்ததேவரதுபாதம் வைக்கப்பட்ட மலை.
பாதபங்கயம் - பாதபதுமம், பாதகமலம்.
பாதபடி - பாதம்வைக்குமாசனம், மிதியடி.
பாதபம் - பாதவம், பாதபடி, தோப்பு,மலை.
பாதபரிசம் - சீதாங்க பாவநாணம்.
பாதபரித்திருநம் - பாதபரிதட்டனம்.
பாதபீடம் - பாதபடி, பாதபீடிகை, புத்தரது பாதப் படிமங்களுள்ள பீடம், வண்டியின் பின் உள்ள உறப்பு, காற்படி, கால்வைக்க அமைத்த படி.
பாதபீடிகை - கீழ்த்தொழில், பாதபடி.
பாதபுட்பம் - பாதகாணிக்கை. [ராதனை.
பாதபூசை - மெரியோர்க்குச்செய்யும் பாதா
பாதபை - மிதியடி, பாதக்குறடு.
பாதப்படி - அடிவைக்கும்பீடம், பாதபீடம்.
பாதப்பிரகாரம் - உதை, பாததாடனம்.
பாதப்பிரக்ஷாளநம் - கால்கழுவல், பாதசுத்தி.
பாதப்பிரதாரணம்-பாதரட்சை,கால்கழுவல்
பாதமயக்கு-நான்கடியிலேதேனு மொன்றை முதலாய் வாசிக்கச்சரிவரும்பா,வேறுபுலவர்கள் பாடிய அடிகள் மூன்றனுளேதாம் ஓரடிபாடி முடிக்கும் மிறைக்கவிவகை.
பாதமுத்தி - பரகதி, பாததீட்சை, திருவடிதீட்சை, விஷ்ணுபதம்.
பாதமுத்திரை - குருவின் பாதஞ் சிரசில் வைத்தல், பெரியோரின் பாதரட்சை.
பாதமூலம் - குதிகால், குதிங்கால்.
பாதம - இராகு, கால், பீடம் முதலியவற்றின் கால், நக்ஷத்திரபாதம்; இது.கருமேந்திரிய மைந்திலொன்று, சிரணம், சம்பவித்தல், சரிதை முதலிய நிலை, செய்யுட்களினடி, திடர், காற்பங்கு,சத்திரிபாதம்,

ரேகபாதம், வியதீபாதம், சீர்ப்பங்கு; மரவேர், வட்டத்தி ஞன்கிளைன்று, வைகறை, குரு, ஆசிரியன்.

பாதரசம் - இரதம், சூதம், சிவநாதம்.

பாதரட்சணம் } தொடுதோல், மிதியடி,
பாதரட்சை } செருப்பு. [தோல்.

பாதரதம் - இரதம், காலாட்படை, தொடு

பாதராயணன்-வாதராயணன், வியாசன் பிரமசூத்திரம், பாரதம் முதலியவற்றின் ஆசிரியர்.

பாதரோகணம் - அரசமரம், மாவேந்து.

பாதலத்தம்பி-நிலக்காளான், பாதலத்தாம்பி.

பாதலம் - கமர், கிடங்கு, குகை, சூரியனிற்கு மிராசிக்கு நாலாமிராசி, நாகம், பாதாளம்.

பாதலவாழ்நர் - நாகர், நாகலோகத்தவர்.

பாதவந்தனம் - பெரியோர்களுக்குப் புரியும் வழிபாடு. [மரம், மலை.

பாதவம் - தோப்பு, பாதபடி, மரப்பொது,

பாதவன்மிகம் - ஓர்நோய், யானைக்கால்.

பாதவிகன் - வழிச்செல்வோன், வழிப் போக்கன், பாட்டசாரி. [ணம்.

பாதவிரசை - பாதுகை, திருவடிப் பூவ

பாதவெடிப்பு - பித்தவெடிப்பு; பாததாரி.

பாதனம் - இழிதல், தக்கத்தாற் றலைசாய்த்தல், விழுதல். [தொழுநன்.

பாதன் - சூரியன், தீ, அடிமைவேலைக்காரன்,

பாதாக்கிரம்- கானுதி, கான்முனை, காணுனி.

பாதாக்கிராந்தன்-அடிவணங்குவோன், அடிதாழ்வோன். [லணி.

பாதாங்கதம் - பாதகடகம், வீரக்கழல், கா

பாதாங்குட்டம் - காற்பெருவிரல், காலங் குட்டம். [மெட்டி, பீலி.

பாதாங்குட்டிகை - கால்விரலணி, மிஞ்சி,

பாதாங்கொட்டை - வாதாங்கொட்டை.

பாதாசனம்-பாதப்படி, கால்வைக்கும்பலகை

பாதாதம் } காலாட்படை, தரைப்படை,
பாதாதி } சேனை, பதாதி, படை.

பாதாதிகேசம் - ஓர்பிரபந்தம்; அது: கலிவெண்பாவாலடிமுதன் முடியளவு முற்றக் கூறுவது, பாத முதற் கிகைபரியந்தம்.

பாதாம்புயம் - பாதகமலம், பாதமலர்.

பாதாரம் - கிரணம், பாதாரவிந்தம்.

பாதாரவிந்தம்-சீர்பாதம், பாதமலர். [கை.

பாதார்த்தம் - எட்டிலென்று, பாதகாணிக்

பாதார்த்தியம்-குரூபகாரம், குருதட்கிணை.

பாதாலம்- வடவைத்தீ, பாதாளம், பாதலம்.

பாதாவசேசனம் - பாதசுத்தி, பாதசுத்தம்.

பாதாவத்தம்-நீரிறைக்குஞ்சூத்திரம், எற்றம்.

பாதவனேசனம்- கால்கழுவல், அடிகழுவல்.

பாதாவிகன்-காலான், பணியாளன், அடிமை.

பாதாளகங்கை-பூமியின் கீழ் ஓடும் நீரோட்டம், பூமியின் கீழிருந்து, பொங்கி வெளிவரும் நீரூற்று, பாதாள வாகினி.

பாதாளகிரகணம் - காணுக்கிரகணம்.

பாதாளகேதன் - மதாலசனை யெடுத்துப் போய்க் காலவனுக்குத் தபோபங்கஞ் செய்தவோரசுரன், வச்சிரகேதுகுமாரன்.

பாதாளக்கரண்டி } கிணற்றில்விழுந்தபொ
பாதாளக்கொலுசு } ருளை எடுக்கும் கருவி.

பாதாளநிலயம் } கீழ்ப்பூமி, கீழுலகம், பாத
பாதாளபேதி } லம்.

பாதாளநிலையன்-தைத்தியன், நிதிமைந்தன்.

பாதாளபேதி-காடி, பேதியாகுமோர்மருந்து

பாதாளப்பணிக்கன்-ஆழ்ந்தயோசனையுள்ளவன், நுண்ணறிவுடையவன்.

பாதாளமூலம் } ஆடுதின்னுப்பாலை, கரையா
பாதாளமூலி } ன், கோரைக்கிழங்கு, சிறு நெருஞ்சில், சீந்திற்கொடி, பாதாளப்பூடு.

பாதாளம் - கீழுலகம், தாழ்வு, நரகம், பிலம், சூரியனுக்கு நான்காமிடம், மறைவிடம்.

பாதாளயோகம் - சோதிடயோக வகையு ளொன்று. [லிங்கம்.

பாதாளலிங்கம் - பூமியில் ஆழப்பதிந்த சிவ

பாதாளலோகம்-கீழுலகம், பாதாளம், நரகம்.

பாதாளவஞ்சனம் - பூமிக்குட் பொருளைத் தெரியக்காட்டும் மை, பாதாளாஞ்சனம்.

பாதாளவயிரவன்-கிணறுவெட்டவும், புதை பொருளை வெளியிடவும் பலிகொள்ளும் வைரவன். [கீழிருந்து வெளிவரும் நீர்.

பாதாளவாகினி - பாதாளகங்கை, பூமியின்

பாதாளவாசிகள் - நரகர், கீழுலகத்தார்.

பாதாளவினையன் - ஆழமானவினையன்.

பாதாளாஞ்சனம் - அஞ்சனம் மூன்றனுள் மறை பொருளைக்காட்ட உதவுவது. [ன்.

பாதாளி-மிகச்சிக்கலானது, உபத்திரவிப்பவ

பாதாளேசுவரர் - திரு அரதைப் பெரும்பாழியிலே கோயில்கொண்டிருக்கும்சுவாமி.

பாதி - அரைவாசி, கணவன், தலைவன், பங்கு, கூறு, நடு, பகுக்கை, சமயம்.

பாதிகம் - சம்பளம், படிப்பணம்.

பாதிச்சாமம் - பாதியிரா, நள்ளிரவு, பாதிரா.

பாதிடுதல் - நெருங்கல், பங்கிடுதல், பாதுகாத்தல். [வருந்துதல், தடைசெய்தல்.

பாதித்தல் - கூறுசெய்தல், சமபங்கிடுதல்,

பாதித்தியம் - பதித்தன்மை, ஆளுந்திறம்.

பாதிபகடம் - சரிபாதி, சரிபங்கு. [சமத்தி.

பாதிப்பேச்சு-அரைகுறையானபேச்சு, பேச்

பாதிமதி-அர்த்தசந்திரன், பிறைச்சந்திரன்.

பாதிமம் - நான்கிலொன்று, காற்பங்கு.
பாதியிரா } அர்த்தசாமம், நள்ளிரவு,
பாதிராத்திரி } நிசிவேளை.
பாதிரம் - மலையாத்தி, சந்தனமரம்.
பாதிரா - கடுஇராத்திரி, கடுச்சாமம், பாதியிரா.
பாதிரி - பாதிரிமரம்; அது: தசமூலத்தில் ஒன்று, மூங்கில், பாடலி, கிருஸ்தவ மத போதகாசிரியர்.
பாதிரிக்கூட்டம் - பாதிரி, வில்வம், குமிழ், தழுதாழை ஆகிய நான்கின் வேர்கள், கிருஸ்தவமதபோதகாசிரியரின் கூட்டம்.
பாதிரியம் - செவிடு, சோத்திரசூனியம்.
பாதிரிவிநாயகன் - பழனிவிநாயகன்.
பாதிலி-வலை, கண்ணி, கொக்கரை, சாலம்.
பாதிவாரம் - பயிரிட்டவன் நிலக்காரனுக்குக் கொடுக்கும் தானியபாகம்.
பாதிவிர்த்தியம் - பதிவிரதைத்தனம்.
பாதீடு - காத்தல், செறித்தல், பங்கிடுதல், வெட்சித்துறை, அரசன் தான் வென்று கொண்ட பசு நிரையை வீரர்க்குப் பகுந்து கொடுத்தல்.
பாது - காவல், சூரியன், பங்கு, பராமரிப்பு.
பாதுகம்-செங்குத்து,தொடுதோல், மிதியடி.
பாதுகன்-நடைவல்லோன், விழுமியவியல் புள்ளவன், காரியஸ்தன். [செம்மான்.
பாதுகாகாரன் - சக்கிலியன், பாதுகிருது,
பாதுகாசித்தி - மந்திர சத்தியுள்ள பாதரட்சையின் உதவியால் நீர்மேலும், அந்தரத்திலும் செல்லும் சித்தி.
பாதுகாத்தல்-உதவிசெய்தல், காத்தல், பராமரித்தல், வராமற்காத்தல்.
பாதுகாபட்டாபிஷேகம் - இராமபிரானுக்குப் பிரதிநிதியாக அவரது பாதுகைகளை வைத்து நந்திக்கிராமத்தில் பரதன் செய்த பட்டாபிஷேகம். [காவல்.
பாதுகாப்பு - காவல், காப்பாற்றுகை, மெய்
பாதுகாவலன் - காவல் செய்வோன்.
பாதுகாவல் - பாதுகாப்பு, பந்தோபஸ்து.
பாதுகிருது - சக்கிலியன், பாதுகாகாரன்.
பாதுகை-பாதுகம், சிறுசெருப்படை.
பாதுகைக்கொட்டை - பாதரட்சையின் குமிழ். [வகை.
பாதுஷா - முகம்மதிய அரசன், பணியார
பாதேயம் - கட்டுச்சோறு, கன்னியிராசி.
பாதை - ஒற்றையடிப்பாதை, மரக்கலம், மிதவை, முறை, வழிவகை, தும்பம்.
பாதோசம் - தாமரை, மூண்டகம்.
பாதோதகம் - கால்கழுவுநீர், வழியருகிற் றண்ணீர், பாததீர்த்தம், பாதப்ரக்ஷாளநீர்
பாதோதம் - தாமரை, முகில், மூளரி.
பாதோதரம் - முகில், திரன், மேகம்.
பாதோதி } கடல், வலயம், மகாலய
பாதோநிதி } யம்.
பாத்தம்-எல்லாநாட்டுமொழி, மருதம், தரம்.
பாத்தல் - கொடுத்தல், பங்கிடுதல்.
பாத்தி-சிறுசெய், பங்கு, பயிரிடுமேடை, வீடு.
பாத்திகட்டுதல்-சமநிலத்தில் வரப்புக் கட்டுதல், பாத்தி கோலுதல்.
பாத்திபம் - புரூமுட்டிப்பூடு, பூமி, தரணி.
பாத்திபன் - அரசன், பூபதி, வேந்தன்.
பாத்திய - உரிய, பரப்பிய, ஆராய்ந்த, வருத்த. [யான்.
பாத்தியக்காரன் - உறவினன், அக்குடை
பாத்தியதை - உரிமை, உறவு, சம்பந்தம்.
பாத்தியஸ்தனம்- பங்காளி, உறவு.
பாத்தியஸ்தன் - பாத்தியன், உறவினன்.
பாத்தியம் - உரிமை, சம்பந்தம், பகுக்கப்பட்டது, பங்கு,பாதமலம்பக் கொடுக்கும் நீர், பாதமலம்புதல்; இது: பூசை யியல்பினொன்று, பிணை, பந்தம், அக்கு.
பாத்தியல் - தண்ணீர்விட்டான்பூடு.
பாத்தியன் - உரியவன், பிணைகாரன், கடவுளின் அடியான், சொந்தக்காரன்.
பாத்தியா - முகம்மதியர் குருவன் ஓதுகை.
பாத்திரச்சுரை - ஓர்சுரை, கிண்ணரச்சுரை.
பாத்திரமூரம் - காகம், தீ,நாரை, பாத்திரம்.
பாத்திரபதம் - இரேவதி, உத்திராட்டாதி, புரட்டாசி மாசம், பூரட்டாதி.
பாத்திரபண்டம் - பாத்திர சாமான்கள்.
பாத்திரபாலம் - சுக்கான்.
பாத்திரப்பிரவேசம் - நடிகர்கள் காடகமேடையிற் பிரவேசித்தல்.
பாத்திரமாதுரன் - கற்புடை யாண்மகன்.
பாத்திரம் - இரப்போர்கலம், இலை, உடல், உண்கலம், எண்சேர்கொண்டது, கட்டளை, தகுதி, புரட்டாதி, மந்திரி, வாய்க்கால், கமண்டலம், நாடகத்தில் வேடமணிவோன், பொறுப்பாளி.
பாத்திரவதம் - பாராவதம், மலை, ஒங்கல்.
பாத்திரவாளி } தகுதிவான், இயல்புடை
பாத்திரவான் } யோன்.
பாத்திரவேதிகை - பூசைக்குரிய வட்டிகைகள் வைக்கும் பீடம், கடகம்.
பாத்திரன் - இரட்சகன், தகுதிவான்.
பாத்திராக்கினி - அக்கினி,வன்னி,தகனன்.
பாத்திராபாத்திரம் - தகுதிதகுதியின்மை.
பாத்திரிவம் - யாகோபகரணம்.

பாத்திரீயம் - பலிப்பாத்திரம், நிவேதனவட்டில்.
பாத்திரீரம்-காணிக்கை, தட்சணை. [பிரியன்.
பாத்திரேசமிதன்- மாய்மாலன், விருந்தாண்
பாத்திரை-இரப்போர்கலம், திருவோடு.[லம்
பாத்தில்-வரப்பாற் சூழப்பட்டது, வீடு, இல்
பாத்து - கஞ்சி, சோறு, நான்குபங்கு, பாதி, பகுக்கை, நீக்கம், இணை, ஐம்புலவின்பம்.
பாத்துதல் - பங்கிடுதல், கூறுபோடல்.
பாத்துப்புல் - நாற்பது, நாற்பான்.
பாத்துமகற்பம்-பிரமனது ஆயுட்காலத்தில் மூற்பாதி, வராஹகற்பமென்பதுமிதுவே.
பாத்துமபுராணம் - பாத்மகற்ப வரலாறு கூறும் புராணம்; இது:55,000. கிரந்த முடையது, பாத்மபுராணம்.
பாத்தூண்-பகுத்துண்கை, பிச்சை.
பாத்தேய்த்தல் - நெசவுப்பாவுக்குக் கஞ்சியிடுதல்.
பாத்மபுராணம் - பதுமபுராணம். [னம்.
பாநாள் - அத்தசாமம், பாதிநாள், மத்தியா
பாநிலம் - பாநபாத்திரம், பாநபாசனம்.
பாநியாமலகம் - நெல்லியினேர்பேதம்.
பாநுமதி-விக்கிரமார்க்கன்மனைவி, மூழுமதி.
பாநேமி - சூரியன், தினகரன், பானு.
பாந்தட்பார் - பாம்புப்படார், படார்.
பாந்தம்-அடியாறு, ஒழுங்கு, பகரவீறு, இணக்கம்.
பாந்தல்-பதுங்கல், தின்பம், ஒளிதல்.
பாந்தவம் } அடியாறு, பந்துத்துவம்,
பாந்தவியம் } உரிமை.
பாந்தள்-பாம்பு, பெரும்பாம்பு, மலைப்பாம்பு.
பாந்தன் - வழிச்செல்வோன், வழிப்போக்கன்.
பாந்து-அளை, பாந்தென்னேவல், பொந்து.
பாந்துதல் - பதுங்குதல், மறைதல், பிரண்டுதல். [மலைக்குகை.
பாந்தை-அளை, பொள்ளல், பாந்து, ஓட்டை,
பாபகம் - பாவம், தீவினை, கொடுமை.
பாபகாரி - பாவகாரி.
பாபக்கிரகம் என், நிலம்.நூ,எண்.[பக்கிரகம்
பாபக்கிரகம்-ஞாயு, சனி, செவ்வாய், அசு
பாபசமனம் - பாவபரிகாரம், பாபநிவர்த்தி.
பாபசரியன் - இராட்சசன், பாவஞ்செய்வோன், தானவன், இராக்கதன்.
பாபதண்டி - அக்கினிதேவன், குயவன், தங்கள் பாகத்திற்படுப்போன், வசிட்டன்.
பாபது - பாபத்து, குறிக்கப்படுவது.
பாபத்தி - வேட்டை, ஆகேடம், வேட்டம்.
பாபத்து - விஷயம், கணக்கு, பாபதி.
பாபநிரதி - பொல்லாங்கு, தீங்கு.
பாபமார்க்கம் - பாவவழி, தன்மார்க்கம்.
பாபமூர்த்தி - வேடன், வில்லியன்.
பாபமூர்த்திகள் - வேடர், குறவர், வலைஞர், கிராதர், புளிஞர், வனசரர். [பு.
பாபமோசனம்-பாவநிவிர்த்தி, பாவமன்னிப்
பாபம் - குற்றம், பாவம், தீவினை, மதம்.
பாபம்பொறுத்தல் - பாவமன்னிப்பு.
பாபயோனி - பாவப்பிறப்பு, இழிபிறப்பு.
பாபரஹிதன் - பாவமற்றவன், புனிதன்.
பாபரோகம்-ஊழ்நோய், கொப்புளிப்பான்.
பாபரோகி-தொழுநோயாளி, குட்டரோகி.
பாபர்த்தி-பாபத்தி, கொடும்பாவி, வேட்டை
பாபவிக்கியாபனம்-பாபசங்கீர்த்தனம், பாபத்தைக் குறித்து முறையிடுதல்.
பாபவிமோசனம் - பாவநாசம், பாபமிலி.
பாபாத்துமா - பாவி, சண்டாளன்.
பாபாபநுதி-பாவநிவிர்த்தி, புனிதம்.
பாபி - பாவி, கொடியன், பாபாத்மா.
பாபிஷ்டன் - பாவஞ்செய்வோன், பாபி, சண்டாளன்.
பாபிஷ்டை - பாபஞ்செய்பவள், சண்டாளி.
பாபு - எசமானன், முதலாளி, தனவந்தன்.
பாம்பணி - பாம்பணி, அரவாபரணம்.
பாம்பணை-சர்ப்பசயனம், பாம்புப்பாயல்.
பாம்பர் - பொருளற்றவன், குணமிலி.
பாம்பா-சிறுகுழந்தை, கண்ணின் கருவிழி.
பாம்பாசு } வலைவுச்சோடு, ஒருவகைத்
பாம்பாச்சி } தோடு தோல்.
பாம்பாத்தி-பார்ப்பனி, வண்ணாத்திப்பூச்சி, கழுகுவகை. [புள்.
பாம்பாத்திமைனை - ஒருவகை நாகணவாய்ப்
பாம்பாரத் தென்னை - தேளி, வெளிறிய தேங்காய். [வகையிற் கொடியது.
பாம்பாரநாகம் - செந்நாகம், நாகப்பாம்பு
பாம்பாரமைனை - பாம்பாத்திமைனை, ஓர் பற
பாம்பான்-பார்ப்பான், பார்ப்பனன். [வை.
பாம்பாண்பூண்டு - காட்டுச்சாயவேர்.
பாம்பு - பாத்தல், பிராமணச்சாதி, ரோமன் கத்தோலிக்க மதத்தினரின் தலைமைக்குரு.
பாம்புப்பகை - பாம்பின்பகை, கருடன்.
பாம்புரி - பாம்புரி, பாம்புச்சட்டை.
பாம்பூசு-ஒருவகைத்தொடுதோல், பாம்பாசு.
பாமகள் - சரச்சுவதி, கலைமடந்தை.
பாமக்கினம் - கந்தகம், பாமாரி.
பாமடந்தை - பாமகள், சரச்சுவதி, நாமகள், பாரதி.
பாமதம் - வாலுளுவை, வாலுழுவை.
பாமரன் - சிறுகுபிடித்தவன், சொரியன்.

பாமம் - கோபம், தினவு, நரை, பரப்பு, பிரபை, சிற்றம், தினம், செற்றம்.
பாமரம் - அறிவின்மை, இழிமை, மடமை.
பாமரன் - அறிவிலான், மடையன், பேதை.
பாமரர் - அரசர்க்குத்தூணவர், அறிவீனர்.
பாமரவைத்யன் - அநப்பியாச வைத்தியன்.
பாமன் - சூரியன், மைத்துனன். [லி.
பாமாரி-கந்தகம், பாமக்கினம், பாம்புகொல்
பாமாலை - ஒருவன் கீர்த்தியைப் புகழ்ந்து தொடுத்த பா. பதுமினி.
பாமினி - நால்வகைப் பெண்களுள் ஒருத்தி,
பாமுதல்வி-சரச்சுவதி, கான்முகன் இழத்தி.
பாமூஞர் - சோணாட்டு ஓர் ஊர்.
பாமை - அகங்காரி, காமி, சிரங்கு.
பாம் - பரந்த, பாவும்.
பாம்படம் - பாம்புப்படம், பை.
பாம்பணை - ஆதிசேடனைய படுக்கை.
பாம்பரணை - ஓரரணை, கூரரணை.
பாம்பாடி - திருமால். [செல்லுதல்.
பாம்பாட்டம்-சோலி, பாம்புபோல வளைந்து
பாம்பாட்டல் - தெளிந்தகரை பண்ணல், பாம்பையாடச் செய்தல்.
பாம்பாட்டி-அரவாட்டுவோன், கௌசிகன், பாம்பாட்டிச்சித்தன்.
பாம்பாட்டிச்சித்தர் - இவர் திருக்கோகர்ணத்தில் பிறந்த ஒரு சித்தர். இவர்காலம் நன்கு புலப்படாதாயினும் சமீபகாலத்தவரல்லரென்பதுளளிதிற்றுணியப்படும். இவர், "ஆடுபாம்பேயெழுந்தாடுபாம்பே" என்று பாம்பை முன்னிலையாகவைத்துப் பாடல் செய்திருக்கிறாராகையால் இவர்க்குப் பாம்பாட்டிச் சித்தரென்னும் பெயர் வழங்கிவருகின்றது. இவர்பாடல் கூத்தர் பாடல்போல் வெளியாயிருப்பினும் தத்துவார்த்தங்களின்மேலதாகியஅற்புத ஞானக் கருத்தை யுட்கொண்டுள்ளது. இவர் பாம்பென்று கூறுவது பாம்புருவாக மண்டலித்துக் கிடக்குங் குண்டலி சத்தியைக் குறிப்பதாம். அதை யெழுப்புதல் யோகிகளுக்கு அத்யாவசியமாதலால் அதனை யெழுப்புவாராயினர்.
பாம்பாட்டுதல் - பாம்பைப்படமெடுத்தாடும்படி செய்தல், கவ்டப்படுத்தல்.
பாம்பு - அரவு, ஆயிலியநான், கரை, வரம்பு, இராகு, கேது, ஆயிலியம். [லுகம்.
பாம்புகண்டசித்தன் - கரடி, உளியம், வல்
பாம்புகொல்லி-ஓர் விஷங்கொல்லிப்பூண்டு.
பாம்புக்கடி - பாம்பு தீண்டுதல்.
பாம்புக்கண்ணி-சங்கங்குப்பி,பீச்சுவினாத்தி
பாம்புக்கல் - பாம்பின் விஷத்தை இழுக்கும்
பாம்புக்கள்ளி - கள்ளிவகை. [கல்.
பாம்புக்காது-பாம்புச்செவி. [தச்சன், செல்.
பாம்புக்குத்தச்சன் - பாம்புக்கு மனைகட்டுங்
பாம்புச்சட்டை - பாம்பு கழற்றும் தோல்.
பாம்புச்செவி - கூர்மையான செவியுணர்ச்சி.
பாம்புண்பறவை - பாம்பையுண்ணும் புள், கருடன், உவணம், பருந்து, மயில்.
பாம்புணிக்கருங்கல் - ஒருவகைக் கல்.
பாம்புத்தச்சன் - பாம்புக்குத் தச்சன்.
பாம்புத்திண்ணி - முண்ணுயிர், தைத்த முள்ளை வெளியே கொண்டுவரும் விஷ மூலிகை வகை, பாம்புண் பறவை.
பாம்புமொச்சை - ஒரு பூண்டு.
பாம்புரி - அகழி, பாம்புச்சட்டை, பாம்பின் ரோல், மதிலின் புறத்தே உள்ள ஆளோடும்படி, ஆளோடி.
பாம்புரேசர்-திருப்பாம்புரத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
பாம்புவிரல் - நடுவிரல், மையவிரல்.
பாம்போடுவடலி - நீண்ட மட்டையுள்ள இளம் பனை.
பாய - பரப்பிய, பரவிய, தாவ, உகள, நீர் பாய, குதிக்க, பருத்த, பரக்க, பரவ. [டி.
பாயசம்-பால்,பாற்சோறு,பாற்சோற்றிச்செ
பாயமுகம் - வடவாக்கினி, வடவாமுகம்.
பாயம் - நீர், புணர்ச்சியைக்கருதுங் கருத்து, விருப்பமானது, பிரியமானது, இச்சை.
பாயலுணர்த்துதல் - துயிலெழுப்புதல்.
பாயல் - மக்கட்படுக்கை, படுக்கைவிரிப்பு, சயனம்.
பாயிகன் - காலாள், தரைப்படை, சேனை.
பாயிரம்-பொழிப்புரை, முகவுரை, வரலாறு.
பாயிழுத்தல் - தோணியிற்பாய்தூக்கிவிடல்.
பாயினன் / பாயினன் } பரப்பினன், முதிர்ந்தான்.
பாயு / பாயுரு } குதம், மலசலங்களை வெளியேற்றுவது, அது: கருமேந்திரிய மைந்தினொன்று. [பாயிழுத்தல்.
பாயெடுத்தல் - பாய்விரித்தல், கப்பலுக்குப்
பாய் - களப்பாய்முதலியன, கூறைப்பாய், பாயல், பாயென்னேவல், கோரைப்பாய், பரப்பி, கப்பற்பாய்.
பாய்க்கோரை - ஓர் புல், கோரைப்புல். [ல்.
பாய்ச்சல்-கீழ்ப்படியாமை, பாய்தல், தாவுத
பாய்ச்சல்காட்டுதல் - பாயும்படி ஏவுதல்.
பாய்ச்சல்விடுதல்-குதிரை முதலியவற்றைப் பாயவிடல், கிடாய்ச் சண்டை, சவால் சண்டை விடுதல், சண்டை மூட்டுதல்.

பாய்ச்சான்போடுதல் - இருவர்கூடியோருலக்கையை மாறியோச்சல், நெற்குத்துதல்.

பாய்ச்சி, பாய்ச்சிகை } சொக்கட்டான் முதலியவற்றின் கவறு, தாயக்கருவி.

பாய்ச்சு - பாய்ச்சென்னேவல், பிளாச்சு.

பாய்ச்சுதல் - உட்செலுத்துதல், பாயச்செய்தல். [லக்கை.

பாய்ச்சுலக்கை-பாய்ச்சாணுலக்கை, மாற்று

பாய்ச்சுவலே - மீன் பிடித்தற்காக வலேவீசுதல், வீசுவலே.

பாய்ச்சை - தந்துப்பூச்சி, தத்துவண்டினம்.

பாய்தல்-உருவுதல், ஓடல், குதித்தல், தாண்டல், நீர்முதலிய பாய்தல், பரம்புதல்,பறக்குதல், பறிதல், மூட்டல், எவ்வுதல், தவ்வுதல். [பாய்விரித்தல்.

பாய்தூக்கல் - கப்பற் பாயெடுத்துயர்த்தல்,

பாய்த்தல் - பாய்ச்சுதல், பரப்புதல்.

பாய்த்து - பாய்ச்சல், பாய்த்தென்னேவல்.

பாய்த்துதல் - பாய்ச்சுதல்.

பாய்த்துள் - பாய்தல், தாவுதல். [குமரம்.

பாய்மரம் - கப்பல்முதலியவற்றின் பாய்தூக்

பாய்மா - குதிரை, புலி, விலங்கு.

பாய்மாறுதல் - தோணியிற் பாயை மறுபுறமாக்கிவிடல்.

பாய்வலித்தல் - கப்பற்பா யிழுத்தல்.

பாய்வாங்கல் - பாய்விழுத்துதல்.

பாய்விரி - பகிரிக்கீரை.

பாய்விழுத்துதல் - பாய் இறக்குதல் நங்கூரம் போடுதல், பாய்வாங்கல். [ஞன்று.

பாரகஸ்பத்தியம் - தர்மநூல் பதினெட்டி

பாரகம் - கடக்குதல், திரைச்சீலே, தோணி, நீர்தல், பூமி, பிரத்தியட்சமான பிரபஞ்சம். [யகர்.

பாரகர் - கரைபிடித்தவர், தாங்குவோர், நா

பாரகன் - பாரங்கதன், சுமப்போன்.

பாரக்கண்டை, பாரக்கற்றலே } ஓர்வகைக் கெண்டை மீன், ஓர்வகை மீன்.

பாரகாவியம் - பெருங்காப்பியம், மனிதருமங்கூறும் நூல்.

பாரங்கம் - இலவங்கப்பட்டை.

பாரங்கதன் - கல்வியிற் கரைகண்டவன், பாரங்கததரன்.

பாரங்கி - பாரங்கு, சிறுதேக்கு.

பாரங்கு - காட்டுப்பருத்தி, சிறுதேக்கு, பாரத்துவாசி, காட்டிலவு, நரிவாழை மரம்.

பாரசவம் - ஆயுதப்பொது, படைக்கருவி.

பாரசவன் - பார்ப்பானுக்குச் சூத்திரச்சி பெற்றபின்னே, வேசிபின்னே,தாசிபின்னே.

பாரசிகர் - பாரசிகசாதியார், பார்சிகள்.

பாரசிகை - பருத்து, சேனம், பாறு, கங்கம்.

பாரசீகம் - பாரசீகதேசம், பரசீகதேசத்துக் குதிரை, பாரசீகத்துப் பொருள். [ன்.

பாரசுவதன் - மழுவேந்தி, மழுப்படையோ

பாரசுவயம் - பொன், காஞ்சனம், தேசிகம், கனகம்.

பாரசுவன் - தேவி பூஜை செய்பவன்.

பாரசூரம் - ஓர் ஊர். [அகாலமரணம்.

பாரச்சாவு - வயதுமுதிர்ந்தோரின் மரணம்

பாரச்சுமை - வலுச்சுமை, கனத்தசுமை.

பாரஞ்சுமத்துதல் - பாரமேற்றுதல்.

பாரணம், பாரணை } உண்டல், உபவாசமிருந்துண்ணல், திருத்திசெய்தல், முகில்.

பாரதகண்டம்-நவகண்டத்தொன்று,பரதம்.

பாரதசம்பு - அநந்தபட்டர் என்னும் அந்தணர் செய்தவொரு ஸம்ஸ்க்ருத காவியம்.

பாரதந்திரியம் - பராதீநம், பிறன்வசமாகை.

பாரதப்போர் - பாண்டவ கௌரவர் யுத்தம், உலக வாழ்வும், முடிவும்.

பாரதம்-இந்தியாதேசம், பாரதப்போர்,மகாபாரதம், மிக விரிவான செய்தி, இரதம், ஐந்தாம்வேதம், பாரதவருடம், பாதரசம், பரதவமிசத்தரசர்கள் சரித்திரம், இது இதிகாசமெனப்படும். இது சிருஷ்டியாதிகளின் வரலாற்றையும், தருமநூல் உபநிடதப்பொருள் முதலியவற்றையும் அடக்கிக் கூறுவது. இது வியாசர் சொல்ல, விநாயகர் மேருமலேயை ஏடாகவும், தமதுகொம்பை யெழுத்தாணியாகவுங்கொண்டெழுதப்பட்டது. இது லக்ஷத்தையாயிரங் கிரந்தமுடையது. இதனைத் தமிழ் வெண்பாவாற் பாடினவர் பெருந்தேவனார். இது பாடின காரணம் பற்றி இவரைப்'பாரதம்பாடியபெருந்தேவனார்' என்பர். இதை விருத்தப்பாவாற் பாடினவர் வில்லிபுத்தூரார். அதன்பிறகு இதனே எண்ணூயிரம் பாக்களே யிடையிட்டு, விரித்துப் பாடினவர் நல்லாப்பின்னே. (மற்றவை பாண்டவரிற் காண்க.)

பாரதம்பாடியபெருந்தேவனார்- இவர் பாரத கதையைத் தமிழிலே உரையிடையிட்ட பாட்டைச் செய்யுளாக இயற்றிய ஆசிரியர். இவர் சாதியில் வேளாளர். இவர்நாடு தொண்டைநாடு. நற்றிணே, கலித்தொகை, புறநானூறுமுதலிய நூல்களிலுள்ள கடவுள்வாழ்த்துக்களும் இவரால் பாடப்பட்டனவே. கடைச்சங்கப் புலவர்களுள்ளே பெயர் படைத்தவர்களிலிவருமொருவர். இவர் சைவசமயத்தினர் என்பது

புறநானூற்றுக்குக் கடவுள் வாழ்த்தாக இவர் செய்த "கண்ணி கார்நறுங் கொன்றை காமர்,வண்ணமார்பிற் ருருங்கொன்றை, ஊர்வதி வாய்வென்ளேறே சிறந்த, சீர்கெழுகொடியு மவ்வேறென்ப, கறை மிட றணியலு மணிந்தன் றக்கறை,மறை நவி லந்தணர் நூவலவும் படுமே, பெண் ணுருவொருதிறனுகின் றவ்வுருத், தன்னு ளடக்கிக் காக்கினுங் காக்கும், பிறை நு தல் வண்ணமாகின்றப்பிறை, பதினெண் கணனுமேத்தவும்படுமே, எல்லாவுயிர்க்கு மேம மாகிய, நீரற வறியாக் கரகத்துத், தாழ்சடைப் பொலிந்தவருந்தவத் தோர்க் கே" என்பது, இச்செய்யுளிலே சிவபெரு மானுக்குரிய பூவும், மாலையும், வாகனமும், கொடியும்,அவர் நஞ்சுண்டருளிய பெருங் கருணையும், ஆன்மாக்களின் பொருட்டுக் கொண்டருளிய வடிவும், தலையிலே கங் கையையும், சந்திரனையு மணிந்தமையும், அவர் எல்லா வுயிர்க்குங் காவல் பூண்ட மையும் எடுத்தோதப்பட்டன. இச்செய் யுளிலே"பெண்ணுரு வொரு திற னுகின் றவ்வுருத் தன்னுளடக்கிக் காக்கினுங் காக்கும்" என வரும் அடிகளால் சிருஷ் டியின் பொருட்டுத் தமது சத்தியை ஒரு பாலாகத் தோற்றுவித்துப் பின்னர் உல கையொடுக்குங் காலத்திலே தமது சத்தி யைத் தம்முள்ளே மறைத்துக்கொள்வர் என்பது தோன்றநிற்றலின், இவர் சைவ சமயத் துள்ளுறை பொருளெல்லாம் நன்குணர்ந்தவரென்பது துணியக் கிடக் கின்றது. இவர் மதுரைச் சங்கத்திறுதிக் காலத்திலே யிருந்த புலவர்களுள்ளே மிக முதியவர்.

பாரதர் - குலவேந்தர், பரதவம்சத்தார்.

பாரதவருடம்-பரதகண்டம், பாரதவருஷம்.

பாரதவெண்பா-பெருந்தேவனாரால் பெரும் பாலும் வெண்பாவாற் பாடப்பட்ட நூல்.

பாரதன் - குருகுலவேந்தரிலொருவன், கூத் தாடி, தீ, பரதசம்பந்தமுடையவன்.

பாரதாயண - பாரத்துவாசகோத்திரத்தான்.

பாரதாரிகம் - பாரதாரியம், வியபிசாரம்.

பாரதாரிகன் - வியசாரன், பிறர்மனைவிழை வோன்.

பாரதாரியம்-வியசாரம்,பிறர்மனைவிழைகை

பாரதி-சரசுவதி,சொல், மரக்கலம், பைரவி, பண்டிதன், பாட்டிற் பிரியமுடையவன்.

பாரதிகொழுநன் - பிரமன், நான்முகன்.

பாரதிக்கை - நடனவகையி லொன்று.

பாரதிதீபம்-தென்கடம்பை நகரத்துத் திரு வேங்கடபாரதி யென்பவர் கட்டளைக் கலித்துறையிற் செய்த நிகண்டுநூல்.

பாரதிபூசை - சரசுவதிபூசை, சாரதாபூசை.

பாரதியரங்கம் - சுடலை, சுடுகாடு, கலையர ங்கம்.

பாரதியிலம் - கோயில்களில் பாரதம் படித் தற்கு நியமிக்கப்பட்ட இலம்.

பாரதூரம்- மிகப்பெரியது, வெகுதூரத்தது.

பாரதேசிகன்.அன்னியன், பரதேசி, பிறன்.

பாரத்தனம் - பெருமிதம், பெருந்தன்மை.

பாரத்துவாசம்-எலும்பு, கருக்குருவி, காடை, வலியான், கற்பநூலொன்று.

பாரத்துவாசன்-பரத்துவாசன், அகத்தியன், துரோணாசாரியன், ஒரு முனிவர்.

பாரத்துவாசி-துரோணாசாரி, பாரத்துவாச கோத்திரத்தான். [காரியம்.

பாரத்தொந்தரை - தொந்தரையிக்க பெருங்

பாரந்தாங்குதல் - பாரஞ்சுமத்தல், பாரமேற் றல், குடும்பத்தை நிருவகித்தல்.

பாரபட்சம் - ஓரவாரம், பட்சபாதம்.

பாரபத்தியக்காரன்-அதிகாரி, உத்தியோகத் தன், பொறுப்பான வேலையுள்ளவன்.

பாரபத்தியம் - அதிகாரம், மேல்விசாரணை, பொறுப்புமிக்கவேலை, பரபத்தியம்.

பாரப்படுதல்-பாரமாதல்,பொறுப்புமிகுதல், பெருந்தூரம், மூக்கியமானது, ஆழ்ந்த மூன்யோசனை,சுமைமிகுதல்,நியாயசபை யில் விசாரணைக்கு வைக்கப்படுதல்.

பாரப்படுத்தல்-பருப்பித்தல், பாரமாக்குதல்.

பாரப்பட்டகாரியம்-பெரியவிஷயம், பெரும் படியான தொழில். [கொடியகுற்றம்.

பாரப்பழி - மிகு குற்றம், பெருங்குற்றம்,

பாரப்புரளி-பெரும்பொய், பெருங்குரும்பு.

பாரமா - மாமரம், பெரிய மிருகம்.

பாரமார்த்திகம்-மூடிவில் உண்மையானது, உண்மை ஞானத்துக்குரியது, கபடமற்ற தன்மை, ஈடுபாடு. [அனுதி.

பாரமார்த்திகன்-பாரமார்த்தியக்தன், பிரமம்,

பாரமிதம்-மேலானது,உயர்ந்தது,நயமானது

பாரமிதை - தசபாரமிதை. அவை தானம், சீலம், பொறுமை, வீரம், தியாகம், உணர்ச்சி, உபாயம், தயை, வலிமை, ஞானம், என்பன பூரித்தல்.

பாரமுகாக்கியம் - சிவனேம முகப்பூசை, கடவுட்பூசை யியல்பினொன்று. [ன்று.

பாரமேச்சுரம் - சிவாகமமிருபத்தெட்டினொ

பாரமேட்டி } ஒருவகைச் சக்கியாதி,
பாரமேஷ்டி } பிரமன்.

பாரம்-இரதம், ஓர்வீணையாட்டு, கடமை, கரைப்பொது, கவசம், கனம், காவுதடி, குதிரைச்சேணம், சுமை, துலாமிருபத்தெட்டுக் கொண்டது; அஃது: இரண்டாயிரம் பலங்கொண்டது, தோணி, நிறை, நீர்க்கரை, பருத்திப்பூ, பூமி, பொறுப்பு, பொறுமை, முடிவு, வரம்பு, பொறுக்கை, பெருங்குடும்பம், கொடுமை, சுரம் முதலியவற்றால் உண்டாகும் தலைக்கனம், பெருமை, ஒப்புவிக்கை, பாதாசம், உடம்பு.

பாரம்பரம் } ஐதிகம், கிரமங்கிரமமாய்
பாரம்பரியம் } வருவது, பரம்பரை,
பாரம்பரை } முறைமை. [நோய்.

பாரம்பரியரோகம் - வமிசவழியாய் வரும்

பாரம்பரையியாயம் - கிரமங்கிரமமாய் வரு முறைமை, பாரம்பரியநியாயம், பரம்பரையாகவரும் வழக்கம், சாதிவழக்கம்.

பாரலௌகிகம் - பாயசம், தித்தித்தபானம்.

பாரவதம் - புறுப்பொது, பாராவதம்.

பாரவம் - வில்லின்நாண். [பொதிமாடு.

பாரவாகனம் - சுமையெடுக்கும் வாகனம், பாரவாகனன் - காக்காரன், சுமைகாரன்.

பாரவி-இவர் 'கிராதார்ஜுநீயம்' என்னும் நூல் செய்தவொரு ஸம்ஸ்கிருதகவி.

பாரவிருதம்-பேருதவி, பலி. [மகன் பேன்.

பாரன் - பிருதுசேநன் புத்திரன், இவன்

பாரா - பாதாசம், காவல், பாகம், புத்தகம் முதலியவற்றிற் பிரிவு, பிரிவாகக் காட்டி எழுதப்படும் கட்டுரைப் பகுதி.

பாராகலம் - பன்னிரண்டு பெரிய மரக்கால் கொண்ட கலவளவு.

பாராகம்-உபடகிதமுப்பத்திரண்டிலொன்று

பாராக்காரன்-காவலான், வாயில்காப்போன்

பாராசரம் } ஒருபுராணம், ஓர்தருமசா
பாராசரியம் } ஸ்திரம், பராசரம். [பவன்.

பாராசரியகற்பிகன்-பாராசரனூற்படி நடப்

பாராசரியன் - பாராசரி, வியாசன்.

பாராசாரி - சுக்கிரன், அரபிதேசக்குதிரை, வியாசன், பராசரன் புதல்வன், பாரிக்குதிரை, தேசிங்கு அரசன் குதிரை.

பாராட்டல் - மெச்சுதல், தூற்றல்.

பாராட்டு - கொண்டாட்டம், பாராட்டென்னேவல், புகழ்ச்சி, விரித்துரைக்கை, ஆடம்பரச்செயல்.

பாராட்டுக்காரன் - புகழ்வோன், ஆடம்பரமுள்ளவன், புனைந்துகூறுவோன்.

பாராட்டுதல் - உபசரித்தல், உரிமைபாவித்தல், புகழ்தல், கொண்டாடுதல், பலகாலுஞ்சொல்லுதல், விரித்துரைத்தல், மனதில்வைத்தல். [த்தி, ஈன்றதாய்.

பாராட்டுந்தாய் - ஐவகைத் தாயாரிலொரு

பாராட்டுப்பண்ணுதல்-புகழ்தல், ஏற்றுதல்.

பாராட்டுப்பேசுதல் - பெருமை கூறல்.

பாராதூரம் - பாரதூரம், தொலைதூரம்.

பாராத்தியம் - துன்பம், வருத்தம்.

பாராயணப்பத்திரம் - மாணாக்கர்க் குபாத்தியாயர்கொடுக்குமுறுதி, பாடச்சுருக்கம்.

பாராயணம்-நடந்துபோதல், முற்றுற முடித்தல், பாடம் பண்ணல்.

பாராயணர்-நியமமாய்க்கற்போர், பார்ப்பார்

பாராயணன்-நியமமாக ஓதுவோன், ஒன்றனேக்குறிக்கொள்வோன். [ஓதுபவ-ன்-ன்.

பாராயணி - சரச்சுவதி, சரசுவதி, நியமமாக

பாராயணிகன் - கற்போன், படிப்போன்.

பாராருகம்-மலை, பாறை, பருவதம், வெற்பு.

பாரார் - பகைவர், பூவுலகத்தார்.

பாராவதம் - கருங்காலி, கரும்புரு, குரங்கு, புறுப்பொது, மலை, விலங்கல், ஒங்கல்.

பாராவபாத்-மகம்மதுநபியின் மரணதினத்தைக் கொண்டாடும் விழா.

பாராவலயம் - பாராவளையம், சமுத்திரம்.

பாராவளையம் } வளைதடி, பூண்கட்டிய
பாராவளையம் } தடி. [திரம்.

பாராவாரம்-கடல், கடற்றிரை, கரை, சமுத்

பாராவாரீணன் - இருபக்கஞ்சாய்ந்தவன்.

பாரி - இராக்காவல், ஓளவு, கட்டில், கள்குடிக்கும் பாத்திரம், கோட்டம், சிங்கம், சிறங்கைநீர், நல்லாடை, பாரியென்னேவல், பூந்தாது, பூமி, பெரியோன், மனைவி, யானைகட்டுங்கயிறு, கடல், வெண்கோவிடம், பருத்தது, முக்கியமானது, கனவான், கொட்டு முழக்குடன் புரியும் இராக்காவல், இராக்காவலாளர்பாடல்(2) கடையெழுவள்ளலிலொருவன், இவன் பறம்பு என்னு மூரிலிருந்தவொரு சிற்றரசன். இவன் கொடையாற் சிறந்தோனுதலால்வள்ளல்களில் ஒருவனுனான். இவன் கொடைச்சிறப்பு நோக்கிக் கொடையாளரைப் புகழ்வோரெல்லோரும் பாரியேயென்று புகழ்வார்கள். சுந்தரமூர்த்திநாயனரும் இவனது வள்ளற்றன்மையைக் கேள்வியுற்றே இவனைக் கொடைக்கிலக்கியமாகக்கூறியது, "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினும்" என்னுந் திருப்புகலூர்ப்பதிகத்துத் தேவாரத்தாற் பெறப்படும். இவன் தன் காலத்திலிருந்த சோசோழபாண்டியர்களுடைய கீர்த்திப் பிரகாசத்தை யெல்லாம் தன்கொடைக்

சீர்த்திப்பிரகாசத்தால்மழுங்குவித்தவன். அதுகண்டு அவ்வேந்தர் மூவரும் போர் தொடுத்து இவனைக் கொன்றொழித்தார் கள். இவனோடு இவன் சுற்றத்தாரும் போரில் மடிந்தொழிய, இவனை யடுத்து வாழ்ந்திருந்த புலவர்களும் நிலைகுலைந் தொழிந்தார்கள். இவனுடையபுத்திரிகள் தம்மைக் காப்பவரொருவருமின்றிக் கபி லரையடைய, அவர் தாம் பாரியிடத்துப் பெற்ற நன்றியை மறவாது அவர்களை வளர்த்துக் கோமக்களுக்கு மணம்பொரு த்த முயன்றும் பயனபடாமையால் அந் தணர்களுக்கு மணமுடித்துக் கொடுத் தார். கபிலர் என்பவர் கடைச்சங்கப் புலவரு ளொருவர். [திரம்.

பாரிகத்து - நுண்மை, பாரீகத்து, பாகபத்
பாரிகன் - காக்காரன், தோட்சுமைகாரன்.
பாரிகாரிகன்-மாலைக்காரன், மாலைதொடுப் போன். [வேலை.
பாரிகாரியம் - கடையம், பிடித்தல், முக்கிய
பாரிக்கிதன் - பாரிக்கிருது, வசீகரக்காரன்.
பாரிக்கை - பாரிப்பு, அதிகரிப்பு, பருமன்.
பாரிசகிரகணம் } பார்சுவகிரகணம், பக்கக்
பாரிசகிரணம் } கிரணம், துணைக்கிரணம்.
பாரிசூலை - பக்கவாதம், பாரிசவாயு.
பாரிசஞ்செய்தல் - பொறுப்பாக்குதல்.
பாரிசநோ } ஓர்நோய், பாரிசச்சூலை, பாரி
பாரிசநோய் } சவாய்வு.
பாரிசம் - ஓர்மலை, திசை, பக்கம், உடலின் ஒருபக்கம், வசம். [தல்.
பிணவு - நகரிமா, நாய், பன்றி, புல்வாய் இவற்றின்பெண், பெண்பொது, விலங்கின் பெண், பிணை.
பிணவெடில் - பிணநாற்றம். [பொது.
பிணை - பிணவு, விலங்கின்பொது, பெண்
பிணரம் - பெரிய சடலமுள்ளது, தூலதேகி.
பிணி- தறியின்ஊடைநூலேப்பிணிக்கும்நூற்படை, பற்று, அரும்பு, ஓர்பிசாசம், கட்டு, துன்பம், நோய். பிணியென்னேவல், பொருள்பற்றிப்பிணிப்பி, முறுக்குமூட்டு, பற்று, பெட்பு, பிணை. [கை.
பிணிகை - முலைக்கச்சு, மார்க்கச்சை, இரவிக்
பிணிக்குலம் - நோய்த்திரள்.
பிணிக்குறை - பேய்க்குறை, கவந்தம்.
பிணிதெறித்தல்-பிணிநீக்கல், நோய்விலகல்.
பிணித்தல் - சேர்த்துக்கட்டல், வசப்படுதல்.
பிணித்திரள் - நோய்க்குலம்.
பிணித்தோர்-பிணிப்பட்டார், நோயாளிகள்.
பிணிப்பு - கட்டு, கட்டுகை, பற்று.
பிணிப்பேய்-பிள்ளைநோய்செய்யும்பேய்.
பிணிமார்-பிணியாளர், சேர்த்தற்கு, கட்டிப்பொருட்டு.

பிணிமித்தல் - செவுபாவை மிதித்தல்.
பிணிமுகத்திரை - கருடன்.
பிணிமுகம்-அன்னம், பறவைப்பொது, மயில், முருகற்குரிய யானை. [ச்சாலை.
பிணியகம்-காவலிடம், காவற்கூடம், சிறை
பிணியன் / பிணியானன் / பிணியாளி } நோயாளன், நோயாளி, வியாதியஸ்தன், ரோகி.
பிணியுறீஇ-கட்டுப்பட்டு.
பிணியுறுத்தல் - கட்டுதல், கட்டுவித்தல்.
பிணியோலை - பிணிக்குறைக்குக்கட்டுமட்சாரவோலை.
பிணிவு - பிணிப்பு, பிணித்தல்.
பிணிவீடு - இடையூறுநீங்குகை. [வன்.
பிணுக்கன் - மாறுபட்ட கொள்கையுடைய
பிணை-ஆசை, உடன்பாடு, உத்தரவாதம், ஒட்டகம், கவரிமா, கழுதை, குதிரை, நாய், பன்றி, புல்வாய், யானை யிவற்றின்பெண், கட்டு, பிணையெனனேவல், பூமாலை, மான், பெட்பு, பேணுதல், மரக்கூட்டம், பிணிப்பு, பற்று, பிணை.
பிணை இ - சேர்த்து.
பிணைகாரன் / பிணைக்காரன் } பிணைப்பட்டவன்.
பிணைச்சீட்டு - உத்தரவாதப்பத்திரம்.
பிணைச்சு-புணர்ச்சி, பிணைப்பு, இணைத்தல்.
பிணைதல்-இணைத்தல், கலத்தல், சேர்தல், செறிதல், புணர்தல், இணைதல்.
பிணைத்தல்-இணைத்தல், கட்டல், பிணைச்சு.
பிணைபடுதல் / பிணைப்படுதல் } இறுக்க உத்தரவாதியாயுப்படல், கட்டுப்பாட்டிற்குள்ளாதல், பொறுப்பேற்றுக்கொள்ளல்.
பிணைப்பு - இணைப்பு, சேர்க்கை.
பிணைய - தழுவ.
பிணையடித்தல் - புணையடித்தல், புணையலடித்தல்.
பிணையல் - இரணை, கதவுமுதலியவற்றிலிடுமிணைப்புச்சலாகை, தொடுவை, பின்னியமாலை, மாலை, இரட்டைக்கை, புணர்ச்சி.
பிணையாளன் / பிணையாளி } உத்தரவாதத்திற்குட்பட்டவன், பிணைக்காரன்.
பிணையூ - கைகோத்து.
பிணைவு - இணைவு, புணர்ச்சி, கூடுகை.
பிண்டகம - நறுந்தூபம், வாசனைப்புகை.
பிண்டகருமம் - பிதிர்பூசை, பிதிராசாரம்.
பிண்டகன் - பிதிர்களுக்குப் பிண்டமிடுவோன். [துதல்.
பிண்டகாப்பு-சோறு, தெண்டச்சோறுபோ
பிண்டகோசம் - வாசனைப்பிசின்.
பிண்டகை - ஐவகைக் கஸ்தூரியுள் ஒன்று.
பிண்டக்காப்பு - சோறு, தெண்டச்சோறு.
பிண்டங்கரைதல் - கருவழிதல்.
பிண்டசன் - யாசகம், பிச்சைக்காரன்.
பிண்டசூத்திரம்-தலைமைப்பொருளைப் பொதுபடக் கூறும் சூத்திரம்.
பிண்டதன்-உபகாரி, கிட்டினவுறவன், தாபரிப்போன், பிதிர்பிண்டமிடுவோன், தாயாதி. [தானம்.
பிண்டதானம் - பிண்டமிடுதல், பிண்டப்பிர
பிண்டபாதம் - யானை, யானைக்கால்.
பிண்டபுட்பம் - அசோகு, செவ்வந்தி.
பிண்டப்பிரசாதம்-பிதிருணவு. [பிண்டபலி.
பிண்டபபிரதானம் - பிதிர்களுக்கு இடும்
பிண்டப்புறனடை-புறனடைகளிலொன்று.
பிண்டப்பொருள் - குவிக்கப்பட்டபொருள், சடப்பொருள், தொகுக்கப்பட்டபொருள், கருத்து. [கருத்துரை.
பிண்டப்பொழிப்பு-பிண்டவுரை, பாடலின்
பிண்டம்-இரும்பு, உடல், உண்டை, கந்தவருக்கம், கருப்பம், கவளம், கற்கண்டு, கால்வட்டத்திருபத்துநான்கிலொன்று, கூட்டம், சிவன், செவ்வந்தி, சோறு, தொகை, பிச்சை, பெலன், போசனம், மாமிசம், மூலபதம், விலா, வெண்ணெய். விளாங்கனிப் பிரமாணமாகப் பிதிர்தேவதைகளுக்கு இடப்படும் பலி, குவியல், மனை, எண்வகைசச்சதொன்று, சோற்றுற்றிரள்.
பிண்டம்பிடித்தல்-உண்டையாக்குதல், கருவுண்டாதல். [பச்சிலைதவ.
பிண்டம்விழுதல் - கருப்பம்விழுதல், கருப்
பிண்டரோபணம் - நாரத்தை, கிச்சிலி.
பிண்டலம் - அரணை, பாலம், பிண்டனம்.
பிண்டவுரை-பாடலின்பொழிப்புரை, பிண்டப்பொழிப்பு. [பிதிர்ப்பலியிடல்.
பிண்டம்வைத்தல் - பிதிர்க்கடன் செய்தல்,
பிண்டனம் - பிண்டலம், வாராவதி.
பிண்டன் . நன்னனால் வெல்லப்பட்ட தலைவன்.
பிண்டாகமூலம் - தாமரைவளையம்.
பிண்டாசன் - யாசகன், பிச்சைக்காரன்.
பிண்டாண்டம் - பிண்டமும் அண்டமும்.
பிண்டாப்பிரம் - ஆலங்கட்டி, பனிக்கட்டி.
பிண்டாயசம் - உருக்கு, உருவடை, பாதபிண்டம். [துவாரகாபுரிசமீபத்துள்ளது.
பிண்டாரம்-ஒருபுண்ணிய க்ஷேத்திரம், இது
பிண்டாரன் - இடையன், யாசகன்.

பிண்டாரி - பூர்வ கொள்ளைக்காரர்.
பிண்டி - அசோகமரம், குவிக்கப்பட்டது, இணையா வினைக்கைவகை, கூட்டம், சில்லினுட்சுருள், தினைமா, தொகுக்கப்பட்டது, நெல்மா, பிண்டியென்னேவல், பிண்ணாக்கு, புனர்பூசம், ஒற்றைக்கை, பொருட்கை, வடிவம்.
பிண்டிகன் - துரை, செம்பஞ்சின்திரட்சி.
பிண்டிகரணம் - பிண்டீகரணம், உண்டை செய்தல்.
பிண்டிகை-ஆசனம், சில்லினுட்சுருள், வாய்க்குட்செலுத்தும் கடிவாளப்பகுதி.
பிண்டிதகம் / பிண்டிதம் } மருக்காரை, சிறுமரவகை, காரைச்செடிவகை.
பிண்டித்தல் - குவித்தல், தொகுத்தல், திரளல், திரட்டுதல்.
பிண்டிபாலம் - எறியாயுதவகை, பிண்டிவாலம், கையாலெறியும்ஒருவகைத்தண்டு.
பிண்டிப்பகவன் - அருகன், பகவன்.
பிண்டியார் - சைனர், சமணர், முண்டிதர்.
பிண்டியான் - அருகக்கடவுள், பிதா.
பிண்டிலம் - பாலம், வாராவதி.
பிண்டிலன்-சாதககணிதன், சோசியக்காரன்
பிண்டிவாகனம் - குந்துருக்கம்.
பிண்டிவாலம் - பிண்டிபாலம், எறியீட்டி.
பிண்டிவாளம் - பறவைச்சாம்பிராணி.
பிண்டீகரணம் / பிண்டீகரம் } உண்டையாக்கல், திரட்டுதல், தொகுப்பு.
பிண்டீதகம் - மருக்கொழுந்து, தமனகம்.
பிண்டீரம் - சாரமின்மை, மாதவீ.
பிண்டீரி - வல்லாரைக்கீரை.
பிண்டோதகம் - பிதிரருக்கிடும் பிண்டபலியுடன் எள்ளுங்கலந்து நீர்விடும் கிரியை.
பிண்ணாக்கு - எள், இலுப்பைவித்து முதலியவறறில் எண்ணெய்க்கியசக்கை, பலலம், பின்னாக்கு. [மருந்துப்பூடு.
பிண்ணாக்குக்கீரை - பிண்ணாக்குப்பூடு, ஓர்
பிண்ணாக்குப்பூண்டு - தவசுமுருங்கை.
பிண்ணாக்குமாடன் / பிண்ணாக்குமூடன் } மதிகேடன், முழுமூடன்.
பிதகம்-இடி, வெடி, அசனி, இருளி. [போதல்.
பிதரம் - பிளத்தல், துளைத்தல், அறுத்தல்,
பிதலை - எண்ணெய்ப்பாத்திரம், பிதிலி.
பிதற்றல்-அவசத்தால் விடாதுபேசல், அறிவின்றிக் குழறுதல். [மழலை, பைத்தியம்.
பிதற்று - பிதற்றல், பிதற்றென்னேவல்,
பிதற்றுதல்-பிதற்றல், பலகாற்பேசல், ஒன்றினைப்பற்றிக்கொண்டு விடாதுபேசுதல்.
பிதா - அருகன், கடவுள், வெள், தந்தை, பிரமன், பெருநாரை. [மார்கள்.
பிதாக்கள் - கிறிஸ்தவ குருமார்கள், பாதிரி
பிதாநம் - யானைமேற்கவசம், மீக்கோள்.
பிதாபிதா / பிதாமகன் } தகப்பனுக்குத்தகப்பன், தந்தையைப்பெற்றபாட்டன், பிரமன்
பிதாமகி - தந்தையைப்பெற்றவள், பாட்டி.
பிதாமகை - பாற்பசு, சுவை, கறவைப்பசு.
பிதி - பிதகம், இடி, மடங்கல்.
பிதிகம் - பெருங்குரும்பை, சிறுசெடிவகை.
பிதிரம் - பிதி, பிது, பிதா, பெருமை.
பிதிராசாரம் - பிதிர்பூசை, மூதாதையரின் ஒழுக்கமுறை, பரம்பரைவழக்கம்.
பிதிராட்சணை / பிதிரார்ச்சிதம் } மூதுசொம், பூர்வசொத்து, பிதிரார்ச்சனை, தந்தைவழி முன்னோர் தேடிய பொருள்.
பிதிருலகம்-பிதிர்தேவதைகள் வாழுமிடம்.
பிதிரெக்கியம் - பிதிர்யாகம், திவசம்.
பிதிர்-மகரந்தம், பொடி, தண்டம், பொறி, விந்துகதை, சேறு, இறந்தபெற்றோர்முதலியோரின் ஆன்மா, கதை, காலதூட்பம், தந்தைவழியின் மூதாக்கள், திவலை, நொடி, பராகம், பிதா, பிதிரென்னேவல், போர்க்கை, யாகம் ஐந்தினொன்று, தண்டம், கைந்நொடி, அதிசயச்செயல்.
பிதிர்கடன் / பிதிர்கருமம் } சிராத்தமுதலிய தென்புலத்தோர்கடன், இறந்தஇனத்தாருக்குச் செய்யும் கருமம்.
பிதிர்கணப்பிறப்பு-பிதிர்லோகவாசிகள் பிறப்பையடைவதற்கு மீளும்போது, அவர்கள் சந்திரனைவிட்டு ஆகாசம், காற்று, புகை, மேகம், மழை, வித்து இவற்றின் வழியாக ஸ்திரீ புருஷர்களை யடைந்து பிறப்பார்கள்.
பிதிர்கணம் - அங்கிரசப் பிரசாபதிக்குச் சுவதையிடத்துப் பிறந்தவர்கள்; இவர்களே உலகத்துப் பிரஜாவிருத்திக்கு வித்தாயிருப்பவர்கள்; இவர்களேபிதிர்தேவதைகள்; வசுருத்திரர் ஆதித்தியர் என்னுமிவர்களுடைய ரூபங்களை யுடையராய்ச் சந்திரலோகத்திருப்பவர்கள்.
பிதிர்காதகம் - பிதாவைக்கொல்லுகை.
பிதிர்காரியம் - பிதிர்க்கடன், பிதிர்கருமம்.
பிதிர்காலம்-சிராத்த புண்ணியகாலம்; அஃது: பதினெண்ணாழிகை தொடங்கி யிருபத்துநாலுநாழிகைகாலஎல்லையுடையது.
பிதிர்காணனம் - மயானம், பிதிர்க்கிருகம்.
பிதிர்கிரியை - பிதிர்கருமம், பிதிர்க்கடன்.
பிதிர்குலியை - மலயத்திலுற்பத்தியாகு மொரு நதி.

பிதிர்க்காதகம் - பிதாக்கொலை.
பிதிர்க்கிரகம் - சுடுகாடு, பிதிர்க்காணனம்.
பிதிர்சனம் - மூற்பிதாக்கள், மூதாதையர்.
பிதிர்சாமான்னியர் - மூற்பிதாக்கள்.
பிதிர்சிராத்தம் - இறந்த மூன்னோரைக்குறித்து வருடந்தோறும் இறந்த திதியிற் செய்யும் சிராத்தம். [மாமி.
பிதிர்சுசிரு - பிதாவின் சதோதரி, அத்தை,
பிதிர்ச்சந்ததி - பிதிர்வழி, தாயத்தார்.
பிதிர்தருப்பணம் - சுட்டுவிரலடி, பிதிர்பலி.
பிதிர்தல்-உதிர்தல், சிதறல், சிழிதல், பரத்தல், மனங்கலங்குதல்.
பிதிர்தானம் - சிராத்த தானங்களிரெண்டு.
பிதிர்திதி - அமாவாசி, பிதிர்சிராத்தம்.
பிதிர்தினம் - பிதிர்நாள், சிராத்தநாள்.
பிதிர்தீர்த்தம் - கையை, கயை, கயா, பிதிர் கழிக்கும் புண்ணியதீர்த்தம்.
பிதிர்தேவர்-தென்புலத்தார்,பிதிர்தேவதை
பிதிர்தைவதம்-மகம்,பிதிர்யாகம். [படுத்தல்.
பிதிர்த்தல்-சொரிவித்தல், உதிர்த்தல், பயப்
பிதிர்த்துரோகம் - இறந்த பிதிர்க்களுக்கு விரோதஞ் செய்தல், பிதிர்கடமை செய்யாது விடல். [தந்தை போல்வது.
பிதிர்த்துவம்-பிதாத்துவம், பிதிர்த்தன்மை,
பிதிர்நான் - அமாவாசி, இறந்தோர்நான், மகநான்.
பிதிர்பதம் - தெற்கு, பிதிருலகம்.
பிதிர்பதி-நமன், பிதிர்கட்குச் செய்யவேண்டிய கடமை, யமன, சமன. [வர்க்கம்.
பிதிர்பந்து - பிதாவழிச்சுற்றம், பங்காளி
பிதிர்பாந்தவன் - பிதாவழிச்சுற்றத்தான்.
பிதிர்பிண்டம் - இறந்தோர்க்கிடுமமுது.
பிதிர்பிதிர்-பாட்டன,தந்தையின் தந்தை.
பிதிர்புண்ணியகாலம் - பிதிர்காலம்.
பிதிர்பூசை-பிதிர்கட்குச்செய்யும் பூசை,பிதிராசாரம்.
பிதிர்போசநம் } பிதிருணவு, பிண்டப்பிர
பிதிர்போசனம். } சாதம, சிராத்தபிண்டம்.
பிதிர்ப்பிரசு - பிதாவின்மாதா, மாலை வெளிச்சம்.
பிதிர்மந்திரம் - கோரி, பிரேதக்குழியின் மேல் கட்டப்படும் மண்டபம்.
பிதிர்மேதம் } சிராத்தம், பிதிர்களைக்
பிதிர்யஞ்ஞம் } குறித்துச் செய்யும் சமக் கடன, பிதிர்யாகம்.
பிதிர்யாணம் - புண்ணியஞ் செய்தோரின் ஆன்மா ஏறிச்செல்லும் விமானம்.
பிதிர்வசதி - பிதிர்வனம்,பிதிரர் வாழிடம்.
பிதிர்வசனம் - இறந்தோர் வாக்கு.
பிதிர்வர்க்கம் } தந்தைவழியினர், பிதா
பிதிர்வழி } வமிசத்தார்.
பிதிர்வனம் - சுடுகாடு, நன்காடு, புறங்காடு.
பிதிர்வனேசுரன் - வெபிரான்.
பிதிர்வாக்கியபரிபாலனம் - பிதிர் வசனத்தைப்போற்றி நடத்தல், தந்தைசொல் கடவாமல் நடத்தல். [வாக்கு.
பிதிர்வாக்கியம் - பிதிர்வசனம், பெரியோர்
பிதிர்விரதம் - பிதிர்கருமம், பிதுர்கன்மம்.
பிதிர்வு - பிதிர்தல், உதிர்தல், சிதறல்.
பிதிலி - பிதலை, எண்ணெய் வைப்பதற்குதவும் தோல் பாத்திரம்.
பிது - இடி, பிதிரம், பிதி. [தாமரை நிறம்.
பிதுகம் - நவமணிக்குற்றத்தொன்று, அது:
பிதுக்கம் - பிதுங்கல், உள்ளடங்காமல்வெளியில் புறப்படல்.
பிதுக்கல் } பிதுங்கச் செய்தல்.
பிதுக்குதல் }
பிதுங்கல் } உள்ளடங்காமற் புறப்படல்,
பிதுங்குதல். } பிதுக்கம்.
பிதுரம் - இடி, அசனி, விண்ணேறு.
பிதுரு } பிதிர், தந்தைவழி மூதாதையர்கள்,
பிதுர் } பிதிர்க்கள்.
பிதுர்யானம் - பிதிர்லோகப் பிராப்தி.
பித்தளிவு - பித்தத்தினால் கால்கைகளில் உண்டாகும் எரிச்சல். [மினிநிறம்.
பித்தகம்-நவமணிக் குற்றத்தொன்று. அது:
பித்தகாசம் - பித்தத்தால் வரும் காசம்.
பித்தகாமாலை - காமாலைநோய்வகை.
பித்தகாய்ச்சல் - பித்தசுரம், பித்தவாதசுரம்.
பித்தகாரகம்-பித்தக்காங்கை, பித்தச்சூடு.
பித்தகாலம்- உடலில் பித்தம் அதிகமாயுண்டாகும் ஆயுள்காலத்தின் நடுப்பருவம், காலைநேரம். [மம்.
பித்தகுணம்-பித்தத்தாலுண்டாகும் குண
பித்தக்காங்கை-பித்தத்தாலுண்டாகுஞ்சூடு.
பித்தக்காய்ச்சல்-பித்தசுரம்,பித்த காய்ச்சல்.
பித்தக்கிராணி - அறுவகைக் கிராணிகளுன் பித்தத்தாலுண்டாகும் கிராணி. [சுழற்சி.
பித்தகிறகிறுப்பு- பித்தத்தினால்வருந்தலைச்
பித்தசரீரம்-பித்தாதிகாரமான தேகம்.
பித்தசாந்தி-பொன்னுவக்காணி, பித்தத்தைச் சாந்திசெய்யும் மருந்து.
பித்தசிலேட்டுமம் } பித்தத்தோடு கலந்த
பித்தசிலேற்பனம் } சேட்பம்.
பித்தசுரம்-பித்தக்காய்ச்சல், பித்தகாய்ச்சல்.
பித்தசூடு - பித்தக்காரகம், பித்தக்காங்கை.
பித்தசூலை-பித்தச்சூட்டால்வரும்சூலைநோய்.
பித்தசோகை - ஓர் வகைச் சோகை நோய்.

பித்தச்சுழற்சி-தலைக்கிறுகிறுப்பு.
பித்தநாடி-நாடி மூன்றனுள் பித்தநிலையைக் குறிப்பது.
பித்தநீர் - பித்தத்தினாலுண்டாகும் நீர், பித்தத்தால்வரும் வாய் ஊற்றம்.
பித்தபாண்டு, பித்தபாண்டுரு } இளைப்பையுண்டாக்கும் காமாலை.
பித்தப்பிளப்பு - பித்தவெடிப்பு. [வகை.
பித்தப்புடல்-புடல்வகையிலொன்று, தும்பை
பித்தப்பை - பித்தநீர் தங்கும் உடலுறுப்பு, பித்தநீரல், பித்தாசயம்.
பித்தமயக்கம் - கிறுகிறுப்பு, பைத்தியம்.
பித்தம்- கூத்தின்விகற்பம், மயக்கம், மூப்பினியிலொன்று, ஈரலினின்றும் தோன்றும் ஓர்வகை நீர், மினுகு, பைத்தியம், நினைவு மாறுபட்டுக் குழறுகை.
பித்தம்பிடித்தவன் - பைத்தியக்காரி.
பித்தரோகம் - பித்தநோய், பித்தவியாதி.
பித்தரோசனம் - பூவராசு, பூப்பொராசு.
பித்தலம்-ஒளியுடைப்பொருள், பித்தளை.
பித்தலாடகம், பித்தலாட்டம் } ஒன்றை மற்றொன்றுய்க் காட்டிவஞ்சித்தல்.
பித்தல்-அருகு, பிடுக்கு, விளிம்பு, நினைவு மாறுபட்டுக் குழறுகை. [தாதி
பித்தல்மண்வெட்டி-மண்வெட்டிவகை. பித்
பித்தவரோசகம்-பித்தத்தால் உருசிகெடல்.
பித்தவாதசுரம் - பித்தக்கூறும் வாதக்கூறும் கலந்துவரும் முறைச்சுரம். [கம்.
பித்தவாயு - உட்டணத்தால்வரும் வாயுரோ
பித்தவெடி-பித்தத்தினால் காலில் உண்டாகும் பிளப்பு, பித்தப்பிளப்பு. [கூடம்.
பித்தளை - செம்பும், நாகமுங்கலந்தது, ஆர
பித்தளைமலை - காளிக்கம் [கம்.
பித்தளையாடகம் - சூதுபொன், சூது உலோ
பித்தளைரேக்கு - பித்தளைத்தகடு.
பித்தன்-கள்வன், சிவன், பைத்தியக்காரன், வயிரவன், மூடன், பித்தக்கொள்ளி.
பித்தாசயம்-பித்தநீர்ப்பை, பித்தப்பை.
பித்தாதிகாரம், பித்தாதிக்கம் } பித்தமேலீடு, பித்த அதிகரிப்பு.
பித்தாதிசாரம் - உவாந்திப்பிராந்தி, வாந்தியும், பேதியும்.
பித்தாந்தலைக்கொட்டி-இலுஇலுப்பைச்செடி
பித்தாமத்தர் - பரிபாடலில் ஆறுபாட்டுக்கு இசைவகுத்தவர்.
பித்தான் - சட்டை, அங்கி முதலியவைகளை அணிவதற்கு உபயோகப்படும் குமிழ்.
பித்தி-ஒதுக்கிடம், சுவர், துண்டு, பங்கு, பிற்றி, வெடிப்பு, சிறுசெண்பகம்,பித்தம் பிடித்தவள்.
பித்திகம் - பிச்சிப்பூ, ஓர்வகை மல்லிகைப்பூ.
பித்திகாமார்ச்சாலநியாயம் - "மதில் மேற் பூனை எப்பக்கத்து குதிக்குமென்பது அறியப்படாமைபோல்" விஷயம் எவ்வாறு மென்பதை நிச்சயிக்க முடியாதிருக்கும் நெறி. [சுவர், சாதிமல்லிகை.
பித்திகை - சிறுசண்பகம், சுவர், அண்டச்
பித்திசௌரன்-கள்வன், சோரன்.திருடன்.
பித்தீரல்-பித்தநீருண்டாக்கும் உடலுறுப்பு, பித்தப்பை, பித்தாசயம்.
பித்து-ஈரற்பித்து, பித்தம், அறியாமை.
பித்துக்கொள்ளி-பைத்தியம்பிடித்தவன்
பித்துப்பிடித்தல்-பைத்தியங்கொள்ளல்.
பித்துப்பை-பித்தமிருக்கும்குடற்போர்வை
பித்தேறல் - பித்தவூரல், பித்தேற்றம்.
பித்தை-ஆண்மயிர், முடி.
பினாகபாணி-பினாகம் என்னும் வில்லையுடையான், சிவன்.
பினாகம் - சிவன் கையிலுள்ள வில்.
பினாகி - ஏகாதசருத்திரரிலொருவன்,பினாக வில்லுடையவன்.
பிந்தபாலம் - எறியீட்டி, பிண்டிபாலம்.
பிந்தல்-பிற்படல், பிற்படவேண்டாம்.
பிந்தி - பிண்ணல், தவலைப்பானை, பிற்றி, பிற்பட்டு.
பிந்தியகாலம்-சாயங்காலம், மாலைவேளை.
பிந்து-புள்ளி, விந்து, துளி, முதற்பொருள், சத்திதத்துவம், சுத்தமாயை, பிந்தென்னேவல்.
பிந்துசரசு-ஓர் பொய்கை, சர்த்தமப்பிரசாபதிக்கு வரம்தந்த விஷ்ணுவின் கண்ணீர் உண்டான இடம்.
பிந்துசாரம்-ஓர்விஷவைத்தியநூல்.
பிந்துசாரன்-சந்திரகுப்தன் புத்திரன், மகததேசாதிபதி. [தல், பிற்படல்.
பிந்துதல்-தாமதித்தல், பின்னிடுதல், தாழ்
பிந்துமதி-சசிபிந்தன்மகன், மாந்தாதாபாரி.
பிபாசிதன், பிபாசு } தாகங்கொண்டவன், விடாய்த்தவன்.
பிபாசை - தாகம், விடாய், வேட்கை.
பிபாலிகை - பிப்பலம், பிப்பிலம்.
பிபீலவாதம்-பரமாணுபிரபஞ்சத்துக்குக்காரணமெனல்,பைபீலவாதம், பிபீலிகா வா
பிபீலி-எறும்பு, பீபீலிகை. [தம்.
பிபீலிகாசந்தானம் - நால்வகைச்சந்தானத்தொன்று. எறும்பின் தொடர்ச்சிபோன்ற தொடர்ச்சி.
பிபீலிகாந்யாயம் - எறும்புபோல முறைப்

பட எண்ணித்தவறுது துணியும் நெறி.
பிலிகாயதி-எறும்பின் உடல்போலஇடை ப்பாகம் சுருங்கிவரும் பாடல்.
பிலிகாவாதம்-பிலிலவாதம், மிருகபாஷை யைஉணருமறிவு, பைபீலவாதம்.
பிலிகை - பிலி, எறும்பு, உறவி, பிலஞ் சலோபம்.
பிலுவாதம்-பிலவாதம், பிலிகியாயம்.
பிப்பலாச்சையர்-கொப்பூரில் வினங்கிய ஒரு சிவனடியார். இவர் சிவனடியாருடைய பரிகலசேஷத்தை வாரிக்கொண்டு ஒரு வைஷ்ணவ அக்கிரகாரவழியே செல்லும் போது, அவ்வக்கிரகாரத்தார் தடுக்கச் சினங்கொண்டு அப்பரிகல சேஷத்தை வாரி வீசினர். அது பட்ட வீடுகள் எல் லா மெரிந்து சாம்பராயின. வைஷ்ணவர் கள் அதுகண்டு அவரைச் சரணமடைந்து அதுக்கிரகம் பெற்றார்கள்.
பிப்பலகம் - மூலைக்கண், முலைக்காம்பு.
பிப்பலம்-அரசு, நீர், புல்வகை, பிப்பலிகை, பிப்பிலம், பிபாலிகை, பியாலிகை.
பிப்பலன் - (1) இல்வலன்புத்திரன், (2) அரிஷ்டன் தம்பி.
பிப்பலாசநம் - யானை, மாதங்கம், வேழம்.
பிப்பலாதம்-சூரியகிரணம், ஒளி, கிரகணம்.
பிப்பலாதன் - நரிருடி, இருஷபன் மகன்.
பிப்பலி - திப்பிலி, அரிசித்திப்பிலி, பிப்லி.
பிப்பலிகம் - தைச்கிறதூல், முலைவட்டம்.
பிப்பலிகை - அரசமரம், பிப்பலம்.
பிப்பலை - திப்பிலிச்செடி, பிப்பலி, பிப்பிலி.
பிப்பா - பீப்பாய், பிப்பாய்.
பிப்பிகை-பல்லழுக்கு, ஊத்தை. [பிலி.
பிப்பிலம் - பிப்பலம் பிப்பலிகை.அரிசித்திப்
பிப்பிலி - பிப்பலி, திப்பலி, பிப்பூலி.
பி பிலியத்தி-பெருநெருஞ்சில். [வைக்கனி.
பிம்பகம்-பிம்பம், சந்திரசூரியமண்டலம், கோ
பிம்பம்-பிரதிபிம்பத்திற்குக் காரணமாயுள்ள மூலப்பொருள், அடையாளம், ஒணான், கமண்டலம், கோவைக்கனி, சந்திரசூரி யாதிமண்டலம், யோகி, பிம்பகம், பிம்பி.
பிம்பி - கோவைக்கனி, பிம்பம்.
பிம்பிகை - சந்திரசூரிய மண்டலம்.
பிம்மாலே - பிறகு, பின்னல், பின்மாலே.
பியந்தை - மருதநிலப் பண்வகை.
பியாகடை - ஓரிராகம், பியாகடா.
பியாக்கு - இராகவகையிலொன்று.
பியாரம்-ஆடுதின்னுப்பாலை, புழுக்கொல்லி.
பியாலிகை - பிப்பலம், திப்பிலிச்செடி.
பியாலு-ஐரோப்பியரின் ஓர்வகைவாத்தியம்
பியூன் - சேவகன்.
பியை - அச்சம், பயம், பீதி, நோய்.
பிய்ச்சல் - பிய்த்தல், கிழித்தல், பிளத்தல்.
பிய்தல் - கிழிதல், பிள்ளுதல், ஊடறுதல், ஊடறுத்தல், வருத்துதல். [தல்.
பிய்த்தல் - கிழித்தல், பிட்குதல், வேருக்கு
பிய்த்துக்காட்டுதல்-பிட்டுக்காட்டுதல், விஷ யம் விளங்கச்செய்தல். [வருத்தல்.
பிய்ப்பு - பிய்த்தல், கிழித்தல், பிளத்தல்,
பிர - தோற்றம், மிகுதி, மேன்மை,விசேஷ இவைகளைக்காட்டும் ஒரு வடமொழி யுப சருக்கம், ஆரம்பம், கீர்த்தி,உற்பத்தி முத லிய பொருள்களை உணர்த்தும் ஒரு வட மொழியிடைச்சொல். [வாய்ப்படல்.
பிரகசம் - கொல்லுதல், அழித்தல், நோய்
பிரகசரணம் - பிராமணரில் ஓர் வகுப்பு.
பிரகசனம் - பெருநகை, மகிழ்ச்சி, வசைப் பாட்டு, சிரிப்பு, ஆனந்தம்.
பிரகசிதம் - பெருநகை, மிகுசந்தோஷம்.
பிரகச்சாதகம் - வராஹமிஹிரர் வட மொ ழியிலியற்றிய சோதிடநூல்.
பிரகஸ்பதி - பிரகற்பதி, வியாழன், தேவ குரு, புரோகிதன், மகாபண்டிதன்.
பிரகடம் } வெளியரங்கம்,பிரசித்தப்படுத்
பிரகடனம் } துகை, விளம்பரப்படுத்துகை, நூல் முதலியன வெளிப்படுத்துகை.
பிரகடிதம் - வெளிப்படல், அறிக்கை.
பிரகணம் - அசையப்பட்டது, இரும்புத் தண்டம், செப்புப்பாத்திரம், மூற்றம்.
பிரகணன் - சுமாலிபுத்திரன்.
பிரகணேமி - சந்திரன், மதி, திங்கள்.
பிரகண்டம் - புயவெண்பு, முன்புயம்.
பிரகதவாதம் } வயிற்றுப் பொருமலால் உ
பிரகதவாயு } ண்டாகும் நோய். [ன்று
பிரகதாரண்ணியம் - தசோபநிடதத்துளொ
பிரகதி - கத்திரிச்செடி, வழுதுணைச் செடி, கண்டங்கத்தரி, தும்புருவினுடையவீணை.
பிரகத்தம் - விரித்தகை, திறந்தகை.
பிரகத்தன் - சகாதேவன் குமாரன்.
பிரகந்தம் - விரித்தகை, திறந்தகை.
பிரகமனம் - தருக்கம், தேற்றம். [வகை.
பிரகம்பனம் - அசைவு, காற்று, நாசம், நரக
பிரகம்பிதமூகம் - மூகவபிநயம் பதினெண்க ணுள் அதிசயக்குறி காட்டத் தலையசைத் தல்.
பிரகம்பிதம் - அசைவு, ஆட்டம், சலனம்.
பிரகரணப்பிரகரணம் - மூப்பயன்களையும் பொருளாகக்கொண்ட நாடகவகை.
பிரகரணம் - அத்தியாயம், ஆயுதம், சமயம்,

பகுதி, பெண்பிள்ளைகள் சாரிவருந் தேர், மூகவுரை,யுத்தம்,விடயமுடிவு,சந்தர்ப்பம்.

பிரகரம் - உதவி, ஓர் வாசனைமரம், குவியல், சங்கை, பூச்செண்டு, வளமை, மாணிக்கக் குற்றத்துளொன்று, அடித்தல். [ட்டம்.

பிரகரி - முன்றிற்றோட்டம், முன்புறத்தோ

பிரகரிகம் - அகில், காகதுண்டம், பூழில்.

பிரகரித்தல் - சங்கரித்தல், அழித்தல், அடித்தல்.

பிரகருசம் - மிகுதி, மேன்மை, உயர்வு.

பிரகலாதன் - இரணியகசிபுவின் புத்திரன்; ஓர் விஷ்ணுபக்தன்; தானே கடவுளென இறுமாந்திருந்த தந்தையை எதிர்த்துப் பலதுன்பங்களடைந்து,வருந்தி,விஷ்ணுவை வேண்ட, அவர் கற்றூணினின்று, நரசிங்க வடிவமாய் வெளிவந்து, இரணியனைக் கொன்று இவனுக்கு அபயமளித்தார். பிறகுஇவன்விஷ்ணுபதம்பெற்றான்.

பிரகலை - நீதவுறுப்புளொன்று.

பிரகற்பதி } தரும நூல் பதினெட்டனுள்
பிரகஸ்பதி } ஒன்று, பிரமன் மானச புத்திரருன் அங்கிரசன்புத்திரனுகியவியாழன்; தேவ குருவாகிய இவர் மகாபுத்திமான்; வாசஸ்பதியெனவும்படுவன்; இவன் பாரிதாரை; இவன் சகோதரி யோகசித்தி; இவன் பாரியாகிய் தாரையைச் சந்திரன் கவர்ந்தான்; அதனுல் பிருகஸ்பதிக்கும், சந்திரனுக்கும் பெரும்போர் மூண்டது. பிரமதேவர்சந்திரன்பாற்சென்று,தாரையைவிட்டுவிடும்படிசெய்தார். தாரைபிருஹஸ்பதிக்கு மீண்டும் மனைவியானுள். சந்திரனுக்குத் தாரை வயிற்றிற் பிறந்த புத்திரன் புதன். அவனே சந்திர வமிச ஸ்தாபகன். பிருகஸ்பதி மண்டலமும் பிருஹஸ்பதி யெனப்படும். அது பொன்மயமாயிருத்தலின் பிரகஸ்பதி 'பீதகன்' 'பொன்' என்னும் பெயர்களைப்பெறுவன். இம் மண்டலத்தைச் சூழ்ந்துள்ள மண்டலங்களிலே மனுஷரிற் சிறந்த அறிவுடையோர்கள் வசிக்கிறார்களென்பது ஐரோப்பிய வானசாஸ்திரிகள் துணிவு. அது பிருஹஸ்பதியைத்தேவகுருவென்றுகூறும் நமது ஆரிய சித்தாந்தத்திற்கு மொத்ததாகும். பிருகஸ்பதி மண்டலம் நமது பூமண்டலத்தில் பதின்மடங்கு பெரிதாயினும் மிக்க லேசான கோளமாயுள்ளது. அதுபற்றி ஆங்குள்ளோரும் அந்தரத்திற் சஞ்சரிக்கும் லகுதேகிகளாயிருப்பார். அவர்களைத் தேவகணத்தினர் என்பது புராணமதம். பிருஹஸ்பதி மண்டலம் புராணங்களிலே ரதமெனப்படும். அதனைச் சூழ்ந்துள்ள மண்டலங்களைப் புராணங்கள் வெண்ணிறக்குதிரைகளாக ரூபகாரம்பண்ணும். ஐரோப்பிய வானசாஸ்திரிகள் அவைகளைச் சந்திரரென்பர்கள். அம்மண்டலங்களின் ரேகையைப் புராணங்கள் எட்டென, ஐரோப்பியர் ஐந்தென்பர். [தல்வன்.

பிரகற்பன் - பிரபு, ஏசமான், தலைவன், மு

பிரகன்னை - பிருகன்னை.

பிரகஸ்பதிசக்கரம் - வியாழ வட்டமாகிய அறுபது வருடம்.

பிரகஸ்பதிமதம் - சார்வாக மதம்.

பிரகாகி - நீர்முள்ளி, மூண்டகம், வனசம்.

பிரகாசத்தி - அப்பிரகம், ஓர்வகைக் கல்.

பிரகாசம் - ஒளி; இஃது: வானேர்வரானாண்கினொன்று, நகை, பராசியம், பொருமல், போலுந்தன்மை, வீரிவு, விளக்கம், வெண்கலம், வெய்யில், குணம், கீர்த்தி.

பிரகாசருத்திரர் - பிருதிவி தத்துவத்தில் குபேர திக்கிலுள்ள பத்துப் புவனங்களிலொருவர்.

பிரகாசனம் - பிரகாசம், வெளிப்படுத்துகை.

பிரகாசன் - ஒளியுடையோன், முக்தாத்துமா.

பிரகாசாத்துமா - சூரியன், இருள்வலி.

பிரகாசி - பிரகாசன், பிரகாசத்தை உடையது, பிரகாசியென்னேவல்.

பிரகாசிதம் - பிரகாசம்.

பிரகாசித்தல் - ஒளிசெய்தல், பிரபலியமாதல், விளங்குதல், அறிவுநிறைதல்.

பிரகாசியன் - பிரகாசம் உடையவன். [மை.

பிரகாண்டம் - கொப்பு, மரக்குற்றி, மேண்

பிரகாண்டூரம் - மரம், தரு, கோடரம்.

பிரகாபரணம் - தூரத்தல், ஒட்டுதல், செலுத்துதல், தொடர்தல். [றைவு.

பிரகாமியம் - அட்டபாக்கியத் தொன்று,கி

பிரகாரணம் - நன்கொடை, பரிசு, இனம்.

பிரகாரம் - காயப்படுத்தல், கோயில் மூதலியவற்றின் வீதி, தன்மை, மதில், வகுப்பு, வழி, விதம், விசேடணம், வித்தியாசம், ஒப்பு.

பிரகி - இணறு, கூபம், கூவல், ஊறல்.

பிரகிதம் - அனுப்பியது, ஏவியது, நியமித்தது, வைக்கப்பட்டது.

பிரகிருட்டம் - மேலானது, உயர்வானது.

பிரகிருதபிரளயம் - உலகநாசம்.

பிரகிருதம் - உண்டாக்கப்பட்டது, சந்தர்ப்பம், தற்காலம்.

பிரகிருதி - பஞ்சசத்திகளாகிய துர்க்கை, ராதை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாவித்திரி இவர்களே ஐவகைப்பிரகிருதிகள்என்பர். பிர-என்பது எழுச்சியையும், கிருதி-என்பது சிருட்டியையும் தெரிவிப்பதெனக் கொண்டு, சிருஷ்டியில் மனவெழுச்சியுடையர் எனவும், பிர-சத்வகுணம் கிரு-ரஜோகுணம், தி-தமோகுணம் எனத் திரிகுணாத்மக சத்தி யெனவும், பிர-முதல், கிருதி-சிருட்டி, 'சிருட்டிக்கு முதலானவர்' என்றும் பொருள் கூறுவர். மூலம், மூலப்பகுதி, சுபாவம், அரசாட்சிக்குரிய வுறுப்பேழு; அஃது: அரசன் ஆளுகை செல்லுமிடம், கோட்டை, சேனை, நட்பாளர், பொக்கசம், மந்திரி, ஆதாரம் என்பன. இயல்பு, காரணம், பகுதி, பகுதிமொழி, பஞ்சபூதம், பிரதானம், பிரபஞ்சமூலமாயிருக்கும் மாயை,பெண், மாதா, மிருகம், யோனி.

பிரகிருதிசாத்திரம்-பிரகிருதித்துவ சாஸ்திரம், இயற்கைப்பொருள் நூல்.

பிரகிருதித்துவம் - குண தத்துவத்துக்கு அப்பால் நூறு யோசனைகொண்ட பதுமஸ்தானம். [ன விதி.

பிரகிருதிநியாயப்பிரமாணம் - இயற்கையா

பிரகிருதிமாயை-அசுத்தமாயை; இது தூல பரிணமமாய்த் தோன்றும் மாயை; இதினின்றும் குணதத்துவம் முதலிய போக்கிய தத்துவம் இருபத்துநாலும் தோன்றும்.

பிரகிருதிவிகுதிகள் - பிரகிருதியினுடைய விகாரங்கள், பகுதி விகுதிகள்.

பிரகிருத்தானம் - இலக்கினம், லக்கினம்.

பிரகீர்ணம் - சாமரம், விசாலம்.. [வை.

பிரகுஞ்சம் - ஒருபலம்கொண்ட நிறுத்தலள

பிரகுடி - காட்டுமல்லிகை, வனமுல்லை.

பிரகுத்தம் - மான்கொம்பு, கோடு.

பிரகுலம் - யௌவனதேகம், இளம்பருவம்.

பிரகேசுவரர் - திருநன்னிலத்தில் கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

பிரகேசுவரி - திருநன்னிலத்தில் கோயில் கொண்டிருக்குந் தேவி பெயர்.

பிரகேலகம் - இனிப்புப் பதார்த்தம்.

பிரகேலிகை - கருதிய பொருளை மறைத்து வெளிப்படையிலே வேறொன்று தோன்றும்படி செய்யும் செய்யுள், நொடி.

பிரகோட்டம் } தோண்மூலம், மூற்றம்.
பிரகோஷ்டம் }

பிரகோபணம் - காத்தல், ஆதரித்தல்.

பிரகோபம் }
பிரகோபணம் } கோபம், மூர்க்கம், கடுங்
பிரகோவம் - } கோவம்.

பிரக்கணம் } யாழோசை, நரம்புக்கருவியி
பிரக்கரணம் } ஞைசை.

பிரக்கதம் - வலம்புரிக்காய். [அரணம்.

பிரக்காரம் - போர்க்கவசம், மெய்புகுகருவி,

பிரக்கியம் } அறிவு, பிரக்கியாதியான
பிரக்கியாதம் } து.

பிரக்கியாதி - அறிவு, கீர்த்தி, பிரசித்தம்.

பிரக்கியாதை - ஒழுகல், பிரபல்யம்.

பிரக்கியானம் - அறிவு, பிரக்ஞை, உணர்வு.

பிரக்கிரமம் - அடிமை, கிரணம், சமையம், தாராசுக்கியிறு, துவக்கம், நெருக்கிடை, பகடட்டுங்கயிறு, பட்சம், பிடித்தல், புயம், போதல், மேற்கொள்ளுதல்.

பிரக்கிராகம் - தாராசுக்கயிறு, பிடித்தல்.

பிரக்கிரீடதம் - கிரீடை, சந்தோஷ ஆடல்.

பிரக்கிரீவம் - கிரீடைமனை, சாளரம், மயிர்தூளி. [ர்ச்சி, பிரக்ஞை.

பிரக்ஞை - அறிவு, உணர்வு, நினைவு, உண

பிரக்கெந்தம் - ஆடுதின்னுப்பாலை.

பிரஸகந்தனம் } பேதிபண்ணல், வயிற்
பிரஸகந்திகை } றுளைவு.

பிரசகம் } இலையுணுமிருகம், மாமிச
பிரசகணம் } பக்ஷிணி.

பிரசங்கம்-உட்படுதல், கூட்டம், தருக்கத்தீர்மானம்,தெளிவு,நியாயத்தொடர்பு,பற்று, பாயிரம், பிரபலியம், வாக்கியம், வெளிப்படுத்தல். [னேவல், வியாக்கினி.

பிரசங்கி-ஆடம்பரக்காரன், பிரசங்கியென

பிரசங்கித்தல்- தீர்மானமெடுத்துக்காட்டல், பிரபலியப்படுத்தல். [ழ்ச்சி.

பிரசஞ்சனம் - சேர்த்தல், பாவித்தல், புக

பிரசஞ்சை - புகழ்ச்சி, பிரசம்சை.

பிரசண்டகதி - அதிவேகமனம். [வாயு.

பிரசண்டமாருதம்-பலத்தகாற்று, பிரசண்ட

பிரசண்டம்-பெலன், மிகுதி, மிகுவெப்பம், கடுவெப்பம்,வலி, வீரம், மிகுவேகம், கடுவேகம், தாங்கற்கரியது. [மாருதம்.

பிரசண்டவாயு - பலத்தகாற்று, பிரசண்ட

பிரசண்டவேகம் - அதிவேகம். [யானவன்.

பிரசண்டன்-வலியன்,வீரன்,வேகி, கடுமை

பிரசத்தம் - சதானந்தம், நித்தியம்.

பிரசத்தன் - பாலடை.

பிரசத்தி-அருத்தாபத்தி, இசைவு, கிருபை, சுத்தம், பற்று, பிரபையுள்ளது, முயற்சி, விரும்பத்தக்கது, தக்கசமயம், சாசனம்.

பிரசங்கன் - வெளிப்படையாகத் தோற்றப்

பட்டவன்.
பிரசந்தை - வெளிப்படும் சக்தி.
பிரசபம் - பிரசவம், வலோற்காரம்.
பிரசமனம்-கொலை,சமாதானமாக்கல். [ரூல்.
பிரசம்-கன், தேனீ,தேன்,தேன்கூடு,தேனி
பிரசம்சை - பிரசஞ்சை, புகழ்ச்சி.
பிரசயம் - இணைவு, திரட்சி, புணர்ச்சி, கலப்பு, ஒன்றிப்பு, ஸ்வரிதத்தையடுத்த அநுதாத்தஸ்வரம்.
பிரசரணம் - ஊர்கொள்ளையிடல், சத்துரு வைச்சூழல், சுற்றுதல், சூழப்போதல், பரப்புதல், போதல்.
பிரசரம் - அம்பு, இடம், கதி, சமயம், சிறு கொம்பு, திரள், பெரிதாதல், போர்,வழக்கம், வழி, விசாலித்தல், வெளியாதல், வேகம். [க்கு வந்தவன்.
பிரசருப்பகன் - அழைக்கப்படாது விருந்து
பிரசருப்பணம் - விசாலித்தல்.
பிரசலாகம்-பாம்பு, மயிற்றோகை, வில்லாச் சிரமம்.
பிரசலாபிரசனை-(ஜை) துளக்கத்தின் மேல் துளக்கம்.
பிரசலிதம்-அசைத்தல், திரிதல், சலித்தல், நடுங்கல்.
பிரசலை - மனக்கலக்கம், மனச்சஞ்சலம்.
பிரசவகாரி - பிரசவத்திற்கான மருந்து.
பிரசவசன்னி - பிள்ளை பெற்றதனாலுண்டா கும் சன்னி. [காய்ச்சல்.
பிரசவசுரம்-பிரசவத்தின்பின் உண்டாகும்
பிரசவபந்தனம் - பூந்தண்டு.
பிரசவப்பெரும்பாடு - பிரசவத்திற்குப்பின் சூதகம் மிகுதியாய் வெளிப்படல்.
பிரசவமாதல் - மகப்பெறுதல், ஈனுதல்.
பிரசவம்-சந்ததி, பலம், பிள்ளைப்பேறு, பிற ப்பித்தல், பிறப்பு, புட்பம், பிரசூதி.
பிரசவவலி
பிரசவவேதனை } பிள்ளைப்பேற்றுவருத்தம்
பிரசவவைராக்கியம் - பிரசவ வேதனையால் வருந்துபவன்; இது காமத்தால்வந்ததன் பமென்றுணர்ந்து இனிக்காமத்தைவெறு த்து விடுவதெனக் கொள்ளும் எண்ணம்.
பிரசவித்தல் - பிள்ளைப்பேறு, ஈனுதல்.
பிரசற்பம் - மழலை, குதலை, குழந்தை.
பிரசனம் - கருப்பந்தரித்தல், கருத்தரித்தல்.
பிரசனிகை-மாதா,அன்னை,தாய், ஈன்றாள்.
பிரசன் - கணவன், கொழுநன். [முகம்.
பிரசன்னமுகம் - அலர்ந்தமுகம், காணப்படு
பிரசன்னம்-காட்சி, தெளிவு, தோற்றப்படு தல், பிறப்பு, பெண்குறி, மகிழ்ச்சி.
பிரசன்னன் - கடவுள், தோற்றப்பட்டவன்.
பிரசா - பிரசை.
பிரசாகிதம் - நீர், ஜலம், உதகம்.
பிரசாக்கடை - மதகு, மதாசாரியன்.
பிரசாசநம் - ஆளுதல். [குறைவு.
பிரசாட்சயம்-சனவழிவு, ஜனத்தொகையின்
பிரசாதகம்-நிவர்த்திகலையில் பிருதிவிதத்து வத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களி லொன்று.
பிரசாதகன்-இந்திரத்துய்மன்வமிசத்தரசன்.
பிரசாதகை-கோலஞ்செய்வாள், வண்ணெல்.
பிரசாதக்கிருது - சதருத்திரரிலே குபேரனி சையிலிருக்கும் தசருத்திரரில் ஒருவர்.
பிரசாதஞ்செய்தல்-அனுக்கிரகித்தல், நிவே தன அன்னம்தயாரித்தல்.
பிரசாதம் - நிவேதனப்பொருள், அமுதம், கடவுளுக்குப் படைக்கும் அமுது, தேவ நைவேத்தியம், அழுக்கின்மை, அநுக்கி ரகம், அருள், கருப்பமுண்டாக்கு மருந்து, களங்கமின்மை, கூட்டம், சுகசீவியம், தெளிவு, நிருமாலியம், பட்சம், பயன், பவித்திரம், பிரதிஷ்டை, பிரார்த்தனை, பின்னோப்பேறு,பேறு,மனவமைதி,சோறு.
பிரசாதருமம் - புத்திரதருமம், குடிக்கடமை.
பிரசாதனம் - அலங்கரிப்பு, சீப்பு, சுத்தம், சோறு,மனத்திருப்தி, வெள்ளி, கொக்கு.
பிரசாதி - புணர்ச்சி, கூடுகை, ஒன்றுதல், கொடு, கொடுப்பவன், கொடுப்பவள்.
பிரசாதித்தல் - அனுக்கிரகித்ததவதல்.
பிரசாதிபத்தியம் - ஜனநாயகவாட்சி.
பிரசாந்தன் - கால தத்துவத்திலிருக்கும் ஒரு ருத்திரர்; விம்பாகம் கேட்டவொருவன்.
பிரசாந்தி - அமரிக்கை, சாந்தம்.
பிரசாபகன் - அரசன், பூபாலன்.
பிரசாபதி-அரசன், ஆண்குறி, சூரியன், தீ, பிதா, பிரமன், மருமகன், மூத்தோன்.
பிரசாபத்தம்
பிரசாபத்தியம் } பெண்சுற்றமுமாண்சுற் றமுமொத்துத்தீமுன் னர்க்கொடுக்குமணம்.
பிரசாபத்தியலோகம் - பிரசாபதிகளினு டைய லோகம்.
பிரசாபன் - அரசன், புரவலன், பூபாலன், கோ.
பிரசாமம் - சமாதானம், மனவமைதி.
பிரசாரணம்-சத்துருவைச் சூழ்தல், விசாரித் தல், தருமம் விரித்தல்.
பிரசாரணை - பிரஸ்தாபம், எச்சரிக்கை.
பிரசாரம் - கடை, பரம்புதல், பரப்புதல், போதல், வழக்கம், வேங்கைமரம், வில்

தரிக்கப்பட்டது.
பிரசாரி - வாயுலோகம், வாயுமண்டலம்.
பிரசாலம் - வீணைத்தண்டு.
பிரசாவதி - சகோதரன் மனைவி, மாதா.
பிரசாவிருத்தி - சனப்பெருக்கம், புத்திர விருத்தி, சந்தானவிருத்தி.
பிரசானம் - ஆளுதல், எஜமானத்துவம்.
பிரஜிதம் - ஜிதல், செல், கறையான்.
பிரஜித்தப்படுத்துதல் - வெளியாக்கல், புகழ் முதலியவற்றைப் பரப்புதல்.
பிரஜித்தப்பத்திரிகை-அறிக்கைப்பத்திரிகை, விளம்பரப்பத்திரிகை. [விளக்கம்.
பிரஜித்தம் - அறிவிப்பு, கீர்த்தி, பராஜயம்,
பிரஜித்தன் - வெளிப்படையாயிருக்கிறவன்.
பிரஜித்தி - புகழ், கீர்த்தி, பெருமை. [நட்பு.
பிரஜியம் - உபசரணை, உருக்கம், சங்கை,
பிரஜிரவணம்-அருவி, சிறுநீர், நீர்நிலை, பொசித்தல், மலைமேற்குளம், வேர்வை.
பிரஜிரன் } வசுதேவனுக்குச் சாந்தி யிட
பிரஜிரியன் } த்துப்பிறந்த புத்திரன்.
பிரசிருதி - அவையார்த்தம்.
பிரசினதூதி-நொடி,மாத்திரைக்கால அளவு.
பிரசினம் } கேள்வி, விஞ, தசோபசிடத
பிரசினை } துள் ஒன்று.
பிரசிஷ்யன் - மாணாக்கனுக்குமாணாக்கன்.
பிரசீவனம் - சம்பாதிக்கை, சீவனம்.
பிரசீனம்-காற்று, அநிலம். [வோன்.
பிரசுரபுருடன் - சோரபுருஷன், வெளியிடு
பிரசுரம் - அறிவிப்பு, மிருதி, தூற்பதிப்பு.
பிரசுரன் - சுக்கிரன், புகர், மழைக்கோன், வெள்ளி. [காரன்.
பிரசுரீகரணம் - சேர்த்தல், கன்னக்கோல்
பிரசுருதம் - நீர் முதலிய பாய்தல்.
பிரசுவாளம் - பேரொலி, பேரோசை.
பிரசூ - ஓர்கொடி, பெண்குறிசர், மாதா, வாழை.
பிரசூதம் - பிள்ளைபெறுதல், மகவீனுதல்.
பிரசூதன் - சாரதி, வலவன்,தேர்ப்பாகன்.
பிரசூதவாயு - கருப்பவாயு.
பிரசூதி-(1)பிள்ளைப்பேறு. (2) சுவாயம்பு மனுமகன், உற்பத்திதானம், ஏகாதசபதிவிரதைகளில்ஒருத்தி, பிள்ளை பெறுகிறவள்.
பிரசூதிகாலம் - பேறுகாலம், போதுகாலம்.
பிரசூதிகாவாயு - கருப்பவாயு,பிரசூதவாயு.
பிரசூதிகை-பிள்ளை பெற்ற அறையிலிருப்பவன், பிரசூதி.
பிரசூதிசம்-வியாகுலம், சஞ்சலம். [யாதல்.
பிரசூதியாதல் - பிரவேசமாதல், பிரவிடை
பிரசூதிவாயு-கருப்பவாயு, பிரசூதகவாய்வு.
பிரசூதிவேகை - கருப்பவேதனை.
பிரசூதிவைராக்கியம் - பிரசவவைராக்கியம்.
பிரசூசை - பிள்ளைபெற்றிருப்பவள்.
பிரசூனம் - கனி, புட்பம், பூ, மலர்.
பிரசேகம் - நனைத்தல், பொசித்தல்.
பிரசேசுவரன் } அரசன், பூபாலன், காவ
பிரசேச்சுவரன் } லன்.
பிரசேதசர்-பிராசீனபருஹிக்குச் சமுத்திரன் மகளாகிய சததிருதியிடத்துப் பிறந்தவர்கள். இவர்கள் பதின்மர் சகோதரர்;மகாதபோதனர்கள்; இவர்கள் பாரி மரீஷை.
பிரசேதசன் - வருணன், புனல்வேந்தன், புரசேதன்.
பிரசேதசு - காந்தாரதேசத்தரசன்பெனத்திரனின் பௌத்திரன், இவன் புத்திரர்கள் யாவரும் மிலேச்சராயினர்.
பிரசேதிரு - சாரதி, பார்த்தசாரதி.
பிரசேலகம் - குதிரை. [கினியின் மாமன்.
பிரசேனசித்தன் - ரேணுகைதந்தை, ஜமதக்
பிரசேனன் - சத்திராசித்து தம்பி.
பிரஜாபதி-பிரமன், மலரவன், விரிஞ்சன்.
பிரஜாமதிக்ஷேத்திரம் - பிரயாகை, பிரதிஷ்டானபுரம், வாசுகிஹிரதம், வெருமூல பர்வதம் என்னும் இந்நான்கிடத்துக்கு மிடையேயுள்ள ஒரு புண்ணிய க்ஷேத்திரம். இதில் ஸ்நானஞ் செய்வோர் வெகு புண்ணியங்களைப் பெறுவர்.
பிரஜாஜனி - பிராம்சுமான். [கன்கிழங்கு.
பிரசை-குடி, சனம், பிள்ளை, சந்ததி, வெரு
பிரசோதனம் - அனுப்புதல், சொல்லுதல், முறை. [தொன்று.
பிரசோதினி - கண்டங்கத்திரி, தசமூலத்
பிரசோற்பதி } ஆண்டு அறுபதுக்குள் ஐந்
பிரசோற்பத்தி } தாவதாண்டு, பிரசாவிருத்தி.
பிரச்சந்நகூபம் - சுரப்பு நீர்க்கேணி.
பிரச்சனை - உணர்ச்சி, கேட்டல், கேள்வி, கேட்டல், விஞவுதல், கடாவுதல்.
பிரச்சாதனம் - மூடி, வெளிப்புடைவை.
பிரச்சாது - பின்பு, பிறகு.
பிரச்சுவலித்தல் - விழித்தல்.
பிரச்சோதனன் - பிரத்யோதனன், உஞ்சைநகரத்தரசன், வாசவதத்தை தந்தை, உதயணனைச் சிறை செய்தவன்.
பிரஞ்சிலாகா - பிரஞ்சுக்காரர் ஆட்சிக்குட்பட்ட இந்திய நாட்டுப்பகுதி.
பிரச்சினை } பிரசினை, பிரசினம்.
பிரச்சினம் }

பிரச்சுவாலியம் - கொளுத்தல், சுடுதல்.
பிரஞ்ஞத்துவம் - அறிவு, உணர்ச்சி.
பிரஞ்சம் - மாறுட்டம்.
பிரஞ்ஞமானம் - அறிஞர்க்கிடுமுபசாரணை.
பிரஞ்ஞும் - அறிவுகேடு, அறிவின்மை.
பிரஞ்ஞன்-அறிஞன், சமர்த்தன், பண்டிதன்.
பிரஞ்ஞா - அறிவு.
பிரஞ்ஞாபங்கம்-அறிவுக்கேடு, உணர்வின்மை
பிரஞ்ஞாபனபத்திரம் - பெரியோர்களுக்கு வணக்கமா யெழுதும் கடிதம்.
பிரஞ்ஞாவான் - ஞானமுடையவன்.
பிரஞ்ஞாணம் - அடையாளம், அறிவு, பிரஞ்ஞை, சைதன்னியம்.
பிரஞ்ஞை - அறிவு, அறிவுடையாள், சரச்சுவதி, முன்னிகழ்ந்ததையுணருமுணர்வு.
பிரடை-யாழ்முதலியவற்றின் முறுக்காணி.
பிரட்சாளகம் } நீராற் கழுவுதல், சுத்தி
பிரட்சாளனம் } செய்தல்.
பிரட்சாளியம் - கழுவுதல், பிரட்சாளனம்.
பிரட்சேபணம் - இழுத்து வீழ்த்துதல், மல்யுத்தத்துக் குரிய எண்வகைக் கிரணத்தொன்று.
பிரஷ்டம் - தள்ளுபடி, விலக்கு.
பிரட்டம் - ஆதி, தள்ளுபடியானது, நீங்கானது, பொரித்தது, முதன்மையானது.
பிரட்டன் } வஞ்சகன், கைதவன், கரவன்,
பிரஷ்டன் } ஆதிக்கன், துற்குணன்.
பிரட்டானம் - இதிவிசேடம். [னேவல்.
பிரட்டு-புரட்டு, மோசம், கவடு, பிரட்டென்
பிரட்டுக்கல் - இராசவருத்தனக்கல்.
பிரட்டை - ஓர்செடி, பிரண்டை, எலிக்காது.
பிரணதன் - வணக்கமுள்ளவன், கீழோன்.
பிரணம் - பழமை, தொன்மை.
பிரணயகலகம்- கலவியிற்பிணங்கல், ஊடல்.
பிரணயமானம் - தலைவனுக்கும் தலைவிக்கும் நடக்குநேய விவாதம்.
பிரணயம் - அன்பு, கீழ்ப்படிதல், கலவி, கேட்டல், நம்பிக்கை, பழக்கம், பிரதி, பிரார்த்தனை, மோக்கம், வணக்கம். [தல்.
பிரணயனம் - கொடுத்தல், நடத்தல், பரப்பு
பிரணருத்தினம் - ஆடல், நிர்த்தனம்.
பிரணவம் - (1)ஓர்பறை, (2)ஓங்காரம், ஆதி அக்ஷரம், பிரணவமானது சிருஷ்டிக்குமுன்னுள்ள அவசரத்திலே பிரமத்தின் வேறாகாத சிற்சோதியாகவுள்ளது. அது சிருஷ்டியின்பொருட்டு விகாரப்படுமிடத்து விந்துரூபமாகக் கிடக்கும்; விந்துரூபமாகக் கிடக்கும் அவசரத்திலே அதனிடத்துள்ளதாகிய ஐந்தவ சக்தியினுலே புருஷாமிசமாகிய நாதம் கம்பிதமாகும்; அஃதாவது: வட்டவடிவினதாகிய விந்து விஷமப்பட்டு அண்டவடிவு பெறும். எனவே பிரணவம் விஷமப்பட்டவிடத்து விந்து வென்றும், அது விஷமப்பட்டவிடத்து நாதமென்றும் பெயர்பெறும்; காரணத்தி லொடுங்கிய வுலகத்தை மீளவும் எழுப்புவது சைதன்னிய சேஷ்டையேயாம்; சைதன்னிய சேஷ்டையின்றி உலகம் இயங்காது. ஐரோப்பிய பௌதிகதத்துவ பண்டிதர்களும் சேஷ்டையே சிருஷ்டிக்குக் காரணமென்பார்கள்.

அந்தச் சேஷ்டை புரிபோலச் சுழன்று செல்வதென்பது ஐரோப்பியர் மதம்; ஆரியசாஸ்திரங்களும் பிரணவம் சங்கு வடிவினது என்று கூறுகின்றன வாதலால், இரண்டிற்கும் வேறுபாடு காண்கிலேம். சங்கு தன்னிடத்தே ஆகாயவெளியும், புரியும் உடையதாதலால் பிரணவத்துக்குக் குறியாயிற்று.

பிரணவம் தூலப்பிரணவம், சூக்குமப் பிரணவம் என்று இருவகைப்படும். ஹ்ரீம் என்பது ஸ்தூலமும், ஓம் என்பது சூக்குமமாகும். பிரணவம் பதினாறு உறுப்புக்களாலாயது. அவ்வுறுப்புக்கள் மாத்திரை யெனப்படும். அப்பதினாறு மாத்திரைகளும் வருமாறு:—(1) அ. (2) உ. (3) ம். (4) அர்த்தம், (5) நாதம் (6) விந்து, (7) கலை, (8) கலாதீதை, (9) சாந்தி, (10) சாந்தியாதீதை, (11) உன்மனி, (12) மனோன்மணி, (13) புரி, (14) மத்தியமை, (15) பசியந்தி, (16) பரை, இப்பதினாறும் (நூற்றைம்பத்தாறாக) வகுக்கப்படும். இவையெல்லாம் அப்பையதீக்ஷிதர் செய்தருளிய அதுதீதி, மீமாம்ஸா பாஷ்யத்திலே விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன.

அகரம் பிரமாவையும், உகரம் விஷ்ணுவையும், மகரம் ருத்ரனையும் குறிக்குமென்பாரும், அகரம் விஷ்ணுவையும் உகரம் ருத்ரனையும் மகரம் பிரமாவையும் குறிக்குமென்பாருமாகச் சைவ வைஷ்ணவ சமயிகள் இப்பிரணவப் பொருளிலே தம்முள் மாறுபடுவார்கள். அகரம் பிரமத்தைக் குறித்து நிற்றலால் அந்தப் பிரமத்தை விஷ்ணு வென்றும், சிவனென்றும் தத்தமக் கிஷ்டமான பெயர்களால் வழங்கும் இருவர் குறிக்கோளும் ஒன்றேயாம்.

பிரணவசொரூபதத்தை இது வென்றெடுத் துரைத்தல் கூடாதென்று சாஸ்தி

ங்களெல்லாங் கூறுதலின், உண்மை புணர்ந்த ஞானிகளுக்கே அதன் பரப் பெல்லாம் புலனுமென்க. மந்திரங்களுள் ளே பிரணவமே சிறந்ததும், மோக்ஷசா தனமாயுள்ளதுமாம்; மூண்டகோப நிஷத்தில் இப்பிரணவமாகிய வோங்காரத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட ஒரு வாக்கியம் வருமாறு:—"ஓம்"என்பது வில்லு; ஆன் மாவே பாணம்; பிரமமே குறி. இடைய ராத்தியானத்தினுலேயே குறியை எய்தல் கூடும். குறியிற் புதைந்த பாணம்போல ஆன்மா பிரமத்திற் புதையக்கடவது. "பிரணவம் என்பதன் பொருள் அழியா தது. கழிந்ததும் நிகழ்வதும் வருவது மாகிய மூக்கூற்றுப் பிரபஞ்சமெல்லாம் ஓமெனும் பொருளே". "அகரம் ஜாக்கிர வுலகமாய் யாவரும் வசித்தற்கிடமாக வுள் ளது. இதனே யுணர்பவன் இஷ்டமோகத் தை யடைகிறுன். உகரம் சொப்பன மாய்ப் பிரகாசமாக வுள்ளது. மகரம் சுஷுப்தியாய் முடிவிடமாக வுள்ளது." (மாண்டேக்கியம்.) [கடவுள்.

பிரணவரூபம்-கடவுள், ஓங்காரவடிவாயுள்ள
பிரணசம் - அழிவு, கெடுதல்.
பிரணதம் -காதநோயினென்று, பேரொலி.
பிரணமம் - கடவுள் பெரியோருக்குச் செய் யும் வணக்கம். [றுப்பு, விலக்கு.
பிரணயம் - இணங்காமை, நிதார்த்தம், வெ
பிரணலம் - மதகு, சலதாரை.
பிரணி - தானம்,தியானம், முயற்சி,வாயில்.
பிரணிதி - ஒற்றன், கேட்டல், தோழன்.
பிரணிகாதம் - பேரொலி, மிகுவொலி.
பிரணிபதனம் } வணங்கல், தொழுதல்.
பிரணிபாதம் }
பிரணீதபாத்திரம் - ஓமச்சடங்கிற்கு உரிய பாத்திரம். [பொருள்.
பிரணீதம் - உண்டாக்கப்பட்டது, செயப்படு
பிரண்டை - பரண்டை, ஓர்வகைக்கொடி.
பிரதகம் - முன்பு, பிரதானம்.
பிரதக் - தனி.
பிரதக்கணம் - வலம்வருதல், பிரதட்சணம்.
பிரதக்கு - தனிமை, முதலது, வேறு.
பிரதட்சணம் } பிரதக்கணம், வலம் வரு
பிரதட்சிணம் } கை.
பிரததி - படர் கொடிவகை. [பிள்ளை.
பிரதமகற்பிகன் - பாலமாணுக்கன், பள்ளிப்
பிரதமகாலம் - பூருவகாலம், விடியற்காலம். உதயகாலம், உற்பவகாலம்.
பிரதமசாகை - சுக்கிலயஜுர்வேதம்.
பிரதமபண்டிதர் - தலைமைப்பண்டிதர். [ன்.
பிரதமபுருடன் - படர்க்கை, பிரதானமானவ
பிரதமவிசாரணை - ஆரம்ப விசாரணை.
பிரதமசிருட்டி - பூருவசிருட்டி. [தது.
பிரதமம் - ஆரம்பம், முதன்மை, விசேஷித்
பிரதமை-ஒன்று,கடுக்காய்,முதல்,முதற்றிதி.
பிரதம் - கொடை, பிரசித்தம், புகழ்.
பிரதரம் - அம்பு, சுருக்கு, சுழலல், பிளப்பு. விறைப்பு, தண்டவியூகவிரியிலொன்று, பெரும்பாடு. [தல்.
பிரதரிசிப்பித்தல் - விளக்குதல்,விரித்துரைத்
பிரதர்த்தன் - திலோதாசன் புத்திரன்.
பிரதலம் - அம்பு, பாதலம், அன்னியஇடம்.
பிரதனம் } பிழித்தல், நீளுதல், படையி
பிரதனை } லோர் தொகை; அஃது: வா கினி மூன்றுகொண்டது, பிருதனை, புரா தனம், யுத்தம், விரித்தல். [தருமவான்.
பிரதன் - சுகையாளன், கொடையாளன்,
பிரதாபசூரியன் - சண்பகப்பாண்டியனுக் குப் பின் அரசுசெய்த பாண்டியன்.
பிரதாபதி-பாண்டு, தலைமகன், மூத்தோன்.
பிரதாபமார்த்தாண்டன் - வீரமாதபாண்டிய னுக்குப் பின் அரசுசெய்த பாண்டியன்.
பிரதாபம் - உயர்ச்சி, கீர்த்தி, பிரகாசம், பெருமை, மகிமை, வீரம், வெப்பம்.
பிரதாபருத்திரன் - வீரருத்திரன், தெலுங்க நாட்டு ஓரரசன்.
பிரதாபருத்திரீயம்-வித்தியாநாதகவி செய்த அலங்கார சாஸ்திரம்.
பிரதாபனம்- காகம்,அந்தகாரம்,இருணிலம்.
பிரதாபித்தல் - மகிமைப்படுதல். [கம்.
பிரதாரகம் - எத்து, அணுப்பு, எற்று, வஞ்ச
பிரதாரம்- கடத்தல், தாண்டல்,விலக்குதல்.
பிரதாவனம்-காற்று,அனிலம்,ஊதை,வாயு.
பிரதானதாது - சுக்கிலம், இந்திரியம்.
பிரதானபண்டிதர் - பிரதம பண்டிதர்.
பிரதானபுருஷன் - முக்கியமானவன்.
பிரதானம் - அங்குலம், கடவுள், கொடை, சுபாவம், புத்தி, மூலம், விசேடம், வீம்பு, முக்கியம், தலைமைப்பொருள்.
பிரதானன் - முதன்மந்திரி, யானைப்பாகன்.
பிரதானி - அதிகாரி, பொக்கிஷக்காரன், மந்திரி. [பொருள்.
பிரதானிகம்- அதிகாரம், உரித்து, முக்கியப்
பிரதானியம் - பிரதானம், முக்கியமானது.
பிரதி - அற்பம், எதிர், எழுதிச்சேர்த்தல், தடை, பகுதி, பதில், மூலம், விகாதம், தன்மை, விடை, மாறு, போட்டி, ஒவ் வொரு கையெழுத்துப்பிரதி, நூற்பிரதி.

பிரதிகதி - அதைப்பு, லீக்கம்.
பிரதிகஸ்தகன் } பதிலான், மாற்றலான்.
பிரதிகஸ்தன் }
பிரதிகம் - அவல், குழந்தை, சிறுபிள்ளை.
பிரதிகாரணம்-வெறுத்தல், மறுத்தல், வேண்டாமை. [மாற்று.
பிரதிகருமம்- அலங்கரித்தல், பதிற்கிரியை,
பிரதிகாசம் - பரிகாசம், பகிடி, மிகுநகை.
பிரதிகாதம்-அதைத்தல், தடுத்தல், மோதல்.
பிரதிகாதனம் - கொல்லல், சுடுதல், செகுத்தல்.
பிரதிகாந்தி-பிரதிவிம்பம், போலியுரு, உருவச்சாயை. [ரூபம், இலட்சியம்.
பிரதிகாயம்-அடையாளம், குறிப்பு, பிரதி
பிரதிகாரகன்-வஞ்சகன், வாயில்காப்போன்
பிரதிகாரணம் - உட்படுதல், உடன்படுதல், கீழ்ப்படிதல். [வாங்குதல்.
பிரதிகாரம் - அணுப்பு, கதவு,பதில், பழி
பிரதிகாரன் - வாயில்காப்பாளன், வாயிலோன்.
பிரதிகிரகணம் - பதில்வாங்கல், கைம்மாறு.
பிரதிகிருதி - பதில்செய்தல், பிரதிகாயம், பிரதி பிம்பம். [மதம்.
பிரதிகுலம்-பிரதிகூலம், வேறுசாதி, மறு
பிரதிகூலம் - எதிர், சைகூடாமை, மாறுபாடு, தீமை, தடை. [விரோதம்.
பிரதிகூலியம் - எதிரிடை, பிரதிகூலம்,
பிரதிக்கியாதம் - சம்மதித்தல், இணங்குதல்.
பிரதிக்கிரகம் - ஏற்றல், அங்கீகரித்தல்,கொள்ளல். [கம், கடம்.
பிரதிக்கினம்-சரீரம், உடல், தேகம், அங்
பிரதிக்கினை-அத்தாட்சி, அறிக்கையிடுதல், சம்மதி, நேர்த்திக்கடன், பொருத்தனை, வேண்டியது, சபதம், பிரதிஞ்ஞை.
பிரதிசங்காரம் - அழித்தல், குறைத்தல்.
பிரதிசங்கை-பயம்,அச்சம், வெருவு,கலக்கம்.
பிரதிசத்தம் - எதிரொலி, பிரதித்தொனி.
பிரதிசந்தானம்-இச்சையடக்கம். [மருந்து.
பிரதிசமாதானம் - மாற்றுமருந்து, முறிப்பு
பிரதிசம் - கோணத்திசை, திசைகளுக்கு இடையிலுள்ள திசை. [படையணிமாலை.
பிரதிசரம் - கைக்கடகம், படைவகுப்பு,
பிரதிசரன் - வேலைக்காரன், ஊழியன்.
பிரதிசருக்கம் - சிருட்டிப்பு, புராணஉறுப்பு.
பிரதிசாகிரம் - எச்சரிக்கை, அறிவிப்பு.
பிரதிசாந்தானிகன்-புலவன்,அறிஞன், கலைவலோன், பண்டிதன்.
பிரதிசாபம் - எதிர்சபிப்பு, நிதானித்தல்.
பிரதிசாயை-ரூபம், நிழல், பிரதிபிம்பம்.
பிரதிசாரணம் - இரணங்கட்டல், தள்ளல்.
பிரதிசிருவை - உண்ணுக்கு, உண்ணு.
பிரதிசிந்தனம்- ஆலோசித்தல், சிந்தித்தல், யோசித்தல். [கூட்டம், யாகசாலை.
பிரதிசிரயம்-அடைக்கலவிடம், இருப்பிடம்,
பிரதிசிரவணம் } சம்மதித்தல், இணங்கல்.
பிரதிசிரவதம் }
பிரதிசீரை - திரைப்படம், திரைச்சீலை.
பிரதிசூரியகம் - சூரியமண்டலம், பல்லி.
பிரதிசூரியம் - பல்லி, கெவுளி. [சாயை.
பிரதிசூரியன் - சூரியப்பிரதிபிம்பம், சூரியச்
பிரதிசேதம் - எதிரிடை, பிரதிபந்தம்.
பிரதிஞ்ஞாபத்திரம்-உறுதிச்சீட்டு.
பிரதிஞ்ஞாவிரோதம்-எதிர்நியாயம், நியாயவிரோதம்.
பிரதிஞ்ஞானம் - சம்மதி, ஒப்பம்.
பிரதிஞ்ஞேயன் - புகழ்வோன், கட்டியன்.
பிரதிஞ்ஞை - பிரதிக்கினை, பிரமாணம்.
பிரதிட்டம் -ஸ்தாபனம், பிரதிஷ்டை.
பிரஷ்டம் - தண்டவியூகவிரியிலொன்று.
பிரதிட்டாகலை - பஞ்சகலையிலொன்று.
பிரதிட்டாபனம்-நிறுத்துதல், நிலையாக்கல்.
பிரதிட்டித்தல்-பிரதிட்டித்தல், பிரதிட்டை செய்தல்.
பிரதிஷ்டாவான் - கீர்த்தியுள்ளோன்.
பிரதிட்டை } இடம், எல்லை, ஓர்பா, கீர்
பிரதிஷ்டை } த்தி, சடங்கு, முடித்தல், தாபனம், நிறைவேற்றல், நேர்த்தி,பூமி.
பிரதிதன் - அறிவாளி, புத்திமான்.
பிரதிதானம் - கைம்மாறு, திரும்பக்கொடுத்தல், பொருண் மாற்றுதல்.
பிரதிதி - கீர்த்தி, பிரபாவம், புகழ்.
பிரதிதிசம்-சகல இடமும், இடமுழுவதும்.
பிரதிதினம் - நாடோறும், தினமானம்.
பிரதிதூரை - பதிற்றூரை, உதவியதிகாரி.
பிரதிதுவந்துவம் - எதிரிடை, விரோதம்.
பிரதிதுவனி - எதிரொலி, பிரதித்தொனி.
பிரதிதேவன்-சூரியன், நாள், தினமானன்.
பிரதிதொனி - எதிரொலி, பிரதிநாதம்.
பிரதித்தல் - உருவுகாட்டுதல், தோற்றுதல்.
பிரதித்தொனி - பிரதிதொனி, எதிரொலி.
பிரதிநிசம்-இராவோடிரா, பிரதிராத்திரம்.
பிரதிநிதி - உருநாட்டு பிரதிபிம்பம், பிரதியாள்.
பிரதிநியாயம் - பதில் நியாயம், எதிரிடை நியாயம். [பகைவன்.
பிரதிபடன் - எதிராளி, விரோதி, சத்துரு,
பிரதிபட்சம் - எதிர்ப்பக்கம். [நண்பன்.
பிரதிபட்சன்-எதிரி,விரோதி,விரோதியின்

பிரதிபதகன்-எதிரிடைக்காரன், வீரோதி.
பிரதிபதம் - அடிக்கடி, பரியாயச்சொல்,பத வுரை. [வாத்தியம்.
பிரதிபதூரியம் - உவகைப்பறை, மங்கள
பிரதிபத்தி-அடக்குதல், அதிகரித்தல்,எய்த் தல், கீர்த்தி சம்பாதித்தல், சம்மதித்தல், ந்ன்னடை, நிதானிப்பு, நோக்கம், பா விப்பு, மிகநம்பிக்கை, கௌரவம்.
பிரதிபத்திபடகம் - பெரும்பறை, பேரிகை.
பிரதிபத்திரம் - மறுமொழிச்சீட்டு.
பிரதிபக்தகம் } கட்டுப்பாடு, தடை.
பிரதிபந்தம் } [னது.
பிரதிபம்-முறறு,அழுத்தமானது, செட்டியா
பிரதிபலம் } பிரதிபிம்பம், பிரதிப்பிரயோ
பிரதிபலம் } சனம், சாயை.
பிரதிபலன் - பிரதிப்பிரயோசனம்.
பிரதிபலித்தல் - பிரதிபிம்பந் தோன்றுதல், உருவெளித் தோற்றம். [இலேவகை.
பிரதிபன்னம்-அறியப்படுத்தல்.தெரிவித்தல்
பிரதிபாகம் - பங்கு, சமபாகம்.
பிரதிபாதகம் - செயற்படுத்துவது.
பிரதிபாதனம் - ஈகை, உலகநடை, செய்து முடித்தல், நிதானித்தல், பிறப்பித்தல்.
பிரதிபாதித்தல்-எடுத்துவிளக்குதல். [தல்.
பிரதிபாதுகம்-தெளியப்பண்ணல்,நிதானித்
பிரதிபாத்தியம் - எடுத்துவிளக்குவது.
பிரதிபாலகன் - அரசன், தற்காப்போன்.
பிரதிபாலனம் - காத்தல், பழகுதல். [ருள்.
பிரதிபாவியம்-அடகு,ஒப்படை, ஈட்டுப்பொ
பிரதிபானம் - தைரியம், பிரபை. [ருவம்.
பிரதிபிம்பம்-பிரதிவிம்பம்; அதாவது: எதி
பிரதிபிம்பித்தல்-பிரதிபலித்தல்.
பிரதிபுருடன் - ஒவ்வொருவன்.
பிரதிபூசனம்-வணக்கம், ஒடுக்கம், மரியாதை.
பிரதிபேதம் - பாடபேதம்.
பிரதிபேதனம் - பிரித்தல், வெட்டுதல்.
பிரதிபை-அறிவு, கூர்மை, பிரகாசம், பிரதி காந்தி.
பிரதிபோதம்-கற்பித்தல், பதிலுரைத்தல்.
பிரதிப்பிரயோசனம் - கைம்மாறு.
பிரதிமண்டலம்-சுற்றளவு, கோணவட்டம்.
பிரதிமதை-பிம்பம், சாயல், பிரதிபலன.
பிரதிமாலை-ஈரெழுத்துக்கவி.[யானெநெற்றி
பிரதிமானம்-சாரூபம்,யானைக்கொம்பினடு,
பிரதிமுகம்-நாடகக்கட்டுரைச் சந்திவகையி லொன்று.
பிரதிமூர்த்தி-தோற்றம், பாவனை,பெயர்த் தெழுகை, ஒத்தவடிவம்.
பிரதிமை-விக்கிரகம், உருவம். உருவாரம்.
பிரதியாதனை-சாயல், ஒத்தவடிவம்.
பிரதியுத்தரம்-பிரத்யுத்தரம், மறுமொழி.
பிரதியுபகாரம்-பதிலுபகாரம், கைம்மாறு.
பிரதியெழுதல்-ஒன்றைப்பார்த்து அதுபோ லெழுதல், காப்பி எடுத்தல்.
பிரதியோகம் - எதிரிடை, கூட்டம்.
பிரதியோகி-எதிரி, கூட்டாளி, பங்காளி.
பிரதிராத்திரம் - இரவுக்கிரா, பிரதிநிசம்.
பிரதிரூபம் -பிரதிமை, பிரதிமூர்த்தி.
பிரதிரோதகன் -எதிரி, கள்வன்.
பிரதிரோதம் - எதிரிடை, களவு, மறைத் தல், முற்றுகைபோடுதல்.
பிரதிரோதி - திருடன், வீரோதி.
பிரதிலப்பம் - இலாபம், வரும்படி.
பிரதிலோமசன் } இழிபுயர்பாண்பெண்ணி
பிரதிலோமன் } ற்பிறந்தோன்.
பிரதிவசதம் - கிராமம், பிடாகை, சிற்றூர்.
பிரதிவசனம் - இணக்கம், எதிரொலி.
பிரதிவாகு - (1) கிருஷ்ணன் வம்சத்து வச் சிரன் புத்திரன் (2) அக்ரூரன் தம்பி.
பிரதிவாக்கியம் - மறுமொழி, ஒவ்வொரு வாக்கியம், தனித்தனியான வார்த்தை.
பிரதிவாசரம்-நாளுக்குநாள், தினக்கிரமம்.
பிரதிவாணி-பிரதிவாக்கியம், எதிர்மொழி, வாக்கியம் ஒவ்வொன்றும்.
பிரதிவாதம் - எதிர்வாதம், தர்க்கம்.
பிரதிவாதி - எதிர்வாதி, வீரோதி.
பிரதிவாதித்தல்-எதிர்வாதஞ் சொல்லுதல்.
பிரதிவாதிப்பு - மறுமொழி, எதிர்வாதம்.
பிரதிவாபம்-மருந்தனுபானம்,மருந்துண்ணு முறை. [தியிடத்துப் பிறந்தபுத்திரன்.
பிரதிவிந்தியன் - தருமராஜனுக்குத்தோப
பிரதிஷ்டானபுரம்-இது கங்கையும், யமுனை யும் கூடுமிடத்துக்குக் கிழக்கேயுள்ள வோர் நகரம். [நிலை நாட்டுதல்.
பிரதிஷ்டித்தல் - தெய்வத்தை நிறுவுதல்,
பிரதிஷ்டை-தாபித்தல், நிலைபெறுத்துகை.
பிரதிவிம்பம் - கண்ணாடி முதலியவற்றிற் றோன்றும் போலியுரு, எதிர்ச்சாயை.
பிரதிவிம்பர்-உபதேசர்,ஒரேசாயலுள்ளவர்.
பிரதிவிம்பித்தல் - போலியுருத்தோற்றுதல், பிரதிபிம்பித்தல், உருவெளித்தோற்றம்.
பிரதிவேசம் - அயல்வீடு, அண்டைவீடு.
பிரதீகம் - அவயவம், பங்கு, உறுப்பு.
பிரதீகாரம்-இணக்கம்,கதவு,சீர்திருந்துகை, பழிவாங்கல், மருந்துசெய்தல், சிகிற்சை, சினமாறுகை, எமாற்றுகை.
பிரதீசி
பிரதீசனம் } மேற்கு, குடதிசை.

பிரதீதம் - கீர்த்தி, சங்கை, சந்தோஷம்.
பிரதீதி-அறிவு,கீர்த்தி,விருப்பம்,மகிழ்ச்சி.
பிரதீபம் - எதிர், ஒப்பிடல், வக்கிரித்தல்.
பிரதீபவசனம் - எதிரிடை, முகங்கோடாது மறுமொழிகொடுத்தல்.
பிரதீபனம் - எவுதல், ஓர்மருந்து.
பிரதீபன்-சந்திரவமிசத்துப்பீமன் புத்திரன், இவன் மனைவி சுகந்தை, புத்திரர் தேவாபி, சந்தனு, பாக்லீகன். இவன் பாண்டு புத்திரனல்லன்; இவன் தொடையில் கங்கை வந்து, உட்கார்ந்து உன்னை மணப்பேன் எனத் தொடையில் உட்காருபவர்கள் புத்திரன், புத்திரி, மருமகள் முதலியோர். நான் ஏகபத்தினீவிருதன் என்று கூறி மறுத்தவன்.
பிரதீபாலங்காரம் - எதிர்நிலையணி.
பிரதீரம் - கரை, நீர்தாங்கி, அருகு.
பிரதீவாபம் - அனுமானஞ்சேர்த்தல்,உபத்திரவம், உலோகநீற்றல்.
பிரதுகம் - அலகுள்ள பட்சி, கழுகு. [தல்.
பிரதெட்சணம் - பிரதட்சணம், வலம்வரு
பிரதேகம் - அபிஷேகம், அபிடேகம்.
பிரதேசம் - இடம், பிறதேசம். [பாடு.
பிரதேசனம்-காணிக்கை,வெகுமதி, வெளிப்
பிரதேசனி } முன்விரல், பிரதமவிரல்.
பிரதேஸினி }
பிரதை - அருச்சுனன்தாய், ஈகை, கீர்த்தி, பாண்டுவின் மனைவியான குந்திதேவி.
பிரதோஷகாலம் } திரயோதசித்
பிரதோஷபுண்ணியகாலம் } திதியிற் பொழுது அத்தமிக்குமுன் மூன்றே முக்கா ஞழிகை தொடங்கி,அத்தமித்து மூன்றே முக்கா ஞழிகை பரியந்தமுள்ள நேரம், பிரதோடம், பிரதோஷம்.
பிரதோதம் - அங்குசம், சம்மட்டி, தோட்டி.
பிரஸ்தம் - ஓரளவு, மலைமேற் பரந்த தலம், வயிரமானது, விசாலித்தல். [கை.
பிரஸ்தரம் - இரத்தினம், ஓரிசை, கல், படுக்
பிரத்தம் - அளவுநாழி, பிரமாதம்.
பிரத்தல் - எழுத்திலா ஒலி, ஓசை.
பிரத்தாபம் } அவசரம், பதிரங்கம், அத்தி
பிரஸ்தாபம் } யாயம், அறிவித்தல், சமயம், புகழ்ச்சி, வெளிப்படுத்தல்.
பிரஸ்தாபனம் - அனுப்பல், நியமித்தல்.
பிரஸ்தாபனை-கட்டியம், துவக்கம், வெளிப்படுத்தல், பிரத்தாபனை, பிரஸ்தாபம்.
பிரஸ்தாபித்தல் - தெரியப்படுத்துதல், சொல்லுதல். [புட்பசயனம்.
பிரஸ்தாரம் - காடு, படுக்கை, பிரத்தாரம்,
பிரஸ்தாவம்-குறிப்பிட்டுச்சொல்லுகை, பேச்சுக்குரிய சந்தர்ப்பம், புகழ்ச்சி, வதந்தி.
பிரஸ்தானம் - புறப்படுகை, வெளிப்படுகை.
பிரத்தாரம் - தானப் பிரமாணம் பத்தினென்று.
பிரத்திக்கினை - பிரதிக்கினை, விரதம்.
பிரத்திட்சம் - பிரத்தியட்சம், பிரசன்னம்.
பிரத்திதம் - கேட்கும் பொருள். [சி.
பிரத்தியக்கதரிசனம் - கண்ணுற்கண்டகாட்
பிரத்தியக்கப்பிரமாணம் - பிரத்தியட்சப் பிரமாணம், காட்சிப்பிரமாணம்.
பிரத்தியக்கம் - காட்சியளவை, பிரத்தியட்சம், பிரத்யம், கட்புலன்.
பிரத்தியக்காசாபதி - வருணன். [ன்.
பிரத்தியக்கிரன் - உபரிசிரவசுவின் புத்திர
பிரத்தியக்கு - பிரிவு, மேற்கு, வேறு.
பிரத்தியங்ஷநாயகியம்மை - திருக்கரவீரத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்.
பிரத்தியங்கம்-உபாங்கம், பரதவுறுப்பு வொன்று, பிரதியுறுப்பு, மூக்கு முதலியன.
பிரத்தியங்கிரி - ஓர் தேவதை.
பிரத்தியட்சக்கிரகணம் - கண்ணுக்குப் புலப்படும் கிரகணம். [காட்சி.
பிரத்தியட்சதரிசனம் - கண்ணுற் கண்ட
பிரத்தியட்சப்பிரமாணம்-கண்ணாலே கண்டு நிச்சயிப்பது.
பிரத்தியட்சம் - காணத்தக்கது, காண்பது
பிரத்தியட்சாபாசம் - காட்சிப்பிரமாணம்.
பிரத்தியதனம் - உணவு, ஆகாரம், புசிப்பு.
பிரத்தியரீகன்-சத்துரு,வீரோதி,பகைவன்.
பிரத்தியபகாரம் - தீமைக்குப் பிரதியாகச் செய்யுந் தீமை.
பிரத்தியபதம் - விகுதி, ஈற்றுநிலை, விகிருதி.
பிரத்தியபம்-அறிவு,ஆணை,கீர்த்தி,தியானம் நம்பிக்கை, நிச்சயம், நோக்கம், விகுதி.
பிரத்தியபாயம் - காணத்தக்கது, பிரத்தியக்ஷம்.
பிரத்தியம் } குறுக்கு,விகுதி.[ஈற்றுநிலைச
பிரத்தியயம் } ஸம்கிருதவிகுதி,வடமொழி.
பிரத்தியருத்தம் - எதிரிடை, மறுமொழி.
பிரத்தியவசாநம் - போசநம், புசிப்பு.
பிரத்தியவதிதம் - பட்சித்தல்.
பிரத்தியவாயம் - எதிர், குற்றம், நம்பி மோசம்போதல், பாவம். [டல்.
பிரத்தியவியோகம் - எதிர்வழக்கு, எதிரா
பிரத்தியாகாரணம் - புலனடக்கல்.
பிரத்தியாகதம் - கமகம் பத்தனுள் ஒன்று.
பிரத்தியாகாரம் - இருந்துவாங்கல், உபாதியை நீக்கியுண்ணேக்கல், இஃது அட்ட

யோகத்தொன்று, எடுத்துக்கொள்ளுதல், சுருக்கம், படையுறை, பற்றுதல்.

பிரத்தியாக்கியானம் - தள்ளல், தள்ளுதல், நிந்தை, மறுத்தல்.

பிரத்தியாசக்தி - கலப்பு, சேர்க்கை. [குதி.

பிரத்தியாசரம் - சேனை, கூட்டம், படைமி

பிரத்தியாசாரம் - அணிவகுப்பு, சேனை, தானை.

பிரத்தியாசேதம் - அசரீரிவார்த்தை, அறிவித்தல், எச்சரித்தல், தள்ளுதல், மறுத்தல்.

பிரத்தியாசை - நம்பிக்கை, நிச்சயம்.

பிரத்தியாபாசம் - ஓரளவை.

பிரத்தியாப்திகம் - இறந்தவர்களைக் குறித்து ஒவ்வொரு வருஷமும் நடத்தும் சிரார்த்தம்.

பிரத்தியாலீடம் - வலக்கான் முன் வைத்திடக்கான் மண்டலித்து நிற்கு நிலை.

பிரத்தியுத்தரம், பிரத்தியுத்தாரம் } கைம்மாறு, மறுமொழி, பிரதியுத்தரம்.

பிரத்தியுத்தானம்-உபசரித்தல், வழிபடுதல்.

பிரத்தியுத்தி - மறுமொழி, பிரதியுத்தரம்.

பிரத்தியுபகாரம்-கைம்மாறு, பிரதியுபகாரம்.

பிரத்தியும்நன் - கிருஷ்ணனுக்கு ருக்மணியிடத்துப்பிறந்தபுத்திரன், இவன்மனுவிரதி.

பிரத்தியுற்கம் - யுத்த நிமித்தம்.

பிரத்தியுற்பன்னம் - ஆயத்தம், பெருக்கம்.

பிரத்தியூகம் - தடை, எதிரிப்படை வியூகம்.

பிரத்தியூசன், பிரத்தியூஷன் } அட்ட வசுக்களி லொரு வன்.

பிரத்தியேகம் - தனிமை, சிறப்பியல்பு.

பிரத்தியேகாச்சியம் - தனியரசு.

பிரத்தியோகம் - மனவேற்றுமை, நடு.

பிரத்தியோகார்த்தம் - யுத்தநிமித்தம். [தம்.

பிரத்தியோதம் - கிரணம், பிரபை, சோபி

பிரத்தியோதநன், பிரத்தியோதனன் } சூரியன், கதிரவன்.

பிரத்தியோதன் - சுநகன் புத்திரன்; தந்தையால் அரசனுக்குவிற்கப்பட்டவன். இவன் வமிசத்துப் பிறந்த அரசர் ஐவர் 138-வருஷம் பூமியை ஆண்டார்கள்.

பிரத்துதம் - உபமேயம்.

பிரத்துதாங்குராலங்காரம் - வருணியமாகிய ஓர் வரலாற்றை வருணிக்கும் காலேயில் ஒவ்வொரு வருணியமாகிய திட்டமான வரலாறு விளங்கும் அணி.

பிரத்துலம்-பருத்தல், பெருத்தல். [பாவம்.

பிரத்துவமிசாபாவம் - அழிவு, ஊறுபட்ட

பிரத்தொங்கிசம் - நீமைக்குத் நீமைசரிக் கட்டல், பழிவாங்குகை. [சம்.

பிரதிகாதனம் - கொலை, ஊறுகோள், விரு

பிரந்தயோகம் - கூட்டம், திரள், தொகுதி.

பிரந்தாகாரம் - அதிசயம், அதிரோகம், அற்புதம், புதுமை, வியப்பு, ஆச்சரியம்.

பிரந்தாரம் - அழகு, சுந்தரம், வடிவம்.

பிரந்திட்டம் - மிகுகூட்டம், நெருக்கம்.

பிரந்தை - சமூகம், கூட்டத்தார்.

பிரபஞ்சகாரியம் - இலௌகிக காரியம், உலக விருத்தியின் வேறுபாடு.

பிரபஞ்சக்கட்டு - இலௌகிக மயக்கப் பெருக்கம், உலகபந்தம். [உலக ஆசை.

பிரபஞ்சசாகரம் - இலௌகிக மயக்கம்,

பிரபஞ்சபந்தம், பிரபஞ்சபாசம், பிரபஞ்சமாயை } பிரபஞ்சக்கட்டு, வாழ்க்கை ஒழுங்கு, இலௌகிக மாயை.

பிரபஞ்சமூலம் - பிரபஞ்ச காரணமான மாயை, பிரகிருதி.

பிரபஞ்சம் - உலகம், எத்து, கூட்டம், சேனை, பகிடி, மாயை, மாறு, விசாலம்.

பிரபஞ்சலட்சணம்-அசத்து, சடம், துரக்கம்.

பிரபஞ்சவாசனை - உலக இன்ப துன்ப அனுபவம்.

பிரபஞ்சவாதனை-இலௌகிகாப்பியாசம்.

பிரபஞ்சவாழ்வு - இலௌகிக சம்பாஷணை, இலௌகிக வாழ்க்கை, உலகவாழ்க்கை.

பிரபஞ்சவியாபாரம் - இலௌகிக காரியம்.

பிரபஞ்சவிரக்தி, பிரபஞ்சவிராகம் } உலக வெறுப்பு.

பிரபஞ்சவிருத்தி - உலகச்செய்கை, மாயாகாரிய விருத்திப்பு, உலகவிளக்கம்.

பிரபஞ்சவிலாசம் - மாயாகாரிய சம்பிரமம்.

பிரபஞ்சவைராக்கியம்-உலக வெறுப்பு, பஞ்சமாபாதகஞ் செய்வதில்லை எனக்கொள்ளும் விரதம்.

பிரபஞ்சனன் - காற்று, கால், வளி. [கியதி.

பிரபஞ்சாசாரம் - உலகவொழுக்கம், உலக

பிரபஞ்சானுக்கிரகம் - உலக தயை.

பிரபஞ்சி - பிரபஞ்சத்தை உடையது.

பிரபதனம் - அடைந்துகொண்டது, அழிவு, மரணம், வீழுதல்.

பிரபதன் - மகன், புத்திரன், மைந்தன்.

பிரபதை - மகள், புத்திரி, தனயை.

பிரபந்தகற்பனை-கட்டுரைக்கதை, கட்டுரை.

பிரபந்தம் - கதை, தொடர்பு, பாமாலை, தொண்ணூற்றாறு வகைப்பட்ட நூல், அடிவரையறையின்றிப் பல தானத்தால் புணர்க்கும் உரு. ஆழ்வாரருளிச்செயலாகிய திவ்வியப் பிரபந்தம்.

பிரபந்நன் - சரணடைந்தவன்.
பிரபம் - தண்ணீர்ப்பந்தர், தருமசீர்ச்சாலே.
பிரபலம்-கீர்த்தி, தளிர், பெலன், முக்கியம்.
பிரபலன்-சௌரியவான், பேர்போனவன்.
பிரபலஸ்தன் - பிரபலன், புகழுடையான்.
பிரபலியம் - கீர்த்தி, முக்கியம்.
பிரபலோற்பலன் - விஷ்ணுபரிசாரகரு ளொருவன்.
பிரபல்லியம் - பிரபலம், பிரக்கியாதி. [டு.
பிரபவ - ஆண்டுகள் அறுபதனுள் முதலாண்
பிரபவம் - ஆதாரம், காரணம், பிறப்பு, பெ லன். [தல்.
பிரபன்னம் - அடைதல், ஒதுங்குதல், சேரு
பிரபா - பந்தல், பிரமம், முதற்பொருன், சூரியன் துவாதச கலையில் ஒன்று.
பிரபாகரம் - ஆறுசாத்திரத்தொன்று.
பிரபாகரன் - அக்கினி, ஓர்நூலாசிரியன், சந்திரன், சமுத்திரம், சூரியன். [நுளம்பு.
பிரபாகீடம் - மின்மினிப்பூச்சி, கச்சோதம்,
புட்பமஞ்சரி - பூங்கொத்து, மலர்க்கொம்பு.
புட்பமஞ்சரிகை - மேலோற்பலம்.
புட்பமழை - பூமாரி, புட்பவருஷம்.
புட்பமாசம் - தளிர்காலம்.
புட்பமாரி - புட்பமழை, பூமழை, பூவருஷம்.
புட்பமாலை - தொடையல், புட்பஹாரம்.
புட்பம் } ஓர் கண்ணேய், புட்பகம், பூ, மக
புஷ்பம் } ளிர் சூதகம், வாழை, விசாலம்.
புட்பரசம்-பூந்தேன், மகரந்தம், புட்பரதம்.
புட்பரதம் - பூந்தேர், புட்பராசம்.
புட்பராகம் - நவமணியிலொன்று, பீதமணி.
புட்பரேணு - பூந்தாது, பூவின் இதழ்.
புட்பலாவகன் } சாலியனுக்கும், பார்ப்பினி
புட்பலாவன் } க்கும் பிறந்து பூக்கொய்து மாலைகட்டி விற்போன், பூவாணியன்.
புஷ்பலோலுபம் - மலர்வண்டு, பிரமரம்.
புஷ்பவதி - ரஜஸ்வலை, இருதுவானவள்.
புஷ்பவருஷம் - புட்பாஞ்சலி, மலர்மழை, புட்பவருடம். [அரசன்.
புஷ்பவாகனன் - புஷ்கரன், அருகன், ஓர்
புஷ்பாரணன் - சூரியன், மார்த்தாண்டன்.
புஷ்பாரணன்மனைவி - பிரபை.
புஷ்பாரணன்மக்கள்-பிராதக்காலம், மத்தியானம், சாயங்காலம்.
புட்பவாடி } பூந்தோட்டம், மலர்வனம்,
புட்பவாடிகை } பூங்காவனம்.
புட்பவிமானம் - பூந்தேர், புட்பரதம்.
புட்பறை - பறைவகையிலொன்று. [கொடி.
புட்பாகம் - மூக்கிரட்டை, மூக்கரட்டைக்
புட்பாகன் - திருமால், பத்மநாபன்.
புட்பாசவம் - தேன், சுரை. [னன்.
புட்பாசனன் - பிரமன், கமலவூர்தி, கமலாச
புட்பாசனி - இலக்குமி, சரஸ்வதி.
புட்பாசீவனி } பூமாலைக்காரன், பூவாணி
புட்பாசீவி } யன்.
புட்பாஞ்சலி - புட்பஞ்சொரிந்து வந்தித்தல், இரண்டு கையும் குவித்துக் கும்பிடல்.
புட்பாத்திரன் } காமன், புட்பசரன், மன்ம
புஷ்பாயுதன் } தன், வசந்தன், மதனன்.
புட்பிகை - இந்திரியம், சுக்கிலம், பல்லழுக்கு, மாதவிடாயான பெண், புட்பிதை.
புட்பிதை - பூப்பதாரி, புட்பிகை. [வாதல்.
புட்பித்தல் - மலர்தல், முகமலர்தல், இருது
புட்பேந்திரம் } சண்பகமரம், செண்பகம்.
புஷ்பேந்திரம் }
புணராதார் - பகைவர், கூடாதார், பிரிந்தோர்.
புணரி - அலை, கடல், கல்லோலம்.
புணரிய - புணர, புணர்ந்த.
புணரியல் - உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுபுணரியல் அமைந்த இலக்கணப் பகுதி.
புணரியிற்றுயின்ரோன் - அலைகடற்றுயின்ரோன், திருமால், பாற்கடற்றுயின்ரோன்.
புணரியோர் - புணர்ந்தோர், கூடியோர், சேர்ந்தோர்.
புணருதல் - புணர்தல், கூடுதல். [கை.
புணர் - புணரென்னேவல், புதுமை, சேர்க்
புணர்க்கை - சேர்க்கை, புணர்ப்பு.
புணர்ச்சி - இசைப்பு, இசைவு, எழுத்து முதலியவற்றின் சந்தி, கலத்தல், சேர்க்கை,

அளவளாவுகை, இயைபு.
புணர்ச்சிமாலை-தண்டகமாலை. [யிலொன்று.
புணர்ச்சியின்மகிழ்தல்- அகப்பொருட்டுறை
புணர்ச்சிவிகாரம் - சொற்றொடரின் வரும் தோன்றல், திரிதல், கெடுதல் எனும் விகாரங்கள். [விருப்பம்.
புணர்ச்சிவிதும்பல் - புணர்ச்சிக்குவிரையும்
புணர்தம் - புனர்பூசம், அசுவினி, கழை.
புணர்தல்-இசைதல், இணங்கல், இணைதல், கலத்தல், சார்தல், விளங்கல், பொருந்துதல், கலவிசெய்தல், அளவளாவுதல், எழுத்து முதலியன சந்தித்தல்.
புணர்தை -பூசம், குருநாள், புனர்பூசம்.
புணர்த்த - சேர்த்த, கூட்டிய.
புணர்த்தல் புணர்த்துதல் } அணிதல், இணைத்தல், இயைவித்தல், உண்டாக்கல், உபாயஞ்செய்தல், புணரச்செய்தல், விளங்கச்செய்தல், எழுத்து முதலியன சந்திக்கும்படி செய்தல்.
புணர்நிலை-ஓரலங்காரம், அஃது: யாதோர் பொருளுடனே பிறிதோர் பொருளுங்கூடநிகழ்வதாய்ச் சொல்லுதல்.
புணர்ந்தன்று-புணர்ந்தது, கூடியது, சேர்ந்தது, கைகூடியது. [தம்.
புணர்பூசம் - அசுவினிநாள், புனர்பூசம், புணர்
புணர்ப்பு - இணைப்பு, உடல், கூடல், தந்திரம், மாயம், புணர்ச்சி, எழுத்து முதலியவற்றின் சந்தி, நட்பு, துணை, சூழ்ச்சி, செயல்.
புணர்ப்போர் - சேர்த்து வைப்போர், கலியாணஞ்செய்துவைக்குங் குரவர், காதலரைச் சேர்த்து வைப்போர்.
புணர்மார் - புணர்வார், புரை,புணர்தற்கு.
புணர்வி - கூடியவன்.
புணர்வு - இசைவு, இணைவு, உடல், கலப்பு, புணர்ச்சிக்காலம்.
புணை - தெப்பம், புணையென்னேவல், மரக்கலம், மூங்கில், விலங்கு,சூடு,ஆண்ஜாமீன், ஒப்பு, நிகில், ஆதாவு. [ணைக்குங்கயிறு.
புணைகயிறு - பூட்டாங்கயிறு, மாடுகளைப்பி
புணைக்கட்டை - கட்டுமரம், புணைமரம்.
புணைத்தல் - கட்டல், பிணைத்தல். [தல்.
புணைப்படுதல் - ஜாமீனுதல், உத்தரவாதமா
புணையடித்தல்-பிணையடித்தல், வைக்கோல் முதலிய தாளிலிருந்து தானியங்களைப் பிரித்தெடுப்பதற்குப்புணைமாட்டைக்கொண்டு மிதிப்பித்தல்.
புணையல்மாடு - பிணையல்மாடு, கயிற்றால் பிணைத்தமாடு, இணைமாடு.
புண் - ஊன், விரணம், இரணம்.
புண்கூர்தல் - காயப்படல், வருத்தப்படல், கோதல்.
புண்டரகேளி - யானை,மாதங்கம்,வாரணம்.
புண்டராகரம் - வாசவதத்தை, சாங்கியத்தாய், ஊகி இவர்கள் வேறுவடிவில்தங்கியிருந்த நகரம்.
புண்டரநீறு - திருநீறு, தூளிதம்.
புண்டரம் - இரேகை, கழுகு, செங்குரங்கு, நெற்றிக்குறி, வெண்கரும்பு, வெண்டாமரை, ஒருதேசம்; இது: வங்காளத்துக்கு மேற்கேயுள்ளது.
புண்டரன்-ஓர்வைத்யன்.(1)பலியின்புத்ரன் இவனுல் பௌண்டரநாடுஉண்டாயிற்று.
புண்டரிகத்தவன் புண்டரிகன் } பிரமன், கமலயோனி.
புண்டரிகம் - புண்டரீகம், கமலம், தாமரை.
புண்டரிகை - இலக்குமி, கமலாசனி, ஒரு பொய்கை.
புண்டரீகபுரம் - சிதம்பரம், தில்லைவனம்.
புண்டரீகக்கண்ணன் - திருமால், கமலக்கண்ணன்.
புண்டரீகப்பிரியன்-காலவமுனி, காலவரிஷி.
புண்டரீகம் - ஓர்நோய், ஓர்பாம்பு, ஓர்மருந்து, கழுகு,தாமரை, புலி, யானைநோய், வண்டு,வெண்கொற்றக்குடை,வெண்டாமரை, யாகவகை,கமண்டலம். (1) அக்கினிக்குக் காவல்பூண்ட ஆண்யானை, (2) ஒரு தீர்த்தம்.
புண்டரீகன் - நபசுவின் புத்திரன்.
புண்டரீகாட்சன் புண்டரீகாக்ஷன் } முண்டகக்கண்ணன், தாமரைக்கண்ணன்.
புண்டரீகை - இலக்குமி, திருமகள்.
புண்டரீயம் - ஓர்வகை மருந்துக்கொடி.
புண்டலீகன் - சூத்திரன், வஞ்சகன்.
புண்டாரம் - சூரியன்கைச் சங்கு.
புண்ணுக்கு - பிண்ணுக்கு, மடையன்.
புண்ணுக்குக்கீரை - பிண்ணுக்குப்பூண்டு.
புண்ணுங்குரு - குழிப்புண்.
புண்ணுடு-புன்காடு, ஆய், எயினன் நாடு.
புண்ணியகந்தம் - சண்பகம்,புஷ்பேந்திரம்.
புண்ணியகருமம் - நற்செயல், சற்கருமம்.
புண்ணியகாரம் - குங்கிலியம்.
புண்ணியகாரியம் - புண்ணியகருமம்.
புண்ணியகாலம் - சுபவேளை. [சவீடு.
புண்ணியகேத்திரம் - புண்ணியபூமி,மோட்
புண்ணியக்கதை - தருமசரித்திரம். [குணம்.
புண்ணியக்கருத்து - தருமசிந்தை, தயாள
புண்ணியசடம் -சற்சனன்,புண்ணியதேகம்.

புண்ணியசரவணம் - அழகர் மலையிலுள்ள வோர் பொய்கை; இதில்: மூழ்குவோர் களுக்கு இது ஐந்திரியாகரணத்தை யுணர்த்துவது. [ரம்.
புண்ணியசரித்திரம்-புண்ணியகதை, நீதிசா
புண்ணியசரீரம் - புண்ணியசடம், தூய்மை யுடையவ-ன்-ள்.
புண்ணியசனம்-சற்சனர், பரிசுத்தர். [வன்.
புண்ணியசனேசுவரன்- குபேரன், நிதிக்கிழ
புண்ணியசன்மம்-சற்சன்மம், புண்ணிய சரீ ரம்.
புண்ணியசாந்தம் / புண்ணியசாந்து } சாணம், விபூதி, தூளி தம். [வான்.
புண்ணியசாலி - புண்ணியவான், பாக்கிய
புண்ணியசுலோகன் - உதிட்டிரன், நவன்.
புண்ணியசுலோகை - சீதை, திருபதி.
புண்ணியசேத்திரம் / புண்ணியகேஷத்திரம் } பரிசுத்த தலம்.
புண்ணியதலம்-தருமத்தை விருத்தியாக்குந் தலம், புண்ணியத்தலம். [திரதானம்.
புண்ணியதானம் - தருமக்கொடை, சற்பாத்
புண்ணியதிசை-வடதிசை.
புண்ணியதிரணம் - வெண்டருப்பை.
புண்ணியதேகம் - புண்ணியசரீரம்.
புண்ணியத்தோற்றம்-நற்குண, நற்செய்கை யுடைத்தாயிருத்தல். [ஸ்தலம்.
புண்ணியத்தலம்-புண்ணியதலம், புண்ணிய
புண்ணியத்தானம் / புண்ணியஸ்தானம் } உதயத்திற் கொன்ப தாமிடம், புண்ணியத் தலம், புண்ணியகேஷத்திரம். [உத்தரம்.
புண்ணியத்திசை - வடதிசை, மதிதிசை,
புண்ணியத்தினம் - சுபதினம், விசேஷநாள்.
புண்ணியத்தீர்த்தம் - பாவ விமோசன நீர், புண்ணியத்துறை. [புண்ணியச்செய்கை.
புண்ணியத்துறை - புண்ணியத் தீர்த்தம்,
புண்ணியநதி - புண்ணியம்பயக்கும் ஆறு, பரிசுத்த நதி, கங்காதீர்த்தம்.
புண்ணியபலம் - புண்ணியப்பேறு, நல்வி னைப்பயன். [குமாரன்.
புண்ணியபுத்திரன்-சற்புத்திரன், புண்ணிய
புண்ணியபுருஷன் - சற்புருஷன், தரும வான், பாக்கியசாலி, குணவான்.
புண்ணியபூ / புண்ணியபூமி } புண்ணியகேஷத்திரம், புண் ணியஸ்தலம்.
புண்ணியப்புல் - தருப்பை, அறுகு.
புண்ணியமுதல்வி - பார்வதி, தவத்திற் சிறந்தவள், பிகூணி.
புண்ணியமுதல்வன் / புண்ணியமூர்த்தி } அருகன், கடவுள், புத் தன்.
புண்ணியம்-அறம், திவ்வியம், தூய்மை, நல் வினை, நீர்த்தொட்டி, நற்கருமம். [கம்.
புண்ணியாஜி - சுகூத்ரலோகம், நல்லயோ
புண்ணியாதித்திரம் - சுபாதித்திரி.
புண்ணியாசசன் - நாகபுரத்தரசன், தரும ராயன் எனவும்படுவான், மூற்பிறப்பில் ஆபுத்திரன்.
புண்ணியரூபி - திவ்வியரூபி, சிறந்தோன்.
புண்ணியர் - சாண்ரோருள்ளிட்டோர், பா ர்ப்பார்.
புண்ணியலோகம்-தேவபதவி, பிதிருலகம்.
புண்ணியவதி-புண்ணியவாட்டி, மங்களவதி.
புண்ணியவாசனம் - புண்ணியயாகம்.
புண்ணியவாட்டி - தருமவதி, யோகவதி.
புண்ணியவாளன் / புண்ணியவான் } தருமவான், தயாளு.
புண்ணியன் - அரசன், அருகன், ஓர் இருடி புத்திரன், சிவன், சுத்தன், தருமவான், புத்தன், புண்ணியவான்.
புண்ணியஸ்தலம் / புண்ணியஸ்தானம் } புண்ணியகேஷத்திரம்.
புண்ணியாகம்-ஆசூசநிவாரணம், புண்ணியா கவாசனம், சுத்தியைப்பிறப்பிக்கும்கருமம்.
புண்ணியாகவாசனம்-ஆசூசநிவாரணம்.
புண்ணியாகனம்-பரிசுத்தநாள், சிறந்தநாள்.
புண்ணியாக்கம் - குந்துருக்கம், ஓர்மருந்து.
புண்ணியாத்துமா-சற்சனன் புண்ணியவான்
புண்ணியாவாசனம்-புண்ணியாகவாசனம்.
புண்ணியை - துளசி, புண்ணியவதி.
புண்ணியோதயம்-அதிட்டம், அதிருஷ்டம்.
புண்ணீர்-இரத்தம், சீழ். [உடம்பு.
புண்ணுடம்பு - பச்சையுடம்பு, பிரசவித்த
புண்படுதல் - புண்ணுதல், மனநோயுண்டா தல், காயமடைதல், வருந்துதல்.
புண்படுத்துதல்-புண்ணுண்டாக்குதல், வரு த்துதல், மனம் நோவச்செய்தல்.
புண்வாய் - புண்ணிற்றுவாரம்.
புத - வாயில், குழைவழி, கடவை.
புதசனன்-அறிஞன், புத்திமான், வித்துவான்
புதசுதன் - புரூரவச்சக்கிரவர்த்தி.
புததாதன் - சந்திரன், புதன் தந்தை.
புதப்பிரியம் - மரகதரத்தினம், பச்சைமணி.
புதரெலி - எலிவகை, வெள்ளெலி.
புதர் - ஞானிகள், நூறு, தேவர், புலவர், புல்.
புதல் - நாணல், புருவம், புல், பூடு, நூறு, அரும்பு, பற்றை. [கட்பேறு.
புதல்வர்ப்பேறு-புத்திரரைப் பெறுதல், மக
புதல்வன் - மகன், புத்திரன், கால்வழி.
புதல்வி - மகள், புத்திரி, தனயை.

புதவம் - வாயில், அறுகு. [நாள்.
புதவாரம் - புதன்கிழமை, புதனைக்குறித்த
புதவி - கோவிந்தராஜன் மனைவி, பிருதுவி சந்ததி.
புதவு - அறுகம்புல்லு, வாயில், கதவு, கதவு விட்டுப்புகும் வழி, கோபுரவாயிற்கதவு, கதவு, வாய்த்தலை.
புதற்பூ - புல் பூடு செடியினைகளின் பூ; இலீது: நால்வகைப்பூவி னொன்று.
புதன்கிழமை } புதவாரம், ஓர்கிழமை.
புதன்வாரம் }
புதா - கொக்கு, பெருநாரை, மரக்கால், போதா.
புதானன் - அறிஞன், குரு, பெரியோன்.
புதிசு } புதிய தது, நூதனமானது, புதீ
புதிது } னம்.
புதிதாக்கல்-புதுப்பித்தல், பழுதுபார்த்தல்.
புதிதின் - புதிதாக.
புதிதுணல் } வருடத்தில் புதிதாகவரு ம
புதிதுண்ணல் } ரிசியின் அன்னமுண்ணல், புதிதாய் ஒன்றைப் புசித்தல்,புதிருணவு.
புதியது - புதியதாகச் சமைத்ததோறு.
புதியநூட்பம் - தருக்கநூலொன்று.
புதியமனிதன்-அன்னியன், வேலையிற் புதி தாய் அமர்ந்தோன். [திருத்தவமதநூல்.
புதியவேற்பாடு-புதியவிவிலிய நூல், புதிய
புதியர் } வீருந்தர், புதிதாக வந்தவர்.
புதியவர் }
புதியனபுகுதல்-புதுமொழிவழங்கல்.[தினர்.
புதியோர்-புதியவர்,புதிதாய்வந்தவர், விருந்
புதிர் - புதிது, விடுகதை, சுற்றம், ஒக்கல்.
புதிலி - எண்ணெய்த் திருத்தி, பிதிலி.
புதினக்கடுதாசி - சமாசாரப் பத்திரிகை.
புதினம் - அதிசயம், நூதனம், புதியது.
புதினு - ஓர்கொடி. [பொருள்.
புதீதம் - புத்தம்புதிது, புதியது, நூதனப்
புது - நூதன, புதிய, அதிசய.
புதுக்க - புதிப்பிக்க.
புதுக்கடி - புதுமணம், புதுக்காவல்.
புதுக்கயந்துவண்ணக்கன்கம்பூர்கிழான் - ஓர் சங்கப்புலவர்.
புதுக்கருக்கு - ஆரம்பத்தில் சுறுசுறுப்பா யிருத்தல், புதுமுகனை, புதுப்புதுக்கை.
புதுக்கல் } புதுப்பித்தல்,அலங்கரித்தல்.
புதுக்குதல் }
புதுக்கு - புதுமைசெய்வேன், புதிதாக்கு.
புதுக்குடி - புதிதாய் வந்தேறியகுடி.
புதுக்கோ - புதிய அரசன், நகுஷன்.
புதுக்கோல் - புதிய யாழ், புதிது பிடிபட்ட பொருள், புதுக்கொள்கை, புதுக்கிரகம்.
புதுக்கோள் - புதிதாகக் காணப்பட்ட நட் சத்திரம்.
புதுக்கோள்யானை-புதிதாகப் பிடித்தயானை.
புதுசு - புதிது.
புதுச்சேரி - ஓர்பட்டினம், புதுவை. [ங்கள்.
புதுத்திங்கள் - பிறைச்சந்திரன்,பிரதமைத்தி
புதுநடை - புதிய ஒழுக்கம், புதுமுறை.
புதுநலம் - பழகாத நலம்.
புதுநாணயம் - புதியகாசு, நாகரிகவழுங்கு.
புதுபுதுக்கை - புதுமுகனை, புதுக்கருக்கு.
புதுப்பணம் - புதுநாணயம், புதுச்செல்வம்.
புதுப்பழக்கம்-புதியவழக்கம்,நூதனபரிசயம்
புதுப்பித்தல் - திருத்துதல், புதிதாக்கல்.
புதுப்பெயல் - முதன்முதல் பெய்யும் மழை.
புதுப்போக்கு-புதுமாதிரி,நூதனப்போக்கு.
புதுமணவாளன் - புதுமாப்பிள்ளை. [தன்.
புதுமனிதன் - புதியமனிதன், வேற்றுமனி
புதுமாப்பிள்ளை - புதிதாக விவாகமானவன்.
புதுமுகனை - முன்முகனை, தொடக்கம்.
புதுமை - அற்புதம், நூதனம், மிகுதி,எழில்.
புதுமைகாட்டுதல் - புதுமை செய்தல்.
புதுமைக்காரிகை - புத்தழகு, புதியவழகு.
புதுமைசெய்தல் } அற்புதஞ்செய்தல்.
புதுமைபண்ணல் }
புதுமொழிதல் - புதிய செய்தி கூறல்.
புதுவதின் - புதிதாக.
புதுவது - புதியது, நூதனமானது.
புதுவர் - வீருந்தினர், விருந்தாளி.
புதுவை - புதுச்சேரி, ஓர் தமிழ்முகப் பட் டினம், புதியவைக்கோல், புதியை, ஸ்ரீ வில்லிபுத்தூர். [யர்.
புதுவோர்- புதியோர், வீருந்தினர்,அன்னி
புதுவோன் - புதியவன், விருந்தினன்.
புதை - அம்பு, அம்புக்கட்டு, அறிவுடைமை, சரீரம்,புதுமை,புதையென்னேவல்,மறை விடம், மறைவு, புதைபொருள், உறை, கட்டு. [போர்த்தல்.
புதைஇ - மறைந்து, மறைத்து, பொத்தி,
புதைதல் - தாழ்தல், மறைதல், உள்ளடங்கி யிருத்தல், அழுந்தல், பதிதல்.
புதைத்தல் - சேமித்தல், தாக்குதல், மறைத் தல், பொத்துதல், போர்த்தல், பதித்தல், பலத்தைக் குறைத்தல், அமிழ்த்துதல்.
புதைபொருள் - புதைக்கப்பட்ட பொருள், மறைபொருள், ஆழ்ந்த கருத்து.

புதைப்பு - சேமம், தாழ்ப்பு, மறைவு.
புதையல் - புதைத்த திரவியம், புதைப்பு.
புதையா - மறைத்து, புதைத்து, மூடிட.
புதையிருத்தல் - மறைத்திருத்தல்.
புதைவனர் - மறைந்தவர்.
புத்தகம் / புஸ்தகம் } ஏடு, சித்திரப்படம்.
புத்தகயை - புத்தர் ஞானம்பெற்ற இடம், கங்காதீரத்துள்ளது.
புத்தசயித்தியம் - புத்தசைத்தியம், புத்தாலயம். [பிறப்புக்களைக் கூறும் நூல்.
புத்தசாதகக்கதை - புத்தனுடைய பழம்
புத்தசேடம் - உண்ட மிச்சில், புத்தர் அங்கு [தியம்.
புத்தசைத்தியம் - புத்தாலயம், புத்த சயித்
புத்தசௌத்திராந்திகன் - உருவம், ஞானம் வேதனை, குறிப்பு, வாசனை என்பன தொடர்ச்சியாய் அழிவது பந்தமென்றும், அவை முற்றும் ஒழிவதே முத்தியென்றுஞ் சொல்லுவோன்.
புத்தச்சு - புதிய அச்சு. [படாதது.
புத்தப்புதிய - மிகப்புதிய, அப்போதைய, மாசு
புத்தப்புதியது, மிகப்புதியது, அன்றலர்வு.
புத்தமதம் - பௌத்த சமயம்.
புத்தமித்திரன் - வீரசோழியம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர்.
புத்தமுதம் - புதியவமுதம், புத்தமிர்தம்.
புத்தம் - அதியப்படல், உணவு, புத்தமதம்; இது:புறச்சமயமாறிலொன்று,போசனம்.
புத்தவமிசம் - குத்திரபிடகத்து ஓர்உறுப்பு.
புத்தரக்கன்-பருத்தகுறளன்,தடித்தகுள்ளன்
புத்தர் - பௌத்த மதத்தை ஸ்தாபித்தவர்; இவர்:கங்கைக்குவடதிசையிலேரோகிணி நதிதீரத்தில் கபிலவாஸ்து என்னும் நகரத்திலே சுத்தோதனன் என்னும் அரசனுக்கு மாயாதேவி வயிற்றில் கி. மு. 573-க்குச் சரியான ஈசானசகம், 68-ஆம் வருடம் வைகாசி மீ 3உ வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தில் அவதரித்தவர். இவர் அவதரித்திருந்தபோது அசிதர் என்னும் மஹாமுனிவர் அங்கேவர, சுத்தோதனன் குழந்தையைக் கொண்டு போய் அவர் பாதத்திற் கிடத்தி ஆசீர்வதிக்கும்படிவேண்டிக்கொண்டான்.அசிதர் அந்தக் குழந்தையை வாங்கும்போது, அது தன் பாதத்தைத்தூக்க அப்பாதத்தில், ''சகஸ்ராரபத்ம தளரேகை'' இருப்பதைக்கண்டுவியப்புற்று அதன்சீர்பாதங்களைத் தன்னிரு கண்களிலும் ஒற்றிக்கொண்டு,அரனைநோக்கி ''அரசே! இவர் உலகம் புரக்கவந்த உத்தமர், இவர் உருவத்திலும், சீர்பாதங்களிலும் அந்த இலக்ஷணம் காணப்படுகின்றது. உமது பரம்பரை உள்ளளவும் பாக்கியமடைந்துவிட்டது. இவரை ஆசீர்வதிக்க நான் அருகனல்லன்'' என்று சொல்லிப் பலவாறு புகழ்ந்து போயினர். இவரது பிள்ளைத்திருநாமம் சித்தார்த்தன். இவர் கௌதம கோத்திரத்திலே சாக்கியர் குடியிலே பிறந்தமையால் கௌதமர் என்றும், சாக்கியர் என்றும் இரண்டு பெயருடையவராயினர்.புத்தர்என்னும்பெயர்பின்னே பெற்ற ஆச்சிரமப்பெயர். இவர் தமக்குக் கல்வி கற்பிக்கவந்த ஆசிரியர் சொல்லு முன்னே தாமே யோகியும், அவர் வழுவிய விடத்து அவ்வழுக்களைத் திருத்தியும் வருவாராயினர். அதுகண்டு அவ்வாசிரியர் நீங்கினர். அதன் பின்னர்ப் புத்தர் தாமாகவே சகல சாஸ்திரங்களையும் பழம் பாடம் படிப்பார்போலப் பூர்வ ஜன்மவாசனையால் ஓதி யுணர்ந்தார். இவரது பிரதம சிஷ்யர் ஆநந்தர் என்பவர். இவர் காலத்தரசர் விம்பசாரன், அஜாத சத்துரு முதலியோர் இவர் நிர்யாணமடைந்த போது இவர்க்கு வயது எண்பது.

இவர்போல முன்னும் காலாந்தரங்களிலே புத்தர் பலர் அவதரித்துப் பௌத்த மத ஸ்தாபகம் பண்ணிப் போயினராயினும் அவர்கள் பெயரெல்லாம் இந்தக் கௌதமபுத்தரால் ஒளியிழந்து போயின. முற்காலத்திலும் பல புத்தரிருந்தமை பற்றியே அவரோடு கலவாமல் இவரைக் கௌதமபுத்தரென்றும், சாக்கியபுத்தரென்றும்,சாக்கியமுனிவரென்றும் கூறுவர்.
புத்தலிற்சுதையார் - செய்தபொம்மை, அழகிய உருவம். [வன், கௌதமமுனி.
புத்தன் - பௌத்தசமயி, போதமேவடிவான
புத்தாடை - புதியவஸ்திரம். [ல்லிமரம்.
புத்தாத்திரி - அரிநெல்லி, புத்தாரி, அரிநெ
புத்தாம்பழம் - ஓர் உபரசப் பொருள்.
புத்தாரி - புத்தாத்திரி, அருநெல்லி.
புத்தி - அறிவு, இடித்துரை, உட்காணாநான்கினொன்று, கிரகதசையின் உட்பிரிவு, போதனை, நல்லுபாயம், அனுபோகம், விநாயகக் கடவுளது உபயசத்திகளுளொருவர்,மற்றொரு மனைவியின்பெயர் சித்தி.
புத்திகட்டை- புத்திக்குறைவு, அறிவிலான்.
புத்திகூர்மை - மனதுண்மை, விவேகம்,

கூர்ந்த அறிவு.

புத்திகெட்டவன் - மூடன், புத்திகட்டை.

புத்திகேடு - மதியீனம், புத்தியில்லாமை.

புத்திகோசரம் - அறிவுக்கு விஷயமாவது.

புத்திசாலி - யூகி, அறிவாளி, மதியூகி.

புத்திதடுமாறுதல் - புத்திகெட்டுப்போதல்.

புத்திதம் - எட்டிமரம்.

புத்திதாழ்ச்சி - மதிகேடு, புத்திகெட்டவன்.

புத்திதீட்சணம் } அறிவுக்கூர்மை,புத்திக்
புத்திதீட்சணியம் } கூர்மை.

புத்திநூட்பம் -.புத்திதீட்சணம்.

புத்திபூர்வமாய் - மனமறிய, மனதறிய.

புத்திமட்டு - புத்திக்குறைவு, ஞானமின்மை.

புத்திமதி - நற்போதனை, அறிவுபுகட்டல்.

புத்திமுட்டு - சங்கடம், யோசனைக்குறை.

புத்திமுட்டுதல் - சங்கடப்படுதல். [கம்.

புத்திமயக்கம் - அறிவுமயக்கம், அறிவுக்கலக்
புத்திமழுக்கம்-புத்திக்குறைவு,புத்தியிலான்.

புத்திமான் - புத்திசாலி. [வகை யுருத்திரர்.

புத்தியட்டகர்-புத்தி தத்துவத்திலுள்ள எண்

புத்தியறிதல் - இருதுவாதல், விரகறிதல்.

புத்தியிந்திரியம் - ஞானேந்திரியம்.

புத்தியீனம் - அறியாமை,பேதமை,மடமை.

புத்தியீனர் - அறிவீனர், புத்தித்தாழ்ச்சி.

புத்தியூட்டுதல் - புத்திபடிப்பித்தல்.

புத்திரகன் - அன்பன்; எத்தன். [திரஆசை.

புத்திரகாமியம் - புத்திரகாமேட்டியம், புத்

புத்திரகாமேட்டி - புத்திரயாகம்.

புத்திரகை - மகள், புத்திரியை. [சந்ததி.

புத்திரசந்தானம்-பின்சந்ததி, புத்திரர்,ஆண்

புத்திரசம்பத்து - புத்திர பாக்கியம்.

புத்திரசாரி - எட்டிமரம், புத்துருணி.

புத்திரசீவி - புத்திரசோகி.

புத்திரசுவிகாரம் - பிறர்பிள்ளையைத் தன்
பிள்ளையாக்கல், தத்தெடுத்துக்கொளல்.

புத்திரசெண்ணி - தாளி, தாளிப்பனை.

புத்திசேனன் - அசலன் மகன், சீவகன்
தோழன்.

புத்திசேன் - புத்திசேனன், மதிமாசேனன்.

புத்திரசோகம் } பிள்ளையை யிழந்து படுந்
புத்திரசோபம் } துயர்.

புத்திரசோகி- புத்திரசீவி,புத்திரசீவம், குழ
ந்தைகளுக்கு ரக்ஷையாகஉதவும் மரத்தின்
வித்து. [புத்திரனைத் தானம்பண்ணல்.

புத்திரதானம் - புத்திரரை செனிப்பித்தல்,

புத்திரத்தானம் - உதயத்திற்கு ஐந்தாமிடம்.

புத்திரதாதன் - பிள்ளையிலை ஆதரிக்கப்படு
பவன், பின்னையினற் காக்கப்படுபவன்.

புத்திரபாக்கியம் - பிள்ளைப்பாக்கியம்.

புத்திரபௌத்திரபாரம்பரியம்- பிள்ளைபாட்
டப்பிள்ளை முதலாகவரும் வமிசவரிசை.

புத்திரப்பிரதிநிதி - மஞ்சணீர்ப்பிள்ளை, தத்
துப்பிள்ளை. [செய்வழி.

புத்திரமார்க்கம் - கிரியாமார்க்கம், கருமஞ்

புத்திரயாகம் - புத்திரகாமியயாகம்.

புத்திரர் - பிள்ளைகள், மக்கள், புத்தர்.

புத்திரலாபம் - புத்திரசம்பத்து, மகப்பேறு.

புத்திரவதி - புத்திரசாலி, மகவுடையான்.

புத்திரவாஞ்சை - மக்களிடத்து அன்பு.

புத்திரவான் - புத்திரனுடையவன். [ஞ்சை.

புத்திரவேடனை - பிள்ளையிச்சை, புத்திரவா

புத்திரனி-மூள்ளி, செம்முள்ளி, நீர்முள்ளி.

புத்திரன் - மகன், தனையன். [தாமிடம்.

புத்திரஸ்தானம் - இலக்கினத்திற்கு ஐந்

புத்திரி - மகள், புத்திரிகை, தனையை.

புத்திரிகாசுதன் } மகள்மகன், புத்திரி
புத்திரிகாபுத்திரன் } யின் புத்திரன்.

புத்திரிகை - சித்திரப்பாவை, மகள்.

புத்திரிகைபுத்திரன் } புத்திரிகசுதன், பேர
புத்திரிபுத்திரன் } ன்.

புத்திரேடனை } புத்திரவாஞ்சை, மக்களா
புத்திரேஷணை } சை. [பாக்கியம்.

புத்திரைசுவரியம் - மக்கட்பேறு, புத்திர

புத்திரோற்பத்தி - புத்திரவுற்பத்தி.

புத்திவான்-புத்திசாலி, புத்திமான், மேதை.

புத்திறி - கறிமுள்ளி, கீழ்க்காய்நெல்லி.

புத்தின்சாரி - காஞ்சிரை, புத்துருணி.

புத்தீந்திரியம் - உள்ளிந்திரியம், மனம்.

புத்து - ஓர்நரகம், புதிது, புற்று, புத்திர
ரில்லாதவர் சென்றடைவதோர் நரகம்.
தந்தையைப் புத்தென்னும் நரகத்தினின்
று நீக்கிக் காப்பவனுதலால் மகனுக்குப்
புத்திரனென்னும் பெயருண்டாயிற்று.

புத்துமண் - புற்றுமண். [புதுநெய்.

புத்துருக்குநெய் - உடனே யுருக்கினநெய்,

புத்துருணி-எட்டி, புத்தின்சாரி, புத்தேன்,
புத்திரசாரி, புத்துவணி, புன்றிதம்.

புத்துரை - புதியவுரை.

புத்துவணி - காஞ்சிரை, புத்துருணி.

புத்தேணுடு - தேவலோகம், மேலுலகம்.

புத்தேளிர்-தேவர்கள், வானோர், மேலவர்.

புத்தேளுலகம் } புத்தேணுடு,தேவருலகம்.
புத்தேளுலகு }

புத்தேள் - தெய்வம், புதுமை, புதியவர்,
புத்தான்.

புத்தேன் - காஞ்சிரை, புத்துருணி.

புத்தோடு - புதுப்பானை, புதுப்பாண்டம்.

புநருத்தம் - கூறியது கூறல்.

புநருத்தி - அறுவகித்துக்கூறல்.
புநர் - இரண்டாம்முறை, பின்.
புநர்சமஸ்காரம் - விசேஷமான சடங்குகளே
த்திரும்பச் செய்தல்.
புநர்ச்சரணை-சபம், சவம், சடலம், களேபரம்.
புநர்தம் } புனர்பூசம், அதிதிநாள், ஆவணம்,
புநர்வசு } புணர்தம்.
புநர்ப்பாகம்-இரண்டாமுறை செய்தபாகம்.
புநிதம் } சற்குணம், சன்மார்க்கம், நன்ன
புநீதம் } டை, நல்லொழுக்கம்.
புநீதன்-அரசன், அருகன், இந்திரன், சிவன்.
புந்தவிந்து - மாகதமணி, புந்திவிந்து.
புந்தி-அறிவு, புதன், புத்தி, மனது, சித்தம்.
புந்திதம் - காஞ்சிரை, புத்துருணி. [யோர்.
புந்தியர் - அறிவாளிகள், புலவர், புலமை
புந்திவாரம் - புதவாரம், புதன்கிழமை.
புந்திவிந்து - பச்சைக்கல், புந்தபிந்து.
புபுட்சிதன் - பசித்தவன். [ஞென்று.
புபுட்சை - பசி, உடற்குற்றம்பதினெட்டி
புபுதானன்-ஆசாரியன், தேவன், பண்டிதன்.
புப்புலம் - உதரவாயு, குடல்வாய்வு.
புமங்யன் - துஷ்யந்தன் புத்திரன்.
புமான் - ஆண்குறி, ஆண்மகன், ஆன்மாவி
னேர் தத்துவம், கணவன், ஆண்டகை.
பும் - ஆண்குறி, ஒலிக்குறி, ஆடவக்குறி.
பும்சவனம் - புஞ்சவனம், புங்கசவனம்.
பும்ஸத்துவம்-ஆண்மை, புருடதத்துவம்.
பும்மெனல் - ஒலிக்குறிப்புவகை.
பும்விருகம் - கத்தூரிநாவி, கத்தூரிமான்.
புயகடி - பாம்பு, கட்செவி, புயகம்.
புயகதாரணம் - கருடன், கலுழன், சுபதி.
புயகம்-பாம்பு, புயகடி, கட்செவி, உரகம்.
புயகாசனன் }
புயகாந்தகன் } கருடன், கலுழன், உவணன்,
புயகாந்தன் } புள்ளிறை. [கட்டு.
புயகோடரம் - கைக்குழி, கைச்சந்து, கழுக்
புயங்கசயனம் - பாம்பணை, அரவணை.
புயங்கநட்டம் }
புயங்கநடம் } காளிங்கமர்த்தனம், ஓர்
புயங்கநிருத்தம் } கூத்து, காளிங்கநர்த்த
னம்.
புயங்கமலை - திருப்பதி, திருவேங்கடமலை.
புயங்கம் - ஓர்கூத்து, பாம்பு, புஜங்கம்.
புயங்கன் - சிவபெருமான், புஜங்கன்.
புயங்கொட்டுதல் - புயந்தட்டுதல்.
புயத்துணை - உதவி, துணைவலி.
புயபராக்கிரமம் }
புயபலம் } புயவலிமை, புஜவலி
மை.
புயமுட்டி-விற்பிடி வகையிலொன்று. [தவரி.
புயம்-ஒருபக்கம், தோள், முன்கை, வலை
புயலேறு - இடி, அசனி, உருமு.
புயல்-சுக்கிரன், நீர், பெருங்காற்று, மழைக்
கோள், மேகம், மழை. [வண்ணன்.
புயல்வண்ணன் - திருமால், கொண்டல்
புயவகுப்பு-ஓர்பிரபந்தம், கலம்பகத்தி னே
ருறுப்பு; இது: பாட்டுடைத்தலைவன்தோ
ள்வலி கூறுவது.
புயவலி-புயவலிமை, தோள்வலி, புஜபலம்.
புயற்காற்று - பெருங்காற்று, வேகமான
காற்று.
புயாகண்டம் - நகம், உகிர், கரோருகம்.
புயாசலம்-மலையொத்ததோள், பருத்தபுஜம்.
புயாதலம் - கை, புஜத்தின்பாகம்.
புயாந்தரம் - மார்பு, புயத்திடம், புயாதலம்.
புய்க்குதல் - பிய்க்குதல், பிடுங்கல்.
புய்த்தல் - பயத்தல், பறித்தல், பிடுங்குதல்.
புரகரன் - சிவபிரான், புராந்தகன்.
புரகிதன் - சிராத்த கருமாதிகள் செய்து
வைக்கும் பார்ப்பான், குருக்கள்.
புரசபரம் - யத்தனபூர்வகம், பூர்வாரம்பம்.
புரசம் - அக்கினிதேவன் கைச்சங்கு. [டை.
புரசல்-இரகசியம், உட்டுளை, வெடிப்பு, ஓட்
புரசு - பலாசமரம், பொரசமரம். [கயிறு.
புரசை - புரோசை, யானைக்கழுத்திலிடும்
புரஸ்காரணம் - பூரணமாக்கல், நிறைத்தல்.
புரஸ்கரித்தல் - மரியாதை செய்தல்.
புரஸ்காரம் - எத்தனப்படுத்தல், ஒழுங்கு
படுத்தல், காத்திருத்தல், குற்றஞ்சாட்டல்,
சருவுதல், முடித்தல், முன்வைத்தல்.
புரஞ்சயன்-சூரியகுலத் தரசருளொருவன்.
(1) விகுக்ஷிபுத்திரன்; இவன்: பூர்வாசுமம்
சகுத்ஸன். (2) சுவீரன்மகன். (3) ஸ்ருஞ்
ஜயன் புத்திரன்.
புரஞ்சரம் - தோள், விட்டுணுகேடகம்.
புரஞ்சனன் - உயிர், சீவன், ஓர் அரசன்.
புரஞ்சனி - அழிவு, நாசம், மடிவு.
புரடம் - பொன், காஞ்சனம், கனகம்.
புரட்சி - கிரகப்புரள்வு, கீழ்மேலாய்வருதல்,
திரும்புதல், பிறழ்வு, இயற்கை மாறுபாடு.
புரட்டல் - திரும்புதல், மாறுபாடுபண்ணல்,
வாங்கிகொள்ளல், வதக்குதல், அழுக்காக்
குதல், புரட்டுதல், பிரட்டுதல்.
புரட்டன் - பொய்யன், மாறுபாட்டுக்காரன்.
புரட்டாசி }
புரட்டாதி } ஓர்மாதம், பூரட்டாதி.
புரட்டாதிமாளயம் - புரட்டாதி மாதத்திற்
செய்யும் சாதாரணமாசியம். [விடுதல்.
புரட்டி - புரட்டன், புரட்டுக்காரி, புரட்டி
புரட்டியடித்தல் - உண்மையை மறுத்தல்.

புரட்டு-புரட்சி, புரட்டென்னேவல், பொய், வாங்கிக்குணம், கறிவகை, பிரட்டு.
புரட்டுதல் - பிரட்டுதல், மோசஞ்செய்தல்.
புரட்டுருட்டு-புரளித்தனம், தந்திரச்செயல்.
புரட்டை - பூரட்டாதி, புரட்டாசி.
புரட்டோடியம்-அசப்பியம், அடாதசொல்.
புரணபாவனை-சருவவியாபகம்,பரிசவுணர்வு
புரணம்-சமுத்திரம்,புரட்சி,பூரணம்,நிறைவு
புரணி - ஊன், புறணி, மேற்புறம், கோள்.
புரண்டான்பூடு - பத்திரவம். [வல்லி.
புரண்டை - ஓர்கொடி, பிரண்டை, வச்சிர
புரதகணன் - சிவன், திரிபுரதகனஞ்செய் தோன்.
புரதடி - கடைவீதி, அங்காடிவீதி.
புரத்தல் - சூதல், காத்தல், நிலைபெறுத்தல்.
புரத்திரயம் - திரிபுரம், வெளியிந்திரிய உணர்வு,உபயோகமானவெளிப்பொருள்
புரத்துவாரம் - பட்டினவாயில், நகரவாயில்
புரந்தரம் - தோள், புயம், புஜம், வாகு. [கு.
புரந்தரலோகம் - இந்திரலோகம், தேவருல
புரந்தரன் - இந்திரன், கள்வன். (1) வைவசுவதமநுவின் காலத்திலுள்ள இந்திரன். (2) ஓர்கினி. [கினி, பகீரதி.
புரந்தரை - கங்கை, சானவி, சுரநதி, மந்தா
புரந்தன் - இந்திரன், வலாரி, வச்சிரபாணி.
புரந்தார் - அரசர், நீதிவழங்குவார்.
புரப்பிரியை-அந்நாசிச்செடி,பரங்கித்தாழை.
புரப்பு - காப்பு, பாதுகாவல்.
புரமூன்றெரித்தோன் } சிரித்துமுப் புரமெ
புரமெரித்தோன் } ரியச்செய்தோன்.
புரம்-இராசதானி, உடல், ஊர், தோல், நகரம், மருதநிலத்தூர், முன், மேன்மாடம், வீடு, திரிபுரம், அந்தப்புரம். [யாளன்.
புரவலன் - அரசன், காப்போன், கொடை
புரவரசம்-நகரவாசம், நகரத்தில் வசித்தல்.
புரவாயில் - கோபுரவாயில், ஆசாரவாயில்.
புரவி - அசுபதி, குதிரை, வேகி.
புரவிசயன் - சிவன், முப்புரமெரித்தோன்.
புரவித்தேவர்-(குதிரைமுகமுள்ள தேவர்களான) அசுவனி தேவதை, தும்புருவர்.
புரவிரட்டாதி - பூரட்டாதி. [பழகும் வீதி.
புரவிவட்டம் - வையாளிவீதி,குதிரைநடை
புரவிவேள்வி - பரிவேள்வி, அசுவமேதம்.
புரவு-தொடை, கவிகை, பொரவு, காத்தல், கொடுத்தல், இறையிலிநிலம், அரசிறை, விளைநிலம்.
புரவுகாத்தல் - கொடை, புரங்காத்தல்.
புரளல் - புரளுதல், மாறுதல், பிரளல்.
புரளி - குழப்பம், சண்டை, தப்பிதம், திடுக்கு, பொய், வஞ்சனை, குறும்பு, கலகம்.
புரளிக்காரன்-பொய்யன்,சண்டையிடுபவன்
புரளிபண்ணுதல் - குறும்புசெய்தல்,பரிகாசம் செய்தல். [கல்லோலம்.
புரளுதல்-உருளுதல், திரும்புதல், மாறுதல்,
புரஸ்காரம்-மரியாதை, புனஸ்காரம். [வம்.
புராகிருதபாவம் - ஊழ்வினை, பிராகிருதபா
புராகிருதம் - முன் செய்தது, பிராகிருதம்.
புராடம் } சஞ்சாரம், பிரவிருத்தி.
புராடனம் }
புராணகன் - பிரமா, புராணம்படிப்போன்.
புராணபுருஷன்-விட்டுணு, புராணகருத்தா.
புராணசுரம் - நாட்பட்டசுரம், பழஞ்சுரம்.
புராணபடனம் - புராணம் வாசிக்கை.
புராணம் - கதை,காந்த முதலிய புராணம்; இஃது. கலைஞான மறுபத்துநான்கினொன்று, பழங்கதை, பூருவம். உலகத்தின் தோற்றக்கேடுகளும்,பாரம்பரியங்களும்,மன்வந்தரங்களும்,பரம்பரைக் கதைகளும் ஆகிய இவ்வைஞ்ஞினையுங் கூறலால் பஞ்சலக்ஷணம் எனவும்படும்.
புராணம்பதினெட்டு - இவற்றை வகுத்தவர் வேதவியாசர்;புராணம் பதினெட்டனுள் சிவபுராணம் பத்து. விஷ்ணுபுராணம் ஆறு.பிரமபுராணம் ஒன்று.சூரியபுராணம் ஒன்று.ஆகப் பதினெட்டு எனவும்; விஷ்ணு புராணம் நான்கெனக்கொண்டு, பிரம புராணம் இரண்டென்றும், அக்கினி புராணம் ஒன்றென்றும் கூறுவாருமுண்டு, ''பதினெண்புராணம்'' என்னும் தலைப்பில் புராணங்களின் பெயர்கள் கூறப்பட்டுள. மற்றும் புராணமானது சாஸ்திரங்களுள்ளே தலைமைபெற்றது. அது கிருதயுகத்திலே பிரமதேவனால் செய்யப்பட்டமையால் 'பிரமம்' என்னும் பெயருடையதாய், நூறுகோடி சுலோகமுடையதாயிருந்தது; திரேதாயுகத்திலே கோடி சுலோகங்களால் நூற்றுப்பதினெட்டுச் சங்கிதைகளையுடைய பதினெட்டுப் பாகங்களாக மஹரிஷிகளால் வகுக்கப்பட்டது; துவாபரயுகத்திறுதியில் வேதவியாசர் நான்குலக்ஷம் சுலோகங்களால் பதினெண்புராணமாகச் செய்தனர். அவற்றை ரோமஹர்ஷணர் என்னுமுனிவர் வியாசரிடத்துக் கேட்டார். அவர் சுமதி, அக்நிவர்ச்சன் முதலியோர்க்கு உபதேசித்தார். இவ்வாறு குரு சிஷ்ய பரம்பரையாய் வெளியாயின. கழிந்துபோன பலகற்பத்துச் செய்திகளையே

யெடுத்துக்கூறுதலாலும், கழிந்தசிருஷ்டிகளும் ஒரு படியின்றி வேறுபடுதலானும், கற்பாந்தோறும் அதுக்ரஹமூர்த்திகளும் வேறுதலானும், அவ்வக் கற்பத்தின் வரலாற்றைக் கூறும்போது அவ்வக் கற்பத் ததிகாரமூர்த்தியே விசேஷமாகத் துதிக்கப்படுதலானும் புராணங்கள் ஒன்றுக்கொன்று முரணுகத் தோன்றினாலும் உண்மையாயுய்த்து நோக்குமிடத்து ஒற்றுமையுடையனவேயாம்.

புராணவைராக்கியம் - மூவகை வைராக்கியங்களுள் ஒன்று, பக்தியின் விசேடம்.

புராணன் - பழமையானவன், கடவுள்.

புராணி - பட்டை, பிராணி, புரணி.

புராணிகன் } புராணங்களிலேயே னிற்போன்,
புராணீகன் } புராணப்பிரசங்கம் செய்பவன், புராணம் இயற்றியவன், பௌராணிகன், பிரசங்கி. [தேவி.

புராணை - பழமையானவள், பார்வதி, புராண

புராதலம் - பாதாலம், பழையகுடம்.

புராதனகாண்டம் - புராந்திமகாண்டம். [மை.

புராதனம் - பழமை, ஆதியானது, மிகப்பழ

புராதனர் - முன்னோர், பழங்குடி.

புராதனி - புராணை, உமை, பராசத்தி.

புராந்தகசோழன் - ஒளவை காலத்திருந்து அவளால் பாடப்பெற்ற சோழன்.

புராந்தகன் - புரதகனன், புரமெரித்தோன்.

புராந்தகியம்மை - திருவிற்கோலத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

புராந்திமகாண்டம் - விவிலியநூலிற் பழைய வேற்பாடு, பழம்புராணம்.

புராந்திமம் - பழமை, புராணம். [கன்.

புராரி - சிவன், புரமெரித்தவன், திரிபுராந்த

புராவசு - வீட்டுமன், காங்கேயன்.

புராவிருத்தம் - சரித்திரம், பரம்பரை.

புரி - அரசன், ஆசை, இராசதானி, ஊர், கட்டுகயிறு, கயிற்றுப்புரி, கோட்டை, சங்கு, சுரி, சுருள், பட்டினம், புரியென்னேவல், மருதநிலத்தூர், யாறு, முத்துவடம், முறுக்கு, விருப்பம், விரும்பு, வடம், அறி, தெளி.

புரிகுழலாள் - திருப்பாண்டிக்கொடுமுடியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

புரிகுழல் } கடை குழன்று சுருண்ட கூந்
புரிக்குழல் } தல், சடைமயிர், சுரிகுழல்.

புரிக்கூடு - நெற்கூடு.

புரிசடை - திரண்டு சுருண்ட சடை.

புரிசாலம் } வருந்திவேண்டல்,
புரிசாலம்பிடித்தல் } பிரிசாலம் பிடித்தல்.

புரிசை - மதில், அரணம், புறம். [புலவர்.

புரிசைக்கிழார் - முதுமொழிக்காஞ்சி பாடிய

புரிதல் - செய்தல், விரும்பல், படைத்தல், வினங்குதல், பொருள் வினங்குதல், மிகுதல், முறுக்குணல்.

புரிதிரித்தல் - புரிமுறுக்குதல்.

புரித்தல் - முறுக்குவித்தல், விரும்புவித்தல், அழுத்துதல். [வீதம்.

புரிநூல் - புரிமுந்நூல், பூணூல், யக்ஞோப

புரிந்தனை - செய்தாய், அறிந்தாய்.

புரிந்தோர் - சிநேகிதர், நண்பர், மித்திரர்.

புரிமணை - பாண்டம்வைக்கும்மணை, புரியணை.

புரிமுகம் - கோபுரம், சங்கு, நத்தை.

புரிமுறுக்கல் - கோள் மூட்டிவிடுதல். [பூ.

புரிமுறுக்கு - புரிமுறுக்கல், மலராத தாமரைப்

புரிமுன்னூல் - பூணூல், புரிநூல், யக்ஞோபவீதம்.

புரிமோகம் - சம்புநாவல், விளாத்தி.

புரியட்டம் } சூக்குமதேகம், வாயு
புரியட்டகாயம் } ரூபம்.

புரியட்டரூபம் - புரியட்டகம், சூக்குமசரீரம்.

புரியணை - புரிமணை, பிரிமணை. [அரங்கம்.

புரியம் - கூத்து, நாடகம், கேளிக்கை, களரி,

புரிவளை - முறுக்கு வளையல்.

புரிவு - அன்பு, ஆசை, தொழில், தெளிவு, முறுக்கு, புரிதல், திரிதல், வேறுபாடு, பின்னுதல்.

புரீஇ - விரும்பி, புரிந்து.

புரீடணம் - மலம், அழுக்கு, சவதி.

புரீடமம் - உளுந்து, நவதானியத்திலொன்று.

புரீடம் } அழுக்கு, மலம், பீடை.
புரீஷம் }

புரு - ஓரரசன், குழந்தை, மோட்சம், புருவம்.

புருகுச்சன் } அறுவகைச் சக்கிரவர்த்திகளி
புருகுத்சன் } லொருவன். மந்தாதா சக்கிரவர்த்தி மகன். [தொன்று.

புருகூதபீடம் - அறுபத்துநான்கு சத்திபீடத்

புருகூதன் - இந்திரன், தேவர்கோன்.

புருகோத்திரன் - அணுவின் புத்திரன்.

புருசு - வாணவகையி லொன்று, அழுக்கெடுக்கும் கருவிவகை, பிரஷ்.

புருசுண்டி - ஓர்வேடன், இவன் விநாயகர் பூசைசெய்து முத்தியடைந்தவன்.

புருஜன் - சுசாந்திமகன், புருஷன்.

புருஜித்து - (1) ரிசிகன் புத்திரன், (2) வசு தேவன் தம்பியாகிய கங்கன் மகன்.

புருஷகாரம் - ஆண்மை, முயற்சி, புருடாகாரம்

புருஷகுஞ்சரன் - புருஷஸ்ரேஷ்டன், ஆண் மகன், ஆண்டகை.

புருஷசாமுத்திரிகாலட்சணம் - ஆண்களின் அங்க லட்சணங்களைக் குறித்துச் சொல் லும் நூல்.

புருடதத்துவம் / புருஷதத்துவம் } ஆண்மை, பராக்கிரமம்.

புருஷத்தன்மை / புருஷத்துவம் } ஆண்தன்மை, தைரியம்.

புருடநாள் - இரேவதிநாள்.

புருஷபசு-மனிதன், மனிதமிருகம், யாகத்திற் பலியாகக்கொள் ளு மனிதன்.

புருஷபரிசம் / புருஷஸ்பரிசம் } மைதுனம், மனிதச் சேர்க்கை.

புருடபிரமாணம் / புருடப்பிரமாணம் } நான்குமுழநீளம், புருடருக்குரிய நியாயம்.

புருஷபுங்கவன் / புருஷபுண்டரீகன் } புருஷ ஸ்ரேஷ்டன்.

புருஷபேதம்-மனுஷபலி, நரபேதம், நரபலி.

புருஷம் / புருடம் } புருடப்பிரமாணம், புன்னை, மகாமேரு.

புருஷரத்தினம்-ஆண்மக்களுட் சிறந்தவன்.

புருடராகம்-நவமணியிலொன்று, புட்பராகம்.

புருடரூபம் - ஆண்ரூபம், ஆணுருவம்.

புருடர் - ஆடவர், நாயகர், ஆண்மக்கள்.

புருடலக்கணம் - ஆடவலட்சணம்; அஃது: சாமுத்திரிகாவிலக்கணத்தொன்று. [னம்.

புருடவாகனம்-பல்லக்கு, விமானம், நரவாக

புருடவாகனன் - நரவாகனன், குபேரன்.

புருடவித்தை - ஆண்தேவதை யுபாசனை.

புருஷவியாக்கிரம் - உத்தியோகம், வலியன்.

புருடன் / புருஷன் } அணு, ஆண்மகன், ஓர்மாம், கடவுள், கணவன், சிவன், சீவான்மா, செவியுற்றிருக்குநரம்பு; இஃது: தசநாடியி லொன்று, தலைவன், பிரமா, மனுஷன்.

புருடா - பொய், வீண்மிரட்டல்.

புருஷாகாரம் - ஆண்வடிவு, ஆணுக்குரிய பூரண ஆகிருதியும் அழகுமுடைமை.

புருஷாங்கனை - புதன்மனைவி. [தோன்.

புருஷாதமன்-இழிந்தவன், புருஷரில் இழிந்

புருஷாமிருகம்-மிருகத்தன்மையுடைய ஆண் மாட்டின் முகமும், மனித உடலுமுடைய ஓர் தேவப்பிறவி.

புருடாயு / புருஷாயு / புருஷாயுசு } மனுவாயுள், மாந்தர்வாழ்நாள்.

புருடார்த்தம் / புருஷார்த்தம் } அடையவேண்டுவது, செய்யவேண்டுவது.

புருடோத்தமசம்பி-திருவிசைப்பாப் பாடிய சிவனடியாருள் ஒருவர்.

புருஷோத்தமபாண்டியன் - அதிலோ ம பாண்டியரு ளொருவன்.

புருடோத்தமன் - சிரேஷ்டன், திருமால்.

புருஷோத்திகன் - உதவியற்றவன். [கம்.

புருண்டி-மல்லிகை, பூருண்டி, மாலதி, அனங்

புருதம் - பொன், காஞ்சனம், தமனியம்.

புருபீரு - தண்ணீர்விட்டான். [று.

புருபூதம் - விதலலோகம், கீழேழுலகிலொன்

புருமீடன் - ஹஸ்திகன் மகன், அஜமீடன் தம்பி.

புருவமத்தி - புருவமத்தியம், நுதல்.

புருவமத்தியம் / புருவமையம் } இலாடத்தானம்.

புருவம் - குதிரை, நெற்றிப்புருவம், வரை, விளிம்பு. [பூர்வி.

புருவி - புருவத்தையுடையவள், இலேயவள்,

புருவை - ஆடு, இளமை.

புரூடன் - வசுதேவனுக்குச் சகதேவியிடத்துப் பிறந்த புத்திரன்.

புரூணகத்தி - சிசுவதை, பிரம்மகத்தி.

புரூணகம் / புரூணம் / புரூண்ணம் } கருப்பத்திற்பின்னை, கருப்பிண்டம்.

புரூத்தியர் - வேலைக்காரர், தொழுநர்.

புரூரம் - புருவம், புருகுடி, நுதல்.

புரூரவன் - அறுவகைச் சக்கிரவர்த்திகளிலொருவன். வைவசுவதமநு புத்திரியாகிய இலேயிடத்துப் புதனுக்குப் பிறந்த புத்திரன்; இவன் பிரசித்திபெற்றவொரு சக்கரவர்த்தி. இவன் கொடையாலும், தெய்வபக்தியாலும், அழகாலும் சிறந்தவன். இவன் ஒருநாள் ஊர்வசியைக் கண்டு, மோகித்து, அவளைத்தனக்கு மனைவியாகும்படி கேட்க, அவள் நீர் என்னை யொரு காளும் பிரியேனென்று வாக்குத்தஞ் செய்தால் உம்மோடு கூடியிருப்பேனென்று சொல்ல, அதற்குடன்பட்டு அவளைக்கூடிச்சுகித்திருந்தவன். இந்த விஷயம் ருக்வேதத்திலே கூறப்பட்டிருக்கின்றது.

புரூரவா-புரூரவன், புரூரவச் சக்கிரவர்த்தி.

புரை - இரகசியம், உட்டுளை, உயர்ச்சி, உவமை, எதிர்காலம், களவு, குடில், குழிப்புண், குற்றம், செல்காலம், பழமை, பழுது, பண்ணசாலை, புரையென்னேவல், மடிப்பு, மாடக்குழி, மூலப்பகந்திரம், மேன்மை, வீடு, பெருமை, குரல்வளை, உள்ளோடும்புண், கண்ணேய்வகை, பொய், இலேசு, அச்சிரமம், பூமி, கூரை

பாடு, தேவாலயம்.
புரைக்கட்டி - உட்புடைகொண்ட கட்டி.
புரைசல் - இரகசியம், குழப்பம், சச்சரவு.
புரைசு - புரசு, பிரமதரு, பலாசம்.
புரைசை - புரோசை, தூசு, கவடு, யானைக் கழுத்துக்கயிறு.
புரைச்சல்-இழைப்பு, தைத்தல், பின்னுதல், வெளிவருதல், திணறுமூச்சு.
புரைதல் - இழைத்தல், தைத்தல், போலுதல், மூச்சுத்திணறுதல், புரையோடுதல், பொருந்துதல், ஒத்தல்.
புரைத்தல் - உட்புகுதல், வெளிவருதல், பெருமையாதல், குறைப்படுதல்.
புரைபடல் - பொத்துப்படல், பொய்படல், கெடல், பழுதாதல், தீவைபடல், வருந்துதல்.
புரைபதம் - சிறந்தசோறு.
புரைமகூத்திரம் - உச்சமகூத்திரம்.
புரைமை - உயர்வு, புரையுடைமை. [புண்.
புரைப்புண்-புரையோடியபுண், உள்விணைப்
புரைய - உவமைச்சொல், குழிய.
புரையவை - உயர்ந்தோர்சபை. [வீடு.
புரையன-குடில், பன்னகசாலை, வீடு, கூரை
புரையுநர் - ஒப்பவர், உட்பகையுடையார்.
புரையுள் - வீடு, வீட்டின் உட்புறம்.
புரையேறுதல் - தீவைவழியுட்புகுதல்.
புரையேற்றம் - புரையேறுந்தன்மை.
புரையோடுதல் - புண்ணில்உட்டுவை உண்டாதல்.
புரையோர் - கீழோர், திருடர், மேலோர்.
புரையோன் - சிறந்தவன்.
புரையோன் - பெரியோன்.
புரைவது - சிறந்தது, ஒப்பது.
புரைவளர்தல் - கண்ணில் சதைவளர்தல்.
புரைவன்- மேலானவன்,ஒப்போன், ஒப்பிடு
புரைவு - உயர்வு, ஒப்பு. [வோன்.
புரோகதி-நாய், முன்னடப்பது, சுணங்கன்.
புரோகன் - உயர்ந்தோன், மேற்பட்டவன்.
புரோகிதத்துவம் } பௌரோகித்தியம்.
புரோகிதம் }
புரோகிதன்-அரசர்பஞ்சகுழுவி லொருவன், அவன்வருங் காரியஞ் சொல்வோனுங் கிருத்தியம் பண்ணுவிப்போனுமாகிற பார்ப்பான், இந்திரன்.
புரோகை-பொதியையிற் பிறந்தவோர் நதி.
புரோசனன் - குபோனுக்கு வாகனமாயிருக்கும் நான், சமர்த்தன், ஞானவான், துரியோதனனுக்கு நண்பனுகிய வொரு சிற்பி, இவன் துரியோதனன் வலால் பாண்டவர்களைக் கொல்லும்பொருட்டு அரக்கு மாளிகை யமைத்தவன்.
புரோசர் - குருநிலமன்னர், சிற்றரசர்.
புரோசு - புரோகிதம், புரோகிதன். [சை.
புரோசை - யானைக்கழுத்தணிகயிறு, புரை
புரோடாசம்-ஓமத்திடு அரிசி மாப்பொருள்.
புரோடி - யாற்றுப்பாய்ச்சல், மருதநிலம்.
புரோட்சணம் } தெளித்தல், சித றுதல்.
புரோட்சணை } சம்புரோட்சணம்.
புரோகூணீபாத்திரம் - ஓம அகல்களி லொன்று.
புரோட்சிதம் - சுத்தஞ்செய்தல். [தல்.
புரோட்சித்தல் - தெளித்தல், சுத்தஞ் செய்
புரோபாகி-பிறர்குற்றம்நாடுவோன்.[ன்று.
புரோற்சிதம் - சிவாகமமிருபத்தெட்டிலொ
புர்க்கா - பிர்க்கா, தாலூகா, மூடுதுணி.
புர்சத் - சாவகாசம், அவகாசம்.
புல - புல்ல, வெறு, புலால், புலால்வீசு, புலா.
புலகர் - புலஸ்தியருக்குத் தமையனார்,இவர் தகூபுத்திரிகளில் கூமையை மணம்புரிந்து மூன்று புத்திரரைப் பெற்றவர்.
புலகன்-பிரமன் மானசபுத்திரன்;இவன் தேவி கதி.புத்திரர்கள்இன்னார்,கிம்புருடர்.
புலக்கம்-வழக்கம்,பழக்கம்.
புலங்கடை - பயிர்கள். [ப்பற்றுள்ளவன்.
புலங்கொளி-புலன்கோளி, இந்திரியம்,விஷய
புலச்சாமை - சாமைவகை, வயற்சாமை.
புலச்சாய்வு-வயற்புறம், புலச்சார்பு. [கம்.
புலத்தகை-ஊடல், புலவியேற்றல், இணுக்
புலத்தல் - கலவியிற்பிணங்கல், புணர்ச்சிக் கமையாதது போல முறையிடல், தனித்தல். [தர்.
புலத்தார்-குடிகள், தென்புலத்தார், அனுத்
புலத்தியர் - பிரமனது மானஸபுத்திரு ளொருவர்; இவருக்கு ஹவிர்புக்குவினிடத்திலே அகஸ்தியனென்றொருவனும், விசிரவசு வென்றொருவனும் பிறந்தார்கள். இந்த அகஸ்தியர் வேறு.கும்பமுனி வேறு. இந்தப் புலஸ்தியரே புராணங்களை முதன் முதலாக வெளியிட்டவர்.
புலத்தியன் - பிரம்மாவின் மானசபுத்திரன், சரஸ்வதியால் சாபம்பெற்று வீபீஷணனுகப் பிறந்தவன். [முதலோர்.
புலத்தியன்மைந்தர்-குபேரன், இராவணன்
புலத்துறைமுற்றியகூடலூர்கிழார்-ஐங்குறுநூறு தொகுத்த ஓர் சங்கப்புலவர்.
புலத்தோர் - ஞானிகள், புத்திமான்கள்.
புலத்தை - புலத்தி,புலக்கின்றாய்,புலப்பாய்.

புலந்திரன்களவுமாலை - புகழேந்திப் புலவர் இயற்றிய ஓர்நங்கைப் பாட்டு.
புலந்தோர் - ஊடினோர்.
புலபுலெனல்-விரைந்துதொடர்ந்து வருதல்.
புலப்படுதல் - விளங்குதல், தெரிதல்.
புலப்படுத்துதல்-விளங்கப்பண்ணுதல்.[கை.
புலப்பம் - அலப்பு, பிதற்று, விளக்கம்,அழு
புலப்பாடு - மட்டுக்கட்டுதல், நன்ரூய்த் தெரிதல்.
புலப்பு - புலம்பு, (திரிபு) புலத்தல், புலம்பு தல், புலப்பம்.
புலமகன் - சரசுவதி, கலைமடந்தை, வெண் டாமரையாள்.
புலமகன் - புலமையுள்ளவன், பாணன்.
புலமறிதல் - துப்பறிதல். [குதல்.
புலமாக்குதல் - புலப்படுத்துதல், வெளியாக்
புலமினுக்கி - வினக்குமாறு, வாருகோல்.
புலமை-கல்வி, கவிபாடுமாண்மை, மெய்ஞ் ஞானம்.
புலமையர் } கவிஞர், வித்துவான்கள்.
புலமையோர் }
புலம் - அறிவு, இடம், ஒலிமுதலேம்புலன், திக்கு, நுண்மை, மேட்டுநிலம், வயல், புல்லரிசி, இந்திரியவுணர்வு, துப்பு,நூல், வேதம், புலன், மேய்ச்சனிலம், காடு.
புலம்பல் - ஆரவாரம், இரங்கல், ஒலித்தல், பினுத்தல்,பினத்தல், துளித்தல், வெறுத் தல், அரற்றுதல், தனித்தல். [வன்.
புலம்பன் - நெய்தனிலத்தலைவன், துறை
புலம்பிடித்தல் - துப்புக்கண்டு பிடித்தல், புல னறிதல், துப்பறிதல், உளவறிதல்.
புலம்பு - அச்சம், ஒலி, கலக்கம், சத்தம், தனிமை, துன்பம், புலம்பல், புலம்பென் னேவல், குற்றம், வெறுப்பு, சோம்பல், கடற்கரை.
புலம்புதல் - அழுதல்,ஒலித்தல், பிதற்றுதல், வருந்துதல், வாடுதல், தனித்தல்.
புலம்புநீர் } கம்பலைக்கண்ணீர், அழுத
புலம்புமுத்து } கண்ணீர், துன்பக்கண்ணீர்.
புலம்புவித்தல் - அவசரமாக்குதல், புடை பெயர்தல்.
புலம்பெயர்மாக்கள் - கடலோடிகள், கப்ப லோட்டிகள், பரதேசிகள், அகதிகள்.
புலம்விசாரித்தல் - உண்மை யாராய்தல்.
புலம்வைத்தல் - உளவு எதிர்பார்த்தல்.
புலரி - விடியல், சூரியன், புலர்தல்.
புலருதல் } காய்தல், வாடல்,விடிதல், தளர்
புலர்தல் } தல், தெளிதல்.
புலர் - உலர், இருள் நீங்குதல்.
புலர்த்துதல் } காய்ச்சல், பூசுதல்,உலர்த்து
புலர்த்தல் } தல், வாட்டுதல்.
புலவராற்றுப்படை - ஒரு புலவனை வேறு ஒரு புலவனிடம் ஆற்றுப்படுத்துவதாகப் பாடும் துறை. திருமுருகாற்றுப்படை புல வனை ஆற்றுப்படுத்தியதாகக்கூறுகிறது.
புலாவு - உலருகை, காய்வு, விடிவு.
புலவரை - நிலவெல்லை, அறிவினெல்லை.
புலவர் - அறிஞர், கம்மாளர், கவிவாணர், குறுநிலமன்னர், கூத்தர், தேவர், புதன், பொருநர், புலமையோர், ஞானிகள்.
புலவர்புராணம்-முருகதாசர் இயற்றியதமிழ்ப்புலவர் சரித்திரம்.
புலவன் - அருகன், அறிஞன், கம்மாளன், கவிவாணன், கூத்தன்,தேவன், தேவேந் திரன், புதன், போர்வீரன், முருகன், வாணன், புலமுடையான்.
புலவா - புலா, பூலாச்செடி. [மின்மை.
புலவி-ஊடலின் முதிர்தல், கூடியுங்கூட்ட
புலவிநீட்டம் - ஊடல் மிகுதி.
புலவு-ஊன், நரகம், புலம், புலால், மணம், வயல், இரத்தம், புலால் நாறுவது.
புலவுதல் - புலால்நாறுதல்.
புலவோர் - புலவர்.
புலனறிதல் - துப்பறிதல், புலனுணர்வு.
புலனி - நண்டு, அலவன், கற்கடகம்.
புலனிடம் - வாய், சரீரம்.
புலனெறி - புலனெறிப்பட்ட ஒழுக்கம், புல னை அடக்கியதன்மை, நூனெறி, நூல் வழக்கு.
புலனெறிதல் - ஐம்புலன்களைச் செயித்தல்.
புலனெறுக்கம்-ஐம்புலஆசையை ஒடுக்குதல்.
புலன் - அறிவு, இந்திரியவுணர்ச்சி,கருத்து, வனப்பு எட்டினொன்று, அறிவுடைமை, பிரத்தியட்சம், உறுப்பு, வயல்.
புலன்வனப்பு - இயற்சொல்லானியன்ற பொருடோன்றக்கூறல்.[யொழித்தவர்.
புலன்வென்றோர் - முனிவர், ஐம்புல ஆசை
புலா - புலவு, வெறுப்பு, வயல்,புலால், நாற் றம், இரத்தம், நரகம்.
புலாகனை-இராஜதேவி, மன்மதன் மனைவி.
புலாகநன்-இந்திரன், மகேச்சுரன். [மீன்.
புலாகம் - அழகு, சுருக்கம், சோறு, பதர்,
புலாகி - மரம், பாதபம். [க்கு, சிந்தாக்கு.
புலாக்கு - மாதர் மூக்கணியினொன்று, பிலா
புலாதி - கவலை, பிராந்தி, மயக்கம்.
புலால்-ஊன், மீன், வெடில். [தடுப்போன்.
புலால்கட்டி-கடலின்மீன் முதலியவற்றைத்
புலால்கட்டுதல் - மீன் முதலியவற்றைத்

தடுத்தல், வலைகட்டல்.

புலாற்றுணம் } உடம்பு, சடலம், சரீரம்,
புலாற்றுருத்தி } தேகம்.

புலானீர்-இரத்தம், உதிரம். [நீக்குதல்.

புலான்மறுத்தல்-ஓர்நூல், மாமிசபோஜனம்

புலி - அண்ணு, ஓர்மிருகம், சிங்கவிராசி, நால்வகைச்சாந்திலொன்று, வேங்கைமரம், வியாக்கிரபாதர், உண்ணுக்கு, சூது கருவி களிலொன்று.

புலிகடிமால் - இருங்கோவேள், ஒரு முனி வன் தவஞ்செய்யும்போது, ஒரு புலிவர, அவர் இவனை நோக்கி, இப்புலியைக் கொல் என்றது காரணமாக இவனுக்கு இப் பெயர் வந்தது. (ஹொய்சலன்)

புலிக்கண்கல்-கோமேதகம், இருவேறுருவி.

புலிக்கான்முனி-வியாக்கிரபாதர், புலிமுனி.

புலிக்காலமளி-புலியின்கால்போன்ற காலை யுடைய கட்டில்.

புலிக்கொடியோன்-சோழன், புனலுடன்.

புலிங்கம் - ஊர்க்குருவி, தீப்பொறி.

புலிசை - புலியூர், சிதம்பரம்.

புலிதடுக்கி
புலித்தடுக்கி } கற்றூழை, சிங்கி வி,
புலித்தொடக்கி } தொடரி.

புலித்தோலுடையோன் - சிவபெருமான்.

புலிநகக்கொன்றை - கொன்றை மரவகை.

புலிநடலை-ஆனைத்தடிப்புஎன்னும்பூண்டு.

புலிந்தம்-தேயமைம்பத்தாறிலொன்று; அது மிலேச்சதேசம், புளிந்தம். [வனசரன்.

புலிந்தன்-மிலேச்சன், வேடன், கிராதன்,

புலிபம் - பொன்னுவிரை.

புலிபுலியெனல் - அழுகின்ற குழந்தைக்குத் தாய்மார்கள் பயங்காட்டுதல். வேங்கைப் பூப் பறிக்கப் பெண்டிர் புலிபுலி எனப்பூ சலிடல். [சீடர்.

புலிப்பாணி-வியாக்கிரபாதர், போகருடைய

புலிப்பொறி-மதிற்பொறிவகையிலொன்று.

புலிப்போத்து - ஆண்புலி, அழுகு.

புலிமுகக்கடுக்கன்-ஓர்வகைக்காதணி.

புலிமுகச்சிலந்தி - ஓர்விஷவண்டு.

புலிமுகப்புணை - புலியுருவமைந்த புலிமுக அம்பி, தோணி.

புலிமுகப்பூச்சி - புலிமுகச்சிலந்தி.

புலிமுகமாடம் - புலியுருவம் தீட்டப்பட்ட மாடம். [கிரபாதர்.

புலிமுனியோன் - புலிக்கான்முனி, வியாக்

புலிமெய்ச்சிலந்தி - புலிமுகச்சிலந்தி.

புலியுகிர் - ஓமாலிகை முப்பத்திரண்டில் ஒன்று, புலிநகம்.

புலியுகிலி - புலிதொடக்கி, புலிதடுக்கி.

புலியுயர்த்தோன்-புலிக்கொடியை உயரவெ டுத்தவன், சோழன், செம்பியன், கிள்ளி.

புலியுழுமி - ஓர்பறை, கிறிச்சான், ஒலிவிசே டம்.

புலியுறை - புலித்தோலாலாகிய வேலுறை.

புலியூர்-சிதம்பரம், வியாக்கிரபாதர் பூசித்த தலமாதலால் இதற்கிப்பெயருண்டாயிற்று.

புலியூர்வெண்பா - சிதம்பர நடராஜர்மேல் தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை இ யற்றிய ஓர் பிரபந்தம். [தல், போத்து.

புலியேறு - ஆண்புலி, வயமா, அழுகு, ஒத்

புலிரிகம்-பாம்பு, அரவம், பாந்தள், சர்ப்பம்.

புலு - பத்தைக்குறிக்கும் குழூஉக்குறி. [ல்.

புலுட்டுதல் - கருக்குதல், சுடல், கொளுத்த

புலுட்டை - தழைவற்றது, புலுண்டகிறம், புலுண்டின தன்மை, செழிப்பற்றது.

புலுண்டலன் - புலுட்டையன், கரியன்.

புலுண்டல் } கருகல், கருகினது, கருகு
புலுண்டுதல் } தல்.

புலுதம் - அளபெடை, காலதசப்பிரமாணத் தொன்று; அஃது: இலகு மூன்றுகொண் டது, குதிரை முழுவோட்டம்.

புலை - ஊன், புலால், புண்குணம், பொல் லாங்கு, இழிவு, பொய், அசுத்தம், வியப சாரம்.

புலைச்சி - எவட்சாரம், புலையர்சாதிப்பெண்.

புலைச்சேரி - பறைச்சேரி, புலைப்பாடி. [வர்.

புலைஞர் - ஈனர், சண்டாளர், பறையர், மற

புலைத்தனம் } கொலைக்குணம், புன்ரொ
புலைத்தொழில் } ழில், கொலைத்தொழில்.

புலைப்பாடி - புலைச்சேரி, பறச்சேரி.

புலைமகள் - புலைப்பெண், பறப்பெண்.

புலைமகன்-புலையன், புரோகிதன், நாவிதன்.

புலைமை - புலைத்தன்மை, இழிதொழில்.

புலையர் - கீழ்மக்கள், சண்டாளர், இழிஞர்.

புலையன் - புலைமகன், சாப்பறை கொட்டுப வன், வண்ணன்.

புலைவினைஞர் } இழிதொழிலாளர், புலையர்.
புலைவினையர் }

புலோமசித்து-இந்திரன், புலோமனைக் கொ ன்றோன்.

புலோமசை - இந்திராணி. இவள் புலோமன் குமாரி. இந்திரன் மனைவியாகிய சசி தேவி. இந்திரன் புலோமனைக் கொன்று புலோமசையைக் கவர்ந்து சென்றான்.

புலோமபிதன் - இந்திரன், வச்சிரபாணி.

புலோமன் - இந்திராணிதந்தை, ஓராக்கன்.

புலோமாரி - இந்திரன், மேகசாதனன்.
புலோமை - ஓசுரன், புலோமசை தந்தை.
புல் - அற்பம், அனுடநாள், இழிவு, கல்வி, பனை, புலி, புல்லு, புல்லென்னேவல், புன்மை, தென்னை, கம்பு, புணர்ச்சி, புல்லரிசி.
புல்கல் } புல்லல், அணைதல், சேர்தல்.
புல்குதல் }
புல்மரம் - தென்னமரம், தெங்கு, நாளிகேரம், நாளிகேளம்.
புல்மானம் - புன்மானம், இழிந்தமை. [பு.
புல்லகண்டம் - சருக்கரை, ஒருவகைக்கரும்
புல்லகம் - முதலணி, திலதம், சுட்டி.
புல்லணர் } தாடி, கட்டம், மோவாய்,
புல்லணல் } மயிர்.
புல்லணை - புற்படுக்கை, தர்ப்பசயனம்.
புல்லதர் - புல்வழி, புன்னெறி.
புல்லம் - இடபராசி, எருது, புட்பம், பூ, புல்லல், புன்மை, புனிமைக்குறிப்புக்கள்.
புல்லரி - புற்கட்டு, புற்றரை, புற்சுமை.
புல்லரிகம் - பாம்பு, பச்சைப்பாம்பு.
புல்லர் - கீழ்மக்கள், வேடர், அறிவிலார், அற்பர், புல்லியோர், புல்லினோர். [தல்.
புல்லல்-அமைதல், கூடுதல், சார்தல், புணர்
புல்லவை-அற்பமானவை, புல்லியர்கூட்டம்.
புல்லறிவர் - அறிவீனர், மடையர், அறிவிலார், மூடர்.
புல்லறிவாளர் - புல்லறிவாளர், புல்லறிவர்.
புல்லறிவாண்மை - அறிவின்மை, மதியீனம்.
புல்லறிவாளர் - அறிவீனர், மடையர், அறிவிலார், மூடர்.
புல்லறிவு-அறிவின்மை, கீழ்மையானவறிவு.
புல்லன் - அறிவீனன், கீழ்மகன், சிறியவன்.
புல்லார்தல் - மண்கவ்வல், புல் மேய்தல், தோல்விக்குறிப்பு, புல்லினன்.
புல்லான் - வழிப்பறி செய்வோன்.
புல்லாக்கு - புலாக்கு, பிலாக்கு, சிந்தாக்கு.
புல்லாங்குழி } ஒருவகை ஊதுகுழல்.
புல்லாங்குழல் }
புல்லாந்தி - பூல், பூலா, கோளி.
புல்லாமணக்கு - ஓராமணக்கு, நீர்ப்பனை.
புல்லாமொச்சி - புற்பற்றை, மண்பத்தை.
புல்லார் - பகைவர், பொருந்தார், மேவலர்.
புல்லாற்றூர்எயிற்றியனார் - தன்மக்கள்மேற் போருக்கெழுந்த கோப்பெருஞ் சோழனைப் பாடி அதுசெய்யாதபடி தடுத்தவர்; போர்வலியிற் சிறந்தவேந்தேகேள், உன்னைப் பகைத்திருப்பவர் யார்? உன் புதல்வரன்றே? நீயவரைப் போரில் வென்று, வாழ்ந்திருந்து, விண்ணுலகாளப் புகும் போது இம்மண்ணுலகையாளும்பொருட்டு யாரைவைத்தகலுவை; ஒருகால்அவர்க்கு நீ தோற்பின் உன் பகைவர் கொண்டாடப் பேரிழிவை நிலைநிறுத்துவையன்றே? ஆதலால் உன் சினம் ஒழிவதாக; என்னுங் கருத்தமைத்து இவர் பாடிய பாட்டு மிகவுஞ் சாதுர்யமானது. புறநானூறு. இவரே புல்லாற்றூர்எயிற்றியார்.
புல்லி - புறவிதழ், பூவினிதழ், வேங்கடமலைத் தலைவனான ஒரு வேடன்.
புல்லிகடைப்படல் - பொழுது புலர்தல்.
புல்லிகை - கன்னப்பூ, வாளி, குடைக்கடுக்கன், கன்னசாமரை.
புல்லிங்கம் - ஆண்பால், ஆணினம், ஆடூஉ.
புல்லிதழ் - பூவின் புறவிதழ், புல்லி.
புல்லிது-புன்மைத்து, பூ, அற்பம், சொற்பம்.
புல்லிய - அற்பமான, தழுவிய, தழுவ.
புல்லியம் - புளிநறளை, புளிநருவை.
புல்லியர் } கீழ்மக்கள், அற்பர்கள், இழிகு
புல்லியார் } ணமாக்கள், கீழோர், கயவர்.
புல்லினம் - புல்லோர் இனம், அற்பர்சேர்க்கை, ஆட்டுமந்தை.
புல்லினர் - அற்பர், கூடினோர்.
புல்லீரம் - அற்ப ஈரம், ஈரலிப்பு.
புல்லு - புதர், புதல், புல்லென்னேவல், நிறைவு, சேர்க்கை, புல், புல்லுதல்.
புல்லுகை - புல்லுதல்.
புல்லுக்கட்டு } அறுத்துவிட்ட புல்லின்
புல்லுக்கட்டை } அடிப்பாகம்.
புல்லுக்கற்றை - புல்கற்றை, புல்லுத்திரள்.
புல்லுக்காரி - புல்விற்பவள். [வாரப்படை.
புல்லுச்செதுக்கி - புல்செதுக்கும்கருவி, உழ
புல்லுதல் - இணங்குதல், தழுவுதல், புணர்தல், நட்புச்செய்தல்.
புல்லுத்தரை - புல்படர்ந்த நிலம், புற்றரை.
புல்லுநர் - சிநேகிதர், நண்பர், கூட்டாளி.
புல்லுப்பற்றை - புல்வளர்ந்த மண்கட்டி.
புல்லுமாறு - ஊகம்புல்லானதுடைப்பம்.
புல்லுமேய்தல் - கால்நடைகள் புல்லுத்தின்னுதல். [தின்னச்செய்தல்.
புல்லுமேய்த்தல் - கால்நடைகளைப் புல்லுத்
புல்லுருவி - குருவிச்சை, குடும்பக் கோடரி.
புல்லுவனர் - புல்லுவார், புல்லுபவர். [ர்.
புல்லுவர் - வேடர், வேடுவர், மறவர், புளிஞ
புல்லுதியம் - பனைமரம், தாலவிருக்ஷம்.
புல்லுரி - குருவிச்சை, புல்லுருவி.
புல்லெடுத்தல்-புன்மிகுத்தல், களைபுறித்தல்.
புல்லெனல் - ஒளிமழுங்கல், பொலிவழிதல், அற்பமாதல், புல்லியதாதல், புற்கெனல்,

காசெனல், சிவத்தல்.
புல்லை - மங்கலான மஞ்சள்நிறம், வெண்மை கலந்த சிவப்பு நிறமுடைய மாடு.
புல்வரகு-ஓர்பயிர், தானியவகை, கோடைப் பயிர். [விற்குமிடம்.
புல்வாடி - புற்கற்றையடுக்கிய வாடி, புல்
புல்வாய் - கருமான், கலைமான்.
புல்வாரி - புல்லுச்சத்தகம், உளவாரப்படை.
புல்விரியன்-ஓர்பாம்பு, விரியன்பாம்புவகை.
புல்வெட்டிப்பல் - மாட்டின் முன்வாய்ப்பல்.
புவலோகம் - மேலேழுலகிலொன்று. [ளர்.
புவனகர்த்தாக்கள் - உலகபாலரான கடவு
புவனகோசம் - பூகோளம்.
புவனசாத்திரம் } பூமிசாத்திரம், பூகோள
புவனசாஸ்திரம் } சாத்திரம்.
புவனத்திரயம் - திரிலோகம்; அது: சுவர்க்க மத்தியபாதலம் என்பன.
புவனநாயகர் - புவனகர்த்தாக்கள், பிரமன்.
புவனநாயகன் - உலகிற்கிறைவன்.
புவனநாயகியம்மை - திருமாகறலிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
புவனமெண்வச்சிரம் - கால்மீர்ப்படிகம், பளிங்குக்கற் படிகம், மண்ணின் வச்சிரம்.
புவனம் - அப்பியாசம், ஆகாயம், நீர், பதினொன்குலகப்பொது, பூமி, உலகம்.
புவனி - பூமி, பூதலம், தராதலம்.
புவனியு - எசமான், முச்சுடர்.
புவனேகலாகு-விஜய கூழங்கைச் சக்ரவர்த்தியானவன் யாழ்ப்பாணத்தில் அரசு புரிந்த காலத்தில் அவனுக்கு மந்திரியாயிருந்தவர்; இவர் தமிழ்ப்புலமையிற் சிறந்தவர்; இவரால் கட்டப்பட்ட சுப்பிரமணியர் ஆலயம் இன்றும் நல்லூரில் நிலை பெற்று விளங்குகின்றது; இவர் ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருடங்களுக்கு முன்னிருந்தவர்; இவர் ஊர்தோறும் தரும பாடசாலைகள் அமைத்துத் தமிழ்க் கலையை வளர்த்தவர்.
புவனேசுவரி - (1) பார்வதி (2) ஒட்டாரதேசத்திலே கோயில்கொண்டிருக்கும்தேவி.
புவனை-ஓர்சத்தி, பார்வதி, காலபரமேஸ்வரி.
புவன் - சுயம்பு, இறைவன், முதல்வன்.
புவி - பூமி, இடம், பூதலம், பூலோகம்.
புவிதவிருக்கம் - பெருவாகைமரம்.
புவிப்பாத்திரம் - மண்கலம், மட்கலம்.
புவுடீரு - தண்ணீர் விட்டான் பூடு.
புவ்வம் - பூர்வம்.
புழகு - மீலையெருக்கு, அம்புக்குப்பி, மல்லிகை மொட்டெனவும்படும்.
புழக்கம் - அறிமுகம், தோற்றம், பழக்கம்.
புழக்கடை - புழைக்கடை. [வழி.
புழக்கடைநடை - புழக்கடைக்குப் போகும்
புழங்குதல் - வழங்குதல்.
புழல் - ஓரூர், சலதாரை, துளையுடைப்பொருள், புழுக்கல், வாய்க்கரிசி, இருப்பைப்பூ, ஒரு சிற்றுண்டி, தூணை, புழை, உட்டுளை, உட்டுளையானபொருள்.
புழு - கிருமி, புழுவெண்னேவல்.
புழுகு-நாவிப்புழுகு, அம்புத்தலை, வாசனைப் பொருள், புழுகுப்பூனை, புனுகுச்சட்டம், புளுகு, கெட்டபொருளிலுண்டாம்புழு.
புழுகுசட்டம் - ஓர் வாசனைப் பண்டம்.
புழுகுசம்பா - ஓர் நெல், வாசனைச்சம்பா.
புழுகுசாத்துதல்-சுவாமிகளுக்குப் புனுகுபூச
புழுகுணி - புளுகுணி, பொய்யன். [ல்.
புளுகுணிக்கருப்பன் - பெரும்பொய்யன்.
புழுகுபிள்ளை } நாவிப்பிள்ளை, புனுகுபூனை.
புழுகுபூனை }
புழுக்கடி - புழுக்குத்தல்.
புழுக்கம் - உட்டணம், பொருமை, வன்மம், வெப்பம், துன்பம்.
புழுக்கல் - அவித்தல், சோறு, முதிரைப் பண்டம், அவித்தது, புழுங்கலரிசி, சிறுக வேகுதல், வருந்தல், வாடுதல், சினத்தல், புழுக்கல் பொங்கல். [றை.
புழுக்கறை - புழுக்கமான அறை, இருட்ட
புழுக்கு - அவிப்பு, புழுக்கென்னேவல், இறைச்சி, பருப்புச்சோறு.
புழுக்குடைச்சல் - சொத்தைப் பல்லாலுண்டாம் வலி, சொத்தைப்பல் நோய்.
புழுக்குதல் - அவித்தல், தீய்த்தல்.
புழுக்குத்தல் - புழுவரித்தது, புழுவரித்தல்.
புழுக்குத்தி-கொண்டலாத்தி, புழுக்கொத்தி
புழுக்குத்துதல் - புழுவரித்தல். [றின்கூடு.
புழுக்குரம்பை - சரீரம், நத்தை முதலியவற்
புழுக்கூடு-புழுவிருக்கும்பை, புழுக்குரம்பை.
புழுக்கை - அடிமை, ஆடு முதலியவற்றினெரு, பிழுக்கை, அவிக்கை. [தவள்.
புழுக்கைச்சி - அடிமைப்பெண், மிக விழிந்
புழுக்கையன் - அடிமை, மிக விழிந்தவன்.
புழுக்கொடியல் - அவித்துக் காயவைத்த பனங் கிழங்கு, ஒடியல்.
புழுக்கொத்தி-புழுக்குத்தி, கொண்டலாத்தி
புழுக்கொல்லி - வண்டுகொல்லிச்செடி, ஆடு தின்னுப்பாளை, நாகமல்லி.
புழுங்கலரிசி-அவித்தநெல்லரிசி, புழுக்கல்.
புழுங்கல் - உட்டணமாதல், சினக்குறிப்பு, புழுக்கினதானியம், புழுக்கம், வேதல்,

வேக்காடு. [பித்தல்.
புழுங்குதல் - அவிதல், உட்டணித்தல்,கோ
புழுதி - பாசகம், மண்துகள், உழுதுகாய்ந்த நிலம்,புழுதிக்கால். [நிலம்,புழுதிமண்காடு.
புழுதிக்காடு - நன்றாய் உழுதுகாய்ந்த நஞ்சை
புழுதிக்கார் - புழுதிப்பயிர்நெல்.
புழுதிக்கால் - உழுதுகாய்ந்த விரைப்பாட்டு நிலம்.
புழுதிக்கால்நாற்று - புழுதியில்தண்ணீர்விட்டு விரைத்து வளர்ந்த நாற்று. [பறத்தல்.
புழுதிப்படலம் - பூந்துளிச்செறிவு, தும்பு
புழுதிமாயம் - காரியஞ் சரிக்கட்டினதுபோற் காட்டல்,ஏமாற்று,வீண்செலவு செய்தல்.
புழுதியளைதல் - புழுதியிற்புரளுதல், புழுதி படிதல். [மாக்குதல், புழுதியடித்தல்.
புழுதியாக்கல் - உழுதுபண்படுத்தல், நாச
புழுதியாடல் - புழுதியளைதல், புழுதியாக்கல்; இஃது: எண்வகை நாணத்தொன்று.
புழுதியார்த்தல் - பூந்துளிபரம்புதல். [ப்பது.
புழுதிவிதைப்பு-புழுதியான நிலத்தில் விதை
புழுது - அம்புக்குதை.
புழுத்தப்பல் - சொத்தைப் பல், புழுப் பல்.
புழுத்தல் - புழுவுண்டாதல். [கம்.
புழுப்பகம்-மூக்கிரட்டை,மூக்கறட்டை,புட்
புழுப்பகை - வாயுவினங்கம், வாய்வினங்கம்.
புழுப்பல் - சொத்தைப் பல், புழுத்த பல்.
புழுப்பு - புழுத்தல், ஊசிப்போதல். [தல்.
புழுமேய்ச்சல் - புழுவரித்தல், புழுத்துப்போ
புழுமேய்தல் - புழுக்கடித்தல், புழுவரித்தல்.
புழுவடை - தேனீ வைக்கும் புழுக்கூடு, தேனடை. [ட்டுப்போதல்.
புழுவரித்தல் - புழுமேய்தல்,புழுவெட்டு, கெ
புழுவெட்டு - புழுமேய்ச்சல், கண்ணிமை நோய், தலை வழுக்கையாதல். [யாதல்.
புழுவெட்டுதல்- புழுவரித்தல், தலைவழுக்கை
புழுவைத்தல் - புழுத்தல், காட்டுவழி.
புழை - உட்டுளை, கதவுவிட்டுப் புகும்வழி, துளையுடைப் பொருள், குழாய்,திட்டிவாயில், நரகம், மதில், மேலறுப்பு, ஏப்புழை, எவறை, புழல், வேலியிற்றுறந்த சிறுபாதை, சாளரம். [புறக்கடை.
புழைக்கடை-பின்புறவாயில், கடைமடை,
புழைக்கை - துதிக்கை, யானை.
புளகம்-அரிதாரம்,கண்ணுடி,சோறு, புடைப்பு, மகிழ்ச்சி, மயிர்சிலிர்த்தல்,வெடிப்பு.
புளகாங்கிதம் - புளகிதம், புளகம்.
புளகாலயன் - குபேரன், கிஞ்சுகி. [ங்கிதம்.
புளகிதம் - மகிழ்ச்சி, மயிர்ச்சிலிர்ப்பு, புளகா
புளகித்தல் - மிகமகிழ்தல், மயிர்சிலிர்த்தல்.
புளகிப்பு - மகிழ்ச்சி, மயிர்ச்சிலிர்ப்பு.
புளகு - புளகம்.
புளப்பாகல்- சிறுவாலுளுவை, வாலுழுவை.
புளம் -அண்ணம், குதிரைமாடையிலொன்று.
புளவை - பிளவை, முதுகு லுண்டாகும் கட்டி, ஓர் வகைச் சொல்.
புளாகம் - கஞ்சி, சோற்றுத்திரளை.
புளி-அறுசுவையிலொன்று, புளியமரம், புளிச்சுவை, புளிக்கறி, புளிச்சோறு, மது பானம்.
புளிக்கருணை - ஓர்வகைக் கருணை.
புளிக்கரைத்தல் - கவலைப்படல், புளியை நீரிற் கரைத்தல். [பச்சடி.
புளிக்கறி - புளிங்கறி, புளிக்குழம்பு, புளிப்
புளிக்காய்ச்சல் - புளிச்சோறு பிசைவதற்காகத் தயாரிக்கும் குழம்பு.
புளிக்கீரை - புளிச்சைக்கீரை. [குடித்தல்.
புளிக்குடித்தல் - பின்னேப்பேறு, புளி நீர்
புளிக்குழம்பு - புளியிட்டுச் செய்யுங் குழம்பு வகை, புளிக்கறி. [த்த கூழ்.
புளிக்கூழ் - புளித்தகூழ், புளியிட்டுச் சமை
புளிக்கோசு- புளியிட்டுச்சமைத்த கறிவகை, புளிப்பச்சடி. [பச்சடி.
புளிங்கறி - புளிக்குழம்பு, புளிக்கறி, புளிப்
புளிங்காடி - மிகப்புளிப்பேறிய காடி.
புளிங்கூழ் - புளியிட்டு ஆக்கியகூழ். [இலை.
புளிச்சக்கீரை - ஓர் செடியின் புளிப்புள்ள
புளிச்சக்கை-புளிகரைத்தபின் எஞ்சிய சார மற்றதேகாது. [காரம்.
புளிச்சதண்ணி-பழஞ்சோற்றுநீர்,காடி,நீரா
புளிச்சநார் - ஓர்வகைச் செடியினர்.
புளிச்சல் - புளித்தது, புளிப்புள்ளது.
புளிச்சற்பணிகாரம் - ஓர் பணிகாரம்.
புளிச்சாதம் - புளியிட்டுப் பிசைந்த கட்டுச்சாதம், புளியோரை, புளித்த பழையது.
புளிச்சாறு - புளிக்காய்ச்சல். [டாம் ஏப்பம்.
புளிச்சேப்பம் - உண்டது செரியாமல் உண்
புளிச்சை-புளிச்சைக்காய், மரஞ்செடிவகை.
புளிச்சைக்கண் - பீளைநிரம்பிய கண்.
புளிச்சைக்காய் - குச்சித்தமரத்தங்காய், பிலிம்பு, பிலிஞ்சி. [ரோகாரம்.
புளிச்சைக்காடி-மிகப்புளித்தநீர், காடியான
புளிஞர் - வேடர். மறவர், புளிந்தர்.
புளிஞ்சோறு-புளியோதனம், புளிச்சோறு.
புளிதம் - மாமிசம், ஒருவகை யுணவு.
புளித்தமா - புளிப்பேறிய தோசைமா.
புளித்தல் - நெருங்கல், புளிப்பு, வெறுத்துப் போதல், செறிதல், தண்மைநிரிதல்.
புளித்தோடை - ஓர்தோடை, புளித்தோடு.

புளிநடலை } புளிமதுரை, பேய்மாடி, புளிப்
புளிநறளை } பிரண்டை, [களிலொன்று.
புளிந்தம் - புலிந்தம், ஐம்பத்தாறு தேயங்
புளிந்தயிர் - புளித்த தயிர். [ளொ்சாதியார்.
புளிந்தர் - விதர்ப்பாநகரத்த தேசங்களிலுள்ள
புளிந்தன் - வேடன், கானவன், மறவன், வையெயப் பெண்ணை மன்னன் கரவிற் புணர்ந்து கூறப்பட்டவன்.
புளிப்பலா - முள்ளுச்சீத்தா, தாளிசபத்திரி.
புளிப்பற்றுதல் - புளிப்பிடித்தல்.
புளிப்பிரண்டை - புளிநறளை. [பொங்குகை.
புளிப்பு - அறுசுவையிலொன்று, புளிக்கை,
புளிப்புக்காட்டுதல் - பயமுறுத்தல்.
புளிப்புத்தட்டுதல் - புளிப்பேறல், வெறுப் புண்டாதல், சுவைகெடல்.
புளிப்புநாரத்தை - புளிப்புள்ள நாரத்தை.
புளிப்புமாதளை - புளிமாதுளை. [ண்டது.
புளிமண்டி - அதிகவழுக்கு, புளிப்புக்கொ
புளிமதுரை - ஓர்செடி, புளிநறளை.
புளிமா - ஓர்மரம், நிரை நேராய்வருஞ் சீர்க்கு வாய்பாடு. [சீர்க்கு வாய்பாடு.
புளிமாங்கனி - நிரை நேர் நிரையாய் வருஞ்
புளிமாதளை - ஓர்மாதளை, புளிப்புமாதளை.
புளிமாநறுநிழல் - நிரை நேர்நிரைநிரையாய் வருஞ் சீர்க்கு வாய்பாடு.
புளிமாநறும்பூ - நிரைநேர் நிரைநேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
புளிமாந்தண்ணிழல் - நிரைநேர்நேர் நிரையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
புளிமாந்தண்பூ - நிரைநேர்நேர்நேராய்வருஞ் சீர்க்கு வாய்பாடு.
புளியங்காட்டுப்பெருஞ்சேந்தன் - கடைச் சங்கப்புலவர்களி லொருவர். [புளிக்கூழ்.
புளியங்கூழ் - புளியங்கொட்டைப் பசை,
புளியங்கொட்டை - புளியம் விதை.
புளியமரம் - புளிகாய்க்கும் மரம்.
புளியமலாரு - புளியம் வளாரு, புளியமிலாரு.
புளியமிலைக்கம்பி - புளியிலை போற் கீறுஞ் சாயரேகை, பச்சைசுருத்தும் வகை.
புளியம்பாசி - ஓர் நீர்ப்பாசி. [கொம்பு.
புளியம்வளாரு - புளியமிலாரு, புளிய மரக்
புளியறணை - ஓர் பூண்டு. [க்கீரை.
புளியாஞ்சிறுகீரை - புளியாரை, புளியாரை
புளியாமணக்கு - ஓர்பூண்டு, புல்லாமணக்கு.
புளியாரை - நிலஆரை, பலதாசு, புளியோ தரை, புளியாஞ்சிறுகீரை. [புவகை.
புளியில்லாக்கறி - புளியின்றி ஆக்கிய குழம்
புளியுப்பு - ஒருப்பு, புளிசேர்த்த உப்பு.
புளியேப்பம் - புளிச்சேப்பம்.
புளியோதனம் - புளிஞ்சோறு; இஃது-நிவே தனச் சாதவகையிலொன்று.
புளியோரை - புளிவிட்டுத் தாளித்த சாதம், புளியோதரை, புளிச்சாதம்.
புளினம் - மணற்குன்று, ஆற்றிடை மணற் றிட்டை, மணற்றிட்டு.
புளினர் - வேடர், புளிஞர், கானவர். [யன்.
புளுகன் - விசித்திரகாரன், வீம்பன், பொய்
புளுகு - புளுகென்னேவல், பொய், விசித்திரம், வீம்பு, சுத்தப்பொய், கற்பனை.
புளுகுதல் - மெய்போற் பொய்கூறல், வீம்பு பேசல், கற்பித்தல். [படுதல்.
புனைதல் - அலங்கரிக்கப்படுதல், சித்திரிக்கப்
புன் - அவிட்டநான், பறவைப்பொது, எழு பிறப்பிலொன்று, வண்டு, கைவளை, கிட்டிப்புள், கிட்டி, மதுபானம், நிமித்தம்.
புன்மொழிதல் - புலர்மொழிதல், புண்மொழிதல், நிமித்தங்கூறுதல், புட்குறி, புள்ளுரைத்தல், புட்குறிவிளக்கம்.
புன்வாய்கீண்டோன் - கிருட்டிணன். [கிதம்.
புன்னகம்-மகிழ்ச்சி, மயிர்சிலிர்த்தல், புளகாங்
புன்னடி - உரைகல், கையெழுத்தில் விடப் பட்ட எழுத்திற் கடையாளமாகப் புள்ளி னடிச்சுவட்டை யொத்த அடையாளம், ஓர்பூடு, செடி வகை, பறவையின் பாதம், வணி, பறவைக் காற்சுவடு, புட்சுவடு, அரதனக் குற்றமைந்தனு னொன்று, கிட்டில் புள்ளாடுதல்.
புன்னடித்தல் - கிட்டிப்புள் கொண்டு விளையாடுதல். [மணை.
புன்னம் - அரிவாள், கொடுவாள், அரிவாள்
புன்னரசு - கருடன், ககபதி, சுபர்ணன்.
புன்னரிச்சாவி - புல்லரிச்சாவி, சாவியான நிலங்களுக்கு வரி நீக்கப்படுகை.
புன்னலூர் - தொண்டைநாட்டகத் தோரூர்.
புன்னி - இலக்கப்புள்ளி, ஒற்றெழுத்து, ஓர் அடையாளம், கணிதம், நண்டு, பணத் தொகை, பல்வி, பொறி, மதிப்பு, தேமல், நவமணியைங் குற்றத்தொன்று, ஆள், ஆயுதவெழுத்து, மதிப்பு, பேரேடு, பெருந் தகை, இமயமலை, மதிப்பிற்குரியது, புளி.
புன்னிக்கணக்கன் - கணக்கிற் பயின்றவன்.
புன்னிக்கணக்கு - இலக்கக்கணக்கு, விளைச் சல் மூதலியவைகளை மதிப்பிடுங்கணக்கு.
புன்னிக்கண் - மாட்டின் கண்ணில் விழும் வெள்ளைப்புள்ளி, கொள்ளிக்கண்.
புன்னிக்கல்லு - கானற்கல், புள்ளியுள்ளகல்.
புன்னிக்காரன் - கணக்கன், மதிப்புடையவன், மதிப்பிடுபவன், புள்ளிபார்ப்பவன்.

புள்ளிபாய்தல் - புள்ளிவிழுதல்.
புள்ளிபார்த்தல் - கணக்குப்பார்த்தல்.
புள்ளிபோடுதல் - புள்ளிவைத்தல், மதித்தல், கணக்கிடல். [ரேலே.
புள்ளிமான் - புள்ளியுடையமான், புள்ளி யி
புள்ளிமிருகம் - கலைமான், கோட்டுமான்.
புள்ளியற்பாண்டில் - பறவைபோற்செல்லும் எருது.
புள்ளியம்-சிறுகுறிஞ்சாக்கொடி. [குறிஞ்சை.
புள்ளியன்மா - பறவையின் வேகமுடைய
புள்ளியீடு - பொருள் விளங்கும்படி வாக்கியங்களிலிடும் குறியீடு. [ரூர்.
புள்ளிருக்குவேளூர் - திருப்புள்ளிருக்குவே
புள்ளிரோகம் - ஓர்நோய், வெண்குட்டம்.
புள்ளிவண்டு - கழுதைவண்டு, வண்டுவகை.
புள்ளிவராகன் - மூன்றரை ரூபாய் மதிப்புடைய பொன்ரூணயம், வராகன்.
புள்ளிவரி-இடாப்பு,டாப்பு. [ளம்போடல்.
புள்ளிவைத்தல் - கணக்கிற்றள்ளி யடையா
புள்ளீடு - பிசாசகணவகை.
புள்ளீட்டம்-பறவைக்கூட்டம், பட்சிசாலம்.
புள்ளுரு - புள், சிறுதுண்டுக்கட்டை.
புள்ளுரைத்தல்-புள்ளொலி கொண்டு நிமித்தங் கூறுதல், பக்ஷிகாதல்.
புள்ளுவம்-வஞ்சகம், மனக்குறை, கைதவம், வஞ்சனை, புள்ளறிவு, சகுனசாஸ்திரம், புள்ளியற்கை.
புள்ளுவர் - கீழ்மக்கள், வஞ்சகர், வேடர், பாலை நிலத்தார், பாவமூர்த்திகள்.
புள்ளுர்தி - திருமால், விட்டுணு.
புள்ளொலி - பறவைக்கூட்டத்தொலி.
புள்ளோச்சல் - பட்சிதுரத்தல், ஆலோலம்.
புள்ளோப்பல் } பட்சிகாத்தல், பறவை
புள்ளோம்பல் } வளர்த்தல். [பிம்மாலே.
புறகு-பிறகு,பின்னல்,பொறகு, அப்பாலே,
புறக்கடை - வீட்டின்புறம், புழக்கடை.
புறக்கட்டு-பின்புறவீடு, கையை பின்புறமாகக் கட்டுகை, குடிகளின் கட்டுப்பாடு.
புறக்கணித்தல் - வேற்றுமை பண்ணல், அலக்ஷியம் செய்தல், நீக்கல். [செய்தல்.
புறக்கணிப்பு - புறக்கணித்தல், தள்ளுபடி
புறக்கண் - கடைக்கண், கண்ணின்கடை.
புறக்கதவு - வெளிக்கதவு, தெருக்கதவு.
புறக்கந்து - கந்தினருகு, அச்சின்முனை.
புறக்காணம் - கைகால் முதலியன, தொழிலுக்கு உதவும் ஆயுதவகை.
புறக்கழுத்து - பிடர், பிடரி, பிடர்த்தலை.
புறக்கனறி - வெளிக்கனறிவிடல்.
புறக்காதுபடல் - காதிற்சோணை புள்வளம் புறவளமாதல். [காரியம்.
புறக்காரியம்-பக்கத்திற்காரியம், வெளியார்
புறக்காவல் - வெளிக்காவல், மெய்காவல்.
புறக்காழ்-பனைமுதலியவற்றின் புறவயிரம், பெண்மரம்.
புறக்கு - முதுகு.
புறக்குடி-மிராசுதாருக்குக்கட்டுப்படாதகுடியானவன், குத்தகைக்காரன், புறநகர்.
புறக்குடை - முதுகு.
புறக்கூத்து - கூத்துவகை.
புறக்கூரை - வீட்டின் பின்புறக்கூரை.
புறக்கை-புறங்கை,வலப்புறம்,வெளிப்புறம்.
புறக்கொடை - புறங்கொடுத்தோடல், எழுந்து போதல்.
புறக்கோடி - வெளிக்கோடி, நகர்க்கோடி.
புறக்கோட்டை - பிரதானகோட்டையைக் காக்கும்சிறுகோட்டை. [பின்பிறந்தோன்.
புறங்கடை-வெளிக்கதவு,வெளிப்பிரதேசம்,
புறங்காடு - சுடுகாடு, மயானம், சுடலை.
புறங்காட்டுதல் - தோற்றோடுதல், பின்காட்டல், வெளிக்காட்டுதல். [முறியடித்தல்.
புறங்காணுதல் - தோற்றோடச் செய்தல்,
புறங்காத்தல்-பாதுகாத்தல், புறத்தில்நின்று பாதுகாத்தல். [புறக்கால்.
புறங்கால்-புறவடி, குதிகாலின் மேற்புறம்,
புறங்காழ் - புறக்காழ், புறவயிரம்.
புறங்கான் - முல்லைநிலம், காடுசார்ந்தநிலம்.
புறங்கூறல் - தூற்றல், குற்றங்கூறல்.
புறங்கூற்றுவன்-புறணிகூறுவோன்,கோன்காரன். [இரகசியத்தை வெளியிடல்.
புறங்கூற்று - பிறன்மீது புறணிகூறுகை,
புறங்கை - உள்ளங்கைக்குட் புறவளம்.
புறங்கைநக்கல் - சரித்திரத்தால் வருந்தல், கையில் பற்றியதென் முதலிய நக்கல்.
புறங்கொடுத்தல் - தோற்றோடுதல், போக விடுதல், புறமுதுகிடல். [தவக்கூட்டம்.
புறச்சபை - நற்கருணையனுபவியாத கிருஸ்
புறச்சமயம் - மாறுபட்ட கொள்கையுடைய மதம். [ழுத்தாய்ப் புணர்ந்து நிற்பது.
புறச்சுட்டு - மொழிக்குப் புறத்துச் சுட்டெ
புறச்சுவர்நீற்றல்-சொந்தமானவர்களை விட்டுப்பிறனுக்குபகாரம்பண்ணல், அகத்தில் சுத்தமின்றிப் புறத்தில் மிக ஒழுங்கானவர் போல் நடித்தல். [புறவட்டம்.
புறச்சுற்று - வெளிச்சுற்று, வெளிவட்டம்,
புறச்சேரி-வெளிச்சேரி,தொழுநர்வாழிடம்.
புறஞ்சாய்தல் - தோற்றல். [பான இடம்.
புறஞ்சிறை - புறஞ்சேரி, வேலிக்குப்புறம்
புறஞ்சிறைப்பாடி-நகரின்வெளிப்புறச்சேரி.

புறஞ்செயல் - பாதுகாத்தல்.
புறஞ்சொல்லல் - கோட்சொல்லல்.
புறணி-குறிஞ்சிநிலம், தோல், புறங்கூறல், புறம்,முல்லைநிலம், மரப்பட்டை, புலால்.
புறண்டுதல் - சுறண்டுதல், வஞ்சித்துப் பொருள் பறித்தல், பிறழ்ண்டுதல்.
புறதேசம் - அண்ணியதேசம், பரதேசம்.
புறத்தவன் - ஐயனர், அரிஹராபுத்திரன்.
புறத்தான் - புறம்பானவன், வேற்றூர்.
புறத்தி - பின்பக்கம், புறம்பானது.
புறத்திடங்கொடுத்தல் - தன்னைச் சேர்ந்த வனைப் பழிக்குள்ளாக்குதல்.
புறத்திணை - வெட்சி, வஞ்சி, காஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் முதலிய புறப்பொருள் பற்றிய ஒழுக்கம்.
புறத்திணைநன்னாகனார் - ஓர் சங்கப்புலவர்.
புறத்திண்ணை - வீட்டின் வெளித்திண்ணை.
புறத்தியான் - அந்நியன், வேற்றூர்.
புறத்திரட்டு-புறப்பொருள் பற்றியசெய்யுட் களைச் சேர்த்துத் திரட்டியநூல்.
புறத்துழிஞை - முற்றுகையிட்ட அரசன் பெருமைகூறும்நூல். [எவல்முதலியன.
புறத்துறப்பு - புறத்தங்கம், இடம் பொருள்
புறநகர் - நகர்ப்புறம், நகரின் வெளியிடம்.
புறநடம் - வென்றிக்கூத்து முதலானவை.
புறநானூறு-புறப்பொருளை நானூறு பாக்களால்கூறும்நூல். இந்நூல் கடைச்சங்கத் தார் காலத்தது. இது எட்டுத் தொகையின் ஒன்று. இது கடைச்சங்கப் புலவர் பலராற் பாடப்பட்டது. இதனால் தமிழ் நாட்டுப்புலவர், அரசர் முதலியோரதுசரிதை விளங்கும்.
புறநிலை - ஓர்பிரபந்தம்; அது: நீதொழுதெய்வம் நிற்புறங்காக்க வாழ்வையென வெண்பா முதலும்,ஆசிரியவிறுதியுமாகப் பாடுவது, வேறுபட்டநிலை, உதவிநோக்கிப் பிறர் புறங்கடையில் நிற்கும்நிலை, எவல் செய்துபின்னிற்கை, வெளிப்புறம், பின்னிலை.
புறநிலைமருதம் - உழைகுரலாய்க் ஸைக்கிளை குரலாய மேற்செம்பாலை, பெரும்பண் வகை.
புறநிலையகத்திணை - தான் குறித்தவற்றின் புறத்துட் பிறிதொருபொருளை எடுத்துக் காட்டித் தன்பொருளை விலக்குதல்.
புறநிலைவாழ்த்து-நீவழிபடு தெய்வம் நின்னை வழிவழி காப்ப என்று தலைவனை வாழ்த்தும் வாழ்த்து. [நிலையிற் பிரிதல்.
புறநீக்கல்-தன்னிட்டம், விடுதலை, விலக்கு,
புறநீர்க்குந்தம் - கண்ணேயுளொன்று.
புறநீர்மை - ஓர்பண், வெளிக்குணம்.
புறந்தரல் } ஓம்பல்,தோற்றல்,பாதுகாத்
புறந்தருதல் } தல், விடுதல், உண்டாக்கல்.
புறந்தான் - புறங்கால், புறவடி.
புறந்தை - ஓர்யாறு.
புறப்பகை - வெளிப்படையானபகை.
புறப்படல்-வெளிப்படல்,பயணந்தொடங்குதல்.
புறப்படுதல்-பயணப்படுதல், வெளிவருதல், புண் முதலிய உண்டாதல். [இடமும்.
புறப்பிணை-முல்லைநிலம், காடுங்காடு சார்ந்த
புறப்பிறப்பியம் - பிற்பத்தியம். [பற்று.
புறப்பற்று-வெளிப்பற்று, எனது என்னும்
புறப்பாடு - புறப்படுகை, வெளிவரல்.
புறப்பாவகவல் - பாடாண்பாட்டுத் துறை மேற்பாடு மாசிரியம்.
புறப்புறம் - பாடாண்பொதுவியல்.
புறப்பெண்டிர் - பரத்தையர், வேசையர்.
புறப்பேச்சு - சுயவறிவு, மயங்கிப்பேசல்.
புறப்பொருள் - புறத்திணை, வீரம் வெளிப் படையானபொருள், அறம்பொருளென் னுமிருவகைப்பாற்பட்டிருப்பன, படைத் திறம், சேனையின் சிறப்பு முதலியன.
புறப்பொருள்வெண்பாமாலை - புறத்திணை வகைகளைப்பற்றி ஐயனரிதனரியற்றிய ஓர் இலக்கணநூல். [புறமடை.
புறமடை - மதிலின் வெளிப்புறம், வெளிப்
புறமதில் - கோட்டை வெளிமதில், புற வெயில்.
புறமறித்துப்பார்த்தல் - புறமறிபார்த்தல், ஸைம்மறித்துப் பார்த்தல், உட்புறம், வெளிப்புறம், திரும்பிப்பார்த்தல்.
புறமறைத்தல் - எண்ணம் வெளிப்படாது மறைத்தல்.
புறமாறல் - மாறுதல், புறத்தேமாறுபடல், அன்பு கெடல், கண்மாறல்.
புறமாறுதல் - இழத்தல், கைவிடுதல்.
புறமயிர்-உரோமம், பின்சிகை, பின்குடுமி.
புறமறிவு - பிறர்க்கு நன்மை நினைக்கை.
புறமொழி - புறங்கூற்று, புறம்பேசல்.
புறம்-இடம்,ஏழாம்வேற்றுமையுருபு, சுற்று, பக்கம், பின்புறம், மதில், முதுகு, வீரம், வெளியிடம், அன்னியம்,புறத்திணை,புறங் கூறல், பட்சபாதம், திசை, காலம், பாதுகாப்பு, புறவு, இறையிலிநிலம், கொடை, கொடுத்தல், தோல்வி, காடு, இருபுறம், பெரும்புறம், புறங்கொடுத்தல், புறக் கொடை.

புறம்பணை - குறிஞ்சிநிலம், முல்லைநிலம், நகரையடுத்த மருதநிலம்.
புறம்பணையான் - சாதவாகனன், ஐயனார்.
புறம்பு-தனியானது, புறத்தி, வெளியிடம், முதுகு.
புறம்புக்கிருத்தல் - மலங்கழிக்க விருத்தல்.
புறம்புபண்ணுதல் - புறத்திபண்ணுதல்.
புறம்புறுத்தல்-புறக்காவல்செய்தல். [படல்.
புறம்பொசித்தல்-வெளியில் கசிதல், வெளிப்
புறம்பொதுக்கல்-ஆற்றின் உள்வாயில் கரை கட்டல், ஆற்றுட்கால்.
புறம்போக்கு-கிராமச் சமுதாய நிலம். [தல்.
புறம்போக்குதல்-அகற்றுதல்,வெளியேற்று
புறம்போதல் - விட்டு நீங்குதல்.
புறவடி - புறங்கால், பாதத்தின் மேற்புறம்.
புறவடை - மலங்கழிப்பிக்க அபானவாயில் வைப்பது. [வெளிப்பிரதேசம்.
புறவட்டம் - வெளிவட்டம், வெளியிடம்,
புறவணி - குறிஞ்சிநிலம், முல்லைநிலம்.
புறவணைத்தல் - அறவணைப்பு, ஆதரிப்பு.
புறவம் - காடு, குறிஞ்சிநிலம், புறா, முல்லை நிலம், சீர்காழி, சீகாழி, தோல். [காழ்.
புறவயிரம்-ஆண்மரம், வெளிவயிரம், புறக்
புறவரையம் - சூழப்பூசுமருந்துப்பூச்சு.
புறவயின் - புறவில், வெளியில்.
புறவாய் - வெளிப்பக்கம்.
புறவாழி-பெரும்புறக்கடல்,மகாசமுத்திரம்
புறவாளி - புறவேலை, வெளிவேலை செய்பவன்.
புறவிடன் - கடல், சோலை, மலை, யாறு.
புறவிடை - வீட்டுக்கொல்லை, புழக்கடைத் தோட்டம், பிறவிடை. [தழ்.
புறவிதழ் - புல்லிதழ், பூவின் வெளிப்புறவி
புறவீச்சு - ஓர்சன்னி, சன்னிநோய்வகை.
புறவீடு - பிறவிடுதி, அயலார்மனை.
புறவீதி - நகரின் வெளிவீதி, புறவழி.
புறவு - குறிஞ்சிநிலம், புறா, முல்லைநிலம், விலங்கின்கூட்டம், காடு, சிறுகாடு, சாகுபடி நிலம், முல்லைக்கொடி. [தூண்முகம்.
புறவுரை - பாயிரம், முகவுரை, தந்துரை,
புறவெட்டு-அறுத்த மரத்தின் மேற்பலகை, எதிர்ப்பேச்சு,மரத்தின் மேற்புறவெட்டு, புறவேட்டு வக்கீல்.
புறவெண்டு - கடுக்கனிற் புறத்துவெண்டு.
புறவெளி-பராகாயம். [திரம்,வெளிவேலை.
புறவேலை - சக்கிரவாளத்தைச்சூழ்ந்தசமுத்
புறவொடுபுலத்தல் - அகப்பொருட் டுறையி னொன்று. [நடை.
புறநடை - புறனடைச்சூத்திரம், பின்வாசல்
புறனடைச்சூத்திரம்-விதித்தவற்றுள் அடங்காதவற்றை அமைத்துக்காட்டும் பொதுச் சூத்திரம். [காரியம்.
புறனிலை - பின்னிலை, வெளிநிலை, பிற்
புறன்-புறம், முதுகுப்பின், புறமுதுகு, புறம் நீங்கினஅளவு.
புறனுரைத்தல் - புறங்கூறல்.
புரு - ஓர்புள், கபோதம், தூதுணம்.
புருக்காலி - ஓர்வகை மருந்துப்பூடு.
புருண்டுதல் - பிரண்டுதல், கீறுதல்.
புருத்தலை - சிறிய தலை. [தல்.
புருப்பரத்தல்-களவெடுத்தல், சோரம்போ
புருமாடம் - புருவசிக்குமிடம், புருக்கூடு.
புருமுட்டி - ஓர்வகை மருந்துப்பூடு.
புருவால் - பலகை யிணைப்பின் ஓர்வகை.
புற்கசன் - சண்டாளன், தூர்த்தன்.
புற்கட்டு - புற்கற்றை, புல்லுக்கட்டு.
புற்கட்டை - அறுகம் புற்கட்டை, அறுத்த பயிர்த்தாள்.
புற்கம் - எத்து, குறை, புல்லறிவு, மாயம்.
புற்கலம் - உடல், கல் முதலிய உயிரற்ற பொருள், சடப்பொருள்.
புற்கலன்-உடல், உயிர், ஆன்மா. [கவ்வுதல்.
புற்கவ்வுதல் - தோல்விக்குறியாய்ப் புல்லுக்
புற்கற்றை - புற்றிரள், புற்கட்டு.
புற்கிடல் - பொலிவிழத்தல்.
புற்கு - கபிலநிறம், குறை, நிந்தைக்குறிப்பு.
புற்குருவி - காடை என்னும் பறவைவகை.
புற்கென - வெறுக்கத்தக்க, பொல்லாதாக, புற்கென்ற நிறத்தொடிருக்க.
புற்கென்னல் - அந்திப்பொழுதின் குணம், புகர்நிறக்குறிப்பு, பயனில்லாமைக் குறிப்பு, புன்மைக்குறிப்பு, ஒலிக்குறிப்பு.
புற்கை - கூழ், கஞ்சி, மாவுச்சாதம்.
புற்கொடி - சுரைக்கொடி, பேய்ச்சுரை.
புற்கோரை - ஓர்புல், சிறு கோரைவகை.
புற்சாமை - சாமை வகை, வயற்சாமை.
புற்செடி - புற்பற்றை, புற்பத்தை.
புற்செதுக்கி - உழவாரப்படை, புல்வெட்டி.
புற்பதி-அணுடநாள்,பனை,வாழைக்கிழங்கு.
புற்பத்தை - புல்லுடன் கூடிய மண்ணுங் கட்டி, புல்லுப்பத்தை. [பாய்.
புற்பாய் -புன்பாய், தர்ப்பாசனம்,கோரைப்
புற்புதம் - நீர்க்குமிழி, கொப்புள். [யகாலம்.
புற்புல்லெனல் - விடியற்குறிப்பு, அருணோதை
புற்பொழி - புற்பற்றை, புல்லார்ந்தவரப்பு.
புற்போதி - பூவரசு, பூப்பொரசு.
புற்றம் - புற்று.
புற்றாள் - புற்றின் துவாரம், புற்றுக்கண்.

புற்ருஞ்சோறு - கறையான் புற்றினுள்ளீசே மித்துவைக்கும் ஆகாரக் கூடு.
புற்ருளி - அனுட நட்சத்திரம், பனை.
புற்றிற்பூ - காளான், ஆம்பி.
புற்று - வனை, வன்மீகம், கரையான்கட்டும் வனை, எறும்புவனை, புறை வைத்த புண், தலை, எழுத்து.
புற்றுக்குதைச்சி - புற்ருஞ்சோறு.
புற்றுத்தேன்-சுவர் இடுக்குகளில் ஈக்களால் வைக்கப்படும் தேன்.
புற்றுநோய்-புத்துப்போலக் குருத்துவளர்த்து நீர் வடியும் நோய்.
புற்றுமண் - கறையான்மண். [தோண்டல்.
புற்றெடுத்தல் - கறையான்முதலியன வனை
புனக்கல் - தேகக்கல். [வந்தனம்.
புனஸ்காரம்-வணக்கம், பக்தியோடுசெய்யும்
புனத்துளசி - காட்டுத்துளசி. [கம்.
புனப்பாகம் - கஞ்சி, புனர்ப்பாகம், மறு பா
புனமல்லி - காட்டுமல்லிகை, வனமல்லி.
புனமுருக்கு - பலாசமரம், வனமுருங்கை.
புனமுருங்கை - ஓர்முருங்கை, புரசமரம்.
புனம் - கொல்லை, வயல், தானறுமுடிய காடு.
புனராகமனம்-திரும்பிவருதல்,மீண்டுவரல்.
புனராவர்த்தம் - சனனம், சுற்றுதல், மறு தரம் சென்மமெடுத்தல்.
புனராவர்த்தி-புனர்சென்னனம், மறுபிறப்பு.
புனரி
புனரித்தண்டு } ஓர் மருந்துவகைப்பூடு.
புனருக்தம் - புனருத்தம், எதிரொலி.
புனருத்தசன்மம் - பார்ப்பான், துவிஜன்.
புனருத்தம் } கூறியது கூறல், எதிரொலி,
புனருத்தி } பௌனருத்தம்.
புனருத்தாரணம் - மீண்டும் நிலைநிறுத்துகை.
புனர்ச்சென்னனம்-மீண்டு பிறத்தல், கடுமையான நோயினின்றும் தப்பிப்பிழைக்கை, மறுஜென்னனம், புனர்ப்பவம்.
புனர்தம் - புனர்பூசம், அதிதி நாள், கழை.
புனர்நவம்-நகம், உகிர், புனர்ப்பவம்.
புனர்பூசம்-ஏழாவது நட்சத்திரம்,புனர்வசு.
புனர்ப்பவம் - நகம், மீண்டு பிறத்தல்.
புனர்ப்பாகம் - சமைத்ததைச் சமைக்கை, புனப்பாகம், மறுசமையல், பத்தியத்திற் காகத் தயாரிக்கும் கஞ்சி.
புனர்வசு - சிவன், திருமால், புனர்பூசம், தரித்திரன் குமாரன், துந்துபி மகன்.
புனர்விசாரணை - வழக்கின் மறுவிசாரணை.
புனர்விவாகம் - இரண்டாமணம், மறுமணம்.
புனலாடையான் - பூமிதேவி, பூமாதேவி.
புனலி - ஓர்பூண்டு, புனரி, காட்டுமல்லிகை.
புனலை - நெய்க்கொட்டான் மரம், பூவந்தி.
புனல் - ஆறு, குதலை, நீர், குளிர்ச்சி, வாலுளுவை, வாய குறுகிய பாத்திரத்தில் திரவப்பொருளை ஊற்ற உதவுங் கருவி.
புனல்பாய்தல் - நீர் பாய்தல். [க்கு.
புனல்முருங்கை - ஓர்முருங்கை, காட்டு முரு
புனல்வாயில் - மதகின் முன்வாய். [சல்.
புனல்விடுதல் - குதலைகொஞ்சல், மதலைபே
புனல்வேந்தன் - வருணன், பாசரதன்.
புனவர் - குறுஞ்சிறிலமாக்கள், வேடுவர்.
புனவெலுமிச்சை - குருந்து.
புனற்கடல் - நன்னீர்க்கடல்; இது: எழுகடலில் ஒன்று.
புனற்கரசன் - புனல்வேந்து, வருணன்.
புனற்படுதெருப்பு - வடவைத் தீ. [தல்.
புனற்பாகம் - சமைத்ததை மறுபடி சமைத்
புனற்பெருக்கு - நீர்ப்பெருக்கு, வெள்ளம்.
புனற்றிரை-நீர்த்திரை, அலை, கல்லோலம்.
புனஸ்காரம் -புரஸ்காரம், எத்தனப்படுதல்.
புனனுடன்-சோழவரசன்,பொன்னிநாடன்
புனனுடு - காவேரிநாடு; இது: கொடுந்தமிழ் நாட்டினொன்று, சோணாடு.
புனுகம் - பின்பு, பிறகு, அப்பால், பிம்மால்.
புனிகம் - சங்கபாஷாணம், சங்குபாடாணம்.
புனிதம் - புனீதம், பரிசுத்தம்.
புனிதன் - அருகன், இந்திரன், சிவன், சுத்தன், புத்தன். [தோல், புதுமை.
புனிறு - ஆருசம், ஈன்றணிமை, சூதகம்,
புனிற்ரு - இளங்கன்றுப்பசு, எருமை. [தம்.
புனீதம்-சுத்தம், புனர்பூசநட்சத்திரம், புனி
புனுகு - புழுகு, பூனைமதம்.
புனுகுபூனை - புனுகு உண்டாகும் பூனை.
புனை - அலங்காரிப்பு, அழகு, சீலை, புதுமை, புனையென்னேவல், பொலிவு, விலங்கு, ஆபரணம், நீர், பூ, பாராட்டு, இட்டுக்கட்டுதல். [கற்பித்து.
புனைஇ - புனைந்து, அணிந்து, அலங்காரித்து,
புனைஇயர் - புனைக, புனைய.
புனைகு - புனைவோன், புனைய.
புனைகுழல்
புனைகோதை } கூந்தலழகுள்ள பெண்.
புனைசுருட்டு-சதியாலோசனை,சூது,மோசம்.
புனைதல் - அணிதல், அலங்காரித்தல்,சித்தஞ் செய்தல், முடைதல், கட்டுதல், ஒழுங்காயமைத்தல், சிறப்பித்துக் கூறல், கற்பித்தல், செய்யுளமைத்தல், செய்தல், எழுதுதல், அணிதல், சித்திரித்தல்.
புனைந்து - ஆராய்ந்து.
புனைந்துரை - சிறிதினைப்பெருக்கியும் பெரி

நினைச் சுருக்கியும் அலங்கரித்துக்கூறல், பாயிரம்.

புனைந்தோர் - கம்மாளர், புனைவர்.

புனைபெயர் - கற்பிதப்பெயர். [வார்த்தை.

புனைமொழி - அலங்காரச் சொல், சிங்கார

புனையிழை - பெண், மகளிர்.

புனைவர்-கம்மாளர், கம்மியர், புனைந்தோர்.

புனைவிலி - உபமானப்பொருள்.

புனைவிலிநவிற்சியணி-ஓரலங்காரம்; அஃது: உபமானத்தை வண்ணிக்க அதனது சம்பந்தத்தால் உபமேயந் தோன்றச் சொல்லுதல்.

புனைவு - அலங்காரம், அழகு, செழிப்பு, செய்கை, கட்டுகை, இணைப்பு, கற்பனை.

புனைவுளி - வண்ணிக்கப்படு பொருள்.

புனைவுளிவிலைவணி - ஓரலங்காரம்; அது: சொல்லப்பட்ட ஒரு உபமேயந் தோன்றுதலாம்.

புன்கண் - தரித்திரம், துன்பம், நோய், மெலிவு, அச்சம், இழிவு, பொலிவழிவு.

புன்கம் - உணவு, சோறு, புற்கம், புன்கு.

புன்காலி - காயாமரம், பாதிரிமரம்.

புன்கு - புனமுருங்கை, புன்கமரம்.

புன்குசடை - குஞ்சிச்சடை, மயிர்ச்சடை.

புன்குமரம் - புங்கமரம். [பட்டை.

புன்குரி - புங்கமரப் பட்டை, புங்குமரப்

புன்கெண்ணெய் - புங்கங்கொட்டை நெய்.

புன்சிரிப்பு - புன்முறுவல், இளமுறுவல்.

புன்செக்கர் - மாலைநேரம். [நிலம்.

புன்செய் - இறைப்புப்பயிர்நிலம், மானவாரி

புன்செய்கை-சிறுதானியச்செய்கை. [பயிர்.

புன்செய்ப்பயிர் - நெல்லொழிந்த மற்றைப்

புன்சொல் - எளியசொல், பழிப்புரை.

புன்பயிர் - சிறுபயிர், முனைப்பயிர்.

புன்புலம் - தரிசுநிலம், புஞ்செய்நிலம், புல்லிய இடம், புல்லிய அறிவு, மூல்லை.

புன்புலால் - இழிவாகிய ஊன். [தை.

புன்பெண் - புலைமகள், அற்பப்பெண், பரத்

புன்மக்கள்-இழிந்தவர், இழிதொழிலாளர்.

புன்மரம் - மூங்கில் முதலியவுட்டுளை மரம், புறவயிரமுள்ள மரம், புறக்காழ்தரு.

புன்மாலை - புன்செக்கர், மாலைப்பொழுது.

புன்மானம் - இளஞ்செக்கர்வானம்.

புன்முறுவல் } மந்தச்சிரிப்பு, புன்சிரிப்பு.
புன்மூறல் }

புன்மை-அற்பம், ஈனம், சிறுமை, துன்பம், மறதி, வறுமை, இழிவு, அசுத்தம், குற்றம், நிறம், புலை, புலைமை, காயம், சிவப்பு நிறம்.

புன்றலை - சிறிய தலை, இளந்தலை, சிவந்த மயிருள்ள தலை, புற்கென்றதலை, சிவந்த தலை, சிவந்த ரோமம், சிறுதலை.

புன்றுளகம் - இலாவாண நகரத்திற்கும், மகதத்திற்கும் இடையிலிருந்த நகரம்.

புன்றுமி } சாறல், சிறுதிவலை, சாவானம்.
புன்றூளி }

புன்றொழில் - இழிதொழில், தீச்செயல்.

புன்னகை - புன்சிரிப்பு, புன்முறுவல்.

புன்னம்புலரி - வைகறை, விடியற்காலை.

புன்னறவம் - இஞ்சி, வேர்க்கொம்பு.

புன்னறுவம் - சாறணை, சார்வேளை.

புன்னாகம் - கோழிக்கீரை, புன்னை,குரங்கு. மஞ்சணாறி, ஓர் மருந்துப்பூடு.

புன்னாகவராளி - ஓர்ராகம். [லாளர்.

புன்னாதர் - இழிந்த அறிவீனர், இழிதொழி

புன்னிடா - சகரைச்செடி.

புன்னீர் - கழிவுநீர், உதிரம், குருதி. [யம்.

புன்னெறி - ஈனவழி, தீயவழி, பொய்ச்சம

புன்னை - புன்னைமரம், பின்னை.

புஷ்கரம் - வடநாட்டில் போகார் எனவழங்கும் ஓர் புண்ணிய ஸ்தலம்.

புஷ்கரணி - கோவிலைச்சேர்ந்த குளம்.

புஷ்தகம் - புத்தகம், சுவடி, கோசம்.

புஷ்தி - கன்னமீசை.

புஷ்பகம் - புஷ்பக விமானம்.

புஷ்பகந்தர் - தீர்த்தங்கரருளொருவர்.

புஷ்பகேடம் - தேன்வண்டு, பிரமரம்.

புஷ்பகேது } காமன், மன்மதன், அனங்
புஷ்பபாணன் } கன்.

புஷ்பமாரி - புட்பவருஷம், எரியும் தீயினின்று சிதறும் பொறி.

புஷ்பம் - பூசம், பூசநட்சத்திரம், மலர்.

புஷ்பராகம் - புட்பராகம், பீதமணி.

புஷ்பவதி - இருதுவானவள், பிரவிடை.

புஷ்பவருஷம் - மலர்மாரி, சிறுதூறல்.

புஷ்பாசனி - இலக்குமி, கமலாசனி.

புஷ்யர் - பழம்புத்தர், பூசத்திற்பிறந்தவர்.

பூ

பூ- அழகு, இடம், இந்துப்பு, இருக்குதல், இலை, ஓமாக்கினி, ஒருமுழத்து, ஓர் கண்ணோய், ஓர்நரகம், கூர்மை, தாமரை, தீப்பொறி, பிறப்பு, புட்பம், பூமி, பூவென்னேவல், பொலிவு, மகளிர்சூதகம், பூமிறுக்குமுன்பு தோன்றுங்கதிர், மலர், சேவ

வின் கொண்டை, (கண்ணில்வீழும்) பூ, (தேங்காய்)பூ, நிறம், நீலநிறம், மென்மை, யானையின் தந்தப்புசர், ஆயுதப்பொருக்கு, தண்பொடி, முப்பூ, பொழிவு, கூர்மை, நயம்.

பூகதம் - கமுகு, பாக்குமரம். [செடி.

பூகதம்பம் - நீலக்கடம்பு, ஓர் மருந்துவகைச்

பூகதர் - புகழ்வோர், மாகதர், வந்தியர்.

பூகதன்-புகழ்வோன், பூமியையடைந்தவன்.

பூகழலற்றவஞ்சி-தருமதேவதை, மாதங்கி.

பூகபீடம் - துப்பற்காளாஞ்சி, எச்சிற்படிகம்.

பூகம் - இருள், உண்டை, கமுகு, கழுகு, குவியல், கூந்தற்கமுகு, கூந்தற்பனை, கௌரி, சுபாவம், திரட்சி, நேரம், பலா, பாக்கு, பிளப்பு.

பூகம்பம்
பூகம்பனம் } பூமிநடுங்குதல், பூமியதிர்ச்சி.

பூகரபம் - கையாந்தகரை, பூகரம்.

பூகரம் - நஞ்சு, விஷம், உப்பு.

பூகர்ணம் - பூகன்னம், பூகோளத்தின் மைய விட்டம், புற்று.

பூகலம் - மதர்த்த குதிரை, பூகாமி.

பூகளித்தம் - பூமிச்சருக்கரைக் கிழங்கு, முள் முரண்டை. [விட்டம்.

பூகன்னம்-பூமியினுடைய மையவரியினரை

பூகாகம் - அன்றில், கரும்புரு.

பூகாந்தை - பூமிதேவி, பூதேவி, பார்ப்பதி.

பூகாமி - பூமிவழியாய்க் கமனிக்குங்குதிரை, விரைந்து செல்லும் குதிரை.

பூகேசம் - ஆலமரம், நீர்ப்பாசி. [மாணம்.

பூகோளசாஸ்திரம்-புவனசாஸ்திரம், பூப்பிர

பூகோளம் - பூமி உருண்டை, பூகோளசாஸ்திரம், ஆரிய சாஸ்திரம் பூமியினிடையே மேருவும், கடலினிடையே வடவைத்தீயுமிருக்கின்றன வென்று கூறும். இவை முறையேவடதுருவமென்றும், தென்துருவம் என்றும் கூறப்படும். பூமத்யம் என்று ஆரிய சாஸ்திரத்திலே சொல்லப்பட்ட இடம் வடதுருவமுனை. ஆரிய சாஸ்திரம் பூமியின் மேகலாரேகையை யெல்லையாக வைத்து உத்தரகோளார்த்தம் தக்ஷிண கோளார்த்தம் என்றிரு கூறுகப் பிரித்து உத்தர கோளார்த்த முழுதும் நிலமென்றும், தக்ஷிணகோளார்த்தமுழுதும்நீரென்றும் கூறும். உத்தரகோளார்த்த முழுதும் நிலமெனவே அதன் மத்யஸ்தானம் வடதுருவத்திலுள்ள சுமேருவாகின்றது. இனிக் கடலின் மத்யமெனவே தக்ஷிணகோளார்த்தமுழுதும் நீராக அதன் மத்யஸ்தானம் தென்துருவத்திலுள்ள வடவாமுகமாகின்றது. உத்தர கோளார்த்த முழுவதையும் ஜம்புத்வீபம் என்று வழங்குவர். இந்த ஜம்புத்வீபம் ஒன்பது வர்ஷங்களாக வகுக்கப்பட்டது. இவற்றின் விரிவெல்லாம் பெருநூல்களிற் காணலாம். பூச்சக்கிரம்.

பூக்கஞ்சரி
பூக்கஞ்சா } பூங்கஞ்சா, சடைக்கஞ்சா, பூப் பற்றிய கஞ்சா.

பூக்கடுக்கன் - பரவர்காதணி வகை.

பூக்கட்டுதல் - மலர்மாலை தொடுத்தல்.

பூக்கண்டகம் - அசுரர், அவுணர்.

பூக்கந்தகம் - புடமிட்டகந்தகம். [நிலத்தூர்.

பூக்கம் - ஊர்ப்பொது, கமுகு, மது, மருத

பூக்கவர்ந்தண்ணி - குரங்கு.

பூக்கன்னம் - பூகர்ணம், பூமியின் மையவரி.

பூக்காணம் - சமரேகையின் விட்டவளவு.

பூக்காரன் - பூவிற்போன், பூவாணியன்.

பூக்குஞ்சு - பூங்குஞ்சு, பூம்பீலி, பூச்செண்டு.

பூக்குடலை
பூக்குட்டான் } பூக்கூடை, பூக்கொட்டான்.

பூக்குதல்-பூத்தல், தோன்றுகை, நினைக்கை.

பூக்குறடு - பூமாலை தொடுக்குஞ் சாலை, பூ மேடை.

பூக்கூடை - பூக்குடலை, பூக்குட்டான்.

பூக்கொய்தல் - பூவெடுத்தல், பூப்பறித்தல்.

பூங்கணுத்திரையார் - ஓர் சங்கப்புலவர்.

பூங்கணை - புஷ்பபாணம், மன்மதபாணம்.

பூங்கண்ணன்
பூங்கண்ணுத்திரையார் } ஓர் சங்கப் புலவர்.

பூங்கதிர் - ஒளி, வெண்கதிர், கிரணதாரை.

பூங்கரும்பு - செங்கரும்பு, கரும்பின்மூனை.

பூங்கருவி - ஒருவகைப் படைக்கலம்.

பூங்கவணி - ஓர்வகைச் சாயப்புடவை.

பூங்கா - நந்தவனம், பூஞ்சோலை.

பூங்காரமை - மந்தாரம், மூங்காரம்.

பூங்காரை-ஓர்காரை, மெல்லியகாரை. [ழில்.

பூங்காவனம் - பூங்கா, நந்தவனம், பூம்பொ

பூங்காவி - ஓர்காவி, மலர்க்காவி.

பூங்குஞ்சு - இறகுமூளையாக் குஞ்சு.

பூங்குழை - அழகிய காதணி.

பூங்குறுநல் - பொடிநெய், பூநெய்.

பூங்குன்றம் - ஓர்ஊர், இராமநாதபுரஞ் சில்லாவில் மதிபாலன்பட்டிக் கருகில் கிடைக்கும் சாசனங்களில், அவ்வூர் பூங்குன்ற நாட்டுப்பூங்குன்றம் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. [புலவன்.

பூங்குன்றன் - கணியன் பூங்குன்றன் என்ற

பூங்கொடி - மலர்கொண்ட கொடி, அழகிய துவசம்.

பூங்கொடிநாயகி - திருவோமாம் புவியூரில் கோயில்கொண்டிருக்கும்தேவியார்பெயர்.
பூங்கொத்து - மலர்த்திரள், பூவின்தொகுதி.
பூங்கொம்பனை - திருஇன்னம்பரில் கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பூங்கொல்லை - பூந்தோட்டம், பூங்கா.
பூங்கோதை-மதுரையிலே இற்றைக்கு இருநூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னேயிருந்தவொருதாசி. இவன் சீதக்காதியென்னும் சோனகப் பிரபுவுக்குக் காமக்கிழத்தி யானமையால் தன்னினத்தாராலே நீக்கப்பட்டவள். இவன்காயற்பட்டினத்திலே, சீதக்காதி கொடுத்த பெருநிதியைக் கொண்டு தன்னூருக்குப் போகும் வழியிலே கள்ளர் அப்பொருளைப் பறித்துக்கொள்ளக்கதியற்றவளாய்நின்று "தினங்கொடுக்கும் கொடையானே" என்னு முதற்குறிப்புள்ள பாட்டுப்பாடி மீட்டும் அவனிடத்திற் பெரும்பொருள் பெற்றுப்போனளென்பர். இவன் தமிழ்ப் புலமையிற்சிறந்தவளென்பதற்கு இப் பாட்டே போதுமான சாட்சியாகும்.
பூங்கோயில்-திருவாரூர்ச் சிவாலயம். [ரை.
பூங்கோரை - கோரைவகை, மெல்லிய கோ
பூசகன் - பூசைசெய்வோன், அருச்சகன்.
பூசக்கிரவாளம்-சக்கிரவாளகிரி, வட்டமலை.
பூசக்கிரன்-அரசன், பூபதி.
பூசணம்-பிசான், பூஞ்சணம், பூஞ்சு, பூடணம், அழுக்கு, ஓட்டடை, நேர்த்திக்கு வைத்த காசு.
பூசணி - ஓர்கொடி, பூசினி, பூசுனி.
பூசநட்சத்திரம் - காற்குளம், குருநாள், கொடிறு, தை, வண்டு.
பூசநாள் - பூசநட்சத்திரம். [பூமி.
பூசந்தி - இருகடலைப் பிரிக்கும் ஒடுக்கமான
பூசம் - ஓர்நாள், பூசநட்சத்திரம்.
பூசயம் - கோரைக்கிழங்கு, முத்தக்காசு.
பூசலார்நாயனார் - அறுபான்மும்மை நாயன்மாரிலொருவர்; திருநின்றவூரில் வேதியர்குலத்திலுதித்து, மனத்தில் சிவாலயம் இயற்றி, அதனால் அருள்பெற்றவர்.
பூசல் - கழுவல், பூசுதல், பெரிதொலித்தல், பொருதல், பொருந்தல், யுத்தம், பேரொலி, பலருமறிய வெளிப்படுத்துகை, வாய்பூசுதல், கொப்பளித்தல், தூசிப்படை. [முடித்தல்.
பூசறுத்தல் - சுத்திபண்ணல், பூசுந்தொழிலை
பூசற்களம் } போர்க்களம், யுத்தக்களம்.
பூசற்களரி }
பூசற்கிளவி - ஆரவாரமான பேச்சு.
பூசற்கோழை - போர்க்குப் பயப்படுபவன்.
பூசனம் - பூசை, ஆராதனை, பூசனை. [சணி.
பூசனி-அடைக்கலாங்குருவி, வணக்கம், பூ
பூசனை - ஆராதனை, கௌரவிக்கை.
பூசனைக்களரி - பூசைசெய்யுமிடம்.
பூசனைபடைத்தல் - வணக்கஞ்செய்தல்.
பூசனைவழக்கு - மரியாதை செய்தல்.
பூசாகாலம் - ஆராதனைவேளை, பூசைசமயம்.
பூசாக்கல் - சுக்கான்கல், சுண்ணும்புக்கல்.
பூசாசாரி - பூசாரி, அர்ச்சகன், பட்டன்.
பூசாந்தப்படலம் } பூம்படல், சப்பரம் வைக்
பூசாந்தப்படல் } கும் இடம். [மாவகை.
பூசாந்திரம்-அருமைபண்ணல், ஓர்கடுக்கன்,
பூசாபந்தம் - ஓரடி ஒருவரிசையாக நான்கு வரியெழுதி, யந்நான்குவரியுள் மேல்வரியிரண்டுந் தம்மிற்றாமே கோமூத்திரியாகவும், கீழ்வரியிரண்டுந் தம்மிற்றாமே கோமூத்திரியாகவும், மேல்வரி, கீழ்வரி மூன்றினும் வந்து கோமூத்திரியாகவும், கீழ்வரி, மேல்வரி மூன்றினும் வந்து கோமூத்திரியாகவும் வருவது.
பூசாபலம் } பூசையின்பலம், புண்ணிய
பூசாபலன் } வசனம்.
பூசாமுகம் - பூசைமுகம், பூசாகாலம்.
பூசாயத்தம் } பூசையின் தொடக்கம்.
பூசாரம்பம் }
பூசாரி } கோவிற்பூசை பண்ணுவோன்,
பூசாலி } அர்ச்சகன். [தல்.
பூசாவந்தம் - பூசாந்திரம், பெருமைப் படுத்
பூசாவிதி-பூசைமுறை, பூசைமுறைச்சட்டம்.
பூசாளம் - பூஞ்சாளம், பூஷாணம்.
பூசிதபயங்கரம் - சடங்காராதனை, கருமவழி.
பூசிதம் - வணக்கம், வழிபாடு.
பூசிதன்-கனவான், பூசிக்கப்படுவோன், பூசிக்கத்தக்கவன்.
பூசித்தல் - பூசனைசெய்தல், மரியாதை காட்டுதல், கொண்டாடுதல், பூசைசெய்தல்.
பூசிப்பு - வணக்கம், பூசிதம். [பார்த்தல்.
பூசிமெழுகுதல் - குற்றத்தை மறைக்கப்
பூசிலன் - தேவன், பூசிதன், பெரியோன்.
பூசிற்று - பூசியது, பூசியபொருள், பூசப்பட்டது.
பூசினி - பூசனி, பூஷணி, பூசுனி.
பூசு - தூசி, பூசென்னேவல், போர்.
பூசுகை - பூசுதல்.
பூசுசாந்தாற்றி - சிற்றூலவட்டம், சிறுவிசிறி.
பூசுணி - பறங்கிக்கொடி, பூசனி, பூசணி.
பூசுதயிலம் - பூசுதற்குரிய தைலம்.

பூசுதல் - அலங்கரித்தல், கழுவல், சந்தன முதலியவற்றைப் பூசுதல், சாத்திமினுக்கல், தடவல், மெழுகுதல், அப்புதல்.
பூசுதன் - பூமியின் புதல்வன், செவ்வாய்.
பூசுதை-பூமியின்புதல்வி, சீதை, ஆண்டாள்.
பூசுத்தி - துடைத்தல், மெழுகுதல்.
பூசுரீ - பூசி, பூசிக்கொண்டு.
பூசுரர் - அந்தணர், பூதேவர், ஆசாரியர்.
பூசை-அன்னதானம், ஆராதனை, வழிபாடு, பூனை, பூஞை, பலத்த அடி, நெட்டி, வெண்சிடை.
பூசைகொடுத்தல் - பலமாக அடித்தல்.
பூசைக்குறடு-பூசைமேடை,பூசைத்திண்ணை.
பூசைப்பரிசாரகன் - குருவின்சீடன்,பூசைக்கு உதவியான வேலையாள்.
பூசைப்பெட்டி - பூசைத்தளபாடப் பெட்டி, ஆன்மார்த்த இலிங்கம் வைக்கும் பெட்டி.
பூசைமுகம் - பூசாசந்நிதானம், பூசாகாலம்.
பூசைமேடை - பூசைக்குறடு, பூசாமேடை.
பூசைவீடு-பூசைசெய்வதற்காக ஏற்படுத்திக் கொண்டஅறை. [க்குரியகாலம்.
பூசைவேளை-பூசாகாலம், பூசைமுகம், பூசை
பூச்சக்கரம் - சூரியனேடும்பாதை, பூமிச் சுற்று, பூமி, பூமண்டலம், சக்கரவாணம்.
பூச்சக்கரவாளக்குடை - கோயில் மூர்த்தி கட்குப் பிடிக்கும் பெரியகுடை.
பூச்சக்கரவாளம் - சக்கரவாளகிரி, பூசக்கரவாளம்.
பூச்சக்கரன் - அரசன், பூபாலகன்.
பூச்சட்டை - குடலைக்கதிர், பூத்தொழில் அமைத்தது, சிறுசட்டை, தெய்வத்திற்குப் பூவினற் செய்தனியும் அங்கி.
பூச்சர்க்கரைக்கிழங்கு - பூமிச்சர்க்கரைக்கிழங்கு, முள் முரண்டை.
பூச்சல்லா - மிகமெல்லிய ஆடை, பூத்தொழிலமைந்த மிகமெல்லிய ஆடை.
பூச்சாகத்தி - எழுத்தாணி,பீச்சாகத்தி.
பூச்சாண்டி - வெருளி, குழந்தைகளுக்குப் பயமுண்டாக்கும் உருவம்.
பூச்சாண்டிகாட்டுதல் - பயங்காட்டுதல்.
பூச்சாயை - இருள், பூமிநிழல், பூமியுருவம்.
பூச்சாரம்-நிலத்தன்மை, பூவினிரசம், பூநீறு.
பூச்சி-செந்து, புள்ளி, குடர்ப்புழு, பூச்சிகளை அடைத்துவைக்கும்கூடு, காதணிவகை.
பூச்சிகாட்டுதல் - வெருள்காட்டுதல், பயங்காட்டுதல். [வசம்பு.
பூச்சிகொல்லி - பூச்சியைக் கொல்லுவது,
பூச்சிக்கடி - பூச்சியின்கடி, பூச்சியால் உடலில் படரும் பற்று, புண் கட்டிவகை.
பூச்சிக்கள்ளி - கள்ளிவகை. [கூடு.
பூச்சிக்கூடு - ஓராபரணம், பூச்சிகள்வாழும்
பூச்சிதம் - மதிப்பு, பூசிக்கத்தக்கது.
பூச்சிபறத்தல் - பெருஞ்சோர்வினல் கண்ணெளி மங்குதல்.
பூச்சிபிடித்தல் - போலித்தனமாய் நடித்தல், பண்டம் புழுப்பிடித்தல்.
பூச்சிப்பல் - சொத்தைப்பல், புழுப்பல்.
பூச்சியம் - அருமை, ஆடம்பரம், கீர்த்தி, சங்கை, சுன், பூசிக்கப்படத்தக்கது, மேன்மை, வெறுமை, பூசித்தல், நன்குமதிக்கத்தக்கது, இன்மைப் பொருளுணர்த்துஞ் சுன்னை, மதிப்பின்மை. [சொல்.
பூச்சியவார்த்தை - கணிசப்பேச்சு, பயனில்
பூச்சியன் - கருப்பும் வெள்ளையுமான மாடு, பூசிக்கப்படத்தக்கவன், மாமன்.
பூச்சியாண்டி - பூச்சாண்டி, பயமுறுத்தல்.
பூச்சிலை - கருந்தண்ணீர்க்கல், கல்வகை.
பூச்சிவிடுதல்-பூச்சிகாட்டுதல், அச்சமூட்டல்.
பூச்சிவெட்டு - தலையில் வழுக்கை, பூச்சிகளால் அழிக்கப்படுகை.
பூச்சு - பிலுக்கு, பூசுதல், வெளிக்காட்சி, இதமான செயல். [லம்.
பூச்சுத்தயிலம் - உடலிற் பூசுதற்குரிய தை
பூச்சுவேலை - கவர்களிற் சுண்ணந்தீற்றும் வேலை,மூலாமிடும்வேலை, வெளிப்பகட்டு.
பூச்சூட்டு - கர்ப்பிணிக்கு ஐந்து அல்லது ஏழாம்மாதம் செய்யும் சடங்கு.
பூச்செண்டு - புட்பச்செண்டு, பூஞ்செண்டு.
பூச்சேலை - பூச்சித்திரப்படாம், பூவேலையுள்ள புடைவை.
பூச்சை, பூஞை } பூனை, மார்ச்சாலம்.
பூஞை - மெலிவு, ஓர்வகை யோகாசனம், பூஞையாதனம்.
பூஞ்சக்கல் - தேசக்கல், ஒருவகை நீலக்கல்.
பூஞ்சணம், பூஞ்சணவன் } பூஞ்சு, பூஞ்சாவாண், பூஷாணம், பூரணம்.
பூஞ்சப்பரம் - பூவினற்செய்யுஞ் சப்பரம்.
பூஞ்சலாடுதல் - கண்ணெளிமயங்குதல்.
பூஞ்சல் - கண்மயங்குதல், பூஞ்சு, பூஞ்சை, மங்கனிறம், பலமற்றவன்.
பூஞ்சளம் - பூஷாணம். [மயங்கின கண்.
பூஞ்சற்கண் - குழிந்தகண், பீளைக்கண், ஒளி
பூஞ்சனங்கட்டுதல் - சிக்குப்பூத்தல், பூஞ்சகட்டல், பூஞ்சாவான் பூத்தல்.
பூஞ்சனிறம் - மங்கினிறம்.
பூஞ்சாடு - பூச்சியாடற்போற் காணல்.
பூஞ்சாட்டி - பூம்பயிர்ச்சாட்டி, எருவினுரம்

இழந்த நிலம். [ணிலம்.
பூஞ்சாட்டிநிலம் - பூஞ்சாட்டி, நுவாளிமண்
பூஞ்சாற்றூர் - சோழநாட்டின் ஓர் ஊர்.
பூஞ்சான் - ஓர்புல், பூஞ்சாளம், பூஷாணம்.
பூஞ்சி - பூஞ்சு, பூஞ்சை, மங்கல், மக்கல்.
பூஞ்சிகை-பூவையணிந்தமயிர்முடி,பூங்குழல்
பூஞ்சிவிகை - புஷ்பப்பல்லக்கு.
பூஞ்சிறகு - பட்சிக்குஞ்சின்றூவி.
பூஞ்சு-ஒட்டடை, பூசு, பூசணம், பீஞ்சணம், பூஞ்சல். [மகரந்தம்.
பூஞ்சுண்ணம் - பூந்தாது, மகரந்தப்பொடி,
பூஞ்சுமடு - பூவாகிய சும்மாடு.
பூஞ்செண்டு - பூச்செண்டு, பூப்பந்து.
பூஞ்சேக்கை - புஷ்பசயனம், பூப்படுக்கை.
பூஞ்சை-மங்கல், பூஞ்சல், பாழ், ஒட்டடை.
பூஞ்சைநிலம் - பாழ்நிலம், பஞ்சைநிலம்.
பூஞ்சோலை - புட்பக்கா, மலர்ச்சோலை.
பூஷணம் / பூடணம் } ஆபரணம், அணிகலன்.
பூடணுங்கம்-அணிகலத்தரும் ஒரு கற்பகம்.
பூடம் - பொரித, மேட்டிடம், பருமன்.
பூடன் - நுவாதசாதித்தரிலொருவன்.
பூடா - தசநாடிகளுளொன்று.
பூடு - உள்ளிப்பூடு, புல்லு,பூண்டு,சிறுசெடி.
பூட்கரம் - கோட்டம், மருதமரம், யானை.
பூட்கை - தோல்,மேற்கோள்,யாளி, யானை, கொள்கை, வலிமை, போர்வை, பூண் அணிந்த கை, துதிக்கை.
பூட்சி - உடல், உரித்து,பூணல், பொருத்து, உரிமை, ஆபரணம்.
பூட்டகக்காரன் - வீண்பெருமை பாராட்டுவோன்.
பூட்டகம் - இளப்பமானவேலை, வெளிவேஷம், வீண்பெருமை, வஞ்சகம், இரகசியம்.
பூட்டகம்பண்ணுதல் - வீம்படித்தல்.
பூட்டகவேலை - நெருற்பன்வேலை, மேன்மினுக்கானவேலை, வெளிவேஷமான வேலை, போலிவேலை, பகட்டுவேலை.
பூட்டகாரன் - வீம்பன், பூட்டகக்காரன்.
பூட்டக்கம் - பூட்டகம், மர்மமானது.
பூட்டக்கயிறு-பூட்டங்கயிறு, பூட்டாங்கயிறு.
பூட்டங்கம் - தொந்தறை, வில்லங்கம், அகப்படுத்துகை.
பூட்டங்கயிறு - பூட்டாங்கயிறு, நுகத்தில் மாட்டை இணைக்கும் கயிறு.
பூட்டம் - முடித்தல், முடிகொண்டை.
பூட்டல் - அடைத்தல், அணிதல், கணக்குப்படி ஐதைத்தல், கொழுவுதல், தொடுத்தல்.
பூட்டழித்தல் - கட்டுக்குலைத்தல்.
பூட்டறுதல் - கட்டுக்குலைதல், நுகத்தினின்றும் விடுபடுதல்,கட்டினின்றும்விடுபடல்.
பூட்டன் - பாட்டனின் தகப்பன்.
பூட்டாங்கம் - பூட்டங்கம், இணைப்பிடம்.
பூட்டாங்கயிறு-நுகத்தில் மாட்டைப் பூட்டும் கயிறு, பூட்டங்கயிறு.
பூட்டி - பாட்டனைப்பெற்ற தாய்.
பூட்டு-கதவுமுதலிய பூட்டும்பூட்டு,கொளுவி, தலக்கு, பூட்டென்னேவல், பொருத்து, விலங்கு, வின்னாண், கொக்கி, அடுக்கு, அணியையுடையது, பிணிப்பு, பிணைப்பு.
பூட்டுக்குச்சி - பூட்டுச்சாவி, கடைமுளை.
பூட்டுச்சாவி - திறவுகோல், கொளுவி.
பூட்டுதல் - பூட்டல், மாட்டுதல், வைத்தல், பிணைத்தல், வழக்குத்தொடுத்தல், அணிதல், அணிவித்தல், அடைதல்.
பூட்டுத்தைத்தல்-கதவுமுதலியவற்றில் பூட்டை இணைத்தல். [தல்.
பூட்டுநழுவுதல்-பூட்டுவிலகுதல், மூட்டுநழுவு
பூட்டுப்போடுதல் - பூட்டிடுதல், பேசவொட்டாது செய்தல். [நெருக்கடியான சமயம்.
பூட்டுவாய் - திறவுகோல் புகுந் துவாரம்,
பூட்டுவிற்பொருள்கோள் - பொருள்கோள் எட்டனுள் செய்யுளின் முதலினும், ஈற்றினும் உள்ளசொற்கள் தம்முளியையப் பொருள்கொள்ளும் முறை.
பூட்டை - இராட்டின் சக்கரம், பூட்டாங்கயிறு, இறைகூடை,ஏற்றமரம்,கீரிறைக்கும் காராம்பி, இளங்கதிர்,செக்கு,சோளக்கதிர், இடார்.
பூட்பராசன் - கருஞ்சீரகம், காட்டுச்சீரகம்.
பூஷணை - உபசாரம், போஷணை, பூசித்தல்.
பூஷிதம் - அலங்கரிப்பு, ஆபரணம்.
பூணல் / பூணனூல் } அணிதல், பூணூல், பூணுதல், புனைதல், ஆர்த்தல்.
பூணகம்-அணிஅணிந்த மார்பகம் (அல்லது) அவயவம்.
பூணங்கு - பிண்ணாக்கு, பிழிந்தசக்கை.
பூணரம் - ஆபரணம், பூண், புட்பமாலை.
பூணரம்பேசுதல் - பெருமை பேசுதல்.
பூணரவெலும்பு - காதையெலும்பு, மணிக்கட்டினெலும்பு. [ஆனினம்.
பூணி -பூணிப்பறவை, இடபவிராசி, எருது,
பூணித்தல் - சுட்டுதல், குறிப்பிடுதல், அகப்படுத்தல், பூணல். [உறுதிப்பட்டது.
பூணிப்பு - தீர்ப்பு, தீர்மானம், கொள்கை,
பூணுதல் - அகப்படுதல், அணிதல், உட்படுதல், பொருந்துதல், சூழ்ந்து கொள்ளு

தல், மேற்கொள்ளுதல், உடைத்தாதல், தகத்திற் கட்டப்படுதல், சகித்தல்.

பூணூல் } உபவீதம், முப்புரிநூல், யக்
பூணுல் } ஞோபவீதம்.

பூணூற்கலியாணம் - உபநயனச்சடங்கு.

பூஞை - மூல்லைநிலம், காடுசார்ந்த நிலம்.

பூண் - ஆபரணம், உலக்கை முதலியவற்றி லிடும் பூண், கிம்புரி, பூணென்னேவல், சுவசம். [கொளுக்கி.

பூண்கடைப்புணர்வு - ஆபரணக் கொக்கி,

பூண்கொள்கலம் - அணிகலச்செப்பு, ஆபர ணப்பெட்டி.

பூண்டான் - கணவன், கொழுநன்.

பூண்டி - ஊர், திடர்பட்ட கடற்பகுதி.

பூண்டு - பூதர், பூடு, சிறுசெடி, உள்ளி.

பூதகணங்கள்-பூதசேனை, பூதங்களின் கூட் டம், பூதகணங்கள் பதினெண்வகை.

பூதகரப்பான்பட்டை - பீநாறி மரப்பட்டை, புடகநாறிப்பட்டை, பூதகரப்பன்பட்டை.

பூதகலம் - பூதாக்கலம், பூதக்கலம்.

பூதகலிக்கம் - பேய்களோயோட்ட மந்திர வாதி இடும் அஞ்சனவகை.

பூதகாலம் - சென்றகாலம், இறந்தகாலம்.

பூதகி - கிருஷ்ணனை முலை மூலமாய் விஷ மூட்டிக் கொல்லும்படி கம்சனால் ஏவப் பட்ட ஓர் அரக்கி, பேய், பூதனை.

பூதகிராமம் - பஞ்சபூத சம்பந்தம்.

பூதகிருதாயி - இந்திராணி, பருத்தவள்.

பூதகிருது - இந்திரன், ஐராவதன்.

பூதகேசரி - வெட்பாலை, வெப்பாலை.

பூதகேசனி - சடாமாஞ்சி, பூதனை.

பூதகேசி - காஞ்சிரை.

பூதத்துக்கடை - பூதவாசல். [டுங்கண்ணுடி.

பூதக்கண்ணுடி-சிறியதைப் பெரிதாகக்காட்

பூதக்கலம் } மணப்பெண் மணமக
பூதக்கலம்பரிமாறல் } னுக்கு முதன் முறை உணவு பரிமாறுகை.

பூதக்கலவி-சிலசாதியாருள் விசேஷ தினத் தொருநாள் சீட்டுவிழுந்த பெண்ணோடு புணர்தல்.

பூதக்கால் - பருத்த கால், யானைக்கால்.

பூதக்கியம் } ஆலம் விழுது, பூதலக்குருக்
பூதக்குயம் } கண்.

பூதங்கண்ணனூர் - ஓர் சங்கப்புலவர்.

பூதசஞ்சாரம் - உலகவாழ்வு.[காட்டக்கினி.

பூதசஞ்சாரி - உலகவாழ்வை விடாதோன்,

பூதசதுக்கம்-காவிரிப்பூம்பட்டினத்துள் தவ வேடத்து மறைந்து நிமைசெய்வோரைக் கொண்டிருந்த பூதம், திரிந்து காவல் புரிந்துவந்த நாற்சந்தி; இது: அங்கசரின் ஐவகை மன்றத்துள் ஒன்று.

பூதசரீரம் - பூதவுடம்பு, பூதாகாரம். [கம்.

பூதசாரசரீரம் - தேவர்களி னுண்ணிய தே

பூதசாரம் - பஞ்சபூதத்துவம், பூததத்துவம்.

பூதசுத்தி - பஞ்சசுத்தியினொன்று.

பூதஞ்சேந்தனூர் - 'இனியவை நாற்பது' இயற்றியவர், சைவ வேளாளர்.

பூததயை - ஆன்மாக்கட்குச் செய்யுந் தயை, இரக்கம் பாராட்டும் குணம். [பூகோளம்.

பூததாத்திரி - பூமி, குவலயம், அகிலம்,

பூததாரன் - சிவபெருமான், பூதநாதன்.

பூததானியம் - எள், நிலம், தானு.

பூததேகி-பருத்த உடலுடையவ-ள்-ன்.

பூததேகி - வெண்ணெய்ச்சி, பூதாவேசி, பூத வேசி.

பூதத்தார் } முதலாழ்வார்மூவரில் ஒரு
பூதத்தாழ்வார் } வர்.

பூதத்துணர் - புன்முருக்கு, புன்மூருங்கை.

பூதத்தேவர் - ஓர் சங்கப்புலவர்.

பூதநம் - சந்திரகிரணம், சூரியகிரணம்.

பூதநாசநம் } உருத்திராக்கம், கடுகு, சேங்
பூசநாசனம் } கொட்டை, மெழுகு.

பூதநாசரீரம் - பூத மயமான சரீரம்.

பூதநாசினி - பெருங்காயம். [மரணநாடி.

பூதநாடி - பசாசுபிடித்தவர்க் கியங்கு நாடி,

பூதநாதன் } பூதங்களுக்குத் தலைவன், பூத
பூதநாயகன் } தாரன், சிவபெருமான். [ரி.

பூதநாயகி-உமை, பார்வதி, அம்பிகை, கௌ

பூதநிருத்தம் - ஓர் காலை முடக்கியாடல்.

பூதனை-கடுக்காய்மரம், குபேரன்பட்டணம், சடாமாஞ்சி, பூதனையென்னுமோரரக்கி.

பூதபஞ்சகம் - பஞ்சபூதம், பிரகிருதி.

பூதபஞ்சாக்கரம் - ஓர் பஞ்சாக்கரம்.

பூதபதி - சிவன், பூதவாளி, பூதநாதன்.

பூதபத்திரி - துளசி, பத்திரம், பூதலத்திரி.

பூதபரிணமதேகம் - தூலதேகம், பூததேகி.

பூதபரிணமம் - பூதங்களின் றிரிபு, பஞ்ச பூதங்களின் விகாரம்.

பூதபலம் - பலா, பலவு, பலாசம், பனசம்.

பூதபலி - உச்சிட்டங்கொடுத்தல்.

பூதபாண்டியன் - ஓர் சங்கப்புலவன்.

பூதபாண்டியன்தேவிபெருங்கோப்பெண்டு- ஓர் பெண்பால் சங்கப்புலவர். [ந்தன்.

பூதபாவநன் - விட்டுணு, சக்கரபாணி, முகு

பூதபுராணம் - இறந்துபட்டதோர் பழைய இலக்கண நூல்; இது: அகத்தியர்காலத் தது இருந்ததென்பர். [வன்.

பூதப்படையோன் - பூதப்படைகளையுடைய

பூதப்பட்டை - கரப்பான் பட்டை.
பூதப்பாண்டியன் - பாடல்பாடிய பாண்டிய வரசர்களிலொருவன்.
பூதமதீபாலன் - ஒளவையாருக்கு விருந் திட்டு அவரால் பாடப்பட்டவனுகிய புள்ளலூரில் இருந்தஓர் வேளாளப்பிரபு.
பூதமிவர்ந்தோன் - விநாயகன், கணபதி.
பூதமுசுட்டை - வட்டத்திருப்பி.
பூதமுத்தன் - உலோகாயதமதஸ்தன்.
பூதம் - ஆல், இறந்தகாலம், உண்மை, உயிர், ஐம்பூதம், கிடக்கும்பொருள், சங்கு, சடா மாஞ்சில், சுத்தம், தருப்பை, பரணி, பூத கணம், பேய், உடம்பு, உயிர்வர்க்கம், இருப்பு, கழுகு, கூந்தற்பனை, பூதலம்.
பூதம்புல்லனூர் - ஓர் சங்கப்புலவர்.
பூதயஞ்ஞம் } பூதவேள்வி, பூதயக்ஞம், பஞ்ச
பூதயாகம் } யாகத்தொன்று. எறுமபு, காக்கை முதலியவற்றிற்குப் பலியீதல்.
பூதரதாரி-கிருஷ்ணன், மண்ணுண்டோன்.
பூதராதன் - மலையரையன், மலைகட்குத் தலைவன், இமவான், பனிவரை.
பூதரபுத்திரி - பார்வதி, பூதலபுத்திரி, சீதை.
பூதரம் - பூமிதாங்கல், பொன்மலை, மலை, மேரு.
பூதரவில்லான் - சிவபிரான், குன்றவில்லி.
பூதரன் - அரசன், விட்டுணு, பிரபு.
பூதராயன் - பிசாசம், பூதகணத்தலைவன்.
பூதரூபகத்தன் - விநாயகக்கடவுள். [சம்.
பூதரோதரம் - மலைக்குகை, கந்தரம், நிகுஞ்
பூதர் - சாரதர்; இவர் பதினெண் கணத் தொருவர், பிசாசர், மனிதர். [மகன்.
பூதலக்கிழத்தி - பூமாதேவி, பூமிதேவி, நில
பூதலத்திரி - பூதபத்திரி, துளசி, தழாய்.
பூதலமார்க்கம் - உலகநெறி, உலகவழக்கு.
பூதலம்-பூமியிடம், பூப்பரப்பு. [ஞ்சை.
பூதலவாசனை-பிரபஞ்சப்பற்று, ஐம்புல வா
பூதலவாசி - பூலோகவாசி, மானிடர்.
பூதலிகை - மாப்பலகாரம், மாப்பண்டம்.
பூதவக்குருக்கண் - ஆலம் விழுது.
பூதவச்சம் - பீநாறி, பூதவிருக்கம்.
பூதவம் - ஆல், மருது, மருதோன்றி.
பூதவனல் - கோபாக்கினி, உதராக்கினி.
பூதவாகம் - பூதவாசம், தான்றி. [தை.
பூதவாக்கு - கெட்டபேச்சு, அசப்பியவார்த்
பூதவாசகம் - பெருந்தேக்கு, தேக்கமரம், கழிந்தபேச்சு.
பூதவாசம் - சரீரம், தான்றி, பூதவாகம்.
பூதவாதம் - ஓர் சமயம்; அது: பூதபேதமே உலகிற்குக் காரணமாம் என்று வாதிக் கும் மதம்.
பூதவாதி - பூதவாதம் பேசுபவன்-ன்.
பூதவார்த்தை - பூதவாக்கு, பூதவகையினு லுண்டாக்கப்படும் இடிமுழக்கம். [மான்.
பூதவாளி-பூதங்களுக்கு நாயகன், சிவபெரு
பூதவிகாரம்-பஞ்சபூதங்களின் வேறுபாடு.
பூதவிருக்கம் - பெருவாகை, பீநாறி.
பூதவிருட்சம் - ஆலமரம், பெருவிருட்சம்.
பூதவிருள் - உலகவிருள், அந்தகாரம்.
பூதவீடு - பஞ்சபூதங்களாலாகிய தேகம்.
பூதவுப்பு - சத்திபுப்பு, சத்திசாரம்.
பூதவேஷி - பூதாவேசி, வெண்ணெய்ச்சி.
பூதனம் - கடுக்காய், அரிதகி, கடுப்பு.
பூதனன் - அரசன், சந்திரகிரணம்.
பூதனுகனன் - கிருட்டினன். [சரீரம்.
பூதனுசரீரம்-பூதபரிணமதூலசரீரம், பெரிய
பூதனுசூதனன் } கிருஷ்ணன், கோபாலன்.
பூதனுரி }
பூதனூர் - ஓர் சங்கப்புலவர்.
பூதனை - ஓர் பெண்தேவதை, பூதகி, ஸ்ரீகி ருஷ்ணன்சிசுவாயிருந்தபோது கஞ்சனது ஏவலால தன் முலைகளிலே நஞ்சூட்டிக் கொண்டுவந்து, சிசுவுக்குப் பாலூட்டின போது அந்தப்பாலின்வழியாகவே அவளு யிரையும் கிருஷ்ணன் வாங்கிக்கொள்ள இறந்துபோன பூதகியென்னுமோரரக்கி.
பூதன் - கடுக்காய், கிருட்டினபக்கத்து பதி ஞன்காம் திதி, மகன், வசுதேவன் புத் திரன், ஆன்மா, பூதத்தாழ்வார்.
பூதன்தேவனூர் - ஓர் சங்கப்புலவர்.
பூதாகாரம் - மிகப்பருத்தது, பருத்த உடல்.
பூதாக்கலம் - மாப்பிள்ளைக்கு மணவாட்டி சோறிடுங் கலம், பூதக்கலம்.
பூதாக்கலம்பணிதல் - மணவாளப் பிள்ளை முதன்முறை ஓர் பாத்திரத்திற் புசித்தல்.
பூதாங்குசம் - பேய்மருட்டி, பேய்மிரட்டி.
பூதாச்சிறையன் - பச்சைக் கர்ப்பூரவகை.
பூதாதி - பூதத்தை முதற்காரணமாயுடைய பிரபஞ்சம், தமோகுணவகங்காரம், பூதா திகம், பூதபேதத்தாலாகியது.
பூதாதியாங்காரம்-பூதோற்பத்தி யாங்காரம்.
பூதாத்திரி -கீழ்க்காய்நெல்லி, கீழாநெல்லி.
பூதாத்துமன் - சந்நியாசி, துறவி, பரதேசி.
பூதாத்துமா - உடல், சிவன், துணைக்காரணம், பிரமன், சீவாத்துமா. [வராகம்.
பூதாரம்-பூமியைப்பிளப்பது, பன்றி, ஏனம்,
பூதாரன்-பூமியின்பதி, அரசன், பூபாலனன்.
பூதாரி - பெருங்காயம், இந்துளி, காயம்.
பூதாவாசன் - விட்டுணு, திருமால்.

பூதாவேசி - வெண்ணெய்ச்சி, பூதவேசி.
பூதானம் - பூமிதானம், சிறிய வலியையும் பொறுக்கமுடியாததன்மை.
பூதி - உடம்பு, ஊன், கொடுமை, சாம்பர், சித்தி, சுத்தம், செல்வம், தசை, தத்துவம், இளம்பூதி, ஆபுத்திரனை வளர்த்த அந்தணன், துர்க்கந்தம், நாய்வேளை, பிறப்பு,புலால்,புழுதி, பூமி, பொறிக்கறி, மகத்துவம், யானை, மைதுனம், விபூதி, சேறு, சிங்காரம், திருநீறு, எழுநாகத் தொன்று,புனுகுச் சட்டம்.
பூதிகந்தம் } கந்தகம், துர்க்கந்தம்.
பூதிகந்திகம் }
பூதிகம் - அகில், ஆயில்மரம், ஓர்வாசனைப் புல்,சாதிக்காய்,நிலவேம்பு,உடம்பு, பூமி.
பூதித்தன் - வேதவாதி.
பூதிகர்ப்பன் - பவபூதியென்னும் வடமொழிப்புலவன், பவபூதி.
பூதிகாட்டம் } செம்புளிச்சை.
பூதிகாஷ்டம் }
பூதிகாமன்-மந்திரி, அமைச்சன், ஆமாத்யன்.
பூதிகாய் - ஆலமரப்பட்டை. [சிவ சின்னம்.
பூதிசாதனம் - விபூதி யுருத்திராக்க முதலிய
பூதிசாரிசை - நாவி, புனுகுப்பூனை.
பூதிபீடம் - சத்திபீடங்களில் ஒன்று; இது: பாரத பூமியிலுள்ளது.
பூதிமம் - தூதுவளை.
பூதிமாமிசம்-துன்மாமிசம், கெட்டமாமிசம்.
பூதிமாருதம் - வில்வமரம், பூதிவாகம்.
பூதியம் - உடல், பிருதிவிமுதலிய பூதம், பூமி, பஞ்சபூதம்.
பூதிவாகம் - வில்வமரம், பூதிமாருதம்.
பூதுரந்தரர் - அரசர், நராதிபதி, பூபாலன்.
பூதேசன் - சிவன், பூதநாதன், முக்கணன்.
பூதேவர் - பார்ப்பார், பிராமணர்.
பூதேவி - பூமிதேவி, பூமியாகிய தேவதை.
பூதை - அம்பு, சரம், அத்திரம், வாளி.
பூத்காரி-மரவயிரம், மரவச்சிரம், மரக்காழ்.
பூத்தட்டுதல் - மெழுகைத் தகடாக்கல்.
பூத்தல் - உண்டாதல், பயத்தல், மலர்தல், பொலிவுபெறுதல், பூஞ்சாளம் பிடித்தல், கண்பூத்தல், சிருட்டித்தல், பெற்றெடுத்தல், மாதவிருதுவாதல்.
பூத்தன்று - பூத்தது.
பூத்தானம் - அருமைபண்ணல், அருமை பாராட்டுதல்.
பூத்தானம்பிடித்தல்-பயப்படுதல், அஞ்சுதல்.
பூஸ்திதி - நிலச்சம்பத்து, பூச்சொத்து.
பூத்திரணை - சணம்பு,பூமாலை, மருள்.
பூத்திரம் - மலை, அசலம், பொருப்பு.
பூத்திரி - ஓர்வகை விசிறி, பூப்போல நீப் பொறிகள் விழும் வாணவகை.
பூத்திரு - நாய்வேளை.
பூத்துப்பூத்தெனல் - இளைப்புக் குறிப்பு, பூர்ப்பூரெனல், உடல்வீக்கக்குறிப்பு.
பூத்துப்போதல் - நெருப்பில் நீறுபடர்தல், கண்பார்வை மங்குதல். [திருத்தல்.
பூத்தொடுத்தல் - மாலை கட்டல், தொடை
பூநதி - புன்குமரன், பொன்னுங்காய்மரம்.
பூநாகம் - நாங்கூழ், பூநீறு, நாகப்பூச்சி.
பூநாதம் - வெடியுப்பு, கம்பியுப்பு.
பூநிம்பம் - நிலவேம்பு, ஓர் மருந்துச்செடி.
பூநிறம் - மாந்தளிர்க்கல், ஓர்வகை மணி.
பூநீபம் - நிலக்கடம்பு, ஓர் மருந்துப்பூடு.
பூநீர் - பனிநீர், உவர் மண்ணில் எடுக்கும் நீர், பூமிநாதம், இதனுல் பாஷாணஜாதிகளைக் கட்ட ஜெயநீர் செய்யப்படும்.
பூநீலம் - சுத்தநீலம், அவுரிவகை.
பூநீறு - ஓர் மருந்து, பூமியினின்று பொங்கி வரும் உப்பு, பூருதி, பூவழலை.
பூநொய் - சிறுநொய், குறுநொய், குறுணை.
பூந்தட்டம் } பூவைக்குந் தட்டம்.
பூந்தட்டு }
பூந்தராய் - சீர்காழி, சீகாழி, பிரமபுரம்.
பூந்தவிசு - புஷ்பாசனம், கமலாசனம்.
பூந்தாது - கோங்கு, பூவிற்றாதுகள், மகரந்தப் பொடி, பூவின் சுண்ணம்.
பூந்தாமம் - பூமாலை.
பூந்தார் - மலர்மாலை, தொடையல்.
பூந்தாழை - அன்னஜி, பரங்கித்தாழை.
பூந்தி - பூவந்தி, பணியாரவகை.
பூந்திலட்டு - பூந்திலாடு, பூந்திமிட்டாய்.
பூந்துகள் - பூந்தாது, மகரந்தப்பொடி.
பூந்துகில் - பூத்தொழிலாலமைந்த துணி.
பூந்துணர் - புனமுருங்கை, பூங்கொத்து.
பூந்துளிர் - மெல்லியதுளிர், துவாணம்.
பூந்தூள்-பூந்துகள், தூசி, தும்பு, மகரந்தம்.
பூந்தேர்-புட்பத்தினாலாயதேர், புஷ்பரதம்.
பூந்தேன் - பூவிற்றேன், பூத்தேன், தேன்.
பூந்தை - ஒரூர், பூதன்தந்தை.
பூந்தொடை - கூரியபாணம், பூந்தொடை விழா.
பூந்தொடைவிழா - படைப்பயிற்சி பெற்ற இளைஞர் அரங்கேற்றும் விழா.
பூந்தோடு - பூவிதழ், பூந்தாது, பூந்தோடு.
பூந்தோட்டம்-நந்தனவனம், சோலை, தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஒரு கிராமம்.
பூபசாலை-பணிகாரக்கடை,பணியாரக்கடை.

பூபதம் - மரம், தாவரவருக்கம், திருபதம்.
பூபதி - அரசன், ஓர் குளிகை, மல்லிகை.
பூபம் - பட்டாபிஷேகம், பணிகாரம்.
பூபரிதி - சூரியனுடும் வரி, அயநரேகை.
பூபன் - அரசன், பூசாசாரி, பூரட்சகன்.
பூபாகம்-நிலப்பரப்பு, பூமிப்பிரதேசம்.
பூபாலர் - பூவைசியர், வேளாளர், பூமியை யாள்பவர்.
பூபாலன் - அரசன், வேளாளன், பூமகன்.
பூபாளம் - காலையிற்பாடும் ஓரிராகம். [க்கு
பூபிரதிதம்பம்-மலைநடு,கணவாய், பள்ளத்தா
பூபுத்திரி - சீதை, படைச்சால், பூமகள்.
பூப்பகம் - பெண்குறி, உண்டாகுமிடம்.
பூப்பட்டை-இலவங்கப்பட்டை, பும்பட்டை.
பூப்பதாரி-தாரஸ்திரீ, பூப்பக்காரி, பூப்பிணி.
பூப்பந்தர் / பூப்பந்தல் } மலர்விதானம், பூவிஞல் அலங் கரிக்கப்பட்ட பந்தல்.
பூப்பரிதி-அயனவரி, பூபரிதி, நிரட்சரேகை.
பூப்பருத்தி - பூவரசமரம், பூப்பொரசு.
பூப்பலகை - ஓர் மரம், நன்னரி,பூம்பலகை.
பூப்பலா - ஓர்வகை மரம்.
பூப்பலி - பூசைக்கான பூக்களருச்சனை.
பூப்பறிவித்தல் - தலைவி தோழியைச் செவ் வணி அணிந்து, வீட்டிலிருக்கும் தலைவ னிடம் அனுப்புதல்.
பூப்பல்லக்கு - பூவிஞல் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு.
பூப்பிஞ்சு - இளம்பிஞ்சு, பூவிலுள்ள பிஞ்சு.
பூப்பிரதட்சிணம் / பூப்பிரதக்ஷணம் } பூமியை வலம்வருதல், பூப்பிரதக்ஷணம்.
பூப்பு-பூத்தல், மகளிர்ருதுகம், மாதவிடாய்.
பூப்புடம்-பூமிபுடம், பூப்புடமிட்ட பொருள்.
பூப்பெருக்கு - பூவடல்.
பூப்பேசல் - மணம் பேசல்.
பூப்போல் - பூவைப்போல, மெதுவாய்.
பூமகளுயகன் / பூமகண்மார்பன் } திருமால், இராமன்,மகா விட்டுணு.
பூமகண்மைந்தர் - வேளாளர், காராளர்.
பூமகள் - இலக்குமி, பூமிதேவி, செல்வம், கலைமகள். [பன்.
பூமகள்கொழுநன் - திருமால், பூமகன்மார்
பூமகன் - செவ்வாய், பூமியின் புதல்வன், பிரமன்.
பூமகா - கையாந்தகரை, பிருங்கராஜம்.
பூமங்கை / பூமடந்தை } இலக்குமி, கமலாசனி, சரஸ் வதி, பூமகள், பூமாது, புவி மகள், சூடிக்கொடுத்த நாச்சியார்.
பூமடல் - பிஞ்மடல், குலையிலுள்ளமடல்.
பூமடி - மெல்லியமடி, பசுவின் மிருதுவான முலைக்காம்பு, பூமுலை. [பூமெத்தை.
பூமடை - பூவிஞலிடு மடை, பூத்தடுக்கு,
பூமணம் - புஷ்பபரிமளம், மலர்க்கந்தம்.
பூமண்டபம் - பூமாலை தொடுக்கும் இடம்.
பூமண்டலம் - பரதவுறுப்புனொன்று, பூச் சக்கிரம், பூலோகம். [வீழும் கோடு.
பூமத்தியரேகை-பூமியில்சூரியரஸ்மி நேராக
பூமத்தை - ஓர்செடி, ஊமத்தை. [மரம்.
பூமரம் - காய்க்காமல் பூமாத்திரம் பூக்கும்
பூமருது - மருதமரம்.
பூமலி - மூளை.
பூமலேசனம் / பூமலேக்கினம் } சங்கங்குப்பி, பீநாறிச் சங் கங் குப்பி. [கொன்றை.
பூமலேக்கினம்-சங்கங்குப்பி, ஞாழல், மயிற்
பூமழை - புஷ்பவர்ஷம், மலர்மாரி, பூமாரி.
பூமன்-செவ்வாய், பிரமன், காமன், அரசன்.
பூமஸ்நானம் - ஏழ்வகை ஸ்நானத்தொன்று; அஃது: துளசிமுதலிய திவ்விய மரத்தரு வின் மிருத்திகையாற் பூசுதல்.
பூமாதுளை-காய்க்காமல் பூமாத்திரம் பூக்கும் மாதுளை, பூமாதுளை.
பூமாது / பூமாதேவி } பூவிலமரும் இலக்குமி, சரஸ் வதி, பூமியாகிய தேவி, பூமி தேவி.
பூமாயி - ஒரு பாலாரிஷ்ட தேவதை.
பூமாரி - பூமழை, வேம்பு, பூவருஷம்.
பூமாலை - பூவிஞற்செய்தமாலை,புட்பமாலை; இஃது: இராச சின்னத்தொன்று.
பூமாலைக்காரன்-பூவாணிகன். [றிப்போதல்.
பூமாறுதல்-பூப்புநின்றுபோதல்.பூப்பூத்து மா
பூமான் - புமான், புருஷன், அரசன்.
பூமி - இடம், குயில், கோணங்களின் கீழ் வரி, தேசம், நிலம், பூநீறு, பூவுலகு, மூவு லகத்தொன்று, பூமிதேவி, நிலை, நாக்கு, இந்திரன், வசுக்களிலொருவன்.
பூமிகதம்பம் - நிலக்கடம்பு. [குதிரை.
பூமிகாமி-பூகாமி, பூமிவழியாய் கமனிக்கும்
பூமிகுருவகம் - வெள்ளெருக்கு. [மால்.
பூமிகொழுநன் - பூதேவியின் கணவன், திரு
பூமிக்கூர்மை - வெடியுப்பு, கம்பியுப்பு.
பூமிசந்திரன் - நாகபுரத்தரசன், அமரசுந்தரி நாயகன், புண்ணியராசனை வளர்த்தவன்.
பூமிசம் - நரகம், பூமியிலுண்டானது.
பூமிசம்பவை - சீதை, பூமிதேவியின் மகள்.
பூமிசன் - செவ்வாய், நரகாசுரன்.
பூமிசாரம் - ஓர்நூல், பூசாரம், பூநீறு.
பூமிசை - இலக்குமி, சீதை, பூமியின்மேல்.
பூமிசைநடந்தோன் - அருகன், புத்தன்.
பூமிச்செருக்கன் - உவர்மண், உழமண்.

பூமிதானம் - நிலத்தைத்தானம் பண்ணுதல்.
பூமிதேவன் - பார்ப்பான், பிராமணன்.
பூமிதேவி - பூமிலட்சுமி, பூமாது, பூதேவி.
பூமித்திரம் - மலை, குலாசலம். [ணெய்.
பூமித்தைலம் - மண்டயிலம், மண்ணெண்
பூமிநடுக்கம் - பூமியதிர்ச்சி, பூகம்பம். [வேர்.
பூமிநாகம்-பூநாதம், நாக்குப்பூச்சி, பூமியின்
பூமிநாதம் - காந்தம், பூநீறு, வெடியுப்பு.
பூமிநாதன்-பூமிதேவியின்தலைவன்;திருமால்
பூமிநாயகன்-காஸ்மீரப்படிகம், நிலவேம்பு, திருமால், பூபதி, அரசன்.
பூமிபரிட்சை / பூமிபரீட்சை } கலைஞான மறுபத்து நான்கனுள் நிலத்தியல் பறியும் வித்தை, பூப்பறிக்கை நூல்.
பூமிபாரம்-சிருட்டிப் பொருள்களாற் பூமிக்குண்டானபாரம், இராச்சியபாரம், தியோர்
பூமிபாலகன் / பூமிபாலன் } அரசன், பூபாலன்.
பூமிப்பிசாசம் - பனை, நெடுமரம், தாலம்.
பூமிப்பிரவேசம் - வீண் நிலத்திற் செய்கை பண்ண நல்ல நாளுக்குப்போதல்.
பூமிமாதிலகம் - பவணதேவன் நகரம்.
பூமியதிர்ச்சி - பூகம்பம், பூமி நடுக்கம்.
பூமியின்பிரிவு - மலை, கடல், சமுத்திரம், வரி, பாலைவனம், வனம், வீண்நிலம் என்பன.
பூமிலட்சுமி-இலக்குமி, பூமிதேவி, பூமாது.
பூமிலாபம் - மரணம், நிலத்தைப் பெறுதல்.
பூமிலேபனம் - பூமியையெழுகுதல்.
பூமிவெளுப்புமண் - வெண்சுதை மண்.
பூமிவேர்-பூநாகம், நாக்குப்பூச்சி, சிறுநாகம்.
பூமின் - இலட்சுமி, பூமிதேவி, ஆண்டாள்.
பூமுலை-பசுவின்மெல்லியமடி, பூமடி. [காலம்
பூமுறை - மரஞ்செடிகளிற் பூவுண்டாகும்
பூமேடை-பூக்குறடு, பூத்தொடுக்கும்மேடை.
பூமேல்வைத்துக்கொடுத்தல் - பிறர்பால் வாங்கியதை நன்றியறிதலோடு திரும்ப அவர்கள் கேட்காமல் கொடுத்தல்.
பூம்பட்டாடை / பூம்பட்டு } ஓர் பட்டுப்புடவை, மெல்லிய பட்டாடை.
பூம்பந்தல் - பூப்பந்தல், மலர்விதானம்.
பூம்பந்து - பூவினலாயபந்து, பூச்செண்டு.
பூம்பல்லக்கு - பூப்பல்லக்கு, புட்பச்சிவிகை.
பூம்பறியல் - குறைவு, தட்டுக்கேடு.
பூம்பனை - ஆண்பனை, பூப்பனை.
பூம்பாவை / பூம்பாவையார் } திருமயிலை சிவநேசசெட்டியார் குமாரத்தி; திருஞான சம்பந்தரால் உயிர்பெற்றெழுந்தவள், திருப்பாவைநாச்சியார்.
பூம்பாளை - இளம்பாளை, சம்பாவகை.
பூம்பிஞ்சு - இளம்பிஞ்சு, மிக இளங்காய்.
பூம்பிடகை / பூம்பிடா - } பூக்கூடை, பும்பிடா, பூக்குடலை, பூம்பிடகை.
பூம்பிரயோசனம்-புன்பயிர்ப் பிரயோசனம்.
பூம்புகை - நறும்புகை, வாசனைத்தூமம்.
பூம்புனலாறு - பூவாறு.
பூம்பொழில் - புஷ்பச்சோலை, நந்தனவனம்.
பூயம் - சீழ், முறிந்தரக்தம், புன்னீர்.
பூயாசலம் - கட்பீழை, கண்ணின்பீளை.
பூயாரி - வேம்பு, பூமிம்பம், நிலவேம்பு.
பூரகம் - பிதிர்பிண்டம், பூரித்தல், பெருக்குந்தொகை, மத்தங்காய்ப்புல், மூச்சுன்னே வாங்கல், நிரப்புகை.
பூரங்கழித்தல் - பெண் இருதுவானபோது திருஷ்டிகழிக்கும் சடங்கு. [தல்.
பூரங்களித்தல்-தீபாராதனை, திருட்டிகழித்
பூரஞ்சகன்-அரசன், பூபாலனன். [சத்திரம்.
பூரட்டாதி - ஓர்நாள், இருபத்தைந்தாம் நட்
பூரணகருப்பம்-நிறைகருப்பம், பூர்ணகர்ப்பம்
பூரணகருப்பிணி-நிறைகர்ப்பிணி, நிறைசூலி
பூரணகலசம் / பூரணகும்பம் } சலம் பூரித்த கலசம், நிறைகுடம்.
பூரணகிரகணம் - சந்திர சூரியர் முற்றும் மறையும் கிரகணம்.
பூரணகிரி - நவகுண்டங்களிலொன்று.
பூரணகுண்டலன்-இவன்பாஞ்சாலதேசத்து ஆருணியரசனின் அமைச்சன். உதயணனோடு நேர இருந்த ஒரு பெரும்போரை தடுத்து நிறுத்தியவன்.
பூரணசத்தி - முழுவாற்றல்.
பூரணசந்திரன் - நிறைநாட்சந்திரன், பூர்ணசந்திரன்.
பூரணசற்குணம் - நிறைந்த நற்குணம்.
பூரணசற்குணன் - நிறைந்த நற்குணன்.
பூரணசாத்திரம் / பூரணசூத்திரம் } அகத்தியர் செய்த வோர் வைத்திய நூல்.
பூரணசேனன் - கட்டியங்காரன் படைத்தலைவன்.
பூரணதிசை - சரஞ்செல்லுந்திசை. [நூல்.
பூரணநூல் - பூரணசாஸ்திரம், முழு அறிவு
பூரணநோக்கு - முழுப்பார்வை.
பூரணபலன் - நிறைபலன், விரும்பியபலன்.
பூரணபாத்திரம் - இருநூற்றைம்பத்தாறு சிறங்கையரிசி கொண்டபாத்திரம், பூரணகும்பம், நிறைகுடம், பூரணகலசம்.
பூரணபிண்டம்-நிறைகரு, முதிர்ந்தகருப்பம்.
பூரணப்பொருள் - சங்கியாபூரணர் பொருள் 2-வது, 4-வது எனவரும் எண். 2. குறைவற்ற பொருள் 3. கடவுள் 4. உள்ளீடு.

பூரணமனம்-நிறைமனம், முழுமனம், பூரண மனசு. [மாசம்.
பூரணமாசம் - பிரசூதிமாதம், கருநிறைந்த
பூரணமி-பூரணை, சுக்கிலபட்சத்துப் பதினேந் தாந் திதி, பௌர்ணமி.
பூரணமை-பௌர்ணமி,பூரணிமை,பூரணமி
பெருவிரியன் - ஓர் பாம்பு, விரியன் பாம்பு வகை. [து.
பெருவிருந்து - விசேஷவிருந்து, ஊர்விருந்
பெருவிலை - மிக்கவிலை, அதிகவிலை.
பெருவிழா - மகோற்சவம், பிரமோற்சவம்.
பெருவிளா - விளாங்கனி மரம்.
பெருவிறலாளி - மிக்க வலிமையுடையவன்.
பெருவிறல் - மிகுவலி, அதிக வல்லமை.
பெருவுடையார் - தஞ்சைக் கோவிலிலுள்ள ராஜராஜேஸ்வரமுடையார்.
பெருவெக்கைநோய் - வாந்திபிராந்தி.
பெருவெழுத்து - முதலெழுத்து, அகரம்.
பெருவெளி - ஏகவெளி, விரிந்தவெளியிடம், ஆகாயவெளி, சிதாகாசம். [கு.
பெருவெள்ளம் - மிகுவெள்ளம், நீர்ப்பெருக்
பெருவெள்ளை - ஓர் நெல், நில்லேச்சம்பா.
பெருவேம்பு - மலைவேம்பு.
பெருவேல் - வெள்வேல், படுத்துருமம்.
பெலக்குதல் - பலத்தல், விருத்தியாதல்.
பெலசாலி - பெலனுள்ளோன், பலவான்.

பெலட்சயம் - பெலவீனம், பலக்ஷயம். [தல்.
பெலத்தல் - பலப்படல், மிகுத்தல், வளர்த்
பெலபிடி - பெலன், பேருதவி, உறுதிப்பிடி.
பெலப்படுதல் - உறுதிப்படல், திரப்படுதல்.
பெலப்படுத்துதல் - உறுதிப்படுத்துதல், தி
ரப்படுத்துதல், கெட்டித்தல். [டுத்தல்.
பெலப்பித்தல் - பெலப்படுத்துதல், பலப்ப
பெலப்பு - உதவி, பெலன், கெட்டி. [படல்.
பெலப்பேறுதல் - பெலம்படுதல், உறுதிப்
பெலம் - பலம், தேகவலி, உறுதி, பெலன்.
பெலவந்தம்-பலவந்தம், கட்டாயப்படுத்தல்.
பெலவந்தஞ்செய்தல் - கட்டாயப்படுத்து
தல், பலவந்தப்படுத்தல்.
பெலவந்தப்புணர்ச்சி - பலவந்தப் புணர்ச்சி.
பெலவறுதி - பலகீனம், பஞ்சை.
பெலன் - உறுதி, வலிமை, அடல், உரம்.
பெலன்செய்தல் - உறுதிப்படல், பலித்தல்,
வலிமைகொள்ளுதல். [யல்.
பெலி - காணிக்கை, பலி, படைப்பு, படை
பெலிக்கொடை-பூசித்தல், பலிகொடுத்தல்.
பெலிபீடம் - பலிபீடம், பலியாசனம்.
பெல்லம் - வெல்லம். [சம், பில்லி.
பெல்லி - சூனியம், துறட்டியின்முள், பிசா
பெல்லித்தடி - பூட்டைப்பிடி.
பென் - விருப்பம்.
பெறற்கருங்கலம் - பெறற்கரிய ஆபரணம்.
பெறீஇ - பெற்று.
பெறீஇய - பெற, பெறுதற்கு.
பெறீஇயர் - பெறுக, பெற. [டாப்பேறு.
பெறலருங்குறைத்து - பெறற்கரியது, கிட்
பெறல் - பெறுதல், அடைதல். [க்கியம்.
பெறுப்பேறு - கிடைத்தற்கருமையான பா
பெறுல் - மீன் முதுகின் செதில்.
பெறுவிலை - அதிகவிலை, குறைந்தவிலை.
பெறுக்கல் - பொறுக்கல், அரிசி.
பெறுக்குதல் - பொறுக்குதல், சேர்த்தல்.
பெறுதல் - அடைதல், கிடைத்தல், பிரச
வித்தல், விலைத் தகுதியுடையதாதல், தா
ளுதல்.
பெறுதி-பெறுதல், பெறுமவிலை, இலாபம்,
பெறுமதி, அடைவதாக. [யல்.
பெறுத்தல் - பெறுவித்தல், அடையச்செய்
பெறுத்துதல் - அடைவித்தல், உண்ணுதல்.
பெறுமதி - உறுதி, தகுதி, திராணி, பெறும்
விலை, வெகுமதி. [கடன்தீர்க்கும் தகுதி.
பெறுமானம் - பெறத்தக்க விலை, மதிப்பு,
பெறுவகொள்வோர் } கூத்தியர், வேசை
பெறுவதுகொள்வோர் } யர்.
பெறுவது - பெறுக, பெறத்தக்கது, அடை
வது, பெறும்பொருள், பெறுதல், விலை,
பெறுமானம். [விலை.
பெறுவிலை - பெறுமானவிலை, தகுதியான
பெற்றதகப்பன் - சனகபிதா, தாதை.
பெற்றதாய் - சனகமாதா, பெற்ரூள். [ன்.
பெற்றத்துவசன்-சிவன், விடைக்கொடியோ
பெற்றபிள்ளை - சொந்த மக-ன்-ள்.
பெற்றப்பாகன் } சிவபிரான், விடையேறி.
பெற்றமேறி }
பெற்றம் - இடபராசி, எருது, காற்று,
பசுச்சாதிப்பொது,பெருமை, பெற்றனம்.
பெற்றம்பெற்றவன் - மீமன், அனுமான்.
பெற்றவர் - பெற்ரோர், தாய்தந்தையர்.
பெற்றவன் - தகப்பன், அடைந்தவன்.
பெற்றவூர்தி - சிவபிரான், ரிஷபவாகனன்.
பெற்ரூர் - ஈன்ரூர், பெற்ரோர். [வன்.
பெற்ரூன் - பெற்றவன்,கணவன்,அடைந்த
பெற்ரூன்சாம்பான் - சிதம்பரத்தில் நடராஜ
ருக்குத் தொண்டு செய்துகொண்டிருந்த
உமாபதிசிவாசாரியரிடத்தில் தீட்சை
பெற்று மோக்ஷமடைந்த ஒரு சிவபக்தன்.
பெற்றி } குணம், தன்மை, இயல்பு, வி
பெற்றிமை } தம், காரியமுறை, பெருமை,
நிகழ்ச்சி, பேறு, பெற்றபேறு, சுவர்க்கம்.
பெற்றித்து - தன்மையது.
பெற்றியன் - தன்மையன்.
பெற்றியிற்பிழைத்தல் - குணம் பிரிதாதல்,
இயல்பின் வழுவுதல், குணங்கெடல்.
பெற்று-எருது, பெற்றம், மிகுதி, பெருக்கம்,
அடைந்து, அடைந்தேன்.
பெற்றுழி - பெறின், பெற்றக்கால், பெற
றக்கடை, பெற்றபோது.
பெற்ரூர் - தாய்தந்தையர், தாதையர்.
பெனுதை - அற்பன், பிணுதி, பனுதி.
பென்னம்பெரிது - மிகப்பெரிது.
பென்னம்பெரிய-மிகப்பெரிய, மிகஉயர்ந்த.
பென்னுங்கொட்டை - பேன்கொட்டை,
பொன்னுங்கொட்டை. [களிறு.
பென்னை - யானை, மதகரி, தும்பி, வேளம்,

பே

பே - ஓரெழுத்து, நுரை, மேகம், அச்சம்.
பேகடம் - ஓர்வகைமீன், பேய்க்கடம்பான்.
பேகம் - தவளை, முகில், பீகம், மேகம்.
பேகன் - ஆண்தவளை, கடையெழு வள்ளல்
களுளொருவன்; இவன் கபிலபாணர்க

ஞக்குப்பேருபகாரியாயிருந்தவொரு மலை நாட்டரசன். இவனது ராஜதானி நல்லூர். இவன் மனைவிபெயர் கண்ணகி. அவளைத் துறந்திருந்த இவனைக் கைக்கிளைவகைப் பாடாண்பாட்டாற் பரணர் பாடினர்.

பேகி - பெண்டவளை, பெண்தவளை.

பேசகம் - ஆந்தை, கூகை, முகில், யானை வாலடி, யானைவாணுனி, வாயில்.

பேசகி - யானை, களிறு, மதகரி, தும்பி.

பேசரி - மூக்கணி வகையிலொன்று.

பேசலம் - உலக்கை, ஊமை, குயில், தகுதி, மிருது, மரகதக் குணங்களுளொன்று.

பேசலன் - சிவன், பேசாதான், மௌனி.

பேசல் - சொல்லல், ஏசல், மறைச்சல், பேசுதல், பேசுக, பேசற்க. [சொல்.

பேசாதபேச்சு - அசப்பியம், சொல்லாத

பேசாநிலை - மோக நிலை, பேசாவநுபூதி.

பேசாமடந்தை - மௌனனஞ்சாதிக்கும்பெண்.

பேசாமை - மௌனம், மோனம். [நிலை.

பேசாவநுபூதி - மௌனாநுபவம், மோன

பேசி - இடியேறு, உடை, ஓர் யாறு, தசை, நரம்பு, பூமொட்டு, முட்டை.

பேசிகோசம் - முட்டை அண்டம்.

பேசிலம் - யானை, பேசகி, மதகசம்.

பேசிற்று - பேசியது, பேசிய பேச்சு.

பேசுகை - பேசுதல், பேச்சு.

பேசுதல் - பறைதல், சொல்லாடுதல், வீணை நரம்பு முதலியன இசைத்தல், நாடி முதலியன துடித்தல், கோஷித்தல், துதித்தல், வைதல், சம்பாவித்தல்.

பேசுவாயன் - பரிந்துபேசுபவன், வாயாடி.

பேச்சல் - பறைச்சல், பேசுதல், இரைதல்.

பேச்சழிதல் - பேச்சுத்தப்புதல், சொன்ன சொல் தவறுதல். [சாநிலை.

பேச்சறுதல் - மௌனம், விரோதப்படல்,

பேச்சறுதி - தீர்மானம், முடிவான பேச்சு.

பேச்சற்றவன் - பேசமாட்டாதவன், பொய்யன், மௌனி, வாக்குறுதியில்லாதவன்.

பேச்சாடுதுணை, பேச்சாட்டுத்துணை, பேச்சாளி } பேச்சுத்துணை, உதவியாள், சொல்லாளி, நிதானி, சொல்வன்மையுள்ளவன், சொல்லுறுதியுள்ளவன்.

பேச்சி - ஓர்பெண்பேய், பேய்ச்சி, பேயத்தி.

பேச்சு - சம்பாஷணை, சொல், பாஷை, பேசுதல், செய்தி, பிரஸ்தாபம், பழி.

பேச்சுக்காரன் - சொல்வன்மையுடையவன், வாயாடி, பேச்சுவாயன், பிரசங்கி.

பேச்சுக்கிடம் - பழிப்புக்குக்காரணம்.

பேச்சுக்குற்றம் -சொற்குற்றம், வார்த்தைத் தவறு.

பேச்சுக்கொடுத்தல் - பேச்சு வளர்த்தல், பொழுது போக்கிற்காகவோ இரகசிய மறியவோ வார்த்தையாடுதல்.

பேச்சுத்தடுமாறுதல் - வார்த்தை குழறுதல், வாக்குத்தவறுதல், மரணத்தருவாய்.

பேச்சுத்தட்டுதல் - வார்த்தை தடைபடுதல், சொன்னவார்த்தை தவறுதல், அன்னியர் வார்த்தையை மறுத்தல். [றல்.

பேச்சுத்தப்புதல் - பேச்சழிதல், சொற்றவ

பேச்சுத்தாராளம்-வெறும் வாய்வீச்சு. [றம்.

பேச்சுத்திராணி - பேச்சுவல்லபம், சொற்றி

பேச்சுத்துணை - எதுவன், தோழன்.

பேச்சுநடத்தல் - சம்பாஷித்தல்.

பேச்சுநிதானம் - பேச்சுறுதி. [யம் அறிதல்.

பேச்சுப்பிடுங்குதல் - வார்த்தையாடி இரகசி

பேச்சுவல்லபம்-பேச்சுத்திராணி. [மிகுதல்.

பேச்சுவளர்தல் - வாய்ச்சண்டையில் வசவு

பேச்சுவளர்த்தல் - நீடிக்கப்பேசல், பேச்சுக் கொடுத்தல். [வாய்வீச்சுக்காரன்.

பேச்சுவாயன் - வாயாடி, பிரசங்கி, வெறும்

பேச்சுவார்த்தை - சம்பாஷணை, நட்பு.

பேச்சுறுதி - பேச்சுநிதானம், வாக்கு நிறை வேற்றுபவன். [கம்.

பேச்சைமடித்தல் - வாக்குமாறுதல், குதர்க்

பேடகம் - கூடை, திரள், பெட்டி.

பேடணம் - திரிகைக்கல், அரைத்துப்பொடி செய்தல், ஏந்திரக்கல்.

பேடம் - தெப்பம், வெள்ளாடு.

பேடர் - அலியர், பேடிகள், நபுஞ்சகர்.

பேடன்-ஆண்தன்மை மிகுந்த அலி.

பேடாடல்-மன்மதன்கூத்து.

பேடி - அலி, பெண்ணுடு, பெண்தன்மை மிகுந்த அலி.

பேடிகை - கூடை, உறை, கூடு.

பேடிசம் - மயக்கு, மாமாலம், தளுக்கு.

பேடிசவித்தை - மயக்குத்தொழில்.

பேடியர் - அலியர், பேடர். [னம்.

பேடியெழுத்து - ஆயுதவெழுத்து, அஃகே

பேடு-அலி, ஊர், காமனுடியகூத்து, பறவைப் பெண், பெண், சிறுமை.

பேடுமூஞ்சி - பெண்முகம், பேடுமுகம்.

பேடை - கூடை, பறவைப்பெண்.

பேட்டி - பெரியவரைக் காணுதல்.

பேட்டு - பட்டைக்கரை, சாடு, பேட்டை.

பேட்டை - நகரத்தருகும் சந்தை கூடலு மாகிய ஊர், பட்டைக்கரை.

பேட்பு - விருப்பம், பெருமை, வேட்கை.

பேணகம்-ஓர் பணிகாரம், பணிகாரவகை.

பேணம் } பேணுதல், மதிப்பு, மதனம்,
பேணாவு } போஷிக்கை.
பேணலர் - பேணுர், பகைவர், எண்ணலர்.
பேணல் - ஆசைப்பெருக்கம், கருத்து, காத்தல், குறித்தல், விரும்பல், மிகுகை, உவமவுருபு.
பேணுது - விரும்பாது, மதியாமல், வரைந்து கொள்ளாமல். [தல், ஓம்பாதீதல்.
பேணுதுகொடுத்தல் - வரையாது கொடுத்
பேணுமை - பேற்ருமை, பகைமை, அசட்டை, அலக்ஷியம் செய்தல்.
பேணுர் - பகைவர், பேணலர், மேவலர்.
பேணி - ஒருவகைப் பணியாரம்.
பேணிய - ஆதரித்த, போற்றப்பட்டன.
பேணியர்-விரும்பினர், ஆதரித்தோர், மதித்தவர், விரும்ப, போற்றப்படுக.
பேணியார் - விரும்பப்பட்டோர்.
பேணுதல்-பேணல், போற்றுதல், பாதுகாத்தல், மதித்தல், விரும்புதல், உபசரித்தல், வழிபடுதல், கருதுதல், குறித்தல், பொருட்படுத்துதல்.
பேணுநர் - பாதுகாப்போர், ஆதரிப்போர்.
பேண் - பேணென்னேவல்.
பேண்மரம் - துலாத்தாங்கி.
பேதகமணி - வெண்காரம், ஓர்காரம். [மை.
பேதகம் - பேதம், மனவேறுபாடு, வேற்று
பேதகன் - தப்பிதக்காரன், குற்றவாளி.
பேதசைவம் - பேதவாத சைவமதம்.
பேததாரணை - நவதாரணையிலொன்று; அஃது: இயமாதி யோகசாதனையாற் பிராணன், அபானன், உதானன், வியானன் எனு நான்கு வாயுக்களோடுஞ் சமான வாயுவுடன் சேர்த்து அதாரமூலமாயிருக்கு மிதயகமலத்தைப் பிரணவோச்சாரணத்தா லுண்முகமாக்குவது.
பேதகம் - பன்றி, வராகம், எனம். [தல்.
பேதப்படுதல் - வேற்றுமைப்படுதல், மயங்கு
பேதமை - அறிவின்மை, புத்தியீனம்.
பேதம் - ஒவ்வாவை, சிவாகமமிருபத்தெட்டிலொன்று, திரிபு, பகுப்பு, பகை, வினை, வேற்றுமை, வேருக்கல், பிரிவு, நால்வகை உபாயத்திலொன்று, பேதித்தல்.
பேதலித்தல்-மறுப்பு; இஃது: உபாயநான்கிலொன்று, வேற்றுமைப்படல், மனம்குழம்புதல், சந்தேகப்படுதல்.
பேதலிப்பு } வேற்றுமை, வேறுபடல்.
பேதலிமை }
பேதவாதசைவமதம் - உயிர்மெஞ்ஞானஞ் சேர்ந்தபோதே மலம் நீங்கப்பெறுமென்றும், இதுவே முத்தியென்றும் கூறும் சைவசமயம், பேதவாதசைவம்.
பேதறுத்தல் - கலக்கமொழித்தல்.
பேதனம் - பேதிப்பு; இஃது: அட்டகருமத்தொன்று, பன்றி, வராகம், கேழல்.
பேதாபேதம் } பலபேதம், வேற்றுமையும், ஒற்றுமையும்.
பேதாபேதம் }
பேதானு - ஓர்விதை, சிமைமாதுளை, எனம்.
பேதி-இரதம், கழிச்சல், கோவாளம், பேதமானவன், பேதிப்பது, பேதியென்னேவல், வெளி, விஷபேதி.
பேதிகாரி-ஆற்றுத்தும்மட்டி, பேதிமருந்து, பேய்க்குமட்டி.
பேதிக்கிழங்கு - இரேவற்சின்னி, கொடிவகை. [தல், அச்சமுண்டாக்குதல்.
பேதிக்குக்கொடுத்தல்-பேதிமருந்து கொடுத்
பேதிதம்-பிளத்தல், பிளக்கை, போழ்த்தல்.
பேதித்தல் - பகைத்தல், விரோசனித்தல், வேற்றுமைப்படுதல், வேற்றுமைப்படுத்தல், கெடுதல், கெடுத்தல், குழம்புதல், மனம்மாறுபடுதல், வெட்டுதல், வேறுதல், வேருக்குதல். [பேதிக்குக் கொடுத்தல்.
பேதிபண்ணுதல் - விரோசனஞ்செய்தல்,
பேதிப்பு - பேதம், பேதனம், பேதமாதல்.
பேதிமருந்து - பேதியுண்டாக்கு மருந்து.
பேதியுப்பு - மலங்கழியக் கொடுக்கும் ஓர்வகை மருந்து உப்பு.
பேது-மதிமயக்கம் - உன்மத்தம், வருத்தம், அறிவின்மை, பேதம்.
பேதுரம் - வச்சிராயுதம், குலிசம், வயிரம்.
பேதுறல்-பேதுறுதல், மதிமயங்குதல், வருந்துதல், பேதமுறல்.
பேதுறவு - மதிமயக்கு, துன்பம், இடுக்கண்.
பேதுறுதல் - புத்திகலங்குதல், பித்துப்பிடித்தல், வருந்துதல்.
பேதுறுத்தல்-வருந்துதல், கலங்கச்செய்தல்.
பேதை - அறிவிலான், எழுவயதுப் பெண், சுபாவி, தரித்திரன், பெண், பேடி.
பேதைப்படுத்தல் - மடமையாக்குதல்.
பேதைப்பருவம் - அறியாப்பருவம், பேதை.
பேதைமை - அறிவின்மை, எழைமை, சுபாவம், இயல்பு, கரடகமின்மை.
பேதையர் - அறிவீனர், எழுவயதிற்பெண்கள், கீழ்மக்கள், தரித்திரர், பாலேில மகளிர். [பினற்றுமொழி.
பேத்தல் - பிதற்றுமொழி, பிணத்துமொழி,
பேத்தி - போர்த்தி, பேயத்தி. [கயிறு.
பேத்திரவயிரி-துலாக்கோவின்மேற் கட்டுங்
பேத்துவம் - அமுதம், நெய், அமிழ்தம்.

பேத்தை - ஓர்மீன், கெளிசு, பற்பேத்தை, வயிற்று வீக்கம். [வயிறு பற்றல்.
பேத்தைப்பற்றுதல் - கெளிசுபற்றுதல், பரு
பேநம் - நுரை, குமிழி, பே, பேரு.
பேநன் - சந்திரன், சூரியன்.
பேபர் - காயிதம், சமாசாரப் பத்திரிகை.
பேமாலம்-மூடன், பேமானம், மூடாத்மா.
பேமானி - நாணமற்றவன், நாணிலி.
பேம் - பயம், அச்சம், கலக்கம், பீதி.
பேயகத்தி - சீமையகத்தி, பேரகத்தி.
பேயகற்றுதல் - பேயோட்டுதல்.
பேயத்தி - ஓர்மரம், அத்திவகை.
பேயமன்று - பானசாலை, தண்ணீர்ப்பந்தல்.
பேயம் - கஞ்சி, நீர், பால், கீரம், பயசு, பயம்.
பேயம்பழம் - பேயன்வாழையின் பழம்.
பேயவரை-கோழியவரை, பொன்னவிரை.
பேயனூர் - இங்குறுனூற்றில் ஐந்தாநூறுரை மூலாத்திணையைப் பாடிய புலவர்.
பேயன்-மதிகேடன், பேய்பிடித்தவன், பைத்தியக்காரன், பேயன்வாழை.
பேயன்வாழை - ஓர்வாழை, பேயன்.
பேயாடி - பேயாவேசம் கொண்டவன்.
பேயாடுதல் - பேயுருக்கொள்ளுதல், பேய் பிடித்தாடுதல். [கலக்கம்.
பேயாட்டம் - பேய்க்கூத்து, பேய்த்தன்மை,
பேயாட்டி - பேய்வித்தைக்காரன்.
பேயாட்டுதல் - பசாசை யுருக்கொள்ளுவித்தல், பேயோட்டுதல். [வகை.
பேயாமணக்கு - ஓராமணக்கு, ஆமணக்கு
பேயாரால் - நண்ணீர்மீன்வகை, பெரிய ஆரால். [யார்.
பேயார் - பேயாழ்வார், காரைக்காலம்மை
பேயாவிரை - ஆவிரை வகையிலொன்று.
பேயாழ்வார்-ஓர் வைஷ்ணவாசாரியர். மூதலாழ்வார்களாகியமூவருளொருவர். இவ்வாழ்வார் திருமயிலையில் கேசவப் பெருமாள் சந்நிதிக்கு அடுத்த திருக்கிணற்றில், செவ்வல்லிமலரில்துவாபரயுகம் 892901 வதான சித்தார்த்தி வருடம் ஐப்பசி சுக்கிலபக்ஷம் தசமி வியாழக்கிழமை கூடின சதயநக்ஷத்திரத்தில் ஸ்ரீ நந்தகாமிசமாய், அயோநிஜராய் அவதரித்தருளினவர். உலகியற்கையில் மனம்பறிபோகாது, நித்தியப்பொருளிடத்து மனதைப்பறிகொடுத்து, உலகினருக்குப் பேயர் போலிருந்தாலும் உலகுய்யவழி காண்பித்தவர். இவர் வேதங்களாலும் பிரமருத்திராதி தேவர்களாலும், முனிவர்களாலும், யோகிகளாலும் காணமுடியாத கண்ணனைக் கடல் நிறவண்ணனைத் திருக்கண்டேன். பொன்மேனிகண்டேன். திகழும் அருக்கணணி நிறமும்கண்டேன், செருக்கிளரும் பொன்மேனி கண்டேன். புரிசங்கங்கைக் கண்டேன். என்னுழிவண்ணன்பாலின்று எனக்கூறுமுகத்தால் கடவுளைக்காண வழியும் காட்டிப் போந்தவர். இவர் பாடிய நூல்மூன்றுந்திருவந்தாதியாகும். மூதற்பாவாற்கூறப்பட்டு அந்தாதித்தொடையில் அமைந்துள்ளது. இவர்கடவுளைக்கண்ட இடம்திருக்கோவலூர் இடைகழியாம். விரிவைக்குருபரம்பரையிற் காண்க.
பேயிரதம்-பேய்த்தேர், கானல், கானல்நீர்.
பேயுள்ளி - ஒருள்ளி, நரிவெங்காயம்.
பேயுறைதல் - பேய் குடிகொள்ளுதல்.
பேயூடம் } அமுதம், சுன்ற வேழாநாட்
பேயூஷம் } கறக்கும்பால், சீம்பால், நவநீதம்.
பேயூமத்தை - மருளுமத்தை, கருஊமத்தை.
பேயூர்தி - காளி, துர்க்கை, நிருதி.
பேயெள் - காட்டெள். [வைத்தல்.
பேயேற்றுதல்-பேயை யேவிவிடுதல், பில்லி
பேயோடாடி - சிவன், பேயுடன் ஆடுபவன்.
பேயோட்டி - ஓர்மரம், பேய்துரத்துவோன்.
பேயோட்டுதல்-பேயகற்றல், பேயாட்டுதல்.
பேயோணன் - ஓர்வகை ஓணன், ஒந்தி.
பேய்-பிசாசம், மதிகெட்டது, நீமை, வெறி, மயக்கம், இல்லையென்னும் பொருள் கொண்ட சொல். [பூச்சிவகை.
பேய்க்கஞ்சான் - சாணைக்கிப்பூண்டிலுள்ள
பேய்க்கடம்பை - மரவகையிலொன்று.
பேய்க்கடுக்காய்-பெரிய மரவகை, பூமருந்து.
பேய்க்கண் - அஞ்சத்தக்க விழி, வெருண்ட பார்வை, சுழல்விழி, கோபக்கண்.
பேய்க்கண்டல் - பேய்க்கடம்பு.
பேய்க்கருங்காலி - கருங்காலிவகை.
பேய்க்கரும்பு - ஓர்கரும்பு, நாணல்வகை.
பேய்க்களா - களாவகையிற் பெரியது.
பேய்க்கற்றுழை - காட்டுக்கற்றுழை.
பேய்க்கனி - பேயன் வாழைப்பழம்.
பேய்க்காஞ்சி - போர்க்களத்துப் பட்டாரைப்பேயச்சுறுத்துவதைக் கூறுவது.
பேய்க்காடு - பேயுறையுங் காடு, இருண்ட காடு, அடர்ந்த காடு.
பேய்க்காரம் - நாடக விகற்பத் தொன்று.
பேய்க்காலெறும்பு - பேய்ச்சக்காலெறும்பு.
பேய்க்காளான்-ஓர்காளான், காளான்வகை.
பேய்க்காற்று - சுழல்காற்று. [நீக்குணம்.
பேய்க்குணம் - பேய்த்தனம், வெறுக்கத்தக்க

பேய்க்குப்பார்த்தல் - பேயைத் துரத்துதல்.
பேய்க்குமட்டி, பேய்க்கும்மட்டி } பேதிகாரி, பேய்க்கொம்மட்டி.
பேய்க்குருந்து - மரவகை, காட்டு நாரத்தை.
பேய்க்குறை - பேய்த்தொடர்ச்சி.
பேய்க்குன்றி - ஓர் குன்றி, குன்றிவகை.
பேய்க்கூண்டு - மாயவித்தை படிக்குமோரிடம், பேய்ப் பள்ளி, மந்திரச்சாலை.
பேய்க்கூத்து - பேயாட்டம், குழப்பம்.
பேய்க்கொடை - வாரி யிறைக்கும் ஈகை.
பேய்க்கொம்மட்டி - பேய்க்குமட்டி, பீதிங்காரி, பேதிகாரி. [கோளாறு.
பேய்க்கோட்டாலை - பேய்க்குறை, பேய்க்
பேய்க்கோட்டி - பேய்க்கோளாறு.
பேய்க்கோலம் - கோலக்கேடு, பேய்வடிவம்.
பேய்க்கோளாறு - பேய்க்கோட்டி, பேய்க்கோட்டாலை. [தல்.
பேய்க்கோள் - பேய்பிடிக்கை, பிசாசு பிடித்
பேய்ச்சத்தம் - அவசத்தம், பெருஞ்சத்தம்.
பேய்ச்சாலை - கருநிறச்சாலை மீன்வகை.
பேய்ச்சி - பேய்க்குணமுள்ளாள், பெண் பேய், பேய் பிடித்தவள். [கொடி.
பேய்ச்சீந்தில் - ஆகாசக்கருடன், கிழங்குக்
பேய்ச்சுண்டை - மலைச்சுண்டை.
பேய்ச்சுரை - கசப்புச்சுரை, குடுக்கைச்சுரை, கிண்ணுரச்சுரை. [சேட்டை.
பேய்ச்சேட்டை - பேய்க்கோளாறு, பிசாசுச்
பேய்த்தக்காளி - சீமைத் தக்காளி.
பேய்த்தண்ணீர் - மதுநீர், சாராயம்.
பேய்த்தனம் - அறிவின்மை, மூர்க்கக்குணம்.
பேய்த்தாரை - பெருதாரை, பூறி. [மட்டி.
பேய்த்திமிட்டி - ஓர் பூடு, பேய்க் கொம்
பேய்த்தும்பை - காசித்தும்பை, பேய்மருட்டி.
பேய்த்தும்மட்டி - பேய்க்கொம்மட்டி.
பேய்த்தேர் - மசாதம், கானனீர், பேயிரதம்.
பேய்நடம் - வெறியாட்டு, பேயாட்டம்.
பேய்நரி - வெறிகொண்ட நரி.
பேய்நவரை - நவரை மீன்வகை.
பேய்நாய் - வெறிநாய். [பீடிக்கப்படுதல்.
பேய்பிடித்தல் - பிசாசுபிடித்தல், பிசாசால்
பேய்ப்பசலை, பேய்ப்பயலை } பசலைவகை, பெரும்பசலை.
பேய்ப்பயல் - மூர்க்கன், அயோக்கியன்.
பேய்ப்பலவன் - படுவன்கீரை. [ஞென்று.
பேய்ப்பலா - காட்டுப்பலா, பலாவகையி
பேய்ப்பள்ளி-பேய்க்கூண்டு, மந்திரச்சாலை.
பேய்ப்பாகல் - பழுபாகல், காட்டுப்பாகல்.
பேய்ப்பாட்டு - பேய்க்குப் பாடும் பாடல், பெருங்குரலிற்பாடும்பாட்டு,வசைமொழி.
பேய்ப்பாதிரை - பாதிரிவகை. [வை.
பேய்ப்பார்வை - மருட்பார்வை,கலக்கப்பார்
பேய்ப்பாலை - நச்சமுப்பான் பூடு. [பூடுவகை.
பேய்ப்பாற்சொற்றி - ஓர்பாற்சொற்றி, கீர்ப்
பேய்ப்பிடி - விடாப்பிடி, பேய்மருட்டி.
பேய்ப்பிரம்பு - பிரம்புவகை. [பிள்ளை.
பேய்ப்பிள்ளை-அடங்காப்பிள்ளை, அறிவிலாத
பேய்ப்பீர்க்கு - ஓர் பீர்க்கு, பீர்க்குவகை.
பேய்ப்புடல், பேய்ப்புடோல் } ஓர் புடோல், படோல்.
பேய்ப்புத்தி - மதியீனம், அறிவின்மை.
பேய்ப்புல் - கணைப்புல், எட்டுப்புல்.
பேய்ப்பூலா - பூலா வகையி லொன்று.
பேய்ப்பெண் - அறிவில்லாத பெண்.
பேய்ப்போக்கு - ஒழுங்கின்மையான நடை, விபரீத நடை.
பேய்மகள் இளவெயினி - சேரமான் பாலையாடிய பெருங்கடுங்கோவைப் பாடினவள். இவளை மாதுடவருக்கொண்டு வந்த வொரு பேயென்பாருமுளர். [கொடியன்.
பேய்மகன்-கெட்டவன், துஷ்டன், மூடன்,
பேய்மருட்டி - பேய்மிரட்டி.
பேய்மனம் - அங்கலாய்த்த மனம், அறிவற்ற மனம், இழிந்த மனம், கடுஞ்சித்தம்.
பேய்மாடி - புளிநறளை, புளிப்பிரண்டை.
பேய்மிரட்டி - பேய்மருட்டி, பேய்வெருட்டி.
பேய்மிளகாய் - சீமைப் பச்சைமிளகாய்.
பேய்முகம் - அவலட்சணமுகம், பேய்மூஞ்சி.
பேய்முசுட்டை - ஓர்வகை மருந்துக்கொடி.
பேய்மூல்லை - ஓர் கொடி, பேய்முசுட்டை.
பேய்முன்னை - ஓர் மரம், சமுத்திரப்பாலை.
பேய்மை - பேயின் தன்மை, பேய்க்குணம்.
பேய்வித்தை-சூனியவித்தை, மந்திரவித்தை.
பேய்வெருட்டி - பேய்மருட்டி, பேய்மிரட்டி.
பேரகத்தி - வண்டு கடியிலை.
பேரகத்தியம் - அகத்தியமுனிவர் இயற்றியதும் இறந்துபட்டதுமான இலக்கணநூல்.
பேரடம் - வெண்ணெஞ்சி, பூததேசி.
பேரடித்தல் - பேரைப் பதிவுப் புத்தகத்தினின்று நீக்குதல். [புகல், பரவல்.
பேரடிபடுதல் - பெயர் பிரபல்யமாகுதல்,
பேரணி - நடுச்சேனை, பெரிய அணிவகுப்பு.
பேரணிகலம் - பெரும்பதக்கம், பெரியகௌரவம், மிக்க மேன்மை.
பேரணை - பெரிய அணைக்கட்டு, பெருந்தடை.
பேரண்டம் - பெரிய உலகம், நரி, தலையோடு, மூளை, பிரமாண்டம்.
பேரத்தி - கறிமுள்ளி, பெரும்பாதகம்.
பேரபிமானம் - நன்கு மதிப்பு.

பேரப்பிள்ளை - பாட்டப்பிள்ளை, பேரன்.
பேரமட்டி, பேரமூட்டி } பேராமூட்டி, மகாபெலா.
பேரம்-உடல், காஸ்மீரதேயம், பேரிகை, விற்பனை, ஒப்பந்தத்திற்குமுன் பேசும், விலைப்பேச்சு, வடிவம். [து.
பேரம்பலம் - சிதம்பரத்துச் சபைகளிலொன்
பேரரத்தை - பஞ்ச மூலத்தொன்று.
பேரருவி - பெரிய அருவி, பெரிய நீர்வீழ்ச்சி.
பேரருளாளன் - திருக்காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் பெருமாள்.
பேரருளுடைமை - கடவுளெண் குணத்தொன்று, பெருங் கருணை யுடைமை.
பேரருள்-பெருங்கருணை, கழிகண்ணோட்டம்.
பேரவம் - நரி, அழுகுரலி, ஒண்டன்.
பேரவன் - அரக்கன், அரசன். [காடு.
பேரவியல் - பெரும்புழுக்கு, பெரிய வேக்
பேரறிவாளன்-உயர்ந்த ஞானமுடையவன்.
பேரறிவு - ஞானம், மூதறிவு, பகுத்தறிவு.
பேரழகு - ஓர் அழகம்புல், அழகுவகை.
பேரன் - பெயரன், மகள் அல்லது மகனின் புத்திரன்.
பேரன்புடைமை - மிகுந்த வன்பாயிருத்தல்; இஃது: அறத்துப்பி லொன்று.
பேராசிரியர்-தொல்காப்பியத்திற்கும், திருக்கோவையாருக்கும் உரையிட்ட ஆசிரியர்.
பேராசை - மிகுவாசை, பெருவிருப்பம், மிக்க பொருளாசை. [தலைவி.
பேராட்டி - பெருமையுடையவள், சீமாட்டி,
பேராண்டி - பேரப்பிள்ளை, கால்வழி.
பேராண்டு-அறுபதுவருடங்கொண்டகாலம்.
பேராண்மை - அரியசெயல், வீரம், மானம்.
பேராத்தி - தும்பை, துரோணம். [வகை.
பேராந்தை - கூகை, நிலாமுகிப்புள், ஆந்தை
பேராமட்டி - பேரமட்டி, பேராமூட்டி.
பேராமணக்கு - பெருங்காட்டாமணக்கு.
பேராமல்லி - கொத்தமல்லி வகை. [கை.
பேராமல்லிகை - பெருமல்லிகை, மாமல்லி
பேராமூட்டி - மகாபெலா, பேரமூட்டி.
பேராயிரம் - கடவுளின் சகசிரநாமம். [வை.
பேராரம் - ஆயிரம்வடமுடைய முத்துக்கோ
பேராவியற்கை - பேராநிலை, மீளாநிலை, வீடு, நிலம்.
பேராலவட்டம் - ஓராலவட்டம், பெரிய விசிறிவகை, தாலவிருக்கம், பீலி.
பேராலவாயர் - ஓர் சங்கப்புலவர்.
பேராவூரான் - இவன் தொண்டைநாட்டுப் பேராவூரில் வாழ்ந்தவொரு வேளாளப் பிரபு; புலவருக்குப் பொன்மாரி பொழிவோன்; நந்தலுரைத் தன்னருகேயிருத்திப் புலையரென்று அருவருக்காமல் அவருடனிருந்துண்டோன். [னம்.
பேராழம் - பெரியவாழம், படுபள்ளம், பாதா
பேராழி - பெருங்கடல், பெரும் பள்ளம்.
பேராழிமாமுனி - திருவள்ளுவர் தந்தை, அகஸ்தியர், உபமன்யு.
பேராளன் - கீர்த்தியுடையோன், மிருக சிரிடம், எப்பொருட்குந் தலைவன். [-வன்.
பேராளி-பேருள்ளவன், கீர்த்திவாய்ந்தவன்
பேராளிமாமுனி-வள்ளுவன் றந்தை. [ஆறு.
பேராறு - சேரநாட்டுள்ளதோராறு, பெரிய
பேரானந்தம் - மோட்ச சந்தோஷம், பரமானந்தம், பேரின்பம், நித்தியாநந்தம்.
பேரி, பேரிகை } பறைப்பொது, முரசு, டமாரம், நகரா.
பேரிசாத்தனார் - ஓர் சங்கப்புலவர்.
பேரிசெட்டி - செட்டிகளுள் ஒருபிரிவினர்.
பேரிடி - பெருமுழக்கம், கொடிய துன்பம்.
பேரிடுதல் - நாமஞ்சூட்டுதல், பெயரிடுதல்.
பேரியம் - பேரி, டமாரம், முரசு, நகரா.
பேரியல் - பெருந்தன்மை, பெரியசெய்கை.
பேரியாழ் - நால்வகை யாழிலொன்று.
பேரியாறு - பேராறு, பெரியாறு, சேரநாட்டிலுள்ள ஓர் ஆறு, பெரிய நதி.
பேரிரையான் - மிகுதியாக உண்போன்.
பேரிலக்கம் - முழுவிலக்கம், முழுவெண்.
பேரிளம்பெண் - நாற்பது வயதுப்பெண்.
பேரின்பம் - மோட்ச சந்தோஷம். [வு.
பேரின்பவாழ்வு-மோட்சவாழ்வு, பெருவாழ்
பேரீகம் - வட்டத்திருப்பி, பிரண்டை.
பேரீச்சு, பேரீஞ்சு, பேரீந்து } பேரீச்சம்பழ மரம், சுற்சூரம். [மொத்தவரி, பேரிஜ்.
பேரீஜ் - பட்டாதார் அல்லது ஊரார்கட்டும்
பேரு- சமுத்திரம், சூரியன், தீ, பொன்மலை.
பேருண்டம் - கருப்பந்தரித்தல், பயம், பறவை விசேடம். [களி லொன்று.
பேருண்டி - பேருணவு; இது: தாமதகுணங்
பேருண்டியாளன் - மிகவுண்போன்.
பேருதல்-நீங்குதல், அருகிற்போதல். [உதவி.
பேருதவி - பேருபகாரம், செய்யாமற்செய்த
பேருந்தம் - நரி, பேரவம், உள்ளன்.
பேருபகாரம் - பெருநன்றி, பேருதவி.
பேருமரி - ஓர்வகை மருந்துப் பூடு.
பேருயிர் - பெருங்காற்று, பரமான்மா.
பேருரியோர் - சக்கிலியர், தோல்வினைஞர்.
பேருறக்கம் - பெருந்தூக்கம், மரணம்.
பேருறுதி - திடவத்தாட்சி, மிகுதெட்டி.

பேரூர் - பெரும்பதி, மேலைச்சிதம்பரம், மருதகிலத்தூர், பெரிய நகரம்.
பேரூர்ப்புராணம் - கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பேரூர்த்தலத்தின் மேல் கச்சியப்ப முனிவரியற்றிய புராணம்.
பேரூழி - உருத்திரசங்காரம், நெடுங்காலம்.
பேரெடுத்தல்-கீர்த்திபெறுதல், பதிவுப்புத்தகத்தினின்று பேரை நீக்கிவிடுதல்.
பேரெடுபடுதல்-பிரபலமாதல், பேர்பரவல்.
பேரெண்-அளவடியீரடியாக இரண்டு வருவது, பேரிலக்கம், பெருந்தொகை.
பேரெயின்முறுவலார் - நம்பிநெடுஞ் செழியனைப்பாடிய புலவர்.
பேரொல்லை-செய்யுளின் அடிப்பெருமைக்கு அமைந்தவரையறை, தேசத்தின் எல்லை.
பேரொல்லைவெண்பா - எட்டடி வெண்பா.
பேரொழும்புதல் - பெயர் பிரபலமாதல்.
பேரோடு-கணக்கேட்டிலோர்வகை, பெயர்க் கணக்கேடு, பேர்வழி இனக்கணக்கு.
பேரை - நீர், பேரையூர், நீக்குவாய், நல்ல பேரையுடையாய். [சை.
பேரொலி-மிகுவொலி, பேருந்தம், பேரோ
பேரொளி - மிகுபிரபை, பெரும் பிரகாசம், பரஞ்சுடர், பெருஞ்ஜோதி, சந்திரசூரியர்.
பேரோசை - பேரொலி, பேருந்தம், பேரிறைச்சல்.
பேர்-பெயர், பெரிய, ஆள், பிராணி, புகழ்.
பேர்க்குடி - அடிமை, பேர்கொடுத்தல்.
பேர்க்குறி - பெயர்க்குறி, பெயரின்குறி.
பேர்சொல்லாதது - இரவில் பேர்வழங்கத்தகாதவசம்பு, ஊசிமுதலியபண்டம். [கல்.
பேர்ச்சி-பெயர்ச்சி, மாறுகை, இடம்விட்டே
பேர்டாப்பு - பேரின் அட்டவணை.
பேர்தரித்தல்-நாமஞ்சூட்டல். [றிலேமாறுதல்.
பேர்தல் - பெயர்த்தல், பிரிதல், அசைதல்,
பேர்த்தல் - பெயர்த்தல், இடம்விட்டு நீக்குதல், அழுத்தல், புரட்டுதல், மாற்றுதல்.
பேர்த்தி - பாட்டி, பெயர்த்தி, பௌத்திரி, பேர்த்து, புரட்டு, புரட்டுவாய், மாற்றுவாய்.
பேர்த்திது } பேயரையுடையது, திரும்பி
பேர்த்து } யது.
பேர்ந்தும் - பேர்த்தும், மறுபடியும். [தல்.
பேர்படைத்தல் - பேர்பெறுதல், புகழுறு
பேர்பாதி-சரிபாதி, நேர்பாதி. [பெறுதல்.
பேர்பெறுதல் - நாமங்கொள்ளுதல், புகழ்
பேர்மல்லி - கஞ்சாங்கோரை. [ஆன்.
பேர்வழி - பேரட்டவணை, வமிசவரிசை,
பேர்வைத்தல் - நாமகரணச் சடங்கு, குறிப்புப் பெயரிடுகை. [வத்தல்.
பேலகம் - தெப்பம், புணையல், மிதவை,
பேலம் - சிறுபங்கு, பீசம், போதல்.
பேலவம் - மிருது, சுகுமாரம், மென்மை.
பேலன்-தீரன், கெட்டிக்காரன், சமர்த்தன், போகிறவன்.
பேலி - குதிரை, கோரம், அசுவம்.
பேலிகை - எச்சில், பேளிகை, மிச்சில்.
பேலுதல் - மலங்கழித்தல், பேலல்.
பேவார்சு-வாரிசு இல்லாதவ-ன்-ன், நாதனில்லாதபொருள், பிரயோசனமில்லாதது.
பேழி - புடைவை, கண்டாங்கிச் சேலை.
பேழை - பேடகம், பெட்டி, பெருமை.
பேழ் - பெருமை, பேர், புகழ்ச்சி.
பேழ்கணித்தல் - அஞ்சுதல், கண்மூடுதல், மருண்டு விழித்தல், பேகணித்தல்.
பேழ்வாய் - பெருவாய், பெரியவாய்.
பேளிகை-உண்டு மிஞ்சிய எச்சில், மிச்சில்.
பேறக்காசி - நாய்முள்ளி, ஓர் செடி.
பேறு - (16) பெருமை, தேகதிடம், அழகு, இளமை, நோயின்மை, வாழ்நாள், நல்லூழ், கல்வி, அறிவு, துணிபு, வலி, வெற்றி, நுகர்ச்சி, நன்மக்கட்பேறு, நெல், பொன். பெறுவது, பெறப்படுவது, பெறுதல், ஊதியம், பாக்கியம்.
பேறுகாலம் } பெருங்காலம், பிரசவ
பேற்றுக்காலம் } காலம்.
பேனமர் - தேவகணங்களில் நுரையை உண்டு உயிர் வாழ்வோர்.
பேனம் - நுரை, பேரு, பே.
பேனவாகி - இடி, குமுறல், அசனி, முழக்கம், உருமு.
பேனன் - சூரியன், சந்திரன்.
பேனுக்கத்தி - பேனுசீவுங் கத்தி, சிறுகத்தி.
பேனுக்கிரம் - நீர்க்குமிழி, பேனம், பே.
பேனுசனி-இந்திரன், வலாரி, வச்சிரபாணி.
பேன் - தலையிற்பற்றும் பூச்சி.
பேன்குத்துதல் - பேனை நகக்குதல்.
பேஸ் - கட்டடத்தின் தரைமட்டம்.
பேஸ்து - சீட்டாட்டத்தில் உண்டாம் தோல்வி.
பேஜார் - சோர்வு, தொந்தரவு, கஷ்டம்.
பேஜாறுதல் - இளைப்பாறுதல்.
பேஷக் } சந்தேகமின்றி, நிசமாய்.
பேஷா } சந்தேகமின்றி, நிசமாய்.
பேஷ் - மிகநன்று எனப்பொருள் படும் குறிப்புச் சொல், நல்லது எனல் குறிப்பு.
பேஷ்கார்-காரியஸ்தன், அரசிறையதிகாரி.
பேஷ்கிஸ்தி - ஜமீன்தார் கட்டும் வரி.

பை

பை - அழகு, ஒரெழுத்து, இளமை, உடல் வலி, குடர், சாக்கு, நிறம், பசுமை, பச்சை நிறம், பாம்பின்படம், பையென்னேவல், பொக்கணம், மந்திரகுணம், மெத்தெனவு, தூணிதோல் முதலிய வற்று னமைந்த கொன்கலம், மூத்திரப்பை முதலிய உட லுள்ளுறுப்பு, 500 அல்லது 1,000 ரூபாய், அணுவில் பண்ணிரண்டில் ஒருபர்கமுள்ள தான தம்பிடி, சல்லி, அரக்காசு, பைசா, வருத்தம், மேன்மை, படம், [வகை.

பைகோமட்டம் - பைகோ மட்டக் குதிரை

பைகோ, பைகோவு, பைகோவை } பர்மாவை யடுத்துள்ள ஓர் தேயம்.

பைகோவைச்சிவப்பு - மாணிக்கம், சீயம்.

பைக்கம் - பிச்சை, அய்யம், பலி, பணம்.

பைக்கலம் - பச்சைக்குப்பி, தோற்பை.

பைக்கூறை-பை, சோணை. [சென்றவிடம்.

பைங்கண் - பசியகண், குளிர்ந்தகண், பசு

பைங்கலம் - நூற்றெட்டுபலிடத்தொன்று

பைங்கழை - பசுமையான மூங்கில்.

பைங்காய் - பசுங்காய், இளங்காய். [ண்.

பைங்கிளி-பச்சைச்கிளி, அழகிய இளம்பெ

பைங்குழி - கருத்தங்கும் இடம், கருக்குழி.

பைங்கூழ் - நோய், பயிர், விளைநிலம்.

பைங்கூன் - காவட்டம்புல், கதிர்ப்புல்.

பைங்கொடி - பசுங் கொடி, பெண்.

பைசந்தி - வாக்கு நான்கி லொன்று. [ம்.

பைசல்-தீர்மானம், மரணம், நிலவரித் திட்ட

பைசன்-அமெரிக்கநாட்டிலுள்ள ஓர் வகைக் காட்டெருமை, ஓர் காட்டுப்பசு.

பைசா - ஆறுபை, காலணு, சில்லறை.

பைசாசத்துவம் - பெண்டிர் பத்துத்தத்து வங்களுள் ஒன்று.

பைசாசநிலை - ஒருதாளினின்று மற்றைத் தாண் மூடக்கிற்றல்; இஃது: யுத்தநிலை நான்கி லொன்று. [கூடல்.

பைசாசமணம்-துயின்றாளைச் சென்று கூடுங்

பைசாசம்-இரும்பு, ஓர் யுத்தநிலை, பிசாசம், பேய், எண்வகை மணங்களுள் துயின்றா ளுடன்கூடல், களித்தான் முதலிய மகளி ரைச் சேரும் மணம்.

பைசாசி-இராக்கதத்தி, சடாமாஞ்சில், பிரா கிருத பாஷைகளுளொன்று, இது பை சாசி, சூளிகையென்றும் வழங்கும். இது பிசாச தேசங்களில் பேசப்படுவது. கேகயம், நேபாளம், பாகிலீகம்முதலிய தேசங் கள் பிசாச தேசங்க ளெனப்படும்.

பைசாரம் - பிரதேசம், இடம். [சோடு.

பைசார் - ஓர் தொடுதோல், காலிற்போடும்

பைசு - பால், கீரம், அமுதம்.

பைசுனம் - உலோபத்தனம்.

பைஞ்சாய் - திராட்கோரை, தண்டாங் கோரை, பஞ்சாய்க்கோரை.

பைஞ்சேறு-சாணம், கோமயம், கோமலம்.

பைஞ்ஞிணம் - புதிய இறைச்சி.

பைஞ்நிலம்-மக்கட்டொகுதி, பைஞ்ஞீலம்.

பைஞ்ஞீலம் - பசியநீலம், மக்கட்பரப்பு.

பைஞ்ஞீலி - ஓர்பட்டினம், பைஞ்ஞிலம்.

பைஞ்ஞீல் - பைஞ்ஞீலம். [வளர்த்தல்.

பைண்டின்னியம் - யாசகம்பண்ணி வயிறு

பைதலம் - துன்பமுடையோம்.

பைதல்-துன்பம், பையல், இளையது, சிறுவன்

பைதல் - குளிர், ஈரம், பசுமை, ஒருதழை.

பைதா - வண்டிச்சக்கரம். [சிற் கோத்தல்.

பைதாவடைத்தல் - வண்டிச்சக்கரத்தை அச்

பைதிரம் - நாடு, தேசம், ஊர்.

பைதிருகம் - தந்தைக்குரியது, தந்தைவழி யாகவந்த பொருள். [பலாசு.

பைது-பசுமை, ஈரம், பச்சைநிறம், பைம்மை,

பைத்தம் - பித்தம், பைத்தியம், பயித்தியம்.

பைத்தல் - கோபம், சினக்குறிப்பு, துன்பம், பசுமையாதல், பாம்பு படம்விரித்தல், சோபித்தல். [கொள்ளி.

பைத்திகம் - பைத்தியம், பயித்தியம், பித்துக்

பைத்தியக்காரன் - பித்துப்பிடித்தவன்.

பைத்தியம்-பயித்தியம், கிறுக்கு, மூடத்தனம்.

பைத்திராகோராத்திரம் - பிதிர்களினத் தோர் நாள்; அது: மனிதருக்கோர்மாதம்.

பைத்து - பசுமை, பச்சைகொண்டிருக்கை.

பைத்ருகபூமி - பிதுரார்ஜிதபூமி, பரம்ப ரைச் சொத்து. [சொத்து.

பைத்ருகதனம்-பிதுரார்ச்சிததனம், பரம்பரைச்

பைத்ருகம் - பித்ரு சம்பந்தம்.

பைந்தார் - பசியபூமாலை, செவ்விமாலை.

பைந்தினை - ஓர் தினை, கருந்தினை.

பைந்து - பந்து, உருண்டை, கோளம்.

பைந்தொடி-பச்சைவளையல், பெண், பொன் வளையல், பொன்வளையணிந்த கையை யுடையாள்.

பைந்நாகம் - சர்ப்பம், நாகப்பாம்பு.

பைபிள் - கிறிஸ்தவர் வேதநூல்.

பைபீலம் - எறும்பு, பைபீலிகை, உறவி.

பைபீலவாதம் } எறும்புகளின் பேச்சறி
பைபீலிகாவாதம் } தல்; அது: கலைஞான மறுபத்து நான்கிலொன்று, பிபீலவாதம்.
பைபீலிகை - எறும்பு, பிலஞ்சுலோபம்.
பையய-மெல்லமெல்ல, பைப்பய, பையய.
பையறி-பையின் உட்புறத்தை வெளிப்புற மாகத் திருப்புகை, புறம்பாக்கல்.
பையாஷ் - துரைத்தனத்தாரால் இந்தியா விற் செய்யப்பட்ட நிலவளவு. [கஸ்தர்.
பையாஷ்தார்-நிலவளவு செய்யும் உத்தியோ
பையை - தவப்பெண், பசுமை.
பைம்பூண் - பொன்னுபரணம், தங்கநகை.
பைம்பொன் - பசும்பொன், மேருகிரி.
பைம்மறித்தல் - உட்புறத்தை வெளிப்புற மாகத்திருப்புதல்,பையின்வாயைமூடுதல், புறமறித்தல்.
பைம்மறீஇ - புறமறித்து.
பைம்மை - பசுமை, அருகதவப் பெண்.
பைய - மெல்ல, மெதுவாக, மெள்ள.
பையகம் - பை, பையில்.
பையர
பையரா
பையரவு } நாகம், பைந்நாகம், பணடவி.
பையல் - பயல், சிறுவன், அற்பன்.
பையா - துன்புறு, பையனே. (விளி)
பையாத்தல் - துன்புறல்.
பையாப்பு - துன்பம், கலஞ்சுருக்கல்.
பையுள் - அற்பம், சிறுமை, துன்பம், நோய், மயக்கம்.
பையெனல் - மந்தக்குறிப்பு, மெல்லெனல், குறைதல்.
பையோடதி-பச்சைக்கொடி, பச்சைஓஷதி.
பையோலை - பச்சோலை, பச்சையோலை.
பைரவம் - அச்சம், பயங்கரம், செவ்வழி யாழ்த் திறங்களுள் ஒன்று,உட்சமயமாறி லொன்று.
பைரவன் - சிவன், வயிரன், சிவமூர்த்தங் களுளொன்று, கனகவிஜய நண்பரிலொ ருவன்.
பைரவி-ஓரிராகம்,காளி, துர்க்கை.
பைராகி - வைராகி, வடதேசத் துறவி.
பைரி - இராசாளி வகை.
பைலவான்
பைலன் } ஓரிருடி.
பைலன் - வேதவியாசர் மாணாக்கருளொரு வன், ருக்வேதாத்யாபகன், ஜாதகர்ணி என்பவரின் சீடன்.
பைல்வான்-மற்போர் செய்வோன்,மல்லக சட்டி.

பொ

பொ - ஓர் உயிர்மெய் யெழுத்து.
பொகடி - மகளிர் காதணிவகை.
பொகில் - அரும்பு.
பொகுட்டரை - அடிமர விசேடம்.
பொகுட்டு - சேற்றிலெழுங்குமிழி, தாம ரைக்கொட்டை, மலை.
பொகுத்தல்-பொத்தல்செய்தல்,துளையிடல்.
பொகுவல் - பறவை வகை. [கிஷம்.
பொக்கசம்-திரவியச்சாலை,திரவியம், பொக்
பொக்கசவைப்பு - புதைத்திரவியம்.
பொக்கணங்துக்கி - சுரைக்கொடி வகை, மூடக்கொற்றான், குமட்டி
பொக்கணப்பிச்சி - மூடக்கொத்தான், மூட க்கொற்றான்.
பொக்கணம் - சோளி, பெருமருந்து.
பொக்கணி } ஓர் பானபாத்திரம், குழியு
பொக்கணை } ரல், விரிந்ததொப்புள், கல் வளை, மரப்பொந்து.
பொக்கம் - பொய், பொலிவு, மிகுதி, வஞ்ச கம், குற்றம், அச்சம், துளைத்தல், இடை யூறு, செறிவு. [கை.
பொக்கரணி- புட்கரிணி, புஷ்கரணி,பொய்
பொக்கல் - பொக்கை. [வாய்.
பொக்கல்வாய் - பொக்குவாய், பொக்கை
பொக்கன் - தோற்றப் பொலிவுள்ளவன்.
பொக்கிப்பயல் - தறிதலை,அயோக்கியன்.
பொக்கிலவணம்-நிலாலவணம், உப்புவகை.
பொக்கினதுப்பி - பெருமருந்து.
பொக்கிஷக்காரன் - திரவியவான், பொக் கிஷவிசாரணைக்காரன், நிதிபதி.
பொக்கிஷச்சாலை - திரவியச்சேமவிடம்.
பொக்கிஷப்பெட்டி-பணம்வைக்கும்பேழை.
பொக்கிஷம்-பொக்கசம்,பொக்கிஷச்சாலை.
பொக்கு-குற்றம், பொள்ளல்,மரப்பொந்து, உள்ளீடுமுற்றுத தானியம், தானிய நொறுங்கு, பொருக்கு. [துளைத்தல்.
பொக்குதல் - கொப்புளங் கொள்ளுதல்,
பொக்குப்பொக்கெனல் - ஒலிக்குறிப்பு, வி ரைவுக்குறிப்பு,சுவாலைவிட்டெரிதற் குறி ப்பு, குற்றத்தால் மனம் திடுக்கிடல்.
பொக்குவாய்-பல்லற்றவாய்,பொக்கைவாய்
பொக்குளம் - கொப்பளம், கொப்புளம்.
பொக்குளித்தல் - கொப்புளித்தல், கொப்பு ளம் கிளம்புதல்.

போக்குளிப்பான் - கொப்புளிப்பான், வை சூரி வகை.
போக்குள் - கொப்பூழ், தொப்புள், உந்தி.
போக்கெனல்-விரைவின் குறிப்பு.[குற்றம்.
போக்கை - சிறுதூளை, மூளியாயிருக்கை,
போக்கைப்பல் - ஓட்டையான பல்வரிசை.
போக்கைவாய் - பல்போன வாய்.
போக்கைவாய்ச்சி - போக்குவாய்ச்சி.
பொங்கடி-யானை, சிங்கம், பெருமிருகம்.
பொங்கம் - நெற்றி, பரிமளிப்பு, பொலிவு, மிகுதி, மகிழ்ச்சி, ஒழுங்கு.
பொங்கர் - இலவமரம், சோலை, மரக்கொம்பு, மலை, வாடற்பூ,நீழல், கட்டுமலை, செய்குன்று.
பொங்கலாண்டி } பொங்கற்காரன், சமை
பொங்கலாள் } யற்காரன்.
பொங்கலிடுதல் - பொங்கல் வைத்தல்.
பொங்கலோபொங்கல்- தைப்பொங்கலிலும் மாட்டுப்பொங்கலிலும் உரைக்கும்சொல்.
பொங்கல் - உயர்ச்சி, கிளர்தல், சமைத்தல், பொலிதல், மிகுதி, கள், பொங்குதல், பெருங்கோபம். மினகுப்பொங்கல், தைம் மாத முதற்றேதி சூரியனைப் பூசித்துப் பொங்கல் நிவேதனஞ் செய்யும்திருவிழா, துள்ளுதல், பெருமை, நுரை, பஞ்சு, பொடித்தல், கொப்புளித்தல்.
பொங்கல்வரிசை-பெற்றோர் பெண்ணுக்கு அனுப்பும் சங்காரந்திப்பரிசு, சங்காரந்தியில் பெரியோருக்கும்,தொழிலாளிகளுக்கும் கொடுக்கும் பரிசு. [தல்.
பொங்கல்வைத்தல்- பொங்கலிடுதல், அழித்
பொங்கழி - தூற்றுநெல். [லான்.
பொங்கற்காரன் - பொங்கலாண்டி,பொங்க
பொங்கற்படி-தைப்பொங்கலில் ஊழியர்களுக்குக் கொடுக்கும் இனம்.
பொங்காரம் - பொங்கல், மிகுதிக்கம்.
பொங்கிவழிதல் - சோறுமுதலியன கொதித்து வெளியே வடிதல்,செல்வம் பெருகுதல், உவகைமிகுதியாதல்.
பொங்குசனி- இரண்டாமுறை ஏழரையாய் வருஞ்சனி,சுக்கிலபட்சத்துச்சனிக்கிழமை.
பொங்குதல் - கொதித்துக்கிளர்தல், கோபித்தல், சாதஞ்சமைத்தல், நொதித்தல், பொலிதல், கொந்தளித்தல், மிகுதல், பருத்தல், உற்சாகங் கொள்ளுதல்,விளங்குதல், மயிர்சிலிர்த்தல், துள்ளுதல், கண் சூடு கொள்ளுதல், ஒலித்தல், சமைத்தல்.
பொசி - கசிவது, ஊனீர், துத்தம்.
பொசிதல்-இரகசியம் வெளிப்படல்,கசிதல், நீரரும்பல், வடிதல், மனமுருகுதல், வார்தல்.
பொசித்தல் - புசித்தல், சாப்பிடுதல்.
பொசிவு-அருகிச்செல்லல், நெகிழ்வு, கசிவு.
பொசுக்குதல் - சுடுதல், துன்பப்படுத்துதல், தீயில்வாட்டுதல். [தென்னேவல்.
பொசுக்கெனல் விரைவுக் குறிப்பு,கொளுத்
பொசுங்கல் - கருகுதல், சிறு தூற்றல்.
பொசுங்குதல் - வெம்மையாற்றீய்தல்,அழிவுறுதல், இணங்குதல், காந்துதல்.
பொசுபொசுத்தல் } இரகசியம்பேசல், கொ
பொசுபொசுப்பு } ஞ்சங் கொஞ்சமாய் வெளிப்படுதல், மழை துளித்தல்,எரிச்சலுண்டாகும்படி அடிக்கடி நெருங்கிக்கேட்கும் தொந்தரவு, சிறுதுளிசிதறுதல்.
பொசுபொசென்னல்-எளிதில் எரிதற்குறிப்பு, இலேசாய்ப் பெய்தற் குறிப்பு.
பொச்சடி } வெறுநாக்கடித்தல்.
பொச்சடித்தல் }
பொச்சம் - அவா, உணவு, குற்றம், தேங் காய்மட்டை, விருப்பம், பொய்.
பொச்சாத்தல் } பொல்லாங்கு, மறதி,மறத்
பொச்சாப்பு } தல், இகழ்தல்.
பொச்சாலிநெல் - ஓர் நெல், சாலி.
பொச்சாவாமை - மறவாமை, நன்னினைவு.
பொச்சு - பொய்ச்சு, பயனில்லது, பெண் குறி,மயிர், மலத்துவாரம்,மயிர்க்கொத்து, பற்றைக்காடு, தூறு.
பொச்செரிப்பு - பொறுமை, அழுக்காறு.
பொச்சை - கரிகாடு, காடு, சிறுமலை, புழுக்கூடு, மலை, குற்றம், தொப்பை வயிறு.
பொஞ்சுதல் - ஒவ்வுதல், செழித்தல்.
பொடி - சிறிசு, சூரணம், பஸ்பம், பொடியென்னேவல்,தூள்,மூக்குத்தூள், சொக்குப்பொடி, சாம்பல், திருநீறு, சிறிய தண்டு, சிறிய இரத்தினம், சிறுபிள்ளை.
பொடிசு - சிறியது, பொடிச்சி, சிறுபெண்.
பொடிச்சல்லி - கற்களின் சிறுதுண்டு.
பொடிச்சி - சிறுபெண், சிறுமி, பொடிசு.
பொடிச்சிலை - மஞ்சட் கல்.
பொடிதல் - கெடுதல், துண்டுதல், தூளாதல், வெறுத்தல்,தோற்றுவித்தல்,அரும்புதல், வினங்குதல், வியர்வரும்புதல், பொடியாதல். [சிலிர்த்தல், மூளைத்தல்.
பொடித்தல் - கெடுத்தல், தூளாக்கல், மயிர்
பொடிபடுதல்-உடைபடுதல், கொறுங்கல்.
பொடிபண்ணல்-துண்டித்தல், மாவாக்கல், சுண்ணமாக்கல். [கொறுங்குதல்.
பொடிபொடிதல்-மிகத்தூளாதல், தவிடாய்

பொடிபொட்டு - சிறியது, பதரானது.
போடுதல்-புகையிலைப்பொடிபோடுதல், மயக்கப் பொடி போடுதல்.
பொடிப்பு - புளகம், மயிர்க் கூச்செறிதல்.
பொடியம்மை - அம்மைவகை, வைசூரிவ
பொடியல் - கம்மக்கருவி வகை. [கை.
பொடியன் - சிறுவன், அற்பன், குணமிலி.
பொடியாடி - சிவபிரான், சுடலையாடி.
பொடியாணி - சிற்ரூணி, வலிச்சலாணி.
பொடியாதல் - துகளாதல், அழிதல்.
பொடிவிவக்கணம்-பொன் முதலியவற்றைப்பொருத்திச்சுடுதல்,பொடிவைத்தூதல்.
பொடிவு - திட்டு, பொடிதல், நொருவல்.
பொடிவெட்டி - பொன்வெள்ளி முதலிய வெட்டுங் கத்திரிகை.
பொடிவைத்தல் } உலோகங்களைப் பற்ற
பொடிவைத்தூதல் } வைத்தல், தந்திரமாய்ப் பேசல், கோட்சொல்லல்.
பொடுகன்-சிற்ரூள், பொடியன், சிறுவன்.
பொடுகு-சிறிசு,சொடுகு,தலைச்சுண்டு. [ப்பு.
பொடுக்கெனல்-ஒலிக்குறிப்பு,விரைவுக்குறி
பொடுதலை-ஓர்பூண்டு,வண்ணிகர்,பூந்சாதம்
பொடுபொடுத்தல் } அபூரணம், ஓர் ஒலிக்
பொடுபொடுப்பு } குறிப்பு, காய்தல், சீ
பொடுபொடெனல் } க்கிரக்குறிப்பு, வெடித்தல், துளித்தல்,குறைதல், விரைவாய்ப் பேசுதல், வயிறிரைதல்,கோபங்கொளல்.
பொட்ட - விரைவாக, முழுதும், விரைக.
பொட்டகத்துத்தி } இரட்டகத்துத்தி.
பொட்டகத்தூரி }
பொட்டச்சி - பெண், பொட்டைச்சி.
பொட்டணம் } ஒத்தடமிடும் மூட்டை,
பொட்டணி } பொதி.
பொட்டணம்போடுதல் - ஒத்தடமிடல், பொட்டண மொற்றுதல்.
பொட்டரித்தல்-ஆடையைப் பூச்சியரித்தல்.
பொட்டலம் - பொட்டணம், பொட்டளம்.
பொட்டல் - கடம்பு, பாழிடம்.
பொட்டளி - பொட்டணம், பொட்டலம்.
பொட்டி-வேசி,விலைமகள்,பொதுமடந்தை.
பொட்டிமகன்-வேசிமகன், கெட்டிக்காரன்.
பொட்டிலுப்பு - வெடியுப்பு, கம்பியுப்பு.
பொட்டிலுப்புத்திராவகம் - வெடியுப்புத் திராவகம். [ஓர் கருவி.
பொட்டில் - பொதி, வெடிச்சத்தம்செய்யும்
பொட்டு - ஓர்பூச்சி, சங்கை, தாலிப்பொட்டு, தானியப்பொட்டு, நுழைவழி, நெற்றித் திலகம், ஒருவகையணி, துளி, தானியங்களின் தோலோடுகூடிய சிறுதுகள்.
பொட்டுக்கட்டுதல் - தாலிகட்டுதல், தாசிகளைக் கோயிலுக்குரிமையாக்குஞ்சடங்கு.
பொட்டுக்காரை - காரைமீன் வகை.
பொட்டுக்காறை - மகளிர் கழுத்தணிவகை.
பொட்டுக்குத்துதல் } திலகமெழுதல், பச்
பொட்டுக்குற்றுதல் } சைகுத்துதல்.
பொட்டுக்குலைதல் - சங்கை கெடுதல், மதிப்பிழத்தல், மானம்போதல். [த்தல்.
பொட்டுக்கேடு-சங்கைக்கேடு, மதிப்பையிழ
பொட்டுத்தாமரை - கண்டுபாரங்கி.
பொட்டுத்தாலி - பொட்டாகாரத்தாலி.
பொட்டுப்பூச்சி - ஓர் சிலந்திப்பூச்சி. [டம்.
பொட்டுப்பொடி - சிறுபண்டம், சிறு துண்
பொட்டுபொட்டெனல்-ஒலிக்குறிப்புவகை.
பொட்டெழுதல் - அழிவுறுதல்.
பொட்டெனல்-சீக்கிரக்குறிப்பு, வீரைதல்.
பொட்டை - குருடு, கூசிய கண். [வன்.
பொட்டைச்சி - பொட்டச்சி, கண்ணிழந்த
பொட்டையன் - குருடன், பெண்வழிச் செல்லும் புருஷன், பேடன்.
பொதி - அம்பலம், ஓலைக்குடை, காரிகாடு, பொதியப்பட்டது, பொதியமலை, பொதியென்னேவல், மலரும்பு, மூட்டை, நிறைவு, பலபண்டம், நிதி, சொற்பயன், பிணிப்பு, கட்டுச்சாதம், தொகுதி, குடையோலைக்கொத்து, உடல், தவிடு, பீன், கரு, பூவிணுறுப்பு.
பொதிகாரன் } பொதிமாடு செலுத்து
பொதிக்காரன் } வோன்.
பொதிகை - பொதியம், தென்மலை, மலயம்.
பொதிகைநிகண்டு - கல்லிடைக்குறிச்சிச்சுவாமி கவிராயர் இயற்றிய தமிழ் நிகண்டு.
பொதிசோறு - கட்டுச்சோறு, பொதிச் சோறு.
பொதிதல் - திணித்தல், மறைத்தல், நிறைதல், சேமித்தல், உள்ளடக்குதல், பிணித்தல், கடைப்பிடித்தல்.
பொதிந்துவைத்தல் - பதித்துவைத்தல்.
பொதிப்பு - தூளைப்பு.
பொதிப்போதா - பெருநாரை, நெடுங்காலுரை.
பொதிமாடு - பொதியெருது, மூட்டைசுமக்கும் எருது. [யவன், பாண்டியன்.
பொதியப்பொருப்பன் - பொதியமலைக்குரி
பொதியமலை - பொதியம், மலயம். [யமுனி.
பொதியமுனி - அகத்தியன், குடமுனி, மல
பொதியம்-தென்மலை, பொதியமலை, கந்தம்.
பொதியவிழ்த்தல் - கட்டமுதவிழ்த்தல், பூ முதலிய விரித்தல், பையை அவிழ்த்தல்.

பொதியவெற்பன் - பாண்டியன், பொதியப் பொருப்பன், தென்னவையன், வழுதி.
பொதியறுத்தல் - பணத்தைக் கவர்தல்.
பொதியறை - துவாரமில்லாத கீழறை.
பொதியஞ்சி - மயிர், கேசம், குந்தளம்.
பொதியன் - அகத்தியன், குறுமுனி.
பொதியன்கெளிறு - ஓர்வகை நன்னீர்மீன்.
பொதியில் - அம்பலம், பொதியமலை, பாண்டியநாட்டிலுள்ளதொரு மலை, இது தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பொதுவிடமாயிருத்தலால் இப்பெயர் பெற்றது.
பொதியில்முனிவன் - அகத்தியன், அகத்தியன் என்னும் மீன்.
பொதியெருது - பொதியெடுக்குமெருது.
பொதிரெறிதல் - நடுங்குதல். [மிகுதல்,
பொதிர் - நடுக்கம், பொதிரென்னேவல்,
பொதிர்தல் - மிகுதல், வீங்குதல், நடுங்குதல். அஞ்சுதல்.
பொதிர்தீதல் - தூளித்தல், பொங்குதல்.
பொதிர்த்த-பொங்கின. [தல், முறித்தல்.
பொதிர்த்தல் - பருத்தல், விம்முதல், குத்து
பொதிர்ப்பு - அச்சம், நடுக்கம், பயம், பீதி.
பொதிர்வு - பொதிர்பு, மிகுதல். [வாய்.
பொதிவாய் - கடினவாய், மூடியவாய், மூடு
பொதிவு - பொதிதல், பொதியாகக் கட்டுகை, ஒற்றுமை.
பொதிவைத்தல் - புதையல் வைத்தல்.
பொதினி - பழனிமலை.
பொதின்பொதினெனல் } ஒலிக்குறிப்பு.
பொதீர்பொதீரெனல் }
பொது - சாதாரணம், பலர் முன்னிலை, பொதுமையானது, சிறப்பின்மை, சகசம், நடுவுநிலை, ஒப்பு, மன்று, தில்லையம்பலம், தூண், கலியாணம், சிறப்பின்மை.
பொதுக்கட்டுதல்-நடுக்கட்டுதல். [மறைப்பு.
பொதுக்கு-ஒதுக்கு, பொதுக்கென்னேவல்,
பொதுக்குதல் - மறைத்தல், கவர்தல், புகையிற் பழுக்கவைத்தல், தூளித்தல்.
பொதுக்குணம் - பொதுத்தன்மை.
பொதுக்கென - விரைவாக, விரைய.
பொதுக்கெனல் - ஒலிக்குறிப்பு, நெகிழ்தற் குறிப்பு.
பொதுங்குதல் - வருந்துதல்.
பொதுச்சீர் - நான்கசையாய் வருஞ்சீர்.
பொதுச்சூத்திரம் - தொகைச் சூத்திரம்.
பொதுச்சொம் - பொதுச்சொத்து.
பொதுச்சொல்-தினை, பால், எண், இடம், காலங்களைக் குறித்துப் பொதுவாயிருக்குஞ்சொல், எல்லோரும் அறிந்த சொல்.
பொதுத்தல் - தூளித்தல், மூள் பொத்தல்.
பொதுத்தன்மை - பொதுவியல்பு, நடுவுநிலைமை, உவமான உவமேயங்களில் அமைந்துள்ள சாதாரண தருமம்.
பொதுத்தன்மைத்தொகை - பொதுத் தன்மை தொக்குநிற்பது (உ-ம்) காந்தட்போதினை நிகர்க்குங்கை.
பொதுத்தன்மையுருபுத்தொகை - பொதுத் தன்மையுமுருபுந் தொக்குநிற்பது (உ-ம்) கயற்கண்.
பொதுத்தன்மை யுருபுவமானத் தொகை - பொதுத்தன்மையு முருபுவமானமுந்தொக்கது (உ-ம்) குயிற்கிளவி.
பொதுத்தன்மையுவமானத்தொகை - பொதுத்தன்மையு முபமானமுந் தொக்குநிற்பது (உ-ம்) நாசிபோல்வதுமற்றழகும்.
பொதுத்தினை-பலதினைக்கும் பொதுவான சொல்.
பொதுத்திரீ } வேசி, பரத்தை, பொதுமகள்.
பொதுஸ்திரீ }
பொதுநடுவர் - மத்தியட்சகர், மத்தியஸ்தர்.
பொதுநலம் - பலர்நன்மை, பொதுநன்மை.
பொதுநலத்தார் - பொதுமகளிர்.
பொதுநன்மை - பொதுநலம், பொதுநல ஊழியம் புரிவோர்.
பொதுநிலம் - எல்லார்க்கும் பொதுவாயிருக்கும் நிலம், சனசமூக நன்மைக்காகப்பயிர் செய்யாமல் இருக்கும் காலி நிலம்.
பொதுநிறம் - பலநிறக்கலப்பு, மாநிறம்.
பொதுநீக்குதல் - பொதுத்தன்மையை விட்டொழித்தல், தன்னுடையதாகவே செய்துகொள்ளுதல், சுயநலம் பாராட்டல்.
பொதுநீங்குவமை - இயைபின்மை யணி; அது: உவமையைக் கூறி மறுத்துப் பொருடன்னையே யுவமையாய்க் கூறுவது. (உ-ம்) திங்களில் வதனஞ் சிறைப்புடைத்ததனலதுவே யதற்கு நிகர்.
பொதுநூல் - எம்மதத்தினர்க்கும் சம்மதமான விஷயங்களை எடுத்துரைக்கும் நூல்.
பொதுநெறி - பொதுவான வழி.
பொதுநோக்கம் } பொதுப்பார்வை, பொது
பொதுநோக்கு } மார்க்கம், உள்ளீடற்ற பார்வை, பாரபக்ஷமற்ற பார்வை.
பொதுபொதுத்தல் } ஒலிக்குறிப்பு, மெது
பொதுபொதெனல் } மெதுத்தல்.
பொதுப்படுதல் - பொதுவாதல், ஒப்பாதல்.
பொதுப்படை - பொதுவானது, சமுதாயம்.
பொதுப்பணம் - பலர்க்குமுரிய பணம்.
பொதுப்பாயிரம் - நூலினது வரலாறும்

ஆசிரியனதுவரலாறும், ஆசிரியன்மாணாக்கர்க்குப் பாடஞ் சொல்லுதலின் வரலாறும், மாணாக்கன் பாடங்கேட்டலின் வரலாறும் ஆகிய ஐந்தினையும் பற்றிக்கூறும் மூன்னுரை.

பொதுப்பெண் } பொதுமகன், பொதுப்
பொதுப்பெண்டு } பெண்டிர், வேசையர்.

பொதுப்பெயர்-திணை பால் எண் இடங்களைக் குறித்துப் பொதுவாய் வரும் பெயர்.

பொதுப்பொருள் - பலர்க்குமுரியபொருள்.

பொதுமகள் - வேசி, வேசை, பொதுவர்மகள். [சனங்கள்.

பொதுமக்கள் - சிறப்பிலாதவர்கள், பொது

பொதுமடந்தை - பொதுமகன், வீலைமகள்.

பொதுமத்தியம் - பொது, பொதுவானது.

பொதுமனிதன் - நடுவன், மத்தியஸ்தன், பாரபக்ஷமில்லாதவன்.

பொதுமாது - வேசை. [பார மூலதனம்.

பொதுமூதல் - பங்கானமுதல், கூட்டுவியா

பொதுமை - பொதுத்தன்மை, சாமானியம், பொதுவுடமை, நன்மை.

பொதுமொழி - பொதுப்பெயர், பொதுப் படையான சொல், பிரியாது நின்ற விடத்து ஒருபொருளும், பிரிந்தவிடத்து வேறு பொருளும் பயக்கும் சொல், சிறப்பில்லாச் சொல்.

பொதும்பர் } மரச்செறிவு, மரப்பொந்து,
பொதும்பு } சோலை, பொந்து, குழி, குகை.

பொதுவகத்திணை - அகத்திணைப் பொது, தனிக்குறிப்பெனப் பலவற்றை யடக்கிக் கொள்ளல்.

பொதுவசனம்-பலவற்றை நோக்குஞ்சொல், ஊரில் வழங்கும் வார்த்தை.

பொதுவடி - இயற்சீ ருரிச்சீர் பொதுச்சீ ரென்னும் மூன்றினும் வரு மடி.

பொதுவர் - இடையர், மத்தியஸ்தர், நடுவர், பொதுமகளிர். [நோக்குடைய குணம்.

பொதுவறிவு-சாமானியமானபுத்தி, பொது

பொதுவறுசிறப்பு - தனக்கேயுரிய சிறப்பு.

பொதுவறுதல் - தனக்கேயுரியதாதல்.

பொதுவனுமானம்-ஓரனவை; அது: சாதன சாத்தியங்களி லொற்றுமை யுணராது பொதுவாயனுமானித்தல். [மின்றி.

பொதுவாக - பட்சபாதமில்லாமல், பாரபக்ஷ

பொதுவார்த்தை - பட்சபாதமற்ற சொல்.

பொதுவி - முல்லைநிலப்பெண், பொதுவாயிருப்பவள், பொதுமகள், தூஷப்பி.

பொதுவிதி - பொதுவான நிருணயம்.

பொதுவியர் - இடைச்சியர், உழத்தியர்.

பொதுவியல் - பொதுவிலக்கண முணர்த்தும் நூற்பகுதி, பலவற்றிற்குப் பொதுவான குணம்.

பொதுவிலக்கணம் - பொதுவிலக்கணவிதி.

பொதுவில் - அம்பலம், பொதுமடம்.

பொதுவெழுத்து - தமிழிற்கு மாரியத்திற்கும் பொதுவாய் வழங்குமெழுத்து.

பொதுவை - பொதுமகள், வேசி, தாசி.

பொதுவைத்தல் - நடுக்கட்டுதல்.

பொதுளல் } செழித்தல், நெருங்குதல்,
பொதுளுதல் } நிறைதல், தழைத்தல்.

பொத்தகம் - சித்திரப்படலம், புத்தகம், நிலக்கணக்கு, மயிலிறகு.

பொத்தப்பி - தொண்டை மண்டலத்து வேங்கடக் கோட்டத்தைச் சார்ந்ததும் காளத்தியைச் சூழ்ந்ததுமான காடு.

பொத்தம்பொது - பொது, ஊர்ப்பொது.

பொத்தலடைத்தல் - துவார மடைத்தல், கடன் தீர்த்தல், குற்றத்தை மறைத்தல்.

பொத்தலூசி - தூஷ்யூசி, காதுள்ள ஊசி.

பொத்தல் - துவாரம், துளைத்தல், மூடுதல், கொப்புளித்தல், கடன், குற்றம், அடித்தல்.

பொத்தற்சுரை - ஒன்றுக்கும் உதவாதவன், தூலித்த தேகமுடையவன்.

பொத்தாறு
பொத்தாறுகட்டை } ஏர்க்கால்.

பொத்தானட்டிகை-மாதர் கழுத்தணிவகை.

பொத்தான்-பித்தான், அங்கிமாட்டும்குமிழ்.

பொத்தி - மடல்பிரியா வாழைப்பூ, பிருகுக் கிழங்குத்தோற்பொத்தி, சீலை, பொதி, சோனக்கதிர், தானியக்கதிர், இரத்தினவகை, தோலுரியாதபனங்கிழங்கு, ஒரு பெரிய சோழனகர், வரால், பொத்தித் தோவத்தி. [வகை.

பொத்திக்கரப்பன்-தண்டுக்கிரந்தி, கரப்பான்

பொத்திக்கானான் - ஓர் கானான்.

பொத்திக்கோரை - கோரைவகை.

பொத்திதள்ளுதல்- வாழைமுதலிய பொத்தி சூலை போடுதல், அடித்து வீழ்த்தல்.

பொத்தித்தோவத்தி - நார்மடி.

பொத்தியார் - பொத்தி, கோப்பெருஞ் சோழன் நண்பன்.

பொத்திரம் - எறியாயுதம், அத்திரம்.

பொத்திரை - பாழடைந்த அகழ்.

பொத்திலம் - மரப்பொந்து, போறை.

பொத்திவைத்தல் - மறைத்தல், ஒளித்தல்.

பொத்து - ஆண்குறி, தவறு, புரைவு, பெண்குறி, பொத்தென்னேவல், பொந்து, பொய், மூடுதல், அடைப்பு, வயிறு, நீ

யொழுக்கம், கெவுளி. [கை.
பொத்துக்கடி - படர்தாமரை, சரப்பான் வ
பொத்துதல் - அடித்தல், புனைதல், மூடுதல், புதைத்தல், தைத்தல், மறைத்தல், தீ மூட்டுதல், மாலைகட்டுதல், கற்பனை செய்தல், கலத்தல், நிறைதல். [தல்.
பொத்துப்படுதல் - தவறுதல், தீமை பயத்
பொத்துப்பாய் - பருக்கன்பாய், காடுமூடான பாய்.
பொத்துப்பொத்தெனல்-ஒலிக்குறிப்பு, தடித்திருத்தற் குறிப்பு.
பொத்துமான் - ஓர்வகை மான்.
பொத்தை - பருத்தது, மட்சிறுமலை, உடம்பு.
பொத்தைக்கால் - யானைக்கால், ஓதக்கால்.
பொத்தைச்சி - கும்மலி, தடித்தவள்.
பொத்தையன் - நீர்ப்பிடியான சரீரமுள்ளவன், தடித்தவன், தூலதேகி.
பொந்தர் - ஓர்வகை நீர்ப்புன், பொந்து.
பொந்தன்-வாழையில் ஓர்வகை, போலுள்ள மூங்கில், தூலித்த உடலம், தூலதேகி.
பொந்தி-சரீரம், மரவான், மொத்தி, பருமை.
பொந்திக்கை - பொருந்துகை, இணைகை.
பொந்து - மரப்பொந்து, வங்கு, பல்லி.
பொந்துக்கோரை - கோரைவகை, பெருங்கோரை. [வங்கு.
பொந்தை-சீலையோட்டை, சரீரம், போரை,
பொந்தைக்கோல் } ஓர்வகைப் பற்றுக்
பொந்தையக்கோல் } கோல், பூண்கட்டிய தடி.
பொம்மக்காதேவி - தொட்டியரும், சாலவித்தைக்காரரும் வணங்கும்ஒருதேவதை.
பொம்மலாட்டம் }
பொம்மலாட்டு } பாவைக்கூத்து, மாயம்.
பொம்மலி - பருத்தவள், தூலித்தவள்.
பொம்மல் - சோறு, பொம்மை, பொருமல், பொலிவு, மிகுதி, பருமன், கூட்டம், மகிழ்ச்சி, பிரதிமை.
பொம்மன்மாசு - பம்பளிமாசு. [று.
பொம்மியம்மன் - சிறு தெய்வங்களிலொன்
பொம்மூதல் - பொலிதல், மிகுதல்.
பொம்மெனல் - அனுகரணவோசை, விரைவுக்குறிப்பு, அடர்ச்சிக்குறிப்பு.
பொம்மை - சிறுசுவர், பிரதிமை, பிருட்டம், பொம்மையபுரம்.
பொய் - அசத்தியம்; இது: தாமதகுணத்தொன்று, சிறுசிராய், பஞ்சபாதகத்திலொன்று, பொய்யென்னேவல், மரப்பொந்து, வேஷம், மாயை, போலியானது, செயற்கையானது.
பொய்கை-குளம், கோட்டான், இயற்கையிலுண்டான நீர்நிலை, தடாகம், வாவி.
பொய்கையாணை - பொய்கை மேலிட்டுக் கூறும் ஆணை, சூளுறவு.
பொய்கையார்- ஓர் புலவன், கோச்செங்கட் சோழனரால் சிறை செய்யப்பட்ட சேரமான்கணைக்காலிரும்பொறையைச் சிறைவிடும் பொருட்டு அந்தச் சோழனைக் களவழி நாற்பது என்னும் நூலாற் பாடியவர். இவர் பிறந்த இடம் தொண்டிநகர். சேரமான் கோக்கோதையும் இவராற் பாடப்பட்டவனே. பொய்கையாழ்வார், பொய்சொல்ல வெறுக்காதவர்.
பொய்கையாழ்வார்-முதல் ஆழ்வார்கள் மூவரில் முதல்வர், துவாபரயுகத்தில் 892901 வது வருஷமான சித்தார்த்தி வருஷம் ஐப்பசி சுக்கிலபக்ஷம் அஷ்டமி, செவ்வாய்க்கிழமை திருவோண நக்ஷத்திரத்தில் கச்சித்திருவெஃகாவில் பொய்கைப் புஷ்கருணியில் பாஞ்சஜன்யாமிசராய், அயோநிஜராய் அவதரித்தருளினவர். இவ்வாழ்வாரும் பூதத்தாழ்வாரையும், பேயாரையும் போலப் புஷ்பத்திலவதரித்து, எம்பெருமானுடையநிர்ஹேதுகதடாக்ஷத்தால் சுத்தஸத்துவநிஷ்டரராய், ஞானபத்திவைராக்கியமுடையராய்ப் பிறந்ததுமுதல் பகவத்குணங்களேயே தாரகபோஷணைகளாய்கொண்டவர். ஒவ்வோரிரவும் ஒரொருநாளே ஒவ்வொரிடத்தும் தங்கிப்பகவத்குணானுபவிஷ்டராய் விளங்குபவர். திருக்கோவலூரில் இடைகழியில் ஒருநாளிரவு மூவருந்தங்க, நாலாமவராகிய எம்பெருமான் தங்களே நெருக்குவதைத் தங்களுடையஞானக்கண்ணாலே கண்டவர். இடராழி நீங்கச்சுடராழியானடிக்கே வையந்தகழியாவார்கடலே நெய்யாகவெய்யகதிரோன்வினக்காகக்கொண்டு சொன்மாலை சூட்டினேன் என்கிறார். இவர் பாடியது முதற்றிருவந்தாதியாகும். இதுவும் வெண்பாவாலனதாம். இப்பாக்களின் செந்தமிழ் நடையும்,செம்பொருள்வைப்பும் தெள்ளியார்வாய்க் கேட்டுணர்க.
பொய்க்கடி - பருங்கடி, மாடுகள் நுனிப்புல் மேய்தல், தீண்டாமையுண்டாக்காதகடி.
பொய்க்கண் - கண்மண்டை, போலிக்கண்.
பொய்க்கண்ணி - பிஞ்சுபிடியாத கண்ணி, பொய்ப்பூப் பூத்தொழில்.
பொய்க்கண்ணுறக்கம் -குறைக்கணித்திரை.
பொய்க்கதை - கட்டுக்கதை, புனைந்துரை.

பொய்க்கரி } பொய்ச்சாட்சி சொல்
பொய்க்கரியாளர் } வோர், பொய்க்கரிமாக்கள், பொய்புகல்வோர்.
பொய்களிறு - மாய யானை.
பொய்க்கால் - போலிக்கால், விளையாட்டில் கால்களால் எறிச்செலுத்தும் கழி, காலுக்குப்பதிலாக மரத்தால் அமைத்துக் கட்டப்பட்ட போலிக்கால்.
பொய்க்காற்குதிரை - சவாரிசெய்வதுபோல் உள்ளிருந்து மனிதன் ஆட்டும் மரக்குதிரை. [காக நிருமிக்கப்பட்ட குழி.
பொய்க்கிணறு - மிருகங்களைப் பிடிப்பதற்
பொய்க்கிளை - பிஞ்சுபிடியாத முளை.
பொய்க்குதல் - பொய்சொல்லுதல், பொய் யாய்ப்போதல், உண்மைகெடல்.
பொய்க்குரல் - போலிச்சத்தம். [கிடங்கு.
பொய்க்குழி - நாற்றுநட்டகுழி, பொறிக்
பொய்க்கூடு - சரீரம், பொய்ச்சரீரம். [கை.
பொய்க்கை - ஓர்மீன், பொய்த்தல், போலிக்
பொய்க்கொட்டை - பொய்ப்பிஞ்சு. [டம்.
பொய்க்கோலம் - காவடவேடம், போலிவே
பொய்சொல்லல் - தப்புப்பேசல்; இது: வாக்கின் தீக்குணநான்கிலொன்று.
பொய்சொல்லி - பொய் சொல்லுபவன்.
பொய்ச்சத்தம் - பொய்க்குரல், எதிரொலி.
பொய்ச்சத்தியம் - பொய்யாணை.
பொய்ச்சாட்சி } கள்ளச்சாட்சி, பொய்
பொய்ச்சாட்சியம் } க்காரன், பொய்க்கரி.
பொய்ச்சாத்தல் - மறத்தல், நினைவழிதல்.
பொய்ச்சான்று - பொய்ச்சாட்சி.
பொய்ச்சான்றேறுதல் - பொய்ச்சாட்சி சொல்லுதல். [னில்லது.
பொய்ச்சு - கொட்டை சுளையற்றது, பய
பொய்ச்சுற்றம் - அன்பிலாத பந்துக்கள்.
பொய்ச்சூள் - பொய்யாணை, பொய்ச்சத்தியம்.
பொய்தல் - சோழி, மகளிர்கூட்டம், மகளிர் விளையாட்டு, பிடுங்குதல், தூவித்தல், சிறுவீடு.
பொய்த்தலை - போலித்தலை. [கப்பேசல்.
பொய்த்தல் - தவறுதல், கெடுதல், பொய்யா
பொய்த்தூக்கம் - பொய்யுறக்கம். [நீர்.
பொய்த்தேர் - பேய்த்தேர், மசரதம், கானல்
பொய்ந்நல்கல் - கள்ள உபசாரம், பொய்ப் பாராட்டு.
பொய்ந்நாட்டு - பொய்யாக நாட்டிகொள்ளப்பட்டது, கற்பனை, இடுகுறி.
பொய்ந்நிலம் - சுருங்கை, மறைத்த குழி.
பொய்ந்நீர் - கானல், பேய்த்தேர்.
பொய்படுதல் - பொய்யாதல், பொய்த்தல், இல்லையாதல்.
பொய்ப்பத்திரம் - கள்ளச்சீட்டு.
பொய்ப்பாடு - தவறுதல், பொய்படுதல்.
பொய்ப்பிஞ்சு - நிலையாப்பிஞ்சு, உதிரும்பிஞ்சு.
பொய்ப்பு - பொய்த்தல், உண்மையற்றது.
பொய்ப்பூ - பிஞ்சுபிடியாதபூ, காய்பிடிக்காது உதிரும் முதற்பூ. [மாயப்பேச்சு.
பொய்ப்பொருள் - நிலையற்ற பொருள்,
பொய்ம்மணல் - புதைமணல். [ண்டமாரீசன்.
பொய்ம்மான் - பொய்யாக மான்வேடம்கொ
பொய்ம்முயக்கம் - அன்பிலாக்கூட்டம்.
பொய்ம்மூளை - பொய்க்கிளை, மூளைத்தழிகை.
பொய்ம்மூக்கு - உண்மூக்கு, போலிமூக்கு.
பொய்ம்மை - காவடம், பொய், பொய்வேஷம், மாயம், போலி, பொய்மை, பொய்யானது.
பொய்ம்மையாளர் - பொய்யர், கய்யர்.
பொய்யடி - பகடம், வெருட்டு, போலியடி.
பொய்யடிமை - போலிப்பத்தி.
பொய்யடிமையில்லாதபுலவர் - மதுரைச்சங்கத்திலிருந்த நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர் முதலிய நாற்பத்தொன்பதின்மரானதொகை யடியார்கள்; சிவபத்த சிரோமணிகளாய் விளங்கிப் பல நூல்களியற்றியவர்கள். [பாணம்.
பொய்யம்பு - விளையாட்டம்பு, கூர்மையற்ற
பொய்யல் - பொய்சொல்லாதே.
பொய்யறை - பெட்டகத்தின் மறைவறை.
பொய்யன் - பொய்சொல்வோன்.
பொய்யா - தவறாத, தவறுமல், தவறமாட்டா, தவறி, பொய்யாக. [தம்.
பொய்யாணை பொய்ச்சத்தியம், பொய்ச் சப
பொய்யாதல் - பொய்சொல்லல்.
பொய்யாது - தவறுமல், தவறுதி.
பொய்யாப்புள் - பறவை வகை, சலாங்கு.
பொய்யாமை - தவறுமை, பொய்ம்மொழிகூறுமை, நடுநிலைமை தவறுமை, பொய்யாமல்.
பொய்யாமொழி - சத்தியம்தவறுமை, சத்திய வசனம், வேதாகமம், திருக்குறள்.
பொய்யாமொழிப்புலவர் - தஞ்சைவாணன் கோவை யியற்றியவர்; இவர், தொண்டை நாட்டுச் செங்காட்டங் கோட்டத்து உறையூரில் வேளாளர் குலத்திற் பிறந்தவர். இவரைக் குறித்துவரும் ''பொதியிலகத்தியனுப்பொய்யாமொழியாய்ச்சிதைவில் புலவர் சிறப்பாய்த்—துதிசெய்யச் செங்காட்டங் கோட்டத்துறையூரெனுந் தலத்தில், தங்காட்டங்கொண்டிருப்பாய்தான்'' என்னுஞ் செய்யுளால் குறிக்கப்படுகின்றது. இவர்காலம் பதினைஞ்நூற்றாண்

டென்பர். இவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவையிலுள்ள சொற்சுவை,பொருட்சுவை முதலியவற்றை யெடுத்துச் சொல்ல வல்லார் யாவர்? இவர் தொண்டைநாட்டிலும் சிறிதுகாலம் வசித்தவரென்பதும் அக்காலத்தில் முருகக்கடவுள் தம் வாயால், "வீழுந்த துளியந் தரத்தே வேமென்றும்" என்னு முதற்குறிப்புள்ள வெண்பாப் பாடப்பெற்றவ ரென்பதும் தொண்டைமண்டல சதகத்தால் உணரப்படும். இவர் அதிவீராராமபாண்டியனுக்குச்சற்றுமுன்னேயிருந்த வணங்காமுடிப் பாண்டியன் காலத்தவ ராவர். இவர் அழிந்துபோன தமிழ்ச்சங்கத்தை மீட்டும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேரவாவுடையராய் வணங்காமுடிப் பாண்டியனிடஞ் சென்றனர். அவன் இவர் கருத்தையுணர்ந்து, 'புலவரே! சங்கந் தாபிக்குஞ் செய்தியைப்பற்றிப் பின்னே யோசிப்போம். இப்போது நமது சிவாலயத்திலே தாபிக்கப்பட்டிருக்கும் சங்கப் புலவர்களுடைய விக்கிரகங்களெல்லாம் தலையசைக்கும்படிப் பாடக்கடவீர்' என்றான். உடனேயிவர், "உங்களிலே யாளெருவ ளெவ்வுவளே வொவ்வேளே, திங்கட்குல னறியச் செப்புங்கள், சங்கத்துப் பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ, எடவிழ்தா ரேழெழுவீ ரே" என்னும் வெண்பாவைப் பாடினர். உடனே அந்த விக்கிரகங்களெல்லாம் தலையசைத்தன. இந்த அற்புதத்தைக் கண்டும் அப்பாண்டியன் குறை நீங்காளுய்ப் புலவரை நோக்கிச்'சீரியரே! இது ஒருபெரியகாரியமன்று. சங்கத்தை ஏற்கும் பலகை பொய்கையிலாழ்ந்து கிடக்கின்றது. சங்கம் நிறுவச்சம்மத மிருக்குமாயின் அப்போதப் பலகை வெளிவரும். அதன்பின் சங்கம் நிறுவுவதைக்குறித்தியோசிக்கலாம்' என்றனன். இதைக்கேட்டபுலவர் அப்படியேயாகுகவென்று கூறிப் "பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையெனினும், பாவேந்தருண்டென்னும் பான்மையால்-கோவேந்தன், மாறனறிய மதுராபுரித் தமிழோர், வீறணையே சற்றே மித" எனக் கூறலும் சங்கப்பலகை மிதந்து தோன்றியது. இவ்வற்புதத்தைக்கண்டும் பாண்டியன் அதையும் பொருட் படுத்தாளுயினன். அதுகண்டு, புலவர் தமது சோணுட்டை நோக்கிப் பல்லக்கேறி மீண்டார்.

மஞ்சு-அழகு, ஆபரணம், இளமை, கட்டில், களஞ்சியம், பனி, முகடு, முதுகு, மேகம், யானைமுதுகு, வலி. [டையான்.
மஞ்சுகமநன் - நடையழகன், நன்னடையு
மஞ்சுகமனை - அன்னப்பேடு, பெடை.
மஞ்சுகம் - கொக்கு, அன்னம்.
மஞ்சுகோசர் - வஜ்ரகுஹிகை உபதேசம் செய்த அசுவகோசரின் குரு.
மஞ்சுக்கட்டை - மறுமாடி, குறுமாடி.
மஞ்சுதேசி - திருட்டினன். [ஷணி.
மஞ்சுபாஷணி - நயவசனி, மிருது சம்பா

மஞ்சுலம் - நீர்ப்பாய்ச்சல்.
மஞ்சுவந்தம் - இமயமலைக்கு உத்தரதிசையி லுள்ளஒருமலை,இதில் மிகப்பெரியதடாக மொன்றுண்டு. அதில் பஞ்சவர்ணங்க ளோடுகூடிய தாமரைமலர்கள் மலர்வன.
மஞ்சுவாணி - இந்திராணி, கௌரி.
மஞ்சுளம் - அழகு, மிருது, சுந்தரம்.
மஞ்சூஷை } கோட்டை, பேழை, பெரிய
மஞ்சூடை } கூடை. [ன்று.
மஞ்சூரம் - கடலை, கவதானியங்களிலொ
மஞ்ஞை - மயில், கேகயம், சிகி, மயூரம்.
மஞ்ஞையீர்க்கு - மயிலிறகு, பீலி, தோகை.
மஞ்ஞையூர்தி - கந்தன், மயில்வாகனன்.
மஞ்ஞைவாகனன் - சுப்பிரமணியன்.
மடக்கடி - கலக்கம், மூடக்கு, கோணல், தந்திரம்.
மடக்கடிக்காரன் - சூதன், புரட்டன்.
மடக்கடிபண்ணல் - தந்திரம் செய்தல்.
மடக்கம் - அடக்கம்,மூடக்கு,வளைவு, நோய் திரும்புகை, மடிப்பு.
மடக்கல் - அடக்கல், தடுத்தல், வளைத்தல்.
மடக்கியம் - சுரிதகம். [வகை.
மடக்கிளி - இளங்கிளி, பெண், கடல், மீன்
மடக்கிறால் - சிப்பிமீன் வகை.
மடக்கு - ஓரலங்காரம்;இது:வந்தமொழியே மடங்கிவருவது, ஓர் பாத்திரம், போகல், மடக்கென்னேவல், மடங்கடிப்பு, மூடக்கு, தாறுமாறு, பெரியமண்ணகல், மடங்கச் சொல்.
மடக்குக்கட்டில் - மடக்கக் கூடிய கட்டில்.
மடக்குக்கத்தி - பூச்சாக்கத்தி, பிடிக்குள் மடக்கி வைக்கும் கத்திவகை. [குடர்.
மடக்குக்குடர் - குடற்பகுதி, மூடக்குக்
மடக்குதல் - மடக்கல்,மடித்தல்,திருப்புதல், வாயடக்குதல், கால்நடைகளை ஒரு சேர அடக்கிவைத்தல், தடுத்தல், உடுத்துதல், திரும்பத் திரும்ப வருதல், அழித்தல், மடங்கச்செய்தல்.
மடக்குப்பிடிக்கத்தி - எழுத்தாணிக்கத்தி.
மடக்குமடக்கெனல் - தடுத்தற்பொருட்டு விரைந்து கூறும் சொல், (நீர்குடித்தலி லுண்டாம்) ஒலிக்குறிப்பு.
மடக்குவரி-இறைமேலிறை,வரிமேல்வரி.
மடக்கெழுத்தாணி - கத்தியுடன் பிடிக்குள் அடங்கும் எழுத்தாணி வகை.
மடக்கெனல் - மடக்கு மடக்கெனல்.
மடகொடி - பெண்,காரிசை,இளங்கொடி.
மடங்கடித்தல்-தோற்றோடச்செய்தல், முறியடித்தல்.
மடங்கலர்-பகைவர், வேற்றலர். [க்கை.
மடங்கலூர்தி-சிங்கவாகனமுடையான், துர்
மடங்கல் - இடி, இயமன், காலன், கீழ்ப்படிதல், சிங்கம், தாழை, மீளல், மூடங்கல், யுகமுடிவு, வடவாமுகாக்கினி, வியாதி, சாய்ந்ததகிர் வளைகை, கோணம், அடக்கம், ஒடுக்கம், முடிவு, யாளி,நோய்வகை, இயமன் ஏவல் செய்யும் கூற்றம், நர சிங்கம், கோடைப் பயிர், தடுக்கப்படல்.
மடங்கல்வாகனி - பராசத்தி, மடங்கலூர்தி.
மடங்கல்வீரோதி } சரபம், எண்காற்புள்,
மடங்கல்வைரி } யாளி.
மடங்கற்கொடியோன்-வீமன், சிங்கக் கொடி யுடையோன்.
மடங்கு-அளவு, இழைக்கயிறு, பங்கு, மடங்கென்னேவல், வியாதி, அடக்கம்.
மடங்குதல்-கீழ்ப்படிதல், மீளல், மூடங்கல், வளைதல், கோணுதல், வளைந்து செல்லுதல், குறைதல், சுருங்குதல், ஒடுங்குதல், நெளிதல், கீழ்ப்படிதல், வாயடங்குதல், சொத்து முதலியன ஒருவன்பால் அடைத்து வீடுதல், அடங்கல், தணியல், நிலை தளர்தல்.
மடதருமம் - மடப்புண்ணியம்.
மடதி - ஆலங்கட்டி, பனிக்கட்டி.
மடத்தல் - அறியாமையாயிருத்தல்.
மடத்தனம்-அறியாமை, மூடக்குணம்.
மடநடை - பதவியநடை, மென்னடை.
மடநல்லார் - பெண்கள், மடவார்.
மடநோக்கு - எண்ணமுமச்சமும்கூடிய பார்வை, மருண்ட பார்வை.
மடந்தை - பத்தொன்பதாண்டிற் பெண், பருவமாகாத பெண், பெண்.
மடந்தைபாகன் } சிவன், பார்வதிபாகன்,
மடந்தைபாதியன் } அர்த்தநாரீசுரன்.
மடப்பத்து - மடத்திற்குரியன.
மடப்பம் - அரண்மனையிற் பெண், ஐந்நூறு கிராமங்களின் தலைகர், மருதநிலத்தூர், இளமை.
மடப்பளி } ஓர் சாதி, சமையல் வீடு.
மடப்பள்ளி }
மடப்பற்று - மடத்திற்பொருள், மடத்துக் குரிய பொருள். [வடவை.
மடப்பிடி - பெண்யானை, அத்தினி, கரிணி,
மடமடத்தல் } ஈரடுக்கொலிக் குறிப்பு,
மடமடப்பு } சடசடெனல்.
மடமடெனல் }
மடமயில் - அழகிய மயில், அழகிய பெண்.
மடமான் - பெண், மடக்கொடி.

மடமை - அறிவின்மை; இஃது: பெண்கள் நற்குணத்துளொன்று,இஃது அறிந்தும், அறியாமையாய் நடப்பது, கபடின்மை, புத்தியீனம், வெகுளித்தனம்.

மடம் - அறப்புறம், இரதம், கோயில், சத்திரம், மடமை, முனிவர்வாசம், அறியாமை, அழகு, சாவடி, மென்மை, இளமை.

மடரன் - ஓர்முனி. [ஞென்று

மடலரிதாரம் - மஞ்ஞிலை, பாடாணவகையி

மடலவிழ்தல் - இதழ் விரிதல், அலர்தல்.

மடலாயம் - மடம். [மடிதல்.

மடலிடத்தல் - மடங்கித் திரும்புதல், மடங்கி

மடலூர்ச்சி
மடலூர்தல்
மடலேறுதல்
} தான் காதலித்த தலைவியை அடைதல் வேண்டிப் பனை மடலாலான குதிரையைத் தலைவன் ஏறி ஊர்தல், மடற்குதிரையிவர்தல்; இஃது: அகம்பொருட்டுறையி ஞென்று.

மடல்-ஈந்து, கமுகு, தாழை, தெங்கு,பனை, வாழை யிவற்றின் பூமுடி, ஏற்றமடல், ஓர் பிரபந்தம், ஓலைமடல், காதின் மடல், கைச்சீப்பு, சிறுவாய்க்கால்,பனைமட்டைக்கங்கு, பூவிதழ், கண்ணிமை, திருநீறும், சந்தனமும் வைக்கும்கலம், சோளக்கதிர் முதலியவற்றின் மேலுறை, ஆயுத அலகு, கை.

மடல்வாத்து - மயிலைப்போன்ற தோகையினையுடைய நீர்ப்பறவை வகை.

மடல்வாழை - பேயன்வாழை, மடவாழை.

மடவரல்-இளம்பெண், மங்கை, மடக்கொடி, இளமை, இளப்பம். [மடவிளாகம்.

மடவளாகம் - கோயிலைச் சூழ்ந்துள்ள வீதி,

மடவன் - அறிவிலான், மூடன்.

மடவாமீன் - மீன்வகையிலொன்று.

மடவாயம் - மகளிர் விளையாட்டுக கூட்டம்.

மடவார் - அறிவீனர், பெண்கள், மூடர், மடவர்.

மடவாழை - பேயன் வாழை, மடல்வாழை.

மடவாள் - பெண், மடவரல்.

மடவியர் - பெண்கள், மடவார், மடவரல்.

மடவிளாகம் - மடவளாகம்.

மடவை - ஓர் மீன், மடவுமரம், துடுப்பு, கவரிலுக்கி, மடமுடையை, அறிவிலாய்.

மடவைக்கெண்டை - ஓர் மீன்.

மடவோர் - மடவார், பெண்கள், மகளிர்.

மடற்குதிரை - மடலூர்தலில் உபயோகிக்கும் பனைமடலாலான குதிரை.

மடற்சீதம் - கவரிபாஷாணம்.

மடற்பனை - கருக்குப்பனை, கருக்குமட்டை, விழாத ஆண்பனை.

மடற்பாளை - பூமடற்பாளை, பூம்பாளை.

மடற்றுத்தம் - துத்தவகையிலொன்று.

மடன் - அறியாமை, அறிவிலான், உன்மத்தம், மடம். [குறித்த குதிரை.

மடன்மா - மடற்குதிரை, மடலூர்தலில்

மடா - பாண்டவகை, மிடா, பானை.

மடாஅ - மடித்து, ஊட்டி. [பதி.

மடாதிபதி - மடத்தலைவன், மடத்திற்கதி

மடாதிபத்தியம்-மடத்தலைமை, மடாதிகாரி.

மடாரெனல் - ஓர் ஒலிக்குறிப்பு.

மடாலயம் - மடம், மடக்கிருகம்.

மடி - அடங்கல், கேடு, சீலை, சோம்பல், சோறு, தாழை, தாழைவிழுது, நோய், பொய், மடங்குதல், மடிந்தது, மடியென்னேவல், மூலைமேற்றிரன், வயிறு, வலையினருகு, மடங்குகை, வயிற்று மடிப்பு, அரைமடித்தகொண்டையின்மேற்பாகம், தீட்டில்லாதிலை, பல துண்டுகள்கொண்ட ஆடைவகை, அடக்கம், தனிமை, சோம்பலுடையவன், பகை, துர்க்கந்தம், மடங்கு, வளை, ஓலைச்சுருள்.

மடிகசக்குதல் - மடி பிசைதல்.

மடிகட்டுதல் - ஆசாரவஸ்திரம் தரித்தல், ஆடையை உலர்த்தல், மணமகளின் மடியில் வெற்றிலைபாக்குப் பழங்கட்டுதல், அதிகமாக எடுத்துக்கொள்ளுதல்.

மடிகம்பு - வல்கம்பு, தறிமரம். [செவி.

மடிகாது - நாய் முதலியவற்றின் மடிந்த

மடிகால் - கால்மூடக்கிச் சகனத்தின்கீழ் வைத்திருத்தல், ஓர்வகை ஆசனம், மடிந்த கால்.

மடிக்குதல் - உபாயமாய்ச்செயித்தல், கொல்லுதல், மடக்குதல், மூடக்குதல், மடித்தல், மடிவித்தல்.

மடிசஞ்சி - பரிசுத்தமாக வைப்பதற்குப் புல் அல்லது கம்பளியாலாகிய பை.

மடிச்சீலை - ஆசாரவஸ்திரம், மடியிற்கட்டிக் கொள்ளும் பணப்பை, மடிசீலை.

மடிச்சுக்கட்டி - புழுவகையிலொன்று.

மடிதல்-கெடுதல், சாதல், மடங்குதல், தூனி மழுங்குதல், தலைசாய்தல், வீழ்தல், வாடுதல், சுருளுதல், முயற்சியறுதல், தூங்குதல், சுருங்குதல்.

மடித்தலம் - மடி, வயிற்றுமடிப்பு.

மடித்தல் - மடிக்குதல், உழக்குதல், கெடுத்தல், மடக்குதல், வளைத்தல், அழித்தல்.

மடிந்து - செத்து, மாய்ந்து, மனவெழுச்சியற்று, மடங்கி.

மடிபிடி - சண்டை, மடிச்சீலையிற் பிடிக்கும் பிடி, நிர்ப்பந்தம், கைப்பற்றல்.
மடிபிடித்தல்-நிர்ப்பந்தித்தல், வழக்காடுதல்.
மடிப்பணம் - கைப்பணம். [சூதன்.
மடிப்பாளி - மடிப்புக்காரன், மோசக்காரன்,
மடிப்பிச்சை - மடிச்சீலையில்வாங்கும் பிச்சை.
மடிப்பினை } வங்கமணல், வங்கநீறு, ஈய
மடிப்பினை } மணல்.
மடிப்பு - மடக்கு, மடித்திருப்பது, மோசம், வஞ்சகம், தொந்திமடிப்பு, மடித்தல்.
மடிப்புக்காரன் - தீதுசெய்வோன், வஞ்சகன், மடிப்பாளி.
மடிப்பெட்டி - கொட்டைப்பெட்டி.
மடிப்புடைவை - மடித்தலுடைய ஆடை, மகளிரின் ஆசாரச் சீலை. [யல்.
மடிப்புத்தையல் - மடித்துத் தைக்கும் தை
மடிப்பெழுத்தாணி - கைப்பிடியுள்ள மடக்கும் எழுத்தாணி வகை. [பாய் (வி. மு)
மடிப்பை - அடைப்பை, மடிசஞ்சி, மடிப்
மடிமாங்காயிடுதல் } பரிதானங்கொடுத்
மடிமாங்காய்போடுதல் } தல், பொய்க் குற்றஞ் சார்த்துதல்.
மடிமாறி - மூடிச்சுமாறி, திருடன்.
மடிமை - சோம்பு, சோம்பன், சோம்புறைக்காரன், காரியக்கேடு.
மடிய - துயில, சோம்ப, சாக, மடங்க.
மடியில் - கூடாரம், பாடிவீடு.
மடியுறை - விம்மிதம், பூரிப்பு.
மடிவிடுதல் - மடிதளர்தல் அது: பசு முதலியன சினைக்குறி காட்டல்.
மடிவித்தல் - மடியச்செய்தல், முனைமழுங்கச் செய்தல், கொல்லுதல், அமிழ்த்தல்.
மடிவு - கேடு, சாவு, சோம்பு, தரித்திரம், மடக்கம், மடிதல், சோம்புதல், கெடுதல்.
மடிவை-தழை, குழை, இலை, தழையுடை, மடிவாய் (வி. மு.)
மடு - ஆற்றினுட்பள்ளம், குளம், மடுவென்னேவல், இறங்கியேறும் வழி, நீர்நிலை.
மடுத்தல் - சுத்தியல், நிறைத்தல், மடிப்புச் செய்தல், வாய்முதலியவற்றை லுட்கொள்ளல், உட்புகுத்தல், எடுத்துநீட்டல், சொரிதல், அமுத்தல், தோய்தல், தடைப்படல், நிறைத்தல், பாய்தல், உட்கொளல்.
மடுப்ப - உண்ண, ஊட்ட. [தல்.
மடுப்படுத்தல் - ஆழ்ந்திருத்தல், மூழ்கியிருத்
மடுப்பு - மடிப்பு, அடைவு, நிறைப்பு, உண்கை, ஏமாற்றம், மோசஞ்செய்கை, கேடு, உண்ணுதல், சேர்த்தல், அடக்கிக்கொள்ளுதல், ஊட்டுதல், தீமூட்டுதல், அமிழ்த்துதல், மோசம்பண்ணுதல், மயக்குதல், செலுத்துதல், இடையூறு ஏற்படுதல், கூனல் மடிப்பு, ஓட்டுவாய்.
மடை - ஆபரணக்கடைப்பூட்டு, சோறு, துவாரம், தேவதைகட்குப் படைப்பது, நீர்பாயுமடை, மதகு, வாய்க்கால், ஆணி, மூட்டுவாய், பலி இடைப்படுத்தல், சமையல் வேலை, நீரோடை. [தல்.
மடைகோலுதல் - வயலுக்கு நீர் பாய்ச்சு
மடைக்கடல் - முகத்துவாரமுள்ள கடல்.
மடைக்கலம் - சமையற் பாத்திரம்.
மடைத்தலை - மடைமுகம், மதகு.
மடைத்தனம் - அறிவீனம், மடமை.
மடைத்தொழிலோன் - சமையற்காரன், இவன் அரசர்க்குறுதிச் சுற்றத்தொருவன்.
மடைத்தொழில்-சமையல்வேலை,பாகவேலை.
மடைநூல் - பாகசாஸ்திரம்.
மடைபரவுதல் } நிவேதனஞ் செய்தல்,
மடைபோடுதல் } மடைப் பண்டம் பரப்பல், மடைபோடுதல், மடைமாறுதல்.
மடைப்பண்டம் - அலங்கார நைவேத்தியம்.
மடைப்பளி } அடுக்களை, ஓர்சாதி, அடுப்
மடைப்பள்ளி } பங்கரை.
மடைப்புத்தி - அறிவீனம், மடத்தனம்.
மடைமாறி - புரட்டுக்காரன்-ரி. [மாறுதல்.
மடைமாற்றுதல் - மடைக்கழித்தல், மடை
மடைமுகம் - ஆற்றுத்துவாரம், மடைத்தலை, மடைக்கடல்.
மடையசாம்பிராணி - அறிவீனன். [மை.
மடையப்புத்தி - மடைப்புத்தி, அறிவின்
மடையர்கூச்சல் - அப்பவாணியர், கூவி விற்போர். [சிகன், பத்தகாரன்.
மடையன்-அறிவிலான், சமையற்காரன், பா
மடையான் - உள்ளான்வகை, பரிசாரகன்.
மடைவெட்டி - நீர்மடை திறப்போன். [லை.
மடைவேலை-சமையல்வேலை, புத்தியற்ற வே
மடைவைத்தல் - மடைபோடுதல்.
மட்கலசம் - மண்கலயம். [பாண்டம்.
மட்கலம் - மண்பாண்டம், மண்ணாலான
மட்கல் - அழுக்கேறல், ஒளி மழுங்கல்.
மட்குசை - மண்குகை, மழுங்குதல்.
மட்குடம் - மண்குண்டம், மண்கலசம்.
மட்குதல்-மட்கல், ஒளிமங்குதல், வலிகுன்றுதல்,மயங்குதல், அழுக்கடைதல்,அழிதல்,
மட்சம் - குரோதம், சமூகம், திரேகத்தில் காணும் கரும்புள்ளி, மச்சபுராணம்.
மட்சாந்து - சுவர்கட்ட உதவும் குழைத்த மண்சேறு.
மட்சிகம் - ஈ, மட்சிகை.

மட்சுவர் - மண்சுவர், மண்பித்திகை.
மட்டக்கோல் - மட்டங்கட்டுங்கோல், கொத்துவேலைக் கருவியிலொன்று.
மட்டங்கட்டுதல் - சரியாய் நிறுத்தல், நிதானம், பண்ணல்.
மட்டசுத்தம் - மட்டம், சமம், செல்வம்.
மட்டச்சாவாலை - சாவாலை, மீன்வகை.
மட்டச்சுவர் - சிறுசுவர், கட்டைச்சுவர்.
மட்டச்சூரை - சூரைமீன் வகையிலொன்று.
மட்டஞ்செய்தல் - சமமாக்குதல், நிரவல்.
மட்டத்தரம் - தாழ்ந்ததரம், நடுத்தரம்.
மட்டத்துருத்தி-ஓர்விசிறி, கம்மாளர் கருவி.
மட்டநம் - அப்புதல், பூசுதல், தளமிடல்.
மட்டந்தட்டுதல் - ஒப்புரவுதட்டுதல், சமமாக்குதல், கருவமடக்குதல்.
மட்டப்பலகை - சமனறிகருவி, மணியாசிப் பலகை, சமநிலைகாட்டும்கொத்துக்கருவி.
மட்டப்பா - மொட்டைமாடி.
மட்டப்பாவீடு - மொட்டை மாடியுள்ளவீடு.
மட்டப்பொன்-மாற்றுக்குறைவானபொன்.
மட்டம் - அளவு, எல்லை, உபதேசம், ஒப்புரவு, கரும்பு, நெல், மூங்கில், வாழையிவற்றின் கன்று, கேடகம, சமம், வாலயானை, வாலக்குதிரை, மூன்றுறுத்துடையதாளம், சமநிலை, சிறுமை, தாழ்வு, மிதம், செட்டு, மத்திமநிலை, குறைவு, கள், ஒருதுணி.
மட்டம்பார்த்தல் - பாதை, சுவர் முதலியவற்றின் ஒழுங்கைக் கவனித்தல்.
மட்டம்பிடித்தல் - கப்பித்தல், நிதானம் பண்ணல், சமனுக்குதல். [திருத்தல்.
மட்டம்போடுதல் - அநாவசியமாய் வாரா
மட்டம்வெடித்தல் } கப்பித்தல், நிலைகப்புக்
மட்டம்வைத்தல் } கள் உண்டாதல்,
மட்டலகு - இழைப்புளியினலகு.
மட்டவழைப்புளி - தச்சக்கருவி வகை.
மட்டவேலை-பருமட்டான வேலை, பரும்படியான வேலை. [நோக்கமறிதல்.
மட்டறிதல் - அளவறிதல், குறிப்பறிதல்,
மட்டனம் - பூசுதல், மட்டநம், பூசல்.
மட்டன் - மூடன், மடையன், அறிவிலி.
மட்டாய் - மிதமாய், செட்டாக.
மட்டி - ஒழுங்கின்மை, கடன்மட்டி, படைக்கலம், மட்டியென்னேவல், மதிகேடன், மூடன், சிப்பிமீன், மண்டலிக்கை, பரும்படி, மட்டிக்காரை.
மட்டிகை - சாணிமுத்திரை, குறிவகை.
மட்சிச்சிப்பி - சிப்பி மீனெடு.
மட்டித்தல் - பூசுதல், மட்டுக்கட்டுதல், மண்டலித்தல், முறித்தல், அழித்தல், வட்டமாக்குதல், அளவில் நிறுத்தல், தேய்த்தல், மந்திரித்தல், கலத்தல், குழைத்தல்.
மட்டித்தனம் - மூடத்தனம். [தையல்.
மட்டித்தையல்-பருக்கன்றையல், பரும்படித்
மட்டிபூசுதல் - முதல்முறைப் பூச்சு.
மட்டிப்பால்-சிங்களம், மலையாளம் முதலிய இடங்களில் பயிராகும் ஒருவகை மரத்தின் பால்; இஃது மணமுள்ளது.
மட்டிப்பு - மட்டித்தல்.
மட்டிப்புடலை - முருட்டுச்சீலை.
மட்டியம் - சத்ததாளத்தொன்று. [று.
மட்டிலை-பச்சிலை, மருந்திலை வகையிலொன்
மட்டிவாயன் - நிறந்தகன்றவாயையுடையவன், மூப்பது அங்குலம் வளரக் கூடியதும், சாம்பல் நிறமுள்ளதும், பதினெட்டங்குலம் வளர்வதும், சாம்பல் நிறமுள்ளதுமான கடல்மீன் வகை, இடக்குப் பேசுவோன்.
மட்டிவாழை - வாழை வகையிலொன்று.
மட்டிவேலை-பரும்படியான வேலை, வேலைப்பாடு நிரம்பாத வேலை.
மட்டு - அவதி, அளவு, எல்லை, சன்மிதம், சாமானியம், தேன், சாறு, உத்தேசம், மதுவைக்கும்சாடி, காமபானம், வாசனை.
மட்டுக்கட்டுதல்-அளவிட்டறிதல், நிதானித்தல், உணர்தல். [னம விடுதல்.
மட்டுக்குமிஞ்சுதல் - அளவு கடத்தல், நிதா
மட்டுக்கோணம்-சரிகோணம், நேர்கோணம்
மட்டுத்தப்பு-அளவுக்கதிகம், நிதானமின்மை
மட்டுத்தப்புதல் - இலக்குத் தவறுதல், மரியாதை தவறுதல், மிதமிஞ்சுதல், அளவு கடத்தல், நிதானந்தவறுதல்.
மட்டுத்திட்டம் - சரிநிதானம், மதிப்பு.
மட்டுப்படாமை - அடங்காமை, எட்டாமை.
மட்டுப்படுதல்-அளவுபடுதல், குறைதல்.[டல்.
மட்டுப்படுத்தல் - அளவுபடுத்தல், மட்டுக்கட்
மட்டுப்பிடித்தல் - தீர்மானித்தல், அளத்தல்.
மட்டுப்பிரமாணம்-சரியளவு, வேண்டுமளவு.
மட்டுமதிப்பு - மட்டுமரியாதை, நன்னடை.
மட்டுமதியம் - அளவு, நிதானம். [மதிப்பு.
மட்டுமரியாதை - ஆசாரவுபசாரம், மட்டு
மட்டுமிஞ்சுதல் - மட்டுத்தப்புதல்.
மட்டும் - வரை, மாத்திரம், எல்லைக்குள்.
மட்டுவாயூடகம் - கடல்மீன் வகை.
மட்டுவார்குழலி - திருச்சிராப்பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மட்டை - உடற்குறை, ஓர்பாம்பு, கமுகு, தெங்கு, வாழை, பனை யிவற்றின்மட்டை,

மூட்டான், மொட்டை, உடற்குறை, மூடன்.

மட்டைகட்டுதல்-கடகம் முதலியவற்றிற்கு மட்டைவைத்துத் தலைக்கட்டுதல்.

மட்டைக்கட்டு-வட்டுத்திராட்சி. [இளம்பனை.

மட்டைக்கட்டுவடலி - மட்டை நிரம்பிய

மட்டைக்குதிரை-மடலாற் செய்த குதிரை.

மட்டைக்குறி - ஓர் சாயக்குறி.

மட்டைக்கோரை - கோரை வகை. [உதடு.

மட்டைச்சொண்டு-பெரியசொண்டு, பெரிய

மட்டைத்தும்பு-பனைநார்க்கயிற்றுத் தும்பு.

மட்டைத்தேன் - திருநீலகண்டன், பின்னைத் தேன், பூரான் வகை, சைனர்.

மட்டையடித்திருவிழா, மட்டையம் } உற்சவ காலத்தில் சுவாமிக்கும், அம்மனுக்கும் ஊடல் நிகழ்வதாகக் கொண்டு கொண்டாடும் ஒருவிழா. [சாவகர்.

மட்டையர் - சமணர், குண்டகர், அருகர்,

மட்பகை, மண்ணரிநார், ஊசி, குலாலர் மண்ணறுக்கும் கருவி.

மட்பகைஞன், மட்பகைவன், மட்பகைவினைஞன் } குயவன், கும்பகாரன், வேட்கோவன், குலாலன், வேளான்.

மட்பலகை - சூடாத செங்கல்.

மட்பனை - நிலப்பனை, மருந்து வகை.

மட்பாம்பு - ஆதிசேஷன்.

மட்பாண்டம், மட்பாத்திரம் } குயக்கலம், மண்பாண்டம்.

மணக்கத்தை - நெல்வகையி லொன்று.

மணக்கால் - கலியாணப் பந்தலிடுவதற்கு முதலில் நடும் முகூர்த்தக்கால்.

மணக்கால்நம்பி-வைணவ ஆசாரியருள் ஒருவர். இவர் கலி(3932)க்கு மேல் விரோதிகிருது வருஷம் மாசிமாதம் திங்கட்கிழமை மணக்கால் என்னும் கிராமத்திலவதரித்தார்; இவர் உய்யக்கொண்டார் காலத்தவர்.

மணக்குடவர், மணக்குடையார் } திருக்குறளுரையாசிரியரிலொருவர், மணக்குடையர். [யாண ஊர்கோலம்.

மணக்கோலம் - கலியாணவலங்காரம், கலி

மணங்கட்டுதல் - வாசனை சேர்க்குதல்.

மணங்கல் - பானை, மிடா, மடக்கு.

மணங்கிளர்தல் - மணந்தட்டுதல்.

மணங்கு - ஆட்டுக்குட்டி, இருவாட்சி, ஓர் நிறை. [ஜீலை.

மணச்சீலை - கல்யாணத்திற்குரிய கூரைச்

மணத்தக்காளி - ஓர் கீரைவகைச் செடி.

மணத்தல் - கமழ்தல், கூடல், மோத்தல், வேட்டல், விளங்குதல், மணம்புரிதல், புணர்தல், கூடியருத்தல், அணைத்தல். [ல்.

மணந்தட்டுதல்-மணங்கிளர்தல், பரிமளித்த

மணந்தவன் - கணவன், புருஷன், நாயகன்.

மணப்பந்தல் - கலியாணப்பந்தல்.

மணப்பறை-கலியாணப்பறை, விவாகமுழவு

மணப்பாக்கத்தாம்பி - பின்னிலோகாசாரியர் திருவடி சம்பந்தி. [செல்வமுடைமை.

மணப்பு-மயப்பு, வாசனை, புணர்ச்சி, சாரம்,

மணப்பெண் - கலியாணப்பெண்.

மணப்பொருத்தம் - விவாகத்திற்குரிய பொருத்தம் பத்து; அவை: இராசி, இராசித்தலைவர், இரச்சு, கணம், ஸ்திரீதீர்க்கம், தினம், மகேந்திரம், யோனி, வசியம், வேதை, 2 விவாக வுடன்படிக்கை.

மணமகள் - மணவாளி, மனைவி, கலியாணப் பெண்.

மணமகன் - கலியாண மாப்பிள்ளை.

மணமங்கலம் - வேந்தன் அரிவையரோடு புணர்ந்ததன்மையைக்கூறும்புறத்துணை.

மணமண்டபம் - கலியாணமண்டபம்.

மணமலி - மருக்கொழுந்து. [மாலை.

மணமாலை-மணத்தில் தம்பதிகள் இடும்மலர்

மணமுரசு - விழாமுரசு, கல்யாணபேரிகை.

மணம் - கலியாணம், கூட்டம், மகிழ்ச்சி, வாசனை கூடுதல், வாசம், கன்னிலை, சேர்க்கை.

மணம்பிடித்தல் - எழில்பிடித்தல், வாசனை பிடித்தல், மோப்பம்பிடித்தல், வாசனையால் இழுக்கப்படுதல். [கணம்.

மணம்புரிதல்-விவாகஞ்செய்தல், பாணிக்கிர

மணலக்கம்பம் - பால்வீதி மண்டலம்.

மணலி-மருக்கொழுந்து, கீரைவகை, நெல்வகை, பாம்பு வகை, சோழ நாட்டில் திருத்தருப்பூண்டித்தாலுகாகஸ்பாவுக்கு 3 மைல் வடக்கேயுள்ள ஊர்.

மணலி முத்துக்கிருஷ்ண முதலியார்-இவர் இற்றைக்கு நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னே சென்னையில் பிரபலமாக வாழ்ந்திருந்த ஒரு வேளாளப் பிரபு, கல்வி, தேர்வி யாழ்க்கங்களோடு பெருஞ்செல்வம், சுகை முதலிய நற்குணங்களெல்லாவற்றிற்கும் ஆலயமாயிருந்தவர். ராமாயணக் கீர்த்தனை பாடின சீகாழி அருணாசலக் கவிராயருக்குப் பொன்மாரி பொழிந்த வள்ளல் இவரே.

ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே

பாடப்பட்ட கம்ப ராமாயணத்திற்கும் இவர் மரபினரே அபிமானப் பிரபுக்களாவர்.

மணலூர்ப்பதிப்பெண் - (அல்லி என்கிற) சித்திராங்கதை, அருச்சுனன் மனைவி.

மணலூர்ப்புரம்-(1) மணிபுரம், (2) பாண்டி நாட்டகத்தே சித்திராங்கத பாண்டியனுக்கு ராஜதானியாயிருந்த நகரம், (3) சோழநாட்டிலுள்ள வொரு சிற்றூர், மணலூர்.

மணலேறு - முத்துக் குற்றவகை.

மணலை - கல்நவரைமீன்.

மணவில் - கல்யாண வீடு. [னுள் ஒன்று.

மணல்-வெள்ளைமண், மாகதக்குற்றம் எட்ட

மணல்வாரி-ஓர்கெல், மணல் நீக்குங்கருவி, மண்தோண்டி, சின்னம்மை வகை.

மணவணி - கலியாணவலங்காரம்.

மணவறை - பள்ளியறை, மணமண்டபம்.

மணவறைத்தோழர்-மணமக்கடோழர்.

மணவாட்டி - மனைவி, மணமகள்.

மணவாரி - பெருநெல்வகையிலொன்று.

மணவாளதாசர் - இவர் ப்ரபந்நகாயத்ரி யென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற இராமாநுஜநூற்றந்தாதி பாடின திருவரங்கத்தமுதனார் திருப்பேரனார். இவர் பிரபந்தவகை தொண்ணூற்றாறும் செய்த பிரபலமான தமிழ்ப்புலவர் திலகர். இவராற்செய்யப்பட்ட நூல்களுள்ளே நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி முதலிய எட்டுமாத்திரம் அஷ்டப்ரபந்த மென்னும் பெயர் பெற்று அச்சேறி விளங்குகின்றது. மற்றவையாவும் இறந்தொழிந்தனவாயினும் இவராருளிச்செய்த திருவரங்கக் கோவை யென்னும் ப்ரபந்தத்திற் சில பாடல்கள் மாத்திரம் இறவாது உயிரோடிருந்துலாவுகின்றன. அப்பாடல்களிற் சிலவற்றை அடியில் வரைந்திருத்தல் காண்க.

"பேயோ வெயினாமுதாலயத்திற் பிறந்தவுனை, பேயோ தினைப்புனங் காவல்வைத் தாரெழு பாருமுண்ட, வாயோன் றிருவுந்தி பூதோ னரங்கன் மணிவரைமேல், ஆயோ வெனுங்குரலந்தோ புனத்தை யழிக்கின்றதே."

"அல்லைப் பகல்செய்த மாலரங் கேசரணிவரைமேற், கொல்லைக் குறவர் மடந்தையெங் கேசொலுங் கோலமதன், வில்லைக் குனிப்பவ ரேயது ராகம் விளைப்பவரே, கல்லைப்பெண் ணுக்கு மவரேயென் மானத்தைக் காப்பவரே."

"நீவந் தெனக்குமுன் னேநின்ற மாயமு நீடழையோ, டாய்வந்த மாயமும் யாதுகொல் லோவன்று நூற்றுவர்பாற், போய்வந்த நேமிப் பெருமா னரங்கன் பொருப்பிலிள, வேய்வந்ததோளி யெனக் கென்சொன் னுன்கொலை வேலவனே."

பின்னப்பெருமாளையங்கார்.

மணவாளமாமுனிகள் - இவர் கலி (4472) இதில் சாதாரண ஸ்ரீ ஐப்பசி மீ சுக்ல பக்ஷ சதுர்த்தசி வியாழக்கிழமை மூல நக்ஷத்திரத்தில் பாண்டி நாட்டில் சிக்கில் கிடார மென்னுங் கிராமத்தில் திருமான் மனத்த அண்ணர் என்பவருக்குத் திருக்குமாரராய் அவதரித்து, அழகிய மணவாளர் என்கிற பிள்ளைத் திருநாமம் அடைந்து, திருவாய்மொழிப் பிள்ளையிடம் சமாச்ரயணம் பெற்று, அரச காரியக்காரராய் இருந்து அரசன் திரவியங்களை அறவழியிற் செலவிட்டனர். அரசன் பொருள்களைக் கேட்கையில் பயந்து சன்யசித்துக் கொண்டு, மணவாளமாமுனிகள் அழகிய மணவாள ஜீயரென்கிற பெயர்பெற்று, ஆசாரியர் சொற்படி மடங்கள் கட்டி, மும்பத்தாருயிரப் படியைப் பிரவர்ப்பித்து வந்தனர். இவர் திருமேனியில் சோகை கண்டு, தபிக்க, உடையவரும் தேசிகரும் சுவப்பனத்தில் எழுந்தருளி நீர் பாகவத சம்பிரதாய பேதஞ்செய்வித்ததால் இவ்வகை நோய்கண்டது. இனி நீர் கிடாம்பி கயிஞரை ஆச்சாயிக்கில் இந்நோய் நீங்குமென, மறைய இவர் விழித்து, அவ்வகை புரிந்து, பெரியஜீயர் தூப்புற்குலமுடையார் தாசர், யதீந்திரப் பிரவணர் என கயிஞரால்பெயரடைந்து, திருவரங்கத்தில் (78) திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்து, மும்பத்தாருயிரப் பெருக்கரெனப்பெயரடைந்து, திருவரங்கரைச் சேவித்து, வருகையில் ஒருநாள் ஆசௌசத்தால் திருக்கோயிலில் தரிசனம் தடையாக அது காரணமாக ஆச்ரம ஸ்வீகாரம் சடகோப ஜீயர் சந்நதியில் செய்துகொண்டு, தாமும் சடகோப ஜீயரென்றும், பெரியஜீயரென்றும் பெயரடைந்து, திருவஷ்ணந்தனை வேடலப்பையால் வென்று, இருந்தனரென வடகலையார் கூறுப. இவர் உடையவர் விஷயத்தில் அன்புள்ளவராய், யதிராஜவிம்சதி செய்தபடியால் இவர்க்கு யதீந்திரப்பிரணவர் என்று

பெயர். இவருக்குத் திருமாலேதந்த பெருமான் முப்பத்தாறுயிரப்பெருக்கர் என்று பெயரிட்டனர். இவர் பிரமதந்திர ஜீயரிடமும், அழகிய மணவாள நயினரிடமும் முறையே பாஷ்யமும், ரஹஸ்யங்களையும் கேட்டனர். பாண்டிதேசத்தான் ஒருவனுக்கு அருள்செய்து, சடகோபதாசன் என்று பெயரிட்டுக் கந்தாடைமுதலிய கோத்ரவகை யேற்படுத்தினவர். இவரைப் பெருமான் உத்தமநம்பிக்குத் திருவனந்தாழ்வானாகக் காட்டினர். இவர் பெருமான் திருமுன்னர் சுமார் 36,000 முடிக்கையில் கந்தாடை அண்ணன், வானமாமலைஜீயர், பாவஸ்துபட்டர்பிரான் ஜீயரும் தம்மூட்கலந்து, தனியன்கூறவிருக்கையில் ஒரு சிறு பிள்ளை இவர்கள் செய்யவிருந்த சுலோகமாகிய "ஸ்ரீசைலேசதயா" என்கிறதைக்கூறி மறைந்தது. எறும்பி அப்பாவுக்கு அழகிய மணவாளதாசனென்று பெயரிட்டுத் திருவேங்கடம் வந்து, இளங்கேள்வியம்பெருமானர் ஜீயரை நியமித்துத் திருவரங்கம் வந்து, அழகிய வரதரான இராமானுஜஜீயரைப் பெருமான்காரியத்தைச் சீர்திருத்த வானமாமலைக்கு அனுப்பினர். அதுமுதலவர்க்கு வானமாமலை ஜீயர் என்று பெயருண்டாயிற்று. தமக்கு ஆண்டாள் பிரசாதம் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து கொண்டுவந்து தந்த கோவிந்தராசப்பருக்குப் பட்டர்பிரான்தாசர் என்று பெயர் தந்தவர். மதுரை மஹாபலிவாணனுக்கு உபதேசித்து, முத்தரசு எனுங் கிராமம் பெற்று, அதற்கு அழகிய மணவாளபுரம் என்று பெயரிட்டவர். இவர்க்கு வரவரமுனி யெனவும் பெயர். இவர் திருநகரியிலிருந்தபோது இவர் இருந்த மடத்தைச் சிலர் கொளுத்திவிட அதினின்று பாம்புருக்கொண்டு வெளிவந்தனர். இவர் ஒரு நாள் யோகத்திருந்தபோது சடகோபக்கொற்றி இவரை ஆதிசேஷ உருவத்துடன் காண இவர் அவ்வுருவத்தை யாருக்கும் தெரிவிக்கா திருக்கக் கட்டளையிட்டுத் திருப்புல்லாணிக்குப் போய் வருமார்க்கத்தில் தமக்கு நிழல்செய்த புளிய மரத்திற்குப் பரமபதமளித்துச் சில நாளிருந்து, பரமபதத்தில் ஆர்த்தி பிறந்து, ஆர்த்திப் பிரபந்தம் செய்து, தம் முதலிகளாகிய பிள்ளான், நஞ்ஜீயர் வேண்டுகோளின்படி தம்மிடமிருந்த சொம்பைக் கொடுத்து அர்ச்சாவிக்ரஹம் பிரசாதித்துத் திருநாட்டிற்கெழுந்தருளினர். இவரை ஆச்ரயித்த முதலிகள் அழகிய வரதர்கோன் முதலியாரண்ணர், பிரதிவாதி பயங்கரம் அண்ணன், எறும்பி அப்பா, உத்தமநம்பி, அப்பிள்ளை, அப்பிள்ளான், தோழப்பர் முதலியவர். இவர் குமாரர் இராமானுசரையர். இது தென்கலை, வடகலை சம்பிரதாய நூல்களில் இருந்து கலந்தெழுதப்பட்டது. [மஹ்.

மணவாளன் - ஆண்மகன், நாயகன், மண
மணவாளி - புதுமணப்பெண், மாப்பிள்ளை.
மணவியது-மணமுடையது, விவாகமானது.
மணவிற்கோட்டம் - தொண்டை மண்டலத்து இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்று. [செய்ம்முறை.
மணவினை-விவாகச்சடங்கு, கலியாணத்திற்
மணவீசம் - மாதுளை, மணிபீஜம்.
மணஆர்க்கோட்டம் - மணவிற் கோட்டம்.
மணவை - அடுப்பு, காமரம், சுல்வி, கழுகம்.
மணவோலை-விவாகத்திற்கு வரவழைக்கும் பத்திரிகை. [மண்பாடு.
மணற்கால் - மணற்பாங்கான நிலம், இரு
மணற்காளான் - தவளை, மணலிலே முளைக்குங்காளான், மணற்கூகை. [றம்.
மணற்குன்று - மணற்திட்டை, மணற்குன்
மணற்கூகை-தவளை, அரி, மண்கேம். [ன்று.
மணற்கொழிப்பான் - அம்மை வகையிலொ
மணற்கோவை - மணலிற்படரும் கோவை.
மணற்சாரி - மணற்றரை, மணல் நிலம்.
மணற்சுண்ணும்பு - மணல்மிகுந்துள்ள சுண்ணும்புக்கல். [சோறு.
மணற்சோறு - மணலாற் சங்கற்பிக்குஞ்
மணற்பாக்கு - கெடாமலிருக்கு நிமித்தம் மணலிலிட்டுவைக்கும் பாக்கு. [ற்கால்.
மணற்பாங்கு-மண்ணிலம், மணற்றரை, மண்
மணற்புரம் - மணலூர்ப்புரம். [றரம்.
மணற்றரை - மணல்கொண்டநிலம், மணற்
மணற்றவளை - தவளையினொர்பேதம்.
மணற்றூரா-தாராவகையினொன்று. [மேடு.
மணற்றிட்டை - மணற்றிண்ணை, மணல்
மணாட்டி - மணவாட்டி, மனையாட்டி.
மணாட்டுப்பெண்-மருமகள், மருகி. [வன்.
மணாளன் - ஆண்மகன், மணவாளன், கண
மணி - அடிக்குமணி, அழகு, ஆட்டின் கழுகம்பளம், இரண்டரை நாழிகைகொண்ட நேரம், உருத்திராக்கம், எறிமணி, ஓசை, கண்விழி, கருப்பு, சங்கு முதலியவற்றாலாயமணி, தாமரைக்கோட்டை, துளசி,

நவமணிப்பொது, நன்மை, நீர்க்கலசம், நென் முதலியதானியம், பருக்கைக்கல், பறவையின்கழுத்தாரம்,பெண்குறியிலே ருறப்பு, பொன் முதலிய வற்றுளைய மணி, மருந்துக்கல், முத்து, யானைமணி, நீலமணி, மாணிக்கம், சிந்தாமணி, பளிங்கு, கண்மணி, விஷநீக்குங்கல், சந்திரகாந்தக்கல், மணிமாலை, வலையிலேறத்திற் கட்டிய உருண்டைகள், நண்டு, தேள் முதலியவற்றின் கொடுக்குமணி, சூரியன், ஒளி, சிறந்தது, கண்டாமணி, 60 கிமிஷமுள்ள நேரம், ஆண்குறியின் நுனி.

மணிகடம்-உத்தாமணி, வேலிப்பருத்தி.

மணிகட்டுதல் - கதிரில் தானியமணி உண்டாதல், பவழம் முதலிய மாலை கட்டல், கழுத்தில் மணி கட்டல். [யவன்.

மணிகண்டன்-சிவன்,நீலகண்டத்தை யுடை

மணிகர்ணிகை - காசியிலுள்ளவோர் தீர்த்தம், இது காசியில் கங்கையின் ஒரு கட்டம், (தீர்த்தத்துறை) இந்தத்துறையில் மூழ்குவோர் அடையும்பயன் மிகப் பெரிதென்பது லோகப்ரசித்தம்.

மணிகன்றிகை } காசித்தலத்திலோர் தீர்த்
மணிகண்ணிகை } தம், மணிகர்ணிகை.

மணிகாசம் - கண்ணேயுளொன்று, கண்ணேய்வகை.

மணிகாரகன் - ரத்நங்களே வேகடம் செய்வோன் அல்லது சாணே பிடிப்போன்.

மணிகாரம் - வெண்காரம், சீனக்காரம்.

மணிகாணனம் - கழுத்து, கண்டம்.

மணிகிரி-ரத்நகிரி,ஓர்மலை. [ழம்கட்டுவோர்.

மணிகுயிற்றுநர் - முத்துக் கோர்ப்பார்,பவ

மணிகூடம் - ஓர்பர்வதம், இந்திரனது விளையாட்டுச் செய்குன்று. [வகை.

மணிக்கஞ்சட்டி - மணிச்சட்டி, பெரியசட்டி

மணிக்கட்டு - புயத்திற்கீழ், கைத்தலத்திற்கும்,முன்கைக்கும் இடைப்பட்ட பொருத்திடம், மணிபந்தம். [காலவளவு.

மணிக்கணக்கு-கடியாரப்படியுள்ள ஒழுங்கு,

மணிக்கயிறு - கண்டாமணியை இழுத்தடிக்கும் கயிறு, பாசக்கயிறு, முறுக்கு நன்கமைந்து மெல்லிதான கயிறு, மணிக்கோவைக் கயிறு.

மணிக்காடை - சிறுகாடைவகை.

மணிக்காம்பு-தக்காளி வகையிலொன்று.

மணிக்காளி-மணித்தக்காளி. [வகை.

மணிக்காற்பள்ளி - அரசர்க்குரிய சிவிகை

மணிக்கிரீவன்-குபேரன்மக்களிலொருவன்.

மணிக்குடர் - சிறுகுடர், சிறுகுடல்.

மணிக்கூடு } காழிகை வட்டம், மணிகூ
மணிக்கூண்டு } ங்கு மாடம், கடிகாரமமைந்த கோபுரம்.

மணிக்கொச்சம் - மணிக்கயிறு, மணிலாக்கயிறு.

மணிக்கோரை - கோரைவகையிலொன்று.

மணிக்கோவை-மணிமாலை,இரத்தினமாலை.

மணிசகம் - சந்திரகாந்தம், மணிசகம்.

மணிசரம் - மணிக்கோவை, மணிமாலை.

மணிசேகரம் - யமன் அந்தப்புரம்.

மணிசைவபாகம் - இரத்நங்களாற் ரெடுத்த ஆரம்.

மணிச்சட்டி - பெருஞ்சட்டி.

மணிச்சம்பா - சிறுமணியன் நெல்.

மணிச்சுரு - சுருமீன் வகையிலொன்று.

மணிச்சோதி-ரத்நகாந்தி, வாயுதேவன்வில்.

மணிதம் - மணியோசை, மணிநாதம்.

மணிதனு - வானவில். [வொருதீவு.

மணிதீபம் - பாற்கடலின் நடுவேயுள்ள

மணிதிருவிடுதல் - வேகடஞ்செய்தல், இரத்தினங்களைச் சுத்தி செய்தல்.

மணித்தக்காளி - மணத்தக்காளி. [பம்.

மணித்துவீபம-பாற்கடலிலுள்ளவோர் தீவு

மணித்துவீபன் - அனந்தன், வாசுகி.

மணிநா - மணியிலுக்கு, மணிநாக்கு.

மணிநிறம் - கருநீல நிறம், ஆகாய நிறம்.

மணிநீர் - சந்திரகாந்த நீர். [கெண்ணெய்.

மணிநெய் - சிற்றுமணக்கு நெய், விளக்

மணிந்தம் - கைக்குளைச்சு, கைக்குழைச்சு.

மணிபத்திரன்-ஓர்சைனபோதகன்.

மணிபத்மம் - புத்தபாதம்,இரத்தினங்களின் மலர்ச்சி.

மணிபந்தம் - மணிக்கட்டு, மணிபந்து.

மணிபர்வதம் - ஓர் பர்வதம், மணிகூடம்.

மணிபல்லவம் - ஒரு தீவு.

மணிபிடிச்சாவி-முற்றுதுகெட்ட பயிர்.

மணிபிடித்தல் - தானிய மணிபிடித்தல்.

மணிபீஜம்-மாதுளை,மாதுளங்கம்,மாதுளம்.

மணிபுரம்-கலிங்கதேசத்துள்ள வொரு பட்டணம். [புட்பகம், மணிபுஷ்பம்.

மணிபுஷ்பகம் - சகாதேவனது சங்கு, மணி

மணிபூமி-இரத்தினம் விளைநிலம்.

மணிபூரகம் - ஆறுதாரத்தொன்று; அது நாபித்தானம்.

மணிபூரம்-இரைக்குடர், நாபி,மணி பூரகம்.

மணிப்பவம்-இருபது,விம்ஸதி. [சோன்றல்.

மணிப்பிடிப்பு - நெற்கதிரில தானிய மணி

மணிப்பிரவாளம் - வடமொழியுந் தென்

மொழியும் கலந்துவரும் நடை. [புங்கு.
மணிப்புங்கம் - நெய்க்கொட்டான், மணிப்
மணிப்புளகு - நெய்க்கொட்டான்.
மணிப்புறு-சிறுபுறு, காட்டுப்புறு. [கம்.
மணிப்புன்கு - பொன்னுங்காய், மணிப்புங்
மணிப்பரபை - நைருதியின் மனைவி.
மணிமகுடம்-வட்டின் புறங்காப்போலையின் முடிச்சு, வட்டுச்சுவடியைக் கட்டும் கயிற்று முடிச்சு, இரத்தினக் கிரீடம்.
மணிமங்கலம்-செங்கற்பட்டைச்சேர்ந்தவூர்.
மணிமண்டபம் - ரத்நமண்டபம். [நகர்.
மணிமதி-வில்வலன்வாதாவி என்போரிருந்த
மணிமந்தம் - இந்துப்பு. [வொரு யக்ஷன்.
மணிமந்தன் - குபேரனுக்குத் தோழனாகிய
மணிமந்திரௌஷதம் - விஷம் முதலியன நீக்கும் மணி, மந்திரம், மருந்து என்னும் மூன்றுவகையான பரிகாரங்கள்.
மணிமயில் - நீலமயில்.
மணிமலை - பொன்மலை, மேருமலை.
மணிமாலை-இலக்குமி, ஓர்பிரபந்தம்; அஃது: எப்பொருண்மேலும் வெண்பா விருபதும், கலித்துறை நாற்பதும், விரவிவரச் செய்வது, கழுத்தணிமாலை, காதலியின் உடலில் காதலனுற் செய்யப்பட்ட பற்குறி, நந்தரேகை, பிரபை, முத்துவடம்.
மணிமாளிகை - மணிமண்டபம்.
மணிமான் - சூரியன், ஆதவன், தினகரன்.
மணிமுசுட்டை - பேய்முசுட்டை.
மணிமேகலாதெய்வம் - மணிமேகலை.
மணிமேகலை - ஒரு பெண்தெய்வத்திற்கும், கோவலனுக்கும் மாதவியிடத்துப் பிறந்த மகளுக்கும், ஒரு தமிழ்க்காவியத்திற்கும் பெயர், இந்தத் தமிழ்க்காவியம் கோவலன் காமக்கிழத்தியாகிய மாதவியின் மகளாகிய மணிமேகலை யென்பவளுடைய சரிதத்தைக் கூறுதலால் இந்தப் பெயர் பெற்றது. இது கூலவாணிகன் சாத்தனாரால் செய்யப்பட்டது. இதுசொற்சுவை, பொருட்சுவை முதலியவற்றால் மிகச் சிறந்ததென்பது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த திருவெங்கைக் கோவையிலுள்ள "மந்தாகினியணி வேணிப்பிரான் வெங்கை மன்னவ நீ, கொந்தார் குழன் மணிமேகலை தானுட்பங் கொள்வதெங்ஙன், சிந்தாமணியுந் திருக்கோவையு மெழுதிக்கொளினும், நந்தாவுரையை யெழுதலெவ்வாறவின்றருளே." என்னுஞ் செய்யுளாலினிது விளங்கும். இந்த நூல் பௌத்த மதச் சார்புள்ளது. பஞ்சகாவியத்தொன்று, இடையில் அணியும் ஆபரண வகை.
மணியகாரன்-கோயில், கிராமம் முதலியவற்றின் விசாரணைக்காரன், மணியக்காரன்.
மணியச்சட்டம் - அதிகாரம், மேற்பார்வை.
மணியம் - மணியகாரன், வேலை.
மணியாசம் - துலுக்கம், மணியாசப்பலகை.
மணியாசி - ஓர்மரம், மணியாசுப்பலகை.
மணியாசிக்கட்டை - சாந்தமுத்தும்பலகை.
மணியாசிப்பலகை - பாசறை, கூடாரம்.
மணியாட்சி-திருநெல்வேலியிலுள்ள ஓரூர்.
மணியாட்டி - பூசாரி, குருக்கள். [பாளி.
மணியாமணக்கு - பறங்கியாமணக்கு, பப்
மணியிலையான் - ஓரிலையான், ஈவகை.
மணியீரல் - குடலின் ஒரு பகுதி.
மணியுப்பு - கறியுப்பு, கடலுமுதம்.
மணியுயிர் - வீடுபெற்ற உயிர்.
மணியூதுதல் - மணிதிரட்டுதல். [உலோபி.
மணியெண்ணி - நென்மணி எண்ணுபவன்,
மணிரங்கு - இரத்தினங்களின் நிறம்.
மணிராக்கம் - இங்குலிகம், சாதிலிங்கம்.
மணிலாக்கயிறு-பேயன்வாழை நார்க்கயிறு.
மணிலாக்கிச்சிலி - கஸ்தூரி எலுமிச்சை.
மணிலாக்கொட்டை - நிலக்கடலை.
மணிலாச்சுருட்டு-ஒருவகைப் புகைச்சுருட்டு.
மணிலாயாத்தா - ராமசீத்தாச்செடி.
மணிலிங்கம் - புதன், கணக்கன், மதிமகன்.
மணிவடம் - அக்கமாலை, இரத்தினமாலை, பாதசாலம், முத்துமாலை, வீரக்கழல்.
மணிவட்டம் - வீரக்கழல், சிலம்பு, சேகண்டி.
மணிவண்ணன் - காவிரிபூம் பட்டினத்திற்கு மேற்கே கோயில்கொண்டிருக்கும் திருமால் பெயர்.
மணிவலை - ஓர்வலை, சிறு விசிறிவலை.
மணிவீசம் - மாதுளை. [விழுந்திருக்கும்வேர்.
மணிவேர் - மணிபோலிடையிடை திரட்சி
மணீசகம் - சந்திரகாந்தம், சந்திரகாந்தக்கல்.
மணீதரன் - ஓர் யட்சன்.
மணீவகம் - பூவகையினொன்று.
மணுகுப்பூ - பணியாரவகையி னொன்று.
மணை - தருவலகு, மணி முதலியமுட்டு, பாதபடி, மழுங்கல், பலகை, வதுவைத்திண்ணை, மழுங்கலாயுதம், உறுப்பின்றிப் பிறக்கும் ஊன்றடி, காய், அழிகரு.
மணையது - மழுங்கலாயுதம். [கலாயுதம்.
மணையன்-புத்திகூர்மையில்லாதவன், மழுங்
மண் - அணு, ஒப்பனை, கழுவுதல், சுட்ட சாந்து, துகள், நிகம், பூமி, மண்ணெண்

னேவல், மலை, மாட்சிமை, முழவின் மார்ச்சனை, அலங்காரம், பிருதிவிபூதம், புழுதி, திருமண், தரை, மனை, வயல், ஸ்நாநநீர்.

மண்கட்டி - மண்ணுங்கட்டி, மண்பத்தை.

மண்கட்டுதல் - உலோகங்களை உருக்குதற் காகக் கருக்கட்டுதல், புற்றுக்கட்டுதல்.

மண்கட்டை-உடம்பு, வாணக்குழலின் களி மண்ணடைப்பு. [வகை, முழவுப்பொது.

மண்கனை - வாச்சியப்பொது, குடமுழவு

மண்கனைமுழவம்-குடமுழா, பெருந்தாரை.

மண்கண்டம் - மண்பார், மண்கரை.

மண்கலம்-ஓடு,மட்பாண்டம், மட்பாத்திரம்.

மண்கல் - செங்கல், வெண்சுக்கான்கல்

மண்கவரை - சேலம் ஜில்லாவில் மண்ணி லிருந்து உப்புக்காய்ச்சும் ஒட்டார் வகை யார்.

மண்காரம் - ஒருவகைச் சவுக்காரமண்.

மண்கிணறு-கற்பாரற்றகிணறு, மணற்பாங் கில் தோண்டப்பட்ட கிணறு.

மண்கிண்டுதல் - மண்வேலை செய்தல்.

மண்குகை - நிலவறை, மண்ணுற் செய்த குகை, குளவிக்கூடு, மண்மூசை.

மண்குத்துநோய்-பிரசவத்தின்பின் பெண்க ளுக்கு உண்டாம் நோவு.

மண்குப்பம் } மண்மேடு, மண்மூடு, மண்
மண்குப்பி } மேலிடை. [தல்.

மண்குளித்தல் - புழுதியாகுதல், புழுதியளை

மண்கூட்டாளன் - குயவன்,குலாலன்.

மண்கொட்டு - மண்வெட்டி. [ரம்.

மண்கொத்தளம் - மண்ணுற்செய்த கோபு

மண்கொழுத்தல் - மண்மதத்தல்.

மண்கோபுரக்கல் - செங்கல், சுடுகல்.[கலம்.

மண்சாடி - மட்சாடி, மட்பாண்டம், மட்

மண்சாந்து - குழைத்தசேறு, மட்சாந்து.

மண்சிலை - கற்காவி, காவிக்கல்.

மண்சிவப்பு-இருண்டசிவப்பு, கருஞ்சிவப்பு.

மண்சீலை - குடையைச் சுற்றும்படி மண் டோய்த்தசீலை, மருந்துபடுமிடக் கலத் தின்மேற் சுற்றும் மண்ணூட்டிய துணி.

மண்சுதை - சுண்ணச்சாந்து, வெண்சுதை.

மண்செய்கை - மண்வேலை. [காரகன்.

மண்சேய் - பூமியின்மகன், செவ்வாய், அங்

மண்சோறுகறி - சிறுபிள்ளைகள் மண்ணுற் சங்கற்பிக்குஞ் சோறுகறி.

மண்டகப்படி - சுவாமி வீதிவலம் வருகை யில் ஆங்காங்குச் செய்யும் விசேஷ ஆரா தனை, மண்டகத்தின்படி, கேலிசெய்தல், அடித்தல்.

மண்டகம் - ஓர் சிற்றுண்டி, சர்க்கரை போடாத பூரி, மண்டபம்.

மண்டகாரகன் - சாராயம் வடிப்போன்.

மண்டக்கம் - மண்டக்கு, மண்டக்குக்கயிறு.

மண்டக்கன் - மண்டக்குப்பிடிப்போன்.

மண்டக்காள் - மண்டக்கன், முத்துக்குளிப் பவனைக் கயிறுகொண்டு மேலிழுப்பவன்.

மண்டக்கிழுத்தல் - மண்டக்குக்கயிற்றை யிழுத்தல். [குக் கயிறு, மண்டக்கம்.

மண்டக்கு - முத்துக்குளிப்பவர்களை யிழுக்

மண்டக்குக்கயிறு-மண்டக்கன்கையிற்கயிறு.

மண்டக்குக்காரன் - மண்டக்காள்.

மண்டங்கள்ளி - கள்ளிவகையினொன்று.

மண்டநம் - அலங்காரம்,ஆபரணம்,அப்பம்.

மண்டபப்படி - அலங்காரப்படைப்பு,மண்ட கப்படி.

மண்டபம் - மாடம், இனைப்பாறும்வீடு,திரு நாளில் சுவாமி தங்குவதற்காகக் கட்டப் பட்ட கற்கட்டடம், சாவடி.

மண்டபவெழினி - கூடாரம். [சண்டை.

மண்டமர் - மிக்குச்செல்லும் போர், கடுஞ்

மண்டம் -அலங்காரம்,ஆமணக்கு, தயிரோடு, தலை, மண்டை, அலங்கிருதம். [கிருதி.

மண்டயந்தம்.- அலங்காரம், சோறு, அலங்

மண்டயிலம் - மண்ணிலுருண்டையிலம். மண் ணில் வடிக்குந்தையிலம், மண்ணெண்

மண்டர்-படைவீரர், சேனைவிரர். [ணெய்.

மண்டலகம்-சூரியன்வட்டாகாரம், பளிங்கு.

மண்டலசெயம்-திக்குவிசயம், திக்காதி, எங் கும் செல்லும் செல்வாக்கு.

மண்டலநிருத்தம் - சுற்றியாடு நிருத்தம்.

மண்டலநிலை - இருகாலும் பக்கல் வளைய மண்டலித்து நிற்றல், வட்டநிலை.

மண்டலபுருடன் - தொண்டைநாட்டிலே வீரையென்னுமூரிலே 16 - ஆம் நூற் றாண்டி லிருந்த ஆருகதராகிய வொரு தமிழ்ப்புலவர், இவர் சூடாமணிநிகண்டு செய்தவர், குன்றையூரிலிருந்த குண பத்திரர் மாணாக்கர், கிருஷ்ணராய அரசன் காலத்தவர், மண்டலபுருஷன்.

மண்டலபூசை - மண்டலாபிஷேகம்.

மண்டலமட்டி-சிற்றிலுப்பை,மண்டலாட்டி.

மண்டலமழை-எங்கும்பொழியுமழை,பரந்து பெய்யும் மழை.

மண்டலமாக்கள் - அரசர்,மண்டிலமாக்கள்.

மண்டலமிடல் } மண்டலம்வகுத்தல், மண்
மண்டலமிடுதல் } டலித்தல், வட்டமிடல், பரிவேடங்கொள்ளுதல்.

மண்டலம் - இயந்திரம், இருகாலும் பக்கம்

வனைய நிற்குநிலை, உண்டை, குவியல், சூரியமண்டல முதலியன, தேயம், நகக் குறி, நாடு, பூமி, வட்டம், சக்கரம்போன்ற வனைப்பு, கூட்டம், பிரதிவிம்பம், பிரதேசம், பாம்பு முதலியவற்றின் சுற்று வட்டவடிவமான வியூகவகை, நாட்டின் பெரும்பகுதி, ஊர், 40, 41 அல்லது 45, 48 நாள்கொண்ட கால அளவு, பரிவேடம், நூற்றெட்டுபிண்டதங்களுள் ஒன்று, குதிரைக்கதி, வட்டக்குடை, பாதகதி.

மண்டலம்போடுதல்-மண்டலமிடுதல், பாம்பு முதலியன வட்டமாகச் சுற்றியிருத்தல், சுற்றிச்சுற்றி வட்டமிடுதல்.

மண்டலம்வகுத்தல்-நவக்கிரகமண்டல மிரேகித்தல்.

மண்டலவந்தாதி-ஈற்றடியிறுதியும், முதலடி முதலுமொன்றுக வருவது.

மண்டலவிதி-சக்காங்கீறுவதற்கான வோர் விதி.

மண்டலாகாரம் - வட்டாகாரம், வட்டமாய்.

மண்டலாக்கிரம் - வாள், பட்டயம், கட்கம்.

மண்டலாட்டி-சிற்றிலுப்பை, மண்டலமட்டி.

மண்டலாதிபதி
மண்டலாதிபன் } ஏகசக்ராதிபதி, சக்கிரதரன்.

மண்டலாதீசன் - அரசன், மண்டலாதிபதி.

மண்டலாத்தம்-அரைவட்டம், பாதிச்சக்கரம்

மண்டலாபிடேகம்
மண்டலாபிஷேகம் } கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 40, 41, 45 வரை நடத்தப்பெறும் நித்தியத்திருமஞ்சனம், மண்டலபூசை.

மண்டலாயிதம்-உருண்டை, கோளம். [டம்.

மண்டலார்த்தம்-அர்த்தகோளம், பாதி விட்

மண்டலி - ஓரொலி, கூட்டம், நாய், பாம்பு, பூமி, பூனை, மண்டலி யென்னேவல், காட்டுப்பூனை, மண், சீத-ரத்த-சுரமண்டலி.

மண்டலிகன் - இருபதுயோசனை விஸ்தாரமான தேசத்தை யாள்வோன்.

மண்டலிசிதம் - கடுகு, தேன், வியர்வை.

மண்டலித்தல் - வட்டமிடுதல், மண்டலம்போடுதல், வளைத்தல், குனித்தல்.

மண்டலிப்பு - வட்டமிடுதல், வட்டம், வலயம்.

மண்டலியாழ் - பெரும்பண்களுள் ஒன்று.

மண்டலீகரணம் - உருட்டல். [னர்.

மண்டலீகர் - அவ்வத்தேசத்தைபாளு மன்

மண்டலீசன் - அரசன், மண்டலிசன்.

மண்டலேசுவரர் - திருவாரூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

மண்டலேசன்
மண்டலேசுரன்
மண்டலேசுவரன்
மண்டலேச்சுவரன் } அரசன், உலகாதிபதி, மண்டலாதிபதி, கிரீடாதிபதி.

மண்டல் - நெருங்கல், மண்டுதல், மிகுதல், சுவாலித்தல், மேற்செல்லல்.

மண்டவம் - சுங்கச்சாவடி, ஆயத்துறை, தீர்வைச்சாவடி.

மண்டா - இரட்டைக்கருவீட்டி, பன்றி முதலியவற்றைக் குத்த உதவும் ஈட்டி வகை.

மண்டி-இருகான் முடக்கி நிற்குநிலை, கலங்கனீர், வண்டல், களஞ்சியம், கன்முதலியவற்றினடையல், பண்டசாலை.

மண்டிகை - அப்பவருக்கம், இன்பண்டம்.

மண்டிதம் - சிறுசோளை, அலங்காரம்.

மண்டிதன் - அலங்கரிக்கப்பட்டவன், புத்தஞானிபன், புத்தமதாசாரியன்.

மண்டிபோடுதல்
மண்டியிடுதல் } இருகான் முடக்கி நிற்றல், முழங்கால் முட்டி மேல் நிற்றல், வணங்கற் குறிப்பு.

மண்டிரவல்-கைம்மாற்றாய் வாங்கியது, இரவல் நகையை அடகு வைத்தல். [பன்.

மண்டிலக்கடவுள் - சந்திரன், மண்டலாதி

மண்டிலநிலை - தேரிக் கூத்தின் வகை.

மண்டிலம் - குதிரை, நடனம், நாடு, போர், வட்டமாயோடல், வட்டம், பூமி, சூரியன், சந்திரன், ஆகாயம், கண்ணுடி, மண்டிலநிலை, மண்டலம். [பெரு வியாபாரம்.

மண்டிவியாபாரம் - மொத்த வியாபாரம்,

மண்டு - மண்டல், செறிவு, மிகுதி, மூடன்.

மண்டுகம் - தவளை, தேரை, நுணல்.

மண்டுகால் - முட்டுக்கால், முட்டுமரம்.

மண்டுதல் - நெருங்கல், மிகக்குடித்தல், மிகச் சுவாலித்தல், அதிகமாதல், நிரம்ப உண்ணுதல், கவர்தல், தாங்குதல், மண்டல், விரும்புதல், குடித்தல், இளர்தல்.

மண்டுகேவன்-தவளைக்கல், சீச்சுக்கிட்டம்.

மண்டுகபன்னி - அழிஞ்சில், ஓர் செடி.

மண்டுகம் - சீச்சுக்கிட்டம், தவளை.

மண்டுகாராகம் - இராகவகையிலொன்று.

மண்டுகர் - ஓரிருடி, மாண்டுக்கியர்,

மண்டுகி - பெண்தவளை. [பாத்தை.

மண்டுகை-வேசி, விலைமாது, பொதுமகள்,

மண்டுகை - மட்கலசம், மண்பானை.

மண்டுகேசிந்தூரம் - இருப்புச் சிட்டத்தாற் செய்த செந்நிறப்பஸ்மம்.

மண்டுரம் - சீச்சுக்கிட்டம், இருப்புக்கறள்.

மண்டெரி - பெருந்தீ, காடாக்கினி.

மண்டை-இரப்போர்கலம், தலையோடு, தலை,

தென்னை முதலிய வற்றின் தலைப்பக்கம், கலம், ஓரளவை, வேசை, மொந்தை, சட்டி.

மண்டைக்கண்-தாழ்ந்தகண், குழிந்த கண்.

மண்டைக்கருப்பன் / மண்டைக்காப்பன் / மண்டைக்காப்பான் } ஓர் நோய், குலையில் வரும்காப்பா னோய் வகை, ஒரு கிராம தேவதை.

மண்டைக்கருவம் - மிகுசெருக்கு, கர்வம்.

மண்டைக்குடைச்சல் - தலைக்குத்து, மண்டைக்குத்து. [வகை.

மண்டைக்குத்தல் - தலைநோவு, தலைநோவு

மண்டைக்கொழுப்பு - மண்டைக்கருவம்.

மண்டைக்கோழை - ஓர்கோழை நோய், சளி அதிகமாகும் தலைநோய்வகை.

மண்டைச்சூலை - தலை நோய்வகை.

மண்டைப்பாணர்-உண்கலமேந்தி இரக்கும் பாணர்வகையார். [வகை.

மண்டைப்பீனசம் - ஓர்நோய், பீனசநோய்

மண்டைப்புழு - மண்டைப்பூச்சி, தலைப்புழு, மண்டைக்கருவம்.

மண்டை மலர்த்தல் - மண்டை நிமிர்த்தல், பிச்சையிடல், உணவளித்தல்.

மண்டையிடி - தலைவலி, பீனசவலி.

மண்டையோடு - தலையோடு, கபாலம்.

மண்டைவலி / மண்டைவியாதி } தலைவலி, மண்டைச்சூலை, தலைநோய்.

மண்டோதகம் - கோலமிடுதல், அலங்கரித்தல்.

மண்டோதரி - பஞ்ச கன்னியருளொருத்தி யாகிய இராவணன் மனைவி.

மண்ணகம்-பூமியிடம், மதிதலம், குவலயம்.

மண்ணகுண்டம் - மண்ணுன் மேடை செய்திருக்கு மட்டாலை, மண்திண்ணை.

மண்ணடித்தல் - மண்கொட்டுதல், மண்மேடிடுதல், சீர்கெடுத்தல், மண்பூசுதல்.

மண்ணம் - சுண்ணும்பு, நீற்றிய சுண்ணும்பு.

மண்ணரசு - பூவரசமரம், பூப்பொரசு.

மண்ணரிநார் - குயக்கலம்வனைந்தரிகயிறு.

மண்ணரியான் / மண்ணரிவான் } குயவன், சக்கிரி, வேளான்.

மண்ணரைத்தல்-சோம்பி வீணுறங்குதல்.

மண்ணல் - மண்ணுதல், அலங்கரித்தல்.

மண்ணவர் - மனிதர். [மை நோய்வகை.

மண்ணன் - மதிகேடன், மந்தன், சின்னம்

மண்ணு - மீன்வகை. [மக்கன்.

மண்ணுங்கட்டி-மண்கட்டி, மண்ணுங்கட்டி,

மண்ணுசை - ஆசைமூன்றினொன்று. [யார்.

மண்ணுடி - மலைநாடுகளில் கிராமத் தலைமை

மண்ணுந்தை - அறிவிலி, மக்கன், மூடன்.

மண்ணுய்ப்போவான் / மண்ணுவான் } ஓர் வகைமொழி.

மண்ணுளி - அரசன், பூபதி, வேந்தன்.

மண்ணுள்வோன் - அரசன், மண்ணுளி.

மண்ணி - மந்தன், நன்னீர் மீன்வகை, சோணாட்டுள்ளதோர் நதி, நீராடி, செய்து, அலங்கரித்து. [னது.

மண்ணியற்று - மண்பாத்திரம், மண்ணுலா

மண்ணிலம் - பூமி, படி, அவனி, ஞாலம்.

மண்ணில்வேந்தன்-அரசமரம், மூடிதும்பை, வெற்றிலை, மண்ணிலவேந்தன்.

மண்ணிஞ்ஞம் / மண்ணிஞ்ஞனம் } உவர்மண், சவட்டு மண். [ராய்ச்சி.

மண்ணின்பிரட்டு - பேராசனை, பெரிய ஆ

மண்ணின்வந்தனம்-இராசவத்தனக்கல்.

மண்ணீடு - திண்ணை, மாடம், மூடுசார் திட்டவீடு, வேயாமாடம், மாடப்புரை, சுலதையாற் செய்த பாவை வடிவம், மண்ணிடுதல்.

மண்ணீட்டானர் - குயவர், சிற்பாசாரியர், சுலதையாற் பாவை முதலியனசெய்வோர்.

மண்ணீரல் - மண்ணீரவீரல், பீலிகம்.

மண்ணீர் - கழுவுநீர், கழுவஉதவும் நீர்.

மண்ணீர்மை - பிரபஞ்ச வியல்பு.

மண்ணுக்குடையான்-பூமிக்குரியவன், விஷ்ணு. [நன்றி கெட்டவனுக்கு உதவல்.

மண்ணுக்குப்போடுதல்- கடுஞ்சிறையிடுதல்.

மண்ணுடையான் - அரசன், குயவன்.

மண்ணுணி - மண்ணுளிப்பாம்பு, மந்தன், திருமால், ஒன்றுக்கு முதவாதவன்.

மண்ணுண்ணுதல் - மண்ணைப் புசித்தல், தோற்றுவிழுதல்.

மண்ணுதல் - அலங்கரித்தல், கழுவல், நீராடுதல், மூழ்குதல், செய்தல், பூசுதல், கடைதல், பண்ணுதல், ஒப்பமிடுதல்.

மண்ணுப்பு - உப்புவகை, சவட்டுப்பு. [ல்.

மண்ணுப்பெய்தல்-நீராட்டல், குளிப்பாட்ட

மண்ணுருவி - குழித்தலம், மருந்துவகை.

மண்ணுலகு - பூமி, மதிதலம். [யன்.

மண்ணுளி - மண்ணுளிப்பாம்பு, மண்ணுளி

மண்ணுளிக்காரம் - அரிதாரம்.

மண்ணுறுத்தல்-அலங்கரித்தல், நீராட்டல், கழுவுதல், மஞ்சன மாட்டுதல், பண்ணுதல்.

மண்ணெடுத்தல் - குழியினின்று மண்ணை நீக்குதல், வயலை வெட்டித்திருத்துதல்.

மண்ணை - அறிவிலான், இளமை, பசாசு, வாலுளுவை, அறிவிலி, கொடிவகை.

மண்ணைத்தனம் - அறியாமை, பேதைமை.

மண்ணைமணைத்தல் - காரசாரமற்றிருத்தல்.
மண்ணையன் - மதிகேடன், அறிவிலி.
மண்ணெட்டர்-மண்சுமப்போர், மண்வேலை செய்வோர்.
மண்ணேரம் - பக்ஷபாதம், ஓரவஞ்சனை, நியாயவழு.
மண்ணேர் - மனிதர், பூதலத்தோர்.
மண்தாங்கிப்பலகை - கதவு நிலைக்குமேலுள்ள சுவரைத்தாங்கும் பலகை.
மண்ணைதலம் - மண்ணெண்ணெய்.
மண்தோண்டி - மண்குடம், மண்வெட்டி, மண்தோண்டும் யந்திரம். [பவளம்.
மண்பவளம் - மண்ணுற்செய்த போலிப்
மண்பாச்சி - மண்ணீரல், ஈரல்வகை.
மண்பாண்டம் } மட்கலம், மட்பாண்டம்.
மண்பாத்திரம் }
மண்பார்-மண்கண்டம், மண்கரை. [பசை.
மண்பிடி - மட்பசை, களிமண்ணிலுள்ள
மண்புரை - மண்பொதிந்த வீடு.
மண்புளித்தல்- மண்குழைந்து நல்ல சாந்தாதல்,பூமி மழையால் இளகி மெதுவாதல்.
மண்பொதுத்தந்தை-பிரமன், நான்முகன்.
மண்போடுதல் - கேடுசெய்தல், வைது மண்ணைத் தூற்றுதல், கெடுத்தல்.
மண்மகள் - பூமிதேவி, பார்வதி, சீதை.
மண்மகள்புதல்வர் - வேளாளர், நாகர்.
மண்மக்கள் - சூத்திரர், வேளாளர்.
மண்மலி - மருக்கொழுந்து, தமனகம்.
மண்மழை } புழுதிமழை, மண்ணுகப் பெய்
மண்மாரி } யும் மழை.
மண்முகன் - தவளமலையிலிருந்து தவம் செய்த ஒரு முனிவன், இவன் வயிற்றில் புண்ணிய ராஜன் பிறந்தான்.
மண்மூசை - மருந்துசெய்யவும், உலோக மூருக்கவும் உதவும் மண்ணாலான குகை.
மண்மேடு - மண்ணாலானகுன்று. [மழை.
மண்வருஷம்-மண்மாரி, மண்ணுகப் பெய்யு
மண்விளக்கு - பூமிமாதிலகம், பூமிக்கு விளக்கு.
மண்வினைமாக்கள் - குயவர், வேளாளர்.
மண்வெட்டி - மண்வெட்டுமாயுதம்.
மத - மதங்கொள்ளுதல், கொழுத்தல், காமமிகுதல், களித்தல், செருக்குதல், மயங்குதல், வலிமை, அழகு, மிகுதி, மடமை.
மதகத்தை-மஸ்துள்ளது, புஷ்டி தருவது.
மதகமண்டம் - கொழுகடா, கொழுத்த ஆடு.
மதகம் - யானைமதத்தகம், சுக்கு, சுண்டி.
மதகயம் } ஆண்யானை, மத்தகஜம், குஞ்ச
மதகரி } ரம், மாதங்கம்.
மதகரிக்கணை - யானைத்திப்பிலி.
மதகிரி - யானை.
மதகு - சலதாரை, குளம் முதலியவற்றின் நீர்பாயும் மடைவகை.
மதகுஞ்சரம் - மதயானை, மதவேழம்.
மதகுபலகை - நீர்தாங்கு பலகை.
மதக்கம்-மயக்கம், வதக்கம், ஆயாசம்.
மதக்களி-மதவெறி, மதக்களிறு, மதயானை.
மதங்கஜம் - யானை, குஞ்சரம், மதகளிறு.
மதங்கநாதன் - கவராத சித்தரிலொருவன்.
மதங்கபுரம் - கயமுகாசுரன் பட்டணம்.
மதங்கமம் - யானை, மதகளிறு, மதகயம்.
மதங்கம் - கலம்பகவுறுப்புப் பதினெட்டிலொன்று, முகில், மத்தளம், யானை.
மதங்கர் - மதங்கருஷி, இவர் வசித்து வந்த மதங்கமலையில்,வாலி துந்துபி என்பவனைக் கொன்று, அவன் உடலை மலையில் எறிந்ததால், அவ்வாலி அம்மலையில் அடிவைத்தால் அவன் தலை வெடித்துப்போகச் சபித்தவர்.
மதங்கலை - ஓர் மலை, மதங்கருஷிமலை.
மதங்கன் - ஓர் முனி, சண்டாளன், முருகன், (1) ஒரு பார்ப்பனப் பெண்வயிற்றிலே ஓரிழிகுலத்தானுக்குப் பிறந்த புத்திரன். இவன் பார்ப்பானதற்கு முயன்றும் வாய்க்காது இந்திரனைப் பூசித்துச் சண்டதேவனென்னும் பட்டப்பெயர் பெற்றிருந்தவன் (2) ஓரிருடி, இவர் தபோசக்தியிலே பராசக்தி தன் புத்திரியாக அவதரிக்கப் பெற்றவர். அது காரணமாகப் பார்வதிதேவிக்கு மாதங்கி யென்னும் பெயர் வாய்த்தது. (3) துந்துபிக்கும் பெயர், பாணன், பெரும்பாணன்.
மதங்காச்சிரமம்-மதங்கமுனியின்தவச்சாலை, இராம இலக்குமணர்கள் கவந்தனைக்கொன்றபிறகு,இவ்வாச்சிரமத்தில் தங்கினர்.
மதங்கி - காளி, பதினெறு வயதுப்பெண், பாடுவான், பார்வதி, பாடன் மகளே, பாண்மகள்,ஆடல்பாடல் வல்லவள்.
மதங்கை-அத்தி, துதிகரம், வேழம், களிறு.
மதசலம் - மதநீர், கரடம், தானம். [னம்.
மதசாதம் - அன்னப்பறவை, ஓதிமம், எதி
மதசாரணை - தண்ணீர் விட்டான்.
மதசாரம்-இலவு, மதநீர், கரடம், கொடியுறு.
மதசைலம் - யானை, மதகஜம். [ணதழும்பு.
மதச்சுவடு-யானையின் மதநீர் வடிந்துண்டா
மதஸ்தலம் - மதுக்கடை, கள்ளுக்கடை.
மதண்டி - வல்லாரை. [குதல், வெறித்தல்.
மதத்தல் - கொழுத்தல், செருக்குதல், மயங்

மதஸ்தன் } சமயவாதி, மதக்காரன், சமயா
மதத்தன் } சாரி, மதங்கொண்டவன்.
மதத்தானம் - மதஸ்தலம், கோயில், கோவில்.
மதநகோபாலன்-ஸ்ரீகிருஷ்ணன், கண்ணன்
மதநசரம் - மன்மதபாணம், புட்பபாணம்.
மதநம் - கடைதல், விருப்பம், போகம்.
மதநலீலை - கலவி, புணர்ச்சி, சம்போகம்.
மதநன் - மன்மதன், அநங்கன், உருவிலி.
மதநாகமம் } கொக்கோகம், ஓர்காமநூல்.
மதனுகமம் }
மதநிகை - சூடாலேயைக் காண்க.
மதநிலை - மல்லிகைக்கொடி, புருண்டி.
மதநீர் - மதசலம், வீரியம், மதசாரம்.
மதபன்னி } மதரபன்னி, வட்டத் திரு
மதபாணி } ப்பி. [சமயம.
மதபேதம் - கொள்கை வேறுபாடு, புறச்
மதபேதி - சமயபேதி, புறச்சமயி. [சித்தல்.
மதப்பிரயோகம் - மதம்பொழிதல், மதநீர்
மதப்பு-கொழுப்பு, செருக்கு, மயக்கு, களிப்பு, காமாதுரம், வெறிகொள்ளுகை, நில முதலியவற்றின் செழிப்பு.
மதப்பூ - மாரட்டிமொக்கு.
மதப்பொருப்பு - யானை, மதகரி, புண்டரம்.
மதமடு-வெள்வெவ்காயம், வெள்ளைப்பூண்டு.
மதமதக்கச்சால் } முதுமக்கட்டாழி, மத
மதமதக்கத்தாழி } மத்தன் தாழி.
மதமதப்பு-மிகுமதப்பு, உணர்ச்சியின் திமிர்.
மதமத்தன்தாழி - முதுமக்கட்டாழி.
மதமதெனல் - சரடுக்கெனல்க் குறிப்பு, சுர ணை குன்றல், மதமுறல்.
மதமத்தகம் - கஞ்சா, சஞ்சம், குல்லை.
மதமத்தம் - மதமத்தை, பொன்னுமத்தை.
மதமத்தன - மதத்தினால் மயங்கினவன்.
மதமத்தை - பொன்னுமத்தை, மதமத்தம்.
மதமமூகம் - காரை, ஓர் சிறு செடி.
மதமராளம் - மதர்த்த அண்ணப்பறவை.
மதமலை } யானை, களிறு, மதகரி, வேழம்,
மதமா } துதிகரம்.
மதமெடுத்தல் - மதத்தல், மதமடக்குதல்.
மதமொய் - மதயானை, மதகஜம்.
மதம்-அறிவு, கருத்து, கன்மதம், கொழுப்பு, சந்தோஷம், சமயம், சம்மதம், செருக்கு; அஃது: உட்பகையாறினுள் ஒன்று, தாது, ரோவிச்சட்டம், நோக்கம், பெருமை, பைத்தியம், போதனை, மதாளிப்பு, மஸ்துன்னது, மாயையால்கைப்பதினெண் குற்றத்துளொன்று, யானைமதம், வலி, விகாரமெட்டினுளொன்று, விருப்பம், வெறி, கொள்கை, பெற்றதைப் பெரிதாக மதிப்பது, மகிழ்ச்சி, சாரம், தேன், காமவிகாரத்தின் மிகுதி, நிலவளம், மதுக்களிப்பு, கஸ்தூரி, கதிர்ப்பு, அனந்தர். [று, காடம்.
மதம்பாய்சுவடு - மதநீர்பாயுஞ்சுவடு, கொடி
மதயந்தி } ஓர்மல்லிகை, கஞ்சா, மித்தி
மதயந்திகை } ரசகன் மனைவி, கல்மரவ
பாதன் காண்க. [ப்பி.
மதரபன்னி - வட்டத்திருப்பி, புட்குத்திரு
மதராகன் - சேதல், மன்மதன்.
மதர் - ஆச்சல், களிப்பு, செருக்கு, மதரென் னேவல், மிகுதி, மகிழ்ச்சி, பாய்ச்சல், வீரம், மதசலம். [கொழுத்தல்,
மதர்த்தல்-களித்தல், செழித்தல், மிகுதல்,
மதர்ப்பு } அழகு, ஆசைப்பெருக்கம், இடம்,
மதர்வு } பெருக்கம், பூமி, இறுமாப்பு, செழிப்பு, மிகுதி, வலிமை, மகிழ்வு.
மதர்வை-மயக்கம், செருக்கு, களிப்பு, மதர்வு.
மதலிகை-ஆபரணத்தொடக்கு வடிவு, தூக்கம், ஆபரணத்தூக்கம், ஆபரணத்தொங்
மதலிங்கம் - அமுக்கிரு, அமுக்கிரா. [கல்.
மதலை - கொடிவகை, கொன்றைமரம், சரக் கொன்றை, தூண், பிள்ளை, மரக்கலம், மழலை, பற்றுக்கோடு, யூபஸ்தம்பம், பற்று, மகன், குழந்தை, பாவை, தோணி.
மதலைக்கிளி - இளங்கிளி, இனிஞ்சுவாகதம்.
மதவலி-மிகுவலி, மிக்கவலியுடையவன், முருகக் கடவுள், வரைபக வெறிந்தோன்.
மதவலை-பெரியவலை. [வன், சமயவாதி.
மதவாதி - மதசம்பந்தமாய் வாதஞ் செய்ப
மதவிருத்தம் } யானை, மதகளிறு,
மதவிருந்தம் } மாதங்கம்.
மதவு - மதகு, கம்மர, ஜலதாரை, மதர்வு. செழிப்பு, மிகுதி, செருக்கு.
மதவெறி-அகங்காரம், இரத்தவெறி, காம வெறி, குடிவெறி, மார்க்கவெறி, மதவே
மதலை - மழலை, மதலை, குதலை. [றி.பு.
மதலைவையம் - காஞ்சொறி, காஞ்சிரை.
மதனகலாத்திரம் - ரதிதேவி. [டம்.
மதனகாகனம்-குயில், கோகிலம், காளகண்
மதனகாகுரவம் - புறு, கபோதம், இரதபதம்.
மதனகாமப்பூ - கொடிச்சம்பங்கி, மதன கா மேசரப்பூ, ஓர்வகை மருந்துப்பூடு.
மதனகாமியப்பூ-ஓர் சரக்கு, மதனகாமப்பூ.
மதனகீதம் - காமப்பாடல். [டி.
மதனகேதநம்-மன்மதன்கொடி, மீனகேதா
மதனசத்திரம்-சந்திரன், இந்து, மதி.
மதனசமுத்திரம்-பாற்கடல், க்ஷீரசாகரம்.
மதன்சலாகை-ஓர் மருந்து, பெண்டக்குயில்.

மதனசாத்திரம் } இலீலைநூல்; இது: கலை
மதனநூல் } ஞான மறுபத்து நான்
கிலென்று. [பாட்டுடையது.
மதனபாடகம்-குயில், காமோத்தீபனமான
மதனப்பூ - மதனகாமேசுரப்பூ.
மதனமஞ்சிகை - கலிங்கசேனன் மகள், நர
வாணதத்தன் மனைவி. [லன்.
மதனமோஹநன் - ஸ்ரீகிருஷ்ணன், கோபா
மதனம் - ஈ, கடைதல், காமம், தேன்மெழுகு,
மஸ்து, மருக்காரை, மனக்கலக்கம், மௌன
னம்; இது: பஞ்சபாணவத்தைக் குணங்
களிலென்று, வசந்தகாலம், பெருமிதம்.
மதனலிங்கம் - மருக்காரை, மதிக்காரை.
மதனலீலை - காமவிளையாட்டு.
மதனவேள்-மதனன், அனங்கன், உருவிலி.
மதனன் - காமன், மன்மதன், காமுகன்,
கட்டியங்காரன் மைத்துனன்.
மதனுகமம் - மதனசாத்திரம், காமநூல்.
மதனுங்குசம் - குய்யம், நகம், மதனுலயம்.
மதனுயுதம் } குய்யம், தாமரை, பெண்குறி.
மதனுலயம் }
மதனுவத்தை - பிரிவு, பிரிவுத்துயர்.
மதனி - மைத்துனி, மதினி, மச்சினி.
மதனை - கன், மது, சுரை, சுழம். [விழா.
மதனோற்சவம் - வேனில்விழா, வசந்தன்
மதனோற்சவன் - அரம்பை, தேவதாசி.
மதன் - செருக்கு, மனவெழுச்சி, மிகுதி,
அழகு, கலக்கம், காமன், மாட்சிமை,
மதமுடையோன், மதம், அறியாமை.
மதன்றாய்-இலக்குமி, திரு. [வலி, வளமை.
மதாசலம் -யானை, வாரணம், குஞ்சரம்.
மதாசாரம்-சமயவொழுக்கு, மதவொழுக்கம்.
மதாணி - ஆபரணம், பதக்கம், மார்பணி.
மதாத்தியயம்-மதுவினுன்வருநோய். [தல்.
மதானுசாரம் - சமயத்தைக் கைக்கொள்ளு
மதாந்தரம் - மதபேதம், சமயபேதம்.
மதாபிமானம் - மதப்பற்று, சமயப்பற்று.
மதாபிமானி - தன் சமயமே மெய்யெனக்
கொன்வோன், சமயப்பற்றுள்ளவன்.
மதாமதன் - மதோன்மத்தன், கொழுத்த
சரீரமுடையவன், மதாமஸ்தன்.
மதாமத்து } மிகவெறி, வெறுப்பின்மை,
மதாமஸ்து } மிகு மயக்கம், அக்கரையின்
மை, இறுமாப்பு, திமிர்.
மதாம்பரம்-இந்திரன் யானை, ஐராவதம்.
மதாம்பு - மதசலம், மதநீர். [மைதுனம்.
மதாரம் - கஸ்தூரி, பன்றி, யானை, யானை
மதாரன் - எத்தன், தூர்த்தன்.
மதார் - செருக்கு, மதர், மதர்வு, மதர்ப்பு,
மதார்ங்கு - மருந்துச்சரக்குவகை.
மதாலசை-(1) ஓர் அப்ஸரசை, (2) வற்சன்
மகனுகிய குவலயாசுவன் மனைவி, இவள்
தன் புத்திரராகிய விக்ராந்தன், சுபாகு,
சத்ருமர்த்தனன், அலர்க்கன் என்னும்
நால்வர்க்கும் நீதிநெறி யுணர்த்தி வளர்த்
த மஹாமதியாகிய மாது சிரோமணி.
மதாலம் - கொன்றை, இதழி, கடுக்கை,
மதலை.
மதாலாபி -குயில், கலகண்டம். [ஒன்று.
மதாவரிசி-ஓமாலிகை மூப்பத்திரண்டினுள்
மதாவளம் - யானை, நால்வாய், பொங்கடி.
மதாளித்தல் - ஓங்கிவளர்தல், பயன்படாத
படி கொழுத்துக் கெடுதல், செழித்தல்.
மதாளிப்பு - செழிப்பு, கொழுமை.
மதானுசாரம் - மதாசாரம், மதவொழுங்கு.
மதானுசாரியர் - சமய நிலையனுசரிப்போர்,
சமய ஆசாரத்தைப் பின்பற்றுவோர்.
மதி - அறிவு, கற்கடகவிராசி, சங்கை, சந்தி
ரன், ஞாபகம், நிதானம், பானபாத்தி
ரம், புத்தி, மதியென்னேவல், மாதம்,
யானை, முன்னிலையசைச்சொல் (உ-ம்)
சென்மதி, வணக்கம், விருப்பம், குபேரன்,
மதிப்பு, பிண்டி, காசிபரின் மனைவி
இடைகலை, ஒன்று என்னும் எண்ணைக்
குறிக்கும் குழூஉக்குறி, அறிமதாரம்,
படர்க்கை யசைச்சொல் (உ-ம்) பரிசி
னல்கு மதி, வரிசை, செம்பு, வெள்ளி.
மதிகம் - மோர், செடிவகையிலொன்று.
மதிகாந்தி - காஸ்மீரப்படிகம், பளிங்கு.
மதிகூர்மை - இந்துப்பு, புத்திக்கூர்மை.
மதிகேடன் - மூடன், நல்லறிவில்லாதவன்.
மதிகேடு - அறிவின்மை, மதிகேடன்.
மதிக்கணம் - கணமெட்டிலொன்று; அது:
நிரை நேர் நேரடுத்து வருவது, சந்திர
கணம், பாட்டின் பொருத்தவகை. [தன்.
மதிக்கண்ணியான்-சிவபெருமான், கணநா
மதிக்கலை - பதினுறுகலை, சந்திரகலை.
மதிக்கல் - சந்திரகாந்தக்கல், அமுத கலைச்
சிலை, மதித்தல்.
மதிக்கிராக்கிரம்-மதக்கடை, கள்ளுக்கடை.
மதிக்கொழுந்து-பாலசந்திரன், இளம்பிறை.
மதிசகன்-மன்மதன், சந்திரனது தோழன்.
மதிசாரன் - அந்திசாரன், இவன் இருகே
யன் புத்திரன். [திர சடாதரன்.
மதிசூடி - சிவபெருமான், பிறைசூடி, சந்
மதிச்சடையன்-சந்திரனைச் சடையிலே தரி
த்தவன், சிவபெருமான். [மதித்தஇடம்.
மதிச்சயம் - மதுரைச்சொக்கர் குதிரை விலை

மதிச்சிலை - சந்திரகாந்தம், அமுதகலைக்கல்.
மதிஞன் - அறிஞன், அறிவுடையான்.
மதிஞானம் - இயற்கை யறிவு, சுயபுத்தி.
மதிஞாலுவரணியம் - சுபாவ அறிவைக் கொடுப்பது.
மதிதம் - மோர், தயிர், ததி, பெருகு, மூசரு.
மதிதரன் - தனபதி மந்திரி, சோமசேகரன்.
மதிதனு-பொன்மணல், பொன்னிறமணல்.
மதிதாக்கினி - கடைந்தெடுத்த நெருப்பு.
மதிதிசை - வடக்கு, உதக்கு, உத்தரம்.
மதித்தல் - எண்ணல், கடைதல், கணித்தல், உப்புதல், கருதல், கொழுத்தல், வரை யறுத்தல், மதங்கொள்ளுதல்.
மதித்தீத்தை - மதிப்பாய் (திரிசொல்).
மதிநாள்-மிருகசிரிடம், மும்மீன், மதிநாள்.
மதிநட்பம் - நுண்ணறிவு, நுண்ணியபுத்தி.
மதிநெறி - சந்திரவமிசம், சந்திரகுலம்.
மதிபதிச்சம் - வாலுளுவை, பாடிதம்.
மதிப்பகை-இராகு, கேது, இந்துவிரோதி.
மதிப்பாகம் - பிறை.
மதிப்பாகு - பிறை, மதிப்படை.
மதிப்பிரமம் } பிழை,மதிமயக்கம், தவறு,
மதிப்பிராந்தி } தப்பு.
மதிப்பிளவு } பிறைச்சந்திரன், பிறை
மதிப்பிள்ளை } மதி.
மதிப்பு - மதித்தல், அளவிடுதல், கௌரவித் தல், கடைதல், கருத்து.
மதிமகன் - சந்திரனுக்கும்,உரோகிணிக்கும் பிறந்த பிள்ளையாகிய புதன், புலவன்.
மதிமணல் - வெள்ளிமணல், வெண்மணல்.
மதிமண்டலம் - சந்திரமண்டலம். [டம்.
மதிமயக்கம் - புத்திமயக்கம், புத்திமாறுட்
மதிமயங்கல் } புத்திகெடுதல், யோசனை
மதிமயங்குதல் } யழிதல்.
மதிமாபு - சந்திரவமிசம், மதிநெறி.
மதிமேலை - சந்திரகிரி, ஓர் நகரம்.
மதிமறு - சந்திரகளங்கம், இங்கட்கறை.
மதிமான்-புத்திமான், அறிவாளி, அறிஞன், மதியில் தோன்றும் களங்கம்.
மதிமுகம் - சந்திரன்போன்ற முகம்.
மதிமேகக்கல்-மந்தாரச்சிலை,குருவிந்தக்கல்.
மதிமை - அறிவு, சேதனம், போதம்.
மதிமோசம் - புத்திமோசம், அறிவின்மை.
மதியந்திரும்புதல் - பொழுது சாய்தல்.
மதியப்பூப்பு-சந்திரோதயம்,நிலவுஉதையம்.
மதியமுதம் - சந்திராமிர்தம், சந்திரகலை.
மதியம் - கணிசம், சந்திரன், கடு, மத்தியா னம்,மாதம்,பூர்ணசந்திரன், பௌர்ணமி.
மதியழிவு - அறிவுகேடு, புத்திக்கேடு.
மதியாணி
மதியாணிக்கட்டை } துகத்தினடுவாணி.
மதியாம்பல் - சீந்தில், அமுதவல்லி.
மதியார் - பகைவர், அறிவுடையோர், கரு தார், மதியோர்.
மதியிலி-மதிகேடன், அறிவற்ற-வன்-வள்.
மதியீனம் - புத்தியீனம், மதிமோசம்.
மதியுணி - இராகு, கேது, மதியுண்ணி.
மதியுப்பு - வேயலுப்பு, இந்துப்பு.
மதியுள்ளான்-ஞானி, அரசன், புத்திமான்.
மதியையழைத்தல் - அம்புலிப்பருவம்,குழந் தைகள் சந்திரனை அழைத்தல்.
மதிரம் - மது, மதிரை, அறவழி.
மதிரவி-சாதிலிங்கத்தினின்று வடித்தரசம், வாதரசம். [கடை.
மதிராக்ருஹம் - கள்விற்கும்வீடு, கள்ளுக்
மதிராட்சி - பெண். [பாரிகளு ளொருத்தி.
மதிரை - கள், குபேரன் மகள், வசுதேவன்
மதிலரண் - நால்வகையரண்களுள் ஒன்று.
மதிலவணம் - இந்துப்பு, சிந்துலவணம்.
மதிலுண்மேடை - கொத்தளம், கோட்டை.
மதிலுறுப்பு - மதிலின் சித்திரம், வாயில்.
மதில் - இஞ்சி. மதிள், கோட்டைச்சுவர்.
மதில்காத்தல் - பகைவர் மேலிடாமலுப்பரி கையைக் காவல் செய்தல்; அது புறப் பொருட்டுறைகளிலொன்று.
மதில்வளைத்தல்-மாற்றரசுப்பரிகையைச் சூழ் தல்; இது: புறப்பொருட்டுறைகளி லொன்று.
இம்மனுக்களே அவ்வச்சிருஷ்டி தோ றும் மநுஷ்யவர்க்கத்தைத் தோற்றுவிப்ப வர்களாதலின் அவரே மனுஷ்ருக்குமூல பிதாக்களாவர். இப்போதுள்ள சிருஷ் டிக்கு மூலபிதா வைவசுவதமனு; இஃது: ஏழாவது மன்வந்தரம். ஒரு மன்வந்தரகா லம் 4320000 வர்ஷம், இம் மன்வந்தரம் ஆறுசென்றன, இப்போது செல்லா நிற் பது ஏழாவது மன்வந்தரம். (சிருஷ்டி) கா ண்க. சூரியகுலத்து முதலரசனுன ஏழாம் மனு, சோழமன்னர்களின் முன்னோன்.
மனுகுலம் - மனுஷ்ஜாதி, சூரியவமிசம்.
மனுக்கள் - மனிதர், மக்கள், மானிடர். [தார்.
மனுசன் - மனிதன், மாந்தர், நரர், பூதலத்
மனுசேந்திரன் - அரசன், பூபாலன்.
மனுசை - பெண், அணங்கு, மகள்.
மனுடன் - ஆத்துமா, மனிதன், மனுஷன்.
மனுஷிகத்துவம் மனுஷ்சுபாவம், மானி
மனுஷ்யகம் டத்தன்மை.
மனுதர்மசாத்திரம் - மனுவினுற் செய்யப் பட்ட அறநூல், தருமநூல். [கைக்காரி.
மனுதாரி - விண்ணப்பஞ் செய்பவள், அறிக்
மனுதார் - விண்ணப்பஞ் செய்வோர்.
மனுத்தேவன் - ப்ரஹ்ம புத்ரருளொருவன்.
மனுநீதி - தருமநூல், மனுமுறை. [ழன்.
மனுநீதிகண்டசோழன் - மநுநீதிகண்ட சோ
மனுநூல் - மனுநீதிசாத்திரம், மனிதஒழுங்கு.
மனுநெறி - தருமநூல், மனுமுறை, மக்கள்
மனுபு - மனிதன், மாந்தர், மக்கள். [நெறி
மனுப்பிரளயம் - மனுவந்தரம். [சத்தசசர்.
மனுப்புத்திரர் - மனுவமிசத்தார், மனு வமி
மனுப்பேசுதல் - பரிந்துபேசுதல். [தவன்.
மனுமகன் - பிரபு, நீதவான், உயர்குடியிற்பிறந்
மனுமக்கள் - மனிதர், மானுடர். [ராஜா.
மனுமசித்தி - பூர்வம் நெல்லூரிலரசு செய்த
மனுமுறைகண்டசோழன் - மநுநீதிகண்ட சோழன், (இவன் கதை) காண்க.
மனுவந்தரம் - மனுவின்காலம்; அது: 71 மகாயுகங்கள் கொண்டதும், பிரமதினத் தில் பதிஞன்கில் ஒரு பங்குமாம்.
மனுவர் - கொல்லர், மானுடர், மக்கள்.
மனுவவதாரம் - மனுப்பிறப்பு. [ன்று.
மனுஸ்ம்ருதி - அஷ்டாதஸ ஸ்ம்ருதிகளிலொ
மனுஷ்குமாரன் - இயேசு கிறிஸ்து, இவர் ஓர் அவதார புருஷர். [கம், மனிதத்தன்மை.
மனுஷ்சுபாவம் - மனித இயற்கை, மனுஷீ
மனுஷ்யவேந்தன் - மனுமுறைகண்டசோழன்
மனுஷி - பெண் பிள்ளை, மகள், நங்கை.
மனுஷ்யகம் - மனுஷ்சுபாவம், மனிதஇயற்கை.
மனை - இரண்டாயிரத்து நானூறு குழி கொண்டநிலம், பதினுறரையே யரைக் காற் குழிகொண்ட நிலம், மனைவி, வீடு, குடும்பம்.
மனைகோலுதல் - வீடுகட்டுதல்.

மனைக்கடைகால் - வீட்டின் அஸ்திவாரம்.
மனைக்கடைகால்தோண்டல் - வீடுகட்ட அஸ்திவாரம் தோண்டல்.
மனைக்கட்டு-வீடுகட்டற்குரிய இடம். [வள்.
மனைக்கிழத்தி - மனையாட்டி, வீட்டுக்குரிய
மனைக்கிழவன்-வீட்டுக்குரியவன், கணவன்.
மனைக்குயில் - தலையிலாக்குருவி, சிறுசிட்டு.
மனைக்கோள் - பல்லி, கௌளி.
மனைச்சீட்டு-மனையின் கிரயப்பத்திரம். [வி.
மனைத்தக்காள்-இல்லொழுக்கிற்குரிய மனை
மனைத்தாயம்-இல்லொழுக்கத்தின் நிறமை.
மனைப்படப்பு } வீட்டுக் கொல்லை, புறக்
மனைப்படப்பை } கடை நிலம்.
மனைப்பாம்பு - வீட்டிலிருக்கும் சர்ப்பம்.
மனைமாட்சி-இல்லறத்துக்குரிய நற்குண நற் செய்கைகள், இல்வாழ்க்கை யிலட்சணம்.
மனைமாட்சிக்குரிய-நிமித்தம்போற்றன் முதலாக வச்சமுற்றிரங்க லீறுகச் சொல்லப் பட்டவைகளோந்தும். [சீட்டு.
மனைமுறி - மனைச்சீட்டு, மனை அடமானச்
மனையடிசாஸ்திரம் - வீடுகட்டும் முறைகளை யுணர்த்தும் நூல், மனை யிலக்கணநூல்.
மனையவரறம் - ஈதல், ஏற்றல், காத்தல், ஒழுக்கம், புணர்தல், துய்த்தல்.
மனையறம் - இல்லறம், குடும்பவாழ்க்கை.
மனையாட்டி } மனைவி, அகமுடையாள்,
மனையாள் } இல்லாள். [வாடகை.
மனைவரி - வீட்டுவரி, குடிக்கூலிவரி, நில
மனைவாழ்க்கை } இல்லாச்சிரமம், இல்
மனைவாழ்வு } வாழ்க்கை, இல்லறம்.
மனைவி - நாயகி, இல்லாள், முல்லை மருத நிலங்களின் தலைவி, மனையையுடையவள்.
மனைவீடு - மனையும் வீடும், கிராம நத்தம்.
மனைவேள்வி - இல்லறம், விருந்தோம்பல்
மனோகதம்-எண்ணம்,விருப்பம்,மனோரதம்.
மனோகதி- மனோவேகம், மனத்தின்வேகம்.
மனோகர்ம் - அழகு, இச்சை, சந்தோஷம், மனோரம்மியம், மனோரோக்கியம்.
மனோகுலம் - மனுகுலம், மனவியாகூலம்.
மனோக்கியம் - அழகு, சுந்தரம், மனத்திற்கு உவப்புள்ளது, மனவாரோக்கியம்.
மனோசங்கற்பம்-மனக்கருத்து,எண்ணுகை.
மனோசஞ்சலம் - துக்கம், மனக்கிலேசம்.
மனோசலம் } மன வசைவு, மன நிகழ்ச்சி,
மனோசலனம் } மனசலனம், எண்ணம்.
மனோசவம் - விவேகம், மனத்தெளிவு.
மனோசன் - மன்மதன், மதனன். [த்தி.
மனோசாஞ்சல்யம் - மனச்சலனம், மனவிரு
மனோசாட்சி - மனச்சாட்சி, மனதறிந்தது.

மனோசிலம் } மடலரிதாரம், இது விஷவு
மனோசிலை } பாஷாணம் (32)ல் ஒன்று.
மனோச்சாகம் - மணலூக்கம். [ஒறுக்கை.
மனோதண்டம் - மனக்கட்டுமை, மனத்தை
மனோதத்தம்-மனதில்ஈதற்குசங்கற்பித்தல்.
மனோதிடம் - மனத்திடம், மனவுறுதி.
மனோதீபம் - மனதிறக்கப்படாதது.
மனோதுக்கம் - மனத்துக்கம், வருத்தம்.
மனோதைரியம்- மனத்திடன், மனமுயற்சி.
மனோநாசம் - மனமிறத்தல், மனமுடிவு.
மனோநிச்சயம் - மனோநிதானம். [மானம்.
மனோநிதானம் - மனதின்தீர்ப்பு, மனத்தீர்
மனோபதி-பிரமன் நகரம், சத்தியலோகம்.
மனோபத்தி-மனப்பத்தி,மனப்பற்று.[உறுதி.
மனோபலம் - தைரியம், மனத்திடம், மன
மனோபலம் - மனசிலேபிறந்தது. [வன்.
மனோபவன் - மன்மதன், மனத்தில் உதித்த
மனோபாவம் - மனநிலை, மனவெண்ணம்.
மனோபாவனை - மனப்பரவிப்பு, நோக்கம்.
மனோபாஷிதம் - தன்னோடுதான்பேசல்.
மனோபீஷ்டம்-மனப்பிரியம், மனவிருப்பம்.
மனோபு-மன்மதன், மனோபவன், உருவிலி.
மனோபூசை - உட்பூசை, மானதபூசை.
மனோமயகோசம் } பஞ்சகோசத்தொன்று;
மனோமயம் } அது: மனோகோசம்.
மனோமயை - சௌபரிமுனிவர் தேவி.
மனோயோனி - காமன், மனோபவன்.
மனோரஞ்சிதம் - மனப்பிரியம், இன்பமான தது, வாசனைப்பூக்கொடி. [மனோபாவனை.
மனோரதம் - இச்சை, இன்பம், விருப்பம்,
மனோரதியம்-இல்லதை யுள்ளதுபோற் கற் பித்தனுபவித்ததா யுருசியடைதல், மனப் பால் குடித்தல், மனோராச்சியம். [தாய்.
மனோரமாதேவி - இவள் வைசம்பாயனர்
மனோரமை - மேருவின்புத்ரி,இவள் இமவான் மனைவி,பார்வதி கங்கை இவர்களைபெற்றவள்,இவளை மேனை என்பர். [ஹிதம்.
மனோரம்மியம் - மனத்திருத்தி, மனோரஞ்
மனோராசி - மனச் சம்மதி, மன ஒற்றுமை.
மனோராச்சியம் - மனதிலுற் றான் மகிமை யடைந்ததாகச் சிந்தித்து மகிழ்தல், மனப்பால் குடித்தல். [லாசம்.
மனோலம்-பரிகாசம், எக்களிப்பு, மனோல்
மனோலயம் - மனவொடுக்கம், அடக்கம்.
மனோலவுலியம்-வீண்தோற்றம், பொய்யுரு.
மனோலி - பகிடிக்காரன், பரிகாசம். [னம்.
மனோலித்தனம் - பகிடிக்குணம், கேலித்த
மனோவதி - பிரமன் நகரம், பிரமனூர்.
மனோவாக்குக்காயம் - மனம் மொழி மெய்

ஆகிய திரிகரணங்கள், முக்காரணம்.
மனோவாஞ்சை-மனவிருப்பம், உலகப்பற்று.
மனோவாயு-பிராணன், உயிர். [ரிபு, மனநிலை.
மனோவிகாரம் - மனச்சஞ்சலம், மனதின்றி
மனோவிசனம்-மனவிதனம், மனவருத்தம்.
மனோவிதனம்-துக்கம், மனவிசனம்.
மனோவியாகூலம்-துன்பம், கஷ்டம்.
மனோவியாபாரம்-மனதின்றொழில், மனோ
ராச்சியம், மனம்தானிகொள்ளாமல்அலைதல்.
மனோவிருத்தி - மனதின் வியாபாரம்.
மனோவேகம் - எரிச்சல், மனக்கதி, மனத்
தின் வேகம்போன்ற விசைவு.
மனோற்சாகம்-மனமுயற்சி, உள்ளக்கிளர்ச்சி.
மனோற்பவன்-மன்மதன், மனோபவன்.
மனோன்மணி } அப்பிரகம், ஓர்சக்தி, பார்
மனோன்மனி } வதி, உமை, வாலை [வணம்.
மனோன்மணித்தாய் - இந்துப்பு, சிந்து ல
மன்-அசைச்சொல் (உ-ம்) அது மற்கொண்
கன்றேரே, ஆக்கம் (உ-ம்) நெடியன்மன்.
இறந்தகால விடைநிலை (உ-ம்)என்மனார்,
ஒழியிசை (உ-ம்) கூறியதோர்வாண்மன்,
கழிவு (உ-ம்) சிறியகட்பெறினே யெமக்
கீயுமன்னே, மிகுதி (உ-ம்) எந்தையெமக்
கருளுமன், பிறிதொன்றுகைக் குறிப்பு
(உ-ம்) பண்டுகாடுமனின்று கயல் பிறழும்
வயலாயிற்று. உத்திரட்டாதி, இழிவு, மந்
திரம், அரசன், நிலபேறு, பெருமை.
மன்பதை - மக்கட்பரப்பு, உயிர்ப்பன்மை.
மன்பா - ஆசிரியப்பா, அகவற்பா.
மன்மத - இருபத்தொன்பதாவதாண்டு.
மன்மதகிருகம் - பெண்குறி, பகம், யோனி.
மன்மதபாணம் - (ஐந்து) அவை வனசம்,
சூதம், அசோகம், முல்லை, நீலம் இவைக
ட்கு முறையே உன் மத்தம், மதனம், சம்
போகம், சந்தாபம், வசீகரணம்எனபெயர்.
இவற்றின் அவத்தைகள் சுப்பிரயோகம்,
விப்பிரயோகம், சோகம், மோகம், மர
ணம்; அவை: சுப்பிரயோகம், சொல்லும்
நினைவும், விப்பிரயோகம் வெய்துயிர்த்
திரங்கல், சோகம் வெதுப்பும் துய்ப்பன
தெவிட்டலும், மோகம் அழுங்கலும் பித
ற்றலும், மரணம் அயர்ப்பும் மரணமும்
ஆம்: ஓர்வகை மல்லிகை, காமன் கணை,
பஞ்ச பாணம், சாதிமல்லிகை.
மன்மதபாணவஸ்தை - பஞ்சபாணவஸ்தை.
மன்மதம் - காமம், விழா, பெளவத்திடம்.
மன்மதவேதனை - காமநோய், விரகவேதனை.
மன்மதன்-காமன், மனங்கலக்குவிப்போன்,
விஷ்ணுமாஉஸபுத்ரன்; இவன் பாரி ரதி.
கொடி மகரம், பாணம் புஷ்பம்.

மன்மதன் என்பதன் பொருள், மன
துக்குக் கிளர்ச்சியைக் கொடுப்பவன் என்
பது. மன்மதனை பிரஹ்ம புத்ரனென்று
கூறுவாருமுளர். ருக்வேதம் பிரஹ்ம சை
தன்யத்திலே முகற்கணெழுந்தது இச்சை
யென்று கூறும். அது நிற்க; காமவிச்சைக்
கதிதேவதையாகிய மன்மதனே பெரும்
பாலும் புராணங்களிலே பேசப்படுபவன்.
மன்மதன் அழகோடுகூடியயௌவநத்தை
அதிகரித்து நின்று ஆண் பெண்ணைக்
கூட்டி பிரஜாவிருத்தி செய்யும் அதிகார
மூர்த்தி. மன்மதன் அரூபியாய் வசந்த
காலம், நிலா, மணி, மேடை, மணற்குன்று,
பூஞ்சோலை, சந்த்ரோதயகாலம், புஷ்பம்,
வாசனை, அழகு முதலியவைகளைத் தனக்
குப் பரிவாரமாகக் கொண்டிருப்பவன்.

தாரகாதி அசுரரால் வருந்திய தேவர்
வேண்டுகோளுக் கிரங்கி மன்மதன் சிவ
பிரான்மீது தனது காம பாணங்களைச்
செலுத்தி அவர் நெற்றிக்கண்ணுக் கிரை
யாகி அங்கமிழந்து அன்றுதொட்டு அநங்
கன் என்னும் பெயர்கொண்டான். மன்
மதன் பாரியாகிய ரதிதேவி பார்வதியைப்
பன்முறை யிரந்து தன் குறையைக் கூற,
பார்வதி ரதியைத் தேற்றி "உன் கணவன்
கிருஷ்ணனுக்கு ப்ரத்யும்நன் என்னும்
பெயரோடு புத்திரனுகப் பிறப்பான். அச்
சிசுவைச் சம்பராசுரன் கவர்ந்துபோய்க்
கடலிலிடுவான். அதனை மீன் கவர்ந்து
விழுங்கும். அம்மீனை வலைஞர் பிடித்து
சம்பரனுக்குக் கொடுப்பார்கள். நீ அவன்
வீட்டு எவற்பெண்ணுகி அம்மீனை வாங்கி
அறுத்து அச் சிசுவைக் கவர்ந்தேகி அவ
னோடு வாழ்வை என்றார். அவ்வாறே ரதி
சம்பரன் மனையில்எவற்பெண்ணையிருந்து
பிரத்யும்நனை காயகனுகப் பெற்றாள்.

இச் சரித்திரம், வாமந, பாகவத,
விஷ்ணு புராணங்களில் கூறப்பட்டுள்
ளது. ஸ்காந்தபுராணத்திலே கூறப்பட்ட
சரித்திரம் சற்றே விகற்பமாம்.
மன்மதன்கணை - மன்மதபாணம், மாமரம்.
மன்மதாலயம் - மாமரம், மன்மதகிருகம்.
மன்மதோபாலம்பனம்- காமனைப்பழிக்கை.
மன்வந்தரம் - மனுவந்தரம், மனுக்காலம்.
மன்வந்தராதிபர் - ஸ்வாரோவிஷ மன்வந்த
ரத்திலே விபஸ்சித்து என்னும் நிலிம்ப
பதியும், உத்தம மன்வந்தரத்தில் சுசாந்த
னெனும் அமரபதியும், தாமச மன்வந்தரத்

தில் சிபி என்னு மித்திரனும், சைவதமன்வந்தரத்தில் வாசவனும், சாக்ஷுசமன்வந்தரத்தில் மனோச்சவசன் என்னும் தேவபதியும், வைவஸ்வதமன்வந்தரத்தில் புரந்தரன் என்னும் ப்ருந்தார கேந்த்ரனும், சூர்யாதி தேவர்களையும், வசிஷ்டராதி ருஷிகளையும் நடாத்துவார்கள். [லடி.

மன்விருத்தம் - ஆசிரியவிருத்தம், கழிநெடி

மன்ற - அசைச்சொல், தேற்றம் (உ-ம்) கடவுளாயினுமாக மடவேமன்றவாழிய முருகே, நிச்சயமாக, மிக, அறுதியாக, வெளியாக. [கழகம்.

மன்றகம்-சபை, அவை, கூட்டம், சங்கம்,

மன்றக்கூத்தன் - சிவன், நடராஜன்.

மன்றம் - சபை, நிச்சயம், நெடுந்தெரு, பலர் கூடும் வெளி, ஊர்நடுவே பலருங் கூடியிருக்கும் மரத்தின் அடி, சிதம்பரம், மெய்ம்மை, வாசனை, வெளி, பொதுவிடம், பொதுவில்.

மன்றல்- கல்யாணம், நெடுந்தெரு, வாசனை, பாலைப்பண்வகை. [பதி.

மன்றவாணன் - சிவபெருமான், நடனசபா

மன்றன் - சிவபிரான், மன்றவாணன். [டல்.

மன்றுடல்-சபையில் பேசல், வருந்தி வேண்

மன்றுடி-சிவன், சபையில் வழக்காடுபவன், சிலசாதியார்பட்டப்பெயர். [மன்னுடுதல்.

மன்றுடுதல்-இரந்துகேட்டல்,வழக்காடுதல்

மன்றுட்டம்} நடனம்புரிதல், வேண்டுதல்,

மன்றுட்டு } தொந்திரவு.

மன்றில்-வாயில்முற்றம், வாய்தல்முன்றில்.

மன்று - கனகசபை, சபை, நீதித் தலம், வெளி, மரத்தடி, திண்ணை, பொதுவிடம், நாற்சந்தி, வாசனை, தோட்டம். [படல்.

மன்றுபடுதல் - வெளிப்படல், அரங்கிடைப்

மன்றுளாடி - சிவன், நடனசபாபதி. [சன்.

மன்னகுமரன் - இராஜபுத்திரன், இளவர

மன்னர் - அரசர், பயாபகர், பூபாலர்.

மன்னர்பின்னர் } வைசியர், வணிகர்,

மன்னர்பின்னோர் } வணிகர், வாணிகர்.

மன்னர்மன்னவன் } இராசாதிராஜன், துரி

மன்னர்மன்னன் } யோதனன்.

மன்னல் - மன்னுதல், பெருமை, வலிமை, நிலைபேறு, உயர்ச்சி, விடாமுயற்சி. [ள்.

மன்னவர் - மன்னர், அதிகாரிகள், அதிபதிக

மன்னவன் - மன்னன், இந்திரன்.

மன்னறம் - இராசதருமம், இராஜ ஒழுக்கம்.

மன்னன்-அரசன், ஆடவர்பருவத்தொன்று; அது: மூப்பத்திரண்டுக்கு மேல் நாற்பத் தெட்டுக்குட் பட்டது; உத்திரட்டாதி நாள், எப்பொருட்குமிறைவன், தலைவன், கணவன், நிலைத்தவன்.

மன்னுடுதல் - மீன்றுடுதல், வாதாடுதல்.

மன்னுசாமி - மன்னர்சாமி.

மன்னுப்பு - மன்னிப்பு, பொறுதி, பொறை.

மன்னூர் - ஒரூர், பகைவர், மக்கள். [ன்று.

மன்னூர்கோயில் - விஷ்ணு தலங்களின்

மன்னூர்சாமி - ஒரு கிராம தேவதை, பர்வத ராஜ புத்திரியாகிய பச்சை மலையம் மனை மணக்க அரசவுருவுடன் எழுந்தருளிய சிவாவசரம், மன்னுதசாமி.

மன்னுலகம் - சுவர்க்கம், தேவலோகம்.

மன்னி - தமையன் மனைவி, அண்ணி.

மன்னித்தல் - பொறுத்தல், கூமித்தல்.

மன்னிப்பு - பொறுதி, மன்னுப்பு, பொறை.

மன்னியு - இடைஞ்சல், கோபம், துக்கம், பலி, பெருமை, கருவம்.

மன்னியை - பிடர்நரம்பு, விசைநரம்பு.

மன்னிறைதருதல் - வேளாண்மை மாந்தரியல்பி னென்று; அது: அரசனுக் குரிய வரிப்பொருளைத் தருகை.

மன்னுதல்-சேர்தல், நிலைபெறுதல், மிகுதல், தங்குதல், பொருந்துதல், அடுத்தல்.

மன்னுமான் - கடவுள், பிரமன். [ருந்தும்.

மன்னும் - மிகவும்,பெரும்பான்மையும்,பொ

மன்னுயிர் - ஆத்துமா, சீவன், பல்லுயிர்.

மன்னுலகம் } தேவலோகம், சுவர்க்கம்,

மன்னுலகு } புகலிடம்.

மன்னெச்சி - மனவிதனம், மனவருத்தம்.

மன்னை - கதுப்பு, கோபம், தொண்டை.

மன்னைக்கட்டி - மென்னைக்கட்டி, பொன்னுக்கு வீங்கி. [பிடி.

மன்னைப்பிடி - மென்னைப்பிடி, குரல்வளைப்

மன்னோ - ஓர் அசைச்சொல்.

மஃகான் - மகரவொற்று.

மஸ்தகி-சூமிமஸ்தகி. [பட்டப் பெயர்வகை.

மஸ்தான் - குடியன், முகம்மதிய ஞானியின்

மஸ்தான்சாகிபு - 'மஸ்தான் சாகியு பாடல்' என்ற நூலியற்றிய ஒரு முகமதிய ஞானி.

மஸ்து - தயிர், தயிர்சலம், கொழுப்பு, மயக்கந்தரும்பொருள், உள்ளக்கிளர்ச்சி தரக்கூடிய சத்து, திடமான தேகம்.

மஜிலி - பிரயாணத்தில் தங்கும் இடம்.

மஜ்ஜை - மச்சை, எலும்பின் சாரம், மூளை.

மஷால்ஜி-எவல்செய்வோன்,கூலிக்காரன்.

மஷ்டு - கசடு, அழுக்கு, அசுத்தம், குற்றம்.

மஹதி} நாரதர் வீணை, மகதியாழ், சேம்பு,

மகதி } திப்பிலி. [வருவாய்.

மஹசூல் - விளைவு, இலாபம், வரி முதலிய

மஹஸர் - மகசர், பொது விண்ணப்பம்.
மஹாகாலம் - ஒரு புண்ணிய க்ஷேத்ரம்; அஃது: உஜ்ஜயினியிலுள்ளது.
மஹாகாலன் - ஸர்வ ஸம்ஹார மூர்த்தியாகிய சிவன், காலகாலன், உருத்திரன்.
மஹாசிவராத்திரி-மகாசிவராத்திரி காண்க.
மஹாசுவாலை-ஒரு நரகம்;அது: வியபிசாதரம் புரிவோர் அடைதற்குரியது. [வர்,சிவன்.
மஹாதேவன் - அஷ்டமூர்த்திகளு ளொரு
மஹாநந்தி - மகததேயத்து ராஜாக்களாகிய சைசுநாகரு ளீற்றரசன்.
மஹாநாபன் - ஹிரண்யாக்ஷன் மகன்.
மஹாபலன் - சுமாலிபுத்திரன்.
மஹாபலி-பலிச்சக்கரவர்த்தி காண்க. [ரன்.
மஹாபார்ஸவன்-ராவணன் சிறியதாய்புத்தி
மஹாபிஷன் - பிரதீபன் காண்க.
மஹாபோஜன் - சாத்துவதன் புத்திரன் இவன் வமிசத்தார் போஜரெனப்படுவர்.
மஹாப்ரகன்- மிதிலன் வமிசத் தோராரசன், கீர்த்திநாத னென்பானுக்குத் தந்தை.
மஹாமகம் - சிங்கராசியில் பிருஹஸ்பதி பிரவேசமாயிருக்கும் வருஷத்தில் மாசிமாசத்துப் பௌர்ணமையில் வரும் நாள்; அது: கும்கோணத்திலே மஹாமகத்தீர்த்தத்திலே ஸ்நாநஞ்செய்தற்குரிய விசேஷநாள்.
மஹாமநன் - மஹாகாலன் புத்ரன்; இவன் புத்ரர் உசீநரன் திதிக்ஷன் என்போர்.
மஹாமயன் - கீழ்லோகங்களில் ஒன்றுகிய அதலலோகத் ததிபதி. [கொண்டது,
மஹாயுகம் - சதுர்யுகம், இது 4320000ஞ
மஹாராஜிகர் - கணதேவதைகளு ளொரு பேதம், இவர்கள் இருநூற்றிருபதின்மர்.
மஹாராஷ்டிரம் - கூர்ஜ்ஜரதேசத்துக்குத் தெற்கிலுள்ளதேசம், இத்தேசத்தில் வழங்கும்பாஷையும் இப்பெயரேபெறும். இது பஞ்சதிராவிடத்தொன்று. இத் தேசத்தார் மஹாராஷ்டிரர் எனப்படுவர்.
மஹாரோமன் - கீர்த்திநாதன் புத்திரன்.
மஹாரௌரவம் - அக்நிமயமான ஒருநகரம், கொடிய பாபிகள்போய் வருந்துமிடம்.
மஹாவர்மன் - நந்தன், நந்தர் குலத்தான்.
மஹாவாகு - ஹிரண்யாக்ஷன் புத்ரன்.
மஹாவீரன் - ஜைந குருக்களுளொருவன். இவன் கடைசிதீர்த்தங்கரன்.
மஹாவீர்யன் - (க) புமன்யன் புத்ரன். ஹரு க்ஷயன்தந்தை. (2) ப்ருஹத்ரதன்புத்ரன்.
மஹாஹயன் - சதஜித்து ஜ்யேஷ்டபுத்ரன்.
மஹிஷன் - தேவரும் அசுரரும் யுத்தஞ்செய்தபோது, அசுரரெல்லோரும் இறந்து போக, திதியென்பவள் தவஞ்செய்து ப்ரஹ்மாவினது அநுக்ரஹத்தினாலே இம் மஹிஷனைப் பெற்றாள். இவன் கண்டத்தின்மேல் மஹிஷரூபமும்அதன்கீழ் மநுஷ்ய ரூபமும் உடையவன், இவன் மிக்க கொடுமையினையுடையவன். இவனைத் துர்க்கா தேவி கொன்று மஹிஷாஸுரமர்த்தநி யென்னும் பெயர் பெற்றாள்.
மஹிஷாஸுரமர்த்தநி - துர்க்காதேவி.
மஹிஷ்மந்தன் - சஞ்ஜித்துபுத்ரன், நர்மதா நதி தீரத்தில்மாஹிஷ்மதிபுரத்தை நிர்மாணஞ் செய்தவன் இவனே.
மஹேந்திரம் - (1) இது உத்கலம் முதல் காண்டவநாடு வரையும் வியாபித்திருக்கும் மலை,(2) குலபர்வதங்களுளொன்று.
மஹேதயம் - மகோதயம் பார்க்க.
மஹோதரன் -ராவணன் சிறியதாய் புத்ரன் நீலனாற் கொல்லப்பட்டவன் இவனே.

மா

மா-ஓர்உயிர்மெய் எழுத்து,அசைச்சொல், அழகு, அழைத்தல், அளவு, அறிவு, அன்னம், ஆணி, இடித்தமா, இடை, இலக்குமி. எதிர்மறை யுபசருக்கம், ஐயவுப சருக்கம்,ஓரசைச்சொல், ஒரெண்,அஃது இருபதிலொன்று, ஓர்மரம், கட்டு, கறுப்பு,குதிரை பன்றி யானை யிவற்றிலுண். குதிரைப்பொது, சரச்சுவதி, சீலை, செல்வம்,தாய்,துகள்,நஞ்சுக்கொடி,நிறம்,பரி, பிரபை, பெரிய, பெருமை, மகத்துவம், மரணம்,மிகுதி, மேன்மை, வண்டு,வயல், யானை, வலி, வியங்கோளோடு வரு மசைச்சொல், (உ-ம்) உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே; விலங்கின் பொது, வெறுப்பு, சிங்கராசி, மாமரம், துன்பம்பொறுக்கை, மாற்று, ஒரு நிறை, கீழ்வாயிலக்கத் தொன்று, நிறம், வெறுப்பு, அரிசி முதலியவற்றின் மாவு.
மாகக்கல் - கானற்கல்,கானகக்கல். [ணம்.
மாகசம் - கையாந்தகரை, மர்க்கரம், கோக
மாகடம்பு - நீண்டசெடிவகை.
மாகட்டகம் - செந்நாயுருவி.
மாகண்டம் - அதிகண்டம்; அது: யோக மிருபத்தேழிலொன்று.
மாகதம் - மக்ததேயத்துள்ளது, மகதம்.
மாகதர் - அரசமாதுக்கும் வைசியனுக்கும்

பிறந்தவர், வீர முதலியவற்றைப் புகழ் வோர்,பாணர்,மகததேயத்தார்,தென்னு ட்டிலுள்ள நடுநாடாகியமகததேயத்தார்.
மாகதன் - ஜராசந்தன்.
மாகதி - சீனிச்சர்க்கரை, திப்பிலி,பிப்பிலி, பிராகிருதபாஷை, முல்லைக்கொடி,மகத தேசத்துப்பாஷை. இது ப்ராக்ருதங்களு ளொன்று, சோண நதிக்கும் பெயர்.
மாகத்தி - மாகந்தி, நெல்லி, அமுக்கிரா.
மாகநதி - ஆகாயகங்கை, மாகமாநதி.
மாகநீர் - மாசித்தீர்த்தம், மகதீர்த்தம்.
மாகந்தம் - மாமரம், கொக்கு, ஆம்பிரம்.
மாகந்தி-நெல்லிமரம், தக்ஷணபாஞ்சாலத்து இராஜதானி, அமுக்கிரா. [மகன்.
மாகபதி - இந்திரன், வானவர்கோன், சத
மாகம் - ஆகாயம்,தேவுலகம்,திக்கு, மேகம், மகநாள், மாசிமாதம். மாகன்செய்த ஸம் ஸ்க்ருதகாவ்யம். இக்காவ்யம்க்ருஷ்ணன் சிசுபாலனை வதஞ்செய்த வரலாறு கூறு வது, மேலிடம், சுவர்க்கம். [ணம்.
மாகயம் - கெவுரிபாடாணம், கௌரி பாஷா
மாகரி - ஆண்யானை, மதகளிறு, குஞ்சரம்.
மாகர் - தேவர், மாகதர், உம்பர், மேலவர்.
மாகலி - இந்திரன்சாரதி, சந்திரன்.
மாகலோகம் - விண்ணுலகு, தேவலோகம்.
மாகவதி - கீட்டிசை, பூருவம், குடக்கு.
மாகறல் - பாடல்பெற்ற ஓர் சிவஸ்தலம்.
மாகனன் -பார்ப்பான். [ன் தத்தகன்மகன்.
மாகன் - மாகஞ்செய்த சமஸ்கிருதகவி. இவ
மாகாணம் - நாடு, தேசத்தின் உட்பிரிவு.
மாகாணி - ஆழாக்கு அது பதினறிலொரு பங்கு, பட்டணம்படி எட்டிலொன்று.
மாகாதிபன் - இந்திரன், வச்சிரபாணி. [தி.
மாகாத்மியம் - பெருமை, மகிமை,தெய்வசக்
மாகாளம் } தஞ்சாவூரைச் சேர்ந்தபாடல்
மாகாளயம் } பெற்ற ஓர் சிவதலம்.
மாகாளன் - அயன் படைத்தலைவன், மகா சாத்தனுடைய பிரதான கிங்கரன், சிவ கணத்தலைவரில் ஒருவன்.
மாகாணி-சத்தமாதர்களிலொருத்தி,களாவி ழுது,மாவலிக்கிழங்கு, மாகாளிக்கிழங்கு.
மாகாளிக்கிழங்கு - மலைநன்னரிக்கிழங்கு.
மாகாளிசரண் - களாவிழுது. மாகாளி.
மாகாளேசுவரர் - திரு இரும்பை மாகாளத் திலே கோயில் கொண்டிருக்கும்சுவாமி.
மாகிரன் - இந்திரன், ஜராவதன்.
மாகினம் - இராச்சியம், மாகாணம், தேசம்.
மாகு - வலை, வலையிற் கோத்தமணி.
மாகுத்தம் - பூனைக்காலி, செடிவகை.

மாகுலர் } வேடர், கிராதகர், வனசரர்,
மாகுலவர் } கானவர், வியாதர்.
மாகுலி - உயர்குடியிற் பிறந்தவள். [ரன்.
மாகேசன் - இந்திரன், மகேசன், மகேஸ்வ
மாகேசி - துர்க்கை, காளி, பகவதி. [கை.
மாகேஸ்வரபூசை-சிவனடியார்க்கு உணவிடு
மாகேசுவரி - சத்தமாதர்களி லொருத்தி.
மாகேந்திரம் - நித்திய யோகத்தொன்று, மணப் பொருத்தம் பத்திலொன்று.
மாகேந்திரி - சத்தமாதரி லொருத்தி.
மாகேயம் - பவளம்,தூப்பு,பிரவாளம்,துகிர்.
மாகேயன் - நரகாசுரன், பூ புத்திரன்.
மாகேயி } பசு, சுரபி, ஆ, தேனு, கூலம்,
மாகை } கபிலை, மாட்டினம்.
மாக்கசங்கு - இந்துப்பு, மணிமந்தரம்.
மாக்கடு - சுரத்துக்கடுக்காய். [சேணம்.
மாக்கருவி - குதிரைக்கல்லணை, குதிரைச்
மாக்கல் - பலப்பமுதலிய செய்தற்குரியகல்.
மாக்கள்-பிள்ளைகள், விலங்குகள், மக்கள்.
மக்கள்பத்தோன்-சுக்கிரன், மழைக்கோள்.
மாக்காப்பு-விக்கிரகங்கட்குஅபிஷேகதிரவி யமா யுபயோகிக்கும் அரிசி மா.
மாக்கிகம் - நிமிளை, தேன்.
மாக்குமாக்கெனல் - கதறும் ஒலிக்குறிப்பு, வலிமையோடு செய்தற்குறிப்பு.
மாக்கோலம் - அரிசிமாவாலிடும் கோலம்.
மாங்கலியம் - மங்கல சாதநம். [நாண்.
மாங்கலியசூத்திரம் - தாலிக்கொடி, மங்கல
மாங்கலியச்சரடு - மாங்கலியசூத்திரம்.
மாங்கலியதந்து - மாங்கலியசூத்திரம்.
மாங்கல்லியதாரணம் - தாலிகட்டும்சடங்கு.
மாங்கல்லியப்பிச்சை - தாலிப்பிச்சை.
மாங்கல்லியம் - தாலி, திருமாங்கலியம்.
மாங்களிறு - மாஞ்செடி, மாவிளங்களிறு.
மாங்கன் - ஓரீரல், ஓர்மீன், மாங்காய்.
மாங்காடு -குடமலைப்பக்கத்துள்ளதோர் ஊர்.
மாங்காயீரல் - ஓரீரல், மூத்திராசயம்.
மாங்காய் - மாவின்காய், கழுத்தணியுறுப்பு வகை, விலங்குகளின் மூத்திராசயம்.[ம்.
மாங்காய்நாண் - மாங்காய்மாலை,ஓர்ஆபரண
மாங்காய்ப்பட்டை - மாதர் காலணிவகை.
மாங்காய்ப்பால் - மாங்காயில்வடியும் பால், மாம்பழத்தின் சாறு.
மாங்காய்ப்பூட்டு - ஓர்வகைப்பூட்டு. [தணி.
மாங்காய்மாலை - மாங்காய்வடிவமானகழுத்
மாங்கிசம் - மாமிசம், ஊன், தசை.
மாங்கிஷசச்சிலை - ஈரற்கல்லு,மாமிசச்சிலை.
மாங்கிஷபட்சணி - மாமிசம் புசிப்போன், மாமிசபட்சணி, ஊனுண்ணி.

மாங்கிஷம் - மாங்கிசம், மாமிசம், தசை.
மாங்கிஷவாசகன் - கத்தூரி மிருக எலும்பு.
மாங்குடிமருதனார் - இவர் கடைச்சங்கப்புல வருளொருவர், மதுரைக்காஞ்சிபாடியவர்.
மாங்கொட்டை -மாம்பழத்தின்கொட்டை.
மாசகந்தாயம் - மாதா மாதம் பாகம் பாக மாகச் செலுத்தும் தொகை.
மாசக்காயுப்பு - உப்புவகை- [செடிவகை.
மாசக்காய் - ஓர் மருந்துச்சரக்கு, மாசிக்காய்
மாசங்கம்-சூதகம், மாதவிடா. [சிவராத்திரி.
மாசசிவராத்திரி - ஒவ்வொருமாதமும்வரும்
மாசச்சந்துக்கட்டு - மாதமுடிவிலுள்ள ஈட்கன். [ஏற்படும் மாதத்தவறு.
மாசப்பிசகு - கர்ப்பகாலம் தெரியாததால்
மாசப்பிரவேசம் } மாதசங்கிரமணம், மாத
மாசப்பிறப்பு } சங்கிரான்தி, மாசத் தொடக்கம். [மல்.
மாசமாசம் - மாதந்தோறும், மாதம் தவறு
மாசமானம் - வருடம், வருஷம், ஆண்டு.
மாசம் - மாதம், திங்கள், மதி.
மாசரம் - கஞ்சிமேலேடு, கஞ்சி ஆடை.
மாசலம் - நோய், முதலை. யான்.
மாசலன் - கள்வன், திருடன், மாசுடை
மாசவிடாய் - மாதவிடாய், மாசஅங்கம்.
மாசறல்-குற்றந்தீர்தல். [லாகிரிப் பண்டம்.
மாசனம் - பிராமணர், பெரியோர், ஒருவகை
மாசாதம் - கூழ், மாக்களி.
மாசாத்தர் - திருக்கைலாச ஞானவுலாவை அங்கே கேட்டுவந்து திரிப்பிடஹரிலே வெளியிட்டவர். [வன்.
மாசாத்தன் - கண்ணகை தந்தை, அருகதே
மாசாத்துவான் - கோவலன் தந்தையின் இயற்பெயர். இவன் கோவலன் இறந்ததை மாடலன்சொல்லக்கேட்டுத் தன்கையிலுள்ள பொருள் அனைத்தையும்தானஞ் செய்துவிட்டுத் துறவு பூண்டவன். [மை.
மாசாந்தம் - அமாவாசியை, பெரும் பொறு
மாசாந்தரம் - மாசக்தோறும், மாதாமாதம்.
மாசாமாசம் - மாசமாசம், மாசாந்தரம்.
மாசாலக்கள்ளி - மாயக்காரி. [ஏமாற்று.
மாசாலம் - ஓர்மாயாவித்தை, சிணுங்குகை,
மாசி-ஓர்மாதம், புதுவரம்பு, மகநாள், மேகம்.
மாசிகம் - இறந்தோர்க்கு மாசந்தோறுஞ் செய்யுமோர் கடன், மாசசம்பந்தமாகித் தோன்றுவது, ஓர் மருந்து. [ளினம்.
மாசிகை - பறவை, சிறகர், பட்சியினம், புள்
மாசிக்காய் - மாசக்காய், ஓர் மருந்து.
மாசிங்கம் - கலங்கொம்பு, கலைமான்கொம்பு.
மாசிபத்திரி - ஓர் வகை மருந்துஇலை.
மாசிமகம் - மாசிப்பௌர்ணமியும், மக நட் சத்திரமும் கூடிய புண்ணியதினம்.
மாசியம் - மாசிகம், மாசத்திவசம்.
மாசிரம் - சீக்கிரம், சடுதி, விரைவு.
மாசிலாமணி - குற்றமில்லாத மணிவகை.
மாசிலாமணியீசுவரர் - திரு ஆவடு துறையி லே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர், திருமுல்லை வாயிலில் கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
மாசிலி - கடவுள், மாசில்லாதது, அகன்.
மாசிலிப்பட்டினம் - மசூலிப்பட்டணம்.
மாசு - அழுக்கு, அற்பம், கருமை, குற்றம், பால்வீதி மண்டபம், மழை, மறு, மேகம், இருள், தீமை, மெய்ம்மலம், பித்தநீர், வலைவடம், குழப்பினமா. [சுகம்.
மாசுகம் - பீர்க்கு, கோலம், பீரம் பீர், மிகு
மாசுணக்கங்கணன் } சிவன், அரவாபர
மாசுணக்கச்சையன் } ணன், நாகபூஷ ணன்.
மாசுணம் - பாம்பு, பெரும்பாம்பு.
மாசுண்ணல் - அழுக்காதல், மாசுபடிதல்.
மாசுதீர்ப்பான் - நாவிதன், மயிர்வினைஞன்.
மாசுமறு - குற்றம், அரிப்பு, அரில், ஆசு.
மாசூல் - பயிரின் விளைச்சல், பெருஞ்சூல்.
மாசேனன் - அருகன், கடவுள், குமரன், திருமால்.
மாசேனை - மிகுதி, அதிகம், பெருஞ்சேனை.
மாசை - பொன். [விரதம் இருக்கை.
மாசோபவாசம் - ஒருமாசகாலம் பட்டினி
மாசோபவாசி - மாசப்பட்டினியிருப்பவன்.
மாச்சக்காய் - மாசக்காய், மாசிக்காய்.
மாச்சரியம்-பொறுமை, பகைமை [சோம்பல்.
மாச்சல் - மாய்ச்சல், மிக்கவருத்தம், சாகை,
மாச்சாதம்-மாவால்கிண்டியகூழ், மாக்களி.
மாச்சி - பாம்புகொல்லி, கைவிலங்கு.
மாச்சிலை - மாக்கல்லு, மாவுகல்லு.
மாச்சீர் - நேரசையால் இறும் இயற்சீர்.
மாச்சு - விலங்கு, குற்றம், குச்சி. [சம்.
மாஞாலம் - மாசாலம், உலகம், இப்பிரபஞ்
மாஞ்சம் - மாமிசம், புலால், ஊன்.
மாஞ்சா - காற்றடிக்கயிற்றில் தடவும் கண் ணாடிப்பொடி கலந்த பிசின். [ஞ்சி.
மாஞ்சி - ஓர் வாசனைப்பண்டம், சடாமா
மாஞ்சிட்டம் - சிவப்பு, சிவப்புத் துருக்கல்.
மாஞ்சில் - ஓர் மருந்து, சடாமாஞ்சி.
மாடகம் - வீணைமுறுக்காணி, பிரடை.
மாடகூடம் - உப்பரிகையுள்ள வீடு. [டம்.
மாடக்குழி - விளக்குவைக்குஞ்சுவரறை, மா
மாடபூபதி - கொச்சி யரசர்க்குரிய ஒரு

பட்டப் பெயர். [பறக்கும்புரு.
மாடப்புரு - ஓர்புரு, ககனப்புரு, நெடுநேரம்
மாடப்புருக்கண்ணிறம் - அமுக்கிரு.
மாஷம் - உளுந்து. [வீடு, மாடக்குழி.
மாடம் - உப்பரிகை, உழுந்து, மண்டபம்,
மாடலன் - தலைச்செங்கானத்துள்ள ஓர்ந்த ணன், கோவலனுடைய நட்பாளன் கோவலன் மதுரையில் கொலையுண்டது முதலியவற்றைக்காவிரிப்பூம்பட்டினத்தார்க்குச் சொல்லித் தன் சொல்லால் அவர்களிற் சில நிறந்தமை தெரிந்து அப்பாவத்தைப்போக்குதற்பொருட்டுப் போய்க்கங்கையாடி மீளுகையில் இடையே செங்குட்டுவனைக்கண்டு அளவளாவி வஞ்சி நகரஞ் சார்ந்து, அவனை யாகஞ்செய்யும்படி தூண்டி, அது செய்வித்து அவனை நல் வழிப்படுத்தினவன். [பது.
மாடல் . செய்தல், உளுற்றுதல், போன்றிருப்
மாடவாழை - பேயன்வாழை, பேய்வாழை.
மாடவீதி - கோயிலைச் சுற்றியுள்ள தெரு.
மாடன் - மடையன், ஒரு சிறுதெய்வம்.
மாடாபத்தியம் - கோயில் விசாரனை, மடத்தின் தலைமை யதிகாரம்.
மாடி - அரண்மனை, இக்கட்டு, இரணைப்பல், கோபம், தரித்திரம், குளிர், புடைவையோரம், உபரிகை, ஒரு கிராமதேவதை.
மாடிகை - கவசம், தசனம், சடாரி.
மாடியம் - பாதை, கவசம், மாடிகை. [வீடு.
மாடிவீடு-உப்பரிகையுள்ள வீடு, மேன்மாட
மாடு - அகன்மணி, இடம், இரத்தினம், சீதனம், எருது, செல்வம், பக்கம், பசுப் பொது, பொன், ஓர் எழுநூறு.
மாடுசாய்தல் - மாடுகள் மாலையில் ஒருசேர வீடு நோக்கி வருகை. [செலுத்துதல்.
மாடுசாய்த்தல் - மாடுகளை ஒருசேர ஓட்டிச்
மாடை - அரைவராகனெடைப் பொன், பொன், விரிந்து முன்வளைந்திருத்தல்.
மாடைக்கொம்பன்-உள்வளைந்தகொம்பன்.
மாட்சி } அழகு, பெருமை, நன்மை,
மாட்சிமை } மகிமை, விளக்கம், இயல்பு.
மாட்டடி - குருட்டடி, கடுமையான அடி, மாட்டின் அடிவைப்பு.
மாட்டல் - மாட்டுதல், அழித்தல், மயிர்மாட்டல் என்னும் மாதர்காதணி. [தல்.
மாட்டறைதல் - உறுதியின்கீழ்ப்புறத்தெழு
மாட்டாங்கோல் - மாடோட்டுங்கோல்.
மாட்டாதார் - வலிமையில்லார், பலவீனர்.
மாட்டாமை - இயலாமை. [மாட்டாதார்.
மாட்டார் - ஏலாதார், வன்மையில்லாதவர்,
மாட்டிக்கொடுத்தல் - மாட்டிவிடுதல்.
மாட்டிக்கொள்ளுதல்-சிக்கிக் கொள்ளுதல்.
மாட்டிடையன் - மாடுமேய்க்கும் இடைச் சாதியான், கோ காவலன், கோவலன்.
மாட்டிலையான்-பெரிய ஈ, குறுட்டீ, மாட்டீ.
மாட்டிவிடுதல் - தொழுக்கட்டை முதலிய வற்றிலிணைத்தல், அகப்படுத்துதல். [தல்.
மாட்டிவைத்தல்-மாட்டிவிடுதல், சிக்கவைத்
மாட்டிறக்கம் - ஆற்றிலே மாடிறங்குதுறை, மாட்டின் விலை யிறக்கம். [கறி.
மாட்டிறைச்சி - மாட்டு மாமிசம், மாட்டுக்
மாட்டீ - பேரீ, குருட்டீ, மாட்டிலையான்.
மாட்டு - அடி, சொல், மாட்டென்னேவல்.
மாட்டுக்கட்டை - மாடுகட்டும் தறி.
மாட்டுக்காரப்பயல் - மாடு மேய்க்கும் சிறுவன், மாடுமேய்ப்பவன், உபயோகமற்றவன்.
மாட்டுக்காரன் - மாட்டிற்குரியவன், கூலிக்கு மாடு மேய்ப்பவன். [தை.
மாட்டுக்கிடை - பசுத்தொழுவம், மாட்டு மந்
மாட்டுக்கொட்டகை } மாடு கட்டும் இடம்,
மாட்டுக்கொட்டம் } மாட்டுத்தொழுவம்,
மாட்டுக்கொட்டில் } மாட்டுமந்தை.
மாட்டுணி - பேருணி, இடையுணி.
மாட்டுதல் - அடித்தல், இயலுதல், கடாவுதல், கட்டுதல், சம்மதித்தல், செருக்குதல், பூணுதல், மாளவித்தல், செலுத்துதல், மூட்டுதல், இணைத்தல், தொடுத்தல், விளக்கு முதலியனகொளுத்துதல், எரித்தல், கூடியதாதல், வலிபெறுதல், பிணைத்தல்.
மாட்டுத்தனம் - மிருகத்தன்மை. [தாள்.
மாட்டுத்தாள் - பருக்கன்கடுதாசி, முரட்டுத்
மாட்டுத்தும்பு - மாடுகட்டுவதற்கான கலை யுள்ள புரிக்கயிறு. [யாண பூசனி.
மாட்டுப்பறங்கிக்காய் - சாம்பற்பூசனி, கல்
மாட்டுப்பிலாச்சை - ஊமைச்சி.
மாட்டுப்புத்தி - மிருந்த அறிவீனம்.
மாட்டுப்பெண் - மகன் மனைவி, மருமகள்.
மாட்டுப்பொங்கல் - தைமாதம் இரண்டாம் நாள் மாட்டின் நன்மையைக் குறித்துப் பொங்கலிடும் பண்டிகை.
மாட்டுமூலைக் காளான்-ஓர் காளான்; அது: பசுவின் மூலைபோன்றிருப்பது.
மாட்டுவாடகம்-மாட்டின் நோய்களைப் பற்றிக்கூறுமைவத்திய சாத்திரம். [விடுதல்.
மாட்டுவித்தல் - அழியச் செய்தல், மாட்டி
மாட்டேறிதல் - ஒன்றற்குரிய இலக்கணத்தை அதனைப் பெறற்குரிய மற்றொன்றிற்கும் பொருத்திவிடல்.
மாட்டேறிந்தொழுகல் - ஓர் யுத்தி; அது:

ஒன்றற் குரிய விலக்கணத்தை யதனேப் பெறுதற்குரிய மற்றொன்றற்கு மாட்டிச் சொல்லி நடத்தல். [கடா.

மாட்டேறு - மாட்டெறிதல், எருது, காளை, மாட்டேற்று - குறிப்பு புறத்துச் செலுத்துகை, மாட்டெறிதல், மாட்டெறிந்தொழுகல்.

மாட்டேற்றுதல் - "அதுபோலச் செய்க" என மாட்டெறிதல். [ப்பு.

மாணம் - மாட்சிமை, மிகப்பெருமை, மதி

மாணல் - நன்மை, மாட்சிமை, சிறத்தல்.

மாணவகம் - கல்வி, படிப்பு.

மாணவகன் - அறிவீனன், பிரமசாரி, பிள்ளை.

மாணவம் - பதினாறு கோவையுள்ள முத்தாரம், மாணாக்கன். [சிஷ்யன்.

மாணவன் - பிள்ளை, இளைஞன், பிரமசாரி,

மாணவி - மாணாக்கி, சிஷ்யை. [கள்.

மாணவ்வியம் - சிறுவர் கூட்டம், சிஷ்யர்

மாணாக்கன் - கற்போன். [க்குஞ் சிறுமி.

மாணாக்கி - சிஷ்யை, பள்ளிக்கூடத்துப் படி

மாண்மை - மாட்சிமைப்படாமை.

மாணர் - பகைவர், விரோதிகள், மாற்றலர்.

மாணி - ஆண்குறி, குறள், பிரமசாரி.

மாணிகை - எட்டுப்பலங்கொண்ட நிறை.

மாணிக்கத்தான் - வேங்கி, விலைமாது, பரத்தை.

மாணிக்கத்தியாகர் - திரு வொற்றியூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

மாணிக்கத்தீபம் - விளக்காகக் கருதப்படும் ஒளிமிக்க மாணிக்கம், சிறுதீபம்.

மாணிக்கப்பட்டி - சிவப்புப் பட்டிப்பூ.

மாணிக்கப்பட்டை - கோயிலின் திருமதில் முதலியவற்றில் அடிக்கும் சிவப்புப்பட்டை.

மாணிக்கமின் சேய் - முருகக்கடவுளது படை

வீரருளொருவரான வீரவாகுதேவர். [ரர்.

மாணிக்கமேனிவரதர் - மாணிக்கவரதேசு

மாணிக்கம் - சிவப்புக்கல், செம்மணி; அது: நவமணியிலொன்று, சிவப்புக்கல்.

மாணிக்கவண்ணாச்வரர் - திருமருகலிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.

மாணிக்கவண்ணர் - திருவாழ்கொளிபுத்தூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.

மாணிக்கவரதேசுரர் - திருமாணி குழியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி.

மாணிக்கவல்லியம்மை - திருமாணிகுழியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்.

மாணிக்கவாசகன் - திருவாதவூரன்.

மாணிக்கவாசக சுவாமிகள் - பாண்டிய நாட்டில் திருவாதவூரில் சம்புபாத சிருதருக்குப் புத்திரராவார். இவர் அரிமர்த்தன பாண்டியர்க்காகக் குதிரை கொள்ளச் சென்ற வழியில் சிவபெருமான் ஞானசாரியராக வெழுந்தருளி வந்து உபதேசஞ்செய்தாட் கொண்டருளப் பட்டவர். குதிரை வாங்கும் பொருட்டுக் கொண்டு சென்ற திரவியங்களேயெல்லாம் ஆவிடையார் கோயில் சிவாலயத் திருப்பணிக்காக்கிய துணர்ந்து பாண்டியனு லொறுக்கப்பட்டு நின்ற போது சிவபிரான் நரிகளேப் பரிகளாக்கிக் கொண்டுபோய்க் கொடுத்தவழி அவராற் காத்தருளப்பட்ட பின்னர் பரிகளெல்லாம் நரிகளாக மீளுதலும் பாண்டியனுறுக்க, சிவன் வைகையைப் பெருக்கச் செய்து அதன் கரையை அடைக்க அவரே கூலியாக சென்றார். பாண்டியன் அது அறிந்து உடனே மாணிக்கவாசகரை விடுதலே செய்தான். அவர் பணியினின்றும் நீங்கிச் சீவன் முத்தராளர். கேட்டோரை மனமுருக்கி முத்தி நெறியிற் செலுத்து மியல்பினதாகிய மிகச் சிறந்த 'திருவாசகமும்' 'திருக்கோவையாரும்' பாடியருளியவராகிய சைவ சமயாசாரியர். இவர் பூர்வாச்சிரம நாமம் வாதவூரர், இவர்க்குப் பாண்டியனுல் சூட்டப்பட்ட பட்டப்பெயர் தென்னவன் பிரமராயன்,

கல்லாடத்திலே,

"வெடிவாற் பைங்கட்குறு நரியினத்தினே யேழிடந் தோன்றியின் னூற்கியைந்து வீதிபோகிய வாலுளேப்புரவி, யாக்கிய விஞ்சைப்பிறைமுடியந்தணன்" என்றும்,

"மண்ணகழ்ந்தெடுத்து வழிபுனல்வை யைக்கூறஞ்சுமக்கக்கொற்றூளாகிநரைத் தலேமுதியோளிடித் தடுகூலி கொண் டடைப்பதுபோல வுடைப்பது நோக்கிக் கோமக னடிக்க வவனடி வாங்கி"

என்றும் வருதலாலே, கடைச்சங்கப் புலவராகிய கல்லாடருக்கு முன்னுள்ளவ ரென்பது நிச்சயம். சிவன் வலேவீசிய திருவிளேயாடல் நிகழ்ந்த காலத்தை யடுத்திருந்தவரென்பதும், எந்து, அச்சன், அச்சோ, பப்பு என்பன முதலிய மலேயாளச் சொற்களே அத் திருவாசகத்திலே பிரயோகித்தலால் மலேயாளத்திருந்து வந்து பாண்டி நாட்டிலே குடிகொண்டவரென்பதும் அனுமிக்கக் கிடக்கின்றன. இச் சிவஞானச் செல்வர் சண்டீசரையும் கண்ணப்பரையும் தமக்கு முந்திஞேராகவெடுத்துக் கூறி, அவர் பெருமையைப் புகழுவர். கன்னூல் விளைவெறிந்த கிருஷ்ணன் செயலும் திருவாசகத்திலெடுத்துக்கூறப்

பதிதலின், இவர் கிருஷ்ணன் காலத்துக் குப் பிற்பட்டவரென்பதற் கையஞ்சிறி தமில்லை. திருநாவுக்கரசு நாயனாரே தமது தேவாரத்திலே, நரியைக் குதிரை செய்த அற்புதமெடுத்துக் கூறப்படுதலால் அவர்காலத்துக்கு இவர் முன்னுள்ளவ ரென்பதற்கும் ஆக்ஷேபஞ் சிறிதுமில்லை. திருநாவுக்கரசுநாயனார் காலம், முன்னே சம்பந்தர் என்பதனுட் கூறப்பட்டபடி நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள் ளது. அவர்க்கு இவர் முன்னுள்ளவராத லின் இவர்காலம் நாலாயிரம் வருஷங்க ளுக்கு முன்னுள்ள தென்பது நன்கு துணியப்படும். அது மாத்திரமன்று, திரு வாசகத்தினுள்ளே பிற்காலத்திலே அறி யப்படாத அநேக சரித்திரங்களும், கேள்வித் திரங்களும் எடுத்தோதப்படலாலும், கண் ணப்பர் சண்டீசர்களைத் துதிப்பவர் திரு ஞானசம்பந்தர் முதலியோரைத் துதிக் காமையாலும், "சிரிப்பார் களிப்பார் தே னிப்பார்" என்னுந் திருவாசகத்திலே தேனித்தல் என்னுஞ் சொல்வழக்கும், உவலை முதலிய அரிய சொற்களும் பிற் காலத்து வழக்கின்மையாலும், திருவாச கம், தேவாரத்துக்கும் கடைச்சங்கத்து நூல்களுக்கும் முந்தியதென்பது நன்கு கத்துணியப்படும். இனித் திருத்தொண் டத் தொகையினுள்ளே எடுத்தோதப் படாமையின், மாணிக்கவாசகர் சுந்தர மூர்த்தி நாயனாருக்குப் பிற்பட்டவரெனச் சாதிப்பாருஞ் சிலருளர். அஃதறியாமை யின் பாலதாம். அகஸ்தியர், பதஞ்சலி, வியாக்கிர பாதர் முதலியோரெல்லாம் சிவபக்தியிலும் சிவயோகத்திலுஞ் சிறந்த மெய்யடியார்களாகவும் அவரை யெல் லாந் திருத்தொண்டத் தொகையினுட் கூறுமை யாது காரணமாமோ; அதுவே மாணிக்க வாசகரைச் சேர்த்தோதாமைக் குங் காரணமாம். முன்னர் வெளிப்படாத அடியார் வரலாறுகளே சேக்கிழாருக்கு அருளிச்செய்யப்பட்டன வன்றி முன்னே வெளிப்பட்ட சரித்திரங்களல்ல. மாணிக் கவாசக சரித்திரம் முன்னே ஆலாசியத் திற் கூறப்பட்டது. அது பற்றியே அவர் சரித்திரம் திருத்தொண்டத் தொகையி லும் பெரிய புராணத்திலும் கூறப்படா தொழிக்கப்பட்டது. அவ்வாறே அகஸ்தி யர் பதஞ்சலி, வியாக்கிரபாதர்கள் சரித் திரங்களும் சிதம்பர மான்மியத்திலும் பிறவற்றிலுங் கூறப்பட்டுக் கிடைந்தமை யின் அவையு மொழிக்கப்பட்டன. அற் றேல், சம்பந்தமூர்த்தி நாயனார் சரித்திரம் ஆலாசியத்திற் கூறப்பட்டிருக்கவும் மீள வும் பெரிய புராணத்திலும் திருத்தொண் டத் தொகையிலும் கூறப்பட்டது யாது பற்றியோ வெனின், ஆலாசியத்துள் அச் சரித்திரம் தெளிவாய் வரித்துரைக்கப் படாமையினு னென்க, இதுவே திருத் தொண்டத் தொகையிலும் மாணிக்கவா சகர் எடுத்துக் கூறப்படாமைக்குக் கார ணமாமெனக் கொள்ளுக. இவர் திருவண் ணாமலையிலே, தலவாசஞ் செய்த காலத் திலே அங்குள்ள பெண்கள் வைகறையி லே யெழுந்து சிவதோத்திரஞ் சொல்லிக் கொண்டு அயல்வீட்டுப் பெண்களை எழுப் பி நீராடப்போதலைக்கண்டு, அச்செயலைச் சிவசத்திகள் சிருஷ்டியின் பொருட்டு ஒரு வரையொருவ ரெழுப்புவதாகப் பாவித் துத் திருவெம்பாவையைப் பாடியருளி னர். இப்படியே புறத்தே திகழுகின்ற செயல்களாகிய படையெழுச்சி, சாழல், பொற்சுண்ண முதலியவைகளை எல்லாம் சிவஞானச் செயலாகப் பாவித்துப் பாடி யருளினர். இவருடைய மனமுஞ்செயலு மெங்கே யழுந்திக்கிடந்தன வென்பது:

[யற்க

"எங்கையுனக்கல்லா தெப்பணியுஞ் செய்-
கங்குல்பகலெங்கண் மற்றொன் றுங்காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழி லென்ஞாயி றெமக்கு."

என்பது முதலிய வாக்கா னுணரப்படும். பேரின்பக் கனியாகிய சிவத்தைக்கிடைத் தற்கரிய பேறுக மதித்தார் என்பது,

"ஞானக்கரும்பின்றெளிவைப்பாகை நாடற்
கரிய நலத்தைநந்தாத், தேனைப் பழச்சுவை
யாயினனைச் சித்தம்புகுந்து திக்கவல்ல,
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்தி"

என்னுந் திவ்வியவாக்கானு முணரப்படும். இவருடைய பாடலெல்லாம் ஞானப்பொ ருள் குறித்த வுருவங்களா மென்பதற்கு, "வையகமெல்லா முரலதாக மாமேருவென் னுமுலக்கைகநாட்டி, மெய்யெனு மஞ்சனி றையவட்டி மேதகுதென்னன் பெருந்துறை யான், செய்யத்திருவடி பாடிப்பாடிச் செம் பொனுலக்கை பற்றி, யையனணி தில்லை வாணனுக்கே யாடப்பொற் சுண்ணமிடித்து நாமே"

என்னுந் திருவாக்குச் சான்றும். இனி இவருடைய மெய்ஞ்ஞானபோத வாற்ற லோவென்றூல் கல்லேயுங் கனியவைக்குந் திவ்விய வாய்ச்சொல்லேச் சொல்லென் றுரைத்த லாகாதென்றே 'மாணிக்க வாசகமென' போற்றிப் புகழ்வதாயிற்று. "தாமேதமக்குச் சுற்றமும் தாமேதமக்கு வி திவகையும், யாமாரெம தார்பாசமா ரென் னமாய மிவைபோகக், கோமான் பண்டைத் தொண்ட ரொடுமவன்றன் குறிப்பே குறிக் கொண்டு, போமாறமைமின் பொய்நீக்கிப் புயங்களுள்வான் பொன்னடிக்கே"

இப் பரமோத்தம வாக்கு வேதோப நிஷதங்க ளெல்லாவற்றையு மொருங்கே யளக்குந் தூணியதாம். இப்படியே ஒவ் வொன்று மொவ்வோருபநிஷதமாமின்றி வாளா இலக்கியமன்று. சிதம்பரத்திலே சிவத்தோடிரண்டறக் கலந்தபோது இவ ர்க்கு வயசு மூப்பத்திரண்டு.[யெடுப்பவள்.

மாணிக்கத்தாள் - தாசிகளுள் குடவரிசை

மாணிக்குழி - திருமாணிகுழி ; இது : நடு நாட்டிலுள்ள ஓர் சிவக்ஷேத்திரம்.

மாணிக்குறி- ஆண்குறி; இலிங்கம், கோசம்.

மாணிபத்திரன் - குபேரன் சேனாதிபதி யா கிய ஒரு யக்ஷன், இவன் ராவணனே யெதி ர்த்து அமர்புரிந்த போது இராவணன் தன் கதாயுதத்தால் இவன் தலையை மோத மேல்தலை ஒரு பக்கஞ் சாய்ந்தது. அதனால் இவன் பார்சுவமௌலி யெனப் பெயர் பெற்றான்.

மாணிபந்தம் } உப்பு, கடலமுதம், லவ
மாணிமந்தம் } ணம், சிறுமைக்கட்டு.

மாணை - மாணைக்கொடி. [பெருந்தகைமை.

மாண் - மாட்சிமை, மாணென்னேவல்,

மாண்டது - மகிமைப்பட்டது, இறந்தது.

மாண்டல் - மாட்சிமைப்படுதல், இறத்தல், சிறத்தல், மாளல், சாதல். [டார்.

மாண்டவர் - இறந்தவர், சிறந்தவர், மாண்

மாண்டவி - தசரத புத்திரனாகிய பரதன் பாரி, குசத்துவசன் புத்திரி, மாளவி.

மாண்டவியர் - ஆணிமாண்டவ்வியர்.

மாண்டவ்வியன் - பரமரிஷி. இவரே விது ரனுகப் பிறந்தவர். (விதுரன்காண்க.)

மாண்டார் - இறந்தோர்,பெரியோர், மாட் சிமையுற்றூர், மாண்புடையார்.

மாண்டுகேயன் - (ரி)இந்திரப்பிரமிதிஷேர். இவர் இவருக்கு வேதாத்யயனர்.

மாண்டூகம் } உபநிடதமுப்பத் திரண்டி
மாண்டூக்கியம் } லொன்று.

மாண்பு - அழகு, பெருமை, மாட்சிமை,நன் மை, உயர்வு, கனம்.

மாதங்கதிவாகரன் - ஒரு வடமொழிப் புலவன்.

மாதங்கம் - அரசு, உத்தியாபரணம்,யானை, அரசமரம், இளமை, கடல். [வங்கர்.

மாதங்கர் - சண்டாளர், பாதகர்,கொலைஞர்,

மாதங்கன் - அரசமாதுக்கும் வேடனுக்கும் பிறந்துசெருப்புத்தைப்போன்,கீழ்மகன், வேடன், சண்டாளன். [பெருமான்.

மாதங்காரி - யானையை அழித்தோன், சிவ

மாதங்கி - காளி, துர்க்கை,பார்வதி,மதங்கி.

மாதசங்கிரமணம் } மாதப்பிறப்பு,மாசப்பிர
மாதசங்கிராந்தி } வேசம், தைத்திருநாள்.

மாதசூதகம்-மாதசூரம், மாதவிடாய், பூப்பு.

மாதச்சங்கிரமம் - மாதப்பிறப்பு.

மாதண்டம் - இராசவீதி, பெரும்பாதை.

மாதசூரம் - மகளிர்சூதகம், மாதவிடாய்.

மாதத்தீட்டு - மாதவிடாய், மாதசூதகம்.

மாதநம் - இலவங்கம், பெருஞ்செல்வம்.

மாதப்பிரவேசம் - மாதச் சங்கிராந்தி.

மாதப்பிறப்பு-சூரியனேரிராசியினின்று மற் ரொரிராசிக்குச்செல்லுஞ் சமயம், மாதத் தின் முதனாள், மாசப்பிரவேசம்.

மாதப்புரு - ஓர் நீர்ப்புள், மாடப்புரு.

மாதம் - கடைதல், கராம்பு, கொல்லல், சந் தோஷம், பாதை,பெருமை,மதம்,மாசம்.

மாதராள் - மாதர், பெண்கள், மகளிர்.

மாதரி - காளி, மதுரையைச்சார்ந்த ஆயர் பாடியிலிருந்த இடைச்சியர் தலைவி. இவள் கோவலன் கொலையுண்டிறந்ததை யும், கண்ணகி துன்புற்றதையுங் கேட்டு வருத்த முற்றுத் தீயில் விழுந்திறந்தவள்.

மாதர் - அழகு, ஆசை,இசைச்சொல்,பெண் கள், பொன், காதல், ஓரிடைச்சொல்.

மாதர்கள் - சிவனுக்கு எவற்குரிய மாதர்கள் இப்பெயர் பெறுவார்கள், அவர்கள் பிரா மி, மஹேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி, சாமுண்டி, என எழுவர், சிலர் மதப்படிசண்டியோடு அஷ் டமாதர் எனவும் படுவர்.

மாதர்குணச்சலம் - கெந்தகம், கந்தகம்.

மாதலம் - மகாதலம், பெரும்பரப்பு.

மாதலி - இந்திரன்சாரதி, தேர்ப்பாகன்.

மாதலுங்கம் - மாதளை, மாதுலுங்கம்.

மாதவபிரியம்-செம்பூசினி, வெள்ளரிவகை.

மாதவம் - இனிமை, கள், தவம், வசந்த காலம், இளவேனில், பெருந்தவம்.

மாதவர் - முனிவர், மகாதபசுடையவர்.

மாதவமுதி - மாதக்கடை, மாசமுடிவு.
மாதவன் - விஷ்ணு, மதுவமிசத்தில் வந்தவன், கிருஷ்ணன், பரசுராமன், வசந்தன்.
மாதவாசாரியர் - வித்தியாரணியர் காண்க.
மாதவி - அருச்சுனன்மனைவி, ஓர் கொடி, கண்ணன் மனைவி, கள்ளிமையட்டவெல்லம், குருக்கத்தி, சீனி, துளசி, துர்க்கை, ஊதிகை, நாடகக்கணிகை, வசந்தகால மல்லிகை, யயாதிபுத்ரி; இவள்: காலவனை மணந்து அஷ்டகன் முதலியோரைப் பெற்றவள். ஒருகாலத்தில்இந்திரன்சபையில் இந்திரன் மகளாகிய சயந்தன் உருப்பசியைக்காமுற்றான். அதைக்கண்ணுற்ற அகத்தியர்அவர்களுக்குச்சாபம்கொடுக்க அதன்படி சயந்தனும் உருப்பசியும் விந்தமலையில் மூங்கிலாகவும், காஞ்சி நகரத்திலே தேவகணிகையாகவும்பிறந்தனர்.என் பதுசிலப்பதிகாரம், உருப்பசி காஞ்சி நகரில் மாதவிஎன்னும்பெயர் கொண்டாள், அவள் மரபிற் பிறந்தவளே கோவலன் காதற்பரத்தையாகிய மாதவியாவாள்.
மாதவிகை - வசந்தமல்லிகைக்கொடி.
மாதவிகொழுநன்-அருச்சுனன், கண்ணன்.
மாதவிசேஷம் - மாதந்தோறும் நடக்கும் விழா, முதலிய மகிழ்ச்சி நாட்கள்.
மாதவிடாய் - மாதத்தீட்டு, மாதப்பெளடை.
மாதவிடை - மாதத்தீட்டு, மாசவிடாய்.
மாதவியசங்கிதை - காலநிர்ணயம், வித்யாரண்யர்செய்ததஜோதிஷநிரந்தம்இதுவே.
மாதவியம் - பராசரஸ்ம்ருதி வியாக்யானம், இது மாதவாசாரியர் செய்தது.
மாதளை - ஓர்மரம், பீசபூரம், மாதுளங்கம்.
மாதளைச்சிலை - மாந்தளிக்கல், சிவப்புக்கல்.
மாதறி - விட்டம், விட்டம் உத்திரம்முதலியவற்றிற்கு உதவும் பெரிய மரத்துண்டு.
மாதனம் -கராம்பு, கிராம்பு, மிருகநிதி.[வன்.
மாதன்-வித்தியாதனங்களாற் கர்வித்திருப்ப
மாதா - தாய், சரசுவதி அறிபவள், இலக்குமி, துர்க்கை, உமாதேவியார்; இவர்:உலகத்தை யீன்றளித்தலால் இப்பெயர் உவமையாகு பெயர், அளப்பவள். [ன்று.
மாதாசை - பெண்ணாசை, மூவாசையி ஞெ
மாதாதபங்கி-திருவள்ளுவநாயனார்.[மாதம்.
மாதாந்தம் - மாதவமுதி, மாசாந்தம், மாதா
மாதாந்தரம் - மாதந்தோறும், மாதாந்தம்.
மாதாமஹன் - தாயைப்பெற்றபாட்டன், மாதாவுடைய பிதா. [மஹி.
மாதாமஹி - தாயைப்பெற்றபாட்டி மாதா
மாதானுபங்கி - திருவள்ளுவ நாயனார்.
மாதி -மா, வட்டமாயோட்டல், கிரகச்சுற்று.
மாதிகம் - குதிரைமார்க்கம், குதிரைபோம் வழி, பெண்ணுலகம் எனவுமாம்.
மாதிசை - நான்கு திக்குகள், மகாதசை.
மாதிபோதி - நெருஞ்சில், நெருஞ்சிவகை.
மாதிமை - தகுதி, காதல், மாமை. [லர்.
மாதிரக்காவலர்-திக்குப்பாலகர், திசைகாவ
மாதிரம் - ஆகாயம், திசை, பூமி, மண்டலம், மலை, யானை, மண்டிலம், வட்டம்.
மாதிரவாடையான் - சிவன், பெத்தமூர்த்தி.
மாதிரி - அதிவிடயம், அதிவிடை, மாதிரிகை, திணுசு, தன்மை. [மாதிரி.
மாதிரிகை-சாயல், மூலப்பிரதி, மாதா, விதம்,
மாதிரு - ஆகாயம், இரேபதி, இலக்குமி, பசு, பார்ப்பனிச்சி, பூமி, மாதா, இரேவதி.
மாதிருகஜிதன் - பரசுராமன், திருமாலவதாரத்தொன்று. [புணர்கை.
மாதிருகமநம் - தாயைப்புணர்தல், தாயைப்
மாதிருகாசுதன் - அறிவீனன், மூட்டாள்.
மாதிருகாதுகன் - இந்திரன், ஐராவதன்.
மாதிருகை - அரிவாரி, கைத்தாய், தேவி, மாதா, நெடுங்கணக்கு. [வமிசம்.
மாதிருகோத்திரம் - மாதாவமிசம், தாயின்
மாதிருசாசிதன் - அறிவீனன், மூடன். [னம்.
மாதிருதத்தம்-தாயாற்கொடுக்கப்பட்ட சீத
மாதிருமுகன்-அறிவீனன், மாதிருசாசிதன்.
மாது - அசைச்சொல், (உ-ம்) விளிந்தன்று மாதவர்த்தெளிந்தவென்னெஞ்சு. குற்றம், பெண், விருப்பம், காதல், பெருமை, அழகு.
மாதுகரம்-பிரமச்சாரிபிச்சை, வண்டுகள்பல மலர்களினின்றுதேனைச்சேர்ப்பதுபோல் பல்வீடுகளிற் சென்றுவாங்கும் பிச்சை.
மாதுகரி } மாதுகரம், பிரமசாரி
மாதுகரிபிச்சை } பிச்சை.
மாதுக்களெழுவர் - சத்தமாதர்கள். [கம்.
மாதுங்கம் - கொம்மட்டிமாதளை, மாதுளங்
மாதுங்கராகம் - மருதப்பண்வகை.
மாதுபங்கன் - சிவன், பார்வதிபாகன்.
மாதுபாகம் - புட்பராகம், பெண்பக்கம்.
மாதுபாகன் - சிவன். [தாயின் பாட்டன்.
மாதுப்பிதாமகன் - மாதாவுடையபாட்டன்,
மாதுப்பிரபிதாமகன் - தாயின் கொட்பாட்டன், பாட்டன்மார் வகை.
மாதுமை - பெண்டன்மை, அறிவின்மை.
மாதுமையம்மை-திருக்கோணமாமலையிலே கோயில்கொண்டிருக்கும்தேவியார்பெயர்.
மாதுரம்-மல்லிகைவகையிஞென்று. [னது.
மாதுரி-சாராயம், மதுவருக்கம், இனிமையா
மாதுரியம்-மிருமதுரம், இனிமை, இன்சுவை

மாதுரியர் - வீவேகிகள், சாதுரியர்.
மாதுரியவசனம்-இன்சொல்,மிருதுவசனம்.
மாதுரு - மாதா, தாய், பெற்றவள்.
மாதுருகத்தி - தாய்க்கொலை, மகாபாவம்.
மாதுருகமனம் } ஈன்றாள்மருவல்;இது: மா
மாதுருகணரம் } பாதகமென்பதினொன்று.
மாதுருகோத்திரம் - தாய்வழிச்சுற்றம்.
மாதுருபூதர் } திருச்சிராப் பள்ளி
மாதுருபூதேசுவரர் } தாயுமானேசுரர்.
மாதுருமட்டை - விசாள்மட்டை.
மாதுலங்கம்-மாதளை, கொடிமாதுளை, கொம்மட்டி மாதுளை, மாதுளுங்கம்.
மாதுலம் - ஊமத்தை, உன்மத்தம்.
மாதுலர் - மாமன்மார், தாய்வழிச்சுற்றம்.
மாதுலன் - மாமன், தாயுடன் பிறந்தவன்.
மாதுலா } மாமன் மனைவி,அத்தை, தாய்
மாதுலானி } வழிச்சுற்றம். [லானி.
மாதுலி - மாதலி, மாமன்மனைவி, மாது
மாதுலுங்கம் - மாதளை,மாதுளை, மாதுளம்.
மாதுலை - மாமி, மாதுலன் மனைவி.
மாதுவசை - பெண்வசம்பு, வசம்புவகை.
மாதுவம் - கள், மதுவருக்கம், மதுபர்க்கம்.
மாதுளங்கம் } மாதளை, மாதுலுங்கம், மாது
மாதுளம் } ளுங்கம். [மாதளை.
மாதுளுங்கம் - மாதளைமரம், மாதுலுங்கம்,
மாதுளை - மாதலை, பேரெலுமிச்சை.
மாதுறுப்பு - உத்தியாபரணம்,ஸ்திரீகளணியும் உத்தியென்னும் தலையணியினொன்று.
மாதுகரம் } மாதுகரம், பிரம சாரிபிச்
மாதுகரி } சை. [லொருவன்.
மாதேவன் - சிவன், பன்னிருருத்திரரி
மாதேவி - பார்ப்பதி, அரசபத்தினி, செங்கழுநீர், இலக்குமி, பட்டமகிஷி.
மாதேவியம்மை - திரு அம்பர் மாகாளத்திலே கோயில்கொண்டிருக்கும்தேவியார்.
மாதை - தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள சிவஸ்தலமான திருவாமாத்தூர்.
மாதைவேங்கடேசுரன்-இந்தப்பிரபு தமிழ்ப் புலவர்களுக்குப் பரமோபகாரியாயிருந்து தமிழை வளர்த்த அவதார புருஷன். ஒரு கவிக்கு ஆயிரம்பொன்னுகத் தொண்ணூற்றொன்பது கவிக்குக் கொடுத்து நூறுவது கவிக்கு நூறுயிரம் பொன் கொடுத்து ஒரு பிரபந்தங்கொண்ட பிரபு சிகாமணி யிவனே, இது நோக்கியே படிக்காசுப் புலவர் தமது தொண்டைமண்டல சதகத்தில், "எல்லப்பன் என்னும் செய்யுளிலே," மாதை வேங்கடேசுரன் போல் வரிசை செய்தான் என்று புகழ்ந்திருக்கின்றனர்.
மாதொருபாகனார் } சிவபெருமான், பார்
மாதொருபாகன் } வதிபாகன், மாதுபங்கி
மாதோ-அசைச்சொல். [மனுஷ்டித்தல்.
மாதோபவாசம் - ஒருமாத காலம் உபவாச
மாதோயம்-பெருநீர், கடல், சமுத்திரம்.
மாத்தகை-மிகுசிறப்பு, மிகுதகை, பெருந்தகை, பெருந்தகையுள்ளவன். [வான்.
மாத்தாண்டன் - மார்த்தாண்டர், சூரியபக
மாத்தான் - பெரியோன், விரோதி.
மாத்திக்கு - முத்திநெறி, நித்தியலோகம்.
மாத்தியாகி-ஞானிகளிலோர் வகையினர்.
மாத்தியானம்
மாத்தியாணிகம் } மத்தியானம், மத்தி
மாத்தியாண்ணம் } யான வந்தனம்.
மாத்திரத்தில்-உடனே.[பம்,மட்டும்,தும்பி.
மாத்திரம்-அளவு, தனிமை, பரிமாணம்,அற்
மாத்திரி - பாண்டுமகாராஜனுடைய இரண்டா மனைவி, மத்திரன் மகள், சல்லியன் தங்கை, இவள் தன் கணவனோடே உடன் கட்டை யேறினவள், நகுலசகாதேவர்கள் இவள் வயிற்றிற் பிறந்தவர்கள்.
மாத்திரை-அளவு, அற்பம், காதணி, கால நுட்பம், காலவிரைவு, குளிகை, குற்றுயிரெழுத்து, பாக்கியம், பரிமாணம், கணப்போது, கண்ணிமைத்தல் அல்லது கைந்நொடித்தலளவான காலம்.
மாத்திரைக்கோல்-அளவைக்கோல், அளவுகோல், மந்திரவாதியின் கைக்கோல், சித்தர் முதலியோர் கையிற் கொள்ளும் மந்திரக் கோல், யோகதண்டம்.
மாத்திரைச் சுருக்கம்-ஒரு பொருள் பயந்து நிற்பதோர்சொல் லொரு மாத்திரை குறைய வேறோர் பொருள் பயக்கப் பாடுவது. (உ-ம்) எரி, எரி எனவரும்.
மாத்திரைவருத்தனம் - ஒருபொருள் பயப்பதோர்மொழி யொருமாத்திரை கூடப்பிறிதோர்பொருள் பயப்பது, (உ-ம்) ஒதி, ஒதி.
மாத்து-வரிசை,செருக்கு,மகத்து,பெருமை.
மாத்துவம்-துவைதமதம்,மாத்வநூல். [கள்.
மாத்துவா-மத்துவர்மதத்தினரான துவைதி
மாத்துவிகம் - இலுப்பைப்பூச் சாராயம்.
மாத்மீகன்-அறிவும் அறியப்படு பொருளும் சூனியமென்றும், அதனாலே பிரபஞ்சம் தோன்றுதென்றும் சொல்பவன்.
மாத்ரி-பாண்டுராஜன் மனைவி, வசம்பு.[தை.
மாத்ரீபதி - பாண்டுராஜன், பாண்டவர் தந்
மாத்ரு - மாதுரு, மாதா, தாய் வருக்கம்.
மாத்ருகாதுகன்-இந்திரன், மாத்ருதுரோகி.
மாத்ருகேசடன்-மாமன், தாயின்சகோதரர்.

மாத்ருநந்தனன் - முருகன், அறுமுகன்.
மாத்விகம்-இலுப்பைப்பூச் சாராயம்.
மாநக்கஞ்சார நாயனார் - இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களு ளொருவர்.
மாநசபூசை-மனப் பூசை, மானதபூசை.
மாநசவாவி-மாநசதடாகம், ஆகாயகங்கை.
மாநடன்-சிவன், பெரிய நடனக்காரன்.
மாநதண்டம்-அளவைக்கோல். [ஒரு வாவி.
மாநதமடு-பிரமாவின் மனத்தாற்றோன்றிய
மாநவன்-பாலகன், மனிதன். [டப்பெண்.
மாநவி - சுவாயம்பு, மநுவின் மகள், மாநு
மாநவ்யம் - மானுடத்தொகுதி, மானுடவர்.
மாநாகம்-ஓர் பாம்பு, ஆதிசேஷன், வாசுகி.
மாநாய்கன்-கண்ணகி தந்தை, இவன் கோவலன் கொலை யுண்டதையும், கண்ணகி துன்புற்றதையும் மாடலன் கூறக்கேட்டுத் துன்புற்றுத் தன் பொருளையெல்லாம் தானஞ்செய்துவிட்டுத் துறவு பூண்டவன்.
மாநிலம்-பூமி, பூவுலகம், தராதலம்.
மாநிறம் - பொதுநிறம், மட்டநிறம்.
மாநுடன்-மனிதன், மாந்தர், மக்கள். [கை.
மாந்தக்கொதி - ஓர்சுரம், குழந்தைநோய் வ
மாந்தசன்னி - ஓர் நோய், மாந்தத்தால் இது குழந்தைகளுக்கு வரும் சன்னி. [திவகை.
மாந்தசுரம்-மாந்தக்கொதி, குழந்தை வியா
மாந்தப்புல் - ஓர் புல், காவட்டம் புல்.
மாந்தம் - ஓர் நோய், மந்தம், அசீரணம்.
மாந்தரஞ்சேரலிரும்பொறை-சேரருள் ஒருவன், இவன் பராசரன் என்னும் அந்தணனுக்குப் பரிசு கொடுத்தவன் ஆவான்.
மாந்தரன் - ஒரு பழைய சேரவரசன்.
மாந்தர் - ஆண்மக்கள், மனிதர், மானுடர்.
மாந்தலை-மாம்பழப்புளட்டு.
மாந்தல்-அவிந்தடங்கல், உள்ளழிதல்,குடித்தல், புசித்தல், இறுமாந்தல். [ஞென்று.
மாந்தளிர்-மாமரத்துளிர்; இது துவர் பத்தி
மாந்தளிர்க்கல் - ஒருவகை இரத்தினம்.
மாந்தளிர்ச்சிலை - கற்காவி, காவிக்கல்.
மாந்தளிர்நாணன் - மன்மதன். [கல்.
மாந்தளிர்ப்பச்சை-கொக்குக்கல், சிலைமான்
மாந்தன் - ஆண்மகன், நமரை வாழை.
மாந்தா) (இக்ஷ்வா) இரண்டாம் யுவநாசு
மாந்தாதா) வன் புத்திரன், யுவநாசுவன் புத்திரனைக் குறித்து ஒரு இந்திரயாகஞ் செய்தான். அந்த யாகத்தில் மனைவிக் கென்று மந்திரித்துவைத்த நீரை அறியாமல் குடித்துவிட்டான். அதனால் அவன் வயிற்றில் கருப்பமுண்டாயிற்று. அவன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு குழந்தை பிறந்தது. அதற்கு இந்திரன் தன் விரலைப் பான்முலையாகக் கொடுத்து வளர்த்தான். இக்காரணத்தால் அச்சிசுவிற்கு மாந்தாதா என்று பெயருண்டாயிற்று. இவன் மனைவி சசிபிந்து, இவன் மகன் விந்துமதி, மாந்தாதா புருகுற்சன் அம்பரீஷன் முசுகுந்தன் என்னும் மூன்று புத்திரரையும் ஐம்பது புத்திரிகளையும்பெற்றவன். சௌபரியென்னும் முனிவன் இந்த ஐம்பது பெண்களையும் மணம் புரிந்தான். இவன் சூரியவமிசத்திற் புகழ்பெற்ற ஓர்அரசன்.
மாந்தாதுரு - ஓரரசன். [ன்று.
மாந்தாளிப்பச்சை-பச்சைக்கல்வகையி ஞை
மாந்தி-ஓர் கலியாணச்சடங்கு, குளிகன், மாமரம். [குடிமயக்கங் கொண்டிருக்கை.
மாந்தியம்-மந்தமானது, மந்தமா யிருக்கை,
மாந்திரம்-சைவாகமத்தினுள் ஒரு பகுதி.
மாந்திரிகம்-மாந்திரீகம், மாந்திரவாதம்.
மாந்திரிகன்-மந்திரவாதி. [மாந்திரிகர்.
மாந்திரியர் - மந்திரவாதிகள், மாந்திரீகர்,
மாந்திரீகம்-மந்திரபலத்தால் விசேஷ சக்தியைச் செலுத்தும் வித்தை, மாந்திரிகம்.
மாந்திரீகன் - மந்திரபலத்தால் விசேஷ சக்தியைச் செலுத்துபவன், மாந்திரியன்.
மாந்துதல் - மாந்தல், உண்ணல், குடித்தல், அனுபவித்தல், வருந்துதல், அவிந்தடங்குதல், ஊக்கமழிதல், இறுமாந்திருத்தல்.
மாந்தை - ஓரூர், ஓர் நோய், உளமாந்தை.
மாபத்தியன் - காமன், மாமகன்.
மாபலன் - காற்று, கொண்டல், சதாகதி.
மாபலி - (பலிச்சக்கரவர்த்தி காண்க.)
மாபாடியம் - பேருரை, பாணினி சூத்திரங்களுக்குப் பதஞ்சலியார் செய்தபேருரை.
மாபாதகம்-மகாபாதகம், கொடும்பாதகம்.
மாபாரதம்-மகாபாரதம்,பாண்டவர்சரிதை.
மாபாலிவாணன் - மாபலிச் சக்கரவர்த்தி.
மாபாவி - கொடும்பாவி, மாபாதகன்.
மாபானம் - அளவு, மானம்.
மாபுராணமுடையார்-யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரு ளொருவர். [நூல்.
மாபுராணம் - இடைச்சங்ககால இலக்கண
மாபுலி - சிங்கம், வயமா, வேங்கை.
மாபுறயாகம்-வெளிப்பூசை, இல்லறதருமம்.
மாபுற்பாகம் - வெளியயாங்க சிவபூசை.
மாபூதி - சத்தரசகி ஞென்று.
மாபெலி - யாளி, பூட்கை, அறுகு, தகர்.
மாபெலை - பார்வதி, பராசக்தி, உமை.
மாப்பலகை - மாக்கற்பலகை, கற்பலகை.
மாப்பிடி - மாப்பிடிப்பு, மாவினுற் பிடிக்கப்

பட்ட பணியாரம், மசவிளக்கு மா.

மாப்பிள்ளை - மணவாளப் பிள்ளை, பெண்ணின் கணவன். மைத்துனன், மாமன் மகன், மாமிமகன், தங்கை புருஷன், மலையாளம் முதலிய இடங்களில் வாழும் ஒரு சார் மகம்மதிய வகுப்பார், மலையாளத்திலுள்ள கிறிஸ்தவருக்கும் அரபியருக்கும் வழங்கும் பட்டப்பெயர், மந்திரக் கிரியைகளில் மாவினாற் செய்துவைக்கும் உருவம், மைத்துனற்கு வழங்கு முறை.

மாப்பிள்ளைக்கடா - பொலி யெருது.

மாப்பிள்ளைமுறுக்கு-மணமகனிடத்துக் காணப்படும் பிகுவான நடத்தை.

மாப்பிள்ளைவீரன் - ஒரு கிராம தேவதை.

மாப்பு - மிகுதி, மீன்றிரள், மன்னிப்பு.

மாப்புவிடுதல்-மன்னித்தல், மாப்பு. [ளம்.

மாமகக்குளம் - கும்பகோணத்திலோர் கு

மாமகம் - (மகாமகம் காண்க) மாசிமகம், மாமாங்கம், மகாமகம்.[மகன்,மன்மதன்.

மாமகன் - அம்மான், பிசுனன், திருமகளின்

மாமடி } மாமன், மாமனார், மனைவியின்

மாமடிகள் } தந்தை. [இலக்குமிபதி.

மாமணாளன்-திருமால், திருவின் மணாளன்,

மாமணி - மாணிக்கம், உயர்ந்த கெம்பு.

மாமரம் - மரவகை, மகாகாலம்.

மாமருத்துநூலோர்-வைத்தியர், பண்டிதர்.

மாமல்லபுரம் } மாபலிபுரம், மாவலிபுரம்,

மாமல்லை } கடன்மல்லை. [தந்தை.

மாமனார் - கணவன் அல்லது மனைவியின்

மாமன் } அத்தைகொழுநன்,அம்மான், புரு

மாமா } ஷனின் தந்தை, மனைவியின் தந்தை.

மாமாங்கம் - (மகாமகம் காண்க.)

மாமாத்தியர் } வைத்தியர், பண்டிதர், மரு

மாமாத்திரர் } த்துவர். [கு, மாய்மாலம்.

மாமாத்து - மிகப்பெரியது, பெருஞ்செருக்

மாமாயி-துர்க்கை, மகாமாயி.

மாமாயை - பார்வதி, சுத்தமாயை.

மாமாலம் - பெருவஞ்சனை, பாசாங்கு.

மாமாலை - செடிவகையினொன்று.

மாமி-அம்மான்மனைவி,பிதாவின்சகோதரி, மனைவியின்றாய், கணவன் தாய்,அத்தை.

மாமிசகந்தி - செந்நிறமுள்ள அரதனவகை.

மாமிசகிரந்தி - ஸ்தனம்; இது: துறவிகள் வெறுப்பால் இவ்வாறு கூறுவது. [ணி.

மாமிசதாரி - ஊன்றின்போன், புலாலுண்

மாமிசசிலை-கார்நிறக்கல், கருநிறக்கல்வகை.

மாமிசபட்சணம்-ஊனுணவு.[ணும்விலங்கு.

மாமிசபட்சணி-ஊனுண்போன், புலாலுண்

மாமிசபேதி - ஓர் பூடு; இது:மாமிசத்தைக் கரைக்கவல்லது, பப்பாளி.

மாமிசம்-இறைச்சி, பலலம், ஊன், புலால்.

மாமிசி - சடாமாஞ்சில்,சடாமாஞ்சி.

மாமிசோத்தானம் - உயிர்த்தெழுதல், உடலெடுத்தல், முதலியன.

மாமியார் - மாமி, மனைவியின் தாய்.

மாமிலாடன் - கடைச்சங்கமருவிய புலவர்.

மாமுகத்தவன் } விநாயகர், யானைமுகன்.

மாமுகவன் }

மாமுகன்கை - யானைமுகனின் ஐந்து கை.

மாமுடி - நெட்டி, தக்கை, சடை.

மாமுனி } அருகன், பெருந்துறவி, வசிட்

மாமுனி } டன், நாயுருவி, அகத்தியன்.

மாமூலனார் - இவர் கடைச்சங்கப்புலவருளொருவர். இவர் "பேர் மூலமுணருமா மூலர்" என்று ஆன்றோரால் புகழப் பட்டவர்.

மாமூல் - புராதனவழக்கம், முறைமுறை.

மாமேதம் - அசுவமேதம், மகாயாகம்.

மாமேரு - மகாமேரு, மகாமேரு பருவதம்.

மாமை-அழகு, துன்பம், மருகிறம், மேனி, நிறம், அரித்துவாரம்.

மாமோகம் - ஐம்புலருகர்ச்சி. [யிலொன்று.

மாம்பழக்கட்டு - புடைவை உடுக்கும் வகை

மாம்பழக்கவிச்சிங்கநாவலர்-இவர்சேதுபதி சமஸ்தானத்தில் பொன்னுசாமித் தேவர் காலத்திலிருந்த ஓர் பெரும் புலவர்.

மாம்பழக்கொடுக்கு - மாம்பழத்தட்டு.

மாம்பழக்கொன்னை - மஞ்சட்கொன்னை.

மாம்பழச்சிட்டு - ஒருவகைக் சிறுபறவை.

மாம்பழப்பணட்டு - மாம்பழச்சாற்றினால் செய்த அடை, மாம்பழச்சாற்று அடை.

மாம்பழம் - மாங்கனி, புடைவையுடுத்தும் போது செருகும் முன் முடிப்பு.

மாம்பழவுண்ணி - பெரிய உண்ணிவகை.

மாம்பால்-மாங்காய்க்காம்பிலுண்டாம்பால், சர்க்கரை அரிசிமா மாம்பழம் முதலியவற்றாற் செய்த கூழ்.

மாம்பிஞ்சு - மாவடு, மாங்காய்மாலே.

மாம்பிரம் - சிறுதேக்கு, மருந்துவகை.

மாம்பூச்சி - சர்க்கரைமுதலியவற்றில் வீழும் வெண்ணிற முள்ள சிறுபூச்சிவகை.

மாம்போழ் - மாவடுவின் பிளவு.

மாம்ஸம் - மாமிசம், மச்சை, ஊன்.

மாயகம் - வினாமரம், பித்தம், வினவு.

மாயக்கள்ளி } மயக்கி ஏமாற்றுபவள்,ஏத்தி,

மாயக்காரி } ஏத்துக்காரி.

மாயக்காய்-மாசிக்காய், மாசக்காய்.

மாயக்காரன்-வஞ்சகன், செப்பிடுவித்தைக் காரன், ஏமாற்ற வேலை செய்பவன்.
மாயக்குரம்பை - நிலையற்றது, உடல்.
மாயத்தி ~ மாயக்கள்ளி, மாய்மாலக்காரி.
மாயநகர் - தாருகாசுரன் நகரம்.
மாயப்பெண் - மாயாபோகப்பெண், மாறு வேஷம் பூண்டபெண், பெண்வேஷம் பூண்ட ஆண், எத்துக்காரி, வஞ்சகி.
மாயப்பொடி-மாயத்தன்மைசெய்யும்பொடி.
மாயப்போர் - அற்புதமான போர், வஞ்சயுத்தம், நேர்மையற்ற போர்வகை.
மாயமந்திரம் - மாயம்பண்ணும் மந்திரம்.
மாயமயக்கி - மயக்கஞ்செய்பவள், வஞ்சகி.
மாயமாலம்-மாய்மாலம், பேய்,வேஷக்காரி.
மாயம் - அழகு, அஞ்ஞானம், கறுப்பு, தந்திரம், ஆச்சரியம், நீலை, பொய், வஞ்சகம், கனவு, நீது, மாயை, பாசாங்கு, வேடம்.
மாயயாக்கை-மாயாதேகம். [யுருவம்.
மாயரூபம் - மெய்போலத் தோற்றும் பொய்
மாயவள் - இடாகினி, காளியேவல் செய்வாள்,தெய்வப்பெண்,கருநிறமுடையவள்.
மாயவன் - திருமால், கரியவன். [சை.
மாயவன்மேனி - நாகப்பச்சை, கருநிறபச்
மாயவன்சோதரி - துர்க்கை. [ளரிவிதை.
மாயவன்விந்து - விஷ்ணுக்கிராந்தி, வெள்
மாயவிஞ்சை - மாயவித்தை.
மாயவித்தை-இந்திரசாலவித்தை. [வோன்.
மாயவித்தைக்காரன் - இந்திரசாலஞ் செய்
மாயன் - கரியவன், திருமால், கண்ணன்.
மாயா - மாயை, பிரபஞ்சமாயை.
மாயாகாரியம்-மாயையிற் றோற்றப்படுதல், தனுகரண புவனபோகங்களாகியமாயையின் விளைவுகள், பிரபஞ்சகாரியம்.
மாயாகிருது - மாயாகாரிய கத்தன்.
மாயாசங்கற்பம்-மாயாகாரியம்.[யாகியசத்தி
பாயாசத்தி-பஞ்சசத்தியிலொன்று, மாயை
மாயாசாலம் } மாயம், மாயவித்தை, மா
மாயாசித்து } யை. [தில் நிகழ்ந்த சம்பவம்
மாயாசீதை - போலிச்சீதை, இராமாயணத்
மாயாசுதன் - புத்தன், மாயாதேவி மகன்.
மாயாசூனியம் - மாயையால் மறைவின்மை.
மாயாதம்-மூதலை, சிஞ்சுமாரம், சுரா. [யது.
மாயாதாரகம்-மாயையை ஆதாரமாகவுடை
மாயாதாரணை-நவதாரணையிலொன்று;அது: நாமம் வடிவுமுதலியவிவகாரங்களின்றிக் காலத்தகத்தும் இடத்தகத்தும் படாத பரமான்மாவிடத்திலந்தக்கரணஞ் செய்கையாற் பூனைந்துரைக்கப்பட்ட பிரபஞ்சத்தை வியாபாரமின்றித் துறத்தற்குக் கருவியான மகாவாக்கியத்தைப் பொருளுணர்ச்சியோடு உசரிதல், மாயையிற் றோன்றிய பிரபஞ்சப் பொருள்.
மாயாதி - நரபலி, மனிதபலி. [னதேகம்.
மாயாதேகம்-நிலையற்றசரீரம், மாயையாலா
மாயாதேவி-சம்பராசுரன் வீட்டில் பதிவிரதத்தை அநுட்டித்திருந்தவள். கௌதம புத்தன் றாய், மாயையாகிய தேவி.
மாயாதேவிசுதன் - புத்தன். [காண்க.
மாயாபஞ்சகம்-மாயை ஐந்து (தொகையிற்
மாயாபாசம் - மாயையாகிய பந்தம்.
மாயாபிரதிபிம்பர் - ஒன்றின் சாயலாய்த் தோற்றும் அரூபிகள், மாயையாற் பிரதிபலிக்கும் உருவுடையோர், சாயாரூபம்.
முட்டுதோஷம் - குளிதோஷம், சூதக தோஷம், தீட்டுப்படல்.
முட்டுத்தொய்வு - நோய்வகையிலொன்று.
முட்டுப்பட்டினி - கண்டுமுட்டு கேட்டுமுட்டுகளால் நேரிடும் பட்டினி.
முட்டுப்படுதல் - துன்புறுதல்,தடைபடுதல்.
முட்டுப்பாடு-இலம்பாடு,சங்கடம், திக்குமுக்கடைதல், தீமை, நெருக்கிடை,வருத்தம்.
முட்டுப்பாண்டை - முட்டுச்சீலை. [நோய்.
முட்டுப்பிடிப்பு - கீல்வாயுநோய், முஷ்டி
முட்டுயுத்தம் - நெருங்கினபோர், குஸ்தி.
முட்டுவலி - சூதகவலி, கர்ப்பக்கோளாறு.
முட்டுவாள் - கைவாள்.
முட்டுவீக்கம் - முட்டுக்காலில் வீங்குகை, முஷ்டி வீக்கம்.

முட்டுளசி - துளசிவகை. [கோல்,சுளுக்கி.
முட்டுறடு - முட்டொறடு, முள்தொறட்டுக்
முட்டுற்றவன் - மூடன், குறையுள்ளவன்.
முட்டை - அண்டம், ஓர்நோய், கந்தன்,சிறு
கரண்டி, தவிடு, அண்டகோளம், தேகம்,
சாணங்கொண்டு தட்டிய வரட்டி. [விழி.
முட்டைக்கண்-பொந்துக்கண், உருண்டை
முட்டைக்கண்ணீர் - சொட்டுச்சொட்டாய்
விழுங்கண்ணீர், கண்ணீர்ப் பெருந்துளி.
முட்டைக்கார்-நெல்வகையிலொன்று. [று.
முட்டைக்காளான்-காளான்வகையிலொன்
முட்டைக்கோசு - சமயலுக்கு உபயோக
மான செடிவகை, குட வீலைப்பூடு.
முட்டைக்கோழி - முட்டையிடுங்கோழி.
முட்டைச்சாம்பல் - வரட்டிச்சாம்பல்.
முட்டைப்பாசி - பாசிவகையி லொன்று.
முட்டைநாறி - முட்டை, வெதுப்படக்கி,
எருமுட்டை, பீநாறி.
முட்டையோடு - அண்டத்தின் ஓடு.
முட்டைவடிவு - நீண்டு உருண்டவடிவு.
முட்டொறடு-மாமிசம் தொங்கவிடும் முள்,
சுளுக்கி, தூண்டில்முள்.
முட்பரப்பு, முட்பலுகு, முட்பலுவு } முட்களுள்ள பரம்புப் பலகை, பல்லுமரம்.
முட்பன்றி - முள்ளம்பன்றி. [ஷாணவகை.
முட்பாஷாணம் - முள்ளம்பன்றிமுள், பா
முட்புளிச்சை-புளிச்சைவகை, சணல்நார்ச்
செடி, புளிச்சைநார்ச்செடி. [பலாசம்.
முட்புறக்கனி - பலா, பனசம், வருக்கை,
முட்பூல் - பூலாவகை, முள்ளுப்பூலா.
முஷ்திதம்-திருட்டுத்தனம், வஞ்சம். [தனம்.
முஷ்கரம் - முரட்டாட்டம், போர்க்கிறித்
முஷ்கரன் - முரண்டன், முரடன்.
முஷ்டம் - திருட்டுத்தனம், முஷ்திதம்.
முஷ்டி-ஆயுதப்பிடி, ஒருபிடி, முடக்கியகை.
முஷ்டிகாந்தகன் - பலதேவன், பலராமன்.
முஷ்டிந்தயன் - பாலகன், குழந்தை.
முஷ்டிபந்தம் - கைப்பிடி, மூடியகை.
முஷ்டியுத்தம் - கைக்குத்துச்சண்டை.
முணங்கல்-அடங்குதல், குறையைக் குறிப்
பாயுணர்த்தல். [துணங்கு.
முணங்கி - அடக்கம், சோம்பு, சுணக்கம்,
முணங்குதல்-முணங்கல், அடங்கல்.
முணமுணத்தல் - வாய்க்குட்பேசுதல்.
முணவல் - கோபம், முணுமுணுத்தல்.
முணவல் - கோபம், முணுமுணுத்தல்.
முணுமுணுத்தல் - முணுமுணத்தல்.
முணுமுணெனல் - இரகசியப்பேச்சு.

முண்டகசனன் - முண்டகன், கமலஊர்தி.
முண்டகத்தடம் - தாமரைத்தடாகம்.
முண்டகநாயகன் - சூரியன், கமலநாயகன்.
முண்டகம்-கடல், கருக்குவாளிமரம், கள்,
பதநீர், தலை, தாமரை, தழை, நீர்முள்ளி,
நெற்றி. [குளம்.
முண்டகவநம் - தாமரைக்காடு, தாமரைக்
முண்டகன் - பிரமன், சதுர்முகன்.
முண்டகாசநம் - மராளாசநம்,பத்மாசனம்.
முண்டகாசநன் - கமலாசனன், பிரமன்.
முண்டகாசனி, முண்டகாசனை } இலக்குமி, தாமரையில் இருப்பவள்.
முண்டகோபநிஷத்து-முப்பத்திரண்டு உப
நிஷத்துக்களிலொன்று, அஞ்ஞானமாகிய
கணுவைச் சிதைக்கும் முண்டகம்போலு
தலால் இது இப்பெயர்த்தாயிற்று.
முண்டக்கண் - முண்டைக்கண், பருவிழி.
முண்டசணன் - மல்லன், முரண்டசனன்.
முண்டபலம்-தேங்காய், நாளிகேரம்.
முண்டமர்த்தனி - சும்பநிசும்ப யுத்தத்தில்
முண்டன் என்னும் அசுரனைக் கொன்ற
தால் தேவிக்கு இப்பெயர்.
முண்டம் - உடற்குறை, உபநிடதமுப்பத்தி
ரண்டிலொன்று,குற்றி,தலை, திரட்சி, நெ
ற்றி, வழுக்கைத்தலை, அறிவில்லாதவன்.
முண்டனசிரம்-மொட்டைத்தலை, முண்டி.
முண்டனம் - முண்டித்தல்,மொட்டை,தலை
சிரைக்கை. [கரந்தை.
முண்டனி - கொட்டாங்கரந்தை, விஷ்ணுக்
முண்டன் - இராகு, நாவிதன், மொட்டந்
தலை,கபாலத்தையுடையவன்,சிவபிரான்,
சிவகணத்தவருள் ஒருவன், தேவி
யால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்.
முண்டா - தோள். [விளங்காதபொருள்.
முண்டாகாரம்-அவயவப் பகிர்வற்றது,உரு
முண்டாசு - தலைப்பாகை.
முண்டாத்தட்டுதல் - வீரக் குறிப்பாகத்
தோள் தட்டுதல், புஜந்தட்டல்.
முண்டாயி - நீர்ப்பண்டம், மிட்டாய்.
முண்டி - நாவிதன், முண்டியென்னேவல்,
மொட்டைத்தலையன், மழிச்சற்றலை.
முண்டிதம்-மொட்டை,முண்டசிரம்.[சிரம்.
முண்டிதன்-மொட்டைத்தலையன், முண்ட
முண்டிதை - தேவாங்கு. [சிரைத்தல்.
முண்டித்தல் - மழித்தல், மொட்டையாய்ச்
முண்டிரம் - ஓர் உபநிடதம்.
முண்டீரம் - கீரைவகையி லொன்று.
முண்டீரபாதி - சூரியன், தினமானன்.
முண்டு - உள்வேட்டி, முரண்டுத்தனம்,

முனைந்துசெய்யும் எதிர்ப்பு. [நிற்றல்.
முண்டுதல் - முரண்டுபண்ணல், முனைந்து
முண்டை - மொட்டை, விதவை, காசியில்
உள்ளகாளி, முண்டகாசினி. [கிய கண்.
முண்டைக்கண் - பருத்து வெளிப் பிதுங்
முண்டைச்சி - முண்டை. [பிறந்த பிள்ளை.
முண்டைமோப்பி - விதவை, விதவைக்குப்
முண்ணுயங்கி - ஓர் செடி, பாம்புதின்னி.
முண்ணுவல் - நாவல்வகையினொன்று.
முண்மா-முட்பன்றி,முள்ளம்பன்றி. [ருக்கு
முண்முருக்கு-முள்ளுமுருக்கு, கலியாணமு
முதங்கி - வெள்ளகத்தி, கத்தரிவகை.
முதம் - உவகை, உன்மத்தம், களிமதி.
முதலக்கரம் - பன்னீருயிரெழுத்தும் பதி
னெண் மெய்யெழுத்தும் கூடியது.
முதலது - முதலானது, காரமானது.
முதலல்-துவக்கல், துவங்குதல்,முதலாதல்.
முதலவன்-முதல்வன், தலைவன், இறைவன்.
முதலற்றுப்போதல்-அடியோடழிதல்.
முதலனுமானம்-முதற்காரணத்தைக் கொ
ண்டனுமானித்தல். [வதோராகுபெயர்.
முதலாகுபெயர்-முதலின்பெயர் சினைக்கா
முதலாயிரம்-நாலாயிரப் பிரபந்தத்தில் முத
லாவது பகுதி. [முள்ளவன், தலைவன்.
முதலாளி - முதன்மைக்காரன், மூலதன
முதலான - தொடக்கமாகவுடைய.
முதலி - முதன்மை யென்பதைக்குறிக்கும்
பெருமையுடைய பட்டப்பெயர்; இது:
தொண்டை மண்டல வேளாளருக்குத்
தொண்டைமான் சக்கரவர்த்தியால்
அளித்தது, முதல்வன், கைக்களர்,
தலைவர், பெரியோர்.
முதலிச்சாதி - முதலியார், முதன்மையார்.
முதலிமை-தலைமை, நாயக அங்கம்.
முதலிய - முதலான, ஆகியவை.
முதலியாண்டான்-(1)உடையவரின் சகோ
தரி புத்திரன், எழுபத்தி நான்கு சிம்மாச
னாதிபதிகளில்ஒருவர்,இவருக்கு தாசரதி,
வாஞ்சலதேசிகன், ஸ்ரீ வைஷ்ணவதாசர்,
இராமானுஜபாதுகை என்றபெயருண்டு;
இவர் குமாரர் கந்தாடையாண்டான்.
முதலியார் - முதன்மையார் என்ற பட்டப்
பெயர் முதலியார் என மருவி வழங்கு
வது, முதலி.
முதலிலனுதல் - கடவுளறுகுணத்தொன்று;
அது: தானென்றிலுந்தோன்றுமை. [தல்.
முதலீடு - முதலிலிடுகை, முதற்செலுத்தும்
தொகை, ஆண்டின் முதலறுவடை,
வாணிபத்தின் முதல், அசல்கடன் தொ
கைக்குப் பணம் செலுத்துகை.
முதலீற்று-முதன்முதல் ஈன்றமாடு [தல்.
முதலுதல் - துவங்குதல்,தலைமைஉடைத்தா
முதலூழி - கிருதயுகம், பூர்வகல்பம்.
முதலெழுஞ்சனி - மகம், ஆதியெழுஞ்சனி.
முதலெழுத்து - தனியெழுத்து; அஃது:
உயிரு மெய்யுமாகிய முப்பதெழுத்து.
முதலை - செங்கிடை,வன்மீன்,கரா. [கண்.
முதலைக்கண்-முன்தள்ளியவிழி,முண்டைக்
முதலைக்கோசை - ஓர் புல்,பெருங்கோசை.
முதலைப்பூண்டு - பூண்டுவகையினொன்று.
முதலோன் - கடவுள், முதலவன், இறை.
முதல் - ஆதி, காரணம், எழுவருபு (உ-ம்)
சுரன் முதல்வந்த வுரன்மாய்மாலே, மூல
காரணனென கடவுள்,முதலென்னேவல்,
வட்டிக்குக் கொடுக்கும் பணம், வியாபா
ரஞ் செய்யும்பணம்,முதலாவான், சிலாக்
கியம், ஏற்றம்,மூலதனம், வேர், கிழங்கு,
அடிப்பாகம், மரமுதலியவற்றினடி, செல
வுக்காகச் சேமிக்கும் பொருள், கொள்
முதல்வீலை, முதலக்கரம், முதலான.
முதல்தரம் - முதற்றரம், முதல்ரகம் [கம்.
முதல்முதல் - துவக்கம்,ஆரம்பம், தொடக்
முதல்ரகம் - உயர்தரம், முதல்தரம்.
முதல்வடி
முதல்வடிப்பு } முதற்சாரத்தயிலவடிப்பு.
முதல்வர் - அதிபதிகள், வானோர், முதலா
யினர். [கொடுப்போர்,அவர் எழுவர்.
முதல்வள்ளல் - குறிப்பறிந்து வரையாது
முதல்வன் - அரசன், அரன், அருகன், எல்
லாப் பொருட்குங் காரணனான கடவுள்,
முதலாளி, முன்னவன், தலைவன்.
முதல்வன்சேய் - முருகன், அரசகுமாரன்.
முதல்வன்வாக்கு - ஆகமம், மணிமொழி.
முதல்வி - தலைவி, தேவி. [றும் குருத்து.
முதல்வெண்குருத்து - முதலாவது தோன்
முதல்வேதம் - இருக்குவேதம், ருக்வேதம்
முதல்வோர் - அடிவோர், ஆணிவோர்.
முதளை - ஓர் நீர்ப்பூண்டு, முதலை.
முதள் - மொக்கு, அரும்பு, மொட்டு.
முதற்கடவுள் - பரதெய்வம்.
முதற்கடன் - தலைமையானகடமை,உழவுத்
தொழிலுக்காக முன்கொடுக்கும் கடன்.
முதற்கண் - முதலிடம், முன்னிடம்.
முதற்கரு - மூலை, மச்சை, மெதிர்.
முதற்கருவி - மத்தளம், முதற்காரணம்.
முதற்காரணகாரியம் - ஆதிகாரணகாரியம்.
முதற்காரணம் - காரணத்திற்காதியாயிருப்
பது;காரியநிகழ்ச்சிக்குஇன்றியமையாதது.

முதற்காரன் - முதலாளி, பொருள்காரன்.
முதற்காலம் - இராகத்தின் ஆரம்பகாலம், ஆலயத்தில் காலையில் செய்யும் பூசை.
முதற்குலோத்துங்கன் - வேங்கியிலாண்ட இராஜராஜன் மகன்.
முதற்குறை - செய்யுள் விகாரவகை; அது: சொல்லின் முதலில் எழுத்துக்குறைந்து வருவது, முதலாவதாயுள்ள தேவை.
முதற்கொண்டு - தொடங்கி, ஆரம்பித்து.
முதற்சங்கம் - முச்சங்கங்களுள் முதலாவது சங்கம் இதன் வரலாற்றை மேல்வரும் ஆசிரியப்பாவா லுணர்க.

"வேங்கடங்குமரி தீப்புனற்பவ்வத்திந் நான்கெல்லையினிருந்தமிழ் பயின்ற,செந் நாப் புலவர் செய்தியீண்டுரைப்பினுடகக் குடுமி மாடக் கூடலின்,முன்னர்ச்சங்கக் கனமாப்பலகையில், திரிபுரமெரித்தவிரி சடைக்கடவுள்,மன்றன் மராத்தார்க்குன் றெறியினஞ்சேய், திண்டிறற் புலமைக் குண்டிகைக்குறுமுனி, புவிபுகழ்மருதக் கவினிய முரிஞ்சிப், பதிமுடிநாகன் நிதியின் கிழவன், இனையர் நானூற்று நாற் பத்தொன்பதின்மர், அனையர் நானூன்கா யிரநூற்றொடு, நாற்பத்தொன்பதின் மா பார்க்கிற் செந்தமிழோர், புரிந்தன செய்யுட் பெரும்பரிபாடலும், முதுமையடுத்த நாரையுங் குருகும், கதியுறச்செய்த களரியாவிரையும், ஆங்கவரிருந்தது மத்தொகையாகும்,ஈங்கிவர்தம்மைமீ இப்பாண்டியர்கள், காய்ச்சின வழுதி முதற்கடுங் கோனீரு, ஏகிலாவகை யெண்பத்தொன்பதின்மர், கவியரங்கேற்றினு செழுவராகும், மகத்துவமுடைய வகத்திய மிலக்கணம்" இந்தச்சங்கமிருந்த தென்மதுரையும் அதைச்சார்ந்த சில நாடுகளும் கடல் கொண்டழிந்துபோக அதற்குப்பின் வந்த பாண்டியர்கள், கபாடபுரத்தைத் தமக்கு ராஜதானியாக்கி,இரண்டாஞ் சங்கத்தை அங்கே தாபித்தார்கள். இதன் விரிவெல்லாம் "தமிழ்" என்பதனுட் காண்க.

முதற்பட்சம் - முதற்றரம், முதலில் வைத்தெண்ணத்தக்கது.
முதற்பருவம் - பிள்ளைத்தமிழிற்காப்புப்பருவம்,பாலப்பருவம்,பேதைப்பருவம். [னம்.
முதற்பலபாகம்-வீணைவின்முதற்கண்வருமா
முதற்பலம் } முதற்பேறு, முதலாவதாக
முதற்பலன் } அமைந்தநிலம்,முன்மகசூல்.
முதற்பா - வேண்பா, முற்பா, வெள்ளை.
முதற்பாதம் - நிரகங்கள்நட்சத்திரத்தினது நாலுபாகங்களுள் முதற்காலில்செல்லுங் காலம், வலது முன்னங்கால், முதல்தர மான போக்கிலி.
முதற்பூசை - அக்ரபூஜை, முதற்பலி.
முதற்பெயர் - முதனிலைப்பெயர், அவயவியான முழுப்பொருளைக்குறிக்கும்பெயர்.
முதற்பேறு - தலைப்பிள்ளை, முதற்பலன்.
முதற்பொருள் - கடவுள், மூலதநம், தலைமைப் பொருள், பரம்பொருள். [னது.
முதற்றரம் - முதற்றடவை, முதன்மையா
முதற்றிருவந்தாதி - நாலாயிரப்பிரபந்தத்திலுள்ளதும்பொய்கையாழ்வாராலியற்றப் பட்டதுமான அந்தாதி நூல்.
முதனடை - மிகவும் தாழ்ந்த செலவினையுடையபாடல். இயக்கம்நான்கினுள் ஒன்று.
முதனூ - நாக்கின் அடிப்பக்கம்.
முதனுள் - அசுபதி, முந்தினநாள், முதல் தினம், அசுவினி. [ணம்.
முதனிலை - பகுதி, முதலில்நிற்பது, காரமுதனிலைதிரிந்ததொழிற்பெயர் - வினைப் பகுதி முதலெழுத்து திரிந்து வருவதனால் தொழிற்பெயராய் நிற்பது.
முதனிலைத்தீபகம் } செய்யுளலங் காரத்தி
முதனிலைத்தீவகம் } லொன்று; அது: ஒரு சொல்கவியின் முதலில்நின்று வினையிடத்தும் சென்று பொருள் விளக்குந் தீவக வணிவகை.
முதனிலைத்தொழிற்பெயர் - பகுதிப் பொருள் மாத்திரமாய் நிற்கும் வினைச் சொல் (உ-ம்) வருதல். [மூன்றினொன்று.
முதனிலைவிளக்கு-முதனிலைத்தீபகம், தீபக
முதனிறம் மாங்கிஷச்சிலை, மாங்கிசச்சிலை.
முதனீர் - கடல், முன்னீர், உததி.
முதனூல் முதல்வன்வாக்கு, வேதம்.
முதன்மடக்கு - மடக்கலங்காரத்து ளொன்று; அஃது: அடிகளுளொன்றேனும் பல வேனு மடிமுதலில் மடங்கிவருவது.
முதன்மறினிலை - ஓரலங்காரம்; அது:கினைப் பெயர் முதற்கும்முதற்பெயர் கினைக்குஞ் செல்ல வுரைத்தல். [சிறந்த சிஷ்யன்.
முதன்மாணாக்கர் - முதற்பட்சமான சீடர்,
முதன்முதல் - ஆரம்பகாலம், முன்னம்.
முதன்முன்னம் - தொடக்கம்,முதன்முதல்.
முதன்மை - அதிகாரம்,முன்னீடு, தலைமை.
முதாரி } நிறைகன்றுதாய்ச்சி, முதுகன்று,
முதாரு } முதார்மாடு. [மறந்தகன்று.
முதாருகன்று - ஊட்டுமறந்தகன்று, பால்
முதாருப்பால் - கறப்பதற்கு மறுக்கு நிலையிலுள்ள பசுவின்பால்.

முதார்சிங்கி - மதார்சிங்கு; மிடுதார்சிங்கி.
முதார்மாடு - பால்மறுக்குங்கலையிலுள்ள பசு.
முதாவதி - சௌநந்தை, வீடுதன் மகள், இவளே வற்சந்திரன் மணம் புரிந்தான்.
முதிதம் - உவகை, வியப்பு, ஆச்சரியம்.
முதியகுழல் - குதிரைவாலிப்புல். [மலை.
முதியகொல்லை - பழங்கொல்லை, பழைய
முதியம் - நாய்வேளை, நாய்க்கடுகு.
முதியர் - முதியோர், மூத்தார், தாதையர்.
முதியன் - முதியோன், மூத்தோன்.
முதியான் - ஓர் பட்சி, முதியது, முதுகன்று.
முதியாள்-மூத்தவள், தேவராட்டி, மூதேவி.
முதியோர் - அறிஞர், கிழவர். [தேவதை.
முதியோள்-கிழப்பருவமடைந்தவள், பெண்
முதிரம் - மேகம், கந்தரம், கார்முகம்.
முதிரன் - தூர்த்தன், துர்ச்சனன்.
முதிராப்பிண்டம் - முற்றுதகருப்பம்.
முதிரிமை - முதுமை, முற்றினபதம்.
முதிருதல் - முதிர்தல், முற்றல், முதிரல்.
முதிரை - அவரை, ஓர் மரம், காராமணி கொள்ளு துவரை முதலியன, தானியம்.
முதிர்கஷாயம் - வற்றக்காய்ந்த கஷாயம்.
முதிர்காய் - கனி, முதிர்ந்தகாய், செங்காய்.
முதிர்காற்று - கடுங்காற்று, மாருதம்.
முதிர்சுவை - இனியசுவை, இன்சுவை.
முதிர்சொல் - திருந்தினசொல், உறுதிச் சொல், அழுத்தமான சொல்.
முதிர்ச்சி - முதிர்வு, மேட்டிமை, பக்குவம், செருக்கு. [தவன், கிழவன்.
முதிர்ச்சிக்காரன்-செருக்குள்ளவன், தேர்ந்
முதிர்தல் - காய்தல், தேறுதல், பழுத்தல், வயசாதல், வறத்தல், உலர்தல். [நிலவு.
முதிர்பிறை-சதுர்த்திப்பிறை, முதலாகவரு
முதிர்பு - முதிர்வு, முற்றல், முதிருதல்.
முதிர்புனம் - முதுகொல்லை, தரிசுநிலம்.
முதிர்ப்பு - கலக்கம், முதிர்ச்சி, முற்றல்.
முதிர்வயது - கிழப்பருவம், வயோதிகம்.
முதிர்வு - மூப்பு, முதிர்ச்சி, பிருதி.
முதிர்வேனிலுரிமை - கோடைக்காற்றுவீசலும் கானலேறுதலுங் காடை வலியான் வானம்பாடி காகம் கவுதாரி இவை மகிழ்தலும், மல்லிகை புளி பாதிரியிவை மலர்தலும், பாலை காஞ்சிசம் நாவல் இலுப்பை யிவை காய்த்தலுமாம். [வேனில்.
முதிர்வேனில்-ஆனி ஆடியின்பருவம், முது
முதிர்வை - முதிர்வு, முற்றுதல்.
முதுகண் - அந்தப்புரமகளிற்கு அறிவுட்டும் முதியவர்.
முதீ - சந்திரகிரகணம், சோமகிரகணம்.
முது - பழமை, முன்னது, மூப்புடையது, முதுக் குறைவு.
முதுகன்று - பால்குடிமறந்த கன்று.
முதுகாஞ்சி - ஓர்பிரபந்தம்; அது: முதுக் குறைந்தோர் முதுக்குறையா மாக்கட்குக் கூறுவது. [படுகாடு, பிணக்காடு.
முதுகாடு - சுடுகாடு, பிறங்கியல், மயானம்,
முதுகாட்டுத்தரிசு - பதினேந்து வருடத்துக்கு மேலாகச் சாகுபடி செய்யப்படாத நிலம், சுடுகாட்டுக்காக விடப்பட்டநிலம்.
முதுகால் - முதிர்கால் வெற்றிலைக் கொழுந்து, பழையகால்.
முதுகிடல் } புறங்காட்டல், புறமுது
முதுகிடுதல் } கிடல், தோற்றோடல்.
முதுகு - உரப்பு, பின்புறம், வரப்புமேடு.
முதுகுகாட்டுதல் - புறங்காட்டுதல், தோற்றோடல், வெங்கிடுதல்.
முதுகுகொடுத்தல் - துணை செய்தல், புறங்கொடுத்தல், முதுகில் தூக்கிச் சுமத்தல்.
முதுகுடி - தொன்றுதொட்டுவரும் குடி, பழங்குடி, பூர்வகுடி.
முதுகுதாங்கி - சார்மணை, திண்டு.
முதுகுநீர்குத்தல் } சீமந்தச்சடங்கு, முது
முதுகுநீர்ச்சடங்கு } நீர் குத்தல்.
முதுகுபிளவை - ஓர் சிலந்தி, முதுகிலுண்டாம் இராசபிளவை, முதுகுப்பிளவு.
முதுகுமுள் - முதுகெலும்பு, முள்ளந்தண்டு.
முதுகுரவர் - தாய் தந்தையர். [நூல்.
முதுகுருகு - முதற்சங்கத்தவரியற்றியதமிழ்
முதுகுன்று - திருமுதுகுன்று, பழமலை, விருத்தாசலம், திருமுதுகுன்றம்.
முதுகூற்றனார் - ஓர் சங்கப்புலவர்.
முதுகெலும்பு - முதுகின்நடுவில்உள்ள நீளமான எலும்புத்தண்டு. [சோலை.
முதுகொல்லை - முதிர்ந்தகொல்லை, முதிர்
முதுக்குறைதல் } திவ்வியஞானம், பெண்
முதுக்குறைவு } புத்தியறிகை, பேரறிவு, ஞானம், பேதைமை. [சாயம்.
முதுபிலை - சாட்டிற் கயிர்வலையிழர் மனைவியின் நிலையை விரித்துக்கூறும் முறை.
முதுக்குறைந்தோர் - பேரறிவுடையோர்.
முதுக்குறைமை-பேரறிவுடைமை. [சாயம்.
முதுசாயம் - அழுத்தமானசாயம், கெட்டிச்
முதுசொம் - முதுப்பொருள். [மொழி.
முதுசொல் - பழஞ்சொல், மூதுரை, முது
முதுநாரை - தலைச்சங்கத்து இறந்துபட்ட நூல்களுள் ஒன்று. [நிலம்.
முதுநிலம் - களர், பாலைநிலம், பெரும்பாழ்
முதுநீர் - கடல், முன்னீர், மகாசமுத்திரம்.

முதுபயிர் - முற்றியபயிர், முதிர்கதிர்.
முதுபெண்டு - பேரிளம்பெண், சூதக நீங்கிய பெண், வயதானவள்.
முதுபொருள் - பிதிரார்ச்சிதச்சொத்து.
முதுமகள் - முதுபெண்டு, மூத்தாள், அவ்வை.
முதுமகன் - சனி, வயதுசென்றவன்.
முதுமக்கட்டாளி-சென்னையிலும் சென்னையைச்சார்ந்த செங்கல்பட்டு ஜில்லா முதலிய சில பாகங்களிலும், இன்னும் மற்ற இடங்களிலும் மண்ணுற்செய்த பெரும் பானை பூமிக்குள்ளிருந்து எடுக்கப் படுகிறது. இதற்கே 'மதமதக் கச்சால்' என்றும் பெயர் வழங்குகின்றது. பூர்வம் நீடித்த ஆயுள் உள்ளவர்களாய்வாழ்ந்துவந்தவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட வயதில் ஆகாரம் நித்திரை என்பது இல்லாமல் செயலற்றிருப்போரை அத்தாழிக்குள் வைத்துப் புதைத்துவிடுவதுவழக்கமென்றும் சமணமுனிவர்கள் நிரியாண காலத்தில் ஜாடிக்குள்ளிருந்து அடங்குவது வழக்கமென்றும் கருதப்படுகிறது. சிலர் பூர்வகாலத்தினருடைய சமாதி இதுவாக இருக்குமென்று கருதுகின்றனர். "ஓடி மறலி மறைய முது மக்கட் சாடி வகுத்த தராபதியும்" எனும்விக்கிரமசோழனுலாவடியாலும் விளங்குகிறது. இதுபோல எகிப்து தேசத்தில் இருந்தவர்களைச் சமாதி செய்யும் வழக்கம்இருந்துவந்தது, ஆனால் அவர்கள் அந்த உருவம் குலையாமல் வெகுநாள் இருப்பதற்குவேண்டிய ஏற்பாடுசெய்திருக்கின்றனர். அச்சமாதி உருவங்கள் இன்னும் இருந்து வருகின்றன. அதற்கு மம்மி (Mummy) என்று பெயர்.
முதுமக்கள் - வயதுசென்றோர், முதியார்.
முதுமறை - அநாதிவேதம், ஆதிவேதம்.
முதுமூப்பு - மிகமுதிர்ந்தவயது, தொண்டு கிழம்.
முதுமை - பழமை, பழமொழி, மூப்பு.
முதுமொழி - பழமொழி, திருக்குறள் வேதம், ஔவையார் வாக்கு.
முதுமொழிக்காஞ்சி - அறம்பொருளின் பங்களைப் பலருமறியச் சொல்லும் புறத்துறை, கூடலூர் கிழார் இயற்றியதான நீதிநூல்.
முதுமொழிவஞ்சி - மகன் தகப்பனுடைய வீரச் செயலைக் கூறும் புறத்துறை.
முதுவர் - புலவர், மந்திரியார், மூதுணர்ந்தோர், மூத்தோர், முதுகுரவர்.
முதுவு - பருக்கன், முதுகு, பெரும்படிசு.
முதுவுழிலை - காவற்காட்டினை உடைய குறும்பிலே இரைகண்டு பாயும் பறவை போல வீரர்கை வளர்ந்து குதித்தது.
முதுவேனில் - கோடைகாலம்; அது:ஆனி ஆடிமாதங்கள், பருவமாறனுளொன்று.
முதை - காடுவெட்டிச்சுட்ட கொல்லை, சந்தோஷம், முதைப்புனம், பழங்காடு, முதயல், முதிர்தல்.
முதைப்புனம் - பழங்கொல்லை, சாகுபடிக் குரியதாகத் திருத்திய பூமி, முதை.
முதையல் - முதுகாடு, கடுகு, உலர்ந்தகாடு.
முத்கலர் - இவர் கண்ணுவர் குமாரர்.
முத்கலை-நூற்றெட்டுப நிடதங்களுள்ஒன்று.
முத்தகச்செய்யுள் - தனித்தனியே முற்றுப் பெருஞ் செய்யுள்.
முத்தகம் - எறியாயுதம், கருக்குவாளிமரம், தனித்தனியே முற்றுப்பெருஞ் செய்யுள், இசைப்பா வகையில் ஒன்று.
முத்தகாந்தம் - பருப்புப்பொங்கல். [தல்.
முத்தகேசம் - அவிழ்ந்தகிலை, விரிந்த கூந்
முத்தக்காசு-கோசைக்கிழங்கு;இது: துவர் பத்திலொன்று, அட்டமூலத்துமொன்று.
முத்தங்கி - முத்துச்சட்டை. [யளித்தல்.
முத்தங் கொடுத்தல் - முத்தமிடுதல், முத்தி
முத்தஞானவரூபி - கடவுள், இறைவன்.
முத்தண்டு - திரிதண்டு, திரிதண்டம். [ன்.
முத்தண்ணு - தமயன், அசடன், மூத்தோ
முத்தப்பருவம் - பிள்ளைத்தமிழிலோர் பருவம்; அது: குழந்தையையமுத்தந்தரும்படியாகப் பாடும்பகுதி, முத்தமிழடைவு.
முத்தமிழ்முரியோன்-அகத்தியன், வயிரவன், தமிழ் மூன்றிற்குரியவன்.
முத்தமிழ் - இயலிசை நாடகமென்பது.
முத்தம் - இட்டம்,உதடு,கொஞ்சுதல், அன்பிற் கறிகுறியாக வொலியுண்டாக உதடுகளாற் பரிசிக்கை, பிரியம், நவமணிக்குற்றத்தொன்று;அது: குல்லைநிறம், பிரியம், மருதநிலம், முத்து, முத்துக்கொட்டை, விடப்படுவது,விடுதலை,மோட்சம்,முற்றம்.
முத்தரையர் - செல்வர், ஒரு சிற்றரசர்.
முத்தர் - திடர்,முத்திக்குரியோர்,மூமூட்சு.
முத்தலை } சூலம், மூன்று கூறுடைய
முத்தலைக்கழு } கழு.
முத்தலைச்சூலி - சிவன், சூலபாணி.
முத்தலையன் - திரிசிரன், ஓர் அரக்கன்.
முத்தலையிருதலைவேல்- அறுதலைக்கழுமுள்.
முத்தலைவேலையன் - சிவன், திருமால்.

முத்தலைவேலோன் - சிவன், வயிரவன்.
முத்தவி - ஆமணக்கெண்ணெய்.
முத்தழல் - முத்தீ, அது: மூவகை அக்கினி.
முத்தளசி - முருங்கை, மூன்றிலைப்பகுதி.
முத்தன் -இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன், அரன்,அருகன், சுத்தன், புத்தன், முத்திபெற்றோன், வயிரவன்.
முத்தாகலாபம் - முத்தாரம், முத்துவடம்.
முத்தாகாரம் - முத்துச்சிப்பி. [தனம்.
முத்தாசனம் - முத்தாதனம்,முத்துச்சிம்மா
முத்தாடல் - கொஞ்சுதல், முத்தமிடல்.
முத்தாடுதல் - முத்தமிடுதல், முத்தாடல்.
முத்தாதனம் - இடக்காற்பரட்டாற்சீவனியை யழுத்திவலக்காற்பாடு அப்பரட்டின் கீழழுந்தவிருத்தல், முத்தாசனம்.
முத்தாத்துமா - பக்குவன்,வீடுபெற்ற உயிர்.
முத்தாந்தம் - முத்தியாகியஉயர்கதி.[பழம்.
முத்தாபலம் - இசங்கம்பழம், முத்து,சங்கம்
முத்தாமணக்கு - ஓர்மணக்கு.
முத்தாரம் - முத்துமாலை, முத்தாகலாபம்.
முத்தாலஸ்தை - முத்துமாலை, ஓர் பண்,சமஸ்கிருத தருக்கசாஸ்திரம்.
முத்தாவதேசுரர் - திருத்துருத்தியில் கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
முத்தாவலி - முத்தாவணி முத்துமாலை.
முத்தானம் - அடுப்பு, மூவகைத்தானம்.
முத்தான்மா - முத்தாத்மா, சுத்தான்மா.
முத்தி - திசை, பிறப்பு நீங்குகை, முத்தம், மோட்சம், பதமுத்தி பரமுத்தி யென்ற இருவகை முத்திநிலை, கொஞ்சுதல், (2) உதரத்தீ, உயிர்த்தீ, சினத்தீ, அன்றியும்;ஆகவனீயம்காருகபத்தியம்தக்கணாக்கினியம் எனும் மூவகையக்கி, முத்தீ, சேர்ந்து, முத்தமிட்டு.
முத்திகம் - நூற்றெட்டுபரிடதங்களுள் ஒன்று.
முத்திகை - அரண்வளைப்பு, முற்றுகை.
முத்திதானம் - மோட்சதலம், நித்தியவீடு.
முத்திதிசை-ஞானபட்சம், ஞானமார்க்கம்.
முத்தித்தலம் - அயோத்தி, மதுரை, மாயா, காஞ்சி, அவந்தி, துவாரகா.
முத்திநெறி-ஞானமார்க்கம், மோட்சநெறி.
முத்திபஞ்சாட்சரம் - பிரணவஞ்சேர்ந்த பஞ்சாக்கர மந்திரவகை.
முத்திபதம் - மோட்சபதவி, ஞானநிலை.
முத்திப்பேறு-மோட்சவாழ்வு,நித்தியசுகம்.
முத்திமண்டபம் - காசியில் விசுவநாதர்சந்நிதிற்குத் தெற்கிலுள்ள மண்டபம்.
முத்திமார்க்கம்-விதிமார்க்கம், முத்திநெறி.
முத்திமுத்திரை-தாமிரபருணி.
முத்தியம் - முத்து,பால்,நித்தியம்,அம்மைக்கொப்புளம்.
முத்திரமம் - இலவங்கப்பட்டை.
முத்திராங்கிதன் - முத்திரிக்கப்பட்டவன்.
முத்திராங்கிதை-தங்கசாலை,முத்திராசாலை.
முத்திராசாலை -அச்சுக்கூடம்.
முத்திரதானம் - அக்கினியிற் சூடேறப் பெற்ற சங்கசக்கர முத்திரைகளைத் தோளில் ஏற்றும் சடங்கு. [என்னேவல்.
முத்திரி - அடையாளம், குறிப்பு, முத்திரி
முத்திரிகை - முத்திரை, முத்திரை மோதிரம், எழுத்துப்பதிக்கப்பெற்றமோதிரம்.
முத்திரித்தல் - முத்திரைவைத்தல், குறியிடல்.
முத்திருக்கஞ்செடி - செந்துருக்கம்.
முத்திருக்கஞ்செவி - நிலக்கடம்பு.
முத்திரை - அடையாளம், இலாஞ்சனை, பூசை செய்யும்போது காட்டும் கையடையாளம், கையாற்காட்டும் அபிநயக்குறி.
முத்திரைகடுதாசி-முத்திரையிட்டபத்திரம்
முத்திரைக்கம்பு - முத்திரை அச்சு.
முத்திரைக்குத்திப்பார்ப்பார் - தத்துவாதிகள்,விஷ்ணுவின் பஞ்சாயுத அடையாளங்களைச் சரீரத்திற் சந்தனத்தாற் பதித்துக்கொள்ளும் மாத்துவர். [சாலை.
முத்திரைக்கூடம்-காவலறை, அச்சுயந்திர
முத்திரைக்கோல் - முத்திரைக்கம்பு.
முத்திரைசேவகன் - வில்லைச்சேவகன்.
முத்திரைச்சூடு - கால்நடைக்கு இடும் சூடு.
முத்திரைதானம் - முத்திராதானம்.
முத்திரைத்தாள் - முத்திரைக்கடுதாசி.
முத்திரைப்படி - அரசாங்க அடையாளமிடப்பட்ட படி, சரியான அளவு படி.
முத்திரைப்பல்லவம் } இசைப் பதத்தினடி
முத்திரைப்பல்லவி } தோறு மொட்டிப் படிக்கும் பல்லவி.
முத்திரைமோதிரம்-அரசர் அணியும் கணையாழி, முத்திரையிட்ட மோதிரம்.
முத்திரையிலாஞ்சனை - முத்திரைக்குறி.
முத்திவிக்கினம் - முத்திக்கிடையூறு; அஃது: அறியாமை,ஐயம் திரிபு, அன்றி, உடல், உலகு, பசாசு. [நல்லறிவு.
முத்திவித்து - ஞானம், பேரின்ப உணர்வு,
முத்திவிலக்கு - முத்திவிக்கினம்.
முத்திளம் - கக்கரி, முள்ளுக்கக்கரிக்காய்.
முத்திறங்குதல் - வைகுரியில் முத்துக்கள் பால் வடிந்து மறைதல.
முத்தீ - மூவகை அக்கினி, முத்தி.

முத்தீமரபினர் - வேதாக்கினி மூன்றையும் பேணும் குலத்தவர், பார்ப்பார்.

முத்து-ஓரிரத்தினம், சங்கு முதலியவற்றின் முட்டை, பருப்பு, பிரியம், மேலானது, வைசூரிக்குரு, ஆமணக்குவிதை, கண்ணீர், முத்தம், வெண்குருகு.

முத்துக்கடுக்கன்-முத்துக்கட்டிய கடுக்கன் என்னும் காதணிவகை. [வகை.

முத்துக்கண்டி - முத்தாலாகிய கழுத்தணி

முத்துக்கற்கம் - ஓர் மருந்து; அது: முத்தைப் புடமிட்டுச் செய்வது.

முத்துக்கிருஷ்ணமுதலியார் - சென்னையில் மணலி சின்னையா முதலியார் வகையராவில் 18-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த வேளாளப் பிரபு, இவர் அருணாசல கவிராயர்பாடிய ராமாயண கீர்த்தனத்தைத் தமது சபையில் அரங்கேற்றுவித்து அவர்க்குக் கனகாபிஷேகம் பண்ணினவர்.

"கனந்தந்தான் கனகாபிஷேகந்தந்தான், கலங்மிலாக் கரும்பொருளே யழைத்துத் தந்தான், மனந்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான், வாணிசிங்கா சனத் திருத்தி வரிசை தந்தான், இனந்தந்தானிராம கதை யெவர்க்குந் தந்தான், எனராமாயணக்கவிஞ னெனப்பேர் தந்தான், அனந்தந்தான் மணலி முத்துக்கிருஷ்ண பூபன் அகந்தந்தானிருமையிலுஞ் சுகந்தந்தானே." என்னும் பாடல் பெற்ற பெருந்தகை. [யிஞென்று.

முத்துக்குடை-அருகனது மூவகைக்குடை

முத்துக்குமாரன் - முருகேசன், அறுமுகன்.

முத்துக்குளி } முத்தெடுக்க நீரில்
முத்துக்குளித்தல் } முழுகல். [டை.

முத்துக்கொட்டை - ஆமணக்கங் கொட்

முத்துக்கொட்டைச்செடி - ஆமணக்கு.

முத்துக்கோவை-முத்துமாலை, முத்தாரம்.

முத்துச்சம்பா-ஓர் நெல்; அது: ஐந்துமாதங்களில் விளைவது. [சிப்பிபொறுக்கல்.

முத்துச்சலாபம் - முத்துக்குளிப்பின்பேறு,

முத்துச்சல்லி - முத்துக்கோத்த தொங்கல்.

முத்துசனிக்குமிடம்-முத்துண்டாகுமிடம்.

முத்துச்சிப்பி - முத்திருக்குமிப்பி.

முத்துச்சிவிகை - முத்துப்பல்லக்கு.

முத்துச்சுண்ணம் } முத்தை நீற்றிய
முத்துச்சுண்ணும்பு } சுண்ணம்.

முத்துச்சோளம் - வெள்ளைச் சோளம்.

முத்துடக்கன் - நிலக்கடம்பு.

முத்துண்டாகுமிடம்-அஃது: உடும்பு கமுகு கரும்பு கொக்கு சங்கு சந்திரன் சிப்பிசெந்நெல் தாமரை நங்கையர் கழுத்து நந்நாகம் பசுவின்பல் பன்றிக் கொம்பு மீன் முதலே மூங்கில் மேகம் யானைக்கொம்பு வாழை. [மேலாடை.

முத்துத்தரியம் - முத்தினால் அலங்காரித்த

முத்துத்தாண்டவர்-இவர் சங்கீதவித்வான், இவர்பாடிய பதங்களும் கீர்த்தனங்களும் அத்புதரசமுடையன, இவர் சீகாழியிலே பிறந்து சிதம்பரத்தில் சிவத்தொண்டு பூண்டிருந்தவர், இவர் இற்றைக்கு இருநூற்றறுபத்தாறு வருடங்களுக்கு முன்னிருந்தவர்.

முத்துத்தாமம் } முத்துமாலை, தாளவ
முத்துத்தாழ்வடம் } டம், நித்திலமாலை

முத்துநீர்-பனிநீர்த்திவலை. [தோன்றுதல்.

முத்துப்போடுதல்-அம்மைநோயில் முத்து

முத்துமழைபெய்தல்-செல்வம் பொங்குதல்

முத்துமாதளை - ஓர் மாதளை. [தாழ்வடம்.

முத்துமாலை - முத்துக்கோவை, முத்துத்

முத்துருவி - மாதர் காதணிவகை.

முத்துவடம் - ஓர் சீலை, முத்துமாலை.

முத்துவன்னச்சேலை - ஓர்வகைச் சேலை.

முத்துவீரஉபாத்தியாயர்-இவர் முத்துவீரியம் செய்தவர், கம்மாளவகுப்பினர்.

முத்துவீரியம்-ஐந்திலக்கணங்களையும் குறித்த ஓர் இலக்கணநூல்; இது: முத்துவீர உபாத்தியாயரால் செய்யப்பட்டது.

முத்துளம் - மூங்கில், வேழம். [றார்.

முத்தூர்க்காற்றம் - சோழநாட்டிலோர் சிற்

முத்தெயில்-பழமையானமதில். [ளிசிந்தல்.

முத்தெழும்புதல் - முத்துப்போடுதல், நீர்து

முத்தெறிதல் - குருநோய்பிடித்தல்.

முத்தை-கவளம், திரட்சி, மிகவுந் தெரிவிலாள், பேதைப் பருவத்தாள்.

முத்தையன்-சுப்பிரமணியன், முருகன்.

முத்தொகைவினை-ஓர்வகைக்கணக்கு.

முத்தொழிலர் } வைசியர் (உழவு வாணி
முத்தொழிலார் } கம் ஆநிரை காத்தலாகிய முத்தொழில் உடையோர்)சூத்திரர்.

முத்தொழில் - முச்செயல்; அது: திருஷ்டிதிதி சங்காரம், ஆக்கல், காத்தல், அழித்தல்

முத்தொழிற்பகவன் - கடவுள், பிரமன்.

முத்தொள்ளாயிரம் - சேரசோழபண்டியருள் ஒவ்வொருவருக்கும் 900 செய்யுட்களாக ஈராயிரத்தெழுநூறு வெண்பாக்களாலாக்கப்பட்ட ஒரு பழைய நூல்.

முத்தோஷம்-முப்பிணி, இலக்கணம் வகுப்பதில் வரும் முக்குற்றங்கள்.

முஸ்தீப்பு - அசீர், தயாரிப்பு, முஸ்தீபு.
முஸ்தீது - அசீர், முஸ்தீபு.
முஸ்தை - கோரைக்கிழங்கு, முத்தக்காசு.
முந்த - முன்னே. [முற்படுகை, முனை.
முந்தல் - தலைப்பு, முச்சந்தி, முந்துதல்,
முந்தன் - கடவுள், மூத்தோன்.
முந்தாநாள்-நேற்றைக்கு முந்தியநாள்.
முந்தானை - முன்றானை. [முற்காலம்.
முந்தி - முன்றானை, முன்னே, முன்னிடம்,
முந்திரிஞர் - முன்னோர், மூதாக்கள்.
முந்திரி - முந்நூற்றிருபது பாகத்தொன்று.
முந்திரிகை - ஒரெண், ஓர் செடி, முந்திரி.
முந்திரிக்கொட்டை - முந்திரியின் விதை, அலுவசியமாக எதிலும் தலையிடுபவன்.
முந்து - பழமையான, பொந்து, முந்தென்னேவல், வெண்ணுரை, முன்பு, ஆதி.
முந்துதல்-முன்றல், மேலெழுதல், எதிர்ப்படுதல், காலம் இடம் முதலியவற்றுல் முற்படுதல், சிறத்தல், பழமையாதல்.
முந்துநூல்-முதனூல், வேதம். [னென்று.
முந்துறக்காண்டல் - அகப்பொருட்டுறையி
முந்துறல் - முற்படுதல், முந்துதல்.
முந்துறுதல்-முன்னிலையாதல், முற்படுதல்.
முந்துறுத்தல் - காட்டிக்கொள்ளுதல், ஒருவன் முன்னிலையில் அறிவித்தல்.
முந்தூழ் - பழவினை, பூர்வகன்மம்.
முந்தூள் - மூங்கில், வேழம், கழை.
முந்தை - பழமை, முற்காலம், முன்னோன், முன், சிறுபாத்திரவகை. [காலம்.
முந்தைநாள் - முன்னுள், முந்தாநாள், ஆதி
முந்தையோர் - முன்னோர், தாதையர்.
முந்நாடி - மூன்றுநாடி; அவை வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி.[மூன்றுநாடு.
முந்நாடு-சேர சோழ பாண்டியர்களுக்குரிய
முந்நீர் - கடல், சமுத்திரம், உததி, ஜலதி.
முந்நூலார் - முதல் மூன்று வருணத்தார்.
முந்நூல்-பூணூல், மூவகைநூல்; அது முதனூல் சார்புநூல் வழிநூல், மகளிர் கழுத்தணிவகை, மின்னூல். [வகை.
முந்நூற்றுநாலு - சீட்டாட்டத்தில் ஒரு
முந்நூன்மார்பர்-அந்தணர், பாப்பார்.
முப்பகை-காமம், மயக்கம், வெகுளி. [யம்.
முப்பதம்-'தத்துவமசி' என்னும்மகாவாக்கி
முப்பதுநோன்பு-முகம்மதியர் ரம்ஸான் மாதத்திற் பிரதி தினமும் கொண்டாடும் விரதம்.
முப்பத்திரண்டறம்-(தொகையிற்காண்க.)
முப்பத்துமுக்கோடிதேவர்-முப்பத்து மூன்று கோடியாகக் கணக்கிடப்படும் தேவர்.
முப்பத்துமுத்தேவர் } முப்பத்து மூன்று
முப்பத்துமூவர் } தேவர் (தொகையிற் காண்க.) [மிளகு.
முப்பலை - திரிபலை, அது சுக்கு, திப்பிலி,
முப்பழம்-முக்கனி; அது மா பலா வாழையிவற்றின்கனி, திரிபலை, பெரிய முப்பழமென்னும் சங்கநூல்.
முப்பா-ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா.
முப்பாட்டன் - பாட்டனுடைய பாட்டன், பாட்டனுக்குத் தந்தை.
முப்பாட்டி-முப்பாட்டன் மனைவி, பாட்டியின் தாய், பாட்டனுக்குப் பாட்டி.
முப்பால்-முப்பகுதி; அஃது ஆண்பால் பெண்பால் அலிப்பால் என மூன்றுவிதப் பால். அன்றி காய்ச்சுப்பால் திரட்டுப்பால் குழம்புப்பால், தாய்ப்பால் பசுவின்பால் ஆட்டுப்பால், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பகுப்புகள், இம் முப்பாலே விரித்துக் கூறுவது திருக்குறள்.
முப்பாழ்-உடம்புக்குட் சூனியமாய மூன்றிடம், சீவேசுவர ஜகத்துக்கள், நிலத்திற் குண்டாம் வெயிற்பாழ், வெள்ளப்பாழ், குடிப்பாழ் என்ற மூவகையானகேடு.
முப்பான் - முப்பது. [சிலேற்பனம்.
முப்பிணி-முத்தோஷம்; அவை: வாதபித்த
முப்பு - அகஸ்தியர் தமிழ்வாகடம், முப்பூ.
முப்புடி - முக்குணம், திரிபுடி.
முப்புடை - அடுப்பு, அடுப்புக்கட்டி, மூன்று விதையுள்ள கனி.
முப்புடைக்கனி } தேங்காய், மூன்றுவிதை
முப்புடைக்காய் } யுள்ளகனி. [கன்.
முப்புரமெரித்தோன் - சிவன், திரிபுராந்த
முப்புரம்-திரிபுரம்;அவை: இருப்பு, பொன், வெள்ளி மதில்களுடைய கோட்டைகள்.
முப்புரி - மூன்றுநூல் சேர்த்துத் திரித்தகயிறு, முப்புரம், பூணூல்.
முப்புரிநூலோர் - பார்ப்பார். [நூல்.
முப்புரிநூல் - பூணூல், மூன்று புரிசேர்ந்த
முப்புவனம் - சுவர்க்கம், பூமி, பாதாளம் ஆகிய மூன்று உலகங்கள்.
முப்புள்ளி - ஆய்தவெழுத்து. [கொள்வது.
முப்பூ - மருந்து முடிப்பதற்குக் குருவாய்க்
முப்பூரம் - புரட்டாதி, பூரம், பூராடம் என்னும் நட்சத்திரங்கள்.
முப்பேதம்-சுகதபேதம் சுசாதிபேதம் விசாதிபேதம் என்ற மூவகை வேறுபாடு, பதி பசுபாசம் என்ற பேதங்கள்.
முப்பொருள் - திரிபதார்த்தம், திரிமூர்த்தி.

முப்பொழுது-முப்போது,காலேஉச்சிமாலே.
முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் - காலே உச்சி மாலே என்னும் திரிவேளைகளிலும் சிவமூர்த்தியைத்தொட்டுப்பூசைசெய்தற் குரிய ஆதிசைவப் பிராமணர். இவர்கள் தொகையடியார்களுள் சேர்ந்தவர்கள்.
முப்பொறி - மனம் வாக்கு காயம் என்பன.
முப்போர்நாயனார் - ஓர் சங்கப்புலவர்.
முமுசாநம் - மேகம், கொண்டல், முகில்.
முமுடம் - முற்றத்துறத்தல், முழுத்துறவு.
முமுட்சு - துறவி, மோக்ஷதாகமுள்ளோன்.
முமுட்சுத்துவம்-பரவிராகம், முற்றத்துறத் தல், சாதன சதுட்டயம் நான்களுள் வீடு பேற்றின் விருப்பம்.
முமுட்சுப்படி - பிள்ளேலோகாசாரியார் இயற்றிய அஷ்டாதச ரஹஸ்யத்தின் பகுதி.
மும்மடங்கு } மூன்றுமடங்கு, மூன்றுபங்கு.
மும்மடி }
மும்மடியாகுபெயர்-ஒன்றற்கிருமடியாகு பெயராய் நின்று அதனுலாய மற்றதற்கும் பெயராய் வழங்குவது. (உ-ம்) கார்.
மும்மணி - புருடராகம், வயிடூரியம், கோமேதகம் என்பன.
மும்மணிக்கோவை - ஓர் பிரபந்தம்; அது: வெண்பாவுமாசிரியப்பாவுங்கலித்துறையு முறையே தொகை முப்பது பெறவடுக்கியந்தாதித் தொடையாய்ப்பாடுவது.
மும்மணிமண்டலம் - மும்மண்டலம்.
மும்மணிமாலே-ஓர் பிரபந்தம்; அது: வெண் பாவுங் கலித்துறையும் அகவலும் அந்தாதித் தொடையான் முப்பது பாடுவது.
மும்மண்டலம் - பூமி அந்தரம் சுவர்க்கம். என்பன; இவையன்றி, (அக்நிமண்டலம் ஆதித்தமண்டலம் சந்திர மண்டலம்.)
மும்மதக்கோடு - தாலம்ப பாஷாணம்.
மும்மதத்தன் - விநாயகர், கஜமுகன்.
மும்மதம்-யானேயின் மும்மதங்கள்; அவை: கன்னமதம், கபோலமதம், பீஜமதம்.
மும்மதன் - மும்மதத்தன், விநாயகன்.
மும்மதில் - முப்புரம், திரிபுரம்.
மும்மரம் - மும்முரம், முண்மரம்.
மும்மரித்தல் - உக்கிரம்கொள்ளல், கொந்தளித்தல், மும்முரித்தல், வீறுகொளல்.
மும்மலத்தார் - சகலர், மூன்றுமல முடையவர். [மாயை காமியம்.
மும்மலம் - முக்குற்றம்; அவை: ஆணவம்
மும்மா - மூன்று ஒருமா. [மழைபெய்வது.
மும்மாரி - ஒருமாதத்தில் மூன்றுதடவை
மும்மின் } மிருகசீரிடம், மதிநாள், மார்
மும்மீன் } கழி.
மும்முடிச்சோழன் - முதல் இராச ராசன், இவனுக்கு சிவபாத சேகரன், அருண் மொழி, இராஜாச்சயன், க்ஷத்திரிய சிகாமணி என்னும் பெயர்களுண்டு. இவனுக்குச் சோழமாதேவி,தந்திசத்திவிடங்கி, திரைலோக்கியமாதேவி, பஞ்சவண்மாதேவி, அபிமானவல்லி என ஐவர் தேவியர், இவன் குமாரர் பரகேசரி, இராஜேந்திரசோழன் என இருவர். சந்தவ்வை,மாதேவடிகள்என இருவர்புத்திரிகளுமுண்டு; இவன் சரிதத்தை திருவிசலூர் சாசனம் கூறும். இவனே தஞ்சை இராஜராஜேஸ்வரர் ஆலயம் கட்டுவித்தவன். இவன்மீது இராஜராஜேஸ்வரநாடகம்பாடப்பட்டுள்ளது நம்பியாண்டார் நம்பியும் கண்டராதித்த தேவரும் இவன் காலத்தவர்கள். இவன் பாண்டி சேர ஈழமண்டலங்களே வென்றதால் மும்முடிச்சோழனென்றும் அவ்வேந்தர் மூவருக்கு முரிய முடிகளைத் தரித்தவனுகலின் முடிமுடிச் சோழனெனவும் பெயர் பெற்றனன்.
மும்முட்டி-சிற்றுமுட்டி, பேராமுட்டி நாக முட்டி என்ற செடிகள்.
மும்முரசு - நியாயமுரசு, வீரமுரசு, திராக முரசாகிய மூன்று முரசுகள்.
மும்முரம்-உக்கிரம், கொந்தளிப்பு, கடுமை, விரைவு, ஆடம்பரம், கவனம். [த்தல்.
மும்முரித்தல்-உக்கிரங்கொள்ளல், மும்மரி
மும்முறை - மூன்றுதரம், மூன்றுமுறை.
மும்மூட்சு - துறவு. [உருத்திரன், திரிகடு.
மும்மூர்த்தி - திரிமூர்த்தி, பிரமா விட்ணு
மும்மூன்று - ஒன்பது, தனித்தனி மூன்று.
மும்மை - முக்காலம், முப்பிறப்பு, மூன்று யிருக்குந்தன்மை, மூன்று, உம்மை இம்மை மறுமையாகிய மூவகை நிலேபேறு.
மும்மைத்தமிழ் - முத்தமிழ், எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பகுதிக்குட் பட்ட தமிழ் இலக்கணம்.
மும்மையுலகு - மூன்றுலகு; அவை: சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்பன.
முயக்கம் } கலவி, முயங்கல், தழுவுகை, பு
முயக்கு } ணர்ச்சி, சம்பந்தம்.
முயங்கல் - தழுவல், கூடல், புணர்தல்.
முயங்காமை - தழுவாமை [மாக வாழ்தல்.
முயங்கிக்கொள்ளுதல்-புருஷனும் மனேவியு
முயங்கு - முயங்கென்னேவல்.
முயங்குதல் - தழுவல், புணர்தல், கூடல்.

முயலகன் - நடராஜப்பெருமான் ஏறி நடிக்கும் மாயையெனமதிக்கும்பூதம்,முயல்வலி.
முயலல்-முயலுதல், தொடரல், முற்படல்.
முயலாக்கிரபுத்தி - மந்தபுத்தி, மட்டி.
முயலாக்கிரம் - உலக்கைத்தலை, உலக்கைக் கொழுந்து, கழுந்து. [மை.
முயலாமை - முயலாதிருத்தல், ஊக்கமின்
முயலின்கூடு - சந்திரன், முயற்கூடு.
முயலுதல் - முயற்சிசெய்தல். [உப்பு.
முயலுப்பு - வளையலுப்பு, வளையல் மண்
முயலை - ஓர் கோரைக்கிழங்கு.
முயல்-போர், முசல்; இது: வடகீழ்த்திசைப் பாலன் குறியுமாம், முயலென்னேவல்.
முயல்வலி } முசல்வலி, வலிப்புவகையி
முயல்வாதம் } லொன்று.
முயல்வார்-யோகியர், யோகிகள், முனிவர்.
முயல்வு - முயற்சி, முயலுகை, முயலல்.
முயறல் - முயலுதல், பிரயத்தனப்படுதல்.
முயற்களங்கம்-சந்திரகளங்கம், முயற்கறை.
முயற்கறை - சந்திரனிடத்துள்ள களங்கம்.
முயற்காதிலை - ஓர் வகையிலை, முயற்கறையன், சந்திரன், திங்கள், இந்து.
முயற்கூடு-சந்திரன், மதி, சோமன். [ருள்.
முயற்கொம்பு - முயலின்கொம்பு, இல்பொ
முயற்கோடு - முயற்கொம்பு.
முயற்சி-ஊக்கம், தொடர்ந்தேற்றி, பிரயத்தனம். [கொண்டிருக்கும் சுவாமியெயர்.
முயற்சிநாயகர் - திருமீயச்சூரிலே கோயில்
முயற்சிவிலக்கு - முயற்சிதோன்றக் கூறி விலக்கு மலங்காரம்.
முயற்செவிக்கள்ளி - இலைக்கள்ளிவகை.
முயற்புல் - புல்வகையி லொன்று.
முயற்றி - முயற்சி, ஊக்கம், பிரயத்தனம்.
முயற்றிசை - வடகீழ்த்திசை.
முயற்று - முயற்சி, பிரயத்தனம்.
முயலெய் - முயல்வலி, முசல்வலி.
முயிறு - முசுடு, முசுறு, முசுட்டெறும்பு.
முரகரி -.முராந்தகன், நாராயணன்.
முரங்கினம் - மிளகு, மலைவாசம்.
முரசகேதனன் } தருமன், முரசத்
முரசகேது } தைக் கொடியி
முரசக்கொடியோன் } லுடையவன்.
முரசத்தூரு - திருமால், முரகரி, முருந்தன்.
முரசபந்தம் - மிறைக்கவிவகை.
முரசபலம்-பலா,பலாசம் [நிலப்பறைவகை.
முரசம் - மேளம், வாச்சியப்பொது, மருத
முரசல் - ஓடியக்கூடிய முருடுள்ளது.
முரசவாத்தியம் - பேரிகைவாத்தியம்.
முரசறைதல் - யாவரும் அறியப்பறையடித்துச் சொல்லுதல், வெளியிடுதல்.
முரசிடுதல் - முரசுவைத்தல், முரசறைதல்.
முரசு - மேளம்; அஃது: அட்டமங்கலத் தொன்று, இராசசின்னத்து மொன்று, உத்திரட்டாதிநாள்,பல்வினீறு,பேரிகை.
முரசுமூன்று-வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு; இதனை: "இமிழ்குரல்முரசுமூன்றுடனாளும் தமிழ்க்கெழுகூடல்" என்பதனால் விளங்கும்.
முரசுயர்த்தோன் - முரசக்கொடியோன்.
முரசுவைத்தல் - முரசுவளர்தல்.
முரசை - குபேரன் மனைவி.
முரசொலி - பேரிகையோசை. [வர்.
முரஞ்சியூர்முடிநாகராயர் - தலைச்சங்கப்புல
முரடன்-முரட்டாள், மரியாதை தெரியாதவன், பிடிவாதக்காரன், முரடன்.
முரடு - கணு, கரடு, பதமையின்மை, முனி, சரீரத்தின்மூட்டு,மரியாதையின்மை,பிடிவாதம், பருமன், முருடு, திமிர்.
முரட்கை - கலிப்பா, ஐந்துபாவி லொன்று.
முரட்டடி } முரட்டுத்தனம்,இணக்க
முரட்டாட்டம் } மற்ற குணம்.
முரட்டுக்கழுத்து-வணங்காதகுணம்.[ட்டம்
முரட்டுத்தன்மை-முரட்டுத்தனம்,முரட்டா
முரட்டுப்பாட்டு - இனிமையற்ற இசைப் பாட்டு, அரிதிற் பாடும் பாடல்.
முரட்டுமாடு - படியாத மாடு, கொழுகாளை.
முரட்டுவேலை - ஒழுங்கற்ற காரியம். [தல்.
முரணத்தொடுத்தல் - மாறுபடத் தொடுத்
முரணந்தாதி - ஈற்றுப்பொருட்கு மாறுகிய பொருளை முதற்கண் வரப் பாடல்.
முரணர் - பகைவர், மேவலர், ஒன்னார்.
முரணல் - மாறுபடல், மாறிப்போதல்.
முரணிற்றோன்றல் விலக்கு - ஓரலங்காரம்; இஃது : இன்னபொருட் கின்னின்ன வை விரோதமா யிருந்தாலுமின்ன தினால் அவிரோதமெனக் கூறல்.
முரணுதல் - மாறுபடுதல், பருக்குதல்.
முரண் - அமையாமை, சொல்லும் பொருளுமொன்றற் கொன்று விரோதிப்பக் கூறுவது (உ-ம்) வெண்மலர் கார்வண்டு, பகை, போர், முரணென்னேவல்,முரண்டொடை, வலி, முரட்டுக்குணம், கொடு
முரண்டல்-எதிர்த்தல், பகைத்தல் [மை.
முரண்டன்-துடினக்காரன், பொறையிலான், மாறுபாடுள்ளவன், அவசரக்காரன்.
முரண்டு-அமையாமை, இசையாமை, மாறுபாடு, பிடிவாதம், வளையாமை.
முரண்டுதல்-பிடிவாதமாதல், மாறுபடுதல்.

முரண்டொடை - சொல்லும் பொருளுமுரணத்தொடுப்பது. [ண்டு.
முரண்படுதல் - மாறுபடுதல்; முரணல்,முர
முரண்மறலி - சமன், நமன். [படும்சொல்.
முரண்மொழி-எதிர்மொழி, பொருள்மாறு
முரண்விளைந்தழிவணி - ஓரலங்காரம்; அஃது:ஓரிடத்துள்ளனவுங் காரியகாரணங்களாகாதனவுமாகிய இரண்டு தருமங்கட்குமேன்மேலுந் தோன்றியழியும் பகைமையைச் சொல்லுதல். [முரண்டொடை
முரண்வினைச்சிலேடை-சிலேடித்துக் கூறு
முரதம்-பாஞ்சசன்னியம்.
முரந்தலை - நர்மதாநதி.
முரபா } பாகில் ஊறவைத்த தின்பண்
முரப்பா } டம் முதலியன.
முரப்பிரியை - ஈசானன்மனைவி.
முரமர்த்தநன் - விட்டுணு, முராரி.
முரமுரவெனல் } துவைத்தற்குறிப்பு, சுத்
முரமுரெனல் } தமாயிருத்தற்குறிப்பு.
முரம்பு-உப்பளம், கழி, பரலடுத்துயர் நிலம். பாறை, மேடு, வன்னிலம். [தன்.
முராரிபு-விஷ்ணு, திருமால், முராரி, முகுந்
முரலல் - ஒலித்தல், பேசலானெழுமொலி, கலப்போசை, எடுத்தலோசை.
முரலி - முரளி, முராரிபு, முராரி.
முரலிதரன் - கிருட்டிணன், கண்ணன்.
முரலுதல் - ஒலித்தல், கதறுதல். [நதி,
முரலை-கேரளநாட்டிலுள்ள ஓர்நதி, நர்மதா
முரல் - ஓர் மீன், முரலென்னேவல்.
முரல்வு - உள்ளோசை, முரவம்.
முரவம் - பறைவகை, முழக்கம்.
முரவைரி } கிருஷ்ணன், கோபாலன்,
முரவிரோதி } கண்ணன். [முல்.
முரளி-மூக்கால் வாசிக்குங்குழல், வேய்ங்குழல்
முரளீதரன் - வேய்ங்குழலுடையவன்.
முரற்றல் } ஒலித்தல், கதறுதல், குமுறுதல் } றல். [பட்ட ஓரரக்கன்.
முரன்-முராசுரன், திருமாலால் கொல்லப்
முராசுரமர்த்தநன் - கிருஷ்ணன்.
முராசுரன்-தானவன், நரகாசுரன் தமையன் இவனே கிருஷ்ணர் கொன்று முராரியென்னும் பெயர் பெற்றார்.
முராரி (1) இவன் அநர்க்கரா காவியம் என்னும் நாடகஞ்செய்த ஸம்ஸ்கிருதகவி (2) க்ருஷ்ணர், திருமால், முராந்தகன்.
முரி - பாலைநிலம், தண்டு, வளைவு.
முரிகம் - மயிர்படாழ், கம்பளிப்போர்வை.
முரிகுதல் } ஒடிதல், கெடுதல், தோற்றல்,
முரிதல் } பின்னப்படுதல், நிலைகெடுதல், குணங்கெடுதல், தளர்தல்,
முரித்தல் - கெடுத்தல், தோல்வி செய்தல், முறித்தல், நடத்துதல், நகைகுலங்குகை.
முரிநிலை - இயுதியிற்படுந்தரவு. [கை.
முரிப்பு - எருத்துத்திமில், முரித்தல், முரிக்
முரிமுரி - எட்டி, முஷ்டி, காஞ்சிரை.
முரியல் - முரியப்பட்டது. [கன்னவாயில்.
முரிவாய் - இடிந்து உண்டாக்கின வாசல்,
முரிவு-ஒடிவு,மடிப்பு,முறிவு,ஊழ்,வருத்தம்.
முருக நாயனார்-திருப்புகலூரிலே பிராமணகுலத்தில் அவதரித்த சிவபக்தர், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் நண்பர்.
முருகயர்தல் - முருகக்கடவுளுக்குப் பூசை செய்தல், வெறியாடுதல்.
முருகவேள் - முருகக்கடவுள். [சூத்து.
முருகனுடல்-தூடி,குடை என்ற இருவகைக்
முருகன் - இளையோன்,குமரன், வெறியாட்டாளன், பாலசுப்பிரமணியக் கடவுள்.
முருகியம் - குறிஞ்சிநிலப்பறை, முருகனுக்குரிய வெறியாட்டுப்பறை.
முருகீசன் - குமரன், முருகேசன்.
முருகு - அகில், அழகு, இளமை, எலுமிச்சை, எழுச்சி, கள், காதணியிலொன்று, குமரன், திருவிழா, தேன், வாசனை, வெறியாட்டாளன், பூத்தட்டு, விறகு, திருமுருகாற்றுப்படை. [வம் மிஞ்சுதல்.
முருகுதல் - முதிர்தல், காய்ச்சுதலிற் பக்கு
முருகுவளர்கோதை - திருக்கண்ணூர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் தேவியார்.
முருகேசன் - குமரன், முருகக்கடவுள்.
முருகை - ஓர் வகைக் கல், முருகுக்கல்.
முருக்கல் - கொல்லல், முருக்குதல்.
முருக்கன்மரம் - மரவகையிலொன்று.
முருக்காமை-கொல்லாமை, வதைக்காமை.
முருக்கிதழ்-முருக்கம்பூப்போலும் அதரம்.
முருக்கு-எலுமிச்சை, கிஞ்சுகமரம், கொலை, முருக்கென்னேவல்,முள்ளுமுருக்கு [லல்.
முருக்குதல்-அழித்தல், உருக்குதல், கொல்
முருங்கல் } அழிதல், முறிதல், அடங்கி
முருங்குதல் } யிரிதல்.
முருங்கிஷம் - பெருங்குரும்பை, கரட்காடு.
முருங்கை - ஓர் மரம், முருக்கை.
முருடர் - வேடர், பிடிவாதக்காரர், முன்பின் யோசனையில்லாதவர், மூடர்.
முருடு - ஓர் வாச்சியம், பறைப்பொது, பெருங்குறடு, விறகு, கரடு முரடு, பிடிவாதம் கொடுமை,மரக்கணு,வெட்டுமரத்தினடி, மரக்கட்டை, பத்தல், பருமை. [ளவர்.
முருட்டுக்கையர் - அடங்காவொழுக்க முள்

முருட்டுத்தன்மை - ஓராது செய்யும்குணம்.
முருந்தம் } கோமளாஸ்தி,இறகினடியிற் கு
முருந்து } ருத்து, வெட்டியமரத்தினடி
வெண்மை, வெண்குருத்து, முத்து.
முருந்தன் - சமர்த்தன், பிரசித்தன்.
முருமுரன் - சூரியன் குதிரையி லொன்று.
முருவிலி - வவ்வாலொட்டி, வாதமடக்கி,
முருவிளரிக்கொடி, இண்டங்கொடி.
முருவிளரிக்கொடி - காரிண்டு, முருவிலி.
முரை - ஒன்பதாம் நந்தன் மனைவி, இவள்
சந்திரகுப்தன் தாய். [யட்டிசல்லி.
முலங்கம் - அதிமதுரம், அதிங்கம், மதுகம்.
முலமுலெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
முலவை - நாய், ஞமலி, முடுவல்.
முலாம் - மலாம், பொன் வெள்ளிப் பூச்சு.
முலாம்பண்ணுதல் - முலாம் பூசுதல்.
முலாம்பழம் - பழவகையிலொன்று.
முலாம்பூசுதல் - உலோகங்களின்மேல் வெ
ள்ளி தங்கங்களை இளக்கிமேற்பூச்சிடுதல்.
முலாம்போடுதல் - முலாம் பூசுதல்.
முலை-கொங்கை,விலங்கின்மடி [ஊட்டுதல்.
முலைகொடுத்தல் - பிள்ளைக்கு முலைப்பால்
முலைக்கச்சு-இரவிக்கை, ஓர் சிவந்தி, முலை
களில் திரண்டு நிற்கும் பாற்கட்டு.
முலைக்கண் } முலைப்பால் வருந்துவாரம்
முலைக்காம்பு } முலையின் நுனிப்பகுதி.
முலைக்கால் - ஆட்டுக்கால், ஆட்டுக்கல்.
முலைக்கிரந்தி - ஸ்தனத்திலுண்டாம் கிரந்
திப்புண், பூடுவகை.
முலைக்குத்து - முலைக்கடுப்பு.
முலைக்கோடு - ஸ்தனாக்ரபாகம், மார்பிடம்.
முலைத்தாய் - செவிலித்தாய்,குழந்தைக்குப்
பால் கொடுப்பவள், செவிலி.
முலைப்பணி - ஸ்தனாபரணம், கச்சு.
முலைப்பாலி - புற்றும் பழம், புற்றிலுள்ள
கறையான் திரள்.
முலைப்பாலெண்ணெய் - தாய்ப் பாலுடன்
கலந்து குழந்தைக்கு ஊட்டும் ஆமணக்
கெண்ணெய், செவ்வெண்ணெய்.
முலைப்பால் - பெண்கள் முலையின்பால்.
முலைப்பாற்கூலி - பெண்ணை வளர்த்ததன்
பொருட்டு மணமகன் பெண்ணின் தாய்க்
குக் கொடுக்கும் பரிசப்பணம்.
முலைமார்பு - நெஞ்சு, இருதயம், மார்பு.
முலைமுகம் - முலைச்சிகரம், முலைக்காம்பு.
முலைமூக்கரிவாள் - இலைமூக்கரிகத்தி.
முலைமூடி - கச்சு, கஞ்சுகம். [ய்யில்.
முலையணி- ஸ்தனாபரணம்,மார்கச்சை,தொ
முலையமுது - முலைப்பால்.
முலைவிலை - முலைப்பாற்கூலி.
முலைவெடிப்பு - முலைக்காம்பு புண்படுகை.
முல்லை - இசை, ஐந்நிலத்தொன்று; அஃது:
காடுங் காடு சார்ந்தவிடமும், ஓர் மரம்,
கற்பு, மன்மதன் கணையிலொன்று, முல்
லைக் கொடி,வனமல்லிகை,வெற்றி,ஈசுர
மூலி, முல்லைநிலப்பண்வகை, சாதாரிப்
பண்சிறப்பியல்பு, முல்லைப்பாட்டு.
முல்லைக்கருப்பொருள்-முல்லை நிலத்துற்பத்
திப் பொருள். அவை: (தொகையிற் கா
ண்க.) [வேலையாள்.
முல்லைக்காரன்-குத்தகைக்காரன், பண்ணை
முல்லைக்கான்யாறு - முல்லை நிலத்தியாறு.
முல்லைக்குழல் - முல்லைக் கொடியால் முப்
புரியாகத் தெற்றியவளையை வளைவாய்க்
கட் செறித்தூதுங் குழல், " முல்லையந்
தீங்குழல் கேளாமோ தோழி " (சிலப்)
முல்லைச்சூட்டு - கற்பிற்கு அறிகுறியாகத்
தலையிலணியும்முல்லைப்பூமாலை.[திருமால்.
முல்லைத்தலைவன் - குறும்பொறைநாடன்,
முல்லைத்தலைவி - கிழத்தி, ஆயத்தி.
முல்லைத்திணை - முல்லைக்குரியன.
முல்லைத்தெய்வம் - திருமால், விட்டுணு.
முல்லைத்தொடை - முல்லைமலர்மாலை.
முல்லைநகைவடிவாள் - திருமயேந்திரப் பள்
ளியிலேகோயில்கொண்டிருக்கும்தேவியார்
முல்லைநிலத்தூர் - பாடி, பாக்கம், சேரி.
முல்லைநிலநீர்-கான்யாறு, குறுஞ்சுனை. [கம்.
முல்லைநிலப்பண் - முல்லைநிலத்திற்குரியரா
முல்லைநிலப்பயிர் - காராமணி,சாமை,வரகு.
முல்லைநிலப்பறை - பம்பை. [கோழி.
முல்லைநிலப்புள் - காட்டுக்கோழி, காஞ்சி
முல்லைநிலப்பெண் - ஆய்ச்சி, ஆயச்சி.
முல்லைநிலமரம் - காந்தள் காயா குருந்து
கொன்றை துளசி முதலியன.
முல்லைநிலமாக்கடொழில் - ஏறுதழுவல்
கான்யாறு குளித்தல் குரவையாடல்
குழலூதல் பசுமேய்த்தல்.
முல்லைநிலமாக்களுணவு-வரகு,சாமை. [யர்.
முல்லைநிலமாக்கள் - ஆயர்ப்பாடியர், இடை
முல்லைநிலமிருகம் - மான், முயல், குரங்கு.
முல்லைநிலம் - காடாகியநிலம். [பண்வகை.
முல்லைப்பண்-முல்லைநிலத்துக்குரிய பெரும்
முல்லைப்பல் - முல்லையரும்பு போன்றபல்.
முல்லைப்பாட்டு - ஓர் நூல்; இது: காவிரிப்
பூம் பட்டினத்துப் பொன்வாணிகனர்
மகனர்நப்பூதனாற்பாடப்பட்டது,இது
தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலை
வியின் இயல்பைக் கூறுவது.

முல்லைப்புறம் - இல்லான்முல்லை, பாசறை முல்லை.
முல்லைமுதல்பொருள் - புறவும்புறவுசார்ந்த விடமும், கார்மாலை யென்னும் பெரும் பொழுது சிறுபொழுதுகளுமாம்.
முல்லையர் - இடையர், முல்லையாளர்.
முல்லையாழ்-முல்லைநிலத்திற்குரியயாழ். [ம்.
முல்லையாழ்த்திறம் - செவ்வழிப்பண்ணின
முல்லையாளர்-முல்லைநிலமாக்கள்,முல்லையர்
முல்லையுரிப்பொருள் - (உரிப்பொருள் காண்க).
முல்லைவநேசர் - திருக்கருவூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
முல்லைவனநாதர் - திருமுல்லை வாயிலில் கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
முல்வயன் } முள்வாயன், கரையான்.
முல்வாயன் }
முவலம் - அவுபல பாஷாணம்.
முழக்கட்டை - நீளக்குறைவானது.
முழக்கம் - ஆரவாரம், ஒலி, குமுறுகை.
முழக்கல் - முழக்குதல். [ற்காரம்.
முழக்கு - ஒலி,முழக்கென்னேவல்,மேகோ
முழக்குதல்-தொனிப்பித்தல், ஒலிப்பித்தல், காரியத்தை விமரிசையாகச்செய்தல். [பு.
முழக்கோல் - நிலமளக்குங்கோல்,முழக்கம்
முழங்கல் - ஒலித்தல், வானங்குமுறல்.
முழங்கனீர் - கடல், ஆர்கலி, சமுத்திரம்.
முழங்கால் - முழந்தாள், முழங்கால்முட்டு, முழங்கால்முட்டுக்கும் கணுக்காலுக்கும் இடையிலுள்ள உறுப்பு.
முழங்கால்முட்டி } முட்டிக்கால், தொடை
முழங்கால்முட்டு } யும்காலும்சேரும்இடம்.
முழங்கால்வலி - முழங்கால்முட்டில் உண்டாம் வலி.
முழங்காற்சில்லு-முழந்தாளினுருளை, காலையும் தொடையையும் சேர்க்கும் எலும்புப் பூட்டின் மேற்பாகம், முழங்காற்சில்.
முழங்காற்படியிடுதல்-முழத்தாளைக்கீழிட்டு வணங்குதல். [யக் கூறப்படுதல்.
முழங்குதல் - பெரிதொலித்தல், பலருமறி
முழங்கை - மணிக்கட்டின்கீழ் முன்கை.
முழங்கோதை - முழங்கெரலி. [துணி.
முழத்துண்டம் - முழத்துணி, இருசாண்
முழந்தாட்கச்சு - அரைச்சட்டையுங் காலுறையும் பூட்டிக்கட்டுமோர் கச்சு.
முழந்தாள் } முழங்கால், சானு.
முழந்து }
முழ்மிடுதல் - முழம்போடுதல். [அங்குலம்.
முழம் - இருசாண்கொண்டது, பதினெட்டு
முழம்போடுதல் - கையால் முழவளவாக அளத்தல், ஆழம்பார்த்தல், பொருந்தாய் பொய் பேசுதல். [ங்கு, முழல்.
முழல் -கழற்சிக்கொடி,கனற்சிக்கொடி,கழ
முழவம் - குடமுழா, முரசு, முழவு. [திவி.
முழவின்மார்ச்சுனை - மண்,நிலம், பூமி, பிரு
முழவு - பறைப்பொது, முரசு, குடமுழா, பால்கறத்தற்குரிய பாத்திரம்.
முழவுக்கனி - பலாப்பழம்,பலாசம்,பனசம்.
முழவுத்தோள் - மத்தளம்போலும்புயம்.
முழா - மேளம், முழவு, குடமுழா.
முழாசு - சுவாலை, கனற்கொழுந்து.
முழாசுதல் - சுவாலித்தல், முழாசு, பரவல்.
முழாவுசால்-முடிவுசால்,கடைசிஉழவுசால்.
முழாள் - வயதுவந்தவேலையாள், முழுஆள்.
முழி - விழி, எலும்புப்பூட்டு, கணு, மொழி.
முழித்தல் - விழித்தல், பார்த்தல்.
முழு - எல்லாம், பருத்த.
முழுகல் } குளித்தல், ஸ்நானம் செய்தல்,
முழுகுதல் } அழுந்தியிருத்தல்,அமிழ்ந்து போதல், மாதவிடாயடைதல், சொத்து மீட்க முடியாமல் போதல். [தல்,
முழுகவிடுதல் - பொருள்தொலையும்படிவிடு கொதுவைச்சொத்தை மீட்காது விடுதல்.
முழுகாமலிருத்தல் - கருப்பமாதல்.
முழுகிக்கிடத்தல் - முழுவதும் முடங்கிக்கிடத்தல், ஈடுபட்டிருத்தல், நீரிலாழ்தல்.
முழுகிப்போதல் - அமிழ்தல்,அடியோடுகெடுதல்,சொத்து மீட்கமுடியாமல்கடனுக்கு உட்பட்டுவிடுதல்.
முழுக்க-முழுதும்,முழுது,எல்லாம்.[வாணி.
முழுக்களவாளி-பெருந்திருடன், முழுக்கள
முழுக்காடுதல் } அப்பியங்கஸ்நானம்,
முழுக்காட்டல் } எண்ணெய் முழுக்கு.
முழுக்காட்டு - நீராட்டு. [குளிப்போன்.
முழுக்காளி-சலாபங்குளிக்கிறவன்,முத்துக்
முழுக்கிரகணம் - பூரணகிரகணம்.
முழுக்கு - மாதவிடாய், மூப்பு, முழுகல்.
முழுக்கூறு - முழுமை, எல்லாம், முற்றும்.
முழுக்கொலை - பிராணவதை.
முழுங்கல் - விழுங்கல், அபகரித்தல்.
முழுச்சவரம் } சருவாங்கசௌளம், பரு
முழுச்சரவும் } ருள் முழுவதும்இழத்தல்.
முழுச்சேதம் - முழுநஷ்டம். [வ-ன்-ள்.
முழுச்சோம்பேறி - அதிகச் சோம்பலுள்ள
முழுச்சௌளம்-முழுச்சவரம், முழுச்சவரம்.
முழுதுகண்டாமன் - ஓர் பாண்டியன்.
முழுது } எல்லாம், முழுவது, சகல
முழுதும் } மும்.

முழுதோருங்குணர்ந்தோன்-அரன்அருகன்
முழுதோன் - கடவுள்,முதல்வன், [கடவுள்.
முழுத்த - முதிர்ச்சிபெற்ற, முழுதும்.
முழுத்தசுரம் - நோய் வகையிலொன்று.
முழுத்தம் - முகூர்த்தம், முகூர்த்தம்.
முழுத்தல் - முழுமையாதல்,மூழ்குவித்தல்.
முழுத்திருடன் - பெருந்திருடன், கள்ளன்.
முழுத்துதல் - அமிழ்த்துதல், ஆழ்த்தல்.
முழுத்தேங்காய் - உடைபடாத தேங்காய்.
முழுத்தொகை - வட்டியுடன் கூடியமுதல் மொத்தம். [அனைத்துமிழத்தல்.
முழுநட்டம் - முழுச்சேதம், முழுமோசம்,
முழுநா - இராசிக்குப் பங்குபடாநாள்.
முழுநாயகம் - கொடிவகையிலொன்று.
முழுநீறுபூசியமுனிவர் - திருநீறு அணிபவரான சிவனடியார்கள், இவர்கள்தொகையடியாருள்ஒருசாரார். [நோக்கிலொன்று.
முழுநோக்கு - பூரணநோக்கு; இது: கிரக
முழுப்பகை - பெரும்பகை, கொடும்பகை.
முழுப்பாய்சுருட்டி - பெருமோசக்காரன்.
முழுப்பார்வை-பூரணத்திருஷ்டி. [சுருட்டி.
முழுப்புரட்டன்-முழுப்புளுகன், முழுப்பாய்
முழுப்புளுகன் - பெரும்பொய்யன். [பொய்.
முழுப்பொய் - பெரும்பொய், கலப்பற்ற
முழுப்பொருள் - கடவுள், முதற்பொருள்.
முழுமகன் - அறிவிலான், மூடன்.
முழுமக்கள்-அறிவிலார்,கசடர், முதியோர்.
முழுமணி - தொளையாதமணி, துளையிடா மணி, குற்றமற்ற இரத்தினம்.
முழுமதி - பூரணசந்திரன், நிலவு.
முழுமதிக்குடையோன் - மன்மதன். [மதம்.
முழுமனசு - முழுச்சம்மதம் பூரணச் சம்
முழுமனை - அறுபதடி நீளமும் நாற்பதடி அகலமுங்கொண்டநிலம்,2400சதுரஅடி கொண்ட நிலப்பகுதி.
முழுமன் - முழுமை, பூரணம், நிறைவு.
முழுமுதல் - கடவுள், முதற்பொருள்.
முழுமுற்றும் - முழுதும், முழுது. [முயற்சி.
முழுமூச்சு - முழுபலத்துடன்செய்யும்விடா
முழுமூடன்-பெருமுட்டாள்,அடிமடையன்.
முழுமை - எல்லாம், முற்றும், பருமை.
முழுவது - முழுவதும், சகலமும், எல்லாம்.
முழுவதுஞ்சேறல்விலக்கு - ஓரலங்காரம்; அஃது:ஒருபொருட்கோர் காரியத்தைக் காட்டித்திரும்ப எல்லாவற்றின் மேலுஞ் செல்லுவதாகக் கூறியதற்குமாத்திரமன்றெனல். [தும், எல்லாம்.
முழுவதும் - முழுமை, பூர்ணமாக, அனைத்
முழுவலயம் - முழுவட்டம்,வென்றி.
முழுவலி-பேராற்றல்,பூரணபலமுள்ளவன்.
முழுவல் - விடாது தொடர்ந்த அன்பு.
முழுவாசி - முழுமை, பூரணசுகம்.
முழுவாசியும் - பெரும்பகுதியும், எல்லாம்.
முழுவுதல் - முத்தமிடுதல், தலைமுழுகுதல்.
முழுவெலும்பு } தசைசுழிந்தவென்பு,எலும்
முழுவென்பு } புக்கூடு.
முழை - குகை, புழை.
முழைஞ்சு - மலையினுட்குகை, குகை.
முழைதல் - நுழைதல், புகுதல். [தல்.
முழைத்தல் - வழுத்தில்லாவோசை,துளைத்
முழைவாசி - சிங்கம், அரிமா, வயமா.
முளகரணை - ஓர் பூடு, மிளகுகரணை.
முளகரியம் - அகத்தி, கரீரம், அச்சம்.
முளரி - ஓமவிறகு, கடைக்கொள்ளி, காடு, தாமரை, நுண்மை, நெருப்பு, முட்செடி, விறகு, பதுமம், சமிதை. [தண்டு.
முளரிநாளம் - தாமரைவளையம், தாமரைத்
முளரிப்பகை - சந்திரன், பனி. [லக்குமி.
முளரிப்பாவை - தாமரையிலிருப்பவள், இ
முளரிமாது - சரசுவதி, திருமகள். [பவன்.
முளரியான் - பிரமன், தாமரையில் இருப்
முளவு - முட்பன்றி, முட்கோள்.
முளா-முள்ளங்கி, கிழங்குவகையிலொன்று.
முளி - குளசு, மரமுதலியவற்றின் காடு, முளியென்னேவல், உலர்ச்சி, வாட்டம், வற்றியபொருள், மரக்கணு, கணுக்கால், செம்முள்ளி, முழி.
முளிதல் - உலர்தல், வேதல், கெடுதல்,முற்றுதல், தோய்தல், பொங்குதல்.
முளித்தல் - காய்தல், வறத்தல், உலர்தல்.
மூளை - அங்குரம், ஆப்பு, தண்டாயுதம்,தறி, நாணயவச்சு,பருவின் மூளை, மகன்,மூளையாணி, மூளையென்னேவல்,மூங்கில்,இளமை, மூலமூளை ஒருப்பழைய நாணயம், மூனை, குழந்தை, கான்மூளை.
மூளைக்கட்டுதல் - செம்மண்கொண்டு துவரையைப் பதப்படுத்துதல், மூளையுண்டாகும்படி செய்தல். [டிக்கீரை.
மூளைக்கீரை - கீரைவகை, இளங்கீரை,தண்
மூளைக்குடம் - பாலிகைக்குடம்.
மூளைக்குதல் - அரும்புதல், வெளிப்படல்.
மூளைக்கூச்சு - குண்டூசி, மாட்டுமூளை.
மூளைக்கொட்டு - ஆற்றுக்காலாட்டியபெண்களினோர் விளையாட்டு.
மூளைதெளித்தல் - மூளையிடல், சுபச்சடங்கிற் பாலிகைகளில் நவதானியம்விதைத்தல், மூளைத்தவிதையை வயலில் இடுதல்
மூளைத்தண்டு - மூளைக்கீரை, இளங்கீரை

முளைத்தல் - முளைக்குதல், உதித்தல். [தை.
முளைத்தாழ்வு-விதைமுளையாமை, மக்கல்வி
முளைத்திங்கள் - பிறைச்சந்திரன். [காய்.
முளைத்தேங்காய்-முளைவெளிப்பட்ட தேங்
முளைப்பருப்பு - முளைக்கட்டியபருப்பு.
முளை - முளைத்தல்,குருக்கட்டல்.
முளைப்பாலிகை - அங்குரார்ப்பணம்.
முளைமூலம் - மூலநோய், பவுத்திரவகை.
முளையடித்தல் -ஆப்பறைதல்,நாணயமச்சடி
த்தல், முளையைஅடித்துஉட்செலுத்தல்.
முளையாணி - கதவு நிற்குமிரும்பு.
முளையான் - சிறுகுழந்தை, பாலகன்.
முளையுருளி - வாடியழிந்த பயிர், இளமை
யிற் கேடடைந்தவன். [லில் விசிறுதல்.
முளையெறிதல் - முளைத்த விதையை வய
முள் - நுண்மை, முள்ளு, முள்வடிவாகச்
செய்யப்பட்டகருவி,கடிகாரத்தின்காலத்
தைக்காட்டும் ஊசி, ஆண்குறி, கூர்மை.
முள்காத்தல் - மௌனமாயிருத்தல்.
முள்சீதா -முள்ளுச்சீத்தா,பழவகைச்செடி.
முள் மகிழ் - மரவகையிலொன்று.
முள்முரண்டை - கொடிவகையி லொன்று.
முள்வறையன்
முள்வாயன்
முள்கவள்ளபடலம் } கறையான்,செல்
லு, சிதலை.
முள்வாங்கி - முள்ளெடுக்கும் கருவி.
முள்வேங்கை மலைவேங்கை,வேங்கைமரம்.
முள்வேலி-முள்ளாலான அடைப்பு, முட்க
ளையுடைய இரும்புக்கம்பியாலானவேலி.
முள்வேல் - முள்ளுடைய வேலமரவகை.
முள்ளங்கத்தரி - முள்ளாங்கத்தரி.
முள்ளங்கி -ஓர்கிழங்கு,முளா. [ளிக்கொடி.
முள்ளங்கிக்கிழங்கு-ஓர்கிழங்குஒருவகைவள்
முள்ளங்கீரை - முட்கீரை, முள்கீரை.
முள்ளஞ்சங்கு - முட்களையுடைய சங்கு.
முள்ளடி - துப்பு, முள் பிரதேசம்.
முள்ளடிக்கூலி - துப்புக்கூலி. [நடுஎலும்பு.
முள்ளந்தண்டு - முள்ளென்பு,முதுகிலுள்ள
முள்ளம்பன்றி - முட்பன்றி, சல்லம்.
முள்ளாங்கத்திரி - முள்ளங்கத்திரி.
முள்ளி - முள்ளுள்ளசெடி, கத்திரிவகை,
மருதோன்றி,கழுதைமுள்ளி,தாழைகள்.
முள்ளிக்கீரை - முட்கீரை, முள்ளுக்கீரை.
முள்ளிடுக்கி - முள்வாங்கி, முள்ளுவாங்கி.
முள்ளியார் - பெருவாயின் முள்ளியார்,
இவர், 'ஆசாரக்கோவை' நூலாசிரியர்.
முள்ளியூர்ப்பூதியார் - ஓர் சங்கப்புலவர்.
முள்ளிலவு - இலவமர வகையிலொன்று.
முள்ளிழைப்புளி - இழைப்புளி வகை.

முள்ளு - நுண்மை,மரத்தின்முள்,மீன்முள்.
முள்ளுக்கடம்பு
முள்ளுக்கடம்பை } செடிவகைகளி லொ
ன்று. [கத்திரி.
முள்ளுக்கத்திரி - முள்ளங்கத்திரி, கண்டங்
முள்ளுக்கரப்பன் } மீந்தோள்மீதுபடரும்
முள்ளுக்கரப்பான் } நோய்வகை.[கடம்பு.
முள்ளுக்களா - களாச்செடிவகை, முள்ளுக்
முள்ளுக்காரை - காரைச்செடி. [கீரை.
முள்ளுக்கீரை - முட்கீரை,முள்ளுத்தண்டுக்
முள்ளுக்கூலி - முள்ளடிக்கூலி. [சங்கு.
முள்ளுச்சங்கு - முள்ளஞ்சங்கு, முள்ளிடைச்
முள்ளுச்சீத்தா - மரவகையி லொன்று.
முள்ளுச்சுண்டெலி - முட்போன்ற மயிருள்
ள சுண்டெலிவகை.
முள்ளுடைமூலம் - முள்ளுள்ளவை, முட்
செடிப்பொது, முட்கள்பொருந்தியவேர்.
முள்ளுநாயகம் - தைத்தமுள்ளைவெளிப்படு
த்துங் குணமுள்ள இலை களையுடையது.
முள்ளுப்பலா - பலாவகையி லொன்று.
முள்ளெலி - முள்ளுச்சுண்டெலி.
முள்ளெலும்பு - முள்ளந்தண்டு.
முறக்கன்னன்-முறம்போன்ற காதுடைய
வன், கணபதி.
முறச்செவியன் - யானை, மதகரி.
முறண்டு - முரண்டு, மீறுகை, வீறுகை.
முறண்டுகம் - அவுபல பாஷாணம்.
முறமுறக்க - சுத்தமாக, நன்ருய் முறுக.
முறமுறத்தல் - சுத்தமாயிருத்தல்.
முறமுறப்பு - சுத்தம், முறுமுறுப்பு. [திரம்.
முறம் - சுளகு, விசாகநாள், 16-வதுநட்சத்
முறி - அடிமை, இலை,உயர்ந்த வெண்கலம்,
எழுதுமுறி, ஓர் வகைப்புடவை, சேரி,
தளிர், துண்டு, முறியென்னேவல்,பத்தி
ரம், மூலைமுறி. [றின்பார்.
முறிகரை - இடிகரை, அழிந்தகரை, ஆற்
முறிகட்டி
முறிக்கட்டி } உயர்ந்த வெண்கலக்கட்டி.
முறிகுளம் - கரைஉடைந்தகுளம்,பூராடம்.
முறிக்கலை- வஸ்திரத்துண்டு, முண்டு.
முறிக்கலைச்சுருக்கு - துண்டுபெற்றகலையா
கிய சுருக்கு; அது: தண்டிற் கட்டியிருப்
பதை யவிழ்த்துச் சுத்தாசமய முதலியன
செய்தற்குக் கையிற் சுருக்கிக் கொள்ளப்
படுவது.
முறிக்குதல் - முறித்தல், ஒடித்தல்.
முறிசாதனம் } முறிப்பத்திரம், மு றி ச்
முறிச்சாதனம் } சீட்டு, முறியோலை.
முறிசெய்தல் - அடிமையாக்குதல்.
முறிச்சி - விற்றற்குரிய வடிமைப்பெண்.

முறிச்சீட்டு - உடன்படிக்கைச்சீட்டு, அடிமை யோலை, கடன்பத்திரம்.

முறிதல் - திரைதல், ஒடிதல், நிலைகெடுதல். அழித்தல், தன்மை மாறுதல், பதந்தப்பு தல், குலைதல், அருள்மாறுதல்.

முறிதிரிசூலை - சூலைநோய் வகை.

முறித்தல் - ஒடித்தல், கீறுதல், நிறுத்திவிடு தல், தன்மை மாற்றுதல், முறித்தல்.

முறித்தேன்-தெளிந்தேன், முறித்ததேன்.

முறிப்பத்திரம்-முறிச்சூட்டு, ஓலைப்பத்திரம்.

முறிப்பு - முரிப்பு, மாற்றுமருந்து, கர்வம்.

முறிப்பெட்டி - பத்திரம் வைக்கும்பெட்டி.

மெழுகுபாகல் - பாகல், மிரிபாகல்.
மெழுகுபீர்க்கு - பீர்க்குவகையிலொன்று.
மெழுகுபொம்மை - மெழுகினுற்செய்த பதுமை, சிரமங்களைத்தாங்கமுடியாவ-ன்-ள்.
மெழுகுமண் - பசைமண், பொன்துகளை ஒத்தி எடுக்கும் மெழுகு, பூசுமண்.
மெழுகுவத்தி - மெழுகுதிரி, காரச்சீலை.
மெழுகுவர்த்தி - மெழுகுதல், பூசுதல்.
மெள்ள - மிருதுவாய், மெல்ல, பைய.
மெள்ளென - மெல்லென, மெதுவாக.
மெனக்கெடுதல் - மினக்கெடு, வீண்காலம்.
மெனக்கெடுத்துதல்-வீணுய்த்தாமதப் படுத்தல், காரியம் ஈனம்.
மென்கண் - இரக்கம்,கனிவு, மனங்கசிதல்.
மென்கால் - தென்றல், வசந்தன். [தை.
மென்சொல்-இனியசொல், அன்பானவார்த்
மென்பால் - மருதநிலம், நீர்நாடு.
மென்புரட்டு-கைமாற்றிலே புரட்டிவருதல்.
மென்புலம் - நெய்தனிலம், மருதநிலம்.
மென்மேல் - ஒன்றன்மேலொன்று,மேலும் மேலும்.
மென்மை - மிருது; அஃது: எண்வகையூறி லொன்று,சாத்துவிக குணத்துமொன்று, நுண்மை, வலியின்மை, அமைதி.
மென்றல் - வெற்றிலைமுதலிய மெல்லுதல்.
மென்றொடர்-மெல்லெழுத்துத்தொடர்ந்து வருவது. [யலுகரம்.
மென்றொடர்மொழி - மென்றொடர்க்குற்றி
மென்னடை - அன்னம், மிருதுவானநடை.
மென்னி - மிடறு,கண்டம்,கந்தரம்,கிரீவம்.
மென்னிலை - கரவட்சணத்தொன்று; அது: பெருவிரலை மடக்கி மற்றைய விரல்களை விரித்து நீட்டுதலாம். [த்து, குரல்வளை.
மென்னை - சொத்தை,மிடறு,கண்டம், கழு
மென்னைக்கட்டி - மன்னைக்கட்டி, பொன்னுக்கு வீங்கி. [யைப் பிடித்தல்.
மென்னைப்பிடி - மன்னைப்பிடி, தொண்டை
மென்னையப் பிடித்தல் - குரல்வளையைப் பிடித்தல், நிர்ப்பந்தித்தல், நெருக்கல்.

மே

மே - ஓர்உயிர்மெய்யெழுத்து,அன்பு,மேம்பாடு, மேன்மை.

மேககர்ச்சனை - இடிமுழக்கம், குமுறல்.

மேககாக்கையோன் - சீர்பந்த பாவஞாணம்.

மேககாந்தி } மேகநிறம், ஓர் நோய், கரு
மேககாரகம் } நிறம். [காலம்.

மேககாலம் - கார்காலம்,மாரிகாலம்,வருஷ

மேககெற்சனம் - இடிமுழக்கம், குமுறல்.

மேகக்கட்டி - ஓர் வகைச் சிரங்கு, கிரந்திப் புண்வகை.

மேகக்கரப்பான்-மேகநீராலுண்டாம்ரணம்.

மேகக்கருப்பக்கல் - மேகக்கல், ஆட்டுரோசனை, மேகசிலை.

மேகக்கல் - ஆட்டுரோசனை, மேகசிலை.

மேகக்காக்கையோன் -சீர்பந்தபாவஞாணம்.

மேகக்காங்கை-வெட்டைநோய்,கணைச்சூடு.

மேகக்கிரந்தி - பறங்கிப்புண், கிரந்தி.

மேகக்கிராணி - கிராணி, ஆறில் ஒன்று.

மேகக்குறிஞ்சி - இராகவகையி லொன்று.

மேகக்கூட்டம்-மேகசஞ்சாரம், மாசியோட்டம்.

மேகசஞ்சாரம் - மேக ஓட்டம். [வகை.

மேகசடை - கரிய மலைசிலை, பாவஞாண

மேகசந்தேசம் - ஓர் ஸம்ஸ்கிருத நூல்.

மேகசம் - மேகத்திற் பிறப்பன, முத்து.

மேகசாரம் - கற்பூரம்,சூடன், மலைச்சரக்கு.

மேகசாலம் - மணிவகை, முகிற்கூட்டம்.

மேகசிந்தகம் }
மேகசீவகம் } சாதகப்பட்சி, வானம்பாடி.

மேகசுரம் - மலேரியாசுரம். [பிடிப்பு.

மேகசூலை - உடற்பொருத்தில் உண்டாம்

மேகசோரணம் - இராசவத்தனக்கல்.[கல்.

மேகச்சிலை - மாக்கல், வங்கக்கல், சுக்கான்

மேகச்சூடு - மேககாங்கை, மேகக்கனல்.

மேகதாரி - மயிலிறகு,தோகை,மயிற்பீலி.

மேகதிமிரம் - கண்ணேய்வகையிலொன்று.

மேகதீபம் - மின்னல், தடி, மின், வித்துரு.

மேகதேகம் - மேகநோய்கொண்ட வுடம்பு.

மேகத்தனு - இந்திரதனுசு, வானவில்.

மேகத்தம்பம் - மேகத்தூண்,மேகஸ்தம்பம்.

மேகத்தின்கருப்பக்கல் - ஆட்டுக்கல்.

மேகத்தின்விந்து-பூநாகம், நாங்கூழ், பூரு.

மேகத்துவாரம் - ஆகாயகங்கை செல்வழி.

மேகத்தொனி - இடி முழக்கம், கர்ச்சனை.

மேகநாதசித்து - இலக்குமணன்.

மேகநாதம் - சிறுகீரை,பலாசு,மலைப்பச்சை, மேகமுழக்கம்.

மேகநாதன் - இந்திரசித்து,இந்திரன், நவச்சாரம்,வருணன்,இராவணனுக்குமந்தோதரியிடத்துப் பிறந்த புத்திரன், இந்திரலோடு பொருது அவனை வென்றமையால் இந்திரஜித்து என்னும் பெயர் படைத்தவன்,இவன் லக்ஷ்மணனால் கொல்லப்பட்டவன்,இருவருக்கும் நடந்தயுத்தம் மிகக் கொடியதாம், கம்பர்தாம் பாடிய ராமாயணத்திலே இவனை, "வில்லாளராஞர்க் கெல்லாம்மேலவன்" என்றுபுகழ்ந்திருக்கின்றனர். [மேகநாதன்.

மேகநாயகன் - இந்திரன், மேகவாகனன்,

மேகநீர் - தூர்நோய், கிரந்திப்புண்.

மேகநோய் - நோய்வகையிலொன்று.

மேகபச்சை - நாகபச்சை, முதிர்பச்சை.

மேகபடலம்-ஓர்கண்ணேய்,மேகச்செறிவு.

மேகபதம் - மேகமண்டலம், ஆகாயம்.

மேகபந்தர் - முகிற்படலம், மேகமாலை.

மேகபிரசவம் - மழை, வானம், ஆலி.

மேகபுட்பம் - நீர், மழை, மேகபுஷ்பம்.

மேகபூதி - இடி,அசனி,விண்ணேறு,வெடி.

மேகப்படலம் . மேகப்படை.

மேகப்படை - தோல்மீதுஉண்டாம்சொறி.

மேகபந்தி - முகினிரை, மேகவரிசை.

மேகப்புடை - பறங்கிப்புண்வகை, திமிர்வாதம், கிரந்திநோய்.

மேகப்புள் - வானம்பாடி, சாதகப்புள்.

மேகப்புற்று - புற்றுநோய்வகை, தசைவளர் ரோகம்.

மேகமண்டலம் - முகின்மண்டலம்,வானம்.

மேகமந்தாரம்-மந்தாரச்சிலை,மேகமூட்டம்.

மேகமாலினி - மேகவாகனன் மனைவி.

மேகமாலை - முகிற்கூட்டம், மேகபந்தர்.

மேகமுழக்கம்-இடிமுழக்கம், குமுறல். [ம்.

மேகமூட்டம்-மேகமந்தாரம், மேகக்கூட்ட

மேகமூர்ந்தோன் - இந்திரன்,வச்சிரபாணி.

மேகமூலி - நீர்ப்பனை, நிலப்பனை.

மேகம் - ஓர்நோய்,கடுக்காய், குயில்,முகில், பர்ச்சனியம், பருவதாசயம்.

மேகயோனி - புகை, தூமம், அரி, தூபம்.

மேகரஞ்சி - ஓரிராகம், மேசவிரிஞ்சி.

மேகரணம் - மேகரோகப்புண். [பண்.

மேகராகக்குறிஞ்சி-குறிஞ்சித்திறத்திலோர்

மேகராகம் - பாலையாழ்த்திறவகை.

மேகராசி - மேகக்கூட்டம், மேகசாலம்.

மேகராடி - மயிலடிக்குருந்து,நொச்சிவகை.

மேகரோகம் - மேகவியாதி,உஷ்ணவியாதி.

மேகலகன்னிகை - நர்மதை, மேகல பர்வ தத்தில் உற்பத்தியாவதால்; இப் பெயர். இரேவை.[ம். மேகலம் என்னும் மலை.
மேகலம் - நர்மதாநதி ப்ரவஹிக்கும் தேச
மேகலன் - விந்த மலைச்சாரலில் வசிக்கும் ஓர் முனி. [கை, நர்மதாநதி.
மேகலாகன்னிகை - நருமதை, மேகலகன்ய
மேகலாத்ரிஜை-நர்மதாநதி, இரேவை.
மேகலாபதம் - இடை, மருங்குல், நுசுப்பு.
மேகலாபரணம் } எழுகோவை மணிவடம்,
மேகலாபாரம் } கூறைக்கச்சை,மேகலை.
மேகலை - இடைக்கட்டு,ஓமகுண்டத்தை வ ளையவிடுங் கோலம், சீலை, தேர்முடி, நரு மதை, மலைப்புடைப்பு, மலைமுடி, மலை யருகு, மாதரிடையணியாகிய எழுகோ வைமணிவடம்,மான்ரோற்பூணூல்,மேரு கிரிச்சிகரம், சூதிரையின் கொப்பூழுக்கு மேற்காணப்படு மார்புச்சுழி.
மேகவண்ணக்குறிஞ்சி-மழைவண்ணக் குறி ஞ்சி,நீலநிறப்பூவுள்ளசெடி:நீலநிறப்பூவுள் ள மருதோன்றி, காயாம்பூச்செடி. [ணன்.
மேகவண்ணன்-திருமால், கொண்டல்வண்
மேகவத்துவமம் - பரமாணு, சூக்ம வணு.
மேகவரணை } அவுரி, நீலி, பாஷாண
மேகவருணை } வைரி.
மேகவர்ணப்புடைவை - கருநீலமானதும் பல நிறங்காட்டுவதுமான புடைவை.
மேகவர்ணம் - கருநீலம், இருண்ட நீலம்.
மேகவாகனன் - இந்திரன்,கருங்கல்,சிவன்.
மேகவாதம் - ஓர் வகை வாத நோய்.
மேகவாயு - வாயு நோய் வகையி லொன்று.
மேகவாய் - தயிர், ததி, முசரு, பெருகு.
மேக்விடுதூது - காதலரிடம் காதலி மேகத் தைத் தூது விடுவதாகக் கூறும் பிரபந்த வகை, மேகசந்தேசம். [ருதி,ஓடு சூலை.
மேகவிப்ருதி - சிலந்திக்கட்டி, மேகவிப்பி
மேகவியாதி - மேகநோய், மேகரணம்.
மேகவிரஞ்சி - மேகரஞ்சி, மேகக்கிரந்தி.
மேகவிரணம் - மேகரணம், கிரந்தி.
மேகவிருள் - பித்து, பைத்தியம், மதிகேடு.
மேகவிரோதி - பெருங்காற்று, மாருதம்.
மேகவூறல் - மேகநீர்ப்பாய்ச்சல், படை.
மேகவெட்டை - ஓர் நோய்,மேகக்காங்கை.
மேகனம் } ஆண்குறி, மூத்திரம்.
மேஹநம் } [லம்.
மேகாகமம் - கார்காலம், மழை, வருஷாகா
மேகாகுந்தம் - மயிலிறகினடி. [மீன்,மச்சம்.
மேகாக்கினி - மின்னல்,சஞ்சலம்,வித்துரு,
மேகாதிபதி } நவக்கிரகங்களுள் குறித்த
மேகாதிபன் } வருஷத்தில் மழைக் குரிய கோள்.
மேகாநந்தி } மயில், மஞ்ஞை, கேகயம்,சிகி,
மேகாரம் } மயூரம். [மூட்டம்.
மேகாந்தகாரம்-மழைக்கால் இருட்டு, மேக
மேகாரடி - மயிலடிக்குருந்து, தூத்திவகை.
மேகாரி - அறுகு, அவரை.
மேகாரிக்கத்தைதலம் } மேக வியாதியைத்
மேகாரித்தைதலம் } தீர்க்கும் எண்ணெய்
மேகாஸ்பதம் - ஆகாயம், அம்பரம், ககனம்.
மேகை - மேதை, இறைச்சி, புத்தியுள்ளார்.
மேகோதகம் - மழை, ஆலி, மாரி, வருடம்.
மேக்கடித்தல் - ஆப்பறைதல், வஞ்சித்தல், மாட்டுவித்தல், மூலையடித்தல்.
மேக்கு - உயர்ச்சி, மேல், மேற்கு, ஆப்பு.
மேங்காவல் - மேங்காவற்காரன், தலையாரி.
மேசகம் - இருள், கருமை, புகை, மயிற்ரோ கைக்கண், முகில், குதிரைப் பிடரிமயிர்.
மேசகாலகை-யமுநாநதி, காளிந்தி. [ணம்.
மேசகை - இருள், கரு மஞ்ஞிலை, பாஷா
மேசை - பீடம், காலுள்ள பலகை.
மேசைக்காரர் - பரவர் சாதி. [காரச் சீலை.
மேசைவிரிப்பு-மேசைமேல்விரிக்கும் அலங்
மேடகம் - மேடம்,ஆடு,தகர். [டுக்கொம்பு.
மேடக்கோடு-ஆட்டுக்கோட்டுப்பாலை, ஆட்
மேடசிங்கி - புழுக்கொல்லி, ஆடுதீண்டாப் பாலை.
மேடப்பாய்ச்சல் - ஆட்டுக்கடா பாய்ச்சல்.
மேடமதி-சித்திரைமாதம், ஆட்டின் புத்தி.
மேடமாதம் - சித்திரை மாதம்.
மேடம் } ஆடு, ஆட்டுக்கடா, முதல் ராசி,
மேஷம் } மேஷவிராசி. [டம் மாற்றல்.
மேடர்-மேடோவர், கடன்சீட்டைப்பிறரி
மேடவிடவம் - மேடாயனம்.
மேடவீதி - சித்திரை, வைகாசி, ஆனி மா தங்களிற் சூரியன் செல்லும் வீதி.
மேடன் - செவ்வாய், மேஷவிராசி.
மேடாதல் - மேடிடுதல்,மோடிடுதல்,கருப்ப
மேடாதிபதி-அக்கினிதேவன். [மடைதல்.
மேடாயனம் } ஆதித்தனிடப ராசியினின்
மேஷாயனம் } று கற்கடக விராசிக்குச் செல்லும் பாதை, உத்தராயணமூலம்.
மேடிக்கம்பு - மேழிக் கம்பு, மேழி மரம்.
மேடிடுதல் - மோடிடுதல், மேடாதல்.
மேடியுப்பு-வளையலுப்பு, வளையல்மண்உப்பு.
மேடு - உயர்ச்சி, ஊர், திடர், வயிறு.
மேதகம்-சுவர்,பித்திகை. [டது, வேதிகை.
மேடை - உப்பரிகை,மேடாய் வகுக்கப்பட்

மேடைவீடு-உப்பரிகை. [கு மாற்றுகை.
மேடோவர்-மேடர்,கடன்சீட்டைப் பிறருக்
மேட்டாங்காடு - மேட்டுப்பாங்கான புன்
செய் நிலம், திடர். [பேட்டி.
மேட்டி - இறுமாப்பு, முதன்மை, தலைவன்,
மேட்டிமை-அகங்தை, மேன்மை, தலைமை.
மேட்டிரம் - ஆட்டுக்கடா, ஆண்குறி.
மேட்டிராந்தம்-மேல், மேற்கட்டு, மேடை.
மேட்டுநாயக்கன் - தொட்டியர் தலைவன்.
மேட்டுநிலம் - உயரமான பூமி.
மேட்டுப்பாய்ச்சல் - மேட்டுநிலத்திற்கு நீர்
பாய்ச்சல், ஆகாத காரியத்தைச் சாதிக்க
முயலல். [வீடும் மடை, மேடானமடை.
மேட்டுமடை - மேட்டுநிலத்திற்கு நீர் பாய
மேண்டம் - ஆடு, மேஷம், தகர். [மதிப்பு.
மேதகம்-கோமேதகம்,சாலங்கபாஷாணம்.
மேதகு - மேன்மையான, சிலாக்கியமான.
மேதகை - மேன்மை, சிறந்தோர்.
மேதகையோர் - உயர்ந்தோர், அறிஞர்.
மேதசு - கொழுப்பு, நிணம், விழுக்கு.
மேதச்சி - கற்பரிபாஷாணம்.
மேதம்-கொலை, யாகம், கொழுப்பு, மேதசு.
மேதாவர்-வேய்க்காரர்,மூங்கில்வேலை செய்
வோர், மேதாவர்.
மேதவு-மேன்மை, மதிப்பு, உயர்வு, சிறப்பு.
மேதாதிதி - (1) பிரியவிரதன் புத்திரருள்
ஒருவன்,இவன் பாகத்துக்கு வந்தது பில
க்ஷதுவீபம், இவன் புதல்வர் எழுவர், (2)
கண்ணுவர் புத்திரன், இவன் குலத்தார்,
'காண்வாயர் எனப்படுவர், ஓர் முனி.
மேதாவித்தி - சிரகாரி, காரியத்தை ஆராய்ந்
து செய்பவர், புத்திச் செல்வன்.
மேதாரம் - மலை, வெற்பு, வரை, அசலம்.
மேதாருத்திரன் - காளிதாசன், வரகவி.
மேதாவதி - அறிவுள்ளவள், அறிவாளி.
மேதாவர் - மூங்கில் வெட்டி விற்போர்.
மேதாவி - அறிவு, உணர்வு, கிளி, பண்டி
தன், புத்தியுள்ளவன், சாமர்த்தியசாலி.
மேதாவிகி - நாகணவாய்ப்புள்,பூவை. [வர்.
மேதாவியர் - அறிஞர்,அறிவுடையோர்,புல
மேதி - எருமை, நெற்களம், பொலிக்கட்
டை, வெந்தயம். [ணவகை.
மேதிக்கவுணன்-மூர்த்தபாஷாணம், பாடா
மேதிச்சென்னிமிதித்தோள் - துர்க்கை.
மேதியன் - இயமன், சமன், நமன். [னன்.
மேதியூர்தி - இயமன், எருமைக்கடா வாக
மேதிரம் - சமம், சரி, நடு, மத்தியம்.
மேதிரன் - புத்திசாலி, மதியூகி, மேதாவித்தி.
மேதிவாகனன் - யமன், மேதியூர்தி.

மேதினி - பூமி, பார், புடவி, குவலயம்.
மேதினிபடைத்தோன்-திருமால், பிரமன்.
மேதினீத்திரவம் - பூஞ்ளி,புழுதி,பராகம்.
மேது - அறிவு, சைதன்னியம்.
மேதேதசை - நிணப்பை, மலாசயம்.
மேதை - அறிஞன், அறிவு, தோல், நரம்பு,
இறைச்சி, கொழுப்பு, கள்,நிணம், புதன்,
பேரறிவு, பொற்றலைக் கையாந்தகரை,
மேன்மை, பொற்றலைக்கையாந்தகரை.
மேதைமரியாதை-மேரைமரியாதை. [கள்.
மேதையர் - புலவர்,புலவோர்,வித்துவான்
மேதோசம் - எலும்பு, அத்தி, அஸ்தி.
மேத்தியம் - சுத்தம், சீரகம். [கில்.
மேத்தியாசம் - வசம்பு, வாசாமிளகு, மூக்
மேத்திரம் - ஆட்டுக்கடா, சலவாய்.
மேநகாத்மஜை - பார்வதி, மலைமகள்.
மேநகை - மேனகை, மேலுக்கு நகைத்தல்.
மேநகைபுதல்வி - பார்வதி, பருவதராஜ
குமாரி.
மேந்தலை - கப்பலிற் காற்றெதிர்பக்கம்,
முதன்மை, மேன்மை, தலைவன்.
மேந்தானம் - உயர்ந்தஇடம், மேல்தானம்.
மேந்தி } வெந்தயம், பீதபீஜம், மகரந்
மேந்திகை } தப்பூ.
மேந்திரி - மெந்திரி, ஏதண்டை, சிராம்பு.
மேந்தோல் - மீத்தோல், மேல்தோல்.
மேம்படுதல்-உயர்தல், சிறத்தல்,மேலாதல்,
மேம்பாடு - புகழ், மேன்மை, மேம்படுதல்.
மேம்பார்வை - வேலைகளை மேற்பார்த்தல்.
அசட்டையான பார்வை.
மேம்பாலம் - மேன்பாலம், நீர்க்கால் மேல்
கட்டும் நீர்க்கால்.
மேம்புள்ளி - ஒன்றைத் திட்டமிடல், ஒன்
றின் தரத்தை மதித்தல், அறுவடைக்கு
முன் தானிய விளைவை மதித்தல்.
மேயம் - உவமேயம், அளவிடற்குரியது.
மேயவன் - உறைபவன், வசிப்பவன்.
மேய்க்கி-இடையன்,கவளங்கொடுப்போன்,
மேய்ச்சல் - விலங்குணவு கொள்ளல்.
மேய்ச்சற்றரை - மாடுகள் மேயுமிடம்,
மேய்ச்சற்றலம்.
மேய்தல் - உண்டல், மூடல், அபகரித்தல்,
சஞ்சரித்தல், விடஞுய்த்திரிதல், கூரை
வேய்தல், புழு முதலியன அரித்தல்.
மேய்த்தல்-மேயச்செய்தல், உண்ணவிடல்.
மேய்ப்பர் - இடையர், கோவலர், ஆயர்.
மேய்ப்பன் - இடையன், ஆளுபவன், குரு.
மேய்ப்பு - மேய்ச்சல், மேய்த்தல்.
மேரக்காலி - பேய்பிசாசு, கெட்டகாற்று

மேரு - பூமிக்கு நாராசம்போலத் தென் துருவ முதல் வடதுருவம் வரையும் உள் ளே வளர்ந்து வடதுருவத்தில் முளைத்தி ருக்கும் பொன்மயமாகிய மலை, வடதுரு வம் சுமேருவென்றும், தென் துருவம் குமேருவென்றும் வடவாமுகம் என்றும் சொல்லப்படும், சுமேருவே சாதாரண மாக மேருவென்று வழங்கப்படும், இந் தச் சுமேரு ப்ரதேசத்திலிருப்பவர்களுக் கு உத்தராயண காலமாகிய ஆறு மாச மும் பகலும், தக்ஷிணாயன காலமாகிய ஆறு மாசமும் இரவும் ஆக இருக்கும், இந்த மேருவின் புதல்வி மேனகை, ஆச னபீடம், ஓர் வகைக்குப்பி, பொன்மலை, மலை, பெண்குறி, மகாசத்தி.

மேருகம் - ஓர் வகை வாசனைப்பொருள்.

மேருசாவர்ணன் - பதினொன்றாவது மநு.

மேருதாமன்-சிவபிரான், பிறைசூடி. [ய்.

மேருதேவி-நாபியின் மனைவி, ரிஷபன்தா

மேருத்தீபம் - அடுக்குத்தீபம். [டாமணி.

மேருமணி - நாயகமணி, பெருமணி, கண்

மேருமந்தரபுராணம்- ஓர் ஜைன சமய நூல்.

மேருயந்திரம் - கதிர்க்கம்பி,சூட்டுக்கோல்.

மேருவில்லி - சிவன், குன்றவில்லி.

மேருவின்வாரி-பொன்மணல், வங்கமணல்.

மேரை - குடிமக்கட்குக் களத்திற்றருந் தா னியம், மேரைமரியாதை வகை, அடக் கம்.

மேரைமரியாதை-மேரைமரியாதை,மேரை கிராமத்திற்குஅல்லதுநாட்டிற்கு அவசிய மான நல்லாருக்குச் செய்யும் தானம்.

மேலகம் - மேல்வீடு, மோக்கம், மோட்சம்

மேலங்கம் - பகிரங்கம், வெளிப்பகட்டு.

மேலங்கி - மேற்சட்டை, கவசம், உறை.

மேலச்சுலுகம்-சிறுத்தைப்புலி, புள்ளிமான்.

மேலத்தாட்சி - மேலொப்பனை, சாமீன்.

மேலநம் - கலப்பு, கலத்தல், கூடுதல்.

மேலவரிறைவன் - இந்திரன், முருகன்.

மேலவர்-பெரியோர், வானோர், முன்னவர்.

மேலவன் - பெரியோன், அறிஞன், மேலிட த்துள்ளவன், மேலதிகாரி.

மேலழுக்கு - உடம்பழுக்கு, தோலழுக்கு.

மேலனம்-கலப்பு, கூட்டம். [சீலை,மாராப்பு.

மேலாக்கு - பெண்கள் மார்பு மேலிருக்கும்

மேலாடை - அங்கவஸ்திரம், உத்தரியம்.

மேலாதல் - சிறத்தல், மேம்படல்.

மேலாத்தல்-மேற்புறமாக்கல், மல்லாத்தல்.

மேலாநெல்லி - பூலாச்செடி, கீழாநெல்லி.

மேலாமண்டலம் - எழுது மைக்கூடு.

மேலாமரம் - கட்டுமரவகை, மிதப்பு.

மேலாமினுக்கி - தளுக்குக்காரி, மேலால் மினுக்கி.

மேலாமுதிரம் - கஸ்தூரிஎலும்பு.

மேலார் - வீரர், சூரர். [வை, மேலாக்கு.

மேலார்ப்பு - மேல்விரித்துப் பிடிக்கும் புட

மேலாலம் - மழை, மாரி, வருஷம், ஆலி.

மேலாலவத்தை-மேனோக்கிநிற்குமவத்தை.

மேலிடுதல் - அதிகப்படுதல், அதிகரித்தல், மேலேதாவுதல், மேற்கொள்ளல்.

மேலிமை - கண்ணின்மேல் இமை.

மேலிமைத்தாறு - கற்கடக பாஷாணம்.

மேலீடு - அதிகாரிப்பு, ஓராபரணம், மேலிடு தன்மை, மேன்மை, குதிரைச்சேணம், வெளிப்பகட்டு. [திரம்.

மேலுக்கு-அந்தரங்கமின்றி வெளிக்கு மாத்

மேலுக்கெடுத்தல் - எதிரெடுத்தல்.

மேலுதடு - மேல் வாயிதழ், மேற்பாலிகை.

மேலுத்தரியம் - மேலாடை, மேலாக்கு.

மேலுபசாரம் - வாயுபசாரம், மேலுக்கு.

மேலும் - பின்னும், திரும்பவும். [மூலகம்.

மேலுலகம்-தேவலோகம்,பூலோக முதலே

மேலுறுதி - தூணைசாட்சி, மேலொப்பம்.

மேலெடுப்பு-மேன்மையான எடுப்பு, வீம்பு.

மேலெழுச்சி - மேம்பாடு. [ம் படுதல்.

மேலெழுதல்-மேற்கிளம்பல், மிதத்தல், மே

மேலெழுந்தவாரி - ஊன்றிக் கவனியாமை.

மேலேடு - காவலொற்றை, பாலின் மேலாடை.

மேலேழுலகம் - (தொகையிற்காண்க.)

மேலை-அஞ்சனக்கல், மேலிருப்பது, மேல், மேற்கு, மேன்மை, மை, வருங்காலம், முன்பு, அடுத்த, கருநிறமானே.

மேலைக்கு - இனிமேல், அடுத்தவருடம்.

மேலைச்சிதம்பரம் - கோயம்பத்தூர் ஜில்லா விலுள்ள ஓர் சிவஸ்தலம் (பேரூர்.)[க்கு.

மேலைத்திசை - மேற்றிசை, பச்சிமம், குட

மேலைத்திருக்காட்டுப்பள்ளி-காவிரியின்தெ ன்கரையிலுள்ளவோர் சிவஸ்தலம்.

மேலைநாள் - முன்னாள், பூர்வகாலம்.

மேலையார் } பெருமையிற்சிறந்தோர்,மே
மேலையோர் } தையார். [மிடல்.

மேலொப்பம் - உடன்தையாக கையொப்ப

மேலொற்றி - திரும்பவைத்த வொற்றி.

மேலோங்கி-கரையாரிலோர்பகுதி. [னோர்.

மேலோர்-அறிஞர், புலவர், பெரியோர், வா

மேல் - அகலம், அதிகம், ஆகாயம் இடம், சரீரம், பின், மிசை, முன்னே, மேற்கு, மேற்புறம், வருங்காலம், வானம், தலை,

தலைமை,மேன்மை,உயர்ந்தோர், உடம்பு, வித்தை, மேலெழுந்தவாரியானது, முன் புள்ளது, பற்றி, அப்பால், இனி, ஓர் உப சருக்கம், இனியென்பது, ஏழாம்வேற்று மையுருபு. [கடல்.

மேல்கடல் - மேற்றிசைச் சமுத்திரம், குட
மேல்கால் - மேல்காற்று, குடகாற்று.
மேற்காற்று - கோடைக்காற்று. [தரம்.
மேல்கை-உயர்ந்தபூமி, மேடு, மேற்கு, உயர்
மேல்கோட்டை-(Melkote) இது மைசூரு க்குஅருகிலுள்ளஒருபட்டணம். இவ்வூரு க்குத் திருநாராயணபுரம்என்றும்'யதுகிரி' என்றும் பெயர், இவ்வூரின் மலைமேல்ஓர் பிரபலமான விஷ்ணு ஆலயம் இருக்கின் றது. 'இராமானுஜர்' என்ற வைஷ்ணவா சாரியர் ''செல்வப்பிள்ளை'' என்றஇராமர் விக்கிரகத்தைடில்லியிலிருந்து கொண்டு வரும்போதுதுருக்கர்கள்அவரைவழிமறி க்க ஆதிராவிடர் உதவியால் அவ்விக்கிர கத்தைஅவர்சேரியில் மறைத்து வைத்தி ருந்துதிருப்பக் கொண்டுவந்து இம்மலைக் கோயிலில் நிர்மாணித்தார். அவ்விராம விக்கிரகத்திற்கு''செல்வப்பிள்ளைராயர்'' என்று பெயர். இக்கோயிலில் நடக்கும் வருஷ உற்சவத்தில் பஞ்சமர்கள் செய்த உதவிக்காக வருஷத்தில் மூன்றுநாள் பஞ்சமர்களை கோயிலுக்குள் அழைத்துக் கப்படுகிறது, இக்கோவிலின்வைரமுடிச் சேவை உற்சவத்திற்குப் பெருங்கூட்டம் கூடுகின்றனர்.
மேல்சாதி - உயர்குலம், மேலானகுலம்.
மேல்சார் - மேற்பக்கம், மேற்கு. [கூரை.
மேல்டாப்பு - வண்டிமுதலியவற்றின் மேல்
மேல்பாதி - மேல்வாரம், மேற்குபாதி.
மேல்பார் - மேற்கு, குடக்கு, பச்சிமம்.
மேல்பாலிரேபதம் - நவகண்டத்தொன்று.
மேல்பால் - மேற்குப்பக்கம், மேல்பார்.
மேல்பால்விதேகம் - நவகண்டத்தொன்று.
மேல்மட்டம் - மேற்புறத்தின்மட்டம், மட் டப் பலகை, மேற்றளம். [களம்.
மேல்மண்டலம்-நட்சத்திரமண்டலம்,உடுக்
மேல்மாடி-வீட்டின் மேல்நிலை, உப்பரிகை.
மேல்முந்தானை-புடவையின்முதல் தலைப்பு
மேல்முந்திரி - ஓர் பின்ன எண்.
மேல்மூச்சு - முயற்சியாலெழும்மூச்சு,மரண தருவாயில் மேலுலைக்கி எழும் மூச்சு.
மேல்வக்கணை - மேல்விலாசம். [மை.
மேல்வட்டம் - சங்கை, மகத்துவம், மேன்
மேல்வரிசை - மேலிடமாக அமைந்துள்ள வரிசை. [அதிக வரும்படி.
மேல்வரும்படி - சம்பளத்தின் மேல் வரும்
மேல்வலி - உடம்புநோவு, கடன்வலி.
மேல்வாசகம் - பத்திரிகையின் புறவாசகம், மேல்விலாசம். [பட்டகணக்கு.
மேல்வாய்-அண்ணம், ஒன்று முதலாய்மேற்
மேல்வாரங்குடிவாரம்-நிலப்பாத்தியவாரம், உழவடைவாரம். [த்தவாரம்.
மேல்வாரம்-இறைப்பங்கு,வாரக்காரன்வை
மேல்வாரை-சாரத்தின் மேற்பலகை, வாக னத்தண்டு. [யான விசாரணை.
மேல்விசாரணை - பராமரிப்பு, முதன்மை
மேல்விட்டம் - வீட்டின் முகட்டுவளை.
மேல்விதேகம் - மேல்பால் விதேகம். [திரி.
மேல்விரி-விதானம், மேல்விரிப்பு,அசமான
மேல்விழுதல்-யுத்தங்கலத்தல், வலியப் புகு தல், காரியத்தில் முந்துதல். [வது.
மேல்வினைவு-பிற்பயன், வினைப்பயன், வரு
மேல்வினை - ஆகாமியம், பூர்வவினை.
மேல்வீடு-மெத்தைவீடு, மேலகம், மோட்ச வீடு, மச்சுவீடு. [த்த வெள்ளம்.
மேல்வெள்ளம்-முதல் வெள்ளத்திற்கு அடு
மேல்வேஷ்டி - மேலாடை, மாராக்கு.
மேவலர் - மேவார், பகைவர், ஒன்னர்.
மேவல் - உண்டல், சமமாக்கல், சேர்தல், நிரவுதல், விரும்பல். [விரும்பாமை.
மேவாமை - பொருந்தாமை, ஒவ்வாமை,
மேவார் - பகைவர், மாற்றலர், ஒன்னர்.
மேவினர் - உறவோர், சிநேகிதர், நண்பர்.
மேவு - ஆசை, மேவென்னேவல், நசை.
மேவுதல்-மேவல், அடைதல், விரும்புதல், மேலிட்டுக்கொள்ளுதல், வேய்தல், பொ ருந்துதல். [துருவாட்டேறு, மேஷம்.
மேழகம் - ஆடு, கவசம், செம்மறிக்கடா,
மேழகயாகம் - அஜமேதயாகம்.
மேழகவூர்தி - முருகன், தகரூர்தி.
மேழி - கலப்பை, கலப்பையின்கைப்பிடி.
மேழிச்செல்வம் - மேழிகொண்டு உழுவதா லடையும் பயன். [ரன்.
மேழிப்படையோன்-பலதேவன், பலபத்தி
மேழியர் - பூவைசியர், மருதநிலமாக்கள், வேளாளர், உழவர், கொடையாளர்.
மேழிவாசம் - உழவடைவாரம். [மோழை.
மேழை-காடி,கஞ்சி,கொம்பில்லா விலங்கு,
மேளக்கச்சேரி-சபையில்மேளம்வாசிக்கை.
மேளக்கட்டு - ஒலியின் ஒலிஇன்கு கேட்கும் படிஇசையமைவுபெறுகை. [பரக்காரன்.
மேளக்காரன்-மேளம்வாசிப்போன், ஆடம்
மேளஞ்சேவித்தல் - மேளக்கச்சேரி.

மேளதாளம் - ஆடம்பரவாத்தியங்கள்.
மேளமடித்தல்-மேளம்வாசித்தல், விஷயத்தைப் பரப்புதல், பறைசாற்றல்.
மேளம்-பறைப்பொது, கொட்டல் தட்டல் ஊதல் என்ற வாத்தியக் கருவிவகை.
மேளனம் - கூட்டம், குழாம்.
மேளித்தல் - கூட்டங்கூட்டுதல்.
மேற்கட்டி-படங்கு,விதானம்,அசுமானகிரி.
மேற்கட்டு - மேல்வீடு, மேகலை, அங்கவஸ்திரம்.
மேற்கதி - மேற்செலவு, மோட்சம்.
மேற்கதுவாயளபெடை- முதலயலொழிந்த மற்றெல்லாவற்றின் கண்ணு மளபெடை வரத்தொடுப்பது.
மேற்கதுவாயியையு-கடையயற் சீரொழிந்த மற்றெல்லாச் சீரினு மியையு வருவது.
மேற்கதுவாயெதுகை - முதலொழிந்தமற்றெல்லாச்சீர்க்கண்ணுமெதுகைவருவது.
மேற்கதுவாய்-முதலயற்சீர்க்கணின்றி யொழிந்தசீர்க்கண்மோனை வரத்தொடுப்பது.
மேற்கதுவாய்முரண்-முதலயற் சீரொழிந்த மற்றச்சீர்க்கண் முரண்வரத்தொடுப்பது.
மேற்கதுவாய்மோனை - முதலயற் சீர்க்கண்ணும் மெல்லினவெழுத்துக்க ளெதுகையாய் வருவது. [மேல் நாட்டான்.
மேற்கத்தியான் - மேற்குத் தேயத்தவன்,
மேற்காது - காதின் மேற்புரம்.
மேற்காவல் - மேல்விசாரிப்பு, கார்பார்.
மேற்காறுபாறு-மேல்விசாரணை, கார்வார்.
மேற்கி-பாஷாணவகையிலொன்று. [வான்.
மேற்கு-மேல், மேற்றிசை, குடதிசை, படு
மேற்குடி - காணியாளர், உயர்குடி.
மேற்குடுமி - உச்சிக்குடுமி, கதவின் மேற்குடுமி.
மேற்குத் தொடர்ச்சி மலை - தென்இந்தியாவில்மேற்கரைப்பக்கத்தில் தொடர்மலை.
மேற்குலத்தோர் - மேல்சாதியார்.
மேற்கூரை-வீட்டின்மேல் வேய்ந்த கூரை, மேற்கோப்பு.
மேற்கொள்ளல் } தலைப்படுதல், வெல்
மேற்கொள்ளுதல் } லல், மேம்படுதல், முயலுதல், பொறுப்புவகித்தல். [முகடு.
மேற்கோப்பு - வீட்டின் மேற்கூரை, மேன்
மேற்கோள்-உதாரணம், சனி, போர்வை, முன்னோர் வழக்கு, மேன்மை, எடுத்துக்காட்டுகை. [உறுதிப்படுத்தும் சாட்சி.
மேற்சாட்சி - மறுசாட்சி, முன் சாட்சியை
மேற்சாதி - உயர்குலம், மேலான குலம்.
மேற்சாத்து - கூரைக்குக் கட்டும் சாத்துமரம், சுவாமிக்குச் செய்யும் சாத்துப்படி.
மேற்சீமை-மேனாடு, மேலைத்தேசம். [மூச்சு.
மேற்சுவாசம் - மேலேக்கிய மூச்சு, மேல்
மேற்செம்பாலை - இசைவகையிலொன்று.
மேற்செலவு - மேன்செலவு, தருமச்செலவு, மீச்செலவு.
மேற்செல்லல் - போர்க்குச் செல்லல், மாற்றூரெதிர்த்தல், மேலேநெருக்கல்.
மேற்படல்-அதிகப்படல், மேன்மைப்படல்.
மேற்படி-மறுபடி,முன்குறித்தபடி. [தோல்.
மேற்பட்டை - மரப்பட்டை, புறணி, மரத்
மேற்பணி-மகளிர் காதணிவகை. [பரப்பு.
மேற்பரப்பு - தரை, தளம் முதலியவற்றின்
மேற்பலகை - ஈகம், மேற்படி, மேற்றட்டு.
மேற்பாதவாதனம் - இருகாலுஞ் சம்மணமாக மடக்கிக் கிடப்பது. [மண்டலம்.
மேற்பாதி - மேல்பாதி, குடபாதி, ஆகாய
மேற்பாரம் - மேலேயணைத்துச் சேர்க்கும் பாரம், பொதி, ஒன்றன்மீது சுமத்தும் பாரம்.
மேற்பார்த்தல்-கண்காணித்தல்.
மேற்பார்வை - மேல்விசாரணை, செருக்கிய நோக்கம்,சாகுந்தருணத்து எற்படும் மேலேக்கிய பார்வை, காரியக்காரர்.
மேற்புத்தி-மேன்மையான புத்தி, உயர்ந்த ஞானம்.
மேற்புரம் - மேற்பக்கம், புறம், மேற்பாகம்.
மேற்புலவர் - தேவர், மேலவர், வானவர்.
மேற்புறணி - மேற்பட்டை, மரத்தோல்.
மேற்புறம் - மேலாம்பக்கம், மேலிடம்.
மேற்பூச்சு-வெளிப்பூச்சு, குற்றமறைக்கை.
மேற்பேச்சு-மனத்தோடியையில்லாத சொல், வெளியுபசாரச் சொல்.
மேற்போக்கி-கீழேயுள்ளவற்றின்மீது தண்ணீர் போவதற்குரிய வழி, மேம்பாலம்.
மேற்போடுதல் - தலைப்போடுதல், ஏற்றுக்கொளல், சுமத்தல், தாங்குதல். [டாக்கு.
மேற்போர்வை - நிலையங்கி, மீக்கோள், மூ
மேற்றட்டு-மேலறை,உயர்ந்தஜாதி, மட்டக்குதிரை, உயர்தரம், கட்டியிருக்குஞ் சேலையின் வெளிச்சுற்று, மேற்றளம், கப்பலின் மேலிடம், உயர்ந்தது. [ரகம்.
மேற்றரம்-உயர்ந்ததரம், மேலானது, மேல்
மேற்றலை-மேற்புறம்,தலைவன், கொடுமுடி.
மேற்றளம் - கப்பலின் மேற்பக்கம், காவற்படை, மேனிலம், புறவீதழ். [டக்கு.
மேற்றிசை-மேற்கு, படுவான், பச்சிமம், கு
மேற்றிசைப்பாலன்-வருணன். [காணி.
மேற்றிராணி - அதிகாரி, கிருஸ்தவக் கங்

மேற்றோல் - மீத்தோல், பீத்தோல்.
மேற்றோன்றி - செங்காந்தள், செங்கழுநீர்.
மேன - ஏழாம் வேற்றுமையுருபு.
மேனகை - (1) ஒரு அப்ஸரஸ்திரீ, இவளை இந்திரனுனவன் விசுவாமித்திரருடைய தவத்தை யழிக்கும்பொருட்டு ஏவ, அவன் சென்று அவரைக்கூடிச் சகுந்தலையைப் பெற்றாள், (2) மேருவின் புதல்வி, மலையரையன் மனைவி, இவளுக்கு மநோரமை யென்றொரு பெயருமுண்டு, இவள் புதல்வியர் கங்கையும் பார்வதியும்.
மேனகைபுதல்வி - பார்வதி, சகுந்தலை.
மேனசம் - வெங்காரம், ஒருவகையுப்பு.
மேனை - மேநகை, மேனைபல்லக்கு.
மேனைஜா } பார்வதி, மேனைமகள், பருவத
மேனைசை } ராஜகுமாரி.
மேனைடு - பொன்னுங்காணி, மேல்நாடு, சுவர்க்கம்.
மேனைதம் - பூனை, மயில், வெள்ளாடு.
மேனைதரன்-மலையரயன், பருவதராஜன்.
மேனைதவம்-இமயம், ஹிமவான்தவம்.
மேனைதவன் } மலையரையன், இமவான்,
மேனைநாயகன் } மேனைகேள்வன், மேனை
மேனைபதி } திபன். [திரி.
மேனைத்மசை-மேனைமகள், பருவதராஜபுத்
மேனைப்பல்லக்கு - மூடுபல்லக்கு. [வண்டி.
மேனைவண்டி - பெட்டி வண்டி, கூண்டு
மேனைள்-முன்னாள், பின்னாள், முற்காலம்.
மேனி-அங்கம், அழகு, உடல், உருவம்,காந்தி, குப்பைமேனி, நிறம், மினுக்கு, நிலத்தின் சராசரி விளைவு, நன்னிலைமை.
மேனிகரப்போர் - அசுரர், உருக்கரந்தொளிப்போர்.
மேனிகாப்போர் - மெய்காப்பாளர்.
மேனிகுலைதல் - அங்கங்குலைதல், அழகு குறைதல்,கலக்கமுறல். [மேனிமினுக்கி.
மேனிமினுக்கி- அழகுசெய்துகொள்பவள்,
மேனிலர் - தேவர், வானவர், உம்பர்.
மேனிலை-மேன்மாடி, முன்னம் உள்ளது.
மேனீர் - பூமியின் மேற்பாகத்தில் நீர்சுரத்தல்.
மேனை - (1) பிதிர் தேவதைக்குச் சுவதையிடத்துப் பிறந்த புத்திரி, இவள் புத்திரி வைதரணி, (2) மலையரையன் மனைவி.
மேனைக்கம் - தாராள சிந்தை, செருக்கு.
மேனைக்கம் } மேற்பார்வை, கண்ணோட்
மேனைக்கு } டம். [கதிகொள்ளல்.
மேனைக்குதல்-ஊர்த்துவமுகமாதல், மேற்
மேன்கூரை - மேற்கூரை, முகடு.
மேன்பாடு-மேம்பாடு, உயர்வு, சிலாக்கியம்.
மேன்பாலம் - மேற்பாலம், மேம்பாலம்.
மேன்மக்கள் - பெரியோர், உயர்ந்தோர்.
மேன்மலை - அத்தகிரி, சகியம்.
மேன்மாடம்-மேன்மாளிகை, உப்பரிகை.
மேன்மூச்சு - மேல்மூச்சு, பெருமூச்சு.
மேன்மூடி - மேல்மூடி, ஒன்றின் பாதி.
மேன்மேலும் - பின்னும், பெருக, சிறப்பு.
மேன்மேல்- மென்மேலும். [வம், சிறப்பு.
மேன்மை-மகிமை, மேலாந்தன்மை,மகத்து
மேன்மை பாராட்டல்-புகழ்தல், பெருமை.
மேன்றலை - மரக்கலத்தின் முன்புறம்.
மேஸ்திரி - தலைமை வேலைக்காரன், தையற்காரன்.
மேஜை - மேசை, காலுள்ள பலகை.
மேஜோடு - காலுறை. [வேசிக்கும் நாள்.
மேஷசங்கிராந்தி-சூரியன்மேடராசியில்பிர
மேஷவிலோசநம் - பேரவரி. [க்கோடு.
மேஷவிஷாணிகை ஆட்டுக்கொம்பு, மேட
மேஷாணம் - வஞ்சகம், கொடுமை, கைதவம்.

மை

மை-ஓர் உயிர்மெய்யெழுத்து, அஞ்சனம், இருள், எழுதுமை, கறுப்பு, குற்றம், செம்மறியாடு, நீர், மலடி, மலட்டெருமை, மேகம், மேடவிராசி, மையென்னேவல், வெள்ளாடு, கண்ணுக்கிடுமை, வண்டி மசகு, களங்கம், மலடு, பாவம், பண்புப்பெயர் விகுதி, தொழிற்பெயர் விகுதி, வினையெச்ச விகுதி.
மைகம்-வக்கிராந்ததபாஷாணம். [மிப்பு.
மைகரம்-மயக்கம், கலக்கம், சோகம், பிர
மைகூட்டுதல்-மைதயாரித்தல். [த்தல்.
மைகொடுத்தல்-வண்ணம் பூசுதல், அழகுபடு
மைக்கா - அப்ரகம், அப்பிரேகம்.
மைக்காப்பு-ஒலச்சுவடிகளுக்குமைபூசுதல்.
மைக்கூடு-மைப்பாத்திரம்,மசிப்பரணி.
மைக்கொன்றை - மயிர்கொன்றை, வாதமடக்கி.
மைசூர் - ஓர் பட்டணம், மகிடபுரி.
மைசூர்ரசம்-மிளகுரசவகையிலொன்று.
மைச்சந்தன் } கச்சற்பாஷாணம், வை
மைச்சமனந்தன் } ப்புப் பாஷாணம்.
மைச்சம்பா - கருங்குருவை, மைச்சாலி.
மைச்சாட்சி - குங்கிலியம், குக்கில்.
மைச்சாலி-கருங்குருவை நெல், மைச்சம்பா.
மைச்சாள்-சகோதரனுடைய மனைவி.

மைச்சான் } மைத்துனன், அத்தை அல்
மைச்சுனன் } லது அம்மான் மகன்.
மைச்சுனி - மைத்துனி, மாமன் அல்லது அத்தை மகள்.
மைஞ்சன் - மகன், சுதன், தனேயன்.
மைதல்-மசிதல், நசுங்கல், துவைதல். [மா.
மைதா - கள்மயக்கம், குடிமயக்கம், மைதா
மைதாமா-ஒருவகைத்தானியமா. [வெளி.
மைதானம்-உற நடு, வெளியிடம், வெட்ட
மைதிராவருணன் } அகத்தியன், குறுமு
மைதிராவருணி } னி,பொதிகையான்.
மைதிலி - சீதை, வைதேகி, புவிமகள், நில மகள்.
மைதிலிநாயகன் } ஸ்ரீராமன், ராகவன்,
மைதிலிமணாளன் } காகுத்தன்.
மைதீட்டுதல் - மைபூசுதல், வருணமிடுதல்.
மைதீலை-பஞ்சகௌடத் தொன்று, மிதிலை.
மைதிலி - சீதை, புவிமகள்.
மைதுனம்-ஒன்றிப்பு, புணர்ச்சி, குரீரம்.[ன்.
மைதுனன்-மச்சான், அத்தான், மைத்துன
மைதுனி - மச்சாள், மைத்துனி, மச்சினி.
மைத்திரம்-சினேகம், மித்திரன், நண்பன்.
மைத்திரன் - சிநேகன், பிராமணன்.
மைத்திராயணி - உபநிடதங்களில் ஒன்று.
மைத்திராவருணம் - ஓர் உபநிடதம்.
மைத்திராவருணி - அகத்தியன், வால்மீகி.
மைத்திரிபாவனை-பௌத்த பிட்சுக்கள் உலகில் எல்லாஉயிர்களும் க்ஷேமப்படவேண்டுமென்று தியானிப்பது. [பன்.
மைத்திரியம் - சிநேகம், நட்பு, உறவு, அன்
மைத்திரீபலன் - புத்தன், அருகன்.
மைத்திரேயன் - குசிலவன் புத்திரன், பராசரன் சீடன், இவன் துரியோதனனைக் காமிய வனத்திற்கண்டு அவனுக்கு ஞானோபதேசம் செய்ய நினைத்தபோது,அதனைச் சிரவணஞ் செய்யாது பரிகசித்த மையால் துரியோதனனை மீமன் கதாயுதத்தால் இறக்கும்படி சபித்துச் சென்ற ஒரு முனிவன்.
மைத்துனமை - மைத்துன வுரிமை.
மைத்துனன் - மச்சான், அத்தை அல்லது மாமன் மகன். [மாமன் மகள்.
மைத்துனி - மச்சாள், அத்தை அல்லது
மைநகர்ப்பூமி - வக்கிராந்த பாஷாணம்.
மைநா - சொல்லறிபுள், நாணத்தாம்புள்.
மைநாகசகாயன் - வாயுதேவன்.
மைநாகசுவசிரு-பார்வதி,உமை, சாமளரூபி.
மைநாகபருவதம் } இந்தியாவுக்கும், இலங்
மைநாகம் } கைக்கும் இடையி லிருந்ததாகச் சொல்லப்படும் மலை.
மைநாகன் - இமவான் மேனகையிடத்துப் பெற்ற புத்திரன், கிருதயுகத்தில் மலைகளெல்லாம் சிறகுகளையுடையனவாய்ப் பூவுலகில் எங்கும்பறந்து பட்டணங்கள் மீது சென்றுபடிந்து அந்தப் பட்டணங்களையும் அவற்றிலுள்ள ஜனங்களையும் நாசஞ்செய்து வந்தன, அதுகண்ட இந்திரன் அந்த மலைகளின் சிறகரிந்து அவை பறவாதபடி தடுத்தான், அந்தச் சமயத்தில் மைநாகன் மாத்திரம் வாயுதேவனது சகாயத்தால் தப்பியோடிச் சமுத்திரத்தில் ஒளித்தான்.
மைந்தர் - ஆண்மக்கள், மனிதர்.
மைந்தன்-திண்ணியன், மகன், மாணிக்கன், ஆண்மகன், வீரன், கணவன், ஒரு வாநரன், இவனுக்குச் சகோதரர் இருவர், இவன் அசுவினி தேவர்களுடைய புத்திரன், இவன் சுக்ரீவ சேநாதிபதிகளுள் ஒருவன்.
மைந்து - மயக்கம், வலி, அழகு, விருப்பம், பித்து, காமமயக்கம், யானைமதம்.[த்தல்.
மைபோடுதல் - மசகுஇடுதல்,மயக்கி வசிகரி
மைப்பரணி - அஞ்சனம் வைக்கும் சிமிழ்.
மைப்புயல் - இருண்டமேகம், கார்மேகம்.
மைப்போது - மைம்மலர், கருங்குவளைப்பூ.
மைமல் - மாலைநேரம், அந்திவேளை.
மைமா - கரும்பன்றி, யானை, எருமை.
மைமீன் - சனி, நீலன், சாவகன்.
மைமை - பூசை, பூசிக்கை, உபசரிக்கை.
மைம்மலர் - கருங்குவளை மலர், மைமல்.
மைம்முகன் - மூசு, கருங்குரங்கு.
மைம்மை - மலடி, மலட்டெருமை. [டை.
மையக்கட்டை - வண்டி அச்சின் மேற்கட்
மையண்டம் - மூட்டை,அண்டம், அம்பரம்.
மையத்து - பிரேதம், சடலம், அங்கம்.
மையமண்டபம் - நீராழிமண்டபம். [னது.
மையம் - நடு, நடுத்தரமானது, சந்தோஷமா
மையம்பாய்தல் - இருபக்கமுஞ்சாய ஒவ்வா மனிற்றல். [மாயவித்தைக்காரி,கள்ளி.
மையலி - மசாலி, கருங்குருவை,மைச்சாலி,
மையல் - உன்மத்தம்,மோகம்,பித்தம்,செல்வச்செருக்கு, யானைமதம், கருவூமத்தை.
மையவாடி-முள்வேலியுள்ளஇடம்,இடுகாடு.
மையன்மா - யானை, பன்றி, எருமை.
மையா - மலட்டுப்பசு, வற்சை.
மையாத்தல் - மயங்குதல், அயர்வுறல்.
மையார்தடங்கண்ணிபங்கி- திருக்கோடிக்குழகரிலே கோயில் கொண்டிருக்கும் தேவி.

மையான் - எருமை, பகடு, எருமைக்கடா.
மையிடுதல் - மைதீட்டுதல், மைபூசுதல்.
மையிருட்டு - காரிருள், மையிருள்.
மையில் - நீட்டலளவை. [ஆட்டுநெய்.
மையிழுது-ஆட்டுக்கொழுப்பு,எருமைநெய்.
மையுடை - கருவேல்மரம், வேலமரம்.
மையுண்ணல்- மைதீட்டப்படுதல்,மையிடல்
மையூட்டுதல் - மைதீட்டுதல், மையிடுதல்.
மையெழுதுதல் - மையிடுதல், மைதீட்டல்.
மையொற்றி - எழுதுமையை ஒற்றும் காயிதம்.
மையோடக்கோவனூர் - கடைச்சங்கப்புலவர், இவர்க்குக் கோவனூர் என்றும் பெயர்.
மைரேயம் - ஒருவகை மது, தேறலவகை.
மைலா - மாயவித்தைக்காரர்.
மைலாரு - ஒரு தேவதை. [ந்து.
மைலாலக்கடி - மயிலாலக்கடி,ஓர்வகைமரு
மைவாகனன் - அக்கினிதேவன்,மேஷவூர்தி.
மைவார்குழலியம்மை திருவிற்குடி வீரட்டத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவி.
மைவிடை - ஆட்டுக்கிடா, மேஷம்.
மைவிளக்கு - நெய்விளக்கு. [மெழுகு.
மைனம் - மீன், மச்சம், சகுலி, சலசரம்,
மைனர் - வயதுமுதிராத பருவத்தினர்.
மைனர்விளையாட்டு - மனம்போன வழி நடப்பது.
மைஞ - நாகணவாய்ப்புள், நானத்தாம்புள்.
மைனிகன் - கறையான், சிதல், செல்லு.

மொ

மொ - ஓர் உயிர்மெய்யெழுத்து.
மொகசல் - மோசூல், மோசல், காவல்.
மொகமொகெனல்-ஈரடுக்கொலிக் குறிப்பு.
மொகரம் - முகமதியர் பண்டிகை.
மொகரா - பதினேந்து ரூபாய் மதிப்புடைய பொன்னாணயம்.
மொகர்-முகர், முத்திரை,அரசர் முத்திரை.
மொகவை - முகவை, முகமுகமாக.
மொகுமொகெனல் - ஒலிக்குறிப்பு.
மொக்கட்டை - முகம், மழுக்கமானது.
மொக்கட்டை முறித்தல் - முகமுறித்தல், அவமானப்படுத்தல், மொக்கணம்.
மொக்கட்டைமுறித்தான் - குறும்பன்.
மொக்கட்டையீனம் - சங்கைத்தாழ்வு.
மொக்கணம் - மொக்கட்டை முறித்தல்.
மொக்கணி - தோற்பை, பொக்கணி.
மொக்கவீனம் - சங்கையீனம்.
மொக்களித்தல் - தாமதித்தல், பயணத்திற் றறிக்குதல்.
மொக்கன் - தூலித்தவன், மொங்கன்.
மொக்கு - பூமொட்டு, மரத்தின்கணு.
மொக்குதல் - வயிறு நிறையத்தின்னல்.
மொக்குமா - கோலமிடும் மா.
மொக்குளித்தல் - குமிழியிட்டொலித்தல், திரளுதல், முக்குளித்தல். [காளி.
மொக்குளிப்பான் -கொப்புளிப்பான்,மூழுக்
மொக்குள் - கொப்பூழ், நீர்க்குமிழி, மலரும் பருவத்தரும்பு, மொட்டு.
மொக்கை - அங்கை, கூரின்மை, பருமை, மனை,வெட்கம்,மரத்துண்டு, அவமானம், மதிப்பு, முகம். [டுக் குலைதல்.
மொக்கைகுலைதல் - அவமானப்படுதல், கட்
மொக்கைச்சோளம் - மக்காச்சோளம்.
மொக்கைபண்ணல் - அவசங்கையாக்கல், ஆயுதங்களை மழுங்கத்தல், கெடுத்தல், மொக்கணம் பண்ணுதல், மடித்தல்.
மொக்கைபோதல் - அழுப்பப்படுதல், அவசங்கைப்படுதல், ஆயுதமுனைமடிதல்.
மொக்கையீனம் - சங்கைக்குறைவு,மதிப்புக் குறைவு.
மொங்கன் - மொறுங்கன், தடியன்.
மொங்கான் - பெருத்துக்கனத்த பொருள்.
மொசித்தல் - புசித்தல்,உண்ணல்,தின்னல்.
மொசுமொசுக்கை - முசுமுசுக்கை.
மொசுமொசுத்தல் - ஒலிக்குறிப்பு,உப்புதல், சீக்கிரக்குறிப்பு, தினவுக்குறிப்பு.
மொச்சடித்தல் - மொச்சையடித்தல், தூர் நாற்றம் வீசல்.
மொச்சி - சிறுமுறம், முச்சி.
மொச்சியன் - சித்திரக்காரன்.
மொச்சு - மொச்சை, ஆட்டின் கூட்டத்தி லுண்டாம் நாற்றம்.
மொச்சுமொச்செனல் - அசையிட்டு உண்ணும் ஒலிக்குறிப்பு, காரியம் இன்றி விடாது பேசல். [டை.
மொச்சை - ஆட்டுமணம்,மொச்சைக்கொட்
மொச்சைக்கொட்டை - மொச்சைப்பயறு.
மொச்சையடித்தல்-மொச்சைமணம்விடுதல்
மொஞ்சி - ஸ்தனம், குயம், மார்பு.
மொஞ்சிநாற்றம் - மூலைப்பால் மணம்.
மொடமொடெனல் - ஈரடுக் கொலிக் குறிப்பு. [டை, பருமை, நெடுமை.
மொடு - இலாபம், நயம், பயற்றஞ்சப்பட்
மொடுக்குமொடுக்கெனல் - ஒலிக்குறிப்பு.
மொடுமொடுத்தல்-கோபக்குறியாய் முனகுதல், அமைதியிலாமக்களியல்பு.

மொடுமொடுப்பு - ஈரடுக் கொலிக்குறிப்பு.
மொடுமொடெனல் - ஒலிக்குறிப்பு, கோபக் குறிப்பு. [தம்.
மொட்டந்தலை - மொட்டைத்தலை, முண்டி
மொட்டம்பு - அலகில்லா அம்பு.
மொட்டல் - அரும்புதல், பறிதல், குட்டுதல்.
மொட்டரூமலர் - முழுதும் விகசியாத புஷ்பம்.
மொட்டித்தல் - கைவிரலை மடித்து முட்டிக் கையாக்கல், அரும்புதல், குட்டுதல்.
மொட்டு - இளம்பூவரும்பு, குமிழ்ப்புவடிவுள் ளது, ஆண்குறி நுனி, வெறுமை, இளமை.
மொட்டுதல்-அரும்புதல், கிளைத்தல், குட்டு தல்.
மொட்டை - கூரின்மை, மழுக்கம், முண்டி தம், அறிவின்மை. [கடிதம்.
மொட்டைக்கடிதம் - கையெழுத்தில்லாக்
மொட்டைக்கறப்பர்-எமதூதர். [கோபுரம்.
மொட்டைக்கோபுரம்-பாதிவேலையில்நின்ற
மொட்டைச்சி-அமங்கலி, பூநீறு, தலைமயிரில் லாதாள், அக்கில்லாள். [லாத்தலை.
மொட்டைத்தலை-மொடந்தலை, பாகையில்
மொட்டைப்புத்தி - மழுங்கற்புத்தி, இளைஞ ரறிவு, மட்புத்தி.
மொட்டைமச்சு - மொட்டைமாடி.
மொட்டைமாடு-கொம்பிலாமாடு, மோழை.
மொட்டையடித்தல்-தலைமுண்டிதமாக்கல்.
மொட்டையம்பு - அலகில்லாத அஸ்திரம்.
மொட்டையன் - மொட்டைத்தலையன், அறி விலி. [ஆதாரமில்லாத செய்தி.
மொட்டைவசனம் - முடிவில்லா வாக்கியம்,
மொட்டைவண்டி - கூண்டில்லா வண்டி,
மொட்டைவெட்டு - முண்டிதவெட்டு.
மொணரு - விழுங்குங் கவளம்.
மொண்ட - முகந்த, முகந்த, அள்ளிய.
மொண்டணி - மொந்தணி
மொண்டல் - மொள்ளல், நொண்டுதல்.
மொண்டன் } சாமை வகையிலொன்று.
மொண்டாவன் }
மொண்டி - ஓர் சாமை, நொண்டி, சண்டி.
மொண்டு - அலவு, முரண்டு, மொண்டெ னைச்சம், தொந்தரவு. [முரண்டன்.
மொண்டுக்காரன் - அலவு பண்ணுபவன்,
மொண்ணி - மூலை, மொஞ்சு. [து.
மொண்ணை - கூர்மையற்றது, சுணைகெட்ட
மொண்ணையன் - அறிவுமழுங்கியவன்.
மொதுமொதெனல் - ஒலிக்குறிப்பு, நொதத் தற் குறிப்பு, உப்புதல். [டுத்தொகை.
மொத்தம் - தொகை, பருப்பம், பொது, கூட்
மொத்தல் - அடித்தல், இடித்தல், துவைத்
மொத்தளம் - கூட்டம், தொகை. [தல்.
மொத்தி - புடைப்பு, பருமன், பருத்தவன்.
மொத்தினி - நுரை, குமிழி, பே, பேரு.
மொத்து-அடி, மொத்தென்னேவல், மூடன்.
மொத்துண்ணல் - அடியுண்ணல்.
மொத்துதல்-அடித்தல், மோதுதல். [சாதம்.
மொத்தை-பருத்தது, உருண்டை, பட்டைச்
மொந்தணி - திரட்சி, பருப்பம், மரக்கணு
மொந்தணியன் - திரண்டது, பருத்தது.
மொந்தன் - வாழ்க்கையிலொன்று. [த்தது.
மொந்தை - ஓர் கட்பறை, ஓர்பாத்திரம், பரு
மொந்தைவாழை-ஒருவகை வாழை.
மொப்பு-வெடிநாற்றம், குட்டி பால்குடியாம லிருக்க ஆட்டின் மடியிற் சுற்றும் துணி.
மொய் - கூட்டம், தாய், பெருமை, போர், போர்க்களம், மகமை, மொய்த்தல், மொய் யென்னேவல், யானை, வண்டு, நெருக்கம். பெருமை, பகை, விவாகத்தில் உறவினர் அளிக்கும்பணம்.
மொய்கதிர் - அடர்ந்தகதிர், முலைக்காம்பு.
மொய்குழல் - பெண், செறிகுழல், சுரிகுழல்.
மொய்ச்சல் - மொய்த்தல், நெருங்கல். [னை.
மொய்தாய்-ஈன்றாள், பெற்றாள், மாதா, அன்
மொய்த்தல்-நெருங்கல், மூடுதல், இருத்தல், சூழ்தல், உபத்திரவித்தல், கெடுத்தல்.
மொய்த்தாய் - ஈன்றாள், பெற்றவள், மாதா.
மொய்ப்பணம் - மகமைப்பணம். [மூடுதல்.
மொய்ப்பு-மொய்த்தல், சூழ்தல், நெருங்கல்,
மொய்ம்பன் - வீரன், பராக்கிரம சாலி.
மொய்ம்பு - தோள், வலிமை, பெலம்.
மொய்யர்சன்னி - மூடுசன்னி, கிறைசன்னி.
மொய்யெழுதுதல் - விவாக நன்கொடை யளித்தல், திரும்பவராத தொகையைச் செலவெழுதல், தருமத்திற்குப்பணமுதலி யதைக் கணக்கிற் செலவெழுதுதல்.
மொய்யெழுத்து - தருமசாதனவெழுத்து.
மொய்யெனல் - மந்தக்குளிப்பு, புளித்தற் குறிப்பு.
மொரமொரத்தல் - முறமுறெனல், ஒலிக் குறிப்பு, பசையறக்காய்தற் குறிப்பு.
மொருமொருத்தல் } ஒலிக்குறிப்பு, புளித்
மொருமொரெனல் } தற் குறிப்பு.
மொலான் - முலாம்பழம். [குறிப்பு.
மொலுமொலுத்தல் - ஒலிக்குறிப்பு, தினவுக்
மொலுமொலெனல்-விடாதுபேசல்குறிப்பு, இரைதற்குறிப்பு, முணுமுணுத்தற்குறிப்பு.
மொல்லு - இரைச்சல்.
மொல்லுமொல்லெனல் - ஈரடுக்கொலிக்

குறிப்பு, சண்டைக் குறிப்பு.
மொல்லை - மேடம், ஆடு, கடன்.
மொழி - சொல், மொழியென்னேவல், முழி, எலும்புப்பொருத்து, கணு.
மொழிக்கொடை - வித்யாதானம், கல்வி, தருமம்.
மொழிதடுமாறுதல் - திக்கிப்பேசல், வாய் குழறல்.
மொழிதல் - சொல்லுதல், கூறல்.
மொழிநூல் - மொழி வரலாற்றைக்கூறும் சாத்திரம், வசன நடை. [ன்று.
மொழிந்ததுமொழிதல்-செய்யுள்வழுவிலை
மொழிபெயர்த்தல் - பாஷை திருப்புதல்.
மொழிபெயர்ப்பு - ஒருபாஷையிலுள்ளதை வேறு பாஷைக்கு மாற்றுதல்.
மொழிப்பிசகு - வாக்குத் தவறுகை, உடற் பொருத்து இடம்விட்டு விலகுகை.
மொழிப்பொருள்-சொற்பொருள், மந்திரம்.
மொழிமாநம் - ஆகம வளவை.
மொழிமாற்று-பொருள்கோளைட்டி ளென்று; அது: பயனிலைகட்கேற்றமொழிகளைப் பயனிலைகட்கேலாமொழிகளோடு புணர்ப்பது (உ-ம்) யானைக்குநீத்து முயற்கு நிலை.
மொழிமுதலெழுத்து - சொற்கு முதனிற்கு மெழுத்து.
மொழிமை - பழஞ்சொல், முதுமொழி, ஆதிவாக்கியம்.
மொழியன் - பரும்பேன், கொல்லன்.
மொழியிடையெழுத்து - சொல்லிடைநிற்கு மெழுத்து.
மொழியிறுதி - மொழிகளின் ஈற்றுநிலை.
மொழியீற்றெழுத்து-சொல்லிறுதியினிற்கு மெழுத்து.
மொழியொலிக்குறிப்பு - எழுத்திலைசைக் குறிப்பு.
மொழியோசை-சத்தம், வார்த்தையுச்சரிப்பு.
மொழுக்கன் } தடித்தஆள், வெண்மட்ட
மொழுங்கன் } வேலை.
மொழுக்குமரம் - பரம்புமரம்.
மொழுக்கெனல் - ஒலிக்குறிப்பு, கொழுத்திருத்தல்.
மொழுமொழுவெனல் - கொழு கொழுவென்றிருத்தல், மழுமழுவெனல்.
மொள்ளல் } முகத்தல், நிரப்புதல், அள்
மொள்ளுதல் } ளல்.
மொறமொறப்பு - சுத்தம், உலர்ச்சி, சருச்சரை.
மொறுமொறுத்தல் } ஒலிக்குறிப்பு, மிகக்
மொறுமொறெனல் } காய்த்தல்.

மோ

மோ-ஓர் உயிர்மெய்யெழுத்து, முன்னிலையசைச்சொல் (உ-ம்) கேண்மோ மோவென்னேவல். [விருப்பின்மை.
மோகநீயம் - மோகமின்மை, ஆசையின்மை.
மோகநூல்-காமசாஸ்திரம், மதனநூல்.
மோகப்படைக்கலம் - எதிரியை மயக்கும் படைக்கலம், மோகனாஸ்திரம்.
மோகம் - ஆசை, உட்பகையாறினொன்று, உன்மத்தம், காமம், தப்பிதம், பஞ்சமாயையினொன்று; அது: விபரீதஞானமுண்டாக்குவது, பஞ்ச பிராணவத்தையினொன்று; அஃது: அழுங்கலும் பிதற்றலுமாம். பாதிரி, மயக்கம், மதிமீனம், மோசம், மோர், முருங்கை, வாழை, விகாரமெட்டினுளொன்று.
மோகரம்-உக்கிரம், மயக்கம், பேராரவாரம், மொகரம் பண்டிகை. [கரன்.
மோகரன் - மன்மதன், அனங்கன், மோக
மோகரித்தல் - சினத்தார்த்தல், மயங்கல்.
மோகரிப்பு-ஆக்கிரமிப்பு, மயக்கம், வீராவேசம்.
மோகர் - உன்மத்தர், சித்திரக்காரர், மகர், மொகரா, மூகர், இராஜமுத்திரை.
மோகலீலை - காமவிநோதம், கோலாகலம்.
மோகவதி - (1) மோகவந்தன்புத்திரி, சுதரிசனன் மனைவி, இவளே நிருகன்வமிசத்துக் கடைத்தோன்றல், (2) பாரதயுத்தம்நடக்குங்காலத்திலேகுருக்ஷேத்ரத்தின் சமீபத்திலிருந்தவோர்நதி, பாண்டவர்கள்பாரதயுத்தம் முடிந்தபதினெட்டா நாளிரவில் இந்த நதிக்கரையிற் படுத்துறங்கினர்.
மோகவியாபாரி - காமவிகாரி, துர்த்தன்.
மோகவிலை - பிரியத்தால்கொடுக்கும்அதிகவிலை.
மோகவுவமை -பொருண்மேலெழுந்தவேட்கையான்வந்தமயக்கந்தோன்றவுரைப்பது (உ-ம்) கயல்போலுமென்று நின்கண்பழிப்பல் கண்ணின் செயல்போற்பிறழுந் திறத்தாற்கயல் புகழ்வன்.
மோகனக்கல் - கோயில்வாயின் மேற்படிக்கல், சிகரத்தின் மூடுகல்.
மோகனசாத்திரம் - அறிவை மயக்குநூல்.
மோகனநாட்டியம் - மகளிர்கூத்து.
மோகனப்படை-மோகனாஸ்திரம். [பொடி.
மோகனப்பொடி - மயக்குப்பொடி, சொக்கு

மோகனமாலை - பொன்னால்கட்டிய பவள மாலை.

மோகனம் - அணைப்பு, புணர்ச்சி, மயக்கம், மன்மதன் கணையிலொன்று.அட்டகருமத் தொன்று, கலைஞானமறுபத்து நான்கினு மொன்று, ஓரிராகம், ஏமாற்றுகை.

மோகனவித்தை-மயக்குத்தொழில்;இஃது: அட்டகருமவித்தையி லொன்று.

மோகனாங்கனை } பார்த்த மாத்திரத்தில்
மோகனாங்கினி } மோகிக்கச்செய்பவள்.

மோகனாஸ்திரம் - மன்மதபாணம், மோகனாத்திரம்.

மோகனி-மோகனப்பெண் [மோகமின்மை.

மோகனீயம்- அட்டகுற்றத்தொன்று;அது:

மோகன் - மன்மதன், உருவிலி,அனங்கன்.

மோகாதி-முக்குற்றம்;அது:காமம் வெகுளி மயக்கம் என்பன்.[இருள்,மோகசோகம்.

மோகாந்தகாரம் - மோகத்தாலுண்டாம்

மோகாம்பிகை - திருப்பாற்றுறையிலேகோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர்.

மோகி - கஞ்சா,அபின்,கள்,போதைவஸ்து.

மோகிதம் - காமமயக்கம், ஆசை. [ளவன்.

மோகிதன்-காமங்கொள்வோன்,மோகமுள்

மோகித்தல் - காமத்தால் மயங்கல்.

மோகிப்பித்தல் - மோகிக்கப்பண்ணுதல்.

மோகிப்பு - மயக்கம், உன்மத்தம்.

மோகினி - அமிர்தம் கடைந்தகாலத்தில், திருமால்பெண்வடிவங்கொண்ட உருவம் என்பதுபுராணகதை(2)தாருகவனத்தில் சிவபெருமான் மிக்க அழகான வடிவங் கொண்டபோது, விஷ்ணுமூர்த்தி யானவர் எடுத்தமோக வடிவு,(3) திருமகளின் அழகின்இறுமாப்பைக்குலைக்கஎடுத்த திருவுருவம்,(4)பஸ்மாசுரனை மயக்கி அழிக்கஎடுத்தஉருவம்,(5)மமகாரண்தேவி, (6)திதியின்குமாரி, (7) ஓர்அப்ஸரஸ்த்ரீ: இவள்பூஞ்சோலைமுதலிய இடங்களிலும், காமுகர் கனவிலும் தோன்றி அவர்களை உருக்குலைக்குந் தொழிலையுடையவள்.

மோகினிப்பணம் - கோயில்களின்உற்சவத்திற்குஅரசாங்கத்தாரால்அளிக்கும்பணம்.

மோகொரம் - மோகரம், மோகரம்.

மோக்கட்டை - மோவாய்க்கட்டை. [சம்.

மோக்கம் - தீர்தல்,பரகதி, விடுகை, மோட்

மோக்கல்-மணத்தல்,மொள்ளல்.[டின்மை.

மோக்களா - களிப்பு, ஆரவாரம்,கட்டுப்பா

மோக்கில் - திமிங்கிலவகை, கடல்யானை.

மோக்குதல் -மணத்தல்,முகந்துகொள்ளல்.

மோசகம் - துறவு,வாழை,விரிந்த தோகை.

மோசகன் - துறவி, வெளியிடுவோன்.

மோசகி - கிலுகிலுப்பைச்செடி.

மோசக்காரன் - வஞ்சகன், சூதன்.

மோசக்காரி - பரம்பி, வஞ்சகி.

மோசடி - ஏமாற்றுகை, எய்த்தல்.

மோசநம் - விடல்,விமோசனம்,விலகல்,ஓர் வகைநெல், பிரகணம் விடுகை, தீர்தல், துறத்தல், விட்டுவிலகல். [கை.

மோசநாசம் - ஏமாற்றுகை, நஷ்டப்படுத்து

மோசனி - இலவமரம், பாதாட்சை.

மோசம் - அவத்தம்,தவறு,பிசகு, வஞ்சனை.

மோசம்போதல்-வஞ்சிக்கப்படுதல்,அபாயத்துக்குள்ளாதல், பிசகுதல்.

மோசாசம் - பருத்திப்பிசின்,

மோசாடம் - சந்தனம்,வாழைப்பழம்.[ஞர்.

மோசி - பழயபுலவருளொருவர், மோசிகீரனார்

மோசிகீரனார் - இவர் கடைச் சங்கப்புலவர்களுள் ஒருவர், சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறையும், கொண்கானம்கிழானும்இவரால்பாடப் பட்டோர், இவர் திருவள்ளுவருக்குஞ்சிறப்புக்கவியொன்று பாடியிருக்கின்றனர்.

மோசிகை - உச்சிமுடி. [களுள் ஒருவர்.

மோசிசாத்தனார்-புறநானூறுபாடிய புலவர்

மோசித்தல் - தவறுதல், மோசம்போதல்.

மோசிமல்லிகை - காட்டுமல்லிகை, ஊசி மல்லிகை.

மோசு - விருப்பம், ஆசை, மோகம்.

மோசுல்-பாக்கிதாரனுக்கு காவல்வைத்தல்.

மோசை - அவரி, இலவு, வாழை, வரம்பு.

மோடசகன் - கள்வன், மோசக்காரன்.

மோடமரம் - மகிழமரம், மகுடமரம்.

மோடம் - மூடம், மூடத்தனம். மடமை.

மோடனம்-அரைத்தல்,காற்று, அவமானம்.

மோடன் - மூடன்,வளர்ந்தவன்,முட்டாள்.

மோடாமோடி - ஆடம்பரம், டாம்பீகம்.

மோடாதல் - ஆறுமுதலியவற்றில் மண்மேடிடுதல், கர்ப்பமாதல், உயர்தல்.

மோடி - காடுகாள், பிணக்கு, மேட்டிமை, மௌடி, வேடிக்கை, வனத்தில் வாழுங் காளி, பிணக்கு, மொத்தம், வஞ்சகம், கண்டந்திப்பிலி, மகிடி.

மோடிஎடுத்தல் - மந்திர வாதி வை த்த மோடியை எடுத்தல்.

மோடிக்காரி- செருக்கியபிணக்குடையாள்.

மோடிடுதல் -மேடாதல்,சோரத்திற்கருப்பமாதல், ஆற்றின் திட்டு.

மோடிவைத்தல் - மந்திரத்தால் ஒன்றை மறைப்பதும் அதைஎடுப்பது மாம்;இது:

மந்திர வாதிகளுக்குள் நிகழும் கரும்ம், கோபத்தால் வைராக்கியங்கொள்ளல்.

மோடு - உச்சி, உயர்ச்சி,பிளப்பு, பெருமை, முகடு,மூடத்தனம்,மேடு,கருப்பை,மடம்.

மோட்சகாலம் - கிரகண முடிவு நேரம்.

மோட்சசாம்பிராச்சியம்-மோட்சவீடு. [கள்.

மோட்சசோபானம் - முத்திநிலையினுயர்படி

மோட்சதருமம் - வீடடைதற்குரிய தகுதி.

மோட்சதீபம் - மோட்ச விளக்கு.

மோட்சமண்டலம் - முத்தியுலகு,பரமபதம்.

மோட்சமார்க்கம் - முத்திநெறி, நித்திய வாழ்வு.

மோட்சம்-இட்டம், கடன்செய்தல்,தீர்தல். மரணம், மோக்கம், பதமுத்தி.

மோட்சவாசம் - மோட்சத்திலிருத்தல்.

மோட்சவாசி, மோட்சவாதி, மோட்சவான் } மோட்சஞ்சேரப்பக்குவன் மோட்சத்திற் சஞ்சரிப் போன்.

மோட்சவிளக்கு-வீரசைவர் பிரேத மடக்கு மிடத்துவைக்கும்விளக்கு, மோட்சதீபம்.

மோட்சாநந்தம் - மோட்சவின்பம்.

மோட்சோபாயம் - கதி பெறும் வழிவகை.

மோட்டன் - மூர்க்கன், முரடன்.

மோட்டா - பெரிது, பருமபடிசு, முரடு.

மோட்டார், மோட்டார்வண்டி } யந்திர உதவியால் ஓடும் வண்டி.

மோட்டாள் - மோட்டா ஆள்,பருத்தவன்.

மோட்டுத்தனம் - முரட்டுத்தனம், முரடு.

மோட்டுமீன் - நட்சத்திரம், விண்மீன்,உடு.

மோட்டுவளை - கூரையின் உச்சிசேர்க்கும் மரம், மோட்டுவடிம்பு. [ப்போகும்வளை.

மோட்டை-வரப்புகளினிடையில் நீர் வெளி

மோட்டோடு - கூரையின் மேல் ஓடு.

மோணம் - பழவற்றல், பாம்புப்பெட்டி.

மோதகக்கையன் - விநாயகன், கணபதி.

மோதகமரம் - குதிரப்பிடுக்கன்மரம், பீநாரி.

மோதகம் - அப்பவருக்கம், இணக்கம், சந்தோஷம், தோசை, கொழுக்கட்டை.

மோதகி - விஷ்ணு கதாயுதம்.

மோதநம் - சந்தோஷம், உவகை. [சனை.

மோதம் - ஓமம், களிப்பு, சந்தோஷம், வா

மோதயந்தி - காட்டுமல்லிகை, மோழனை.

மோதல் - அடித்தல், இடித்தல், பருத்தல்.

மோதவம் - வாசனை, மணம், சுகந்தம்.

மோதனம் - உவகை, ஆச்சரியம், விந்தை.

மோதாசனர் - ஓர் கடைச்சங்கப்புலவர்.

மோதிதம் - சந்தோஷம், மோதநம்.

மோதிதன் - களிப்புடையோன், காமுகன்.

மோதினி - கஸ்தூரி. மல்லிகை வனமுல்லை.

மோதிரக்கள்ளி - ஓர்வகைக்கொடிக்கள்ளி

மோதிரக்கண்ணி - ஓர்வகைச்செடி.

மோதிரப்பாட்டு - ஓர் நாடகநூல்.

மோதிரமாறுதல் - விவாகவுடன்படிக்கையிற் பெண்ணும் ஆணுங் கணையாழி மாற்றுதல்.

மோதிரம் - விரலணி, கணையாழி, அங்குலீயகம்.

மோதிரவிரல் - சுண்டுவிரலுக்கு அடுத்த விரல்.

மோது - தாக்கு, வைக்கோற் கட்டு.

மோதுதல் - புடைத்தல், தாக்குதல், அடித்தல்.

மோதை - வசம்பு, வாசாமிளகு.

மோத்தல்-முகத்தல், மொள்ளல், மதித்தல்.

மோத்தை - வெள்ளாட்டுக்கடா, மேடவிராசி, வாழை முதலியவற்றின் மடல் விரியாத பூ.

மோநக்கற்றுறையனர் - ஓர் கடைச்சங்கப் புலவர்.

மோப்பம் - மணத்தல், மூக்கு, நுகர்தல்.

மோப்பம்பிடித்தல் - வாசனையாலறிதல், காமவிச்சையால்ஒருத்தியையதொடர்தல்.

மோப்பி - கைம்பெண், மோப்பம். [ணை.

மோப்பு - மோப்பம், காதல், மேடை,திண்

மோடரம் - கரும்புவேர், பெருங்குரும்பை.

மோரடகம் - கரும்புவேர், வீழிப்பூடு,வேர்.

மோரா - மொகராநாணயம், மயிற்பீலி, பாதபீடு, எலும்பின் உள்ளீடு. [டை.

மோரி - சிறுவடிகால், கழிநீர்க்கால், சாக்க

மோரீசு - இந்துமகாசமுத்திரச் சிறுதீவு.

மோரீசுவாழை-ஆனைவாழை,பச்சைவாழை

மோருதல் - முகர்தல், மொள்ளல். [டை.

மோரை-முகவாய்க்கட்டை, தாழ்வாய்க்கட்

மோரைக்கயிறு - மாட்டின் முகக் கயிறு.

மோர் - நீர்விட்டுக்கடைந்த தயிர்,மச்சிகை.

மோர்க்குழம்பு - மோர்க்கறி.

மோர்க்கூழ் - மோர்சேர்ந்த களி. [தியம்.

மோர்சிங்கு-இரும்பினுலாகிய ஒரு சிறுவாத்

மோர்மிளகாய்-மோரிலிட்டுஊறியமிளகாய்

மோலி - மௌலி, கிரீடம், முடி.

மோவம் - மோகநீயம், ஆசையினுணுக்கம்.

மோவாய் - தாடி, வாயின் கீழ்ப்பாகம்.

மோவாய்க்கட்டை - மோவாய்.

மோவாய்பிடித்தல் - கெஞ்சிக்கேட்டல்.

மோழல் - பன்றி, இருளி, சூகரம், எனம், கேழல்.

மோழனை - காட்டுமல்லி, மோதயந்தி.

மோழி-மேழி, கலப்பை, அலம், உழுபடை.
மோழை - கஞ்சி, கீழாறு, மடமை, மொட்டை, வெடிப்பு, மோட்டை, குமிழி.
மோழைமாடு - கொம்பில்லாமாடு, சூணை கெட்டவன், மொட்டைமாடு.
மோழைமுகம் - பன்றி, கோலம், மைம்மா.
மோழைவழி - நுழைவழி, பொந்து.
மோரூ - ஓர் பொற்காசு, மொகரூ.
மோறை - மோவாய், மோறைக்கட்டை.
மோனமுத்திரை - மௌனநிலைகாட்டும் அடையாளம், தியானநிலை, [தொன்று.
மோனம்-மௌனம்;அது: சாத்துவிதகுணத்
மோனர் - முனிவர், மௌனிகள்.
மோனி - மௌனி, ஞானி, பேசாவிரதி.
மோனீகம் - பெருச்சாளி, ஆகுகம்.
மோனே - ஆதி, ஓர்தொடை, மகன்.
மோனைத்தொடை- முதற்சீரின்முதலெழுத் தோடுபின்வருஞ்சீர்களில் ஒன்றனுள்ளே னும் பலவற்றினுள்ளேனு முதலெழுத் தொன்றி வருவது. [பிரியம்.
மோஜு - மௌசு, இடம்பம், இறுமாப்பு,
மோஷகன் - தட்டான், திருடன்.
மோஷணம் - சேதித்தல், வைத்தல்.

மௌ

மௌ - ஓர் உயிர்மெய்யெழுத்து.

மௌகலி } காகம், காரண்டம், வாயசம்
மௌகுளி }
மௌகூர்த்திகர் - எமதருமன் முகூர்த்தை யினிடமாகப்பெற்ற தேவகணம்,முகூர்த் தகாலங்களுக்கு அதி தேவதைகளாகிய இவர்கள் அந்தந்த முகூர்த்தங்கள் தோ றும் உலகத்தாரால் செய்யப்படுங்கருமங் களே யேற்று வைத்திருந்துபிறகுப் பயன் களே யூட்டுவோர்.
மௌகூர்த்திகள் - முகூர்த்தத்தைக் குறிக்கும் சோசியம்.
மௌக்திகமாலை- முத்துவடம், தாளவடம்.
மௌக்திகம் - முத்து, தாளம், நித்திலம்.
மௌக்திகதண்டுலம் - வெண்சோளம்.
மௌக்திகபிரஸவம் - முத்துச்சிப்பி,முத்து.
மௌக்கலம் - முசலம், முசலாயுதப்போர்.
மௌசாளி-செல்வமும்செருக்குமுள்ளவன், பெரும்பண் பதினறனுள் ஒன்று.
மௌசு-ஆடம்பரம், மிகுபிரியம், கவர்ச்சி.
மௌஞ்சி - நாணற்புல்லாற் செய்த அரை ஞாண், முஞ்சி, முஞ்சம்புல்.
மௌடி - ஓர் வித்தை, பகடம், பரிகாசம்.
மௌடீடியம் - அறியாமை,பேதமை,மூடம்,
மௌட்டை - கைபொத்திக்குத்துங் குத்து.
மௌண்டம் - ஓர் பலகாரம்.
மௌண்டிதம் - உபநிடத மூப்பத்திரண்டி ஞொன்று, முண்டிதம்.
மௌண்டிதன்-முண்டிதன், மொட்டையன்
மௌத்கல்லியர்-(1) ஸ்ளாயினியின் புருடன் (2) சாகல்லியரின் சீடன்.
மௌத்காலம் - காகம்,காரண்டம்,வாயசம்.
மௌத்திகதண்டுலம் - வெண்சோளம்.
மௌத்திகம் - முத்து, தாளம், நித்திலம்.
மௌத்து - மரணம், சிறத்தல்.
மௌநேயர் - காசிபன் முனியென்பவளிட த்தில் பெற்ற கந்தருவர்.
மௌரவி } வின்ஞண், நாரி, பூட்டு, ஆவம்,
மௌர்வி } பூரி.
மௌராஸு - மிராசு, பூ பாத்தியம்.[யினர்.
மௌரியர் - மோரியர், மூராவின் கால்வழி
மௌர்வியர் - சந்திரகுப்த வமிசத்தரசர்; இவர்: பதின்மர், நூற்று முப்பத்தேழு வருடம் மகததேசத்தில் அரசுசெய்தவர், (சந்திரகுப்தன் காண்க)
மௌலன் - நல் வமிசத்தான்.
மௌலாஞ - மௌல்வி, முகமதிய குரு.
மௌலி - மணிமுடி, உச்சிக்குடுமி, கள், பூமி, சடை, தலை, தார், சிகரம். [மௌலாஞ.
மௌல்வி - முகம்மதிய மத வித்துவான்,
மௌவல் - முல்லை, வனமல்லிகை, தாமரை.
மௌலவை - தாய், பெற்றவள்.
மௌளனம் - மோளம், மேளம். [மௌனி.
மௌனசாமி - பேசா விரத முடையார்,
மௌனம் - மோனம், பேசாமை.
மௌனியர் - முனிவர், தபசிகள், ஞானிகள்.
மௌனேயம் - கந்தர்வகண விசேஷம்.
மௌஸ் - மௌசு, மோஸு, ஆசை.

யக

யக - ஓர் உயிர்மெய்யெழுத்து, ஓர் இறந்த காலவிடை நிலை (உ-ம்) போயது.

யக்கதரு - ஆலமரம், ஆல், இயக்கர்தரு.
யக்கராசன் - (இயக்கர் அரசன்) குபேரன்.
யக்கராத்திரி - கார்த்திகா பூரணை. [யர்.
யக்கர்-இயக்கர், யகூர், யட்சர், தேவஊழி
யக்கர் } காசிபன் சுரசையிடத்துப் பெற்ற
யகூர் } புத்திரர், இவர் குபேரன் முத லானோர்,இவர்தேவசபையில்யாழ்வாசிப்

பவர், யக்கர், கிந்நரர், கந்தருவர் என்பவர் தேவருக்குப் பிறந்தமையால் தேவயோனிகள் எனப்படுவர். [யட்சராஜன்.

யக்கர்பிரான் - குபேரன், இயக்கர்பிரான், யக்கவரசன் / யக்கராசன், யக்ஷர்களின் அரசன்.

யக்கியகோபன்-இவன் யஜ்ஞகோபன் எனவும் படுவன், இவன் மாலியவந்தன் புத்திரன்.

யக்கியக்கிரன்-யஜ்ஞமூர்த்தியாகியவிஷ்ணு மூர்த்தியால் கொல்லப்பட்டவன்.

யக்கியசாலை-யாகசாலை, வேள்விசாலை. [தம்.

யக்கியசூத்திரம்-முப்புரிநூல், யக்ஞோபவீ

யக்கியசேடம் - யாகமிச்சில், யாகசேடம்.

யக்கியதத்தன் - இவன் ஒரு பிராமணபுத்திரன், தசரதன் வேட்டையாடச் சென்ற போது இவன் தன் கமண்டலத்திலே குனிந்து நீர்மொள்ளுகையில், இவனை ஒரு யானையென்றுநினைத்து, தூரத்திலிருந்து அம்பெய்து கொன்றனன், அதுகண்ட அந்த வேதியச் சிறுவனுடைய தந்தை தாயார் தசரதனை 'யாம் இச்சிறுவனது சோகத்தால் உயிர் விடுகிறோம்; நீயும் எம்மைப்போலவே புத்திர சோகத்தால் உயிர் நீங்கக் கடவை' யென்று சபித்து விட்டு உயிர் துறந்தனர். இதனுற்றான் இராமன் பிரிவால் தசரதன் உயிர்நீத்தான் என்று கூறுப.

யக்கியநாமிகை - மக நட்சத்திரம், மகநாள்.

யக்கியபசு-குதிரை, யாகத்திற்பலியிடும் பசு.

யக்கியபுருஷன்-விட்டுணு, அக்கினி. [டன்

யக்கியமூர்த்தி-அக்கினிதேவன், யக்கியபுரு

யக்கியம் - துவாபரயுகம், தேவதாப் பிரீதியாகச் செய்யப்படும் அக்கிகார்யம்; இது, இருபத்தொரு வகைப்படும், (தொகையிற்காண்க)

யக்கியம் / யஞ்ஞன் } ருசிபிரஜாபதிக்குச் சுவாயம்புவ மநுபுத்திரியினிடத்திற் பிறந்த புத்திரன் இவனுடையதங்கையைத்தக்ஷிணன் மணம் புரிந்தான், இந்தயக்கியனே விஷ்ணு அவதாரமென்பாரு முளர்.

யக்கியம்ஐந்து - யாகம்ஐந்து, பஞ்சயாகம்.

யக்கியயோக்கியம்-அத்திமரம், அதம், மசகி.

யக்கியவராகம்-(வராஹாவதாரங் காண்க.)

யக்கியஸ்தானம் - யாகம் பண்ணுமிடம்.

யக்கியாரி - சிவன், சடாதரன். [வீதம்.

யக்கியோபவீதம்-முப்புரிநூல், யஞ்ஞோப

யக்கேசன் - குபேரன், திக்கிழவன்.

யங்கூரா - அதிவிடையம், அதிவிடயம்.

யங்கோரம் - நெல்லி, ஆமலகம்.

யசசு-புகழ், பெருமை, கௌரவம், உயர்வு.

யசசுவி - புகழாளன், கீர்த்திமான்.

யசந்தன் - யாககர்த்தா, யாகாதிபன்.

யசமானன் } தலைவன், யாககுரு, ஓதா,
யசமான் } யாகஞ் செய்வோர்.

யசனம் - யாகஞ்செய்தல், பலியிடுதல்.

யசஸ்வி-புகழாளன், கீர்த்திமான். [காரன்.

யசாகன் - யாசிப்பவன், யாசகன், பிச்சைக்

யசுசு } இரண்டாம் வேதம், யசுர்வேதம்.
யசுரு }

யசோதரகாவியம் - ஓர் சைன காவியம்.

யசோதை-நந்தன் மனைவி, இவளே க்ருஷ்ணனை வளர்த்த தாய்.

யசோவிதி - ஈசாபுடபேதம். [தம்.

யச்சு - இரண்டாம்வேதம், புகழ், யசுர்வே

யஜ்ஞகோபன் } மாலிய வந்தன் புத்தி
யக்ஞியகோபன் } ரன். [காரியம்.

யஞ்ஞம்-யகயம், யாகம், பலியிடுகை, அக்னி

யஞ்ஞவராகம்-திருமாலின் வராகாவதாரம்.

யஞ்ஞோபவீதம் - பூணல், பூணூல்.

யட்சம் - நாய் மந்திரம்.

யட்சர் - ஓர் சாதியார், இயக்கர், தானவர்.

யட்சவாசம் - சூல், யக்கர்வசிக்குமிடம்.

யட்சி - குபேரன் மனைவி, யட்சணி.

யட்சிணி-இயக்கி, குபேரன் மனைவி, துர்க்கைக்குப் பணிசெய்யும் தேவதை.

யட்டி - ஊன்றுகோல் தண்டு, மாலை, முத்துத் தாழ்வடம், அதிமதுரம். [வாறு.

யதா - ஏற்ற, சரியான, தகுதியான, எவ

யதாகத்தவ்வியம் - சருவ கத்தவ்வியம்.

யதாகற்பம்-கற்பனைப்படி, நிருமாணப்படி.

யதாகாரம் - உண்டியொறுப்பு.

யதாகாலம்-காலத்துக்கேற்க, சமயம்போல

யதாசத்தி - இயன்றமாத்திரம், இயன்ற அளவு.

யதாஸ்தானம் - முன்னிருந்தவிடம்.

யதாஸ்திசம் - அடியாரூய்.

யதாஸ்திதி - யதாபூருவி, முன்னிருந்தபடி.

யதாஸ்து - முற்றுமப்படியாக, யதாப்பிரகாரம்.

யதாபூருவம் - தொன்று தொட்டது.

யதாப்பிரகாரம்-யதாபூர்வம், வழக்கப்படி.

யதார்த்தம் - சரிமுறை, உண்மை. [வன்.

யதார்த்தவாதி - உண்மை பேசுவோன், நடு

யதி-அடக்கம், இளைப்பாற்றி, ஒன்றிப்பு, ஓரிருடி, கைம்பெண், தாளப்பிரமாணம்பத்தினொன்று, முனி, மோனை, வாசகத்திற்றரிக்குமிடம், (1) பிரமனது மானஸபுத்திர

ருள் ஒருவன், (2) நகுடனுடையமூத்தமகன், யயாதிக்குத் தமையன், இவன் ராஜ்யத்தை விட்டுத் துறவியாய்ப்போனவன்.

யதிகிரி-திருநாராயணபுரம். [திரி.

யதிபதி-மேல்கோட்டை, யதுகிரி, யாவாத்

யதிபாத்திரம் - பிச்சைப்பாத்திரம்.

யதியாசாரம் - ஜைனர்கள் ஒழுக்கத்தை விதிக்குநூல்.

யதிராஜர்-ராமாநுஜர், (காண்க.)

யதீந்திரசரணம்-கூரத்தாழ்வார்,இவர்இராமானுநுஜரின் சிஷ்யர்.

யதீந்திரப்பிரவணப்பிரபாவம்- பிள்ளைலோகாசிரிய ஜீயரியற்றிய, மணவாளமாமுனி சரித்திரம் கூறும் நூல்.

யதீந்திரப்பிரவணர் - மணவாளமாமுனி.

யதீந்திரன் - யதிராஜன், இராமானுஜன்.

யது-சந்திரகுலத்து ஓரரசன். இவன் யயாதிக்குத்தேவயானிவயிற்றிற்பிறந்தபுத்திரன், இவன் வமிசத்தார் யாதவர்.

யதுகிரி - மைசூரையடுத்த ப்ரதேசத்துள்ள வொரு சிறந்த விஷ்ணுஸ்தலம், இதற்கு யாதவகிரி, யாதவாத்திரி, திருநாராயணபுரம், மேலைக்கோட்டை முதலிய பல பெயர்களால் வழங்குவர், திருவநந்தாழ்வானது அவதாரத்தலம் இது, ஸ்ரீமத் ராமாநுஜர் இக்கோயிலை சகல சாதியாருக்கும் பொதுவானதாகச் செய்த காலந்தொட்டு இதற்கு யதிகிரி, எதிகிரி யென்னும் பெயர்களும் வழங்குவனவாயின, இத்திருமலைமேல் விளங்கும் விமானத்துக்கு ஆநந்தமயவிமாநம்என்று பெயர். இம்மூல விக்ரஹத்திற்குத் திருநாராயணப் பெருமாள் என்றும், உத்ஸவ விக்ரஹத்திற்கு ஸம்பத்குமார் என்றும், செல்வப்பிள்ளை யென்றும், தேவிமார்க்கு சீதேவிபூதேவியென்றும் பெயர். இத்தலத்தில்,கல்யாணி, வைகுண்ட கங்கை, நாராயணஹ்ரதம், மைத்ரேயகுண்டம்,வேதபுஷ்கரிணி,தர்ப்பதீர்த்தம், கமலதீர்த்தம், பலாசதீர்த்தம், யாதவிதீர்த்தம்என்றுசொல்லப்படுகிறஒன்பதுபுண்ய தீர்த்தங்களுண்டு, மலையின்கீழுள்ள திருக்கல்யாணிதீர்த்தக்கரையில் ஞாநப்பிராஞகிய ஸ்ரீவராஹப் பெருமாள் எழுந்தருளியிருக்கின்றனர், இந்த ப்ரதேசத்திற்கு வராஹ ஸ்தாநம் என்றும் வைகுண்ட வர்த்தநக்ஷேத்ரம்என்றும் பெயர். பெரிய திருவடி சுவேதத்வீபத்தினின்றும் திருமண்கொணர்ந்துஇங்குப்ரதிஷ்டை பண்ணஅது பெருமான் திருவருளால் நாளுக்குநாள்பெருகி வருகின்றது. இந்த ஸ்தல புராணமாகிய யாதாகிரி மாஹாத்மியத்தில் இதன் பெருமைசொல்லப்பட்டிருக்கின்றது. மேல் கோட்டை (காண்க.)

யதுதானன் } கிருட்டிணன், கோபாலன்,
யதுநாதன் } கண்ணன்.

யதெந்து - என்ன, யார். [கை செய்தல்.

யதேச்சாதிகாரம்-தன்னிஷ்டப்படி ஆளு

யதேச்சை - இட்டம், விருப்பப்படி.

யதோந்திரியம் - கூற்புவழுவாமை.

யதேஷ்டமாய்-யதேச்சையாய், மிகுதியாய்.

யதேஷ்டம் - சுயேச்சை, மிகுதி, நிரம்ப.

யதோத்தேசபக்கம் - இருந்தவிடத்திருந்து கொண்டு காரியங்களை நடைபெறச் செய்தல்.

யத்தனம் - எத்தனம், முயற்சி.

யத்திரகிரகம் - சூத்திரம், செக்கு. [ற்சி.

யத்தினம் - யத்தனம், பிரயத்தினம், முய

யந்திரக்கல் - எந்திரக்கல், திருகுகல்.

யந்திரசாத்திரம்-இயந்திரமடைக்கும் வித்தை, இயந்திரம் இயக்கும்வித்தை.

யந்திரதாபனம் - சக்கரதாபனம், யந்திரஸ்தலம்.

யந்திரம்-செக்கு, திரிகை, தீக்கடைகோல், தேர், பஞ்சரைக்குஞ்சூத்திரம், பொறி, மந்திரசக்கிரம்.

யந்திரலோகம்-பயறு,முதிரை. [ர்ப்பாகன்.

யந்திரு-ஆளுவோன், குதிரைப்பாகன், தே

யமகண்டம்-எமகண்டம், தினத்தில் அசுபமான வேளையாகக் கருதும் நேரம்.

யமகண்டன்-வலியோன்,வல்லவன். [காரி.

யமகண்டி - மூர்க்கமுடையாள், பிடிவாதக்

யமகம் - வந்தசொல்லே வருதல்.

யமகவந்தாதி-யமகத்தோடுகூடியவந்தாதி.

யமகாதகன் - மிகப்பொல்லாதவன், சமர்த்தன்.

யமகாளிந்தி-சரயுநதி, அயோத்தியை யடுத்துள்ளநதி. [ன், யமபடன்.

யமகிங்கரன் - நமனேவற்காரன், காலதூத

யமகீடம் - புழுவகையி லொன்று.

யமசபம் - இயமன்சபை,நமனவை.

யமதக்கினி-சமதக்கினிமுனிவர், யமதங்கி.

யமதர்மராஜன்-நடுநிலைகுன்றுதவன், எமன்

யமதூதன்-பாம்பி னச்சுப்பற்களிலொன்று. யமகிங்கரன், காலதூதன்.

யமதூதி - பாம்பி னச்சுப்பற்களி லொன்று.

யமதேவதை - பரணிநட்சத்திரம், பரணி நாள்.

யமத்ருமம் - இலவமரம், இலவு.
யமபகினி-யமுனைநதி, யமி, சூரியன்புதல்வி.
யமபடன் - யமகிங்கரன், யமதூதன்.
யமபட்டணம் - யமபுரம், சம்யமனி.
யமபாசம் - காலபாசம்,
யமபுரம் - யமபட்டணம், சம்யமனி.
யமப்ரியம் - ஆலமரம், அத்திமரம், ஆல்.
யமம் - அடக்கம், இயமம், காக்கை, சனி, தரும நூல் பதினெட்டி னொன்று, தவம், திருவிழா, பஞ்சகிருத்தியத் தொன்று.
யமாதம் - எருமைக்கடா, யமவாகனம்.
யமாஜம் - யமுனாநதி, கங்கையின் உபநதி.
யமாஜன் - யமதேவன், யமன், மறலி.
யமலோகம் - யமனுடைய உலகம், நரகம்.
யமவாகனம்-யமாதம்,எருமைக்கடா. [டம்.
யமவாசம் - சிறுகாய்ஞ்சொறி,யவாசகம்,யா
யமவாதனை - யமவேதனை,பிராணசங்கடம்.
யமவாதை-மரணவத்தை, பிராணசங்கடம்.
யமவிரதம் - இயமானுட்டிப்பு, பட்சபாத மின்றி அரசுமுறை நடத்தல்.
யமவிரோதி } சிவன், காலசம்மார மூர்த்தி.
யமவைரி }
யமனம் - இரட்டை, சேர்ந்தவை.
யமற்கேளம் - கடுக்காய். [சீலை.
யமனிகை-சீலைப்படல், யவனிகை, திரைச்
யமன் - நமன், இவன் காசிபன் புதல்வனு கிய விவசுவதன் என்னும் சூரியன் புத் திரன், இவன் அஷ்டதிக்குப் பாலகர்க ளுள்ளும் ஒருவன், பிதிர்லோகாதிபன், இவனிருக்குந் திசை தென்திசை, இவன் மனைவி சாமளாதேவி, பட்டணம் சம்ய மனி, வாகனம் மகிஷம், ஆயுதம் தண்டம், தருமன் என்றும் பெயர் பெற்றவன், யமன் என்பதற்குக் கூற்றுவன் என்பது பதப்பொருள்,கூறுசெய்வோன் என்பது கருத்து, இவனது தொழில், உயிர்களை ஆயுள்முடிவில் உடலினின்றும் பிரித்துக் கொண்டுபோதல், மார்க்கண்டேயர் சிவ பெருமானுக்கு உத்தமத் தொண்டரென் றறிந்தும் அவர்மீதும் பாசந்தொட்டு அவரைப் பற்றியபோது சிவபெருமான் அவனுக்கு முன்னே தோன்றித் தடுத்த போது யமன் அஞ்சாமல் தனது ஆணை யைச்செலுத்த யத்தனித்து அவராற் கொல்லப்பட்டுப் பின்னர் உயிர் பெற்ரு னென்றல் அவனது நடுவு நிலைமை பெரி தும் வியக்கற்பாற்று.
யமாந்தகன் - சிவன், யமாரி, யமவிரோதி.
யமாரி - சிவன், காலகாலன், காலவைரி.
யமி - ஓர் முனிவன், யமபகினி.
யமீ - யமுனாநதி, யமபகினி, காளிந்தி.
யமுனைகல்யாணி - இராக வகையிலொன்று.
யமுனைசனகன்-சூரியன், தினமானன். [ன்.
யமுனைதீரவிஹாரன் - கிருஷ்ணன், கண்ண
யமுனைநதி - சூரியன்புதல்வி, யமனுக்குச் சகோதரி, இந்த நதி காளிந்தமலையில் உற்பத்தியாதலால் இதற்குக் காளிந்தி என்னும் பெயருண்டாயிற்று. [மறலி.
யமுனைப்பிராதிரு-யமன், காலன்,அந்தகன்,
யமுனை - சத்தநதிகளிலொன்று, காளிந்தி.
யமுனைத்துறைவர் - கண்ணபிரான். ஆள வந்தாரென்னும் யமுனைத் துறைவன் பன்னிரண்டு வயது நிரம்பாச் சிறுவராக இருக்குங் காலத்திலேயே பாண்டியன் சம்ஸ்தான வித்வானாகிய (வித்வ சனகோ லாகலனை) மூன்று அற்ப வினாக்களால் வென்று,பாண்டியன் சங்கேதப்படி அவ னது பாதி நாட்டைப் பெற்று அரசாண் டவர், "பாண்டியன் தாய் புத்திரவதி யல்லள்" என்றும், "தர்மவானாகிய பாண்டியன் தர்மவான் அல்லன்" என் றும், "பதிவிரதையாகிய ராஜன்பத்நி பதிவிரதை யல்லள்" என்றும் ஏதுக் கூறி ஸ்தாபித்தல் வேண்டுமென்று கேட் டகேள்விகளுக்கு பண்டிதர் விடை சொல்லமாட்டாமல் மௌனமாயிருக்க, பாண்டியன் யமுனைத்துறைவரை நோக் கி, நீரே இந்தக் கேள்விகளுக்குச் சரியான விடைசொல்லி நிர்வகிப்பீராயின் என் நாட்டிற்பாதி தருவேனென்று சொல்லு தலும், யமுனைத்துறைவர் அரசன்நோக் கி "ஒருமரந் தோப்பல்ல, ஒரு பிள்ளை யும் பிள்ளையல்ல என்னும் பழமொழி யின் படியே ஏகபுத்திரனைப் பெற்றவள் மலடி என்று சொல்லப்படுவாள். இது முதல் வினாவுக்கு விடையென்றும், குடிகள் செய்யும் பாவம் அரசனைச்சே ரும் என்னும் விதியால் அரசன் தருமவா னல்லன், இது இரண்டாம் வினாவுக்கு விடையென்றும், மணப்பந்தரிலே அக்நி முதலிய தேவர்களுக்குச் சமர்ப்பிக்கப் பட்டுப் பிறகு கணவன்கையில் ஒப்பிக் கப்பட்ட வளாதலால் பதிவிரதையல்ல இது மூன்றாம் வினாவுக்கு விடை"யென் றும் கூற, அரசன் அவருடைய நுண்ண றிவிற்கு வியந்து அவரை மார்புறத் தழு விக்கொண்டு தன் பாதி நாட்டை அவர் அரசாளக் கொடுத்தான்.

இவர் சிலகாள் அரசுசெய்து வருகை யில் மணக்கால் நம்பியென்னும் வைஷ் ணவாச்சாரியர் இவரிடத்தில் வந்து நீர் எம்மோடு தனித்து வருவீராயின் உமது பாட்டனார் வைத்துப்போன புதையலைக் காட்டுவேனென்று கூறி இவரையழைத் துப் போய்த் திருவரங்கத்திற் கோயில் கொண்டிருக்கும் அழியா நி தி யா கி ய திருமாலைக்காட்ட, பூர்வ ஜன்ம வாசனை யால் அந்தச்சந்நிதியைக் யடைந்தமாத் திரத்தில் இவர் துறவுடையராகி, விஷ் ணு வழிபாடே பரமசாம்ராஜ்யம் எனக் கொண்டு அன்றுமுதல் அதனையே பற்றி நின்றார். இவர் எழுநூற்றறுபது வருடங் களுக்கு முன்னிருந்தவர். [வன்.

யமமானன்-யசமானன், யாககர்த்தா. தலை

யயாதி - நகுஷன் புத்திரன்; குருகுலத்தர சர்களி லொருவன், இவன் முன்னே சுக்கிரன் புதல்வியாகிய தேவயானையை யும், பின்னர் ருஷபர்வன் புதல்வியாகிய சர்மிஷ்டையையும் மணம் புரிந்தான், தேவயானையிடத்து, யது, துர்வசன் என்னும் இரண்டு புத்திரர்களும்,சர்மிஷ் டை யிடத்தில் துருகியன், அணு, பூரு என்று மூன்று புதல்வர்களும் பிறந்தார் கள். [மேதிகம்.

யு - அசுவமேதக்குதிரை, குதிரை, அசுவ

யவகம் - ஓர்வகைத்தானியம், யவம். [லன்.

யவகாரி - கிருட்டினன், யவனரி, கோபா

யவசம்-வெடியுப்பு, யவட்சாரம், யவசூகம்.

யவசி - கழுதைப்பாலை; யவதி.

யவசூகம்-யவசம், யவட்சாரம், யவநாலசம்.

யவட்சாரம் - வெடியுப்பு, யவசம்.

யவதி - கழுதைப்பாலை, யவசி.

யவநம் - பாரதவர்ஷத்துக்கு மேற்கேயுள்ள தேசம், க்ரேக்கதேசம், அத்தேசத்தார் யவநர் எனப்படுவர். ஹூணர்களும், பா ரசீகர்களும் பூர்வகாலத்தில் யவநரென் றே சொல்லப்பட்டார்கள். யவநர் வெண் ணிறமுடையவரும் கருநிறமுடையவரும் என்றிருவகையினர். கருநிற முடையவர் காலயவநர் என்பர் மற்றவர்களே உவநர் என்பர் (பாணினி என்பதனுட் காண்க.)

யவநாசலம் } வெடியுப்பு, எவட்சாரம், யவ
யவலாசம் } சம்.

யவபலம் - மூங்கில், வேய், கழை.

யவமத்தியவதி - மத்திய அடி பெரிதா யமைந்த பாட்டுவகை. [வகை.

யவம்-நெல்லு, வாற்கோதுமை, யவதானிய

யவனப்பிரியம்-மிளகு, மிரியல், மரீசி. [று.

யவனம்-சீக்கிரம்,தேயமைம்பத்தாறிலொன்

யவனர் - கம்மாளர், சித்திரக்காரர், சோன கர்,மிலேச்சர்,தோற்கருவி வாசிப்போர்.

யவனசார்யன் - சோதிட சாத்திர கர்த்தா வாகிய ஓர் முனி. [கோபாலன்.

யவனரி-கிருட்டிணன், யவகாரி, கண்ணன்,

யவனலசம் - வெடியுப்பு,வெடிஉப்பு. [டல்.

யவனிகை-திரைச்சீலை, யமனிகை, சீலைப்ப

யவன் - யாவன், எவன்.

யவாகு - கஞ்சி, காடி, மோழை.

யவாசகம் - சிறுகாஞ்சொரி, யமவாசகம்.

யவானி } ஓமம், அசமோதம்.
யவானிகை }

யவீநரன் - பூரு வமிசத்துத் துமீடன் புத் திரன், முற்கலன் தம்பி.

யவை - வாற்கோதுமை, ஒன்றின் $\frac{1}{8}$ அங் குல அளவை, துவரை, நெல்வகை.

யவ்வனம் - யௌவனம், இளமை, பாலியம்.

யஜமான்-யசமானன், எஜமான், முதல்வன்.

யக்ஷன் - இயக்கன், யக்கன், யட்சன்.

யா

யா - ஓர் உயிர்மெய்யெழுத்து, அஃறி னைப் படர்க்கைப் பன்மை வினை, அசைச் சொல் (உ-ம்) யாபன்னிருவர், ஓர் மரம், சந்தேகம், இல்லை, அகலம். [ம குண்டம்.

யாககுண்டம்-யாகக்குழி, யாகவேதிகை, ஓ

யாகசாலை - வேள்விச்சாலை, யாக நிலை.

யாகசேனன் - ஓரரசன், பாஞ்சாலன், துரு பத ராஜன், த்ரௌபதி தந்தை.

யாகத்தம்பம்-வேள்வித்தூண், யூபத்தம்பம்.

யாகத்திரவியம்-யாகப்பொருள்,ஓமசமித்து

யாகநிலை - யாகசாலை, வேள்விச்சாலை.

யாகபதி - ஓரரசன், இவன் திருமால் பதி னைந்தவராத்தொருவன், இந்திரன், யா கம் செய்வோன், யாககர்த்தா.

யாகபத்தினி } தூரோபதை, யாகஞ் செய்
யாகபன்னி } வோன் மனைவி.

யாகபாகம் } அவிர்பாகம், யாகபலி,
யாகபோசனம் } அவிசு. [முதல் மனைவி

யாகபாரி - யாகதட்சிணை, யாகாதிகாரியின்

யாகபோசனர்-வானோர். [றிய சந்திரன்.

யாகப்பிறையான்-தக்கன் யாகத்திற் றோன்

யாகமண்டபம்-யாகசாலை, வேள்வித்துறை.

யாகம் - பலி, வேள்வி, சித்து, கிருது.

யாகம்ஐந்து - (தொகையிற் காண்க.)

யாகவுப்பு - பூரணதி யுப்பு. [தீவு.
யாகுவம்-சாவகத் தீவு, சாவாத்தீவு, ஜாவா
யாக்கணம் } யாங்ஙனம், எங்ஙனம், எவ்வி
யாங்கண் } டம்.
யாக்கியவற்கியம் - அட்டாதச தருமசாத்தி ரத்தொன்று, இதற்கு விஜ்ஞாநேஸ்வர யோகிகள் வியாக்கியானம் செய்துள் ளார். உபநிடத முப்பத்திரண்டிலொன்று
யாக்குதல்-கட்டுதல், யாத்தல், பிணித்தல்.
யாக்கை-உடல், கட்டு, கயிறு.[யிற்காண்க.)
யாக்கைகுற்றம்-உடற்குற்றம்(18)(தொகை
யாங்கணும் - எங்கும், எவ்விடத்தும்.
யாங்கர் - அரக்கர், இராக்கதர், அசுரர்.
யாங்கு-இடத்தின் ஐயுற்றசொல், எவ்வாறு.
யாங்கும்-எவ்விடத்தும், யாங்கணும்.
யாங்ஙனம் - எங்ஙனம், யாங்கு, எவ்விடம்.
யாசகபந்து - கர்ணன், கன்னன், கொடை யாளி.
யாசகம் - இரப்பு, இராசயானை, மதயானை.
யாசகர் - இரப்போர், பிச்சைக்காரர், இரவலர். [வன்.
யாசகன் - இரப்போன், யாகஞ்செய்விப்ப
யாசமாநன்-யாசகன், பிச்சைக்காரர்.
யாசனம் - பூசாபலி நடத்தல், வெடித்தல்.
யாசனை-பிச்சை, பிரார்த்தனை, வேண்டல்.
யாசன்யகாள் - தேவபூசை செய்வோர்.
யாசிதம் - இரப்புத் தொழில், யாதிதகம்.
யாசித்தல் - இரத்தல், பிச்சை எடுத்தல்.
யாஞ்ஞவல்கியம் - யாக்கியவற்கியம்.
யாஜன்-ஒரு முனிவன், இவரநுக்ரஹத்தால் துருபதராஜன் அக்நி குண்டத்திலே த்ருஷ்டத்யும்நன் என்னும் புத்திரனையும் க்ருஷ்ணை யென்னும் புத்திரியையும் பெற்றான்.
யாஜ்ஞவல்க்யன்-யாக்கியவற்கியன், இவர் பிரமநாதன்_புத்திரன், வைசம்பாயனர் சீடர், இவரே ஜனமேஜயருக்கு உபதேசித்தவர். வைசம்பாயனர் ஒரு நாள் தமது சகோதரி புத்திரனை இருளிலே கால் பிழைத்து மிதிக்க, அந்தப் புத்திரன் இறந்தான். அதனால் அவர்க்குப் பிரமகத்தி சேர்ந்தது. அதனை நீக்கும் பொருட்டுத் தமது சீடர்களை விரதங் காக்கும்படியே விஞர். யாஜ்ஞவல்க்யர், மற்றையோர் சரீரபல மில்லாதவரா யிருத்தலால் அதனைத் தாமே செய்வதாக வேண்டினர். அவர் தம் முறையை மறுத்தா ரென்று யாஜ்ஞவல்க்யரை முனிந்து என் வேதங்களை விடுத்துப் போகவென்றனர். அவர் பக்தி மிகுதியினால் சொன்னதை யறியாமல் முனிந்த வுமக்கு யான் சீடனையிருத்தலும் தகாதெனக் கூறி, அவரிடத்தோதிய யஜுர்வேத சாகைகளை யெல்லாம் கண்டத்தினின்றும் உதிரங்கக்கி விழும்படி யோதிவிட்டு, இந்த வேத சாகைகளை இனி ஒதமாட்டேன் என்று சொல்லிச் சூரியனை நோக்கித் தவஞ்செய்தார்.

சூரியன் குதிரை வடிவங் கொண்டு வெளிப்பட்டு வைசம்பாயநர்க்குத் தெரியாத பதினைந்து சாகைகளை அநுக்ரஹித்துப் போக யாஜ்ஞவல்கியர் அவற்றை யோதுவாராகி,தம் சீடரையு மோதுவித்தார். குதிரை வடிவோடு வந்து அநுக்ரஹித்தமையால் வாஜநேய சம்ஹிதையென்னும் பெயர் இந்தச் சாகைகளுக்குள தாயிற்று. (வாஜி-குதிரை.) முன்னே இவர் உமிழ்ந்த உதிரங்களைச் சஹபாடிகள் மாதுட சரீரத்தோடிருந் தும்பது தகாதென்று தித்திரி ரூபங்கொண்டு உண்டமையால் அந்தச் சாகைகளுக்குத் தைத்திரீய மென்னும் பெயர் உளதாயிற்று. (தித்திரி-செச்சிலிக்குருவி.)
யாஞ்ஞவற்கியம்-யாக்கியவற்கியம். [கம்.
யாடம்-சிறுகாஞ்சொறி, யமவாசம், யவாச
யாடு-ஆடு, அஜம், தகர், மை, மறி. [ளமை.
யாணர்-அழகு, தச்சர், நன்மை, புதுமை, வ
யாணர்நகர்-வித்தியாதரர் நகரம்.
யாணன் - அழகுள்ளவன்.
யாண்டு-இடஜயச்சொல், எங்கு, எப்பொழுது, காலம், வருடம்.
யாண்டும் - எப்பொழுதும், எவ்விடத்தும்.
யாண்டை - இடஜயச்சொல், எவ்விடம்.
யாதசாம்பதி - வருணன், யாதோநாதன்.
யாதபதி-கடல், வருணன். [ட்டி, யாதவம்.
யாதம்-இயாதம்,பசுக்கூட்டம்,யானைத்தோ
யாதயாமம்-ஜீர்ணம், செரிமானம்.
யாதவநிகண்டு - ஒரு சம்ஸ்கிருத நிகண்டு.
யாதவப் பிரகாசர்-ஓர் விஷ்ணுபக்தர், இவருக்குக் கோவிந்தஜீயர் என்றும் பெயர்.
யாதவம் - யாதம், யானைத் தோட்டி.
யாதவர்-யதுவமிசத்தார், இந்த வமிசம் பல்கிப் பல கிளைகளாகி அநேகமான ப்ரபல ராஜாக்களைத் தந்தது, யதுவினுடைய மூத்த குமாரனுகிய ஹைஸ்ரஜித் என்பவனுலே ஹைஹய வமிசமாயிற்று. அவர்களுக்கு ராஜதானி மாஹிஷ்மதி, அந்த வமிசத்திற்றானே கார்த்த வீரியார்ஜுநன் என்னும் ப்ரசித்தி பெற்ற அரசன்

தோன்றினன். அவன் சந்ததியிலே தாள ஜங்கர் தோன்றி விளங்கினர். யதுவினது இரண்டாம் புத்திரனுகிய குரோஷ்டுவுஷ வமிசத்திலே பிரசித்திபெற்றவர்கள் சசி பிந்து, சியாமகன், விதர்ப்பன் என்பவர். இவருள்ளே விதர்ப்பனுல் விதர்ப்பராஜ வமிச முண்டாயிற்று. விதர்ப்பன் மூன் றும் புத்திரனுலே சேதி வமிசம் வந்தது. இரண்டாம் புத்திரன் வமிசத்த னுகிய சாத்துவதனுல் போஜவமிசமும், அந்தக வமிசமும், வ்ருஷ்ணிவமிசமும் உண்டா யின, போஜவமிசத்துக்கு ராஜதானி தா ராபுரம், அந்த வமிசத்திலே க்ருஷ்ணர் அவதரித்தார்.

யாதவன் - கிருட்டிணன், இடையன்.

யாதவாத்ரி - திருநாராயணபுரம்.

யாதவி - உமை, குந்தி, யாதவகுல மகள்.

யாதனம் - தெப்பம், மரக்கலம், பாதி.

யாதனுசரீரம் - ஆக்கினை யனுபவிக்கத்தக்க சரீரம், புரியட்டகாயம். [வருத்துநோய்.

யாதனை - துன்பம், நரகத்திற் கொல்லாது

யாதாத்மியம் - உண்மையான நிலை.

யாதார்த்தியம்-சத்தியம், யதார்த்தம்.

யாதாஸ்து - நிருவாகக் குறிப்பு.

யாதி-ஆழியகருத்து, ஞாபகம், கவனம்.[ன்.

யாதிகன்-வழிச்செல்வோன், வழிப்போக்க

யாது-அஃறிணைபடர்க்கை யொருமைவினு, இராக்கதர்கள், பிசாசு, ஞாபகம்.

யாதுதானவர் - இராக்கதர், யாதுதானன்.

யாதும்-எதுவும், யாதொன்றும்.

யாதோ - ஐயச்சொல், வினுச்சொல்.

யாதோநாதன் - ஸ்முத்ரராஜன், யாதபதி.

யாதோநிவாசம் - நீர், ஜலம், அப்பு, உதகம்.

யாத்தல் - கட்டல், விட்டு நீங்காதிருத்தல்.

யாத்தார்-உற்றநண்பர். [லின் உட்பிரிவு.

யாத்திராகமம்-கிருஸ்தவமார்க்கப் பழைய நூ

யாத்திராகரணம் - பிரயாணம் புறப்படல், பொழுதுபோக்கு.

யாத்திராதானம்-யாத்திரை, உற்சவம் முத லியவைகள் இடையூறின்றி நடைபெறக் கொடுக்கும் தானம், மரண தருவாயிற் செய்யும் தானம். [தல்.

யாத்திராப்பிரசங்கம் - யாத்திரையி லிருத்

யாத்திரிகர் - ஸ்தலயாத்திரை செய்வோர்.

யாத்திரை - கடலேறிச் செல்லும் பயணம், கூத்து, திருவிழா, நடத்தல், பிரயாணம், வழக்கம். [தரிக்குங் காவி வத்திரம்.

யாத்திரைக்காவி-புண்ணிய ஸ்தல தரிசனர்

யாத்திரோற்சவம் - ஊருக்கு வெளியில் போய்நடத்தும்திருவிழா,வனபோசனம்.

யாத்து-ஐதப்பு. இணைப்பு, இசைப்பு, சேர்ப்பு.

யாபம் - மைதுனம், புணர்ச்சி, சையோகம்.

யாபனம் - இகழ்ந்து விடல், தாமதித்தல், பொழுது போக்குதல். [பம்.

யாபாரம் - வியாபாரம், வர்த்தகம், வாணி

யாப்பண்டம் - வியாபண்டம். [நூல்.

யாப்பதிகாரம் - செய்யுளிலக்கணம் கூறும்

யாப்பருங்கலக்காரிகை - பதினேராம் நூற் றுண்டில் அமுதசாகரர் கட்டளைக் கலித் துறையால் இயற்றிய செய்யுளிலக்கண நூல்.

யாப்பருங்கலம் - அமுதசாகரர் சூத்திரப்பா வால் இயற்றிய செய்யுளிலக்கண நூல்.

யாப்பறை - கற்பில்லாதவள்.

யாப்பியம்-எளிமை, பொழுதுபோக்கு, அற் பமானது, அற்பம், இழிவு.

யாப்பியாநம் - சிவிகை, தண்டிகை. [விதி.

யாப்பிலக்கணம் - செய்யுளியல் புணர்த்தும்

யாப்பு - கட்டு, செய்யுள், அன்பு, உறுதி, சூட்சி, பொருத்தம், பாம்பு.

யாப்புறவு-தள்ளத்தகாதநியதி, தகுதி.[தல்.

யாப்புறுத்தல்-வலியுறுத்தல், உறுதிப்படுத்

யாப்புறுப்பு எட்டு - (தொகையிற் காண்க.)

யாமகோடம் - சேவல், நாளிகை வட்டம்.

யாமக்கோட்டம் - அந்தப்புரம்.

யாமங்கொள்பவர் - நாழிகைக் கணக்கர்.

யாமசரிதன்-அரக்கன், நிசாசரன். [எல்லி.

யாமநீ - இராத்திரி, வகுஞ்சம், கங்குல்,

யாமநேமி-இந்திரன்,யாகபதி,வச்சிரபாணி.

யாமபதி - சந்திரன். [ரிகை கொட்டல்.

யாமபேரி-சாமந் தோறும் ஆரம்பத்தில் பே

யாமம்-இடக்கைமேளம், இராத்திரிசாமம், மாலைப்பொழுதின் பின்பத்து நாழிகை.

யாமர் - யக்ஷியன் மக்கள், இவர் பன்னிரு வர்,சுவாயம்புவ மநுகாலத்துத் தேவதை கள்.

யாமவதி-இராத்திரி, கங்குல், யாமிகை.

யாமளசாத்திரம் - சத்தி பூசையைக் குறித் துக் கூறும் நூல், யாமளம். [சாத்திரம்.

யாமளம் - இளமை, சோடு, பச்சை, யாமள

யாமளாக்கினி-மகாகாளியினுடையஅக்னி.

யாமளேந்திரர்- 'இந்திரகாளியம்' என்னும் இசைத்தமிழ்நூல் செய்தவர், இவர்கடை ச்சங்க காலத் திருந்தவர், சிலப்பதிகார வுரையாசிரியர் மேற்கோளாகக் கொண் ட நூல்களுள் இவர் நூலு மொன்று.

யாமளை - காளி, பார்வதி, உமாதேவியார்,

யாமி-இரா, கற்புடையாள், சகோதரி, தெற்கு, மகள், மருமகள், ஜாமி, இரண்டாவது தக்ஷபிரஜாபதி மகள், தருமன் மனைவி, துருக்க தேசத்துக்கு அதிஷ்டாக தேவதை.
யாமிகன் - நகர்சோதனைக்காரன்.
யாமிகை - இராத்திரி, யாமவதி, நிசாவதி.
யாமிசுக் கிழங்கு-காட்டுக்காய்வள்ளி.
யாமினி - ஒரு கலாசக்தி.
யாமிநீபதி-கர்ப்பூரம், சந்திரன்.
யாமியம் - அட்டாதச தரும சாத்திரத் தொன்று, சந்தனம், தெற்கு, யமம், யாமினியம்.
யாமியன் - அகத்தியன், பொதிகையான்.
யாமியாயனம் - தெக்கணயனம்.
யாமிரை - இராத்திரி, கங்குல். [மிருகம்.
யாமிருகம்-நாடகவகைகபத்திலொன்று, ஈகா
யாமினி - இராத்திரி, யாமிரை, கங்குல்.
யாமினியம் - தெற்கு, யாமியம், யாமிரை.
யாமினீபதி-சந்திரன், கர்ப்பூரம், யாமீரன்.
யாமீரன் - சந்திரன், இராக்கதர், திங்கள்.
யாமீரை - இராத்திரி, எல்லி, வகுஞ்சம்.
யாமுகம் - ஆலோசனை, மனக்கவலை.
யாமுனம் - அஞ்சனக்கல். [ணபக்தர்
யாமுனாசாரியர் - ஆளவந்தார் என்னும் வை
யாமுனேட்டகம் - ஈயம், வங்கம், தகரம்.
யாமை - இரா, தெற்கு, பசணி, ஆமை, செவ்வழியாழ்த்திறத்தொன்று.
யாம் - நாம், பன்மைபெயர், நாங்கள்.
யாயாவரர் - பிதிரர்கள், யாகதேவர்.
யாரி - எதிரி, கதவு. [அடங்கலும்.
யாரும் - எவரும், எல்லோரும், யாவரும்,
யார் - யாவர், நத்தைச்சூரி.
யார்பதம்-வாலுளுவை, வாலுழுவை. [யுப்பு.
யாலம் - ஆச்சாமரம், தாலவிருக்ஷம், வெடி
யாவகம் - காருளுந்து, செம்பஞ்சு.
யாவருகம்-வார்கோதுமையின்வைக்கோலை நீற்றிச்செய்த உப்பு. [நாள் முழுதும்.
யாவச்சீவம் - இச்சீவியத்துக்கடுத்தது,வாழ்
யாவண் - எவ்விடம், எங்ஙனம்.
யாவத்தீவு - யவத்தீவம், ஜாவாத்தீவு.
யாவத்தும் - எல்லாம், யாவற்றும்,சகலமும்.
யாவநாலம் - சோளம், யாவநாளம்.
யாவம் - அரக்கு, செம்பஞ்சு, யவத்தீவம்.
யாவரும் - எல்லாரும், யாரும்.
யாவர் - உயர்திணைப் படர்க்கை முப்பாற் பொது வினு. [பெண்பால் வினு.
யாவள்-உயர்திணைப்படர்க்கை யொருமைப்
யாவன் - உயர்திணைப்படர்க்கை யொருமை ஆண்பால் வினு.
யாவும் - எல்லாம், யாவையும். [வினு.
யாவை - அஃறிணைப்படர்க்கைப் பன்மை
யாவையும் - எல்லாவற்றையும், யாவும்.
யாழ - முன்னிலையசைச்சொல் (உ-ம்) செய்வினை மருங்கிற் செலவயர்ந்தியாழ.
யாழல் - கறையான், சிதல், செல்.
யாழினுமென்மொழியம்மை - திருவிளமரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்
யாழின்மென்மொழிநாயகி-திருமணஞ்சேரியில் எழுந்தருளியிருக்கும் தேவியார்.
யாழைப்பழித்தமொழியம்மை - திருமறைக்காட்டிலே கோயில்கொண்டிருக்கும் தேவி.
யாழோர்கூட்டம் - காந்தருவ கூட்டம்.
யாழோர்மணவினை - காந்தருவமணம்.
யாழ் - அசுபதி, ஆன்தை, திருவாதிரை, நீர்ச்சுழியின் றிரை,மிதுனவிராசி,வீணைவகை
யாழ்க்காரணம் - யாழ்வாசித்தற்குரிய செய்கை.
யாழ்தண்டு - வீணையின் தண்டு. [தேவி.
யாழ்தாரித்தாள் - பார்வதி தேவி, சரஸ்வதி
யாழ்நரம்பு - தந்திரி, தந்தி, நாண்.
யாழ்ப்பாணநாயனர்-இவர் ஓர்சோழகாட்டு இசைப்புலவரான அந்தகர், இவர் ஈழநாட்டு அரசனிடம் யாழ்ப்பாணநாட்டைபெற்றுத் தமிழரை அங்கு குடியேற்றினவர்.
யாழ்ப்பாணம் - இலங்கை நாட்டின் வடபாலுள்ளதும், தமிழர் குடி எறினதுமான நாடு.
யாழ்ப்பாணர் - ஓர் தேசத்தார், யாழ்வாசிப்போர். [வாசிக்கும் மாதிரி.
யாழ்ப்பாணி - யாழ்ப்பாணநாட்டான்,யாழ்
யாழ்வாசித்தல் - குசலவித்தை ஐந்தனுள் ஒன்று.
யாழ்முனி - நாரதர், யாழ்வல்லோன்.
யாழ்முரி - திருஞானசம்பந்தசுவாமிகனால் யாழிலடங்காத இசையுடையதாகப் பாடப்பட்ட பண்வகை, யாழ்முரிப்பண்.
யாழ்முரிநாதேசுவரர் - திருத்தருமபுரத்திலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர். [மெனு நானிலத்தி யாழ்.
யாழ்வகை - குறிஞ்சி நெய்தல் பாலை மருத
யாழ்வல்லோர்-கந்தருவர், வீணைவல்லோர்.
யாழ்வல்லோன் - நாரதன், யாழ்முனி.
யாழ்வாசித்தல்-குசலவித்தை ஐந்தில்ஒன்று
யாளி - சிங்கம், சிங்கவிராசி, மரக்கலப்பாய்க்கு நீர் வீசுங்கருவி, யானைபோன்ற முக

முண்டயமிருகம், சிம்ஹசத்துரு.
யாளியானை - பூட்கை, யாளி.
யாளிபூர்தி-சிம்மவாகனி, காளி, காடுகாள்.
யாளிவிரை - ஆளிவிதை. [திகை.
யாறு - ஆறு, நதி, உந்தி, தரங்கிணி, தீர்த்
யாற்றுநீர்ப்பொருள்கோள் - பொருள்கோ
ளைட்டினுன்று; அஃது: அடிதொறும்
யாற்று நீரொழுக்குப்போல நெறிப்பட்டு
அற்றற் றொழுகுவது. [செய்தல்.
யானஞ்செய்தல் - செல்லுதல், பிரயாணஞ்
யானபாத்திரம் - மரக்கலம், தோணி.
யானமுகம்-பண்டியினேர்க்கால். [வாகனம்
யானம் - அறைவீடு,கள்,சிவிகை,மரக்கலம்,
யானெனதெனல் - அகங்கார மமகாரங்கள்.
யானை - ஆனை; இஃது; இராசசின்னத்தொ
ன்று, நகரகாதம், பொங்கடி, வடதிசைப்
பாலன் குறியுமாம்.
யானைக்கட்டுந்தறி - ஆளாமை, வெளில்.
யானைக்கச்சை - யானை கழுத்தணி கயிறு,
அம்பாரி கட்டுங்கயிறு.
யானைக்கட்சேய் மாந்தரஞ்சேலிரும் பொ
றை - பாண்டியன் தலையாலங்கானத்துச்
செருவென்ற நெடுஞ்செழியனுற்கட்டுண்
டவன், இவனைப் பாடிய புலவர் குறுங்
கோழி யூர்கிழார். [விழும் புள்ளி.
யானைக்கண் - இலை காய் முதலிய வற்றில்
யானைக்கண்தாட்டுபத்திரி - ஓர்வகைப்
புடைவை. [டம்.
யானைக்கதி - நடனம், துரிதம், மந்தரம்,ஓட்
யானைக்கம்பம் - யானைக்கட்டுந்தறி.
யானைக்கருப்பம்-கஜகருப்பம். [த்திருப்பது.
யானைக்கவடு - விரோதத்தை மறைத்துரை
யானைக்கள்ளிமுளையான் - எழுமான்.
யானைக்கற்றாழை - காட்டுக்கற்றாழை.
யானைக்கன்று - யானைக்குட்டி, கயந்தலை,
போதகம்.
யானைக்காலை - யானைவிட்டுநிற்குமடைப்பு.
யானைக்கால் - மொத்திக்கால், ஆனைக்கால்.
யானைக்குப்பு - சதுரங்கம். [ரம்.
யானைக்குருடு-சக்கரவாகம்,கோகம்,சகோ
யானைக்கூடம் - யானைகட்டுமிடம்,ஆலயம்.
யானைக்கை-துதிக்கை,புழைக்கை. [குழி.
யானைக்கொப்பம் -யானைப்படுகுழி,பொய்க்
யானைக்கொம்பன் - ஆனைக்கொம்பன்.
யானைக்கொம்பு - ஆனைக்கொம்பு, யானைத்
தந்தம், நெற்பயிருக்கு வரும் ஓர் வியாதி.
யானைச்சங்கிலி - அந்துகம், சிறுங்கலம்.
யானைச்சப்பரம்-யானைமேற்றவிசு,அம்பாரி.
யானைச்சாலை - யானைக்கூடம், ஆலயம்.

யானைச்சீரகம்- கத்தரிநாயகம், பெருஞ்சீர
கம்.
யானைச்செவி - கன்னம், தாலம்,முறக்காது.
யானைச்செவிள் - கன்னம், கபோலம்.
யானைத்தடிச்சல் } புளிநடலை, புளிபுதுசை,
யானைத்தடிப்பு } புளிநறளை.
யானைத்தண்டம் - யானைசெல்புறவழி.[பல்.
யானைத்தந்தம் - யானைக்கொம்பு, யானைப்
யானைத்தம்பம் }
யானைத்தறி } யானை கட்டுந்தூண்.
யானைத்திசை - வடக்கு. [ஆனைத்திப்பிலி.
யானைத்திப்பிலி - பவ்வியை, மதகரிக்கணை,
யானைத்துதிக்கை - கை, சுண்டம்,தண்டம்,
தொண்டலம், தொண்டை.
யானைத்தூண் - ஆனை கட்டுந்தறி [ணம்.
யானைத்தோட்டி - குடாரி, அங்குசம், கோ
யானைநெருஞ்சி - பெருநெருஞ்சி.
யானைப்படுகுழி - பெரும்பள்ளம்,யானைபிடி
க்க அமைக்கும் பொய்க்குழி, பயம்பு.
யானைப்பட்டம் - முகபடாம், யானைமுக
வோடை.
யானைப்பிச்சான் - புளிநறளை, புளிபுதுசை.
யானைப்பிடரி - இயாதம். [பிணி.
யானைப்பசிநோய் - பஸ்மகவியாதி, பசிப்
யானைப்பாகன் - யானைப்பணிக்கன்.
யானைப்பெருங்காயம் - ஓர் பெருங்காயம்.
யானைமஞ்சள்-பெருமஞ்சள்,கத்தூரிமஞ்சள்
யானைமட்டம் - இளயானை.
யானைமணி - யானையின் இருமருங்கும்
தொங்கவிடும் மணி, கண்டை.
யானைமதம் - யானையின் இருகண், இரு
மூக்கு, இருகடை வாய், கோசமாகிய
ஏழிடங்களிலும் சிந்தும் நீர்.
யானைமத்தகம் - கும்பம்.
யானைமலை - ஆனைமலை.
யானைமறம்- அரசனது யானைப்போர் திறத்
தைக் கூறும் புறத்துறை.[ணர்,வாதுவர்.
யானைமாவுத்தன் - யானைப்பாகன், அதோர
யானைமீன் - ஓர்பெருமீன், திமிங்கலம்.
யானைமுகவற்கிளையோன் - வீரபத்திரன்,
முருகன்.
யானைமுகபடாம்-மந்தனம்,யானைப்பட்டம்.
யானைமுகவன் } விநாயகன்,கஜமுகன், ஐங்
யானைமுகன் } கரன்.
யானைமுதுகு - மஞ்சு.
யானைமுள் - குடைவேல் முள்.
யானைமேற்றவிசு - இலகடம், பலகாரம்.
யானையடி - சதுரங்க ஆட்டத்தில் யானை
செல்லும் வழி.

யானையடிக்கல் - தளம்பரப்பும் சதுரக்கல்.
யானையாளி-யாளி, யானையை யுடையவன்.
யானைவணக்கி - யானைத்தோட்டி.
யானைவால்-தாலவட்டம்,வாலதி. [வோன்.
யானைவேட்டுவன் - யானைவேட்டை யாடு
யானையுண்குருகு - சக்காவாகம்.[புரியான்.
யானையுரித்தோன்-சிவன், பிஞகபாணி, கரி
யானையேற்றம் - கசபரீட்சை.
யானையெலிமூங்குமீன்-திமிங்கலம். [டுக்கி.
யானைவணங்கி - யானைநெருஞ்சி, தேட்கொ
யானைவாழை - மோரீஸ்வாழை.
யானைவிச்சுளி - கழுகுவகையினொன்று.
யானைவீரன்-அரசருக்குத் துணைவரிலொரு வன்.
யான் - தன்மை, யொருமைப் பெயர்.
யான்மை - அகங்காரம், செவ்வாய்.

யு

யு - ஓர் உயிர்மெய்யெழுத்து.
யுகங்கள் - க்ரேதாயுகம்,திரேதாயுகம்,துவாபரயுகம், கலியுகம் என நான்கு, இந்நான்கும்கூடினது ஒரு சதுர்யுகம், இது சந்தி அமிசகாலங்களுள்படப் பன்னீராயிரம் தேவ வருடங்கொண்டது.கிருதயுகம்-17 28,000 வருடங்கொண்டது, திரேதாயுகம் - 92,96,000 வருடங்கொண்டது, துவாபரயுகம் - 8,64,000வருடங்கொண்டது, கலியுகம் - 4,32,000 வருடங் கொண்டது.
யுகசந்தி - க்ருதயுகத்துக்கு தேவவருடம் எண்ணூறும்மற்றையுகங்களுக்குத் தனித் தனியே இருநூறுமாம். [நடை.
யுகதருமம் - யுக பேதத்தினு லுண்டாகும்
யுகந்தரம் - ஓர்மலை,தேயமைம்பத்தாறினொன்று,தேர்முதலியவற்றைப்பிணிக்குந்தறி.
யுகபத்திரம் - காட்டாத்தி, யுகவத்திரம்.
யுகபத்ரகம் } கோவிதாரமரம்,யுகவாதிரம்,
யுகபத்ரம் } யுகவத்திரம். [டிபத்ரம்.
யுகபரிமை - அசோகமரத்தின்இலை, பிண்
யுகப்பிரளயம் - யுகாந்தம்,யுகாந்தவெள்ளம்.
யுகமுடிவு - உலகமுடிவு, ஊழிக்காலம்.
யுகம் - இரண்டு,இருபொருள்,ஓர்காலத்தளவு,நாலுமுழங்கொண்டது,ரதத்தடி, பூமி.
யுகவத்திரகம் - காட்டாத்தி, யுகபத்திரம்.
யுகளமந்த்ரம் - லக்ஷ்மீநாராயணரி மந்த்ரங்கள்.
யுகளம்) இரண்டு, இரண்டுஎண், இருபொ
யுகளி } ருள். [யுகத்தின்தொடக்கம்.
யுகாதி - அருகன், கடவுள், வருஷாரம்பம்,
யுகாதிப்பண்டிகை - யுகாதியைக் குறித்துக் கொண்டாடும் பண்டிகை. [ளயம்.
யுகாந்தம் - உலகாந்தம்,யுகமுடிவு, யுகப்பிர
யுகாந்தவெள்வம் - யுகப்பிரளயம்.
யுகாந்தாக்கினி - ஊழித்தீ, காலாக்கினி.
யுக்தம் - தகுதி, சமயம், சண்டை.
யுக்தாயுக்தம் -யுத்தாயுத்தம், சமயாசமயம்.
யுக்தி - பொருத்தம், கூரியவறிவு, உபாயம்.
யுக்மபத்ரிகை-அசோகமரம்,யுகபத்திரிகை.
யுக்மம் - இரண்டு, யுகளம், யுகளி.
யுஞ்சானன் - யோகாப்பியாசம்செய்வோன்.
யுதகம் - இரண்டு, ஐயம், சீலைத்தொங்கல், சம்பந்தம், நன்கொடை, ஈகை.
யுதாஜித் - யதுவமிசத்துவ்ருஷ்ணியின் இரண்டாம் புத்திரன், இவன் புத்திரர் சினி, அநமித்ரன் என இருவர், (2) கேகயதேசாதிபதி, இவன் தசரதன் மனைவியாகிய கைகேசிக்குச் சகோதரன், இவன் ராஜ்ஞி தாரி கிரிவிரஜம்.
யுதிட்டிரன் - தர்மநந்தனன், குருவமிசத்துப் பாண்டுமூத்தமகனுகிய தருமராஜன்,யுதிஷ்டிரன் என்பதற்குக்கலங்காமல்யுத்தஞ் செய்வோன் என்பது பொருள். இவன் பொறுமைக்கு இலக்கியமாயுள்ளவன்.
யுத்தகளம் -போர்க்களம்,அமர்க்களம்,யுத்தரங்கம், ரணரங்கம். [யிடல்.
யுத்தங்கலத்தல் - போர்செய்தல், சண்டை
யுத்தசன்னத்தம் - யுத்தசன்னகம்.
யுத்தசன்னத்தன்-போர்க்காயத்தமானேன்.
யுத்தசன்னகம் - போர்க்குஆயத்தமாகுதல்.
யுத்தசன்னியாசம் - சபதத்தினுல் போர்த் தொழிலை விடல். [தூசி.
யுத்தசாரம் - குதிரை, பாடலம், கந்துகம்,
யுத்தந்தொடுத்தல் - போர் மூட்டுதல்.
யுத்தமுகம் - போர்முகம், யுத்தமுனை.
யுத்தம்-உசிதம்,கூடுதல், நாலுமுழங்கொண்டது, நியாயம், பொருத்தமானது,போர்.
யுத்தரங்கன் - சூமாரன், யௌவனன்.
யுத்தவீரன் - போர்வீரன். [மானவேது.
யுத்தவேது - ஓரலங்காரம், அது பொருத்த
யுத்தாயுத்தம் - யுத்த அயுத்தம்,தக்கதுதகாதது.
யுத்தி - அருத்தாபத்தி, ஆராய்வு, உபாயம், ஓரலங்காரம்,கூடுதல், தகுதி, பொருத்தம், மேற்கோள்கூறல், யூகை, யோசித்தல், வழக்கம், விவேகம்.

யுத்திக்காரன்-கூரிய அறிவுள்ளவன், மேதாவி, அதி விவேகி.
யுத்திசித்தி - தருக்கரீதியாய்வற்படும்முடிவு.
யுத்திநியாயம் } சாஸ்திர ஆதாரமில்லாமல்
யுத்திவாதம் } யுத்தியால்வாதிக்கும்வாதம்
யுபம் - சாமர்த்தியம், புத்தி, செயல்.
யுயு - குதிரை,அசுவம்,பரி.[சத்துச்சாத்யகி.
யுயுதாநன் - இந்திரன், ஸாத்யகி, யது வமி
யுயுத்சன் - திருதராஷ்டிரனுக்கு வைசியப் பெண்ணிடத்துப்பிறந்த புத்திரன்,திருதராஷ்டிரனுக்குப்பின்னே இந்திரப்பிரஸ்தத்தில் அசுர புரிந்தவன்.
யுவ - ஆண்டுஅறுபதில் ஒன்பதாவதாண்டு.
யுவதி - பதினறுவயதுப்பெண், யௌவனே.
யுவநாசுவன் - சூரியகுலத்தரசரிலொருவன். இந்தன் (சந்திரன்) புத்திரன், சபஸ்தன் தந்தை, (2) கிருதாசுவன் மகன், இவன் மகன் மாந்தாதா (மாந்தாதாகாண்க.)
யுவராசன் } இளவரசன், ஓர் சமணகுரு,
யுவராஜன் } குமார ராஜா.
யுவன் } இளைஞன், குமரன், பதினறுக்கு
யுவா } மேல்மூப்பதுவயசுக்குட்பட்டவன்.
யுஜாநன் - சாரதி, பாகன், சூதன், வலவன்.

யூ

யூ - ஓர் உயிர்மெய்யெழுத்து.
யூகசாலி - புத்திகூர்மையுள்ளவன், யூகி.
யூகபதி - சுக்ரீவன், இரகுவிருதன் மகன்.
யூகம் - அகப்பொருளறிதல், ஓர் புல், கருங்குரங்கு, பெண்குரங்கு, கவந்தம், காந்தி, கோட்டான், தருக்கம், படை, படைவகுப்பு, பெண்முசு, பேன், யோசிப்பு, விவேகம், ஊகம், காந்தி, உடற்குறை.
யூகவான் - புத்திமான்,யூகி. [சாலி,மந்திரி.
யூகி - யூகி யென்னேவல், விவேகி, புத்தி
யூகித்தல் - ஆராய்தல், யோசித்தல்,அனுமானித்தல், சிந்தித்தல், எண்ணுதல்.
யூகிபாடை } ஓர் பயில்பேச்சு, யுக்திவாதம்,
யூகிப்பயில் } குழூஉக்குறி. [ஊகை.
யூகை - கல்வி, பேன், யூகம், அறிவாளி,
யூதநாதன் } இனத்தைக் காக்கும் யானை,
யூதபதி } யானைக்கூட்டத்தில் தலைமை
யூதபம் } வகித்து நடத்தும் யானை.
யூதபன் } [தை பிரிந்தயானை.
யூதப்பிரஷ்டன் - கூட்டைவிட்டயானை, இனத்
யூதமதம் - எபிரேய சாதியாரின் மதம்.
யூதம் - பசுக்கூட்டம், பட்சிசாலம், யானைக்
யூதர் - மேனாட்டின்ஓர்வகைசாதியார்,யூதமகூட்டம், விலங்கின்கூட்டம். [தத்தார்.
யூதி - அம்பட்டன், காட்டுமுல்லை.
யூதிகம் - முல்லை, யூதிகை. [கட்டுந் தறி.
யூபத்தம்பம் - வேள்வித்தூண், பலியிருகம்
யூபம் - உடற்குறை, படைவகுப்பு, யாகம், வேள்வித்தம்பம், வெற்றிலைத்தம்பம்.
யூபாஷன் - ராவண பரிவாரத்தாருள் ஒருவன், இவன் அநுமானால் சோக வநத்தில் கொல்லப்பட்டவன்.

யோ

யோ - ஓர் உயிர்மெய்யெழுத்து. [ஒன்று.
யோககுண்டலி-நூற்றெட்டுபரிடதங்களில்
யோகக்கட்டு-இருகாலுஞ்சம்மணமாய் மடக்கி இடையையுஞ்சேர்த்துத் தொடுப்பது.
யோகக்காட்சி - தேசகால விகற்பமின்றித் தன்செயலற்றுச் சிவன் செயலிற் கூடியறியு மறிவு. [யோகஞ் செய்பவன்.
யோகக்காரன் - அதிட்டசாலி,யோகவான்,
யோகசத்தி - நவசாரம், சத்திச்சாரம்.
யோகசமாதி - யோகநிலை எட்டினுளொன்று; அஃது: இந்திரியாதி தத்துவ சங்கிதமாய் யாக்கையுணின்றும் அவற்றிற் பற்றின்றியிருக்கும் ஆத்ம தரிசனம்.
யோகசம்-சிவாகமமிருபத்தெட்டினுளொன்று.
யோகசரன் - அணுமான். [பழகுதல்.
யோகசாதனம் - யோகப் பயிற்சி, யோகம்
யோகசாதனை - யோகாப்பியாசம்.
யோகசாத்திரம்-யோகாப்பியாசநூல்;இது: கலைஞான மறுபத்து நான்கினுளொன்று.
யோகசாரன் - சவுத்திராந்திகளிற் சிறிது வேறுபட்டு அறிவு அரூபமென்றும், பிரபஞ்சம் பொய்யென்றும் சொல்பவன், இவன் புறப்புறச் சமயிகளிலொருவன்.
யோகசிகை - உபநிடதம் (108) ல் ஒன்று.
யோகசித்தி - அங்கிரசன்புத்ரி, ப்ரஹஸ்பதி சகோதரி, பிரபாசுரன் மனைவி. விசுவகர்மன் தாய், யோகபலிதம். [ளொன்று.
யோகசூடாமணி - நூற்றெட்டுபரிடதங்களு
யோகசேமம் - சமாசாரம், யோகட்சேமம்.
யோகசைவம் - சைவம் பதினறிலொன்று.
யோகஞ்சாதித்தல் - யோகம் பழகுதல்.
யோகஞ்செய்தல் - தியானம் பண்ணுதல்.
யோகட்சேமம் - யோகசேமம், சுகதக்கம்.
யோகதண்டம் - யோக முத்திரைக்கோல்.
யோகதத்துவம் - நூற்றெட்டுபரிடதங்களு

ளொன்று. [ஞானம்.
யோகதீட்சை - குருவினிடமாகப் பெறும்
யோகநந்தேசர் - திருவியலூரிலே கோயில்
கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
யோகநாவிகம் - ஓர் வகை மீன். [டை.
யோகநிட்டை - யோகநிஷ்டை,சமாதி நிஷ்
யோகநித்திரை-அறிதுயில்,நிஷ்டை [தி.
யோகநிலை - யோகானுட்டிப்பு, நிஷ்டானு
யோகநூல் யோகசாத்திரம். [மிப்பு.
யோகநெறி - யோகமார்க்கம், மன வொரு
யோகபரீக்கை } யோகப்பயிற்சி, யோகாப்
யோகபரீட்சை } பியாசம். [டானுபூதி.
யோகபாதம் - யோகநிலை, சமாதிநிலை, நிஷ்
யோகபீடம் - யோகத்திற் குரிய ஆசனம்.
யோகப்பட்டை-யோகக்கட்டுக்கேற்றகச்சு.
யோகப்பிரத்தியட்சம் - யோகக் காட்சி.
யோகமாயை - பகவதி, விஷ்ணுமாயை.
யோகமார்க்கம் - யோகநிலை, யோகபாதம்.
யோகம் - அட்டயோகம்,அதிட்டம், உபசா
ரம், உபாயம், உயர்ச்சி, உற்சாகம்,எத்து,
கூடல், புணர்ச்சி,காரணப்பெயர், சூத்தி
ரம், மருந்து, அரைப்பட்டிகை நற்சுழி,
உணர்ச்சி, கூட்டல், சாவு,சிவிகை,சூத்தி
ரம், தகுதி,தவம்,தியானம், நிஷ்டை, பக்
கம், பஞ்சாங்கவுறுப்பிலொன்று, பலன்,
பொருத்தம், போர்க்கவசம், வரம், இந்
நியங்களை வசஞ்செய்துகொண்டு சித்தத்
தைப் பிரமத்தில் நிறுத்தல்; இது: ராஜ
யோகம் கர்மயோகம் ஹடயோகம் என
மூன்றுவகையாயிருக்கும்; மேலும்ஸாங்க்
யதாரக அமநஸ்கம்எனவும் மூன்றுவகை
யுண்டு; அன்றியும்மந்த்ரயோகம்,லயயோ
கம் ஹடயோகம் என்றொரு மூவகை
யுண்டு, இவற்றின் விரிவெல்லாம் யோக
நூல்களிற்காண்க,இந்தயோக சாஸ்திரம்
செய்தவர் பதஞ்சலி பகவான்.
யோகரங்கம் - கொளுஞ்சி மரம்.
யோகரூடி - காரணவிடுகுறிப்பெயர்.
யோகர்-சமணமுனிவர்,முனிவர்,யோகியர்.
யோகவாகி - இரசம், பாதரசம். [சாலி.
யோகவான் - அதிட்டமுள்ளவன்,அதிஷ்ட
யோகவுறக்கம்-யோகநித்திரை,அறிதுயில்.
யோகவேஷ்டி -மேலாடை,அங்கவஸ்திரம்.
யோகஸ்நாநம்-எழுவகைஸ்நாநத் தொன்று;
அது: யோகாப்பியாசத்தா லாத்ம
சுத்தியடைதல், ஆனந்தத் தாழ்தல்.
யோகக்ஷேமம் - ஆக்கம், பெற்றபொருளின்
நிலைபேறும் வருவாயும்.
யோகாக்கினி - தவாக்கினி, ஞாநாக்கினி.
யோகாசநம் - யோகஞ்செய்வோ ரிருப்பு;
அது: சுவத்திகமுத லூற்றெட்டுவகை
யிருப்பு.
யோகாசாரம் - யோகவொழுக்கம்,விஞ்ஞா
னம் ஒன்றே என்றைக்கும் உள்ள து
எனக்கூறும் பௌத்தமதப் பிரிவு.[பியாசி.
யோகாசாரியன்-யோகபோதகன்,யோகாப்
யோகாதிசயம் - சுகம், உண்மை விளக்கம்.
யோகாப்பியாசன்-யோகம்பழகுவோன்.
யோகாரங்கம் - கொளுஞ்சி மரம்.யோகரங்
கம்.
யோகார்த்தம் - திரிசொல், பல கருத்
தடைய ஒருசொல், காரணப்பொருள்.
யோகி - அரன், அருகன் ஐயன், நிஷ்டை
செய்வோன், முனிவன், நிர்மல சத்துவ
பரிணம ரூபமாகியசித்தவிருத்திகளை அந்
தர் முகமாகத்திருப்பி அவற்றை அவற்
றின் காரணத்திலேயொடுக்குதலாமென்
பவன், இவன் புறச்சமயிகளுளொருவன்.
யோகிகள் - முனிவர், தபசிகள், ஞானிகள்.
யோகிதண்டம் - பிரம்பு, சூரல்,வேத்திரம்.
யோகித்தல் - ஆழ்ந்து நினைத்தல்.
யோகினிகள் - இவர் பன்னிருவர், (1) வித்த
யா, (2)சேசிகா,(3) மோசிகா, (4)அமிர்
தா, (5) தீபிகா, (6) ஞாஞ (7)ஆபியாய
நி, (8) வியாபிநி, (9) மேதா, (10)வ்போ
மா, (11) சித்திரூபா, (12) லக்ஷ்மி, யோ
கினிகள், இவர்கள் வித்தியாசக்திகளாய்
வாசினிகளோடு அக்ஷரங்களை அதிகரித்து
நிற்பர்.
யோகிப்பு - சிந்திப்பு, யோசித்தல்,கூடுகை.
யோகினி - காளி, காளியேவல் செய்பவள்,
மந்திரவாதம் தெரிந்தவள், தவப்பெண்,
திக்குகள் தோறும் திதி சம்பந்தமாக
வுள்ள ஒரு துஷ்டபெண்தேவதை.
யோகினிச்சி-வரிக்கூத்துவகை.[னட்ப்பது.
யோகினிதிசை - யோகினி தேவதையா
யோகினிப்பரதேசி- பைராகி.
யோகீசுவரன்-யாக்கியவற்கிய முநி, யோக
ஞ்செய்வோன்.
யோகீசுவரி - துர்க்கை, காளி, பகவதி.
யோகு - யோகாப்பியாசம்,யோகானுபவம்.
யோகேசன் - சிவன், முனிவன்.
யோகேசுவரன் - க்ருஷ்ணன், மாயவன்,
முருகன்.
யோக்கியதாபட்சம் - தகுதிபற்றியமதிப்பு.
யோக்கியதாபத்திரிகை-நற்சாட்சிப்பத்திம்.
யோக்கியதாபாத்திரம்-யோக்கியமானவன்.
யோக்கியதை - யோக்கியம், மதிப்பு, நேர்

மை, ஆற்றல், தகுதியுக்தம். [ரிகை.
யோக்கியதைச்சீட்டு - யோக்கியதா பத்தி
யோக்கியத்திற்குக்கொடுத்தல் - காரிய நன்
மையை உத்தேசித்துக் கொடுத்தல்.
யோக்கியபாத்திரம் - தகுதியுடையவன்.
யோக்கியம் - ஆசாரம், ஒழுங்குடையவன்.
யோக்கியர்) தக்கவர், பெரியோர்,
யோக்கியவானர்) சிறந்தோர்.
யோக்கியவான்-ஒழுக்க முதலிய வற்றிற்
றிறம்பாதவன். [கியம்.
யோக்கியாயோக்கியம் - யோக்கிய அயோக்
யோசனம் - யோசனை, எண்ணிக்கை. [லர.
யோசனவல்லி - மந்திட்டிக்கொடி, வல்லா
யோசனன் - கடவுள், பரம்பொருள்,
யோசனை- ஆலோசனை, ஓசை, ஒரெல்லை
யளவு, தியானித்தல், புத்தி, விவேகம்,
உபாயம், கருத்து, சிந்தனை. [அச்சோதை.
யோசனைகந்தி - வியாசன்ருய், மச்சகந்தி,
யோசனைக்காரன்-முன்யோசனையுள்ளவன்.
யோசனைவான் - யூகவான், அறிவாளி.
யோசித்தல் - ஆராய்தல், கூட்டுதல், சிந்
தித்தல், ஆலோசனை கேட்டல். [லல்.
யோசியம்-சோதிடம், சோசியம், குறிசொல்
யோசியர் - சோதிடர், சோசியர். [பதி.
யோதனன் - போர்வீரன், சிப்பாய், சேனுதி
யோது - அளவு, மானம், பிரமாணம்.
யோதேயன் - போர்வீரன், யோதனன்.
யோதைகள் - அறிவுடையோர், மேதைகள்.
யோத்திரம் - நகக்கயிறு, தலைக்கயிறு.
யோநலம் - தானியவகையி லொன்று.
யோமியர் - ஆங்கிலராச்சியம் இந்தியாவில்
நிலைபெறச் செய்த மகமதியர்களுக்கு
ஆங்கிலர் கொடுக்கும் சித்தியபடி
யோனி - ஆண்குறி, பிறப்பிற்குக்காரணம்,
நீர், பிறப்பு, பெண்குறி, கருப்பை, பூரம்,
ஆவுடையாள், ஓர் நாடக உறுப்பு.
யோனிகாரம் - படிக்காரம். [ரமம்.
யோனிக்கலப்பு-சாதிக்கலப்பு, யோனிசங்கி
யோனிசங்கரன் - பிறப்பிலு லிழிந்தோன்.
யோனிச்சங்கரம் - யோனிக்கலப்பு.[நோய்
யோனிச்சிராவம்-வெள்ளைநோய், வெட்டை
யோனித்துவாரம்- பெண்குறியின் துவாரம்.
யோனிபேதம் - பிறவியின் பேதம்.
யோனிப்படுத்தல் - பிறத்தல், சென்மித்தல்.
யோனிப்புற்று - ஓர்வகை வாததுர்வியாதி.
யோனிப்பொருத்தம் - மணப்பொருத்தம்
பத்தி லொன்று.
யோனிமணி-யோனிலிங்கம்.[கைமுத்திரை
யோனிமுத்திரை-முக்கோணமாக காட்டும்
யோனிரஞ்சிதம் - பூப்பம், ப்ரௌடை.
யோனிலிங்கம் - யோனிமணி.
யோனிவாய் - யோனி, பவனவாய்.
யோனிவாய்ப்படுதல் - பிறப்படைத்தல்.

யௌ

யௌ - ஓர் உயிர்மெய் யெழுத்து.
யௌகியம்-பகுபதம், பதபேதம், பதச்சேதம்.
யௌதகம் - சீதனம், யௌதுகம், ஸ்ரீதனம்.
யௌதம் - ஓரளவு, பெண்கள் கூட்டம்.
யௌவதம் - யவ்வனம், யௌவனதசை.
யௌவனகண்டகம் -முகப்பரு, மோகப்பரு.
யௌவனதசை - வாலிபம், யௌவதம்.
யௌவனபருவம் - குமாரப்பருவம்.
யௌவனம் - அழகு, இளமை, களிப்பு, மக
ளிர் கூட்டம், யௌதம்.
யௌவனலட்சணம் - அழகு, கொங்கை.
யௌவனன் - பிரிய விரதன் வமிசத்தவன்,
தீமந்தன் மகன்.
யௌவனாசுவகன்) மாந்தாதா, அம்பரீஷன்
யௌவனாசுவன்) புத்திரன், ஹரிதன்
தந்தை. [பது வயதுக்குட்பட்ட பெண்.
யௌவனிகை-பதினுறுவயதுதொடங்கி ஐம்

ர

ர - ஓர் உயிர்மெய் யெழுத்து. [பகம்,
ரகசியம் - இரகசியம், பெண்குறி, மந்தணம்.
ரகம் - வகை, இரகம் வேறுபாடு. [வகை.
ரகளை-கலவரம், குழப்பம், கண்டப் பாட்டு
ரகளைப்படல் - ரணக்களமாதல், சண்டை.
ரகிதம் - நீக்கம், நிக்கிரகம், விலக்கல்.
ரகு - தீர்க்கயாஹுபுத்திரன், அஜன் தந்தை,
(ரகு வைத்திலீபன்மகனென்பது ரகுவமி
சம்) ஆண்மையிலும் கல்வியிலும் சிறந்த
பெயர் படைத்தவன், இவன் 'விசுவஜித்'
என்னும் யாகஞ்செய்து அந்தயாகத்திற்
சென்றிருந்த அந்தணர் கூட்டத்துக்குத்
தன்செல்வமுழுதும் வாரிவழங்கினவன்.
ரக்தபீஜன் - சும்பனிசும்பர் சகோதரி புத்தி
ரன், இவனுடம்பிலிருந்து சிந்துகிற ரத்
தத்துளிகள்எத்தனையோ அத்தனை அசு
ரர் பிறப்பார்களென்று நியமமிருந்தமை
யால் அதனை நினைத்துக் காளிகாதேவி
'கராள' ரூபந்தாங்கி ஒருதுளியாவது சிந்
தாமல் அவனைக்கொன்று தொலைத்தாள்.

ரக்தம் - இரத்தம், உதிரம், நெய், குருதி.
ரக்தாட்சி - அந்திமந்தாரை, இரத்தாட்சி.
ரங்கநாதன் - (1) திருவரங்கத்திற் கோயில் கொண்டிருக்கும் விஷ்ணுமூர்த்தி (2) ஒரு ஆந்த்ரகவி, இவராற்செய்யப்பட்ட ராமாயணம் 'ரங்கநாதராமாயண' மென்னும்பெயரால் விளங்குகின்றது. [சுரங்கம்.
ரங்கமண்டபம் - கோயிலின்உள்மண்டபம்,
ரங்கம் - அரங்கம், சபை, சாலை, மன்றம்.
ரங்கவல்லி - கோல்ப்பொடி. [வேசை.
ரங்கு-நிறம், சாயம், ஒருவகை சூதாட்டம்,
ரசகுண்டி - கண்ணுடியில் ரசம் பூசியஅழகு மணி, ரசபணி. [தந்தை.
ரசசு - அநேநசு வமிசத்துத் திரிகருத்தன்
ரசதமலை - கயிலைமலை, வெள்ளிமலை.
ரசதம் - இரசதம், வெள்ளி.
ரசதாளி } ரஸ்தாளி } ரசமானபழமுடையது, வாழை வகையி லொன்று.
ரசநிரூபணம் - ஓரலங்கார நிரந்தம், இது சிருங்காரரச நிரூபணம், அத்புதரச நிரூபணம், பாவநிரூபணம் என மூன்று நிரூபணங்களை யுடையது.
ரசபஸ்பம் - இரசபஸ்பம், பாதரச சுன்னம்.
ரசபுத்திரன் - இராஜபுத்திரர், கூத்திரியர்.
ரசபூபதிரசம் - பாதரசபஸ்பம், ரசபஸ்மம்.
ரசப்பதங்கம் - இரசகர்ப்பூரம், இரகற்பூரம்.
ரசப்பிடிப்பு-பாதரச முட்கொண்டதாலுண்டாம் முடக்குவாதம், இரத்தத்திமிர்.
ரசப்புகை - பாதரச ஆவி. [பூசிய குண்டு.
ரசமணி - ரசகுண்டு, கண்ணுடியில் ரசம்
ரசம் - இரசம், சத்து, இனிமை, சாறு.
ரசரத்நாகரகம்-ஒரு ரசவாதநிரந்தம், நவரத்நங்கள், லோகங்கள் கந்தகாதிகள் என்பவற்றைப் பஸ்பம் பண்ணும் முறை, உருக்குமுறை முதலியன இதிற் கூறப்படும்; இது:நித்தியநாத சித்தராற் செய்யப்பட்டது.
ரசவங்கி - கத்தரிக்காய் சேர்த்துச் செய்யும் ஒருவகைப் புளிப்புக்குழம்பு.
ரசனேந்திரியம் } ரசனை } நாக்கு, அமைப்பு, ரசித்தற் குரிய பொறி. [உருசி.
ரசனை - நிதிபுத்திரி, துவஷ்டாவின்மனைவி,
ரசஸ்வலை - தூரஸ்திரீ, ப்ரௌடை.
ரசாதலம்-கீழேழுலகத்தொன்று, இதுமயமாயுள்ளது, இதற்கு அரசன் வாசுகி, இதற்கு ராஜதானி போகவதிநகரம், வாமநாவதார மெடுத்த விஷ்ணுவினால் மிதித் தழுத்தப்பட்ட பலிச்சக்கரவர்த்தி போயுறைந்த இடமிது வாதலால் பலிசத்துவ மென்னும் பெயர்பெற்றது. [கரவர்த்தி.
ரசாதிபதி-இராசாதிபதி, அரசர்க்கரசன் சக்
ரசாபாசம் - சீர்கேடு, கோளாறு.
ரசாயனசாத்திரம் - தாதுப் பொருள்களின் குணவிசேடங்களைக் கூறும் நூல். [வை.
ரசாயனம்-இரசாயனம், தாதுவருக்கக் கல
ரசீது-இரசீது. [னும் விசுவுக்குத் தாய்.
ரசை - பிரஜாபதியின் மனைவி, அகன் என்
ரசோனம் - வெள்ளோப்பூண்டு. [ளொன்று.
ரச்சுப்பொருத்தம்-விவாகப்பொருத்தங்களு
ரஞ்சகம் - இரஞ்சகம், இரட்சணை, காப்பு.
ரஞ்சிதம் - இரஞ்சிதம், இன்பம், பிரியம்.
ரட்சகன் - இரட்சகன், காப்பவன், இரக்ஷகன்.
ரட்சித்தல் - இரட்சித்தல், காப்பாற்றல்.
ரணக்களம்-போர்க்களம். [திரவம்.
ரணசல்லியம் - ருணசல்லியம், கடன் உபத்
ரணசன்னி - இரணசன்னி, தேகத்திலுண்டாகிய கொடிய விரணத்தா லுண்டாம் சன்னி.
ரணம் - இரணம், புண், விரணம். [காடு.
ரணரங்கம் - போர்க்களம், சிதைந்த பிணக்
ரணவைத்தியம்-இரணவைத்தியம். [வை.
ரண்டமுண்டை-சோரத் தனமுடைய விதவை.
ரதசப்தமி - இரதசப்தமி, உத்தர அயனம்.
ரதபந்தம் - இரதபந்தம், கவிவிநோதம்
ரதி-இரதி, ஓர் நிறுத்தலளவை, ரதிதேவி.
ரதிகன் - ஜயநேசன் புத்திரன்.
ரதிதேவி-மன்மதன் மனைவி, இந்த ரதிதேவியே மாயாதேவியாகவும் பிரத்தியும்நன் மனைவியாகவும் அவதரித்தா ளென்பது.
ரதிதரகோத்திரங்கள் - ரதிதரன் மனைவியிடத்து ஆங்கிரஸ முனிக்குப் பிறந்த பிரம தேஜோதரருடைய சந்ததிகள்.
ரதிதரன்-இக்ஷ்வாகு தம்பி, நபகன் வமிசத்து அம்பரீடன் புத்திரனுகிய விரூபன் பௌத்திரன்.
ரதோற்சவம்-இரதோற்சவம். [ண்,இருமல்.
ரத்தகாசம் - இரத்தகாசம், தொண்டைப்பு
ரத்தக்கட்டி-இரத்தக்கட்டி, ரத்தக்கழலை.
ரத்தசிராவரோகம் - பெரும்பாடு. [வடிதல்.
ரத்தபீசனம்-இரத்தபீசனம், மூக்கில் ரத்தம்
ரத்தபுஷ்டி - இரத்தபுஷ்டி, இரத்தத்திமிர்.
ரத்தம்-இரத்தம், நெய், குருதி. [சோகை.
ரத்தக்ஷீணரோகம் - இரத்தக்ஷீணரோகம்,
ரத்தாசயம்-இரத்தாசயம், இருதயம்.
ரத்து - இரத்து, நீக்கம், தள்ளுபடி.
ரத்நகண்டி-இரத்நகண்டிகை, மார்பணி.
ரத்நகிரிநாதர் - திருவாட்டியத்தான் குடியி

லே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

ரத்நநாயகர் - திருவாடானையிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

ரத்நபரீக்ஷை - ரத்னங்களின் குணதோஷ மறிதல். (வயிரம் காண்க.)

ரத்நம் - இரத்தினம், வைரம், அரதனம்.

ரத்நாபரணம்-பிரதரபருத்ரீய வியாக்யாநம்.

ரத்நாவளி - ஸ்ரீஹர்ஷ தேவர் செய்த ஒரு ஸம்ஸ்க்ருத நாடகம். இது பாண்டவ வமிசத்து உதயணன் சரிதை கூறுவது.

ரந்திதேவன் - பூருவமிசத்தன், சங்ருதி புத்திரன், அவன் தன் சம்பத்துக்களை யெல்லாம் வறிஞர்க்குக் கொடுத்துவிட்டு வனத்திற்போய் வசிக்கும்போது, ஒரு நாள் பசியால் வருந்திக் கிடைத்த அற்ப வுணவை யுண்ணத் தொடங்கும்போது, ஓர்ந்தணனும் பசியால்வாடி அவனிடம் வந்தான், ரந்திதேவன் அவ்வுணவிற் பாதியை அவ்வந்தணனுக்குக் கொடுத்தான், அந்தச் சமயத்தில் மற்றொரு அந்தணன் பசித்து வந்தான், அவனுக்கும் எஞ்சிய பாகத்தில் பாதியைக் கொடுத்தான், அப்போது மற்றொருவன் வரவே மிச்சமாயிருந்த தன் பாகத்தையும் கொடுத்தான், பின்னுமோர் அதிதி வந்து தாகத்திற்காக வைத்திருந்த நீரையுங் குடித்துவிட்டுப் போனான், அதுகண்ட தேவர்கள் இவனுடைய வுபகார குணத்தை மெச்சி, இவனுக்கு வேண்டிய வரங்களைத்தந்துபோனார்கள், இவன் அளவற்ற யாகங்கள் செய்தவன், யாகபலித் தோலின் உதிரத்தால் ஒரு நதியுண்டாயிற்று, அது 'சர்மணவதி' யெனப்படும்.

ரந்திரம் - துளை, குற்றம், இரகசியம், துவாரம்.

ரபசன் - (1) ஆயுவின் பௌத்திரன், கம்பீரன் தந்தை, (2) ஒரு ஸம்ஸ்க்ருத நிகண்டு செய்த பண்டிதன், அந்த நிகண்டு 'ரபஸ கோச' மெனப்படும்.

ரப்பு - கரடுமுரடானது, ஒழுங்கற்றது.

ரப்பை - இரைப்பை, இமை, கண்ணிதழ்.

ரமணன் - தலைவன், கணவன்.

ரமா) இலக்குமி, திருமகள், செல்வி, மலர்
ரமை) மாது. [தட்ட.

ரமாரமி - சராசரி, ஏறக்குறைய, கிட்டத்

ரமித்தல் - இரமித்தல். [ண்டாடும் மாதம்.

ரம்சான் - முகம்மதியர் விரதநாளாகக் கொ

ரம்பன் - ஆயுபுத்திரன், புரூரவன் பௌத்திரன், நகுஷன் தம்பி.

ரம்பை-அரம்பை, இந்திரன் சபையிலாடும் ஓர் அப்சர ஸ்திரீ, இவள் மஹாசௌந்தர்யவதி, இவன் நளகூபரன்மனைவி, கௌரி.

ரம்மியம் - இரம்மியம், அழகு, திருப்தி.

ரயத் - குடியானவன், நிலபாத்தியக்காரன்.

ரயிலடுக்கு-யாத்திரைக் குதவும் பாத்திரம்.

ரயில்-இரயில், தீராவி எந்திரம்.

ரவா - ரவை, கோதுமை நொய். [ணம்.

ரவாணை - அனுப்புகை, யாத்திரை, பிரயா

ரவி-இரவி, சூரியன், தினமானன், என்றும்.

ரவிக்கை - முலைக்கச்சு, மார்பட்டை, வார்.

ரவேஸ்-மிகுதல்ல, (வெத்திலை.)

ரவை-நுண்ணிய பொருள், கோதுமையின் குருநொய், வைரம், துப்பாக்கி சுடும் சிறு குண்டு, சிறிது.

ரவையட்டிகை - வைர அட்டிகை.

ரஸம் - இரஸம், சாறு, இரத்தம்.

ரஸவாதம் - இரசவாதம், சத்தான பேச்சு.

ரஸா - விடுமுறை, ஒய்வுநாள். [கி.

ரஸோகுணம் - இரசோகுணம், உற்சாகபுத்

ரஸ்தா-பெரும்பாதை, வீதி, சாலை.

ரஸ்தாளி - இரஸ்தாளி, ரசதாளி.

ரஜன்-பிரியவிரதன் வமிசத்து விராஜன் புத்திரன், ஆயுபுத்திரன், புரூரவன் புத்திரன், நகுஷன் தம்பி, இவனுக்கு ஐஞ்ஞூறு புத்திரர் பிறந்தனர். அவர்க ளெல்லோரும் மஹாவீரர்கள், தேவர்கள் அவர்களை வேண்ட, அவர்கள் தைத்தியர்களை வென்று தேவேந்திரனுக்குச் சுவர்க்க லோகத்தைக் கொடாமல் தாமே ஆள விரும்பியபோது இந்திரனால் நிர்மூலமாக்கப்பட்டார்கள்.

ரக்ஷகன்-இரக்ஷகன், பாதுகாப்பவன்.

ரக்ஷபந்தனம் - இரக்ஷை, கவசம்.

ரஹீம் - கடவுள், ஆண்டவன்.

ரா

ரா-ஓர் உயிர்மெய் யெழுத்து, இராத்திரி.

ராகமாலிகை-ஒரு பாடலில் பல ராகங்கள் வரப்பாடுவது, ராகமாலை.

ராகம்-இராகம், ஆசை. [தவன், இராமன்.

ராகவன் - இராகவன், ரகுவம்சத்திற் பிறந்

ராகி - இராகி, கேழ்வரகு.

ராகு-இராகு, விப்ரசித்தி புத்திரன், இவன் தாய் சிங்கிகை, இவன் தம்பி கேது, இவ் விருவரும் காசிபன் பௌத்திரர், விஷ்

ணுவானவர் மோகினி வேடங் கொண்டு அமிர்தம் பங்கிடும்போது ராகு தேவரூ பங்கொண்டு தேவரோடு கலந்து அமிர் தம் பெற யத்தனித்தபோது, சூரிய சந்தி ரர் அதையறிந்து விஷ்ணுவுக் கறிவித்த மையால் சூரிய சந்திரர்க்கும் ராகு கேது க்களுக்கும் தீராப்பகை யுண்டாயிற்று. அந்தச் சமயத்தில் விஷ்ணுவானவர் ரா குவின் தலையைக் கொய்துவிட்டார், ராகு கேதுக்கள் சாயாக்ரஹங்கள்.

ராகை-(1) தாதாவின் மனைவியரி லொரு த்தி, (2) சுமாலிமகள், தூஷணன் திரி சிரன் என்பவர்களுக்குத் தாய்.

ராக்கடி - ராக்குடி, தலையணிவகை.

ராக்ஷி - செருக்கு, ஆங்காரம், இறுமாப்பு.

ராயசூயம் - இராசசூய யாகம்.

ராசதானி - தலைநகர், மாகாணம். [டலி.

ராசமண்டலம் - அரசர் கூட்டம், ராசமண்

ராசி- இராசி, வட்டிப்பணகூட்டுத்தொகை, இனம், கூட்டம், விளைவின் மதிப்பு.

ராசிகள்-மேஷ முதலும் மீனம் இறுதியுமா யுள்ள பன்னிரண்டும் ராசிகளெனப்படும், சூரியன் ஒருராசியிற் சஞ்சரிக்கும் காலம் ஒரு மாசமெனப்படும்.

ராட்சதர்-ராக்ஷஸர், அசுரர், அரக்கர், காசி பனுக்குச் சுரசையிடத்துப் பிறந்த புத்தி ரர்கள் (2) ரந்தர்களுடைய மந்திரிராக்ஷ ஸன் என்னும் பெயருடையவன், முத்ரா ராக்ஷஸம் என்னும் நாடகத்தில் இவன் முக்கிய பாத்திரமாயுள்ளவன், ராக்ஷஸர் கள் புலஸ்தியன் மரபில் வந்தவர்களென் றுங் கூறுதலுண்டு, இவர்கள் பிராமண அமிசமாகப் பிறந்தும், நரமாம்ஸ பக்ஷண மும் மாயவல்லமையு முடையவ ராய்த் தேவர்களுக்குப் பகைவரா யிருந்தவர் கள், இவர்களுள்ளே ராவண கும்பகர் ணர்கள் முக்கியர்கள்.

ராட்சதர்என்றபெயர்க்குக் காரணம்-காசி பர் மனைவியராகிய திதி தநு என்ற இரு வரில் தனுவுக்குப் பிறந்த புத்திரர்களுள் பசிதாகங்களை யடைந்த சிலர், "யக்ஷாம" என்றும், பசிதாகங்களில்லாத மற்றவர் கள், "ரக்ஷாம" என்றும் அழுதார்கள், அதுபற்றியே யக்ஷர் என்றும், ராக்ஷசர் என்றும் பெயர் பெற்றார்கள், 'யக்ஷாம யாமுண்ணக் கடவோமாக ரக்ஷாம யாம் காக்கக்கடவோமாக' என்பது பொருள்.

ராட்டிரம்-ராஷ்டிரம். [நூல் ஏற்றவது.

ராட்டினம்-இராட்டிணம், ராட்டு,ராட்டை,

ராணி - இராணி, இராசாத்தி, அரசனின் மனைவி, இராஜகுமாரி.

ராணுவம் - இராணுவம், சைனியம்.

ராதாமனோகரம் - பூங்கொடி, புஷ்பவல்லி.

ராதாரிச்சீட்டு - அனுமதிச்சீட்டு.

ராதை-(1) கிருஷ்ணன் பிரியநாயகி,நந்தன் தங்கை, (2) கர்ணனை வளர்த்த தாதை, இதுபற்றியே கர்ணன் ராதேயன் என் றும் பெயர் பெற்றவனானான்.

ராத்தல்-ஓர்வகை நிறுத்தலளவை, பவுண்டு.

ராத்திரி - இராத்திரி, கங்குல், நிசி.

ராப்தா - பழக்கம், பாட்டை, நடமாட்டம்.

ராமகிரி - நாகபுரத்துக்குச் சமீபமுள்ள ஒரு மலை.

ராமகிருஷ்ணபரமஹம்ஸர்-இவர் கல்கத்தா வில் காளி கட்டத்தில் காளிகோயில் பூசகராக இருந்தவர் அம்பாளின் அருள் பெற்று சர்வஞ்ஞத்துவ மடைந்தவர். இவராலேயே இந்து மதம் அந்நிய மதத் தாலழிக்கப்படும் தருவாயிலிருந்து விடுதலைபெற்றது. இவருடைய முக்கிய சிஷ்யர் விவேகானந்தசுவாமிகள், விவே காநந்தரின் பெருமுயற்சியால் இந்து மதம் உலகில் பிரகாசிக்க ஆரம்பித்தது.

ராமகிருஷ்ணன் - ஒரு ஆந்த்ரகவி,இவனூர் தெனாலி, கிருஷ்ணதேவராயருடைய சபையிலிருந்த வித்வான்கள் எண்மருள் ஒருவன், அதிக சாதுரியபுத்தியும் விகட சாமர்த்தியமும் உடையவன், 'தெனாலி ராமன்' என்றும் பெயர், பாண்டுரங்க மான்மியம் என்னும் பெருங்காவியஞ் செய்தவனும் இவனே, இது முழுதும் விலக்ஷண சரமுடையது,அவன்சொன்ன விகடக்கதைகள் அநேகம் இக்காலத்தும் வழங்கி வருகின்றன (தெனாலிராமன் காண்க.)

ராமசீதா - சீதாபழவகையி லொன்று.

ராமபத்திரன் - இவர் கிருஷ்ண தேவராயர் சபையில், வித்வான்கள் எண்மருள் ஒரு வர், 'ராமாப்யுதயம்' என்னும் மஹாகாவி யஞ் செய்தவர்.

ராமபாணம் - இராமபாணம்.

ராமமந்திரி - ஒரு ஆந்த்ரகவி, இவர் ஆது நிக் கவிகளுள் ஒருவர், இவர் தசாவதார சரித்திரஞ் செய்தவர்.

ராமம் - நாமம்,இராமம், வைணவர் நெற்றி யி லிடுங்குறி.

ராமராசபூஷணன் - பட்டுமூர்த்தி.

ராமராச்சியம் - இராமனாண்டநாடு,அயோத்

தி, நீதி தவறாத ராச்சியம்.

ராமர் - விஷ்ணு தசாவதாரங்களுள் ஏழாம் அவதாரமாயுள்ளவர், இவர் இக்ஷ்வாகு வமிசத்திலே அஜன் புத்திரனாகிய தசரத சக்ரவர்த்திக்குக் கௌசலை யிடத்துப் பிறந்த புத்திரர், இவர் மனைவி சீதை, பரதன் லக்ஷ்மணன் சத்ருக்கன் என்பவர் மூவரும் இவர் தம்பிமார், குசன் லவன் என்னுமிருவரும் புத்திரர், இவர் மனைவியோடும், லக்ஷ்மணனோடும் பித்ருவாக்கிய பரிபாலநார்த்தம் பதினான்கு வருடம் வநவாசஞ் செய்து ராவண கும்பகர்ணாதியரைக் கொன்று, தண்டகாரண்ய வாசிகளாகிய முனிவர்களுக்கு அவ்வரக்கரால் விளைந்த துன்பங்களை நீக்கி மீண்டும் தமது ராஜ்யம் பெற்று நல்லாசு புரிந்தவர், இவர் தசரதன் புதல்வராதலால் தாசரதி யென்றும், ரகுத்தன் வமிசத்தாராதலால் காகுத்தன் என்றும், ரகுகுலத்தித் பிறந்தமையால் ராகவன் என்றும் பெயர் பெறுவர்.

ஸ்ரீராமபிரான் நல்லாசு புரிந்ததற்கேயன்றி, அவரது பெருங்கருணைக் குணத்தைப்பற்றியே இந்நாளிலும் யாவராலும் வழிபடப்படுவாராயினர். இவரை வழிபடுவோர் தொகையும் இவர்க்குள்ள ஆலயங்களும் ஆரியாவர்த்தத்தில் எண்ணிலவாயிருக்கின்றன, 'ராமா ராம சத்யநாம' என்னும் மந்திரம் ராமபக்தருடைய நாவிலும் மனத்திலும் நீங்காதிருப்பது இவரது பெருந்தகைமையை மேல்வரும் "ராமாயணம்" என்பதனுட்காண்க.

ராமன் - இராமன், ராமன்.

ராமாயணம் - ஸ்ரீராமருடைய திவ்யசரித்திரத்தைக் கூறுவதாகிய ஓரிதிஹாசம். இது வடமொழியிலே வால்மீகி பகவானால் கூறப்பட்டது, இது ஆதிகாவியம் எனவும் படும், இதுபாலகாண்டம், அயோத்யாகாண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என ஏழு காண்டங்களைக் கொண்டது, இது இருபத்து நாலாயிரங் கிரந்த முடையது.

இந்த ராமாயணத்தைத் தமிழில் மொழி பெயர்த்துக் காவியரூபமாக அருளிச் செய்தவர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், இவர் சாலிவாகநசகம் எண்ணூற்றேழில் விளங்கியிருந்தவர், இவர் மொழி பெயர்த்தது ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தையே யென்பது. "தேவபாடையினிக்கதை செய்தவர், மூவரானவர் தம்முளு முந்திய, நாவினருசையின்படி நான்றமிழ்ப், பாவினலி துணர்த்திய பண்பரோ" என்னும் இவர் வாக்கினாலே அறியப்படும், முதலிற் செய்தவர் வான்மீகி பகவான், அதின்பின் செய்தவர் வசிட்டர், அதன் பின்னே செய்தவர் போதாயநர், கம்பராமாயணத்துச் சரித்திரம் பெரும்பாலும் வால்மீகிராமாயணத்தையொத்திருப்பதேயாயினும் கற்பனை வர்ணனை முதலியவும் கம்பருடையனவேயாம், சுந்தரகாண்டத்தை லங்காகாண்டமென்று வழங்குவர் வடநூலார், பாலகாண்டமுதல் யுத்தகாண்டம் வரைக்குமே கம்பராற் செய்யப்பட்டது, உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தராற் செய்யப்பட்டது, நீளத்தில் பேசுவது.

ராமாயணவகை-வால்மீகி ராமாயணம், அத்தியாத்ம ராமாயணம், ஆனந்தராமாயணம் எனப் பத்து வகைக்கு மேற்பட்ட ராமாயணங்கள் உண்டு.

ராமாநுசம் -தென்கலையார் திருமண் காப்பின் கீழிடும்பாதம், ஓர் பாத்திரம்.

ராமாநுஜபாதுகை-வைணவசமயிகள் இராமாநுஜரின் திருவடியென மதித்துத்தலையில் தரிக்கும் திருவடி நிலையுள்ள கிரீடம்.

ராமாநுஜர் } 820 வருஷங்களுக்கு
ராமாநுஜாசாரியர் } முன்னிருந்தவர், இவர் தந்தையார் ஆசூரிகேசவாசாரியார், தாயார் காந்திமதி, இவர் ஐந்மஸ்தாநம் பூதபுரம் (ஸ்ரீபெரும்பூதூர்.) இவர் வித்யாப்யாஸஞ் செய்தவிடம் காஞ்சி, இவர் யாதவப்ரகாஸரென்னும் ஸந்யாஸியிடத்திற் சாஸ்த்ரங்களைக்கற்று வல்லவராகித் தங் குரு முன்னிலையிலே தானே விஷ்டாத்வைத மதத்தைச் சாதித்துப் பின்னர் த்ரிதண்ட ஸந்யாஸியாகி யதிராஜன் என்னும் பெயர் பெற்றுத் திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், திருப்பதி முதலிய ஸ்தலங்களிற் சென்று ஆங்காங்கு மடங்களை ஸ்தாபித்து வைஷ்ணவ மதத்தை நிலைநாட்டினர், ஆங்காங்கு சிஷ்யர் குழாங்களைச் சேகரித்துத் தமது மதத்தை விருத்தி செய்தனர், இவர் கீதாபாஷ்யம், வ்யாஸ ஸூத்ரபாஷ்யம் முதலிய அநேக நூல்களைச் செய்தார், இவரை வைஷ்ணவர்கள் பாஷ்யகார ரென்றும் எம்பெருமானரென்றும் வழங்குவர்.

ராமேஸ்வரம் - ஸ்ரீராமர் ராவணனைக் கொன்று திரும்பியபோது சேதுவோரத்திலே சிவலிங்க ப்ரதிஷ்டை செய்து பூசை புரிந்த ஸ்தலம், இது இந்தியர்களுடைய தீர்த்த யாத்திரை ஸ்தலங்களில் காசிக்கு அடுத்தது என்று மதிக்கப்படுகின்றது.

ராயக்காரன் - எழுத்தாளன், லிகிதன், இலேகிகன்.

ராயசம் - இராயசம், எழுதும் தொழில்.

ராயர்-இராயர், ராயன், மந்திரி,அமைச்சர்.

ராய்சாகிப் - முகமதிய ரல்லாத இந்தியர்களுக்கு அரசாங்கத்தாரால் அளிக்கப்படும் பட்டப் பெயர்.

ராவடம் - அராவுதொழில், இராவடம்.

ராவணன் - இவன் ராஜதானி லங்காபுரி, புலஸ்தியன் புத்ரனுகிய விஸ்ரவாவுபுத்ரன், தாய்ஸுமாலிபுத்ரியாகிய கைகஸீ, இவன் பாரிமயன் மகளாகிய மந்தோதரி (மண்டோதரி.) கும்பகர்ணன், விபீஷணன் என்போர் இவன் தம்பிமார்கள், ஸூர்ப்பணகை தங்கை, இவன் புத்ரன் இந்தரஜித்து,ராவணன் பத்துத்தலைகளையுடையனுதலின் தஸக்ரீவன் தஸகண்டன் முதலிய நாமங்களையுடையவன். இவன் மகாஸ்ர தவங்கள் செய்து, மனுஷரைப் பொருட் படுத்துகிலேன், மற்றெவ்வகைத் தேவராலும் அசுரராலும் இறவாதிருக்க வரந் தருகவென்று ப்ரஹ்மாவை வேண்டிப் பெற்றான். அவ்வரப்ரஸாதத்தால் மிக்க கர்வமுடையவனுகி த்ரிலோகங்களிலுஞ் சென்று சாதுக்களையுந் துன்புறுத்தி வந்தான்.

ராவணன் திக்கெல்லாம் வெற்றி பெற்று வடக்கிற் சென்று குபேரனைக் கண்டு அவனை ஜயித்து அவன் புஷ்பக விமானத்தைக் கவர்ந்துகொண்டு கைலைக்குமேல் நேராக வந்தபோது நந்திதேவர் தடுப்ப, இவன் தனது விமானத்தோடிழிந்து அக்கைலையை வேரோடு பறித்துச் செல்வேனென்று கர்வங்கொண்டு பெயர்த்துத் தோள்மேற்கொள்ள வெத்தனிக்க,அதுகண்ட சிவபெருமான் தமது பெருவிரலாலழுத்த அம்மலையின் கீழ் அகப்பட்ட இவன் நெடுங்காலங் கிடந்து வருந்திச் சிவபெருமானை ஸ்தோத்ரித்து அவ்வாபத்தினின்றும் நீங்கிப் போயினன், அக்கைலையின் கீழ்க்கிடந்துச்சவிசையாலழுதமையால் இவனுக்கு ராவணன் என்னும் பெயர் வாய்ப்பதாயிற்று, ஸ்ரீராமர் பிறந்து ராவணனைக்கொன்றார்.

ராவணன்விழி - ஓர் வகைக் கிளிஞ்சல்.

ராவுத்தன் - இராவுத்தன், துருக்கன்.

ராவுபொடி - அரவடித்தூள், அராவுபொடி.

ராவுராப்பலகை - வாத்தாட்டுப்பலகை, கூரையின் வாய்பட்டையில் தைக்கும் பலகை.

ராவ் - சிலருடைய பட்டப் பெயர்.

ராவ்சாகிப் - ஓர் பட்டப்பெயர், ராய்சாகிப் புக்கு இது உயர்ந்தது. [பட்டப் பெயர்.

ராவ்பகதூர்-இது ராவ்சாகிபைவிட உயர்ந்த

ராஜஅம்சம் - அன்னப்பறவை,ராஜபோகம்.

ராஜகிரீடை - கண்ணபிரான் கோபிகைகளுடன் ஆடிய கூத்துவகை.

ராஜகிருகம் - அரண்மனை, மாளிகை.

ராஜகேசரி - (1) ஒருசோழன்,(2) ஈழநாட்டில்அரசுபுரிந்தவோரரசன்.(அரசகேசரி காண்க.)

ராஜசம்பாவனை - அரசனளிக்கும் தானம்.

ராஜசின்னம் - அரச சின்னம். [கை.

ராஜதண்டனை - குற்றத்திற்காகத் தண்டிக்

ராஜதந்திரம் - சதுர்வித உபாய தந்திரம்.

ராஜதர்மன் - நாரீஜங்கன்.

ராஜதிருஷ்டி - இராஜ பார்வை.

ராஜதூஷணை - இராஜநிந்தனை. [டம்பரம்.

ராஜதோரணை - அரசமுறைமை,இராஜ ஆ

ராஜத்துரோகம்-அரசனுக்குக்கேடுசூழ்கை.

ராஜநடை - கம்பீரநடை,யானைநடை.[மை.

ராஜநிந்தனை - இராஜநிந்தனை, அரசமுறை

ராஜநோய் - க்ஷயரோகம், கபரோகம்.

ராஜபக்தி - அரச பக்தி, இராஜ பக்தி.

ராஜபாட்டை - இராஜ வீதி, நெடுந் தெரு.

ராஜபிளவை - இராஜபிளவை,இராஜகட்டி.

ராஜபுத்திரன் - கம்பீரமானதோற்றமுடையவன்,அரசகுமாரன்[சனுல்மதிக்கத்தக்க.

ராஜமான்ய - அரசனெனமதிக்கத்தக்க,அர

ராஜமுடி - கிரீடம், மௌலி, மகுடம்.

ராஜமுழி - இராஜபார்வை,கம்பீரபார்வை.

ராஜயோகம்-இராஜயோகம், அரசபோகம்.

ராஜராஜேஸ்வரி - துர்க்கை,பார்வதி,காளி.

ராஜராஜநரேந்திரன்-வேங்கிதேசாதிபதி, இவன் சமஸ்தான வித்வான் நன்னயபட்டன்.

ராஜரிகம் - ஆட்சி,அரசஆளுகை,ராஜரீகம்.

ராஜரிஷி - துறவு நிலையுள்ள அரசன்.

ராஜரீகம்-இராஜரிகம், இராச்சியாதிகாரம்.

ராஜவந்தம் - அணில்வகையி லொன்று.

ராஜவிசுவாசப்பிரமாணம் - அரசராணைக்கு அடங்கிநடப்பதாகச்செய்யும் பிரமாணம்

ராஜவிழி - கம்பீரமானநோக்கு, ராஜமுழி

ராஜஸ்ரீ - அரசச் செல்வம், இராஜ போகம்.
ராஜஸம் - இராசோகுணம், இராசதகுணம்.
ராஜஸூயம் - இராசசூயம், தலைமையாகம்.
ராஜஸேவை - அரசாங்க வேலை. [சாத்தி.
ராஜஸ்த்ரீ - அரசபத்தினி, பட்டமகிஷி, இரா
ராஜன் - (1) சந்திரன், (2) இந்திரன், (3) ஒருயக்ஷன், அரசன், வேந்தன். [தலைவன்.
ராஜா - மிகச்சிறந்தது, பட்டப்பெயர், தேசத்
ராஜாதிதேவி - வசுதேவன் தங்கை, ஜயசே நன் மனைவி, இவள் புத்திரர் இருவர், அவர் விந்தன் அநுவிந்தன் என்பவர்.
ராஜாத்தி - ராணி, ராஜ ஸ்த்ரீ.
ராஜாநகன் - பண்டிதர்களுக்கு முற்காலத் தில் சூட்டப்பட்ட ஒரு பட்டப்பெயர்.
ராஜாவர்த்தம் - ஓர்வகைஇரத்தினம். [ழை.
ராஜாவாழை - உயர்ந்தவாழை, மலையாள வா
ராஜாளி - இராஜாளி, பட்சிராஜா.
ராஜிநாமா - இராஜிநாமா [திருத்தக்காசர்.
ராஜியவாதி - அரசியல்வாதி, ஆட்சியின் சீர்
ராஜ் - ராஜா. [பெரும் மரியாதை.
ராஜோபசாரம் - அரசர்க்குரிய உபசரிப்பு,
ராஷ்ட்ரபாலன் - கம்ஸன் தம்பி. [ஜயன்பாரி.
ராஷ்ட்ரபாலிகை - உக்ரஸேநன் புத்ரி, ஸ்ருஞ்
ராஷ்டிரம் - ராட்டிரம், அசுரத்தனம்.
ராக்ஷஸம் - இராக்கதம், அசுரத்தனம்.
ராக்ஷஸன் - இராக்கதன், அரக்கன், அசுரன்.

ரி

ரி - ஓர் உயிர்மெய்யெழுத்து, ரிஷபச்சுரத் தின் எழுத்து. [வே ஆதிவேதம்.
ரிக் - ருக், ருக்குவேதம், முதல்வேதம், இது
ரிக்தம் - வறுமை நிலை. [ருள்லான்.
ரிக்தன் - ஏழை, தரித்திரன், வறியன், பொ
ரிக்ஷா - ஆள்இழுக்கும் சவாரி வண்டி.
ரிக்ஷாவாலா - ரிக்ஷாவண்டி யிழுப்பவன்.
ரிடபம் - ரூடபம், ஓரிராசி, ருஷபம்.
ரிபு - யதுவினதுநான்காம்புத்ரன், பகைவர்.
ரிபுஞ்ஜயன் - பிருஹத்ரதன்வம்சத்து மகத தேச ராஜர்களுள் கடையரசன், இவன் தனது மந்த்ரியிழுல்கொல்லப்பட்டவன்.
ரிஸ்யமூகம் - தக்காணத்திலுள்ள ஒருமலை, இதில் சுக்ரீவன் சிலகாலம் வசித்தான்.
ரிஷபம் - எருது, தயாவதி, ரஞ்சனி, சந்திகை என்ற மூவகைப்பட்ட இரண்டாம்சுருதி.
ரிஷி - ருஷி, முனிவன், இருடி.
ரிஷிகேசன் - விட்டுணு. [பக்ஷபஞ்சமி.
ரிஷிபஞ்சமி - பாத்ரபத மாதத்து சுக்ல
ரிஷிமூலம் - முனிவர் பிறப்பு.

ரீ

ரீ - ஓர் உயிர்மெய்யெழுத்து. [நாதம்.
ரீங்காரம் - வண்டுமுதலியவற்றின்ஒலி, தங்கி
ரீதி - முறை, நிலைமை, ஒழுங்கு, முறைமை.
ரீப்பா - வலிச்சல் பட்டை.

ரு

ரு - ஓர் உயிர்மெய் யெழுத்து.
ருகன் - விருகன் தங்கை, விஜயன் புத்ரன்.
ருக் - இருக், முதல் வேதம், ரிக்வேதம்.
ருக்கா - சோக்கா, சிறு விண்ணப்பம்,
ருக்மன் } ருசிகன் புத்ரர், ஸ்யாமகன்
ருக்மேஷு } ஸஹோதரர்.
ருக்மி - விதர்ப்பராஜனுகியபீஷ்மகன் மூத்த மகன், ஸ்ரீ ருக்மிணீ தமையன்.
ருக்மிணீ - ஸ்ரீ கிருஷ்ணன் மூத்தமனைவி, பீஷ்மகன் புத்ரி, ப்ரத்யும்நன் தாய்.
ருக்மியின் தம்பியர் - ருக்மகேஸன், ருக்ம தரன், ருக்மநேத்ரன், ருக்மபாஹு.
ருசி - ஒரு ப்ரஜாபதி, ஸதரூபன் புத்ரியாகிய ஆகூதிஇவன்பாரி, இவளிடத்திற்பிறந் த புத்ரன் யஜ்ஞன், உருசி. [மகன்.
ருசிகன் - தர்மன்புத்ரன், இவன்புத்ரர் ஸ்யா
ருசிதரன் - குரு, சமவருணன் மகன்.
ருசிராஜன் - பிருஹ்திஷ்ணன் வம்சத்துச்சேந ஜித்து புத்ரன், பிராஜ்ஞன் தந்தை.
ருசுப்படுத்தல் } மெய்ப்பித்தல், உண்மை வி
ருசுப்பித்தல் } ளக்கல். [குறைவு.
ருது - பருவங்கள், இருதுவாதல், முதுக்
ருதுசாந்தி - இருதுசாந்தி, கூடுதல்.
ருத்ரகோடி - ஒருதீர்த்தம், இதுஒருகாலத் தில் ருத்ரன் ருத்ரகளுக்குப் பிரத்யக்ஷமா கக் கோடிரூபமாய்த்தோன்றினமையால் இப்பெயர் பெற்றது. [பெரிய வீணை.
ருத்ரவீணை - உருத்திரவீணை, 28 நரம்புள்ள
ருத்ரன் - உருத்திரன், ருத்ரன்.
ருத்ராபிடேகம் - உருத்ராபிடேகம், உரு த்திரசூக்கத்தைச்சபித்துச்சுத்தமான நீரா ல் அபிஷேகம் செய்வது. [லந்தை விதை.
ருத்ராக்ஷம் - உருத்திராக்கம், ஒருவகை இ
ருத்ரோத்காரி - வருடம் 60-ல் 57-வது வருடம். [கங்கைக்கரையிலேயுள்ளமலை.
ருத்ரபர்வதம் - ஜாஹ்நவி கட்டமென்னும்
ருத்ரபிரயாகை - மந்தாகினிக்கும் அளகநந் தைக்கு மிடையேயுள்ள க்ஷேத்ரம்.
ருத்ரர் - இவர் அஜன், ஏகபாதன், ஹரன்,

அஹிர்ப்புத்யன்,ஸம்பு, த்ரியம்பகன், அபராஜிதன், ஈஸானன், திரிபுவனன், துவஷ்டா, ருத்ரன் எனப்பதினொருவர், இவர்களே ருத்ரன்மாகஸபுத்ரரெனவழங்குவர், பிரஹ்மமாகஸ புத்ரரெனவும் படுவர்.

ருத்ரன் - திரி மூர்த்திகளு ளொருவராகிய ஸம்ஹாரகர்த்தா, சிவன்பெயர், பரஹ்மாவினது புத்ரருளொருவர், ஸ்ரீகண்ட ருத்ரர்முதலியருத்ரபேதமெண்ணிலவாகும்.

ருத்ராக்ஷம் - இது ஒருவகை இலந்தைமரத்தின்விதை,இவ்விதைஇமயமலைச்சார்பில் உண்டாகின்றது, இம்மரங்கள் அடர்ந்த இடத்திற்குப் பதரி (இலந்தை) வனம் என்று பெயர், சிவபக்தராற் தரிக்கப் படுவது, திரிபுராஸுரர்களைவதம்பண்ணப் புறப்பட்டபோது காயத்ரியை ஜபிக்கக் கண்களிலிருந்து வீழ்ந்த கண்ணீர்த்துளிகள் இம்மணிகளாயினவென்பர். [குக்கல்.

ருப்புக்கல்-ஆட்டுக்கல்,குடைகல்,மாவரைக்

ருப்புதல் - அரைத்தல்.

ருமாலே - உருமாலே, மேல்வேஷ்டி.

ருமானி - மாதுளை விதைபோன்று சிவந்த நிறமுள்ள மாம்பழம்.

ருமை - ஸுக்ரீவன் பாரி.

ரும்மான் - மாதுளை, ருமானியா மாம்பழம்.

ருசன் - சியநன் புத்ரனுகிய பிரமதிக்கு கிருதாசியென்னும்அப்ஸரசிடத்திற்பிறந்தவன்இவன்ஒருருஷி,இவன்பாரி பிரமத்வரை, இவன் தனது பாரி ஒரு பாம்பாலிறக்க, அவளைத் தனது தபோமஹிமையாலெழுப்பி,அன்றுமுதற்பாம்புகளைக் கொல்வதே விரதமாகக் கொண்டவன். அவ்விரதத்தை நீக்கினவர் டுண்டுபம்என்னும் சர்ப்பரூபந்தாங்கியிருந்தவராகிய சஹஸ்ரபாதமுனிவர். ருசன் மகன் ஸுநகன்.

ருஷி - முனி, முற்றுந்துறந்தோன்.

ருஷிமூலம்-ரிஷிமூலம்.

ருக்ஷயன் - மஹாவீரன்புத்ரன். இவன்புத்திரர்,புஷ்கராருணி, கவி, திரயாருணி என மூவர், இவர்கள் பிராமணராயினர்.

ரூ

ரூ - ஓர் உயிர்மெய் யெழுத்து.

ரூட்டி -தொந்தரை, ஒழுங்கு, நேர்மை.

ரூபகதாளம் - சப்ததாளத்தொன்று,ரூபகம்.

ரூபம் - உருவம், அழகு, ஒலியாகிய புலன்.

ரூபலாவணியம் } வடிவழகு,ரூபாலாவணி
ரூபலாவண்யம் } யம், பேரழகு.

ரூபவதி - வடிவழகுள்ளவள், ரூபாவதி.

ரூபா - ரூபாய், பணம். [சிறந்த அழகு.

ரூபாகாரம் - முழுவடிவம், பூரணகிருதி,

ரூபாரூபம் - சகளநிஷ்களம்,உருவஅருவம்.

ரூபாவாகிகள் - ரூபாநதிதீர வாஸர்கள்.

ரூபாஸ்வன் - கிருதாஸ்வன்,கிருதாச்சுவன்.

ரூபித்தல் - மெய்ப்பித்தல், ருசுப்பித்தல்.

ரூபை - சுக்திமந்த மென்னுமிடத்திலிருந்து பாய்கின்ற வொரு நதி.

ரூமாலம் - மாவிலிங்கம், ஒருவகைமரம்.

ரூமிமஸ்தகி - மரவகை. [டை. ரூல்கழி.

ரூல்கட்டை-காகிதத்தில்நேர்கோடிடும் கட்

ரெ

ரெ - ஓர் உயிர்மெய் யெழுத்து.

ரெங்கு - ஒருவகைக்காகித ஆட்டம், ரங்கு.

ரெட்டி - தெலுங்கு தேசத்து வேளாளர்.

ரெட்டித்தல் - இரட்டிப்பு, சமஞ்சேர்தல்.

ரெட்டு-ரெட்டுத் துணி, முரட்டுத் துணி.

ரெட்டை - இரட்டை, சேர்ந்திருப்பது.

ரெப்பை - இரப்பை, இமை, நிமை.

ரே

ரே - ஓர் உயிர்மெய் யெழுத்து.

ரேகை - இரேகை, கைகால்களிலுள்ள கோடு, பூகோளத்தின் அயன மத்திய ரேகை.

ரேகைசாத்திரம் - இரோகை சாஸ்திரம்.

ரேக்கு-மெல்லிய தகடு, பூவிதழ். [வண்டி.

ரேக்காவண்டி-ஒருவர் உட்கார இடமுள்ள

ரேங்குதல்-சினமூளுதல், கோபங்கொளல்.

ரேசகம்-இரேசகம்,நேர்வாளம்,வெடியுப்பு.

ரேணுகை - பரஸுராமன்தாய், ஜமதக்நிபாரி.

ரேணுமதி - நகுலன் பாரி.

ரேதஸ் - இரேதசு, சத்துவ தாது.

ரேவதி-ரைவதபர்வத மீதில் தாமரை தடாகத்திற்பிறந்தஒருகந்யகை, இவளை பிரமஸன்என்னுமுனிவர்எடுத்து வளர்த்தார், இவள் புத்ரன் ரைவதமநு, (2) பலராமர் பாரி,ரேவதன்புத்ரி,இவள்சர்யாதி பௌத்ரனுகிய ரைவதன்புத்ரன்,குகுத்மிபுத்ரி யெனவும்படுவள்,(3) நக்ஷத்ரங்களு ளொன்று, (4) ஹரிஷ்டன் பிப்பலன் என் போர்க்குத் தாய், மத்ரன் பாரி. [லன்.

ரேவந்தன்-ஒரு குஹ்யகன்; குபேரன் ஏவ

ரேவு - துறைமுகம், ஆயத்துரை. [நடை.
ரேழி-இரேழி,வீட்டுவாயற்படியின் உட்புற
ரேஸ்-பந்தயஓட்டம், குதிரை மனிதர் முத
லியோர் பந்தயம் ஓடுதல்.

ரை

ரை - ஓர் உயிர்மெய் யெழுத்து.
ரைப்யன்-ஈளிரன், இவன் ஸுமதி புத்தி
ரன், (2) அர்த்தாவஸு, பராவஸு
என்போரின் தந்தை.
ரைவதம்-ஒருமலை. இது குமுதமலை யென
வும் படும். இது துவாரகைக்குச்சமீபத்தி
லேயுள்ளது. ஹிருதவாக்குஎன்னும் ருஷி
யால் சபிக்கப்பட்டரேவதிஇம்மலைமேல்
வீழ்ந்து ஒரு தடாகமாயினமையால் இப்
பெயர் பெற்றது.
ரைவதன் - ஐந்தாம்மநு, பிரியவிரதன் வம்
ஸத்துத் துர்த்தமனுக்குரேவதியிடத்திற்
பிறந்த புத்திரன்.(2)ஆநர்த்தன் புத்ரன்.

ரொ

ரொ - ஓர் உயிர் மெய்யெழுத்து.
ரொக்கக்கடை - பணம் கடன் கொடுத்து
வாங்கும் கடை.
ரொக்கக்காரன் - முதலாளி.
ரொக்கம் - கையிருப்புப் பணம். [பிணை.
ரொக்கஜாமீன் - பணமாகக் கொடுக்கும்
ரொட்டி-கோதுமைமாவாற்சுட்டபண்டம்.
ரொம்ப - நிரம்ப, பூரணமாக, நிறைய.
ரொஸை - அருவருப்புடையது. [ரோதனை.
ரொஷ்டு - சீர்கூலவு, தொந்தரை,கஷ்டம்,

ரோ

ரோ - ஓர் உயிர்மெய் யெழுத்து.
ரோகசாந்தி - நோய் குணமாகுகை.
ரோகணி-கடுகுரோகணி, ஓர் மருந்துப்பூடு.
ரோகநிவாரணம் நோய் நீங்கல்.
ரோகசாஜம் - கூயரோகம், சயரோகம்.
ரோகஸ்தன் - ரோகி, வியாதிக்காரன்.
ரோகிணம்) (1) ஒரு மலை, இந்த மலை
ரோஹிணம்) யிலே அநேக ரத்நாகரங்
களுண்டு, (2) ஒரு மரம், இதிலே வால
கில்லியர் தலை கீழாகத் தூங்கித் தவஞ்
செய்து கொண்டிருந்த போது கருடன்
அமிர்தங் கொண்டுவரப்போனது,அவன்
தனக்கு வழியுணவாக யானையையும் ஒரு
ஆமையையும் கொண்டுபோய், இந்த
மரத்தின் கிளையொன்றின் மேல் உட்
காந்தவுடனே இவனது பாரம் பொறுக்க
மாட்டாமல் அந்த மரம் ஒடிந்து சாய்ந்து
விட்டது, சாய்ந்தவுடனே அந்த மரம்
விழுவதற்கு முன்னே கருடனெழுந்து
தன் காலிலகப்பட்ட அக் கிளையையும்
அவ்வுணவையும் உடன்கொண்டு போய்
நிஷதபுருஷ மலையிலே யிறங்கித் தனது
உணவைத் தின்று விட்டான். அந்த
மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த வால
கில்லியரையும் அந்த மரத்தோடு இந்த
மலையில் விட்டான்.
ரோகிணி - உரோகிணி, ஓர் நட்சத்திரம்.
ரோகிதாசர் - இவர் சக்கிலியர் என்னும்
மரபில் தோன்றி லோகோபகாரியாய்
விஷ்ணு பக்தராய் அதிகாலையில் எழுந்து
நீராடல் முதலியவைகளை முடித்து
தோலால் ஆசன முதலியன அமைத்து
துளசி வனமடைந்து சாளக்கிரமமாகிய
திருமால் திருவடிவத்தை அத் தோலா
சனத்தில் வைத்து வழிபாடு செய்து
வந்தனர்; இதனை அவ்விடம் வந்த
மறையோன் கண்டு 'தோலின் மேல்
சாளக்கிராமத்தை வைத்துப் பூசித்தல்
ஆசாரமுடையதோ' வென்ன அதற்குத்
தாசர் 'எக்காலத்தும் எப்பொருளினும்
நிறைந்திலங்கும் எம்பெருமானைத் தியா
னிக்கும் இதயம் தோலல்லவா? பூசிக்கும்
கைகள் தோலல்லவா?' என்றார். அது
கேட்ட அந்தணன், 'உபவீதம் தரித்த
மறையோரே பூசை புரிய அருகர், நீ
இவ்வாறு பூசை செய்யாதே' என ரோகி
தாசர் 'என்னிடம் உபவீதமிருக்கின்றது'
என்று தன் மார்பைப் பிளந்து வீளங்கு
கின்ற நூலை வெளியாக்க,வேதியன் உண்
மை கண்டு தாசரை வணங்கிச்சென்றான்.
ரோக்கா - சிறுவிண்ணப்பம், ருக்கா,
துண்டுச் சீட்டு.
ரோசம் - ரோஷம், மானம்.
ரோசனை-ஆலோசனை,யோசனை, கோரோ
சனை, வசுதேவர் பாரிகளுளொருத்தி.
ரோதனம் - அழுகை, தடை, தொந்தரை,
ரோதனை, ரொஷ்டு.
ரோதை - வண்டியின் சக்கரம்.
ரோந்து - இராக்காவல், லோந்து. [புரளி.
ரோந்தை - அசங்கியம், கெட்டவார்த்தை,
ரோமகபுரி-இது பூர்வகாலத்திலே,மேகலா

ரேகையிலேஇலங்கைக்கு மேற்கே தொண்ணூறு பாகை தூரத்திலிருந்த பட்டணம்.

ரோமகர்ஷணன்-(1) வேதவியாசபகவானுடையமாணாக்கராகிய சூதர்,இவர்அநேக புராணேதிகாசங்களை யுபதேசித்தவர். (2) உக்ரசிரவசுவின் தந்தை.

ரோமகன்-ரோமகபுரியிலிருந்து ஆரிய தேசத்தில்வந்துஆரியசாஸ்திரங்களைக்கற்று விளங்கின முற்காலத்துப் பண்டிதன்.

ரோமகஜ்யோதிஷ வித்தாந்தங்களு ளொன்று. இது ரோமகன் என்னும் பண்டிதன் செய்தது.

ரோமபாதன் - (1) தருமரதன் புத்திரன், இவருக்குச் சந்ததி யில்லாததால் ஸ்ரீராமன் தந்தையாகிய தசரதன் புத்திரி சாந்தையையெடுத்து வளர்த்தவன் (2) விதர்ப்பன் மூன்றும் புத்திரன்.

ரோமம் - மயிர், உரோமம், கேசம், குஞ்சி.

ரோமஸன்-இந்திரன் ஏவலால் அருச்சுநன் காகலோகத்தி லிருக்கின்ற னென்று தருமருக்குணர்த்தி,அருச்சுநனைத்தீர்த்த யாத்திரை செய்ய ஏவிய முனிவர்.

ரோமபுரி-இத்தாலி தேசத்துத் தலைநகர், ஹிருஸ்தவகுரு வசிக்குமிடம்.

ரோஜனம் - காய்ச்சிய பிசின், ரோசனம்.

ரோஜா - பூச்செடிவகையி னொன்று.

ரோஷம் - மானம், கோபம்.

ரோஹிணி - தக்ஷத்திரங்களு ளொன்று, தக்ஷன் மகள்,சந்திரன்அதிப்பிரீதையாகிய நாயகி, (2) பலராமன் தாய், வசுதேவன் மனைவி.

ரௌ

ரௌ - ஓர் உயிர்மெய் யெழுத்து.

ரௌத்ரிதம்-பாரதயுத்தத்துக்குப் புறப்பட்ட கௌரவசேனைக்குப் பாசறையா யிருந்த வனம். [கோபம்.

ரௌத்திராகாரம் - பயங்கர வடிவம், கடுங்

ரௌத்திராசுவன் - அஹம்யாதி புத்திரன், இவனுக்குகிருதாசியிடம்பிறந்த புத்திரர் பதின்மர்களில் மூத்தவன் இருசேயன்.

ரௌத்திரி - ஆண்டுகள் அறுபதில் ஐம்பத்து நான்காவ தாண்டு.

ரௌரவம்-ஒருநரகம், இதில் மிகுந்தபாவம் செய்தவர்களேயமபடர்வீழ்த்திவருத்துவர்.

ல

ல - ஓர் உயிர்மெய் யெழுத்து.

லகரி - பேரேலை, லாகிரி.

லகாய்த்தல் - நிரம்ப உண்ணல், மேற்கொளல், தண்டித்தல். [வெழுத்து.

லகாரம்-லகரத்தைக்குறிக்கும் சொல், லகர

லகான் - கடிவாளம், கவினம், கலியம்.

லகிமா - அட்டமகாசித்திகளிலொன்று.

லகு - இலகு, தணிவு, சுலபம், பதுங்கல்.

லகுபிகு - தளர்த்தலும் பிகுதலும். [தம்.

லகோடா - காகிதவுரை, முத்திரைக்காகி

லக்கடி - சிறுகொம்பு, முழங்கைக்கொம்பு.

லக்கடியடித்தல் - கோலாட்டம் ஆடுதல்.

லக்கம் - இலக்கம், இலட்சம், எண்.

லக்காடி - அயோக்கியன், போக்கிரி.

லக்கினம்-இலக்கினம்,இராசி, முகூர்த்தம்.

லக்கு - இலக்கு, வாய்ப்பு, குறி.

லக்கோடா - லகோடா, காகித உரை.

லங்கடா-நொண்டி, சண்டி, சீர்கெட்டவள்.

லங்கணம் - இலங்கணம், பட்டினி.

லங்கணி - இலங்கணி, இராவணன் கோட்டை வாசற் காவற்காரி.

லங்கரடித்தல் - அந்தரடித்தல், மாறுபடல்.

லங்கர்-நங்கூரம், கப்பலை நிறுத்தும் கருவி.

லங்கர்பாய்ச்சுதல் - நங்கூரம் போடல்.

லங்காசுரன் - இலங்காசுரன், ராவணன்.

லங்காதகனம்-இலங்காதகனம், அனுமான் லங்கையை எரித்தது.

லங்காதேவி-தருமன் மனைவியாகிய தக்ஷன் மகள், இவளுக்கு லம்பா என்றும்பெயர்.

லங்காபுரி / லங்கை ராவணன் ராஜதானி, இது தென் சமுத்திரத்திலே திரிகூட பர்வத சிகரத்திலே விசுவகர்மாவினால் நிருமிக்கப்பட்ட பட்டணமும், அதைச்சேர்ந்த நாடுமாம், இது முதலிலே மால்யவானுக்கு ராஜதானியாகி, பிறகு குபேரனுக்கு இராஜதானியாகி அதன் பிறகு ராவணனாலே அபகரிக்கப்பட்டது, இந்தப் பட்டணத்துக்கு ஏழு மதில்களுண்டு, இதைச் சேர்ந்த நாட்டைச்சேர்த்து எழுநூறு காதம் விஸ்தாரமுடையது, இது சூரிய சித்தாந்தத்திலே சொல்லப்பட்ட மேகலா நகரங்கள் நான்கனுள் ஒன்று, சோதிடசாத்திரத்துக்கு நாடி ஸ்தானமாயிருந்தது, இப்போதுள்ள லங்கை மேகலா ரேகைக்கு வடக்கே அதி தூரத்திலிருப்பதாலும் ஆதிலங்கா

புரி மேகலா ரேகையிலிருந்தமையாலும் கடலாற் கொள்ளப்பட்ட இலங்கையின் ஒரு சிறு கூறே தற்காலத் துளதாதல் வேண்டும்.

லங்கினி - இலங்கை நகரத்தைக் காவல் செய்திருந்த ஓரரக்கி, இவள் வாயுபுத்ரனுகிய ஆஞ்சநேயனுல் கொல்லப்பட்டாள்.

லங்கேசன் - இலங்கையரசன், இராவணன்.

லடாய் - வாய்ச்சண்டை, கலாட்டா.

லட்டி - குறிந்தடி, லத்தி, கிட்டித்தடி.

லட்டு-இலட்டு, சர்க்கரை மிட்டாய். [நகர்.

லண்டன்-இலண்டன், இங்கிலாந்தின் தலை

லண்டி - சண்டி, துர்நடத்தையுள்ள பெண்.

லதாக்கிரகம் - கொடியாலமைந்த வீடு.

லதை - ஒரு அப்ஸர ஸ்த்ரீ. இவள் பூங்கொடி போல்பவளாதலால் இவளுக்கு இப்பெயருண்டாயிற்று. (லதை-கொடி)

லத்தி - இலத்தி, குதிரை, கழுதை முதலியவைகளின் சாணி, லட்டி, லத்தை.

லத்திபோடுதல்- பயப்படுதல், அஞ்சுதல்.

லத்தை - இலத்தை, கிருபை, குதிரை, யானை முதலியவற்றின் சாணம், லத்தி. [குறி.

லபக்கெனல்-விழுங்கற் குறிப்பு, முழுங்கற்

லபிதம்-இலவிதம், சித்தித்தல், இலபித்தல்.

லபோபண்டிகை - காமன் பண்டிகை.

லபோலபோவெனல் - திறந்த வாயுடன் துக்கம் காரணமாக வாயில் அடித்துக் கொள்ளுதல்.

லப்தஹானி - தந்திர வகையிலொன்று.

லப்பம் - இலப்பம், எண்ணெய்ப்பசை சாக்கு இவைகள் சேர்த்துச் செய்த மக்கு.

லப்பை-தமிழ்நாட்டுத் துருக்கர், லெப்பை.

லம்பாடி - மேற்கு மலைத்தொடரில் வசித்து வரும் ஒருவகைச் சாதியார்.

லம்பு - ஒரு பெருந்தொகை. பெரிய புள்ளி.

லம்போதரன் - விநாயகன், கணபதி.

லயம்-இலயம், ஐக்யம், கூடுகை, மூர்ச்சை.

லயித்தல் - இலபித்தல், கலத்தல், லபிதம்.

லலாடம் - நெற்றி, கிரீட வுறுப்பு. [ஊழ்.

லலாடலிபி - தலை யெழுத்து, பூர்வ விதி,

லலிதாதேவி - உமா தேவி, உமை.

லவங்கம் - இலவங்கம், கிராம்பு.

லவணம் - இலவணம், உப்பு.

லவணசுரன் - மது புத்திரன், இவன் உலகத்திலுள்ள சாதுக்களெல்லாரையும் வருத்துவதே தொழிலாகக்கொண்டு திரியுங்காலத்திலே சத்ருக்களுலே கொல்லப்பட்டவன்.

லவண்டி - இலண்டி, லண்டி, சண்டி.

லவம் - பசுவின் வால்மயிர், இலவம்.

லவலேசம் - சிறிய அளவுள்ளது, சிறு துளி.

லவன் - ஸ்ரீராமர் புத்திரன்.

லவாடி - வேசி, தூர்த்தை, கெட்டவள்.

லவாலவாவெனல் - அவஸ்தைக் குறிப்பு.

லவுக்கார் - மட்டமான சுண்ணும்புப் பூச்சு.

லவிதம் - இலீலை, சுலபம், லாவண்ணியம், மாதுரியம், இங்கிதம்.

லஸ்கர் - மாலுமி, வேலையாள்.

லஸ்தர் - அலங்காரத் தொங்கல்.

லக்ஷணம் - இலக்ஷணம், இலக்கணம்.

லக்ஷதீபம் - இலக்ஷ தீபம், கோவில்களுக்கு ஒரு லக்ஷம் விளக்கேற்றல்.

லக்ஷாதிபதி } லக்ஷ ரூபாய்க்குமேல் மதிப்
லக்ஷாதிபன் } புள்ள சொத்துடையவன்.

லக்ஷார்ச்சனை - கோவிலில் சுவாமிகளின் திருநாமங்களை லக்ஷம் தடவை உச்சரித்து அருச்சிப்பது.

லக்ஷியம் - இலக்ஷியம், இலக்கணை, அபிமானிப்பது.

லக்ஷ்மி - இலக்குமி, இலட்சுமி, லக்ஷிமி.

லக்ஷ்மணவதி - கௌடபுரி, லக்ஷ்மணபுரி.

லக்ஷ்மணன் - ஸ்ரீராமருக்குத் தம்பி, தசரதனுக்குச் சுமித்திரையென்னு மனைவியினிடத்திற் பிறந்த மகன், இவன் தன் தமையனிடத்தில் அதிக அன்புடையவன், அன்பினுல் ஸ்ரீராமர் வநவாசத்திற்குச் சென்றபோது அவருடன் தொடர்ந்து சென்று அவர்க்கு நேரிட்ட துன்பங்களைத் தானும் அநுபவித்தான், இவனை உலகத்தாரெல்லாரும் சகோதர வாஞ்சைக்குச் சிறந்த இலக்கியமா யெடுத்துப் புகழ்ந்து பேசுவார்கள்.

லக்ஷ்மி - திருப்பாற்கடலைத் தேவர் அசுரராகிய இருதிறத்தாரும் கடைந்து அமிர்தம் பெற்ற காலத்தில் அந்தக் கடலிற் ரேன்றிய பெண்ணரசியார், இவர் திருமாலின் வலத் திருமார்பில் வாழ்ந்திருப்பவர், இவர் செல்வங்களுக்கெல்லாம் அதிதேவதையா யிருப்பவர். இவர் பிரம்மாவுக்குப் புத்ரியாகிய சியேஷ்டா தேவிக்குப் பின் பிறந்தவர், இவ்வம்மையாருக்குப் பல பெயர்களுண்டு.

லக்ஷ்மீகடாக்ஷம் - பாக்கியம், ஐஸ்வரியம்.

லக்ஷ்மீகாந்தன் - திருமால், லக்ஷ்மீபதி.

லக்ஷ்மீசுவரர் - திருநின்றியூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

லா

லா - ஓர் உயிர்மெய்யெழுத்து.

லாகிரி - கஞ்சா முதலிய போதை தரும் வஸ்து, வெறி, பித்தம்.

லாக்-காவாய் மதகு,நீரைத்தடுக்கும் அணை.

லாங்கலி-பலராமன். [கு மோர் நதி.

லாங்கலினி - மகேந்திர மலையிலுற்பத்தியா

லாசகன் - சிவன், இறைவன், பிரமன்.

லாச்சார் - சங்கடம், கஷ்டம், உழைப்பு.

லாடக்காரன் - இலாடக்காரன், லாடங் கட்டுவோன்.

லாடங்கட்டுதல்-மாடு குதிரை முதலியமிரு கங்களின் கால்களுக்கு இரும்புத்தகடு கட்டுதல்.

லாடசங்கிலி - இலாடசங்கிலி.

லாடு - இலட்டு,சருக்கரை மிட்டாய் வகை.

லாடுலகாடு - இன்பதுன்பம், சுகதுக்கம்.

லாத்துதல் - உலாத்துதல், சாரிபோதல்.

லாந்தர் - கண்ணாடி விளக்கு, இலாந்தர்.

லாபலோபம் - இலாப நஷ்டம், நயநட்டம்.

லாயக்கு - தகுதி, செறுக்கு, இறுமாப்பு.

லாயம் - குதிரை கட்டுமிடம், கொட்டடி.

லாலலே-கொஞ்சுகை,தாங்குகை,லாலனை.

லாலா-மார்வார் தேசத்தார்,மார்வாடி.[பா.

லாலி-கலியாணப்பாட்டு, மங்கலவாழ்த்துப்

லாவணி - ஒருவகை இசைப் பாட்டு.

லாவண்யம் - ஒளிரும் அழகு. [கல்.

லாவாதேவி-லேவாதேவி,கொடுக்கல் வாங்

லாவுதல்-இரஞ்சுதல், பரவுதல், பற்றுதல்.

லி

லி - ஓர் உயிர்மெய் யெழுத்து.

லிகிதம் - இலிகிதம், கடிதம், பத்திரம்.

லிக்குறடு-லெக்குறடு,கம்மாளர் கருவிவகை

லிங்கபுராணம்- இலிங்கபுராணம்.

லிங்கம் - சிவபெருமானுர், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டுய்யும்படி கொண்ட நிர் குண சொரூபமாகிய சகளவடிவம்.

லிங்கவடிவின்தத்துவம் - லிங்கத்தின் பீடமும் லிங்கமும் சதாசிவ வடிவம், அது கன்ம சாதாக்கிய வடிவமெனவும் படும், பீடம் சக்தியையும் லிங்கம் சிவத் தையும் குறிக்கும். இந்தச் சாதாக்கியத் திருமேனி சர்வான்மாக்களையும் சர்வ அண்டங்களையும் தன்னுள்ளே 'யடக்கிக் கொண்டிருக்கும் பரமகாரணனை விளக் குதலால். உலகத்து மக்கள் தியானித்து வழிபடுதற்குச் சிறந்த குறியாயுள்ளது. இதினுஞ் சிறந்ததாகிய குறிவேரொன்று மில்லை, இந்த லிங்கம் பரார்த்த மென் றும் இஷ்டமென்றும் இருவகைப்படும். அவற்றுள் பரார்த்தம், சுயம்பு, நாணம், தைவிகம், ஆரிடம், மாநுடம் என ஐந்து வகையாம். இஷ்டலிங்கம் சுவார்த்தமாக பூசிக்கப்படுவதாய் ஒருவன் தன் குருவி னிடத்துப் பெறுவது. விக்ரஹங்களுக் குப் பொதுப்பெயர்.

லிங்காயத்து - லிங்கக்கட்டி, வீரசைவம்.

லிபி - எழுத்து, விதி, லபி.

லீ

லீ - ஓர் உயிர்மெய் யெழுத்து.

லீடாலீடநியாயம் - நக்கினதையே திரும்ப நக்குவது போல் ஒரு முறையிலேயே பல காலும் பார்க்கும் நியாயவகை.

லீலாமானுஷன் - மானுஷ வேஷதாரியா கிய கடவுள்.

லீலாவதி - (1) இரணியகசிபன் மனைவி, பிரகலாதன் தாய், (2) பாஸ்கராச்சாரி யார் புத்ரி, இவள் பொருட்டே லீலாவதி யென்னும் பிரபல கணிதநூல் பாஸ்கரா சார்யராலே செய்யப்பட்டது, லீலாவதி தான் கணித நூலிலே வல்லவளாகிய பின்னர் தான்செய்த நூல்களையெல்லாம் தன் தந்தை பெயரால் பிரசுரித்தாள் என் பர், அழகிய பெண், (3) தூர்க்கை.

லீலாவிநோதம் - உல்லாச விளையாட்டு, மக் கள ஆடல்.

லீலை - விளையாட்டு, சுத்த விளையாட்டு.

லு

லு - ஓர் உயிர்மெய் யெழுத்து.

லுங்கி-முகம்மதியர் அணியும் ஆடைவகை.

லுச்சா - தூர்த்தன், அயோக்கியன்.

லுத்தன்-உலோபி, பிசுனன். [நஷ்டம்.

லுப்தம்-உலோபம், எழுத்துக்கேடு, அழிவு,

லுப்தன்-உலோபி,லுத்தன், அயோக்கியன்.

லூ

லூ - ஓர் உயிர்மெய் யெழுத்து. [ருள்.

லூசு-உயர்ந்த வெள்ளிச்சரிகை, தனிப்பொ

வாடி } கொள்ளை,உபத்திரவம்,கொள்ளை
வாட்டி } யும் கலகமும்.
வாதாதந்துநியாயம் - சிலம்பி தன் வாயா லிழைத்த நூலைத் தானேயுட் கொள்வது போல் தான் செய்ததைத் தானே யழிப் பதாகக் கூறும் நெறி.

லெ

லெ - ஓர் உயிர்மெய் யெழுத்து.
லெகு - இலகு, சுலபம், இலேசு.
லெக்கு - இலக்கு,குறி. [கருவியிலொன்று.
லெக்குறடு - லக்குறடு, லிக்குறடு, தட்டார்
லெக்ஷிகன் - தமிழ் லெக்ஷிகன், தமிழ்ப் பதத்தை இங்கிலீஷில் உச்சரிக்கும்முறை யையும் அதன் அர்த்தத்தையும் விளக்கும் அகராதி.
லெச்சி - லச்சி, இலக்குமி, பூமடந்தை.
லெச்சை - இலச்சை, வெட்கம், ஈணம்.
லெட்சம் லக்ஷம், நூறு ஆயிரம், இலக்கம், ஒரு பேரெண். [தஞ் செய்வோன்.
லெப்பை - லெவை, பள்ளிவாசலில்புரோகி
லெவல் - மட்டம், மட்டம் பார்க்குங்கருவி.

லே

லே -ஓர்உயிர்மெய்யெழுத்து,விளிச்சொல்
லேகைகன் - எழுத்துவேலை செய்பவன்,இரா யாசக்காரன். [தாணி, பேனு.
லேகணி - லேகனி, எழுதுகோல், எழுத்
லேகம் - லேக்கியம், எழுத்து. [பேஞ்.
லேகனி - எழுதுகோல், எழுத்தாணி,
லேகா-லேகாவுண்டை, மாசினம். [ந்து.
லேகாவுண்டை - கஞ்சாவுண்டை,நல்லமரு
லேகியம் - நக்கியுண்ணுதற்குரியது,நசுக்கி யுண்ணும் மருந்துவகை.
லேகை-இரேகை [காலவளவு,இலேசவணி.
லேசம் - அற்பம், இரண்டு கலே கொண்ட
லேசு - இலேசு, ஒருவகை அலங்காரப்பின் னற்றுணி, சரிகை. [வஸ்திரம்.
லேஞ்சி - இலேஞ்சி, உருமாலே, மேல்அங்க
லேடி - பெண், யௌவனமாது. [வன்மை.
லேபனம் - பூசுதல், பூச்சுப்பொருள், தாது
லேலம் - எலம். [கொடுக்கல் வாங்கல்.
லேவாதேவி - லேவாதேவி,இலேவாதேவி.

லை

லை - ஓர் உயிர்மெய் யெழுத்து.
லைங்கம் - லிங்கபுராணம், இது நந்திகேசு ரால் சொல்லப்பட்டது, இது பதினே ராயிரங் கிரந்தங்களே யுடையது.

லொ

லொ - ஓர் உயிர்மெய் யெழுத்து.
லொங்காரி - அடங்காப்பிடாரி, லண்டி.
லொங்குதல் - பணிந்து நடத்தல். [குறிப்பு.
லொங்குலொங்கெனல்-உடலின் தளர்ச்சிக்
லொடலொடத்தல்-கட்டுக்குலேதல், உள்ளீ டின்றிக்கூடாயிருத்தல், பயனற்றுப் போதல்.
லொடலொடவெனல் - கட்டுக்குலேவின் கு றிப்பு,வாந்தியெடுத்தற்குறிப்பு, ஜலம்முத லிய திரவப்பொருள்களேப் பாத்திரங் களிற் பெய்தற்குறிப்பு,தளர்ச்சிக்குறிப்பு.
லொடலொட்டை-கட்டுக்குலேந்தது, உள்ளீ டின்றிக்கூடானது,பயனற்றது. [மாகை.
லொடுக்கு - பள்ளம்,குழி, உள்ளேவெற்றிட
லொட்டி - கள்,கள்இறக்கும்குடுவை. [ரன்.
லொட்டிமூஞ்சி - கட்குடியன்,போதைக்கா
லொட்டுலொடுக்கு } சில்லறைச்சாமான்
லொட்டுலொஸ்கு } கள், பலபண்டம்.
லொட்டை - தாழ்ந்தது, ஒருவகைப் பணி காரம்.
லொட்டைதாளித்தல் - எழையாதல்,பலம் குறைதல், கலேத்துப்போதல்.
லொள்ளெனல் - நாய் குரைத்தற் குறிப்பு.
லொஸ்கு - ஒன்றுமின்மை, வெறுமை.

லோ

லோ - ஓர் உயிர் மெய் யெழுத்து.
லோககண்டகன்-உலகத்துக்கு முட்போன் றவன், மிகக்கொடியோன்.
லோககதி - உலக நடைமுறை, காலகதி.
லோககர்த்தா - உலகத்துக்கு முதல்வன்.
லோகசஞ்சாரம் - பலதேசங்களில் யாத் திரை செய்கை.
லோகசஞ்சாரி-பலதேசங்களில் யாத்திரை செய்வோன், தேசாந்திரி.
லோகசாக்ஷி-யாவுங்காணுஞ்சான்று,கடவுள்
லோகசிந்தூரம்-அயச்சிந்தூரம்.

லோகத்திரயம் - மூவுலகு, உலகின் மூல காரணமானது.
லோகபாலர் - பூமிக்கு நாற்புறத்திலும் லோகா லோக பர்வதத்திலே யிருந்து பூமியைக் காக்கின்றவர்கள் சுதந்வா, சங்கன், ஹிரண்ய ரோமன், கேது மந்தன் என்னும் நால்வர் இப்பெயர் பெறுவர்.
லோகமரியாதை - உலக வழக்கம், தேசாச்சாரம்.
லோகமாதா - உலகமாதா, பார்வதி.
லோகம் - உலகம், உலோகம், பிரபஞ்சம்.
லோகரஞ்சனம்-உலகிற்குமகிழ்ச்சி தருவது.
லோகரக்ஷகன் - உலகத்தைக் காப்போன்.
லோகவேடிணை - உலகவேடிணை, உலகபந்தம்.
லோகாசாரம் - உலகத்தாரின் ஒழுக்கம்.
லோகாசாரியார் - பிள்ளைலோகாசாரியர்.
லோகாதிபதி - உலகமுதல்வன், சக்கரவர்த்தி.
லோகாதீதம்-உலகத்துக்குஅப்பாற்பட்டது
லோகாந்தரமடைதல் - மரணமடைதல்.
லோகாந்தரம் - வேறுலகம், உலகின்கடை.
லோகாபவாதம் - பெரும்பழி, உலகம்பழிக்கும் பழிமொழி.
லோகாபிராமம்-உலகிற்குமகிழ்ச்சி தருவது
லோகாயதம்-லோகாயுதம், உலோகாயதம்.
லோகாயதன் - உலோகாயதன்.
லோகாலோகம் - சக்கரவாளகிரி, இதுவட்டவடிவாயிருப்பது, இதுவரைக்குந் தான் சூரியகிரணம் வியாபிக்கும், மனிதர் வசிக்கவொண்ணுதபூப்பிரதேசம் அலோகமென்றும், வசித்தற் குரியது லோகமென்றும் சொல்லப்படும்,பூகோளத்தின் அதியுத்தரபாகமும் அதிதக்ஷிணபாகமும் அலோகமாம். இரண்டையும் பிரிக்கு மெல்லையே லோகாலோக பர்வதமாம்.
லோகிதாசன் - அரிச்சந்திரன் மகன்.
லோகித்தியநதி - தேவாரணியத் தருகேயுள்ளவோர் நதி. [ஜனசேனாபுரிதல்.
லோகோபகாரம் - உலக நன்மை, பொது
லோக்கியம் - லௌகீகம் உலகவழக்கு.
லோட்டா - நீர்குடிக்கும் பாத்திரவகை.
லோபம்-கெடுதல்விகாரம், குறைவு, உலோபம், கடுஞ்செட்டு, வஞ்சனை.
லோபன்-உலோபன்,தரித்திரன், பிசுனன்.
லோபாமுத்திரை - அகஸ்தியமுனிவர்மனைவி, விதர்ப்ப தேசத்தரசன் மகள்.
லோபி - உலோபி, பிசுனன், கடையன்,
லோபித்தல் - உலோபித்தல்.
லோபை - பார்வதி, லோகமாதா.
லோமநாதன் - அங்கதேசத் தரசன்.
லோலக்கு-லோலாக்கு, காதணி. [லன்.
லோலன்-விளையாடித்திரிபவன், ஸ்திரீலோ
லோலா-லோலை, லவணசுரன்தந்தையாகிய மதுவின் தாய். [வகைலோலக்கு.
லோலாக்கு - காதில் தொங்கவிடும் அணி
லோலாயப்படுதல் } லோல்படுதல்.
லோலுப்படுதல் } [தல்.
லோலோவென்றலைதல் - திண்டாடித்திரி, மலிந்துகிடத்தல். [கிடத்தல்.
லோல்படுதல் - திண்டாடுதல், மலிந்து

லௌ

லௌ - ஓர் உயிர் மெய்யெழுத்து.
லௌகிகதந்திரம் - உலக விஷயங்களில் சாமர்த்தியம்.
லௌகிகதருமம் - உலகியல், உலகநடை.
லௌகிகம் - உலகிற்குரியது,உத்தியோகம்.
லௌகீகவிருத்தி - லௌகீகவிருத்தியை விடுத்து உலகநடைக்குரிய தொழில்புரிதல்.
லௌகீகன் - உலகப்பற்றுடையவன், சமய வொழுக்க விதிகளைச்சரிவரப்பின்பற்றாதவன், லௌகீக விருத்தியில் ஒழுகுபவன், உலகியலறிந்தவன்.

வ

வ- ஓர் உயிர்மெய் யெழுத்து, கால் என்ற பின்ன வெண்ணின் குறி.
வகதி - எருது, காற்று, தினேகிதன், வசதி.
வகது-எருது, பிரயாணக்காரன், பிரயாணி.
வகத்திறம் - வாகை, வெற்றி, ஜயம்.
வகந்தம் - காற்று, குழந்தை, கால், மகவு.
வகம் - காற்று, வழி, வாகனம், குதிரை.
வகரம் - வகர எழுத்து, வஃகான்,வகாரம்,
வகரிசூதனன் } பகாசுரனை வதைத்தோன்
வகனிசூதனன் } வீமன், வாயுமைந்தன்.
வகன் - குபேரன், பகன் என்னும் அசுரன்.
வகாரத்திரவியவித்தை-பஞ்சாக்கர வித்தை கருணை மூன்று வித்தை.
வகாரம் - வகரவெழுத்து,வகரம், வஃகான்
வகாரவுப்பு - கல்லுப்பு, பாறையுப்பு.
வகாலத்து-வக்காலத்து.[வெளியொழுங்கு.
வகிடு - வகிர்ந்த முன்தலை மயிரின் இடை
வகித்தல் - சகித்தல், தாங்குதல். [யுறுப்பு.
வகிரங்கம் - பகிரங்கம்,வெளிப்படை,வெளி
வகிரா - எருமை,மகிழம்,காரா. மகிஷம்.

வகிரிந்திரியம் - வகிரேந்திரியம்.
வகிரியாகம் - வெளியரங்கப் பூசை. [தல்.
வகிருதல் - அறுத்தல்,பங்குசெய்தல்,போழ்
வகிரெடுத்தல்-உச்சியினின்றும்நெற்றிவரை மயிரை ஒழுங்குபடப் பிரித்தல். [புலன்.
வகிரேந்திரியம்-அறிகருவி,அறிகருவியாகிய
வகிர் - நரம்பு,பிளவு,வகிரென்னேவல்,வழி, வார், கீறு, பிளந்த, துண்டு, தோல்வார்.
வகிர்தல் - வகிருதல், துண்டாக அறுத்தல், பிளத்தல், கீறுதல், கோதுதல், பங்கு செய்தல், வகிரெடுத்தல்.
வகுஞ்சம் - இராத்திரி, கங்குல், இரவு, நிசி.
வகுணி - ஒலி, ஓசை, சத்தம்.
வகுண்டம் - கவிழ்த்தும்பை, கவுதும்பை.
வகுண்டிகம் } கஞ்சாங்கோரை,ஓர்வகைத்
வகுண்டிகை } துளசி.
வகுண்டிமடம்- வாலுளுவை, வகுந்துமடம்.
வகுதி - வகுப்பு, பகுப்பு, பகுதி, பிரிவு.
வகுத்தல் - வகைப்படுத்தல், கூறுபடுத்தல், பகிர்ந்து கொடுத்தல், இனம்பற்றிப்பிரித்தல், பகுத்துக் கணக்கிடல், நியமித்தல், படைத்தல், பிரித்தற் கணக்கு.
வகுத்தான் - ஊழ், பழவினை,பூர்வகன்மம்.
வகுத்திரம் - தெப்பம்,மிதப்பு, புணை. [ன்.
வகுத்திராபிகாரம்-பஞ்சேந்திரியம், ஐம்புல
வகுத்துக்காட்டல்-ஓர்யுத்தி;அது: தொகுத்துக்காட்டியதை வேறுவிரித்துக்காட்டல்.
வகுந்து - வழி, முறைமை, ஒழுங்கு, கிரமம்.
வகுந்துமடம் - வாலுளுவை,வகுண்டிமடம்.
வகுப்பு - அழகு, பகுப்பு, கூறுபடுத்துகை, இனம்பற்றிப்பிரிக்கை,சாதி,தரம்,சந்தம்.
வகுப்புவாரி - சாதிவீதம், குல விகிதம்.
வகுமை - மகிழ்ச்சி, சந்தோஷம், இன்பம்.
வகுலி - மீன்வகையி லொன்று.
வகுளபாஸ்கரர் / வகுளபூஷணர் / வகுளமாலாதரர் } சடகோபர்,நம்மாழ்வார், வகுளாபரணர்.
வகுளப்பிகம்-வஞ்சிக்கொடி, சீந்திற்கொடி.
வகுளம் - மகிழமரம்,மகிடமரம்,வகுளமரம்.
வகுளாபரணம் - இராகவகையி லொன்று.
வகுளாபரணர் - சடகோபர், நம்மாழ்வார்.
வகுளி - ஒலி, ஓசை, சப்தம், நாதம்,தொனி.
வகுளிநாதர் - நவநாதசித்தரி லொருவர்.
வகுள் - சமுத்திரப்பச்சை,சமுத்திரப்பாலை.
வகை - இனம், உபாயம்,எது,கூறுபாடு,தரம், பகுப்பு, முதல், முறை, வகுப்பு, வழி, வகை, காரணம், தன்மை இடம்,உறுப்பு.
வகைச்சூத்திரம் - தொகுத்துச் சொல்லப்பட்டதனை வேறுக வகுக்குஞ் சூத்திரம்.
வகைதல் - பிரிவுபடுதல்,வகைப்படுத்துதல், வகிர்தல், ஆராய்தல். [உணர்ச்சி.
வகைதெரிவு - விவேகம், தெளிவு, காரிய
வகைதேடுதல் } உபாயந்தேடுதல்,வழியறி
வகைபார்த்தல் } தல்,மார்க்கமுணர்தல்.
வகைதொகை - விவரம், ஒழுங்கு. [ணல்.
வகைபுனைதல் - வகைபண்ணல், வழிகா
வகைப்படுதல் - பங்குபடுதல், ஒழுங்குபடல்.
வகைப்படுத்தல் } பங்கிடுதல்,வகையாகப்
வகைப்படுத்துதல் } பிரித்தல்.
வகையகத்திணை - தொகையாயுரைத்தபொருளை வகையறுத் துரைத்தல்.
வகையரா } முதலியன, தொடர்ச்சி, கூட்
வகையறு } டம். [கூறுபா டறிதல்.
வகையறிதல் - செய்யும்முறை தெரிதல்,
வகையார் - ஜாதியார்,பிரிவினர்.
வகையிடுதல் - வகைப்படுத்தல், ஒழுங்கு படுத்தல்.
வகையுளி - அவ்வச்சொன்முடிவே சீர்முடிவாக்கித் தளை கொள்ளாமல் வேண்டிய விடத்துச்சீர்முடிவுசெய்துதளை கோடல்.
வக்கட்டை - கடவான், செய்யக் கடவான்.
வக்கணம் - நாகரிகம், நிந்தை, பட்டப்பேர், மார்பு, வர்ணனை, விற்பன்னம்,வக்கணை.
வக்கணைத்தி - ஓர் மருந்துவகைப் பூண்டு.
வக்கணித்தல் - விவரித் துரைத்தல்.
வக்கணை - வக்கணம், கடிதம் முதலியவற்றின் முகப்பு வாசகம், உபசாரவார்த்தை, வருணனை, சமத்காரப்பேச்சு.
வக்கரனை - எல்லா இராகங்களும் குழலின் ஆறுதுவாரங்களிலேஉண்டாகும்படி விரல்களால்சமஞ்செய்துசாதிக்கை. [கட்டை.
வக்கரை - பக்கரை,வரிந்துகட்டும்முரட்டுக்
வக்கா - ஓர்பட்சி,கொக்குவகை,சிப்பிவகை.
வக்காமணி - ஓர் மணி, சிப்பிமணிவகை.
வக்காலத்து } வழக்கு நடத்த வக்கீ
வக்காலத்துநாமா } லுக்குக் கொடுக்கும் அதிகார பத்திரம். [வெக்காளித்தல்.
வக்காளித்தல் - வானம் வெளிவாங்குதல்,
வக்கான் - வைக்கான், வகர வெழுத்து.
வக்கிரகஞ்சம் - கரவாளம்,வளைந்தகாங்கள்.
வக்கிரகண்டகம் - வளைந்தமுள்ளுடையது, இலந்தை, துண்டில் முள்.
வக்கிரகண்டம் - இலந்தை, குலவலி.
வக்கிரகதி - வக்கிரம்,கிரகத்தின்பிற்போக்கான நடை.
வக்கிரகம் - மழையாலுண்டாம் தடை.
வக்கிரகிரகம் வக்கிரித்துள்ள கிரகம்.
வக்கிரக்கண் - மாறுகண்,துஷ்டப்பார்வை.

வக்கிரக்கிரீபம் } ஒட்டகம், வளைந்த கழுத்
வக்கிரக்கிரீவம் } துடையது.
வக்கிரசஞ்சு } கருடன், கிளி, வலியான்,
வக்கிரசுச்சு } வளைந்த மூக்கு.
வக்கிரசந்திரன்-இளம்பிறை, பிறைக்கிற்று.
வக்கிரசாரம் - கிரகத்தின் வக்கிர கதி.
வக்கிரசிருங்கி - வளைகொம்புப் பசு.
வக்கிரசுஞ்சு - கிளி, வளைந்த மூக்குப்பட்சி.
வக்கிரதந்தம் - வளைந்தபல், சிங்கப்பல்.
வக்கிரதந்தன் -இயமன்,காலன்,விநாயகன்.
வக்கிரதுண்டம் - வக்கிரசுச்சு, வளைதந்தம்.
வக்கிரதுண்டன் - பிள்ளையார், விநாயகன்.
வக்கிரநக்கிரம் - கிளி, வக்கிரசுஞ்சு.
வக்கிரநக்கிரன் - பிசுநன், உலோபி. [யன.
வக்கிரநாசிகம் - ஆந்தை,கிளி,கழுகு, முதலி
வக்கிரபுட்பம் } முருக்கம் பூ, அகத்திப் பூ,
வக்கிரபுஷ்பம் } முருக்கமரப் பூ.
வக்கிரம் - கலக்கம், கொடுமை, நிமிர்தல், பொய், பொறுமை, மீளமடங்குதல்,மீளுதல், வஞ்சனை, வட்டம், வளைவு, வக்கிர கதி, நேர்மையற்றசெலவு, கோணல்வழி.
வக்கிரவத்திரம் - பன்றி, கேழல், சூகரம்.
வக்கிரவாலதி - நாய், சுருண்டவாலி. [ளி.
வக்கிரவாலி-நாய், வக்கிரவாலதி,வால் சுரு
வக்கிரன் - உருத்திரன்,குரூரன்,சனி,செவ்வாய்,தந்தவக்கிரன்,மாறுபாடுள்ளவன்[து.
வக்கிராங்கம்-அன்னம், வளைந்தவடிவுடைய
வக்கிராங்கி - கடுகுரோகணி,கூனி,கடுலோகம்.
வக்கிராஸ்தமனம்} திரும்புதலோ டத்தம
வக்கிராத்தமனம் } னம். [வகை.
வக்கிராந்தபாஷாணம் - புறவிப் பாஷாண
வக்கிரித்தல் - திரும்புதல், மனங்கோணியிருத்தல், ஆலாபனஞ் செய்தல்.
வக்கிரீகரணம் - கோணலாய்ச் செல்லுகை.
வக்கிரோதயம் - திரும்புதலோ டுதித்தல், கிரகம் வக்கிரகதியில் உதயமாகுதல்.
வக்கில்} நியாயஸ்தலத்தில்பிறர்க்காகவழக்
வக்கீல்} கெடுத்து வாதிப்போன்.
வக்கு - தொட்டி, தோல், வழி, வேகுகை.
வக்குதல் - வதக்குதல்,வாட்டுதல்.[சட்டை.
வக்குத்திரிகரணம் - படுக்கை, மெத்தை,
வக்குநார் - மரவகை, சணல் நார்.
வக்குரித்தல் - வேகுதல், குமுங்கல்.
வக்குவக்கெனல்-களைப்புமேலிடஓடும் ஓலிக்குறிப்பு, கடுமையாய் இருமற்குறிப்பு, கடுமையாய் இடித்தற் குறிப்பு.
வக்தா - எடுத்துச்சொல்வோன்,பேச்சாளி.
வக்திரம் - வாய், முகம்.
வக்துரு - சொல்வோன், வக்தா, பேச்சுக்காரன்.
வக்த்ரயோதி - விப்பிரஜித்தி புத்திரன்.
வங்கக்கடல் - கப்பலோடுங்கடல்,வங்காளக்கடல்.
வங்கக்கல் - சுக்கான்கல், சுன்னக்கல்.
வங்கசிந்தூரம் } ஈயபஸ்பம், ஈயசெந்தூ
வங்கசெந்தூரம் } ரம்.
வங்கசேநகம் } வெள்ளகத்தி, அகத்தி வ
வங்கசேனகம் } கையி னொன்று.
வங்கடம்-வமிசம்,வங்கிசம்,கோத்திரம்.[ன்.
வங்கணக்காரன்-உற்றநண்பன்,சோரநாயக
வங்கணக்காரி - வங்கணத்தி, சினேகிதி.
வங்கணம் } உற்றநேசம், சிநேகம், காதல்,
வங்கனம் } கத்திரி,செங்கத்திரி,சேம்பு.
வங்கணதூஷணம் - அவதூறுபண்ணுதல்.
வங்கணத்தி - உற்றதோழி, சோரநாய்கி.
வங்கணன்-உற்றதோழன்,வங்கனக்காரன்.
வங்கதோஷம்-ஈயத்தாலுண்டாம்தோஷம்.
வங்கநடம் - வெண்காரம், வெங்காரம்.
வங்கநீறு - ஈயமணல், வங்கசுன்னம்.
வங்கபற்பம் } வங்கசெந்தூரம், ஈயத்தின்
வங்கபஸ்பம் } பற்பம். [சுக்கான்கல்.
வங்கமணல் - வங்கநீறு,படிப்பினை, சுன்னம்,
வங்கம் - ஆற்றுமடக்கு, தகரம், ஈயம், கத்தரிச்செடி, கருத்து, சிறுகத்தரி, துத்தநாகம்,தேயமைம்பத்தாறினொன்று;இது: கௌடதேயத்தைச் சார்ந்திருப்பது, பதினெண்பாடையினு மொன்று, மரக்கலம், வளைவு,வெள்ளி,வழுதுணை,அலை,வறுமை.
வங்கம்விளையும்கல் -வெள்ளைச்சுக்கான்கல்.
வங்கர் - ஓர்சாதியார்,வங்கதேசத்தார்,சண்டாளர், நெய்தனிலமாக்கள். [வுப்பு.
வங்கவுப்பு-உப்புவகை,பாறையுப்பு, வங்காள
வங்கனம் - சேம்பு, வங்கணம், சினேகம்.
வங்கனர் - ஓர் சங்கப்புலவர்.
வங்கன் - பலியின் இரண்டாம் புத்திரன், இவனால் அரசாளப்பட்டநாடு வங்கநாடு, சண்டாளன், தரித்திரன்.
வங்கா - காளம், பறைவகை, ஊதுகொம்பு.
வங்காரக்கண்டி - ஒருவகைச் சேலை.
வங்காரம் - உலோகக்கட்டி, பொன், வணிதம், செப்பம்.
வங்காரவச்சி } கீரைவகையி னொன்று, ஓர்
வங்காரவாசி } பச்சிலை.
வங்காளக்குடாக்கடல்-இந்தியா பர்மா தேசங்கட்கு இடைப்பட்ட குடாக்கடல்.
வங்காளத்திப்பிலி - ஓர்திப்பிலி.[காளபாத்.
வங்காளபாத்து-ஓர்வகைத்தயிர்க்கூட்டு,பங்

வங்காளப்பச்சை-ஓர்வர்ணம்[மஞ்சள்வகை.
வங்காளமஞ்சள் - மகளிர் பூசிக்குளிக்கும்
வங்காளம்-தேயமைம்பத்தாறினொன்று[து.
வங்காளவாத்து-வாத்துவகை,வங்காளபாத்
வங்காளி - வங்காள தேசத்தான், வாழை.
வங்கான் - சில்லறை ஆபரணம்.
வங்கி - ஓர் கைவளை, துடிவேலி, நாணயக் கடைக்குநாட்டுக்கோட்டையாரால்வழங் கப்படும் சொல், பாங்கி, கொடுவேலி.
வங்கிக்காலை - கழுத்தணிவகையினொன்று.
வங்கிசம் } வமிசம், கோத்திரம், ஜாதி,
வங்கிஷம் } இனம்.
வங்கிசன் } வமிசத்திற் பிறந்தவன், உறவி
வங்கிஷன் } னன். [வாய்க்கங்கணம்.
வங்கிநெளிவு - மகரவாய் மோதிரம், மகர
வங்கியசூடாமணி - சண்பக பாண்டியன், தருமி இவன் காலத்தி லிருந்தவனே.
வங்கியசேகரன் - விக்ரமச்சோழன்காலத்தி லே மதுரையில் அரசுபுரிந்தபாண்டியன், இவன்சோமசுந்தரக்கடவுளிடத்துத் தமி ழ்ச்சங்கப் பலகை பெற்றவன், கடைச் சங்கத்தைத்தாபித்து அதற்கு வேண்டிய நிபந்தனைகளே யேற்படுத்திநூலாராய்ச்சி யும் நூல் செய்வித்தலுமாகிய இவைகளா லேயே தமிழை விருத்தி செய்தவன்.
வங்கியம் - இசைக்குழல், மூங்கில், வளை.
வங்கிலம் - முள், கடு, கண்டகம். [யல்.
வங்கிவளையல் - வளையல்வகை, நெளி வளை
வங்கு - அளை, கழுதைப்புலி, கற்புழை, சந்து, மலைக்குகை, மரப்பொந்து, மரக் குழி, ஒருவகை மேகப்படை.
வங்குக்கட்டை } மரக்கலத்தறி, கப்பலிலு
வங்குக்கால் } ள்ள ஓர் மரம்.
வங்குசம் - கூகைகீறு, ஓர் வகை மருந்து.
வங்குளம் - வங்கூழ், கொடுவினை. [பழம்.
வங்குஸ்தான் - மங்குஸ்தான், ஓர் வகைப்
வங்கூழ் - காற்று, வாதம், வளி.
வங்கை - பகை, விரோதம், குரோதம்.
வசகம் - கொறடு, கொடுவேலி.
வசக்கட்டு - ஆட்சி, ஒப்படைத்த பொருள், செலவுக்கு முன்னுகக் கொடுத்த பணம்.
வசக்குதல்-படியப்பண்ணல், வசையப் பண் ணல், வளையப்பண்ணுதல், வசப்படுத்து தல், வதக்குதல். [சக்கம், நேரின்மை.
வசக்கேடு - சரீரமெலிவு, சுகவீனம், எக்கச்
வசங்களித்தல் - ஆட்சியையிலக்கல், கட்டு மீறுதல், நிறை தவறல்.
வசங்கெட்டவன்-இட்ட மில்லாதவன், சுக மற்றன், நபுஞ்சகன், நிலைமை கெட்ட வன், ஒழுங்கீனன். [கைப்பற்றுதல்.
வசஞ்செய்தல்-வசப்படுத்துதல், அடக்குதல்
வசட்டி - வயிரமணி, வச்சிரமணல்.
வசதி-இடச்சுகம், இரா, இருப்பிடம், நல்லி டம், மருதநிலத்தூர், வீடு, சௌகரியம்.
வசதிக்கேடு-சுகவீனம். [சதாபலம்.
வசத்திற்சோதினி - எலுமிச்சை, சம்பீரம்,
வசநாபி } நஞ்சு, வச்சநாபி, விஷம், பெருங்
வசநாவி } கசப்பு.
வசநீயதை - நிந்தை, வசை.
வசநீயம் - வார்த்தை. [வம், இளவேனில்.
வசந்தகாலம் - சித்திரை வைகாசியின் பரு
வசந்தகுசுமாகரம் - ஒருவகை மருந்து.
வசந்தகோஷி - குயில், காளகண்டம்.
வசந்தங்களித்தல்-வசந்தனடித்தல். [பன்.
வசந்தசகன் - மன்மதன், வசந்தனது நண்
வசந்தசமுகன் - காமன், புட்பபாணன்.
வசந்ததரு } மாமரம், வசந்தமாதம், வசந்த
வசந்தருது } காலத்தில் தளிர்த்துப் பூக் கும் மா முதலியன.
வசந்தத்திருநாள் - மஞ்சணீர்த் திருவிழா, வசந்தோற்சவம், வசந்த நாள். [மரம்.
வசந்தமாதம்-குயில், சித்திரை மாதம், மா
வசந்தத்திருவிழா - வசந்தோற்சவம்.
வசந்தநாதன்-மன்மதன், வசந்தன்.
வசந்தபைரவி - இராகவகையி னொன்று.
வசந்தப்புதல்-முறை கேடாதல், அறிவு மய ங்குதல். [சிறுதென்றல் வீசுமண்டபம்.
வசந்தமண்டபம் - இளைப்பாறு மண்டபம்.
வசந்தமலர்-இலவங்கம், கராம்பு. [முல்லே.
வசந்தமல்லிகை-ஓர் கொடிமல்லிகை, வன
வசந்தமாலை- (1) ஓர் பிரபந்தம்; அது: தெ ன்றலைச் சிறப்பித்துப் பாடுவது. (2) மா தவி தோழி, இவளுக்குக் கூனி யென் றும் பெயர்.
வசந்தம்-இந்திரன் மாளிகை, இளவேனில், ஓரிராகம், சின்னமுத்து, சுகந்தம், தென் றற் காற்று, வாசனை, சித்திரைமாதம், வ சந்தோற்சவம், சல்லாபம், சுகம்.[காலம்.
வசந்தருது - இளவேனிற் பருவம், வசந்த
வசந்தவிழா - வேனில் விழா, வசந்தோற்ச வம்.
வசந்தனடித்தல்-வசந்தன் கூத்தாடல், கும் மியடித்தல், தென்றல்வீசல். [மன்மதன்.
வசந்தன்-ஓர்கூத்து, குரங்கு, தென்காற்று,
வசந்தா - இராகவகையினொன்று.
வசந்தி - இருவாட்சி, மன்மத பாணம்.
வசந்திகை } தேமல், தூத்தி, சுணங்கு.
வசந்தியை }

வசந்தோற்சவம் - கோயிலில் வசந்தகாலத்தில் நடைபெறும் திருவிழா.
வசப்படல் } வசமாதல், அதீன மாதல்,
வசப்படுதல் } உட்படல், உடன்படல்.
வசப்படுத்தல் } வசமாக்கல், அதீனமாக்
வசப்படுத்துதல் } குதல். [சக்கம்.
வசப்பிழை-பெலகீனம், வசக்கேடு, எக்கச்
வசமாக்கல்-ஆட்சிகொடுத்தல். [படல்.
வசமாதல் - ஆட்சியாதல், இணக்கல், அகப்
வசம் - அமைச்சல், ஒழுங்கு, கீழ்ப்படிதல், கைவசம், துணைத்தனம், நிலையம், பிறப்பு, அதீனம், ஆட்சி, நேர், நிலைமை, இயலுகை, வசம்பு, மூலமாய். [வசார்.
வசம்பு-மினகு, வசா, வாசாமினகு, வசவாசி,
வசரம்-கோழி, குக்குடம், குருகு.
வசலு - சத்துரு, வீரோதி, மாற்றூர்.
வசலை-ஓர்கொடி, பாலை, பசளை. [றிருத்தல்.
வசவசவெனவிருத்தல் - கொசகொசவென்
வசவண்ணர் } (12)ஆம்நூற்றாண்டில் வாழ்
வசவதேவர் } ந்த வீரசைவ மதஸ்தாபகர்.
வசவபுராணம்-வசவதேவராகிய வீரசைவப் பெரியார்களின் மகாத்மியம் கூறும்நூல்.
வசவல்லி - மரவகையி னொன்று.
வசவன்-பசுவின் ஆண்கன்று, வசவதேவர்.
வசவாசி - வசம்பு, மூக்கில். [தையுள்ளவள்.
வசவி - துட்டை, தேவதாசி, கெட்டநடத்
வசவு-இழிவுரை, வசை, மாற்றுரை. [மை.
வசளை - பசளை, வசலை, இளங்கீரை, இலை
வசனநடை-உரைநடை, வாசகநடை.
வசனநிர்வாகர் - வார்த்தையிற் சதுரர்.
வசனம்-அரைப்பட்டிகை, சொல், பழமொழி, புடவை, வாசகம், வீடு, உடை.
வசனுபாசம் - ஓரளவைப் பிரமாணம்.
வசனுவி-வக்சநாபி, பச்சைநாபி. [ரித்தல்.
வசனித்தல் - சொல்லல், விபரித்தல், விவ
வசனிப்பு-பேச்சு, உச்சரிப்பு, சொல்லுதல்.
வசன்-எல்லை, நேர், ஒழுங்கு.
வசன்கட்டு-எல்லை, வரம்பு, நியதி.
வசா-வஜ்ரா, வசூல், சேகரிப்பு, தண்டல்.
வசாரம்-அபிப்பிராயம், எண்ணம், மதிப்பு.
வசார்-நெருப்பு, வசம்பு. [கம்.
வசாளியம்-மினகு, மரீசம், மிரியல், கோள
வசி - இருப்பிடம், கழுமுள், குற்றம், கூர்மை, சூலம், தழும்பு, திரட்சி, வசியம், வாள், மழை, பிளவு, தாழ்ச்சி, வசியவித்தைக்குரிய சொல், நீர், வெள்ளை வெண்காயம்.
வசிகம்-மினகு, மல்லவாசம், வசாளியம்.
வசிகரணம் - கலைஞான மறுபத்து நான்கி னொன்று, புணர்ச்சிக்கிணக்கம், மன்மதன் கணையினொன்று, வசியென் னேவல், வாள்.
வசிகரம் - சீந்தில், வசியன், வசீகரணம், அழகு, ஆனைத்திப்பிலி, வசீகரம்.
வசிகரித்தல் - வசப்படுத்தல், வேண்டுதல்.
வசிகரிப்பு - மன்றாட்டு, விண்ணப்பம்.
வசிகன் - சுவாதீனன், சுதந்தரம். [ருவர்.
வசிட்டம் - வாசிஷ்டம், சப்தரிஷிகளில் ஒ
வசிட்டன்-ஓரிருடி, பிரமனது மானச புத்திரருள் ஒருவர், இவர் தவத்தால் மிகச் சிறந்தவர், இக்ஷ்வாகுவமிசத்தரசரெல்லாருக்கும் இவரே குலகுரு, இவர் சப்தரிஷிகளுள் ஒருவர், இவர் மனைவி அருந்ததி, புத்திரர் சக்தி முதலிய நூற்றுவர், இவர் மூற்காலத்திலே தகக்ஷன்மகளாகிய ஊர்ச்சை யென்பவளை மணம்புரிந்து அவளிடத்திலே ரஜன், கோத்திரன், ஊர்த்வபாகு, சவநன், அநகன், சுதபன், சுக்ரன் என்னும் ஏழு புதல்வரைப் பெற்றார். இவ்வெழுவரும் சுவாயம்புவ மன்வந்தரத்திலே சப்த ரிஷிகளாக இருந்தார்கள், இவர் முன்னே பிரமாவின் மானசபுத்திரராக இருந்தபோது நிமி சாபத்தால் சரீரமிழந்து, பிறகு மித்ராவருணர் களுக்குப் புத்திரராகப் பிறந்தார். (அகஸ்தியன் காண்க) பிறகு வியாசராகப் பிறந்தவரு மிவரே.
வசித்தல்-பிளத்தல், வகுப்படுதல், வளைதல்.
வசிதை - கீழ்ப்படுத்தல், மருட்டுதல். [தல்.
வசித்தல்-தங்கல், வசனித்தல், வசியம் செய்
வசித்துவம்-அட்டமாசித்தியினொன்று; அது யாவரும் வணங்கநிற்றல்.
வசிநி - வன்னிமரம், கலிசம், சமி, குலிசம்.
வசியகரன்-வசியஞ் செய்வோன். [மை.
வசியமை - வசியஞ் செய்யும் மை, மயக்கு
வசியம்-கராம்பு, கைவசம், மணப் பொருத்தம் பத்தினொன்று, வசமாதல்; அஃது அட்கருமத்தொன்று. [வெட்டுக்காரர்.
வசியர்-வைசியர், வசியஞ் செய்வோர், முக
வசியை - பதிவிரதை, உத்தமி, குலமகள்.
வசிரம்-ஆனைத்திப்பிலி, கடலுப்பு.
வசிவு-வளைவு, கமான், மேல் வட்டம்.
வசினி-வன்னி, நெருப்பு, தீக்கடவுள்.
வசிஷ்டன்-வசிட்டன். [செய்யும் ஆற்றல்.
வசீகரசக்தி-மனதைக்கவரும்சக்தி, வசியஞ்
வசீகரணம்-கீழ்ப்படுத்தல், வசியப்படுத்தல்;
இது: அறுபத்துநாலு கலைகளிலொன்று.

வசீகரம் - வாசம், வசீகரணம், அகத்தழகு.
வசீகரன் - வசியப் படுத்துவோன், அழகு ள்ளோன்.
வசீகரித்தல் - தன்வசமாக்குதல்.
வசீரம்-யானைத்திப்பிலி, வசிரம், வசிகரம்.
வசீரன் - வீரன், குதிரைவீரன், மந்திரி.
வசு - அட்டவசுக்கள், ஓர்மணி, கிரணம், குபேரன், சிவன், சுவாலே, சூரியன், செல்வம், தேவர், நீர், நெருப்பு, பசுவின் கன்று, பொருள், பொன், மரப்பொது, வெள்வெங்காயம், அக்னிதேவன், இரத்தினம், (1) சேதிராஜனுகிய க்ருதி புத்ரன், (2) நிருகன் வமிசத்துப் புத்திரன், நாய்க்கடுகு.
வசுகந்திகை-நாய்வேளைச்செடி.
வசுகன்-எருக்கு, அருக்கம், அருச்சுனம்.
வசுகிரி - பொன்மலே, மேருமலே.
வசுகீடன்-யாசகன், பிச்சைக்காரன்.
வசுகூபம் } அழுரி, சிறுநீர்,மூத்திரம்,மெய்
வசுகூபு } வழிநீர். [நட்சத்திரம்.
வசுக்கணுள்-அவிட்டம்,இருபத்து மூன்றும்
வசுக்கள் - அட்டவசுக்கள், அட்டருத்திரர்.
வசுசேனன் - கர்ணன், வசுநேசன்.
வசுதன்-குபேரன், திருசதசியன். [லம்.
வசுதாதரம்-மலே, பருவதம், வெற்பு, சை
வசுதாதிபன்-அரசன், பூபதி. [காபுரி.
வசுதாரை - அருகர்க்குரிய ஓர் சத்தி, அள
வசுதேவநந்தனன்-கிருஷ்ணன்,கோபாலன்.
வசுதேவன்- (1) ஆகதுந்துபி, சூரன்புத்திரன், தேவகிநாயகன், கிருஷ்ணபலராமர்களுக்குத்தந்தை, தேவகி இவன் மனைவி, (2) கண்ணுவன்.
வசுதை - பூமி, தேசம், மாலியனென்னும் ராக்கதன் மனைவி யாகிய கந்தருவப் பெண்.
வசுநரை - புளி, அறுசுவையி லொன்று.
வசுநாள் - அவிட்ட நாள், அவிட்டம்.
வசுநேசன்-கர்ணன், வசுசேனன்.
வசுந்தரி-கோசலநாட்டரசன் மனைவி. [னி.
வசுந்தரை-பூமி, பரப்பு, பார், தரணி, மேதி
வசுபதன் - உபரிசரவசுவினது சேனுபதி, கோலாகல சங்கமத்திலே சுத்திமதியிலே பிறந்தவன். [கழை, ஆவணம், புணர்தம்.
வசுபை - புநர்பூச நட்சத்திரம், அதிதிநாள்,
வசுப்பிராணன்-நெருப்பு, அக்கினிதேவன்.
வசுமதி - பூமி, வசுதை, வசுந்தரை.
வசுமந்தன் - சுருதாயு, கலிங்க தேசாதிபதி.
வசுவசி } சாதிபத்திரி, சாதிக்காய், பத்
வசுவாசி } திரி.
வசூரி - மசூரி, அம்மைநோய் வகை,வைசூரி நோய்.
வசூரை - வேசி, வீலமகள், பொதுமகள்.
வசூலித்தல்-வரி முதலியவற்றை தண்டுதல்.
வசூல்-சேகரிப்பு,சேகரிக்கும்வரிமுதலியன.
வசூல்பாக்கி - நிலுவைத் தொகை.
வசை - இகழ்ச்சிச்சொல், கணவன், சகோதரி, குற்றம், பசு, பெண், பெண்யானை, மகள், மலட்டுப்பசு, மனைவி, மூழை, பழிப்பு, அகப்பை. [வோன்.
வசைகவி - வசைகூறும் பாடல், வசைபாடு
வசைச்சொல் - இகழ்ச்சிச் சொல், நிந்தை.
வசைதல் - சூழ்தல், வளைதல், வசை கூறல்.
வசைத்தல்-வளைக்குதல்,சூழ்தல்,வளைத்தல்
வசைபாட்டு - சாபப் பாட்டு, இழிவுரை.
வசைப்படுதல் - வசப்படுதல், குற்றமுறல்.
வசையாடுதல்-நிந்தித்துப் பாடுதல்.[வோர்.
வசையுநர் - வசை கூறுவோர், குற்றங் கூறு
வசைவினை - துன்னடை, துர்நடத்தை.
வச்சகத்தண்டுலம்-வெட்பாலேயரிசி.[பாலே.
வச்சகம்-மலேமல்லிகை,காட்டுமல்லி, வெட்
வச்சணந்திமாலே - தம் ஆசிரியரான வச்சணந்தி முனிவர் பெயரால் குணவீர பண்டித ரென்பவர் வெண்பா யாப்பில் இயற்றியபாட்டியல் நூல். இது முதல் மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என மூன்று இயல் கொண்டது.
வச்சத்தொள்ளாயிரம்- வச்சதேசத்தரசரின் பெருமையை விளக்கித் தொள்ளாயிரம் வெண்பாக்களால் அமைந்த ஒரு நூல்.
வச்சநாபி } வற்சநாபி, வசநாபி, விஷப்பூடு
வச்சனாவி } வகை, கொடியகசப்பு.
வச்சனி - மஞ்சள், நிசி, அரிணம், பீதம்.
வச்சம்-கன்று, வட இந்தியாவிலுள்ள நாடு.
வச்சயம் - கலேமான், கருநிறமுள்ள மான் வகை.
வச்சரி - வேம்பு, நிம்பம், பிசிதம்.
வச்சலமணி -கோரோசனம்,கோரோசனை.
வச்சனி - மஞ்சள், நிசி, அரிசனம், பீதம்.
வச்சாதனி } சீந்தில், அமுதவல்லி, சீவந்தி.
வச்சாதனி } [சை.
வச்சி - காயாமரம், அஞ்சனி, புன்காலி,கா
வச்சிநிம்பம் - வச்சிரநிம்பம். [தேகம்.
வச்சிரகங்கடம் - வச்சிரச்சட்டை, வச்சிர
வச்சிரகங்கடன் - அனுமன்,அநுமான்.[ப்பு.
வச்சிரகங்கணம் - வயிரகங்கணம்,வயிரக்கா
வச்சிரகந்தம் - அரிதாரம். [ட்டு.
வச்சிரகம்-தாமரைக்காய், தாமரைப் பொகு
வச்சிரகம்பம் - வயிரத் தூண்.

வச்சிரகரன்-இந்திரன், வச்சிரபாணி [வசம்.
வச்சிரகவசம்-வயிரச்சட்டை, உறுதியான, க
வச்சிரகாயம் } வச்சிர யாக்கை, திடசரீரம்,
வச்சிரசரீரம் } வச்சிர கங்கடம்.
வச்சிரக்கட்டு - பலமான அமைப்பு.
வச்சிரக்கபாய்-வச்சிராங்கி, வச்சிரக்கவசம்.
வச்சிரக்கல் - வைரமணி, வயிரம்.
வச்சிரக்கோட்டம் - காவிரிப்பூம் பட்டினத்
தில் இந்திரனது வச்சிராயுதம் நிற்க அமை
ந்த கோயில். [வயினதேயன்.
வச்சிரசித்தன் - கருடன், கலுழன், உவணன்,
வச்சிரசுவாலை - கும்பகர்ணன் மனைவி.
வச்சிரசூகிகாபரணம் - ஓர் வகை யம்பு.
வச்சிரசூரியன் - புத்தன், போதிருவந்தன்.
வச்சிரசெலதம் - கோரைக்கிழங்கு, முத்தக்
காசு.
வச்சிரச்சுவாலை - மீன், மின்னொளி.
வச்சிரதசரம் }
வச்சிரதசனன் } எலி, ஆகுகம், மூஷிகம்.
வச்சிரதந்தம் - எலி, பன்றி, முள்பன்றி.
வச்சிரதந்தன் - பகதத்தன் புத்திரன்.
வச்சிரதந்தி - ஓர் புழு, மரந்துளைக்கும் புழு.
வச்சிரதம்பராயகர் - திருமழப்பாடியிலே
கோயில் கொண்டிருக்கும் சுவாமி.
வச்சிரதம்ஷ்ட்ரன் - ராவணன் துணைவரி
லொருவன். [பவன்.
வச்சிரதரன் - இந்திரன், வச்சிராயுதந்தரிப்
வச்சிரதாரணை - ஈதாரணையி னொன்று:
அஃது:அகங்காரத்தையுஞ் சீவதத்துவத்
தையு நீக்கிப் பர தத்துவமே தியானஞ்
செய்யத்தக்க தென்றறிதல்.
வச்சிரதிலதம் - வச்சிரசெலதம்.
வச்சிரதுண்டம் - கருடன், கொசுகு, வலி
யான், கொக்கு.
வச்சிரதுண்டம் } விநாயகன், கணபதி, வக்
வச்சிரதுண்டன் } கிரதுண்டன்.
வச்சிரதுரு - சதுரக்கள்ளி. [ரம்.
வச்சிரதேகம் - வச்சிரயாக்கை, வச்சிர சரீ
வச்சிரத்தலேச்சி - கதண்டு, கருவண்டு.
வச்சிரத்தோன் - வச்சிரதரன்.
வச்சிரநாடு - ஓர் தேயம், இது சோணையாற்
றின் கரையிலுள்ளது.[ன்தாய் சிங்கிகை.
வச்சிரநாபன்- விப்பிரஜித்தி புத்திரன், இவ
வச்சிரநிம்பம் - கருவேம்பு. [பசை.
வச்சிரபசை - வச்சிரம், சவ்வினால் காய்ச்சும்
வச்சிரபஞ்சகவசம்-ஓர் காப்பு, மந்திரவகை.
வச்சிரபாணி -இந்திரன், வச்சிராயுதத்தைக்
கையி லுடையவன். [பாணி.
வச்சிரபாதம்-இடியேறு, இந்திரன், வச்சிர
வச்சிரபீசகம்-கொடிப்புன்கு, கழைக்கொடி.
வச்சிரபீசம் }
வச்சிரபீஜம் } கழற்சிக்காய், கழைவிதை.
வச்சிரபுட்பம் - எட்பூ, எள்ளுச்செடியின் பூ.
வச்சிரப்படை - வச்சிராயுதம். [புடையவன்.
வச்சிரப்படையோன் - வச்சிரா யுதத்தை
வச்சிரமணி - வயிரக்கல், ஓர் இரத்தினம்.
வச்சிரமுஷ்டி - மாலியவந்தன் புத்திரன்.
வச்சிரம்-அத்திபேதி, இடி, எட்பூ, ஓர்பிசின்,
குலிசம், கொடுஞ்சொல், சதுரக்கள்ளி,
சிற்பநூன் மூப்பத்திரண்டிலொன்று, தரு
ப்பை, நித்திய யோகத்தொன்று, பசுமை,
மாட்டுத்தோலினின் றெடுக்கும்பசை, வச்
சிராயுதம், வயிரமணி, வயிரம், மிகவும்
உறுதியானது, மரத்தின்காழ், வச்சிர
நாடு.
வச்சிரயாக்கை - ஊறுபடமாட்டாத சரீரம்.
வச்சிரரசம்-சுத்திசெய்த ரசம்.
வச்சிரரதம் - பன்றி, கேழல். [வகை.
வச்சிரலேபம் - ஒன்றுக இணைக்கும் பசை
வச்சிரவணன் } குபேரன், யட்சராசன்,
வச்சிரவண்ணன் } சோமன். [யா சத்தி.
வச்சிரவராகி -சமணர்கொண்டாடும் ஓர் மா
வச்சிரவல்லி - பிரண்டை, பொழுதுவணங்
கிப் பூச்செடி, சூரியகாந்தி. [ன்று.
வச்சிரவல்லிக்கொடி - கொடிவகையி லொ
வச்சிரவாகு - சூரபன்மன் மைந்தரி லொரு
வன், இவன் தாய் பத்மகோமளை.
வச்சிரவியூகம்-படைவகுக்கும் வியூகவகை.
வச்சிரவிருக்கம் - சதுரக்கள்ளி, புல்லுருவி.
வச்சிரன் - இந்திரன், ஓர் பத்தன், கிருஷ்
ணன் பௌத்திரனுகிய அநிருத்தன்
மகன், கிருஷ்ணவதாரத்தின் பிறகு
இவனே மதுராபுரிக் கரசனுயிருந்தவன்.
வச்சிராகாதம் - இடியேறு, வச்சிரபாதம்,
வச்சிரபதம்.
வச்சிராங்கம் - சதுரக்கள்ளி, கள்ளிவகை.
வச்சிராங்கன் - காசிபன் புத்திரன், இரணி
யாக்ஷன் இரணிய கசிபன் என்போன் இற
ந்த பிறகு திதியானவள் புத்திர வாஞ்சை
யால் தவஞ்செய்து கருப்பங்கொள்ள,
அந்தக் கருப்பத்தை இந்திரன் சேதித்
தான், அப்படிச் சிதைந்த கருப்பமானது
எழு கூறுக ஏழுமருத்துக்கள் பிறந்தார்
கள். அதன் பிறகும் புதல்வர்ப்பேற்றைக்
குறித்துத் தவஞ்செய்து இந்த வச்சிராங்
கனீன்றனன். இந்த வச்சிராங்கன் இந்தி
ரனை வென்று பிரமாவை நோக்கித்
தவஞ்செய்து தாரகனைப் பெற்றனன்.

வச்சிராங்கி - வச்சிராங்கன் மனைவி, தாரகன் தாய், உறுதியான கவசம், வைரம் பதித்த கவசம். [வச்சிரம்.

வச்சிராசனி-இந்திரன் கொடி, இந்திரனது

வச்சிராட்சி - பிரண்டை, வச்சிரவல்லி.

வச்சிராதம்-பன்றி, வக்கிரவத்திரம்,கேழல்.

வச்சிராயுதம் - குலிசம், வைரப்படை.

வச்சிராயுதன்-இந்திரன், பாகசாதனன்.[ம்.

வச்சிராவர்த்தம்-இராமன்வில், கோதண்ட

வச்சிரி - இந்திரன். [என்ற மூன்றுநாடிகள்.

வச்சிரீகரணம் - இடை பிங்கலை சுழிமுனை

வச்சிரை - ஓர் அப்ஸர ஸ்த்ரீ.

வச்சை-வாஞ்சை, பழிப்பு, உலோபம்.

வச்சைமாக்கள்-உலோபிகள், பிசுனர்கள்.

வச்சையம் - மலைமான், கலைமான்.

வச்சையன் - உலோபி. [றும் பேச்சு.

வஞ்சகச்சொல் - மடிப்பான பேச்சு, ஏமாற்

வஞ்சகமூடி - ஆமை, கூர்மம்,உறுப்படக்கி.

வஞ்சகம் - அஞ்சுப்பு,இதுதாமத குணத்தொன்று, குத்திரம், நரி, மடிப்பு, மறைவு.

வஞ்சகவொழிப்பு - பெயர் முதலிய சொற்களால் வருணியத்தினதுதருமத்தை மறுத்தல்,(உ-ம்)இம்மடந்தை கட்கடை நோக்கென்னும் பெயரினைக்கொண் டம்மத வேள் வாளியும். [தந்திரக்காரன்.

வஞ்சகன் - தூர்த்தன், நரி, வஞ்சிப்போன்,

வஞ்சகாசுரம்) கொடிவேலி, கொடுவேலி,

வஞ்சகாரம்) சித்திரமூலம்.

வஞ்சகி - தந்திரக்காரி, ஏமாற்றுபவள்.

வஞ்சசதம் - கபடம், வஞ்சகம், தூர்த்தன்.

வஞ்சநடை - கபடநடை, வஞ்சகச்செய்கை.

வஞ்சநவிற்கியணி - ஓரலங்காரம்; அது: ஒரு காரணத்தாளிகழ்ந்த சத்துவமாகிய குணத்தை மற்றொரு காரணங் கூறி மறைத்தல்.

வஞ்சந்தீர்தல் - பழி வாங்கல். [தல்.

வஞ்சபாவம் - வஞ்சகத் தன்மை, சூது செய்

வஞ்சப்பழிப்பணி - ஓரலங்காரம்; அது: நிந்தையா னிந்தை தோன்றச் சொல்லல்.

வஞ்சப்புகழ்ச்சியணி - ஓரலங்காரம்; அது: பழிப்பினுற் புகழ்ச்சியும் புகழ்ச்சியாற் பழிப்பும் புகழ்ச்சியாற் புகழ்ச்சியுந் தோன்றச் சொல்லல். [மினி, வஞ்சகி.

வஞ்சப்பெண் - காளியேவல் செய்வாள்,சன்

வஞ்சமனம் - கபட மனம். [துக்காரன்.

வஞ்சமனத்தான் - கபட மனமுள்ளவன், சூ

வஞ்சம் - கபடம்,கொடுமை,சிறுமை,பொய், வடிப்பு, மாயம், வாள், வஞ்சினம், அழிவு, வமிசம், பிரபஞ்சம், ஆச்சா.

வஞ்சம்வைத்தல் - பழிவாங்கப் பார்த்தல்.

வஞ்சனம் - ஓர்மீன்,வஞ்சகன்,வஞ்சகம்.

வஞ்சனி - இடாகினி, காளியேவல் செய்வாள், பெண், பார்வதி, மாயையென்னும் தேவதை, வஞ்சகி, ஆணை.

வஞ்சனை - ஆணை, தெய்வப்பெண், பொய், மாயம்,வஞ்சம், வஞ்சகம்,பெண், மாயை.

வஞ்சனைபண்ணுதல்-வஞ்சித்தல். [காரன்.

வஞ்சனையாளன்-வஞ்சிப்போன், வஞ்சனைக்

வஞ்சன் - வஞ்சக முள்ளவன், வஞ்சகன்.

வஞ்சி - ஓர் கொடி, ஓர் பா, சீந்தில்கொடி, குடை, தருமதேவதை, கூகை நீறு,பகைவர் மேற்செலவு, பகைவர் மேற் செல்வார்க்கு மாலை, பெண், வஞ்சியென்னேவல், சேரர் தலைநகரான கருவூர் என்ப தேயன்றி கொடுங்கோளூர் என்பார் சிலர், சிலர் திருவஞ்சைக்களம் என்பர், இவ்விரண்டூர்களும் கொச்சியைச் சார்ந்த நாட்டில் ஒன்றுக்கொன்று சமீபத்திலிருப்பன.

வஞ்சிக்கொடி - கொடி வகையினொன்று.

வஞ்சிச்சீர் - வஞ்சி யுரிச்சீர். [காரன்.

வஞ்சிதன் - வஞ்சிக்கப் பட்டவன், மோசக்

வஞ்சித்தல்-வஞ்சனைசெய்தல்,ஏமாற்றுதல்.

வஞ்சித்தலை - கனிஞிழ லென்னும் வாய் பாடுகளின் பின் நேரசையேனும் நிரையசையேனும் வருவது.

வஞ்சித்தாழிசை - நிரையசையோ டேனும் நேரசையோ டேனும் புணர்ந்து இரு சீரடி நான்கு கொண்டொரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவது. [வருவது.

வஞ்சித்துறை-இருசீரடி நான்கு கொண்டு

வஞ்சிநாடு - சேர நாடு, சேர மண்டலம்.

வஞ்சிப்பா - ஐந்து பாவிலொன்று, அது பெரும்பான்மை வஞ்சித்தலையுஞ் சிறுபான்மை பிறதலையுந் தழுவி இருசீரடியானேனு முச்சீரடியானேனு மூன்று முதலிய பல அடிகளைக் கொண்டு தனிச்சொற் பெற்று அகவற் சுரிதகத்தான் முடிவது. [சடி.

வஞ்சிப்பு - ஏமாற்றுகை, கபடித்தல், மோ

வஞ்சியர் - பெண்கள், தோகையர்.

வஞ்சியர்தரிசனம் - கண்ணுடி, ஆடி.

வஞ்சியான்-சேர மன்னன்,சேர நாட்டான்.

வஞ்சியுரிச்சீர்-நேரசையும் நிரையசையுந்தம் முள்விரவி மூன்றடுத்து நிரையசைமுடிவு பெற்று நிற்பது (உ-ம்) தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி.

வஞ்சிரம்-மீன் வகையினொன்று.

வஞ்சிவிருத்தம் - மூச்சீரடி நான்குகொண்டு வருவது. [வன்.
வஞ்சிவேந்தன் - சேரன், வஞ்சிநகர்த்தலை
வஞ்சினம் - சபதம்,கடுங்கோபம்,கொடூரம்.
வஞ்சுளம் - அசோக மரம், வேங்கை.
வஞ்சுளன் - கரிக்குருவி, காரிப்புள்.
வஞ்சூரன் - மீன் வகையிலொன்று. [லம்.
வட - வடக்கத்தி, வடபாகம், வட மண்ட
வடகடல் - வடதிசைக் கடல்.
வடகம் - உல்லாசம்,ஓர் பணிகாரம், தோல், போர்வை, மேலங்கி, வற்றல்.
வடகயிலாயம் } உத்தர கயிலாயம், வெள்
வடகயிலை } ளியங்கிரி. [லோர் பேதம்.
வடகலை-இருந்தூல், கிரந்தம்,வைணவத்தி
வடகாற்று - வாடை, வடகால்.
வடகிரி - மாமேரு, மேருமலை, குமேரு.
வடகிழக்கு - வடக்குக் கிழக்குஞ் சேரும் கோணத் திசை. [ற்றிசை.
வடகீழ்த்திசை - ஈசானம்,வடகிழக்கு,முய
வடகீழ்த்திசைப்பாலன்-ஈசானன். [டம்.
வடகீழ்த்திசைப்பாலன்குறி-காகம், காரண
வடகீழ்த்திசையானை - சுப்பிரதீபம்.
வடகு - தோல், சருமம், துவக்கு. [திசை.
வடகுணதிசை - வடகிழக்கு, வட கீழ்த்
வடகுரங்காடுதுறை - காவிரிக் கரையிலுள்ள வொரு சிவஸ்தலம். [கிரி.
வடகைலாயம் - திருக்கயிலை, வெள்ளியங்
வடகோடு - வக்கிர சந்திரனின் வடகதி.
வடகோடை - குன்றுவாடை, வடகால்.
வடக்கத்தி-வடக்கிற் குரிய. [நாட்டான்.
வடக்கத்தியான்-வடக்குப் பக்கத்தான்,வட
வடக்கயிறு - தேர் முதலிய இழுக்கும் பெருங் கயிறு, பருக்கயிறு, தேர்வடம்.
வடக்கன்-வடக்கத்தியான்,புகையிலைவகை
வடக்கு-மதிதிசை,யானைத்திசை,வன்றிசை
வடக்குமலையான் - வடமலையான், திரு வேங்கடத்தான்.[எல்லைத்தெய்வம்,காளி.
வடக்குவாசற்செல்வி - கோயிலின் வடபுறத்து
வடக்கன் - வெண்காரம், ஓர் வகை புப்பு.
வடசொல் } கிரந்தமொழி, வடமொழி,
வடதமிழ் } சமஸ்கிருதம். [உதீசி.
வடதிசை - வடக்கு, உத்தரதிசை, உதக்கு,
வடதிசைத்தலைவன் } குபேரன், அளகை
வடதிசைப்பாலன் } யாளி.
வடதிசைப்பாலன்குறி - யானை,கஜம்,தந்தி.
வடதிசையானை - சாருவபூமம்.
வடதுருவம் - வடக்கிலுள்ள துருவம்.
வடதெற்கு-வடக்கும் தெற்கும். [ற் பூமி.
வடதேசம்-பாண்டிமண்டலத்திற்கு வடபா
வடநாடு-வடதேசம், வடபுலம்.
வடநாட்டுத்திருப்பதி - வடதேசத்திலுள்ள திருப்பதிகள்.
வடநூலார் - வடமொழியில் வல்லார்.
வடநூல்-ஸம்ஸ்கிருத நூல். [பாடியபுலவர்.
வடநெடுந்தத்தனார்-இவர் நாலெக்கிழவனைப்
வடநெறி - வடநூன்முறை.
வடந்தை - வடகாற்று. [ளி கொண்டவன்.
வடபத்திரசாயி - விஷ்ணு, ஆலிலையில் பள்
வடபத்தி } ஆலிலை,வடவால விருட்சத்
வடபத்திரம் } தின் இலை. [இந்தியா.
வடபரதம்-பரதகண்டத்திலுள் பிரிவு,வட
வடபாரிசம் - வடக்குப்பக்கம், வடபுறம்.
வடபாலிவேதம் - நவகண்டத்தொன்று.
வடபால்-வடக்குப்புறம். [த்துள் ஒன்று.
வடபால்விதேகம்-வடவிதேகம், நவகண்ட
வடபுலம் - வடதேசம், வடநாடு.
வடபுறம் - வடபக்கம், வடபாரிசம்.
வடபூமி - வடதேசம், வடபுலம்.
வடபெருங்கல் - வடமலை. [ணு ஸ்தலம்.
வடமதுரை - வடநாட்டிலுள்ளதோர் விஷ்
வடமரம்-ஆலமரம்,தொன்மரம்,பூதகோளி.
வடமருது - பூ மருது. [டார்.
வடமர்-பிராமணரி லோர் பேதம், வடநாட்
வடமலை-திருப்பதி,மகாமேரு,மேருமலை.
வடமலையப்பபிள்ளை-நாயகவரசரின் பிரதிநிதியாய்த் திருநெல்வேலிச் சீமையையாண்டவரும் 17-ம் நூற்றாண்டிலிருந்தவரும் மச்சபுராணம்,ஞானூற்றுக்கோவை நாற்கவி வண்ணம், தீர்த்தல புராணம் முதலியன இயற்றியவருமான பிரபு.
வடமலையாண்டவன் } ஓர் கெல், திருப்பதி
வடமலையான் } ப் பெருமாள்.
வடமலையானை }
வடமவண்ணக்கன்பெருஞ்சாத்தனர் } இ
வடமவண்ணக்கன்பேரிசாத்தன் } வர்
வட வண்ணக்கன் பெருஞ்சாத்தனு னெனவும் படுவர், தேர்வண்மலையனைப் பாடிய புலவர் இவரே. [ரம்.
வடமீன்-அருந்ததி, சாலி, துருவ நட்சத்தி
வடமீன்கணவன் }
வடமீன்காதலன் } வசிட்டன், அருந்ததி
வடமீன்கொழுநன் } நாயகன்.
வடமுகம்-வடபாரிசம், வடபால், வடக்கு முகம்.
வடமுகில் - பாண்டியன், கொற்கையான்.
வடமூலகன்-சிவன்,சூலபாணி,கங்காதரன்.
வடமூலநாதர் - திருப்பழனூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

வடமேரு - மகாமேரு, வடவாமுகம்.
வடமேற்கு } வாயுமூலை, வடக்கும்
வடமேற்றிசை } மேற்கும் சேர்ந்த திசை.
வடமேற்றிசைக்குறி - கழுதை, கத்தபம்.
வடமேற்றிசைப்பாலன் - வாயு, காலிலி.
வடமேற்றிசைப்பாலன்குறி - கழுதை.
வடமேற்றிசையானை-புட்பதந்தம். [ஷ.
வடமொழி - கிரந்த மொழி, சமஸ்கிருதபா
வடம் - ஆலமரம், ஊர், ஓர்பண்ணிகாரம், கயிறு, நாணி, பூவரும்பு, மணிவடம், வட்டம், தாம்பு, வில்லின்நாணி, சரம், பலகை.
வடம்பிடித்தல்-வடத்தைப் பிடித்துத் தேரிழுத்தல், தேர்வடம் பிடித்தல்.
வடரம் - தலைச்சீலை, பாய். [பனை.
வடலி - இளம்பனை, பொந்தை, சோற்றுப்
வடல்-ஆல், கல்லால விருக்ஷம். [வடலை.
வடவனலம்-வடவாமுகாக்கினி, வடவனல்,
வடவனல்
வடவாக்கனல் } வடவாமுகம், வடவாமு
வடவாக்கினி } காக்கினி, வடவனலம்.
வடவாசி-ஆலடியில் வசிப்போன். [வர்கள்.
வடவாசுதர்-தேவ மருத்துவர், அசுவினிதே
வடவாநலம்
வடவாமுகம் } ஊழித்தீ, வடதுருவ
வடவாமுகாக்கினி } மண்டிலத்தில் என்
றும் அழியாதிருப்ப
தும், காந்தசத்தியா லியங்குவதுமான ஒளி.
வடவாமுகம் - குமேரு, தெற்கு முனை.
வடவாம்பிகை - திருக்கோடிகாவி லெழுந் தருளியிருக்குந் தேவியார் பெயர்.
வடவிதேகம் - நவகண்டத்தொன்று.
வடவிருக்கம் } ஆலமரம், வடமரம், வட
வடவிருட்சம் } வால விருக்ஷம்.
வடவேங்கடம்-திருப்பதி மலை, வடமலை.
வடவை - அச்சுவினி, அடிமைப் பெண், ஊழித்தீ, எருமை, பெண்குதிரை, பெண்யானை, பெண்குதிரை யுருவாகிச் சூரியனைக் கூடிய அச்சுவிநி, இது சமுத்திரத்தினிடையே யுள்ளது.
வடஸ்தாநம் - பாரதயுத்த காலத்திலே குருசேனைக்குப் பாசறையாயிருந்தவிடம்.
வடாகரம் - கயிறு, மாலை, வடம். [ளது.
வடாது-வடக்கு, வடக்குள்ளது, வடபாலுள்
வடாம் - வடகம், போஜன பண்டம்.
வடாரகம் } கயிறு, பெருங்கயிறு, மாலை
வடாரகை } வடக்கயிறு.
வடி - கயிறு, தேன், கள், குசைக்கயிறு, கூர்மை, நாய், வடியென்னேவல், மாம்பிஞ்சு, மாம்பிஞ்சின் பிளவு, உருவம்.
வடிகஞ்சி - சோறு வடித்த கஞ்சி.
வடிகட்டுதல் - வடித்தெடுத்தல், வடித்தல்.
வடிகயிறு-குதிரைவாய்க்கயிறு, வடிக்கயிறு.
வடிகாது-தாழ்காது, தொங்குந்துளைச்செவி
வடிகால் - நீரை வடியவிடுங் கால்வாய்.
வடிக்கண் - வடு வகிர் போலுங் கண்.
வடிக்கதிர்
வடிக்கருவி } தூல் முறுக்குமோர் கருவி.
வடிக்குதல் - களங்கமறுத்தல், வடியச் செய்தல்.
வடிசம் - தூண்டில், படிசம், வெளிசம்.
வடிசம்பா - நெல்வகையி லொன்று.
வடிசல்-வடிதல், வடிக்கை, வடித்தசோறு.
வடிசற்காது - வடிகாது, தாழ்காது.
வடிசாந்து - நற்சாந்து, திலகமிடுஞ்சாந்து.
வடிதங்கம் - சுத்தத் தங்கம், சுத்தஞ் செய்த தங்கம்.
வடிதமிழ் - தெளிதமிழ், செந்தமிழ்.
வடிதயிர் - நீர்வடிந்த தயிர், கட்டித் தயிர்.
வடிதல் - நீர் முதலியபாய்தல், நீளம், நீளுதல், வற்றுதல், ஒழுகுதல், தெளிதல்.
வடித்தல்-கூராக்குதல், தெளியவெடுத்தல், வசமாக்குதல், வடியச்செய்தல், வடிகட்டுதல், பிழிதல், தைல மிறக்குதல், சோறு சமைத்தல், நீள மாக்குதல். [தல்.
வடித்துக்கொட்டுதல் - சமைத்துப் படைத்
வடிந்தகாது - வடிகாது, வடிசற்காது.
வடிபானை - சோறு சமைக்கும் பாத்திரம்.
வடிப்பம்-அழகு, செப்பம், திறம், வடிவழகு.
வடிப்பு - இருப்புச்சலாகை, தெளிந்தெடுத்தல், வடித்தல், வடிக்கட்டுதல்,
வடிமணி - தெளிந்த ஓசைமணி.
வடிம்பலம்பநின்றபாண்டியன் - பஃறுளி யாற்றை யமைத்தவன், இவன் கடற் றெய்வத்துக்குப்பெருவிழாவாற்றினவன்.
வடிம்பு - நுதி, விளிம்பு, தழும்பு, பழி.
வடிம்புக்கம்பி - தாங்குமரம். [டம்.
வடிம்புக்கழி - எதிர்ச்சட்டம், குறுக்குவிட்
வடியல்-ஒன்றிலிருந்து நீங்கியநீர், வடிதல், வடிசல், சமைக்கப்பட்டது. [தல்.
வடியிடுதல் - வடித்தெடுத்தல், வடிக்கட்டு
வடியெண்ணெய்-கடுகு வடித்தெடுக்கு மெ
ணெய், வடித்தெடுத்தமருந்தெண்ணெய்.
வடிவணங்கு - அழகிய பெண், வடிவழகி.
வடிவம்-உடல், உருவு, அழகு, நிறம், மெய்ச் சொல். [(உ-ம்) சிவன்வடிவேகுருவடிவு.
வடிவவுவமம் - உருவத்தையே யுவமிப்பது.
வடிவாளன் - அழகுள்ளவன், வடிவழகன்.
வடிவிலாக்கூற்று - அசரீரி வாக்கு, நாதம்.

வடிவு-அல்குல், அழகு, உருவு, உடல், நன்னிறம், காந்தி, மெய்ச்சொல், வடிந்தநீர்.
வடிவுடையம்மை - திருவொற்றியூரில்கோயில் கொண்டிருக்குந் தேவியார் பெயர்.
வடிவுப்பண்புத்தொகை - உருவுப்பண்பைக் காட்டி நிற்குந் தொகைநிலை, (உ-ம்) வட்டக்கல்.
வடிவுப்பானை - சோறு வடிக்கும் பானை.
வடிவுவமை - வடிவ வுவமம்.
வடிவெழுத்து-வரியுங்கோடும் புள்ளியுமாகக் கட்புலனுக்குவிடயமா யெழுது மெழுத்து,ஒலியின் குறியாக எழுதப்படும் அட்சரம், திருந்திய கை யெழுத்து.
வடிவேல் - கூரிய வேல், ஒளியுள்ளவேல்.
வடு - இளங்காய், குற்றம், செம்பு,தழும்பு, பிரமசாரி, மருதயாழ்த்திறம், வசை, வடுவென்னேவல், வண்டு, வாலிபன், வாள், மாம் பிஞ்சு, உடல் மச்சம், புண்வாய், கேடு.
வடுக்கக்கடவுள்-வைரவ மூர்த்தி, வைரவன்.
வடுகச்சி - வடுகப் பெண்.
வடுகதம்பி - இராமானுஜாசாரியரின் சிஷ்யரான ஓர் வைணவாசாரியர்.
வடுகரணம் - உபநயனம், பூணூலிடுதல்.
வடுகர்-தெலுங்கர்,தெலுங்குநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற் குடியேறிய சாதியார்.
வடுகன்-பிரமசாரி, மூடன், வயிரவன், தெலுங்க நாட்டான். [ருய்.
வடுகன்ரூய் - காடுகாள், காளி, ஆறுமுகன்
வடுகி-துர்க்கை, வடுகன்ரூய்,முருகன்தாய்.
வடுகு-உபநயனம், இந்தளராகம், ஓர்சாதி, ஓர்தேயம்,ஓர்பாஷை, மருதயாழ்த்திறம்.
வடுகேசுவரர்-திருவடுகூரிலேகோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வடுக்கொள்ளுதல்-தழும்புபடுதல், புண்முதலியன ஆறத் தொடங்குதல்.
வடுச்சொல் - பழிமொழி. [கூறல்.
வடுச்சொல்லல் - வகைசொல்லல், குற்றம்
வடுத்தல்-இளங்காயரும்பல், பிஞ்சுவிடுதல், வெளிப்படுத்துதல், வடுப்படுத்தல்.
வடுநேர்கண்ணம்மை-(1) திருவலம்புரத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர். (2) திருவடுகூரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வடுப்படுதல் - ஏறுபடுதல், குற்றமடைதல், வசை பூணல். [படுத்துதல்.
வடுப்படுத்துதல்-குற்றப்படுத்துதல், மறுப்
வடுமாங்காய் - மாவடு ஊறுகாய், வடுக்காய்.
வடுவகிர் - மாவடுவின் பிளவு.
வடுவரி - வண்டு, பிரமரம், தும்பி, பமரம்
வடுவிலி - மறு வற்றவன், மாசிலான்.
வடுகரணம் - பூணூலணிதல், வடுகரணம்.
வடை - உழுந்து வடை. [வகை.
வடைக்குத்தி-வடைகுத்தியெடுக்குங்கருவி
வடைமாலை - பிரார்த்தனையின் பொருட்டு வடைகளைக்கோத்து அணுமார் முதலிய தெய்வங்கட்குச் சாத்தும் மாலை.
வடையற்றது - அப்பிரயோசனமானது.
வட்கர் - பகைவர், மாற்றலர், ஒன்னர்.
வட்கல்-கெடுதல்,வெட்கம்,நாணம், வட்கு.
வட்காரம் - வெடிகாரம், வெடியுப்பு.
வட்கார் - பகைவர், வட்கர், ஒன்னலார்.
வட்கிலான் - பகைவன், வக்கிலான்.
வட்கு - வெட்கம், நாணம், கேடு, வட்கல்.
வட்சஸ்தலம் / வக்ஷஸ்தலம் } மார்பு, உரம், ஆகம், அகலம்.
வட்டகைநிலம் - அடைப்புக் கட்டிய நிலம்.
வட்டகை-அடைப்பு நிலம், சிறு கிணறம்.
வட்டக்காய் - அண்டம், பீசம், பீஜம்.
வட்டக்கிலுகிலுப்பை - ஓர் கிலுகிலுப்பை.
வட்டக்குடில்-பெருங்குடிசை. [கரக்குடை.
வட்டக்குடை-அரசர்க்குரியகுடை, பூச்சக்
வட்டக்கைச்சில் - தேங்காயின் அடிச்சில், தேங்காயின் அடிப்பாதி யோடு.
வட்டச்சீட்டு - கழிவு சீட்டு, தள்ளு சீட்டு.
வட்டணம் - நெடும் பரிசை, பரிசை.
வட்டணிக்கை - சுற்றுகை, வட்டவடிவு.
வட்டணித்தல்-வட்டமாக்கல், வட்டிப்பித்தல், வளைத்தல்.
வட்டணிப்பு - வட்டமா யிருக்கை.
வட்டணை - தாளம், வட்டம், வக்கணை, வட்டமான செலவு, இடசாரிவலசாரியாகச் சுற்றுகை, அடிக்கை, மொத்துகை,கேடகம், வட்டமான அணை. [ளந் தட்டுதல்.
வட்டணையுறுத்தல் - தாளம் போடல், தா
வட்டத்தலைப்பா-தலைப்பாக்கட்டிலொன்று.
வட்டத்தாமரை - மலையாளத்திலிருக்கும் ஓர் தாமரை. [ருப்பு வைக்குந் திரி.
வட்டத்திரி-காதிடுதக்கை, துவக்கிற்கு நெ
வட்டத்திருப்பி - மலைதாங்கி, புட்குத் திருப்பி, மதபன்னி, மதரபன்னி, மத பாணி, அரிவாண்மனைப்பூண்டு, ஆடு தின்னுப்பாளை, ஆடு தீண்டாப்பாளை.
வட்டத்துத்தி - ஓர் செடி, துத்திச்செடி.
வட்டத்தொப்பி - சோனகத் தொப்பி.
வட்டத்தோல் - கேடகம், பரிசல். [று.
வட்டப்பாலை - நால்வகைப் பாலையி லொன்
வட்டப்பாறை - வட்டமானபாறை, விளை

வற்ற கற்பாங்கான பிரதேசம், சந்தனக் கல். [த்தவட்டவடிவான தாங்கல்வகை.
வட்டப்போதிகை-போதிகையின்கீழ்அமை
வட்டமிடுதல்-பறவை முதலியன சுற்றிவருதல்,உருண்டையாதல், சூழ்ந்து வருதல், நோக்கம் கொண்டு சுற்றுதல்.
வட்டம்-குளம்,கேடகம், ஆகம்மணி, கொள்கலம், சக்கிரம், சீலை, தாழ்வு, திரிகை, நாணயமாற்றுதலின்கழிவு, நீர்ச்சால்,பரிவேடம், பீடம், வட்டவடிவு, வளைதடி, வாகுவலயம்,மண்டலம், தடவை, சுற்று, வளைவு,ஆடை,எல்லை, திருத்தம், மக்கட் பிரிவு, யானையின் நடுச்செவி, இலாபம்.
வட்டம்பண்ணுதல்-தேவதுதியை நாள்வட்டத்திற் படித்தல், மந்திரம் செபித்தல்.
வட்டம்போடுதல்-வட்டமிடுதல், சூடிக்க நெற்கதிர்களைப்பரப்புதல்,வட்டமிடுதல்.
வட்டரவு - வட்ட வடிவு, விருத்தம்.
வட்டவடிவு-வட்டாகாரம், வட்டமானது.
வட்டறவு - முற்றுக அறவு பண்ணுதல்.
வட்டா-ஓர்பாத்திரம், தட்டம், தாம்பாளம்.
வட்டாகிருதி - வட்டவடிவு, சக்கரம்.
வட்டாடல்-சூதாடல், சொக்கட்டாஞடல்.
வட்டாடுதல் - வட்டையுருட்டிச்சூதாடுதல்.
வட்டாட்டு - வட்டுக் கொண்டு ஆடும் சூதாட்டம்.
வட்டாப்பத்து - கூந்தற் பின்னையோலையாற் செய்யுமோர் விசிறி.
வட்டாரம் - சுற்றுப்புறம், வட்டம், தானியக்களஞ்சியம், வீடுகள் நிறைந்த இடம்.
வட்டி-கூடை, பலகறை, முதற்பொருட்கு வருமூதியம், வட்டியென்னவல், வழி, கிண்ணம்,கருப்பிணிக்கு உண்டாம் மயக்கம், இலாபம்.
வட்டிகை-கூடை,கைமணி, சித்திரம், நால்வகைச் சாந்திலொன்று, வட்டம். [கை.
வட்டிகைப்பலகை - சித்திரமெழுதும் பல
வட்டிக்கண்ணி - ஒரு வகைச் சிறுசெடி.
வட்டிக்குவட்டி - வட்டிப்பணத்துக்குமேல் வட்டி, வட்டியை அசலோடு சேர்த்துக் கணக்கிட்டுக் கொடுக்கும் வட்டி.
வட்டித்தல்-ஆணையிடல்,ஊனிடுதல்,தாளம் போடல், வட்டமாதல்,சூழலுதல்,தோள் புடைத்தல், பரிமாறுதல், வளைத்தல்.
வட்டிப்பு - வட்டம், சூள், பங்கு பரிமாறல்.
வட்டிமேல்வட்டி - வட்டிக்கு வட்டி.
வட்டியில்லாக்கடன்-வட்டியின்றிக்கொடுக்குங் கடன்தொகை, திரும்பச் செய்தலை எதிர்நோக்கிக் கொடுக்கும்நன்கொடை.
வட்டில் - ஒருண்கலம், கிண்ணம், கூடை, புட்டில், வழி, சொக்கட்டானை.
வட்டிவரசி-வட்டிவிதம், வட்டியாசாரம்.
வட்டிற்பூ - தாமரைப் பூ, வட்டமான பூ.
வட்டினி - பங்கயப்பொருள், ஈடுமானம்.
வட்டி-ஓர்செடி,ஓர்வீணையாட்டு, கறிமுள்ளி, சூதாடு கருவி, திரட்சி, மரவட்டு, கண்ட சருக்கரை,சிறுவஸ்திரம்.[ருக்கும்தானம்.
வட்டுக்குத்தி-மரவட்டு, மரத்தின் குருத்தி
வட்டுச்செடி - வட்டு, சிறுசெடி.
வட்டுடை-ஒருடை வீசேடம், சீலை, ஆடை.
வட்டுப்போர் - சூதாட்டம், வட்டாட்டம்.
வட்டுவம் - ஓர் வகைச்சிறு பை.
வட்டுறுப்பு - திருத்தம், திருந்தல்.
வட்டை - இரதம்,புலியின தூடல்வரி, வழி, சக்கரத்தின்மேல்வளைமரம்,மலைவட்டை.
வட்புலி - சிங்கம், கேசரி, மிருகேந்திரன்.
வணக்கம் - கீழ்ப்படிதல், வளைகை, சங்கித்தல், தொழுதல் இது மங்களாசரணை மூன்றி லொன்று. [ச்செய்தல்.
வணக்கல் - வளைத்தல், வளைக்குதல்,வளைய
வணக்க வொடுக்கம் - வணங்கி ஒழுகுகை.
வணங்கல் - தொழுதல், வளைதல்,பணிதல்.
வணங்காமுடிமன்னன் / வணங்காமுடியன் / வணங்காமுடியினன் / வணங்காமுடியோன் } சரியோதனன், மற்றெரு ருவரை வணங்காதவன்.
வணங்குதல் - மடங்குதல், அடங்குதல்.
வணரி - காரணவகையிலொன்று.
வணம் - உத்யாநம், ஓசை,பலகறை, வநம்.
வணர் - கட்டளவேலை, வளைவு, கமான்.
வணிகபதம் - வியாபாரம், வர்த்தகம்.
வணிகம் - செட்டு, வியாபாரம், வாணிபம்.
வணிகரதுதொழில் - வணிகர் தொழில்.
வணிகர்குணம்- வணிகரெண்குணம். (தொகையிற் காண்க.)
வணிகர்தொழில் - வணிகர் அறுவகைத் தொழில் (தொகையிற் காண்க.) [பாரி.
வணிகன் - செட்டி,வைசியசாதியான்,வியா
வணிசம் - எருது,எருதுக்காரணம்,வணிசை.
வணிசன் - ஓர் காரணம், வாணிகன்.
வணிச்சியம் - வாணிச்சியம், வர்த்தகம்.
வணிதம் - செப்பம், பிரதேசம்.
வணைதல் - வளைதல், வணங்கல், மடிதல்.
வணைத்தல் - வளைத்தல், உட்படுத்தல்.
வண் - தெளிவு, மிகுதி, விகுதியி லொன்று.
வண்களமர்-சூத்திரர், வேளாளர், காராளர்.
வண்கை - கொடைக்கை, ஈகைக்கரம்.
வண்சிறை - மதில், இஞ்சி, பிராகாரம்.

வண்டத்தனம் - குறும்புத்தனம், அசப்பியம்.
வண்டப்புரட்டன் - பெருமோசக்காரன்.
வண்டப்பேச்சு - குறும்புப் பேச்சு.
வண்டமர்பூங்குழலம்மை - திருக் கோளிலி யிலேகோயில்கொண்டிருக்கும்தேவியார்
வண்டமர்பூங்குழலியகி - திருவாழ்கொளி புத்தூரில் கோயில்கொண்டுள்ள தேவி.
வண்டமர்பூங்குழலியம்மை - திருப்பரம புரத்திலேகோயில்கொண்டிருக்கும்தேவி.
வண்டமை - கடல்மீன் வகையி னொன்று.
வண்டம் - குந்தாயுதம், ஈட்டி, ஸைவேல்.
வண்டயம் - கழல், வண்டவாளம்.
வண்டரம் - நாய், நாய்வால், மார்பு, முகில்.
வண்டரன் - அண்ணகன், உலோபி, அலி.
வண்டர் - கடிஸை மாக்கள், கவி கற்றோர், மங்கலப்பாடகர், மிண்டர்.
வண்டலடித்தல் - வயல்மண் மேலிடுதல்.
வண்டலம் - சேறு, அளறு, இலழவு.
வண்டல் - அடையுங்கஞ்சல், ரீர்ச்சுழி, பருபருக்கை, பொருக்கு, மகளிர்விளையாட்டு வகை, மகளிர் கூட்டம், விளையாட்டாக இழைத்த சிற்றில், பருக்கைக்கல், ரீரொதுக்கி விட்டமண், நீர்முதலியவற்றினடியில் மண்டியபொடிமண் முதலியன.
வண்டவாளம் - நிலைமை, யோக்கியதை.
வண்டன் - குள்ளன், திண்ணியன், துட்டன், தீயோன், விருத்தசேதனம் பண்ணப் பட்டவன், அயோக்கியன்.
வண்டார் குழலி-(1) திருவாலங்காட்டிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர். (2) திருக்கோளிலியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வண்டாலம் - குந்தாலி, சூர யுத்தம்.
வண்டாழ்ங்குருகு - குருகுவகை.
வண்டாளம்-வண்டவாளம், யோக்கியதை.
வண்டானம்- நாரை, குருகு, நரை.
வண்டி - பண்டி, வயிறு, அகடு, குக்கி, உதரம்.
வண்டிக்கடுக்கன் - முத்துக் கடுக்கன்.
வண்டிக்கட்டு - மகளிர் முடிந்துகொள்ளும் கலைமுடிவகை. [டிக்கு உரியவன்.
வண்டிக்காரன்-வண்டியோட்டுபவன், வண்
வண்டிக்கால்-வண்டிச்சில்லு, வண்டிசக்கரம்
வண்டிக்கீல் - வண்டி மசகு, வண்டிமசை,
வண்டிக்கூடு - வண்டியின் மேற்கூண்டு.
வண்டிக்கொழுப்பு -வண்டிமசகு. [கூலி.
வண்டிச்சத்தம் - வண்டிவாடகை, வண்டிக்
வண்டிச்சோடு - சக்கரம்பதிந்தபாதை.
வண்டிமசகு } வண்டிக்கீல், வண்டிச்சக்கர
வண்டிமசி } த்துவாரத்திடும் மை.
வண்டிமேடு - வண்டிநிற்கு மிடம். [ப்பு.
வண்டிமை - வண்டிமசகு, வண்டிக்கொழு
வண்டியகவாய் - வண்டிற்றோடு.
வண்டியம்-பேராமுட்டி, ஓர் மருந்து.
வண்டில் - பண்டி, சக்கரம். [கரம்.
வண்டிற்கால் - வண்டிற்சில், வண்டியின்சக்
வண்டிற்சத்தம் - வண்டிற்கூலி.
வண்டு - அம்பு, குற்றம், கைவளை, சங்கு, பூசு, பமரம், பூசநாள். [வண்டுகொல்லி.
வண்டுகடி-வண்டுகொட்டுகை, மேகப்படை,
வண்டுகடியிலை-வண்டுகொல்லி, பேரகத்தி, மலைத்தகரை, படை தீர்க்கும் இலை.
வண்டுகுத்தி-ஓர் குருவி, வண்டுதின்னி.
வண்டுகொல்லி - தேவதாரம், மலைத்தகரை.
வண்டுணமலர்மரம்- சண்பகமரம், வேங்கை மரம். [வுடையவன், காமதேவன்.
வண்டுநாணன்-வண்டுகளவில்வின் நாணுக
வண்டுருவன் - திருமால், காியமால். [தம்.
வண்டுளம் - நந்தியாவட்டம், நந்தியாவர்த்
வண்டுவார்குழலியம்மை - திருமருகலிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வண்டுறை - எழுத்திலாவோசை, இசைச்சில் முதலியன, கோஷம்.
வண்டெச்சில் - தேன், மது, பிரசம்.
வண்டேறுமலர் - ராப்பொழுதலர்ந்த மலர்.
வண்டை - ஓர் செடி, வெண்டை, கொச்சையான சொல், அசப்பியம். [கருவி.
வண்டையிழைப்புளி - ஒருவகைத் தச்சுக்
வண்டோதரி-பஞ்சகன்னிகளி லொருத்தி, அவள் இராவணன் பெண்சாதி.
வண்டோலம் - வண்டவாளம், ஒருவனது பூர்வசரித்திரம், நீங்காரம்.
வண்ணகம் - சந்தனம், வாசனை, மலையசம்.
வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா - கலிப்பாவினோர் பேதம்; அஃது: ஒருதரவுமூன்று தாழிசை, அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னு மிவ்வாறு றுப்பினையுங் கொண்டு வருவது.
வண்ணகூபிகை-மைக்கூடு, மைப்பாத்திரம்.
வண்ணக்கஞ்சாத்தனர் - இவர் கடைச்சங்கப்புலவர்களிலொருவர். [லிற்சமர்த்தன்.
வண்ணக்களஞ்சியம் - வண்ணக்கவி பாடுத
வண்ணக்கன் - நாணயசோதகன்.
வண்ணக்கிரமம் - எழுத்தொழுங்கு, சாதியொழுங்கு, அகராதி வரிசை.
வண்ணக்குழிப்பு } வண்ணச் செய்யுளின்
வண்ணக்குனிப்பு } சந்தவாய்ப்பாடு.
வண்ணஞ்சேர்ந்தோன் - வீரபாகுதேவர்.

வண்ணதூதன் - திருமுகங்கொண்டு போவோன். [ன்று.
வண்ணத்தரு - பாடல், பாடல்வகையிலொ
வண்ணத்தான் -வண்ணன், ஈசங்கொல்வி.
வண்ணப்பண்புத்தொகை - நிறத்தைக்காட்டி நிற்கும் பண்புத்தொகை, (உ-ம்) செந்தாமரை. [வர்.
வண்ணப்புறக்கந்தரத்தனர் - ஓர்சங்கப் புல
வண்ணப்புறுக்கல்லானர்- ஓர்கடைச்சங்கப் புலவர். [அலங்காரவதி.
வண்ணமகள் - கோலஞ்செய்வாள், அழகி,
வண்ணமாதிரு - இலேகினி, தூதி.
வண்ணமாதிருலக - சரச்சுவதி, சரஸ்வதி.
வண்ணமாலை - அரிவரி, நெடுங்கணக்கு.
வண்ணம் - அழகு, இராகம், ஒப்பனை,குணம், சந்தம், சந்தனம், சாந்துப்பொது, செயல், நன்மை, நிறம், வடிவு, விதம், வகை, முடுகியல், வாசனை.
வண்ணவுவமம்-நிறம்பற்றிக்கூறும் உவமை.
வண்ணத்தி - பூநீறு, வண்ணரப்பெண்.
வண்ணத்திக்குருவி - ஒருவகைப்பறவை, விசிறிக்குருவி, அலங்காரப்பட்சி.
வண்ணத்திப்பூச்சி - தட்டாரப்பூச்சி.
வண்ணப்பண்டி - வண்ணர்புடைவை யேற்றும் வண்டில். [டை.
வண்ணர்சேரி - மஞ்சீரம், வண்ணரப்பேட்
வண்ணன் - ஏகாலியன்,பற்மகாரன்,ஆடை வெளுக்கும் சாதியான்; இவன்: குடிமக்கள் பதினெண்மருள் ஒருவன்.
வண்ணன்துறை - வண்ணன் ஆடையை வெளுக்கும் நீர்த் துறை. [வன்.
வண்ணிகன் - எழுத்துக்காரன், எழுதுகிற
வண்ணித்தல் - வருணித்தல், சிறப்பித்தல்.
வண்மை - அழகு, ஈகை, குணம், புகழ்,மெய்மை,வளமை,வீரம்,வலிமை,வாகைகமரம்.
வதகம் - மரணம், வியாதி, சாவு, நோய்.
வதகன்-கொலைகாரன்,கொலைசெய்வோன்.
வதக்கம் - வாட்டம், வாடுகை, இளைப்பு.
வதக்கல் } வசைத்தல், வாட்டல், வருத்
வதக்குதல் } துதல்.
வதக்குவதக்கெனல் - பக்குவமாகாது ஈரப் பசையோடிருத்தற் குறிப்பு, மார்புஅடித்துக் கொள்ளுதற் குறிப்பு.
வதங்கல் } வாடுதல்,சோர்தல், வாடியது,
வதங்குதல் } ஈரப்பசை நீங்காத உணவுப் பண்டம், உடல்வலிவற்றவ-ள்-ன்-து.
வதண்டன் - ஓர் முனிவன்.
வததண்டம் - கொலைக்கேற்ற தண்டம்.
வதத்திரம் - அம்பு, அத்திரம், கணை, சரம்.
வதத்திரி - பறவை, புள், பட்சி,பகுதி. [ளல்.
வதநியன் - வரையாது கொடுப்போன், வள்
வதந்தி - கதை, பேச்சு, பிரஸ்தாபம்.
வதம் - கொலை, வீரதம், வதை.
வதரம் - இலந்தை, இலந்தைக்கனி, வதரி.
வதரி - இலந்தை, பதரி, வதிரம்.
வதரிகாசிரமம்
வதரிகாச்சிரமம்
வதரியாச்சிரமம்
வதரியாச்சிராமம் } வடநாட்டிலுள்ளதோர் விஷ்ணுஸ்தலம், பதரிகாசிரமம்.
வதவரிசி } தீஞ்சரிசி,அரைக்காய்ச்சலான
வதவலரிசி } புழுங்கல் அரிசி.
வதவல்-வாடினது, அரைக்காய்ச்சலானது.
வததுதல் - திட்டல், மழலைமொழிதல், வாயாடுதல். [கோணம்.
வதனம் - முகம், முக்கோணத்தின் மேற்
வதனசலம்-உமிழ்நீர்,உமிழ்வு. [மலர்முகம்.
வதனாரவிந்தம் - பெண்முகம்,மாதுவதனம்,
வதனேந்து - முகம், ஆனனம், வத்திரம்.
வதன் - கொலை செய்வோன், வதகன்.
வதஸ்தானம் - கொலைக்களம்,கொல்லப்படுமிடம், கடு மேடை. [ச்சாலை.
வதாங்ககம்-சிறைவீடு, காவற் கூடம், சிறை
வதாங்கம் - நஞ்சு, விடம், விஷம்.
வதாருகன் - வதைத்தற் குரியவன்.
வதாலகம் } மீன்வகையி லொன்று.
வதாலம் }
வதாவதன் - இராஜசபை முதலான விடங்களில் அச்சமின்றிப் பேசுவோன்.
வதானியன் - குபேரன்,வரையாதுகொடுப்போன், வள்ளல். [காரன்.
வதி-சேறு, வதியென்னேவல்,வழி, கொலை
வதிட்கடித்தல் - வணக்கந்தரித்தல், பூனூப் பெயர்தரித்தல். [பத்திரம்.
வதிட்சீட்டு - பிரதிபத்திரம், மறுமொழிப்
வதிட்டன் - பருத்தவன், வசிட்டன்.
வதிதல் - தங்கல், இருத்தல், வசித்தல்.
வதிரன் - செவிடன்,செவிமந்தன். [சிரமம்.
வதிரிகாச்சிரமம் - ஓர் தபோதலம், பதரிகா
வதிர் - செவிடு, செவிமந்தம்.
வதில் } பதில், விடை, உத்தரம், எதிர்
வதிள் } மொழி, பிரதியுத்தரம்.
வதிவு - இருத்தல், தங்குதல், வதிதல்.
வதிள்மொழி - பிரதிவாக்கு,பிரதியுத்தரம்.
வது - மகன் மனைவி, மணமகள்.
வதுகி - வைக்கோல், பலாபலம், வை.
வதுகை - மனைவி, பாரியாள், இல்லாள்.
வதுவடி - உலக்கைப் பாலை. [துவர்.
வதுவர் - குதிரைப்பாகர்,யானைப்பாகர்,வா

வதுவை - கலியாணம்,வலுவந்தம்,வாசனை, மணமாலை,புணர்ச்சி. [கலியாணமேடை.
வதுவைத்திண்ணை - கலியாண வேதிகை,
வதுவைமுரசு - விவாகத்தில் நவதானியம் விதைக்கும் பாலிகை. [வது.
வதூ - புதுமணப்பெண், பெண், மனைவி,
வதூசரை - ஒரு நதி, இது பிருகு ருஷியின் மனைவியைப் புலோமன் என்னும் இராக்கதன் கவர்ந்துபோனபோது அவள் கண் களிலிருந் தொழுகிய நீர்த்தாரைகளா லுண்டாகிய நதியென்பர்.
வதூடி - மருமகள், மருகி. [தம்பதிகள்.
வதூவரர் - மணப்பெண்ணும், மணாளனும்,
வதை - உபத்திரவம், கொலை, வதம்,தேன் வதை, வதையென்னேவல்.
வதைசெய்தல்) கொல்லல், வருத்துதல்,
வதைத்தல்) மிக வருத்துதல்.
வதோபாயம்-கொலைக்கேதுவான உபாயம்.
வத்தகமை - வருத்திப்பு,வியாபாரம்.[தகம்.
வத்தகம் - வத்தகைமை, வெட்பாலை, வர்த்
வத்தகன் - செட்டி, வியாபாரி, வணிகன்.
வத்தகாலம்-நிகழ்காலம்,வர்த்தமானகாலம்.
வத்தகோபன் - கோபத்தை யடக்கினோன்.
வத்தங்கி - சம்பங்கி மரம், சம்பங்கி.
வத்தமம் - ஆமணக்கு,ஏரண்டம். [நிகழ்ச்சி.
வத்தமானம் - கருமம், சங்கதி,நிகழ்காலம்,
வத்தர் - வத்திரு, வத்தா.
வத்தல் - சிறுகுள்ளம்,செத்தல், நல்லியான து, வறண்டது,உப்பிட்டுலர்த்தியுண வுப்பண்டம், சிறிய டம். [னம், கூலி.
வத்தனை - பெருக்கம்,வமிசம், ஆக்கம், சீவ
வத்தா - சொல்பவன்,நூலாசிரியன்,வத்தர்.
வத்தாக்கு) ஓர் கொடி, கொம்மட்டி, சக்க
வத்தாலை) ரைக் கொம்மட்டி. [கொடி.
வத்தாலைக்கொடி - மதுரவள்ளி, வள்ளிக்
வத்தாளங்கிழங்கு - சர்க்கரை வள்ளிக் கிழங்கு.
வத்தாவி - ஓர் தேயம், வத்தாயி.
வத்தி - இரத்தினத்தின்கீழ்ப்பதிக்குந்தகடு, சீலைத்தொங்கல்,திரிச்சீலை,திரிவாய்ப்பெ ட்டி,பரிமளதிரவியங்களைக்கூட்டியரைத் துச் செய்த வத்தி, வத்தியென்னேவல், வரி,விளக்கு,விளக்குத்தகழி,ஊதுவத்தி, தீக்குச்சி, ஆடையின் அருகு. [வத்தகம்.
வத்தித்தல் - பெருகல்,விருத்தியடைதல்,
வத்திப்பெட்டி - தீப்பெட்டி.
வத்தியதானம்) கொலைக்களம், கொல்
வத்தியத்தானம்) லப்படு மிடம்.
வத்தியபாலன்-சிறைச்சாலைக்காவற்காரன்.
வத்தியபூமி - வத்தியதானம், தானபூமி.
வத்தியம் - மரணம், சாவு, இறப்பு, மாய்வு.
வத்தியன் - வதைக்கப்படுதற் குரியவன்.
வத்திரசேவை - முகதரிசனம், காட்சி.
வத்திரசோதினி - எலுமிச்சை, இலிகுசம்.
வத்திரதாரணம் - ஆடைதரித்தல்.
வத்திரதாரு - தேவதாரு,அசோகம்.[டன்.
வத்திரதுண்டன் - விநாயகன், வக்கிரதுண்
வத்திரபஞ்சகன்-சிவபெருமான்,சதாசிவன்.
வத்திரபட்டம் - நெற்றிப்பட்டம், பட்டம்.
வத்திரபுத்திரிகை - சித்திரப்பாவை, தூணி யிஞற் செய்த பாளல். [துன்னன்.
வத்திரபேதகன்-தையற்காரன்,பொல்லன்,
வத்திரம்) ஆடை, உடை, சீலை, போர்க்
வஸ்திரம்) கருவி, முகம்.
வத்திரவாரு - வத்திரதாரு. [யின் அருகு.
வத்திராஞ்சலம் - புடைவையருகு, ஆடை
வத்திராட்சம் - பத்திராட்சம், அந்திமல்லி.
வத்திரானசந்தானம் - பஞ்சமுகங் கூடல்.
வத்திரி - தோல்வார், வார்.
வத்திரு - பேசுவோன், வாக்கி, வத்தா.
வத்திரோணம் - வத்திரோணம்.
வத்திவைத்தல் - வெடிகொளுத்துதல்,சண் டை மூட்டுதல், கோட்சொல்லுதல்,புண் ணிற்குக் காரம் வைத்தல். [ளிச்சை.
வத்திறதாரு - செம்புளிச்சை,சென்னிறப்பு
வத்திரோணம் - பெருமரம்,வத்திரோணம்.
வத்து - பொருள், பலபண்டம், வஸ்து.
வத்துதாரணை-நவதாரணையினொன்று;அது: விடயப்படா தசைவற்றிருக்கு மனம் புத் தியைச் சித்தத்திற் சேர்க்கச்சித்தந் தன் னிடத்தமைந்த புத்தியை மனதிற் சேர்க் கச் சித்தமும் மனமும் புத்தியை அகங்கா ரத்திற்சேர்க்க அகங்காரம் புத்தி சித்தம் மூன்றும் மனத்திற்சேர அம்மனத்தாற் பிரமதரிசனம் பிறத்தல்.
வத்துபரிச்சேதம் - ஒரு பொரு ளிஃதாகும் ஒரு பொரு ளிஃதன்றென்பது.
வத்துப்பு - கறியுப்பு. [ண்டி ஞென்று.
வத்துவித்தியாபதி - சிற்பநூன் மூப்பத் திர.
வத்துவம் - வட்டமானது,சக்கரம்.[காணி.
வத்தூரம் - பொன்னங்கண்ணி,பொன்னங்
வத்தேக்கு-கொமுட்டி,வத்தங்கிச்சாயமரம்
வத்தேந்தி - கதவுநிலைக்குமேல் வைக்குஞ் சுவர்தாங்கி. [வயிரமற்றது, வத்தல்.
வத்தை - ஒரு மரத்தோணி, சோற்றி, உள்
வத்தைவெட்டு - சோற்றிவெட்டு.
வத்ஸலன்-வாற்சலியகுணமுள்ளவன், அன் புடையான்.

வநசகர்ப்பன் - பிரமன், கஞ்சன். [லி.
வநசந்தநம் - அகில், தேவதாரம், காட்டுமல்
வநசந்திரிகை - மல்லிகை, அனங்கம், மாலதி
வநசம்பகம் - காட்டுச் சண்பகம்.
வநசன் -பிரமன், மலரோன், கமலாசனன்.
வநச்சாகம் - காட்டாடு, காட்டஜம்.
வநதேது - காட்டுப்பசு, ஆமா, காட்டா.
வநமல்லிகை - காட்டுமல்லிகை, மாலதி.
வநமிருகம் - காட்டுமிருகம், வனமா.
வநஜநாபி - திருமால், விஷ்ணு.
வநஜாநன் - பிரமன், பங்கயாசனன்.
வநஜாசனை - திருமகள், பதுமாசனி.
வநஜீரம் - நரட்டுச் சீரகம். [னை.
வநஜை - இலக்குமி, பதுமை, முண்டகாச
வந்தமார்க்கம் - நாயுருவி, மர்க்கடப்பிப்பலி.
வந்தனமாலை - வாயிலிற் கட்டுந் தோரண வகை, வெளிவாயிலின் சித்திரவளைவு.
வந்தனம் - அட்டாங்கமாகப்பணிதல், பணிதல், முகம், விநயம், மரியாதைச்சொல்.
வந்தனி - கோரோசனை. [டனிடல்.
வந்தனித்தல் - வந்தித்தல், பணிதல், தெண்
வந்தனை - ஆராதனை, வணங்கல், வந்தனம்.
வந்தனைவழிபாடு - கடவுளுக்குச் செய்ய வேண்டிய வணக்கமும் பூசையும்.
வந்தி - ஏணி, வணக்கம், மங்கலபாடகன், அரசர் புகழ்கூறும் சூதன், பாணன், கை வந்தி, கஷ்டம், கட்டாயமாய் வந்தது, மூரண்டு, சண்டை, மலடி, வந்தி யென்னே வல், வருத்தம், வாராவந்தி, ஓரிருடி, ஜநக மஹா ராஜனுடைய யாகசாலையிலே இவரை அஷ்டவக்ரன் வென்றான்.
வந்திகட்டுதல் - கட்டாயம் பண்ணுதல், பல வந்தம் பண்ணுதல். [பாடகர்.
வந்திகள் - கவிஞர், புகழ்வோர், மங்கலப்
வந்திகை - கைவந்தி, நுதலணிவகை, ஆபரணம். [கல்.
வந்தித்தல் - பங்கம்பாழை, புகழ்தல், வணங்
வந்தித்துநிற்போர் - புகழ்ந்து பாடுவோர்.
வந்திபாடம் - புகழ்ந்துபாடிய பாட்டு. [தல்.
வந்திபோடுதல்-கட்டாயமாய்ப் பொறுப்பித்
வந்தியர் - மங்கலப்பாடகர். } ளுவமை.
வந்தியாபுத்திரன்-மலடிமகன் } இல்பொரு
வந்தியிறுத்தல் - கட்டாயத்திற் கிறுத்தல்,
வந்தியை-மலடி, மகப்பேறில்லாதவள், வந்தி
வந்திவாங்குதல் - கட்டாயமாய் வாங்குதல்.
வந்து - காற்று, உவமை, கால், பவனம்.
வந்தேறி - புதிதாகக் குடியேறினவன்.
வந்தேறுகுடி - ஓரூரில்புதிதாகவந்துநிலைச் சாகுபடி செய்யும் குடியானவன்.

வந்தேறுதல் - புதிதாக வந்து குடிபுகுதல்.
வந்தை - பெருமை, மலடி, புல்லுருவி.
வந்த்ரம் - கல்யாணம், விவாகம், திருமணம்.
வந்த்ரன் - பூசித்தற் குரியவன், பூசிதன்.
வபனம் - சுக்கிலம், மழித்தல், முண்டிதம், விதைத்தானியம், விதைக்கை.
வபிலன் - பிதா, தந்தை, தகப்பன்.
வபு - உடல், வபுசு, ஓர் அப்ஸரகன்யகை, இவள் நாரதரேவலால்துர்வாசமுனிவருடைய தவத்தையழிக்க யத்தனித்தபோது அவரால் சபிக்கப்பட்டுப் பறவையாய்ப் பிறந்தாள், தர்ம பக்ஷிகளைப் பெற்றவள் இவளே. [ஜநமேஜயன் மனைவி.
வபுஷ்டை - காசிராஜன் மகள், மூன்றாம்
வபுஷ்மந்தன்-பிரிய விரதன் புத்திரருளொருவன்; இவன் பங்குக்குச் சான்மலித் தீவு வந்தது, இவன் புதல்வசொழுவர்.
வபை-வயிற்றுநரம்பிக்குள் வெண்டுகில் போன்ற புரையாகிய நிணம், முக்கியமானது.
வபையெடுத்தல் - யாகபசுவின் வபையை ஓமஞ்செய்வதற்கு எடுத்தல்.
வப்பி-இடைவேற்று, நடுவிலேயுள்ள பிளவு.
வப்பிரம் - ஈயம், சீருள், வங்கம்.
வப்ரீ-புற்று, வன்மீகம். [தல்.
வமநம்-சத்திபண்ணல், வமம், வாந்தி எடுத்
வமநீ-அட்டை, பருத்தி.
வமம்-வமநம், வாந்தி எடுத்தல்.
வமி-அக்நி, தூர்த்தன், வாந்தி, வமநம்.
வமிசபரம்பரை } வமிசக் கிரமம், குலமு
வமிசபாரம்பரை } றை, குல முறையாய் வருவது.
வமிசம்-சந்ததி, சுற்றம், குலம்.
வமிசவட்டவணை } வமிசாவளி, வ ம் ச ா
வமிசவிருட்சம் } வளி.
வமிசவிருத்தி-வமிசத்திற் குரிய இயல்பு, குலத்தைப் பெருக்குகை.
வமிசாவளி-வமிச பரம்பரையைத் தெரிவிக்கும் அட்டவணை.
வம்படித்தல் - சாசம் பண்ணல், தீங்குசெய்தல், தீதுபேசுதல், நிந்தித்தல், வம்பளத்தல்.
வம்பமாக்கள் - புதியமாக்கள், புதியோர்.
வம்பம்-கலங்க பாஷாணம்.
வம்பலர் - அயலோர், புதியோர், வேற்றூர்.
வம்பலாட்டம்-குழப்பம், சங்கடம்.
வம்பல்-திசை, திக்கு, மாதிரம்.
வம்பளத்தல் - பொருந்தாத பேச்சுப் பேசுதல், வீண்காரியம் பேசுதல், வம்படித்தல், அவனறு பேசுதல்.

வம்பன்-சோரபுத்திரன், துட்டன், வம்பளப்போன்.
வம்பி - கரு வண்டு, சோரபுத்ரி, துட்டை, பயனற்றவள், வம்பளப்போள்.
வம்பு-கயிறு, அசப்பியம், சண்டை, தீச்செயல், தீச்சொல், நிலையின்மை, புதுமை, மிடா, மூலக்கச்சு, வாசனை, வீம்பு, வீண்வார்த்தை, படிறு, சிற்றெழுக்கம், வஞ்சனை, அரைக்கச்சு, மேற்பார்வை.
வம்புக்காய்-பருவந்தப்பிக் காய்க்குங் காய்.
வம்புக்காரன்-வம்பன், துஷ்டன்.
வம்புதும்பு-துஷ்டத் தனம், அயோக்கியம்.
வம்புத்தனம்-நேரின்மை, மடிப்பு.
வம்புப்பாளை-பருவந்தப்பி வரும்பாளை.
வம்புப்பிள்ளை-சோரத்திற் பெற்றகுழந்தை.
வம்புப்பிறப்பு - சோரஸ்திரீக்குப் பிறத்தல்.
வம்புப்பேச்சு-தூஷணவார்த்தை. [க்கு.
வம்புவழக்கு-வீண்வியாச்சியம், தொடு வழ
வம்புவளர்த்தல்-வம்பளத்தல். [குஞ்சீர்.
வம்மை-பெற்றோர் மணமகட்குக் கொடுக்
வயகுண்டம் / வயகுண்டலி } கவிழ்த்தும்பை, கவுதும்பை.
வயக்கம் - பிரபை, ஒளி, வழக்கம்.
வயக்குதல்-வசக்குதல், விளங்கச் செய்தல், பழக்குதல்.
வயக்கொடி-வெற்றிக் கொடி, ஜெயவிருது.
வயங்கல்-ஒளிசெய்தல், நடத்தல். [தல்.
வயங்குதல்-ஒளி செய்தல், தெளிதல், நடத்
வயசன் / வயசாளி / வயசானவன் } முதியவன், கிழவன், வயோதிகன்.
வயசு-வயது,வாலிபம்,பிராயம்,யௌவனம்.
வயசுப்பிள்ளை-வாலிபப் பிள்ளை, வாலிபன்.
வயஞானம் - உண்மை யுணர்வு.
வயட்டு-மேற்றோல் போக்கு, வயளல்.
வயட்டுதல்-மேற்றோல் நீக்கல், பீத்தோல் போக்குதல்.
வயணம் - வகை, விதம், நிலைமை, உணவு முதலியவற்றின் வளம், நல்லமைப்பு, நேர்த்தி, காரணம். [பீத்தோல் வயளுதல்.
வயண்டுபோதல் - மேற்றோல் வழுந்துதல்,
வயதரம் - கடுக்காய், அரிதகி, பத்தியம்.
வயது-ஆயுசு, யௌவனம், வயசு. [வன்.
வயதுசென்றவன் - முதியவன், வயது வந்த
வயதுவம்-முதிர்வயது, கிழப்பருவம்.
வயதெற்றி-திப்பிலி. [த்தும் வித்தை.
வயத்தம்பம் - யௌவனநிலை மாறுமல் நிறு
வயத்தன்-அடிமை, தாசன். [மன்மதன்.
வயந்தமன்னவன்-வசந்த காலத்து அதிபதி,
வயந்தம்-வசந்தம், வசந்தகாலம். [துதல்.
வயப்படுதல்-வசப்படுதல், வசமாதல், உட்ப
வயப்படை - வெற்றிப்படை.
வயப்புலி / வயப்போத்து } சிங்கம், அரிமா, கேசரி.
வயமது - சீந்தில், அமுதவல்லி.
வயமம் - அத்தி, யானை, தந்தி, வாரணம்.
வயமா-குதிரை, சிங்கம், புலி, யானை. [ரம்.
வயமீன்-உரோகணி, நான்காவது நட்சத்தி
வயம்-ஆடு, இரும்பு, குதிரை, நீர், பறவை, வசம், வலி, வெற்றி, வேட்கை, சம்பந்தம், ஏற்றது, கிராம்பு, பூமி, மூலம்.
வயலூர்-பாண்டிய நாட்டிலுள்ள வோரூர்; இது வார்த்திகனுக்கு ஒரு பாண்டியனால் பிரமதாயமாகக் கொடுக்கப்பட்டது, இது திருத்தங்காலுக்குக் கிழக்கேயுள்ளது.
வயலெலி-எலி வகை, நீரெலி.
வயல்-கழனி, மருதநிலம், வெளி, பண்ணை.
வயல்சூழ்சோலை-இளமரக்காடு, சோலை.
வயல்நெட்டி - நெட்டிவகையி லொன்று.
வயல்மாதளை - மாதளை வகையிலொன்று.
வயல்முருங்கை-செடி வகையி லொன்று.
வயல்மெருகு - ஓர் மெருகு. [ஆலம்.
வயவரி - புலி, உழுவை, கொடுவரி, சார்த்
வயவர் - படைவீரர், சேனை வீரர்.
வயவன் - கரிக்குருவி, காதலன், தலைவன், திண்ணியன், வலியன், வீரன். கணவன்.
வயவாள் - வெற்றிவாள், ஜயவாள்.
வயவீரர் - வெற்றிவீரர், செயசாலி.
வயவு - ஆசை, கருப்பம், கர்ப்பம்.
வயவெற்றி-திப்பிலி, வயதெற்றி. [பாதை.
வயவை - வழி, அதர், சரி, செலவு, படர்,
வயளல்-வயளுதல், தோலுரிதல்.
வயளுதல்-பீத்தோல் வயளல்
வயளை-பசளை, கீரைவகையிலொன்று.
வயற்கரந்தை-கரந்தை வகை, சிவகரந்தை.
வயற்கல்-வெள்ளைச் சுக்கான்கல்.
வயற்கள்ளி-பொரிப்பூண்டு, வயற்சுள்ளி.
வயற்கொடுக்கி - செடிவகையி லொன்று.
வயற்கோவியன் - ஓர் பாம்பு.
வயற்சார்பு - மருத நிலம், கழனி, அகணி, பணை.
வயற்சுள்ளி - பொரிப்பூண்டு, வயற்கள்ளி.
வயற்செம்பை-ஓர் செம்பை, வயற்சேம்பை.
வயற்றுத்தி-துத்தி வகையி லொன்று.
வயணண்டு-கழனி நண்டு.
வயனம் - வயணம், வேதம், பழிமொழி.
வயனிலம் - மருதநிலம், கழனி, பண்ணை.
வயன்கட்டு - வசன்கட்டு, வசக்கட்டு.

வயா-ஆசை, கருப்பநோ, கருப்பம், கருப்ப வருத்தம், சோர்வு, நடுக்கம், மசக்கை.
வயாப்பண்டம் - கருப்பவதி விரும்பிய பொருள்.
வயாமது-சீந்தில், அமுதவல்லி, சீவந்தி.
வயாவு-வயா, வேட்கை, ஆயாசம்.
வயாவுதல்-விரும்புதல். [ல்,கஷ்டம் நீங்கல்.
வயாவுயிர்த்தல் - கருவீனல், வருத்தந்தீர்த
வயானம்-பறவை, பட்சி, புள்.
வயானன் } வலியன், காரிப்புள், வாயசம்.
வயான் } [பாஷாண்ம்.
வயிக்கிராந்தம்-குமுதபாஷாணம், வைப்புப்
வயிச்சிரவணன் - வச்சிரவசினுடைய குமாரன், குபேரன். [ன்று.
வயிடூரியம் - வைடூரியம், நவமணிகளுள் ஒ
வயித்தியம்-வைத்தியம், சிகிச்சை.
வயிந்தவம்-வைந்தவம், மாயை. [ஞ்சல்.
வயிரகரணி-பெரு நெருஞ்சில், யானை நெரி
வயிரக்குணங்கள் - வயிரத்தின் ஐந்துவகை நற்குணங்கள். (தொகையிற் காண்க.)
வயிரக்குப்பாயம்- உறுதியான கவசம்.
வயிரக்குற்றம் - வயிரத்தில் காணப் படும் பன்னிரண்டு குற்றங்கள். (தொகையிற் காண்க.)
வயிரங்கி - தூவக்கிற் றிரிவாய் தூளுக்கு மோர் கருவி. [சிறப்பணி.
வயிரச்சங்கிலி-சரப்பணி யென்னும் அணி,
வயிரஞ் சாதித்தல் - பகை சாதித்தல்.
வயிரத்தனம் - வன் குணம், துட்ட குணம்.
வயிரப்படை - வச்சிராயுதம், குலிசம், வயிரம். [ரன்.
வயிரப்படையோன் - இந்திரன், வச்சிரத
வயிரப்பொடி - வயிரமணி, சிறு வயிரம்.
வயிரமணி-ஓர்வகைப்பொன்மணி,வச்சிரம்.
வயிரமுடிச்சேவை - வயிரமுடித் தரிசநம், திருநாராயணபுரம் பெருமாளுக்கு வரு ஷோற்சவத்தில் கொண்டாடும் வைர முடிச் சேர்வை. [கெட்டி முத்து.
வயிரமுத்து-வயிரித்த முத்து, ஆணிமுத்து,
வயிரம் - கூர்மை, சலஞ்சாதித்தல், தினம், தண்டாயுதம், திருவோணம், பூணைக் கட்டுவது, மரவயிரம், வச்சிரமணி, வச்சிராயுதம், வாளியின் தகடு, நவமணியுள் ஒன்று, திண்மை, மயிர்ப் படாம்.
வயிரவகுருசந்தானம்-வைரவமார்க்கக் குரு பரம்பரை. [ந்தி.
வயிரவசாந்தி - வயிரவருக்குச் செய்யுஞ் சா
வயிரவம்-பயம், ஓர் அகப்புறச் சமயம்.
வயிரவராதி-வலம்புரிச் சங்கு, கொக்கரை.
வயிரவல்லி - பிரண்டை, கிருட்டி, வச்சிர வல்லி.
வயிரவலை - நரிப்பயறு, வயிரக்காப்பு.
வயிரவன் - ஓர் கடவுள், சிறுகீரை, பவள நெடுங் குஞ்சியோன். [சுவானம்.
வயிரவன்வாகனம்-நாய், சுணங்கன், ஞமலி,
வயிரவாளி-வயிர வுறுதியுள்ள அம்பு.
வயிரவாள்-குலிசம், வச்சிராயுதம், வயிரம்.
வயிரவி - துர்க்கை, பைரவி, காடுகாள்.
வயிரவிழா-அறுபதாமாண்டு நிறைவுக் கொண்டாட்டம். [யறுக்கும் கூரிய வாள்.
வயிரவூசி-மூத்துத் தூலைக்குமூசி, கண்ணுடி
வயிரவேர் - சாயவேர், ஆணி வேர்.
வயிராகம் } வைராக்கியம், பற்றின்மை,
வயிராக்கியம் } ஊக்கம், பிடிவாதம்.
வயிராக்கியன்-பற்றற்றவன், பிடிவாதமுள் ளவன்.
வயிராவி-ஓர் வகைவிரதி, வயிரமன முடையோன், வயிராகி. [சத்துரு.
வயிரி - வல்லூறு, வன்னெஞ் சுடையவன்,
வயிரித்தல்-வயிரமாதல், வலுத்தல், கடின மாதல், பிடிவாதமா யிருத்தல். [வாதம்.
வயிரிப்பு-வயிரம்,வலுப்பு, கடினமாகை,பிடி
வயிரியம் - மயிர்ச்சீலை, கம்பளித்துணி.
வயிரியர் - கூத்தர், பாணர், வந்தியர்.
வயிரோசனன்-விரோசனன் மகன்,மாவலி.
வயிரோசனி - சிவதைக் கொடி.
வயிர் - ஊது கொம்பு, கூர்மை, மூங்கில்.
வயிர்த்தல் - வயிரங் கொள்ளுதல், செற்றம் கொள்ளுதல், வைராக்ய மடைதல்.
வயிலத்தி - உள்ளங்கால். [ளிடம்.
வயிறு - உதரம், கருப்பப்பை,நடுவிடம்,உள்
வயிறுகழிதல்-பேதியாதல். [தேடிவாழ்தல்.
வயிறுகழுவுதல் - அரும்பாடு பட்டு உணவு
வயிறுகாய்தல் - பட்டினியாய்ப் படுக்கை.
வயிறுகுளிர்த்தல்-திருப்தியடைதல் [மாதல்.
வயிறுதள்ளுதல் - தொந்தி விழுதல், கர்ப்ப
வயிறுதாரி - வயிற்று மாரி, பெருவயிறன், தன்னயம் ஒன்றையே கருதுபவன்.
வயிறுபிடித்தல் - வயிறுநோதல், துக்கக் குறியாக வயிற்றைப் பிசைதல். [தல்.
வயிறுபேதித்தல் - வயிறு கழிதல், பேதியா
வயிறுப்புதல் - வயிறூதுதல், கருப்பமாதல்.
வயிறுவளர்த்தல் - வயிற்றாண் மாத்திரம் பெற்றுப்பிழைத்திருத்தல், வயிறு கழுவுதல். [தல்.
வயிறுவாய்த்தல் - கருப்பமாதல், மகப்பெறு
வயிறுவிடுதல் - வயிறுகழிதல். [டாதல்.
வயிறுவீக்கம்- வயிறு வீங்குகை,பிள்ளையுண்

வயிறெறிதல் - பொருமை கொள்ளுதல், மிக்க மனவருத்த முறுதல். [சல்.
வயிறெறித்தல்-வயிற்றெரிச்சல், பித்த எரிச்
வயிறெற்றுதல் - வயிறடித்தல்.
வயிற்றகமுடையான்-வயிற்றிற் பிறந்தவன்.
வயிற்றுத்திரம் - பசி, வயிற்றின் கொடுமை.
வயிற்றுலேபோதல்-வயிற்றுப்போக்காதல்.
வயிற்றூன் - பெருவயிறன், வயிறுதாரி.
வயிற்றிசிவு - வயிற்றுவலி, வயிற்றுநோவு.
வயிற்றிலடித்தல் - சீவனத்தைக்கெடுத்தல்.
வயிற்றுக்கடுப்பு - ஓர் நோய், சீதபேதி.
வயிற்றுக்கட்டி - வயிற்றுப்புண்கட்டி, ஈரல் முதலியவற்றின் வீக்கம். [ணிவியாதி.
வயிற்றுக்கழிச்சல் - வயிற்றுப்போக்கு, கிரா
வயிற்றுக்கனப்பு-கொழுப்பினால் வயிறூதல் தொந்திப்பு,புசிப்பினால் வயிறுவிம்முதல்.
வயிற்றுக்காய்ச்சல் - பசி, வயிற்றுக்கொதி.
வயிற்றுக்கிருமி - வயிற்றுட்புழு, மலப்புழு.
வயிற்றுக்குத்து - வயிற்றிலுண்டாங் குத்து.
வயிற்றுக்கொடுமை - வயிற்றுக்காய்ச்சல்.
வயிற்றுக்கொதி - பசி, வயிற்றுக்காய்ச்சல்.
வயிற்றுச்சுரப்பு - வயிற்றுக்கனப்பு
வயிற்றுத்தி-உதராக்கினி,யானைப்பசிநோய்
வயிற்றுநோக்காடு - வயிற்றுநோவு.
வயிற்றுநோய்} வயிற்றுவலி,வயிற்றுநோக்
வயிற்றுநோவு} காடு. [படித்தல்.
வயிற்றுப்படிப்பு - உதர போஷணார்த்தம்
வயிற்றுப்பறப்பு - சீவனத்தேடு முலைச்சல், உணவிற் பேராசை.
வயிற்றுப்பாடு-உட்புறம், வயிற்றுப்பிழைப்பு
வயிற்றுப்பாதி } சீவனத்தேடித் திரிதல்,
வயிற்றுப்பாத்தி} வயிற்றூத்திரம்.
வயிற்றுப்பிழைப்பு - உணவுதேடுதல், சீவியம், சீவனம். [நோய்.
வயிற்றுப்புகைச்சல்-வயிற்றுட்புகைதல்,பசி
வயிற்றுப்பூச்சி - வயிற்றுக்கிருமி.
வயிற்றுப்பொருமல் - வயிறுப்பிசம். [பேதி.
வயிற்றுப்போக்கு-உவாந்திப்பிராந்தி, விஷ
வயிற்றுமாரி - பேரூணன், மானமிலான்.
வயிற்றுவலி - வயிற்று நோவு. [வலி.
வயிற்றுளைவு - வயிற்றுப்போக்கு, வயிற்று
வயிற்றெரிச்சல்-பொருமை, மனவருத்தம், வயிற்றிற்காணும் எரிவு. [ணம்.
வயிற்றெரிவு - வயிறெரிச்சல்,பொருமைக்கு
வயிற்றைக்கட்டுதல் - மிதமாக உண்ணுதல், வயிற்றுப்போக்கை நிறுத்தல்.
வயிற்றைக்கலக்குதல் - பேதியாக மலம் வெளிப்படவேண்டி வயிற்றில் குழப்பம் உண்டாதல், பெருந்திகிலடைதல்.
வயிற்றைத்திறத்தல் - கருக்கொள்ளுமாறு சுருளுதல். [தல்.
வயிற்றையொறுத்தல் - உண்ணுது குறைத்
வயிற்றைவலித்தல் - குடர்வலி கொள்ளல்.
வயினதேயவாகனன் - திருமால், விஷ்ணு.
வயினதேயன் - கருடன், பெரிய திருவடி.
வயினம் - பறவை, பட்சி, புள், அண்டசம்.
வயினன் - வயினதேயன், கருடாழ்வான்.
வயின்-இடம், ஏழனுருபு (உ-ம்) அவர்வயிற் செல்வாய், வயிறு, வீடு, பக்கம், எல்லை.
வயுநம் - ஞானம், தேவாலயம்.
வயேகடம் - மரமஞ்சள், ஓர் மருந்து.
வயோதிகம் - விருத்தாப்பியம், முதுமை.
வயோதிகர் - கிழவர், விருத்தாப்பியர்.
வயோதிபம் - வயோதிகம், கிழத்தனம்.
வயோவகவம் - ஈயம், வங்கம், சீருள், சீசம்.
வயோவங்கம் - ஈயம், சீருள், வங்கம்.
வயோவிழித்தன் - வயதிஞற்பெரியவன்.
வரகதி - மேலான கதி, மோட்சகதி.
வரகரிசி - வரகினரிசி. [சிறந்த செய்யுள்.
வரகவி - தேவரருள் பெற்றுப் பாடுவோன்,
வரகு - ஓர் தானியம், கேனம், குணம்.
வரகுணபாண்டியன்-சேரமான் பெருமான் காலத்து மதுரையில் ஆண்ட அரசன்.
வரகுணம் - உயர்ந்த குணம்.
வரகுதிரி - வகுரியி லோர்வகை.
வரக்காட்டல் } வரவிடுதல், அனுப்புதல்,
வரக்காட்டுதல் } வரவிடல். [வாசல்.
வரக்கிருது - இந்திரன், பாகசாதனன்,
வரங்கொடுத்தல்-வரமருள்தல், வரம்பாலித்தல்.
வரசந்தனம் - ஓர் சந்தனம்.
வரடம் - அன்னம், ஓர் புழு, மாட்டீ,முல்லை.
வரடி - அன்னப்பேடை, எகினம், ஓதிமம்.
வரட்சி - வரள்வு, வெப்பம், வற்றல்.
வரட்சுண்டி - ஓர் செடி, மிரிசபத்திரி. [சல்.
வரட்டிருமல்-புகைவு, தொண்டைப்புகைச்
வரணசி- வாரணசி, காசி, வாரஞசி, வாராணசி.
வரணம் - ஒட்டகம், சூழ்தல், நியமித்தல், பால், மதில், மறைத்தல், மாலிலிங்கு, சட்டை.
வரணை - காசிக்கருகே ப்ரவஹிக்கும் ஓர் சிறுநதி. [யானை மேற்றவிசு.
வரண்டகம் - உண்டை, சுவர், முகப்பரு,
வரண்டம் - சாலை, தூண்டிற்கயிறு, புற்குவியல், முகப்பரு. [ரம்.
வரண்டாலு - ஆமணக்கு, எரண்டம், சித்தி
வரண்டியம் - பேராமுட்டி, ஓர் மருந்து.

வரண்மாடு - கடாரிமாடு, ஈனுவாடு.
வரதகம் - அனுக்கிரகக்குறிப்பாக இதயத்துக்குச் சமீபமாய்க் கையுறுவித்தல்.
வரதட்சிணை-மணமகனுக்குப் பெண் வீட்டார் கொடுக்கும் பொருள்.
வரதநூல்-சகுனசாஸ்திரம். [களிலொன்று.
வரதம்-ஈதல், வரமளிப்பது, குபேரனதுநிதி
வரதராஜர் - காஞ்சித்திருமால்.
வரதனு - அழகு, சுந்தரம், அபிராமம்.
வரதன் - அரன், அரி, அருகன், உபகாரி, வரமருளத்தக்கோன், வரதராஜர்.
வரதஹஸ்தம் - வரந்தரற்கு அறிகுறியாக அமையும் கை.
வரதாரு - தேக்குமரம், தேக்கமரம், தேக்கு.
வரதானம் - வரதாநம், வரமளித்தல்.
வரதுங்கபாண்டியன் } பிரமோத்தர
வரதுங்கராமபாண்டியன் } காண்டத்தைத் தமிழிற் பாடினவர், இவர் அதிவீரராம பாண்டியனுக்குத் தமையனார்.
வரதை - கன்னி, விதர்ப்பதேசத்தி லுற்பத்தியாகிக் கோதாவிரியிற் கலக்கும் ஓர் நதி, பார்வதி.
வரத்தாறு - காட்டாறு. [பெருக்கு, எல்லை.
வரத்து-வருகை, வருமானம், நீர்வரும் வழி,
வரநதி-கங்கை, சுரநதி, திரிபதகை. [யன்.
வரநதிச்சடையோன்-சிவன், கங்கைவேணி
வரந்தருவார் - வில்லிபுத்தூராழ்வார்க்குப் புதல்வர், இவர் தமது தந்தையிடத்தே பாடங்கேட்டுவரும்போது; ஒருநாள் தந்தை சொன்னபொருளை விடுத்து தாமாகவொன்றைக் கற்பித்துரைத்தனர், அதுகண்ட வில்லிபுத்தூரர் சினங்கொண்டுதம்வீட்டினின்றும் இவரை யோட்டிவிட்டனர், அன்றுமுதல் அவர் வேறொரு ஆசிரியரையடுத்துக்கல்விகற்றுவல்லவராகித் தமது தந்தையாருக்குப் புலப்படாமல்நெடுநாள் மறைந்தொழுகி வருவாராயினர். தந்தையார் பாரதம்பாடி அரங்கேற்றுங் காலத்தில் இவர் வேடமாறி அந்தச் சபையிற் சென்றிருந்தார், வில்லிபுத்தூரர் நூலைஅரங்கேற்றத் தொடங்கி "ஆக்குமாறயனும்" என்னும் பாடலைக் காப்பாக வெடுத்தோதி, அதன்பொருளை விரித்துரைத்தனர், அந்தச் சபையிலிருந்தவர்கள் அதைக்கேட்டு வெறுப்படைய, வரந்தருவார் உமது விஞையாதென்றனர், அவர்கள், இந்த நூலுக்கு முதனூல் வியாசபாரதமன்றே, அதில் விநாயக வணக்கஞ் செய்து நூல்ஆரம்பித்திருக்க, இவர்அவ்வாறு செய்யாமல் பொதுவாகத் தெய்வவணக்கங் கூறியதுஎன்னையென்றார்கள்; அப்பொழுது வரந்தருவார் எழுந்து, இந்தச் சபையில் பலவகைச் சமயவாதிகளும் கூடியிருப்பதால் அவரெல்லார்க்கும் ஒப்பக்கூறியது, மற்றை விநாயக வணக்கம் கவிதம் அகத்துக் கூறிவிட்டே இது கூறினர் என்றார், அதுகண்ட வில்லிபுத்தூரர் மகிழ்ந்து அச்சமொழிந்தனராயினும்அது ஆங்கு கூறிஞன் யாவனென்று அதிசயித்திருந்தார்.

சபையார் வரந்தருவாரை நோக்கி, வில்லிபுத்தூரர் மனத்தால் விநாயக வணக்கஞ் செய்தது உமக்கெப்படி புலப்பட்டதென்றார்கள், அதற்கு விடையாக வரந்தருவார்,

"நீடாழியுலகத்து மறை நாலொடைந்தென்று நிலை நிற்கவே, வாடாததவ வாய்மை முனிராஜன் மாபாரதஞ் சொன்ன நாள், எடாகமாமேரு வெற்பாகவங் கூரெழுத்தாணிதன், கோடாக வெழுதும் பிராணப் பணிந்தன்பு கூர்வாமரோ"

என்னுங் காப்பைபாடி இதுவே அவர் கூறிய காப்பென்பது யான் முன்னமே அறிந்திருக்கிறேன், யான் அவர்க்குப் புதல்வன் என்றார். அதுகேட்டுச் சபையார் வாயடங்குதலும், வில்லிபுத்தூரரும்மனக்களிப்புடனே நூலைஅரங்கேற்றினர்; அது முடிந்த பின்பு, வில்லிபுத்தூரர் தம் புதல்வனையே அதற்குச்சிறப்புப்பாயிரம்செய்க வென்றேவி அவ்வாறே அவர் செய்யக் கண்டு மனமகிழ்ந்து அவரைத் தழுவிக் கொண்டார் என்பது கர்ணபரம்பரை. அச்சிறப்புப்பாயிரம் இவரே செய்தார் என்பது "அவன் மகன் வரந்தருவானிப் பதிகஞ் செப்பினனே" என்னும் பாடலாலுணர்க, இதில் தம்மைப் படர்க்கையாகக் கூறியது வடநூல் வழக்கு.
வரபலம் - தென்னமரம், வரத்தினாலாகிய வலிமை.
வரப்படுத்துதல் - நெட்டுருப்பண்ணுதல், வந்ததைப் பெற்றுக் கொள்ளுதல்.
வரப்பார்த்தல்-வரவுகாத்தல், வரவுக்கு வழி தேடல்.
வரப்பிரசாதம் - தேவவருள், அநுக்ரஹம்.
வரப்பிரசாதி-வரங்களை யருள்பவன். [டை.
வரப்பிரதானம்-நன்கொடை, உபகாரக்கொ
வரப்பிரதை - அகத்தியன் மனையாள்.

வரப்பு - எல்லை, வரம்பு, அணை, கங்கு.
வரப்புக்கடா-நண்டு, கர்க்கடகம், ஞண்டு.
வரப்புச்சண்டெலி - எலி வகையிலொன்று.
வரப்புள்-வயல், கழனி, கோட்டம், தடி.
வரப்பெலி - வயல் எலி, நீர் எலி.
வரம் - அடைக்கலாங்குருவி, ஆசீர்வாதம், எறும்பு, கையிட்டுக்கொள்ளல், சூழல், தேவலோகை, நவநிதியிலொன்று, மஞ்சள், மேன்மை, விருப்பம். [தல்.
வரம்பழிதல்-ஒழுங்கு கெடுதல், நீதி தவறு
வரம்பிகத்தல் - அளவு கடத்தல்.
வரம்பிலறிவன் - கடவுள், வரைகடந்தவன்
வரம்பிலாற்றலுடைமை } கடவு ளெண்கு
வரம்பிலின்புடைமை } ணத்தொன்று.
வரம்பிறத்தல் - ஒழுங்குதப்புதல், வரம்பி கத்தல்.
வரம்பு - அணை,எல்லை,ஒழுங்கு,வழி,வரப்பு.
வரம்புகடத்தல்-வரம்பிகத்தல். [கட்டுதல்.
வரம்புகட்டுதல் - அணைகட்டுதல், எல்லை
வரம்புபண்ணல் - சரிப்படுத்தல், அடக்கல்.
வரயிதன் - கணவன், தந்தை, காப்பாளன்.
வரயோகம் - சுபயோகத்தொன்று.
வரருசி - ஓர் வடமொழிப்புலவன், (1) பா ணினி வியாகரணத்துக்கு வியாக்கியானஞ் செய்த வோரிருடி, இவருக்குக் காத்யாய நர் என்றொரு பெயரு முண்டு.
வரர் - மேலோர், வானோர், சிறந்தோர்.
வரலக்ஷ்மிவிரதம் - ஆவணிமாசத்துச் சுக்கி லபக்ஷத்துச் சுக்கிரவாரத்திலே லக்ஷ்மி தேவியைக் குறித்து அநுஷ்டிக்குமோர் விரதம். இதனால் பெண்கள் புத்ரபௌத் ர விருத்தியும், சகல சம்பத்தும் அடை யப் பெறுவர் என்பது நூற்றுணிபு.
வரலாறு - ஒழுங்கு, மூலம், உபாயம், உதா ரணம், வமிசாவளி.
வரலாற்றுமுறைமை - பரம்பரையாகக் கை யாளப்படும் அடிப்பட்டவழக்கு.
வரலாற்றுவஞ்சி - ஓர் பிரபந்தம்; அது: குலமுறை, இற்பிறப்பு முதலிய மேம் பாட்டின் பல சிறப்பையும் வஞ்சிப்பா வாற் கூறல்.
வரல் - வருதல், நடத்தல், வருகை.
வரல்வாறு - வரலாறு, வரன்முறை.
வரவண்ணினி - இலக்குமி, கவுரி, கற் புடையாள், சரஸ்வதி, பெண், மஞ்சள்.
வரவர-மேலும்மேலும், வழிபாடு, படிப்படி யாய், மேன்மேலும்
வரவரச்சுருட்டி - தேவதாசியின் செயல்.
வரவழைத்தல்-வருவித்தல்,வரப்பார்த்தல்.
வரவிடுதல் - அனுப்புதல், போகவிடுதல்.
வரவிருத்தன்-சிவபெருமான், வாமதேவன்.
வரவு-வருகை, உற்பத்தி. [ரப்பார்த்தல்.
வரவுகாத்தல் - வருதலைக்காத்திருத்தல், வ
வரவுதாழ்தல் - தாமதித்து வருதல்.
வரவெதிர்ந்திருத்தல் - தலைவி தன்னிருப் பிடத்துத் தலைவன் வருதலை ஏற்றிக்கூ றும் புறத்துறை. [காத்தல்.
வரவேற்பு-எதிர்கொண்டழைத்தல்,வரவு
வரவேற்புப்பத்திரம் - பெரியோரை உப சாரங் கூறி அழைக்கும் பத்திரிகை.
வரவை - வீளையுட்பாத்தி.
வரளாரை - ஆரைவகையி லொன்று.
வரளை - காசியிலுள்ள ஓர் நதி. [வற்றல்.
வரள்தல் - காய்தல், உலர்தல், பசையறல்,
வரற்கியம் - சிற்றரத்தை.
வரன் - கணவன், சந்தியாசிகளிலோர் பே தம், சிவன், தமையன், மணமகன், சிறந் தவன்.
வரன்முறை-வரலாறு, ஒழுங்கு, பெரியோர்க் குச் செய்யு முபசாரம், ஒழுங்கு.
வரன்றல்-கொழித்தல்,ஒதுக்குதல். [டல்.
வரன்றுதல் - வாருதல், அள்ளுதல், சுரண்
வராககர்ணன் - ஒரு யக்ஷன்.
வராககர்ணி-அசுவகந்தி,அமுக்கிரு. [புடம்
வராகபுடம் - ஐம்ப தெரு வைத்தெரிக்கும்
வராகபுராணம் - இது விஷ்ணு நரசிம்மாவ தாரம் எடுத்து இரணியகசிபுவைக் கொ ன்று தேவர்களை இரக்ஷித்த கதை கூறு வது.
வராகமிகிரர் } ஒரு ஜோதிஷ சாஸ்திரி, இ
வராகமிசிரர் } வர் கலியுகம் மூவாயிரத் தறு நூற்றில் இருந்தவர். இவர் செய்த நூல்கள் பிருஹத்ஸம்மிதை பிருஹத் ஜா தகமுமாம்.
வராகம் - பதினெண் புராணத்தொன்று, மலை, நிலப்பனை, விஷ்ணு தசாவதாரங் களுளொன்று; அது: மூன்றாவது அவ தாரம், கற்பாந்தரத்திலே எல்லாப் பொ ருள்களும் நீரிலே முழுகிப்போனபோது அந்த நீரின்மேல் ஆவிலையில் அறிதுயி லமர்ந்திருந்த விஷ்ணு அந்தப்பூமியைத் தமது கொம்பிற்றாங்கி மேலே கொண்டு வந்து காக்கவும், இரணியாக்ஷனைக் கொல்லவும் சுவேதவராகமாக அவதரித் தார். (2) மகததேசத்திலுள்ள ஒரு மலை, பன்றி, போர். [நிறை.
வராகனிடை-ஒன்பதுபணவிடை கொண்ட
வராகன்-ஓர் நாணயம்,திருமால்,மூக்குத்தி.

வராகன்பூசி } கூத்தன் குதம்பை, மூக்
வராகன்பூண்டு } குத்தி.
வராகாதனம்-காலுங்கையு மூன்றிக் கவிழ்ந்
து நிற்பது, ஓர் யோகாதனம். [ண்டது.
வராகாவதாரம்-விஷ்ணு வராக உருக்கொ
வராகி - ஓர் சத்தி, சத்தமாதர்களிலொருத்
தி, சிற்றரத்தை, நிலப்பனை, பன்றிமொத்
தை, தேவிகொண்ட மூர்த்தங்களொன்
று, வாராகி, சிறுகுறட்டை, கோரை,
சிறுகுறிஞ்சா, வராகபுடம்.
வராகிப்புகை - ஓர் மருந்துப்புகை.
வராகிமாலை-வராகியைக்குறித்த பிரபந்தம்.
வராகிவேய் - பன்றிமுள், வராகிவேல்.
வராகிவேல் - முட்பன்றியின் முள்.
வராக்கு - கொம்மட்டி, தும்மட்டி.
வராங்ககம் - இலவங்கப்பட்டை.
வராங்கம்-உடல், தலை, யானை, இலவங்கம்.
வராங்கனை - உருவிற் சிறந்தவள், கூந்தற்
பனை.
வராங்கன் - விஷ்ணு. [அழகுள்ளவன்.
வராங்கி - மஞ்சள், சர்யாதியின் மனைவி,
வராசனம் - சீனமுட்செவ்வந்தி, பாத்திரம்.
வராசனன்- வாயில்காப்போன், வேசிக்கள்
வராசி - பரும்புடைவை. [வன்.
வராடகம்-விராடம், கயிறு, தாமரைக்காய்,
பலகறை.
வராடம்-பலகறை.[யாழ்த்திறத் தொன்று.
வராடி - பலகறை, முறுக்குநூற்சீலை, பாலை,
வராட்டி - வரட்டி, வறட்டி, விராட்டி.
வராணசி - காசி, வாரணசி, வாரணசி.
வராணன்-சதமகன், மகவான்.[கல்வாங்கல்
வராத்தம்-கட்டளை, வரிவாங்குதல், கொடுக்
வராந்தா - தாழ்வாரம், வராண்டா.
வாரோகன்-யானைப்பாகன், ஆதோரணன்
வராலகம் } இலவங்கம், வராங்கம், காரமூள்
வராலம் } ளமலர்.
வராலி - பிரமிச்செடி. [செல்வி.
வராலிகை - துர்க்கை, கொச்சுவை, வீரச்
வரால்-ஓர் மீன். [கட்செவி, சர்ப்பம்.
வராளம் - பாம்பு, அகில், அங்கதம், உரகம்,
வராளி - ஓரிராகம், சந்திரன், மண்ணீரல்.
வராளிகை - துர்க்கை, பகவதி, காளி.
வராற்பகடு - ஆண்வரால், வராற்போத்து.
வராற்போத்து - இளவரால், வரால் குட்டி.
வரானி - பாலை, நீரில்லா நிலம், வண்பால்.
வரி - அக்கினி, இசைப்பாட்டு, எழுத்து,
கடல், குடியிறை, தேமல், நிறை, நீளம்,
நெல், வடிவு, வண்டு, வரியென்னேவல்,
வழி, விரலிறை, கையிரேகை, கட்டு, பல
தெருக்கூடுமிடம், உயர்ச்சி. [பிரமரம்.
வரிக்கடை-வண்டு, அளி, அறுபதம், சுரும்பு,
வரிக்காரன் - வரிப்பணந்தண்டுவோன்.
வரிக்குதிரை - கல்லணையில்லாதேறும்குதி
ரை, வரிக்கழுதை. [கொம்மட்டி.
வரிக்கும்மட்டி - பேய்க் கொம்மட்டி, வரிக்
வரிக்கோரை - கோரை வகை.
வரிசந்தி-நாற்தெருக்கூடுமிடம், பல தெருக்
கள் கூடுமிடம்.
வரிசி - தூண்டில், படிசம், வெளிசம்.
வரிசை - ஒழுங்கு, சங்கை, நற்சீர், பரிசு,
முறைமை, வெகுமானம், மரியாதை.
வரிசைக்காரன் - நன்னடத்தையுள்ளவன்,
முறைக்காரன். [சை.
வரிசைக்கிரமம் - நல்லொழுங்கு, வழிசவரி
வரிசைக்குப்பச்சை - நாகப்பச்சை.
வரிசைக்கேடு - முறைக்கேடு, ஒழுங்கீனம்.
வரிசைபாராட்டல்-முறை கொண்டாடல்.
வரிசைபார்த்தல் - சங்கை பார்த்தல்.
வரிசையெடுத்தல் - பலருமறியச் சீரெடுத்
வரிச்சந்தி - வரிசந்தி. [தல்.
வரிச்சல் } சலாகை, கட்டு வரிச்சல், வலிச்
வரிச்சு } சல். [புழு.
வரிச்சுருள் - செவ்வட்டை, மரவட்டைப்
வரிடன் - சன்னியாசிகளி லோர்பேதம்.
வரிட்டன் - மேலானவன், சீவன் முத்தருள்
பிரமவரிட்டர் வகையினன்.
வரிதகம் - சொல்வகை நான்கினுளொன்று
அது 32 அடியால் வருவது.
வரிதல்-எழுதல், கட்டல், சித்திரமெழுதல்.
வரித்தல் - கட்டல், நியமித்தல், பூசுதல்,
மொய்த்தல், அழைத்தல்.
வரித்துவைத்தல்-நியமித்திருத்தல். [யிறை
வரிப்பணம் - வீதமாயிருக்கும் இறை, குடி
வரிப்பிரோர்த்தம் - சதகுப்பை, சதகுப்பி.
வரிப்பிளந்தெழுதுதல் - கையெழுத்து வரி
யில் இடைச்செருகி எழுதுதல்.
வரிப்பிளப்பு - இடைச்செருகி எழுதுவது.
வரிப்பீர்க்கு - பம்பிகை, பெரும்பீர்க்கு.
வரிப்புலி - வேங்கைப்புலி, கொடுவரி.
வரிப்புறம் - அணில், இலுதை, வெளில்.
வரியரிசி - சீரகம், போஜனஹரி.
வரியாடல்-எழுதுகை, வரிசைப்படுத்தல்.
வரியாத்துக்கிழங்கு - இரேவற் சின்னி.
வரியான்-சன்னியாசிகளி லோர்பேதம், நித்
தியயோகத்தொன்று, புலகர்மகன்.[மீன்.
வரியொட்டி - மீன்வகையி னொன்று, ஒட்டு
வரியோரா-மீன்வகையினொன்று[செய்தல்.
வரிவசிதம் - குருவைக் காத்தல், சிசுரூஷை

வரிவடிவெழுத்து - அறிகுறியாய்த் தீட்டப் படுமெழுத்து. [தவனம்.
வரிவரி - தண்ணீர் விட்டான்கிழங்கு, மிகுந் வரிவரிமணலி - கற்சுரை.
வரிவனம் - தில்லை, புலியூர், சிதம்பரம்.
வரிஷம் - வருஷம், ஆண்டு, வருடம்.
வரீ - சூரியன் மனைவி. [யன்.
வரீயான் - ஓர்யோகம், சிறுபெண், யோக்கி
வருகம் - இலை, பரிவாரம், மயிற்சுருகை.
வருகாலம் - எதிர்காலம், வருங்காலம்.
வருகை - வரவு, வரவுத்தொகை.
வருக்ககனம்-கனவருக்கம், ஓர் எண்ணின் வருக்கத்தைமும்மடங்குஉ றழவந்த எண்.
வருக்கக்கோவை - ஓர் பிரபந்தம்; அஃது: அகரம்முதல் ஏழுவருக்கங்கள் ஒவ்வோர் காரிகையின் மொழிமுதற்கண் முறையே வரத்தொடுப்பது.
வருக்கமாலை-ஓர்பிரபந்தம்;அது: மொழிக்கு முதலாம்வருக்க வெழுத்திற்கொவ்வோர் செய்யுட் கூறுவது.
வருக்கமூலம் - வருக்கத்தொகையினின்ற தன்மூலமறிதல்.
வருக்கமோனை - அடிகடோறும்வருக்க வெழுத்துக்களவ்வவ் வருக்கமாய் வருவது.
வருக்கம் - அத்தியாயம், இனம், ஒழுங்கு, குலம், கூட்டம், சதுரம், சமமாகிய வீரெண்ணின் பெருக்கம், வகுப்பு.
வருக்கலாடசங்கலிதம் - ஓர்சங்கலிதம்,சதுரித்த வெண்களாலான வரிசை வகை.
வருக்கவெதுகை-சேர்வையின வெழுத்துக்களால் ஆகு மெதுகைத் தொடை.
வருக்கவெழுத்து-சேர்வை யினவெழுத்து.
வருக்கு - கஞ்சி, பாத்து, காடி, குழம்பு.
வருக்கை - ஒழுங்கு, பலா, இனம்.
வருக்கைக்கனி - பலாப்பழம், பாகற்பழம்.
வருக்கைப்பலா - ஓரினப்பலா.[வருகாலம்.
வருங்காலம் - இனிவரப்புகுங் காலப்பகுதி,
வருச்சித்தல் - நீக்கல், அகற்றல். [லம்.
வருச்சியகாலம் - அசுபவேளை, கெட்டகா
வருச்சியம் - தள்ளப்படுவது, விடத்தக்கது.
வருடகம் - முடக்கொத்தான், முடக்கொற்றான்.
வருடகாலம் - வருடாகாலம்.
வருடதேவதை - அவ்வவ்வருஷத்திற்குரிய தெய்வம்.
வருடபலன் - வருஷத்திற்குக்கண்டபலன்.
வருடபுட்பம் - தாழம்பூ, வருஷ புட்பம்.
வருடப்பாதி - உத்திர தட்சண அயனம்.
வருட்பிறப்பு - புதுவருஷத்தோற்றம்.

வருடம் } ஆண்டு, பூகண்டம், மழை, பாக
வருஷம் } னம்.
வருடல் - தடவல்,தடவுதல்,பிடித்தல்,கால் பிடித்தல்.
வருடவரன் - அலி, நபுஞ்சகன்.
வருடவான் - அண்ணகன். [யான்.
வருடன் - மிலேச்சன், ஈனன், தாழ்வுடை
வருடாகாலம் - மழைகாலம், கார்காலம்.
வருடாங்கம் - மாதம், மாசம், திங்கள்.
வருடாதிநூல் } வருடத்தைக் குறிக்கும்
வருஷாதிநூல் } நூல், பிரவாதிச்சுவடி.
வருடாந்தரம் } வருடமுடிவு, வருடக்
வருடாந்திரம் } கடைசி.
வருடாயுதம் - பதினுயிரம். [தொடக்கம்.
வருடாரம்பம் -மழைத்தொடக்கம்,வருடத்
வ்ருடித்தல் வருஷித்தல், பொழிதல்.
வருடுதல் வருடல், தடவுதல்.
வருடை - எண்காற்புள்,குறும்பாடு,மேடவி ராசி, வரையாடு, ஆடு, மார்ச்சரியம்.
வருட்டம் - வேம்பு, முட்டை.
வருட்டல் } வற்புறுத்தல்,தேற்றுதல்,நிர்ப்
வருட்டுதல் } பந்தித்தல்.
வருணகம் - மஞ்சாடி, ஓர் நிறுத்தலளவை.
வருணகுலாதித்தன்மடல் - ஓர் நூல்.
வருணசங்கரம்-சாதிக்கலப்பு, வருணசங்கிரகம்.
வருணசபம் - மழைவேண்டிச் செபிக்கப் படும் வேத மந்திரங்கள். [தணி.
வருணசரம் - செம்மணிகளாற்செய்தகழுத்
வருணசிந்தாமணி - ஜாதி விளக்க நூல்.
வருணசிலைவந்தோன் - வைரம்.
வருணசிவர் - சைவசித்தாந்த நூல் செய்த ஆசாரியர் பதினெண்மரு ளொருவர்.
வருணசுதா - யமன்மனைவி.
வருணசூக்கம் - வருணனைப்பற்றிய தோத்திரமடங்கிய ஓர் வேதமந்திரம்.
வருணதருப்பணம் - ஓர் வடமொழி நூல்.
வருணதருமம்-அவ்வவ்வருணத்தார்க் குரிய கிருத்தியம். [க்கு.
வருணதிசை - மேற்குத்திசை,பச்சிமம்,குட
வருணபகவான் -வருணன்,புனல்வேந்தன்.
வருணம் - எழுத்து,கீர்த்தி,குலம்,நிறம்,நீர், பிரகாசம்,பொன்,பொன்னுரை, மஞ்சள், துதி, யானை, வாசனை, விதம், வேஷம்.
வருணவதி - மஞ்சள், அரிசனம்
வருணவிந்து - முத்துச்சிப்பி, முத்துமட்டி.
வருணவில் - வானவில், இந்திரதனுசு.
வருணஞுள் - சதயநாள், சதய நட்சத்திரம்.
வருணனை - வன்னிப்பு. **புனைவுரை.**

வருணன் - சமுத்திரம், துவாதசாதித்தரி லொருவன், அஷ்டதிக்குப் பாலகருளொ ருவன்; இவன் திக்குமேற்கு, இவன் மனை வி சாமளாதேவி, இவன் பட்டணம் சிரத் தாவதி, ஆயுதம், பாசம், வாகனம் முதலே, அன்னவாகனமும் இவனுக் குண்டென்று கூறுவர். இவன் நீருக்கு அதிதேவதை.

வருணசாரம்-சாதியொழுக்கம், குலாசாரம்.

வருணச்சிரமதர்மம் - நால்வகைச்சாதிக்கும் நீலேக்கும் உரிய ஒழுக்கம்.

வருணத்மஜன் இந்திரசாரதி, மாலதி.

வருணத்மஜை - கள், ஈழம், சொல்வளம்பி.

வருணானி - வருணன் மனைவி.

வருணாலயம் - மகாசமுத்திரம். [யும்பாணம்.

வருணாஸ்திரம் - வருணபாணம், மழைபெய்

வருணி - பிரமசாரி, பொன்.

வருணித்தல் - வர்ணித்தல், புனைந்துரைத் தல், தோத்திரித்தல், மிகைபடக்கூறுதல்.

வருணை - ஆர்யாவர்த்தத்திலேயுள்ள வோர் நதி.

வருதல் - நடத்தல், வருகை, வரவு.

வருதி - உத்தரவு, வருக வெனல்.

வருத்தகம் - வர்த்தகம், விருத்தி செய்வது.

வருத்தகன் - வர்த்தகன், வர்த்தகன்.

வருத்தப்படுதல் - துன்பப்படுதல். [காலம்.

வருத்தமானம் - நிகழ்காலம், வர்த்தமான

வருத்தம்-உள்ளக்களிப்பு, துன்பம், கஷ்டம், முயற்சி, களைப்பு. [தலை செய்தல்.

வருத்தல் - துன்புறுத்தல், அலப்பல், தொந்

வருத்தனம் - உண்டை, சம்பளம், சீவனம், தொழில், பெருகுதல், வர்த்திப்பு, வழி.

வருத்தனி - நீர்க்குடம், விளக்குமாறு. [வழி.

வருத்தனை - பெருகுதல், சீவனம், தொழில்,

வருத்தி - இரத்தினங்களின் கீழ்ப்பதிக்குந் தகடு, வருத்தி யென்னேவல். [முறை.

வருத்தித்தல் - வளர்தல், வருத்திப்பு, நடை

வருத்திப்பு - வர்த்திப்பு, தருவித்தல்.

வருத்து - வரவு, வரத்து, வரவழைத்தல்.

வருத்துதல் - வருத்தல், வருவித்தல், பயில் வித்தல், வருந்தச் செய்தல். [வடிவு.

வருத்துலம் - வட்டவடிவு, வட்டம், சக்கர

வருநர் - புதிதாய்வருபவர், விருந்தினர்.

வருநாள் - எதிர்காலம், பௌஷ்யகாலம்.

வருந்தல் } துன்புறல், கஷ்டப்படல், இ
வருந்துதல் } டர்ப்படல். [போக்குதல்.

வருந்திக்கழித்தல் - வருத்தத்துடன்காலம்

வருந்திக்கேட்டல் - கெஞ்சுதல், வேண்டல்.

வருந்துரு - கோங்கு, முள்ளிலவு. [னம்.

வருபிறப்பு-மறுபிறப்பு, மறுமை, புனர்சென

வருபுனல்-யாறு, வேற்றுநீர், பெருகிவரும்நீர்.

வருமதி - வரவு, வரும்படி, வருவாய். [ணம்.

வருமம் - வர்மம், வன்மம், கெட்ட எண்

வருமன்-சூத்திரியர்தரிக்கும்பட்டப்பெயர்.

வருமாறு - வரும்விதம், வருமுறை.

வருமானம் - வரவு, வரும்படி, ஊதியம்.

வருமொழி - நீலேமொழிக்குப் பின்மொழி.

வரும்படி - வருமானம், தொழில் லாபம்.

வருவாய் - வரலாறு, வரவுகட்கானவேது, வரும்படி, தோன்றுமிடம்.

வருவித்தல் - வரச்செய்யல், வேண்டியதொ ன்றைப் பொருந்த விரித்துக்கொள்ளல்.

வருவியம் - முழங்கால், முழந்து, சாணு.

வருஷபுஷ்பம் - தாழம்பூ வருடபுட்பம்.

வருஷம் - ஆண்டு, பூகண்டம், மழை.

வருஷயோகம் - வருடபலன். [காரம்.

வருஷவாரி - பிரதிவருஷமும், வருஷப்பிர

வருஷாதிநூல் - ஒரு சோதிடநூல்.

வருஷாந்தம் } வருஷமுடிவு, ஆண்டுதோ
வருஷாந்தரம் } றும்.

வருஷாப்திகம்-இறந்தவர்க்கு முதல் வருஷ முடிவிற் செய்யும் சிராத்தச் சடங்கு.

வருஷாவருஷம் - ஆண்டுதோறும்.

வருஷித்தல் - சொரிதல், மழைபொழிதல்.

வருஷை - மரீசியின் மனைவி.

வரூதம் - இருப்பிடம், கவசம், தேரைப்பாது காக்கும் கவசம், பரிசை.

வரூதினி } ஓர்தெய்வப்பெண், படை, ஒரு
வரூதினீ } கந்தர்வஸ்த்ரீ, இவள் பிரவரன் என்னும் பிராமணனைக் கண்டு மோகித் துத் தொடர, அவன் அதிற்கிணங்காது மறுத்துச் சென்றனன். அப்போது ஒரு கந்தர்வன் அந்த பிராமணன்போல வடி வங் கொண்டு அவள் முன்னேசெல்ல, இருவருங்கூடிச் சுவரோசி என்பவனைப் பெற்றார்கள். இந்தச் சுவரோசி யென்ப வன் சுவாரோசிஷ மநுவைப்பெற்றவன்.

வரேசுவரன் - சிவன், பார்வதிநாதன்.

வரேணியம் } குங்குமம், செஞ்சாந்து, கள
வரேண்யம் } பக் குழம்பு. [மிக்கோன்.

வரேந்திரன் - அரசன், இந்திரன், வரத்தின்

வரை - அளவு, கரை, சிறுவரம்பு, மலை, மூங் கில், வரையென்னேவல், விரலிறை, விவா கம், இரேகை, எழுத்து, நீர்க்கரை, எல்லை.

வரைகம்பு - கம்மாளர் கருவியி ஞென்று.

வரைக்குடிலம் - வங்கக்கல். [எல்லை.

வரைக்கும் - பரியந்தம், குறித்த காலம்,

வரைசிறகரிந்தோன் } இந்திரன், மலைச்
வரைச்சிறகரிந்தோன் } சிறகரிந்தோன்.

வரைதல் ‌ ‌ ‌

வர்த்தித்தல்-பெருகுதல், நடைபெறுதல்.
வர்த்துலம்-வட்டவடிவு, உருண்டை.
வர்மம்-வன்மம், உட்பகை, மருமம்.
வர்மன் } க்ஷத்திரியர்களுக் குரிய பட்டப்
வர்மா } பெயர்.
வர்மி-வன்மமுள்ளவன், வஞ்சகன்.
வர்மித்தல் - பகைத்தல், விரோதித்தல்.
வர்ஜநம்-துன்பம், மரணம், விடுதல்.
வர்ஜநீயம் - விலக்கத்தக்கது, ஒதுக்கக்கூடியது.
வர்ஷமானி-மழையை அளந்தறியும் கருவி.
வர்ஷம்-மழை, ஆண்டு, உலகின் பகுதி.
வர்ஷருது-ருது ஆறனுள் ஆவணி புரட்டாசி மாதங்களைக் கொண்ட மழைக்காலம்.
வர்ஷாகாலம் - மழைக்காலம், வருஷருது.
வர்ஷாதேவி-மரீசி மகனுடைய ருரொருத்தி, இவள் புத்திரர் அறுவர், இவர்கள் பிரமசாபத்தால், தேவகி வயிற்றிலே புத்திரராய்ப் பிறந்துகஞ்சனுற் கொல்லப்பட்டுச் சுதல லோகத்தை யடைந்தார்கள், பிறகு க்ருஷ்ணன் பிறந்து வளர்ந்த பிறகு தேவகியின் வேண்டுகோளால் அவ்வறு வரையுங் கொண்டுவந்து அவளுக்குக் காண்பித்து அவர்களையும் சாபவிமோசனமாக்கினர்.
வர்ஷித்தல்-வருஷித்தல், பொழிதல்.
வலக்கட்டாயம்-பலவந்தம். [தந்திரம்.
வலக்காரம்-பொய், பலவந்தம், அதிகாரம்,
வலக்கை-வலதுகை, வலப்பக்கம்.
வலக்கைகொடுத்தல்-நல்ல உதவியளித்தல்.
வலங்கமர் - ஓர் சாதியார், வலைஞர்.
வலங்கம்-பாரி சமூசாரம், பெருங் குடும்பம்.
வலங்காரம்-மேளத்தின் பலசையிட்ட புறம்.
வலங்குலம் - ஓர் குலம். [வலப்பக்கம்.
வலங்கை-வலக்கை, வலப்புறம், வலதுகை,
வலங்கைமீகாமன்-'அறிவானந்தசித்தியார்' என்னும் நூலை இயற்றியவர்.
வலங்கையார் - ஓர் சாதியார், உயர்குடி.
வலங்கையான்-வலங்கமத்தான். [டைதல்.
வலங்கொள்ளல் - வலம் வருதல், வெற்றிய
வலசல் - அன்னிய நிரகப் பிரவேசம்.
வலசாரி - வலமாய்ச் சுற்றிப் போதல்.
வலசு } கூட்டம்,குழுமல்,குழாம், மொய்.
வலசை }
வலசைவாங்குதல்-கூட்டத்தோடே எடுபட்டுப் போதல், வேற்றூர்க்குக் குடியோடுதல்.
வலசோர் - ஓர் பட்டினம்.
வலஞ்சுழி-வலஞ்சுற்றுஞ் சுழி, குதிரையின் நற்சுழிவகை, தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவலஞ்சுழி எனும் சிவத்தலம்.
வலட்டி - வலித்தது, வல்லமையுள்ளது.
வலதி - சாமர்த்தியமுள்ளவன், வல்லவன்.
வலது - செயல், வலப்பக்கம், வல்லமை, வெற்றி, சாமர்த்தியம்.
வலதுகுண்டை-வலத்தை. [கட்டுதல்.
வலத்தல்-சொல்லல், நிணத்தல், வளைத்தல்,
வலத்திடல்-சொல்லல். [மேலானது.
வலத்தை-நகத்தின் வலப்பக்கத்து எருது,
வலநாடு - ஓரூர், வலையர்நாடு.
வலந்தம் - வசனம், வளைவு. [புரிக்கொடி.
வலந்திரி-வலத்துக்குச் சுற்றுங்கொடி, வலம்
வலப்பம்-பலப்பம், கற்குச்சி. [கம்.
வலப்பாரிசம் - வலப்புறம், வலம், வலப்பக
வலமன் - வலப்பக்கம், வலப் பாரிசம்.
வலம்-இடம், ஏழனுருபு (உ-ம்) கைவலத்தியாழ், கனம், சேனை, மேல், வலப்பக்கம், வலி, வெற்றி, பிரதட்சிணம், பவ்வீ.
வலம்படுதல் - இடப்பக்கத்திலிருந்து வலப் பக்கஞ் செல்லுதல், மேம்படுதல்.
வலம்பம் - நிறுதிட்டவரி, நேர்கோடு.
வலம்புரநாதர் - திருவலம் புரத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வலம்புரி - நந்தியாவட்டம், வலப்புரி, வலம் புரிச்சங்கு, வலம்புரிச்சங்கின் வடிவமைந்த தலைக்கோல வகை.
வலம்புரிக்காய் - பிரக்கதம். [வகை.
வலம்புரிச்சங்கு-வலமாகச் சுழிந்துள்ள சங்கு
வலம் வருதல்-பிரதக்ஷிணம் செய்தல்.
வலயம்-எல்லை, கடல், குளம், கைக்கடகம், சுற்று, வட்டம், வட்டவடிவு, வளையம்.
வலவந்தம் - பலவந்தம், வலந்தரம்.
வலவந்தரம் - வலவந்தம், பலவந்தம்.
வலவந்தன் - பலவான், பராக்கிரமசாலி.
வலவன்-சமர்த்தன், தேர்ப்பாகன், வெற்றியாளன், விஷ்ணு, வீமன் அஞ்ஞாதவாச காலத்தில் வைத்துக் கொண்ட பெயர், பலராமனுக்கும் இப்பெயருண்டு.
வலவிரோதி - இந்திரன், வலவைரி.
வலவை - இடாகினி, காளி, காளியேவல் செய்வாள், வல்லவன், வல்லோன், விநாயகன்றேவி, நாணிலி, வஞ்சப்பெண்.
வலவைரி-வலவிரோதி. [கங்களின் சுற்று.
வலவோட்டு-சூரியன் முதலிய சத்தக் கிர
வலற்காரம்-பொய், பலாத்காரம்.
வலன்-இந்திரனுற்கொல்லப்பட்டவசுரன், உலப்பக்கம், வலி, வல்லவன், வெற்றி.
வலாகை - கொக்கு, குரண்டம், வலாசம்.

வலாசகம் - குயில், தவளை, வலாகை.
வலாசம்-கொக்கு, நீர். [அசுரன்.
வலாசுரன்-இந்திரனுற் கொல்லப்பட்ட ஓர்
வலாட்டிகன் } தத்துவசாவி, தத்து வ
வலாட்டியன் } ஞானி, [பகைவன்.
வலாரி-இந்திரன், வலன் என்னு மசுரனின்
வலார்-வளார், மிலாறு. [வலற்காரம்.
வலாற்காரம் - வலோற்காரம், பலவந்தம்,
வலி.- இரேகை, ஓலங்காரம்; அது: தொகைச் சொற்றொடர் புண்டாகத் தொடுப்பது, ஓர் நோய், குரங்கு, நறுவிலி மரம், பற்றிரும்பு,வரி,வலியென்னேவல்,வலாற்காரம், வல்லெழுத்து, சபதம், வஞ்சம், இழுக்கை.
வலிக்கட்டாயம் - வலக்கட்டாயம்
வலிக்கட்டு - வீணையிஞ்ஞருறுப்பு, யாழ்நரம்பின் வலிந்த கட்டு. [தற் குறிப்பு.
வலிக்கெனல் - தெளிவாய், தெளிவாயிருத்
வலிங்கம் - பலபந்தம், பலவந்தம்.
வலிசங்கம்- குரங்குக்கூட்டம், மந்திக்கணம்.
வலிசம் - தூண்டில், வெளிசம்.
வலிசெய்தல் - மிறுக்குச்செய்தல், வல்வழக்குரைத்தல், பலவந்தம் செய்தல்.
வலிச்சலன் - அறமெலிந்தவன், பிடித்தது விடாதோன், பிடிவாதக்காரன்.
வலிச்சலாணி - வரிச்சிலாணி. [வலித்தல்.
வலிச்சல் - சாய்ந்தது, பனையின் கடுங்காய்,
வலிச்சற்கொடி-கொடிவகை,கட்டுக்கொடி.
வலிதம்- அசைவு, சூழ்வு, சுற்றுவட்டம்.
வலிதல் - தங்கல், தணிதல், வலிந்துகோடல், வலோற்காரஞ்செய்தல், திண்ணியதாதல்,உச்சரிப்பில்அழுத்தமாதல், மெல்லெழுத்துவல்லெழுத்தாதல்,நோய்வழியிற் பொருள் கொள்ளாது இடர்படுத்தல்,தானை முன்வந்து செல்தல், உய்தல், பலவந்தப்படுத்துதல், மீறுதல், இழுத்தல்.
வலிதின் - பலவந்தமாக. [தம்.
வலிது - வலியது, வலிமையுள்ளது, பலவந்
வலித்தல் - இழுத்தல்,உடன்படல்,எங்கல், கடினமாய்வாங்கல், காய்தல், தோணிதூண்டல், நினைத்தல், மரக்கலப்பா யுயர்த்தல், மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்கல், வயிற்றுள்முறுக்குதல்,வலி வலித்தல், வளைத்தல், வன்மையாயுச்சரித்தல், பலவந்தப்படுத்தல், இடர்ப்பட்டுப் பொருள் கொள்ளுதல்,திண்ணியதாதல், நோவுண்டாதல்,கொழுத்தல்,சொல்லுதல்,உடன்படுதல்,புகைகுடித்தல், இசிவுகாணுதல்.
வலிநோய் - காக்கைவலி.
வலிந்துகோடல் - அருமையிற் கருத்துக் கொள்ளல்.
வலிப்படுதல் - பலப்படுத்தல்,உறுதியாக்கல்
வலிபதம்-அற்பகடுமை,பாகுமுதலியன கட்டியாகும் நிலை. [தலம்.
வலிபம் - கீழேழுலகத்தொன்று, அதுமஹா
வலிப்பற்றிரும்பு - வலிப்பற்றி, குறடு.
வலிப்பற்று - பற்றுக்குறடு, இடுக்கி.
வலிப்பு - இழுப்பு, வலி, வருத்தம், அழகு காட்டுகை, தண்டுவலிக்கை.
வலிமாந்தம் - மாந்த மெட்டிஞ்ஞன்று.
வலிமுகம் - குரங்கு. [தியம், பலவந்தம்.
வலிமை - வலோற்காரம், வன்மை, சாமர்த்
வலிமைசெய்தல்-பலவந்தம்பண்ணல். [தல்.
வாசோயுகம் - ஒரு சோடு புடவை. [யம்.
வாச்சல்லியம்-தயை, உருக்கம், வாற்சல்லி
வாச்சாயனன் - வாச்சியாயன்.
வாச்சி - வாய்ச்சி, ஆடாதோடை, வாசை.
வாச்சியம்-குற்றம், சொல்லப்படத் தக்கது, நிந்தை, பறைமுதலியன, வெளிப்படை, வாசகத்தின் பொருள். [சாயனன்.
வாச்சியாயன்-கனா நூல்செய்த முனி, வாச்
வாச்சியார்த்தம்-சொல்லுக்கு நேரே உரிய பொருள், ஸ்வார்த்தம்.
வாஞ்சனம் - வாஞ்சை, ஆசை, விருப்பம்.
வாஞ்சனீயம் - விரும்பத் தக்கது.
வாஞ்சனை-வாஞ்சை, வாஞ்சனம், விருப்பம்.
வாஞ்சாபோகம் - இச்சித்த போகம்.
வாஞ்சிதம் - விரும்பியது, வாஞ்சனம்.
வாஞ்சித்தல் - ஆசைப்படுதல், இச்சித்தல்.
வாஞ்சியம் - ஒரு சிவஸ்தலம்.
வாஞ்சினம்-விரும்பியது, வாஞ்சிதம். [வள்.
வாஞ்சினி-காமி, காமதூர்த்தன், காமமிக்க
வாஞ்சை - ஆசை, விருப்பம், வாஞ்சனம்.
வாடகை-குடிக்கூலி, கொல்லை, தெரு, மட்சுவர், வாகனசாலை, சுற்றுவட்டம். [டை.
வாடபேயம்-எருது, காளை, இடபம், குண்
வாடம் - சுவர், மதில், மிகுதி. [ந்த பூ.
வாடல்-சாதல், மெலிதல், வதங்கல், உலர்
வாடாக்குறிஞ்சி-குரவகம், உலரும் நிலையிலும் தன் இயற்கைநிறம் மாறுதபூவகை.
வாடாக்கொடி-கருநொச்சி, வாடைக்குற்றி.
வாடாமல்லி } பூச்செடி வகையி
வாடாமல்லிகை } னொன்று.
வாடாமாலை - பொன்னரிமாலை.
வாடி } அடைப்புக் கொல்லை, தங்கு
வாடிகை } மிடம், தொட்டால்வாடி, பூந் தோட்டம், மதில், முற்றம், வீடு, சாவடி.
வாடிகம் - பிரமி, வாக்குபவம்.
வாடிக்கை - வழக்கம், நடைபடி, முறை.
வாடுகி - ஓர் வகை வெள்ளரி.
வாடுதல் - வாடல், உலர்தல், மெலிதல், கெடுதல்.
வாடுன்-உப்புக்கண்டம், உப்புச் சேர்த்துக் காயவைத்த இறைச்சித்துண்டம்.
வாடை-இடைச்சேரி, இடையர்வீதி, வடகாற்று, காற்று, குடிக்கூலி, தெரு, நிரை மணம், வடக்கு, வரிசை, வாசனை, வீட்டுக் கூலி, வேடர்வீதி, வீதி, குளிர்காற்று, வடலை, வழி, சிறு கிராமம், மருந்து.
வாடைக்கச்சான் - வடமேல்காற்று.
வாடைக்காற்று - வடகாற்று, வாடை.
வாடைக்குற்றி-கருநொச்சி, வாடாக்கொடி.
வாடைக்கொண்டல் - வடகீழ்காற்று.
வாடைப்பொடி - வாசனைத்தூள். [சணி.
வாடையுண்ணி-பாம்பு, சர்ப்பம், வாயு பட்
வாட்காரன்-இரம்பத்தால் மரமறுப்பவன்.
வாட்கூத்து-வாளைப்பிடித்து ஆடுங் கூத்து.
வாட்டகை - வாழ்க்கை, ஜீவிப்பு, ஜீவனம்.
வாட்கோரை - புல்வகையி லொன்று.
வாட்சூலை - நோய்வகையி லொன்று. [ழகு.
வாட்டசாட்டம்-தோற்றப்பொலிவு, வடிவ
வாட்டம்-குறைவு, சாய்வு, சோர்வு, தெரு, தோட்டம், மெலிவு, வதக்கம், வழி, வாடல், வருத்தம், சம்பிரமம், நீட்டம், வடிவழகு, அனுகூலம், வாட்ட சாட்டம்.
வாட்டாவு - சோப்பம், வதக்கம், உலர்கை, சோர்வு.
வாட்டல் - மெலிவித்தல், மிருதுவாக்கல்.
வாட்டாலை - மெலிந்தவன், வாட்டாளை.
வாட்டாழை - கடற்ருழை. [லிந்தவன்.
வாட்டாளை-வாட்டாலை, இளைத்தவன், மெ
வாட்டாறு - மலைநாட்டி லுள்ள திருமால் திருப்பதிகளில் ஒன்று.
வாட்டாற்றுஎழினியாதன் - மாங்குடி கிழாரால் பாடப் பெற்றவன், இவன் சிறந்த கொடையாளி.
வாட்டி-முறை, வசட்டி, தடவை, வயிரமண்.
வாட்டியபுட்பம் - சந்தனம், மஞ்சள்.
வாட்டியம்-தோட்டம், வீடு, கிழார், கிருகம்.
வாட்டிலோடு-வாட்டுலோடு. [மலிவு, சார்பு.
வாட்டு - நன்மை, நீதி, வாட்டென்னேவல்,
வாட்டுதல் - துன்புறுவித்தல், வாடப்பண்ணுதல், உலர்த்துதல், வதக்குதல், கெடுத்தல், ஆடை வெளுத்தல்.
வாட்டுலோடு-உடைந்த கண்ணுடித்துண்டு, வாட்டிலோடு.
வாட்படையாள் - தூக்கை, கொற்றவை.
வாட்போர் - வாளாற் செய்யும் சண்டை.
வாட்யாயநி-அதிபலை.

வாணகந்தி - அரசமரம், சுவலை, போதி, வாணக் கந்தகம்.
வாணகம் - அக்கினி, அம்பு, தனிமை, பசுமடி, வேய்ங்குழல். [சக்கரபாணி.
வாணகன்-திருமால், விஷ்ணு, சக்கரதரன்,
வாணக்கந்தகம் - ஓர் கந்தகம், வாணகந்தி.
வாணக்காரன் - வாணவகை செய்வோன்.
வாணங்கட்டுதல் - வாணமடித்தல்.
வாணதண்டம் - புடைவைநெய் சூத்திரம்.
வாணபுரம் - வாணசுரனது தலைநகர்.
வாணமாட்சணம் - அம்பெய்தல். [லியன.
வாணம்-அம்பு, தீ, பாணம், மத்தாப்பு முத
வாணலி-வறுக்குஞ் சட்டி. [இலிங்கம்.
வாணலிங்கம்-வாணசுரனற் பூசிக்கப்பட்ட
வாணவாரம்-மார்க்கவசம். [அசுரன்.
வாணன் - கார்த்திகைநாள், வாழ்நன், ஓர்
வாணன் கோவை - தஞ்சை வாணன் கோவை.
வாணக்கம்பு-சிலம்பக் கோல், வாணத்தடி.
வாணசனம் } வில், தனுசு, அம்பு, அத்தி
வாணசிரயம் } ரம்.
வாணசுரன் - ஓரசுரன், வாணன்.
வாணத்தண்டம்-வாணக்கம்பு, வாணத்தடி.
வாணரி - திருமால், விஷ்ணுமூர்த்தி.
வாணளளப்போன்-சூரியன். [பண்ணுதல்.
வாணாவாங்குதல் - பெருந் தொந்தரவு
வாணாள் - வாழ்நாள், ஜீவியகாலம்.
வாணி-அசமதாகம், ஓர் கூத்து, சரச்சுவதி, அம்பு, ஓமம், நீர், இந்துப்பு, மஞ்சிலை, சொல், நாதந்தோன்றும் இடம்.
வாணிகச்சி - வாணியச்சி, வாணிச்சி.
வாணிகம்-இலாபம், வியாபாரம், ஊதியம்.
வாணிகன் - செட்டி, துலாக் கோல், துலாராசி.
வாணிகேள்வன்-வாணிமன், பிரமன்.
வாணிஜம்-வடவைத்தீ, வடவாமுகாக்கினி.
வாணிஜன் - வியாபாரி, வர்த்தகன்.
வாணிஜிகம் - வாணிஜம். [ஜன்.
வாணிஜிகன்-வியாபாரி, வர்த்தகன், வாணி
வாணிச்சி - செட்டிப்பெண், வாணியச்சி.
வாணிச்சிமேனி - மாணிக்கம், செம்மணி.
வாணிச்சியம்-வாணிகம், வியாபாரம்.
வாணிதம்-கள், ஈழம், சொல்விளம்பி.
வாணிதி - கூத்து, மதர்த்தவள்.
வாணிதி - தூதி, நர்த்தகி. [லி ஞென்று.
வாணிபம்-செட்டு; அது வைசியரறு தொழி
வாணிபர்-எண்ணெய் விற்போர், ஓர் சாதியார், செட்டிகள், வியாபாரிகள்.
வாணிமலர் - வெண்டாமரை.
வாணிமன்-பிரமன் } வாணிகேள்வன், பாரதி
கொழுநன்.
வாணியச்சி - வாணிச்சி, வாணிகச்சி.
வாணியம் - வாணிகம், வாணிச்சியம்.
வாணியன் - வாணிபன், வாணிஜன்.
வாணிவிச்சி-வாணிச்சி. [க முள்ளவள்.
வாணினி-கூத்தி, மூர்க்கமுள்ளவன், விவே
வாணீசன் - பிரமன், வாணி கேள்வன்.
வாணுதல்-பெண், ஒளிபொருந்திய நெற்றி.
வாண்டியம் - பேராமுட்டி.
வாண்முகம்-வாளின்வாய், வாளின் முனை.
வாண்முட்டி-வாளின் பிடி, வாட்பிடி. [டை.
வாதகம் - இடையூறு, இடர், ஊறுபாடு, த
வாதகரப்பன் - ஓர் நோய், ஓர் பட்டை.
வாதகாசம் - காசநோய்வகையி ஞென்று.
வாதகாமி-பட்சி, பறவை, புள். [னேரம்.
வாதகாலம்-காலமாலைச் சந்திகளின் முன்
வாதகி-சத்திசாரம், சத்திச்சாரம்.
வாதகிராணி-கிராணி வகையி ஞென்று.
வாதகுண்டலிகை-நீரடைப்பு.
வாதகும்பம்-யானைக்கதுப்பு.
வாதகுலுமம்-பெருங்காற்று, உரத்தகாற்று.
வாதகுன்மம்-குன்மநோய்வகையி ஞென்று.
வாதகேது-தூளி, புழுதி.
வாதகேலி-சரசப் பேச்சு, நகக்குறி.
வாதக்கடல் - நவசாரம், வாதராசன்.
வாதக்கடுப்பு-வாதக் குடைச்சல்.
வாதக்கரப்பன் - கரப்பானெய் வகை.
வாதக்கிராணி-வாதகிராணி.
வாதக்கொதி - வாதசுரம், சுரநோய் வகை.
வாதங்கினி - மரவகையி ஞென்று.
வாதசகம் } அக்கினி, நெருப்பு, கனல்,
வாதசகன் } அழல், தீ. [தேகம்.
வாதசரீரம் - வாதக்கூறுமிக்க சரீரம், வாத
வாதசாதனம் - தருக்கத்தினுடன் படுதல்.
வாதசாரதி - அக்கினி, வாதசகன்.
வாதசிரோமணி-நவசாரம், வாதக்கடல்.
வாதசீரிடம்-அடிவயிறு, கீழ்வயிறு. [சல்.
வாதசுரம்-வாதத்தைப்பற்றியெழுந்த காய்ச்
வாதசூலை - சூலைநோய் வகை.
வாதசெபம் - வாயு வேகம், மிகுந்த வேகம்.
வாதசோணிதம்-வாதநீர், ஓர் தூர்நீர்.
வாததநயன் } அநுமான், வீமன்.
வாததநூஜன் }
வாதத்தூலம்-காற்றிற் பறக்கும் பஞ்சு.
வாதத்தூளம்-நோய்யது. [முள்ளவன்.
வாததேகி-வாதசீரி, வாதக்கூறுமிக்க தேக
வாதத்தனிக்கல்-இராசவத்தனக்கல்.
வாதத்துவசம்-மேகம், கொண்மூ, முகில்.

வாதஞாசனம்-ஆமணக்கு, ஏரண்டம்.
வாதஞாடி-வாதத்திற்குரிய நரம்பு.
வாதஞாராயணம்-மயிற்கொன்றை,வாதசுரு.
வாதநிகண்டு - இரசவாத நிகண்டு. [நீர்.
வாதநீர் - உடலில் திமிர் உண்டாக்கும் துர்
வாதபித்தசூலை-நோய்வகையி னொன்று.
வாதபித்தம் - இரத்தத்திற் கலந்த பித்தம்.
வாதபிரியை-பாம்பு, சர்ப்பம்,அரவு,உரகம்.
வாதபுத்திரன் - அனுமன், வீமன், வாயு தன யன்.
வாதபுல்லம் - காற்றுக் கொண்டது.
வாதபூமி-வாதங் கொண்ட தேயம்.
வாதபோதம்-பலாசு, பலாசம்.
வாதப்பிடிப்பு-வாயு பிடிப்பு.[வாதமண்டலி.
வாதப்பிரமரி-சுழல் காற்று, சூறைக்காற்று,
வாதப்பிரமி-மான், உழை, சாரங்கம்.
வாதபுக்-பாம்பு,வாதாசனி,சர்ப்பம்,உரகம்.
வாதமடக்கி-தழுதாழை, நந்தக்காரி, வாத நாராயணம், சிறுதேக்கு. [வாதப்பிரமரி.
வாதமண்டலி-சுழல்காற்று, சூறைக்காற்று,
வாதமானம் - வருத்தல், துன்புறுத்தல்.
வாதமிருகம் - கலைமான், இரலை, வச்சயம்.
வாதமையப்பு-கறியுப்பு, இலவணம்.
வாதம்-இரும்பு முதலிய லோகங்களைப் பொன்னாக்கும் வித்தை, காற்று; இஃது உயிர் வேதனையி னொன்று, சம்பாஷணை, தருக்கமுடிவு, தருக்கம், முப்பிணியினொன்று, முறைப்பாடு, வில்வம்.
வாதயுத்தம்-தருக்கம், வாதம், வாதாட்டம், தருக்கப்போர்.
வாதரக்காச்சி-வாதராயணமரம்.
வாதரக்கி-பாஷாண வகையி னொன்று.
வாதரத்தம் - நோய்வகையி னொன்று.
வாதரங்கம்-அரசு. [நாராயணம்.
வாதரசு-மரவகை, மயிர்க்கொன்றை, வாத
வாதரதம் - சித்தாந்தம், முகில்.
வாதரம்-வாதலம். [கடல்.
வாதராசன் - நவசாரம், நவச்சாரம், வாதக்
வாதராட்சதன் - மருந்து வகையினொன்று.
வாதராயணம்-அம்பெய்தல், ஓர் மரம், மூலை முடி, மிருகதி, வாள், சீமைத்தேவதாரு.
வாதராயணன்-வெதிரிகாச் சிரமத்தில் தவத்தில் அமர்ந்ததால் வியாசருக்கு வந்த பெயர்.
வாதராயன் - வாயுபகவான், வாயுதேவன்.
வாதரூடம் - காற்று, கைக்கூலி, வானவில்.
வாதரோகம் - வாதநோய், வாதவியாதி.
வாதரோகி-வாயுரோகி. [று,வாதப்பிரமரி.
வாதலமண்டலி - சுழல்காற்று, சூறைக்காற்
வாதலம் - அதிமதுரம், காற்று, விரைவு.
வாதலிங்கி - வாதரோகி, வாயுரோகி.
வாதவூர்-திருவாதவூர்,மாணிக்கவாசகர்.
வாதவைரி-ஆமணக்கு, ஏரண்டம்.
வாதனம்-ஒலி, சீலை, வருத்தம். [னை.
வாதனை-தடை, வருத்தம், துன்பம், வாச
வாதாகதம் - காற்றடியுண்டது.
வாதாசனம் } பாம்பு, சர்ப்பம், அரவு, வாத
வாதாசனி } பிரியை.
வாதாடகம் } சூரியன் குதிரையி னொன்று.
வாதாடம் }
வாதாடல் - வழக்காடல், வழக்காடுதல்.
வாதாடுதல் - தருக்கித்தல், தர்க்கித்தல்.
வாதாட்டம்-தருக்கம்.
வாதாட்டுதல் - தருக்கத்திற் குட்படுத்தல், தொந்தரைப் படுத்தல்.
வாதாபி - அகஸ்திய முனிவராற் கொல்லப்பட்ட ஓர் அசுரன், வாதாவி.
வாதாபி - விப்ரஜித்திக்குச் சிம்ஹிகையிடத்துப் பிறந்த புத்ரன். (அகஸ்தியர் காண்க) அஜமுகி யென்பவள் துர்வாசரை வலிதிற் புணர்ந்து, இல்வலன் வாதாபியென்னும் இருவரையும் பெற்றாள் என்பது புராணக்கதை. [மலயமுனி.
வாதாபிசூதனன் - அகத்தியன், குறுமுனி,
வாதாமோதம் - மான்மதம், கஸ்தூரி.
வாதாம் - வாதுமை. [தமாலம்.
வாதாயம் - இலை, அடை,பத்திரம்,பலாசம்,
வாதாயனம் - பலகணி, மண்டபம்.
வாதாயனர் - ஓர் முனிவர்.
வாதாயு - மான் சாரங்கம், அரிணம்,உழை, நவ்வி, ஏணம்.
வாதாரி - ஆமணக்கு, வேம்பு.
வாதாலம் - மீன்வகையி னொன்று.
வாதாலி - சுழல்காற்று, வாதப்பிரமரி.
வாதாவி - ஓரசுரன், வாதாபி, ஓர்நகரம்.
வாதானுலோமனம் - காற்றடக்கல்.
வாதானுவாதம் - விஞவிடை. [மை.
வாதான்னியம் - வள்ளற்றன்மை, வள்ளன்
வாதி - காரணமுமேற்கோளு மெடுத்துக் காட்டிப் பிறன்கோள் மறுத்துத் தன்மத நிறுத்திப் பாடுவோன், காற்று, தருக்கி, முறைப்பாடுகாரன், வாதஞ்செய்வோன், வாதி யென்னேவல், பிராதுக்காரன், இரசவாதி.
வாதிகம் - ஓர் நோய், செம்பு. [றுத்தல்.
வாதிக்குதல் - வருத்தப்படுத்துதல், துன்பு
வாதிங்கணம் - சேம்பு, வாதாகம், சகுடம்.
வாதிசன் - கல்விமான், வித்துவான்.

வாதித்தல் - தருக்கித்தல், பேசுதல், வருத்தப்படுத்துதல், வாதாடுதல், தடுத்தல்.
வாதித்திரம் - ஓர் வாச்சியக்கருவி.
வாதிபம் - வஞ்சிக்கொடி, வஞ்சி, வாதிவம்.
வாதிப்பு - துன்பம், இடுக்கண். [கடல்
வாதிராசன் - ஈவசாரம், வாதராசன், வாதக்
வாதிரு - காற்று, ஊதை, பவனம், கால்.
வாதிவம் - வஞ்சி வாதிபம். [கிஷ்கு.
வாது - சண்டை, சபதம், தருக்கம், மரக்
வாதுகூறல் - சபதஞ் சொல்லுதல்.
வாதுகை - மனைவி, பாரியாள், இல்லாள்.
வாதுக்கியம் - கலியாணம், விவாகம், பரிணயம்.
வாதுமை - மரவகையிலொன்று, வாதாம்.
வாதுலம் - சுழல்காற்று, வாதூலம்.
வாதுலன் - உன்மத்தன், வாதூலன்.
வாதை - துன்பம், நோய், வருத்தம், வேதனை.
வாதைவரி - ஆமணக்கு, ஏரண்டம்.
வாதோரணமஞ்சரி - மதகளிற்றை வசப்படுத்தினோரதும் எதிர்பொரு களியைச் சயித்தோரதும்களிதழுவினோரதும்வென்றியை வஞ்சிப்பாவாற்கூறும்ஓர்பிரபந்தம்.
வாத்தாடு - கூரையின் ஓரம். [டுப்பலகை.
வாத்தாட்டுப்பலகை - கூரையின் வாய்த்தட்
வாத்தி - கற்பிப்போன், உபாத்தி, ஆசிரியன்.
வாத்திச்சி - உபாத்தியாயனி, உபாத்தியாயி.
வாத்தியஞ்சேவித்தல் - மேளமடித்தல்.
வாத்திபாண்டம் - வாத்தியப்பொது, வீணை.
வாத்தியப்பெட்டி - ஆர்மோனியப் பெட்டி, கீதம் வாசிக்கும் யந்திரப்பெட்டி.
வாத்தியம் - கஞ்சக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி, நரம்புக்கருவி, மிடையுமிசைக்கருவிகள்.
வாத்தியம்பண்ணுதல் - நகரா முழக்குதல்.
வாத்தியாயன்) கற்பிப்போன், உவாத்தி,
வாத்தியான் } உபாத்தி.
வாத்தியை - சுழல்காற்று, சூறைக்காற்று.
வாத்து - வாஸ்துபுருஷன், வீடு, தாரா, பெருந்தாரா, மரக்கொம்பு. [ந்தி.
வாத்துசாந்தி - வாத்துமனுக்குச் செய்யுஞ்சா
வாத்துதல் - வாழ்த்துதல், ஆசிகூறுதல்.
வாத்துபுருடன் - வாத்துமன், வாஸ்துபுருஷன்.
வாத்துபோதம் - சிற்பநூன் மூப்பத்திரண்டினொன்று. [ஷன்.
வாத்துமன் - வாத்துபுருடன், வாஸ்துபுரு
வாத்துமாதனம் - இருகாலு மொருகையு நீட்டி யொருமுழங்கை யூன்றித் தலை நிமிர்த்திக்கிடப்பது; இது: ஆசனவகையினொன்று.
வாத்ரோணவாயசம் - மலைக்காகம்.
வாத்ஸல்யம் - மிக்க அன்பு, பேரன்பு.
வாத்ஸ்யன் சாகல்யன் சீடன்.
வாத்ஸ்யாயனம்-வாச்சாயனன் ஸமஸ்கிருத மொழியில் இயற்றிய காமசூத்திரம்.
வாந்தகி - கடியள்.
வாந்தம் - சத்தி, சக்தி. [சுனகன், சுணங்கன்.
வாந்தரதம் - நாய், ஞமலி, சூரன், முடுவல்,
வாந்தவன்-மித்திரன், சிநேகிதன், நண்பன்.
வாந்தி - சத்திபண்ணல், வாயாலெடுத்தல்.
வாந்திசோதனி - கருஞ் சீரகம்.
வாந்தித்தல் - சத்தித்தல், வாந்தியெடுத்தல்.
வாந்திபிராந்தி
வாந்திபேதி
வாந்திப்பிராந்தி } கழிச்சற் கோதாரி.
வாந்தியம் - தான்றி, வாலுளுவை.
வாந்தியுப்பு - வாந்தியுண்டாக்கும் உப்பு.
வாந்தியெடுத்தல் - சர்த்தி செய்தல்.
வாபதண்டம் - நெய்யற்பலகை.
வாபம்-சௌளஞ்செய்தல், நெய்குதல், வித்து
வாபி - தடாகம், குளம், வாவி, வாபீ.
வாபிதம் - தானிய வகையிலொன்று. [வாபி.
வாபீ - தடாகம், வாவி, குளம், பொய்கை,
வாபீகம் - சாதகப்புள், சாரங்கம்.
வாபீசு - திருப்பிக்கொடுத்தல், கூறியதைத் தவறென்று ஒப்புக்கொளல், வாபசு.
வாப்பியம் - கோஷ்டம்.
வாமசுக்கிலம் - பொன்னுவிரை.
வாமதந்திரம் - வாமசமயநூல். [தொன்று.
வாமதேவம் - ஓர் மந்திரம், சிவனேம்முகத்
வாமதேவன்-வசிஷ்டரோடு அயோத்தியில் வசித்த தசரதன் புரோஹிதன், ஓர்முனி.
வாவரம் - அஷ்டாதச புராணங்களு ளொன்று சுவேதவராக கற்பத்துக் குரியதாகி யமுதல் மூன்று வேதத்திலும் சொல்லப்பட்டவிஷயங்களையும்திரிவிக்கிரமன் வரலாறுகளையும் எடுத்துக்கூறுவது. இது பிரமதேவனுல் சொல்லப்பட்டது, இது பதினலாயிரம் கிரந்த முடையது, (2) தென்றிசையானை.
வாமநன் - பலி சக்ரவர்த்தியைச் சங்கரிக்

கும்பொருட்டுக் காசிபனுக்கு அதிதியிடத்துப் பிறந்தவிஷ்ணு. இந்தஅவதாரம் தசாவதாரங்களுள் ஐந்தாவது. (2) காசிகர் விருத்தி செய்தவர்.

வாமநாசாரியர் - வாமனசாரியர்.

வாமநாச்சிரமம் - வாமனச்சிரமம். [மம்.

வாமபாகம்-இடப்பக்கம், இடதுபக்கம், வா

வாமபாகி - பார்வதி,உமாதேவி, அம்பிகை.

வாமபுரகோபம் - துத்தம்.

வாமம் -அழகு,இடப்பக்கம், உட்சமயமாறி னொன்று, ஒளி, ஓர்பாம்பு, குறுமை,கூன், நேர்மையின்மை,எதிரிடை, வாமதேவம், வாமனம், சிவனேம முகத்தொன்று,செல்வம், தீமை, தொடை, பசுமூலை, மூலை.

வாமலூரம் } கறையான்புற்று,வன்மீகம்.
வாமலூரு }

வாமலூருதரையன்-வான்மீகிமுனி.[திருமால்

வாமலோசனன் - அழகிய விழியுடையான்,

வாமலோசனை-அழகியவிழியுடையாள்,திரு

வாமலோசிகம் } கற்ரூழை, குமரி,கன்னி.
வாமல் }

வாமனத்துவாதசி - சைத்திர மாசத்துச்சுக்கிலபட்சத்துத் துவாதசி திதி. [ன்று.

வாமனபுராணம் - பதினெண்புராணத்தொ

வாமனமுனிவர் - வாமனசாரியர்.

வாமனம்-குறள், திருமால் தசாவதாரத்தொன்று,தென்திசை ஆண்யானை,பதினெண் புராணத்தொன்று.

வாமனரூபம்-வரிக்கூத்துவகை. [திருமால்.

வாமனன் - குள்ளன், குறளருக்கொண்ட

வாமனசாரியர் - 14-வது நூற்ரூண்டி லிருந்தவரும் மேருமந்தர புராணமும் நீலகேசித் தெருட்டும் இயற்றியவருமான சைனமதாசாரியர். [தாச்சிரமம்.

வாமனச்சிரமம் - விஷ்ணுதவம் புரிந்த சித்

வாமனவதாரம் - திருமாலின் தசாவதாரங்களுளொன்று; அது: ஐந்தாமவதாரம்.

வாமன் - அருகன், காமன், சிவன்,புத்தன்.

வாமாசாரம்-வாமசமயாசாரம், தந்திரமார்க்கத்து இடக்கையார் ஒழுக்கம்.

வாமாட்சி - வாமலோசனை.

வாமாவர்த்தம் - இடம்புரிச் சங்கு.

வாமான் - குதிரை, அசுவம், பரி, கோரம்.

வாமி - பார்வதி, வாம சமயத்தவள்.

வாமிலம் - அகந்தை, அழகு. [பெண்.

வாமை - இலக்குமி, சரச்சுவதி, பார்வதி,

வாம்பல்-மூங்கில்,கழை,வேய்,அமை,வரை.

வாயகம் - கூட்டம்,கணம்,சமூதாயம், குழு.

வாயசகேதனி-மூதேவி, முகடி, வாயசவஜை.

வாயசதுண்டகன் - விநாயகன், கணபதி.

வாயசபிண்டம் - சிராத்தத்திற் காக்கைக் கிடும் சோற்றுத் திரளை.

வாயசபுஜண்டர் - காகபுஜண்டர். [வாயதம்.

வாயசம் - காக்கை,பலிபுட்டம்,கரும்பிள்ளை

வாயசவஜை - வாயசகேதனி. [தம்பிரான்.

வாயசவாஹநன்-சனிபகவான், காகமேறும்

வாயசவிரோதி } கூகை, ஆந்தை.
வாயசவைரி }

வாயசாரதி-கூகை. [காளி,பெண்காக்கை.

வாயசி-செம்மணத்தக்காளி, செம்மணித்தக்

வாயடி - வாயால் மருட்டுகை.

வாயடித்தல் - வாயினுலதட்டுதல்,வாயடியடித்தல், வாயிலேயடித்துக்கொள்ளுதல்.

வாயடியடித்தல் - வாய்ப்பேச்சால் மருட்டி வெல்லுதல், மருட்டிப்பேசுதல்.

வாயடை - தாட்கிட்டி சன்னி, உணவு.

வாயடைத்தல்-நாவெழாதிருக்கச் செய்தல், பேசக்கூடாம விருத்தல்.

வாயதண்டம் - நெய்யற்பலகை. [சம்.

வாயதம்-காக்கை,கரண்டகம், காகம், வாய

வாயம் - நீர், ஜலம், பெய்குதல், பெய்கை.

வாயலம்புதல் - வாயைச்சுத்தி பண்ணுதல்.

வாயல் - பக்கம், வாயில், வாசல்.

வாயவி - வடமேற்கு,வடமேற்றிசை. [யம்.

வாயவியஞானம்-வாயவியஸ்ஞானம், வாயவி

வாயவியம்-ஏழ்வகைஞானத்தொன்று; அது: பசுநடையி னெழுதூளியிற்படிதல், வாயுசம்பந்தமானது, வாயவி, வாயவியஸ்ஞானம், வாய வியாஸ்திரம். [யம்.

வாயவியஸ்ஞானம் - வாயவியஞானம்,வாயவி

வாயவியாஸ்திரம் - வாயுதேவனை அதிதேவதையாகக்கொண்டஅம்பு,வாயுவாஸ்திரம்.

வாயற்பதிவடுகன் - தொண்டைநாட்டு வாயற்பதியிலிருந்தஒரு பிரபு. இவர் சகோதரர் மரணமடைந்திருக்கையில் இவரை ஒரு புலவன் யாசிக்க அந்தப்பிணத்தை மூடி வைத்து விட்டுப் புலவனுக்களித்தவர். இதனை "நேயத்துடன்" எனுந் தொண்டை மண்டல சதகத்தாலறிக.

வாயனதானம்-நைவேத்திய பண்டங்களைத் தானமாகப்பிராமணர்களுக்கு வழங்குதல்.

வாயனம் - தீம்பண்டம், வாயனதானம்.

வாயாங்காரம்-பேச்சுமதம்,வாய்க்கொழுப்பு

வாயாடல் - வாய்சாலமாய்ப் பேசல், வாய் வழங்கல்.

வாயாடி -வாய்வல்லவன்,வாசாலகன்,அலப்புவோன்.

வாயாடுதல் - வாயாடல்,வாசாலகமாய்ப்பே

சுதல், வீண்பேச்சுப் பேசுதல்,
வாயார - வாய்நிரம்ப, முழுக்குரலோடு.
வாயாலெடுத்தல் - சர்த்தி செய்தல், வாயிலெடுத்தல்.
வாயாவி - மூச்சு, கொட்டாவி.
வாயாவிபோக்குதல்-கொட்டாவிவிடுதல்,பிரயோசனமின்றிப் பேசல்,வீணேபேசுதல்.
வாயிதா - நிலவிறைப் பணம்,வாய்தா. [ம்.
வாயிதாப்பணம்-வரிப்பணம், வாய்தாப்பண
வாயிலடித்தல் - முழுமையுங் கெடுத்தல்.
வாயிலாச்சீவன் } விலங்கு, மிருகம்.
வாயிலாச்செந்து }
வாயிலார்நாயனர்-தொண்டைநாட்டில் மயிலாப்பூரிலே வேளாளர் குலத்திலே யவதரித்து இல்லறத்து இருந்து சிவபூசை செய்து சிவபதமடைந்தவோர்சிவபக்தர். இவர் அறுபத்து மூவருள் ஒருவர்.
வாயிலாளர் - வாயில் காப்போர்.
வாயிலான்றேவன் - ஓர் சங்கப்புலவர்.
வாயிலிளங்கண்ணன் - ஓர் சங்கப்புலவர்.
வாயிலெடுத்தல் - வாயாலெடுத்தல்.
வாயிலேபோடுதல் - அபகரித்தல்.
வாயிலோர்-தமிழ்க்கூத்தர்,தூதுவர்,வாயில் காப்போர்.
வாயில் - ஐம்பொறி, கடை, கதவு,காரணம், திறம், தூது, வாய்தல், துவாரம்,ஆஸ்தானம், தலைவனையும் தலைவியையும் இடைநின்று கூட்டுந் தூது, வரலாறு.
வாயில்காப்போர் - கடைகாவலோர், வாயிலாளர், வாசலிற் காவல் செய்வோர்.
வாயில்மண்போடுதல் - கேடு விளைத்தல்.
வாயில்மண்விழுதல் - முற்றுங் கேடுறுதல்.
வாயில்விழைச்சு-உமிழ்நீர்,உமிர்நீர், உமிழ்வு.
வாயில்வேண்டல் - அகப்பொருட்துறையி னொன்று; அது: தலைவனுக்குமுகங்கொடுக்கு மாறு தலைவியைத் தூதுவர் வேண்டிக் கொள்வதைக் கூறுவது.
வாயிற்காட்சி - காட்சிபேதத்தொன்று, இந்திரியக் காட்சி.
வாயிற்படி - வீட்டு வாசலின்படி.
வாயினிலை - அரசனிடத்துத்தன்வரவுகூறுமாறு வாயில் காப்போனுக்குப் புலவன் சொல்வதாகக் கூறும் புறத்துறை.
வாயினேர்வித்தல் - அகப்பொருட் துறையி னொன்று; அது: தலைவியிடம் தூது சொல்லுமாறு தலைவன் தூதுவரைஉடன்படுத்துவதைக் கூறுவது.
வாயின்மாட்டம் - கோபுரம், சிகரி.
வாயு - காற்று; இஃது: அட்டமூர்த்தத்தொன்று, மூச்சு, வாதம், வாயுமண்டலத்துக்கு அதிதேவதை வெண்ணிறமும்,மான் வாகனமும், எக்காளமும்,அழகியரதமும், அந்தரதத்துக்கு இரண்டு முதல் ஆயிரங் குதிரைகளு முடையவன், இவன் அதிதி புத்திரன்.
வாயுகண்டம் - அசீரணம், அஜீரணம்.
வாயுகுது } அநுமான், வீமன், வாயு
வாயுகுமாரன் } சுதன்.
வாயுகுலுமம் - சுழல்காற்று, சூறைக்காற்று.
வாயுகேது - துகள், புழுதி, தூசி.
வாயுகோணம் - வாயுமூலை,வடமேற்குமூலை.
வாயுகுத்து - வாயுநோய்வகை, வாய்வுக் குத்து.
வாயுசகன் - தீ,கனல்,அக்கினி, வாயுச்சகன்.
வாயுசங்கிதை } குலசேகர வரகுண ராம
வாயுசம்மிதை } பாண்டியர் செய்த ஒரு சைவ புராணம், வடமொழிப் புராணத்தின் மொழிபெயர்ப்பு. இது பூர்வ காண்டம், உத்தரகாண்டம், என்ற இரு பிரிவோடு அறுபத்தொரு அத்தியாயங்கள் கொண்ட 1334 திருவிருத்தங்களையுடையது.
வாயுசம்பவன் } அனுமான், வீமன்.
வாயுசன் }
வாயுசாதன் } [ன்.
வாயுசுதன் - அனுமான், வீமன், வாயுகுமார
வாயுசூலை - சூலைநோய்வகை. [சகன்.
வாயுச்சகன் - தீ, அக்கினி, நெருப்பு, வாயு
வாயுதவி - பேச்சுதவி, வாயுபகாரம்.
வாயுதநயன் - அநுமான், வீமன். [தம்பம்.
வாயுதாரணை - வாயுவைநிறுத்துதல்,வாயுத்
வாயுதாரு - முகில், மூங்கில்.
வாயுத்தம்பம் } வாயுவைத்தடுத்தல்;இது:
வாயுத்தம்பனம் } கலைஞான மறுபத்து நான்கி னொன்று. [மோர் கருவி.
வாயுத்தானி-காற்றுவீசுந்திசையைக் காட்டு
வாயுநிவர்த்தி - காற்றமைவு. [தை.
வாயுபகாரம் - பேச்சுபகாரம்,முகமன்வார்த்
வாயுபசாரம் - வாயுபகாரம்,வாயளவிற்காட்டும் மரியாதை, உபசாரப் பேச்சு.
வாயுபட்சணம் } காற்றுண், பாம்பு.
வாயுபட்சம் }
வாயுபலம் - மழை,வானவில்,இந்திரதனுசு.
வாயுபுத்திரன் - அனுமான், வீமன், வாயுசுதன்.
வாயுப்பறித்தல்-அபானவாயுவெளியேறுதல்.
வாயுப்பிடிப்பு - வாதத்தால் உண்டாகும் உடற்பிடிப்புநோய்.

வாயுப்பொருமல் - வயிற்றுப் பொருமல், வாயுவின் கோபம்.
வாயுமண்டலம் - வாயுவுக்குரிய மண்டலம்; அது:சப்தமண்டலங்களுள்ஒன்று,ஆகாயம்
வாயுமானி - காற்றின் அழுத்தத்தை அளந் தறியுங் கருவிவகை, அனிலபாரகி.
வாயுமூலை - வடமேற்கு, வடமேற்றிசை.
வாயுமைந்தன் - அனுமான்,வீமன், வாயுபுத் திரன்.
வாயுருட்டு - பேச்சால் மருட்டுதல்.
வாயுரோகம் - வாதநோய், வாதவியாதி.
வாயுலிங்கம்-சீகாளத்தியிலுள்ள சிவலிங்கம்; இது: பஞ்சலிங்கத்தி லொன்று.
வாயுவாகம் - புகை, தூமம், தூபம்.
வாயுவாகினி - நரம்பு, சிரை, சங்கன்னம்.
வாயுவாஸ்திரம் - வாயு வம்பு.
வாயுவிளங்கம்-ஓர்மருந்து.[போதல்வருதல்.
வாயுவின்கூறுபாடு-ஓடல் இடத்தல் கூடல்
வாயுவின்கோபம்-வாதம்,வாயுப் பொருமல்.
வாயுவு - வாயு, பவனம், காற்று, ஊதை.
வாயுவுபத்திரவம் - வாத நோயாலுண்டாந் துன்பம்.
வாயுவேகம் - மிகுகதி, காற்றின்வேகம் போன்ற விரைவு. [புள்ளவ-ன்-ள்.
வாயுவேகி - மிகுசுறுக்கன், மிக்கசுறுசுறுப்
வாயுறை - பசுமுதலிய வற்றிற்குக் கொடுக் குங் கைத்தீன், வாயுபதேசம், கவளம்.
வாயுறைவாழ்த்து - ஓர் பிரபந்தம்; ஆவது: இடித் துரையாவது முன்னர்த்தாங்கக் கூடாவாயினும் பின்னர்ப்பெரிதும் பயன் பயக்குமென வெண்பா முதலிலுமாகிரிய மிறுதியுமாகக் கூறுவது.
வாயுறைவாழ்த்துமருட்பா - உறுவதாய் மெய்ப்பொருள் கூறுவது.
வாயூறல் - வாயினீரூறுதல்.[வாய்நீரூறுதல்.
வாயூறுதல் - அபேக்ஷித்தல், அவாவுதல்,
வாயூற்று - வாயில் உமிழ்நீர் சுரத்தல்.
வாயெடுத்தல் - பேசத் தொடங்கல்.
வாயைக்கட்டுதல் - உணவிற் பத்தியமாக இருத்தல்,சிக்கனமாகஉணவுண்ணுதல்.
வாயொடுங்குதல்-பேச்சடங்குதல்.
வாய் - இடம்,உதடு, ஊதுகுழல், ஏழனுருபு (உ-ம்)குரைகடல்வாயமுதென்கோ,சொல், துவாரம், சிறப்பு, வழி, துலாக்கோ லின்வசை, தழும்பு, நூதி, பேச்சு, மெய், வாக்கு இது பஞ்சப்பொறியிலொன்று, வி தம், வாயில், வாயென்னேவல், விளிம்பு.
வாய்கட்டி - வாய்திறவாது தடுப்போன்.
வாய்கட்டுதல்-பிரேதங்கட்குவாய்கட்டுதல், மந்திரத்தால் வாய்திறவாமற் பண்ணல்
வாய்கரை - இறங்குதுறை.
வாய்கனத்தல் - தெளிவில்லாமற் பேசுதல்.
வாய்காட்டுதல் - அதிகப் பிரசங்கமாய்ப் பேசல், வாயைச் சுட்டிக்காட்டல்.
வாய்குமட்டல் - வாந்தி யெடுக்க வருகை.
வாய்குளிரப்பேசுதல்- இனிமையாய்ப் பேசல், நயவசனம்.
வாய்குளிறுதல் - அச்ச முதலியவற்றினாலே குளிறுதல், சத்தமிடுதல். [வாய்குவிதல்.
வாய்கூப்புதல் - துதித்தல், வழுத்தல்,
வாய்கூம்புதல் - குவிதல், வாய்மூடுதல்.
வாய்கொடுத்தல்-பேச்சுக்கொடுத்தல், வாக் குக்கொடுத்தல்,வாய்ச்சண்டைவளர்த்தல்.
வாய்க்கசப்பு - வாய் கசந்திருக்கை.
வாய்க்கட்டை-சிறுவர்க்குரிய தின்பண்டம், இலஞ்சம், அநீதக்கொடை.
வாய்க்கணக்கு - எழுதாமற் சொல்லுங் கணக்கு, மனக் கணிதம்.
வாய்க்கயிறு - கடிவாளக்கயிறு, வற்கம்.
வாய்க்கரிசி - பிரேதத்தின் வாயிலிடுமரிசி.
வாய்க்கரிசிபோடுதல் - வாய்க்கரிசியிடல்.
வாய்க்கரிசியிடுதல் - அபரக்கிரியையி னொன்று, மயானச் சடங்கினொன்று.
வாய்க்காசு-வாய்க்கரிசியிடுகையிலிடுங்காசு, இலஞ்சம். [வோன், பேச்சில் வல்லவன்.
வாய்க்காரன் - அதிகப்பிரசங்கமாய்ப் பேசு
வாய்க்காலுக்குப்போதல் - மலங் கழித்தல்.
வாய்க்கால் - நீரோடுங்கால், கால்வாய், மக நாள், வாயில் வரும் சுவாசம்.
வாய்க்கிரந்தி - வாய்ப்புண், ஓர் நோய்.
வாய்க்கிலெட்டவன் - பெருந்தரித்திரன், பிரயோசனமற்றவன்[மில்லாதவார்த்தை.
வாய்க்கிறுது-அசங்கதவார்த்தை,பொருத்த
வாய்க்குருவி - ஊதுகுழல்.
வாய்க்குவழங்காமை - சுவையற்றதாகை, அசப்பியமா யிருக்கை.
வாய்க்குற்றம் - பேச்சுக் குற்றம்.
வாய்க்கூலி - கைக்கூலி, இலஞ்சம்.
வாய்க்கொழுப்பு - மதியாப் பேச்சு.
வாய்க்கொள்ளாதபேச்சு-அசப்பியப்பேச்சு.
வாய்சலிக்குதல் - பேரி வாயயர்தல்.
வாய்சவக்களித்தல் - வாய் உருசியில்லாமல் இருத்தல், வாய் மழுமழுப்பு.
வாய்சளப்புதல் - வீண்பேச்சுப் பேசுதல்.
வாய்சளிக்குதல் - வாய்சவக்களித்தல்.
வாய்சோர்தல் - வாய் பிதற்றுதல், வாய்தடு மாறுதல், வாய்சலித்தல்.
வாய்ச்சப்பை - சாமர்த்திய மற்றவ-ன்-ள்

வாய்ச்சம்பிரதாயம்-பேச்சுச் சாமர்த்தியம்.
வாய்ச்சாக்கூட்டம் - பல்லு, தந்தம்.
வாய்ச்சாலகம் } சொல்வன்மை, வாக்கு
வாய்ச்சாலக்கு } வல்லபம்.
வாய்ச்சான்பிழைச்சான் - நிச்சயமற்றது, அநிச்சயமானது, ஐயமானது.
வாய்ச்சி - மரம்வெட்டுமோராயுதம், செங்கல் செதுக்கும் கருவி. [னதலை.
வாய்ச்சித்தலை-சப்பளிஞ்சதலை, தட்டையா
வாய்ச்சுத்தம் - வாக்குச் சுத்தம், பொய் சொல்லாமை, வாக்கு நாணயம்.
வாய்ச்சொலவு - ஆருடஞ் சொல்லுகை.
வாய்ச்சொல் - வாய்மொழி, வாய்ப்பேச்சு, வாயினின்று வருஞ்சொல், உபசருதி.
வாய்ஞானம்-வாசா ஞானம்.
வாய்தடுமாறுதல்-வாய்பதறுதல்,பேசுவதிற் பிழைபடுதல், வாய்குளறுதல்.
வாய்தல் - வாயில்,வாசல், நுணுக்கம்.
வாய்தற்கூடு - கதவு நிலை, கதவு நிலை.
வாய்தற்படி- கதவு நிலைப்படி. [வரி.
வாய்தா -நிலவிறைப்பணம், தவணை, கெடு,
வாய்தாரி } ஆயுதங்களினுதி,நிணறு முத
வாய்தாரை } லியவைகளின் விளிம்பு.
வாய்திறத்தல்-வாயை அகலவிரித்தல்,மலர்தல்,புண்கட்டியுடைதல்,பேசுதல். [டம்.
வாய்த்தலை-வாய்க்காற்றலை,தொடங்கும் இ
வாய்த்தல் - கிடைத்தல், சித்தித்தல், சிறத்தல் பொருந்தல், மாட்சிமை, நன்கமைதல், செழித்தல், சேர்தல், மதர்த்தல், லபித்தல்.
வாய்த்தாரை - வாய்தாரி, வாய்தாரை.
வாய்த்துடுக்கு - பேச்சிற்காட்டும் ஆத்திரம், பேச்சிற் காட்டும்இறுமாப்பு.[வாய்மணம்.
வாய்நாற்றம் - வாயின் அசுசியான மணம்,
வாய்நீர் - உமிழ்நீர், உமிநீர், உமிழ்வு.
வாய்பாடு-வாயிலாட்சிப்பட்டு வரும்பேச்சு, பெருக்கல் முதலியன காட்டும் அட்டவணை, மரபுச்சொல், வழக்கம், சொல்வன்மை.
வாய்பாறுதல்-உளறுதல், பிதற்றுதல்.
வாய்பிதற்றுதல் } நாக்குழறிப்பேசுதல்,
வாய்பினற்றுதல் } அலப்புதல்.
வாய்பிளத்தல் - திகைத்தல், மரித்தல், அங்காத்தல், முடியாதென்று கைவிடுதல்.
வாய்புதைத்தல் - வாய்மூடுதல், வாய் பொருத்துதல்.
வாய்பூசல் - வாயலம்புதல்.
வாய்பூசுறுத்தல் - வாய்சுத்தி செய்தல்.
வாய்பூசுதல்-வாய்நனைத்தல்,வாய்கழுவுதல்.
வாய்பொத்துதல் } வாய்புதைத்தல்.
வாய்பொருத்துதல் }
வாய்பொருமுதல்-கனவில்வாய் குளிறுதல்.
வாய்போக்குதல் - வாக்குக் கொடுத்தல்.
வாய்ப்பக்காட்டுதல் - விளங்க உணர்த்தல்.
வாய்ப்படுதல்-உருசிப்படுதல், வழிப்படுதல்.
வாய்ப்பட்சி - காக்கை.
வாய்ப்பட்டி- வாய்க்குவந்தபடி பேசுபவள், கண்டதைத் தின்பவள்.
வாய்ப்பந்தல் - ஆடம்பரவார்த்தை.
வாய்ப்பலி - வாய்க்கரிசி. [தல்.
வாய்ப்பறையறைதல்-பலருமறிய வெளியிடு
வாய்ப்பன் - ஓர் பண்ணிகாரம்.
வாய்ப்பன்சட்டி - ஓர் பணிகாரச்சட்டி. [ம்.
வாய்ப்பாடம் - ஏடுபாராமற்சொல்லும்பாட
வாய்ப்பாடு-வாய்பாடு, வாய்க்கிடும் உண்டி.
வாய்ப்பாட்டு - வாயாற்பாடும் பாட்டு.
வாய்ப்பாணை - அலப்புவாயன், அலப்பன்
வாய்ப்பியம்-வாய்ப்பியன் செய்த ஒரு தமிழ் இலக்கண நூல். [ருவரில் ஒருவர்.
வாய்ப்பியர் - அகஸ்தியர் மாணாக்கர் பன்னி
வாய்ப்பிரசங்கம்-வாயாற்பேசும் பிரசங்கம்.
வாய்ப்பிறப்பு - வாய்மொழி, வாயிலிருந்து வரும் சொல். [வளமை,அழகு,செல்வம்.
வாய்ப்பு-சித்தி, சிறப்பு, தகுதி, நயம், பேறு,
வாய்ப்புண் - வாய்க்கிரந்தி, நாக்குப்புண், வைதலாலுண்டாகும் மனநோவு.
வாய்ப்புள் - நற்சொல்லாகிய நிமித்தம்.
வாய்ப்புறம் - உதடு, அதரம், பாலிகை.
வாய்ப்புற்று - வாயிலுண்டாம் நோய்வகை.
வாய்ப்பூச்சு - வாயை சுத்திபண்ணுதல், வார்த்தையால் மழுப்புதல், ஆசமனம்.
வாய்ப்பூட்டு-அடைப்பு, தாடை எலும்பின் பொருத்து, பேசாமற்றடுத்தல், இலஞ்சம், வாய்க்கூடு. [பேச்சு.
வாய்ப்பேச்சு - வாயினற் பேசுகை, வெறும்
வாய்ப்பை - கடன், இருணம்.
வாய்மடிதல்-ஆயுதங்களின் கூர்மழுங்குதல்.
வாய்மடித்தல் - வாயினுட்கொள்ளுதல்.
வாய்மட்டம் - வாய்வளையம், பாத்திர முத லியவைகளின் மேல் மட்டம்.
வாய்மண்போடுதல் - சீவனத்தைக் கெடுத்தல், கொடுமை செய்தல்.
வாய்மதம் - வாய்க்கொழுப்பு மதியாப் பேச்சு, மதியாது பேசுகை.
வாய்மலர்தல்-பேசுதல்,பேசல், வாய்விடல்.
வாய்முத்தம்-பல்லு, தந்தம். [தல்,குவிதல்.
வாய்மூடுதல்-வாய் பொத்தல், வாய் புதைத்
வாய்மூத்தகுடி-வாய்ப்பேச்சினு லெவரையு

மடக்கிவருங்குடி. [சில் முந்துவோன்.
வாய்மூத்தவன்-முந்திப் பேசுவோன், பேச்
வாய்மை - மெய்; அது: சாத்துவித குணத்
தொன்று, சொல், வலி, தப்பாதமொழி.
வாய்மொழி - வாயினூற்சொல்வது, வேதம்
திருவாய் மொழி.
வாய்மோசம்-பேச்சுமோசம், வாய்க்குற்றம்.
வாய்வடம் - குதிரை வாய்க்கயிறு, வற்கம்.
வாய்வலி-அஸ்திரத்தின் முனையுறுதி, வாய்
நோவு, சொல் வன்மை.
வாய்வழங்கல் - உண்டல், பேசல்.
வாய்வளையம் - யாதொன்றின் வாயில்
வைக்கும் வளையம்.
வாய்வார்த்தை - வாய்ப்பேச்சு, நயமொழி.
வாய்வாளார் - வாய் பேசாதார்.
வாய்விசேடம் } வாக்குச் சுத்தியால்
வாய் விசேஷம் } வருவது.
வாய்விடல்-பேசல், பேசுதல், வாய்மலர்தல்.
வாய்விடாச்சாதி-மிருகம், விலங்கு. [டல்.
வாய்விடுதல் - கொட்டாவிவிடுதல், வாய்வி
வாய்விட்டுப்பேசுதல்-ஒளியாமற் கூறல்.
வாய்விரிதல் - அங்காத்தல், அலப்புதல்.
வாய்விலங்கம் } ஓர் மருந்து, வாயுவிளங்
வாய்விளங்கம் } கம்.
வாய்வெட்டு - பறைவெட்டு, சாமர்த்தியம்.
வாய்வெருவுதல் - அயர்ச்சியில் வாய்குளிறு
தல், வாய்பிதற்றுதல்.
வாய்வேக்காடு - வாய்முழுதும் வெந்தாற்
போலிருக்கும் நோய்வகை.
வாய்வேக்காளம் - வாய்ப்புண்.
வாய்வைத்தல் - கடித்தல், கேட்டல், புசித்
தல், உருசிபார்த்தல். [உதவுங் கடன்.
வாரகக்கடன் - விவசாயத்தின் பொருட்டு
வாரகம் - குதிரை, குதிரைநடை, விவசாயி
கட்கு உதவியாகக் கொடுக்கும் முன்
பணம், நெல்வட்டிக்குக் கொடுக்கும்
பணம், கடல், நிலப்பனை, வாரக்கம்.
வாரகி - கடல், சத்துரு, தவத்தி.
வாரகிருமி - வாரிகிரிமி. [வாமுகம்.
வாரகீரம்-சீப்பு, பேன், போர்க்குதிரை, வட
வாரகீரன் - சுமைகாரன், மைத்துனன்.
வாரக்கம் - நெல் வட்டிக்குக் கொடுக்கும்
பணம், வாரகம், சிப்பாயாகப்பதிந்து
கொள்வோருக்குக் கொடுக்கும் முன்
பணம் [வன், கிருஷிகன்.
வாரக்காரன் - உழுங்குடியானவன், உழ
வாரக்குடி-நிலம்பயிரிட்டுப்பங்குபெறுங்குடி.
வாரக்குடிச்சி-வாரக்குடிப்பெண். [ன்று.
வாரக்குன்னல் - மாட்டுநோய்வகையி னொ
வாரங்கம் - ஆயுதப்பிடி, புட்பொது.
வாரசுநாமம்-ஆட்சி, உறுதி. [மாது.
வாரசுந்தரி - வேசி, பொதுமடந்தை, விலை
வாரசூலம் } பிரயாணத்திற்கு ஆகாதெ
வாரசூலை } ன்று வாரத்தில் திசை
களைக் குறிக்கும் தோஷம்.
வாரசூனியம் - சுபகாரியங்களுக்கு ஆகா
தென்ற நாளும் நக்ஷத்திரமும் சேர்க்கை
யாகிய தோஷம்.
வாரசேனை - வேசியர் கூட்டம்.
வாரடம் - வயல், கழனி, மருதநிலம்.
வாரடி - பலகறை, கவடி, சோதி, அக்கு.
வாரடித்தல் - நீர்நிரவியோடுதல்.
வாரடை-தராசின் ஏற்றத்தாழ்வான நிலை.
வாரடையோலை - குத்தகைப் பத்திரம்.
வாரட்டை - வாரவட்டை, கைமரம்.
வாரணசி - வாரணாசி, வாரணவச்சி,
வாரணபுரை - வாழை, அரம்பை, கதலி.
வாரணம்-உன்மத்தம், கடல், கவசம், காத்
தல், கேடகம், கோழி, சங்கு, சட்டை, தா
டை, பன்றி, மாவிலங்கை, யானை, விடு
தல், மறைப்பு, நீங்குகை, உறையூர்.
வாரணவச்சி } காசி, வரணை, அசி என இரு
வாரணாசி } நதிகள்கூடிப்பவகித்தலால்
இதற்கு இப்பெயர் வழங்குவதாயிற்று.
வாரணவல்லபை - வாழை, வாரணபுரை.
வாரணன் - கணபதி, விநாயகர்.
வாரணாவதம்-பிரயாகை, இது துரியோத
னன் பாண்டவர்களை யிருத்திக் கொல்
லும்பொருட்டுஅரக்குமாளிகை யமைத்த
இடம். இது பாரத யுத்தகாலத்தில்
கௌரவ சேனைக்கு ஒரு பாசறையாகவு
மிருந்தது.
வாரணை } தடுத்தல், மறித்தல், விலக்
வாரணையம் } கல்.
வாரத்தண்டு - கறிமுல்லை.
வாரநாரி - வேசி, பொதுமகள், வாரவனிதை.
வாரபலம் - வாரத்தாலுண்டாகும்பயன்.
வாரபுரை - வாழை, வாரணபுரை.
வாரப்படுதல் - உருக்கங் கொள்ளுதல்.
வாரப்பாடு - உருக்கம், பட்ச பாதம்.
வாரமுக்யை-வேசி, வாரநாரி, வாராங்கனை.
வாரம் - அன்பு, உரிமை, எழுதிழமை
கொண்டது, கடல், கரை, சமயம், சிறு
வரம்பு; சுரிதகம், தடை, திரள், திரை,
நாடகவகை பத்திலொன்று, நாள், பக்க
பாதம், பங்கு, பஞ்சாங்கத்திலொன்று,
பாத்திரம், மலைச்சாரல், வாயில், தாழ்
வாரம், குடியிறை, வாடகை, தானியக்

கட்டுக்குத்தகை, - தடவை.
வாரம்வைத்தல் - பிரியப்படுதல்.
வாரயம் - பிரமி, வாடிகம், வாக்குபவம்.
வாரல்-அள்ளுதல், ஓலைமுதலிய வாருதல், கொள்ளையிடல், கோலுதல், தடவுதல், நீளல், மயிர்கோதல், முகத்தல், வடிதல், வாரலென்னேவல். [வாரவிலாசினி.
வாரவது - வேசி, வாரநாரி, வாரமுக்யை,
வாரவாணம் - பஞ்சுபெய்து தைத்த மெய்ப்பை, மார்க்கவசம். [டம், வேசை, விறலி.
வாரவாணி-குயிலுவன், நியாயாதிபதி, வரு
வாரவ்வாரம் - கவசம், வாராவாரம்.
வாரவிசேஷம்-இன்ன கிழமையில் இன்ன தொழில் செய்தற்குரிய தெனும்பொருத்தம்;ஞாயிறு உத்தியோகஞ் செய்ய, திங்கள் விதை விதைக்க, செவ்வாய் போர் செய்ய, புதன், வித்தியாரம்பஞ் செய்ய, வியாழம் விவாகம் செய்ய, வெள்ளி மயிர் கழிக்க, சனி தவஞ்செய்ய உத்தமம்.
வாரவிலாசினி - வேசை, வாரஸ்திரீ, வாரவது. [நேரம்.
வாரவேளை - நாளின் முதல் முகூர்த்த
வாரஸ்திரீ-வேசை,பொதுமகள், வாரவது.
வாராகம் - (1) ஒரு கற்பம், (2) ஒரு புராணம், இது கற்பாதி மாதங்களும் பிறவுங் கூறுவது, இது இருபத்து நாலாயிரங்கிரந்தமுடையது, (3) திருமாலின்பன்றியவதாரம்,(4)மகததேசத்திலுள்ள ஒரு மலை.
வாராகரம் - கடல், சாகரம், பாராவாரம்.
வாராஹம் - ஓர் தீர்த்தம்.
வாராகி-ஓர் கிழங்கு, சத்தமாதர்களி லொருத்தி, பூமி, பெண்பன்றி.
வாராக்கதி - மோட்சம், மோக்கம்.
வாராங்கனை - வேசி, வாரஸ்திரீ, வாரநாரி.
வாராசனம் - நீர்க் குடம், பூரண கும்பம்.
வாராணசி - காசி, வாரணசி, வாரணவச்சி.
வாராணசேயன் - காசியிற் பிறந்தவன்.
வாராததனுல்வந்ததுமுடித்தல் - ஓர்தந்திரவுத்தி.
வாராதிபன் - கிழமைக்கதிபன், கிழமைக்கதிபதி, ஓரைக்கதிபதி. [வாரஸ்திரீ.
வாராஸ்திரீ-வேசை,வாராங்கனை,வாரநாரி
வாராநிதி-சமுத்திரம், வாரிதி, கார்கோள்.
வாராவதி - பாலம். [யம் வருவது.
வாராவந்தி-கட்டாயமாய் வந்தது, கட்டா
வாராவரத்து - அநீதமாய் வருதல்.
வாராவரவு - அபூர்வமான வருகை.
வாராவாரம் - வாரந்தோறும், வாரவாரம்.
வாராவாரி - மிகுதி, அதிகம்.
வாராவிருந்து - நல்விருந்து, வருதற்கரிய விருந்து.
வாராணை - வரவழைத்தல்; இது: பிள்ளைக்கவி யுறுப்புப் பத்திலொன்று.
வாராணைப்பருவம் - வாராணை.
வாரி-இசைக்குழல்,கடல்,கதவு, சரச்சுவதி, சீப்பு, தானியம் நிறைநீர், நீர், மடை, மதில், மதிற்சுற்று, மிகுதி, யானைகட்டுங் கயிறு,யானைக்கொட்டம், யானைபடுகுழி, வழி,வாயில்,வாரியென்னேவல், விளைவு, வெள்ளம்,தோணிப்பலகை,தடை,பகுதி, மூட்டைகளை இறுக்கிக்கட்டஉதவுங்கழி, கூரைமுனையில் வைத்துக்கட்டும் குறுக்குக்கழி, குப்பை வாருங்கருவி, வீணை வகை, முறையில் என்னும் பொருளில் வருஞ்சொல்.
வாரிகம் - பொன்முசுட்டை.
வாரிகிரிமி-அட்டை. [ள்ளைநோயாகியசுரம்.
வாரிக்காய்ச்சல்-கோதாரிக்காய்ச்சல், கொ
வாரிக்காலன் - கால்நடை, ஆடுமாடு முதலியன.
வாரிக்கொண்டுபோதல்-ஒருசேரஅழித்தல்
வாரிசம் - உப்பு, சங்கு, தாமரை. [மீனம்.
வாரிசரம் - மீன், மச்சம், சலசரம், மயிலை,
வாரிசன்-திருமால், விஷ்ணு, வாரிசாக்ஷன்.
வாரிசாசநன் - பிரமன், பதுமாசனன்.
வாரிசாசனி - இலக்குமி, சரசுவதி.
வாரிசாக்ஷன் - திருமால், வாரிசன்.
வாரிசாக்ஷி - தாமரை மலர்போலுங்கண்ணுடையவள்.
வாரிசாதம்-தாமரை,கோகனகம்,அம்புயம்.
வாரிசாதை - இலக்குமி, திருமகள்.
வாரிசாமரம் - நீர்ப்பாசி. [வார்ஸ்.
வாரிசு - வார்சு, வார்சுதார், வார்சுதாரன்,
வாரிசுநாமம் - உரிமை யுறுதி. [சன்.
வாரிசோத்பவன்-பிரமன், மலரோன், வன
வாரிடுதல் - கிழித்தல், கீழ்மக்கள்.
வாரிணாதம் - கடல், நாகலோகம்.
வாரிணாதன் - வருணன், வாரிநாதன்.
வாரிதம் - தடை, மேகம். [வாரம்.
வாரிதி - கடல், பௌவம், வாரிநிதி, பாரா
வாரிதித்தண்டு - பவளம், பவழம், வித்துருமம்.
வாரிதிநஞ்சு - அக்கினிக் கட்டி. [ணம்.
வாரிதிநாதம்-சங்கு, நந்து, சுரிமுகம், வார
வாரிதிவிந்து - கடலுரை.
வாரித்தல் - ஆணையிடல், தடுத்தல். [கான்.
வாரித்திரம்-ஓலைக்குடை, சாதகப்புள், பக்
வாரிநாதம் - கடல், பாதலம், முகில்.

வாரிநாதன்-வருணன், வாரிஜாதன். [கோள்
வாரிநிதி - கடல், பௌவம், வாரிதி, கார்
வாரிபர்ணி - வள்ளைக்கீரை.
வாரிப்பிரசாதம் } தேற்ரு, தேற்ரு ங்
வாரிப்பிரசாதன் } கொட்டை.
வாரிப்பிரவாகம்-நீர்ப்பெருக்கு, மலையருவி.
வாரிமுகி-முகில், மேகம், கொண்மூ. [கம்.
வாரியம்-மேல்விசாரணைசெய்யும்உத்தியோ
வாரியன் - மேல்விசாரணை செய்வோன்.
வாரியிறைத்தல்-சிதறச்செய்தல், வீணைக்கு
தல், மிகுதியாகக் கொடுத்தல்.
வாரியுளுயர்நிலம்-கோட்டை மதிலின் உள்
ளிடமாகச் சுற்றிவருதற்குரிய மேடான
ஒடுக்குவழி, பரிகை, கற்பா. [கோகனகம்.
வாரியுற்பவம் - தாமரை, வனசம், வனஜம்,
வாரிரசிதம் - வெள்ளிமணல். [வை.
வாரிரதம் - தெப்பம், தெப்பல், புணை, மித
வாரிராசி - கடல், அளக்கர், கார்கோள்,
வாரிதி.
வாரிருகம் } தாமரை, சலசம், கோகனகம்,
வாரிருஹம் } அம்போருகம்.
வாரிவலத்தல் - ஒரு சோதித்திரட்டுதல்.
வாரிவனநாதன்-சிவபெருமான், திரிபுராந்த
கன், திரியம்பகன், சங்கரன்.
வாரிவிடுதல்-வாரியிறைத்தல், மிகுதியாகக்
கொடுத்தல்.
வாரீசம் - கடல், தாமரை, சிந்தாமணி.
வாரீடம் - யானை, வாரணம், உம்பல், உவா,
களிறு.
வாரீவாகம் - மேகம். [பேய்க்கொம்மட்டி.
வாருகம் - ஆற்றுத்தும்மட்டி, வெள்ளரி,
வாருகோல் - துடைப்பம், விளக்குமாறு.
வாருடம்-ஆசந்தி, பாடை.
வாருணதீர்த்தம் - வாருணஸ்நானம்.
வாருணப்படை - வருணாஸ்திரம்.
வாருணம் - அட்டாதச வுபபுராணத்
தொன்று, கடல், மாவிலங்கு, மேகம்,
மேற்கு, சலம், வருணனுக்குரியது,
வயிற்றிலேனும்மார்பிலேனும் வெண்மை
நிறமமைந்த குதிரை வகை, கள்.
வாருணஸ்நானம்-நதி முதலியவற்றின் நன்
னீரில் ஸ்நானஞ் செய்கை.
வாருணி-அகத்தியன், ஆட்டாங்கொடி, கள்,
காய்ச்சி வடித்தமது, சதயநாள், மேற்கு,
மத்தியத்துக்கு அதிதேவதை, வருணன்
மகள், வருணனது பாரியை: இவளுக்குக்
கௌரி என்றும் ஒரு பெயர் உண்டு. பல
ராமர் பாரிகளில் ஒருத்தி. [தன்.
வாருணிவல்லபன் - வருணன், புனல் வேந்
வாருண்டகம் } எண்காற்புள், கண்பீழை,
வாருண்டம் } குரும்பி, குறும்பி,
வாருதல்-கவர்தல், கொழித்தல், கொள்ளல்,
திருடல், வரன்றல், வாரல், அள்ளுதல்.
வாருதி - நவசாரம், நவச்சாரம், வாரிதி.
வாருல்லியம்-விருத்தி. [யம், நாரம், ஜலம்.
வாருவகை-நீர், அப்பு, அம்பு, உதகம், தோ
வாரூடம் - பகடை. [டாதி, வாருணி.
வாரூணி - அகத்தியன், புரட்டாதி, பூரட்
வாரெழுத்தாணி - எழுத்தாணிவகை.
வாரை-காத்தண்டு, திராந்தி, மரவுத்திரம்,
மூங்கில், காவுதடி, மீன்வகை, ஆவிரை.
வாரைபிட்டகம் - உத்திரம், விட்டம்.
வாரொலிகூந்தல் - நீண்டு ஒலித்த கூந்தல்.
வார்-மூலக்கச்சு, தோல்வார், தோல், தண்
டம், நீர், நீளம், நெடுமை, நுண்மை, நேர்
மை, புயல், வாரென்னேவல், உயர்ச்சி.
வார்கடை - வார்த்து மிஞ்சினது.
வார்காது - வடிகாது, தாழ்காது.
வார்கொண்டமூலையம்மை - மேலத் திருக்
காட்டுப்பள்ளியிலேகோயில்கொண்டிருக்
கும் தேவியார் பெயர்.
வார்க்கயிறு - பின்னியதோற் கயிறு.
வார்க்குதல்-உலோக முதலியவற்றை யுருக்
கிவிட் டுருவ முதலிய வண்டுபண்ணல்,
பெய்தல், வார்த்தல். [இடம்.
வார்க்குத்து - நீர்ப்பெருக்கு சுழித்தோடும்
வார்க்கோலபுரம் - தோயமாபுரம்.
வார்சு - ஒருவ னுயட்குப்பின் அவனுடைய
சொத்தை யடைதற்கு உரியவன், வாரிசு.
வார்சுதாரன் } வார்சு, வாரிசு.
வார்சுதார் } [னென்று.
வார்ச்சியாநீயம் - உபநிடத முப்பத்திரண்டி
வார்தல்-உயர்ச்சி, ஒழுகல், தெரிதல், நீளல்,
வாருதல், உயர்தல், மயிர் கோதுதல்.
வார்த்தகம்-கிழத்தன்மை, கிழவர்குழு, வர்த்
தகமை, விருத்தியுரை, வார்த்திகம்.
வார்த்தசாகி - கற்ருழை, குமரி, கன்னி.
வார்த்தம் - சுகம், பதர், சப்பட்டை.
வார்த்தரம் - நீர், ஜலம், புனல், தோயம்.
வார்த்தலம் - கெட்டநாள். [வார்த்தல்.
வார்த்தல்-வார்க்குதல், ஊற்றுதல், உருக்கி
வார்த்தவம் - இருது, ருது.
வார்த்தாகம் - கத்தரிக்காய், கத்தரிச்செடி.
வார்த்தாகி - சிறுவழுதலை.
வார்த்தாபம் - வார்த்தாகம்.
வார்த்தாயனன் } ஓலைச்செய்திகள் கொடு
வார்த்தாவகன் } போகுவோன், தூதன்.
வார்த்திகம்-கிழத்தன்மை, கிழவர்குழு, மார்

க்கசடப்பிரமாணத்தொன்று;அது: நான்கு மாத்திரை யோர்க்ஷையாகக் கொண்டது, வார்த்தகம், வியாபாரம், சீவனம்.
வார்த்திகன் - தூதன், வைசியன், தக்ஷிணமூர்த்தி. (சிலப்) [சொற்பின் வருநிலை.
வார்த்தை - செய்தி, வசனம், மறுமொழி,
வார்த்தைத்தொழிலோர்-பூவைசியர், காராளர், வேளாளர், களமர், உழவர். [ரூமை.
வார்த்தைநாணயம்-பேச்சுறுதி,வாக்குத்தவ
வார்த்தைபோடுதல்-பேசுதல், பேச்சுநிச்சயம் பண்ணுதல். [தத்தம், அசைநிலை.
வார்த்தைப்பாடு - பேச்சுநிச்சயம், வாக்குத்
வார்த்தையாடுதல் - சம்பாஷித்தல்.
வார்த்தையிழுத்தல் - வார்த்தைக்கிழுத்தல்.
வார்த்தையெடுத்தல்-பேச்சுத் தொடங்கல், பேசத் தொடங்குதல், பிரஸ்தாபித்தல்.
வார்நாமச்சீட்டு - ஏற்றுமதிச்சீட்டு.
வார்நாமா - ஏற்றுமதி ரவாணு.
வார்ப்படம்-வார்ப்புவேலை,வார்ப்படவேலை.
வார்ப்படவேலைக்காரன்-வார்ப்புவேலை செய்வோன்,வார்படக்காரன்.[து,கைவளை.
வார்ப்பு-வார்த்தல், உருக்கிவார்க்கப் பட்ட
வார்ப்புவேலை - உருக்கிவார்த்தவேலை, உருக்கி வார்க்குந் தொழில், வார்ப்படவேலை.
வார்முதல் - உப்பளங்களிலிருந்து வாரியெடுக்கப்பட்ட உப்புக் குவியல். [யாதை.
வார்மை-ஈன்னடை, ஒழுக்கம், நேர்மை,மரி
வார்வாரணம்-மார்க்கவசம். [கெண்ணெய்.
வார்னீசு-மரச்சாமானுக்கு பூசப்படும்மினுக்
வார்ஸ் - வார்சு, வாரிசு, வார்சுதார்.
வாலகம் - கடையம், மோதிரம், வால்.
வாலகருப்பிணி - கன்னிகருப்பிணி, முதற் சினைப் பசு.
வாலகன்-இளைஞன், இளவல், இளையோன்.
வாலகிருமி-பேன், யூகை, ஓகணி.
வாலகிலியர் } அறுபதினாயிரம் ரிஷிகள்,
வாலகில்லியர் } இவர்கள் பிரமனது மானச புத்திரர்களுள் ஒருவராகிய கிருதுவின் புத்திரர்கள். இவர் அறுபதினமர், பெருந்தவ முடையோர், இவர்கள் அங்குஷ்டப் பிரமாணமாயுள்ள தேகமுடையவர்கள், இவர்கள் எப்போதும் சூரிய ரதத்தைப் பிரதக்ஷிணஞ் செய்துகொண்டிருப்பவர்கள்.
வாலகேசன் - சிவகணத்தவரில் ஒருவன்.
வாலகோகிலன் - விஜயநகரமன்னர் கிருஷ்ணதேவராயர் காலத்திருந்த ஒருதமிழ்க் கவி.
வாலக்கிரகம்-குழந்தைப் பருவத்திற் பீடையை விளைவிக்கும் கிரகக் கோளாறு.
வாலசந்திரன் - இளம்பிறை, பாலசந்திரன்.
வாலசந்நியாசி-இளமையிற் துறந்தவன்.[ல்.
வாலசரம்-உரியாதேசத்தி லோரூர், ஓர் நெ
வாலசிகித்சை-குழந்தை வைத்தியம், குழந்தை வைத்தியம் கூறும் நூல். [தையன்.
வாலசுப்பிரமணியன் - முருகன், வாலமுத்
வாலசூரணம்-மருந்துவகையி லொன்று.
வாலசூரா - மரவகை, மலை வீராலி.
வாலசூரியன்-இளவாதித்தன், பாலசூரியன்.
வாலஞானம்-இளமையில் ஞானம்.
வாலததுவம்-யௌவனசத்தி. [சாஸ்திரம்.
வாலதந்திரம் - மருத்துவ நூல், வைத்திய
வாலதி - யானைவால், வால்.
வாலதிப்போளம் - சாம்பிராணி வகை.
வாலநாயகம் - சிறுபிள்ளை யதிகாரம்.
வாலபத்திரம் - கதிரம், கருங்காலி.
வாலபுட்டி } முல்லை, தளவு, மாகதி.
வாலபுட்பி }
வாலமதி - இளஞ்சந்திரன், வாலசந்திரன்.
வாலமாலம் - அரிதாரம். [சுப்பிரமணியன்.
வாலமுத்தையன்-முருகன், குமரன், வால
வாலம் - கந்தைத் துணி, தலைமயிர், வால்மயிர், வால், வாலிபம், நீண்டு அகலங் குறுகிய துண்டு, பிண்டிபாலம்.
வாலம்பேரி சாத்தனூர் - ஓர் சங்கப்புலவர், மதுரை ஆருலவியநாட்டு ஆலம்பேரிசாத்தனுரெனவும்,வாலம்பேரி சாத்தனுரெனவுமிவர் கூறப்படுவர், இவர் பாடலால் இவர் நெய்தனிலத்தும் பாலைநிலத்தும் நன்றாகப் பயின்றவரென்று தெரிகின்றது.
வாலயக்ஞோபவீதம் - பிள்ளைப்பூணூல்.
வாலரசம் - சாதிலிங்கத்தில் வடித்தரசம்.
வாலரவி - உதயகால சூரியன். [வாயம்.
வாலராசன்-வைடூரியம், வாலவாயசம்,வால
வாலருவி - சுக்கிலத்தியானம்.
வாலலீலை - இளமைவிளையாட்டு,பாலலீலை.
வாலவதனயன் - அபரசன், பின்னோன்.
வாலவம் - புலிக்கரணம்.
வாலவயசு } இளவயது, இளமை,பால்யப்
வாலவயது } பிராயம்.
வாலவாயசம் } வைடூரியம், வாலராசன்.
வாலவாயம் }
வாலவாவம் - இளம்பிராயம், பால்யம்.
வாலவியசனம் - கவரிமயிர் விசிறி.
வாலவிளையாட்டு - வாலலீலை, பாலலீலை.
வாலறிவன்-கடவுள்,மெய்யறிவுடையோன்.
வாலறிவு - பேரறிவு, ஞானம், மூதறிவு.
வாலன் - வாலிபன். சேட்டையுள்ளவன்,

ஓர் நெல்லின் பெயர்.

வாலாசம் - மாட்டின் பின்வார். [கயவாய்.

வாலாட்டிக்குருவி - கரிக்குருவி,வலியான்,

வாலாட்டு - சேட்டை, செருக்கானசெயல்.

வாலாட்டுதல் - சேட்டைசெய்தல், வீண் பெருமைகாட்டுதல். [பழக்கப்பட்டபரி.

வாலாதி - பந்தயக்குதிரை, பந்தயத்திற்குப்

வாலாதித்தன்-உதயகாலசூரியன்,வாலரவி.

வாலாமை - அசுத்தம், மகளிர்சூதகம்.

வாலாம்பிகை - பார்வதி, திருநெய்த்தானத் திலே கோயில் கொண்டிருக்கும் தேவி யார் பெயர்.

வாலாயம் - வைடூரியம், வாலவாயம், மிகு பழக்கம், சாதாரணம், வழக்கம்.

வாலாரிட்டம் - பாலக்கிரகாரிட்டம்.

வாலான் - நெல்வகையிலொன்று.

வாலி - கிட்கிந்தைமன்னன்,சுக்ரீவனுக்குத் தமையன், அங்கதனுக்குத்தந்தை, இவன் மனைவி தாரை, இவன்சுக்ரீவன் வேண்டு கோளின்படி ராமரால் கொல்லப்பட்ட வன், இவன் இறந்த பிறகு தாரை சுக்ரீ வன் மனைவியானஞன்,பலதேவன்,வாலுடை யது, கரிக்குருவி, சினிவாலிமழைத்தூறல்

வாலுகை - மணல், சைகதம், வாலுகம்.

வாலிசம் - தலையணை.

வாலிசன் - அறிவீனன், இளவயதுடை யோன், இளைஞன், வாலிபன்.

வாலிசை - இளம்பெண், பாலிகை.

வாலிது - தூயது, வெண்மையானது.

வாலிபம் / வாலியம் } பாலியம், இளமை, யௌவனம்.

வாலிபன்-இளைஞன், இளவல்,இளையோன்.

வாலிமலை - கிட்கிந்தை, கிட்கிந்தாபுரி.

வாலிமை- பெருமை, வன்மை.

வாலியன்-இளவயதுடையோன், வாலிபன், தூய்மை யுடையவன். [வர், மடையர்.

வாலீசர் - வாலிபர், வாலிசர், அறிவில்லாத

வாலீசுவரர் - குரங்கணில் முட்டத்திலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

வாலு - சாகை, பசுப்புட்டம், ப்ரவாஹம்.

வாலுகக்குன்று - மணற்குன்று, திடர்.

வாலுகநந்தனை-கங்கை.[து: சுடுமண்ணிலம்

வாலுகப்ரபை-எழ்நரகவட்டத்தொன்று:அ

வாலுகம்- வெண்மணல், மணல்,வாலிகை.

வாலுகர்-மடையர், சமைப்போர்,வாலுவர்.

வாலுகை - குப்பி, வாலுளுவை, [லுந்தி.

வாலுங்கி - கக்கரி, வாலுளுவையரிசி, வா

வாலுந்தி - கக்கரி, வாலுங்கி. [டிவிடுதல்.

வாலுருவிவிடுதல் - துன்பஞ் செய்யத்தூண்

வாலுவசாத்திரம் / வாலுவதூல் } மடைநூல், பாகசாஸ்தி ரம்.

வாலுவர் - மடையர்,சமைப்போர்,வாலுகர்.

வாலுழுவை / வாலுளுவை } மருந்துவகையி லொன்று. [மரம்.

வாலுறை - அடுப்பு, குமுதம், சுல்வி, கா

வாலூகம் - நஞ்சு, ஆலம்,ஆலகாலம்,விடம்.

வாலேபம் / வாலேயம் } கழுதை, கரம், கர்த்தபம்.

வாலை - இளைது, ஓர்சத்தி, சுத்தம், திராவ கம் வடிக்கும்பாத்திரம், பன்னிருவயதிற் பெண்,இருதுவாகாதஇளம்பிராயமுள்ள பெண், பாதரசம், இரசம், வாதரசம்.

வாலைமெழுகு - மருந்துவகையிலொன்று.

வாலைரசபதிகாரம் - சீனக்காரம்.

வாலைரசம் - இரசகர்ப்பூரம். [யோபவீதம்.

வாலோபவீதம்-பிள்ளைப்பூணூல்,வாலயக்ஞி

வால் - இளமை, சுத்தம், தோகை, மிகுதி, வெண்மை, தூய்மை, நன்மை, பெருமை, பின்புறம் நீண்டு தொங்கும் உறுப்பு, நீள மானது, சேட்டை செய்பவ-ன்-ள்,சேட் டை, வாலுழுவை, வாலுளுவை.

வால்தரகு - வாற்றரகு. [வால்வெள்ளி.

வால்நட்சத்திரம் - தூமகேது, வால்மீன்,

வால்மிளகு - ஓர்வாசனைச்சரக்கு,மயேனம்.

வால்மீகபலம் - எலுமிச்சை,வான்மீகபலம்.

வால்மீகம் - இந்த்ர தநுஸ்ஸு, வால்மீகரா மாயணம், வான்மீக ராமாயணம், வான்மீகம்.

வால்மீகி-வடமொழியிலே ராமாயணம் செ ய்த மஹாபண்டிதர், இவர் ஜாதியிலே பிராமணராகியும்,நாரதர்தெரிசிலேமற் கொண்டு காட்டிலே யிருந்துவழிப்போக் கர்களை யழைத்து அவர்கள் பொருளைக் கவர்ந்தொழுகும் நாளில், நாரதர் கண்டு ஞானோபதேசம்பண்ணிநல்வழியிலொழு கச் செய்தார், பிறகுஇவர்மஹாதவசிரே ஷ்டராகி ராமாயணத்தைச்செய்துமுடித் தார், இந்த ராமாயணத்தை வால்மீகிரா மாயணமென்று கூறுவர், ஸ்ரீராமர் சீதா பிராட்டியைக் காட்டுக்கனுப்பின காலத் தில்,பிராட்டியையும்புத்திரர்களாகியகுச லவர்களையும் ஆதரித்தவர் இவரே,இவர் தேகாபிமானமற்று கடுந்தவம்புரிந்திருந்த போது இவர்மீது புற்றுவளர்ந்து நெடுங் காலஞ்சென்றபிறகு அந்தப்புற்றிலிருந்து வெளிப்பட்டதனல் இவர்க்கு வால்மீகி யென்னும் பெயர் வழங்கலாயிற்று. (வல் மீகம்- புற்று). இவரைவருணன் புத்திரர்

என்றுங் கூறுவர், வருணனுக்குப் பிரசேதஸ் என்னும்பெயருண்மையால், இவரைப்ராசேதசர் என்றுங் கூறுவர்.

வால்மீன் - வால் நட்சத்திரம், தூமகேது.

வால்லவேயம் - எருது, இடபம், ஏறு.

வால்வெள்ளி - வால்நட்சத்திரம், தூமகேது

வாவயம் - துளசி, துளவம், துழாய், துளவு.

வாவரியுரி - இளியூறற்பட்டை.

வாவல் - கடத்தல், நகை, வௌவால், கடல் மீன்வகை, தாண்டுதல், வயா.

வாவன்ஞாற்று - சித்திரகவிவகை.

வாவாசம் - குதிரையின் வாய்வார், வற்கம்.

வாவி - குளம், பல்வலம், நீர்நிலை, நடைக் கிணறு, ஆற்றிலோடை.

வாவிப்பாய்தல் - தாவிப்பாய்தல்.

வாவிப்புள் - அன்னம், எகினம், ஓதிமம்.

வாவுதல் - கடத்தல், பாய்தல், தாண்டுதல்

வாழகம்-குந்துருக்கம் வெள்ளைக்குங்கிலியம்

வாழபுட்பி } முல்லை, தளவு, மாகதி, மௌ
வாழபுளப்பி } வல்.

வாழவந்தநாயகியம்மை - திருவாஞ்சியத்தி லேகோயில்கொண்டிருக்கும் தேவியார்.

வாழவைத்தல்-வாழ்வித்தல் வாழச்செய்தல்

வாழாக்குடி-வாழாவெட்டி, வாழாக்கொடி.

வாழாக்கேடி-விவாகமற்றிருப்பவள்.

வாழாக்கொடி-வாழாவெட்டி, வாழாக்குடி.

வாழாதவள் - வாழாவெட்டி, மகம்பெண்.

வாழாத்திப்போளம்-சாம்பிராணிவகை.

வாழாவெட்டி-கணவனோடு சேர்ந்துவாழப் பெறாதவள், வாழாதவள்.

வாழி - ஓர் இடைச்சொல், வாழிய, வாழ்க.

வாழித்தல் - மதர்த்துண்டாதல். [மை.

வாழிப்பு - மதர்ப்பு, மதர்வு, செழிப்பு, வள

வாழிய - முன்னிலையசைச்சொல்(உ-ம்) காணிய வாழிய மலைச்சாரல், வாழ்க வென்னேவல்.

வாழுதல் - வாழ்தல், செழித்தல், வாழிப்பு, சீவித்தல், செல்வத்தோடிருத்தல்.

வாழும்பாம்பு - மனைப்பாம்பு.

வாழும்புடை - பாம்புப் புற்று. [அரம்பை.

வாழை - மரவகை, கதலி, நகசௌஷதி,

வாழைக்கச்சல் - வாழையின் இளங்காய், வாழைப் பிஞ்சு.

வாழைக்கட்டை - வாழைக்கிழங்கு, வாழைத் தண்டு.

வாழைக்கன்று-இளவாழை, வாழைமட்டம்.

வாழைக்காய் - அரையாப்புக்கட்டி.

வாழைக்குட்டி - வாழைக் கன்று.

வாழைத்தொல்லை - வாழைத் தோட்டம்.

வாழைத்தடல் } வாழை மரத்தின்பட்டை,
வாழைத்தடை } வாழைமடல்.

வாழைத்தண்டு - வாழைமரத்தின்உட்புறத் திருப்பதான சமைத்துண்டற் குரிய உறுப்பு, வாழையினரை.

வாழைப்பட்டை - வாழைத்தடல். [பூண்டு.

வாழைப்பழத்தி - எருமைநாக்கி, சனகிப்

வாழைப்பிஞ்சு - வாழைக்கச்சல்.

வாழைப்பூ - வாழையின்பூ, வாழைமுகை.

வாழைப்பூவிளக்கு - குத்துவிளக்கு வகை.

வாழைமடல் - வாழைத்தடல், வாழைத்தடை, வாழைப்பூவின்மடல். [று.

வாழைமட்டம் - இளவாழை, வாழைக்கன்

வாழைமலடி - ஒரேபிள்ளையைப்பெற்றவள்.

வாழைமுகை - வாழையின்பூ, வாழைப்பூ.

வாழையடிவாழை - வாழைக் கீழ்வாழை, இடையறாதுதொடர்ந்துவரும்சந்தானம்.

வாழைவலை - வலைவகையி னொன்று.

வாழ் - முறைமை, ஒழுங்கு, கிரமம்.

வாழ்க்கை-ஊர், சந்தோஷநிலை, இல்வாழ்க்கை, சீவிப்பு, செல்வம், மருதநிலத்தூர், மனைவி, வாணாள், ஆயுட்காலம்.

வாழ்க்கைத்துணை - இல்லாள். [வாகமாதல்.

வாழ்க்கைப்படுதல்-இல்லாச்சிரமமாதல், வி

வாழ்தல்-சீவித்தல், செல்வத்தோடிருத்தல், வாழ்வு, செழித்திருத்தல், மகிழ்தல், சுமங்கலியாகஇருத்தல், விதிப்படி, ஒழுகுதல்.

வாழ்த்தணி - இன்னார்க்கு இன்ன நன்மை நிகழ்க என்று கருதியது விரிக்கும்அணி.

வாழ்த்தல் - துதித்தல், வழுத்தல்.

வாழ்த்து - ஆசீர்வாதம், ஒருவருக்கு நன்மை வருவதாக வெனக் கூறுவது, ஓலங்காரம், சுபவசனம், துதி, மங்களாசாரணை மூன்றி னொன்று, வாழ்த்தென்னேவல்.

வாழ்த்துதல் - ஆசீர்வாதம் பண்ணல், சோபனம்பாடுதல், துதித்தல், மங்களம்பாடுதல்.

வாழ்த்துரை - வாழ்த்து, ஆசீர்வாதம், ஆசி.

வாழ்த்துவிலக்கு - ஓலங்காரம்; அது: வாழ்த்தி மறுப்பது. [வழுத்தல்.

வாழ்த்தெடுத்தல் - துதித்தல், வாழ்த்தல்,

வாழ்த்தொலி - வாழ்த்துதலினொலி. [ன்.

வாழ்நன் - வாழ்வோன், செல்வமுடையோ

வாழ்நாள் - சீவியகாலம், ஆயுட்காலம். [வுள்.

வாழ்முதல் - வாழ்வுக்குமுதற்காரணம், கட

வாழ்வாடிச்சி } சுமங்கலி, வாழ்கிறவள்.
வாழ்வாட்டி }

வாழ்வாளன் - வாழ்வுடையோன். [த்தல்.

வாழ்வித்தல்-வாழச்செய்தல், வாழவை[தல்

வாழ்விழத்தல்-அமங்கலியாதல், தாரமிழத்

வாழ்விழந்தவள்-அமங்கலி, விதவை, உலக இன்பங்களைத் துறந்தவன்.
வாழ்வு - முறைமை,வாழ்தல்,நல்வாழ்க்கை, சீவனம், உறைவிடம்,உயர்ந்தபதவி,செல்வம். [செல்வமும் வறுமையும்.
வாழ்வுதாழ்வு - வாழ்க்கையில் உண்டாகும்
வாளகம் - வெட்டிவேர், விளாமிச்சை.
வாளகிரி - சக்கரவாளகிரி, வாளமலை.
வாளப்புள்-சக்கரவாகப்பறவை,நேமிப்புள்.
வாளமலை-சக்கரவாளகிரி,வாளம்,வாளகிரி, வாளச்சுழற்றுகை,வாள்வீச்சு,வாட்கூத்து
வாளம் - சக்கரவாளகிரி, சக்கரவாளப்புள், வலை,வாள்,யாளி,வட்டம், நேர்வாளம்.
வாளரம் - ஓரரம்; அது: ஈர்வாளைக் கூர்மையாக்க உதவும்அரவிசேடம், மரமரிவாள்.
வாளரி - சிங்கம், அரிமா. [ரைக் கொடி.
வாளவரை - வாள்போன்ற காயுடைய அவ
வாளா } வீண், மௌனமாய், அலட்சிய
வாளாங்கு } மாய், பயனின்றி.
வாளாண்மை - வாட்போர், வாட்சண்டை, வாள் வீரம்.
வாளாது - வாளா, பயனில்லாமல்.
வாளாமை - கேளாமை, பயனின்மை,மௌனம், அலட்சியம், உள்ளீடின்மை.
வாளாளன் - வாள்வீரன், வாளுழவன்.
வாளி - அம்பு, மாதர்காதணியி லொன்று, வட்டமாயோடல், நீர்ச்சால்வகை.
வாளிகை - ஓர் காதணி, வாளி.
வாளிச்சிமேனி - மாணிக்கம். [யோடுதல்.
வாளிபோதல் - குதிரைமுதலியனவட்டமா
வாளீரல் - வளைந்தவீரல், ஈரல்வகை.
வாளுழத்தி - கொற்றவை,துர்க்கை,ஐயை.
வாளுழவர்-படைவீரர்,வாள்வீரர், சேனைத் தலைவர், வாளாளர். [வாள்தரித்தவீரன்.
வாளேந்தி - துர்க்கை, ஐயை, கொற்றவை,
வாளை - மீன்வகையி லொன்று.
வாளைகடியன்-விஷமுள்ள ஓர் கடற்பாம்பு.
வாளைக்கப்பல் - புகையிலைவகை.
வாள் - அரிவாள், ஈர்வாள், ஒளி, பட்டயம், கூர்மை; கொடுமை, கத்தி,கலப்பை,உழுபடையின்கொழு, கயிறு, நீர்,கச்சு. [ந்தி.
வாள்கைக்கொண்டாள் - துர்க்கை, வாளே
வாள்செலவு - எதிர்த்துவந்த அரசனுடைய பொருபடைமீது எதிரூன்றும் அரசன் தனதுசேனைவிடுத்தலைக்கூறும் புறத்துறை
வாள்மீன் - ஓர் மீன், எமக்கோலா.
வாள்வாய்-வாள்வடு.[லசாரியாகச்சுற்றுதல்.
வாள்வட்டணை - வாட்போரில் இடசாரி வ
வாள்வரிக்கொடுங்காய் - வளைந்த வரிகளை யுடைய வெள்ளரிக்காய்.
வாள்வாளெனல் - அழுதுகதறுதற்குறிப்பு.
வாள்வீச்சு - வாளைச்சுழற்றுகை, வாளமலை.
வாள்வீரம் - வாட்போர்த்திறமை.
வாரூன் - கப்பலி லேர்கயிறு, வருகிரூன்.
வாறு - பெல்ன், வாய்ப்பு, அடைபேறு.
வாற்கம்
வாற்கலம் } மரவுரி, வற்கலை, சீரை.
வாற்கலி - (1) ஓரசுரன். தேவரைத்துன் புறுத்தத் தேவர் வேண்டுதலால் மகாவிஷ்ணுஇவனைக்கொன்றனர்.(2)இந்திரனுடன் போரிட்டு மாய்ந்த ஓர் அசுரன்.
வாற்கிண்ணம் - அகப்பை,மூழி,மூழை,சட்டுவம், எண்ணெய் முதலியன வைத்துக் கொள்ளகைப்பிடியமைந்தகிண்ணவகை.
வாற்குறுவை - நெல்லிவகையி லொன்று.
வாற்கொண்டலாத்தி - இராப்பாடிக்குருவி
வாற்கோதுமை
வாற்கோதும்பை } ஓர்விதத் தானியம்
வாற்சகம்
வாற்சலம் } கன்றுக்கூட்டம், பசுக்கூட்டம். [அன்பு.
வாற்சல்லியம் - உருக்கம், உருக்கமான
வாற்சிபுத்திரன் - வாற்சோபுத்திரன்.
வாற்சியாயன் - ஓர் முனி.
வாற்சோபுத்திரன்-அம்பட்டன் [வால்தரகு.
வாற்றரகு-கால்நடைகளுக்கு விதிக்கும்வரி,
வானகப்புதைச்சி - கதண்டு, கருவண்டு.
வானகம்-ஆகாயம்,தேவலோகம், மஞ்சாடி.
வானக்கல் - காக்கைக்கல், வீடுமுதலியவற்றின் அஸ்திவாரக்கல்.
வானசாத்திரம்-வானசோதிகளின் போக்கு வரவறியுஞ்சாத்திரம்,கோளசாஸ்திரம்.
வானசோதி - ஆகாயப்பிரபாரூபிகள், கிரகமுதலிய சோதிமண்டலம். [திரம்.
வானட்சத்திரம்-வால்வெள்ளி, வால்நட்சத்
வானதி-ஆகாயகங்கை [யன், கங்காதரன்.
வானதிசூடி - சிவபெருமான், கங்கைவேணி
வானதிச்சடையன் - சிவபெருமான்.
வானநாடன் - மேலுலகத்திற்குத் தலைவன், தேவலோகவாசி. [லோகம்.
வானநாடு - பொன்னுங்காணி, மோட்ச
வானநாட்டிறை-இந்திரன்,வானவர்கோன்
வானபத்தி-பூவாதுகாய்க்கும்மரம்,வனபதி.
வானபத்தியம்
வானப்பத்தியம் } பலாசு,பூவாமற்காய்க்கு மரம், வனப்பதியம்.
வானப்பிரத்தம்-இலுப்பை,வானப்பிரஸ்தம் நாலாச்சிரமத்தொன்று; அது: வனத்திற் றவஞ்செய்தல், பலாசு, வானபத்தியம்.
வானப்பிரத்தன் - வனத்திற் றவஞ்செய்பு

வானப்பிரத்தி ‧ ‧ ‧

வானோர்தலைவன் } இந்திரன், வானவர்
வானோர்பிரான் } கோன், வானோர்க்
வானோர்பெருமான் } கிறை.
வானோர்பகைஞர் - அசுரர், அவுணர்.
வானோர்மாற்றலர் - அசுரர், இராக்கதர்.
வானோர்முதல்வன்-பிரமன், இந்திரன்.
வானோர்முதுவன் - சேரன், பிரமன்.
வானோர்வரம்-வானவாசிகள் பேறு, அமிர்து இலகு, சுக்குமம், அட்சயம், பிரகாசம், இவை முறையே கனமின்மை, கண்டிப் பின்மை, கேடின்மை, விளக்கம்.
வான்-அமுதம், ஆகாயம், எதிர்கால வினையெச்ச விடைச் சொல், உடைமைப் பொருள் காட்டும் ஒரு வடமொழி விகுதி, புயல், பெருமை, மகத்துவம், மழை, முகில்.
வான்கழி-பரலோகம். [வானவல்லி.
வான்கொடி-ஆகாயவல்லி, மின்னற்கொடி,
வான்கோழி - கோழியிலோர் வகை.
வான்பதம் - முத்தி, மோட்சம், மோக்கம்.
வான்பயிர்-மரப்பயிர், தோட்டப்பயிர்; அது நன்செய் புன்செய்ப் பயிரல்லாத கொடிக் கால் வாழை கரும்பு முதலியன. [ரக்கறி.
வான்பிரயோசனம் - மரப்பிரயோசனம், ம
வான்புலவு-வான்கோழி மாமிசத்தாற் செய்த புலௌ. [ரன் மனைவி, சசி, புலோமசை.
வான்மகள் - இந்திராணி, அயிராணி, இந்தி
வான்மணி - சூரியன், ஆதவன், என்றூழ்.
வான்மிகபகவன் - வான்மீகி முனிவன்.
வான்மிகம் - இந்திரவில், வானவில், புற்று.
வான்மிளகு - வால் மிளகு, மயேனம்.
வான்மீகபலம்-எலுமிச்சை, இலிகுசம், வால் மீக பலம்.
வான்மீகம்-குங்குமப்பூ, வான்மீகி முனியியற்றிய இராமாயணம், வால்மீகம்.
வான்மீகி-இராமாயணம்இயற்றிய ஓர்முனி, வால்மீகி.
வான்மீகியார் - (1) முதற்சங்கத்தி லிருந்த ஓர் சிறந்த தமிழ்ப் புலவர், இவர் செய்த நூலை நச்சினார்க்கினியர் தலையாய வோத் தென்பர். (2) கடைச்சங்கப் புல்வருளொருவர், இவராற் பாடப்பட்ட பாடலொன்று புறநானூற்றி லுளது. [விண்மீன்.
வான்மீன் - நட்சத்திரம், உடு, தாரகை,
வாஸ்தவம் - மெய்ம்மை, உண்மை, யதார்த்தம். [மன்.
வாஸ்து - மனை, வாஸ்து புருஷன், வாத்து
வாஸ்துசாந்தி-வாஸ்துபுருஷனைக்குறித்துச் செய்யும் சாந்திவகை. [வாத்து புருடன்.
வாஸ்துபுருஷன்-சிருக தேவதை, வாஸ்து,
வாஜபேயம் - வாசபேயம்.
வாஜஸநேயசாகை - யாஜ்ஞவல்க்கியர் செய்த யஜுர் வேத சாகை.
வாஜிபட்சம் - கடலை, சூரம், மஞ்சூரம்.
வாஜிபேயம் - யாகவகையி லொன்று.
வாஜிபோஜநம் - பயறு, முற்கம், முதிரை.

வி

வி-ஓர் உயிர்மெய்யெழுத்து, அதிகம் அறிவு இன்மை எதிரிடை நிச்சயம் பிரிவு முகாந்திரம் வித்தியாசம் வெறுப்பு விகுதி இவற்றைக் காட்டுமோ ருபசருக்கம், ஆகாயம், கண், காற்று, திசை, பறவை, தொழிற்பெயர் விகுதி, பிறவினை விகுதி.
விகசம்-அம்பு, ஓர் பட்சி, கிரகம், சந்திரன், சூரியன், முகில்.
விகங்ககேதனன் } திருமால், பிரமன்.
விகங்கத்துவசன் }
விகங்கதம் - இலந்தை, விகந்தகம், வதரி.
விகங்கபதி } கருடன், உவணன், கலுழன், புள்ளரசு, வயினதேயன்.
விகங்கராசன் }
விகங்கராஜன் }
விகங்கமை - கரத்தண்டு, கைக்கோல்.
விகங்கம் - அம்பு, அன்னம், சந்திரன், சூரியன், பறவை, முகில், காற்றடி. [கம்.
விகசதா - மூக்கிரட்டை, புட்கம், புழுப்ப
விகசம் - கேது, மஞ்சாடி, மலர்தல், மலர்ந்தது, மிச்சப்பண்டம், மொட்டை.
விகசனம்-புன்னகை, மலர்ச்சி, முறுவல்.
விகசன் - சந்திரன், திங்கள், மதி, அம்புலி.
விகசாதன்-திருமாலியவுணன். [மலர்தல்.
விகசிதம் - புனமுருக்கு, புரசு, மந்தகாசம்,
விகசித்தல் - மலர்தல், விகசிதம்.
விகசுவரம்-விசாலம், அகலம், விரிவு.
விகடகவி } பகிடிக்காரன், பகிடிப்பாட்டு,
விகடக்கவி } பரிகாசப்பாடல், ஆசியகவி பாடுவோன், விகடக்காரன்.
விகடக்காரன் - ஆசியம் விளைப்பவன்.
விகடசக்கரவிநாயகர்-காஞ்சீபுரத்துக் கோயில் கொண்டுள்ள விநாயகர்.
விகடசக்கரன் - காஞ்சிவிநாயகன்.
விகடபுத்தி - கருக்குச் சுருட்டான புத்தி.
விகடப்பிரசங்கி - ஆசியம் மிகும்படி பிரசங்கஞ் செய்பவன், நளினமாய்ப் பேசுவோன்.
விகடம் - அழகானது, உன்மத்தம், தொந்தரை, பெரியது, வேறுபாடு, கரடுமுரடு,

ஆசியம், பரப்பு, மிகுதி, பிராந்தி.

விகடவிநாயகர் - விஷ்ணுசக்கரத்தைக் கவ்வின கபாலம் அதனை நெகிழ்க்காதாக, விஷ்ணு விநாயகரை வேண்ட, அவர் விகடக் கூத்தாடுவையாயின் அதனை வாங்கித் தருவோமெனக் கூறி, அப்படியாடின பிறகு சக்கரத்தை வாங்கித் தந்தவர்.

விகடன்-சுமாலி புத்திரன், விகடக்காரன், செருக்குள்ளவன், ஆங்காரமுள்ளவன்.

விகடி - கருக்கு சுருட்டான ஆள், நீர், விகடஞ் செய்பவன்-ன்-ள், கபட முடையவன்-ள்.

விகடிகை-விநாடி, விநாடிகை. [யானித்தல்.

விகணனம் - கடனிறுத்தல், கணித்தல், தி

விகணிதம்-தீர்ப்பு, கணிப்பில் அடங்காமை.

விகண்டிதம் - பிரிவு, வேறுபாடு, கண்டிப்பின்மை, விகமம், விகரம்.

விகண்டித்தல் } ஆட்சேபித்தல், வேறு படு
விகண்டிப்பு } தல், குணக்காய்ப் பேசுதல்.

விகண்டை - துரெண்ணம், வைராக்கியம், விதண்டை, ஆட்சேபம், விரோதம்.

விகதம் - இட்டமானது, இருளுதல், சாவு, கடன் முதலிய தீர்க்கை. [த்தனம்.

விகதனம்-புகழ்ந்துரைத்தல், புகழ்ச்சி, விக

விகதி-தோழன், எலுவன், பாங்கன்.

விகத்தனம் - அடித்தல், அவித்தல், இகழாவிகழ்ச்சி, உரோஞ்சுதல், புகழ்ந்துரைத்தல், தற்புகழ்ச்சி, புகழ்ச்சி, விகதனம்.

விகத்தன்-சூரியன், பரிதி, விகர்த்தனன்.

விகத்துரு - அடம்பு. [துபோலு மிகழ்வது.

விகத்தை-இகழாவிகழ்ச்சி, புகழ்ச்சி, புகழ்வ

விகந்தகம் - இலந்தை, வதரி, விகங்கதம்.

விகமம்-பிரிவு, விகரம், விகண்டிதம்.

விகமனம் - துர்நடக்கை, துர்நடத்தை.

விகம்-வழியீற்றுப் பசுப்பால்.

விகம்பிதம்-நடுக்கம், உதறுதல், விதிர்த்தல்.

விகரம்-இயைபின்மை, நோய், பிரிவு.

விகரன்-காற்றுப்புசிப்போன், நிருமானி.

விகராலம் - மிகப் பெரியது.

விகருணன் } துரியோதனன் தம்பியருள்
விகர்ணன் } ஒருவன்.

விகர்த்தனன் - சூரியன், பிதாவினதிகாரத்தை வலிதாகக் கவர்ந்த மகன், விகத்தன்.

விகர்த்தன் - சூரியன், தினகரன், விகர்த்தனன்.

விகர்ப்பத்தம் - அடாதது, தகாதது.

விகர்மிகன் - விகன்மிகன், காரியக்காரன்.

விகர்னன் - விகருணன், விகர்ணன்.

விகலபாணிகன் - சும்பினகையன்.

விகலபுத்தி - சபலபுத்தி. [சிதைவு, குறைவு.

விகலம் - கலக்கம், குறைபாடு, விகலை,

விகலன் - குறைவுடையோன்.

விகலாங்கம் - உறுப்புக்குறை. [வீனன்.

விகலாங்கன் - குறையுறுப்புள்ளவன், அங்க

விகலிதகேசம் - நெகிழ்ந்த கேசம்.

விகலிதம் - சிந்தல், நெகிழ்ந்தது, முடியப்பட்டது, வடிதல், விழுந்துபோனது.

விகலிதாங்கன் - தளர்ந்தசரீர முடையவன்.

விகலை - காலநுட்பம், காலம், நாழிகை.

விகவெனல் - விரைந்து செல்லுதற்குறிப்பு.

விகற்பக்காட்சி - பொருளின் பேதங்களைக் கண்டறியுங்காட்சி, சவிகற்பக்காட்சி.

விகற்பசமை - திருஷ்டாந்த விகற்பங் காட்டித் தார்ஷ்டாந்த விகற்பங்கூறுவது.

விகற்பத்தின்முடித்தல் - ஓர் யுத்தி; அது: விளங்குதற் பொருட்டுப் பல வேறுபாடுகளின் சிறப்பு வாய்பாட்டான் முடித்தல்.

விகற்பநடை - மிறைக்கவிவகை.

விகற்பபுத்தி - வேறுபாடானபுத்தி.

விகற்பமில்லாக்காட்சி - நிர்விகற்பக்காட்சி.

விகற்பம் - சந்தேகம், தவறு, பிழை, வேற்றுமை, வேறுபாடு, சவிகற்பக்காட்சி, மனக்கோணல், ஓர்இலக்கணவிதி; அது: ஒருகால் வந்து ஒருகால் வாராமை, இனம்.

விகற்பித்தல் - வேறுபடுத்தல், மாறுபடுதல், ஓர் இலக்கணவிதி; அது: ஒருகால் வந்து ஒருகால் வாராதிருத்தல், பகுத்தறிதல்.

விகற்பு - விகற்பம், வேறுபாடு. [இருடி.

விகனசர் - வைகான ஸாகமம் வகுத்த ஒரு

விகனம்-கனமற்றது, இலேசானது, அற்பம்.

விகன்பிகன்-காரியவிசாரணைக்காரன், காரியகருத்தா, காரியஸ்தன். [தி கடைதறி.

விகன்னம் - எதிரிடை, கொலை, தீங்கு, பருத்

விகன்னன் - செவிடன், செவிமந்தன்.

விகாகம் - அமிழ்ந்தல், மூழ்கல், அழுந்தல், தாழ்தல்.

விகாசதம் - ஆகாயம், ஆடம்பரம், தனிமை, புன்னகை, மகிழ்தல், மலர்தல்.

விகாசதை - தனிமை, தோற்றம், விரிவு.

விகாசம் விகாசதம், விரித்தல், மலர்ச்சி, முகமலர்ச்சி, ஓர் மாயாதருமம்.

விகாசனம்-தனிமை, விரிவு, வெளிப்படுதல்.

விகாசை - ஈா, தாலு, சிகுவை. [இடையூறு.

விகாதம் - அழிவு, எதிர், தடை, விரோதம்,

விகாதித்தல்-விரோதித்தல், தடைசெய்தல்.

விகாபதம் } கொடை, தானம், ஈகை, கடப்
விகாபிதம் } பாடு.

விகாயசம் ‍ ‍ ‍

போர், விரிவு, விருதி, உருவம், பகை.

விக்கிரகவணக்கம் - தெய்வ பிம்பங்களே வைத்துப் பூசிக்கை, விக்கிரகாராதனை.

விக்கிரகாராதனை-சுருபவணக்கம், விக்கிரக வணக்கம். [வென்,அபரம்.

விக்கிரகாவரம் - முதுகு, புறம், வெரிந்,

விக்கிரம - பதினென்காவதாண்டு.

விக்கிரமசகம் } விக்கிரமாதித்தியன்
விக்கிரமசகாப்தம் } பெயரால் வழக்குவதான ஆண்டுமானம்,விக்கிரமாதித்தவருஷம்.

விக்கிரமசிங்கன் } விக்கிரமாதித்தன், விக்
விக்கிரமசேனன் } கிரமார்க்கன்.

விக்கிரமசோழனுலா - விக்கிரமசோழன் மீது ஒட்டக்கூத்தர் இயற்றிய உலாப்பிரபந்தம்.

விக்கிரமசோழன்-ஒருசோழவரசன்,இவன் மீது ஒருகோவை பாடப்பட்டுளது.

விக்கிரமம் - நடத்தல், பராக்கிரமம், மிகு பலம், வெற்றிமுறை,பிழைத்தல், சாமர்த்தியம்,அடியெடுத்து வைக்கை.

விக்கிரமன் - வீரன், விக்கிரமார்க்கன், திரிவிக்கிரமன்.

விக்கிரமாணம் - போதல்.

விக்கிரமாதித்தவருஷம் - விக்கிரம சகாப்தம், விக்கிரமசகம்.

விக்கிரமாதித்தன் } ஓரரசன்,சந்திர சர்
விக்கிரமாதித்தியன் } மன் என் னும்
விக்கிரமார்க்கன் } பிராமணனுக்கு உச்சயினிபுரத்தரசனுகிய சுருத கீர்த்தியினது புத்திரியிடத்துப் பிறந்த புத்திரன், இவன் கடுந்தவம் புரிந்து காளிதேவியின் அநுக்ரஹம் பெற்று அந்த அநுக்ரஹ பலத்தால் எந்தக் காரியத்தையும் சாதிக்கத் தகுந்த ஆற்றலுடையவனுனன், சாகசாங்கன் என்னும் சிறப்புப்பெயர் இவனுக்கு இக்காரணத்தால்உண்டானதேயாம். இவன் நெடுங்காலம் உச்சயினிபுரத்திலே பெரும் புகழோடு அரசுசெய்து இருதியிலே சாலி வாகனனுலே கொல்லப்பட்டான். இவன் அரசு புரியத்தொடங்கின காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஆருயிரம் வருடங்களுக்கு முன்னேயாம்.

விக்கிரமார்ச்சிதம்-வெற்றி,வென்றி,ஜெயம், விசயசித்தி.

விக்கிரமி - சிங்கம், வீரன். [டுதல்.

விக்கிரமித்தல்-காலாற்கடத்தல், வீரங்காட்

விக்கிரமோர்வசியம் - ஒருஸம்ஸ்கிருத நாடகம், இதுகாளிதாசனுற்செய்யப்பட்டது. இது புரூரவன் ஊர்வசிமேல் வைத்த காதற் சிறப்பை யெடுத்துக்கூறுவது.

விக்கிரயசாசனம் } கிரயபத்திரம்.
விக்கிரயச்சீட்டு }

விக்கிரயணம் } விற்றல், விற்பனை. [திரம்.
விக்கிரயம் }

விக்கிரயபத்திரம்-விக்கிரயச்சீட்டு, கிரயபத்

விக்கிரயிகன் - விற்போன், விக்கிராயகன்.

விக்கிரயீ - விற்போன், விக்கிராயகன்.

விக்கிராந்தகன் - சிங்கம், வீரன், விக்கிரமி.

விக்கிராந்தம் - வீரம், சௌரியம், சூரம்.

விக்கிராந்தன்-விக்கிரமி. [வீரநடை,வீரம்.

விக்கிராந்தி - குதிரைநடை, பராக்கிரமம்,

விக்கிராயகன் } விற்போன், விக்கிர
விக்கிராயிகன் } யிகன்.

விக்கிரேயம் - விற்கத்தக்கது. [நகல்.

விக்கிரோசனம் - இகழ்ச்சி, இகவு, எள்ளல்,

விக்கிள் - விக்கல், விக்குள், விக்கு.

விக்கினகரம் - தடுத்தல், விக்கினம், தடை.

விக்கினகாரி - இடையூறு செய்வது.

விக்கினத்வம்ஸன் - விநாயகன், கணபதி.

விக்கினநாசனன்-பீடைதீர்ப்போன், இடையூறு தீர்ப்போன், விநாயகன், கணபதி.

விக்கினநாயகன்-விநாயகன்,விக்கினராசன்

விக்கினம்-இடையூறு, தடை, தீமை, தீது.

விக்கினராசன்-விநாயகன்,விக்கினநாயகன்

விக்கினவிநாசனன் - விக்கினநாசனன்.

விக்கினவிநாயகன் - விக்கிஞரி, விநாயகன்

விக்கிஞபனம் - அறிக்கை, விஞ்ஞாபனம்.

விக்கிஞரி
விக்கினேசன்
விக்கினேசுவரன்
விக்கினேச்சுவரன் } விநாயகன், விக்கினராசன், விக்கினதீர்ப்போன்.

விக்கு - விக்குள், விக்கல், விக்கிள்.

விக்குதல் - விக்கல், விக்கலெடுத்தல்.

விக்குள் - விக்கல், விக்கிள், விக்கு.

விக்கேபம் - வீசுகை, செலுத்துகை.

விக்ஞாபனம்-விக்கியாபனம்,விஞ்ஞாபனம்.

விக்ஞானம் - விஞ்ஞானம், விக்கியானம்.

விக்ரமகஞ்சுகபாண்டியன் - பிரதாபமார்த்தாண்ட பாண்டியனுக்குக் குமாரன். இவன் குமாரன் சமரகோலாகலன்.

விக்ரமபாண்டியன்-அபிஷேக பாண்டியன் குமாரன். சோழன் இவனிடம் பகை கொண்டு இவனைச் சண்டை செய்து வெல்ல ஆற்றலில்லாது சமணரைக் கொண்டு அபிசாரயாகம் செய்வித்து அதில் ஒரு யானையைப் பிறப்பித்து மதுரை நகர்மீது ஏவினன். பாண்டியன் சிவபெருமானை வேண்ட அவர் ஓர் வீர

ராய்த்தோன் றிநரசிங்காஸ்திரந்தொடுத்து அந்தயானையைக் கொன்றனர். இதுவே பாண்டி நாட்டில் யானைமலை யாயிற்று. இவன் குமாரன்இராஜசேகரபாண்டியன்.

விங்கம்-குதிரைக்குளம்பு, குரம், குரச்சை.

விங்களம்-கபடம், களிம்பு, திரிவு, பேதம், குறைவு, உதவிபுரியப் பின் வாங்குகை.

விங்களித்தல் } சூதுசெய்யல், நிலையற்றிருத்
விங்களிப்பு } தல், பிரித்தல், வித்தியாசப்படுத்தல், விங்களம்.

விங்குதல் - மிகுதல், தூளாத்தல். [மாலதி.

விசகலி - மல்லிகை, அனங்கம், பூருண்டி,

விசக்கணன் - பண்டிதன், வித்துவான்.

விசங்கடம் - சிங்கம், விசாலம்.

விசசம்-தாமரை,அம்போருகம். [ஒருநகரம்.

விசசனம் - கொடுவாள், கொலை, தண்டம்,

விசதம் - அழகு, சுத்தம், நிருமலம், வெண்மை, வெளிப்படை, எச்சில்.

விசத்தம் - புடல், புடோல்.

விசத்தியா - நவசத்திகளி லொருத்தி.

விசத்துரு - அடம்பு, அடப்பங்கொடி.

விசபிலம் - சேறு, அளறு, அள்ளல்.

விசபுட்பம் } தாமரைப்பூ, தாமரைம
விசப்பிரசூனம்} லர், இறும்பு, இராசீவம்.

விசமசுரம் - விட்டுவிட்டுவரும் சுரநோய்.

விசமபாதம் - அணைப்பு, ஒவ்வாமை.

விசமம் - சமமின்மை, வைராக்கியம்.

விசமரோகம் - விட்டுவிட்டுவரும் நோய்.

விசம் - தாமரைநூல், நஞ்சு, விஷதம்.

விசய - இருபத்தேழாவதாண்டு. [சுவா.

விசயகுஞ்சரம்-இராசகம், அரசயானை, அர

விசயகேதநம் - வெற்றிக்கொடி, விசயத்துவசம்.

விசயகோதண்டம் - வெற்றி வில்.

விசயசித்தி - வெற்றி, விக்கிரமார்ச்சிதம்.

விசயச்சந்தம் - எழுநூறு கோவைமுத்துத் தாழ் வடம். [யோர் எழுந்தருளுதல்.

விசயஞ்செய்தல்-குரு அரசர் போன்ற பெரி

விசயதசமி } மகாளய அமாவாசைக்குப்
விஜயதசமி } பின் வரும் சுக்கிலபட்சத்து தசமி.

விசயத்துவசம் - விசயகேதநம்.

விசயநகரம் - ஓர் பட்டினம்.

விசயநாதர்-திருவிசயமங்கையிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

விசயபேரி - வெற்றி முரசு, விசய முரசம்.

விசயப்பொறி - வீற்பொறி. [பேரி.

விசயமத்தளம் - இரண பேரிகை, இரண

விசயமுரசம் - வெற்றி முரசு, விசய பேரி.

விசயம் - அடைங்கலம், ஆராய்வு, ஐயம், சருக்கரை, சிவாகம மிருபத் தெட்டி லொன்று, சூரியமண்டலம், பரிவேடம், தேவவிமானம், வெற்றி, வருகை, வீற்றிருப்பு, கருப்புக்கட்டி, தரும புத்திரருடைய சங்கு.

விசயலக்குமி-விஜய லக்ஷ்மி, விசயை.

விசயனம்-ஆராய்வு, விசாரிப்பு, ஆராய்ச்சி.

விசயன்-அருச்சுனன், கலிசகார்த்தன், திருமாலின் வாயில் காப்போன், எகாதசருத்திரருள் ஒருவர், சாலிவாகனன்.

விசயன் } கடுக்காய்வகையி லொ
விசயன்கடுக்காய் } ன்று. [மலை.

விசயார்த்தம் - திருக்கைலைமலை, வெள்ளி

விசயாலயன் - ஒரு சோழவரசன். இவன் வரகுண பாண்டியன்மீது படைகொண்டு சென்று தோல்வி யடைந்தான். திருவிடை மருதூரில் மேற்குக் கோபுரத் திருப்பணி செய்வித்தவன்.

விசயீபவ-'வெற்றியுடையவனுகுக' என்று வாழ்த்தும் வடமொழிச் சொற்றொடர்.

விசயை - பார்வதி, துர்க்கை, துர்க்கையேவல் செய்வாள், விஜயலக்ஷ்மி, மூன்றும் எட்டாம், பதினேந்தாந் திதிகள். [சை.

விசரம்-கூட்டம், கொலை, இரும்பிலி, முதி

விசரன் - பித்தன், பைத்தியக்காரன்.

விசரி-பைத்தியக்காரி,தும்பை. [தம்,வெறி.

விசர்-பைத்தியம், பித்தம், பித்து, உன்மத

விசர்க்கம்-கொடை, தள்ளுதல், துறத்தல், தெட்சணையனபாதை,நிறுத்தியுச்சரிப்பதற்கிடமடையாளம், பிரவை,பிரிதல்,போதல், மலங்கழித்தல்,விடுதல், ஒன்றன்மேலொன்றுய் இரட்டைப்புள்ளி வடிவாக எழுதப்படும் ஓர் வடமொழி எழுத்து, ஒழிகை, விட்டுவிடுகை, அபானவாயு.

விசர்ச்சனம்-அனுப்புதல், நன்கொடை,விடுதல், நீக்குகை, வெளிப்போக்குகை, இவ்டப்படி திரிய விடுகை.

விசர்ச்சிகை - இலக்குமி, சிரங்கு.

விசர்ச்சிதை - கூத்திஞேர்விகற்பம்.

விசர்நாய் - வெறிபிடித்தநாய், வெறிநாய்.

விசர்ப்பம்-ஓர்சிலந்தி, பரம்புதல், பறத்தல்.

விசர்ப்பனம் - பரம்புதல், விசர்ப்பம்.

விசர்ப்பு-பசி, பசிப்பு, [தம், பித்து, வெறி.

விசர்ப்புத்தி - பைத்தியம், உன்மத்தம், பித்

விசலம் - கஞ்சி, தளிர், குழை, மஞ்சரி.

விசலனம் - உறுதியின்மை, தற்புகழ்ச்சி.

விசலி - சீந்தில், சீவந்தி, அமுதவல்லி.

விசலிகை - கொடிமல்லிகை.

விசலிதன் - சலநகுணமுள்ளவன், சலநசித்த முள்ளவன்.
விசவல்லி-கீழ்க்காய்நெல்லி, கீழாநெல்லி[வு
விசளை-சட்டி, நீற்றுப்பெட்டிகொண்ட அள
விசனம்-அபாக்கியம், கலகம், துன்பம், நின் மாநுவியம், பாவம், பேராசை, விசிறி, துக்கம், விடாமுயற்சி, தனிமை.
விசனம்பண்ணுதல் - துன்புறுத்துதல்.
விசனனம் - பிறப்பு, தோற்றம், உற்பத்தி.
விசனுமனம் - யாகதேதாத்திரம்.
விசாகசம்-தோடை.[நாடகம்இயற்றியகவி.
விசாகதத்தன் - முத்ரா ராக்ஷஸம் என்னும்
விசாகநாள் - விசாக நட்சத்திரம், விசாகம்.
விசாகம் - அனிலநாள், வைகாசி, சுளகு.
விசாகலம்-ஓராச்சிரமம்.[காவிரிப்பெருக்கு.
விசாகவெள்ளம் - வைகாசி மாதத்துவரும்
விசாகன்-குமரன், அறுமுகன், முருகன்.
விசாகை - வியாக்ம், மரணபரியந்தம் விவா கம் இன்றிக் கன்னிமாடத்திலிருந்து காலங் கழிக்க ஒருவணிகமாது. (மணிமேகலை.)
விசாணம்-விலங்கின் கொம்பு. [தி பேதம்.
விசாதி-நோய், புறசாதி, வேறுனசாதி, விசா
விசாதிபேதம்-பேதமூன்றி லொன்று; அது: மரத்திற்குங்கல்லுக்குமுள்ள வித்தியாசம்.
விசாயம் - தூங்கல். [முந்தல், கடத்தல்.
விசாய்தல் - மேலிடுதல், மேலே தாவுதல்,
விசாரகன்-நியாயாதிபதி, நியாய விசாரணை செய்பவன். [பாடு, கீர்த்தி, மீக்கூற்று.
விசாரங்கம் - கீர்த்தி, புகழ், ஏற்றம், மேம்
விசாரசருமர் } சண்டேசுரருக்கு மறுபெயர்
விசாரசர்மர் } (சண்டேசுர நாயனார் காண்க.)
விசாரணம் - கொலை, தியானம், நிதானித்தல், ஆராய்ச்சி, விசாரணை.
விசாரணியம் - சாஸ்த்ரம், சாத்திரம்.
விசாரணை - ஆராய்ச்சி, மீமாஞ்சை, விசாரிப்பு, மேற்பார்வை, புத்திசீவி, உபசாரம்.
விசாரணைக்கர்த்தன் } மேற்பார்ப்போன்.
விசாரணைக்காரன் }
விசாரதம்-பிராசமுள்ளநான்கடிக் கவிவகை
விசாரதர் - சிறந்தோர், புலவர், வல்லோர்.
விசாரத்தகடு - இரும்பு வளையம்.
விசாரபூ - கல்விச்சங்கம், கல்வியூரி, கழகம்.
விசாரம் - ஆராய்வு, ஆலோசனை, ஊருதல், கவலை, மரம், மீன், விவாதம்.
விசாரவகம் - கீர்த்தி, விசாரங்கம்.
விசாரவம் - கீர்த்தி, நம்பிக்கை, புத்தி.
விசாரி - கலக்கமுடையோன், வாயுத்திசை, விசாரியென்னேவல், ஆராய்வோன்.
விசாரிதம்-ஆலோசிக்கப்பட்டது. [ந்தவன்.
விசாரிதன்-ஆலோசனைகாரன், ஆராய்ந்தறி
விசாரித்தல் } ஆராய்தல், பராமரித்தல்,
விசாரிப்பு } வினவுதல், உபசரித்தல்.
விசாரிப்புக்காரன்-கிராம ஊழியக்காரரில் ஒருவன். [பாடான வமிசம்.
விசாலகுலம்- நல்வமிசம், நல்லகுலம், மேம்
விசாலதை-அகலம், பருமை, மேன்மை.
விசாலபுத்தி - தாராள சிந்தை.
விசாலம் - அகலம், ஓர், பட்சி, ஓர் மான், கடம்பு, சிற்பநூன் முப்பத்திரண்டி லொன்று, பெரியது, பேய்த்திமிட்டி, விரிவு, இடப்பரப்பு, பொலிவு, வெண் கடம்பு, வாழை, கிரிவிரசத்துக்கும் மிதிலைக்கும் நடுவிலுள்ள நாடு.
விசாலன் - இக்ஷ்வாகு தம்பியாகிய நபகன் வமிசத்து த்ருணபிந்துவின் புத்திரன். இவன் புத்திரன் ஹேமசந்த்ரன்.
விசாலாக்கன் } கருடன், சிவபெருமான்.
விசாலாட்சன் }
விசாலாட்சி-பார்ப்பதி, பார்வதி, உமாதேவி.
விசாலாக்ஷன் - திருதராட்டிரன் குமாரன்.
விசாலாக்ஷி-காசியிலெழுந்தருளி யிருக்கும் (1)தேவியார் பெயர், (2)திருப்பைஞ்ஞீலியி லெழுந்தருளியிருக்கும் தேவியார்பெயர்.
விசாலாக்ஷிபீடம்-சத்திபீடங்களுள் ஒன்று.
விசாலித்தல் - விரிதல், விரிவு பெறுதல்.
விசாலிப்பு - விரிவு, அகலம், விசாலம்.
விசாலியகரிணி - ஒருநதி. இதில் ஸ்நானம் செய்வோர் சுவர்க்கம் புகுவர்.
விசாலை-சத்தபுரியிலொன்று; அது உச்சினி, மிதிலை நாட்டிலுள்ள ஒரு பட்டணம்.
விசானபூமி } மசானம், மயானம், இடுகாடு,
விசானம் } சுடுகாடு, சுடலை.
விசி-அலை, கட்டில், கட்டு, பறையிறுக்கும் வார், விசிப்பலகை, தாமரைத்தண்டு.
விசிகம்-அம்பு, புனற்றிரை, இருப்புலக்கை.
விசிகப்பிரயோகம் - அஸ்திரப் பிரயோகம்.
விசிகரம் - அலை, கல்லோலம், திரை.
விசிகாந்தம் - அம்பு கூனி, கணை முனை.
விசிகிலம் - தவரம், மல்லிகை.
விசிகை - முலைக்கச்சு, கருத்து, தெரு, பாரை, வைத்தியக்கிரகம், கடப்பாரை.
விசிட்டஞானம் - பரஞானம், பதிஞானம்.
விசிஷ்டம் } மேன்மை, குணத்தோடு கூடி
விசிட்டம் } யது, மேன்மையுள்ளது.
விசிட்டன் - பெரியோன், பெரியவன்.
விசிட்டாத்துவிதம்-எம்பெருமானார் செய்த

ஓர் பிரபந்தம், விசிஷ்டாத்துவைதம்.

விசிதம் - விபூதி, திருவெண்ணீறு, வெண்மை.

விசிதவொளியுப்பு - வளையலுப்பு.

விசிதிரு - நியாயாதிபதி, பங்காளி.

விசிதை-சித்தியிலொன்று,வசித்துவம்.[தல்.

விசித்தல்-கட்டல், இறுகக்கட்டுதல், விம்மு

விசித்தி - அழிவு, இழத்தல், எல்லை, கடுகு, தரிப்பு, பிரித்தல், விசுத்தி, வெட்டல்.

விசித்திரகம் - அதிசயம், வெள்ளெருக்கு.

விசித்திரகவசன் - ஓர்சோழவரசன். சிவபூஜை செய்து சித்தியடைந்தவன். [பா.

விசித்திரக்கா-சித்திரகவிவகை, விசித்திரப்

விசித்திரதாரணை - நவதாரணைகளொன்று.

விசித்திரதேகம் - முகில், மேகம், கார்.

விசித்திரதை - விசித்திரகம், அதிசயம்.

விசித்திரபாகு - திருதராட்டிரன் புதல்வன்.

விசித்திரப்பா - விசித்திரக்கா.

விசித்திரம் - அதிசயம், எதிர்ப்பேச்சு, பலநிறம், பேரழகு, வேடிக்கை, வினோதம், கம்மத்தொழில், இறுமாப்பு, மேன்மை.

விசித்திரவதி - அரிச்சந்திரன் குமாரி. முசுகுந்த சக்கிரவர்த்தியின் தேவி.

விசித்திரவீரன்-திருதராட்டிரன் குமாரன்.

விசித்திரவீரியன் - சந்திரகுலத் தரசரிலொருவன். திருதராஷ்டிரன், பாண்டு என்னு மிருவருக்கும் தந்தை, இவன் தந்தை சந்தநு, தாய் சத்யவதி, தமையன் சித்ராங்கதன். [திறத்திலொன்று.

விசித்திரவேளாகொல்லி - கொல்லித்

விசித்திரன் - (1) கநகவிஜயருடைய நண்பலகியஅரசன்,(2)திருதராட்டிரன்மகன்.

விசித்திராங்கம் - அழகு, நன்னிறம், மயில்.

விசித்துக்கட்டுதல் - இறுகக் கட்டுதல்.

விசிபம்-கோயில், ஆலயம், சினகரம். [கை.

விசிப்பலகை-வாங்குப்பலகை, ஊஞ்சற்பல

விசிப்பு - கட்டி, விசிப்பலகை. [மர்த்தம்.

விசிமந்தம் - வேம்பு, நிம்பம், பிசிதம், பிசு

விசிரகந்தி - பொன்னரிதாரம், விடாலகம்.

விசிரகை - தளர்ந்த காலம். [றல்.

விசிரமித்தல் - இளைப்பாறுதல், இளைப்பா

விசிரயம் - ஒதுக்கிடம், தாவரம்.

விசிரவசு (1)புலஸ்தியன் புத்திரன், இவன் மனைவியர் நால்வர், த்ருணபிந்துவின்புத்திரியாகிய இளாவளை என்பவளிடத்தில் குபேரன் பிறந்தான், சுமாலி மகளாகிய கைகேசி யிடத்தில், ராவணன் கும்பகர்ணன் விபீஷணன் என்னும் மூன்றுபுதல்வர் பிறந்தார்கள், இவள் தங்கையாகிய ராகையிடத்தில், கரன் தூஷணன் திரிசிரன் என்போர் பிறந்தார்கள், இவனை விசித்திரவாகு என்றுங் கூறுவர். (2)ஒரு காந்தருவன், மதாலசையின் தந்தை.

விசிராமம் - இளைப்பாறுகை, மனவமைதி.

விசிருஷ்டன் - கம்ஸன் தம்பி.

விசிலம்-கஞ்சி, பாத்து, மோழை, யவாகு.

விசிறி - ஓர் செடி, காற்றை அசைவிக்குங் கருவி, உயிர்மெய்களில் இகர ஈகாரங்களின் குறியாக எழுதப்படும் மேல் வளைவுக்கோடு, சிற்றூலவட்டம், சீலவகை.

விசிறியெறிதல் - கழற்றி வீசுதல்.

விசிறிவாழை - நீர்வாழை.

விசிறுதல் - விசுக்கல், வீசுதல், விசிறியாற் காற்றெழுப்புதல், வலை முதலியவற்றை விரித்தெறிதல், சொரிதல், வெளித்தள்ளுதல்,போக்குதல்,உயிர்மெய்களுள் இதர ஈகாரங்களின் குறியாக மேல் வளைவுக் கோடிடுதல்.

விசினம் - பிரபை, சோபிதம், ஒளி.

விசினி - தாமரைப் பூந்திரள்.

விசிட்டாத்துவைதம் } ராமானுஜமதம்;
விசிஷ்டாத்வைதம் } இது: பிரமம்வேறு ஆன்மாவேறு, ஆன்மா பிரமத்துக்கு சரீரமாயிருந்து, பிரமத்தின் சந்நிதான விசேஷத்தால் ஞானம் கை கூடப் பெற்றுப் பிரபஞ்சத்தை முற்றத்துறந்து, பிரமத்தின்மேல் பற்றுடையராய், வைகுண்டத்தை யடைந்து பிரமசாரூபம் பெற்று இன்புற்றிருத்தலே முத்தியென்று கூறுவது.

விசிஷ்டாத்துவைதி - விசிஷ்டாத்துவைத மதத்தைப் பின்பற்றுபவன்.

விசு - மேஷ துலாராசிகளில் சூரியன் பிரவேசிக்கும் காலம், அதிவிடையம்.

விசு } பதினேந்தாவதாண்டு.
விஷு }

விசுக்கிடுதல்-பிரியவீனப்படுதல்,வெறுப்புக் கொள்ளுதல், விதனப்படுதல்.

விசுக்கு-வெறுப்பு, அசந்தோஷம், பிரியவீனம், மனக்குறை, தாங்கல். [விசிறுதல்.

விசுக்குதல்-விசிறியாற் காற் றெழுப்புதல்,

விசுக்கெனல் - சீக்கிரக்குறிப்பு.

விசுதம்-கறிப்புடோல், புடல். [தூய்மை.

விசுத்தம் - சுத்தம், புத்தி, வணக்கம், மிகு

விசுத்தன் - மிக்க தூய்மை யுடையவன்.

விசுத்தி } அடிநாத்தானம்; அஃது: ஆறு
விஸத்தி } தாரத்தொன்று, ஐயம், சுத்

தம், திருத்தம், தீர்தல், நிகர், தூய்மை, ஒப்பு.

விசுபம் } உடம்பு, உலகம், சடபதார்த்
விசுமம் } தம்.

விசுப்பலகை-ஊஞ்சற்பலகை, விசிப்பலகை.

விசுமிகினி - வேம்பு, நிம்பம். [தந்தை.

விசும்பர்-ஓர் இருடி, வைசம்பாயனருக்குத்

விசும்பு-ஆகாயம், திசை, தேவலோகம், மேகம், வீம்பு, கருவம், இறுமாப்பு, செருக்கு.

விசும்புதல் - அசட்டையாய் விலக்கல், வெறுப்புடன் விலக்குதல், மீறுதல்.

விசும்புத்திசை - உச்சி. [லேறு, வானேறு.

விசும்பேறு-இடியேறு, விண்ணேறு, அன

விசுருதி - கீர்த்தி, விசாரங்கம், பாய்தல்.

விசுவகந்தன்-பிருதன் புத்திரன், சாசுவதன், இந்தன், விசுவகன், அதிசாந்திரன் என்னும் பெயர்களும் இவனுக்குண்டு.

விசுவகந்தை - பூமி, மேதினி, விசுவசகை.

லிசுவகருமன் } விசுவகர்மா, விசுவகர்
விசுவகருமா } மன்.

விசுவகர்மசுதா - குபேரன் மனைவி.

விசுவகர்மன்-தேவத்தச்சன், விசுவகருமன்.

விசுவகர்மஜை - சூரியன் மனைவி.

விசுவகர்மா - பிரபாசனுக்கு யோகசித்தியினிடத்துப் பிறந்த புத்திரன், இவன்தேவகம்மியன். [திரசன்வமிசத்துஒரக்கினி.

விசுவகன்-பிரமன், (1)விசுவகந்தன் (2)அங்

விசுவகன்மன் } சூரியன், தேவதச்சன், விசு
விசுவகன்மா } வகருமா, விசுவகருமன்.

விசுவகாசிபம் - ஓர் சிற்பநூல்.

விசுவகுத்தன் - உலகத்தைக் காப்பவன்.

விசுவகேது - அடங்காதவன், அரிருத்தன்.

விசுவகோதிரு - இந்திரன், திருமால்.

விசுவங்கரம்-கண், விழி, நேத்திரம், சட்சு.

விசுவசகன்-விருத்தசர்மன் புத்திரன், கட்டுவாங்கன் தந்தை, இக்ஷ்வாகு வம்சத்தவன்.

விசுவசகை - பூமி, விசுவகந்தை, விசுவதாரிணி.

விசுவசங்கிராந்தி-சூரியன் விசுவத்தினின்று அயலிராசிக்குப் போவது.

விசுவசனம் - நம்புதல், விசுவசித்தல்.

விசுவசித்தல் - நம்புதல், அன்பு செய்தல்.

விசுவசித்து-ஓர்வேள்வி, ஜயத்திரதன் புத்திரன், சேனசித்துக்குத் தந்தை.

விசுவசேபீடம் - சத்திபீடத்தொன்று.

விசுவசேனர் - சேனைமுதலியார்.

விசுதாரிணி - பூமி, விசுவசகை. [குநாள்.

விசுவதினம்-இராப்பகலுழிகை சரியாயிருக்

விசுவதேவம் - தேவபூசை, பிதிர்பூசை.

விசுவதேவர் - திரயோதச தேவகணத் தொருவர், தேவசாதி வகையினர், சிவ பெருமான்.

விசுவதேவர்கள் - தருமனுக்கு விசுவா என் பவளிடம்உதித்தகுமாரர். சிரார்த்தகாலத்திலே அர்ச்சிக்கப்படுகிற தேவதைகள், இவர்கள் வசுபந்தர், கிருதுதக்ஷர், காலகாமர், தூரிவிரோசநர், புரூரவாத்திரவர் முதலிய பதின்மர் என்பர். [கம், நாகரம்.

விசுவநாக்கரம் - சுக்கு, சுண்டி, விசுவபேட

விசுவநாதர்-விசுவேசுரன் காசியிலேயுள்ள சந்திரசேகரசுவாமி, தேவியார் பெயர் விசாலாக்ஷி, அன்னபூர்ணி யென்பது வேறொருதேவி மூர்த்தம்.

விசுவநாதன் - சிவன், விச்சுவநாதன்.

விசுவநாள் - உத்திராடம், உத்தராடம், கடைக்குளம்.

விசுவபதி } அங்கிரசன் வமிசத்து ஓரக்
விசுவபுக்கு } கினி. [விசுவநாக்கரம்.

விசுவபேடகம்-வேர்க்கொம்பு, சுக்கு, சுண்டி,

விசுவபை - சந்திரன், சூரியன், தீ.

விசுவபோதன் - புத்தன், போதிவேந்தன்.

விசுவமதை - தீராவேழிஞென்று.

விசுவம் - அதிவிடையம், உலகம், எல்லாம், பூமியின்சமரேகையுஞ்சூரியன்பாதையுஞ் சந்திக்குமிடம், ஒரு நிகண்டு; இது: விசுவஞற் செய்யப்பட்டது. [ரம்.

விசுவம்பரம் - பிரபஞ்சாதாரம், லோகாதா

விசுவம்பரன் - (எல்லாவற்றையுந் தாங்குபவன்.) கடவுள், இந்திரன், விட்டுணு.

விசுவம்பராதிபன் - அரசன், வேந்தன், கோ.

விசுவம்பரை - பூமி, விசுவதாரிணி, விசுவசகை.

விசுவம்பாரன் - சிவன், விஷ்ணு, இந்திரன்.

விசுவயு - காற்று, காலிலி, வாயு, மாருதம்.

விசுவராசன் - சுயாதிபதி, சக்கிரவர்த்தி.

விசுவரூபசேவை } ஆலயத்தில் சுவாமி
விசுவரூபதரிசனம் } யின் பள்ளியெழுச்சிக் காலத்துச் செய்யும் வணக்கம்.

விசுவரூபம் - பிரபஞ்சரூபம், பேருருவம், சராசரங்களனைத்துமான கடவுளின்னிலை.

விசுவரூபன் - (சராசங்கள் அனைத்துமாயுள்ள) கடவுள், திருமால், முருகன், துவஷ்டாவுக்கு ரசனையிடத்துப் பிறந்த புத்திரன்.

விசுவரூபை - பார்வதி, உமாதேவி.

விசுவவேதா - பிரமன், நான்முகன், விதாதா.

விசுவரோசனம் - ஓர்வகைக் கிழங்கு.

விசுவவராகம் - ஊர்ப்பன்றி, விடுசரம்

விசுவன் - கடவுள், சீவான்மா, விசுவம் என்னும் நிகண்டு செய்தவன். [யுள்ளவன்.
விசுவாசகன் - நம்பிக்கையான், நம்பிக்கை
விசுவாசகாதகம் - நம்பிக்கைத் துரோகம்.
விசுவாசகாதகன்-விசுவாசத்தைக் குலைப் போன்,நம்பிக்கைத்துரோகஞ்செய்பவன்.
விசுவாசகாதம் - நம்பிக்கைக் கிரண்டகம்.
விசுவாசத்ரோஹி - நம்பிக்கைத்ரோஹி.
விசுவாசபங்கம் - நம்பிக்கைத் துரோகம், விசுவாசகாதகம், நன்றிமறத்தல்.
விசுவாசபங்கன் - நம்பிக்கைத்துரோகி,விசுவாசகாதகன், விசுவாசபாதகன்
விசுவாசபத்தி - நல்விசுவாசம், விசுவாசத்துடனே ஒருவனே யடுத்திருத்தல்.
விசுவாசபாதகம் - நம்பிக்கைத்துரோகம், விசுவாசகாதகம், விசுவாசபங்கம்.
விசுவாசபாதகன் - நம்பிக்கைத்துரோகி, விசுவாசகாதகன், விசுவாசபங்கன்.
விசுவாசபாத்திரன் - நம்பத்தக்கவன்.
விசுவாசபூமி - நம்பத்தக்கது.
விசுவாசம் - உண்மை, நம்பிக்கை, பத்தி.
விசுவாசி - வேங்கை, நம்பிக்கையுள்ளவன், நாய், செய்நன்றிமறவாதவன்.
விசுவாசித்தல் - நம்புதல், விசுவாசித்தல்.
விசுவாத்துமன் } கடவுள், மூன்னோன்,
விசுவாத்துமா } ஆதி, பரமாத்துமா.
விசுவாநரன் - சாண்டில்யவமிசத்திற்பிறந்தவன். வைசுவாநரன் என்னும் அக்னியின் பிதா என்பாருமுளர்.
விசுவாமித்திரசிருஷ்டி - பிரமசிருஷ்டிக்கு மாறுக விசுவாமித்திரரால்படைக்கப்பட்ட எருமை கழுதை முதலியபொருள்கள், நூதனமாகக் கற்பனை செய்யப்பட்டது.
விசுவாமித்திரபிரியம் } தென்னமரம்,தெ
விசுவாமித்திரப்பிரியம் } ன்னை.
விசுவாமித்திரப்புல் - தர்ப்பைவகை. [ட்டு.
விசுவாமித்திரம் - விசுவாமித்திரப்புல், புர
விசுவாமித்திரர் - புரூரவன் மூன்றும் புத்திரனுகியஅமவசன் வமிசத்திற்பிறந்தகாதி புத்திரர், இவர்ஜாதியில்க்ஷத்ரியர்;தனது தபோ பலத்தால் பிராமணஞயினர், தம்மைப்பிராமணஞக அங்கீகாரஞ்செய்யாத வசிஷ்டர் மீது கோவங்கொண்டு அவருடைய புத்திரர் நூற்றுவரையும் சபித்துக் கொன்றுவிட்டார். அதனல் வசிஷ்டர் சவிக்காதிருந்தார், திரிசங்குவுக்கு அந்தர சுவர்க்கம்கொடுத்தவரும் அரிச்சந்திரனைக் கொடிய பரீக்ஷையால் சத்திய விரதன் என்னும்பெயரோடுவிளங்கச்செய்தவரும் சகுந்தலைக்குத் தந்தையும் இவரே.
விசுவாமித்திரை - வைடூர்ய பர்வதத்திலுண்டாகி ப்ரவஹிக்கிற வொரு நதி.
விசுவாவசன் - ஓர் கந்தருவன்.
விசுவாவசு - முப்பத்தொன்பதாவ தாண்டு, ஒரு கந்தர்வராஜன், இவனுக்கு யாஜ்ஞவல்க்கிய மஹர்ஷி தத்வோபதேசம் செய்தார் என்பது நூற்கூற்று.
விசுவான்மா - பிரமன், விசுவாத்துமா.
விசுவேசன்
விசுவேசுரன் } சிவபெருமான், விச்சுவே
விசுவேசுவரன் } சன், விச்சுவநாதன்.
விசுவேசுவரி - பார்வதி, உமாதேவி.
விசுவை - தக்ஷ ப்ரஜாபதி மகள், தருமன் மனைவி, இவள் புதல்வர் விசுவதேவர்.
விசுவெளடதம் } சுக்கு,சுண்டி, விசுவபேட
விசுவெளஷதம் } கம், விசுவநாக்கரம்.
விசுளி - கள், ஈழம், சாறு. [மிகச்செய்வது.
விசூகை - ஓர்நோய்;அது: தலைச்சுழற்சியை
விசூசிகை - வாந்திபேதி நோய்.
விசூரணம் - துக்கம், விசனம், விதனம்.
விசூரிதம் - குணப்படுதல், சுகப்படுதல்.
விசேடகம் - நெற்றித்திலகம், பொட்டு.
விசேடகாலங்காரம் - ஓரலங்காரம்;அஃது: ஒப்புமையாற் பொதுமை யுற்றிருந்த விரண்டு பொருள்களுக்கொருகாரணத்தால் விசேஷந்தோன்றவுரைத்தல்,சிறப்பணி.
விசேடணம் } அடைமொழி, குணத்தை
விசேஷணம் } விளக்குவன, பகுத்தறிவு, பண்பு. [விசேடியங்களது இன்மை.
விசேடணவிசேடியஅபாவம் - விசேடண
விசேடணவிசேடியபாவம் - விசேடணமும் விசேடியமுமாக அமைந்த நிலை.
விசேடதீக்கை } தீட்சை வகையி லொ
விசேஷதீட்சை } ன்று.
விசேடம் } பிரதானம், மேன்மை, வகை,
விசேஷம் } விசேடகாலங்காரம், விதம், வித்தியாசம், அடைமொழி, சிறப்பாக நடைபெறும் விருந்துசடங்கு முதலியன, மிகுதி, சிறப்பியல், முக்கியமானசெய்தி.
விசேடவாக்கியம் - சிறப்புமொழி.
விசேடிதம் - உறுதிப்படுத்துவது.
விசேடித்தல் } சிறப்பாதல், மிகுதியாதல்,
விசேஷித்தல் } விசேடப்படுத்தல், சிறப்பித்தல், அடைகொடுத்துக்கூறல்.
விசேடியம் } அடையடுத்தபொருள், அடை
விசேஷ்யம் } யடுத்தது.
விசேடோக்தி } ஓரலங்காரம்;அது: காரண
விசேடோத்தி } காரியத்தை யிணைத்துச்

சொல்வது, விசேடோக்தி யலங்காரம்.
விசேடோக்தியலங்காரம் - விசேடோக்தி.
விசேட்டிதம் - தற்செய்கை, முயற்சி.
விசேதம் - அபாக்கியம், இடம், கலக்கடி, தூக்கம், பிரிவு. [விசேட குணம்.
விசேஷகுணம் - சிறப்பியல், மிக்கநன்மை,
விசேஷார்த்தம்-விசேஷம், செய்யுள் முதலியவற்றிற்குச் சிறப்பாகக்கூறும் பொருள்.
விசேஷியம்-அடையை அடைந்த பொருள்.
விசை - சீக்கிரம், தரம், பொறி, வெற்றி, தடவை, முறை, விலிக்கை, விசையென்னேவல், பக்கம், பற்றுக்கோடு, பலம், ஓர் மரம்.
விசைகொள்ளல் } பெலன் கொள்ளல்,
விசைகொள்ளுதல் } விசைதல், விசைவு செய்தல், நீண்டு சுருங்கும்தன்மையாதல்.
விசைக்கம்பு } நெய்வார் கருவியி லொன்று,
விசைக்கால் } விசைத்தடி.
விசைக்காற்று - செல்விசையிலு ளுண்டாகுங்காற்று.
விசைக்கொம்பு - தாழவூன்றி விட்டதும் மீண்டுமேற்கிளம்பும் மரக்கிளை.
விசைதிறத்தல் - வேகமாக வெளிப்படுதல்.
விசைத்தடி - நெய்வார் கருவியி லொன்று, பொறியினூர்தடி, விசைக்கம்பு, விசைக்கால்.
விசைத்தல் - வேகமுறல், விசைவுபண்ணுதல், வீசுதல், கோபப் படுதல்.
விசையசாரதி - கண்ணபிரான்,கோபாலன்.
விசையதண்டம்-சதுரங்க தானையை மோதி வென்ற வீரன், கதைத்தண்டு.
விசையம் - விசயம், பூமி, வையம்.
விசையனம் - ஆராய்வு, ஆராய்ச்சி.
விசையன் - அருச்சுனன், விசயன்.
விசையேற்றுதல்-பொறியேற்றுதல், மூட்டிவிடுதல்.
விசையை - விசயை, கஞ்சா.
விசோகதுவாதசி - ஐப்பசி மாதம் பூர்வபக்கத் துவாதசி திதி. [சோக மின்மை.
விசோகம் - அசோகமரம், சோகரஹிதம்,
விசோகன் - பீமசேனன் சாரதி.
விசோதனம்-சுத்திகரித்தல், சுத்திசெய்தல்.
விச்சதையன் - புல்லூரி, புல்லுருவி.
விச்சந்தா } வெள்ளெருக்கு, விச்சனந்தா.
விச்சந்தா }
விச்சம் - தாமரை, முளரி, முண்டகம்.
விச்சலம் - அம்பு, பாணம், அஸ்திரம்.
விச்சல்லி - பேய்த்திமிட்டி, பேய்க்கொம்மட்டி. ஓர்வகைக் குமட்டி.
விச்சனந்தா - விச்சந்தா, விச்சநந்தா.
விச்சா-சும்மா,தொழிலின்றி, அமைதியாய், சௌக்கியமாக, அடிக்கடி.
விச்சாதரர் - வித்தியாதரர், விஞ்சையர்.
விச்சாதி - வேறுசாதி, புறசாதி, விசாதி.
விச்சிக்கோன்-கபிலரால் பாடப்பட்ட வொரு சிற்றரசன், இளவிச்சிக்கோவின் தமயன்,பாரியினதுபுத்திரிகளோமணத்திற்கொள்ளுகவென்று கபிலர் வேண்டிய வழியும் உடன் படாது மறுத்தவன் இவனே.
விச்சித்திரம் - விற்பன்னம், விற்பனம்.
விச்சிரமம் - ஓய்வு, மலங்கழித்தல்.
விச்சிரமித்தல் - இளைப்பாறுதல், இளைப்பாறச் சயனித்தல்.
விச்சிரல் - விச்சிறல்.
விச்சிரவசு - இராவணன் தந்தையான ஒரு முனிவன்,விசிரவசு.
விச்சிரவா - விச்சிரவசுவுக்கு ஒரு பெயர்.
விச்சிரவாகு - புலத்தியன் குமாரன். இவனுக்கு விச்சிரவசு எனவும் பெயர்.
விச்சிராணனம் - கொடை, தியாகம்,பரிசு.
விச்சிராந்தம் - கடைக்கண். [த்தம்.
விச்சிராந்தி - ஓய்வு,இளைப்பாறுகை,ஓர் தீர்
விச்சிராமம் - விச்சிரமம், மலங்கழிக்கை.
விச்சிராவம் - கீர்த்தி, புகழ், விச்சுருதி.
விச்சிரானம் - பேதிமருந்து.
விச்சிரிப்பு -சிச்சிலுப்பான், விச்சிலுப்பை.
விச்சிரும்பணம் } பொழுதுபோக்கு, விரி
விச்சிரும்பனம் } தல், மலர்கை.
விச்சிரும்பிதம்-அலர்ச்சி, பொழுதுபோக்கு, விருப்பம்.
விச்சிரும்பித்தல் - இளர்தல், எழுதல், உயர்தல், விரிதல்.
விச்சிலிஷ்டம் - பிரிவுற்றது, விலகினது.
விச்சிலுப்பை - விச்சிரிப்பு, சிச்சிலுப்பை.
விச்சிலேடம் - காதலரின் பிரிவு.
விச்சிறல்-கோரைப்புல், விச்சிரல்.
விச்சின்னம்-வேறுக்கப்பட்டது, இடையில் விட்டுப் போகை, இடையில் சிதைவுறுகை.
விச்சு - வித்து, விதை, பரல், காழ், மிருதி.
விச்சுக் கொட்டுதல் - வெறுப்புக் குறியாக ஒருவகை யொலி செய்தல்.
விச்சுதல் - விதைத்தல், வித்துதல்.
விச்சுருதம் - பிரசித்தம், வெளிப்படை.
விச்சுருதி-கீர்த்தி, புகழ், விச்சிராவம். [மா.
விச்சுவகர்மா - விச்சுவகன்மன், விச்சுவகன்
விச்சுவகன் - பிரமன், சதுர்முகன், நான்முகன், சிருட்டிப்பவன்.

விச்சுவகன்மன் } விசுவகருமா. [ஞென்று.
விச்சுவகன்மா }
விச்சுவகாசிபம்-சிற்பநூன் முப்பத்திரண்டி
விச்சுவகேது - அநிருத்தன்.
விச்சுவங்கரம் - நேத்ரம், கண், சட்சு.
விச்சுவசாரம் - சிற்பநூன் முப்பத்திரண்டி ஞென்று.
விச்சுவசித்து-ஓர் யாகம். [ஞென்று.
விச்சுவதருமம் - சிற்பநூன் முப்பத்திரண்டி
விச்சுவதாரிணி - பூமி, மேதினி, பார்.
விச்சுவதேவர்-பிதிர்களிலோர் பிரிவு, விசுவ தேவர்.
விச்சுவநாதன் - காசித் தலத்திற் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான்.
விச்சுவநாள் - விசுவநாள். [ஞென்று.
விச்சுவபோதம்-சிற்பநூன் முப்பத்திரண்டி
விச்சுவம் - எல்லாம், சகலமும், விசுவம்.
விச்சுவரூபம்-பேருருவம், விசுவரூபம்.
விச்சுவரேகை-வானவரை. [விசுவதேவர்.
விச்சுவர்-சிற்பர், வானேரிலோர் வகுப்பார், விச்சுவா-சூரியகிரணத்தொன்று.]ஞென்று.
விச்சுவேசம் - சிற்பநூன் முப்பத்தி ரண்டி
விச்சுவேசன்-உலகநாயகன், விச்சுவநாதன்.
விச்சுளி-சுறுக்கன், விவேகி, மீன்கொத்திப் பறவை, ஒல்லி, விச்சுளியன்.
விச்சுளிப் பாய்தல் - விரைவிற் பாய்தல்.
விச்சுளியன்-விவேகி, புத்திசாலி, சுறுசுறுப் புள்ளவன், விச்சுளி. [கும் சொல்.
விச்செனல் - நிச்சத்தமாயிருப்பதைக் குறிக்
விச்சை - அறிவு, அறுதொழிலி ஞென்று; அது: வித்தை, தெரு, வெள்ளெருக்கு.
விச்சையன்-கல்வியாளன், கல்விமான், மாய வித்தைக்காரன், மாயக்காரன், மாயாவி.
விச்சொரூபம்-விகாரவடிவம்,கோரவுருவம்.
விச்சோடி } சோடற்றது, சரி யொப்பற்
விச்சோடு } றது.
விச்வசாரம்-விச்சுவசாரம்.
விச்வதருமம் - விச்சுவதருமம்.
விச்வநந்தி - திருக்கயிலையில் கானஞ் செய் திருக்கும் சிவகணத்தவரில் ஒருவர்.
விச்வபுக்-பிரகஸ்பதியின் நான்காவது புத்தி ரன். அக்கினி விசேஷம். இவனுக்குக் கோ பதி என்றும் பெயர்.
விச்வபோதம்-விச்சுவபோதம். [ணந்தனன்.
விச்வாசி - ஒரு அப்சரசு. இவளே யயாதி ம
விச்வேசம்-விச்சுவேசம்.
விஜயதசமி-மகாளய அமாவாசைக்குப் பின் வரும் சுக்கில பட்சத்துத் தசமி, விசய தசமி.
விஜயநகரம் - கன்னடதேச ராஜதானி, இக் காலத்தும் இது ஆரியராஜரால் ஆளப்பட்டு வருகின்றது. [ரு விஷ்ணு ஸ்தலம்.
விஜயமாநகரம்-பாண்டி நாட்டிலுள்ள வொ
விஜயன்-சுதேவன் புத்திரன், உருகன் தந் தை, விஷ்ணு பரிசாரரு ளொருவன், அர் ஜுநன், அமவசு, பிருகன் மாநச புத்தி ரன், ஜயன் மகன்.
விஜயாசுவன்-பிருது சக்கரவர்த்தி மகன், அந்தர்த்தாநன் எனவும் படுவன்.
விஞ்சதி - இருபது, இருபஃது, இருபான், விம்சதி, விம்ஸதி. [அதிகப்படல்.
விஞ்சுதல்-மிகுதல், மேலாதல், அதிகமாதல்,
விஞ்சை-கல்வி, கலை, பரப்பிரமத்தைப் பற் றிய ஞானம், மாயவித்தை, மந்திரம்.
விஞ்சைப்பதி-வித்தியாதரருலகு.
விஞ்சையரூர் - வித்தியாதரரூர்.
விஞ்சையர்-புலவர், வித்தியாதரர். [கம்.
விஞ்ஞதை-ஞானம், போதம், சிதம், வித்த
விஞ்ஞம்-அறிவு, தெருட்சி, மதி, புத்தி.
விஞ்ஞாதம் - அறிந்தது, அறிவு, பிரசித்தம், மேலான அறிவு. [பிரசித்தப் படுத்தல்.
விஞ்ஞாத்தி - அறிவிப்பு, அறியச்செய்தல்,
விஞ்ஞாபனம்-விக்கியாபனம்,விண்ணப்பம்.
விஞ்ஞானகலர் - மூவகை யாத்துமாக்களி லொருவர்; இவர் ஆணவமல மொன்றே யுடையவர்கள்,விஞ்ஞாநகலர். [ணன்.
விஞ்ஞானபாதன் - வியாசன், வாதராய
விஞ்ஞானப்பிரகாசம் - ஞானவொளி.
விஞ்ஞானமயகோசம்-பஞ்சகோசத் தொன் றாம்; அது: ஞானேந்திரியமும் புத்தியும்.
விஞ்ஞானம் - உண்மை அறிவு, வாத்தியம், வேலை, பஞ்ச கந்தங்களு ளொன்று.
விஞ்ஞானவாதி-அறிவுமாத்திரமே யுள்ளது என்று கூறும் யோகாசாரன்.
விஞ்ஞாநகலர்-விஞ்ஞானகலர்.
விஞ்ஞாநன்மவாதி-பிரமமே ஆன்மா என் று வாதிக்கும் மதத்தினன்.
விஞ்ஞானேசுவரர் - யாஞ்ஞவல்கியம் என்ற ஸ்மிருதிக்கு மிதாட்சரம் என்ற உரைநூ லெழுதியவரான ஆசிரியர்.
விஞ்ஞை-விஞ்சை.
விட - மிகவும், காட்டிலும்.
விடகடி } விஷந்தீண்டல், விஷப் பிராணி
விஷகடி } கடித்தல். [விடதான்.
விடகண்டன்-சிவபெருமான், நீலகண்டன்,
விடகன் - சுமாலி புத்திரன்.
விடகாரி - காண்டாமிருகக் கொம்பு, விட வைத்தியன், விடதாரி.

விடக்கு - ஊன், இறைச்சி, சவம், பிணம், பிரேதம்.
விடக்கோள் - ஓர் கரந்துறைகோள், குளிகன்.
விடங்கம்-அழகு, ஆண்மை, இளமை, கொடுங்கை, சுவர்ப்புறத்து நீண்ட வுத்திரம், துகிற்கொடி, புழுக்கூடு, புறவுகட்குத் தூண்கண்மேற் செய்த கூட்டின் வரிசை, முகடு, வீதிக்கொடி, வீட்டின் முகடு, உளியினாற் செய்யப்படாது இயற்கையாயமைந்த இலிங்கம்.
விடங்கர் - சிறுவழி, முதலை, கரா.
விடங்கன் - உளியினாற் செதுக்கப்படாது தானே உண்டான சுயம்புலிங்கம், நல்லுருவமுடையவன், காமுகன், வம்பளப்பவன்.
விடங்கு - சிருங்கார விலாசம், அழகு.
விடங்கொல்லி } ஓர் பூண்டு, சிறியா நங்
விஷங்கொல்லி } கை.
விடசிருங்கம் } ஓர் வண்டு, குளவி, வேட்டு
விடசூகம் } வன். [மேமிப்புள்.
விடசூசகம்-சகோரப்புள், சக்கரவாகப்புள்,
விடசெந்து-விஷப்பிராணி, விஷஜெந்து.
விடஞ்சிங்கி-சுக்கு, சுண்டி, விசுவநாக்கரம்.
விடணம்-பீசம், பீஜம், அண்டம், கோசம்.
விடதந்தகம்-பாம்பு, சர்ப்பம், விடதரம்.
விடதம் - தூருசி, துரிசு, முகில்.
விடதரம் - பாம்பு, விடதந்தகம், மேகம்.
விடதரன் - சிவபெருமான், நீலகண்டன், கர்ணனால் கொல்லப்பட்ட ஓர் பாரத வீரன்.
விடதாரி } மருத்துவன், விஷவைத்தி
விஷதாரி } யன்.
விடதாலி-பூசான், சதபதம்.
விடதாளம் - நவதாளத் தொன்று.
விடத்தலை
விடத்தேசை } மரவகையி லொன்று.
விடத்தேர்
விடத்தாலம் - மருந்துவகையி லொன்று.
விடத்தாளி-விடத்தேசை. [ல், விடராஜன்.
விடத்துக்கரசன் - கெருடபச்சை, கருடக்க
விடநீர் } சரீரத்துறுமோர் தோஷநீர்.
விஷநீர் }
விடந்தீஞ்சான்-கொல்லேப்பல்லி.
விடந்தை-ஒரூர், திருவிடந்தை.
விடபகதி - துரககதி யைந்தனுள் இடபத்தின் நடைபோன்ற குதிரைநடை.
விடபட்சணம்-நஞ்சுபுசித்தல். [டியோன்.
விடபதுவசன்-சிவபெருமான், இடபக்கொ
விடபபதி-சிவபெருமான், விடையேறி.
விடபம் - அலர்வு, இடபவிராசி, எருது, சிவனூர்தியுங் கொடியும், சிறுதூறு, தளிர், மரக்கொம்பு, விசாலம், பெருந்தூறு, தூண், அண்டத்திலுள்ள விதை.
விடபாரி - கிருட்டினன், கோபாலன், கண்ணபிரான்.
விடபி-அத்திமரம், மரப்பொது. [பினப்பு.
விடப்பு - கமர், விடர், விடர்வு, வெடிப்பு,
விஷமசாகசம் - எக்கம், எக்கரவு.
விஷமந்திரன் - குறவன், குன்றவன்.
விடமம் } சமமின்மை, தொந்தரவு, வருத்
விஷமம் } தம், கரடுமுரடு, இசைவற்றது, குறும்பு, சங்கடம், அழுத்தமின்மை, பயம்.
விடமரக்கனி-எட்டிப் பழம்.
விடமரம் - எட்டி, விடமூட்டி.
விஷமவிபாகம்-சரியற்ற பங்கு.
விஷமாசனம் - அசீரணபோசனம்.
விஷமாட்சன்-சிவபெருமான், மகாதேவன்.
விஷமாயுதன் - காமன், மன்மதன்.
விடமி } வண்மி, பலகைஞன், குறும்பு செய்
விஷமி } பவ-ன்-ள்.
விடமன் } குறும்பு செய்பவன்.
விஷமன் }
விடமூட்டி } காஞ்சிரமரம், எட்டி.
விஷமூட்டி }
விடமுள் - தேள், துட்டன், விருச்சிகம்.
விடமுறி-விஷத்தை முறிக்கும் மருந்து.
விடமூங்கில் } மரவகையி லொன்று.
விஷமூங்கில் }
விடம் - அதிவிடையம், எத்து, காய்ச்சுப்பு, தாமரைநூல், தேள், நஞ்சுநீர், பரஸ்திரீகமனம், பாஷாணம், மலை, சுக்கின் தோல், வச்சநாபி, நீர், தூர்த்தத் தனம், மரக்கொம்பு, விடலவணம், கேடுவிளைப்பது.
விஷம்-நஞ்சுநீர், பாஷாணம்.
விடம்பம்-உள்ளொன்று புறம் பொன்றுன தன்மை, கரவடம், வேடம் பூணுகை.
விடம்பனம்-உபத்திரவம், நிந்தை, நடிப்பு.
விடம்பன்-உள்ளொன்று புறம் பொன்றுன தன்மையுடையவன், வஞ்சகன், கபடி.
விடம்பு - கமர், விடர், பிளப்பு, விடர், விடர்வு.
விடயக்காட்சி-பஞ்சபொறிகளினு லறிதல்.
விடயஞானம் } உலகஞானம், லோகபோ
விஷயஞானம் } தம்.
விடயபஞ்சகம் - கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறிதல், ஐம்புலம்.

விடயபருத்தியாகம்-துறத்தல், நீங்கல், வெறுத்துவிடுதல்.

விடயம் } அடைக்கலம், அறியப்படத் தக்க
விஷயம் } கது, இருத்தல், உரியது, உலகப்பொருள், காணப்பட்டது, காரணம், சுக்கிலம், தேயம், நாயகன், காரியம், புலன், நூல் முதலியபொருள், பயன், காமவின்பம், பாக்கு சேர்ந்த வெற்றிலைச் சுருள்.

விடயவாசனை - விஷயப்பற்று.

விடயாசத்தி - விஷயவிச்சை.

விடயாயி - அரசன், காமன், சிற்றின்பம், பதார்த்தமாத்திர மூண்டென்று சொல்பவன், பொறி. [தன், விடயாயி.

விடயி-பொருள், ஐம்பொறி, அரசன், வேந்

விடயித்தல் - பொறிகள் புலனைப்பற்றுதல்.

விடரகம் - மலைக்குகை, விடர், விடர்வு.

விடரவன்-பூனை, இற்புலி, பூசை, விடருகம்.

விடராசன் } கெருடபச்சை, கருடக்கல்,
விடராஜன் } விடத்துக்கரசன்.

விடரு - அதிவிடயம், அதிவிடையம்.

விடருகம் - பூனை, விடரவன், பாம்பு.

விடரூகம் - பூனை, விடரவன், விடருகம்.

விடரோகம் - நோய்வகையிலொன்று.

விடர் } கமர், காடு, தூர்த்தர், பெருச்சா
விடர்வு } ளி, மலைப்பிளப்பு, நிலப்பிளப்பு, மலைக்குகை, விடரகம், முனிவரிருப்பிடம்.

விடர்ச்சிலைபொறித்தவேந்தன்-ஒருசேரன். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாத னெனவும் கூறப்படுவன். கோவலனுக்கு ஒன்பது தலைமுறை முன்னோனாகிய கோவலனுக்குக் காதற் பாங்கன். (மணிமேகலை.)

விடலதேவராயன் - சிங்கர் கோவிலரசன். இவன் மகளைப் பிடித்திருந்த பிசாசை உடையவர் ஓட்ட அதனுல் ஸ்ரீவைஷ்ணவனாய் விஷ்ணு வர்த்தன நாராயணன் என உடையவரால் பெயர் பெற்றவன்.

விடலம் - உள்ளி, குதிரை, நஞ்சு.

விடலவணம் - பிடாலவணம், விடம்.

விடலி-கீழ்மக்கள், பூப்பதாரி, மலடி, விவாகத்துக்குமுன் ருதுவானபெண், தூர்த்தப் பெண், புல்வகை. [வாழும் பிராமணன்.

விடலிபதி - சோரம்போகும் மனைவியுடன்

விடலை-ஆண்மகன், இளவாண்பொது, திண்ணியன், பாலைநிலத் தலைவன், மணவாளன், முப்பது வயதிற் குட் பட்டவன், பெருமையிற் சிறந்தோன், வீரன், இளங்காளைமாடு.

விடல்-குற்றம், சாதல், விடுதல், ஊற்றுகை.

விடவம் }
விஷவம் } அயனவரி, விஷவம், விடுவம்.

விடவல்லி - கீழாநெல்லி, விசவல்லி.

விஷவாதகரப்பன் - கரப்பன் நோய்வகை.

விடலி - மரம், பாதபம், விருக்ஷம், தரு.

விடவிடெனல் - நடுக்கக்குறிப்பு, மெலிவுக் குறிப்பு, சுறுசுறுப்பாயிருப்பதற் குறிப்பு.

விடவு - கமர், விடர், வெடிப்பு, பிளப்பு, விடர்வு. [சகுனிக்குக் குமாரன்.

விடன் - தூர்த்தன், விடம், சோரநாயகன்,

விடாக்கண்டன் - பிடிவாதமாக நின்று ஒன்றை நிறைவேற்றுபவன், விடாதகண்டன்.

விடாக்காய்ச்சல் } தொடர்ந்து வரும்
விடாச்சுரம் } சுரநோய்.

விடாச்சேரி - நீங்காவரவு.

விடாணம் } விலங்கின்கொம்பு.
விஷாணம் }

விடாணி - எருது, கொம்புள்ளது, யானை.

விடாதகண்டன் - விடாக்கண்டன்.

விடாதம்-இக்கட்டு, மனத்தளர்ச்சி, மயக்கம்.

விடாதவாகுபெயர் - கருவியின் பெயரே கருத்தாவைக்காட்டி நிற்பது (உ-ம்) குதிரையாலவ்வூர் கொள்ளையிடப்பட்டது.

விடாதவாக்கச்சொல் - தன் செம்பொருளை விடாது நின்றும் பிறபொருளையுந் தழுவி நிற்கு மாக்கச்சொல். [ன்வயமுள்ளஇடம்

விடாதவிலக்கணை-வாச்சியார்த்தத்திற்கு அ

விடாதன் - சிவகணத் தலைவரில் ஒருவன்.

விடாநோய்-தீராதநோய், நீங்காத வியாதி.

விடாந்தகன்-சிவன், விஷத்தைகெடுத்தவன்

விடாப்படை - கையினின்றும் விடுபடாத ஆயுதம். [தியாகப்பற்றுகை, பிடிவாதம்.

விடாப்பிடி-ஒருகண்டசீர், பிடித்தபிடி, உறு

விடாப்பூட்டு - ஒய்வில்லாமை.

விடாமழை } ஓயாமழை, தினமழை, தொட
விடாமாரி } ர்ச்சியானமழை. [காமுகன்.

விடாயன்-தாகமுள்ளவன், களைப்புற்றவன்,

விடாயாற்றி - இளைப்பாறல், மஹோற்சவத்தை யடுத்துச் சுவாமிக்கு இளைப்பாறலாக ஆலயத்துக்குள் நடைபெறும் உற்சவம்.

விடாயுதம் - பாம்பு, சர்ப்பம், நச்சரவு.

விடாயெடுத்தல் - விடாய்த்தல்.

விடாய் - ஆசை, சோர்வு, தாகம், களைப்பு.

விடாய்த்தல் - தாகமடைதல், களைப்படைதல், ஆசைப்படுதல். [ஆசை.

விடாய்ப்பு-தாகமெடுக்கை, களைத்திருக்கை.

விடாரகம் }
விடாரகன் } பூனை, விடாலகம்.

விடாரம் - பாம்பு, விடாலம், சர்ப்பம்.
விடாலகம் - பூனை, பொன்னரிதாரம்.
விடாலநியாயம் - மார்ஜாலநியாயம்.
விடாலம்-கண்மணி,பூனை,மார்ஜாலம். [கம்.
விடானனம் - பாம்பு,சர்ப்பம்,உரகம்,பன்ன
விடாளி) சதுரக்கள்ளி, வச்சிராங்கம்,
விஷாளி) கண்டீர்வம். [னெவல்.
விடி - திரைச்சீலை, விடிகாலை, விடியென்
விடிகாலை - பொழுது விடிகின்றநேரம்.
விடிசங்கு-உதயகாலத்து ஊதப்படும்சங்கம்.
விடிதல் - அனுகூலமாதல், உதயமாதல், முடிவு பெறுதல். [டித்தல்.
விடித்தல்-மலங்கழித்தல்,விட்டித்தல், விஷ்
விடிநிலா-பின்னிரவில் உதிக்குஞ் சந்திரன்.
விடியல்-வைகறை, உதயம், காலை, புலரி, விடிகாலை, விடியற்காலம், மலவிசர்ச்சனம், வயிற்றுப்போக்கு, வெளியிடம்.
விடியற்கருக்கல் - விடிதற்கு முன்னுள்ள இருட்பொழுது. [விடியல்.
விடியற்காலம்-வைகறை, விடிகாலை, புலரி,
விடியற்பண் - பூபாளம். [கறை.
விடியற்றரம்-விடியற்காலம்,விடிகாலை, வை
விடியாப்பாளை - திருத்தியற்றவ-ன்-ள்.
விடியாமூஞ்சி - தொடர்ந்துவரும் துரதிருஷ்ட முள்ளவ-ன்-ள். [ரூத வழக்கு.
விடியாவழக்கு - ஒரு பொழுதும் முடிவுபெ
விடியாவிளக்கு - நந்தாவிளக்கு.
விடியாவீடு-தொடர்ந்துவரும் துரதிருஷ்ட முள்ள வீடு. [எரியும் விளக்கு.
விடிவிளக்கு-பொழுது விடியும் வரைக்கும்
விடிவு - அனுகூலப் பட்டது, விடிகாலை, ஒழிவுவேளை, அச்சம், நறும்புகை.
விடிவெட்டியாள் - விடுதியாள்.
விடிவெள்ளி - வைகறைவெள்ளி, பின்னிரவில் தோன்றும் சுக்கிரன்.
விடிவேளை
விடிவை } விடியற்காலம்,விடியற்றரம்.
விடிவோரை - அதிகாலை, அதிகாலம்.
விடீஇய - விடுத்தற்பொருட்டு.
விடு-நீர்யானை, யானை, மத்தகத்தினடி.
விடுகதை - நொடி, பிதிர், மறைச்சொல்
விடுகவி - விடுபாட்டு. [விடுகாசு, வளையல்.
விடுகாசு - பொடிக்காசு, சில்லறைப்பணம்,
விடுகாசுவளையல்-கண்ணுடிவளையல் வகை.
விடுகாது-வளர்த்துத் தொங்கவிடும் தொள்ளுக்காது, வடிகாது, தாழ்காது. [-ள்.
விடுகாலி-பட்டிமாடு, கட்டுக்கடங்காதவ-ன்
விடுகாலிவிளவு-பின்னறுவடை [ப்பொறி.
விடுகுதிரை-பகைவர் மேலே விடுங் குதிரை
விடுகுறை - விட்டகுறை, விடுதுறை.
விடுகை - விடுதல், விடல்.
விடுசரம் - ஊர்ப்பன்றி, விசவவராகம்.
விடுசி - அம்பு, அத்திரம் விடுசி.
விடுதயிர் - நீர்க்கலந்ததயிர், நீர்த்ததயிர்.
விடுதலம் - பொதுசன உபயோகத்திற்காக விடப்பட்ட நிலம், நிலாமுற்றம்.
விடுதலை-இட்டம், தன்னிட்டம், நீக்குதல், முடிவு, விடுந்தலைப்பு, ஒய்வு, சுதந்திரம்.
விடுதலைப்பத்திரம் - சொத்திற் பிறர்க்கு நிமை யில்லை என்பவை உறுதிப்படுத்தும் சாசனம்.
விடுதல் - அனுப்புதல், எறிதல், ஒழிதல், நீக்கல், விள்ளுதல், கைவிடுதல், போகவிடுதல், பந்தயம் விடுதல், நிறுத்துதல், ஒழித்துவிடுதல், வெளிவிடுதல், சொல்லுதல், வெளிப்பட வுரைத்தல், அனுமதி தருதல், உண்டாக்குதல், பிரிதல், விள்ளுதல், மலர்தல், உண்டாகுதல், தவிர்தல், பிளந்திருத்தல், நிறுத்தல், இடை வெளி விடுதல்,படிக்கையில் நிறுத்துதல், பலங்குறைத்தல், விலகுதல், அறுபடுதல், ஒரு துணைவினை.
விடுதி - ஆறியிறுத்தல், உத்தரவு, தங்குமிடம், தனித்தது, விடுதலம், உத்தரம்.
விடுதியாள் - வேலையில்லாதவன்.
விடுது - ஆலம்விழுது, ஆழம் பார்க்க ஒரு மூனையில் ஈயவுருண்டை கட்டிய கயிறு.
விடுதுறை - வாசித்து நிறுத்துமிடம்.
விடுத்தம் - தடவை, முறை, எட்டி.
விடுத்தல் - அனுப்பல், தங்கல், தள்ளுதல், நடத்தல், பிரித்தல், நெகிழ்த்தல், பிதிர் விள்ளுதல், சொல்லுதல், வெளிப்படக் கூறுதல், விவரமாகக்கூறுதல், விடை தருதல்.
விடுத்துவிடுத்து - அடிக்கடி, பலமுறையும்.
விடுநகம் - கிட்டிக்கோல், கிட்டி.
விடுநாண் - அரைஞாண், அரைவடம்.
விடுந்தலைப்பு - கொய்யகம், முன்னுரை.
விடுபடுதல்-நீக்கப்படுதல்,விடுதலையடைதல்
விடுபடை-அஸ்த்ர முதலியன, எறிபடை.
விடுபதி - மருமகன், மருகன், மருமான்.
விடுபாட்டு - தனிப்பாடல், தனிச்செய்யுள்.
விடுப்பு - ஆராயுங்குணம், பூராயம், வேடிக்கை, விநோதமானது, நீக்கம், விருப்பம்.
விடுப்புக்காட்டுதல் - விளைதக் காட்சி காட்டல்.
விடுமனை-காலிமனையிடம். [சனப் பத்திரம்.
விடுமுறி-விடுதலைப்பத்திரம்,விவாக விமோ

விடுமுறை - ஓய்வுநாள், ஓய்வு, சாவகாசம்.
விஷுவம் } விடவம், விஷுவம்.
விடுவம் }
விடுவாய்செய்தல் } அறுத்தல், அரிதல்.
விடுவாய்ச்செய்தல் }
விடுவிடெனல் - சுருசுருப்பாயிருத்தற் குறிப்பு, கோபங்கொள்ளற் குறிப்பு.
விடுவித்தல்-விடுதலைசெய்யல், விரித்துரைத்தல், உட்பொருளைக்கண்டு சொல்லுதல்.
விடுசி - அம்பு, விடுசி, அத்திரம், சரம், கணை.
விடேஷபம் - திரிபு, வேறுபாடு, வேறுபடல்.
விடேலெனல் - அனுகரணவோசை. [பு.
விடேல்விடேலெனல்-ஈரடுக்கொலிக்குறிப்
விடை - இடபம், இடபராசி, உத்தரம்; இஃது: உரையிலக்கணமைந்திலென்று, எதிர்மொழி, எருது, எருமைக்கடா, ஆட்டுக்கடா, இளம்பாம்பு, குதிரை, கோழிப்பேடு, வருத்தம், வலிமை, விடுதல்.
விடைகாலெறிதல் - இளங்கன்று துள்ளிக் காலெயெறிதல், கால்வீசியுறுத்தல், சாகுங் காலத்தில் கால்கள் வலித்திழுத்தல்.
விடைகொடுத்தல் - உத்தரவு கொடுத்தல், அனுமதிஅளித்தல், மறுமொழிகூறுதல்.
விடைகொள்ளல் - விடைபெறுதல்.
விடைகோள் - விடைதழாஅல்.
விடைக்கந்தம் - செம்மணத்தக்காளி.
விடைக்குறி - இடபலாஞ்சனை.
விடைக்கொடி - இடபத்துவசம்.
விடைக்கொடியன் - சிவபிரான்.
விடைக்கோழி - விடைத் துரத்தப்பட்ட கோழிக்குஞ்சு.
விடைதல்-அபராதம்சொல்லுதல், கோபம், சினம், பிரிதல், பிளத்தல், கோபங்கொள்ளுதல். [ஏற்றினைத் தழுவிப்பிடிக்கை.
விடைதழாஅல்-கோபம்மூட்டி விடப்பட்ட
விடைதுரத்தல் } குஞ்சுகளை விடுதல்.
விடைதுரத்துதல் }
விடைத்தல் - சினக்குறிப்பு, பெருங்கோபம், அடித்தல், கண்டித்தல், வெளிப்படுத்துதல், மிகுதல், கடுகுதல், தடுத்தல், சோர்தல், விம்முதல், வலிப்புக்கொள்ளுதல், விரைந்து நிற்றல், செருக்குக் கொள்ளுதல். [ன்.
விடைத்துவசன் - சிவன், விடைக்கொடிய
விடைபெறல் - போகவுத்திரவுபெறல். [தி.
விடைப்பாகன் - சிவபெருமான், விடையூர்
விடைப்பு - அபராதம், குற்றம், கோபங்காட்டுகை, கருவம், வேறுபடுத்துகை, நீக்குகை.
விடைமுகன் - நந்திதேவர், நந்தி.
விடைமுரிப்பு-எருத்தின் திமில். [விடையம்.
விடையம் - காட்சிப்பொருள், தேசம், அதி
விடையவன் - சிவபெருமான், வருணன்.
விடையன் - காமுகன், தூர்த்தன், விடைய இச்சையுடையவன்.
விடையாயம் - ஏற்றையுடைய ஆனிரை.
விடையுச்சன் - சந்திரன், திங்கள், மதி.
விடையூர்தி } சிவபெருமான், இடபவாகன
விடையேறி } ன், இடபாரூடமூர்த்தி.
விடையோன் - சிவன், விடையவன்.
விஷ்கம்பம் - நித்தியயோகத் தொன்று.
விட்கம்பம் - கதவின்றாழ், செயல், தடை, தூண், நித்தியயோகத்தொன்று, விசாலித்தல், விட்டம், வித்தாரம், யோகம் இருபத்தேழனுள் ஒன்று, நாடகத்துள் அங்கங்களுக்கு இடையில் வருவதற்குரிய உறுப்பு.
விட்சவம் - இருமல், குக்கல், ஐ. [சிந்தூரம்.
விட்சி - ஓர்மரம், வெட்சி, குல்லே, செச்சை,
விட்சேபசத்தி - ஓர்சத்தி; அது: சுருங்கி விரியத்தக்கது, சூக்கும பஞ்சபூதங்களுக்குக் காரணமான மாயாசத்தி.
விட்சேபணம் - அனுப்புதல், போகவிடுதல், எறிதல், சிதறல்.
விட்சேபம்-அனுப்புதல், உமிழ்தல், எறிதல், ஒன்றைச்சொல்லத்தொடங்கிவேறுரூபகத்தாற்சொல்லாமல் விட்டுவிடுதல், கலக்கம், கூத்திலோர்விகற்பம், பதனம், பயம், பொய்யென்றுரூபித்தல், வாளுட்சரசேகை
விட்சேபி - பார்வதி, அம்பிகை, சாம்பவி.
விட்டஇலக்கணை - விட்டலக்கணை.
விட்டகுதிரையார் - ஓர்சங்கப்புலவர். இவர் குறுந்தொகை 74-வது செய்யுளில், "விட்டகுதிரை வியப்பினன்ன" என எடுத்துக் கூறினமையின் அம்முதற் குறிப்புப் பெயரே பெயராகக் கொண்டார். [தியடி.
விட்டடி - படித்துநிறுத்திய பாட்டின் இறு
விட்டடித்தல் - கைவிட்டுப் போதல், வெகுதூரம் போகும்படி அடித்தல், வெருட்டியடித்தல். [கிடக்கும் பட்டினி.
விட்டப்பட்டினி-தொடர்ந்து பல நாளாகக்
விட்டபம் - பூமி, மேதினி, காசினி, பார்.
விட்டம் - உத்திரம், குறுக்களவுவரி, குறுக்காக இடப்பட்டது, தேகம், அவிட்டம்.
விட்டரச்சிரவன் - திருமால், விஷ்ணு.
விட்டரம் - ஆசனம், ஓர்பிடிதருப்பை, ஓர் மரம், கொள்கலம், தவத்தோர் பீடம், படுக்கை.
விட்டரி - அகத்தி, அச்சம், கரீரம், முனி.
விட்டலக்கணை - சொல்லப்பட்டவாசகத்

தின் பொருளே இயை பின்மையாற் கை விட்டு அவ்வாசகத்திற்கு வேறு பொருள் கொள்ளுமாறு நிற்பது; அது: இலக்கணே மூன்றினுள்ஒன்று, கங்கைக்கண்இடைச் சேரி என்பதில் இது கங்கையை விட்டுக் கரையை யுணர்த்தலின் விட்டலக்கணே யாயிற்று, விட்டவிலக்கணே, விட்ட இலக்கணே.

விட்டலன் - ஒருஅரசன். இவனைப் புகழேந் திப் புலவர் "தொட்டிலிருக்கத் தொடங் கிய நாள்முதலாய், அட்டதிக்கும் நின் குடைக்கீழ் ஆயிற்றே-விட்டலையா, தன் குமரியின்றித்தனிக்குமரிகொள்ளாயால், தென்குமரிக்கேகுவதென்செப்பு" எனும் கவி பெற்றவன். (2) மகாவிஷ்ணு.

விட்டவர்-துறவோர்,துறந்தோர், பகைவர்.

விட்டவாகுபெயர் - மொழிக்கியன்றபொரு ளைவிட்டு குறிக்கப்படு பொருட்கிடனுய்ப் பிறிதொன்றை விளக்குவது (உ-ம்) கங் கைக்கண் இடைச்சேரி, விட்டலக்கணே.

விட்டவர்க்கச்சொல்-சொற்பொருளே விட்டு வேறொன்றிற்கு வழங்கும்சொல் (உ-ம்) அவ்வூர் வந்தது. [இலக்கணே.

விட்டவிலக்கணே - விட்டலக்கணே, விட்ட

விட்டாடி - தனியன், ஒன்றி, தனித்தது, தனிப்பாட்டு,தனிமையான-வன்-வள்-து

விட்டார்த்தம்-பாதிவிட்டம்,வியாசார்த்தம்

விட்டாற்றி - ஆறுதல், இளைப்பாறுகை.

விட்டாற்றுதல் - துக்கத்தைவெளியிட்டாற் றுதல், அமைதியில்லார் இயல்பு.

விட்டி - கோழி,கோழிக்கரணம்,பத்திரவா கரணம், பத்திரை, முன்தள்ளியவயிறு.

விட்டிகை - விட்டில், பூச்சு, பொட்டு.

விட்டிசை - பிரிந்திசை,பாட்டில்வருந்தனிச் சொல்.

விட்டிசைத்தல் - பிரிந்திசைத்தல்.

விட்டிதோசம் } சுபகாரியங்களுக்குவிலக்
விஷ்டிதோஷம் } கப்பட்ட நாள்.

விட்டித்தல் } மலங்கழித்தல், விடித்தல்.
விஷ்டித்தல் }

விட்டில் - ஓர் பறவை, ஓர் வண்டு, நாட்டுக் குற்றமேழினுளொன்று, பிராய்மரம், வெட் டுக்கிளி, கொலே, நீண்டமரவகை.

விட்டு-விஷ்ணு, திருமால், ஆகாசம், விண்.

விட்டுக்கொடுத்தல் - காட்டிக்கொடுத்தல், கூட்டிக்கொடுத்தல்,இணக்கங்காட்டுதல்

விட்டுசித்தர் - பெரியாழ்வார், விஷ்ணுசித் தர், ஓர் வைணவ சித்தர்.

விட்டுச்சொல்லுதல் - மனத்திலுள்ளதை மறைக்காமல் வெளியிடுதல், ஒளிக்காமல் பேசல், களங்கமற்ற சொல்.

விட்டுணு } திருமால், சர்வ வியாபகமுள்ள
விஷ்ணு } வன், பரிபூரணன்.

விட்டுணுகரந்தை-ஓர்பூடு, விஷ்ணுகரந்தை.

விட்டுணுகாந்தி - ஓர் தருமநூல், ஓர் பூடு.

விட்டுணுகிராந்தி } மூங்கில்,வேய்,கழை.
விட்டுணுதந்தி }

விட்டுணுபதம் - பரமபதம், பாற்கடல்.

விட்டுணுபுராணம் - ஓர் வைணவ புராணம்.

விட்டுணுப்பிரியம் - துளசி, குல்லே, துழாய்.

விட்டுணுரதம்-கருடன்,உவணன், கலுழன்.

விட்டுணுலோகம் - வைகுண்டம்,பரமபதம்.

விட்டுணுவல்லபை - இலக்குமி, திருமகள்.

விட்டுப்பாடுதல் - முழுக்குரலுடன்பாடுதல்.

விட்டுப்பிடித்தல்-ஒருசெயலே சிறிது காலம் விட்டிருந்து மறுபடியும் தொடங்குதல்.

விட்டுப்போதல் - நீங்கிவிடுதல், மிக்க நோ வாயிருத்தல். [விலக்கணே.

விட்டும்விடாதவாகுபெயர் - விட்டும்விடாத

விட்டும்விடாதவிலக்கணே - ஒருவாசகத்தி லே ஒரு பாகத்தின் பொருளே விட்டு மற் றைப்பாகத்தின்பொருள்இயைபுபெறநிற் கும் இலக்கணே; இது: இலக்கணேமூன்ற னுள் ஒன்று, விட்டும் விடாதவாகுபெயர்.

விட்டுரைத்தல் - விட்டுச்சொல்லுதல்.

விட்டுவாங்கி - தன்னுடைய மனைவியைப் பிறருக்குக் கொடுப்போன்.

விட்டுவிடுதல் - பிடிப்புவிடுதல், விலகிவிடு தல், நீங்கிவிடுதல்.

விட்டெறிதல் - தூரவிழும்படி எறிதல்.

விட்டேறரணம் } வேல், அயில், எஃகம்,
விட்டேறு } சத்தி. [ல்லுவோர்.

விட்டேற்ருளர்-இகழ்ந்து கடுஞ்சொற் சொ

விட்டேற்றி - சுற்றத்தினின்றும் நட்பினின் றும் நீங்கிப் பிறரையும் அவ்வண்ணம் செய்விப்போன், தொடர்பற்றவ-ன்-ள்.

விட்டை } இலத்தி, கட்டி, திரளை,விலங்கு
விஷ்டை } களின் மலம்.

விட்டோசை - விட்டிசை, பிரிந்திசை.

விஷ்ணுகரந்தை-ஓர்பூடு, விட்டுணுகரந்தை.

விஷ்ணுபுராணம் - விட்டுணுபுராணம்.

விட்பாசம் - விற்றிருனி, தனுவிஞ்ஞை.

விஷவம் - விடவம், விஷவம், விஷ்வம்.

விணிகை - முலைக்கச்சு, பட்டிகை.

விண் - ஆகாசம், மேலுலகம், மேகம், காற் றடிப் பட்டத்தின் ஒரு கருவி.

விண்கொள்ளி - விண்வீழ் கொள்ளி.

விண்கோ - இந்திரன், விண்ணவர்கோன்.

விண்சுகம் - தகரை, விண்டுதம், விண்டுகம், சுவர்க்கம்.
விண்டபூரகம் - மாதுளை, மாதுளம்.
விண்டலம்- ஆகாசம், ஆகாயம், மேலுலகம்.
விண்டல் - அலர்தல், மூங்கில்வெடித்தல்.
விண்டவர் - பகைவர், ஒன்னர், விண்டார்.
விண்டாண்டு - ஊஞ்சல், ஊசல்.
விண்டார் - பகைவர், மேவலர், விண்டவர்.
விண்டு - ஆகாயம், இளமை, கடுதாசிப்படத் திலோர்கருவி, தேவலோகம், மேகம், அட்டாதசதருமநூலிலொன்று,காற்று, தகரை, திருமால், மலை, மூங்கில், விஷ்ணு காஞ்சி.
விண்டுகம்-தகரை, விண்சுகம், தாமரை.
விண்டுசித்தர் - ஓர் இருடி; இவர் வனத்தில், பாண்டவருடைய பன்னிரண்டாமாண்டில் நச்சுப்பொய்கை நீரருந்தி மூர்ச்சையானார்.
விண்டுசொல்லுதல்-வெளிப்படக் கூறுதல்.
விண்டுதம்-தகரை, விண்சுகம். [நதி.
விண்டுநதி-ஆகாயகங்கை,ஆகாசகங்கை,சுர
விண்டுபதம் - ஆகாயம், விண்டலம்.
விண்டுபலி-கருவுற்ற பெண்டிர்க்கு அக் கரு நிலைத்தற் பொருட்டுச் செய்யும் சடங்கு.
விண்டுபுரம்-காஞ்சிபுரத்திற்கு ஒரு பெயர்.
விண்டுரதம்-கருடன், உவணன், கலுழன்.
விண்டுராதன்-அபிமன்னுவின் புத்திரனை பரீட்சித்து, பரிச்சித்திற்கு ஒரு பெயர்.
விண்டுவன்மன் - ஒரு வேதியன்; கண்ணும் வாயும் இல்லாதவன். சிவனே யெண்ணித் தவமாற்றிக் கண்ணும்வாயும் பெற்றவன்.
விண்டேர்-கானல்,வெண்டேர்,பேய்த்தேர்
விண்ணகரம்} தஞ்சாவூர் ஜில்லாவில்உப்பி
விண்ணகர் } லியப்பன் கோயில் என வழங்கும் விஷ்ணு ஸ்தலம்.
விண்ணகர் - வைகுந்தம், பரமபதம்.
விண்ணதிர்ப்பு - இடிமுழக்கம்.
விண்ணபத்திரம் } மன்னூட்டுப் பத்தி
விண்ணப்பப்பத்திரம்} ரம், மனு.
விண்ணப்பதார்-மனுதார்,மன்னூட்டுக்காரர்
விண்ணப்பம்-மன்னூட்டம், மனு. [வித்தல்.
விண்ணப்பித்தல்-மனுச்செய்தல்,பணிந்தறி
விண்ணல்-காவட்டம்புல், மாந்தப்புல்.
விண்ணவர்கோன்
விண்ணவர்க்கிறை
விண்ணவர்தலைவன்
விண்ணவர்பிரான்
விண்ணவர்பெருமான் } இந்திரன், விண்கோ, விபுதர்கோன்.
விண்ணவன்-அருகன், தேவன்.
விண்ணன்-இவன் ஒருபிரபு; இவன்அரவின் மணி கொடுத்தபோது ஒரு புலவன் பாடியது. "கூர்ந்த வறுமையிடைக் கோளரவ மீன்றமணி, சார்ந்த புலவன் தனக்களித் தான்-வார்ந்ததரு,மேலைவிண்ணின் மண் ணில் விளங்கும் புகழ்படைத்த, சாலை விண்ண னுக்கிணையார் தாம்."
விண்ணை - கடுகுரோகிணி.
விண்ணைங்கு-மரவகையி லொன்று.
விண்ணைணக்காரன்-இடம்பக்காரன், ஆடம் பரமானவன், சாதுரியமாய்ப் பேசுபவன்.
விண்ணைணம்-நாகரிகம், மாசாலம், விஞ்ஞானம், வெட்கம், சாலக்கு, இடம்பம்.
விண்ணுகம் - கறிமுள்ளி.
விண்ணுலகம்} தேவலோகம்,சுவர்க்கம்.
விண்ணுலகு }
விண்ணுளார்-விண்ணோர், வானோர். [ப்பு.
விண்ணெனல்-ஓசைக்குறிப்பு,விரைவுக்குறி
விண்ணேறு-இடி,அனலேறு, வானேறு.
விண்ணோர்-தேவர், விண்ணுளார்,வானோர்.
விண்பகல்-மூங்கில், கழை, வேய்.
விண்மணி - சூரியன், கதிரவன், என்றூழ்.
விண்மீன்-நக்ஷத்திரம், தாரகை, [கோன்.
விண்முழுதாளி - இந்திரன், விண்ணவர்
விண்விண்ணெனல் - இசைக்குறிப்பீரடுக்கு மொழி,தெறித்துநோவெடுத்தற்குறிப்பு.
விண்வீழுக்கொள்ளி} உற்கை, ஆகாயத்தி
விண்வீழ்கொள்ளி } லிருந்து பூமியை நோக்கிவரும் ஒருவித ஒளி. [விதண்டை.
விதண்டம் - ஓர்பூட்டு, யானை, வாதவகை,
விதண்டவாதி-விதண்டாவாதி.[விதண்டை
விதண்டாவாதம் - வாதவகையிலொன்று,
விதண்டாவாதி - விதண்டவாதி.
விதண்டை - அகப்பை, தன்மத நிறுத்திப் பேசல், திருத்தம், பகை. [யம், பொய்.
விததம் - விசாலம், வீணைமுதலான வாத்தி
விததன்- பரத்வாஜன், இவன்,ஊதத்தியின் மனைவியிடத்தில் பிருஹஸ்பதிக்குப் பிறந்தவன், இவன் பிறந்தவுடனே தந்தை தாயாரிருவரும் இறந்துபோயினர், அப்போது மருத்து இவனை யெடுத்துப்போய் சந்தான மில்லாதிருந்த பூருவமிசத்துப் பரதனுக்குக் கொடுத்தார். இவன் புத்திரனை யுமன்யுனைப் பரதன் தத்தபுத்திரனைக் கொண்டான். தவத்தி, பண்டிதன்.
விததி - சமூஹம், விஸ்தாரம், கூட்டம், வரிசை.
விதத்தல் - மிகுத்துரைத்தல், சிறப்பாகப் பிரித்து எடுத்துரைத்தல், மிகுதல்.

விதத்தியம் - அசத்தியம். [வள், விதவை.
விதந்து - அமங்கலை, மாங்கல்ய நூலிழந்த
விதந்தோதுதல் - சிறப்பாக எடுத்துக்கிளத்
தல், மிகைபடக் கூறுதல்.
விதப்பு-அதிசயம்,சிக்கிரம், நடுக்கம், மதிலு
றுப்புளொன்று,மிகுதி, சிறப்பித்து எடுத்
துச் சொல்லுகை. [சொல்லுமொழி.
விதப்புக்கிளவி-விதப்புமொழி, சிறப்பித்துச்
விதப்புவிதி - சிறப்புவிதி,ஒன்றற்குரியவிதி.
விதம்-அறியப்படுதல், இனம், சம்பளம், சா
யல், சூத்திரம், செயல், தூளை, மாதிரி,
விலங்குணவு, வகை, உபாயம்.
விதம்பம் - கற்பரிபாஷாணம்.
விதரணபுருஷன் - விதரணன், விதரணி.
விதரணம் - அழகு, ஈகை, சுறுக்கு,போதல்
விடுதல்,விவேகம்,தயாளகுணம்,விதரணை.
விதரணன் - கொடையாளன், வாக்கு வன்
மையுள்ளவன், விவேகி, விதரணி.
விதரணி } விதரணன், அறிஞன்.
விதரணிகன் } [தியம்.
விதரணை - விவேகம், விதரணம், சாமர்த்
விதரம்-பிளப்பு, விடவு, வெடிப்பு.
விதரி-அறியப்படுதல், உணரப்படுதல்.
விதரிதம் - உருக்கப்பட்டவை.
விதர்க்கணம் - ஆலோசனை, சம்பாஷணை.
விதர்க்கம் - எண்ணம்,ஐயம்,நியாயம், பஞ்ச
மயகோசத்தொன்று,பெருக்கம்,ஆராய்வு
விதர்த்தி - சாலை, பந்தர், பீடப்பலகை.
விதர்ப்பணை - அகத்தியன் மனைவி, (உலோ
பா முத்திரை) தமயந்தி, ருக்மிணி.
விதர்ப்பம் - அஸ்திநாபுரத்துக்குத் தெற்கி
லுள்ள தேசம்.
விதர்ப்பன் - சியாமகன் புத்திரன், இவன்
அரசாண்டதேசம் விதர்ப்பமென்று
பெயர் பெறுவதாயிற்று. இவனுக்குக்
குசன், க்ருதன், ரோமபாதன் என மூவர்
புத்திரர்.
விதர்ப்பு - அச்சம்,நெருக்கம்,போர்,வெற்றி.
விதலம் - கீழேழுலகங்களுள் இரண்டாவது
இது இருளால் மூடப்பட்டிருக்கும்,பயற்
றம் பருப்பு, பெட்டி. [மேதினி, பார்.
விதலை - நடுக்கம், ஆகம்பிதம், விதறு, பூமி,
விதவளம் - அசைவு. [திற் புணர்கை.
விதவாகமனம் - கைம்பெண்ணைச் சோரத்
விதவாகாமி-கைம்பெண்ணைவிரும்புவோன்
விதவாவிவாகம் } கைம்பெண்ணை விவா
விதவாவேதனம் } கம் பண்ணல்.
விதவிடுதல் - சிறப்பித்துரைத்தல்.
விதவிதனல்-சிறுசுடுகைக் குறிப்பு.
வெட்சிவிருப்பன்-முருகன், கந்தன், குமரன், வெட்சித்தாரோன், வெட்சி மாலையன்.

வெட்ட - அதிகமான, மிகுந்த, தெளிவான.
வெட்டம் - வெளிச்சம், பிரகாசம், காந்தி.
வெட்டாரிவாள் - அரிவாள்வகை.
வெட்டல் - கொலைசெய்தல், தறித்தல், நால் வகை யூறுபாட்டிலொன்று, மெய்ப்பரிச மெட்டிலொன்று. [விடியற்றரம், விடியல்.
வெட்டவிடி - அதிகாலை, விடியற்காலம்,
வெட்டவெடித்தல் - கோபங்கொள்ளுதல்.
வெட்டவெளி - ஏகவெளி, வெளியரங்கம், வெட்டைவெளி, வெறுவெளி, திறந்த வெளியிடம், அவாந்தரமான இடம்.
வெட்டவெளிச்சம்-பெரும்பிரகாசம், வெளிப்படையானது.
வெட்டவெளியாக-வெளிப்படையாக, பகிரங்கமாக, வெளியரங்கமாக.
வெட்டாமூழி-நத்தைச்சூரி, குழிமிட்டான்.
வெட்டனம் காப்புக்கட்டல், வெட்டெனம்
வெட்டனவு-கடுமை, பலாத்காரம், வலாற்காரம், வெடுக்குத்தனம், வெட்டெனல்.
வெட்டாங்கிளி - வெட்டுக்கிளி, வெட்டுப் பூச்சி, வெட்டுவாலி.
வெட்டாட்டம் - தாய ஆட்டவகை. [நிலம்.
வெட்டாந்தரை - கடுந்தரை, காய்ந்திறுகிய
வெட்டி - இருவேலிச்செடி, வழி, வீண், மண்வெட்டி, ஓர்வகைக் கிராம ஊழியக்காரன், சவஞ்சுடுவோன், பயனின்மை, வெட்டிவேர், வெட்டியான். [த்தல்.
வெட்டிக்குப்பெறுதல்- இலவசமாகக்கிடை
வெட்டிச்சோறு - தண்டச்சோறு. [நிலம்.
வெட்டிநிலம்-தரிசு நிலம், சாகுபடியில்லாத
வெட்டிப்பயல் - உபயோகமில்லாதவன்.
வெட்டிப்பாடுதல் - ஒருபுலவன் தன்னைப் பழித்துக்கூறிய சொற்களாலன்றிப் பிறவாறு அதனைப் பழித்துப்பாடுதல்.
வெட்டிப்பேசல் - கண்டித்துப்பேசுதல், கடுமையாய்ப்பேசுதல், எதிர்த்துச் சொல்லுதல், இணக்கமறப் பேசுதல்.
வெட்டிப்பேச்சு - வீண் வார்த்தை.
வெட்டிமுறித்தல் - வெட்டிச்சாய்த்தல்.
வெட்டிமை - வெட்டியான்றொழில், கடுமை, சினம், வெட்டியாளுழியம்.
வெட்டியான் - பயிர்களை வெட்டியழிக்கும் பூச்சிவகை, சவஞ்சுடுவோன், பறையன், ஓர்வகைக்கிராமஊழியக்காரன், வெட்டி.
வெட்டிரும்பு - இரும்பு வெட்டுமோருளி, வெட்டுளி, ஓர் குழூஉக்குறி. [வார்த்தை.
வெட்டிவார்த்தை - வெட்டிப்பேச்சு, வீண்
வெட்டிவீரன்-சுத்தவீரன். [வேர், குழுவேர்.
வெட்டிவேர்-இருவேலிவேர், விலாமிச்சம்
வெட்டிவேர்ஞாணன்-காமன். [வீண்வேலை.
வெட்டிவேலை - பிரயோசனமற்ற காரியம்,
வெட்டு - ஒரூறு, வெட்டுதல், துண்டிப்பு, தையல்தூணி வெட்டுகை, மயிர்கத்திரிக்கை, ஆட்டக்காயை நீக்குகை, எதிர்பாராத அதிர்ஷ்டம், பகட்டு, வஞ்சனை, கைதவம், வெட்டென்னேவல்.
வெட்டுக்கட்டை-கிளையற்ற அடிமரம், தறித்த மரத்தினடி, கொட்டு.
வெட்டுக்கத்தி - கத்திவகை. [கன்று.
வெட்டுக்கன்று - வரைகன்று, பால்மறந்த
வெட்டுக்காயம்-வெட்டினலுண்டாகும்புண்
வெட்டுக்கிளி - வெட்டுப்பூச்சி, வெட்டாங்கிளி.
வெட்டுக்குருத்து-வெட்டுப்பட்ட இடத்தில் உண்டாகும் குருத்து.
வெட்டுணி - தப்பிலி, கீழ்ப்படியாதபிள்ளை, துஷ்டன், போக்கிரி.
வெட்டுண்ணல் - வெட்டப்படுதல்.
வெட்டுதல் - தோண்டுதல், தானியவளவில் தலைவழித்தல், தலைமயிரைக்கத்தரித்தல், துணி மூதலியன துண்டித்தல், மறுத்துரைத்தல், கடிந்து பேசுதல், ஆட்டக்காயைப் பயனற்றதாகநீக்குதல், வெட்டல், சீட்டுவெட்டுதல்.
வெட்டுத்தட்டு - பறையின்வாய்வார்.
வெட்டுத்தாக்கு - மண்ணெடுத்தகுழி, மண்ணைகழ்ந்த குழி. [படுதல்.
வெட்டுப்படுதல்-வெட்டுண்ணல், வெட்டப்
வெட்டுப்படை - வாட்படை.
வெட்டுப்பாக்குவெட்டி - பாக்கு வெட்டி வகையிலொன்று.
வெட்டுப்பூச்சி - வெட்டுக்கிளி, வெட்டாங்கிளி, வெட்டுவாலி.
வெட்டுமாறன் - வெறியுள்ள ஓர் வஸ்து.
வெட்டுரை - வெடுவெடுப்பான பேச்சு, வெட்டுரைப் பணம். [டுரை.
வெட்டுரைப்பணம் - கள்ளநாணயம், வெட்
வெட்டுவாய் - தறிவாய், பொருத்து.
வெட்டுவாலி - வெட்டுக்கிளி, வெட்டுப் பூச்சி.
வெட்டுவாள் - வெட்டுக்கத்திவகை.
வெட்டுவெட்டெனல் - கடுமைக்குறிப்பு, சினக்குறிப்பு, அச்சக்குறிப்பு, ஒளிவிடற்குறிப்பு.
வெட்டுவேர் - இலாமிச்சைவேர், இருவேலிவேர், வெட்டிவேர். [யமறப்பு, அறுவடை
வெட்டுவேளாண்மை - நெல் முதலியதானி
வெட்டுளி - ஓர் உளி, வெட்டிரும்பு.

வெட்டெனம் - காப்புக்கட்டல், கிராம தேவதைக்குத் திருவிழா ஆரம்பிக்கை, வெட்டனம்.
வெட்டெனல் - கடுமைக்குறிப்பு, மௌனமாய் இசைதற்குறிப்பு.
வெட்டெனவு - கடுமை, வன்மையானது,
வெட்டேறு - கருவிவகையி லொன்று.
வெட்டை - உட்டணம், உட்டினம், ஓர் நோய், கடினம் நிலக்கொதி, வெளி, வெறுமை, வெப்பம், ஈரசம், உலோக முதலியவற்றின் கடினத் தன்மை.
வெட்டைவெளி - வெறு வெளி, வெட்ட வெளி, திறந்தவெளி.
வெட்பகடம் - வெளிப்பகடம், வெளிப் பகட்டு, வெளிவேஷம்.
வெட்பாடம் - வாய்ப்பாடம். [ளாதி.
வெட்பாலை - ஓர் மரம், சூடசப்பாலை, அரு
வெட்பாலையரிசி - மருந்துச் சரக்கு வகை.
வெட்பாவட்டை - ஓர் பாவட்டஞ் செடி.
வெட்புகார் } கருக்கொள்ளா மூகில்,
வெட்புக்கார் } மழைநீரற்ற மேகம். [டம்.
வெட்புலம் - வெறுமையான இடம், வெற்றி
வெட்பூல் - ஓர் பூல், வெள்ளைப்பூலாச்செடி.
வெண்கடம்பு - கதம்பம், காரமம், மராம்.
வெண்கடல் - பாற்கடல், க்ஷீரசாகரம்.
வெண்கடன் - வெண்ணிலைக்கடன், வெண்ணிலை, ஓர்பத்திரம்.
வெண்கடுகு - அயமி, அயலி, கூர்கேவு.
வெண்கடுப்பு-கண்ணேய் வகையி லொன்று.
வெண்கண் - ஓர் மீன், வெங்கண்.
வெண்கண்ணனூர் - ஓர் சங்கப்புலவர்.
வெண்கதிரோன் } சந்திரன், திங்கள், மதி,
வெண்கதிர் } அம்புலி, சோமன்.
வெண்கமலம் - வெண்டாமரை, ஓர் நகரம்.
வெண்கமலை - சரசுவதி, கலைமகள், நாமகள்.
வெண்கரு - முட்டையின் வெள்ளைக்கரு.
வெண்கருவிளை - வெள்ளைச்சாக்கணம்.
வெண்கலபாத்திரம் - வெண்கலத்தால் வார்க்கப்பட்ட பாத்திரம், வெங்கல பாத்திரம், வெண்பாத்திரம்.
வெண்கலம் - செம்பும் வெள்ளீயமும் கலந்து உருக்கி யுண்டாக்கும் லோகம், ஈயம்.
வெண்கலி } கலித்தளையும்வெண்டளை
வெண்கலிப்பா } யும் விரவியும் அயற்றளை யருகியும் வந்து ஈற்றடிமுச்சீரானிறுவது.
வெண்கல் - வெள்ளைக்கல், சலவைக்கல்.
வெண்கவி - பொருளாழமில்லாத பாட்டு, வெண்பா, பொருட்பொலி விலாக்கவி.
வெண்களம்ர்-மருதநிலமாக்கள், வேளாளர்.
வெண்களிற்றரசு-ஐராவதம் வெள்ளையானை, சிலப்பதிகாரம் காண்க.
வெண்காக்கட்டான் } வெள்ளைக்காக்க
வெண்காக்கணம் } ணம், வெண்காவிளை
வெண்காசம் - கண்ணேயு ளொன்று.
வெண்காடர் - பட்டினத்தடிகள், திரு வெண்காடர்.
வெண்காடு - ஓர் சிவதலம், திருவெண்காடு.
வெண்காட்டுநங்கை - சிறுத்தொண்ட நாயனார் மனைவி, திருவெண்காட்டு நங்கை.
வெண்காந்தள் - காந்தகம். [வெங்காயம்.
வெண்காயம் - உள்ளி, ஓர் காயம், இராடம்,
வெண்காயவெடி-எறிவெடிவகையிலொன்று
வெண்காரம் - வெங்காரம். [சுண்ணும்பு.
வெண்காரை - வெள்ளைக்காரை, அரைத்த
வெண்காலி - மரவகை, வெட்காலி.
வெண்காவல் - வெறுங்காவல்.
வெண்காவிளை - வெள்ளைக்காக்கணம், வெண்காக்கணம்.
வெண்காவெளி - வெள்ளைப்பூண்டு.
வெண்காவேளை - வெண்காவிளை.
வெண்கிடை } ஓர் கிடைச்சி, வெள்ளை
வெண்கிடைச்சி } நெட்டி. [வாரம்.
வெண்கிழமை - வெள்ளிக்கிழமை, சுக்கிர
வெண்கிளி - வெள்ளைக்கிளி. [வகை.
வெண்கிளுவை - முள்ளில்லாக் கிளுவை, மர
வெண்கீரி - வெள்ளைக்கீரி, வெள்ளாகுலம்.
வெண்குங்குலியம் - வெள்ளைக்குங்குலியம்.
வெண்குடை - வெண்கொற்றக்குடை.
வெண்குட்டம் - வெள்ளைக் குட்டம். வெண்குஷ்டம். [வெண்ணெய்தல், குமுதம்.
வெண்குமுதம் - வெள்ளாம்பல், கைரவம்,
வெண்குன்றி - அதிமதுரம், வெள்ளைக் குன்றிமணி.
வெண்குன்று - முருகக்கடவுளுடைய திருப்பதிகளுள் ஒன்று, சுவாமி மலை [குட்டம்.
வெண்குஷ்டம் - வெள்ளைக்குட்டம், வெண்
வெண்கூதாளம் - ஓர் செடி, நீர்த்தாளி, வெண்டாளி. [சைப்பது.
வெண்கூவெண்பா - இனவெழுத்து மிக்கு
வெண்கெண்டை - கெண்டைமீன் வகை.
வெண்கொடி - வெற்றிக்கொடி, ஜெயக் கொடி, சரசுவதி, நாமகள்.
வெண்கொடிவேலி-வெள்ளைக்கொடிவேலி, கொடிவேலிவகை. [டாது.
வெண்கொல் - வெள்ளி, இரசிதம், வெண்
வெண்கொற்றக்குடை - தவளச்சத்திரம்.
வெண்கொற்றன் - ஓர் கடைச்சங்கப்புலவர். இவரது இயற்பெயர் கொற்றன். இப்பெ

யர் கொண்ட வேறு சிலர் இருத்தலின் வேற்றுமை நோக்கி வெண்கொற்றன். எனப்பட்டார்போலும்(குறுந்தொகை86)

வெண்கோடல் - வெண்காந்தள், காந்துகம்.

வெண்கோட்டம் } ஓர்செடி, அக்கரகாரம்
வெண்கோஷ்டம் }

வெண்சலசமுற்றுள் - சரச்சுவதி, சரஸ்வதி.

வெண்சலசம் - வெண்டாமரை.

வெண்சலசை - சரசுவதி, வெண்கொடி.

வெண்சாந்து - சுண்ணும்புச்சாந்து.

வெண்சாமரம் } வெள்ளைச்சாமரம்.
வெண்சாமரை }

வெண்சாரை - இந்திரியம், லெள்ளைச்சாரை.

வெண்சிவதை - பூடுவகையி லொன்று.

வெண்சிறுகடுகு - வெண்கடுகு.

வெண்சீர் - மூவசை சேரீற்றுச் செ ல், வெண்பாவுரிச்சீர்.

வெண்சீர்வெண்டளை - காய்முன்னேனும் பூ முன்னேனும் நேரொன்றிவரும்பந்தம்.

வெண்சுக்கான்கல் - ஓர் உபரசம்.

வெண்சுடர் - சந்திரன், வெண்கதிரோன், மதி, இந்து.

வெண்செந்துறை - இரண்டடிகள் தம்முள் அளபொத்து விழுமிய பொருளொழு கிய வோசையுமாய் வருவது.

வெண்டகரை - பூடுவகையி லொன்று.

வெண்டயம் - வெண்டையம்.

வெண்டலூர் - தூரர்.

வெண்டலை - தலையோடு, வெண்டலைக் கடன், வெண்கடன்.

வெண்டலைக்கடன் - வெண்ணிலைக்கடன்.

வெண்டல் - காய்தல், உலர்தல்.

வெண்டளை - வெண்பாவுக்குரிய பந்தம்; இது: வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளையென விருவகைப்படும்.

வெண்டாது - வெள்ளி, இரசிதம், திருநீறு.

வெண்டாமரை - தாமரைவகை.

வெண்டாமரைமகள் } சரச்சுவதி, வெண்
வெண்டாமரையாள் } சலசமுற்றுள்.

வெண்டாவி - பசிக்களை, அன்னக்களை.

வெண்டாழிசை - வெண்பா வினங்களிலொன்று; அது: மூன்றடியாய் முதலிரண்டடியு நாற்சீராயும், ஈற்றடியொன்றும் வெண்பாவைப் போல மூச்சீராயும் முடிவு பெற்று வேற்றுத்தளை விரவிவருவனவும், சிந்தியல் வெண்பா ஓர் பொருண்மேல் மூன்றடுக்கி வருவனவுமாம்.

வெண்டாழை - வெள்ளைத்தாழை, தாழை வகையி லொன்று.

வெண்டாளி - இடைச்சங்க மருவிய தமிழ் நூல்களுள் ஒன்று, இது இறந்துபட்டது.

வெண்டி - நெய்யும் பாவகை, வெண்டை, இன்மையால் வருந்துவோன், விறுதா.

வெண்டிக்காய்-வெண்டைக்காய்,வெண்டை

வெண்டு - உட்டுளை, கடுக்கன்புரி, கரும்பு.

வெண்டுக்காய் - வெண்டைக்காய்.

வெண்டுத்தம் - மயிற்றுத்தம், தூருசி. [ரை.

வெண்டுளசி - துளசிவகை, திருநீற்றுப் பச்

வெண்டுறை - வெண்பாவினங்களி லொன்று. அது: மூன்றடி முதலேழடியீறாகப் பின்பு நின்ற சிலவடிகளிற் சில சீரடி குறைந்து வருவது, ஆடற்குரிய பாட்டு.

வெண்டுறைநாதர் - திருவெண் டுறையிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

வெண்டேர் - கானல், பேய்த்தேர், மசரதம்.

வெண்டேர்ச்செழியன் - இடைச்சங்க காலத்தில்அரசாண்டுகொண்டிருந்தபாண்டியன்.

வெண்டைக்காய் - வெண்டிக்காய்.

வெண்டையம் - ஓர் சிறுமணி, குதிரை முதலியவற்றின் காற்சதங்கை, வீரர்காலணி, வெண்டயம்.

வெண்டொழுநோய் - வெண்குட்டம்,வெண் குஷ்டம், வெள்ளைக்குட்டம்.

வெண்டோட்செழியன் - இடைச்சங்கம் இருத்திய பாண்டியன். [வெண்காந்தள்,

வெண்டோன்றி - வெள்ளைத்தோன்றிமலர்.

வெண்ணகை - வெள்ளரியபல், புன்னகை.

வெண்ணஞ்சு - ஊன்விசேடம், நிணம்.

வெண்ணத்தை - நத்தைவகை.

வெண்ணரி - நரிவகை. (புறநானூறு,)

வெண்ணுங்கு - ஓடைக்கொடி, ஓர் மரம்.

வெண்ணுந்தை - ஓர் ஈந்தை, வெள்ளாந்தை.

வெண்ணுயுருவி - ஓர் செடி, நாயுருவிவகை.

வெண்ணெரி - பூடுவகையி லொன்று.

வெண்ணெரை - ஓர்கொக்கு, வெள்ளைநாரை.

வெண்ணெவலன் - திருவானைக்காவி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமான்.

வெண்ணெவல் - நாவல்வகையி லொன்று.

வெண்ணெ - சோணாட்டி லோரூர் இது கரிகாற் பெருவளத்தான், சேரமான் பெருஞ் சேரலாதனை வென்றவூர். இதற்கு வெண்ணிக்கூற்றம் எனவும் பெயர். தற்காலம் கோவில் வெண்ணி என்று வழங்குகிறது.

வெண்ணிக்குயத்தியார் - கரிகாற் பெருவளத்தானைப் பாடிப் பரிசு பெற்ற புலவர்.

வெண்ணிலம் - மணற்றரை, வெறுந்தரை.

வெண்ணிலவு - சந்திரிகை, சந்திரகிரணம்.

வெண்ணிலுவை - மென்புரட்டு, சொக்கக்

கடன் பாக்கி, கைம்மாற்றுக்கடன்.

வெண்ணீலை } கைம்மாற்றுக்கடன்,
வெண்ணீலைக்கடன் } ஈடுகாட்டாதுவாங்கும்கடன், வெண்ணீலுவை, வெண்கடன்

வெண்ணிறக்கிரகம் } சந்திரன், சுக்கிரன்.
வெண்ணிறக்கோள் }

வெண்ணிறம் - வெள்ளை நிறம், வெள்ளை நூரை.

வெண்ணீர் - சுக்கிலம், இந்திரியம், தாது.

வெண்ணீறு - திருநீறு, விபூதி, பூதி. [று.)

வெண்ணெட்டி - வெண்கிடை. (புறநானூ

வெண்ணெய் - உருக்கா நெய்.

வெண்ணெய்க்கூத்தஜீயர்-வீரவல்லி கிருஷ்ணமாசாரியர். தேசிகரை யாச்சிரயித்தவர்.

வெண்ணெய்ச்சுரு - ஓர்வகைச் சுருமீன்.

வெண்ணெய்தல்-ஓர் நீர்ப்பூ, வெள்ளாம்பல்.

வெண்ணெய்த்தாழி - வெண்ணெய் வைக்கும்சட்டி, வெண்ணெய்த்தாழி உற்சவம்.

வெண்ணெய்த்தாழியுற்சவம் - ஓர் உற்சவம், கிருட்டினன் வெண்ணெய்திருடிய லீலை சம்பந்தமாக ஆலயத்தில்நடைபெறுவது.

வெண்ணெய்நல்லூர் - (1) சுந்தர மூர்த்தி சுவாமிகளைச் சிவபெருமான் தடுத்தாற் கொண்டதும் மெய்கண்டதேவர் அவதரித்ததும் தென்னற்காடு ஜில்லாவிலுள்ளதுமான சிவதலம். (2) கம்பரை யாதரித்த சடையப்ப முதலியார் வாழ்ந்ததும் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ளதுமான ஓர் ஊர்.

வெண்ணெய்நல்லூர்ச் சடையப்பமுதலியார் - இவர் சைவ வேளாளர் மரபிலுதித்தவர். பெருங்கொடையாளி. கம்பர் குமாரராகிய அம்பிகாபதிதிருமணத்தில்முதலியார் ஒருபுறத்தில் வேற்றூர்போல இருந்தனர். கம்பர் மனைவியார் கம்பரைப்பார்த்து எங்களண்ணலை இவ்விடம் இருத்தலாமோ என்றனர். கம்பர் விடையாக முதலியாரை நாண்வைக்கத்தகுந்தஇடத்தில் வைக்கப் போகிறேன் என்று கூறி இராமாயணத்தில் புகழ்ந்து பாடப்பெற்றவர். இவர் மூவேந்தர்க்கும் அவரின் பரிசனங்களுக்கும் பரிசளித்துத்திரிகர்த்தர் எனப் பெயர்பெற்றவர். இவர்மீது அநேக தனிப்பாடல்களுள்ளன. எழுபது கம்பர் அரங்கேற்றிய காலத்து இவருடனிருந்து சேதிராயர் என்னும் ஓர் வேளாளப்பிரபு கேட்டனர் என்பர். ஓர் நாள் புலவர்பலர் இவரைக்காணவருகையில் இவர் சிதறுண்டு கிடந்த நெற்களைப் பொறுக்குதல்பார்த்து நெல்லைப்பொருக்குபவர் நமக்கென்ன கொடுக்கப் போகிறார் என்று எண்ணினர். அவர்கள் எண்ணத்தைக்குறிப்பாலுணர்ந்த முதலியார், அவர்களை எதிர்கொண்டழைத்துப் பலவிதமான உபசாரம் செய்து இலையில் பொன்னமுது பொற்கறி படைக்க அப்புலவர்கள் மயங்கக்கண்டு அவற்றைக் குப்பையில் வீசியெறியக் கட்டளையிட்டு, அவர்க்கு வேறு அன்னமிட்டு உண்பித்தனர். புலவர்கள் போஜனம் அருந்தி வாய்பூச வெளியில் வந்து பொற்குவியல் குப்பையில்பார்த்து ஒருவருக்கொருவர்வாதிடத் தொடங்கினர். அதனை முதலியார் பார்த்து எச்சிற் குப்பைக்கு என் வாதாடுகிறீர்களென்று அவர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்தனுப்பினர். இதனை ''பொன்னெலமுதும் பொறிக்கறியுந்தான் கொணர்ந்து, நன்னுவலர்க்களித்த நாணயக்கை'' என்பதினுலறிக. இவரே கம்பராமாயணம் பாடச் செய்தவர்.

வெண்ணெய்மலை - இது கொங்கு நாட்டில் உள்ளசுப்பிரமணியஸ்தலங்களுள் ஒன்று, கருவூருக்குச்சமீபமுள்ளது. இதுமுருகக் கடவுளுக்குமிகவும் விருப்பமானஸ்தலம்.

வெய்ணெய்வெட்டி - உபயோக மில்லாதவன், பயங்காளி, அதைரியவான்.

வெண்ணேை } வெண்ணெய்நல்லூர்.
வெண்ணேயூர் }

வெண்ணெச்சி - வெள்ளை நொச்சி.

வெண்ணேை } ஓர் கண்ணேை, வெக்கப்பு.
வெண்ணேைவு }

வெண்துளசி - வெண்டுளசி, அற்கம்.

வெண்படலிகை-வெள்ளித்தட்டு(சீவகசிந்.)

வெண்பட்டு - வெள்ளை நிறமுள்ள பட்டு.

வெண்பதம் - இளம்பதம், இளம்பாகம்.

வெண்பலி - சாம்பல், சாம்பர், அடலை.

வெண்பா - ஓர்பா; அஃது: ஈற்றடிமுச்சீரடியாவும் ஏனையடி சாச்சீரடியாகவும் பெற்றுக் காய்ச்சீரு மகவற்சீரும் வெண்சீர் வெண்டளையு மியற்சீர் வெண்டளையுங் கொண்டு நாள், மலர், காசு,பிறப்புஎனும் வாய்பாட்டால் முடிவது அவ்வெண்பா, குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா என ஐவகைப்படும்.

வெண்பாக்கநாதர் - திருவெண்பாக் கத்தி லே கோயில் கொண்டிருக்கும் சுவாமி யின் பெயர்.
வெண்பாசி - பாசிமணிவகை.
வெண்பாட்டம் - கோடைகால மழை.
வெண்பாட்டு-வெண்பா,முதற்பா, வெள்ளை.
வெண்பாண்டு - நோய்வகையி னொன்று.
வெண்பாப்பாட்டியல் - குணவீர பண்டி தரால் இயற்றப்பட்ட பாட்டியல் நூல்.
வெண்பாப்புலி - ஓர் புலவர், வெண்பாப் பாடுதலில் வல்லவன் என்னும் பட்டம்.
வெண்பாமாலை - புறப்பொருள் வெண்பா மாலை, ஓர்பா மாலை.
வெண்பாவுரிச்சீர் - வெண்பாவுக்குரியவாய் வரும் நேரீற்று மூவசைச்சீர்.
வெண்பாவை - சரஸ்வதி, வெண்பூமான்.
வெண்பிறப்பு-மக்கட்பிறப்பு, வெள்ளியுயிர்.
வெண்பிறை - வெள்ளிய பிறைச் சந்திரன்.
வெண்பு - வெண்ணிலம், வெளிப்பு.
வெண்புணர்ச்சிமாலை-தண்டகமாலை; அது: வெண்பாவான் முந்நூறு செய்யுட்கள் கூறப்படுவது.
வெண்புழுக்கல் } இளம்புழுக்கலரிசி,வெறு
வெண்புழுக்கு } வெண்சோறு.
வெண்பூகன் - ஓர் சங்கப் புலவர்.
வெண்பூதியார் - ஓர் சங்கப்புலவர்.
வெண்பூமான் - சரஸ்வதி, வெண்பாவை.
வெண்பொங்கல் - சித்திரான்னவகை.
வெண்பொடி-திருநீறு, வெண்ணீறு,விபூதி, பூதி, வெள்ளைப் பொடி.
வெண்பொற்கட்டில் - வெள்ளிக்கட்டில்.
வெண்பொன் - வெள்ளி, இரசிதம், சுக்கி ரன்.
வெண்பொன்மலை-கைலாசகிரி, இரசிதகிரி.
வெண்மட்டம் - கொத்துவேலை யில்லாத செய்கை, சாதாரணவேலை, மேலெழுந்த வாரி, மட்டசுத்தம்.
வெண்மட்டவேலை - ஒப்புரவான வேலை.
வெண்மணல் - வெள்ளைமணல்.
வெண்மணி - வெள்ளைவிழி, ஒரூர், முத்து.
வெண்மணிப்பூதி } ஓர் சங்கப்புலவர்
வெண்மணிப்பூதியார் }
வெண்மதி - வெள்ளைச்சேம்பு, சந்திரன்.
வெண்மயிர் - நரைத்தமயிர்,வெண்சாமரை.
வெண்மலை - கைலை, வெள்ளிமலை.
வெண்மறி - வெள்ளாடு, சாகம். [புல்லறிவு
வெண்மை-அறிவின்மை,இளமை வெள்ளை,
வெண்மொந்தன் - வாழைவகையினொன்று.
வெண்வட்டியார் - ஓர் சங்கப்புலவர்.

வெதரி - இலந்தை, வதரி, பதரி.
வெதரிவனம் - வதரியாச்சிரமம்.
வெதிரம் - செவிடு, மூங்கில், வெதிர்.
வெதிரன் - செவிடன், செவிமந்தன்.
வெதிரிகவனம்-வெதிரிவனம்,வதிரியாச்சிர மம், இதுவே பதரிகாச்சிரமம் எனவும் படும். இது இமயமலைக்கு அருகிலுள்ள இலந்தைவனம். இதில் பல இருடிகள் வசித்துப் பல புராணுதிகள் கேட்டனர். வியாசரும் இவவிடம் இருந்தனர். வியா சர் இவ்விடத்திலிருந்ததால் அவர் வாத ராயணன் என்னும் பெயரைப் பெற்றார். இவ்விடத்தில் மஹாவிஷ்ணுவின் ஆல யம் இருக்கிறது.
வெதிரேகம் - எதிர்மறை, பிரிவு விலக்கு, வேறுபாடு, வியதி ரேகம்.
வெதிரேகவனுமானம் - ஓரளவைப் பிர மாணம்.
வெதிரேகவியாத்தி - சாத்தியம், ஏது என் னும் இரண்டின் அபாவரூபமான வியாத்தி
வெதிரேகாலங்காரம்-உவமான வுபமேயத் திற்பிரிவு தோன்றச் சொல்லுவதாகிய ஓரலங்காரம், வியதிரேகம். [விரிமலர்.
வெதிர்-செவிடு,மூங்கில்,நடுக்கம், வெதிரம்.
வெதிர்ங்கோல் - மூங்கிற்கோல். [தல்.
வெதிர்த்தல்- அஞ்சுதல், சினத்தல், நடுங்கு
வெதிர்ப்பு-கலக்கம், ஓர் சினக்குறிப்பு, நடுக் கம், அச்சம். [தால் தேகம்இளைத்தவன்.
வெதுக்கலன் - வெதும்பினவன், துக்கத்
வெதுக்கல் - வெதுப்பல், வெதும்பலன்.
வெதுப்படக்கி - குப்பலை, பேய்மருட்டி.
வெதுப்பம் - உஷ்ணத்தாலுண்டாம் வயிற் றுப்போக்கு நோய், வெப்பம்,இளஞ்சூடு.
வெதுப்பல் - வாட்டல், மெலிவித்தல்.
வெதுப்பி - ஒற்றைப்பேய் பிரட்டி.
வெதுப்பு - சுரம், வெதுப்பென்னேவல், வேம்பு, மாட்டுநோய்வகை, சுரநோய் வகை, வெதுப்பம்.
வெதுப்புதல் - வாட்டுதல், பழுக்கக்காய்ச் சுதல், வாடப்பண்ணுதல்.
வெதும்பல் - சினக்குறிப்பு, வாடல்.
வெதும்புதல் - வாடல், இளஞ்சூடாதல், கொதித்தல், மனங்கலங்குதல், சினங் கொள்ளுதல். [அரைகுறையாகவேதல்.
வெதுவெதுத்தல் - இளஞ்சூடா யிருத்தல்,
வெதுவெதுப்பு-இளஞ்சூடாயிருத்தல், இள ஞ்சூடு, வெதுவெதுத்தல்.
வெதுவெதெனல் - இளஞ்சூடாதற்குறிப்பு.
வெந் - முதுகு, வெரிந்,புறம்,வென்,அபரம்.

வெந்த பிகிரி - சுடுபிணம். [று·
வெந்தயச்சம்பா-சம்பாநெல் வகையினொன்
வெந்தயம் - பீதபீஜம், வெந்யதைம்.
வெந்தல் - வெந்தயம்,வெந்தியம், கருகியது.
வெந்தழல் சிவந்தெரியும் நெருப்பு.
வெந்தித்தல் - கொதித்தல்,சினத்தல், சூடாதல், ஒற்றுமையாதல், கட்டுதல்.
வெந்திப்பு - கொதிப்பு, சினப்பு, கட்டு.
வெந்தியம் - வெந்தயம், மேதி, மேந்தி, மேந்திகை.
வெந்திறல் - பெருவலி, வெந்திப்பு.
வெந்து - கிஷை, சுற்றம், பந்து, உறவு.
வெந்துசனம் - சுற்றத்தார், இனத்தார், பந்துசனம், உறவின் முறையார், உறவர்.
வெந்துண்டன் - திருதராட்டிரன் குமாரன்.
வெந்துப்பு - பெருவலி, வெந்திறல்.
வெந்துவிதன் - ஆயர்பாடியில் பலராமருடன் யுத்தஞ்செய்து மாய்ந்த ஒரு வானர வீரன்.
வெந்தை - பிட்டு, நீராவியிலே புழுங்கியது.
வெந்தையம் - வெந்தயம். [வெண்காந்தன்.
வெந்தோன்றி - ஆகாயக்கருடன் கிழங்கு,
வெந்நிடுதல் - புறங்காட்டல், தோற்றோடுதல், ஆண்மையில்லாரியல்பு.
வெந்நீர் - சுடுநீர், வெவ்விய நீர்.
வெப்பசாரம் - மனத்துயர், வெக்காளம், கோபம், பொறுமை, அழுக்காறு.
வெப்பத்தி-வறட்பூலாங்கிழங்கு, வறட்பூலா.
வெப்பம் - ஆசை, மனத்துயர், வெந்திப்பு, வெம்மை, விருப்பம், உஷ்ணம், சுரநோய்
வெப்பித்தல் - வெம்மைகொள்ளுதல், வெம்மையை யுண்டாக்குதல், சூடாக்குதல், மனக்கொதிப்பு உண்டாக்குதல்.
வெப்பியாரம் - வெப்பசாரம், மனத்துயர், வியசனம், வாட்டமடைதல். [கம்.
வெப்பிராளம் - மனக்குழப்பம், மனக்கலக்
வெப்பு-வெப்புநோய், மனத்துயர், வெம்மை.
வெப்புக்கட்டி - வெப்பினல் வயிற்றிலுண்டாகுங்கட்டி. [ச்சல், வெப்புநோய்
வெப்புக்கொதி - வெப்பினலுண்டான காய்
வெப்புநாற்றம் - துர்நாற்றம், நீ நாற்றம்.
வெப்புநோய் - வெப்புக்கொதி, வெப்பு.
வெப்புப்பாவை } வெப்புக்கட்டி
வெப்புப்பாவைக்கட்டு }
வெப்புவெப்பெனல் - கோபக்குறிப்பு.
வெப்புள் - வெம்மை, வெப்பம், வெப்பு.
வெம்பல் - பெருங்கோபம், வாடல்,விம்மல், வெக்காளித்தல், வெம்பலானது.
வெம்பளிக்கை-இறுமாப்பு, வெம்பிளிக்கை.
வெம்பறலை - சரபம், எண்காற்புள். [வன்.
வெம்பிளாந்தி - எமிலாந்தி, மனங்குழம்பிய
வெம்பிளிக்கை - அகங்காரம், அலட்சியம்.
வெம்புதல் - கலங்குதல், சினத்தல்,வாடுதல், வெக்காளித்தல், உக்கிரமாதல், மனம் புழுங்குதல், அகாலத்தில் பழுத்தல், விரும்புதல்.
வெம்புவேட்கை - எரிகின்ற காமம்.
வெம்மணல் - ஓர் நரகம், வாலுகப்பிரபை.
வெம்மை - ஆசை, உட்டணம், எண்வகை யூறினொன்று, கடுமை, வெப்பம், கோபம்.
வெயர் - வேர்வைநீர், வியர்வைநீர், வேர்.
வெயர்த்தல் - வேர்வை நீருண்டாதல்.
வெயிலுந்தரவிந்தம் - தாமரை, பங்கஜம்.
வெயிலெறித்தல் - வெயிலுறைத்தல், ஒளி வீசல், வெப்பம் தாக்குதல்.
வெயில் - ஒளி, சூரியகிரணம், சூரியன்.
வெயில்சீக்கி - குடை, சத்திரம்.
வெயிற்குளித்தல் - வெயிலடியுணல், வெயிலிற் காய்தல், சூரியஸ்நானம்.
வெயிற்குளிர்தல் - சூரியகிரணம் வெம்மை தணிதல், மாலைநேரம்.
வெய்து - வெம்மையுடையது, வெய்யது, துக்கம், வெப்பம், விரைவு.
வெய்துபிடித்தல் - வேதுபிடித்தல்.
வெய்துயிர்த்தல் - நெடுமூச்சுவிடல், நெட்டுயிர்த்தல்.
வெய்துரை - கடுஞ்சொல், வன்சொல்.
வெய்துறல் - அச்சக்குறிப்பு, சினக்குறிப்பு, துன்பமடைதல்.
வெய்துறுதல் - மனங்கலங்குதல், துன்புறுதல், சினக்கொள்ளுதல். [குறிப்பு.
வெய்தெனல் - விரைவுக்குறிப்பு, வெப்பக்
வெய்தென்றல் - விரைவுக் குறிப்பு. [குரிய.
வெய்ய - வெப்பமான, கொடிய, விரும்புதற்
வெய்யது - பொல்லாதது, வெம்மையானது, கொடியது, சூடானது, தாங்கமுடியாதது.
வெய்யநீர் - வெந்நீர்.
வெய்யவன் - கொடியோன், சூரியன், மிருகசீரிடம், விருப்புற்றோன்.
வெய்யள் - விருப்ப முடையவள். [ஜலம்.
வெய்யனீர் - சூரிய கிரணங்களாற் சூடான
வெய்யன் - கொடியவன், விருப்பமுள்ளோன், வெப்பமுள்ளோன்.
வெய்யில் - சூரியகிரணம், வெயில்.
வெய்யில்தாழ } மாலையில், சாயங்காலத்
வெய்யிற்குளிர } தில், சாயந்திரத்தில்.
வெய்யிற்சூடு - சூரியவெப்பம், சூரிய உஷ்ணம், நண்பகலிலுண்டாஞ்சூடு.

வெய்யோன்-வெய்யன், வலது நாசித்துவாரம், மிருகசீருடம், சூரியன், விரும்பியவன், கொடியவன்.
வெரிந்-முதுகு, வெங், புறம்,அபரம், வென்.
வெரிமருந்து - பாஷாணம், பாடாணம்.
வெரீஇ - வெருவி, அஞ்சி, பயந்து.
வெரீஇய - வெருவின, அஞ்சின, பயந்த.
வெரு - அச்சம், பயம், வெருவந்தம். [ணம்.
வெருகடி-பூனையின் அடி, வெருகடிப்பிரமா
வெருகம் - விலங்கின் வாலின் கீழிடம்.
வெருகிடதர் - மானிடர்க்குப் பிதுர்க்கள்.
வெருகு - ஆண்பூனை, பூனை, மெருகு, காட்டுப் பூனை, வெண்கிடை. [கிள்ளுமளவு.
வெருக்கடிப்பிரமாணம் - மூன்றுவிரலாற்
வெருக்கொள்ளல் } அச்சமுறல், பயங்
வெருக்கொள்ளுதல் } கொள்ளுதல்.
வெருக்கொள்ளி-பயங்காளி, பயங்கொள்ளி.
வெருக்கோள் - அச்சங்கொள்ளுதல். [தல்.
வெருட்சி- அச்சம், பீதி, மயக்கம், வெருளு
வெருட்டல் - அச்சமுறுத்தல், மயக்கல்.
வெருட்டி -அச்சம், அச்சுறுவிப்போன், வெருட்டுவது.
வெருட்டு - அச்சுறுத்தல்,வெருட்டென்னேவல், ஓட்டுகை, பயமுறுத்தல்.
வெருட்டுதல்-வெருட்டல், அச்சமுறுத்தல், பிரமிக்கச்செய்தல்,மிருகங்களோட்டுதல்.
வெருணை - பாவட்டை, தொவசலுகம்.
வெருவந்தம் - அச்சம், வெரு, வெருட்சி.
வெருவரல் - அச்சந்தோன்றல்,பீதிகாணல்.
வெருவருநிலை-பகைவர்அம்பு தன்மார்பைப் பிளப்பவும் பூமியில் விழாமல் நின்ற வீரனது நிலையைக்கூறும் புறத்துறை.
வெருவலர் - பகைவர், மேவலர், ஒன்னர்.
வெருவல் - அஞ்சுதல், வெருவுதல்.
வெருவு - அச்சம், வெருவென்னேவல்.
வெருவுதல்-அஞ்சல், அஞ்சுதல், வெருவல்.
வெருளல் - அஞ்சுதல், வெருளுதல்.
வெருளார்த்தல் - திகைத்தல், மயங்கல்.
வெருளி - அச்சமுடையது, அச்சமுறுவிப்பது, வெருட்சி, செல்வச்செருக்கு.
வெருளிகட்டுதல் - அச்சுறுத்தல், வெருட்சிக்குறி, பயங்காட்டல்.
வெருளுதல் - அஞ்சுதல், மருளுதல்.
வெருள் - அச்சம், உன்மத்தம், மயக்கம், வெருளென்னேவல், பயம், மனக்கலக்கம், மனந்திகைத்தல்.
வெருள்வு - வெருட்சி, வெருவந்தம்.
வெரூஉ - அச்சம், பயம், பீதி, வெருவு.
வெலமர் - தெலுங்கநாட்டு உழவர் வகை.
வெலவெலக்க - திகைக்க, கைகாலுதற.
வெலவெலத்தல் - கலைத்தல், கைகால் உதறுதல், நடுக்கமுறுதல்.
வெலி - நீக்கல், புறம்பாக்கல். [மூக்கான்.
வெலிகம் - கற்றுழை, குமரி, கன்னி, கிளி
வெலிகாரம் - வெண்காரம்.
வெலித்தி-கடித்தமில்லாதது, சீவல், ஒல்லி, வெள்ளோசை.
வெலீஇயோன் - வெல்வித்தோன். [புகழ்.
வெல்புகழ் - போரில் வெற்றியாலுண்டாம்
வெல்லப்பாகு - வெல்லப்பாணி.
வெல்லம் - கரும்பின்கட்டி.
வெல்லல் - கசித்தல், சயித்தல், வெல்லுதல், வாயுவிளங்கம்.
வெல்லி - சிற்றேலம், சாமர்த்தி.
வெல்லுதல்-மேற்கொள்ளல், மேம்படுதல், செயித்தல்.
வெல்லுமா-புலி,உழுவை,கொடுவரி,தாக்கு.
வெல்வி - வெற்றி, வென்றி, ஜெயம்.
வெல்வெட்டு - பளபளப்புள்ள துணிவகை.
வெவ்வர் - வெம்மை, வெப்பம், வெப்புள்.
வெவ்விடாய் - கடுந்தாகம். [கொடியது.
வெவ்விது - வெய்து, வெய்யது, சூடானது,
வெவ்வியன் - கோபி, வெப்பமுடையோன்.
வெவ்வினை - போர், கொடியவினை.
வெவ்வுயிர்த்தல் - வெருமூச்செறிதல்.
வெவ்வுரை - கடுஞ்சொல், வன்சொல்.
வெவ்வுழவு - அடையாதவுழவு, மேலுழவு.
வெவ்வெஞ்செல்வன் - வெம்மையுடையதும் விரும்பப்படுவதுமாகிய பால சூரியன், இளங்கதிரோன்.
வெவ்வேகம் - கொடியநஞ்சு, வெவ்விடம்.
வெவ்வேறாக - தனித்தனியாக.
வெவ்வேறு - வேறுவேறு, தனித்தனி.
வெழுமெனல் - வழுவழுப்புக்குறிப்பு.
வெளி - ஆகாயம், புறம், மறைப்பில்லா வெளி, வெளிப்படை, பகிரங்கம், உபாயம், ஏகவெளி. [முன்பாகம்.
வெளிக்கட்டு - வீட்டிற்புறக்கட்டு, வீட்டு
வெளிக்காட்சி - வெளியானதோற்றம்.
வெளிக்கிடல் - புறப்படல், பயணப்படல்.
வெளிக்குப்போதல் - மலங்கழித்தல்.
வெளிக்கோள் - வெளியாக்குகை. [கம்.
வெளிசங்கம் - வெளிப்படை, வெளியரங்
வெளிசம் - தாண்டில், வளிசம். [டை.
வெளிச்சக்கெண்டை - வெளிச்சைக்கெண்
வெளிச்சங்காட்டுதல் - ஒளிகாட்டுதல்.
வெளிச்சங்காணுதல் - விடியற்காலமாகை.
வெளிச்சமாதல் - விளங்குதல், விடிதல்.

வெளிச்சம் - பிரபை, வெளியரங்கம், ஒளி.
வெளிச்சி - மரவகை, மீன்வகை, விளாம் பிசின், ஓர் வகைச் செவிநோய்.
வெளிச்சை } கெண்டை மீன்
வெளிச்சைக்கெண்டை } வகை.
வெளித்தட்டு - பொறுப்பின்றிக் காரிய நடத்தல், மேற்றட்டு.
வெளித்தல் - தெளிதல், வானம் வெளி வாங்குதல், விளங்குதல், வெறிதாதல், வெளிப்படையாதல், தந்திரம் முதலியன வெளியாதல், விடிதல், பயனிலதாதல்.
வெளித்தோற்றம்-உள்ளொன்றுபுறம் பொன்றுயிருப்பது, உற்பத்தி,பிரத்தியட்சம்.
வெளிநாடு - அன்னியதேசம், பரதேசம்.
வெளிநாடுதல் - வெளியே காணப்படுதல்.
வெளிநாட்டம் - புறநோக்கம், புறநாட்டம்.
வெளிபொருள்-வெளியரங்கமான பொருள்.
வெளிப்பகடம் - உள்ளிருப்பதை மறைத்து நடப்பது, வீண் பகட்டு, வெளிப்பசப்பு.
வெளிப்பகட்டு } வெளிவெருட்டு, வெளி
வெளிப்பசப்பு } மயக்கு.
வெளிப்படல் } தோற்றல், தோன்றல்,
வெளிப்படுதல் } வெளிவருதல்.
வெளிப்படுத்தல் } அறிவித்தல், வெளி
வெளிப்படுத்துதல் } யாக்கல், தெரிவித்தல், காட்டுதல், வெளியேவரச்செய்தல், பிரசுரித்தல், புத்தகம் பதிப்பித்தல், வெளியேற்றுதல்.
வெளிப்படை - வெளியரங்கம், வெளிப்படுதல், தெளிவானது, பகிரங்கம்.
வெளிப்படைச்சொல் - இயல்பாய் விளங்கி நிற்குமொழி, நிலம், நீர், தீ, முதலியனவாக இயல்பாற் பொருளுணர நிற்குஞ் சொல், பகிரங்க வார்த்தை.
வெளிப்படையுவமம் - வினையும் பயனும் உவமை யுருபும் வெளிப்பட விளங்கி நிற்குமுவமம்.
வெளிப்பாடு - காணிக்கை, கையுறை, தோற்றம், வெளிப்படை, பகிரங்கம்.
வெளிப்பு - விளக்கம், வெளித்தல், வெளியிடம், வெளிப்புறம், விளக்கமாதல், தெளிவு, வெளியானது.
வெளிப்பொருள் - வெளிபொருள்.
வெளிமடை - புறமடை, கோபிலுக்கு வெளியிலுள்ள தெய்வங்களுக்குப் படைக்கும் பலி, பின்மடை.
வெளிமயக்கு-வெளிக்காட்சியால் ஏற்படும் புத்திமயக்கம், வெளிப்பகட்டு.
வெளிமனிதன் - அன்னியன், அறிமுகமில்லாதவன், அயல் நாட்டான்.
வெளிமான்-பெண்மான், பிணை,மான்வகை பெருஞ்சித்திரனாற் பாடப் பட்டோன். இச்சிற்றரசன் மிக்க கொடையுளோன், இவன் இறக்கும்போது பெருஞ் சித்திரனுக்குப் பரிசு கொடுக்குமாறு தம்பிக்கு ஆஞ்ஞை செய்திருந்தான். அவன் கூறிய அளவிற் சிறிது கொடுப்பப் பெருஞ் சித்திரனர் ஏற்றுக்கொள்ளாமற் போய்க் குமணனை யடைந்து, யானையும் பொன்னும் பெற்று, மீண்டுபுக்கு அவனை நோக்கி, 'இரப்போர்க்குக் கொடுப்பவரில்லையுமல்லர், யான் பெற்றுவந்து ஊர்ப்புறத்தே கட்டியிருக்கும் யானை குமணன் தந்த பரிசில் யான்போய் வருகிறேன்' என்னுங் கருத்தினையுடைய,
"இரவலர் புரவலை நீயு மல்லை, புரவல ரிலவர்க் கில்லையுமல்ல, ரிரவல ருண்மை யுங் காணினி யிரவலர்க், கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க், கடிமரம் வருந்தத் தந்தியாம்பிணித்த, நெடுநல் யானையெம்பரிசில், கடுமான்ரோன்றல் செல்வல் யானே" என்னும் பாடலைக் கூறிப்போயினர்.
வெளிமுகடு-அண்டத்தின் புறவெல்லை.
வெளிமூலம் - மூலநோய்வகையி லொன்று.
வெளியடை-திரைச்சீலை. [தெளிவானது.
வெளியரங்கம் - வெளிப்படை, பகிரங்கம்,
வெளியாகுதல்-வெளித்தல், வெளிவருதல்.
வெளியாக்கல் } விளக்குதல், வெளிவரப்
வெளியாக்குதல் } பண்ணுதல்.
வெளியாடை-தோரணம்,புறவுடை.
வெளியாதல்-வெளிவருதல்,வெளிப்படுதல்.
வெளியார் - மௌட்டியர், அயலார்.
வெளியிடல் } வெளிவாங்குதல், வெளிப்
வெளியிடுதல் } படுத்துதல்.
வெளியீடு-நூற்பிரசுரம், நூற்பதிப்பு.
வெளியேறுதல்-வீட்டைவிட்டு ஓடிப்போதல், ஆபத்தினின்று தப்பித்து வருதல்.
வெளிராசி-மேடம்,கடகம், துலாம், மகரம்.
வெளில் - அணில், கட்டுத்தறி, தயிர்கடை மத்து,யானைத்தூண்,வெண்மை. [தல்.
வெளிவாங்குதல்- வெளித்தல், வெளிச்சமா
வெளிவாசல்- வீட்டின் முகப்பிலுள்ள முற்றம், தலைவாசல்.
வெளிவாயன் - அந்தரங்கமற்றவன்.
வெளிவாய்- பரிகசியவாக்கு, இரகசியத்தை வெளியிடும் வாக்கு, பாத்திரத்தின் வெளிப்புற விளிம்பு, பகிரங்கமாய்.

வெளிவிடுதல்-வெளிப்படுத்தல்.
வெளிவிருத்தம் - வெண்பா வினங்களிரண்டு; அவை: மூன்றடியானேனு நான்கடியானேனு முற்றுப்பெற்று அடிகளினிறுதி தோறுந் தனிச்சொற் பெற்றுவருவது.
வெளிவெருட்டு-வெளிப்பகட்டு.
வெளிவேடம் } புறக்கோலம், வெளித்
வெளிவேஷம் } தோற்றம், கபடம்.
வெளிறர்-அறிவில்லார், கீழ்மக்கள், கயவர்.
வெளிறல் - வெண்மையாதல், வெளிறுதல்.
வெளிறு-அலிமரம், அறிவின்மை, நிறவிலி மரம், வயிரமில்லாமரம், வெண்மை, வெளிறென்னேவல், இளமை, வயிரமின்மை, நிறக்கேடு, வெளிச்சம், குற்றம்.
வெளிறுதல் - வெளிறல், வெண்மையாதல், நிறங்கெடுதல், வெளுத்தல்.
வெளிற்றுக்குணம் - விரயமில்லாத குணம்.
வெளிற்றுடல்-உதிரம் நீங்கிய பிணம்.
வெளிற்றுப்பனை-வயிரமற்றபனை. [ருக்கு.
வெளிற்றுமரம்-அலிமரம், முருக்கு, முள்முருக்கு,
வெளிற்றுரை - பொருணயமின்றியசொல், பயனில்லாதவுரை, பயனில்சொல்.
வெளுத்தல்-ஓர்மரம், வெள்ளையாக்கல், வெள்ளையாதல், நிறங்கெடுதல், விடிதல்.
வெளுத்துவாங்குதல் } மிக நன்றாகச் செய்
வெளுத்துவிடுதல் } தல் [புடைத்தல்.
வெளுப்பு-விடியல், வெண்மை, வெளுத்தல்,
வெளுவெளுத்தல் - மிகவும் வெளுறுதல், நிறங்கெடுதல், வெண்மையாதல்.
வெளுவெளுப்பு - நோயடைந்த வெண்மை, வெளுப்பு.
வெளுவெளுவெனல் - நையப்புடைத்தற் குறிப்பு, மிகவெண்மையாதற் குறிப்பு, நிறம் வெளிறுதற் குறிப்பு. [வெண்மையாதல்.
வெளுவை-வெளுத்தல், வெண்மையாக்கல்,
வெளேரெனல்-வெண்மைக்குறிப்பு, வெண்மையாதற் குறிப்பு, வெளிறுதற் குறிப்பு.
வெள்கல் - அச்சம், வெட்கம், வெட்குதல்.
வெள்குதல் - வெட்குதல், கூச்சப்படுதல், மனங்குலைதல், அஞ்சுதல்.
வெள்வரி-பலகறை, கவடிசோகி, கண்ணிணை வகை, வெள்ளரி.
வெள்வக்கால்-வவ்வால் மீன்வகை.
வெள்வளையார்-மகளிர், வெள்வளை மாதர்.
வெள்வாகை - வாகைமரவகை.
வெள்வாடை-சிறுவாடை, இளந்தென்றல்.
வெள்வாள்-தெளியுள்ளவாள், ஒள்வாள்.
வெள்வெங்காயம்- வெள்ளுள்ளி, வெள்ளைப் பூண்டு, வெங்காயம். [தோட்டா.
வெள்வெடி - சத்தவெடி, குண்டு இல்லாத
வெள்வெட்சி - பாவட்டை, வெட்சிவகை.
வெள்வெற்றிலை - வெள்ளை வெற்றிலை.
வெள்வேம்பு-வேப்பமரவகை [படுத்துருமம்.
வெள்வேல் - பேய்க்கருங்காலி, அகிமரால்,
வெள்ளகத்தி-அகத்திவகை. [ளம்.
வெள்ளக்காடு- பெருவெள்ளம், மிகு வெள்
வெள்ளடம்பு-கொடிவகையி ரெண்டு.
வெள்ளடி - வெருட்டு, வெளிப்படை, பகிரங்கம், உள்ளீடின்மை, சாதாரணம்.
வெள்ளடிச்சேவல்-கத்தி கட்டாமலடிக்குஞ் சேவல்.
வெள்ளடை- வெள்வெற்றிலை, பரமாகாசம், திருக்குருகாவூரிலுள்ள சிவாலயம்.
வெள்ளணி-பிறந்தநாளி லொப்பனை.
வெள்ளணிநாள்-பிறந்தநாள், பிறந்ததினம்.
வெள்ளணியணிந்துவிடுத்தல் - அகப்பொருட்டுறையிரண்டு; அவை: தலைவி பிள்ளை பெற்றமை பரத்தையிற் பிரிந்த தலைமகனுக்கறிவிக்கத் தோழியை வெள்ளணியணிந்து விடுத்தல். (காஞ்சிப்புராணம்)
வெள்ளப்பாடு-பள்ளம், வெள்ளம் பிடிப்பதினால் வருஞ் சேதம், வெள்ளப்பாழ்.
வெள்ளப்பாழ்-வெள்ளத்தால் பயிர்க்கு ஏற்படும் கெடுதி, வெள்ளப்பாடு. [போடுதல்.
வெள்ளமெடுத்தல் - நீர்பரவுதல், வெள்ளம்
வெள்ளம் - ஓரெண், கடல், நீர்ப்பெருக்கு, மிகுதி, ஈரம், கடற்றிரை, உண்மை, குடநாட்டார் நீரை வெள்ளமென்பர்.
வெள்ளம்போடுதல்-வெள்ளமெடுத்தல்.
வெள்ளரசு-ஓரரசு, அரசமரவகை.
வெள்ளரணே-சீலப்பேன். [ஆனந்தன்.
வெள்ளரவம் - ஆதிசேஷன், ஆதிசேடன்,
வெள்ளரவவெற்பு - திருவேங்கடமலை.
வெள்ளரி-வாருகம், படோலம், உருவாரம்.
வெள்ளர் - வெண்ணிறமுடையார்.
வெள்ளலரி - அலரிவகை.
வெள்ளலோத்தம் - வெள்ளிலோத்திரம்.
வெள்ளல்லி - வெள்ளாப்பல், அல்லாரி.
வெள்ளவரை-ஓர் அவரை, அவரைவகை.
வெள்ளவிளர்த்தல் - மிக வெண்மையாதல்.
வெள்ளவெளி-பரமாகாசம், பரவெளி. [து.
வெள்ளழுகல்-அழுகிவெண்ணிறம் பிடித்த
வெள்ளறிவன்-அறிவீனன், அறிவிலி.
வெள்ளறிவு-அலிவேகம், புத்திகுறைவு.
வெள்ளழகு-சகுனியம், சகுலாட்சம்.
வெள்ளறுகை-வெள்ளெலுவல்திரம். [பகுதி.
வெள்ளாங்குடி-வேளாளர் வசிக்கும் ஊர்ப்

வெள்ளாங்குருகு-வெண்ணுரைவகை.
வெள்ளாடியனூர்-ஓர் சங்கப் புலவர்.
வெள்ளாடு-வெள்ளை, வற்காலி, கொச்சை.
வெள்ளாட்டி-ஏவற்பெண், வைப்பாட்டி.
வெள்ளாண்மரபு-வேளாளசாதி. [ண்மை.
வெள்ளாண்மை-கிருஷி, பயிரிடல், வேளா
வெள்ளாண்வாழ்க்கை - வேளாளனது சீவனம்.
வெள்ளாந்தை-ஓராந்தை,மலைப்பாம்புவகை
வெள்ளாப்பு-வைகறை,வெள்ளேமேற்கட்டி
வெள்ளாமணக்கு-காட்டாமணக்கு, ஐமுகி.
வெள்ளாமை-வேளாண்மை, பறையாமை.
வெள்ளாம்பல் - கைரவம், வெள்ளல்லி, வெண்ணெய்தல், [க்க உதவும் நீராவி.
வெள்ளாவி-வெறுமாவி, ஆடையை வெளு
வெள்ளாவி தட்டுதல்-ஆவி பிடித்தல்.
வெள்ளாவிரை - ஓராவிரை, சிறுமரவகை.
வெள்ளாவி வைத்தல் - ஆடை யழுக்ககற்ற வெப்பமான வெறும் ஆவிபட வைத்தல்.
வெள்ளாளர்-பூவைசியர், மருத நிலமாக்கள்.
வெள்ளாறு - பாண்டிய நாட்டிற்கு வட வெல்லையிலுள்ள ஒருநதி. சுவேத முனிவர் சிவபூசை செய்ததால் பெருகிய நீர் பிரவகித்து நதி ஆயிற்று. இதற்கு வட மொழியில் சுவேதநதி என்று பெயர்.
வெள்ளானை- ஐராவதம், வாலேசம், வெள்ளை யானை.
வெள்ளானையுள்ளோன்-ஐயனார், சாத்தன்.
வெள்ளானை யூர்ந்தோன் - இந்திரன், சதமகன்.
வெள்ளி-வெண்பொன், சுக்கிரன், இவன் அசுரகுரு, வெள்ளிக்கிழமை, அறிவின்மை வெண்மை, விந்து.
வெள்ளிக்காசு-ஓர்வகைமீன், வெள்ளிநாணயம், ஓர்குழூஉக்குறி.
வெள்ளிக்காரம்-காடிக்காரம். [கட்டி
வெள்ளிக்காறு-உருக்கி வார்த்த வெள்ளிக்
வெள்ளிக்கிழமை-சுக்கிரவாரம். [கோல்.
வெள்ளிக்கோல்-ஓர் நிறைகோல், துலாக்
வெள்ளிக்கோல்வரையன்-ஓர்வகைப்பாம்பு இதற்குத்துலாக்கோலிலுள்ள வெள்ளைப் புள்ளிபோல வரையிருத்தலின் இப் பெயர்.
வெள்ளிசா - ஓர் கடல் மீன். [சரிகை.
வெள்ளிச்சரிகை - வெள்ளியால் இழைத்த
வெள்ளிடம்-இடைவெளி,காலியானஇடம்.
வெள்ளிடி - மழைக்குணமில்லாமல் விழுமிடி, எதிர்பாராமல் திடீரென வரும் ஆபத்து.
வெள்ளிடை - வெளி,ஆகாயம்,இடைவெளி, தெளிவு, வெளியிடம். [ளிவாயிருப்பது.
வெள்ளிடைமலை - யாவரும் அறியும்படி தெ
வெள்ளிடைமன்றம்- (1) காவிரிப்பூம்பட்டினத்துள்ளஐந்துமன்றத்துள்ஒன்று. இது திருடர்களை வெளிப்படுத்துவது (சிலப் பதிகாரம்) (2) வெளியான இடத்தையுடையமன்றம். (மணிமேகலை) (3) மதுரையில் சிவபெருமான் நடித்த நடனசபை.
வெள்ளித்தடி - வெள்ளிகட்டிய தடி.
வெள்ளித்தோற்றம் - சுக்கிரோதயம்.
வெள்ளிநகம் - கைலாசம். [பட்ட பணம்.
வெள்ளிநாணயம் - வெள்ளியில் அடிக்கப்
வெள்ளிநிமிளை - ஓர் நிமிளை, நிமிளைமருந்து வகை.
வெள்ளிநிலை - சுக்கிரன் மழை பெய்வித்தலைப் புகழ்ந்து சொல்லும் புறத்துறை.
வெள்ளிபுத்தல்-அதிகாலையில் சுக்கிரோதயமாதுதல், நட்சத்திரங்களின் உதயம்.
வெள்ளிப்பல்லக்கு - பல்லக்கு வகை.
வெள்ளிப்பாடல்} பழையநூல்களில் வெள்
வெள்ளிப்பாட்டு} ளி என்ற புலவராற் புதியவாகப் பாடி நுழைக்கப்பட்ட பாடல்.
வெள்ளிப்பிரிவு-சுக்கிரனிருந்தவிராசி விட்டுப்பிரிதல், சுக்கிரனது கதிமாற்றம்.
வெள்ளிப்பிள்ளையார்நோன்பு - வேளாள சுமங்கலி கொண்டாடும் நோன்புவகை.
வெள்ளிமடந்தான்} கெண்டைமீன் வகை
வெள்ளிமடந்தாள்} யிஞ்ஞன்று.
வெள்ளிமலாம்-ஓர்மலாம், வெள்ளிமுலாம்.
வெள்ளிமலை - கைலைமலை, கயிலாசம்.
வெள்ளிமலைநாதர்-திருத்தெங்கூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வெள்ளிமன்றம் - வெள்ளியம்பலம். [லாம்.
வெள்ளிமுலாம்-வெள்ளிப்பூச்சு, வெள்ளிம
வெள்ளியங்கிரி - வெள்ளிமலை, இரசிதகிரி.
வெள்ளியந்தின்னனார் - ஓர் சங்கப்புலவர். இவர் பாடியது நற்றிணையில் 101-ஆம் பாட்டு.
வெள்ளியப்பலத்தெரு - இது மதுரையில் தெற்குச் சித்திர வீதியிலுள்ள வெள்ளியம்பலத்தின் பக்கத்தே யுள்ளது.
வெள்ளியம்பலம்-மதுரையிலுள்ள ஒருமன்றம், பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் இருவர் பொருட்டு மற்றவரும் தரிசிக்க சிவபிரான் நடன தரிசனம் தந்தருளிய இடம், இது மதுரையில் சொக்கநாதர்

சந்நிதிக்குக் கீழ்ப்பாகத்தில் இருக்கிறது, வெள்ளிமன்றம், இரசிதசபை.

வெள்ளியம்பெருமலை - வித்தியா தரர்களுடைய மலை.

வெள்ளியுயிர் - மக்களுயிர், வெண்பிறப்பு.

வெள்ளியெழுதல் - சுக்கிரோதயமாகை.

வெள்ளிசேக்கு - வெள்ளித்தகடு.

வெள்ளிலங்காடு-சுடுகாடு, இடுகாடு, பிணக்காடு, மயானம், சுமம், புறங்காடு.

வெள்ளிலை - வெற்றிலை, தாம்பூலம்.

வெள்ளிலோத்திரம் - ஓர் மருந்து, விளாம்பட்டை.

வெள்ளில் - பாடை, ஆசந்தி, விளாமரம்.

வெள்ளிவளைகாப்போன் - நந்தி தேவர், நந்தி.

வெள்ளிவளை } மகளிரணியும் வெள்ளித்
வெள்ளிவள்ளி } தோள்வளை.

வெள்ளிவாயில் - ஓரூர். [வாரம், வெள்ளி.

வெள்ளிவாரம் - வெள்ளிக்கிழமை, சுக்கிர

வெள்ளிவிழா - இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்.

வெள்ளிவீதியார்-இவர் திருவள்ளுவர்க்குச் சிறப்புப்பாயிரஞ்சொல்லியகடைச்சங்கப் புலவருளொருவர். இவர் பாடிய "கன்று முண்ணாது கலத்தினும்படாது" என்ற பாட்டுத் தொல்காப்பிய வுரையினு மொன்றாது. இவர் கற்பனலங்காரம் பெறப் பாடுவதில் வல்லவர்போலும்.

வெள்ளுவெண்டிரள் - வெள்ளிக்கம்பி.

வெள்ளிவெண்டோடு - சங்கினாற் செய்த காதணி.

வெள்ளிவேர் - சல்லிக்கொடி, சல்லிவேர்.

வெள்ளிறகுமந்தாரை - வெள்ளைமந்தாரை.

வெள்ளிரு }
வெள்ளிரால் } ஓர்வகை யிரல்மீன்.

வெள்ளீயமணல்-வெள்ளீயங்கலந்த மணல்.

வெள்ளீயம்-ஓர்வகை ஈயம். [சுவாசாசயம்.

வெள்ளீரல் - ஓர்வகை ஈரல், மணிக்குடர்,

வெள்ளுப்பு - உப்புவகையி லொன்று.

வெள்ளுயிர் - சுத்தான்மா, சுத்தாத்துமா.

வெள்ளுழுவு - புழுதியுழவு.

வெள்ளுளுவை - மீன் வகையிலொன்று.

வெள்ளுள்ளி-வெள்வெங்காயம், வெள்ளைப்பூண்டு.

வெள்ளுறட்டி - பண்ணிகாரவகை.

வெள்ளுமத்தை - ஓர்வகை ஊமத்தை.

வெள்ளூர்கிழார்மகனூர்வெண்பூதியார் - ஓர் சங்கப்புலவர். இவர் மிக்க வெண்ணீறணிந்த காரணத்தால் இப்பெயரடைந்திருக்கலாம். இவர் தந்தையார் வெள்ளூர்கிழார், ஊர் வெள்ளூர், வெண்பூதியார்.

வெள்ளூர்க்காப்பியனூர்-இடைச்சங்கப் புலவருளொருவர். [விழுது.

வெட்வெட்சாந்து-வெள்ளிய எள்ளாலாகிய

வெள்ளெருக்கிலையார் - ஓர் சங்கப்புலவர். வேள் எவ்வியைப் பாடியவர்.

வெள்ளெருக்கு - மந்தாரசு, மந்தாரகம்.

வெள்ளெலி - ஓரெலி, எலிவகை.

வெள்ளெலும்பு - தசைகழிந்தவென்பு.

வெள்ளெழுத்து - கண்புகைச்சல், பார்வைக்கு வெளிதாய் நிற்குமெழுத்து.

வெள்ளெள் - ஓரெள், வெள்ளை நிறமான எள் வகை.

வெள்ளென - காலம்பெற, யாவர்க்குந் தெரிய, அதிகாலையில்.[விடிதற் குறிப்பு.

வெள்ளெனல்-வெண்மையாதல், பொழுது

வெள்ளென்பு - வெள்ளெலும்பு.

வெள்ளேடு - எழுதாவேடு, வெற்றேடு.

வெள்ளேறன் - பழுதான இரும்பு.

வெள்ளை-ஆழமான கருத்தில்லாதது, சங்கு, சுண்ணாம்பு, பலபத்திரன், மேற்கட்டி, வெட்டைநோய், வெண்பா, வெண்மை, வெள்ளாடு, வெள்ளாட்டு மறி, வெள்ளி, வேங்கை, அறிவின்மை, கள், சங்கு, சங்கு பாஷாணம், மிடற்றிற் பாடுங்குற்றம், வெள்ளைப் பாஷாணம், கபடமற்றவன்-வள்-து, பொருள் வெள்ப்படையானது, இசையிலுண்டாம்வெள்ற்றோசை, அற்பம்.

வெள்ளைகட்டுதல் - மேற்கட்டி கட்டுதல்.

வெள்ளைக்கடம்பு } நீண்ட கடம்பமர
வெள்ளைக்கடம்பை } வகை.

வெள்ளைக்கடுக்காய் - கடுக்காய் மரவகை.

வெள்ளைக்கண்ணத்தார்-ஓர் சங்கப் புலவர்.

வெள்ளைக்கமலத்தாள் - சரசுவதி, நாமகள்.

வெள்ளைக்கரடி - கரடிவகை.

வெள்ளைக்கரு - முட்டையிற் சிவப்புக் கருவின் புறக்கரு.

வெள்ளைக்கர்ப்பூரம் - கர்ப்பூரவகை.

வெள்ளைக்கலியாணமுருக்கு - மரவகை.

வெள்ளைக்கலையாள் - சரசுவதி, கலைமகள்.

வெள்ளைச்கல் - வெள்ளைசாசிக்கல், வெண்ணிறமான சலவைக்கல், மங்கலான ஒளியுள்ள இரத்தினம், கண்ணுடிக் கல்வகை.

வெள்ளைக்கவி - புன்சொற்கவி, புன்மொழிகளாற் பாடல் பாடுவோன். [ஞென்று.

வெள்ளைக்கற்றாழை - கடல்மீன் வகையி

வெள்ளைக்காகம் - வெண்காக்கை.
வெள்ளைக்காகிதம் - வெண்மையான கடுதாசி, எழுதாத கடுதாசி, வெள்ளைத்தாள்.
வெள்ளைக்காக்கட்டான், வெள்ளைக்காக்கணம், வெள்ளைக்காக்குறட்டை } கவர்ச்சி, கிரிகன்னி.
வெள்ளைக்காக்கை - வெண்காக்கை.
வெள்ளைக்காரம் - வெங்காரம், அங்காரி, இடங்கனம், வெண்காரம். [பியர்.
வெள்ளைக்காரர்-வெள்ளைமனிதர், ஐரோப்
வெள்ளைக்காலை - வெண்காலை.
வெள்ளைக்கிலுகிலுப்பை - வட்டக்கிலுகிலுப்பை, ஓர் விளையாட்டுப் பொருள்.
வெள்ளைக்கிளி - கிளிவகை, வெண்கிளி.
வெள்ளைக்கீரி - கீரிவகை, இராசகீரி.
வெள்ளைக்கிழை - கீரைவகையி லொன்று.
வெள்ளைக்குங்குலியம் - மருந்து வகையி லொன்று.
வெள்ளைக்குடிநாகனார் - ஓர் சங்கப்புலவர்.
வெள்ளைக்குட்டம் - வெண்குட்டநோய்.
வெள்ளைக்குதிரை - வெண்ணிறக்குதிரை, கள், சீலைப்பேன், வெள்ளரசுணை. [குன்றி.
வெள்ளைக்குன்றி-அதிமதுரக்கொடி, வெண்
வெள்ளைக்குன்றிமணி - ஓர் குன்றிமணி.
வெள்ளைக்குஷ்டம் - வெண்குஷ்டம்.
வெள்ளைக்கெளிறு, வெள்ளைக்கெளுத்தி } வெண்ணிறமான ஆற்றுமீன் வகை.
வெள்ளைக்கொம்பு - கலைமயிர், வெளுத்தமயிர்.
வெள்ளைக்கோங்கு - நீர்க்கோங்கு.
வெள்ளைக்கோட்டி-பயனில்லாதகூட்டம்.
வெள்ளைக்கோரான் - கொடிவகையி லொன்று.
வெள்ளைச்சாமந்தி - வெள்ளைச்செவ்வந்தி.
வெள்ளைச்சாரணை - ஓர்வகைச் சாரணை.
வெள்ளைச்சீலை - வெள்ளைத்துணி, வெண்டுகில்.
வெள்ளைச்சுரிதகம் - வெண்டளையில் வரும் கலிப்பாவின் இறுதி யுறுப்புவகை.
வெள்ளைச்சுரை - ஓர் கடல்மீன், சுரைமீன் வகை.
வெள்ளைச்செவ்வந்தி-ஓர் செவ்வந்தி, வெள்ளைச் சாமந்தி. [யானைசொல்.
வெள்ளைச்சொல் - எளியசொல், கொச்சை
வெள்ளைத்தனம்-கபடமின்மை, நிஷ்கபடம்.
வெள்ளைத்தம்பட்டை - வாளவரை.
வெள்ளைத்தாள் - வெள்ளைக்கடுதாசி.
வெள்ளைத்தும்பி - கடல்மீன்வகை. [டை.
வெள்ளைத்தும்மட்டன்-வெள்ளைத் தம்பட்

வெள்ளைநாவல் - ஓர்நாவல், வெண்ணாவல்.
வெள்ளைநிறத்தாள் - சரச்சுவதி, சரசுவதி.
வெள்ளைநீலாம்பரம்-செடிவகையிலொன்று.
வெள்ளைநெல் - நெல்வகையி லொன்று.
வெள்ளைநொச்சி - வெண்ணொச்சி.
வெள்ளைநோக்கு - உள்ளே ஒன்றும் கொள்ளா நோக்கு.
வெள்ளைபுரளுதல்-மல்லாக்காய்க்கிடத்தல்.
வெள்ளைப்பசலை - ஓர்வகைப் பசலை.
வெள்ளைப்பணியாள் - சரசுவதி.
வெள்ளைப்பவளம் - வெள்ளைப்போளம், ஒரு வகைமணி.
வெள்ளைப்பாகல் - ஓர் பாகல், பாகல்வகை.
வெள்ளைப்பாட்டு - வெண்பா, வெள்ளை.
வெள்ளைப்பாதிரி - பாதிரிமரவகை.
வெள்ளைப்பாஷாணம் - ஓர் பாஷாணம்.
வெள்ளைப்பிள்ளை - வஞ்சகமற்றவன், நிஷ்கபடி, பகடிகம்போன்ற குழந்தை.
வெள்ளைப்புத்தி - பிள்ளைபுத்தி, அறியாமை.
வெள்ளைப்புரசு - செடிவகையி லொன்று.
வெள்ளைப்பூச்சு - வெள்ளையடித்தல்.
வெள்ளைப்பூண்டு-வெள்ளருள்ளிப்பூடு, உள்ளிவகை.
வெள்ளைப்பூம்பாளை-நெல்வகையிலொன்று.
வெள்ளைப்பேச்சு - சுத்தவாக்கு, வெளிப்படையான வார்த்தை, கபடமற்ற பேச்சு.
வெள்ளைப்பொன் - மாற்றுக் குறைவான பொன்.
வெள்ளைப்பொன்னிலவிரை - ஓராவிரை.
வெள்ளைப்போளம் - ஓர் மணி, ஓர் மருந்து.
வெள்ளைமட்டிவாயன், வெள்ளைமட்டுவா } கடல்மீன் வகையி லொன்று.
வெள்ளைமந்தாரை - கொக்கு மந்தாரை.
வெள்ளைமந்தி - மந்திவகையி லொன்று.
வெள்ளைமயிர் - கலைமயிர், வெள்ளைக் கொம்பு.
வெள்ளைமருது - பூமருது, நீர்மருது.
வெள்ளைமழை - அற்பமழை, சொற்பமழை.
வெள்ளைமனம் - கபடமற்ற பரிசுத்தமான மனம்.
வெள்ளைமனிதர் - வெள்ளைக்காரர்.
வெள்ளைமாதளை, வெள்ளைமாதுளை } மாதளைவகையி லொன்று.
வெள்ளைமிளகி-சம்பாநெல்வகையிலொன்று
வெள்ளைமெய்யாள், வெள்ளைமேனியாள் } சரச்சுவதி, சரஸ்வதி.
வெள்ளைமை - அறிவின்மை, அசேதனம்.
வெள்ளைமைஞ - பாப்பாத்தி மைஞ.
வெள்ளையடித்தல் - சுவர் முதலியவற்றிற்கு

நீறுபூசுதல், வெள்ளைப்பூசுதல்.
வெள்ளையப்பன் - வெள்ளிரூபாநாணயம்.
வெள்ளையன் - வெள்ளைநிறமுள்ளவன்.
வெள்ளையானை - கீழ்த்திசையானை: ஐராவதம், வெண்கஜம்.
வெள்ளையானையூர்தி - இந்திரன், ஐயனார்.
வெள்ளையுஞ்சள்ளையும் - வெண்மையான உடை, ஓர்முதுமொழி.
வெள்ளையுருவாள் - வெள்ளைமேனியாள்.
வெள்ளையுமத்தை - வெள்ளுமத்தை.
வெள்ளையொட்டடை - நெல்வகையி னொன்று, ஒட்டடை.
வெள்ளைவட்டன் - வேளாளன்.
வெள்ளைவண்ணுத்தி } வண்ணத்திப்
வெள்ளைவண்ணுத்தை } பூச்சி.
வெள்ளைவரகு - வரகுவகையி னொன்று.
வெள்ளைவர்க்கம் - வெள்ளெருக்கம்பால்.
வெள்ளைவவ்வால் - கடல்மீன்வகை.
வெள்ளைவாயன் - அலப்புவாயன், பிதற்றுவோன், பயனிலாவார்த்தையாடுவோன்.
வெள்ளைவாரணன் - வெள்ளையானையூர்தி, இந்திரன் [வெண்மையுள்ள பாகம்.
வெள்ளைவிழி - கருமணியருகு, கண்ணில்
வெள்ளைவிறகு - விறகுவகையி னொன்று.
வெள்ளைவெருக்குதல்-ஆடையழுக்ககற்றல்
வெள்ளைவெளேரெனல் - மிகுவெள்ளைக் குறிப்பு, மிகுவெள்ளையாயிருத்தல்.
வெள்ளைவெற்றிலை - வெண்ணிறமானவெற்றிலை வகை [டிப் பண்டாரம்.
வெள்ளைவேட்டிக்காரன் - வெள்ளைவேட்
வெள்ளொக்கலர் - குற்றமற்ற மரபினர்.
வெள்ளொத்தாழிசை - வெண்டாழிசை.
வெள்ளொலியல் - புடவைக்குஞ்சம்.
வெள்ளோக்காளம் } கக்கலில்லாத வாந்தி.
வெள்ளோங்காளம் }
வெள்ளோடன் } ஓடுவிட்டுக்கள
வெள்ளோடன்தேங்காய் } ருந் தேங்காய், விள்ளோடன், விள்ளோடன் தேங்காய்.
வெள்ளோடு - வெள்ளை மேலோடு, கடல்மீன்வகை, வெண்கலம், வெங்கலம்.
வெள்ளோத்திரம் - வெள்ளோத்திரம்.
வெள்ளோந்தி - ஓரோந்தி.[யில்லாவோலை.
வெள்ளோலை - எழுதாவோலை, முத்திரை
வெறி - அச்சம், ஆடி, கலக்கம், கள், கோபம், சீக்கிரம், நாற்றம், பிசாசம், மஸ்து, வட்டவடிவு, வியாதி, வெறியெண்ணெவல், வேலனுடல், தேவர்க்காடுங்கூத்து, வாசனை, பயித்தியம், மூர்க்கத்தனம், பேதமை.
வெறிகொள்ளுதல் - சன்னதங் கொள்ளல், வெறித்தல், மயக்கம் கொள்ளுதல், பயித்தியம் கொள்ளுதல், வெறிக்குதல்.
வெறிகோள் - வெறியாட்டு, வெறிக்கூத்து.
வெறிக்கடுக்காய் - பேய்க்கடுக்காய். [தல்.
வெறிக்கப்பார்த்தல் - பயமுறுத்திப்பார்த்
வெறிக்களம் - வெறியாட்டயரும் இடம்.
வெறிக்குணம் - மஸ்துக்கொண்டகுணம், மருட்குணம், மூர்க்ககுணம் [தல்.
வெறிக்குதல் - வெறிகொள்ளுதல், வெறித்
வெறிக்கூத்து - வெறியாட்டு. [தற்குறிப்பு.
வெறிச்சென்னல் - ஆட்களின்றி வெறுமையா
வெறிதல் - நெருங்கல், செறிதல்.
வெறிது - அறிவின்மை, கோது, வறிது, ஒன்றுமில்லாமை, பயனின்மை.
வெறித்தபார்வை - பயமுறப்பார்க்கும் பார்வை, பேய் முழி விழித்தல்.
வெறித்தல் - ஆவேசமாதல், மயக்குறல். வெறிதாய்ப்போதல், குடியால் மயங்குதல், பயித்தியம் பிடித்தல், உக்கிரமாதல், விலங்கு முதலியன வெருளுதல், ஆவலோடு பார்த்தல், விறைத்து நிற்றல்.
வெறிநாய் - பித்துப்பிடித்தநாய், பைத்தியங்கொண்ட நாய்.
வெறிநாற்றம் - புணர்ச்சிக்குப் பிறகு உண்டாகும் நாற்றம். [சங்கப் புலவர்.
வெறிபாடியகாமக் கண்ணியார் - ஓர்
வெறிபிடித்தல் - வெறிகொள்ளுதல். [டல்.
வெறிப்பாட்டு - வெறியாட்டில் நிகழும்பா
வெறிப்பு - பஞ்சம், மயக்கம், வெறித்தல், வெறுமைத்தன்மை, கர்ணகடூரம், கண் கூச்சம்.
வெறிமலர் - வாசனையுள்ளபூ, வாசனைமலர்.
வெறிமூண்டம் } பைத்தியம் பிடித்த தடி
வெறிமூண்டன் } யன்.
வெறியயர்தல் - வெறியாடல், வெறியாட்டு.
வெறியன் - பித்தன், வெறியாட்டை யுடையவன், குடிவெறியுள்ளவன், உக்கிரமானவன், யார்தும் அற்றவன், வெறுவிலி.
வெறியாடல் - சன்னதமாடல், வெறிகொள்ளல், அணங்காடல், தேவர்க்காடுங்கூத்து.
வெறியாடுதல் - வெறியாட்டாடுதல்.
வெறியாட்டாளன் - உன்மத்தன், சன்னதக்காரன், தேவராளன், தேவர்க்காடுவோன், வெறியாடல் புரியும் வேலன்.
வெறியாட்டு - உன்மத்தம், சன்னதம், வெறியாடல், புறப்பொருட்டுறையி னொன்று, களியாட்டம்.
வெறியாட்டுப்பறை - வெறியாட்டில் முழக்

கும் குறிஞ்சி நிலப்பறை.
வெறியாள் - வெறியாட்டாளன்.
வெறியெடுத்தல் - சன்னதம் கொள்ளுதல்; இஃது: அகப்பொருட்டுறையி னொன்று.
வெறியேறி - அக்கினி, அக்கிரி, நெருப்பு, தீ, வெறிபிடித்தவன்,-வள்.
வெறியோடுதல் - திகைத்தல், நம்பிக்கை யறல், வெறுமையாதல், ஆற்றுமை யுறு தல், வெறிநோய் நீங்குதல்.
வெறு - வெறுமை, வெறுவென்னேவல்.
வெறுக்கை - கள், செல்வம், பொன், விழுப் பொருள், வெறுத்தல், மிகுதி, கையுறை, வாழ்வின் ஆதாரமாயுள்ளது, கனவு.
வெறுக்கைக்கிழவன் - குபேரன், சோமன்.
வெறுங்கடுதாசி - வெற்றுக்கடுதாசி.
வெறுங்கை - பொருளின்மை, ஒன்றுமில் லாத கை, வெற்றுக்கை.
வெறுங்கோது - மூடன், பயனற்றது.
வெறுஞ்சோறு - வெஞ்சனமில்லாத அன் னம், உருசியில்லாத அன்னம்.
வெறுத்தல் - கோபித்தல், சி ன த் த ல், பகைத்தல், மறுத்தல், வேண்டாமை, வெறுத்துவிடுதல், அருவருத்தல், பற்று விடுதல், மறந்துவிடுதல்.
வெறுத்தார்-வெறுப்புற்றவர், பற்றற்றோர்.
வெறுநுகம் - சோதிநாள், சோதிநட்சத்தி ரம், ஏர் பூட்டாத நுகத்தடி.
வெறுந்தப்பறை - முழுத்தவறு.
வெறுந்தரை - கட்டாந்தரை, வெறுநிலம், பயனில்லாப்பொருள்.
வெறுப்பின்மை - விருப்பம்; இஃது: அறத் துறுப்பி னொன்று, ஆசை.
வெறுப்பு - அச்சம், கலக்கம், சினம், செ றிவு, துன்பம், துக்கம், வேண்டாமை, அருவருப்பு, பகைமை, அவாவின்மை.
வெறுப்புக்காட்டுதல் - பிரியவீனங் காண் பித்தல், அருவருத்தல்.
வெறுப்புக்கொடுத்தல் - பிரியவீனப்படல்.
வெறுமனே - வீணுக, வேலையின்றி, சும்மா.
வெறுமனே - வெறிது, வெறுமனே, சும்மா.
வெறுமை - இன்மை, இல்லாமை.
வெறும்பிலுக்கு-வீண்வேடம், வீண்பகட்டு.
வெறும்புறங்கூறல் - அலர் தூற்றல்.
வெறும்புறங்கூற்று - அலர்மொழி, வடு வுரை, வீணே புரணிகூறுதல்.
வெறும்புறம் - ஒன்றுமில்லாதிருக்கை.
வெறும்பேச்சு - வீண்சொல், பயனற்ற வார் த்தை, வெற்றெனத் தொடுத்தல்.
வெறும்பொய்யன் - முழுப்பொய்யன்.
வெறுவாயலட்டுதல் } வீண்பேச்சுப் பேசு
வெறுவாய்பசப்புதல் } தல்.
வெறுவாய்கூறுதல் - பிதற்றுதல், பிதற்றல்.
வெறுவாய்க்கிலேகெட்டவன் - ஒரு வெற்றி லேக்கும் வகையில்லாதவன், ஒன்றுமில் லாத தரித்திரன், வெறுவிலி.
வெறுவியர் - பயனற்றவர்.
வெறுவிலி - ஒன்றுமில்லாத வறியவன், வெறியன், வெறுவாய்க்கிலேகெட்டவன்.
வெற்பன் - குறிஞ்சி நிலத்தலேவன்.
வெற்பிரதம் - கர்ப்பூர சிலாசத்து.
வெற்பு - மலே, சயிலம், பருப்பதம், வேதண் டம், ஆங்கில வினைச்சொல்.
வெற்பேந்தி - மலேதாங்கி.
வெற்றம் - சயம், வெற்றி, வென்றி, வீரம்.
வெற்றரையர் - சமணர், சாவகர்,அருகர்.
வெற்றர் - ஏழைகள், பயனற்றோர்.
வெற்றல் - வெற்றி, வென்றி, செயம்.
வெற்றவெறிது - சிறிதும் பயனின்மை.
வெற்றுரள் - தனியாள், வெறுவிலி, வெறு மனிதன், பயனற்றவன், வேலேயில்லாத ஆள், குடும்பபாரமில்லாதவன்.
வெற்றி - வென்றி, செயம், வெற்றல்.
வெற்றிகாணுதல் } வெல்லுதல், செயம்
வெற்றிகொள்ளல் } பெறுதல்.
வெற்றிக்கடுக்காய் - பேய்க்கடுக்காய்.
வெற்றிக்கம்பம் - வெற்றித்தம்பம்.
வெற்றிக்கரந்தைதமஞ்சரி - பகைவர்கொண் டதன்னிரை மீட்டான் கரந்தைப்பூமாலே சூடிப்போய் மீட்பதைக்கூறும் நூல். இது பிரபந்தம் தொண்ணூற்றாறனு ளொன்று.
வெற்றிக்குதிரை - பந்தயம்வென்ற குதிரை.
வெற்றிக்கொடி - விருதுக்கொடி, வெற் றித் துவசம்; அது: தம்பகையை வென் றோர் கட்டும் கொடி.
வெற்றிசூடுதல் - செயம் பெறுதல்.
வெற்றிச்சீட்டு - பந்தயச்சீட்டில் வெற்றி குறித்த சீட்டு, அதிர்ஷ்டச் சீட்டு.
வெற்றிடம் - வெறுமையான இடம்.[கழல்.
வெற்றித்தண்டை - வீரத்தண்டை, வீரக்
வெற்றித்தம்பம் - வெற்றிக்கொடி கட்டுந் தூண், வென்றோர் நிறுத்துந்தூண்.
வெற்றித்தானம் - மூன்றுமிடம். [கொடி.
வெற்றித்துவசம் - வெற்றிக்கொடி, செயக்
வெற்றிப்பாடு-வெற்றியாற்பெற்ற பெருமை.
வெற்றிப்புகழ் - செயத்தாலேற்படும்கீர்த்தி.
வெற்றிமகள் } செயலட்சுமி.
வெற்றிமடந்தை }

வெற்றிமாலை - வெற்றிவாகை. [பேரிகை.
வெற்றிமூசு-செயக்குறியாக முழக்கப்படும்
வெற்றிமை - செயமாகிய தன்மை, மேம்
பாடு, வெறுமை. [வல்லி, மூலவல்லி.
வெற்றிலை - தாம்பூலம், வெள்ளிலை, நாக
வெற்றிலைக்கத்தூரி-செடிவகையி னொன்று.
வெற்றிலைக்கா - வெற்றிலைத் தோட்சுமை.
வெற்றிலைக்காய் - வேற்றிலைக்கொடியின்
காய்.
வெற்றிலைக்கால் - வெற்றிலைத் தோட்டம்.
வெற்றிலைக்காளாஞ்சி-வெற்றிலைப்படிக்கம்.
வெற்றிலைக்கொடி
வெற்றிலைக்கொழுந்து } தாம்பூலவல்லி.
வெற்றிலைசுருட்டி - வெற்றிலைப்புழு வகை.
வெற்றிலைச்சரை - வெற்றிலைத் தட்டி.
வெற்றிலைச்சுருள்-ஓர்வித வெற்றிலைக்கட்டு,
மணவாளர் கையிற் பிடிக்குஞ்சுருள்.
வெற்றிலைச்செல்வம் - வெற்றிலைப் பெட்டி.
வெற்றிலைத்தட்டம் - வைற்றிலைத்தட்டு.
வெற்றிலைத்தட்டி - வெற்றிலைச்சரை.
வெற்றிலைத்தட்டு - வெற்றிலை பாக்கு சுண்
ணும்பு முதலியன வைக்கும் தாலம்.
வெற்றிலைத்தம்பலம் - வெற்றிலைபாக்கு
மென்றசாரம், தம்பலம்.
வெற்றிலைத்தாம்பாளம் - வெற்றிலைத்தட்டு,
வெற்றிலைத் தட்டம்.
வெற்றிலைத்தோட்டம் - வெற்றிலைக்கொடி
பயிர்செய்யுந்தோட்டம்,வெற்றிலைக்கால்
வெற்றிலைநறுக்கி - செடிவகையினொன்று.
வெற்றிலைநாரி } ஓர்வகைப் புதர்.
வெற்றிலைநாறி } [தாம்பூலம்.
வெற்றிலைபாக்கு - வெற்றிலையும் பாக்கும்,
வெற்றிலைபோடுதல்-தாம்பூலம்தரித்தல்.
வெற்றிலைப்பட்லிகை- வெற்றிலைவைக்குங்
கூடை.
வெற்றிலைப்படிக்கம்,தாம்பூலப்படிக்கம், தம்
பலப்படிக்கம், தம்பலம் துப்பும் கலம்.
வெற்றிலைப்பட்டி - வெற்றிலைச்சுருள்.
வெற்றிலைப்பழு - பழுத்த வெற்றிலை.
வெற்றிலைப்புழு } வெற்றிலையி லுள்ள
வெற்றிலைப்பூச்சி } விஷக் கிருமி. [ன்று.
வெற்றிலைப்பூமணி- மாதரணி பணியி னொ
வெற்றிலைமடல் -வெற்றிலைவைக்கும்
பெட்டி.
வெற்றிலைமடிப்பு - வெற்றிலைச் சுருள்.
வெற்றிலைவள்ளி - வள்ளிக்கொடிவகை.
வெற்றிலைவாணியர் - இலைவாணியர்.
வெற்றிலைவெடிபதம் - மருந்தெண்ணெய்ப்
பதத்தி னொன்று.
வெற்றிலைவைத்தல்-கலியாணத்துக்கு வர
ழைத்தற் குறிப்பு.
வெற்றிவாகை - போர்வென்றோர்சூடுமாலை.
வெற்றிவேற்கை - ஓர் சிறு நீதிநூல்; இது:
அதிவீரராம பாண்டின் இயற்றியது.
வெற்றிவேற்செழியன் - கொற்கை நகரத்
திருந்த ஒரு பாண்டியன்,இவன் கண்ண
கிக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலி
யிட்டுத் திருவிழாச் செய்து தன்னுட்டிற்
சம்பவித்திருந்த துன்பங்களை யெல்லாம்
நீக்கினவன். இவனுக்கு இளஞ்செழிய
னென்றும் பெயருண்டு. [செயல்
வெற்றிழுப்பு - பயனற்ற செயல், வீண்
வெற்று - வெறு, வெறுமை, இன்மை.
வெற்றுக்கடுதாசி - எழுதப்படாத காகிதம்.
வெற்றுக்கட்டை - குடும்ப பாரமின்றி தனி
யா யிருப்பவ-ன்-ள், வெற்றுள். [றுடல்.
வெற்றுடம்பு - தசைபிடியற்றதேகம், வெற்
வெற்றுடல்-வெறியதாய உடம்பு, பிணம்,
சவம், உயிரற்ற உடல்.
வெற்றுரை - பயனில் சொல், வீணுரை.
வெற்றெலும்பு - தசை கழிந்த வென்பு.
வெற்றெனத்தொடுத்தல் - பயனில் சொற்
றொடர்படக் கூறுவ தாகிய நூற்குற்றம்.
வெற்றெனல் - வெறுமை யாதற் குறிப்பு.
வெற்றெழுழிப்பு-அபஹுதியுருவகத் தொன்று;
அஃது: உபமான தருமத்தையாரோபித்
தற்கு உபமேய தருமத்தை ஒழித்தல்
(உ-ம்) மதியன்று வெண்கமலப்பூ.
வெற்றோலை- மாதரணியும் பனையோலைச்
சுருளாலானகாதணி,எழுதப்படாத ஓலை.
வெனப்பிலி - இருவேலி, பிச்சம், பீதகம்.
வென் - முதுகு, வெற்றி, வெங்.
வென்வேற்கிள்ளி - ஓர்சோழவரசன்.
வென்ற - ஒத்த, மேம்பட்ட.
வென்றவருலகம் - விந்த கேஷத்திரம்.
வென்றவர்-செயித்தவர், விந்தபரமேஷ்டி
கள், பகைவென்றோர்.
வென்றூர்தம்வீடு-வென்றவருலகம்.[றோன்.
வென்றூன் - அருகன், செயித்தான், வென்
வென்றி-வெல்வி,வெற்றி,ஜெயம். [கொடி.
வென்றிக்கொடி - வெற்றிக்கொடி,விருதுக்
வென்றிமாலை - செந்திபுர புராணஞ்செய்
தோன், போர்வென்றோர்சூடுமாலை.
வென்றிமாலைக்கவிராயர் - சைவ வேதியர்,
இவரூர் பாண்டிநாட்டிலுள்ள திருச்செந்
தூர். திருச்செந்தூர் புராணம்பாடியவர்.
வென்றியங்குவேல் - வென்று புகழ்பரந்த
வேல்.

வென்றேர்-புலனடங்கப்பெற்றேர்வெற்றி யடைந்தோர். [ரூன், வெற்றியுற்றேன்.
வென்றேன் - செயித்தவன், அருகன், வென்
வென்னிடுதல் - புறங்கொடுத்தல்.

வே

வே - ஓர் உயிர்மெய்யெழுத்து, வேயென் னேவல், வேவு, வேவென்னேவல்.
வேகசரம் - ஒட்டகம், குதிரை. [வனம்.
வேகடம்-ஓர்மீன், மணியழுக்ககற்றல், யெள
வேகடன் - மணியொப்பஞ்செய்வோன், வா லிபன், இரத்தினங்களை சாணை பிடிப் போன்.
வேகடி - மணிமாசு நீக்குவோன்.
வேகடை - வேகடம். [தகடு.
வேகடைத்தாள்-குருநாப்பட்டை, குருநாத்
வேகடையாள் - வீண்பகட்டுக்காரன்
வேகடைவேலை - போலிவேலை.
வேகதரிசி - திருதராட்டிரன் குமாரன்.
வேகநாசனம்-கோழை, கபம், சிலேற்பனம்.
வேகநிரோதம் - மலமூத்திர மடக்குகை.
வேகப்புள் - கருடன், கலுழன், உவணம்.
வேகம் - கடுமை, கதி, கோபம், சினம், சுக்கி லம், ஜீவிதம், அடம்பு, விரைவு, நஞ்சு, வலிமை, மனக்கலக்கம், நாற்றம், கீழ்.
வேகரம் - உக்கிரம், உறைப்பு, கடுமை.
வேகரோகம் - மலமறிப்பு நோய்.
வேகர் - தூதுவர், ஒற்றர். [வைகை யாறு.
வேகவதி-காஞ்சியிலுள்ளநதி, கம்பையாறு,
வேகவத்தமம்-மிகுகதி. [பெந்துமான்மகன்
வேகவான்-(1)தது மகனுகியஓர் அசுரன்(2)
வேகவிதாரணம் - தடை, தடக்கம், தடக்கு
வேகவைத்தல் - சூடாற் பக்குவப்படுத்தல்.
வேகாகாதம்-தடை, மலக்கட்டு, மலச்சிக்கு.
வேகாப்பிணம் - குறைக்கட்டைப்பிணம்.
வேகாரி - கட்டாயவேலை.
வேகாவரி-ஒன்றுக்குமுதவாதது, நன்றுய்ச் சுடப்படாத செங்கல். [கை, வேக்காடு.
வேகாளம்-கோபம், சீக்கிரம், விரைவு, காங்
வேகி-வேகமுடையவ-ன்-ள், கோபமுடை யவ-ன்-ள், வஞ்சகமுடையவன்-ள்.
வேகிதன் - விரைவுடையான்.
வேகிதை - விரைவு, வேகம், துரிதம்.
வேகித்தல் - வேகமடைதல், விரைதல், கோபித்தல்.
வேகுதல் - அவிதல், உக்கிரங்கொள்ளல், எரிதல், காய்தல்.
வேக்காடு-சூடு, வேகுதல், எரிகை, அழற்சி, வெப்பம், பொருமை.
வேக்காளப்படுதல் - வெட்கப்படுதல், வெப் பியாசப்படுதல், மனத்துயரடைதல்.
வேக்காளம் - வெக்காளம், மழையில்லாக் காலம், வேக்காடு, கோபம், மனத்துயர், வெட்கம்.
வேங்கடக்கோட்டம் - வேங்கட மலையைச் சூழ்ந்த நாட்டுப்பகுதி; இது தொண்டை மண்டலக் கோட்டங்களு ளொன்று.
வேங்கடநாதாசாரியர் - வேதாந்த தேசிக ருக்குப் பிள்ளைத் திருநாமம்.
வேங்கடம் - ஒரு மலை; திருப்பதி ஸ்தலமித னகணுள்ளது. இது தமிழ்நாட்டுக்கு வட வெல்லையாக வுள்ளது. இதிலே அதிப்பு ராதனமாகிய ஒரு சுப்பிரமணிய ஆலய மும், விஷ்ணுவாலயமும் உள்ளன; மூன் னையதற்கால மில்லா தொழிந்தது, வேங்கடாசலம்.
வேங்கடாசலபதி, வேங்கடாசலன், வேங்கடேசன், வேங்கடேசுவரன் } திருவேங்கடத்துக் கோயில் கொண்டி ருக்கும் திருமால்.
வேங்கடாசலம்-வேங்கடம், திருவேங்கடம்.
வேங்கியம் - குறிப்பு, வெட்கம். [பொன்.
வேங்கை - ஓர் மரம், ஓர்மலை, ஓர்நாடு, புலி,
வேங்கைமார்பன்-உக்கிரப் பெருவழுதியால் வெல்லப்பட்டவன். இவன்காஞ்பேரெ யிலின் தலைவன். இவன் காலத்துப் புல வர் ஐயூர் மூலங்கிழார்.
வேசகம் - யானைவாணுனி, விலங்கின் வால், வீடு, குதிரையின் பிடரிமயிர்.
வேசடை - துக்கம், துயரம், வேசாடை.
வேசதாரி - வேடதாரி வேஷதாரி.
வெசந்தம்-குளம், தடாகம், கயம், பொய்கை.
வேசம் - உடை, கதம், சம்பளம், வாயில், வீலை, வேஷதெரு, வேஷம், பிரவேசம், உக் கிரம், வேடகம். [தெலுங்கு பாஷை.
வேசரம் - வேசறவு, சிற்பவகை, ஒட்டகம்,
வேசரி - கழுதை, கோவேறுகழுதை.
வேசரிவாஹனி - மூதேவி, தௌலவை, முகடி.
வேசறல் } சலித்தல், மனச்சோர்வு,
வேசறவு } துக்கம்.
வேசறுதல் - மனஞ்சோர்தல், வருந்துதல்.
வேசனம்-மருதநிலத்தூர், வாயில், வீடு, ஊர்.
வேசனைநாற்றம்-குளம் முதலியவற்றில் சூரி ய வெப்பத்தா லுண்டாகும் நாற்றம்.
வேசா - வேசி, வேசை, பரத்தை, கணிகை.
வேசாடல் - மனக்கலக்கம், மனச்சஞ்சலம்,

வேசாடை - துக்கம், துயரம், வேசடை.
வேசாறல் } ஆறுதல், இளைப்பாறுதல்,
வேசாறுதல் } துக்கமடைதல்.
வேசி - வியாபாரி, விலைமகள், வேசை, பரத்தை, விபசாரி.
வேசிகை - வாயில், வாயல், வாய்தல்.
வேசிக்கள்ளன் - வேசையுற வுள்ளவன்.
வேசிக்குணம் - விபசாரக் குணம்.
வேசிதெரு - பரஸ்திரிகுடி இருப்பு.
வேசித்தனம் - கற்புத்தவறல், வேசித்தன்மை, பிலுக்கு.
வேசிநடை - விபசாரநடை, வேசிமார்க்கம்.
வேசிப்பார்வை - புணர்ச்சிநோக்கு.
வேசிப்பிள்ளை - கொண்டோற் பிழைத்துப் பெற்ற புத்திரன்.
வேசிமார்க்கம் - தூர்த்தநடை, வேசிகள் நடை, வேசாவொழுக்கம்.
வேசியம் - வேசித்தெரு, வேசிவீடு.
வேசியாசனசமாசியம்-வேசிவீடு. [வோன்.
வேசியாசாரியன் - நட்டுவன், நடனமாட்டு
வேசியாடுதல்-கற்பொழுக்கந்தவறிநடத்தல்
வேசியை - வேசை, வேசி, வேசா.
வேசியோகம் - (1) ஒருநல்லயோகம்; அது: சூரியனுக்கு முன்னே கிரகங்கள் நிற்பது. (2) சூரியனுக்கு இரண்டில் சந்திரன் நீங்கிய சுபக்கிரகங்கள் நிற்பதுமாம்.
வேசிவிலை - பணயம், பணையம்.
வேசிவிளையாட்டு - கணிகையர் கூத்து.
வேசுமநகுலம்-மூஞ்சூறு, சுண்டன், சுசுந்தரி.
வேசை - சம்பளம், வேசி, பரத்தை.
வேடகம் } காதணிவகையி லொன்று.
வேஷகம் }
வேடங்கட்டுதல்-மாறுவேடங்கொள்ளுதல்.
வேடங்காட்டுதல் - கோலங் காட்டுதல்.
வேடச்சி - வேடப்பெண், வேடிச்சி.
வேடச்சேரி - வேடரூர், குறிச்சி.
வேடணம் - வளைத்தல். [டையவன்.
வேடதாரி-வேஷந்தரிப்போன், வஞ்சக மு
வேடம் } ஆவேசம், உடை, ஓர் காதணி
வேஷம் } அது துறவிக ளணிவது, தன் கோலம்விட்டு வேறு கோலங்கொள்ளல்.
வேடர் - வேடுவர், இவர்கள் முற்காலத்திலிருந்த அரசர்களுக்கு வேட்டைத் தொழிலில் உதவிபுரிந்து வந்தவர். இவர் களுக்குத் தொழில் வேட்டையாடல், ஆறலைத்தல்.
வேடலப்பை - முதலியாண்டான் வம்சத்தவர். மணவாள மாமுனிகளிடம் வாதிட வந்த கிருஷ்ணசந்தனை மீளும்படிச் செய்தவர். இவர் பிறப்பிடம் வேடல்.
வேடன் - வேடுவன், வேட்டுவன், பாலை நிலத்தான், வேடதாரி.
வேடிக்கை-அலங்காரவேஷம், ஆடம்பரம், விநோதம், அலங்கரிப்பு.
வேடிக்கைகாட்டுதல்-ஆடம்பரம் காட்டல், கோலங்காட்டுதல், வேடிக்கை செய்தல்.
வேடிக்கைப்பேச்சு - விநோத வார்த்தை.
வேடிச்சி - வேடப்பெண், வேடச்சி.
வேடிச்சிகாலன்-குமரன், முருகன், கந்தன்.
வேடிதம் - ஒருவிதமான மருந்து நாற்றம்.
வேடு-செம்முதல், பொட்டணம், மூடுசீலை, வடிகட்டுசீலை, வேடர்தொழில், வேடன், மூடுகை, வேடசாதி, வரிக்கூத்துவகை.
வேடுகட்டல் } பொட்டணங் கட்டல்,
வேடுகட்டுதல் } வண்டு கட்டல்.
வேடுபறி-வழிப்பறி, திருமங்கை மன்னன் திருமாலை வழிபறிக்க முயன்றதைக் கொண்டாடுந் திருவிழா, சுப்பிரமணியர் வள்ளியைச் சிறை எடுத்ததைக் கொண்டாடும் திருவிழா.
வேடுவன் - பாலைநிலமகன், வேட்டைக்காரன், வேட்டையாளி, வேடன்.
வேடை-அபேட்சை, காமநோய், செட்டித்தெரு, மரக்கலம், வெப்பம், தாகம்.
வேட்கை - ஆசை, பற்றுள்ளம், அவத்தை பத்தனுள் ஒன்றான காமவிருப்பம்.
வேட்கைத்துணைவி-மனைவி, இல்லாள், பாரி.
வேட்கைநீர்-தாகந்தணிக்கும் நீர், வேணீர்.
வேட்கைநோய் - வேட்கை, வயா.
வேட்கைபிறக்கின்றபருவமகளிர் - பெதும்பையர். [யோர்.
வேட்கைபிறந்தமகளிர் - மங்கையர் முதலி
வேட்கைபிறவாப்பருவமகளிர் - பேதையர்.
வேட்கைப்பெருக்கம் - காமநோய், பேராசை.
வேட்கைமுந்துறுத்தல்-தலைவி தன் விருப்பத்தைத் தலைவன் முன்கூறும் புறத்துறை. [கை.
வேட்கைமை - வேட்கைத்தன்மை, வேட்
வேட்கோ } குயவன், குலாலன், சக்
வேட்கோபன் } கிரி, மண்ணுடையான்.
வேட்கோவன் }
வேட்சை-அபேட்சை, புடைவை, விருப்பம்.
வேட்டகண்ணன் } ஓர் சங்கப் புலவர்.
வேட்டக்கண்ணன் } இவர் இயற்பெயர் கண்ணன். இவர் தம் பாடலில் குறும் பூழ் காயமாக என இயம்புதலின் வேட்டமாடுந் தொழிலினராக இருத்தல் கூடும்.

வேட்டகம் - தலைப்பா, புத்தகம், மாமியார் வீடு, மறுவீடு.
வேஷ்டகம் - பிசின், பயின், வேட்டம்.
வேட்டக்குடி - வேட்டுவர்வீடு.
வேட்டஞ்செய்தல்-வேட்டையாடுதல், மிருகக்கொலை விளையாட்டு.
வேட்டணம் - காது,காப்புக்கட்டல், சுவர், சுற்றல், சூழ்தல்.
வேட்டமாடுதல் - வேட்டை யாடுதல்.
வேட்டம்-சாரம், பிசின், வேட்டை, விருப்பம்.
வேட்டல் - ஆசைப்பெருக்கம், ஓமம் செய்தல்;அது: அந்தணர் வணிகர்க்குரிய வறுதொழிலி னொன்று, மாயை யாக்கை, பதினெண் குற்றத்தொன்று, விருப்பம், விவாகஞ் செய்தல், விவாகம், வேள்வி செய்தல்.
வேட்டவள்-மணஞ்செய்தவள், வேட்டாள்.
வேட்டவன் - மணஞ்செய்தவன். [ன்று.
வேட்டனம்-கூத்தின்அங்கக்கிரியையி னொ
வேட்டாரன் - வேட்டைக்காரன். [ஞேர்.
வேட்டார்-சினேகிதர், புருடர், விவாகமா
வேட்டாவளியன் - குளவி, வேட்டுவன்.
வேட்டாள் - மணம்புரிந்தவள், மனைவி.
வேட்டான் - விரும்புவோன், கணவன், நண்பன்.
வேட்டி-சோமன், ஆடை [தடை, மடிப்பு.
வேட்டிதம் - கூத்தின் விகற்பம், சூழ்வு,
வேட்டியம் - சுற்றல், சுற்றுதல்.
வேட்டு - வெடி, வேட்டென்னேவல்.
வேட்டுப்பறிதல் - அபானவாயு விடுதல்.
வேட்டுவன்-ஓர் குளவி, மகநாள், வேடன்.
வேட்டுவாளி } வேட்டுவனென்னுமோ
வேட்டுவாளியன் } ர் குளவி, வேட்டுவன்.
வேட்டுவிடுதல் - பொய் சொல்லுதல்.
வேட்டேர்சிங்கராசாரியார் - மணவாள மாமுனிகளின் திருவடி சம்பந்தி.
வேட்டை - இளைப்பு, துன்பம், வேட்டம்.
வேட்டைக்கடா-வேட்டைக்குப் பழக்கிய கடா.
வேட்டைக்காரர் - வேட்டையாடுவோர், வேட்டையாடும் ஒரு சாதியார், வேட்டுவர்
வேட்டைநாய் - கடிநாய், வேட்டையாடப் பழகிய நாய். [வேட்டையாடல்.
வேட்டைபிடித்தல் - வேட்டை யாடுதல்,
வேட்டைப்பல் - வக்கிரதந்தம்.
வேட்டையவியல் - கூட்டிடாவவியல், அவியற்கறிவகை.

வேட்டையாடல் } வேட்டஞ் செய்தல்,
வேட்டையாடுதல் } மிருகக் கொலை விளையாட்டு, வேட்டை பிடித்தல்.
வேட்டைவாளி - குளவிவகையி னொன்று.
வேட்டோர்-வேட்டார்[பிளேன்,கணவன்.
வேட்டோன்-சினேகிதன், புருடன், விரும்
வேட்பித்தல்-ஓமஞ் செய்வித்தல்; அஃது: அந்தண ரறுதொழிலி னொன்று.
வேட்பு - விருப்பம், பிரியம், வேட்டம்.
வேண-வேண்டிய, மிகுதியான. [கை.
வேணகை-மதில், புரிசை, அரணம், வேட்
வேணது - அளவுக்கு மேற்பட்டது, மனத்துத் தோன்றியது, வேண்டியது.
வேணவா - ஆசைப்பெருக்கம்.
வேணன்-அம்பட்டத்தி யிடத்திற் பார்ப்பானுக்குப் பிறந்து புகழ்ந்து பாடுவோன்.
வேணுடர் - வேணுட்டடிகள்.
வேணுடு-கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனு ளொன்று, வேண். [ஆசிரியருள் ஒருவர்.
வேணுட்டடிகள்-திருவிசைப்பா இயற்றிய
வேணி - ஆகாயம், இடையர்வீதி, சடை, மரவேர், யாறு, வசம்பு, மூங்கில், நீர்ப்பெருக்கு, பின்னியமயிர், தெரு, வெளி, சோரி.
வேணிகை-சடை, பின்னிய மயிர், வேணி.
வேணிசம்ஹாரம் - ஓர் நூல்.
வேணீரம்-பொன்னுங்கொட்டை. [ஜலம்.
வேணீர்-தாகநீர், நீர்விடாய் நீங்கப் பருகும்
வேணு - உட்டுளை, கலேஞான மறுபத்து நான்கினொன்று, குழல், புல்லாங்குழல், மூங்கில், வாள், வில், வேய்ங்குழல்.
வேணுகம் - யானைத்தோட்டி, அங்குசம்.
வேணுகன் - வேய்ங்குழ லூதுவோன்.
வேணுகாகம் } வேய்ங்குழலூதல்,புல்லாங்
வேணுகானம் } குழலிசை.
வேணுகோபாலன் - கிருஷ்ணன், கிருட்டிணன், கண்ணபிரான், வேய்ங்குழல் வாசிக்கும் வடிவத்திற் கொண்ட பெயர்.
வேணுசம் - மூங்கிலரிசி, வேணுபலம்.
வேணுணயன் - சதசித்து புத்திரன்.
வேணுநம்-மிளகு,கறி, மிரியல், வேணுனம்.
வேணுநாதர்-திருநெல்வேலியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வேணுநாதன் - வீணைவாசிப்போன், புல்லாங்குழல் ஊதுவோன், வக்கியம்வாசிப்போன்.
வேணுபலம் - மூங்கிலரிசி, வேணுசம்.
வேணுபுரம் - சீர்காழி, சீகாழி, வெங்குரு.
வேணுமென்று - வேண்டுமென்று.

வேணுனம்-மிளகு, மரீசம், கலினை, வேணுகம்.
வேணூல் - காமசாத்திரம், மதனுகமம்.
வேண்-அவா, கொடுந்தமிழ் நாட்டிலுன்று அது வேணுடு, வேட்டைப் பெருக்கம்.
வேண்டப்பாடு - வேண்டற்பாடு.
வேண்டலன் - பகைவன், வேண்டாதவன்.
வேண்டல் - ஆசை, ஆசைப்பெருக்கம், இரத்தல், விரும்புதல், விண்ணப்பம்.
வேண்டற்பாடு - விருப்பம், பெருமை, கருவம்.
வேண்டாதகாரியம்-அனுவசியமானசெயல்.
வேண்டாதவன்-விரோதி. [டன், முருடன்.
வேண்டாத்தலையன் - அஞ்சாதவன், மூர
வேண்டாமை - வெறுப்பு, அவாவின்மை.
வேண்டார் - பகைவர், வேண்டாதவர்.
வேண்டாவெறுப்பு - பகை, வேண்டாமென்றவெண்ணம், உபேட்சை, பிரியவீனம்.
வேண்டிக்கேட்டல் - மன்றாடிக்கேட்டல்.
வேண்டிக்கொன்ருதல் - பிரார்த்தித்தல்.
வேண்டியது - அவசியமானது, இன்றியமையாதது, தேவையானது, போதுமானது, மிகுதியானது, வேணுது. [மிகுதியாக.
வேண்டியமட்டும் - அவசியமான அளவில்,
வேண்டியவன் - பிரியமானவன். [தல்.
வேண்டுகோள் - பிரார்த்தித்தல், வேண்டு
வேண்டுதல்-வாங்குதல், விரும்புதல், பிரார்த்தித்தல், இன்றியமையாததாதல்.
வேண்டுநர் - விரும்புவோர், வேண்டுவர்.
வேண்டுமென்று-அடமாக, முழுமனதோடு.
வேண்டுவர் - விரும்புவோர், வேண்டுநர்.
வேண்டுட்டடிசில் - தாம்விரும்பப்படுகின்ற பொருள்களே யுடைய அடிசில்.
வேண்மாள்-செங்குட்டுவன் மனைவி, இவள் கண்ணகியைப் பிரதிஷ்டை செய்து பூசிக்கவேண்டும் என்று தன் கணவனை வேண்டிக்கொண்டு அவனது அருஞ்ஞை பெற்றுஅவ்வாறேபூசித்துவந்தவள், கண்ணகி கற்பிற் சிறந்தவளாதலால் இவள் பூசித்தற் குரியவ ளானுள்.
வேதகப்பொன்-புடமிட்டபொன், வேதகம்.
வேதகம்-கருப்பூரம், தானியம், வேறுபடுத்தல், குளிகை, தன்மையை வேறுபடுத்துவது, விரோதம், துரோகம், புடமிட்ட பொன், இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னுக்கும்பண்டம், சிறுதுகில்.
வேதகருப்பன் - பிரமன், பார்ப்பான்.
வேதகர்ப்பை - துர்க்கை, கொற்றவை, ஜயை.
வேதகாரர் - நெய்வார், பொருந்தர்: இவர்கள் கூடை முதலியன பின்னுமவர்கள்.
வேதகிரி-திருக்கழுக்குன்றம், வேதாசலம்.
வேதகிரீசுரர் } திருக்கழுக் குன்றத்துச்
வேதகிரீசுவரர் } சுவாமி பெயர்.
வேதகீதன்- (வேதத்தினுற் புகழ்ந்து பாடப் படுவோன்) கடவுள், சிவபிரான், விஷ்ணு.
வேதகோஷம் - வேதவொலி. [டத்தார்.
வேதகோஷ்டி - வேதபாடலைப் பாடும்கூட்
வேதகௌலேயகன் - சிவபெருமான்.
வேதக்கொடியோன் - துரோணச்சாரியன்.
வேதசங்கிதை - வேதத்திரட்டு.
வேதசம் - பிரம்பு, பெருவிரலடி, நாணற்புல்.
வேதசருமன் } திருநெல்வேலியிற் சிவபெ
வேதசன்மா } ருமானை வழிபட்டு முத்தியடைந்தவரான ஓர் சைவவேதியர்.
வேதசாத்திரம் - வேதம், வேதமாகியநூல், வேதங்களும் சாஸ்திரங்களும். [வோன்.
வேதசாத்திரி - வேதவியார்த்தி பண்ணு
வேதசாரம் - நாணற்புல், வேதத்தின்சத்து, உபநிடதம், வேதசிரசு, வேதசம்.
வேதசாஸ்திரம் - வேதசாத்திரம்.
வேதசாஸ்திரி - வேதசாத்திரி.
வேதசிரசு - உபநிடதம், உபநிஷதம், பிராணன் மகன், உசேநசு தந்தை, மார்க்கண்டேயன் புத்திரனென்றும் சிலர் கூறுவர்.
வேதஞ்ஞன் - வேத அறிஞன். [யானை.
வேதண்டம் - கைலை, பொதியமலை, மலை,
வேதண்டவில்லி - சிவபிரான், குன்றவில்லி.
வேததத்துவம் - வேதப் பொருள்.
வேதத்தன் - பிரமன்.
வேதத்திரயம் - இருக்கு, யசுர், சாமம் என்ற மூன்று வேதங்கள்.
வேதநாதன - கடவுள், பிரமன், சிவபிரான்.
வேதநாதேசுவரர் - திருவோத்தூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வேதநாநம் - அனுபவித்தல், துய்த்தல்.
வேதநாயகன் - வேதங்களுக்குத் தலைவன், வேதநாதன், கடவுள், சிவபிரான், பிரமன்.
வேதநாயகி - பார்வதி, இலக்குமி, திருக்கழிப்பாலையிலிருக்கும் தேவியார் பெயர்.
வேதநாவர் - பிராமணர், வேதியர்.
வேதநி - வெந்தயம், வெந்தல். [ரவாதி.
வேதநிந்தகன் - நாஸ்திகன், புத்தன், நிரீச்சு
வேதநிந்தை - வேதத்தை யிகழ்தல்.
வேதநிருத்தன் - சமணன், சூனியவாதி.
வேதநீயம் - உபாதி யின்மை. [ரம்.
வேதநூல் - வேதசாத்திரம், வேதசாஸ்தி
வேதநெறி - வைதிகம், வேதமார்க்கம்.

வேதபாகியம் - வேதத்துக்குப்புறம்பானது.
வேதபாகியன் - வேதத்துக்குப் புறம்பானவன்.
வேதபாடம் - வேதமோதுகை.
வேதபாரகர் - பார்ப்பார், வேதத்தைப் படிப்பிப்போர், வேதத்தின் கரைகண்டவர்.
வேதபாராயணம் - வேதத்தை ஓதுகை.
வேதபாராயணன் - வேதத்தை ஓதுபவன்.
வேதபீசம் } வேதமூலமான பிரணவ மந்திரம், குடிலை.
வேதபீஜம் }
வேதபுண்ணியம் - வேதானுசாரம்
வேதபுத்தகம் - விவிலியநூல், வேதநூல்.
வேதபுரீசர்-(1) திருவேதி குடியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி. (2) திருவழுந்தூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.
வேதபுருஷன் - வேதமாகிய தெய்வம்.
வேதப்பிராமாணியம் - வேதம் பிரமாணமாயிருக்கும் தன்மை.
வேதப்பொருத்தம் - மணப் பொருத்தம் பத்தி லொன்று.
வேதமங்கையம்மை - திருநணுவிலே கோயில் கொண்டிருக்கும் தேவியாரினது திருநாமம்.
வேதமந்திரம் - வேதத்திலுள்ள மந்திரம்.
வேதமாதா } (வேதங்களின்தாய்) காயத்
வேதமாதிரு } திரி மந்திரம். [தணர்.
வேதமாந்தர் - பார்ப்பனர், வேதியர், அந்
வேதமாயாவாதம் - ஓர் சமயம்.
வேதமார்க்கம் - வைதிகம். [சௌபரி குரு.
வேதமித்திரன் - மாண்டூகேயர் மாணாக்கர்;
வேதமுக்கியை - கஸ்தூரி, கத்தூரி, நானம்.
வேதமுடி - வேதசிரசு, உபநிடதம்.
வேதமுதல்வன் - கடவுள், சிவன், பிரமன்.
வேதமுதல்வி - சரச்சுவதி, பார்வதி, இலக்குமி.
வேதமுனி-வேதவியாசன், வேதவியாதன்.
வேதமூர்த்தி - வேதபுருஷன், வேதசொரூபியாகிய கடவுள், வேதங்களை யுணர்ந்தவன்.
வேதம் - அறிவு, ஆழம், கலைஞான மறுபத்து நான்கி லொன்று, துணைத்தல், முதனூல் விபரம் சுருதி, இது இருக்கு வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என நான்கு வகைப்படும். இந்த நான்கும் ஞானகாண்டம், கர்மகாண்டம் என இருவகைப்படும். ஞானகாண்டம் பிரமத்தைப் பிரதிபாதிப்பது, அது உபநிஷத்து எனப்படும், கர்மகாண்டம் வர்ணாசிரம தர்மங்களையும் இந்த்ராதி தேவபூசைகளையும் விவரித்துக் கூறுவது, அந்தப் பூசைகள் சர்வாந்தர்யாமியாகிய பரமபதிக்கும் பிரீதி யாக ஒவ்வொரு மூர்த்த மூலமாகச் செய்யப்படுவன,இந்த வேதம் காலந்தோறும் அந்தந்தக்கால வேறுபாட்டிற்கேற்ப,இருடிகளால் வகுக்கப்படும். தற்காலத்துள்ள நான்கும்துவாபரயுகத்தின் இறுதிக்காலத்தில் அவதரித்த க்ருஷ்ணத்வைபாயநர் என்று சொல்லப்படுகிற வேதவியாசமுனிவரால் வகுக்கப்பட்டன, இருக்கு வேதம் இருபத்தொரு சாகையும் யஜுர்வேதம் நூறு சாகையும், சாமவேதம் ஆயிரஞ்சாகையும், அதர்வணவேதம் ஒன்பது சாகையும் உடையன, இன்னும் இந்தவேதம் மந்திரமென்றும் பிராமண மென்றும் இரண்டு பிரிவுகளையுடையது, மந்திரம் தேவதைகளை தியானிக்கும் வாக்யங்கள், பிராமணம் அந்த மந்திரங்களைப்பிரயோகிக்கு முறையை யறிவிப்பது.
வேதரஞ்சகன் - பிரமா, பிரமன், நான்முகன், மலரோன்.
வேதரட்சணம் - வேதத்தைப்பாதுகாத்தல்.
வேதல் - வேகுதல், வெய்தல், எரிதல்.
வேதவசனம் - வேதவாக்கியம், திருவாக்கு.
வேதவதாரம் - வியாகரணம், இலக்கணம்.
வேதவதி - தூர்நதி, குசத்வஜராஜ புத்திரி. சீதையின் பூர்வநாமம், இவள் குசத்வஜன் என்னு முனிக்கு மாநச புத்திரியாகப் பிறந்து விஷ்ணுவுக்குத் தேவியாகவேண்டுமென்னும் விருப்பத்தோடிருக்குங் காலத்திலே, தும்பன் என்னும் ராக்ஷசன், இவளைத் தனக்கு மனைவியாகத் தருமாறு குசத்வஜனை வேண்ட, அவன் அதற்கு உடன்படாது மறுத்தான், அதற்குத் தும்பன் கோவங்கொண்டு குசத்வஜனைக் கொன்று, அந்தக் கொலை காரணமாக நேர்ந்த பிரமகத்தியால் தானும் இறந்தான், அப்பால் இவளை ராவணன்கண்டு மோகித்து, வலாத்காரம் பண்ண, அவள் கோவித்து, அடா பாவி, நீயென்னை அவமாநஞ் செய்ய எத்தனித்தமையால் நான் உன் வம்சத்துக்கு நாசகாரணமாக, உலகத்திலே யோனிவாய்ப்படாது பிறந்து இப்பழி தீர்ப்பேனெனக்கூறித் தீப்பாய்ந்து அந்தச் சரீரத்தை யொழித்தாள், அதன்பிறகு அவள் இலங்கையில் ஒரு

தடாகத்தில் தாமரைப்பூவிற் பிறந்து அழகாகிய சிசுவாய் விளங்க, அச்சிசுவை ஏவலாளர் கண்டு எடுத்துப்போய் ராவணன் கையிற் கொடுத்தார்கள், அவன் இந்தச் சிசுவினுல் இலங்கையழியுமென்று சோதிடர் கூறக்கேட்டு, சிசுவை ஒரு பொற்பேழையில் அடக்கஞ் செய்து கடலிலிட்டான், அந்தப்பேழை மிதந்து போய் மிதிலைநாட்டுத்துறையிற் சேர்ந்து மண்ணிற் புதைந்துகிடந்து ஜநகமஹாராஜன் புத்ரகாமேஷ்டியாகஞ் செய்யவுழுதபோது அவன் கையிலகப்பட்டது. அந்தச் சிசுவே சீதை. இவளே திரும்பவும் பாண்டவர்க்குத் தேவியாய்த் திரௌபதியாயினள். இவள் முதல் யுகத்தில் வேதவதி, இரண்டாவது யுகத்தில் சீதை, மூன்றாவது யுகத்தில் திரௌபதியானமையால், இவளுக்குத் திரிஹாயணி என்று பெயர்.

வேதவநம் - திருமணக்காடு, வேதவனம்.

வேதவரசன் - பார்ப்பான், பிராமணன்.

வேதவல்லி - தக்கன் மனைவி, இவள் பிரமன் பாதத்தில் உதித்தவள். தக்கயாகத்தில் காளியால் தலையறுப் புண்டனள்.

வேதவனம் - வேதாரணியம், மறைசை, வேதவநம், மறைவனம்.

வேதவன்மன் - சூரியகுலத்தரசனுகிய இரணிய வன்மன் என்னும் சிங்கவருமன் தம்பி.

வேதவாக்கியம்
வேதவாக்கு } வேதவ்சனம், உண்மை.

வேதவாணர் - பார்ப்பார், மறையவர்.

வேதவித்தகன்
வேதவித்து } வேதங்கற்றோன், கடவுள்.

வேதவியாசர் - வியாசர் காண்க.

வேதவியாசன்
வேதவியாதன் } சூரிருடி, அவன் வேதத்தைச் சிக்கறுத்தோன், வாதராயணன்.

வேதவிருத்தம் - வேதபோதனை, வேதத்திற்கு மாறுனது.

வேதவேதாந்தன்
வேதவேத்தன்
வேதவேத்தியன் } கடவுள், வேதவித்தகன், வேதவித்து.

வேதவொலி - வேதத்தையோதும் ஒலி.

வேதனம் - அறிவு, ஓர் சடங்கு, கூலி, சம்பளம், சீவனம், துன்பத்தல், பொன், விடயத்தான் வந்த அறிவு, வேதம், வேதனை.

வேதனுதானம் - கூலிகொடாமை.

வேதனி - கன்னவேதனைக் கருவி, யானையின் காதுகளைத் தொளையிடும் ஒருவிதக் கருவி, வெந்தயம்.

வேதனை - அலைத்தல், நோய், வருத்தம், வாதை.

வேதனைக்காட்சி - காட்சி பேதத்தொன்று; அஃது: இச்சாஞானச் செயலிலராகாதி செலுத்தல். [வருத்தந் தீர்தல்.

வேதனைதீர்தல் - மாயாமறைவு விடுதல்,

வேதனைப்படுதல் - உபாதிப்படுதல், வருத்தப்படுதல், மாயையால் மறைக்கப்படுதல், வினையின்பயனை யநுபவித்தல்.

வேதன் - கடுக்காய், அருகன், கடவுள், பிரமன், வியாழன், நாலாமிடத்ததிபதி, பௌஷ்யராஜாவின் குரு, அயோததவுமியன் சேடன்.

வேதஸ்வரம் - வேதபாராயணத்தில் உச்சரிக்கும் உதாத்தம் அனுதாத்தம் முதலியன.

வேதா-கடவுள், சூரியன், பிரமன், முனிவன்.

வேதாகமம் - வேதம், வேதமும் ஆகமமும், விவிலியநூல். [தக்கணாக்கினியம்என்பன

வேதாக்கினி-ஆகவனீயம், காருகபத்தியம்,

வேதாக்ரணி - சரச்சுவதி, கலைமடந்தை.

வேதாங்கம் - வேதசாத்திரம், வேதப்பகுதி (வேதாங்கம்-வேதவுறுப்பு) அஃதுசிக்ஷை கற்பம், வ்யாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம் என்னும்ஆறும் வேதத்துக்கு அங்கமெனப்படும், இதனை ஷடங்கமென்பர் வடநூலார், வேதத்தைஸ்வரத்தோடு கிரமமாக ஓதுதல் வேண்டும், அவ்வாறு ஓதாவிடின், ஓதப்படுகிற மந்திரங்கள் தத்தம் பயன்களைத்தராதொழிதலேயன்றி தோஷமும் சித்திக்கும், ஸ்வரபேதத்தாலுச்சரிக்கப்படுகிறமுறையைத்தெரிவிப்பது சிக்ஷையெனப்படும். வேதங்களால் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டிக்கும் கிரமத்தைத் தெரிவிப்பது கற்பமெனப்படும், வேதங்களின் எழுத்துசொல் பொருள் ஆகியஇவற்றினிலக்கணங்களைத் தெரிவிப்பது வ்யாகரணமெனப்படும், வேதார்த்தத்தை நிச்சயிப்பது நிருத்தமெனப்படும், வேதமந்திரங்களில்காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளின் பெயரையும் அவைகளின் எழுத்து இத்தனை யென்பதையும், அறிவிப்பது சந்தோபிசிதம் எனப்படும், வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிற கர்மங்களைச் செய்தற்குரிய காலத்தை நிச்சயிப்பது சோதிடம் எனப்படும்.

வேதாசலம் - வேதகிரி, திருக்கழுக்குன்றம்
வேதாஞ்ஞன்-வேதாந்தி,வேதாந்தகன்.
வேதாதி } பிரணவம்; இது: வேதத்
வேதாதிபீஜம்} துக்கு ஆதியாயுள்ளது.
வேதாதிவண்ணன் - (ஒங்காரவடிவன்) கடவுள், ஞானனந்த சொரூபன்.
வேதாதிவர்ணம்-வேதாதி, வேதாதிபீஜம்.
வேதாத்தியயனம் - வேதமோதுதல்.
வேதாத்தியாபகன்-வேதமோதுவிப்போன்
வேதாத்தியாபனம்} வேதமோதல், வேதா
வேதாத்தியாயனம்} த்தியயனம்.
வேதாத்தியாயி } வேதமோதுவோன்.
வேதாத்தியையி }
வேதாந்தகன் } வைதிகன், வேதாந்தி.
வேதாந்தசன் }
வேதாந்தசுப்பிரமணியபிள்ளை-திருப்பூவணத்தி லிருந்தவரும் மயூரகிரிப் புராணம் பாடியவருமான ஓர் புலவர்.
வேதாந்தசூடாமணி} இது துறைமங்கலம்
வேதாந்தசூளாமணி} சிவப்பிரகாசசுவாமிகளால் தமிழ்மொழியிற் செய்யப்பட்ட வொரு வேதாந்தநூல், இதுசெய்யுட் சிறப்புபொருளாழம் முதலியவற்றுற் சிறந்த நூல், இதற்கு முதனூல் வடமொழியிலுள்ள விவேகசிந்தாமணி, இதுபத்துப்பரிச்சேதங்களையுடையது,அந்தப்பத்துப்பரிச்சேதங்களுள் ஒன்றுகிய வேதாந்த பரிச்சேதத்தின் மொழிபெயர்ப்பே இந்த வேதாந்த சூடாமணியென்னும் நூல், பிரபுலிங்கலீலை முதலிய பலநூல்கள் இவ்வாசிரியராற் செய்யப்பட்டன.
வேதாந்தசூத்திரம்-வேதசாரங்களாகிய உபநிடதங்களை யெல்லாம் ஆராய்ந்துவேதவியாச முனிவரர் இயற்றிய சூத்திர ரூபமாகிய பிரமமீமாஞ்சை வேதாந்த சூத்திரம் எனப்படும், இதனை உத்தர மீமாஞ்சையெனவும் சாரீரக சூத்திரமெனவுங் கூறுவர், இந்த வேதாந்த சூத்திரம் நான்கு அத்தியாயங்களையும்,பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐஞ்ஞூற்றைம்பத்தைந்து சூத்திரங்களையும் உடையது.

இரண்டாம் அத்தியாயத்திலே சாங்கியம் முதலிய புறச்சமய விரோதபரிஹாரமும், மூன்றும் அத்தியாயத்திலேவித்யாசாதனநிர்ணயமும்,நான்காம் அத்தியாயத்திலே ஞானசாதனபலமாகிய வீடுபேறும் சொல்லப்படும்.

இதற்கு நீலகண்டர்,சங்கரர், மாத்வர், இராமானுஜர் நால்வரும் தங்கள் தங்கள் மதச்சார்பாக பாஷியம் செய்துளார்கள்.
வேதாந்ததீபம் - ஓர்நூல்.
வேதாந்ததேசிகர் - ஸ்ரீகாஞ்சியில்அநந்தசூரிகளுக்குத் தோதாரம்மன் திருவயிற்றிற் பிறந்தவர். இவர் அப்புள்ளாரிடம் பல நூல்களையுங் கற்றவர். இவர் வடகலைவைஷ்ணவாசாரியர். வடமொழியில் சிறந்த பண்டிதசிகாமணி,இவராற்செய்யப்பட்ட வடமொழி நூல்களும் தென்மொழி நூல்களும் பலவுள,வடமொழி நூல்களாவன த்ரவிடோப நிஷத்தாத்பர்யரத்நாவளிமுதலியன,தென்மொழி நூல்களாவன,தேசிகப்ரபந்த முதலியன, இவர் ஐந்நூறு வருடங்களுக்கு முன்னிருந்தவர். இவர் சரளமாகக் கவிசொல்லும் திறமைவாய்ந்தவர். கவிதார்க்கிக சிங்கமெனப் பெயரிட்டு அழைக்கப்பட்டவர். இவர் பராசபட்டர் சொற்படி மாயாவாதிகளை வென்றுபெருமாளால் வேதாந்த தேசிகத் திருநாமமும், பிரான்டியாரால் ஸர்வ தந்திர ஸ்வதந்திரர் என்ற திருநாமமும் பெற்றவர். அக்ஷோபயமுனி, வித்யாரண்யர் இவர்களுக்குண்டான வாதத்தை "அவிஜ்ஞாதத்வ மவிஜ்ஞ" என்பதனால் நியாயம் வரைந்து வித்யாரண்யரைப் பங்கப்படுத்தியவர். கிருஷ்ண மிச்சர் இயற்றிய பிரபோத சந்திரோதயத்திற்கு மாறுய்ச் சங்கற்ப சூர்யோதயஞ்செய்தவர். அழகிய மணவாள நயினார் நம்மிருவரில் யாவர் விடிவதற்குமுன் ஆயிரங்கவி செய்கின்றோ அவர்களுக்கே கவிதார்க்கிக சிம்மமென்னும் பெயர் தகுமென்று அழைக்க உடன்பட்டுப் பெருமாளைத் துதிக்கத் தொடங்கினர். அழகிய மணவாள நயினார் பதகமல சஹஸ்ரம் பாட ஆரம்பித்து முடிக்காது சோர்ந்தனர். இவரோ, பாதுகா சஹஸ்ரம் . என்னும் கிரந்தம் ஆரம்பித்து முடித்து அவரை வென்றனர். சிலரால் எவப்பட்ட பிரமசாரி ஒருவன் வந்து கலியாணத்திற்குப் பொருள்வேண்டுமென அவனைப்பிராட்டி சந்நிதியில் அழைத்துச் சென்று பொருள் கொடுப்பித்தவர், சுமதிகள்மந்திரத்தால் வாய்கட்ட அதைத் தாமே போக்கிக் கொண்டவர்.
வேதாந்தமார்க்கம்-ஆத்ம விசாரம்அமைந்த வாழ்க்கை.
வேதாந்தம்-(1)வைதிகம், வேதமுடிவு,அது

உபநிஷத்து எனப்படும் (2)உத்தரமீமாஞ்சை, அது அத்வைத மெனப்படும்.

வேதாந்தன் - அரன், அருகன், கடவுள்.

வேதாந்தாசாரியர் - (1)பராசரபட்டர், (2) வேதாந்ததேசிகர், வேங்கடநாதாசாரியர்

வேதாந்தி - வைதிகன், வேதமுடிவை யறிந்தவன், வேதாந்த நூலுணர்ந்தோன், அத்துவைதி, உலகப்பற்றற்றவ-ன்-ள்.

வேதாந்தியாழ்வான் - எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதிகளில்ஒருவராகிய வைஷ்ணவாசாரியர். [கூப்பயிலுதல்.

வேதாப்பியாசம் - வேதமோதல், வேதங்

வேதாரணியம்- திருமறைக்காடு,சோழநாட்டின் தென்புறத்திலுள்ள வொரு சிவஸ்தலம், வேதாரணியம் என்பதன் மொழிபெயர்ப்பு திருமறைக்காடு, வேதங்களால் பூசிக்கப்பட்ட தலமாதலால் இதற்கு வேதாரணிய மென்னும் பெயர் வழங்கலாயிற்று.

வேதாரன் - பல்லி.

வேதார்த்தன் - வேதப் பொருளானவன், கடவுள், வேதவேத்தியன்.

வேதாலபட்டர் - விக்ரமார்க்கன் சபையிலிருந்த வடமொழிப் புலவர். [ன்று.

வேதாளம் - ஓர் பிசாசம், பூதவகைகளிலொ

வேதாளி - காளி, சாமுண்டி, சண்டிகை.

வேதாளிகர் } வைதாளிகர், அரசரைப்புகழ்
வேதாளியர் } ந்து பாடுவோர்வகை.

வேதி - ஓமகுண்டம், கேட்டைநாள், மதில். வேதிகை, வேதியென்னேவல், வேதமோதுபவன், தாழ்ந்தவற்றையுயர்பொருளாக மாற்றுகை, அறிந்தவன், பிரமன்.

வேதிகை - குறடு, கேடகம், திண்ணை, பலிபீடம், மேடை, மணமேடை, பலகை, தெரு, வேறுபடுத்துகை, பூசைசெய்யுமிடம், தருமராஜன் மனைவி, த்ரௌபதி.

வேதிகைபீடம் - ஓமவேதி.

வேதிஜை-த்ரௌபதி, வேதிகை.

வேதிதம்-துளைத்தல், துளையுடைப்பொருள்.

வேதித்தல் - பிளத்தல், விகாரப்படுத்தல், வேருக்கல், நலிதல், தீற்றுதல்.

வேதித்தார்-பகைவர், ஒன்னலார், மேவலர்.

வேதித்துவம்-அறிவு, சைதன்னியம்.

வேதிப்பான்-வேதகஞ் செய்வோன்.

வேதியர் - பார்ப்பார், வேதமுணர்ந்தோர்.

வேதியன்-பிராமணன், பிரமன், சினேக்காரம்

வேதினம்-ஈர்வாள், கரபத்திரம், இரம்பம்.

வேதீசன்-பிரமன், நான்முகன், வேதன்.

வேது-காரமருந்து, வெய்து, வேதனை, வெட்பம், வேறுபாடு, சூடான ஒற்றடம்.

வேதுகுளித்தல்
வேதுகொள்ளுதல்
வேதுசெய்தல்
வேதுபிடித்தல்
} நீராவியால் தேகத்தைவேர்க்கச் செய்தல்.

வேதை -இரேகை,துன்பம்,பொன்னுக்கல், வேதித்தல், இரசவாதம், மணப்பொருத்தத்திலொன்று. [ஞக்குமருந்து.

வேதைச்சிந்தூரம்-உலோகங்களைப் பொன்

வேதைப்பொருத்தம் - மணப்பொருத்தத்தொன்று,வேதை.

வேதோக்தம் - வேதத்திற் கூறப்பட்டது, வேதவிதிக்கு இயைந்தது.

வேதோதயன் - சூரியன்,தினகரன், பானு.

வேதோபகரணம் - வேதானுசாரமானது.

வேதோபாங்கம்-வேதத்திற்குத்துணையான சிற்றுறுப்புக்கள்; அவை: புராணம், நியாயம்,மீமாஞ்சை,தருமசாத்திரம் என்பன.

வேத்தவை-இராஜசபை, வேந்தவை.

வேத்தன் - அறிந்தோன், வேத்தியன்.

வேத்தியம் - அடையாளம்,அறியத்தக்கது.

வேத்தியன் - அறியத்தக்கவன், வேத்தன்.

வேத்தியன்மண்டபம்-வேந்தனது பேரோலக்க மண்டபம், அரசன் சங்கமண்டபம்.

வேத்தியன்மலிபு - புறப்பொருட் டுறையிலொன்று; அது:மறமன்னனது மேம்பாட்டினை வீரர் விளம்புதலைச் சொல்லுவது.

வேத்திரகரன்-நந்திதேவன்,நந்தி, வெள்ளிவரைகாப்போன், வேத்திரதாரகன்.

வேத்திரகீயம்-ஏகசக்ரவனத்தில் உள்ள ஓர் நகர்,இதில் சிலநாள் குந்தி தேவியின் மைந்தர்களான பாண்டவர் இருந்தனர்.

வேத்திரச்சாய்-பிரப்பங் கோரை.

வேத்திரதரன் } கட்டியகாரன்,நந்திதே
வேத்திரதாரகன் } வன்,வாயில்காவலன்.

வேத்திரத்தாள் - பிரப்பங்கிழங்கு.

வேத்திரபாணி - கையில் பிரம்புடையவன்.

வேத்திரப்படை-பிரம்பாகிய ஆயுதம்.

வேத்திரம்-அம்பு, இலந்தை, பிரம்பு.

வேத்திரவதி-ஓர் நதி; இது: விதிசநதிக்குச் சமீபத்திலுள்ள பாரியாத்திரகிரியில் உற்பத்தியாகி யமுனையோடு கலப்பது.

வேத்திரன் - சகாதேவனுக்கு விசையையிடம் பிறந்தவன்.

வேத்திராசனம்- பிரப்பம்பாய். [போன்.

வேத்திரி - துவாரபாலகன், கடைகாப்

வேத்ராசுரன்-சிந்துத்வீபன் தவஞ்செய்கையில் வருணன் தேவியாகிய வேத்ரவதி அவ்விடம்வர, சிந்துத்வீபன் அவளைப்

புணர இவன் பிறந்தனன். தபோபலத்தால் தேவர்களே இவன் வருத்தத் தூர்க்கை இவனைக் கொன்றனள்.

வேந்தவை - இராசசபை, வித்தவை.

வேந்தன்-அரசன்,இந்திரன், சந்திரன், சூரியன், வியாழன். [பதவி, இராச்சியம்.

வேந்து-அரசன், இறைமை, இந்திரன்,அரச

வேந்துரு-ஏழாந் தலைமுறையிற் பிதா. [கு.

வேந்தோன்றி-காந்தள், கார்த்திகைக்கிழங்

வேபம்-சலனம், அசைவு, புடைபெயர்ச்சி.

வேபனம்-பயம், பீதி, வேபம். [நீர்.

வேப்பங்கள் - வேப்பமரத்தினின்று வடியும்

வேப்பத்தூர்-ஒரூர். இவ்வூர் கலியுகம் பதினாறாவது தாண்டாகிய ஜயவருடத்திலே சந்திரகுலசேகரபாண்டியன் அயோத்தியையிலிருந்து இரண்டாயிரத்தெண்மர் பிராமணரைக் கொண்டுவந்து குடியேற்றி தானஞ் செய்த வூர்களுள் ஒன்று.இது பாண்டி நாட்டில் இன்றும் பெரியதோர் அக்ரஹாரமாக விளங்குகின்றது.

வேப்பத்தூர்க்குமரன் - ஓர் சங்கப்புலவர், வேம்பற்றூர்க்குமரனார்.

வேப்பநெய்-வேப்பெண்ணெய். [மந்தம்.

வேப்பமரம்-வேம்பு, நிம்பம், பிரிதம், பிசு

வேப்பமுத்து-வேம்பின் கொட்டை.

வேப்பம்பாசி - நீர்ப்பூடுவகையி னொன்று.

வேப்பலகு-வேப்பிலை ஈர்க்கு.

வேப்பாலை-குடசப்பாலை. [குவிக்க முயலல்.

வேப்பிலையடித்தல்-குழையடித்தல், இணங்

வேப்பெண்ணெய் - வேப்பங் கொட்டையினின்று எடுக்கும் நெய், வேப்ப நெய்.

வேமநன்-இவர் சற்றேறக்குறைய மூந்நூற்றுப்பத்து வருடங்களுக்கு முன்னே விஜயநகரத்திலேயிருந்த ஒரு ஆந்திரகவி, இவர் மஹாஞானி, வேதாந்த சாஸ்த்ரங்களின் ஆராய்ச்சியில் மிகச் சிறந்தவர், இவராற் செய்யப்பட்ட நூல் அத்யத்புதமானது. இந்த நூல் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டுளது. அதன் பெயர் வேமநவெண்பா.

வேமம் } நெய்வார்கருவியினொன்று; அது:
வேமா } நெசவுதறி.

வேமானியர்-(விமானத்தாற் சஞ்சரிப்பவர்) தேவர், தெய்வமகளிர்.

வேம்பற்றூர்க்கண்ணன்கூத்தன் - ஓர் சங்கப் புலவர். [வேப்பத்தூர்க் குமரன்.

வேம்பற்றூர்க்குமரனார் - ஓர் சங்கப்புலவர்.

வேம்பனம்-கள், அரிட்டம், சொல்விளம்பி.

வேம்பன் - (வேப்பம்பூ மாலையை யுடையவன்) பாண்டியன், வேம்பின்றூரோன்.

வேம்பாணி - சிறுணி, சிறிய ஆணிவகை.

வேம்பாதல் - கசப்பாதல், வெறுப்புக்குரியதாதல், அருவருப்பாதல்.

வேம்பின்றூரோன்-பாண்டியன், வேம்பன்.

வேம்பு - வேப்பமரம், நிம்பம், நிம்பகம்,பிரிதம், விசிமந்தம், கசப்பு, வெறுப்பு, ஓர் புறத்துறை; அது: பாண்டியன் மகுடத்தின்மீதே பூனையும்மலரினைப் புகழ்ந்து கூறுவது.

வேயரிசி - மூங்கிலரிசி. [பனக் குடிவகை.

வேயர்-வேவுகாரர்,வேய்கள், ஒற்றர், பார்ப்

வேயல் - மூங்கில், சிறுமூங்கில், வேய்தல்.

வேயாமாடம் - நிலாமுற்றம், அரமியம்.

வேயாம் - இலந்தை, வேரடம். [மூடுகை.

வேயுள் - வேய்ந்த மாடம், வீடு, மலர்கை,

வேய்-உட்டுளைப் பொருள், ஒற்று, மூங்கில், வேயென்னேவல், மாடம், யாழ்,கவனஞ் செய்கை, குறளைச்சொல், ஒற்றன், ஓர் புறத்துறை; அது: ஒன்றினைத் தெரிந்து கொண்ட கூறுபாட்டினைக் கூறுவது.

வேய்கள்-வேவுகாரர்,ஒற்றர், தூதர்,வேயர்.

வேய்க்கண் - மூங்கிற்கணு. [புல்லாங்குழி.

வேய்ங்குழல்-மூங்கிற்குழல், புல்லாங்குழல்,

வேய்தல்-அணிதல்,அலங்கரித்தல், சூடுதல், வேயுள், சூழ்தல், வேய்ந்தமாடம், மூடுதல்,வீடு, பதித்தல், தூளியிடல்,மலர்தல்.

வேய்த்தல் - எய்த்தல், ஒற்றரால் செய்தியறிதல், வேவறிதல்.

வேய்ந்துணி - ஊதுகுழல், புல்லாங்குழல்.

வேய்ம்பரம்பு - மூங்கிற்பாய்.

வேய்வனம்- திருநெல்வேலித்தலம்.

வேய்வு - அணுப்பு, எய்ப்பு, மூடுதல்.

வேய்வை - யாழ்நரம்புக் குற்றவகை.

வேரகம் - கருப்பூரம், கர்ப்பூரம், சூடன்.

வேரச்சுக்கொடி - சந்தனவகை. [டை.

வேரடம்-இலந்தைப்பழம்,கோலம், கோண்

வேரடன் - நீசன், ஈனன்.

வேரமுட்டி - பேராமுட்டி.

வேரம் - சரீரம், சலஞ்சாதித்தல், சேம்பு, மஞ்சள், முகில், வைரம், வெகுளி, அடப்பங்கொடி, கோபுரம், செய்குன்று,மேகக் கூட்டம்.

வேரல் - மூங்கில், மூங்கிலரிசி, வேர்க்கை.

வேரறுத்தல்-அடிகெடுத்தல், நிருமூலமாக்குதல், கட்டழித்தல், முற்றுமழித்தல்.

வேரி - கள், தேன், வாசனை, வெட்டிவேர், ஓமாலிகை மூப்பத்திரண்டனு ளொன்று.

வேரிச்சுமம் - வெள்ளெருக்கு.

வேரிபீதகம் - இருவேலி, பிச்சம், வெனப் பிலி, பீதகம்.

வேரூன்றல் } வேர்பதிதல், வேர்க் கொ
வேரூன்றுதல் } ள்ளல்.

வேரோடுதல் - தூர்விடுதல், வேரூன்றல்.

வேர் - காரணம், கோபம், திப்பிலிமூலம், அடிப்படை, வேர்போன்றது, வேரென் னேவல், வேர்வை, மரவேர், குறுவேர்.

வேர்கல்லுதல் - நிர்மூலஞ் செய்தல். [டை.

வேர்க்கடலை-நிலக்கடலை, மணிலாக் கொட்

வேர்க்குச்சு-ஓர் குச்சுப்புல், நெய்வார்கருவி.

வேர்க்குரு-வெகுர், வியர்வையால்வரும்பரு.

வேர்க்குறி - சினக்குறிப்பு. [சுக்கு, நாகரம்.

வேர்க்கொம்பு-இஞ்சி, அல்லம், நறுமருப்பு,

வேர்க்கொள்ளல் - வேரூன்றல், வேர்பதி தல், வேர்தரிகொள்ளல்.

வேர்த்தல்-கோபித்தல், சினத்தல், வியர்த் தல், அஞ்சுதல், பயப்படுதல்.

வேர்த்துக்கொட்டுதல் - வேர்த்துவடிதல்.

வேர்த்துவடிதல் - வேர்த்துக் கொட்டுதல், அதிகமாக வேர்வைநீர்வடி தல், பொறுப் பின்மையைக் குறிக்குஞ் சொல்.

வேர்ப்படலம் - கண்ணோயு ளொன்று.

வேர்ப்பு - கோபம், வியர்வு, வியர்வை, வேர்வைப்புழுக்கம்.

வேர்வாசம் - இலாமிச்சை, வெட்டிவேர்.

வேர்விடுதல் } வேரூன்றுதல்.
வேர்விழுதல் }

வேர்வு - மாயையாக்கை,பதினெண் குற்றத் தொன்று.

வேர்வை - வியர்வை, வியர்வு, வியர்.

வேலசம்-மிளகு, மரீசம், மிரியல், திரங்கல்.

வேலப்பதேசிகர்-திருவாவடுதுறையாதீனத் தில் மகா பெருமையுற்ற தேசிகர். இவரி யற்றிய நூல் திருப்பறியலூர்ப் புராணம்.

வேலமரம் - ஓர் மரம், உடை, வேலம்.

வேலம் - தோட்டம், வேலமரம்.

வேலம்பட்டை - வேலமரத்துப் பட்டை.

வேலம்பாசி - ஓர் பாசி, ஓர் பூடு.

வேலம்பிசின் - வேலமரப் பிசின்.

வேலருவி - வேலொழுங்கு. [காடல்.

வேலஞ்டல்-தேவர்க்காடுங் கூத்து, அணங்

வேலன்-முருகன்,வெறியாட்டாளன்,முருக பூசனைசெய்பவன்,வேற்காரன்,வேலான்.

வேலாமூலம் - கடற்கறை, கடலருகு.

வேலாயுதம் - வேல், எஃகம், அயில்.

வேலாயுதன்-குமரன், முருகக்கடவுள், வே லாவது சக்தியின் கூட்டம், அது மூன்று சதுஷ்கோணங்களாற்குறிக்கப்படும்,இச் சாசக்தி,ஞானசக்தி,க்ரியாசக்திஎன்னும் மூன்றன் பரசொரூபம் முக்கோணமாக வும், அவற்றின் அபரசொரூபம்அந்தமுக் கோணத்தின் பாதகோணமிரண்டையும் ஆதாரமாகக் கொண்டு முக்கோணமாக வும் விரிந்து இரண்டுங்கூடி நாற்கோண மாகும்.

அந்த அதோமுக முக்கோணத்தின் நுனியினின்றும் பின்னும் அந்தச் சக்தி கள் தம்முள்மாறி, இச்சையிற் கிரியை, கிரியையில் ஞானம், ஞானத்திலிச்சை எனக் கூடித் திரிகோணமாகும், அந்தத் திரிகோண பாதத்திலிருந்து அபர சொ ரூபமாகிய முக்கோண முதிக்கும், அவை யிரண்டுங்கூடி மத்ய சதுஷ்கோணமா கும், அதன் அதோமுக கோணத்தினின் றும் மீளவும் அந்தச் சத்திகள் தம்முள் மாறிக்கூடி முக்கோணமாகும்,அதினின் றும் பின்னும் முக்கோணமாகக் கூடிச் சதுஷ்கோணமாகும், இந்த மூன்று நாற் கோணங்களுமே வேலாயுதமாம்.

முதற் சதுஷ்கோணத்தில், இச்சா சக்தியும், மத்ய சதுஷ்கோணத்தில் ஞா ன சக்தியும், பாத சதுஷ்கோணத்தில் க்ரியாசக்தியும் உதித்துநிற்கும். இந்தச் சக்திகளெயெல்லாம் ஆயுதமாகக் கொண் ட கடவுள் என்பதே வேலாயுதன் என் னுஞ் சொற்குப் பொருளாம். அற்றேல், வள்ளிதெய்வயானைகளைச் சக்திகளென்ப தென்னெனின், அதுஉண்மையே; ஞான மே வடிவாகவுள்ள சுப்பிரமணியக் கடவு ளுக்கு இச்சாசக்தியும் க்ரியாசக்தியும், உபசக்திகளாம், ஞானசக்தியை விட்டு அவையிரண்டும் நீங்கா வாதலால் தேவி களாகப் பாவிக்கப்பட்டன.

ஞானமே சுப்பிரமணியக் கடவுளுக்கு வடிவ மென்பதற்கு, "ஞானந்தானுருவா கிய" என்னுங் கந்தபுராணச் செய்யுள் பிரமாணமாம். அற்றேல், ஆறுமுகங்களா ல் குறிக்கப்படுவன யாவையோவெனின், அவை சிவன், சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிரமா என்னும் அறுவரதுதொகுதிருபங்களேயாம், அது பற்றியே அறுவர்க்கு மூரியதொழில் களெல்லாம் முருகக்கடவு ளிடத்திலே யுளவாகப் புராணங்கள் கூறுவது என்ற றிக.

வேலாவலயம் } கடல், கார்கோள், வாரிதி,
வேலாவலயம் } பூமி, காசினி, குவலயம்.

வேலாழி - கடல், பௌவம்.
வேலான் - வேற்படை தாங்கியவன், வேற் காரன், வேலன்.
வேலி - ஊர், ஐந்துகாணிநிலம், காவல், நிலத்தளவையிலொன்று, மதில், நிலம், வயல், உத்தாமணி, பசுக்கொட்டில், வேலிப்பருத்தி, ஓசை, காற்று, முள்ளிலவு.
வேலி கட்டுதல் } வேலியடைத்தல்.
வேலிகொளுவுதல் }
வேலிகம் - கற்முழை. [கட்ட நடுங்கழி.
வேலிக்கால் - கதிகால், வேலியருகு, வேலி
வேலிபோடுதல் - வேலிகட்டுதல்.
வேலிப்பயிர் - தோட்டப்பயிர்.
வேலிப்பருத்தி - உத்தாமணி, பிசுகம்.
வேலிப்பாகல் - கொல்லம்பாகல்.
வேலிமுறித்தல் - வேலியழித்தல்.
வேலிமூங்கில் - பூடுவகையி லொன்று.
வேலியடைத்தல் - வேலிகட்டுதல்.
வேலிறை } குமரன், வேலாயுதன்,
வேலினுக்கிறை } கந்தன் முருகன்.
வேலூர்-ஓய்மாநாட்டு நல்லியக்கோடனென் பவன் முன்னர் ஆண்டவூர்; இதன் வரலாறு சிறுபாணற்றுப்படையால் விளங்கும். இது உப்பு வேலூர் என வழங்கும். திண்டிவனத்துக்குவடக்கின்கணுள்ளது
வேலூர்க்கிழான் - தொண்டைநாட்டுக் கும ழம்பட்டுக் கிராமத்து இருந்து பலவித்து வான்களை ஆதரித்த வேளாளன்.
வேலேறு - வேல் தைத்தபுண்.
வேலை - அவமிருத்து, இக்கு, இளைப்பாற்றி, எல்லை, கடல், கடற்கரை, கரை, கரும்பு, காலம், செய்பொருள், தொழில், காரியம், வேலைப்பாடு, வேலைத்திறன், நிகழ்காலம், நோய், பணி, புனற்றிரை, பொழுது, வெண்காரம், உத்தியோகம், கானல், மேரு புத்ரி, சமுத்ர ராஜன் மனைவி.
வேலைகாட்டுதல்-வேலைத்திறமை காட்டல்.
வேலைகொள்ளுதல் - வேலை வாங்குதல், ஒன்றில் அதிக வேலை செய்யநேரிடுதல்.
வேலைக்கள்ளி-வேலை செய்யாமல் ஏமாற்று பவள். [திறம், வேலைத்தனம், வேலைப்பாடு
வேலைக்காரத்தனம்-வேலைத்திறன், வேலைத்
வேலைக்காரன் - ஊழியன், தொழிலாளி, தொழிலில் வல்லவன், தந்திரசாலி.
வேலைக்காரி - பணிப்பெண், தந்திரக்காரி.
வேலைக்காலம் - வேலை செய்யும் நேரம்.
வேலைசெய்தல் - தொழிலியற்றுதல், தந்திரஞ்செய்தல், வேலைத்தனம் பண்ணுதல்.
வேலைதீர்த்தல் - வேலை முடித்தல்.
வேலைத்தலம் } வேலை நடக்கு மிடம்.
வேலைத்தலை }
வேலைத்தனம் - வேலைத்திறமை, வேலைத் திறன், வேலைக்காரத்தனம், வேலைப்பாடு.
வேலைத்தனம்பண்ணுதல்-வேலைத் திறமை காட்டுதல், குறும்பு பண்ணுதல்.
வேலைத்திறமை } வேலைத்தனம், வேலைக்
வேலைத்திறம் } காரத்தனம்.
வேலைத்திறன் }
வேலைநேரம் - வேலை செய்தற்குரிய நேரம்.
வேலைப்பரிட்சை } வேலைப் பழக்கம்.
வேலைப்பரீட்சை }
வேலைப்பாடு } வேலைத் திறமை வேலைத்
வேலைமானம் } திறன், வேலைத்தனம்.
வேலைமினக்கெட்டவன் - பயனற்றவேலையில் வீணுய்க் காலத்தைப்போக்குபவன்.
வேலையசுவாமிகள் - குமாரசுவாமி தேசிகரின் குமாரர். துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் சகோதரர். இவர் தருமபுரம் வெள்ளியம்பலத் தம்பிரானிடம் ஐந்திலக்கணமும் கற்றுச் சகோதரரை நீங்காதவராய் இருந்து தம்இரண்டு சகோதரர்களுக்கும் பின் ஐக்கியமாயினர். இவர் இயற்றிய நூல்கள் கைத்தல மாலை, வீரசிங்காதனபுராணம், குகை நமச்சிவாயலீலை, பாரிசாதலீலை, மயிலத் திரட்டைமணிமாலை, மயிலத்துலா.
வேலையாள் - கூலிக்கு வேலைசெய்பவன், வேலைக்காரன், ஊழியன்.
வேலையிற்றுயின்றோன்-விட்டுணு, திருமால்.
வேலைவாங்குதல் - பிறனை வலி வேலை செய்வித்தல், வேலை கொள்ளுதல்.
வேல் - ஆயுதப்பொது, ஓர் மரம், கைவேல், சூலம், மூங்கில், வேலாயுதம், வல்லயம், திரிசூலம், வெல்லுகை, பகை, உடை.
வேல்கந்தி - சிறுபுள்ளடி, அங்குசபாதி.
வேல்லஜம் - மிளகு, கோளகம், திரங்கல், மிரியல்.
வேல்லி - கொடி, இலதை, வள்ளி, வல்லி.
வேல்லிதம் - நடை. [பம், உபத்திரவம்.
வேவம் - தனிமை, ஏகாந்தம், தனிப்பு, துன்
வேவாள் - வேவுகாரன், ஒற்றன், சாரன்.
வேவித்தல் - வேகச்செய்தல்.
வேவு - ஒற்று, வேதல், வேவெண்னேவல்.
வேவுகாரர் ஒற்றர், சாரர், சாரணர்.
வேழக்கரும்பு - பேய்க்கரும்பு, நாணற் கரும்பு; இது சிறு விரல்போற் சிறியதாயிருக்கும், சோழ தேசத்தில் மிகுதியாயுண்டு.

வேழக்கோது - சாறுநீங்கிய கரும்புச்சக்கை
வேழமூர்தல் - யானையேற்றம், கசபரீட்சை,
வேழம்-கரும்பு, கொறுக்கை, நாணல், மூங்கில், யானை, இசை, பீர்க்கு, விளாங்கனிக்கு வருவதோர்நோய், பரணிநட்சத்திரம்.
வேழம்பம் - ஏளனம், பரிகாசம், வஞ்சகம்.
வேழம்பர் - கணழக்கூத்தர், விதூஷகர்.
வேழவெந்தீ - யானைத்தீ நோய்.
வேளன்-குயவன், வேளாளரிலோர் பகுதியான், வேளான்.
வேளா - கடல் மீன்வகையி லொன்று.
வேளாஞ்செட்டிகள் - வேளாளரில் ஒரு வகுப்பு. இவர்கள் தக்கனை வேளாளரினுஞ் சிறந்தவர்களென்றுசொல்லிக்கொள்வர்.
வேளாட்டி - வெள்ளாட்டி, ஏவற்பெண்.
வேளாண்குலர் - குயவர், வேட்கோவர்.
வேளாண்மாபியல் - ஓர் நூல். [ரியல்பு.
வேளாண்மாந்தரியல்பு-வேளாண்மைமாந்த
வேளாண்மாந்தர் - வேளாளர், காராளர்.
வேளாண்மை - ஈகை, உபகாரம், கொடை, பூவைசியம், நெய், சத்திரம், உண்மை.
வேளாண்மைமாந்தரியல்பு - அழிந்தோரை நிறுத்தல், ஆனைவழி நிற்றல், ஒக்கல் போற்றல், ஒற்றுமைகோடல், ஓவா முயற்சி, கசிவகத்துண்மை, கைக்கடனுற்றல், திருந்திய ஒழுக்கம் மன்னிறைதருதல், விருந்து புறந்தருதல் ஆகப்பத்துக்குணம்.
வேளாண்மைமாந்தர் - வேளாண்மாந்தர்.
வேளாண்வாகை - ஓர் புறத்துறை; அது: வேளாளன் செய்தற்குரிய கடமைகளை நிறை வேற்றலைக் கூறுவது.
வேளாண்வேதம் - நாலடியார், நாலடி.
வேளாவளி - இராகம் முப்பத்திரண்டி லொன்று, செவ்வழிக்குப்புறமான பண் திறவகை.
வேளாவிக்கோ-தகடுசெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் தாயாகியபதுமன்றேவிக்குத்தந்தை. [வைசியர்பொதுப்பெயர்.
வேளாளர்-ஈகையாளர், பூவைசியர், மூவகை
வேளாளர்செய்கை - வேளாண்மாந்தரியல்பு, வேளாண்மைமாந்தரியல்பு.
வேளான் - குயவன், வேளாளரிலோர் பகுதியான்.
வேளிர் - குருநிலத்தரசர், சளுக்குவேந்தர், தமிழ்நாடாண்ட ஒருசார் அரசர் குலத்தார்.
வேளுங்கு } வேம்பாடம், வேம்பாடை, பப்
வேளுங்கு } பிளி. [ருக்கு வேளுர்.
வேளுர் - வைத்தீஸ்வரன் கோயில், புள்ளி

வேளை - ஓர் பூடு, காலம், நேர்ந்துகட்டுகிற வினை, ஊதவேளை, நாய்வேளை, கருமவினை.
வேளை பூணல் - மன்றுடுதல். [ட காலம்.
வேளைப்பிழை - அரிட்டம், அரிஷ்டம், கெ
வேளைவெந்தை - வெந்த வேளைக்கீரை.
வேள் - ஆசை, ஆண்மகன், உபகாரம், குமரன், மண், மன்மதன், சாளுவன், கலியாணம், பண்டைத்தமிழரசரால் வேளாளர் பெற்ற ஒரு சிறப்புரிமைப் பெயர்.
வேள்எவ்வி - ஒரு வேளாளனுகிய வள்ளல். வெள்ளெருக்கிலையாரால் பாடல் பெற்றவன். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனுல் வெல்லப்பட்டவன். வேள் பாரியை இவன் குலத்தவனென்பர்.
வேள்பாரி - கடையெழுவள்ளல்களில் ஒருவன். இவனை வேளாளன் என்பர்.
வேள்புலம் - சளுக்கியரது நாடு, சாளுவம்.
வேள்புலவரசர் - சாளுவர், சளுக்குவேந்தர்.
வேள்வி - ஆராதனை, ஈகை, ஓமகுண்டம், மகநாள், யாகம், கல்யாணம், உபகாரம், பன்னிரண்டாமிடம். [லியன உதவும் பசு.
வேள்விக்கபிலை - யாகத்திற்குப் பால் முத
வேள்விக்குண்டம் - ஓமகுண்டம். [நாயகன்.
வேள்விக்குவேந்தன் - இந்திரன், வேள்வி
வேள்விச்சாலை - யாகசாலை, ஓமமண்டபம்.
வேள்வித்தறி
வேள்வித்தூணம் } யகத்தம்பம், யூபம்.
வேள்வித்தூண் [வேந்தன்.
வேள்விநாயகன் - இந்திரன், வேள்விக்கு
வேள்விநிலை-ஓர் புறத்துறை; அது: அரசன் யாகம்பண்ணினபெருமையைக் கூறுவது
வேள்விப்பசு - யாகப்பசு.
வேள்வியாசான் } யாகஞ் செய்விக்கும்
வேள்வியாசிரியன் } புரோகிதன்.
வேள்வியாளர் - ஈகையாளர், பார்ப்பார். வேள்வியை யுடையவர்.
வேள்வியின்பதி-திருமால், விஷ்ணு, முராரி, சலசலோசனன்.
வேள்வியைந்து - பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம் என ஐந்துவகையாகும்.
வேள்வு - அரும்பண்டம், மணவரிசைப் பண்டம், யாகம், மகம். [ண்டு போதல்.
வேள்வெடுத்தல் - பலபண்டந் தேடிக் கொ
வேறல் - வெல்லுதல், வெற்றி கொள்ளல்.
வேறுதல் - பிரிதல், வேறுபடுதல், சிறப்புடையதாதல் ஒதுக்காதல், தனியாதல்.
வேறுநிலை - ஓரிடப்பெயர். இந்திரனை விட்டுப் பழியகன்று வேறுய்நின்ற இடம்.
வேறிடம் - ஏகாந்தம், தனியிடம், தனிமை.

வேறு - மற்றது,பிரிந்தது, கூறுபாடு, தீங்கு, தனி, வேற்றுமை யுடையது,மற்றையது.
வேறுசெய்தல் - பிரித்தல்,பகை விளைத்தல்.
வேறுநினைத்தல் - விபரீதமாக நினைத்தல்.
வேறுநினைவு - கவனமின்மை, பராக்கு.
வேறுபடுதல் - பிரிதல்,வேறுதல், குலைதல்.
வேறுபடுத்தல் } பிரித்தல்,மாற்றுதல்
வேறுபடுத்துதல் } வித்தியாசப்படுத்துதல். மித்திரபேதஞ்செய்தல்.
வேறுபாடு - விகற்பம், வேறுபடல், வேற்றுமை, வித்தியாசம்.
வேறுபாட்டொழிப்பு - அபநுதியலங்காரத் தொன்று; அது: அன்னியத்தி லாசோபித்தற்பொருட்டு அவன்னிய தருமத்தை யொழித்தல்,(உ-ம்)தெரியுமது திங்களன்றரிவை முகமேதிங்களாம்.
வேற்கண்ணியம்மை - திருவேற்காட்டிலே கோயில்கொண்டிருக்கும்தேவியார்பெயர்.
வேற்காட்டீசுரர் } திருவேற் காட்டுச்
வேற்காட்டீசுவரர் } சுவாமி பெயர்.
வேற்கோட்டம்-முருகவேணிற்குங்கோயில்
வேற்றலம் - கசற்று, வாதம், கால், வளி.
வேற்றவன்-அயலான்.வேற்றூர்ள், பகைவன்.
வேற்றூனை-தானைவகை, வேற்படை.
வேற்றுக்காற்று - அபானவாயு.
வேற்றுக்குரல்-மாறுகுரல், அன்னியர்குரல்.
வேற்றுத்தாய் - மாற்றுந்தாய்.
வேற்றுநிலைமயக்கு
வேற்றுநிலைமெய்மயக்கம்
வேற்றுநிலைமெய்மயக்கு
வேற்றுநிலைமெய்ம்மயக்கம்
வேற்றுநிலைமெய்ம்மயக்கு } கசதபவொழிந்தமெய்கள் ஒன்றே டொன்று மயங்கி வருவது, கசதப வொழித்த வீரேழன் கூட்டம்.
வேற்றுப்படைவரவு- ஓர் புறத்துறை; அது: போர்மிகு வேலான்சூழ்தல்விட்டுப்போக வேற்று வேந்தன் வரவினைக் கூறுவது.
வேற்றுப்பொருள்வைப்பணி } ஓர் லங்காரம்; அது: முன்னொரு பொருட்டிறந்தொடங்கிப் பின்னதனை முடித்தற்கு வலிதுடைப் பிறிதொரு பொருளையுலகறிபெற்றியான் வைத்து மொழிவது; இது: முழுவதுஞ் சேறல், ஒருவழிச்சேறல், முரணிற்றோன்றல், சிலேடையின் முடித்தல், கூடாவியற்கை, கூடுமியற்கை, இருமையியற்கை, விபரீதம் என எண்வகைப்படும். இதனை அர்த்தாந்திர நியாயாலங்காரம் என்பர் வடநூலார்.
வேற்றுப்பொருள்வைப்பு }
வேற்றுமனனுன்-பரபுருடன்,சோரநாயகன்
வேற்றுமனிதன் - அன்னியன், அறிமுகமிலான்.
வேற்றுமுகம் - மாறுமுகம், அன்னியமுகம்.
வேற்றுமை - பதங்கள்புணருமிருவகைச்சந்தியுளொன்று; அஃது: எழுவாய்முதலிய வுருபுகள்பெறநிற்பது, வேறுபடல்,வித்தியாசம், வேறுபாடு, வேற்றுமையணி.
வேற்றுமைகாட்டுதல்-வித்தியாசங்காட்டல்
வேற்றுமைத்தொகை- வேற்றுமையுருபுகள் தொக்கு நிற்பது. [முறை.
வேற்றுமைநயம் - வேறுபடுத்திப் பார்க்கும்
வேற்றுமைப்புணர்ச்சி- பேரும்விளியுமல்லாத ஐமுதலிய வாறுருபும் விரிந்தேனுந் தொக்கேனும் புணர்வது.
வேற்றுமைப்பொருள்விலக்கு- ஓரலங்காரம் அஃது:ஒப்புடையவா யிருக்குமிருபொருளை யொருங்கு வைத்துக் காட்டியொன்றை விலக்கி வேற்றுமைப் படுத்திச்செல்லுதல்
வேற்றுமைமயக்கம் } வேற்றுமை யுருபுகளொன்றுபிறிதொன்றற்காக மயங்கி நிற்பது, உருபுமயக்கம்
வேற்றுமையணி-ஓரலங்காரம்; அஃது: உபமானோபமேயங்களு ளொன்றைவிசேடமுடைத்தாய்ச் சொல்லுதல்.
வேற்றுமையுருபு - தன்னையேற்ற பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது; அஃது: ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன.
வேற்றுமையுருவகம்-ஓரலங்காரம்;அது: குணப்பொருளையு முக்கியப் பொருளையு மொருபண்புடைத் தெனக்காட்டி முக்கியப் பொருட்கோர் வேற்றுமையுடைத் தெனக்கூறுவது. [நிற்பது.
வேற்றுமைவிரி - வேற்றுமையுருபு விரிந்து
வேற்றுரு - மாறுரு, மாற்றுருவம், மாறுவேடம்.
வேற்றுவன் - அயலான்,அன்னியன்,பிறன்.
வேற்றுவேடம் - மாறுவேடம்,வேற்றுருவம்
வேற்றொலிவெண்டுறை - பல ஓசைத்தாய் வரும் வெண்டுறை; அது: முன்பிற் சிலவடி யோசோசையாயும் பின்பிற் சிலவடி மற்றோசோசையாயுமாகிமருவதாம். [லம்
வேனல்-கானல்,தினம்,வெப்பம்,வேனிற்கா
வேனன் - சுவாயம்புவமநுவின் வமிசத்தில் அங்கன்மகன்,ப்ருது சக்ரவர்த்தி தந்தை, வேனன்புதல்வரின்றியிறக்க,அவன்தொடையெலும்பை யெடுத்துக் கடைந்தபோது இந்தப்ருது சக்ரவர்த்தி பிறந்தான்.

வேனிலவன் - வேனிலான். வேதிலாளி.
வேனிலாளி } மன்மதன்,மாரன்,சித்தசன்
வேனிலான் } வசந்தன், அங்கசன்.
வேனில் - கோடைகாலம், வேனிற்காலம், அழகு, ஒப்பனை, பேய்த்தேர், பொலிவு.
வேனில்மாலை-ஓர்பிரபந்தம், வேனின்மாலை
வேனில்வேள் - வசந்தகால மன்மதன்.
வேனிற்காலம் - கோடைகாலம், கோடை.
வேனிற்பள்ளி - நிலாமுற்றம்,வேயாமாடம்.
வேனிற்பாசறை - போர்மேற் போனவேந்தன் வேனிற்காலத்துத் தங்கும்படைவீடு
வேனின்மாலை - ஓர்பிரபந்தம்; அஃது: இரு வேனிலையுஞ் சிறப்பித்துக் கூறுவது.
வேனெடுங்கண்ணியம்மை-திருவெண்டுறையிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்.
வேன் - வியன், மிகுதி, அதிகம்.
வேன்காணுதல்-அளவில்அதிகமாயிருத்தல்
வேன்மகன் - முருக பூசனை செய்பவன், வேலன்.
வேஜார் - பயனின்மை. வீண்.
வேஷகம் - காதணிவகை, வேடகம்.
வேஷக்காரன் - வேஷதாரி, வேடதாரி.
வேஷங்கட்டுதல் - மாறுவேடம் தரித்தல்.
வேஷதாரி - நயவஞ்சகன், வேஷம்பூண்டவன்.
வேஷம் - பாசாங்கு, மாற்றுருவம்.
வேஷம்போடுதல் - பாசாங்கு செய்தல்,வேஷங்கட்டுதல்.
வேஷன் - குரோதகீர்த்தியின் மகன்.
வேஷ்டகம் - பிசின், பிசினி, பசை, பயின்.
வேஷ்டணம் - சுற்றுகை, காப்புக்கட்டுகை.
வேஷ்டி - ஆடவர் அணியும்ஆடை [திரியம்.
வேஷ்டை - உபத்திரம், உபத்திரவம்,உபத்

வை

வை - ஓர் உயிர்மெய்யெழுத்து, கூர்மை, புல், வைக்கோல், வையகம், வையென்னேவல் தொழிற்பெயர்விகுதியுள் ஒன்று.
வைகடசம் - உத்தரியம், உத்தரீகம்.
வைகடிகன் - இரத்தினங்கள் சாணை தீர்ப்போன்.
வைகட்சம் - உத்தரியம், வைகடசம்.
வைகத்தன் - துவாதசாதித்தரிலொருவன்
வைகமூலி - சல்லிக்கொடி.
வைகரி - அகங்காரம் மூன்றி லொன்று, திட்டம்,தெளிவாகக்காதுக்குக்கேட்கும் அட்சரவடிவான ஒலியாம்; அது: வாக்கு நான்கி லொன்று.
வைகரியகங்காரம் } சத்துவ குண மேனும்
வைகரியாங்காரம் } இராசதகுணமேனும் மேலிட்டிருப்பது; அது: மூவாங்காரத் தொன்று, வைகாரி, வைகாரிகம்.
வைகர்ணம் - திருப்பாற்கடலின்வடபாகத் திலுள்ள திருமாலின் ஆலயம்.
வைகர்த்தனன் - கர்ணனுக்கு ஒரு பெயர்.
வைகர்த்தன் - ஓர் சூரியன், வைகர்த்தன்.
வைகர்மன்-ஓர் முனிவரன். [தோறும்.
வைகலும்-நாடோறும்,நாள்தோறும், தினந்
வைகல்-கழிவுநாள், தங்கல், நாள், விடியல், வேளை, வைகறை. [தகுதியின்மை.
வைகல்லியம்-கலக்கம், குறைவு, சூனியம்,
வைகறை - விடியல் முதற்பத்து நாழிகையளவு காலம், விடியற்காலம்.
வைகறைப்பாணி - அதிகாலையிற்கொட்டும் வாச்சிய வொலி.
வைகறைப்பொழுது - இரவிற் கடையாமம்.
வைகறையாமம் - விடியுமுன்னுள்ளயாமம்.
வைகற்பிகம் - ஐயம், சந்தேகம்.
வைகாசம் - வைகாசி மாதம், விசாகம், விடியற்காலம்,வைணவாகமமிரண்டிலொன்று
வைகாசி - ஓர் மாதம், விசாகம், வைகாசம், முற்றில், காற்றுநாள். [யுங்காவிரியாறு.
வைகாசிவசந்தன் - வைகாசி மாதத்திற் பா
வைகாநசம்-வைணவாகமத்தொன்று, பாஞ்சராத்திரஆகமத்தின்பகுப்பு வைகானசம்
வைகாநசர் - வனவாசிகள், (1)வைணவவாகமத் தொழுகுபவர்கள் (2)விகனஸருஷிக்குஒருபெயர்.இவரால் வைகாநசம் செய்யப்பட்டது. (3)பிரமன்சபையில்உள்ள இருடிகள். (4) வானப்பிரஸ்தாச்சிரமத்துப்பகுப்பினர்: தானேவிளையும்தானியத்தால்சீவிப்பவர்.(5)மாலுதானருஷிபிதா.
வைகாயசம் - பலியின் விமானம்; நினைத்த இடம் செல்லத்தக்கது. [மலை.
வைகாரம்-கிரிவிரசத்துக்கு அரணுய் உள்ள
வைகாரி - சத்துவகுணம், சத்துவம்.
வைகாரி } வைகரியகங்காரம், வைகரி
வைகாரிகம் } யாங்காரம்.
வைகார்ப்பு - இடையூறுத ஆரவாரம்.
வைகாலம்-சாயங்காலம், சாயரட்சை,மாலை.
வைகானசம் - ஓராகமம், வைகாநசம்.
வைகிராந்தம் - ஒருவகை இரத்தினம்.
வைகிருதம் } வெறுப்பு, உவப்பின்மை.
வைகிருத்தியம் }
வைகிருள் - விடியற் காலத்திருள்.

வைகுசுடர் - இரவு பூராவும் எரியும் தீபம்.
வைகுண்டஏகாதசி - மார்கழிமாதத்துச்சுக்கில பக்கத்து ஏகாதசியன்றுதிருமாலின் பொருட்டுக் கொண்டாடப்படும் திருநாள்.
வைகுண்டசதுர்த்தசி - கார்த்திகை மாதம் சுக்ல பக்கத்தில் வரும் பதினாலாந் திதி.
வைகுண்டசதுர்த்தசிவிரதம் - ஓர் விரதம்; இது: கார்த்திகை மாதம் சுக்லபக்ஷத்துச் சதுர்த்தசியில் அநுஷ்டிப்பது, இவ் விரத மநுட்டிப்போர் சகல சித்தியும் பெறுவர்.
வைகுண்டச்சல்லா - பிணத்தைமூடும் சீலை. வெலவெலப்பான துணி.
வைகுண்டநாதன்-திருமால், விஷ்ணு, வைகுந்தநாதன்.
வைகுண்டம் - திருமானகரம், தும்பை.
வைகுண்டவாசி - வைகுண்டநாதன்.
வைகுண்டவேகாதசி - வைகுண்ட ஏகாதசி.
வைகுண்டன் - திருமால், வைகுந்தன்.
வைகுண்ணியம்-ஒவ்வாமை, குணமின்மை, குறை.
வைகுதல் - இராத்தங்கல், இருத்தல், ஏசுதல்,வற்றுதல், போதுகழிதல், புணர்தல்.
வைகுந்தநாதன் - வைகுண்டநாதன், விஷ்ணு.
வைகுந்தம் - திருமாலுலகம், வைகுண்டம்
வைகுந்தன் - வைகுண்டநாதன், வைகுண்டன், நாராயணன்.
வைகுல்லியம் - எதிரிடை, வைகூலியம்.
வைகுறு-வைகறை. [தோன்றுஞ் சுக்கிரன்.
வைகுறுமீன் - விடிவெள்ளி, பின்னிரவில்
வைகுறுவிடியல் - அருணோதய காலம்.
வைகூலியம் - எதிரிடை, வைகுல்லியம்.
வைகை - மதுரையாறு, வையை, வேகவதி நதி,இது பாண்டி நாட்டிலுள்ளது,இதன் கரையில் மதுரைமாநகரம் என்றொரு பெரிய பட்டணமுண்டு, இந்த வைகை நதிக்கு வேகவதி யென்ற பெயர், வேக முடையதாதலால்உண்டானபெயர் குண்டோதரனுக்குத் தாகந்தணிக்கச் சிவஞ்ஞையால் வந்தது.

திருவாத வூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டு, கரைகடந்து பெருகிய இந்த நதியின் கரையின் ஒரு கூற்றைச் சிவபெருமான் செம்மனச்செல்வி யென்னும் பிட்டுவாணிச்சிக்குக் கூலியாளாகி,மண்சுமந்து அடைப்பார் போன்று திருநடம்புரிந்தார், இச்செய்தி முழுதும் திருவாத வூரடிகள் புராணத்திலும், திருவிளையாடற் புராண முதலிய பல நூல்களிலும் விரிவாய்க் காணலாம்.
வைகைத்துறைவன் - பாண்டியன், மாறன்.
வைக்கல் - வைக்குதல், வைத்தல், வைக்கோல், இடுதல்.
வைக்கிராந்தம்-பாஷாணவகையிலொன்று.
வைக்குதல் - வைத்தல், வைக்குதல்.
வைக்கோல் - நெற்பயிரின் உலர்ந்ததாள், வைக்கல், பலாலம், வை.
வைக்கோல்வாரி - கம்பம் பயிர்வகை.
வைக்கோற்கந்து - வைக்கோற்றிரள்.
வைக்கோற்கூளம் - வைக்கோற்பதர்.
வைக்கோற்பழுதை - வைக்கோற்புரி.
வைக்கோற்பாம்பு - மாறுவேஷம், மாயை.
வைக்கோற்புரி - வைக்கோல்முறுக்கு.
வைக்கோற்போர் - வைக்கோற் குவியல்.
வைங்கியாரம் - பகை, விரோதம், வன்மம்.
வைசசம் - தம் குழந்தைகளைக் கொல்லும் பெற்றோர்களை வருத்தும் நரகம்.
வைசத்தியம்-தூய்மை, புனிதம், உண்மை.
வைசத்திரம் - அரசாட்சி, இராசரிகம்.
வைசம்பாயநர் } விசம்பன் என்னும் ரிஷி
வைசம்பாயனர் } புத்திரர், இவர் வேதவியாச ருடைய மாணவர் நால்வர்களுள் ஒருவர், வேதவியாசபகவானுற் செய்யப்பட்ட வியாசபாரத மென்னும் நூலை ஜநமேஜயனுக்கு விஸ்தரித்துச் சொன்னவரும் இவரே. இவர் மாணாக்கர் யாஞ்ஞவற்கர் முதலிய நால்வர். இவரை ஒருதடவை பிரமகத்தி பற்றியது. மாணாக்கர்கள் அதனை யேற்று இவரை அதினின்று அகற்றினர்.
வைசயந்தம் - இந்திரனுப்பரிகை, இந்திரன் கொடி, இந்திரன் மாலிகை.
வைசயந்தி - திருமான்மாலிகை, துகிற் கொடி,வாதமடக்கி,தழுதாழை,முன்னை.
வைசயந்திகன் - கொடிக்காரன்.
வைசயந்திகை - துகிற்கொடி, வைசயந்தி.
வைசனனம் - பிள்ளைப்பெறுமாதம்.
வைசாகசுக்லத்வாதசிவிரதம் - வைகாசி மாதம் சுக்லபக்ஷத்வாதசியில் விரதமிருப்பது. இதில் விஷ்ணுவைப் பூசிக்கின் எல்லா நலமும் அடைவரெனக் கூறுவர்.
வைசாகசிலை - கூத்துசிலையுளொன்று.
வைசாகம் } வைகாசிமாதம், விசாகம்.
வைசாகி }
வைசாரிணம்-மீன்.
வைசிகம்-உடலுயிரைப்பிரித்தறிதல், தளிர், மூலம், வேசித்தனம்.

வைசித்திரி } விசித்திரம், புதுமை.
வைசித்ரியம் }
வைசியக்கிரியை-வேளாண்மை,வியாபாரம்
வைசியநாபி - நீலநிறமுள்ள நாபிவகை.
வைசியர்-மூன்றுவது சாதியார்; அவர்: தன வைசியர் அல்லது வணிகர், பூவைசியர் அல்லது உழவர், கோவைசியர் அல்லது இடையர் என மூன்று வகுப்பினர். இவர்க்கு ஓதல், வேட்டல், உழவு, ஆன்காத்தல் வாணிகம் என்பவும் பூணூலும் உரியவை.
வைசியர்தொழில் - பொருளீட்டல், பயிர் செய்தல், ஆன்காத்தல் என மூன்று தொழில்.
வைசியவிருத்தி - வைசியர் தொழில்.
வைசிரவணன் } வைச்சிரவணன், விச்சி
வைசிரவண்ணன் } ரவன் குமரனுகிய குபேரன், இவனுக்கு தநபதி தநதன் புட்ப கவூர்தி முதலிய பல பெயர்களு முண்டு, இவன் பட்டணத்தின் பெயர் அளகாபுரி, இவனின் மேற்பட்ட செல்வர் எவ்வுலகத்திலுமில்லை. இவன் சிவபெருமானுக்கு உயிர்த்தோழன். இவன் கிந்நரருக்கு அரசன்.
வைசுவதேவம்-ஓமப்பலி, பிதிர்பூசை, போஜநார்த்தமாக வேனும் சீவஹிம்ஸையால் வந்த பாப நிவர்த்தியின் பொருட்டாக வேனும் பிராமணர் தினந்தோறும் செய்கிற நற்கருமம், வைச்சுவதேவம்.
வைசுவாநரன் - (1) அங்கிரசன் வமிசத்தாகுகிய அக்கினி, (2) தநுபுத்திரன், இவனுக்கு ஹயசிரை, காலகை, உபதாநவி, புலோமை என்னும் நான்கு புத்திரிகள் பிறந்தார்கள், அவர்களுள் உபதாநவி ஹிரண்யாக்ஷனையும் ஹயசிரை க்ரதுவையும், காலகையும் புலோமையும் காசிபனையும் மணம் புணர்ந்தார்கள், வைச்வாநரன். [வகை.
வைசூரி-வசூரி, குருநோய், அம்மைநோய்
வைசேடி } சாத்திரமாறுஎன்று. த
வைசேடிகம் } ரிசநங்கள் ஆறனுளொ
வைசேஷிகம் } ன்று. கணதரால் தாபிக்கப்பட்ட மதமாகலின் இது கணத மதமெனப்படும், கௌதம மதம் திரவியம் பதினுறென இஃது எழென்பது, இது தர்க்கசாஸ்த்ரம் எனவும் படும், இது பொருணிச்சயம் பண்ணுதற்குபகாரமா யுளதாதலால் மக்களெல்லாரும் ஒத ற்பாலதாகிய வொரு சாஸ்த்ரம், இஃது சமயநூலாராய்ச்சிக்கும் பெருந்துணையாம்.
வைச்சமாநிதி - வைத்தமாநிதி.
வைச்சிரம் - வச்சிரம். [வைச்சிரவன்.
வைச்சிரவணன் - குபேரன், இராவணன்,
வைச்சிரவநூலயம் - ஆலமரம், வடம், பழு
வைச்சிரவன்-வைச்சிரவணன். [மரம்.
வைச்சிராவணன்-குபேரன், வைச்சிரவண
வைச்சுதன்-சனி,சநிர்மகன்,மூடவன். [ன்.
வைச்சுவதேவம் - வைசுவதேவம்.
வைச்வாநரன் - வைசுவாநரன்.
வைடம்மியம் } பகை; அது: சத்தவிசனத்
வைஷம்மியம் } தொன்று, மாறுபாடு.
வைடாலக்கிரதிகன்-மாயக்காரன், மாயாவி
வைடாலம்-பூனை, மாயசாலம், மாய்மாலம், மாயவித்தை.
வைடாலவிரதிகன் - மாயசாலஞ் செய்வோன், தருமகுணமுள்ளவன்போல நடிப்பவன்.
வைடூரியப்பப்பளி - சேலைவகையினொன்று.
வைடூரியம் } நவமணியினொன்று, ஒருமலை;
வைடூர்யம் } இது: ஏருமதை தூபதி என்னுமிரண்டு நதிகளுக்கிடையேயுள்ளது.
வைட்டணவன்-வைஷ்ணவன்,வைணவன்.
வைணவகிலை - ஓர்வகைக் கூத்துநிலை.
வைணவபுராணம் - விஷ்ணுபுராணம்.
வைணவமதம் - விசிட்டாத்வைதம்.
வைணவம் } விட்டுணு சமயம், பதி
வைஷ்ணவம் } னெண் புராணத்தொன்று, மூங்கிலரிசி, வேய்ங்குழல், வைணவி.
வைணவர் - நாராயண சமயத்தோர், வைஷ்ணவர், விஷ்ணு பக்தர்.
வைணவாகமம் - வைணவசமயநூல்; அது பாஞ்சராத்திரம், வைகாநசம் என இரண்டு.
வைணவி - சத்தமாதர்களிலொருத்தி, மூங்கிற் குழல், வைணவம், வைஷ்ணவம்.
வைணவிகம் - மூங்கிற் கூட்டம்.
வைணவிகன் - வீணைவாசிப்போன், வேய்ங்குழலூதுவோன், வைணிகன். [கிகன்.
வைணிகன் - வீணைவாசிப்போன், வைணி
வைணுகம் - கழிகோல், யானைத்தோட்டி.
வைதகி - வைதேகி, திப்பிலி. [கருவி.
வைதகிகை-இரத்தினங்களைத் தொளைக்குங்
வைதரணி - (1) யமபுரத்திலுள்ள வொரு நதி, நூறுயோசனை அகலமுள்ளது, நீர் இன்றி, சீ இரத்தங்களால் நிறைந்துள்ளது. இந்த நதியை எளிதிற் கடக்கும் பொருட்டு கோதாநம் செய்யப்படுவது, மரணகாலம் நேரிட்ட பிறகும் உயிர் சரீரத்தை விட்டு எளிதிற்பிரிய வொட்டா

மல் அதனைத் தடுத்து நிற்பதாகிய வாசனைக் கெல்லையே வைதரணியென்றுருவகித்துக் கூறப்பட்டதுபோலும், (2)பிதிர்களுக்குச் சுதையிடத்துப்பிறந்த புத்திரி, (3) கலிங்க தேசத்திற் பிரவஹிக்குமோர் நதி, இந்த நதி சகல யாகங்களுக்கும் ஏற்ற விடமாகக் கூறப்பட்டுள்ளது. இதில் இருடிகள் யாகஞ் செய்து பசுபதிக்குப் பசுபாகந் தந்தனர்.

வைதரணிநதியோன் - இயமன், நமன், சமன் எமதருமன்.

வைதரணிவிரதம் - பசுவின் வாலைப் பிடித்துக்கொண்டு தர்ப்பணாதிகள் செய்து கோ பூசை செய்து விரதமிருப்பது. மார்கழி மாதம் சுக்கிலபக்ஷ ஏகாதசியில் அநுஷ்டிப்பது.

வைதருக்கம் - தந்திரப்பேச்சு.

வைதருப்பநெறி - செறிவு, தெளிவு, சமனிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதியென்ற பத்துக் குணங்களுமமையப் பாடுமுறை.

வைதருப்பம் - வஞ்சகத்தருக்கம்; அது: கௌடத்திற்கெதிர், விதர்ப்பதேசத்துக் கவிஞரால் விரும்பிக் கொள்ளப்பட்ட நெறி.

வைதருப்பன் - விதர்ப்ப ராசன்.

வைதருப்பி } விதர்ப்பதேசத் தரசன் பெண்;
வைதர்ப்பி } அவள்: தமயந்தி.

வைதலம் - ஒருவகைப் பாத்திரம். [தல்.

வைதல் - ஏசல், திட்டல், இகழ்தல், சபித்

வைதவியம் } கைமைத்தன்மை, விதவை
வைதவ்வியம் } த்தன்மை, கைமை.

வைதனிகம் - அற்றைக்கூலி. [யாள்.

வைதனிகன் - கூலிக்காரன், அற்றைக்கூலி

வைதன்மியதிட்டாந்தம் - சாத்திய மெய்தாவிடத்தில் ஏதுவுமின்மையைக் குறிக்கும் திருட்டாந்தம், வைதன்மிய திருஷ்டாந்தம், ஓர் எடுத்துக்காட்டு.

வைதன்மியதிட்டாந்தவாபாசம் - சாத்தியாவியாவிருத்தி, சாதனவியாவிருத்தி, உபயாவியாவிருத்தி, அவ்வெதிரேகம், விபரீதவெதிரேகம் என ஐவகைப்பட்ட போலியான வைதன்மிய திட்டாந்தம்.

வைதன்மியம் - ஒப்பின்மை, சமானரஹிதம்.

வைதாத்திரன் - சனற்குமாரன், சநத்குமாரன்.

வைதாளி - புகழ்ந்து பாடும்பாட்டு.

வைதாளிகன் - துயிலெடை பாடுவோன், பள்ளியெழுச்சி பாடுவோன், அரசரைப் புகழ்ந்து பாடுவோருள் ஒருவகையினன்.

வைதாளியாடுவார் - வைதாளிகர், வைதாளிகர், புகழ்ந்து பாடியாடுவோர்.

வைதானம் } ஓமப்பலி.
வைதானிகம் } [வைதாளிகன்.

வைதானிகன் - பள்ளியெழுச்சிபாடுவோன்.

வைதாஞ்பசரணை - அந்திசந்தி செலுத்துங் கடவுட்பலி, வைதிகக் கிரியை.

வைதிககாரியம் - வைதிகச் சடங்கு. [மதம்.

வைதிகசைவம் - வேதநெறிப்பட்ட சைவ

வைதிகச்சொல் - வேதத்திலுள்ள பதங்கள்.

வைதிகம் - வேதமார்க்கம், வேதசம்பந்தம்.

வைதிகர் - வைதிகசைவத்தோர். [ஒழுக்கம்.

வைதிகவழக்கம் - வேதவிதியோடொத்த

வைதிகவினை - வேத சம்பந்தமான கிரியை.

வைதிகன் - வேத முணர்ந்த வேதியன், வேதநெறிப்பட்ட ஆசாரானுஷ்டான முள்ளவன்.

வைதிகாசாரம் - வேதவொழுக்கம்.

வைதிசம் - சத்துருக்ஙன் புதல்வனாகிய சத்துருகாதி அரசாண்ட ஓர் பட்டணம்.

வைதிருதி - நித்தியயோகத் தொன்று, இலாடநாளுக்குப் பதினுன்காம் நாள்.

வைதீகம் - வைதிகம், வேதமார்க்கம்.

வைதீகர் - வைதிகர், வேதமார்க்கத்தினடப்போர்.

வைதூரியம் } வைடூரியம்: வைடூர்யம், வால
வைதூர்யம் } வாயசம், வாலவாயம்.

வைதேகன் - பார்ப்பனத்திக்கும் வைசியனுக்கும் பிறந்து துதித்துய்வோன், வியாபாரி, அரசன் கன்னியை வணிகன்கூடப் பிறந்த பிள்ளை, அந்தப்புரக் காவற்றொழில். [புத்திரி.

வைதேகி - சீதை, திப்பிலி, விதேகன்

வைதேயம் - அறிவின்மை, அசேதனம்.

வைதேயன் - அறிவீனன், அறிவிலி, விதேயன், அசேதனன்.

வைதேவி - சீதாதேவி, சானகி, வைதேகி.

வைத்தநிதி } சேமித்து வைக்கப்பட்ட
வைத்தமாநிதி } பொருட்குவை.

வைத்தமாநிதியார் - வைணவமதசிம்மாசனாதிபதிகள் எழுபத்தினால்வரில் ஒருவர்.

வைத்தல் - வைக்குதல், வைக்கல். [துவதூல்.

வைத்தியகம் - வைத்திய சாத்திரம், மருத்

வைத்தியசாத்திரம் - கலைஞான மறுபத்து நான்கினொன்று, அதுவாகடநூல்.

வைத்தியசாலை - ஔஷத சாலை, மருத்துவச் சாலை, சிகிச்சைசெய்யுமிடம்.

வைத்தியநாதநாவலர் - இற்றைக்கு இரு நூற்றெழுபது வருடங்களுக்கு முன்னே சோழ நாட்டிலே சப்தவிடங்க க்ஷேத்திரங்களி லொன்றுகிய திருவாரூரிலே அபிஷேகத்தார் மரபிலே வன்மீகநாத தேசிகரின் புதல்வராய் அவதரித்துத் தமிழ்க்கடல் குடித்துத் தமிழ்மாரி பொழிந்து விளங்கிய பண்டித சிகாமணி. படிக்காசுப்புலவர், சதாசிவ தேசிகர், ஒப்பிலாமணி தேசிகர், திருவேங்கடநாதர் முதலியோரின் ஆசிரியர். இவர் ஐந்திலக்கணங்களு மமைந்த 'இலக்கண விளக்கம்' என்னும் நூலும், அதற்குரையும் செய்தவர், தொல்காப்பியத்துக்குப் பின்னே தோன்றிய இலக்கண நூல்களுள்ளே இந்நூல் மிகச்சிறப்புற்றது; இது குட்டித் தொல்காப்பியம் எனப் பெயர்பெற்று, சென்ற ஐம்பதாண்டுக்கு முன் வரையிற் பெரும் புலவர்களாலும் படிக்கப்பட்டதொருநூல். இதனையன்றி நல்லூர்ப்புராணம், வாட்போக்கிப் புராணம் முதலிய புராணங்களும், பாசவதைப்பரணி, திருவாரூர்ப் பன்மணிமாலை, மயிலம் பிள்ளைத்தமிழ் முதலிய பல சிறு நூல்களும் இயற்றியவர். அந்தகக்கவி வீரராகவ முதலியார் போன்றோரால் புகழ்ந்து பாடப்பட்டவர். இவர் காலத்திலே இவரோடு வாதுசெய்யும் வன்மையில்லாதவரா யிருந்து, பின்பு வன்மை படைத்த சிவஞான முனிவர் இலக்கண விளக்கத்துக்குக் கண்டனமாக 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் ஒரு நூல் செய்தார்; அதனால் அது மறைந்தொழியாது இன்னும் ஒளி பெற்று விளங்குகின்றது. இலக்கண விளக்கச்சூறாவளி இலக்கண விளக்கத்தை மறுப்படுத்தாமல் தன்னைச் செய்த சிவஞான முனிவர் என்னும் கலாசந்திரனையே மறுப்படுத்திற்று.

ஒருதுறைக்கோவைபாடிய அமிர்தகவிராயர்என்பவர்இவர்க்குச் சமகாலத்தவர், வைத்யநாதநாவலரைச் சுவாமிநாத தேசிகரென்கிறஇலக்கணக்கொத்தாசிரியரே, "தமிழ்க் கிலக்காகிய வைத்தியநாதன்" என்று புகழ்வரென்றால் இவரது கல்விப் பெருமைக்குவேறுசாக்ஷியும்வேண்டுமா?.

வைத்தியநாதமுனிவர் - (1) யாழ்ப்பாணத்துள் அளவெட்டி என்னும் ஊரிலுதித்த சைவவேளாளர். வடமொழி தென்மொழி நன்குணர்ந்தவர். தமிழில் செய்யுள் ரூபமாக வியாக்கிரபாத புராணம் பாடியவர். (2) புலியூர்ப் புராணம் பாடியவர்.

வைத்தியநாதன்-சிவபெருமான், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வைத்தீசுரன் கோயிற் சிவபிரான், வைத்தியநாத நாவலர்.

வைத்தியமாதா - ஆடாதோடை, வாசாதி.

வைத்தியம் - பரிகாரம், வயித்தியம்.

வைத்தியலிங்கம்பிள்ளை - யாழ்ப்பாணத்தில் வல்லிபட்டித்துறை என்னும் ஊரிலுதித்தவர். சைவ சமயி. சிவசம்புப் புலவர் மாணவர். சிந்தாமணி நிகண்டு முதலியனவும் சைவ மகத்துவ பாது முதலிய கண்டன நூல்களும் இயற்றியவர். [யாசி.

வைத்தியன்-பண்டிதன், பரிகாரி, வேதாப்பி

வைத்து-ஓர் உரைநடை, ஓர் அசைச் சொல்.

வைத்துக்கொண்டு - ஓர் அசைச்சொல்.

வைத்துக்கொள்ளுதல் - வைப்பாட்டியாக அமர்த்திக்கொள்ளுதல், விவகார நிமித்தம் மெய்போல ஒப்புக்கொள்ளுதல்.

வைத்தூறு - வைக்கோற்போர் [திரன்.

வைநதேயன்- கருடன்; இவன்: வினதைபுத்

வைநம் - பிரிவு, பகுதி, பங்கு, பாகம்.

வைநாசிகநட்சத்திரம்-சென்ம லக்னத்திற்கு இருபத்திரண்டாம் நட்சத்திரம்.

வைநாசிகம் - ஓர் யோகம், ஓர் பொருத்தம்.

வைநாசிகன்-அடிமை, தொண்டன், சிலம்பி.

வைநாயிகன் - புத்தன், பகவன், சாக்கியன், நூலை விழுவியறிந்து வீடு காதலிப்பவன்.

வைநாயிகை-சதுர்த்தி திதி, நான்காந்திதி.

வைநிகம்-புராதன சாஸ்திர கேள்வி. [வன்.

வைநியன் - வேநன் வாமபாகத்திற் பிறந்த

வைநீதகம் - ஈரிணை மூவிணை எருதேனுங் குதிரையேனும் கட்டியபண்டி. [மாயை.

வைந்தவம் - குதிரை, சுத்தமாயை, மகா

வைந்நதி } கூரியநுனி, கூர்மையுள்ள

வைந்நனை } அக்கிரம்.

வைபரித்தியம் - எதிரிடை, வைலட்சயம்.

வைபவம் - வரலாறு, விபவம், செல்வம்.

வைபாடிகன்-மஞ்சளும் சுண்ணும்பும் கூடிய விடத்துச் செந்நிறந் தோன்றுதல்போல இந்திரியங்கள் கூடிய விடத்துப் பிரபஞ்சம்தோன்று மெனவும், தீபத்தின் நெய் கெட ஒளி கெடுவதுபோல் இந்திரியங்கள் பங்கமடைய எல்லாம் சூனியம் ஆம் என வும் வாதிக்கிற ஒரு சமயி.

வைபோகம்- சந்தோஷம், சிற்றின்ப சம்பிரமம். வயணம், விவேகம், விமரிசை, சீர்.

வைபோகி - விவேகி, புத்தி மிகுந்தோன்.

வைபோதிகன் - சாமக்காவற்காரன்.
வைப்பரிதாரம் - வைப்புப்பாஷாணம் முப் பத்திரண்டினு ளொன்று.
வைப்பன் - சேமநிதி போன்றவன்.
வைப்பாட்டி - குடிப்பெண்ணல்லாதவள், மனையாளைப்போல் வைத்திருக்கு மாது.
வைப்பிடம் - பண்டம் முதலியன வைக்கு மிடம்.
வைப்பிராசை - மேருவுக்கு மேற்கே யுள்ள ஒருவகம், இது அதிரமணீயமானது.
வைப்பிருக்கை - பண்டசாலே, வைப்புழி.
வைப்பு-இடம், ஊர், உண்டாக்கல், சேமநிதி யம், பெருமை, வைத்தல், புதையல், செ யற்கையானது, செயற்கைச் சரக்கு, நிலப் பகுதி, சூனியம், வைப்பாட்டி, சுரிதகம்.
வைப்புக்கட்டு-பொய்க்கதை. [ற்கைமருந்து.
வைப்புச்சரக்கு-உண்டாக்கின சரக்கு, செய
வைப்புச்செப்பு-பண்டங்கள் வைக்குமிடம், நகை பாத்திரம் முதலிய உடைமைகள்.
வைப்புத்தலம்-மூவர்பாடல் பெறுத தலம்.
வைப்புப்பவளம்-செயற்கைப் பவளம். [ம்.
வைப்புப்பாஷாணம்-செயற்கைப்பாஷாண
வைப்புப்பு - செயற்கையுப்பு, நிர்மிதவுப்பு.
வைப்புமுத்து - செயற்கை முத்து.
வைப்புவைத்தல் - சூனியம் வைத்தல், வைப் பாட்டியாக ஒருத்தியைக் கொள்ளுதல்.
வைப்புழி - பண்டசாலே, வைப்பிருக்கை.
வைமாத்திரேயன் - சக்களத்தி புத்திரன்.
வைமானிகர் - விமானமுடையவர், தேவர்.
வையகமூலி - கொடிவகையி லொன்று.
வையகம் } உரோகணி, சிவிகை, தண்டிகை,
வையம் } தேர், பண்டி, பாண்டில் பூண் டவூர்தி, பூமி, வாகனம், சகடு, விமானம்.
வையஞ்சேர்தல்-பூமியில்விழுதல், இறத்தல்.
வையமகள் - பூமிதேவி, நிலமாது.
வையவலவன் - வண்டிக்காரன்.
வையாகரணம் - வியாகரணம், இலக்கணம்.
வையாகரணன் } இலக்கணம்ஆக்கியோன்,
வையாகரணி } வியாகரணம்படித்தோன்
வையாசம் - வியாசம். [வரில் ஒருவர்.
வையாபிகர்-அகத்தியர் மாணாக்கர்பன்னிரு
வையாபுரி - பழனிமலே, திருவாவினன்குடி.
வையாவிக்கோப்பெரும்பேகன் - நல்லூரில் ஆவியர் குடியிற்பிறந்தவன். கடையெழுவ ள்ளல்களிலொருவன். மயிலுக்குப் போர் வை கொடுத்தவன். இவன் பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார் மு தலியோரால் புகழ்ந்து பாடப்பெற்றவன்.
வையாளி - குதிரையின் மிருகதி, குதிரை யேற்றம், குதிரைசெல் மார்க்கம்.
வையாளிவீதி - குதிரைநடத்தும் வீதி.
வையை 1 மதுரையாறு, வைகை. [மாறன்.
வையைத்துறைவன்-பாண்டியன், செழியன்
வைரகரம் - பகை சாதித்தல், பகைமை.
வைரகரன் - சத்துரு, மேவலன், பகைவன்.
வைரகன் - சினமுள்ளோன். [காதணி.
வைரக்கடுக்கன் - வைரமணி யிட்டமைத்த
வைரக்கல் - வயிரமணி, வயிரம், வச்சிரக்கல்.
வைரங்கிகன்-பற்றிலான், பற்றிலி, விராகன்.
வைரசுத்தி - பழிவாங்கிப்பகை தீர்த்தல்.
வைரநிரியாணம்-பகைநீக்கல், பகைமாற்றல்
வைரம் - நவமணியிலொன்று, பகை, வீரோ தம், வீரத்தின்றன்மை, கடினமானது, மரக்காழ், வாச்சியப்பொது, வயிரம், வலா சுரன் கொல்லப்பட்டபோது அவனது எலும்பு சிதறி பலமலைகளின் மேலும் விழுந்து வைரமணிகளாயின, ததீசியெ லும்பு என்பாருமுளர், அவ்வயிரம் ஒளி வேறுபாட்டால்நான்காகும். "அந்தணன் வெள்ளையரசன் சிவப்பு, வந்தவைசியன் பச்சை, சூத்திரன், அந்தமில்கருமை யென் றறைந்தனர் புலவர்."
அவைபிரமவயிரம், க்ஷத்திரியவயிரம், வை சியவயிரம், சூத்திரவயிரம், என்பனவாம். வயிரத்திற்குக் குற்றமாவன:— "சமை மலங்கீற்றுச் சம்படிபிளத்தல், துளைகரி விந்து காகபாதம், இருத்துக்கோடிகளி லாதன மூரிதல், தாரைமழுங்கறன்னே, டீராறும் வயிரத் திழிபென மொழிப" என்றபடி பன்னிரண்டாம், அவற்றுள் பெருங் குற்றம் நான்கும் பயனுமாவன.
"1. காகபாதநாகங் கொல்லும்"
"2. விந்துசிந்தையிற்சாந்தாபந்தரும்"
"3. மலம்பிரியாததுநிவந்தருகிளேகெ டும்" [என்பனவாம்.
"4. கீற்றுவலியினேபெற்றவர்மாயவர்"
குணமாவன — "பலகையெட்டுங்கோ ணமாறும், இலகிய தலையுஞ் சுத்தியுந் தராசமும், ஐந்துங்குணமென்றறைந்தனர் புலவர், இந்திர சாபத்திகவொளிபெறி னே" என்பன. இந்திர சாபம் - இந்திரத நுசு, வாநவில்.
சில சாத்திரங்களில்வயிரம்ஒருவகைக் கல்லென்று கூறப்பட்டுளது, வயிரம்மதங் கமலே இமயமலே வேணுநதி முதலிய இடங்களிலுண்டா மென்பது ஆரியநூற் றுணிபு, வயிரத்தைச்சரீரத்திலணிவதனு ல், கர்ப்பதோஷத்தால் புத்ரோத்பத்தி

யில்லாத பெண்களுக்குப்புத்திரலாபமும் எல்லார்க்கும் இடி விஷம்முதலியவற்றுக்கு அஞ்சாமையு முண்டாகும். வலாசுரன் வயிற்றின் புறத்தைக்கொத்தி விழுங்கிய கருடன் அதனைக்கனைத்துமிழ, அதுவீழ்ந்து பலமலைகளிலு மூறிப்பிறந்த கற்கள் மரகதமெனப்படும், கருடோத்காரமென்பதுவுமதுவே, பச்சைக்கு, "நெய்த்த மயிற்கழுத்தொத்தபைம்பயிரிற்,பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல், வக்கி பாய்தல் பொன்வண்டின்வயி, றொத்துத் தெளிதலோ டெட்டுங் குணமே"

"கருகுதல் வெள்ளை கன்மணல்கிற்று, பரிவுதார் சாயை யிறுகுதன்மரகதத்,தெண்ணிய குற்ற மிலைவையென மொழிப"

இனி மாணிக்கம் பதுமராகம் சௌகந்தி குருவிந்தம் கோவாங்கு என நான்கு. "தாமரை கழுநீர் சாதகப் புட்கண,கோப மின்மினிகொடுங்கதிர்விளக்கு,மாதுளைப் பூவிதை வன்னியீரைந்து, மோதுசாது ரங்க வொளியாகும்மே" (சாதுரங்கம் பதுமராகம்.)

"திலக மூலோத்திரஞ் செம்பருத்திப் பூக், கலிமலர்குன்றி முயலுதிரம்மே, சிந்துரங் குக்கிற் கண்ணெனவெட்டும்,எண்ணிய குருவிந்த மன்னிய நிறமே"

"கோகிலக்கண் செம்பஞ்சுகொய்மலர்ப்பலாசம்,அசோகப்பல்லவமணிமலர்க்குவளை, இலவத்தவர்களென்றுறுகுணமும் சௌகந்திக்குச் சாற்றிய நிறனே"

"கோவை நற்செங்கல்குரா மலர்மஞ்சளெனக், கூறிய நான்கும் கோவாங்கு நிறனே" (கோமேதகம்-கோமூத்ர நிறமுடையது).

இனிப்புருடராகத்தின் குணம்,பொன்னை யுருக்கி மாசறத்தெளிய வைத்தாலொத்தநிறத்தினையுடைமை,வைடூரியம்-தேன்றுளி நிறத்தினையுடையது. நீலம், "வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென்றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே" "கோகிலக் கழுத்துக் குவளை சுரும்பர், ஆகுலக்கண்களவுரிச்சாறு,காயாநெய்தல் கனத்தல்பத்தி,பாய்தலெனக்குணம் பதினொன்றுமே" எனவருவனவற்றாலே தெளியப்படும்

நீலத்துக்குக் குற்றமெட்டு,இதுவரைக்கும் சொல்லிய மணிகளெல்லாம்ஒருமுதலிற் றோன்றின.

இனி முத்துக்குரிய குற்றம்-காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலையென்பன. குணம்-சந்திரனிறமும், வெள்ளியின்சோதியும்,செவ்வாயினொளியுமென மூன்றும். எல்லாம்உருண்டனவாதல் வேண்டும்.

பவளத்தின் குணம்-துளையின்மையும், உருட்சியும், சிந்துர நிறமும், முசுமுசுக்கைக் கனிநிறமும் உடைமை, முத்தினுல் மேகவெப்பந்தணியும்,பவளத்தினுல்சர்ம ரோகம் நீங்கும்,இவற்றின்விரிவெல்லாம் 'ரத்நபரீக்ஷை'முதலியநூல்களிற்காண்க.

வைரம்பாய்தல் -.திண்மையதாதல்.

வைரவக்கடவுள் - சிவரூபங்களு ளொன்று, இவர் சிவபெருமான் திருக்குமாரருளொருவர், சிவபெருமான் தம்மை மதியாத பிரமனது ஐந்து சிரங்களி லொன்றைக் கொய்விக்கும்பொருட்டுத்தோற்றுவித்த மூர்த்தி, வயிரவன், பைரவன்.

வைரவம்-வயிரவம்,பைரவம். [ருமலி.

வைரவனூர்தி - நாய், சுனகன், குக்கல், வைரவன் - பைரவன், வயிரவன், வடுகன்.

வைரன் - சத்துரு, மேவலன், வைரி, வயிரி.

வைராகம்-விராகம்,வெறுப்பு,வேண்டாமை

வைராகி - துறவி, விராகமுடையவன்.

வைராகிகன் - துறவி, நீத்தோன்,வைராகி.

வைராக்கியசதகம் - ஓர்துறவுநூல்,வைராக்கியதீபம் செய்த சாந்தலிங்கசுவாமிகளாற் செய்யப்பட்ட ஓர் ஞானநூல், இதுசொற் பொருள்களால் மிகச் சிறப்புற்றுவிளங்குவதாகும்.

வைராக்கியசூரியோதயம் - ஓர் நூல்.

வைராக்கியஞ்சொல்லுதல் - ஒருவன் தான் துறவு பூணத் துணிந்துள்ளதை ஆசிரியன் முன்னே தெரிவித்துக்கொள்ளுதல்.

வைராக்கியதீபம் - ஓர்துறவுநூல், வைராக்கிய சதகம் செய்த சாந்தலிங்க சுவாமிகளால் செய்யப்பட்டது. இதுவும் வைராக்கியசதகம் போலவே சொற்பொருள்களால் மிகச்சிறப்புற்று விளங்குவது.[ருத்தல்.

வைராக்கியம் - பகை, வெறுப்பு, ஆசையற்றி

வைராடம் - இந்திரகோபம், ஈயல், மூதா.

வைராயமாணம் - சத்துருத்தனம், பகைக் குணம், பழிவாங்கும் தன்மை.

வைராரோஹம் - பெரும்போர், பேரமர்.

வைராவி-வயிரமனதுடையோன்,வயிராவி.

வைரி - சத்துரு,பகைவன்,மேவலன்,வயிரி.

வைரிதை - வன்மம், வைராக்கியம், வீரம்.

வைரியம் - வீரியம்,வைராக்கியம்,வைரிதை.

வைரியர் - பாணர், மதங்கர், வயிரியர்.

வைரூப்பியம்-அவலட்சணம்,வைலட்சணம்.

வைரோசனநிகேதனம்-பாதலம், பாதாளம்.
வைரோசனன் - சூரியன், மாவலி, வாலி, விரோசனன்.[ரோசனன்மகனுகியயமன்.
வைரோசனி - புத்தன், மாவலி, வாலி, வி
வைரோதாரம் - பழிவாங்கல்.
வைலக்கணம் - வைலக்ஷணம், விலக்ஷணம்.
வைலட்சணம்-அவலக்ஷணம், வைரூப்பியம்.
வைலட்சயம் - எதிரிடை, விபரீதம்.
வைலவம் - வில்வம், மாலூரம், கூவிளம்.
வைவசுவதமநு - விவசுவதன் புத்திரன், இவன் மனைவி சிரத்தை, இவன் புத்திரர், இக்ஷ்வாகு, நிருகன், சரியாதி, திஷ்டன், திருஷ்டன், கரூசன், நரிஷ்யந்தன், விருஷத்திரன், நபகன், கவி எனப் பதின்மர், இவருள் இக்ஷ்வாகு வமிசத்தரசர்களுக்கு அயோத்தியை ராஜதானியாயிற்று.

இக்ஷ்வாகுவுக்கு குக்ஷிமூத்தமகன்,குக்ஷி தம்பியாகிய நிமிக்கு மிதிலை ராஜதானி.

கரூசன் வமிசத்தார்காரூசர்எனப்படுவர்.

நபகன் வமிசத்தார்க்கு கண்டகி நதீதீரத்திலுள்ள தேசமுரியது.

சரியாதி வமிசத்தார்க்கு குசஸ்தலி ராஜதானி. இவர்களே வைவசுவதமநு வமிசத்தரசர்கள்.

வைவசுவதமநுவின் மனைவியாகிய சிரத்தையானவள் தனக்கு ஒரு புத்திரியும் வேண்டுமென்று பிரார்த்தித்து இளையென்னும் புத்திரியைப் பெற்றாள், அது கண்ட வைவசுவதன் தனது குருவாகிய வசிஷ்டரை நோக்கி, அந்தப் புத்திரியைப் புத்திரனுகச் செய்து தருகவென வேண்ட, அவரும் அவ்வாறே இளையென்னும் புத்திரியைச் சுத்தியுமநன் என்னும் புத்திரனுகச் செய்து தருதலும், அவனையும் ஒரு திசைக்கரசனுக்கினன். அவன் ஒரு நாள் வேட்டைமேற் சென்ற போது, சரவணப் பொய்கையைக்கண்டு அங்கே தங்கினன், தங்குதலும், பூர்வ காலத்தில் பார்வதி தேவியார், யாவனெருவன் இந்தப் பொய்கையில் வந்து தங்குவானே அவன் பெண்ணுருவையடையக் கடவனென்று விதித்திருந்ததனல் சுத்தியுமநன் மீளவும் இளையென்னும் பெண்ணுயினன். அந்தப் பெண்ணுருவைக் கண்ட புதன் மோகங்கொண்டு அவளைக்கூடிப் புரூரவனைப் பெற்றான். இந்தப் புரூரவனுலேயே சந்திர வமிசம் பெருகுவதாயிற்று, பிறகு வசிஷ்டரது முயற்சியால் இளையானவள் ஒரு மாசம் பெண்ணுகவும் ஒருமாசம் சுத்தியுமநன் என்னும் ஆண்மகனுகவும் இருக்கும் படி சிவபெருமான் அருள் செய்தார்.

வைவச்சுதம் - மஞ்சள், அரிசனம், பீதம்.
வைவச்சுதன் - ஏழாவது மனு, நமன்.
வைவஸ்வதன் - ஏழாவது மனு, சனி.
வைவஸ்வதி-தென்திசை, தெற்கு, அவாசி.
வைவாகிகம்-விவாகத்திற் குரியது. [சினம்.
வைவு-ஏச்சு, சாப்பம், வைதல்,இகழ்ச்சி,உதா
வைனதகம் - நெய்ப்பாத்திரம்.
வைனதத்தன்-கொக்கோகரை மதன நூல் செய்ய எவினவன். [ழன், உவணம்.
வைனதேயன்-வைநதேயன், கருடன், கலு
வைனம் - பகுத்தல், பங்கிடல், பாகித்தல்.
வைஷ்ணவம் - விஷ்ணுசம்பந்தம், வைதிக சமயம் மூன்றனுள் ஒன்று, மூன்றுவன-சைவம், வைஷ்ணவம், சாக்தம் என்பன.

வைஷ்ணவமாவது விஷ்ணுவை முதற் கடவுளாகக் கொண்டுவழிபடும் சமயம்.

இது தென்கலை, வடகலையென இரண்டு பிரிவுகளை யுடையதாகும். இவற்றுள், தென்கலையாவது, நாலாயிரப் பிரபந்தத்தையும் வேதபுராணேதிஹாஸங்களையும் சமமாகக் கொண்ட சமயம்.

வடகலையாவது நாலாயிரப்பிரபந்தத்தை அவ்வாறு அங்கீகரியாத சமயம்.

ஆழ்வார்களும் ராமானுஜாசாரியரும் இந்தச் சமயத்தை நிலைபெறுத்தினவர்களாவார்கள். வைஷ்ணவர்கள் விசிஷ்டாத்வைத சித்தாந்தக் கொள்கையை யுடையவர்கள்.

வைஹாரம்-மகததேசத்து ராஜதானியாகிய கிரிவிரசத்துக்குச் சமீபத்திலுள்ள மலை.

வெள

வெள - ஒலிக்குறிப்பு, ஓர் உயிர்மெய்யெழுத்து,வெளவென்னேவல்.
வெளவம் - தாமரை, புண்டரீகம், முண்டகம், அரவிந்தம், முளரி.
வெளவல் - கொள்ளையிடல், தானேயெடுத்துக் கொண்டு போதல், கைக்கொள்ளுதல், திருடல்,பிடித்தல்,வாருதல்,கௌவு
வெளவாலோட்டி-ஒரு முட்செடி. [தல்.
வெளவால் - ஓர் பறவை. இதற்கு இரவில் கண் நன்றுகத் தெரிதலால் இராக்காலங்களில் பறந்து சென்று பழ முதலியவற்

றைத் தின்று ஜீவிக்கும். இதற்குப் பல்லிருத்தலால் மிருக வினத்திலொன்றென் பாருமுளர்.

வெளவால்மீன் } கடல் மீன்வகை யிலொன்று. [விளக்கு.
வெளவான்மீன் }

வெளவால்விளக்கு - ஓர்வகைத் தொங்கும்
வெளவி - மான், சாதிமான்.
வெளவியம் - அரைத்த மஞ்சள். [வல்.
வெளவுதல்-கொள்ளையிடல்,வாருதல்,வெள

வ்

வ்யஸகோத்ஸவம் - துக்கம், மகிழ்ச்சி.
வ்ருகதூமம் - நீர்மேற்படர்கொடி, விருகதூமம். [கோதரன்.
வ்ருகோதரன் - வீமசேனன், பீமன், விரு
வ்ருஜநம் - தலைமயிர், சிரோருகம்.
வ்ருஜிநம்-கிலேசம். [முகம்,வானரம்,மந்தி.
வ்ருட்சசரம்-குரங்கு, கவி, மர்க்கடம், வலி,
வ்ருட்சநாதம் } ஆலமரம்,தொன்மரம், பழு
வ்ருட்சபாகம் } மரம், கோளீ.
வ்ருட்சலம்-உடும்பு, கோதா, முசலி, தடி.
வ்ருட்சாதநம்-அரசமரம், சுவலை, கோடரி.
வ்ருட்சாதநி-காட்டுப்பாகல், விருக்காதினி.
வ்ருத்தசங்கம்-கிளிஞ்சில், விருத்த சங்கம்.
வ்ருத்தபலம் - இலந்தை, மாதளை, மிளகு, விருத்தபலம். [மல்லிகை.
வ்ருத்தமல்லிகை - குடமல்லிகை, விருத்த

ஜ

ஜயதேவர் - கீதகோவிந்தமென்னும் நூலை யியற்றியவர். [ரசன்.
ஜயந்திவர்மன்-பாண வம்சத்திற் பிறந்தவர
ஜலதாரை - நீர்தொடந்து போகும்வழி.

ஜா

ஜாதகஸ்கந்தம்-பிரகங்களைப் பற்றிய பலா பலங்களையும் யோகங்களையும் கூறுவது.
ஜாதிஸ்மரணம் - பழம் பிறப்புணர்ச்சி.

ஜி

ஜினபதி - அருகன், சினேந்திரன்.
ஜினபவனம் - அருகன் கோயில்.
ஜினாலயம் - அருகத்தானம், அசாந்தாணம்.

ஜீ

ஜீமூதவாகனன்-நாகாநந்த மென்னும் வட மொழி நாடகக் கதாநாயகன்.
ஜீவிதாவஸானம் - வாழ்நாள் மூடிவு.

ஜ்

ஜ்யௌதிஷம் - கிரகங்களின் சஞ்சாரஞ் சொன்ன கணிதநூல்,சோதிடசாத்திரம்.
ஜ்யௌதிஷிகர்-சோதிடர், சோதிடகாரர்.

ஸ்ரீ

ஸ்ரீகண்டம் - மலயபர்வதம், மலயம், மலையம்.
ஸ்ரீகண்டன்-(1)சிவபெருமான், (2)பவபூதி.
ஸ்ரீகண்டாசாரியர் - நீலகண்ட சிவாசாரியர், இவர் சங்கராசாரியரிருந்த காலத்திலிருந்தவர், இவ்விருவரும் ஒருமுறை சந்தித்தபோது, ஸ்ரீ கண்டர் விஞ்ஞிய விஞக்களுக்குச் சங்கராசாரியர் விடை கூறுது மயங்கி நரசிங்கமூர்த்தியைத் தியானித்தார். அந்த மூர்த்தி வெளிப்பட்டு ஸ்ரீ கண்டரைத் தண்டிக்கயத்தனித்தது,அது கண்ட நீலகண்டர் பரமசிவத்தைத் தியானித்தனர்.

அப்பொழுது பரமசிவம் சரப ரூபங் கொண்டு நரசிங்கத்தைக் கிழித்தெறிய, சங்கரர் ஸ்ரீ கண்டரை வணங்கி, அவரிடத்துச் சிவதீக்ஷை பெற்றுச் சிவானந்தலகரி, சௌந்தரியலகரி முதலியவற்றைச் செய்தாரென்பர். இவ்விரண்டையும், வீரைக் கவிராஜபண்டிதர் என்னும் புலவர் பெருமானவர் தமிழில் விருத்த யாப்பால் மொழி பெயர்த்தருளினர், இதில் நாற்பது கவி சிவசத்திகளுடைய இன்பப் பெருக்கையும் மேலே எழுபது கவி தேவியின் சௌந்தரியப் பெருக்கையும் கூறும். இந்நூலில் காணப்படுகிற சொற் சுவை பொருட்சுவை கற்பனலங்காரங்கள் வேறெந்த நூலினும் காணப்படா, இதைச் சத்திபத்தி மிகுந்தவர் விசேடமாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீசைலம் - கூடிதிதரம் என்னும் மலை, இதனைத் திருப்பருப்பதமென்பர் தமிழர்.

ஸ்ரீதராசாரியர் - ஸ்ரீவிஷ்ணு புராணத்துக்கும் பாகவதத்துக்கும் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநஞ் செய்தவர்.

ஸ்ரீதேவி - (1) கமலை, (2) தேவகன் மகள், வசுதேவன் மனைவி, தேவகியோடு பிறந்தவள், சீதேவி, லோகமாதா.

ஸ்ரீபுராணம் - ஒரு சைனநூல். இதில் விருஷபர் முதல் ஸ்ரீவர்த்தமானர் இறுதியாகவுள்ள இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களுடைய சரித்திரங்கள் மிக்க விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மணிப்பிரவாள நடையாகவுள்ளது. இக்காலத்து வழங்காத பற்பல தமிழ்ச் சொற்கள் இதிற் காணப்படும் இந்நூலைச் சைனர் தினந்தோறும் பூசித்துப் பாராயணஞ் செய்து வருவர்.

ஸ்ரீபெரும்பூதூர்-தொண்டை நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், இதில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பெருமாள் பெயர் ஆதிகேசவப் பெருமாள் இந்த திவ்யதேசத்திலே விசிஷ்டாத்வைத மதோத்தாரக ராகிய ஸ்ரீராமாநுஜாசாரியர் எண்ணூற்று முப்பது வருஷங்களுக்கு முன்னே அவதரித்து வைஷ்ணவ மத ஸ்தாபகராய் விளங்கியிருந்தனர், இவர் தந்தையார் பெயர் ஆசூரி-கேசவாசாரியார், தாயார் பெயர் காந்திமதி, இந்த ஸ்ரீபெரும்பூதூரை ஸ்ரீபூதபுரியென்றும் வழங்குவர். இவர் கல்வி கற்றது திருக்கச்சியில் (கச்சி-காஞ்சிபுரம்) இவர் திருக்காஞ்சியில் பிரபல வித்வானாயிருந்த யாதவப்பிரகாசர் என் னும் சந்நியாசியினிடத்தில் சகல சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக்கற்று வல்லராகித்தமதுகுரு முன்னிலையிற்சென்று விசிஷ்டாத்வைத மதத்தைச் சாதித்துப் பின்னர்த் திரிதண்ட சந்நியாசியாகி, யதிராஜன் என்னும் பெயர் பெற்று திருநாராயணபுர முதலிய தலங்களிற்சென்று ஆங்காங்கு மடங்கள் கட்டுவித்து ஸ்ரீவைஷ்ணவ ப்ரபாவத்தைப் ப்ரவசநஞ்செய்து, வைஷ்ணவ மதத்தை நிலைபெறுவித்தவர். இவர் பலவிடங்களினுஞ்சென்று பல மதங்களைக் கண்டித்து தமது மதத்தை நாட்டி, அவ்வவ்விடங்களிற் சீடர்கள் அநேகரைச் சேர்த்து, தமது மதத்தை விருத்திசெய்தனர், இவர் கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், தர்க்கபாஷ்யம், வேதாந்ததீபம் முதலிய அநேக நூல்களைச் செய்தார், இவரை வைஷ்ணவர் பாஷ்யகார ரென்றும், எம்பெருமானா ரென்றும், உடையவரென்றும், வழங்குவர். இவருக்கு முற்காலத்தில் விசிஷ்டாத்வைத மதத்தை நாட்டினவர் : பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் எனப் பன்னிருவராவர்.

ஸ்ரீமல்லிநாதஸூரி - சிறந்த வடமொழி உரையாசிரியருள் ஒருவர். இவர் ரகுவம்சம், குமார ஸம்பவம், மேக ஸந்தேசம், மாகம், கிராதார்ஜுனீயம், நைஷதம், பட்டிகாவ்ய முதலிய நூல்களுக்கு வியாக்யானஞ்செய்திருப்பதாகக் கூறுகின்றனர்

ஸ்ரீமான் - செல்வமுள்ளவன், தலைவன்.

ஸ்ரீமுஷ்டம் - நடுநாட்டிலுள்ள வொரு விஷ்ணுஸ்தலம், இங்கே திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் பெருமாளுக்கு ஸ்ரீவராகப்பெருமான் என்று திருநாமம், இந்தத் தலபுராணம் வடமொழியிலுண்டென்பது யாவருமறிந்த விஷயமே. அதனைத் தமிழில் விருத்தயாப்பால் மொழி பெயர்த்தவர், புதுவை-வில்லூணைகவி-ராமாநுஜநாவலர். இவர்செய்த தமிழ்நூலுக்குத் திருமூட்டப் புராணம் என்று பெயர். திருச்சித்திர கூடபுராணம், சுதரிசநகிரி புராணம், பாத்மோத்திரம்முதலியஅநேக நூல்கள் இவராற் செய்யப்பட்டனவே.

ஸ்ரீலக்ஷணபாவனை - அசுபபாவனை. [கரர்.

ஸ்ரீவர்த்தமானஸ்வாமிகள்-24-ஆம் தீர்த்தங்

ஸ்ரீஹர்ஷகவி - இப்பெயர் பெற்ற வடமொழிப் பண்டிதர் இருவருளர்; அவர்:(1)நாகானந்தமென்னு நூலியற்றிய ஓராசர், (2) நைடதம்என்னும் நூலின் ஆசிரியர்.

ஸ

ஸகஸ்ராரசக்கரரேகை - கௌதம புத்தருடைய காலிலிருந்த ஓர் சிறந்த ரேகை.

ஸஞ்சீவனம்-எண்வகை நரகத்து ளொன்று.

ஸநாதனம்- எப்போது மிருப்பது, நித்தியம்.

ஸந்நிஹிதர் - ஸமீபத்திலிருப்பவர்.

ஸந்யாஸவேஷம் - ப்ரிவராஜக வேஷம்

ஸமஷ்டி - கூட்டம், சமூகம், சமஸ்டி. [று.

ஸம்பிரதாபனம் - எண்வகை நரகத்துள் ஒன்

ஸம்ப்ரீதன்-செவ்விய பிரீதியையுடையவன்.
ஸம்வதித்தல் - ஒத்துச்சொல்லுதல்.
ஸம்ஸ்காரம் - செய்கை, கர்மம், கருமம்.
ஸம்ஹதம் - என்வகை நரகத்துள் ஒன்று; இஃது: அவீசி சன்றும் கூறப்படும்.
ஸஹியாதவர்கள் - அஸஹமானவர்கள்.

ஸா

ஸாமகர்ப்பன் - விட்டுணு, திருமால்.
ஸாமந்தர் - சிற்றரசர், அமைச்சர், தோழர், தானைத்தலைவர்.
ஸாம்பூநதம் - நால்வகைப் பொன்னி லொன்று, பொன், நாவல்ரச ஆறு.
ஸாரஸங்கிரகம் - ஓர் பௌத்த நூல்.
ஸார்த்தம் - பொருளோடு கூடிய கூட்டம்.

ஸி

ஸித்தாந்தகௌமுதி-ஒரு வடமொழி வியாகரண க்ரந்தம்; பட்டோஜி தீக்ஷிதரென் பவரால் செய்யப்பட்டது.
ஸித்தார்த்தர்-பழைய புத்தர்களுள் ஒருவர்.
ஸித்தி - கைகூடுதல், சித்தி.
ஸிம்ஹிகை - ஓரரக்கி, பிரமனிடம் வரம்பெற்றவள். இலங்கைக்குச் சென்ற அநுமானை நிழலாலிழுத்துத் தடைப்படுத்தியவள்.

ஸ்

ஸ்கந்தம் - கூட்டம், தூண்.
ஸ்கலிதம் - நழுவல், விலகல்.
ஸ்காந்தம் - (1) சிவபுராணங்களுள் ஒன்று, சிவமான்மியங்களோடும் வேத தர்மங்களையும் மிக விரிவாய்க் கூறுவது, இது ஆறு சங்கிதையும் லக்ஷங் கிரந்தமு முடையது. (2) உப புராணங்களுளொன்று.

ஸ்காந்தத்தின் ஒரு பாகமாகிய சங்கர சங்கிதையை கந்தபுராணம் என்னும் பெயரால் கச்சியப்பராலே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது, கச்சியப்ப சிவாசாரியர் குமரகோட்டத்து அர்ச்சகரா யிருக்கும்போது சுப்பிரமணியக்கடவுளது ஆஜ்ஞையாலே கந்தபுராணத்தை மொழிபெயர்த்தனர் என்றுகூறுவர், அது உண்மையேயாமென்பது அப்புராணச் செய்யுடையாலும், செம்பாகத்தாலும், சாஸ்திரக் கருத்துக்களின் பொலிவாலும் இனிது விளங்கும்.
ஸ்தவிரர்-உத்தமபிக்ஷுக்கள். [லறியாமை.
ஸ்தியானக்கிரந்தி-கனவிற் செய்தது நனவி
ஸ்திரீவேதம் - பெண்ணேய்.
ஸ்தூலகர்ணன் - ஓர் யக்ஷன், இவனுலேயே சிகண்டி புருஷத்வம் பெற்றது. [பிதா.
ஸ்தூலகேசன் - பிரமத்துவரை யென்பவன்
ஸ்தூலசிரசு-கவந்தனுக்குச் சாபமிட்டரிஷி.
ஸ்நுஷை - விதர்ப்பன் மனைவி. [பந்தம்.
ஸ்பரிசம் - ஊறு; அது, இந்திரிய விஷய சம்
ஸ்ம்ருதி- தக்ஷன் புதல்வி, முதல் அங்கிரசன் மனைவி, இவளுக்கு சிரத்தை யென்றும் ஒருபெயர்வழங்கும், சிநீவாலி, குகு, ராகை அநுமதி என்பவர் இவள் புதல்வியர்.
ஸ்ம்ருதிகள் - வேதார்த்தங்களைத் தழுவிச் செய்யப்பட்ட தர்மசாஸ்திரங்கள், அவற்றுள்ளே மநுஸ்ம்ருதி மிகவுஞ்சிறந்து விளங்குவது, அதுபிரபஞ்ச சிருஷ்டி முதல், சகல விஷயங்களோடும் மாந்தர் தத்தம் வர்ணாச்ரம தர்மப்படியே ஒழுகவேண்டிய விஷயங்களெல்லாம் விரித்துரைப்பது.

ப்ருஹஸ்பதி ஸ்ம்ருதி, தக்ஷ ஸ்ம்ருதி, கௌதம ஸ்ம்ருதி, யமஸ்ம்ருதி, ஆங்கிரஸ ஸ்ம்ருதி, யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி, ப்ரசேதஸ ஸ்ம்ருதி, சாதாதப ஸ்ம்ருதி, பிராசர ஸ்ம்ருதி, ஸம்வர்த்த ஸ்ம்ருதி, ஔஸநஸ ஸ்ம்ருதி, சங்க ஸ்ம்ருதி, லிகித ஸ்ம்ருதி, ஆத்ரேய ஸ்ம்ருதி, விஷ்ணு ஸ்ம்ருதி, ஆபஸ்தம்ப ஸ்ம்ருதி, ஹாரீதஸ்ம்ருதிஎன ஸ்ம்ருதிகள் பதினெட்டு, இவையே யன்றி உப ஸ்ம்ருதிகளும் பதினெட்டுண்டு, அவை: கண்வ கபில லோஹித தேவல காத்யாயந லோகாக்ஷி புத சாதாதப அத்ரி பிரசேத தக்ஷ விஷ்ணு விருத்தமநு தௌளம்ய நாரத பௌலஸ்த்ய உத்தராங்கித ஸ்ம்ருதிகள்.
ஸ்ரோதஸ்-பிரவாகம், பெருக்கு வெள்ளம்.
ஸ்வதை - பிதிர்தேவதைகள் மனைவி.
ஸ்வயம்ப்ரபை - ஹேமையென்னும் அப்ஸரசு புத்ரி, அநுமான் முதலியோர் சீதையைத் தேடிச் சென்றபோது இவளிருக்கும் காஞ்சநபிலத்தில் பிரவேசித்த வெளிப்பட வொண்ணுமல் திகைத்து நிற்க இவள் அவர்கள் வெளிப்படும்படி உதவி செய்தவள், சுவயம்பிரபை.
ஸ்வாகாதேவி - அக்நிதேவன் மனைவி, அவனுடைய வேட்கையைத் தீர்ப்பதற்கு

ஏழுமுனிவர்களின் பத்தினிவடிவத்தைத் தனித்தனி எடுத்தவள், சுவாகாதேவி.

ஹ

ஹம்ஸகீதை - ஹம்சரூபியாகிய பிரமன், சாத்தியர்களுக் குபதேசித்தகீதை; இது தர்ம மார்க்கத்தை விரிவாய்க் கூறும்.

ஹம்ஸன்-(1)வசுதேவனுக்குச் சீதேவியிடத் துப்பிறந்த இரண்டாம் புத்திரன், (2)டிசி கன் சகோதரன், இவன் கௌசிகன் என வும் படுவன். [ஒரு மலை.

ஹம்ஸை- மேருவுக்கு உத்தரபாகத்திலுள்ள

ஹயக்ரீவன் - (1)குதிரை முகமும் மநுஷ்ய தேகமும் உடைய கற்கியவதாரத்தாகிய விஷ்ணு, பூர்வகாலத்தில் விஷ்ணுவான வர் யோகநித்திரை செய்யும்போது மது கைடபர்கள் பிறந்து வேதங்களை அபஹ ரித்துக் கொண்டு போய்ப்பாதாளத்தில் அடக்கிவிட, ஸ்ரீமந்நாராயணன் பிரமனது வேண்டுகோளால் யோகநித்திரை நீக்கி, ஹயக்ரீவ ரூபந்தரித்து மது கைடபர்க ளைக் கொன்று வேதங்களைக் கொண்டு வந்து பிரமதேவனுக்குக் கொடுத்தார்.

(2) ஒரு தானவன், இவனுக்கு சோம கன் என்னும் வேறொரு பெயரும்உண்டு.

ஹயசிரை - வைவசுவதாரன் புத்திரி, க்ருது வின் மனைவி.

ஹரதத்தாசாரியர் - கஞ்சனூரிலே மதுரூத நாசாரியருடைய புதல்வர். இவர் பூர்வ சமயம் வைஷ்ணவம். பிறகு சைவ சமய சாஸ்திரங்களைக் கற்றுச் சைவசமயத்தரா யினர், அதுகண்ட வைஷ்ணவர்கள், இவ ரை நோக்கி, உமதுசிவன் உண்மையாகப் பரம்பொருளாயின் நாங்களிடும் இருப்புப் படி மேனின்று சிவபரத்துவத்தை நீலை பெறுத்தக் கடவீரென, இவர் அதற்குட ன்பட்டு, வைஷ்ணவர்கள் பழுக்கக் காய் ச்சிய இருப்புப்பாளப்படி யேறிச் சிவபரத் துவஞ் சாதித்தவர், இவர் பூர்வாசிரமம் ஹரிதத்தர், இவராற் செய்யப்பட்ட நூல் கள் சதுர்வேத தாத்பர்ய ஸங்க்ரஹம் முதலியன.

ஹரன் - (1) சிவன், (2) மாலியவான் புத் திரன், விபீஷணன் மந்திரி, (3)ஒரு ருத்தி ரன், அரன்.

ஹரி -விஷ்ணு, திருமால், அரி. [மகன் மகன்.

ஹரிகேசன் - வசுதேவன் தம்பியாகிய சியா

ஹரிக்ராமம் - விதர்ப்பதேசத்து ஒரு நகரம்.

ஹரிச்சந்திரன்-இவன் சூரியவமிசத்தில்இரு பத்து நான்காம் சந்ததி, இவன் திரிசங்கு புத்திரன், இவன் மனைவி சந்திரதயன் புதல்வியாகிய சந்திரகாந்தி, இவன் புத்திர ன் லோகிதாசன்.

ஹரிச்சந்திரன் மஹா உதார சீலனும் சிறிதுந் தவறுத சத்தியவந்தனுமாய் விள ங்கினவன். இவனது சத்திய விரதத்தை வசிஷ்டமுனிவர் இந்திரன் சபையில் எடு த்துப் புகழ்ந்தபோது, விசுவாமித்திரன் அது பொறாமல், அந்த அரிச்சந்திரன் சத் தியந் தவறிப் பொய்சொல்லப் பண்ணுகி றேனென்று சபதஞ்செய்து, அவனது சத் திய விரதத்தைப் பரீக்ஷிக்கப் புகுந்தான். இவன் செய்த கொடிய வஞ்சப்பரீக்ஷை களுக்கெல்லாம் அவன் சிறிதுங் கலங்காது நின்று, தன் மனைவி மக்களைப் பிரிந்தும் தானும் புலையனுக் கடிமையாகியும் தான் கொண்ட சத்திய விரதத்தைக் காத்து என்றும் அழியாப் பெரும்புகழ் படைத் த ஓர் சக்கரவர்த்தி.

ஹரிணங்கன்-சந்திரன், திங்கள், மதி, இந்து.

ஹரிணி- ஓரப்ஸரசை, சித்திரி சாதிப்பெண்.

ஹரிதன் - (1) யவனாசுவன் புத்திரன், இவன் தவத்தால் பிரமரிஷியானவன், இவன் க்ஷத் த்ரிய வர்ணஸ்த்தனே யாயினும் இவன் வமிசத்தாரெல்லாரும்பிராமணராயினர், இவரெல்லாரும் ஹரிதர் எனப்படுவர், அம்பரீஷ ஆங்கிரச யாவாநாசுவ வமிச மாகப் பிறந்தார்கள், (2) லோகிதாசியன் புத்திரன், சம்பன் தந்தை.

ஹரித்துவாரம் - கங்காத்வாரம் எனப்படும் க்ஷேத்ரம், விஷ்ணுவாற் கொல்லப்பட்ட மது கைடபர்களது மரண காலத்திலே இந்தத் தலம் புண்ணிய ஸ்தலமாகும்படி அநுக்ர ஹிக்க வேண்டுமென்று வேண்ட, அவ் வாறே யாகுகவென் றநுக்ரஹித்தார்.

ஹரியங்கன் - சம்பன் புத்திரன்.

ஹரியசுவன் - (1) த்ருடாசுவன் புத்திரன், நிகும்பன் தந்தை, (2) அநாணியன் புத் திரன், சுமநசன் தந்தை, (3) த்ருஷ்ட கேது புத்ரன், (4) பர்மியாசுவன்.

ஹரிஹரபுத்திரன் - சாத்தனார், இவர் ஐய னார் என்றும் வழங்கப்படுவர், மோஹினி வடிவங்கொண்ட விஷ்ணுவைச் சிவன் கூடித் தோற்றுவித்த புத்திரர் இவரே. இவர் அறநெறி வழுவினோரைத் தண் டிப்பவர், இவர்க்கு வாகநம் வெள்ளை

யானை, இவர்க்குத் தேவிமார் பூரணை, புட்கலை யென்னு மிருவருமே, இவர் தற் காலத்திலே கிராமதேவதையாகப் பூசிக் கப்படுவர், இவர்க்கு ஆயுதம் செண்டு, நிறம் கருங்கடல் நிறம்.

ஹரிஹராயன் - இவன் துங்கபத்ராநதி தீரத்திலே காடு கெடுத்து நாடாக்கி வித் யாநகரம் நிருமித்து அங்கிருந்து அரசி யற்றின வோராசன், இவன் இற்றைக்கு ஐந்நூற்றிருபது வருஷங்களுக்கு முன் னிருந்தவன் [கொண்டிருக்கும் வடிவம்.

ஹரிஹரன் - விஷ்ணுவும் சிவனும் கூடிக்

ஹரீதன் - விசுவாமித்திரன் மகன், இவன் வமிசத்துப் பிராமணர் ஹரீதர் எனக் கூறப்படுவர்.

ஹர்ஷன் - தருமனுக்குச் சித்தையிடத் துப் பிறந்த புத்திரன், இவன் மனைவி நந்தை, இவன் சகோதரர் சமன் காமன் என்பவர்.

ஹலாதன் - ப்ரஹ்லாதன் தம்பி, இவன் அநுஹ்லாதன் எனவும் படுவன்.

ஹவிர்த்தாநன் - விஜயாசுவன் என்னும் அந்தர்த்தாநனுக்கு நபஸ்பதியிடத்துப் பிறந்த புத்திரன், இவன் பர்ஹிஷ்டதன் என்னும் பிராசீநபர்ஹி,கயன், சுக்கிலன், க்ருஷ்ணன், (சத்தியன் என்னும்)யஜன், (ஜிதவ்ரதன் என்னும்) அஜிநன்என அறு வரைப் புதல்வராகப்பெற்றான், அவருள், ப்ராசீநபர்ஹிக்குப் பதின்மர் புத்திரர் பிறந்தார்கள், அவர்கள், ப்ரசேதசர் எனப்படுவார்கள்.

ஹவிர்ப்புக் - ப்ரீதி, இவள் புலத்தியன் மனைவி, விச்சிரவாவுக்குத் தாய், அவிர் புக்கு.

ஹவிர்யக்ஞங்கள் - சிரௌதாக்ஞியிலே அமைக்கப்படும் யஜ்ஞோபதங்கள், அக்நி யாதேயம், அக்நிஹோத்ரம், தர்ஸ பூர்ண மாசம், ஆக்ரஹாயணம், சாதுர் மாஸ்யம், நிரூடபசுபந்தம், சௌத்ராமணி என ஏழாம்.

ஹவ்யவாகநன் - (1) க்ரஹபதி, (2) அக்நி.

ஹனுமந்தன் } ஹநுமான், சுக்ரீவன்மந்திரி,
ஹனுமான் } ஸ்ரீராமதூதன், வாயுதேவ னது அநுக்ரஹத்தால் அஞ்சநா தேவியி னிடத்திற் பிறந்தவன், சூரியனிடத்தில் கல்வி கற்று நவவ்யாகரண பண்டிதன் எனப்பெயர் படைத்தவன், ஸ்ரீராமாயண மென்கிற பெரிய மணிமாலையில் நாயக மணியாய் விளங்கினவன், ஸ்ரீராமாயணத் தில் எல்லாப் பாகங்களிலும் வ்யாபித்து விளங்குவதுஇவனதுபராக்ரமாதிசயமே, இவன் ஸ்ரீராமாநுக்ரஹத்தால் ஸ்திரஜீவி பட்டம் பெற்றவன், அன்றியும் அவரது ஸ்ரீபாதத்தை யிடையறாது தாங்கி நின்று சிறிய திருவடியென்னும் பெயரும் பெற் றவன், ராவணதியர் யுத்தத்தில் இவ னால் மாண்ட ராக்ஷஸசேனையின் சங்கி யை மிகப் பெரிது. இவனது பிரபாவம் ஸ்ரீராமாயணத்தில்விரிவாய்க்காணலாம்.

ஹஸ்தன் - வசுதேவனுக்கு யோசனையிடத் துப் பிறந்த புதல்வன்.

ஹஸ்திகன் - சுகோத்திரன் புத்திரன், இவ னே அஸ்திநா புரத்தை நிருமித்தவன், அஜமீடன், த்விமீடன், புருமீடன் என் போர் இவன் புத்திரரே.

ஹஸ்திநபுரம் } கௌரவர்களுக்கு ராஜ
ஹஸ்திபுரம் } தானி, இது ஹஸ்திகனால் நிருமிக்கப்பட்ட நகரம், இந்த நகரம் பிற் காலத்தில் கங்கை கொண்டழிந்தது, இப்போதுள்ள இலங்கை தில்லிநகருக்கு அறுகாத தூரத்திலிருந்தது, அஸ்தி நபுரம், அத்தினபுரம், அஸ்தினபுரி.

ஹா

ஹார்த்திக்கியன் - க்ருதவர்மா.

ஹாஹா - ஒரு கந்தருவன்.

ஹி

ஹிடிம்பன் - வீமனால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்.

ஹிடிம்பை - ஹிடிம்பன் தங்கை, இவளை வீமன் காட்டகத்திற் கண்டு மணம் புரிந் தான், இவள் மகன் கடோத்கசன்.

ஹிமசுதன் - மைநாகன், ஹிரண்யநாபன்.

ஹிமசுதை-பார்வதி, உமாதேவி. [ராஜதானி

ஹிமபுரம்-ஔஷதிப்ரஸ்தம் என்னும்ஹிமாலை

ஹிமம்-இமயமலை, குளிர், சந்தநம், பனி.

ஹிமவான் - மலைபரசன், பர்வதராசன்.

ஹிமாயம்-இமயபர்வதம், இமயமலை,ஹிமம்.

ஹிமான் - ஹிமவந்தன், இமயமலை, மேரு புத்ரி யாகிய மநோரமை யென்னும் மே னையை மணம் புரிந்து பார்வதியையும் கங்கையையும் பெண்களாகப் பெற்று வளர்த்தவன்.

ஹிம்ஸை-நிருதிமகள், அதர்மன் மனைவி.
ஹிரண்மயவருஷம் - நவவருஷத்தொன்று இளாவ்ருதவர்ஷத்துக்கு வடக்கிலுள்ளது.
ஹிரண்யகசிபன் - காசிபனுக்குத் திதியினிடத்துப் பிறந்த புத்திரன், இவன் விஷ்ணு நரசிங்காவதாரத்திற் கொல்லப்பட்டான், இவன் மூவுலகையும் வென்றவன், இவன் மகன்ப்ரஹ்லாதன்.
ஹிரண்யகர்ப்பன்-(1)பிரமன், (2)விஷ்ணு, (3) சூரியன்.
ஹிரண்யநாபன்-(1)ஸ்ரீராமன் புதல்வனுகிய குசன் வமிசத்திற் பிறந்தவன், இவன் ஜைமினி சீடனுகிய யாஜ்ஞவல்கியரால் யோகமார்க்கம் உபதேசிக்கப் பெற்றவன், சுகவர்மா சீடன் எனவும் கூறுவர். (2) மைநாகன்.

ஹிரண்யபுரம்-நிவாதகவச காலகேயர்களுடைய தேசம்; இது: சமுத்திரத்திடையே யுள்ளது.
ஹிரண்யரோமன் - நான்கு லோகபாலகர்களுள் ஒருவன், ஓர் ருஷி.
ஹிரண்யாக்ஷன்-(1)ஹிரண்யகசிபன் தம்பி, தந்தை காசிபன், தாய் திதி, இவனும் இவன் தமையனும் சநக சநந்தநர்களுடைய சாபத்தால் ராக்ஷஸர்களாகப் பிறந்த ஜய விஜயர்கள், இவ்விருவரும் விஷ்ணுத்வார பாலகர்கள், இவர்கள் தவத்தினுல் மிகுகர்வமுடையவர்களாகி, தேவர்களுக்குத் துன்பஞ்செய்து வருங்காலத்தில், விஷ்ணுவினுற் கொல்லப்பட்டவர்கள், (2) வசுதேவன் தம்பி சியாமகன் இரண்டாம் மகன்.

ஹிரன்-நைவதம் செய்த ஹர்ஷன் தந்தை.
ஹிரஸ்வரோமன் - சுவர்ணரோமன் புத்திரன், இவன் இரண்டாஞ்சகன் தந்தை.
ஹிருதிகன்-போஜன் புத்திரன், இவன் புத்திரர்தேவமீடன், சத்தந்வன், கிருதவர்மன்.
ஹிருஷிகேசன் - விஷ்ணு, இருடிகேசன்.
ஹில்வலே-மிருகசீரிட நக்ஷத்திரத்தின் தலையி லுள்ள உபநக்ஷத்ரங்களுள் ஒன்றுக்கும் உள்ள பெயர்.

ஹ

ஹரிணதேசம் - ஹரிணர்களுடைய தேசம், இத்தேசத்தவர் யவநர் எனவும் படுவர், (ஹரிணர்-வெண்ணிறமுடையவர்.)
ஹரிஹரி - ஓர் கந்தருவன், இவன் ஒருசாபத்தால் முதலையாய்க் கிடந்து கஜேந்திரன் என்னும் யானையைப் பிடித்தபோது விஷ்ணுவினுற் கொல்லப்பட்டவன்.

ஹே

ஹேதி - சிருஷ்டி காலத்தில் பிரமனுல் படைக்கப்பட்ட ராக்ஷஸராஜன், இவன் மனைவி காலாக்நி யென்னும் பயை, புத்திரன் வித்யுத்கேசன், இவன் மாலியவந்தன் முதலாகிய ராக்ஷஸவமிசத்தின் மூல புருஷன்.
ஹேமசந்திரன் - (1) விசாலன் புத்திரன், (2)சாலிவாகந சகாப்தம் ஆயிரத்துநூறும் வருஷத்திலிருந்த ஒரு ஸம்ஸ்க்ருதகவி, இவர் தம் பெயரால் ஒரு நிகண்டு செய்தவர்;அதுஹேமசந்திரகோசம் எனப்படும்.
ஹேமவடம் - மேருவுக்குத் தென்றிசை துனியிலே யுள்ள மலைகளுளொன்று.
ஹேமன் - ஜயத்திரதன் புத்திரன், பலிக்குப் பாட்டன்.
ஹேமாங்கன் - வசுதேவனுக்கு யோசனையிடத்துப் பிறந்த புத்திரன்.
ஹேமாத்திரி - மேருமலை, பொன்மலை.
ஹேமை - ஒரு அப்சரஸ்த்ரீ. [புத்திரன்.
ஹேஹயன் - சதஜித்துவுக்கு மூன்றுவது

ஹை

ஹைரம்பம் - ஒருமலை; இது: மணிபுரத்தருகே கபிலநதிக்கு உத்பத்திஸ்தானமாயுள்ளது.
ஹைஹயம் - கார்த்தவீரியார்ஜுநன் அரசாண்ட தேசம்; இது: நர்மதாநதி தீரத்திலுள்ளது.

இரண்டாம்பாகம்

மதுரைத் தமிழ்ப்பெயரகராதி முற்றிற்று.

உ

கடவுள் துணை.

இரண்டாவது

பொருளகராதி.

அருளகத் தணைத்துமே யாளு நாதனை
மருளகத் தகற்றிட வணங்கி நூற்படி
தெருளகத் தொருபொருட் செப்பும் பல்பெயர்ப்
பொருளக ராதியாம் புகலு வாமரோ.

அ

அ - சிவன்; பிரணவத்து முதல் அக்கரம்; அகாரம் பிரமன், உகாரம் விஷ்ணு, மகாரம் உருத்திரன் எனக்கொள்வ தொன்றா யினும் அவற்றிற்கு அதிதேவதை பரசிவனே யென்க.

அகக்கூத்து - அகம், அகமார்க்கம், அகநாடகம், குணவழியது.

அகங்காரதத்துவம்-மூப்பத்தாறு தத்துவங்களுள் ஒன்று. ஆங்காரம் எனவுஞ் சொல்லப்படும். இது புத்தி தத்துவத்தினின்று தோன்றி, இவ்விடத்து யாவர்தான் என்னோடு ஒப்பவர்; ஒருவரும் இல்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய் வாயிற் காட்சிக்கு விடயமாய்த் தோன்றிய தொன்றனை இஃது இன்னதென்று, புத்தி தத்துவம் நிச்சயிக்கும்படியாகயான் எனவும், எனது எனவும், அதன்கண் ஒருப்பட்டெழுந்து ஆன்மாவுடன் முதல்வனது ஆணையினூலே வேற்றுமையின்றி நிற்கும் என்க. அது குணவொற்றுமைபற்றி முத்திறப்படும்.

அகங்காரவகை-வைகரியாங்காரம், தைசதாங்காரம், பௌதிகாங்காரம் என மூன்றும்.

இவற்றினுள்ளே தைசத அகங்காரத்தினின்றும் மனமானது தோன்றி யெதிர்ப்பட்ட பொருளைச் சித்தரூபமாய் நின்று சிந்தித்தும், ஐயுற்ற வதனை நிச்சயித்தற் கண்ணதாய வேட்கையைச் செய்தும் நிற்கும். அதன்பின் செவி, மெய், கண், நா, மூக்கு என்னும் பஞ்சேந்திரியங்கள் தோன்றி நிற்கும். இவற்றை முறையே வடநூலார் சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணமென்பர். வைகரியகங்காரத்தினின்றும் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்துந் தோன்றும். பூதாதி யகங்காரத்தினின்றும் சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னுந் தன்மாத்திரைகள் ஐந்துந் தோன்றும். தன்மாத்திரைகளும், இச்சாரூபமாகிய அந்தக் காரணங்கள் மூன்றுங்கூடிப் புரியட்டகமாம்.

அகநியம் - விகடம், விநோதக் கூத்து.

அகசு - பகல்மானம், பகலுழிகை, அளவு.

அகச்சமயங்கள்-பாடாணவாதசைவம், சங்கிராந்த வாதசைவம், அவிகாரவாதசைவ

வம், பரிணமவாதசைவம், சுத்தசைவம், பேதவாதசைவம் என்னும் ஆறுமாம். இவற்றுள், பாடாணவாத சைவமானது ஆன்மா முத்தியிலுஞ் சகசமலமென்னும் இயற்கைமலம் நீங்காது, ஆகந்துகமலம் என்னும் செயற்கைமலம் மாத்திரம் நீங்கப் பெற்றுக் கல்லுப் போலக்கிடக்குமென்பதாம். சங்கிராந்தவாத சைவம் ஆவது விகார மின்றி நிற்கும் ஆன்மாவின் சந்நிதியிலே அசத்தாகிய கருவிகளேசத்தாகியசிவத்தைச் சிவகரணமாய் நின்று அறியுமெனக் கொள்வதாம். அவிகாரவாத சைவம் ஆவது கொடியவெப்பமிக்க வெயிலிலே நடந்தோரால் அடையப்படுகின்ற மரநீழல்போலப் பதிவிகாரமின்றி நிற்ப, ஆன்மாவானது தானே பக்குவமடைந்தபோது ஞானக்கண் பெற்றுப் பதியைச் சேரும் எனக்கொள்வதாம். பரிணமவாத சைவம் ஆவது உயிர் கெட்டுக் கூடி அரனடியில் ஒன்றாய் நிற்கு மென்பதாம். சுத்தசைவம் ஆவது ஆன்மாவுஞ் சிவமுங் கூடிய விடத்து ஆன்மா சிவ அநுபவத்திற்கு உரித்தாகாது எனக் கொள்ளுமதம். பேதவாதசைவம் ஆவது ஆன்மா தத்துவஞான மடைந்தபோதே மும்மலமும் நீங்கப்பெறு மென்றும், இதுவே முத்தியென்றுங் கொள்வதாகும்.

அகடிதகடனஞசாமர்த்தியம் - மாயம், கூடாதையுங் கூட்டுந்தன்மை.

அகண்டானந்தமுனி - இலக்குமிதோத்திரமுதலிய நூல்களைச் செய்த சம்ஸ்கிருதகவி.

அகத்தி - அச்சம், கரீரம், முனி, முளகரியம்.

அகத்தியசங்கிதை } இஃது அகத்திய மகா
அகத்தியசம்மிதை } முனிவரால் வடமொழியிலே செய்யப்பட்ட வைத்திய நூல்.

அகத்தியபட்டன் - அதத்தியபண்டிதன்; இப்பண்டிதர் வடமொழியிலே பாலபாரதம் என்னும் நூலச்செய்தவர்.

அகத்தியபத்தவிலாசம் - சிவனடியார்களின் சரித்திரங்களைக்கூறும் வடமொழி நூல். அகத்தியரால் சொல்லப்பட்டது.

அகத்தியப்பிராதா - அகத்தியன் சகோதரன். வயிற்றிலேயே ஞானமடைந்தவன்.

அகத்தியம் - முதனூல், முத்தமிழிலக்கணமாகிய நூல். இஃது இயல் இசை நாடகமென்னும் முத்தமிழ் இலக்கணத்தையும் பன்னீராயிரஞ் சூத்திரத்தாற் றெரிவிப்பதாகிய இலக்கண நூல். தென்மதுரைக்கணிருந்த தலைச்சங்கப் புலவர்களுள் முதல்வராகிய அகத்தியனாற் செய்தருளப்பட்டது. இது நச்சினார்க்கினியர் காலத்திலேயே இறந்த தென்ப. தொல்காப்பிய உரையாசிரியர்களும் பிறரும் ஆங்காங்குச் சிற்சில சூத்திரங்களெடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

அகத்தியன் - கடயோனி, கடோற்பவன், கலசமுனி, கலசோற்பவன், குடமுனி, கும்பசம்பவன், கும்பசன், கும்பயோனி, கும்போற்பவன், கும்பமுனி, குறுமுனி, மலயமுனி, முத்தமிழ்முனியோன், மைத்திராவருணி, தத்தோத்திரி, வாரிகுடித்தோன், கும்பமாமுனி, புலத்தியன் மைந்தன், பிரீதிபுதல்வன், சித்தன்முதை, தமிழ்வகுத்தோன், உலோபாமுத்திரைகணவன், அகத்தியன் என்னும் பெயர்களுடைய இவர், இருடி சிரேட்டர்களுள் முதல்வர். மித்திராவருணர் என்னும் முனிவரானவர் சமுத்திரக்கரையிற் சஞ்சரித்தபோது அங்கே ஊர்வசிலர, அவள் மீது கொண்டமோக மேலீட்டினாலே இந்திரியங்கலிதமாக, அதனை யவர் குடத்தில் விட அதினின்றுந் தோன்றினவர். சிலர் பிரமதேவர்செய்தயாக கும்பத்தினின்றுந் தோன்றினர் எனவுங் கூறுவர். குடத்தினின்று முற்பவித்தமையாற்முன் கும்பயோனி, கலசமுனி, கும்பசம்பவர், கடோற்பவர் எனப் பெயர் பெற்றனர். சூரியர்கள் விந்தமலைக்குத் தெற்கே போகலாகா தென்ற கட்டுப்பாட்டைக் கடந்து முதன் முதல் தக்ஷிணம் வந்து அந்நாட்டியல் புகளைத் திருத்திச் செம்மை செய்தவர் இவரே, சிவபெருமானிடத்துங், குமாரக் கடவுளிடத்துஞ் செந்தமிழ் னியல்புகளைச் சந்தேகம், விபரீதம், மயக்கம் என்னுமுக் குற்றமுமறத் தெரிந்து தெளிந்தார் இவர் ஒருவரே. பிரமனு மறியாப் பிரணவப் பொருளுண்மையைக் குன்றமெரிந்த தேவகுஞ்சரி நாயகனிடத்துக் கேட்டுணர்ந்தாரும் இவரே. உமாதேவியாரின் கல்யாணத்துக்குத் தேவர் முதலிய அண்டத்துள்ள வுயிர்வர்க்கங்களாவும் அணுகித் திரண்டபோது இமய

மலே தாழ்ந்து, தென்புலம் உயர்ந்தது. அதுகண்ட தேவர் மு த லா யி னே ர் அன்னே! சிவனேயென்று இரங்க, சிவ பெருமான் அகத்தியரையே தென்றி சைக்கணுள்ள பொதியத்துச் சென்றிரு வெனக்கட்டளேயிட அவர் அதனேச்சிரமீ தேற்றுச் சென்று பொதியமலேயி லமரப் பூமி சமப்பட்டது. பின்னர் அங்கேயே திருமணக்கோலத்தையுந் தரிசித்தருளி னர். ஓர்கால் மேருமலேயின் பக்கத்துத் தவஞ்செய்திருந்தனர். அப்போது மேரு மலேயோடு பகைத்த விந்தமாமலேயா னது வளர்ந்து பெருத்துத் தேவர்கள் செலவைத்தடுப்பத், தேவர்கள் யாவரும் அகத்திய முனிவரே யோல மோலம்! என்று அழைத்திரங்க, அதனே யுணர்ந்த முனிவனுர் மலேயின் வலியை யடக்கித் தேவர் துயரைத் தீர்ப்பான் எண்ணிச் சிவபிரானேத் தியானிக்க, அவர் தோற்றி யருளி, விந்தமலேயை யடக்கும் ஆற்ற லும், பூசை நிமித்தம் கயிலேயிலிருந்த காவேரி தீர்த்தமுங் கொடுப்பப் பெற்ற வர், புத்திரப் பேறு விரும்பி விதர்ப்ப ராசன் பயந்த உலோபாமுத்திரையாரை விவாகஞ் செய்து, சித்தன் என்னுங் குமாரனேப் பெற்று வைத்துத் தென் றிசை நோக்கிச் சென்றனர். சமுத்திர கன்னியை மணந்து பெருஞ்சாகரர் என் னும் புத்திரரைப் பெற்ருர் என்றும், உலோபாமுத்திரை புலத்தியனரின் சகோதரி யெனவுங் கூறவர்.

இவர் குமாரராய சித்தமுனிவரின் புத் திரரான சுபதிட்டமுனிவர் இலங்கையை யரசாண்ட புலவ சிகாரத்தினமாகிய பர ராசசேகரன் என்னுஞ் சக்கிரவர்த்தியின் கொலுமண்டபத்திற்கு வந்து பறங்கிக்கா ரர், உலாந்தக்காரர் அங்கிலேயராதியர் இவ்வுரை யிந்த விந்தக் காலத்து, அர சாள்வரெனச்சொல்லிப்போயினர் எனப் பாரம்பரிய கதையுமொன்றுளது.

வழியில் சிரவஞ்சன் என்னும் ஓர் அசு ரன் மலேவடிவமாய்நின்று மயக்கக் கோப முற்று, மலேயாக நின்று வானவர் முனி வரை மயக்கிக் கந்தக் கடவுளின், வேலா யுதத்தால் அழியக் கடவையெனச் சாப மிட்டு, மீண்டு விந்த மலேயைப் பாதலம் போயழுந்துமாறு கையால் இருத்தி, அச முகியின் மைந்தர்களான வில்வலன் வா தாவி யென்னும் இரண்டசுரர்களேயும் அழித்துத் திருக்குற்ரல மென்னுந் தலத்தையடைந்து, விஷ்ணுவிம்பத்தைச் சிவலிங்கமாகத் தாபித்துப் பொதிய மலே க்குச்சென்று வீற்றிருந்தனர். காவிரி பூமி யில் வந்ததற்கும் இவரே காரணர். தமது கமண்டலத்திலிருந்த காவிரியை விநாயக மூர்த்தி காக வடிவாய்ச் சென்று கவிழ்ப் பப் பரந்தோடிய அதனே அரசிளங்குமர ரைத் துணேயாகக்கொண்டு, ஒருமுகமா கத் திருப்பி நாடுவழியே பாயுமாறு விடு வித்தவரும் இவரே. பொதிய மலேயின் பாங்கருள்ள காடுகளேயெல்லாம் நாடாக் கினர். அவைகளே: எழ்தெங்கநாடு, எழ் மதுரைநாடு, எழ்முன்பாலேநாடு, எழ்பின் பாலே நாடு, எழ்குன்ற நாடு, எழ்குண காரை நாடு, எழ்குறும்பனே நாடு, குமரி, கொல்லம் முதலிய பன்மலேநாடு எனப் பட்டனவாம். இவைகளேத்திருத்தியபின் யமதக்கினியாருழைச் சென்று அவர் மக னுர் திரணதூமாக்கினியாரை வாங்கிக் கொண்டு துவாரகைக்குச் சென்று கண் ணணூர்த்தி வழிக்கண்வந்த அரசர் பதி ணெண்மரையும் பதினெண்கோடி வேளி ருள்ளிட்டாரையும் அருவாளரையுங்கொ ண்டுபோந்து அந்த நாடுதோறு மிருத்திக் குருபீடமாய் விளங்கினர். அப்போது இலங்கை நகரத்திருந்து இராக்கதர்கள் வந்து பற்பல துன்பஞ் செய்ய யத்தனித் தார்கள். அதுகண்ட அகத்தியனுர் இரா வணனேச் சங்கீதத்தாற் சிநேகஞ் செய்து, இராக்கதர் அந்நாட்டிற்கு வாராதிருக்கு மாறு செய்வித்தனர். அகத்தியரோடு வந்த அரசிளங் குமரரே சேர சோழ பாண்டி மண்டலங்களே அமைத்தவர். அதற் குமுன் அரசுசெய்தவர் குறுநில மன்னர் ஆகும். தென்னுடைத் திருத்திப் பலவ கையானும் விருத்தி செய்தவர் துவரா பதி அரசிளங் குமரரேயாம். அது "சுரா திராசன் முதலாக வருசோழனுமுளட் சோழமண்டல மமைத்தபிறகு" எனவும், "காலனுக் கிதுவழக்கென வுரைத்தவவ னுங்காவிரிப்புனல் கொணர்ந்தவவனும்" எனவுங் கலிங்கத்துப்பரணி கூறுவதனுல் அறிக.

இந்திரன் முதலிய தேவர் பொருட்டுக் கடலின்க ணுளித்திருந்தவிருத்திராசு ரனே வெளிப்படுத்த நினேந்தருளித் திரிபுர மெரித்த விரிசடைக்கடவு ளருளினுற் கையை நீட்டி உழுந்தளவாகக் கடலேய

டக்கியுண்டனர். காசியம்பதியிலே சம்ஸ்கிருதத்தை விருத்தி செய்யும்படி பாணினி முதலிய முனிவர்கள் சங்கமொன்று தாபித்தனர். அதிற்றம்மையுஞ் சேர்க்குமாறு முனிவர் பெருமான் வேண்டவும் அவர் மறுத்தாராக, கோபமுற்றுத் திருவேங்கடப்பதி போந்து, சிவசுப்பிரமணியக் கடவுளே நோக்கித் தவங்கிடப்ப, அவர் தோன்றிச் செந்தமிழி னியல்பெல்லாந் தெரிக்கத் தெரிந்து பொதியத்திற் சென்று தம் நாட்டுக்குரிய தமிழ்ப் பாஷையையுஞ் செம்மை செய்யக் கருதி, அகத்தியம் என்னும் முதனூலைச் செய்தனர். அதன் பின்னர்ச் சோதிடம், வைத்தியம் முதலிய நூல்கள் பலவியற்றினர். இவற்றிற் சில மறைந்தன. தற்போது அவர் பெயரால் வழங்கும் சில நூல்கள் அவரியற்றியன வல்ல. இங்ஙனம் நூல்களியற்றித் திரண தூமாக்கினி யெனுந் தொல் காப்பியனர், அதங்கோட்டாசிரியர், துராலிங்கர், செம்பூட்சேய், வையாபிகனர், வாய்ப்பியனர், பனம்பாரனர், கழாரம்பனர், அவிநயனர், காக்கை பாடினியார், நற்றத்தர், வாமனர் என்னும் பன்னிருவர்க்கும் போதித்தனர்.

அதன் பின்னராய முதலூழியிறுதிக் கண் தென்மதுரையகத்து இறையனரையுங் குமரவேளையும் உடனிருக்கவ்வண்டி முரிஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவனர் என்றிவருள்ளிட்ட நானூற்று நாற்பத்தொன்பதின்மர் கூடவாராய்ந்து, தம் நூல்களையரங்கேற்றினர். அன்றி மற்றையோர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும், களரியர் விரையும் முதலிய நூல்களைச் செய்தனர். நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு ஆராயப்பட்டது. இத்தலைச் சங்கமிரீஇயினர் காய்சின வழுதி முதற் கடுங்கோனீறுயுள்ள பாண்டியர்எண்பத்தொன்பதின்மர். அவருட்கவி யரங்கேற்றினர்எழுவர். பாண்டியருள் ஒருவனுகிய சயமாகீர்த்தியனை நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல் காப்பியம் புலப்படுத்து இரீஇயினன்.

இத்தலைச் சங்கம் குறித்த வருடம் அளவும் நிலைபெற்று வருங்காலத்தில் அதக்கிடமாயிருந்த தென்மதுரை கடல்கொள்ளப்பட்டது. இதுவன்றி மேற்காட்டிய நாற்பத்தொன்பது நாடுகளும் அழிபட்டன. இக்காலத்தை ஆராயுமிடத்துத் துவாபர கலியுக சந்தியாதல் வேண்டுமென்றும், எனவே இற்றைக்கு 12000 வருடங்கட்கு முன் எனவுங் கூறுநிற்பர்.

இற்றைக்கு 11481, வருடங்களுக்கு முன்னர் ஒரு பிரளயம் வந்ததென்றும், அப்பிரளத்தால் இப்பூமுகத்திலே சமுத்திரக் கரையாற் சூழப்பட்ட நாடுகளெல்லாஞ் சிதைந்தும் வேறுபட்டும் போயின வென்றும், "போஸிடோனிஸ்" முதலிய தீவுகள்கடல்வாய்ப்பட்டழிந்தனவும் அப்பிரளயத்தாலே யாமென்றும், அத்திலாந்திச் சரித்திர மெழுதிய எல்லியட் என்னும் ஆங்கில பண்டிதர் கூறியதும் இதற்கோர் ஆதாரமாம்.

அத்திற்க, தேவவிருடியாகிய இக்குறு முனிபாற் கேட்ட மாணக்கருள் சிகண்டி என்னும் அருந்தவமுனிவர் ஒருவர் உளர் என்றும் அவர் இடைச்சங்கத்து அநாகுலன் என்னுந் தெய்வப் பாண்டியன் தேரோடு ஆகாய வழியிற் செல்லும்போது திலோத்தமையைக் கண்டுதேரிற்கூடின விடத்துத் தேவரும் முனிவருஞ் சரியாநிற்கத் தோன்றினமையாற் சாரகுமாரன் எனப்பெயர்பெற்ற அக்குமாரன் அறிதற்காக இசை நூலாகிய இசை நுணுக்கத்தைச் செய்தனர் என்றும் அடியாற்கு நல்லார் உரைத்திருக்கின்றனர்.

ஓர் காலத்து இந்திரசபையிற் சென்றிருந்த அகத்தியமுனிவரை யிந்திரன் மகிழ்விக்குமாறு உருப்பசியை யழைத்து நடனஞ் செய்கவென்ன, அவளும் அங்ஙனம் ஆடத்தொடங்கும்போது, சித்திரசேனன் என்னுங் கந்தருவன், கோலமுங்கோப்பும் இசையும் நடமுந்திருத்திக் கரந்து வருகின்ற திரையுட் புகுந்து பாட, வெளிப்பட்டு ஆடுகின்றவள் சயந்த குமாரனிடத்து மோகங்கொண்டாள். அதனையறிந்த நாரத மகாமுனிவர் கலகப்பிரியாதலின் அம் மோகத்தைப் பலர்க்கும் அறிவிக்க விரும்பிப் பகைநரம்புபட யாழ் வாசித்தனர். அதனுல் ஊர்வசியின் ஆடல் நெகிழ்ந்தமையும், பாடல் முதலிய பலவகைக் கருவிகள் நெகிழ்ந்தனவுங் கண்ட அகத்தியனர் சினந்து, சயந்தனை மூங்கிலாகவும், உருப்பசியை மானுட மகளாகவும், நாரதரது யாழை மங்கல மிழந்து மண்மிசைத் தங்கும் வீணையாகவும் ஆக வென்று சபித்தார் எனவும், அங்ஙனமே சயந்தன் விந்தமலையில் மூங்கிலாகவும்,

உருப்பசி காஞ்சிமா நகரத்தில் மாதவி யென்னும் பெயருடன் றேவகணிகையா கவும் பிறந்தனர் எனவும், மகதியாழ் மண் மிசைத் தங்கிய தெனவுஞ் சரிதமுண்டு. அதனை "வானவர்கோமான் வாணிடை யிருந்து" எனவரும் சுத்தானந்தப்பிரகாச பரதநூற்செய்யுளானும், "நாரதன்வீணை" என்னும் கடலாடுகாதைச் செய்யுளானும் "திருந்திய பொதியி லருந்திற லகத்தி யன்" என்னும் சிலப்பதிகார நூன்முகச் செய்யுளானு மறிக.

இன்னும் இம் முனிவரனுர் நகுடன் என்னும்அரசன் தேவேந்திரபதம் பெற்ற காலத்தில் அவன் சிவிகையைமுற்றுங்கிச் சென்றராக, அவன் விரைவாகச் செல் லுங்கள் என்னும் பொருள்பட "சர்ப்ப சர்ப்ப" எனக்கூற, உடனே மலைப்பாம் பாகச் சபித்தார் என மகாபாரதமும், சீதாதேவியின் சிறைமீட்டதற்காக இரா மபிரான் இலங்கையம் பதிநோக்கி வரு வழியில் இம் முனிவரின் ஆச்சிரமத்திற் றங்கி, இராவணன் வரலாற்று முறைமை களையும், இலங்கையின் மகாத்மியம் முத லான வற்றையுங் கேட்டுணர்ந்து, அவ ராற்கொடுக்கப்பட்ட பிரமாஸ்திரத்தைக் கைக்கொண்டு அவர் அருளையும்பெற்றுச் சென்று வெற்றியடைந்தனர் எனக் கூர்ம மகாபுராணமும் இராமாயணமுங் கூறு கின்றன.

"கொங்குதேர்வாழ்க்கை" என ஆல வாயடிகளாற் றிருவாய்மலர்ந் தருளப்பட்ட திருமுகப்பாசுரத்திற்குக் குற்றங் கூறி ய கடைச்சங்கப் புலவருள் ஒருவராய களவியற் பொருள் கண்ட மதுரைக்கணக்காயனுர் மகனரான நக்கீரனுருக்கு மயக்கம் நீங்க இலக்கணங்களை யிறைவன் ஆஞ் ஞைப்படி உபதேசித்தனர் என ஆலாசிய மான்மியமுங் கூறுகின்றது.

ஸ்ரீ இராமமூர்த்திக்கு விருந்தளித்துத் திவ்ய பாணங்கள் கொடுத்து அப்பாணங் களின் வரலாறும் மந்திரமும் கூறியவர். சுவேதனுக்குப் பிணந் தின்னும் சாபம் போக்கியவர். கொல்லாபுரத்தில் திரும களை வணங்கி அவள் குமரவேள் உனக் குவேண்டியவை கொடுப்பர் எனக் கூறக் கேட்டுக் களித்தவர். இவர் வண்டுருக் கொண்டு புஷ்பங்களிலிருந்த தேனை யெடுத்துச் சிவபூசை செய்ததா லீங்கோய் மலை யென்னும் தலமுண்டாயிற்று. விஷங் களுக்கஞ்சி இவரால் இருக்கு வேதத் தில் ஒரு கீதம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்; தூங் கெயிலெறிந்த தொ டித்தோட் செம்பியன் காலத்துக் காவி ரிப்பூம் பட்டினத்து இந்திரன் விழாவை யெடுப்பித்தவர். அகத்தியர் என்ற சப் தத்திற்குப் பொருள் விந்த மலையை யட க்கியவர் என்பது.

இவ்வீருடியர் பெருமானது கலைகளு ளொன்று, தற்காலத்து எம்மனோரையும் விப்பான் சிவஞானமுனிவர் (சிவஞான யோகிகள்) என்னுந் திருநாமத்தோடு தோன்றி, திருக்கைலாய பரம்பரைத் தி ருவாவடுதுறையாதீனத்தமர்ந்துசெந்தமி ழை விருத்திபண்ணியதன்றிப் பரமத நி ராகரணமும், சைவசித்தாந்தமாகிய சுவ மதஸ்தாபனமுஞ் செய்து, சிவஞானபோ தம் முதலிய உண்மை நூல்களுக்குத் தி ராவிடமாபாடியம் எனப்பெயரிய உரை யும், வார்த்திகமுஞ் செய்து விளங்கிற்று என்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளி தின் விளக்கமே. எனவேயிவர்செந்தமிழ் நங்கைக்குச் செவிலித்தாயாய் விளங்கின ரென்பது திண்ணமேயாம்.

அகத்தியமுனிவர் பெயரால் ஒரு நட் சத்திரமு மிருக்கின்றது; அஃதாவது தோன் று மாயின் சமுத்திர அலைகள் ஒடுங்கும். இது கடல் குடித்த பெருமாட்சிமைக்கு ஓரறி குறியாகக்கொள்ளத் தக்கதாம்.

அகத்தீசுவரர் - திருவகத்தியான் பள்ளி யென்னும் திவ்விய தலத்திலே எழுந்தரு ளியிருக்குஞ் சுவாமிபெயர். [ழ்ந்தநகரம்.

அகநகர்-நகருள்ளிடம், இராசதானியைச் சு

அகநானூறு - இஃது எட்டுத்தொகையுள் ஏழாவதுதொகை, வாழ்த்து உட்பட 400 செய்யுட்களுடையது. உத்தர மதுரைக்க ணிருந்த கடைச்சங்கப் புலவர்களுள் பா தபம் பாடிய பெருந்தேவனுரால் வாழ்த் துச் செய்யுளும், மாமூலனுர் முதல் உலோச்சனுர் இறுதியாகவுள்ள புலவர் பலரால் மற்றை நானூறு செய்யுட்களுஞ் செய்யப்பட்டுள்ளன. அகப்பொருட் பகு திகளையே பொருளாகவுடையது. பதின் மூன்றடிச் சிறுமையும் முப்பத்தேழடிப் பெருமையு முள்ள ஆசிரியப்பாக்களால மைந்தது. இத்தொகைக்கண் வாழ்த்து ஒழிந்த நானூறு செய்யுட்களில் முன்புள் ள நூற்றிருபது செய்யுள் களிற்றியானை நிரை எனவும் அவற்றின் பின்புள்ள நூற்

றெண்பதுசெய்யுள்கள்மணிமிடைபவளம் எனவும் மற்றைய நூறும் நித்திலக்கோவை எனவும் கூறப்படும். இத்தொகை தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகபிற்றோன்றிய உருத்திரசன்மர். தொகுப்பித்தவன் உக்கிரப்பெருவழுதி. இது அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை எனவும் பெயர் பெறும்.

அகநிலை-ஊர், அகலுள், குடிக்காடு, நத்தம்.

அகநிலைப்பசாசக்கை-மூவகைப் பசாசக்கைகளிலொன்று;அது: சுட்டுவிரல் நுனியிற் பெருவிரலகப்பட வளைப்பது. [லை.

அகநிலைமருதம்-உழை குரலாய கோடிப்பா

அகநீகு - தேவானீகன் புத்திரன்,குருவின் தந்தையார்.

அகப்புறக்கருவி - எழுவகை முழவின் ஒன்று; மத்திமமான தண்ணுமை, தக்கை, தகுணிச்ச முதலாயின.

அகப்புறச்சமயங்கள்-சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்னும் ஆறுமாம். இவற்றுள் சைவசமயி சிவன் தாண்டவ பூஷணமூர்த்தியாய் அருள் செய்வர் எனக் கூறுவன். பாசுபத சமயி திருநீறுஞ் சடைமுடியுந் தரித்தமூர்த்தியாகவும்,மாவிரதி என்பு மாலைதரித்த மூர்த்தியாகவும், காளாமுகத்தன் படிகம் புத்திரதீபமணிகள் தரித்த மூர்த்தியாகவும், வாமசமயி அக்கினியும் உபவீதமுந் தரித்த மூர்த்தியாகவும், வைரவசமயி தமருகமுஞ் சிலம்புந் தரித்த மூர்த்தியாகவும் அருள் செய்வர் என்றுங் கூறுவர். இவ்வறுவருஞ் சிவ பிரானேயே கடவுளாகக் கொண்டு, அவர்க்கு முக்கண்ணுடைமையை யொப்பி நிற்றலாற் சிறிது வேறுபாடுடையர் என்று கூறுப.

அகப்பை - அகழ்ப்பை யென்பதன்மரூஉ, கோரிகை,மூழி,மூழை,சட்டுவம்.[கூத்து

அகமார்க்கம் - அருமையிற் பாடல், மெய்க்

அகமுழவு-முழவு வகையின் ஒன்று; அஃதாவது : உத்தமமான மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா வென்ற இவையாம்.

அகம்பன்-கும்பகன்னன் புத்திரன். இவன் அநுமானாற் கொல்லப்பட்டான்.

அகலம் - அகலுள், அகறல், ஆய்வு, ஆன்றல், இடம், இடம்பாடு, கண்ணறை, சேண், தகம், நளம், நளி, நனவு, நியக்குரோதம், படர்தல், பாழி, மார்பு, விபுலம், வியல், விரிவு, விசாலம், வியலிடம்.

அகலிகை-முற்கல முனிவர் புத்திரி. இவள் அதிக சுந்தரமுடையவள்.

அதனால் அநேகர் மணஞ்செய்ய விரும்பவும், அதுகண்ட முனிவர் நீர்க்குள் நின்று நெடுங்காலந் தவஞ் செய்வார்க்கே இவள் உரியவள் என்று சொல்ல, பற்பல முனிவருந் தேவரும் அங்ஙனம் புகுந்தும் முடியாராயினர். இந்திரனும் பற்பல முறை மூழ்கி மூழ்கிச் செய்ய இயலாமற் போயினன். கௌதமரே அங்ஙனம் நீரில் நெடுங்காலஞ்செய்தமையால் மனைவியாகப் பெற்றனர். இந்திரன் மாயவடிவங் கொண்டு வந்து சேர்ந்தமையால், கௌதம முனிவரால், கல்லாகக் கிடக்கும்படி சாபம் பெற்றனள். பின் இராமசுவாமியின் திருப் பாததூளி பட்ட மகிமையால் முன்னுருவாகி முனிவரைச் சேர்ந்தனள். பன்னிரு வருடம் மழையில்லாமையால் எங்கணுமுள்ள முனிவர் யாரும் இவள் சுக்கிரமத்திற்குச் செல்ல அவர்களைக் கௌதமர் இவளுடைய துணைப்பலத்தாற்றான் பாதுகாத்து வந்தனர். இவள் கங்கையின் வரத்தினால் எங்கே தோண்டுகின்றனளோ அங்கே தூயநீர் வருமென்ப. இவள் காலிற் பாடகமணிக்தே திருப்பாற்கடலில் பிறந்தவள் என்பாருமுளர். இவள் குமாரர் சதானந்தருஷி.

அகலுள் - தெரு, எவ்விடமும். [பாண்டில்.

அகல் - இடிஞ்சில்,சராவம்,சுத்திகை,தகழி,

அகவல் - ஆசிரியம், ஆசிரியப்பா, தொகை. இதனிலக்கணமாவது : அளவடி யுடைத்தாய் இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும், கருவிளங்கனி கூவிளங்கனியென்னும் இருசீருங்கலவாது மூன்று முதலிய பலவடிகளால் முற்றுப்பெற்று, ஈற்றிற் பெரும்பாலும் ஏகார ஓகாரங்கள் வந்து நடக்கப்படுவதாம். நேரசையாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா,இணைக்குறளாசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

அகவற்பாவினம்-ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை,ஆசிரியவிருத்தம் எனமூவகை.

அகவிதழ் - அல்லி, உள்ளேடு.

அகவை-பதினாறு வயதிற்கு உட்பட்ட பிராயத்தையுடைய பெண்.

அகழி - அகழ், உடு, ஓடை, கயம், கிடங்கு, கேணி, பரிகம், பரிகை,பாம்புரி,அகப்பா.

அகழிலி - இரும்பன், காசெலி.

அகழ் - ஓடை, கிடங்கு, கேணி, உடு, அகப் பா, பரிகம், அகழி.

அகறல்-தணத்தல், வல்லி, பிரிதல், நீங்கல், உணர்தல், தவிர்தல், கடத்தல், போதல்.

அகற்றல் - உச்சாடனம், ஒருவுதல், துறத் தல், நீக்கல், தவிர்த்தல், துரத்தல், ஓட் டல், நீத்தல், பரித்தல், கழித்தல், தீர்த் தல், விடுத்தல்.

அகன்-அஷ்ட வசுக்களில் ஒருவன். இவன் ஆபச்சைவன் எனவும் படுவன்.

அகன் } இவன் பகாசுரன் சகோதரன்
அகாசுரன் } இவன் கஞ்சனேவலால் ம லைப்பாம்பு வடிவாய் வந்து கண்ணனே விழுங்கி அவராற் கொல்லப்பட்டவன்.

அகன்மணிப்பொதுப்பெயர் - அரதனம், இ ரத்தினம், சலாகை, சலாகு.

அகிகேத்திரம்-உத்தரபாஞ்சாலத்து இராச தானியின் பெயர்.

அகிலாண்டேசுவரி - திருவானைக்காவிலே கோயில் கொண்டிருக்குந் தேவியாரின் திருப்பெயர்.

அகிலேசர்-(1) திருவாரூரிலே கோயில் கொ ண்டிருக்குஞ் சுவாமி பெயர், (2) காசித் தலத்தில் கோயில்கொண்டிருக்கும் சுவா மியின் திருப்பெயர்.

அகிலேசுவரி - திருவாரூரிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார் பெயர்.

அகில் - அகரு, உலோகம், காக்துண்டம்; சாகாதுண்டம், சோங்கம், பூழில், வமிச கம், காழ்வை. [ரவன், காரகில்.

அகில்வகை-அருமணவன், தக்கோலி, கிடா

அகோபிலமடம் } தொண்டைநாட்டிற்கு வ
அகோபிலம் } டமேற் றிசையிலுள்ள ஓர் வைணவமடம், இதற்கு அழகியசிங்கர் மடம் என வேறொரு பெயரு முண்டு.

அகோரசிவாசாரியர் - சைவசித்தாந்தத் தைப் பற்பல அத்தியற்புத செய்கைகளா னும் போதனையினனும் நிலைநிறுத்திய மகான்களுள் இவரும் ஒருவர். சைவசித் தாந்தத்திற்கு வேண்டிய நூல்களே வட மொழியில் இயற்றினர். மிருகேந்திராக மம் முதலிய சிவாகமங்கட்கு உரைசெய் தும் வியாக்கியானஞ் செய்து முள்ளார். ஆதிசைவ பிராமண குலத்தில் அவதரித் தவர். சிதம்பர க்ஷேத்திரத்திலே பரிபூ ரண தசையடைந்தனர். அவதரித்த தா னமும் அது வென்று கூறுகின்றனர். அகோரமூர்த்தியென்று இவர்க்குப் பெய ருமுண்டு. அதிவீரராம பாண்டியர்க்குத் தீக்ஷாகுருவா யிருந்தனர் என்றுங் கூறு வாரு முளர்.

அகோரசிவாசாரியார்பத்ததி - இது வட மொழியிலே அகோரசிவாசாரியாராற் செய்தருளப்பட்ட ஓர்நூல். இது அகோ ரபத்ததி எனவும் படும். பத்ததிகளுள்ளே இதுவும் வாமதேவசிவாசாரியாராற் செய் தருளப்பட்ட வாமதேவபத்ததியுமே முக் கியமாகக் கைக்கொள்ளப் படுகின்றன. சைவக்கிரியை கிரமங்களைப்போதிக்கும்.

அகோரமூகம் } சிவபெருமானது ஐந்து
அகோரம் } திருமுகங்களுள் ஒன்று. இது கர்த்திருசாதாக்கிய மென்னுந் தத் துவமும் ஈசுவரனென்னு மூர்த்தியும் பொருந்தியுள்ளது. இது கண்டவர்க்குப் பயங்கரமுண்டாக்குந் தோற்றமுடைய தாய், கீழ்நோக்குந் தாடியைக்கொண்டு, புறப்பட்ட பற்களும் விருத்தர் முகம் போன்ற தன்மையு முடைத்தாய், கருகிற முற்று வலப்புயத்தின்மேல் தெற்கு நோக்கி விளக்கும், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம் என் னும் ஐந்து ஆகமங்களையும் பாரத்துவாச விருடி பொருட்டுத் தோற்றுவித்ததும் இதுவே. அத்தியான்மக நூல்கள் தோன் றினவென்றுஞ் சிவாகமங் கூறும்.

அக்கசாலையர்தெரு - ஆவேசனம்.

அக்கபாதன் - நியாயநூல் செய்தஆசிரியன்.

அக்கயபாத்திரம் - சூரிய தேவனிடத்தி னின்றும் அவன் பேரனைய தருமராசன் பெற்றுக்கொண்ட வற்றுத பாத்திரம். எவ்வளவு ஜயிரவர் வரினும் அவர்கள் யாவர்க்கும் அன்னங் கொடுக்கும் விசேட முடையது. [ஞற் கொல்லப்பட்டவன்.

அக்கன் - இராவணன் குமாரன். அநுமா

அக்காரக்கனிச்சுமனர்- கடைச்சங்கப் புல வர் நாற்பத்தொன்பதின்மரு ளொருவர். உக்கிரப்பெருவழுதியால் ஆதரிக்கப் பட்டவர்.

அக்கினிட்டி - ஞெகிழி, இத்தனம், கொப்பி டுகலம், அனற்குவை, இந்தளம், நெருப் பிடுகலம், தூபக்கால். [கீழ்த்திக்கு.

அக்கினித்திக்கு - தென்கீழ்த்திசை, தென்

அக்கினிதேவன்-சாதவேதா, மைவாகனன், தீபதி, சித்திரபானு, தனஞ்சயன், தென் கீழ்த் திசையோன், தேயு, வாயுசகன், வாயுச்சகன், எழுநா, பாவகன்.

அக்கினிதேவன்பாரி } சுவாகாதேவி, சுவா
அக்கினிமனவி } கை.

அக்கினிமுகன் - சூரபன்மனது புத்திரருள் ஒருவன். வீரவாகுவின் றுணைவராய ஒரு வராலுங் கொல்லப்படாதிருந்த வீரதீரன், வீரமார்த்தாண்டன், வீரகேசரி முதலிய எண்மர்களையும் போர்முகத்திற் கொன்றவன் இவனே. காளியின் வரபல முடையவன். இவனுக்கு முகம் இரண்டு. வீரவாகுவால் இறந்தவன். தாய் பதுமகோமளை.

அக்கினிவகை - ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினியம் என்னு மூன்று மாம். இவைமுறையே சதுரம், வில் வட்டம், கோணம் என்னுமூவடி வினவாம்.

அக்கினிவாகனம் - ஆட்டுக்கடா, ஆணடு.

அக்குமணி - சங்குமணி, மனவு, வளைமணி, மலை, உருத்திராக்க மணி.

அக்குரோணி-பதாதிவகை அநீகம் மூன்று பங்கு கொண்டது.

அக்குரோணிவகை-பதாதிசேனைமுகம்,குமுதம்,கணகம், வாகினி, பிரளயம், சமுத்திரம்,சங்கம், அனிகம், என்னு மொன்பதுமாம். இவற்றுள்,பதாதியாவதுஒரியானையும், ஒர்தேரும், மூன்று குதிரைகளும், ஐந்துகாலாளுங்கொண்டது. சேனைமுகம் ஆவது பதாதி மூன்றுபங்கு கொண்டது. குமுதம் ஆவது சேனைமுகம் மூன்றுபங்கு கொண்டது. கணகம் ஆவது குமுதம் மூன்றுபங்குகொண்டது. வாகினிஆவது கணகம் மூன்று பங்குகொண்டது. பிரளயம் ஆவது வாகினி மூன்று கொண்டது. சமுத்திரம்ஆவது பிரளயம் மூன்று கொண்டது. சங்கம் ஆவது சமுத்திரம்மூன்று கொண்டது. அனிகம் ஆவதுசங்கம்மூன்றுகொண்டது.அவற்றின்றொகையாவன:

1. பாதாதிக்கு—	யானை	1.
	தேர்	1.
	குதிரை	3.
	காலாள்	5.
		9.
2. சேனைமுகத்திற்கு—	யானை	3.
	தேர்	3.
	குதிரை	9.
	காலாள்	15.
		27.
3. குமுதத்திற்கு—		9.
		9.
		27.
		45.
		27.
4. கணகத்திற்கு —		27.
		81.
		135.
		81.
5. வாகினிக்கு—		81.
		243.
		305.
		243.
6. பிரளயத்திற்கு—		243.
		729.
		915.
		729.
7. சமுத்திரத்திற்கு—		729.
		2187.
		2745.
		2187.
8. சங்கத்திற்கு—		2187.
		6561.
		8225.
		6561.
9. அனிகத்திற்கு—		6561.
		19683.
		24675.

அங்கக்கிரியை-ஓர் வசைக்கூத்தி லக்கணம்.

அங்கதன் - (1) குரங்குச் சேனைவீரருள் ஒருவன். (2) இலக்குமணரின்மகன்.

அங்கதேசராசன் - கன்னன், கதிர்மதலை, கானீனன், கவசகுண்டலன், கருணன்.

அங்கநாடு - விஷ்ணுமூர்த்தியின் மனத்தினின்றுந் தோன்றினமையால் மனோபவன், மனோசன், எனப் பெயர்பெற்ற மன்மதனுவன், சிவபெருமான் சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்னும் நான்கு மகாமுனிவர்களுக்குச் சிவ ஞானயோகத்தைக் காட்டாநிற்புழி, பிரமன் முதலிய தேவர்களின் எவலாற் சென்று அம்பு பிரயோகிக்க, நெற்றிக் கண்ணினின்றுந் தோன்றிய அக்கினி சுட்டதனல் வெந்துவிழுந்த நாடாம். (2) விசயவரன் என்னும் அரசனுடைய நாடு.

அங்கவகை - படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறுமாம்.

அங்காகமம்-மதனநூல்,கொக்கோகம்,காமநூல், இலீலை நூல். [கை, கௌள்ளல்.

அங்காடி-கடைவீதி, ஆவணம், கூவம், பீடி

அங்குசம் - வைணுக்கம், யானைத்தோட்டி.

அங்குலன் - சாகபுரத்திலிருந்த வேடன். பாதகங்களைச் செய்தவன். இவன் ஒரு நாள் வேட்டையாட வனத்திற்குச் சென்று அங்கு மிருகம், பறவைகள் ஒன்றும் அகப்படாமையால் வருந்தி, நீரருந்த வரும் மிருகங்களைக் கொன்று போவோம் என்று நினைத்து, ஓர்கசையினிடத்துள்ள வில்வமரத்தின் மேல் ஏறி மறைவாயிருக்கும் இலைகளையெல்லாம் தன்வாளினாலும் கைகளினாலும் அரிந்தும் பிடுங்கியும் எறிய, அவையெல்லாங் கீழிருந்த சிவலிங்கத்தினுச்சியிற் பட்டன. இங்ஙனமே மிருக பயத்தினால் நித்திரையின்றி யிராமுழுவதுங் கழித்தமையானும், அத்தத்தினத்து ஊணின்றி யிருந்தமையானும், சிவசந்நிதியினுள்ள வில்வமரத்து இலைகளைப் பறித்து எறிய அவை யருச்சனை செய்ததுபோலாகலானும், சிவராத்திரி தினமாகிய அவ்விரதத்தை யன்புடன் அநுட்டித்தவரது பலன் அவனுக்குக்கிடைத்தது; இங்ஙனமாய் வேடன் மறுநாள் தன்வீடு சென்று மனைமக்களோடு சிறிது காலம் வாழ்ந்து இறந்தனன். யமனுதர்கள் பாசத்தினாற் கட்டி யமலோகங் கொண்டுபோகச் சிவபெருமான் திருவருளாஞ்ஞைப்படி நந்திகணங்கள் சென்று யமனுதர்களை யடித்துத் துரத்திப் பாசத்தை யவிழ்த்து விமானத்திலேற்றிச் சிவலோகஞ் சார்ந்தனர். சிவபெருமான் அவ்வேடனை நோக்கி, அன்பனே! சிவராத்திரி விரதத்தை யநுட்டித்த பலனை யுடையை ஆதலாற் சிவகணத்தவர்களுள் ஒருவனாய் இருக்கக் கடவாயென்று கூறியருள அங்ஙனமிருந்தனன்.

அசகாயசூரன் - வேறொருவரது சகாயமில்லாமற் பகைவரை வெல்லும் பலமுள்ளவன், சுத்தவீரன்.

அசதி-குட்டினி, தொழுத்தை, கூளி, குறளி, படுவி, குண்டம், துட்டை.

அசதியாடல் - நகை, நயச்சொல், மிக்குச் சிரித்து விளம்பல், நகல், நயக்கிளவி.

அசமுகி - காசிபமுனிக்கும் மாயையென்பவட்கும் பிறந்தவள். துருவாச முனியுடன் சேர்ந்து வில்வலன், வாதாவியென்னு மிருமைந்தரையும் பெற்றவள். இந்திராணி தனித்திருக்கப் பார்த்து அண்ணனுக்கு ஆவாளென்று இழுத்துச் செல்லுகையில் வீரமாகாளரால் கை வெட்டப்பட்டு சூரனுக்குத் தனக்குநேரிட்டதைத் தெரிவித்துப் பிரம்மனுற் கைவளரப் பெற்றவள்.

அசிதம் - சிவாகமம் இருபத்தெட்டினு ளொன்று. சத்தியோசாத முகத்தினின்றுந் தோன்றியது. நாற்பாதங்களையும் பதினாயிரங் கிரந்த சங்கியைகளையுமுடையது. நான்கு உபதேசங்களையுடையது. இது சதாசிவ மூர்த்திக்கு முழந்தாளென்ப. இது கேட்டவர் சிவர், சுசிவர், அச்சுதர் என்பவர்களாம். [கேகயப்புள்.

அசுணமா - கேளுயம், இசையறி பறவை,

அசுத்தபுவனம் - ஆன்மதத்துவம் எனவும் படும், பிரகிருதி முதற் பிருதிவி தத்துவ மிறுதியாகவுள்ள இருபத்து நான்குமாம்.

அசுத்தமாயை - மாயாமலத்தின் கூறுபாடினுளொன்று. இது சுத்தமாயையினின்றுந் தோன்றியதாய், பிரகிருதி மாயை தோன்றுதற்குக் காரணமாயுள்ளது. பிரபஞ்ச சங்காரகாலத்தில் இஃதழிந்தால் மீட்டும் இதனை யுண்டாக்கும் அப்பொருளுக்கும் ஒரு பாதானமாக அநவத்தா தோடமடைதலால் இதற்கு அநித்தியத்துவங் கூடாதபடியினாலே அழிவில்லதாய், அருவமாய், அநேக மென்கிற பிரமாண மில்லாதபடியினாலே ஒன்றாகி, சகலசகத்துக்குங் காரணமாய், காரியஞ் சடமாயிருத்தலாற் றானுஞ்சடமாய், எவ்விடத்துங் காரியங் காணப்படுகையினாலே வியாபகமாய் நிருமலமாகிய சிவபெருமானுக்குப் பரிக்கிரகசத்தியாய், ஆன்மாக்களுக்கு மாயேயமான தனுகரண புவன போகங்களை யுண்டாக்குவதாய், ஆணவம், மாயை, கன்மம் எனமூவகைப்பட்ட மலங்களில் ஒன்றாய மாயாமலத்தின்காரியப்பாட்டினுளொன்றாய் விளங்குவதாம். எனவே விந்துவின் கீழாயடங்கி மல கர்மங்களோடு விரவி முதற்காரணமாய் நிற்பதாம்.

அசுத்தமாயைத்தோற்றம் - வாயுவானது கடலின் ஒரு பிரதேசத்தை விகாரப்படுத்து மாறுபோல அனந்த தேவராயனுர் கிரியா சத்தியால் அந்த மாயையினுருபிரதேசத்தை விகாரப்படுத்தி, அதனின்றும் நியதியையும் காலதத்துவத்தையு முண்டாக்குவர். எனவே முதல்வனுணையால் அனந்தேசுவரராயனுர் கிரியா சத்தியைப் பிரேரிக்க, அது சத்திதத்துவத்தையெழுப்ப, சத்திதத்துவங்

காலதத்துவத்தையெழுப்ப, அதுஆன்மாவுக்குள்ள கன்மத்தைக் கூட்டுமெனக் கொள்க. அந்தக்காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூத்திரப் பட்டு இறந்தகாலத்து எல்லையும், நிகழ் காலத்திற் பலமும், எதிர்காலத்திற் புதுமையு முண்டாக்கும். நியதிதத்துவம் அரசன் நியாயம்போலச் சிவபெருமானுற் கன்மத்துக்கீடாகக் கொடுக்கப் பட்ட போகங்களைப் புசிக்கும்படி யறுதியிடும். காலதத்துவம் நியதிக்குப் பின் தோன்றி ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்ம சேட்டைக் கேதுவாய கிரியாசத்தியைப் பிறப்பிக்கும்.

அசுத்தம் - அசுசி, அருவருப்பு, குற்சிதம், சூதகம், தூயதின்மை, பயிர்ப்பு, வாலாமை, ஆசௌசம், ஆசூசம், சுசியின்மை, அசுத்தம்.

அசுரர் - அவுணர், இராக்கதர், சுக்கிரசீடர், தகுவர், தக்கர், தானவர், திதிசுதர், திதிமைந்தர், தைதேயர், வானவர்மாற்றலர், திதிபுதல்வர், தேவர்பகைவர், தைத்தியர், நிசாசரர், நிசிசரர், பூர்வதேவர், வானோர் மாற்றலர், கண்டகர், மேனிகரப்போர்,கார்வண்ணர்,மாயையமைந்தர்.

அசுவத்தாமன் } துரோணசாரியன் புதல்
அசுவத்தாமா } வன். துரோணர் மனைவியாகிய கிருபியின் கற்பினை ஈசதரா லறிந்த சிவபிரான், அதனையறிய நிர்வாண பிக்ஷை கேட்டு இவள் அழகினைப் பார்த்துவீர்யத்தைத்தட்டில்விட அதனை அவள் துரோணர் குதிரையிடம் வைத்ததனுல் குதிரையின் முதுகைக் கிழித்துக்கொண்டு அசுவத்தாமன் பிறந்தான் இவனுக்கு மயிற்கொடி, சிரஞ்சீவிகளுள் ஒருவன்.

அசுவினிதேவர் - நாதன், தத்தியன்.

அசை - தாளவகையுளொன்று, ஒரு மாத்திரை, இதற்குவடிவு-எ.

அசை - எழுத்துக்களால் ஆக்கப்பட்டுச் சீர்க்கு உறுப்பாய் வருவது. அது நேரசை நிரையசை என இருவகைப்படும். அவற்றுள் நேரசையாவது குற்றெழுத்தேனும் நெட்டெழுத்தேனுந் தனித்தும் ஒற்றடுத்தும் வருவது. நிரையசையாவது குறிலிணைந்தும் குறினெடில் இணைந்தும்,குறில் இணைந்து ஒற்றடுத்தும், குறி னெடி லிணைந்து ஒற்றடுத்தும் வருவது.

அசைச்சீர் - நேரசையாயினும் நிரையசையாயினுந் தனித்து நின்று சீராய் வருவதாம். உதாரணம் நேர் (நாள்) நிரை (மலர்) இவை பெரும்பாலும் வெண்பாவி னீற்றிலுஞ் சிறுபான்மை மற்றைய வற்றுள்ளும் வரும்.

அசைச்சொல் - அத்து அந்தில் அம்ம, அரோ, அன்று, ஆங்கு, ஆம், ஆல், இகும், இட்டு, இருந்து, இன்று, ஒரும், கா, குதிரை, சின், தம், தாம், தான், தில், நின்று, பிற, பிறக்கு, போம், போலும், மன், மன்னே, மா, மாது, மாதோ, யா, இக, மியா, போ, நும், வான், கொல், மற்று, ஆங்க, ஓ, உம், இவற்றுண், மாவென்னு மசைச்சொல் வியங்கோளோடும் வரும். அன்றியும் முன்னிலையசைச் சொன் முதலிய தத்தம் வரியிற் காண்க. இவை அசைநிலைகளெனவும் படும். என்னை? வேறு பொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும்வினைச்சொல்லோடுஞ் சார்த்திச்சொல்லப்பட்டுநிற்றலான்.

அசைதல் - துயல்வரல், துயில்வரல்.

அசைத்தல் - சார்த்துதல்,அலங்கல், ஊசல், ஒசிதல், சலித்தல், சாய்தல், ததும்பல், தயங்கல், தளம்பல், தள்ளாடல், திவளல், துயல்வரல், துவளல், கசடல், தரளுதல், கம்பிதஞ்செய்தல், சஞ்சலித்தல், தளர்தல், ஆடல், ஆட்டல், இரட்டல், ஒசித்தல், சலிப்பித்தல், துவட்டல்.

அசைத்தெழில் - தாக்கியெழுதல்.

அசைமீட்டல் - மிருகங்கடாம் உண்ட உணவை இரைப்பையினுட் செலுத்தல்.

அசையாநிலை - அசலம், சலியாமை, சாசுவதம், துருவம், துவம், தம்பநிலை.

அசைவு - உலோகம், சம்பனம், கம்பம், கம்பிதம், கஞ்சலம், சலம், சலனம், தரளம், துலிதம், மடிவு.

அசோகமரம்-காகோளி,சிஞ்சுபம், செயலை, சேந்து, பிண்டி.

அசோகவனம் - இராவணனது உத்தியான வனம், சீதேவியைச் சிறைவைத்தஇடம், சோகத்தை மாற்றும் வனம்.

அச்சக்குறிப்பு-அளுக்கல், உலமரல், ஓடல், குலைதல், குலையல், குளிர், கூசல்,ஞெரேலெனல், ஞொள்கல், திட்கல், துட்கல், துணுக்கெனல், துண்ணெனல், தேங்கல், வெட்கல், வெய்துறல், துடுக்கெனல், திடீரெனல், திண்ணெனல்.

அச்சமின்மை - அபயம், நிர்ப்பயம், வெருவாமை, தறுகண்மை. அஞ்சாமை.

அச்சமுடையோன் } கரிதன், காதரன், சித
அச்சமுள்ளோன் } ன், பீதன், பீரு, பீரு
கன், பீலுகன், சகிதன்.

அச்சம் - அடுப்பு, அணங்கு, அற்றம், உட்கு, உரும், உருவு, உதுகண், கடி, கம்பலை, கலக்கம், கவலை, கொன், கோரம், சூரம், சூர், தரம், நாம், பயம், பனி, பனிப்பு, பீதி, பீர், புலம்பு, பைரவம், பேம், பிறப்பு, வெடி, வெருவந்தம், வெருவு, வெறி, வெறுப்பு, அதிர்ப்பு, பயானகம்.

அச்சவவிநயம்-நாடகவுறுப்பிலொன்று; அஃதாவது: ஒடுங்கியஉடம்பும், நடுங்கிய நிலையும், மலங்கிய கண்ணும் கலங்கிய மனமும், மறைந்து வருதலுடைமையும் கையெதிர் மறுத்தலும், பரந்த நோக்கமும் இசைந்த பண்பினதாம்.

அச்சியந்திரம்-எழுதாவெழுத்து, எழுத்துப் பதிகருவி.

அச்சிரவகாலம் - வாடையொடு வரூஉங்காலம், முன்பனிக்காலம். [னை, ஆளத்தி.

அச்சு - தென்னுதெனுவென்றுபாடல், பாரை

அச்சுமாரூவாதிமதம் - ஆன்மாக்கள் பிறவியை யடையும்போது முன்னர் ஆணுய்த்தோன்றியது ஆணுகவும், பெண்ணுகப் பிறந்தது பெண்ணுகவும் பிறக்குமென்றும், சிவபூசையின் பலத்தினுற் பிறவியொழிந்து சிவசந்நிதியிலே அச்சுமாரூமலே யிருக்குமென்றுங் கொள்வதாம்.

அச்சுருவாணி - அச்சாணி, அச்சு.

அச்சுவகண்டன்-ஓர் விஞ்சையன். திவிட்டகுமாரனுற் கொல்லப்பட்டவன்.

அச்சுவினி } இரலை, ஏறு, ஐப்பசி,
அச்சுவினிநாள் } சென்னி, பரி, புரவி, மருத்துவநாள், முதனுள், யாழ், வாசி, தலைநாள்.

அச்சுவினிதேவர் - பரிமருத்துவர், அச்சுவினிகள், மருத்துவதர். மருத்துவதிகுமாரர்.

அஞ்சலிக்கை-இரட்டைக்கை; அஃதாவது: இரண்டு கையும் பதாகைபோல மார்பிலே ஒன்றக்கூப்புவது. என்னே? "அஞ்சலியென்ப தறிவுறக் கிளப்பி, னெஞ்சவின்றி யிருகையும், பதாகையாய், பத்தகம் பொருந்து மாட்சித் தென்ப" என்றராகலின்.

அஞ்சலித்தல் - கும்பிடுதல், கைகூப்பல், கைம் முகிழ்த்தல்.

அஞ்சல் - உட்கல், கலங்கல், பயப்படல், மருளல், வெருவுதல், வெருளல்.

அஞ்சனக்கோல் } கோல், அஞ்ச
அஞ்சனமெழுதுங்கருவி } னம் தீட்டுங் கோல்.

அஞ்சனட்சி-இவர் கல்வியிற் சிறந்து விளங்கிய தஞ்சையிலிருந்த வித்வாமசை. கம்பநாடன் இராமாயணம் பாடிமுடித்து அரங்கத்திற்கு அரங்கேற்றக் கொண்டு போனகாலத்து, அங்குள்ள பிராமணர் அவசை நோக்கி, புலவீர்! இன்னவின்ன விடங்கள் சென்று இவ்விவர் கையொப்பமுங் கொண்டு வருகவென்றபோது இவர் கையொப்பமுங் கொண்டுவருக வென்றுரென்றும், கம்பர் அங்ஙனமே சென்று கேட்டபோது, அதிகவியப்புற்று தாமிந்த அற்பகாரியத்தை யிட்டுவருதல் சாலுமாவென்று இங்கிதவுரைகூறி, "அம்பராவணிசடையரனயன்முத-லும்பரான் முனிவரான் யோக சாலுய-ரிம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்-கம்பராம் புலவரைக்கருத்திருத்துவாம்" என்னுஞ் செய்யுளையும் பாடிக்கொடுத்தனர் என்றுங் கதை கூறுவர். இவர் தாசிகுலத்திற் பிறந்தவர். சண்பகவடிவி முதலிய மாதுகிரோமணிகள்போல இவருஞ் சிறந்த பண்டிதையென்க. இவர் காலம கம்பநாடர் காலமே. இற்றைக்கு சுமார் ஆயிரத்திருநூறு வருடங்களுக்கு முன்னராம்.

அஞ்சுமான் - சிவாகமம் இருபத்தெட்டினுளொன்று. வாமதேவ முகத்தினின்றுந் தோன்றியது. நாற்பாதங்களையும் பன்னிரண்டு உபபேதங்களையு முடையது. இது சதாசிவநாயனுர்க்கு முதுகென்ப. ஐந்திலக்கங் கிரந்த சங்கியைகளையுடையது. இது கேட்டவர் அம்பு உக்கிரர், ஆதித்தியராம்.

அஞ்செழுத்து-பஞ்சாக்கரம், பஞ்சாட்சரம், பஞ்சாக்ஷரம், சிவிதமந்திரம், மகாமனு.

அஞ்சைக்களம் - திருவஞ்சை யெனவும் பெயர். தேவாரம்பெற்ற சிவதலங்களுள் ஒன்று.

அஞ்ஞாதவாசம் - அக்கியாதவாசம், கரந்துறைதல், இன்னுனென்று ஒருவரும் அறியாதபடி வசிப்பது. ஞாதம்-அறியப்பட்டது. ந என்னும் நஞ்ஞர் ஈண்டு இன்மைப் பொருளது. இவ்வாசம்பாண்டவர்களாலுந் திரௌபதியினுலும் செய்யப்பட்டது.

தருமராசன் சந்நியாச வேடத்துடன் கங்கபட்டர் என்னும் பெயரோடு, சொக்

கட்டாளுட்டம், பட்சிசகுனம், இரத்தின பரீக்ஷை, வேதாந்தசித்தாந்த சாத்திரபோதனை, பஞ்சாங்க முரைத்தல் முதலிய வற்றால் வசித்தனன்.

வீமன்- வல்லன் என்னும்பெயருடன் பாகசாலைத் தலைவனுய்ச் சுயம்பாகித் தொழிலில் அமர்ந்திருந்தான்.

அர்ச்சுனன் - ஊர்வசி சாபத்தால் அடையும் அலிவேடத்தை யெடுத்துப் பிருகந்நளை யென்னும் நாமத்தோடு விராடராசன் மகளாகிய உத்தரையென்பவட்கு வீணைவாசித்தல்முதலாயவிநோதவித்தைகளைக் கற்பித்தான். நகுலன்தந்திபாலன் என்னும் பெயரினனுய் அரசனிடத்தில் அசுவசிட்சை செய்திருந்தான். சகாதேவன் கோலுங் குழலுங்கொண்ட இடையன் உருவங்கொண்டு தாமக்கிரந்தியென்னும் பெயருடன்பசுமைகளை மேய்த்துப் பாதுகாத்து வந்தான். த்ரௌபதியான வள்தான் சைரந்திரி சாதியிற் பிறந்தவளென்றும், கந்தருவர் ஐவரின் மனைவியென்றும், துவாரகையிலும் அத்தினபுரியினும் உருக்குமணிமுதலாயினேருக்குக் கோலஞ் செய்யும் பணிவிடையிலிருந்தவள் என்றும், தன்பெயர் மாலினி என்றும்,விராடராசன் மனைவியாகிய சுதேட்டிணையிடத்துச் சொல்லி,தன் கந்தருவருடைய பயத்தாலும்,தேவதைகளின் பலத்தாலும், தன்னை யெவரும் கற்பழிக்க முடியாதென்றும் நம்பச் செய்து, அரசிக்கு இஷ்டமானபடி நடந்து கோலமகளிர் வேலையிலிருந்து கழித்தான்.

அஞ்ஞானம் - அவிச்சை,அவித்தை,அவிவேகம், மிச்சை, மித்தை, பொய்யறிவு.

அஞ்ஞானவிதம்-தமசு, மோகம், மகாமோகம், தாமிச்சிரம், அந்தாமிச்சிரம் என்பனவாம் இவையைந்தும் அதர்மத்திலே பிரவிருத்திபண்ணின ஆன்மாக்களுக்குச் சிவபெருமானது ஆஞ்ஞையினலேபிரவிர்த்திக்கு வரும். இவற்றுள், தமசாவது அநான்மாவாகிற தேகாதிகளை ஆன்மாவென்று புத்தி பண்ணுகை, அது நாலுபூதசம்யோகமே ஆன்மாவென்பதும், பஞ்சபூதங்களே ஆன்மாவென்பதும் ஞானேந்திரியங்களேதுமே ஆன்மாவென்பதும், பஞ்சதன் மாத்திரைகளே யான்மாவென்பதும், மனமேயான்மா வென்பதும், புத்தியே யான்மாவென்பதும், அகங்காரமே யான்மாவென்பதும், குணதத்துவமேயான்மாவென்பதும்,அவ்வியத்தஅதோபாகமாகிய சித்தமே யான்மா வென்பதும், புருடதத்துவமே யான்மா வென்பதுவும் என இவ்வாறு பத்துவகைப்படும். மோகமாவது மயக்கம். அது அணிமா, மகிமா, இலாகிமா,கரிமா,பிராத்தி,பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், என்னும் எட்டனுள் ஒவ்வொன்றைப்பற்றி அதுவே மேலாய பேறு எனக்கொள்ளாமல் எட்டு வகைப்படும். மகாமோகமாவது சத்த முதலிய ஐந்துவிடயங்களும் அதிமானுடகிருத்திகமாகத் தூலசிரவணாதிகளுண்டாய், ஐந்துசித்தியிலும் சத்தாதிகளைத் தேவலோகத்தும் பூவுலகத்துங் கிரகிக்கையாகிய பத்துமே பரப்பிரயோசனமென்கை. தாமிச்சிறமாவது திவ்விய அதிவ்விய பேதமாதிய சுத்தமுதலிய பத்து வகைச்சித்தி காரணமாகவும், அணிமாவாதியஷ்ட சித்தியின் பொருட்டுஞ் செய்யப்படுகின்ற சாதனக்குறைவுவந்தகாலத்துஞ் சித்தியாய், இவைகளுக்கு நாசம் வந்த காலத்திலும் இந்தப் பதினெட்டினும் வருந்தாபம் யாதொன்றுண்டோ அதுவேயாம்.அந்ததாமிச்சிரமாவது திவ்வியா திவ்விய பேதத்திலே சத்தாதிகள் பத்தும், அணிமாமுதலிய, சித்திகளெட்டும் பெற்று, அதனிலே அத்தியந்தாபிநிவேசம் பண்ணுதல். (அபிநிவேசம்-மனப்பற்று) இவ்வாருக அஞ்ஞானபேதம் ஆக அறுபத்து நான்காம்.

அடக்கம்- அடங்கல், ஒடுக்கம், ஒருங்கல், குத்தி, சங்கோசம், நொறில், முணங்கு, முடக்கம், மடங்கு, ஒருங்கு.

அடங்கல் - ஒருங்கு, அமைவு.

அடமானம் - அடகு, ஈடு, கடன், பிணை.

அடம்பு - பாலிகை, அடப்பமரம்.

அடசொலி- அதிர்த்தல், தெழித்தல், அதட்டல், உரைத்தல், உரப்பல். [துடைப்பம்.

அடவியன் - பனையோலைக் கடை, ஈர்க்கு,

அடிசில்-அடப்படுவது, சோறு, போனகம், மூரல், அமலை,அயினி, பொம்மல்,மடை, மிசை, உணு, புழுக்கல், வல்சி, பாளிதம், அன்னம், பதம், மிதவை, பாத்து, துற்று, உண்டி, சொன்றி, புன்கம், சரு, அசனம் ஊண், கூழ், ஓதனம், புகா, அவி, பவி, சரு, அமிழ்து, புற்கை, நிமிரல், கவளம், உதகம்.

அடித்தல்-அகைத்தல், அடுக்கல்;அறைதல், எரிதல், எற்றல், குத்தல், கொட்டல்,

புடைத்தல், மொத்தல், மோதல், வழுக்கல், மொக்கல், தாக்கல்.

அடிமுதல் - எழுவாய், மோனை, ஆதி, பூருவம், தலைத்தாள்.

அடிமை - ஆள், கிணைகர், சேடர், தாசர், தொண்டு, தொத்து, தொழும்பர், தொழும்பு, தொறு, தொறுவு, பிருத்தியர், விருத்தி, தாதர், தாதி, தாசி, இவற்றுட் சிறந்த பெயர்- சேடர், சேடியர், என்பனவாம். [முறிச்சீட்டு.

அடிமையோலை - ஆவணவோலை, முறி,

அடியவர்வகை - சாமுசித்தர், பிராகிருதர், வைநயிகர் எனமூவகையர்.

அடியாரி லக்கணம் - பொது விலக்கணம், சிறப்பிலக்கணம் என விருவகைப்படும். அவற்றுள் பொது விலக்கணங்களாவன- கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, இரக்கம், வாய்மை,பொறை, அடக்கம், கொடை,தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலியனவாம். சிறப்பிலக்கணம் ஆவது புறத்திலக்கணம், உடலிலக்கணம் அகத்திலக்கணம் என மூவகைப்படும். புறத்திலக்கணம் பத்து, உடலிலக்கணம் பத்து, அகத்திலக்கணம் மூன்று. இவச்சிவனடியாரிலக்கணம் மூன்று. அவற்றுள்,

புறத்திலக்கணம் பத்தாவன-விபூதி உருத்திராக்கம்என்னுஞ்சிவசின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களை யுச்சரித்தல், சிவபெருமானைப்பூசை செய்தல், சிவதருமங்களைச்செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலய தரிசனஞ்செய்தல், சிவனடியாரிடத் தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார் களுக்குக் கொடுத்தல் என்பனவைகளாம்.

உடலிலக்கணம் பத்தாவன-சிவபெருமானுடைய பெருமையைச் சிந்திக்குந் தோறும் பேசுந்தோறுங்கண்டம் விம்முதல் நாக்குழறுதல், உதடுதுடித்தல், சரீரநடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறு வேர்வை கொள்ளல், நாத்தழுதழுத்தல், ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல்என்பனவாம்.

அகத்திலக்கணம் மூன்றுவன - பஞ்சாக்கரத்தை மானதமாகச் செபித்தல், மானத பூசை, சிவபெருமானைத் தன்னுடு பிரிவறக்காண்டல் என்பவைகளாம்.

அடியார்க்குநல்லார் - (1) இவர் பண்டைக் காலத்து உரையாசிரியர்களுள் ஒருவர். இளங்கோவடிகளாற்செய்யப்பட்ட சிலப்பதிகாரம் என்னுங் பெருங்காப்பியத்திற்கு உரைசெய்தவர் இவரே. இவ்வுரையாசிரியரது இடம் காலம் முதலியன கன்கு விளங்கவில்லை. ஆயினும் உரைச் சிறப்புப் பாயிரத்தில், "அடியார்க்குநல்லான், காருந்தருவு மனையா னிரம்பையர்காவலனே" எனக் கூறப்பட்டிருத்தலான், நிரம்பை யென்ற ஊரிற் பிறந்தவரெனவும், "பொப்பண்ணை காங்கேயர் கோளளித்த - சோற்றிச் செருக்கல்லவோ தமிழ் மூன்றுமுரைத்தது வே" என்றதனால், பொப்பண்ணை காங்கேயன் என்ற அரசன் சபஸ்தானத்திலிருந்தவர் என்பதும், அவன் கேள்விப்படியுரை செய்தனர் என்பதும், பெறப்படலால் அவ்வரசன் காலத்தவர் எனவுங் கொள்ளக்கிடக்கின்றது. அன்றியும், நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடைய கொள்கையாக இருத்தல் பற்றி நச்சினார்க் கினியரது காலத்திற்கு முந்தியிருந்தாரெனத் துணிபுறக் கிடக்கின்றது. இவரது சமயம் சைவசித்தாந்த சமயமே. இவர் சைவசித்தாந்த வுணர்ச்சிகளினும், முத்தமிழ்த் துறைகளினும், அருகமதக் கலைகளினும் மிக்க ஆராய்ச்சி யுடையரென்பது இவருரையாற் றெள்ளிதிற் புலப்படுகின்றது. மற்றையுரையாசிரியர்கள் போலாதுதாம் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் இன்னின்ன நூலின்கணுள்ளன வென்று பெரும்பாலுங் குறிப்பிட்டுள்ளார். இவர் மேற்கொண்ட நூல்களுட் பெரும்பாலும் அகத்தியம், அகநானூறு, அணியியல், இசைநுணுக்கம், இந்திரகாளியம், உதயணன் கதை, ஓவியநூல், கலிங்கத்துப் பரணி, கலித்தொகை, களரியாவிரை, கனநூல், குணநூல், குருகு, குறுந்தொகை, கூத்தநூல், சயந்தம், சிந்தாமணி, சிறுபாணாற்றுப்படை, சூளாமணி, செயிற்றியம், தண்டியலங்காரம், தாளவகையோத்து, திருக்குறள், திருச்சிற்றம்பலக்கோவையார், திருமுருகாற்றுப்படை, நிவாகரம், தொல்காப்பியம், நாலடியார், நான்

மணிக்கடிகை, நூல் நெடு நல்வாடை, பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பட்டினப் பாலை, பதிற்றுப்பத்து, பரதசேனபதீயம், பரதம், பரிபாடல், பழமொழி, பாசண்டம், புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை, பெருங்குறிஞ்சி, பெருநாரை, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப் படை, மணிமேகலை, மதிவாணர் நாடகத் தமிழ்நூல், மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், முத்தொள்ளாயிரம், முறுவல், வளையாபதி, வெண்டாளி முதலிய நூல்களின் பிரமாணங்களே காட்டப்பட்டிருக்கின்றன. சிற்சிலவிடத்துப் பதப்பிரயோசனமும், அலங்காரமும் மெய்ப்பாடுகளும் வேறு சில குறிப்புக்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன. அரும்பதவுரையைத் தழுவியும், சிறுபான்மை, மறுத்தும், சிலவிடத்துப் பதவுரையாகவும், ஓரோவிடத்துப் பொழிப் புரையாகவும் எழுதி, ஆங்காங்குச் சொன்னயம் பொருணயங்களே யினிது புலப்படுத்தி, இயற்றமிழ்ப் பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும் இசைத்தமிழ் நாடகத் தமிழ்ப் பகுதிகளையும், ஐந்திணைக்குமுரிய முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள், என்னும் இவற்றுள்ஒவ்வொன்றின் வகை பலவற்றையும் மேற்கோளோடு விரித்திருக்கின்றனர். இவராற் சுட்டப்பட்ட வுரையாசிரியர் நக்கீரர், இளம் பூரணர், அரும்பதவுரையாசிரியர் என்னு மூவரே யாம்.இவரது உரைநடை சில சிலவிடத்து எதுகைமோனை முதலியவற்றோடு கூடி இனியசுவை பயந்து செய்யுணடையாக வமைந்துள்ளது, பழமொழிகளும், திசைச் சொற்களும், வருமாயின் இன்னது இன்ன பழமொழி யென்றும், இன்ன சொல் இன்னநாட்டு வழக்கு என்றுங்காட்டா நிற்பர்.இவரது உரைக்கண் இக்காலத்து விசேடித்து வழங்கவில்லாத இசை நாடகத்தமிழ் நூற்சூத்திரங்களும், பரிபாடைகளும் வேறபலவும் நிறைந்துள்ளனவாகலின் படிப்போர்க்கு மிகவும் பயன்படும்.சிலப்பதிகாரத்திற்கன்றி வேறுநூல்களுக்கு உரை செய்ததாக வினங்கப் படவில்லை. (2)மதுரையில் உலவாக் கோட்டை பெற்ற அடியவர்.

அடியிலக்கணம்-அஃதாவது நேரொன்றாசிரியத்தளை முதலிய தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவதாம்

அடிவகை-குறளடி, சிந்தடி, அளவடி, அல்லது நேரடி,நெடிலடி,கழிநெடிலடியென ஐந்துவகைப்படும்; அவற்றுள்: இருசீரான் வருவது குறளடி, மூச்சீரான் வருவது சிந்தடி, நாற்சீரான் வருவது அளவடி, ஐஞ்சீரான் வருவது நெடிலடி, ஐந்தின் மிக்க சீரான் வருவன கழிநெடிலடியாம்.

அடிவெண்குருத்து-முருத்து,முருந்து, முருந்தம். [லை, மகாநசம், சமையல் வீடு.

அடுக்களை-அட்டில், மடைப்பள்ளி, பாகசாலை

அடுக்குதல் - ஏற்றல், ஏற்றுதல்.

அடுப்பு-உத்தானம்,காமரம்,குமுதம்,சுபாலிகை,சுல்லி,சோபாலிகை,மணல்வை, நிரை.

அடை - (ஒருவகைச் சிற்றுண்டி) அப்பம்.

அடைகுறடு-கம்மப் பட்டடை, பட்டடை.

அடைக்கலம்-அபயம், இல்லடை, கையடை சரணம், சரண், மறை, புகல், தஞ்சம்.

அடைக்கலம்புகுதல் - சரணடைதல், சரணம், சரண்புகல், மறை, புகல்.

அடையாளம் - அங்கம், அச்சு, அறிகுறி, ஆணை, ஆவணம், இலக்கணம், இலாஞ்சனம்,இலிங்கம், களங்கம், குறி, கேது, சாதனம், சின்னம்,துவசம், நிமித்தம், பதம், பாளி, பொறி, முத்திரை,வியஞ்சனம்.

அட்டகசம் - ஜாவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபூபம், சுப்பிரதீபம் என்பனவாம்.

அட்டகணிதம் - சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், என்பனவாம். அவற்றுள், சங்கலிதமாவது கூட்டல், விபகலிதமாவது கழித்தல், குணனம் ஆவது பெருக்கல், பாகாரம் ஆவது பங்கிடல்(பிரித்தல்)வர்க்கமாவது சமமாகிய ஈரெண்ணின் பெருக்கம், கனமாவது சமமாகிய மூவெண்ணின் பெருக்கம்.

அட்டகிரி - இமயம், எமகுண்டம், கந்தம், கைலை, நிடதம், நீலம், மந்தரம், விந்தம்.

அட்டசித்திகள் - அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி,பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். இவற்றுள் முதன் மூன்றும் தேகசித்தியான ஆகவரியங்களாம். அணிமாவாவது பரமாணுவிலுஞ் சூக்குமமான தேகத்தையுடைத்தாயிருக்கை, மகிமாவது தேகேந்திரியாதிகளினுல்வியாபியாய்ப்பிரமலோக பரியந்தமு முள்ள தேகத்தை யுடைத்தாயிருக்கை, இலகிமாவது சீக்கிர வேகி

யாய்ச் சேற்றிலுஞ்சலத்திலும் அடியமிழ்ந்தாமற் செல்லுந் தேகத்தை யுடைத்தாயிருத்தல். கரிமாவாவது பர்வதத்திலும் பாரமாய் மகாவாயுவிலுலும் அசைக்கப்படாமல் இருத்தலாம். பிராத்தியாவது மனத்தினாலே நினைத்த பதார்த்தங்கள் யாவும் முன்னே வந்தடையப்பெறுதல். பிராகாமியமாவது திவ்விய ரூபமான அநேக பெண்களை மனச்சங்கற்பத்தினாலுண்டாக்கி யாவரோடும் ஏக காலத்திலே அவற்றிற்கொத்த வடிவங்கள் கொண்டு கூடுவதாம். ஈசத்துவமாவது பிரமன் விஷ்ணுமுதலிய சர்வதேவர்கள் முனிவர்கள் ஆகியயாவரிடத்துந் தன்னுடைய ஆக்கினையைச் செலுத்தல். வசித்துவமாவது சர்வசனங்களையும் பிரகிருதியையும் வசீகரணம் பண்ணிச் சிருட்டி முதலிய கிருத்தியங்களைச் செய்தலாம். இவை வேறுவிதமாகவும்உரைக்கப்படும். இவை பூவுலகத்திற்கு மேலாகப் பிசாசபதம் முதலாக உத்தரோத்தரத்து விகுணமாய் அறுபத்துநாலுகுணமாம்;அவையாவன — பிசாசபதவாசிகளான உருத்திர பிசாசங்களுக்குப் பிருதிவி புவனங்களை வியாபித்த அணிமா முதலிய எட்டுக் குணங்கள் உண்டு.

மனுடர்களுள்சிவபூசாதாரதம்மியத்தினாலே இராௌத்திர பிசாச கணபதத்தை யடைந்தவர்களுக்கும் இவ்வாறே யுண்டாம். இரகேஷ லோகவாசிகட்குப் பிருதிவி, அப்பு என்னுமிரண்டு புவனங்களையும் வியாபித்துத் துவித குணமான ஐசுவரியமுண்டு.

இயக்கலோகத் திருப்பவர்க்குப் பிருதிவி, அப்பு, தேயு என்னு மூன்று தத்துவங்களுடைய புவனங்களையும் வியாபித்த மூக்குணமான ஐசுவரிய முண்டு.

கந்தருவலோகத்தில் வசிப்பவர்க்குப் பார்த்திவாப்பிய தைசத வாயவ்வியமான நாலு தத்துவ புவனங்களையும் வியாபித்த சதுர்க்குணமான ஐசுவரிய முண்டு.

இந்திரனுலகில் - இருப்பார்க்கு ஐந்து புவனங்களையும் வியாபித்த ஐங்குண ஐசுவரிய முண்டு.

சோமலோக வாசிகளுக்குப் பஞ்ச பூதங்களுள் மனோதத்துவமுஞ், சேர்ந்த ஆறு புவனத்தையும் வியாபித்த அறுகுண ஐசுவரிய முண்டு.

பிரசாபத்திய வுலகத்தவர்க்குக் கீழ்ச் சொன்ன ஆறுடன் அகங்கார தத்துவமுமாக ஏழு புவனங்களையும் வியாபித்த ஏழுகுண ஐசுவரியங்களுள.

பிரமலோக வாசிகட்குக் கீழ்ச்சொல்லப்பட்ட ஏழுடன் புத்திதத்துவ புவனமுங் கூட எட்டுப் புவனங்களையும் வியாபித்த அட்ட ஐசுவரிய முண்டு.

இங்ஙனமே மானுடர்களுள்ளும் சிவபூசையின் தாரதம்மியங்களினாலே யந்தந்த உலகத்தை யடைந்தவர்களுக்கு இவ்வாறுகிய ஐசுவரிய சித்திகள் உண்டென்க.

அட்டதிக்கு - கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பனவாம். பூமி ஆகாய மெனு மிரண்டுஞ் சேர்த்துப் பத்துமாம்.

அட்டதிக்குப்பாலகர்-இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்களாம். பிரம விஷ்ணுக்களையுங் கூட்டிப் பத்தென்பதுமாம்.

அட்டதிக்குப்பாலகர்குறி-கொடி,புகை, சிங்கம்,நாய், இடபம், கழுதை,காகம்,யானை.

அட்டபரிசம்-தட்டல்,பற்றல், தடவல்,தீண்டல்,குத்தல்,வெட்டல்,கட்டல்,ஊன்றல்.

அட்டமங்கலம்- (1) கவரி,நிறைகுடம், கண்ணாடி, தோட்டி,முரசு, விளக்கு,பதாகை, இணைக்கயல் (2) சிங்கம், எருது, யானை, குடம், ஆலவட்டம், கொடி, பேரி, தீபம்.

அட்டமாநாகம் - எண்வகை நாகம்; அவை: அனந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்பன; இவைபடமும் வாலுமுடையனவாய் மற்றைய வுறுப்புக்கள் எல்லாந் தேவ வடிவங்கொண்டிருப்பனவாம்.

அட்டமூர்த்தம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமமானன் என்பன.

அட்டமூர்த்தவிறைவர் - பவன், சருவன், ஈசானன், பசுபதி, வீமன், மாதேவன், உக்கிரன், உருத்திரன் என்னு மிவர்களாம்.

அட்டமூர்த்தவிறைவர் மனைவியர் - சுவர்ச்சலை, உரோகணி, உஷை, சுகேசி, சுவாகை, திசை, சிவை, தீர்க்கை யென்பவர்களாம்.

அட்டமூர்த்தவிறைவர்மைந்தர்-சனி, புதன் சுக்கிரன், செவ்வாய், குகன், சுவர்க்கன்

மனோசிவன், சந்தானன் என்பவர்களாம்.

அட்டவசுக்கள் - தரன், துருவன், சோமன், ஆபற்சைவன், அனலன், அனிலன், பிரத்தியூசன், பிரபாசன், என்பவர்களாம்.

அட்டவீரட்டத்தலம் - திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர் என்பன. இத்தலங்களினடந்த வீரங்களே மேல் முறையே காண்க.

அட்டவீரட்டம்-பிரமனைத் தலை கொய்தல், அந்தகனை யழித்தல், திரிபுரமெரித்தல், தக்கன்றலை தடிந்தமை, சலந்தரவதம், கயாசுர சங்காரம், காமதகனம், காலனை யுதைத்தமை யென்னுமிவைகள் சிவபிரானுற் செய்தருளப்பட்ட முக்கிய வீரங்களாம்.

அட்டாங்கயோகம் - இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம் இவற்றுள்,

இயமமாவது-கொல்லாமை,மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர்பொருள் விழையாமை, இந்திரிய மடக்கல் என்பனவாம்.

நியமமாவது - தவம், சுத்தமுடைமை, தத்துவ நூலோர்தல், பெற்றதுகொண்டு மகிழ்தல்தெய்வம்வழிபடல்என்பனவாம்

ஆதனமாவது - பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சுவத்திகம், சுகாதனம், வீரம், மயூரம் முதலிய இருப்பினு ளொன்றிருத்தல்.

பிராணயாமமாவது-பிராணவாயுவைத் தடுத்தல், இரேசக பூரக கும்பகங்களாற் றடுத்தல், இரேசகம் என்பது மூச்சை விடுக்குதல், பூரகம் என்பது வாயுவையுட் செலுத்துதல், கும்பகம் என்பது அங்ஙனேற்றிய வாயுவை நிறுத்தல். இது அகற்பம், சகற்பம் என விருவகைப்படும். மந்திரமில்லாது நிறுத்தல் அகற்பம், பிரணவத்துடன் காயத்திரி மந்திரத்தையும் உச்சரித்து நிறுத்தல் சகற்பமாம்.

பிரத்தியாகாரம் ஆவது - மனமானது இந்திரிய வாயிலாக விடயாதிகளிற் சென்று பற்றி யுழலாவண்ணம் அடக்குதலாம். எனவே சீவ வுபாதியை நீக்கிப் பிரபஞ்ச உபாதியைச் சிவசொரூபமாகப் பார்த்தல்.

தாரணை ஆவது - உந்தி, இதயம், உச்சியென்னு மூன்றிடத்தும் சித்தத்தை நிலை நிறுத்தல். இதுவன்றி முழங்கால், குதம், இதயம்,கண்டம்,கபாலம் என்னும் ஐந்து இடங்களினும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களையுமொடுக்கி, அவ்விடங்களின் முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன். சதாசிவன் என்னும் பஞ்சமூர்த்திகளையும் இருத்திப் பாவித்தலாம் என்றுங் கூறுவர்.

தியானம் ஆவது - ஐம்புலத்தையும் அந்தக் காரணத்தையு மடக்கி ஒரு கரத்து மழுவும், ஒருகரத்து மானும் ஏந்தியதாய், அபயவரத அத்தங்களை யுடையதாய், சதுர்ப்புயம்,காளகண்டம், திரிநேத்திரம் உடையதாய் விளக்குஞ் சிவமூர்த்தியைத் தியானித்தலாம்.

சமாதி ஆவது - நிரிடத்தேனும், மந்திரத்தோடு நோக்காமல் எங்கணுஞ் சிவ வியாபகமாய் நோக்கி, அவ்வஸ்துவையுந் தன்னையும் பிரிவறப் பொருந்தல். இவற்றின் விரிவுகளை எல்லாங் கூர்ம மகாபுராணம், சூதசங்கிதை, வாயுசங்கிதை முதலிய மூந்நூல்களில் விரிவாய்க் காண்க.

அட்டாங்கவணக்கம்-கை இரண்டு, தோள் இரண்டு, கால் இரண்டு, மார்பு, நெற்றி யென்னும் எட்டுறுப்பும் நிலத்திற்றோய விழுதல். இதை சாஷ்டாங்கம் என்பர்.

அட்டாவதானம் - வெலும் மயிலும் என்று இடைவிடாது கூறுதல், கையில் இலாட சங்கிலி வைத்துக் கழற்றுதல், ஒருவன் கேட்ட விஞக்களுக்கு விடைசொல்லுதல், எதிரில் சூதாடல், முதுகில் கல்லு, எள்ளு, நெல்லு, உழுந்து ஒருவர் எறியின் ஸ்பரிச வுணர்ச்சியால் அவை ஒவ்வொன்றும் இவ்வளவின வென்று சொல்லுதல், சதுரங்கம் ஆடல், புலவோர் சொல் கவியை யவதானித்துப் பொருள் சொல்லல், அறுபத்துநான்கு பேர் எழுதிவருவதற்கு அவர் கேட்டபடி கவிசொல்லுதல் என்பனவாம். தசாவதானம், சோடசாவதானம் சதாவதானம் முதலிய அவதானங்களுமுள.

அட்டிகை - சரடு, கழுத்தணி.

அட்டை - உரு, சளுகம், சளுகம், செளுகம்.

அணி - அஃதாவது செய்யுட் கழகு செய்து நிற்பதாம். அது பொருளணி, சொல்லணியென இருவகைப்படும். அவற்றுட் பொருளணி உவமையணி முதல் எதுவணி யிறுதியாக நூறு வகைப்படும்.

அணிகலச்செப்பு - கண்டிகை, பீடிகை, காண்டம், கடிப்பம், கோடிகம்.

அணிகளின்கடைப்புணர்வு - மடை, கயில்.

அணிதல் - ஆர்த்தல், சூடல், தரித்தல், புனைதல், பூணல், மலைதல், மிலைதல், வேய்தல், மிளைச்சல், எய்தல், வரித்தல்.

அணிநூல் - தண்டியாசிரியராற் செய்யப்பட்ட நூல், உவமான அலங்காரம், உருவக வலங்கார முதலிய செய்யுள் அழகுகளைக் கூறும்.

அணியியல்-இஃது ஓர் அலங்கார நூல். தண்டியாசிரியராற் செய்யப்பட்ட தண்டியலங்காரமென்னும் அணிநூலுக்கு முந்தியதே இது யாப்பருங்கல முதலியவற்றிற் பேசப்பட்டமையின் துணிபாயிற்று.

அணில் - இலுதை, வரிப்புறம், வெளில், இதன்பிள்ளை - குட்டி, பறழ், பிள்ளை.

அண்டகோளகை - கூடம், கடாகம்.

அண்டங்காக்கை - கபிலாலம், காலோலம்.

அண்டசம் - முட்டையிற் பிறப்பன; அவை: பாம்பு, தவளை, முதலை, ஓணை, உடும்பு, மீன், ஓந்தி, பறவை, பல்லி முதலியன.

அண்டபகிரண்டம் - திருவுவ சக்கரத்துக்கு உள்ளண்டங்களும் வெளியண்டங்களுமாம்

அண்ணம் - மேல்வாய், அணரி, அணர்.

அண்ணன்-தமையன், முன்னை, முன்னோன், மூன், சேட்டன், தம்முன் தோன்றல், மூத்தோன், முன்பிறந்தோன்.

அண்ணன்மனைவி - அண்ணி, குரு மனைவி.

அதங்கோட்டாசிரியர் - அகத்திய முனிவர் மாணாக்கருள் ஒருவர். கபாடபுரத்திலிருந்த இடைச்சங்கப் புலவருள் ஒருவர். தொல்காப்பியனர் அகத்தியரோடு மாறுபட்டுத் தொல்காப்பியஞ் செய்து, அரங்கேற்றுங்காலத்து, அகத்தியனர் இவரை நோக்கி 'நீதொல்காப்பியஞ்செய்த நூலைக் கேளற்க வென்று கூறினர். தொல்காப்பியனரோ பல்காலுஞ் சென்று யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும் என்று கூறவே, இவ்விருவரும் கோபங் கொள்ளாத வகையைத் தெரிந்து, இந் நூலிற் குற்றங் கூறிடுவன் எனக் கருதி அரங்கின் கட் சென்று தொல்காப்பியத்தில் ஆங்காங்கு மாறுகாட்டி யாக்ஷேபித்தார்,அவைகட்கெல்லாம் தொல்காப்பியனர் விடைகொடுத்தனர் என நச்சினார்க்கினியர் உரைத்துளர், திராவிடமாபாடிய கருத்தாவாகிய சிவஞானயோகிகள் இவற்றை மறுத்து, ஒருவசாற் செய்யப்பட்ட நூல் ஒரு வேந்தனது அவைக்களத்தில் ஒருபுலவனுக்கு ஏற்பித்தரங் கேறின்அது சிறக்கு மாகலின் பாண்டியனவையின் அதங்கோட்டாசாற்கரிறபத்தெரித்தனர் என்று சாதித்தார். இதனை, "நிலதருதரு விற்பாண்டின வையத் தறங்கரை நாவினன் முற்றிய வதங்கோட்டாசாற் கரிறபத் தெரித்து" என்று பனம்பாரனர் பாயிரங் கூறியவாற்றானறிக.

அதட்டல் - அதிர்த்தல், உரப்பல், ஒப்பல், சீறல், தெழித்தல், தொனித்தல், முழங்கல்

அதமத்தோற்கருவி - முழவேழ் வகையினொன்று, புறமுழவு, புழப்புற முழவு. அவையாவன: கணப்பறை முதலாயினவுமாம், நெய்தற்பறை முதலாயினவுமாம்.

அதிகமான் - திருவள்ளுவநாயனாரது சகோதரருள் ஒருவர் அவர்க்குச் சேட்டராம். இவர்வளர்ந்தஇடம்'அரும்பார்ச்சோலைச் சுரும்பார் வஞ்சி - யதிகனில்லிடை யதிகமான் வளர்ந்தனன்' என இவர் சகோதரராகிய கபிலர் கூறுவதனால் அறிக.

அதிகன் - அதிகமான் எனவும், அதிகமானெடுமான் வஞ்சி யெனவும் பெயர்பெறுவன். இவனது ஊர் வஞ்சியாகும். அக்காலத்திருந்த அரசருள் ஒருவன். இவனே திருவள்ளுவநாயனாரது தமயனாகிய அதிகமானெடுத்து வளர்த்தவனுகும். வள்ளலாருள் ஒருவனுகவும் எண்ணப்பட்டவன். இவன் றன்னூர் மலைப்பக்கத்தினின்று அழகு பெற்ற கருநெல்லியினது அமிழ்து விளையும் பழத்தை ஔவையார் விரும்பிக் கேட்பக் கொடுத்தானென்றும், அதனை யுண்டமையால் அக்கல்வியின் முதியாள், வயதினும் முதிய வளாய் விளங்கினள் எனவுந் தெரிகின்றது. அதனைப் புறநானூற்றிற் பாடாண்டிணையில் வாழ்த்தியற்றுறையாய 'வளம்படுவாய் வாளேந்தி' என்னுஞ் செய்யுளால் ஔவையாரே தெரிந்திருக்கின்றனர். அன்றியும் எறுமாநாட்டு நல்லியக்கோடனை, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர் பாடிய சிறுபாணாற்றுப்படையினும் "கமழ் பூஞ்சாரற்கவினிய நெல்லியமிழ்துவீ நீங்கனி யௌவைக்கீந்தவரவுச் சினங்கனலு மொளிதிகழ் நெடுவேலரவக்கடற்றானை யதிகனும்" எனக் கூறப்பட்டிருக்கின்றது. காலம் திருவள்ளுவநாயனர், ஔவையார் முதலியபுலவர் காலமாம்.

அதிகாயன் - இராவணனது மகன், பிரமனிடத்தில் அழித்தற்கரிய கவசம் பெற்றுப் பின்னர் அநுமானாற்கொல்லப்பட்டான்.

அதிகாரம் - அதிகரித்தலையுடைய படலம்.

அதிசயங்கள் - அருகனுற் செய்யப்பட்ட தரும வொழுக்கங்களாம். அவை சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதிசயம் என்பன.

அதியச்சொல் - அக்கோ, அச்சோ, அத்தோ, அந்தோ, அன்னே, ஆஅ, எற்றே, என்னே, ஐயோ, ஒ ஓ, ஓ ஓ, அம்மா, அப்பா, என்னே, என்ன, முதலியனவாம்.

அதிசயமுறவிரங்கல் - அன்னே, அந்தோ, ஆ, ஓ, அத்தோ, அச்சோ, ஐயோ, என்னே.

அதிசயம்-அதிரேகம், அற்புதம், ஆச்சரியம், இறும்பூது, சித்திரம், விசித்திரம், விந்தை, விபரீதம், விம்மிதம், வியப்பு, இரும்பு.

அதிபத்தநாயனார் } அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவர். இவர் சோழநாட்டில் நாகப்பட்டினத்துக் கடற்கரையடுத்த வூரில் அவதரித்த செம்படவர். வறுமையால் வருந்தா திருந்தமை கண்டு சிவபிரான் இடபாரூடராய்த் தரிசனந் தந்து முத்தியளிக்கப்பெற்றவர்.

அதிபலை - இராம லக்குமணர் காட்டு மார்க்கமாகவிசுவாமித்திரர்பின் போனபோது பசியாலும் சோகத்தாலும் வருந்தா வண்ணம் விசுவாமித்திரர் உபதேசித்த இரு மந்திரங்களி னொன்று இது.

அதிமதுரகவி - இவர் திருமலைராயனது சமஸ்தான வித்துவான்களுட் சிரேட்டர். இவர்க்கு அறுபத்துநான்கு கணகதண்டிகைப் புலவர்கள் கற்றுச் சொல்லிகளாயுளார். அவர்கள் தம் இருபாங்கருந் தாரகாகணம் போலச் சூழ்ந்துவர உடுபதி போல நடுவே மதயானை யொன்றினேறி இராச விமரிசைகளோடு அரசன் சமுகஞ் சென்று திரும்புவார். இவர்க்குங் காளமேகப்புலவர்க்கும் வாக்குவாதம் நேர்ந்து அதில் இவர் தோற்றனர். அவைகளைக் காளமேகப் புலவர் என்னும் வரியிற் காண்க. ஆயினுஞ் சிறந்த வித்வான் என்பதற்குச் சந்தேகமில்லை. இவர் தனிப்பாடல்கள் அன்றி வேறு நூல்கள் செய்ததாகக் காணேம். இவர் காலம் திருமலைராயன் காலமே.

அதிமதுரம் - அதிங்கம், மதுகம், யட்டி, சல்லி, முலங்கம், வாதலம், அட்டி.

அதிவீரராமபாண்டியர் - மதுரையிலிருந்து அரசுபுரிந்த அநுலோமப் பாண்டிய அரசருள் ஒருவர். கொற்கை மாநகரத்தை யரசாண்டவர் என்று "நறுந்தொகை" என்ற வெற்றிவேற்கையிற் கூறப்பட்டுள்ளது. இவர்க்கு வல்லபதேவர், பிள்ளைப் பாண்டியன், குணசேகரவழுதி யெனவும் பெயர்கள் உண்டு. இவர் துணைவரும் இவரைப் போலச் சிறந்து அரசசேரூகவும் விளங்கா நின்று பிரமோத்தரகாண்டம் முதலிய பல நூல்களை யியற்றியுள்ளார். அவர் பெயர்வரதுங்கராமபாண்டியர். ஆதலாற்றான் "பாண்டியில் இரண்டு பட்டியிலிரண்டு" என்று முதுமொழி வழங்கப்படுகின்றது. பட்டி யென்றது-ஸ்ரீலஸ்ரீ சிவஞானயோகிகளும், கச்சியப்ப முனிவருமேயாம். இவர் சிவபெருமானையே பரமபதி யெனக் கொண்டு வழிபடுகின்ற சைவ சித்தாந்தியாகும்.

இவர் புலவருக்குமுன் தாம் செய்த தைடத கவிகளைக் காட்டி இதற்கும் இராமாயணத்திற்கும் யாது பேதமென்ன, அவர்கள் உமது செய்யுள் கரும்பு, அவரது வேம்பெனக் கூறக் கேட்டுப் புலவர்களின் கருத்தறிந்தாரெனவும் இவர் நைஷதத்தை அரங்கேற்றுகையில், "வாய்ந்த மின்னே மடந்தைய ராக்கிவிண், போந்தி டாமலன்றே மலர்ப் புங்கவன், சாந்த ணிந்த தமனியக் குன்றென, எந்துவெம் மூலப் பாரமியற்றினன்" என்னுஞ் செய்யுளைப் பிரசங்கிக்கையில் புலவர்கள் கேட்டு மின்னில் தமனியக் குன்று நிற்குமோ என ஆக்ஷேபித்தன ரெனவும் அரசன் விடைகூற மயங்கி நாளை கூறுவோ மென்று வீட்டில் வந்து ஒருவாறு சிந்திக்கையில் மனைவி பார்த்து உவகையின்றியிருப்பதற்குக் காரணம் கேட்டுணர்ந்து அது மூலக்காம்பென்னும் முறுக்காணி கொண்டு முறுக்கியிருந்ததால் நிற்கிறதெனக் கூறக் கேட்டுக் களித்து மறுநாள் புலவருக்குக் கூறிக் களித்தனரெனவும் கூறுவர்.

இவர் சந்திர வமிசத்துச் சிற்றரசர்களுள் ஒருவர். சிலர் பாண்டி நாட்டின்கண்ணுள்ள தென்காசி யிலிருந்து அரசு செலுத்தினர் எனவும், சிலர் மதுரையிலிருந்து அரசு புரிந்தரெனவுங் கூறுகின்றனர். மதுரைப் புராணத்திற் கூறியபடி பாண்டியர்கள் நெடுங் காலமாகக் கொற்கை யென்னும் நகரத்திலே வசித்தார்களை

னத் தெரிகின்றது. அது " பெரிபிளசு " என்னும் நூலாசிரியர் கூறிய பாண்டியர் பட்டினமாகிய கொல்கியே யாம். அல்லதேல் 'டிஆன்வில்லி' யென்பவர் சொல்லும் இராமேசுரத்துக்கு அருகிலிருக்கும் கீழ்க்கரை என்பதே யாம் என்று பாண்டித் தேசசரித்திரங் கூறுகிற்கும். இதனுனும் நறுந்தொகைக் கூற்றுனும், இவரும் தம்மமிச அரசர்போலக் கொற்கையி லிருந்தார் எனத் தெளிவாகின்றது. இமயந் தொடங்கிக் கன்னியாகுமரி வரைக்கும் உள்ள விடங்களைத் தமக்குச் சுவாதீனமாகக் கொண்டு மற்றைய தேசத்து அரசர் கடமக்குத் திறை கொடுக்க ஆண்டவர். அரசு செலுத்துவதிற் றங்காலத்தைக் கழித்து விடாது உலகத்தவர்க்குறுதிபயப் பனவாய் வடமொழிக்கண் விளங்கும் புராணங்களேயும் காவியங்களேயும் வேறு தனிநூல்களேயும்மொழிபெயர்த்துச்செந் தமிழ்நடையிற் சிறந்த கவிகளாற் பாடியருளினர். இதனுல் சமஸ்கிருதத்தன்றித் தெள்ளிய திராவிடத்தும் மிக்க புலமையை யுடையவர் என்பது வெளியாகின்றது. இவர் பாடிய நூல்கள் கூர்மமகா புராணம், இலிங்கபுராணம், காசிகாண்டம், திருக்கருவை வெண்பாவந்தாதி, நறுந் தொகை யெனப்படும் வெற்றிவேற்கை, வாயுசங்கிதை முதலியனவாம். இவற்றுள் வாயுசங்கிதை குலசேகரன் என்னும் பாண்டிய அரசனுல்இயற்றப்பட்டதென்பர். அது சரியன்றென்பதுபலாடிடக்கை என்னினிற்குலசேகரன்,குணசேகரன்என்னும் பெயர்கள் இவ்வரசனுக்கே சிறப்புடைத்தாய்,பாகடையு மிவர்கடைபோ லிருத்தலி னென்க. இவர் இளமையிலே சிற்றின்பப் பிரியாயிருந்து வினேவயத்தால் அதனேயே மெய்யின்பாக் கருதியொழுகி, அதனியல் பெல்லாவற்றையும் உணர்த்தும்கொக்கோகரிஷியினற் செய்யப்பட்ட கொக்கோகநூலே மொழிபெயர்த்து அப்பெயர்சாத்தியும், இந்திரபுரிப் படலத்திற் கூறப்பட்ட மதனுகம வியல்களே "மதனக்கோவை" எனச் சூட்டியுஞ் செய்தார் எனவும் அவற்றைத் தஞ்சகோதரர் பெயரால் வெளிப்படுத்தினர் எனவுங் கூறுப. இங்ஙனமன்றி இணங்கா மனேவியரை யம்முகூறயானிணக்கி யில்லறச் சகடத்தை யிழுத்து உலகு வீட்டுநெறியடையு முபாயத்தாற் செய்தனவென்பர். இவர்க்குக்காமவொழுக்கமிகுதியாற் ருழுநோய் பற்றிய விடத்துத் திருக்கருவை க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிராநின்ற சிவபெருமான்மீது ஷியந்தாதி களிரண்டனேம் பாடித் துதிக்க, அது நீங்கப்பெற்று அதன்பின்னர் இறைவன் றிருவடி யின்பமே மெய்யின்பெனக் கண்டு, அது பெறுவா னருந்தவங் கிடந்தனராம். இவர்க்குவித்தியாகுரு சுவாமிநாத தேவர் என்பவரும், தீட்சாகுரு அகோர சிவாசாரியர் அவர்களுமென்று கொள்ளக் கிடக்கின்றது. ஏனெனில், அவர்களிருவரையும் தாம் செய்த நூல்களிற் குருவணக்கமாகப் போற்றினமையி னென்க. இவர் செய்த நைடதமேயன்றி மற்றைய நூல்களும் புலவர்க்கெளடதம் என்பதில் ஐயமின்று. இவர் அருளிச்செய்த வெற்றி வேற்கை யென்னுஞ் சிறு நூலினருமை நோகதி ஆங்கில திராவிடாரியபாடாவல்லவராய "டயிலர்" என்னும் பாதிரியார் இங்கிலீஷில் மொழி பெயர்த்திருக்கின்றனர். இவரிருந்த காலம் கி-பி. 15ம், நூற்றண்டெனவும், 11, அல்லது 12-ம்,நூற்றண்டெனவும் கூறுகிற்பர். சேது புராணம் செய்தருளிய நிரம்பவழகிய தேசிகர் இவர்க்கு ஆசிரியராயிருந்தனர் என்னுங் காரணங்காட்டிப் பதினேந்தாம் நூற்றண்டெனக் காட்டல் சாலுமெனின், அங்ஙனங் குருவணக்கச் செய்யுளிற் பாண்டியனுர் கூறிப் போந்திலராகலின் அது முற்று மியையாது. ஆக்ஸ்போர்ட் என்னும் நகரத்திலிருந்த சம்ஸ்கிருத பாஷாவிற்பனரும்ஆகிய ஹோரெஸ்ஹோமென் வில்சன் துரையவர்கள் சாசனங்களேக் கொண்டாராய்ந்து எழுதிய "இங்ஷ்டம் ஆப் பாண்டிய" என்னுஞ் சரித்திரநூலிலே " தமிழ்க் கல்வியிலே பாண்டியன் என்னும் பேர்தான் ஒரு பிரபலமான பெயர். மேற்படிபாண்டியராசனே அரிவீரன், அல்லதுஅதிவீரபாண்டியனெனச் சொல்வதுமுண்டு. அவன் வடமொழியிலிருந்து அநேக நூல்களேத் தமிழிலே மொழி பெயர்த்திருக்கின்ருனென்றும், கிறிஸ்து வருஷம் ஆயிரத்து நாற்பத்தொன்றுக்குச் சரியான சாலிவாகன சகாத்தம் 973-ம் வருடத்திலே யவன் பிரபலித் திருந்தா னென்றுஞ் சொல்லப்பட்டிக்கின்றது. அது சரிதானென்று ஒத்துக்கொள்ளத் தக்க திருட்டாந்தங்களு

மிருக்கின்றன" என்று கூறியிருக்கின் றன ராதலால் அவர் காலம் பதினே ராவது நூற்றாண்டெனக் கொள்ளலே தகுதியதாம். இன்னும் இவற்றின் விரிவு களே யெல்லாம் கூர்மமகா புராண விருத்தியின் முகவுரைக்கண் விளக்க மாகக் காணலாம்; ஆங்குக்கண்டுணர்க.

அதிவீரன் - சூரபன்மனது சேனைவீரருள் ஒருவன். இவன் வீரவாகுவாற் கொல் லப்பட்டவன்.

அத்தநாள் } அங்கிநாள், ஐம்மீன், ஐவிரல்,
அத்தம் } களிறு, கன்னி, காமரம், கைம்மீன், கைனி, கௌத்துவம், நவ்வி, கனலிநாள்.

அத்தவாளம்-வடகம், உல்லாசம். [னன்.

அத்தான்-முன்னவன் கொழுநன், மைத்து

அத்திமரம் - அதவு, உதும்பரம், கோளி, அதம், பழ மர வகையி னொன்று.

அத்தியாயம்-படலம், இலம்பகம், சருக்கம், காண்டம், பரிச்சேதம்.

அத்திரசத்திரங்தைத்தபுண்மாற்றுமருந்து - சல்லியகரணி.

அத்திரம் - அம்புக்கட்டு, புறை.

அத்தினபுரி-அத்தி, அத்திப்பதி, குருக்கேத் திரம், அஸ்தினபுரம்.

இதனைத் துரியோதனன் முற்காலத் தாண்டிருந்தனன்; யானைச்சேனை மிகுதி யாக விருத்தல் பற்றி இப்பெயர் பெற்ற தெனவும், ஹஸ்தியென்னும் அரசனல் முதலில் ஏற்படுத்தப்பட்டமையால் இப் பெயர் பெற்றதெனவுங் கொள்ளப்படும். இது இக்காலத்து டில்லியென வழங்கப் படுகின்றது. இங்கேதான் துவாபரயுக முடிவில் துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் பாரத யுத்தம் நடந்த தென்ப.

அத்துவா - இதுமுறையே, ஷடத்துவா, பதாத்துவா மந்திராத்துவா, புவ னாத்துவா, கலாத்துவா, வர்ணத்துவா, தத்துவாத்துவா, என ஆறும்; இவற்றைச் சிவபிரான்திருமேனியாகஆகமங் கூறும்.

அதபாயன்-சோழராசர்களுள் ஒருவன். திரு நீற்றுச் சோழனெனவும்பெயர், இவ்வரச னேறுதான் அருண்மொழித் தேவரென் னும்ஸ்ரீசேக்கிழார்நாயனார்திருத்தொண் டர் பெரிய புராணஞ்செய்தருளத் துணை நின்றவன்.

அநவத்தாதேடம் } அநவத்தை; அஃதா
அநவத்தாதோஷம் } வது: ஒன்றற்கொ ன்று வேண்டப்பட்ட அளவு கடந்த குற்றம்.

அநவரததாண்டவம் - சிதம்பரத்தில் கனக சபையினிடத்தேசிவபெருமான் ஆண்மாக் களின் இருவினைகளையும் புசிப்பித்துக் கழிப்பித்து முத்தியளிக்க வேண்டித் தனுகரண புவனபோகங்களுக்காகச் செய்யும் படைத்தல் முதலிய ஐந்தொழில் களும் நிகழ்த்துமாறு என்றுஞ் செய்யும் நிருத்தம்.

அநாகுலன் - இடைச்சங்கத்தார் காலத் திருந்த தெய்வப்பாண்டியன்; திலோத்த மையுடன் புணர்ந்து சாரகுமாரனைப் பெற்றவன்.

அநாதி - ஆதியின்மை, தொடக்கமில்லது.

அநாமிகை - ஆழி விரல், பவித்திரவிரல்.

அநாரியர் - மிலேச்சர், மிலேச்சர்.

அநித்தியம்-நித்தியமல்லாதது, நிலையற்றது.

அநிருத்தன்-காமன்மகன். அழகிற் சிறந்த வன்; வாணாசுரன் மகள் உஷாவென்ப வள் இவனை மாயத்தாற் றருவித்துப் புணர்ந்து களிப்ப முற்றனள். அதனைக் கேட்ட அவள் தந்தை வாணாசுரன் கோப முற்றுச் சிறையிட்டனன், அச்சிறை மீட்டற்காகவே கண்ணபிரான் பஞ்ச லோகத்தானும் மண்ணாலுஞ் செய்யப் பட்ட குடங் கொண்டாடி வாணனைக் கொன்று மீட்டனராம்.

அநீகம்-சங்கமூன்று, அக்குரோணிப்பகுதி.

அநுலோமத்தாணும் பிரதிலோமப் பெண் ணுங் கூடிப் பிறந்தபிள்ளை-அந்தாரளன்.

அநுலோமப்பிரதிலோமம்-வீபூதி தரிக்கும் வகையினொன்று; அஃது: பெருவிரல், நடுவிரல், ஆழிவிரல் மூன்றினுந் தரிப்ப தாம்.

அநுலோமப் பெண்ணும் பிரதிலோமத்தா ணுங் கூடிப்பிறந்தபிள்ளை-விராத்தியன்.

அந்தணரதுதொழிலின்பெயர் - ஓதல், ஓது வித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன, அந்தணரது தொழில்.

அந்தணர் - பார்ப்பார், அறவோர், பூசுரர், அறுதொழிலாளர், பிராமணர், இரு பிறப்பாளர், எரிவளர்ப்போர், ஆதிவரு ணர், வேதியர், வேள்வியாளர், மறைய வர், விப்பிரர், மேற்குலத்தோர், முற் குலத்தோர், ஐயர், வேதபாரகர், மூப்புரி நூலோர், தொழுகுலர், முத்தீமரபினர், கமலத்தாரினர், வேதக்கொடியர், தருப் பையர், முஞ்சியர், சமித்தினர், ஆய்ந்

தோர், மெய்யர், முனிவர், உயர்ந்தோர், சிகைவர்.
அந்தணர்கொடி - வேதக்கொடி.
அந்தணர்க்குரியபொருள் - தருப்பை, சமித்து, முஞ்சிப் புல், தண்டு, கமண்டலம்.
அந்தணர்க்குரியமார்க்கம்-வேதம், ஆகமம், சுத்தசைவம், வைதிகசைவம்.
அந்தணர்மாலை - தாமரைமாலை.
அந்தரகணவகை-நிரை நிரை நேர்.
அந்திப்பொழுது-சந்தி,சாயங்காலம், சாயம், சாய்பொழுது, மாலை, கோதூழி.
அந்வயம்-கண்ணழிவு; அஃதாவது : ஒரு செய்யுளைப் பொருளுக் கியையப் பதங்களைப் பிரித்துக்கோடல்.
அபயவத்தம் - இரட்டைக்கை, அஃதாவது, இருகரங்களும் சுகதண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது.
அபரபக்கம் } கிருட்டிணபக்கம், தேய்
அபரபட்சம் } பிறை, பிற்பக்கம்.
அபாநவாயு } உச்சத்தலத்தில் நிற்பது, தச
அபானவாயு } வாயுவி னொன்று.
அபாநவாயுத்தொழில் } மலமூத்திரங்களை
அபானவாயுத்தொழில் } ப் பெய்வித்தல்.
அபாநன் }
அபானன் } அபாநவாயு, அபானவாயு.
அப்பவர்க்கங்கள்-அஃகுல்லி, அடை, அண்டகை, அபூபம், இலட்டுகம், கஞ்சம், நொலை, தோசை, பூரிகம், பொள்ளல், போளி, மண்டிகை, மோதகம், இலையடை, மெல்லடை, நொலையல், பூரிகை, போனகம், இடி, சஃகுல்லி, பிட்டு, பூவணை, மலாவகம், ஒச்சை, துவை, இவற்றுள் அஃகுல்லி யென்பது உக்காரிக்கும் சிற்றுண்டிக்கும், அடை அப்பத்திற்கும், அபூபம், வடைக்கும், கஞ்சம் ஓர் அப்பத்திற்கும், இடி மாவிற்கும், சஃகுல்லி யில்லடைக்கும், பூவணை திணமாவிற்கும் பேராம்.
அப்புதல்-கொட்டல், சதுர்த்தல், சாத்தல், அப்பல். [ந்தை,விதவை,தாபதநிலையள்.
அமங்கலை-கைம்மை,கைனி, கலன்கழி மட
அமரர்மாதர்-அரமகளிர், அரம்பை,சூர்மகள், அணங்கு. [அமாவாசி, அமாவாசியை.
அமாவாசை-இந்திரவிகூடல், குரு, அமை,
அமிழ்து-அமரி, அமிர்தம்,அமுதம், அமுது, சுதை, பீயூடம், மருந்து, சாவா மருந்து.
அமுக்கிரா-வராககர்ணி, அசுவகந்தி, அசுவகந்திகா,அமுக்குரவு, அமுக்குரா, அகவு, அடித்திகம், அசையு, அசுபம், விப்புருதி நாயகம்,விபண்ணகம்,விற்புருதி நாயகம்.
அமைச்சர் - தேர்ச்சித்துணைவர், எண்ணர், நூலோர், சூழ்வோர், உழையர், மந்திரர், முதுவர், முன்னோர், அமாத்தியர், ஆமாத்தியர், ஆமாத்திரர், அமைச்சு.
அமைத்தல்-கெழுமல், சமைத்தல், புல்லுதல், பொருத்தல்.
அமையுமென்றல் - அலம்.
அம்பலம்-சபை,பொதி,பொதுவில்,மன்றம், மன்று, பொது.
அம்பிறகு-அம்பினிறகு, ஈர்க்கில், உடு.
அம்பு-அத்திரம், ஆசுகம், ஆவரி, உடு, ஏ, ககம், கங்கபத்திரம், கணை, கதிரம், காண்டம், கோ, கோல்,சரம், சாயகம், சிலீமுகம், தொடை, தோணி, பகழி, பத்திரம், பத்திரி, பல்லம், பாணம், பிரதரம், புங்கம், புதை, மார்க்கணம், வண்டு, வாளி, விசிகம், வேத்திரம் இவற்றுண் மொட்டம்பு உதணம். முன்விடுமம்பு, அத்திரம், சாயகம்.
அம்புக்குதை - குலை, பகழி, புங்கம்.
அம்புக்குப்பி - புழுது, புழுகு.
அம்புக்கூடு - ஆவநாழிகை, ஆவம், கணைப்புட்டில், தூணம், தூணி, தூணீரம்.
அம்புத்தலை-உடு,சுரை. [ணங்கட்டும் பாசம்.
அம்புத்திரள்கட்டுங்கயிறு - பற்றுக்கை, பா
அம்மனைப்பருவம் - பெண்பாற் பிள்ளைக் கவிப் பருவத்தொன்று; இஃது: ஐந்து வயதிற்குமேல் ஒன்பது வயது வரைக்கு முள்ளாண்டின்கண் நிகழ்வது. [ட்டு.
அம்மானை - அம்மனை, ஓர் மகளிர் விளையா
அம்மானைவரி-ஓர்வகைச் செய்யுள்.
அம்மி-அரைசிலை, அரைகல்.
அயலவர் } ஏதிலர், நொதுமலர், நொது
அயலோர் } மலாளர், வம்பலர், அருகினர்.
அயல் - ஏதில், ஒன்றுவிட்டயல், உபாந்தியம், அருகு, பக்கம், அண்டை, பாரிசம்.
அயனுலகு-பிரமலோகம், சத்தியலோகம், மனோவதி. [திரி.
அயண்மனைவியர்-வாணி, சாவித்திரி, காயத்
அயன்வாழ்நாளின்பாதி - பரார்த்தம்.
அயன்வாழ்நாள்-கற்பம், பரம். [யகூத்து.
அயிராணியாடல்-கடையம்,இந்திராணிஆடி
அயிராவணம் - சிவலோகத்துள்ள யானை இரண்டாயிரங் கொம்புள்ளது.
அயிராவதம் - வெள்ளையானை, நாற்றந்தயானை, அமரரும்பல்.
அயிரை-நொய்ம்மீன், சிறுமீன். [வினிதை.
அயோத்தி-கோசலம், கோசலை, சாகேதம்,

அரக்கர்-இராக்கதர், யாது, யாதுதானவர், தானவர், நிசாசரர், பிசிதாசனர், மேனி கரப்போர், கார்வண்ணர், நிருதர், சால கடங்கடர். [செவ்வாம்பல், சேதாம்பல்.

அரக்காம்பல் - செங்குமுதம், செவ்வல்லி,

அரக்கு-அரத்தம், தமரம், தும்பு, துப்பு.

அரக்குதல் - சிதைத்தல், தேய்த்தல், கீழ்த்தல்.

அரங்கம்-ஆற்றிடைக்குறை, சீரங்கம், திரு வரங்கம் பெரியகோயில் என்னும் காவிரி சூழ்ந்த தீவு, இஃதுவிட்டுணுத்தலம், விபீ டணனுற் பிரதிட்டை செய்யப்பட்டது.

அரங்களக்குமுறை - ஆடுதற்கு மூன்று கோ லும் ஆட்டுவோர்க்கு ஒருகோலும், பாடு நர்க்கு ஒரு கோலும் அந்தர மொருகோ லும், குயிலுவர் நிற்றற்கு ஒரு கோலுமாக அளத்தல்.

அரங்கு - நாடக சாலை, கூத்துப் பயிலிடம்.

அரசமரம் - அச்சுவத்தம், கணவம், குஞ்சரா சனம், சுவலை, திருமரம், பிணை, பிப்பலம், போதி, அரசானம், அரசு.

அரசரறுதொழில்- ஓதல், பொருதல், உலகு புரத்தல், ஈதல், வேட்டல், படைபயிறல்.

அரசரறுவகைத்தானை - வேல், வாள், வில், தேர், பரி, களிறு என்பனவாம்.

அரசர்கோயில் - மாளிகை, சாலை, மந்திரம், பவனம், குலம், அரசில்.

அரசர்க்குஐம்பெருங்குழு-அரசரோடுகூடித் தொழினடாத்தும் ஐவர்; அவர்: மந்திரி யர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

அரசர்க்குரியபரி-பெண்களது மணம்போல் மிக்க மணத்ததாய், வாழை மடலேப்போ லச் செவியினை யுடையதாய், நான்கு கா லும் பிடருமுகமு முதுகும் முன்புறமும் வெண்ணிற முடையதா யெண்பத்திரண் டு விரலு யர்ந்த குதிரை தத்தமக் குரிய குணங்களையுடைய அரசர்க்குரியது, அரச பரி.

அரசர்க்குரியபாவகை - பிள்ளைக்கவி முன் நேரிசை யாசிரியப்பா வாயினும் கொச்ச கக் கலிப்பா வாயினுங் கூறுதல்.

அரசர்க்கெண்பேராயம் } அரசர்க்கு
அரசர்க்கெண்வகைத்தூணவர் } த் தூணை செய்யும் எண்மர்; அவர்: காரணத்தியல் வோர், கருமவதிகாரர், சுற்றத்தார், கடை காப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

அரசர்க்கைவகையுறுதிச்சுற்றம் - அரசரைப் பற்றிநின்றவர்க்குயிர்த்துணைசெய்வோர்; அவர்: நட்பாளர், அந்தணாளர், மடைத் தொழிலாளர், மருத்துவக்கலைஞர், நிமித் திகப்புலவர், அரசர்க்குறுதிச் சுற்றம்.

அரசர்வீதி } பூரியம், இராஜ வீதி.
அரசவீதி }

அரசன் - புரவலன், பெம்மான், பெருமான், எந்தல், முதல்வன், பூபதி, பூபாலன், வேந் தன், மன்னன், நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திவன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன், பதி, மகிபாலன்.

அரசன்கொடி - சிங்கம்.

அரசன்படை - அறுவகைத்தானை.

அரசன்மனைவி - அரசி, பெருமாட்டி, பூமிச் செல்வி, தலைவி, இறைவி, இராணி, இரா ஜாத்தி, கொற்றவை, பூமாதா.

அரசியலாறு - அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப் பொருள், மறநிலைப் பொருள், அறநிலை யின்பம், மறநிலை யின்பம்.

அரசிருக்கை - அத்தாணி, பூரியம், ஆசாரம், வேத்தவை.

அரசிறை - திறை, மிறை, கப்பம், பாகுடம்.

அரசுவாவினிலக்கணம்-நான்கு காலுந் துதி கையுங் கோசமும் வாலும் ஆகிய ஏழுறுப் பும் நிலத்திற் றோய்வதும், பாலையுஞ் சங் கையுமொத்த வெண்ணிறம் வாய்ந்த கால் நக முடையதுமாய், காலினுலுந் தனது துதிக்கையினுலும், சரீரத்தாலும் வாலினு லுங் கொம்பினுலுங் கொல்ல வல்லதாய், ஏழுமுழ முயர்ந்து ஒன்பது முழ நீண்டு பதின்மூன்று முழஞ் சுற்றுடைத்தாய், சிறிய கண்ணேயுஞ் சிவந்த புள்ளிகளேயு முடையதாய், முன்பு முற்கூறியவா றுயர் ந்துபின்பு தாழ்ந்தது அரசியானேயென்று அறிவுடையோர் சொல்லுவர்.

அராகம் - முடுகியல், முடுகு, வண்ணம்.

அரிசி - அரி, தண்டுலம், பரியவம், வீயம்.

அரிதல்-சோதித்தல், அறுத்திடல், விடுவாய் செய்திடல், சூலல், கொய்தல், ஈர்தல்.

அரித்துவாரம்- மாயாபுரி, கங்காத்துவாரம்.

அரிமுகவம்பி-சிங்கமுகவோடம், சீயப்புணை.

அரியின்தசாவதாரம் - மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி.

அரியின்மூவைந்தவதாரம் - சனகன், சனந்த னன், சனாதன், சனற்குமாரன், நாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக் கிரீவன், தத்தாத்திரேயன் மோகினி,

வேள்வியின்பதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

அரிவாள் - குயம், கூனிக்குயம், கூனிரும்பு, கொடுவாள், புள்ளம், ஈர்வாள்.

அருகனூல்மூன்று - அச்சாகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம், என்பன.

அருகன்-அசோகன், அண்ணல், அதிசயன், அந்தணன், அமைவன், அரியணைச் செல்வன், அருட்கொடி வேந்தன், அறவாழி வேந்தன், அறவோன், அறிவன், ஆசான், ஆதன், ஆத்தன், உரவன், உறுவன், எண்குணன், கந்தன், கமலஆர்தி, கருத்தா, கலேநாதன், காதிவென்றோன், காமற் காய்ந்தோன், குற்றங்களில்லோன், கொல்லாவேதன், சதுர்முகன், சமி, சம்பு, சாதரூபி, சாதுசாந்தன், சாந்தன், சித்தன், சிவகதி யிறைவன், சினவரன், சினன், சினேந்திரன், சீமான், செய்யோன், செல்வன், சைனன், தத்துவன், தருமராசன், திகம்பரன், திருமறுமார்பன், தீர்த்தன், தேவன், நக்கன், நான்முகன், நிச்சிந்தன், நிராயுதன், நீதிநூலி, நித்தவன், பண்ணவன், பரமேட்டி, பிதா, புண்ணியன், புத்தன், புலவன், புனிதன், பூமிசைநடந்தோன், பொன்னெயிற்கோன், போதன், மாசேனன், மாமுனி, மால், முக்குடைச் செல்வன், முத்தன், முனிந்தோன், மூனவன், யோகி, வரதன், வாமன், விதாதா, விநாயகன், விராகன், விறலோன், வீரன், அருகன், மூவுலகுணர்ந்த மூர்த்தி, விண்ணவன், பொன்னெயிஞதன், பட்டாரகன், அசோகமர் கடவுள், பகவன், முக்குடையோன், பூரணன், விண்ணவன், விமலன், வீதசோகன், மதனவென்றோன், கருத்தன், முன்னோன், நித்தன், நினமலன், நின்னுமன், நேமிநாதன், ஆனந்தன், ஆதி, சாத்தன், வேதாந்தன், நாதன், சுயம்பு, நிரம்பரன், அனந்தஞானி, சாயி, சீபதி, திருமலன், நிரஞ்சனன், யுகாதி, சிவகதிக்கிறை, வரன, தேவன், எண்சிறப்பு முள்ளோன், அத்தன், சோதி, பகவான், அநாமயன், சுயம்புமாசேனன், வென்றோன், என்னும் முதலியனவாம்.

அருகன்கன்மசயம்-எண்வகைக்கன்மக்கள்; அவை:— ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷியம், நாமம், கோத்திரம், அந்தராயம்,

அருகன்குணங்கள் -கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்பன.

அருகன்கேவலஞானம் - மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பரியாயஞானம், என்பனவாம். இவற்றுள், மதிஞானமாவது சுபாவபுத்தி, சுருதஞானமாவது நூலுணர்ச்சி, அவதிஞானமாவது தன்னுடைய முற்பிறப்பை யறியுமறிவு, மனப்பரியாய ஞானமாவது, தன் முற்பிறப்பையும், பிறர் முற்பிறப்பையும் அறியுமறிவு, கேவல ஞானமென்பது திரிகால வுணர்ச்சியாம்.

அருகன்கையறவு- அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம் என்பன.

அருகன்கொடி - காட்சி, சீலம், ஞானம்.

அருகன்சத்திரம்-சகலபாசனம், சந்திராதித்தியம், நித்ய விநோதம் என்பனவாம்.

அருகன்படை - தருமசக்கரம், அம்புயம்.

அருகன்வகைஞானம் - மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பரியாயஞானம், கேவலஞானம் என்பனவாம்.

அருகன்வழிபாடு - அருகசரணம்.

அருகன்வாகனம் - தாமரைப் பூ.

அருகன்விரதம் - அனுவிரதம், குணவிரதம், சிட்சாவிரதம் என மூவகைத்து, அவற்றுள் குணவிரதமாவது திக்கு விரதம், தேச விரதம், அநர்த்த தண்ட விரதம், என மூவகை.

அருகோடுமாகமம் - அங்காகமம், பகுசுருதியாகமம், பூர்வாகமம் என மூவகை. அவற்றுள், அங்காகமம் பன்னிரண்டு பகுப்புடைத்து. அவையாவன:- ஆசாராங்கம், சூத்திர கிருதாங்கம், ஸ்தானாங்கம், சமவாயாங்கம், வியாக்கியாப் பிரஞ்ஞபத்யாங்கம், ஞாதுருகதாங்கம், உபாசகாத்தியயனாங்கம். [றேர்.

அருக்கன்ஊர்தி-ஒற்றையாழித்தேர், பொற்

அருக்கன்தேர்ப்பாகன் - அருணன்.

அருக்கன்தேர்ப்புரவி - ஏழ்புரவி.

அருங்கலச்செப்பு - மணிக்கலம், பெய்த பணிப் பெட்டகம்.

அருச்சனை-ஆராதனை, வழிபாடு, வணக்கம்.

அருச்சித்தல்-புட்பஞ் சமர்ப்பித்தல், பூப்பலியிடல், மலர்தூவல், அர்ச்சித்தல்.

அருச்சுனன் - அணிமக்கொடியோன், ஆண்டொழின் மைந்தன், காண்டீவன், கிரீடி, கிருட்டிணன், கேசவற்றோழன், சவ்விய

சாசி, சுரேந்திரன் மைந்தன், சுவேதவாகனன், தனஞ்சயன், பற்குணன், பார்த்தன், மாதவிகொழுநன், வானரக்கொடியோன் விசயன், வீபற்சு, கிருட்டிணசகாயன்.

அருநெறி - அத்தம், கடற்சுரம், கடம், சுரம்.

அருந்ததி - வசிட்ட பத்தினி, ஊர்ச்சை, வடமீன், சாலி.

அருந்தவப்பெண் - கௌம்மை, கௌந்தி, [பைம்மை.

அருமைசெய்தல் - பேராண்மை.

அரும்பண்டம் - தாரம்.

அரும்பாலவகை - உழைகுரலாதல்.

அரும்பு - னை, கலிகை, போகில், முகுளம், மொக்குள், மொட்டு, கோரகம், முகிழ், சாலகம், கோரகை, மூகை. [ஞாபகம், பிசி.

அரும்பொருள் - அருமையான பதார்த்தம்,

அருவருத்தசேறு - நொளில், ஊழில், நொதி.

அருவருப்பு - குற்சிதம், பயிர்ப்பு, வாலாமை.

அருவி - கழிமுகம், மலர்.

அருவிப்புனல்வீழிடம் - தூவானம்.

அருளோன் - காருண்ணியன்.

அருள் - தகவு, கருணை, இரக்கம், தயவு, தயா, கிருபை, அபயம்.

அரைஞாண் } அரைநூல், இரதம், இரதநம்,
அரைநாண் } இரதனம்.

அரைப்பட்டிகை - அத்து, கலை, மனுவு, மனு.

அலங்கரித்தல் - அணிதல், ஒப்பனை, கைசெய்தல், கைத்தல், புனைதல், பூசுதல், பொற்புறுத்தல், மண்ணல், வனைதல், வேய்தல்.

அலங்காரம் - அணி, ஒப்பனை, கட்டழகு, காமர், கை, சிங்காரம், துப்பரவு, தையல், பொற்பு, அழகு. [ரம், கவீரம்.

அலரி-அயமரம், கணவீரம், கனவீரம், கரவீ

அலர்தல் - விரித்திடல், அவிழ்தல், வெள்ளல், எதிர்த்தல், அலருதல், அலர்ச்சி, மலர்கை.

அலாபத்திரகை - அஃதாவது சிறுவிரல் முதலாகிய ஐந்தும் வளைவது என்னை? "அலாபத்திரமே யாயுங்காலைப் - புரை மையின் மிகுத்த சிறுவிரன் முதலா-வரு முறை யைந்தும் தளைந்துமறிவதுவே" என்றாகலின்.

அலி - பேடி, பேடு, நபுஞ்சகம், பேடன், பேதை, பெண்டகன், சண்டகன், சண்டன்.

அலிக்கை - நாடகவுறுப்பினொன்று, பொதுக்கை அஃதாவது; மூன்று சொல் வளையம் அபிநயத்துடன் காட்டிச்செய்யுமிடத்துச்செய்யுமுறைமை வகையினொன்று, அது சர்ப்பசிரம், வண்டு, முகுளம், கத்தரிகை, கேசம், கபித்தம் என அறு வகைத்தாம்.

அலியிலக்கணவகை - நச்சுப்பேசல், நல்லி சையோர்தல், அச்சுமாறல், ஆண்பெண் ணுதல், ஒருகையை வீசிநடத்தல், தலையி லொருகைவைத்தல், எதிர்ந்தோரைக் கண்டு விலகல், எதிர்ந்தோர்மேற் செல் லுதல், பார்வை வேறுபடுதல், பிறருக்கு நடுநடுங்கிச் சுழலுதல், பிறரைக்கண்டு நகைத்தல், நாணுதல், பலநாடகஞ்செய் தல், பக்கம் பார்த்தல், பதுங்கித்திரிதல், காரணமில்லாமற் பலவற்றைக் கோபங் கொண்டு பேசுதல், தன்மூலையைத்தானே வருத்தல், அசக்கல், அழுதல், சேர்ந்தரு வருத்தல், குருக்கிக் கூட்டிப்பார்த்தல், இடையில் ஒருகைவைத்தல், அதனை வாங்கல், இரங்கிப்பேசல், எல்லென்று பாடுதல், இவைபோன்ற பிறசெய்கை களுமுடைத்தாதலாம். [டுமாம்.

அலியெழுத்து- மெய்யெழுத்துப் பதினெட்

அலையல் - அலைதல், அழுங்கல், ஆஞ்சி, சோம்பு, நெஞ்சிழ்தல் ஞெள்கல், துளும் பல், தளும்பல், தளம்பல், நடுக்கல், நடுங்குதல்.

அல்குல் - அகல், கடிதடம், நிதம்பம், பெண் குறி, வடிவு, அரை, யோனி, பகம், பூப்பகம், பொன், சின்னம், உபத்தம்.

அல்லியவாடல் - வாயனுடல், ஆறுறுப்பி, அலிப்பேடு.

அவதரம் - உசிதசமயம், தறுவாய்.

அவந்தி
அவந்திகை } உஞ்சை, உஞ்சயினி.
அவந்திகர்

அவமதிசிரிப்பு - அசி, பரிகாசச் சிரிப்பு.

அவயவம் - காத்திரம், கைகால் முதலிய உறுப்பு, அங்கம், வடிவு.

அவரை - சிக்கடி, சிம்பை, முதிரை.

அவலத்தவிநயம் - துன்பக்காட்சி, அஃதாவது துன்பத்துள் கூடிய கண்ணீர்மழையும் வாடியதன்மையும், வருந்திய செலவும், பெருமையழிவும் பிதற்றியசொல்லும், நிறைகையழிதலும், குணமில்லாச் சொல்லுமுடைமையாம்.

அவாவின்மை - வெறுப்பு, முனைவு, ஒல்லாமை, வேண்டாமை, உவர்ப்பு, மா, அறுத்திடல், ஆசையில்லாமை.

அவிட்டநாள் } ஆவணி, காகப்புள், பறவை,
அவிட்டம் } புள், வசுநாள், வசுக்கணம்.

அவித்தல்-நதுத்தல் ,நமிழ்த்தல், நுதுத்தல், தணித்தல், நூத்தல், அணைத்தல், நொதுத்தல்.

அவிநயநிலம் - நிற்றலும், இருத்தலும், கிடத்தலும், இயங்கலும் என்னு நான்குமாம். இவையன்றி சரிகமபதனி என்னு மெழுவகைப்பட்ட எழுத்தடியாகப் பிறக்குங் குரன் முதலாகிய ஏழுமாம்.

அவிநயவகை - வெகுளல்,சோம்பல், குளித்தல், ஐயமுறல், உவத்தல், அழுக்காறுடைமை, இன்பமுறல், தெய்வமுறல், ஞஞ்ஞையுறல், உடன்படல், உறங்கல், துயிலுணர்தல், சாதல், மழைபெய்யப்படல், பனித்தலைப்படல், வெயிற்றலைப்படல், நாணமுறல், வருத்தமுறல், கண்ணேவுறல், தலைநோவுறல், அமுற்றிறம்படல், சீதமுறல், வெப்பமுறல், நஞ்சுண்ணல் என்னு மிருபத்து நான்குமாம்.

அவியல் - அவைத்தல், அவித்தல்.

அவ்விடம் - அந்து, அந்தனம், அந்தில், அம்பர், அவண் ஞங்கு, ஆண்டு ஆங்க.

அழகு - அணங்கு, அணி, அந்தம், அபிராமம். அமலம், அம், அம்மை, அலரி, ஆரியம், இராமம், இல்லிதம் இலாவண்ணியம், எழில், ஏர், ஐ, ஒண்மை, ஒப்பு, கவின், கஹே, காந்தி, காமர், காரிகை, குழகு, கொம்மை, கோலம், சந்தம், சவி, சாயல், சித்திரம், சீர், சுந்திரம், செவ்வி, செழுமை, சேடு, சொக்கு, சோபம், சௌமியம், தகை, தகைமை, தளிமம், தென் தேசிகம், நையல், நோட்டி, நோல், நலம், நவ்வி, நன்கு, நோக்கம், நோக்கு, பதம், பத்திரம், பந்தம், பந்துரம், பாங்கு, பூபை, பொற்பு, பொன், மஞ்சு, மஹசுளம், மணி, மதன், மயம், மஹேகம், மஹேக்கியம், மாண்பு, மாதர், மாலை, மாழை, முருகு, யாணர், யௌவனம், வகுப்பு, வடிவு, வண்மை, வண்ணம், வளம், வனப்பு, வாகு, வாமம், விடங்கம், அன்றியும் பேரழகின் பெயர், அலங்காரம், கட்டழகு, காமர், சித்திரம், விசித்திரம், காந்தம், மஹேசுரம், குழகு, பாணி, சாரு, சிறப்பு, பொலிவு, மா.

அழகுவகை - கொம்மை, மஹேகரம், சுந்தரம், சித்திரம், மஹேஹரம், சாரு.

அழிஞ்சில் - அபகோலம், செம்மரம், சேமரம், அங்கோலம்.

அழித்தல் - அரக்குதல், அரைத்தல், கீழ்த்தல், சுட்டித்தல், சிதைத்தல், சிரத்தல், தேய்த்தல், நூறல், விரகு.[கோணை, நிறை.

அழிவின்மை - அச்சுதம், கன்னி, குமரி,

அழிவு - கிலம், சிதலம், சிதிலம், சீரணம், ஜீரணம், சிதைவு, தேய்வு, குறைவு.

அழுக்காறு - ஔவியம், கோட்டம், பொருமை, மனத்தழுக்கம், நோனுமை, கூரம்.

அழுக்காறுடையோனவிநயம் - குற்றத்தோடு கூடிய பொருளுடைமையும் குவிந்த வாயும் கோணலாம் சொல்லும், நடுக்கமுற்ற கையுடைமையும் கோபமுடைமையும், காரணமில்லாமல் மெலிந்த முகமுடையனுதலும்மெலிவருகொண்டதுன் பமும்பொருந்துமென்று புலவர் கூறுகிற்பர்.

அழுக்கின்மை - அமலம், நிருமலம், நின்மலம், விமலம்.

அழுக்கு - களங்கம், மலம், மலினம், மாசு.

அழுக்கின்குருளை - மறி.

அழுக்கு - விலக்கு, மறி, பரிக்கு.

அழுதல் - அரற்றல், அழுங்கல், இரக்கல், உரோதனம், ஏங்கல், கசிதல், கலங்கல், கலுழ்ச்சி, கலுழ்தல், கலுழ், பொருமல், விம்மல், புலம்பல், துறுமல், கலக்கம்.

அழுந்தல் } அமுங்கல், அமுக்கல், ஒளி
அழுந்துதல் } முங்கல்.

அழைத்தல் - அகவல், ஆகருடணை, இருத்தல், உரோத்தல், கரைதல், கரைத்தல், குயிறல், கூவல், கேதல், மாவெனல், வாக்கல், வாவெனல், விளித்தல், ஆகருடணம், மத்தல்.

அளக்குழற்சி - குந்தளம், விலோதம்.

அளகமுடி - மயிர், கொப்பு, மிஞ்சம், கசி, கொண்டை, தம்மிலம், முச்சி, சிகழிகை,

அளகமுடிக்கும்ஐம்பால் - முடி, குழல், தொக்கல், பனிச்சை, சுருள், இவற்றுள் மயிரையுச்சியின் முடித்தல் முடி,சுருட்டி முடிந்தல் குழல், மயிரைமுடிந்து தூங்கவிடுதல் தொக்கல், பின்னிவிடுதல் பனிச்சை, பின்னே சொருகுதல், சுருள்.

அளகம் - குழல், கூந்தல், கூழை,குந்தளம், சிகி, ஐம்பால், கதுப்பு, சுருள்,விலோதம், பரிசாரம், கேசம், சுரியல், விராட்டம், கோதை, குருள், குரல், கூமல்.

அளபெடை - புலுதம்.

அளபெடைவகை - இயற்கை யளபெடை, செயற்கை யளபெடை,இசையளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை.

அளவளாவல் - கலாவல், துழாவல், வளா

வல், சிவணல், புணர்தல், பொருந்தல்.

அளவின்மை - அநந்தம், அபரிமிதம், பாடிரம், அமானம், அமிதம், எல்லையின்மை, அபாரம்.

அளவு - அந்தரம், அவதி, அளவை, தூணை, தாறு, தூணை, பங்கு, மட்டு, மாத்திரை, மிதம், மடங்கு,வரை, வரையறை,வல்லி, மானம், காறு, பரிமாணம், பிரமாணம்.

அளவுப்பாணி - தாளவகை அஃதாவது தாக்கினவோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல்.

அளவை - கச்சம், கடன்.

அறச்சாலை - புறம், சாலை, பள்ளி.

அறம் - சுகிர்தம், தருமம், நல்வினை, புண்ணியம், வீறு, ஒழுக்கம், ஆசாரம், உறுதி, கை, தவம். [னன்புவீடு.

அறத்தின்பிரயோசனம் - பொருள், பர

அறவகை - ஒழுக்கம், வழக்கு, தண்டம். இவற்றை முறையே ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்பர் வடநூலார்.

அறிஞர் - சான்றவர், மிக்கோர், நல்லோர், தகுதியோர், மேலோர் ஆய்ந்தோர்,, ஆன்றவர், உலகம், மேதாவியர், ஆன்ரோர், சான்ரூர்.

அறிந்துமறியார்போறல் - அறிமடம்.

அறிவிலான்-அஞன், அஞ்ஞன், அஞ்ஞை, அவிவேகி, அறிவிலி, ஆதன், இழுதை, ஏழை, சிதலை, சிதடன், பேதை, மடன், மண்ணை, மூடூமகன், மூடன், மடமகன், குதலை.

அறிவில் பொருள் - அசித்து, அசேதனம், சடம், முதலியனவாம்.

அறிவின்மை - அசேதனம், அவிவேகம், அறியாமை, எய்யாமை, சிதடு, பேதமை, மடமை, மடம், மருட்சி, மாழை, வெண்மை, வெள்ளை, வெறிது, வறிது.

அறிவு-உணர்வு, உண்மை, உரன், உறழ்வு, ஒண்மை, ஓதி, காட்சி,சேதனம், சைதன்னியம், ஞாபகம், ஞானம், தீ, துப்பு, தெருட்சி, தெளிவு, புத்தி, புந்தி, புலன், பொறி, போதம் மதி, மேதை,விவேகம், அன்றியும், பேரறிவு, முகரிமை, முதுக்குறைவு.

அறிவுடைப்பொருள் - சித்து, சேதனம், உயிர், ஆன்மா, சித்தம், தன், பசு, இயங்கியற்பொருள், சங்கமம், சத்து.

அறிவுடைமையில்பொருள் - அசித்து,அசத்து, சடம், அசேதனம், பாசம், மலம், நிலையியற்பொருள், தாவரம்.

அறிவுடையோர் - அறிஞர், ஆய்ந்தோர், ஆரியர், ஆன்றவர், உயர்ந்தோர், உரவோர், உரியோர், உலகம், எழுத்தாளர், கணக்காயர், கலைவல்லோர், கவிஞர், குசலர்,கூவலர்,சான்ரோர்,சான்ரூர், சீரியர்,சீரியோர்,தகுதியோர்,நல்லோர், நிபுணர், நூலுரைப்போர், நூலோர், மிக வல்லோர், மிக்கோர், மேதாவியர், மேலோர், மிக்கவர், மேதையர், மேலார், விபுதர்.

அறுகு - இளம்புல், சட்பம், தூர்வை, பதம்.

அறுகுவெள்ளரிசிகலந்தணிவது - அக்கதம், அச்சுதம். [கரத்தராசங்கம்.

அறுகை - அறுவை, தோளிலிடுமுறி, அரு

அறுத்தல் - அகைத்தல், அரிதல், ஈந்தல், கடிதல், கத்தரித்தல், கொய்தல், சூலம், சேதித்தல், தடிதல், அணித்தல், துண்டித்தல், பகல், பரிதல், விடுவாய் செய்தல், பரிதல்.

அறுவகைச்சுவை - திக்திக்தல், கூர்த்தல், துவர்த்தல், கார்த்தல், கைத்தல், புளித்தல், முதலியன.

அறுவகைப் பருவம் - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில், இவை முறையே ஆவணி புரட்டாசி கார், ஐப்பசி கார்த்திகை கூதிர், மார்கழி தை முன்பனி, மாசி பங்குனி பின்பனி, சித்திரை வைகாசி இளவேனில், ஆனி ஆடி முதுவேனில் எனவே, ஆவணி முதலாக இரண்டிரண்டு மாத மொவ்வொன்ரும்.

அறுவகைப்புறச்சமயம் - உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம், எனச்சைவத்துக்குப் புறமான சமயங்கள் ஆறு.

அறுவகையிருது-வசந்தம், கிரீடம், வருடம், சரம், ஏமந்தம், சிசிரம். இவை முறையே சித்திரை வைகாசி வசந்தம், ஆனி ஆடி கிரீடம்,ஆவணி புரட்டாசி வருடம், ஐப்பசி கார்த்திகை சரம், மார்கழி தை ஏமந்தம், மாசி பங்குனி சிசிரம்.

அறுவகையுட்சமயம் - வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம், முதலியன.

அற்பத்தின்பெயர் - சிறுமையைக் காண்க.

அற்புதம் - கோடி பத்துக்கொண்டது.

அனந்தன் - சகத்திரசிரசன், சர்ப்பராசன், சேடன், பாரேந்தி, போகவதிக்கிறை, பதஞ்சலியவதாரன்.

அனற்பொறி - நெருப்புப்பொறி, புலிங்கம்
அனற்றிசள் - தீத்திசள், உற்கம்.
அனிச்சமரம் - அருப்பலம், சுள்ளி, நறவம்.
அனுகரணவுபயவோசை-வெடுவெடெனல், திடுதிடெனல், களகளெனல், கொள கொளெனல், நெடுநெடெனல், மொக மொகெனல், நெறுநெறனல், படபடெ னல், மொடுமொடெனல், சடசடெனல், சளசளெனல், கலகலெனல், சலசலெ னல், கிடுகிடெனல்.
அனுகரணவோசை - இம்மெனல், கல்லெ னல், இழுமெனல், வல்லெனல், பொம் மெனல், ஒல்லெனல், பொள்ளெனல், ஞரேலெனல், கொம்மெனல், சரேலெ னல், ஞாள்ளெனல், கொல்லெனல், அம்மெனல்.
அனுடநாள்) காளி, தேள், பனை, புல்,
அனுடம்) பெண்ணை, போந்தை, மித்திரநாள். [நகர்தல்,
அனுபவித்தல் - நினைத்தல், துய்த்தல்.
அனுபோகம் - துப்பு, துவ்வு, நுகர்ச்சி, போகம், அனுபலம், நுகர்வு, அநுபோகம்.
அனைத்துமுண்டாகும்நிலம் - உருவரை, உருவரை, மிகு வள நிலம்.
அன்பு - அளி, குணம், ஆர்வம், இட்டம், ஈரம், காமம், நாரம், நார், நேசம், நே யம், பரிதல், பரிவு, பற்று, பாசம், புரிவு, வாரம், விசுவாசம், அன்றியும் விடாது தொடர்ந்தவன்பு, உழுவல், சங்கம்.
அன்றில்-கிரவுஞ்சம், தரிஞ்சகம், இதணன்-அகன்றில், இதன்குஞ்சு பிள்ளை, கவுஞ் சம், அன்றில்லை, மூலநாள்.
அன்னச்சிறகு) தூவி.
அன்னத்திறகு)
அன்னம் - அஞ்சம், உன்னம், எகினம், ஓதி மம், பிணிமுகம், மென்னடை, மராளம், வக்கிராங்கம், விகங்கம். இதணன்-சே வல். இனிதாகப் பாடுமன்னம், காதம் பம். இனிதாக நடக்குமன்னம்-மென்ன டை, உணவு, சோறு.

ஆ

ஆகமம்-தந்திரம், சிரௌதம், நிகமம், ஞா னம், வேதாகம முதலியன.
ஆகாயச்சொல்லிலக்கணம் - நெஞ்சொடு கூ றல், கேட்போர்க் குரைத்தல், தானே கூறிக்கொள்ளல்.
ஆகாயத்தின்குணம்-வெகுளி, மதம், மானம், ஆங்காரம், உலோபம் எனவிவை.
ஆகாயம்-அண்டம், அநந்தம், அந்தரம், அம் பரம், ஆகாசம், ஆகினி, இடம், உம்பர்உல கம், ககனம், கம், காயம், குடிலம், தலை, சேண், நபம், நாகம், புட்கரம், மங்குல், மாகம், மாதிரம், மீமேல், வானம், வான், விசும்பு, விண், விண்டலம், வியோமம், குண்டலம், வெளி, வேனி, உலகு, கோ, மீ, மண்டிலம், குழை, குடில், அகலம்.
ஆகாயவாணி-அசரீரியாகிய தருமதேவதை. எல்லாக் கருமத்திற்கும் சாகூியாகக் கட வுளால் நியமிக்கப்பட்ட சத்தி. இவ்வசரீ ரியின் ஒலி பல புராண சரிதைகளாற் காண்க.
ஆக்கம் - நந்தல், பெருக்கம், வளர்தல்.
ஆங்காரம் - அகங்காரம், செருக்கு, தருக்கு, கருவம்.
ஆசாரியன் - ஓசன், பணிக்கன், உபாத்தி, தேசிகன், பட்டாரகன், பதி, பண்ண வன், பகவன், அத்தன், தீர்த்தன், ஆசா ன், அடிகள், புங்கவன், சாமி, ஈசன், நா தன், இறைவன், கடவுள், கோமான், கு ரவன், ஐயன், உபாத்தியாயன், போத கன்.
ஆசிரியப்பா - அகவல், தொகை.
ஆசிரியர்கூற்று - கவிக்கூற்று, முதுமொழி, மேற்கோள், ஆசிரியவசனம், பழஞ்சூத்தி
ஆசிரியவிருத்தம் - மனவிருத்தம். [ரம்.
ஆசுகவிவகை - பொருள், அடி, பா, அணி முதலிய கொடுத்து மற்றொருவன் பாடுக என்றவுடனே பாடுவது.
ஆசை - அணங்கு, அருத்தி, அரை, ஆதரம், ஆர்த்தி, ஆர்வம், ஆவல், இச்சை, இரா கம், எட்டை, காதல், காமம், காமர், நசை, நச்சு, நம்பு, நயப்பு, நரம்பு, பற்று, பிணை, புரி, பெட்பு, மாதர், மோகம், வாய்வு, வாஞ்சை, விதுப்பு, விருப்பு, வி ழுப்பம், விழைவு, விளரி, வினவு, வெப் பம், வெம்மை, வேட்கை, வேட்பு, ஏடை, வயா, விருப்பம், மேவல், வெஃகல், அவா.
ஆசைப்பெருக்கம் - அவா, இரதி, இவறல், கவர்தல், காதலித்தல், சார்வு தாழ்தல், நச்சுதல், நம்பல், நயத்தல், நல்கல், பற் றல், பெட்டல், பேணல், மேவல், விரும் பல், விழைதல், வீழ்தல், வெஃகல், வேட்டல், வேண்டல். [யாலம், தனவனு
ஆச்சாமரம் - ஆ, சாலம், சுள்ளி, மராமரம்

ஆடலாசிரியனமைதி - இருவகைத்தாகிய அகக் கூத்தினிலக்கணங்களே யறிந்து பலவகைப்பட்ட புறநடங்களேயும் விலக்குறுப்புக்களேச் சேரப்புணர்க்கவும் வல்லனாகி அல்லியமுதற்கொடு கொட்டியீறாக்கிடந்த பதினெருரு கூத்துகளும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுகளும், அவற்றுக் கடைத்த வாச்சியங்களின் கூறுகளும் நூல்களின் விதித்த வழியே தெரிந்து கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழி வந்த தூக்குக்களும் தம்மிற்கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்து முதலாயின நிகழ்த்துமிடத்துப் பிண்டி பிணேயல் எழிற்கை தொழிற்கை யென்று சொல்லப்பட்ட நான்கினேயும் நூலினகத்துக் கொண்ட கூறுபாட்டை யறிந்து அகக்கூத்து நிகழுமிடத்துக் கூடைக்கதியாகச் செய்த கைவாரக் கதியுட் புகாமலும் வாரக்கதியாகச் செய்த கைகூடைக்கதிரிட் புகாமலும் புறக்கூத்து நிகழுமிடத்து ஆடனிகழுமிடத்து அவிநய நிகழாமலும், அவிநய நிகழுமிடத்து ஆடனிகழாமலும் சுரவைக் கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியுஞ் செலுத்தி யமைந்த தன்மையுடையனும்.

ஆடல் - அகவல், அசைதல், ஆவல், குனித்தல், தாண்டல், தூங்கல், நடித்தல், நொடங்கல், பெயர்தல், மாறல், நடித்திடல், ஆலல், அசைவு. இவற்றுள்வாயார்த்தாடலின் பெயர், ஆவலங்கொட்டல், நடித்திடல், ஆலல், அசைவு.

ஆடவர்கூட்டம் - சபை, சபை, பண்ணே, சங்கம், கோட்டி, அவை.

ஆட்வர்கொடைவீரத்தாலணிவது - கழல்.

ஆடாதோடை - அட்டகசம், சாதி, சால மரம், சாலவிருக்ஷம், சிம்மமுகி, சிங்கம், நெடும்பா, பாவட்டை, வாசை, வாசாதி, ஆட்டுசம்.

ஆடிமாதம் - ஆசாடம், சுசி, ஆஷாடம்.

ஆடு - அசம், அருணம், உடு, ஒருவு, துருவை, துள்ளல், பருவை, புருவை, வெறி, செம்மறி, மோத்தை, உதள், கொச்சை, ஏழகம், வற்காலி, வெறி, பள்ளே, வெள்ளே, வருடை, மேடம், கடா, மை, மறி, கொறி, சாகம், தகர், மேழகம், வெள்ளாடு முதலிய வகையைத்தத்தம் வரியிற் காண்க.

ஆடுதின்னுப்பாலே - சுங்கம், புழுக்கொல்லி, ஆவேகி, கத்திரியம், காசிரோர்த்தம், காரிரத்தம், காருண்னி, கெந்திபரம், கைப்பு, சகுட்டகம், சகுட்டநம், சமங்கை, சமனம், சுமங்கை, சுங்கல், சுங்கம், பிட்டர், அம்படம், வெகுலாங்கம், வறட்சுண்டி, தாத்திரி, சீவினி, அஞ்சலி, அதலமூலி, பாதாளமூலி, பங்கம்பாலே, பங்கம்பாலே.

ஆட்டுக்கடா, ஆட்டுக்கிடா } மேத்திரம், ஆணுடு.

ஆட்டுக்குட்டி - குட்டன், சோரன், பறழ், மணங்கு, மறி, வெள்ளே. [லன்.

ஆட்டுவாணிகன் - ஆட்டுவாணிபன், சாப

ஆணே - சத்தியம், சபதம், சூள், தெரிசொல், தேவசாட்சி, பிரமாணம், விரதம். அன்றியுமிடும்பாடையின் பெயர்-சபதம், வஞ்சம், வஞ்சனே.

ஆணேச்சிறப்பிக்கும்பெயர் - நம்பி, புமான்.

ஆணேயிடல் - தகைதல், தடுத்தல், தட்டல், வடித்தல், வாரித்தல். [நம், மேட்டிரம்.

ஆண்குறி-இலிங்கம், கோசம், சிசிநம், மேக

ஆண்ஞண்டு, ஆண்ஞெண்டு, ஆண்நண்டு } அலவன்.

ஆண்டு - ஆயனம், சமை, அயனம், தெய்வதம், வருடம், வற்சரம்.

ஆண்பாலெழுத்து - அகரமுதல் ஒளகார மிறுதியாகிய உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் ஆணெழுத்துக்களாம், ஆணெழுத்து.

ஆண்பாற்பிள்ளேபாட்டின்வகை - இதனிலக்கணத்தைத் தெளிவாகக் கூறுமிடத்து இரண்டா மாதத்திற் செங்கீரை கூறுதலும், ஐந்தாமாதத்திற்சொற்பயில்புசொற்றலும், ஏழாமாதத்தி லமுதூட்டலும், எட்டாமாதத்திற் முலாட்டுதலும், ஒன்பதா மாதத்திற் சப்பாணி கொட்டலும், பதினேரா மாதத்தில் முத்தங் கூறலும், பன்னிரண்டாமாதத்தில் வாரானே கூறுதலும், பதினெட்டாமாதத்திற் சந்திரனே யழைத்தலும், இரண்டாம் வருடத்திற் சிறுபறைகொட்டலும், மூன்றுமாண்டிற் சிற்றில் சிதைத்தலும், நாலாமாண்டிற் சிறுதே ருருட்டலும், பத்தாமாண்டிற் பூணணிதலும், பன்னிரண்டாம் ஆண்டில் கச்சிஞேடு உடைவாளே விரும்பத் தரித்தலு மென்று சொல்லப்பட்டவையும் இவை யொழிந்த பிறவுமாம். இவைகளுள் கூறுதல் கற்றலோடு அமுதூட்ட

லும், பூணணிதலும், கச்சோடு சரிகை புனைதலும் என்னும் இவற்றை யொழிந்த காப்பு முதல் பத்தும் ஆண்பாற் பிள்ளைக் கவியில் வரும். இவற்றுள் ஓராண்டுகாறு முரைத்த நிலங்கள் இருபாலுக்கு முரிய னவாம்.

ஆண்பான்மயிர்-குஞ்சி, பித்தை, ஓரி, குழல், கார்,பங்கி, கேசம், சுரியல், கதுப்பு, தலை, நவிர், பிச்சம், சிகை, உலை, குடுமி, தொங்கல்.

ஆண்பான்மயிர்முடி - பின்னகம், பந்தம், முடி, முச்சி, கொண்டை, சிகழிகை, குழல், சுடிகை, மௌலி.

ஆண்பெயர் - அஃறிணையில்உயர்திணையில் வரும் புல், பறவை, விலங்கு, மனிதர் முத லாயினோர்க்காம்.

ஆண்மகன்- ஆடூஉ, காளை, குமரன், புமான், புருடன், மகன், மாந்தர், மாண்பர்,மைந் தர், மானவன், ஆடவன் அன்றியும் ஆண் மகனுக்குச் சிறந்த பெயர், புமான், கம்பீ.

ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும் பொது - கதுப்பு, கேசம், சுரியல், குழல். [மரம்.

ஆண்மரம்-எகின்,சேமரம், அகக்காழ், வன்

ஆண் முதலை - கரா, கராம்.

ஆண்வண்டு - சுரும்பு, மதுகரம், தும்பி.

ஆதனம் - பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சுவத்திகம், சுகாதனம்.

ஆதாரநிலை-கந்து, ஆலம்பம், ஆலம், பதம், தஞ்சம், தூவு, ஆலம்பனம்.

ஆதி - அடி, ஆரம்பம், எழுவாய், தலை, தாழ், தொடக்கம், பிரசாயம், பூருவம், முதல், முன்னர், மூலம், மோனை.

ஆதியாழ் - ஆயிர நரம்புள்ளது.

ஆதிவேதம் - இருக்கு, பௌடிகம்.

ஆதொண்டை - தொண்டைச் செடி, ஆல விருக்ஷம்,உக்கிரச்சுரவார், துளம்பிக்கிரி.

ஆத்தி - ஆரம், ஆர், தாதகி, சல்லகி.

ஆந்தை - இருடி, கின்னரம், கூன், பிங்கலை.

ஆபரணக்கடைப்புணர்வு - கயில், மடை.

ஆபரணத்தின்றூங்கணி - தூக்கம், தொங் கல், நிலை, மதலிகை. [தூக்கம்.

ஆபரணத்தொங்கல் - உத்தி, மதலிகை,

ஆபரணமுதலியவைக்கும்வீடு-பண்டசாலை.

ஆபரணம்- அணி, அணிகலம், அணிகலன், ஆரம், இழை, கலம், கலன், நகை, பணி, பூடணம், பூண், மஞ்சு, மதாணி, வள்ளி, இவற்றுட் பேராபரணத்தின் பெயர் - ஆரம், மதாணி, பூணைக்கட்டு மாபரணத்தின் பெயர் - கிம்புரி, தாங்கி, வயிரம், மணிவடத்தின் பெயர் - ஆரம், காழ், சரம், தாமம். மணிக்கோவையின் பெயர் - காழ், சவி. அன்றியுங் காதணி முதலிய வகையைத் தம் தம் வரியிற் காண்க.

ஆபரணம்வைக்குஞ் செப்பு - ஆபரணச் செப்பு, கடிப்பம், கண்டிகை, காண்டம், கோடிகம், துமானன், பரணி, பீடிகை.

ஆபரணவோசை - அசையும் ஆபரணங்க ளாலெழுமொலி, சிஞ்சிதம்.

ஆமணக்கு-ஏரண்டம், சித்திரம்,சித்திரகம்.

ஆமெனல் - அன்றெனல், இன்றெனல்.

ஆமை - அண்டசம், அம்பணம், அழுங்கு, உறுப்படக்கி, ஒடுக்கி, கச்சபம், கமடம், கல்வி, கடிப்பு, கூர்மம். இதன் பெண் இடுலி, துளி.

ஆம்பற்பொது-அல்லி,சயம்,நெய்தல், இவற் றுட் செவ்வாம்பல், அரக்காம்பல்,செங்கு முதம், செவ்வல்லி, சேதாம்பல். வெள் ளாம்பலின் பெயர் - கயிரவம், குமுதம்

ஆம்பி - கிழார், காராம்பி, பூட்டை, காம்பி, அம்பி.

ஆயத்தமாஞன் - சந்நத்தன்.

ஆயம் - உல்கு, சாரியை, சுங்கம்.

ஆயர்வீதி - இடையர்வீதி, ஆபீனம். [ரம்

ஆயிரம் - நூற்றுப்பத்து, சகசிரம், சகத்தி

ஆயிலியஈன் } அரவுநாள், ஆயில், கௌ

ஆயிலியம் } வை, பாம்பு, அரவினுள்.

ஆயுதஞ்சுதுகூத்துப்பயில்களம் - அரங்கம்.

ஆயுதப்பொது - அசி, அரி, அலகு, இரும்பு, எஃகு, எஃகம், எதி, கருவி, கழுமுள், காண்டம், காத்திரை, கூர்த்திகை, சுத னம், சேனை,தானை,துப்பு, படை, படைக் கலம், வேல் இவற்றுட் கைவிடுமாயுதப் பொதுப் பெயர், அத்திரம்,தூரியம், கை விடா வாயுதப் பொதுப்பெயர், சத்திரம்.

ஆயுதவுறை-உறை, கருவிப்புட்டில், தடறு, படையுறை. [ஒற்று,தனிநிலை,மூப்புள்ளி.

ஆயுதவெழுத்து - அஃகேனம், ஆய்தம்,

ஆயுள்வேதியர் - மாமாத்திரர், மத்துவதர், மருத்துவர், வைத்தியர், பிடகர்,பரிகரிப் போர், ஆயுள்வேதர், ஆயுருவேதியர்.

ஆரபடியாவது - பொருள் பொருளாக வீர ராகிய மானுடர் தலைவராக வருங்கூத்து.

ஆரம்பம் - ஏழங்கமுடையது, முகம், ஏழு வகையுமுவ,இது ஏழுவகைப்பட்ட வுழவி னுற் சமைக்கப்பட்ட புழுதியுளிட்டவித் துப் பவஞ்செய்து முளைத்து முடிவது போல்வது

ஆவகை - மலையாரம், தீமுரன்பச்சை, கிழான் பச்சை, பச்சைவெட்டை, ஆரி, சந்தனம், வேர்சுக்கொடி.

ஆவாரம் - அம்பல், அரற்றல், எம்பல், தழங்கல், பிளிறல், கலித்தல், குமுறல், தமரம், கோசணை, உலம்பல், ஆகுலம், கோலாகலம்.

ஆராதனை - அருச்சனை, பத்தி, பலி, பூசனை, பூசை, வந்தனை, வழிபாடு, வேள்வி, புலி.

ஆராய்தல்-ஆய்தல், ஓர்தல், சூழல், குழ்ச்சி, தூக்கு, தெரிதல், தெளிதல், தேர்தல்.

ஆரன்மீன் - ஆரல், ஆரால்.

ஆர்த்துவாய்கொட்டல்-ஆவலங்கொட்டல்.

ஆலகாலவிடம் - காளகூடம், ஆலாலம், ஆலம்.

ஆலமரம் - ஆலம், ஆல், கான்மரம், கோளி, வடமரம், தொன்மரம், நியக்குரோதம், பழுமரம், பாலி, பூதவம், பூதம், வடம். இதன் விழுது, வீழ்.

ஆலவட்டம் - உக்கம், காலசம், தாலவிருந்தம், பீலி.

ஆலாங்கட்டி - ஆலி, கரகம், கனெபலம்.

ஆலிங்கனம் - தழுவல், விள்ளல், முயங்கல், விழைச்சல், தைவரல், புல்லல், பொருத்தல்.

ஆலீடநிலை } வலக்காலை மண்டிலித்து,
ஆலீடம் } இடக்காலை முன்னுற வைத்தல்.

ஆலை - இயந்திரம், எந்திரம்.

ஆலோசனை - சூழல், சூழ்ச்சி, தேர்தல், தெளிதல், மந்திரம், விசாரம்.

ஆவஞ்சி - இடக்கை, குடுக்கை, வினைக்கிரியைகள் இடக்கையாற் செய்யவேண்டலின் இடக்கை யென்றும், குடுக்கையாக வடைத்தலாற் குடுக்கை யென்றும் பெயர்.

ஆவஞ்சியென்னும் பெயர்க்காரணம் - (ஆ) பசுவினுடைய வஞ்சித்தோலைப்போர்த்தலால் அப்பெயர்த்து. [ஆவணி.

ஆவணிமாதம் - சிராவணமாதம், நபம்,

ஆவிசை - பகரி, ஆவசை, ஆவாசை, கோடைக்கு வாடான், காரி, செம்மலை, தலபோடகம்.

ஆவிறைச்சி-வள்ளூரம், வள்ளூரம், [குண்டு.

ஆழம் - அமுந்து, கம்பீரம், கயம், குட்டம்,

ஆழ்வாரிநிலம் - ஓதை.

ஆளத்திக்கு வருமெழுத்து - குறிலேந்தும், நெடிலேழும், மெய்களுள் தவ்வும், நவ்வும், மவ்வுமாம்.

ஆளத்திக்கு வாராவெழுத்து-த, ந, ம, அல்லாவேனை மெய்கள்.

ஆளத்தியாவது - முதற்பாடு மிடத்து, மகரவொற்றுமேல் நாதத்தை யுச்சரித்து அதனைத் தொழில்செய்யுமிடத்துக் குறிலாலும் நெடிலாலுஞ் செய்யப்படுவது.

ஆளத்திவகை-காட்டாளத்தி, நிறவாளத்தி. பண்ணாளத்தி இவற்றுள் அச்சுடனிகழ்வது காட்டாளத்தி, நிறங்கூலையாமற் பாசணையுடன் நிகழ்வது நிறவாளத்தி, பண்ணையே கருதிவைக்கப்படுவது பண்ணாளத்தி.

ஆறு-ஆபகம், ஆபகை, உந்தி, ஓலியல், ஓணம், குடிஞை, சிந்து, தடினி, தரங்கணி, திரை, தீபவதி, தீர்த்திகை, துளி, துறை, துனி, நதி, புனல், யாறு, வருபுனல், வேணி இவற்றுண் மேற்கோடுமாறு - நதம், கிழக்கோடுமாறு - நதி, நிறையாறு - பீராறு, வழாறு - வாரி, புதுப்புனல், வரவு - தலையல், நீந்துபுனல் - அகாதம், நீத்து.

ஆறுமுகத்தம்பிரான்-திருவண்ணாமலையாதீனத்தைச் சார்ந்திருந்த வித்வஜனர்களுளொருவர். இவர் சேக்கிழார்நாயனாற் செய்தருளப்பட்ட திருத்தொண்டர்பெரியபுராணம் என்னும் பன்னிரண்டாந் திருமுறைக்கும், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், மூத்தநாயனார் இரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி, என்பவற்றிற்கும் விசேடவுரை செய்தனர். அவ்வுரைகளாற் அவரது கல்வித்திறமையும்சிவபத்தியும்உலகோபகாரமும் நன்கு விளங்கும். இவர் இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்னர் இவ்வுலக வாழ்வொருவினர். சைவசித்தாந்த வுணர்ச்சியில் வல்லவர். [துருத்தி.

ஆற்றிடைக்குறை - அரங்கம், இலங்கை

ஆற்றுவரிச்செய்யுள்-காவிரியைச்சுட்டியபா.

ஆனயநாயனார்- அறுபத்து மூவர்களுள் ஒருவர். இவர் மழநாட்டின்கணுள்ள திருமங்கலமென்னுந் திருப்பதியில் திருவவதாரஞ்செய்து பசுக்களே மேய்த்து வந்தார். திருக்கொன்றை மரத்தின் அருகுசார்ந்து புல்லாங்குழலிலே பஞ்சாக்கர மந்திரத்தை யமைத்து வாசித்து வருதலே நியதமாகக் கொண்டார். அவ்விசைகேட்ட சராசர வுயிர்கள் யாவும் உள்ளமுருகிப் பரவசமடைந்து நிற்ப, சிவபெருமான்

ரேறன்றி யருள்செய்து, எந்நாளுஞ் சிவ பதத்திலிருந்து புல்லாங்குழல் வாசிக்கக் கடவாய் என்ன, நாயனார் வேய்ங்குழலி சைத்துக்கொண்டு அவருடன் கைலைக் கெழுந் தருளினார். இவர் குருபூசைத் தினம் கார்த்திகை மாதத்து அத்தநட்சத் திரமாம்.

ஆனிமாதம் - சுக்கிரம், சேட்டமாதம், ஆக்கினீயம், ஆனி, [ரை, சூதநதி.

ஆன்பொருந்தநதி - ஆனிவானி, ஆன்பொரு

ஆன்மலக்கணம் - ஆன்மாவானது பிரமப் பொருளின் பரிணம மாய்த் தோன்றி அறிவிச்சை செயல்களே யடைந்து ஏகா நேககுண குணிபாவமாய் நிற்குமென்று பரிணமவாதி கூறுவான். குணகுணித் தன்மையின்றிக் கேவலம் அறிவுமாத்தி ரையாய் நிற்குமென்று சாங்கியன் கூறுவன். உருவப் பொருளா யிருப்பதென்று பௌராணிகர் கூறுவர். அருவுருவப் பொருள் என்று கவுளகர் கூறுவர். ஆகாயம்போல அருவாய் அவிகாரியாய் நிற்குமென்று பாதஞ்சலர் பகர்வர். உயிர் அறிவில்லாத சடமாயினும் மனத்தோடுகூடிச் சித்தாயறியு மென்று வைசேடியர் விளம்புவர். சித்தும் அசித்துமா மென்று சைவரில் ஓர் சாரார் கூறுவர். கருவியை யுரூத சித்துப்பொருளாம் என்று பட்டாசாரிய மதத்தார் உரைப்பர். சரீரத்தினிடைத் தே பரமாணு அளவிற்ருய் நிற்பதெனப் பாஞ்சராத்திரிகள் விளம்புவர். உடம்பினிடத்துப் புன்னுனித் துளிபோல ஏக தேசமாய் இயத்தானத்தி னிற்ப, அவ் வுயிரினறிவு விளக்கொளி போல எவ்வி டத்தும் வியாபிக்குமென மிருதிநூலார் செப்புவர். உடம்பளவில் நிறைந்துநின்று அங்கே யறிவதா மென்று சமணர்கள் சாற்ரு நிற்பர். முதல்வனைப் போல எங் கணும் வியாபியாய் நின்று அறிவு தாம் என்று ஐக்கிய வாதிகள் அறைவர். இங் ஙனமே மற்றைய சமயிகள் யாவரும் மூர ணைக்கூறியதுபோலவே மாயாவாதியும் ஆன்மா வொன்றென்றும், அது பிரமமே யென்றும் அப் பிரமம் மாயையிஞலே வாதிக்கப்பட்டுக் கூடத்தன், ஈசுவரன், சீவன் என்னும் பெயருடன் மேகாகாயம், மேகசலப் பிரதிபிம்பா காயம் போல விளங்கும் எனவும், சீவனுக்கு ஆன்ம சப்தஞ் சொல்லா தெனவும் விளம்புவன். இவர்கள் கூற்றெல்லாம் பூர்வபக்கமாக்கி நின்ற சைவசித்தாந்தஉண்மையாவது:— ஒருவாற்ருனும் அசித்தாதலில்லாத வியாபகப் பொருள்போல ஒளபச்சிலேடிக வியாபகமாதலும் அதுபற்றி அதிருக்கும சித்தாதலும் இன்றி, அது வதுவாய் வசிப் புண்ணும் வியாபகமாம் வழக்கு உடைத்தாய் அநாதியே பசுத்துவமெனப்படும். ஆணவமலத்தின் மறைக்கப்பட்டுக் கிடக்கின்ற அழியாத இச்சாஞானக்கிரியைகளே யுடைத்தாய்த் தூல சித்தாகிக் கேவலப்பட்டு நிற்குமென்றும், அதன் பின் ஆனந்த தேவராற் கலக்குண்ட பகுதியாகிய காரண சரீரத்தைப் பொருந்திப் பொதுவகையாற் சமட்டி ரூபமாய், மாயாதத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதிகளாகிய கஞ்சுகசரீரத்தைப் பொருந்தி, வியட்டி ரூபமாய்ப் பிரிந்து தோன்றி, அந்தக் காரண முதலியவைகளைத் தமக்குள்ளடக்கி நின்ற மூக்குண சரீரங்களினிடமாக வரும் விடங்களின் வியாபரிக்கநின்று, சூக்கும தூல தேகங்களையும் பெற்று ஐந்தவத்தைப்பட்டு நிற்கும் என்பதாம்.

ஆன்மா - பசு, உயிர், புற்கலன், சீவன், சேதனன், அணு, இயமானன், ஆதன், செந்து, ஆவி, பூதன், உறவி, கூத்தன், சார்போதன்.

இ

இக - ஓரசைச்சொல்.

இகழத்தகுபொருள் - இழிதகவு, இழிவு, தண்மை, பரிபவம்.

இகழ்ச்சி - இகழ்வு, இழிவு, உவர்ப்பு, ஒல்லாமை, தாழ்ச்சி, தாழ்வு, நகவு, நகை, நிந்தை, பழி, எள்ளல், நகல்.

இகழ்ச்சிக்குறிப்பு - இளி, எல், என், ஏ, ஏளனம், சீச்சீ, சையெனல்.

இகழ்ச்சிச்சொல் - அங்கதம், இழிசொல், வசைச்சொல்.

இகழ்தல்-இகழ், எள்கல், எள்குதல், எள்ளல், நகுதல், நிந்தித்தல், பழித்தல்.

இசங்கஞ்செடி } குண்டலி, முத்தாபலம்.
இசங்கு }

இசை- இராகம், கந்தருவம், காநம், காந்தாரம், தென், நரம்பு இவற்றுண் மந்தவிசையின் பெயர்-காகுளி, மந்தாரம். சமனிசையின் பெயர்-துத்தம், மதுரம், மத்திமம். உச்சவிசையின்பெயர்:-தாரம், வல்லிசை.

இசைக்காரணம்-பல இயற்பாவுடனே நிறத் தைஇசைத்தலின்இசையெனும்பெயர்த்து.

இசைக்குப்பிறப்பிடம்-நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணுக்கு, உதடு, பல், தலை.

இசைக்குரிய எண்வகை -ஆராய்தல், குறும் போக்கு, கையூழ்,செலவு, தைவரல் பண்ணல், பரிவட்டணை, விளையாட்டு இவற்றுள் பாட நினைத்த பண்ணுக்கு இணை, கிளை, பகை, நட்பான சுரம்புகள் பெயருந்தன் மாத்திரையறிந்து வீக்குதல் பண்ணலாம். ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிதல் ஆராய்தலாம். குடச்செலவும் துள்ளற் செலவும் பாடுதல் குறும்போக்கு. வண்ணத்திற் செய்தபாடலெல்லாம் இன்பமாகப் பாடுதல் கையூழ் ஆளத்தியிலே நிரம்பப் பாடுதல் செலவு. அருசுருதி யேற்றல் தைவரல் வீக்கின சுரம்பை யக விரலாலும் புற விரலாலும் கரணஞ்செய்து தடவிப்பார்த்தல் பரிவட்டணையாம்.

இசைக்குரிய எழுத்து - ச ரி க ம ப த நி.

இசைக்குழலிசை-சட்சம்,ரிடபம்,காந்தாரம் மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம்.

இசைக்குழலிலக்கணம் - மூங்கில்,சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி, என்னுமிவற்று ளொன்றூற் செய்யப்படுவது. மூங்கிலிற் செய்வது உத்தமம். வெண்கலம் மத்திமம். ஏனையவை யதமம். மூங்கில் பொது செய்யும் வெண்கலம் வலிது மரம் எப்பொழுதும் ஒத்து நிற்கும். இக்காலத்துக் கருங்காலி செங்காலி இவற்றூற் கொள்ளப்படும். இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருக வளர்ந்து நாலுகாற்று மயங்கின நாதமில்லையா மாதலின் மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும் பிராயமு மின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டியொரு புருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே யாறவிட்டு வைத்துத் திருகுதல், பிளத்தல், போழ்ந்து படுதல் முதலிய செய்கை யறிந்து ஓரியாண்டு சென்ற பின் இலக்கணவகையான் வங்கிய மாய குழல் செய்யப்படும்.

இசைக்குழற்பிண்டியிலக்கணம்-நீளம், இருபதுவிரல், சுற்றளவு நாலரைவிரல், இது தூலையிடுமிடத்து நெல்லரிசியில் ஓர்பாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே யணைசுபண்ணி யிடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்.

இசைக்குழற்றூலையிலக்கணம் - அளவு இருபது விரல், இதிலே தூபமுகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய்விட்டு இம் முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினு மிரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலினும் எட்டுத் தூலையிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரை யென்று கழித்து நீக்கினின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ளைதப்படும். தூலைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலங் கொள்ளப்படும்.

இசைக்குழல் - ஆம்பல், வங்கியம், வாரி, வேய்ங்குழல் இவற்றுண் மூக்கால் வாசிக்குங் குழல்-முரளி, முரலி.

இசைஞானியார் } சடையநாயனூர் தேவி
இசைஞானியார் } யார். அருந்தவப்பேற்றூல் சுந்தரமூர்த்திசுவாமிகளைத் தமக்குப் புத்திரராகப் பெற்றனர். சித்திரைமாதத்துச் சித்திரை நட்சத்திரத்திலே முத்தியடைந்தனர்.

இசைநிறையசைச்சொல் - ஏ-குரை.

இசைநுணுக்கம் - இது சாரகுமாரன், அல்லது சயந்தகுமாரன் இசையறிதற் பொருட்டு அகத்திய முனிவர் மாணக்கருளொருவரால் வெண்பாவா லியற்றப்பட்ட இசைத் தமிழ்நூல்,இஃது இடைச்சங்கமிருந்த காலத்துச் செய்யப்பட்டதென்று அடியார்க்கு நல்லாருரையானும், அச் சங்கத்தினர்க்கு நூலாக விருந்ததென்று இறையனூர் அகப் பொருளுரையானுந் தெளியப்படுகின்றது.

இசைப்பாட்டு- இசை, இராகம், கந்தருவம், காந்தாரம்,காமரம், கானம்,கீதம், குழல், பண், கேயம், கோலை,பா,பாட்டு, பாணி, பாண், மனைவிழி, வரி இவற்றுள் வாச்சியத்தோடு பாடுமிசைப் பாட்டு - சங்கீதம், பாண்.

இசைப்பாமுகநிலை - கொச்சகம், மூரி.

இசைப்பாவகை - செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகு மண்டிலம், இன்னும் சுத்தம், சூளகம்,தமிழென்னுஞ்சாதியோசைகள் மூன்றினுடனுங் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகைப்படும். அவையாவன:—சிந்து, திரிபதை, சவலை, சமபாதம், விருத்தம், செந்துறை, வெண்டுறை, தேவபாணி, வண்ணம்.

இசைப்பு-அத்து,இசை, இயை, உத்தானம், சந்தி, புணர்ச்சி, இயைபு, இசைவு.

இசையாசிரியனிலக்கணம்- யாழ்ப்பாடலும் வங்கியப்பாட்டலும் இருவகைத் தாளக் கூறுபாடுகளும் மிடற்றுப்பாடலும் மந்த மாகிய சுரத்தினையுடைய தண்ணுமையும் அகம்புறம் பதினேராடல் என்னுங் கூத்துக்களிலும் வல்லனாய் இவற்றுடனே சேரச் செய்த உருக்களை இசை கொள்ளும்படியும் இசம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய், இருவகைப் பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையு மமைத்துத் தேசாந்தரங்களின் கணுள்ள பாலைகளையு மறிந்து அந்தப் பாலைகள் இசை பூணும் படியையு மறிந்து இயற்புலவனினையும், நாடகப்புலவனீதும் வரவுகளும் இவற்றுக்கடுத்த பாடல்களும் தம்மிற் சந்திப்பிக்கு மிடத்து நூல்வழக்காலே விரிக்கவும் வகுக்கவும் வல்லவனென்ப.

இஞ்சி - அல்லம், ஆத்திரதம், ஆர்த்திரகம். மருப்பு, வேர்க் கொம்பு, நறு மறுப்பு, நல்லம், பச்சைக்கொம்பு, கடுக்கிரந்தி, விருகம், ஆரத்திராசாகம், ஆசுரம், ஈயை, கடுவங்கம்.

இடக்கை - வாமகரம், ஆமந்திரிகை.

இடக்கைவாத்திய மெனுங்காரணம் - வினைக்கிரியை இடக்கையிற் செய்தலினப் பேர்.

இடக்கைவாத்தியம் - ஆமந்திரிகை.

இடங்கழிநாயனார் - கோநாட்டுக்குள்ளிட்ட குறிஞ்சி நிலமாகிய எயினர் வாழும் கொடும்பாளூரில் வாழும் சூரியவம்சக் குறுநில மன்னருள் முதல்வர். அறுபத்து மூன்று அடியாருள் ஒருவர். கனக சபையைப் பொன்னால் வேய்ந்த சோழ வமிசத்தவர். ஓரடியார் திருவமுதிற்கு நெல்லில்லாமை காரணமாகத் தம் பண்டாரத்தைக் கொள்ள வென்று கொடுத்தவர். இவரது குருபூசைத் தினம் ஐப்பசி மாதத்துக் கார்த்திகை நட்சத்திரமேயாம். இவர் கோச்சிங்கப்பல்லவன் காலத்தவர் என்பர், இவ்வமிசத்தவன் விசயாலயன் என்னும் சோழன்.

இடதுபக்கம் - அபசவ்வியம், இடப்பக்கம், இடம், வாமம், வாமபாகம்.

இடத்தையச்சொல்-யாண்டு, யாங்கு, யாங்கனம், யாண்டை.

இடபம் - ஏறு, உக்கம், நரை, நந்தி, கூளி.

இடபவிராசி-இடபம், இரல், எருது, ஏறு, குண்டை, சே, நந்தி, நரை, பசு, பாண்டில், பாறல், புல்லம், பூணி, பெற்றம், மூரி, விடை, கோ.

இடபவீதி-மீனம், மேடம், கன்னி, துலாம்.

இடம்-அகம், அயல், அரங்கு, இடை, இல், உழி, உளி, உள், உறை, கடை, கண், களம், கால், கீழ், சார், தலம், தலை, தாமம், தானம், திசை, திணை, தேம், தேயம், நிலம், பக்கம், பட்டி, பதி, பாங்கர், பாடு, பால், பின், புடை, புலம், புறம், மாடு, முகம், முதல், முன், மேல், வயின், வலம், வழி, வளாகம், வாய், வைப்பு, உழை, கோட்டம், உறையுள், அருகு, அடி, நிகாயம், ஞாங்கர், சூழல், சாதனம், சிறை, நியமம், நிசாதனம், நிலை, தாவளம், நத்தம், தாபரம், பள்ளி, பாழி, பாங்கு, மடம், மசாட்டம், மூன்னர், மதர்வு, மரு, மருங்கு, வசதி, வகை, வாசம்.

இடம்புரிச்சங்கு - இப்பியாயிரஞ்சூழ்ந்தது.

இடாகினி-சுடுகாட்டிற் பிணங்களைத் தின்னும் பேய். [சூர்மகள்.

இடாகினி - மாயவள், வஞ்சனி, வலவை,

இடி - அசனி, அனலேறு, இகளி, உரும், ஏறு, ஒலி, செல், மடங்கல், வானேறு, விண்ணேறு, வெடி.

இடுதிரை - அவிடு, கஞ்சிகை, அவளிகை, காண்டம், எழினி, கண்டம், பாசகம், கழனி, படம், படாம், அவிடி.

இடை-உக்கம், நடு, துசுப்பு, நுண்ணிடை, மத்திமம், மத்தியம், மருங்கு, மருங்குல், நடு.

இடைக்காடர் - இடைக் கழிநாடு என்னும் ஊரிற்பிறந்தவராதலால் இங்ஙாமமெய்தியதுபோலும். இவரைப் போகர் மாணாக்கர் என்பர். இவரிடம் சித்தர் சிலர் வந்து விஷ்ணுவின் தசாவதாரத்தில் வணங்கத் தக்கவை எவை யென "ஏழை, இடையன் இளிச்சவாயன்" எனக் கூறிச் செல்லச் சித்தர்கள் தெரிந்து சென்றார்கள் என்பர். (கர்ணபரம் பரை) இவர் கலாவல்லவராகி ஊசி முறி என்னும் இலக்கண நூலைச் செய்தார் என்று கூறுப. இவர் விஷ்ணுவினவதாரம் என்பர். இவர் முயற்கண்ணிற்கு நெல்லிக்கனியை உவமை கூறினர்(அகநானூறு 284) திருவள்ளுவர் குறளை யரங்கேற்றிய காலத்து "கடுக்கைத் தூஉத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" எனச்சிறப்பித்தனர், ஏனைய சரிதம் திருவினையாடற் புராணம் காண்க.

இடைசுருங்குபறை - துடி, உடுக்கை.

இடைச் சங்கப் புலவர்-அகத்தியர், தொல் காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி மோசியார், வெள்ளூர்க்காப்பியர், சிறுபாண்ட ரங்கனார், மதுரையாசிரியனார், மாறனார், துவரைக் கோமான், கீரந்தையார், வெண்டேர்ச்செழியன், மூடத்திருமாறன் முதலிய ஐம்பத்தொன் பதின்மர்.

இடைச்சொல்-அம், ஆம், அல், ஆல், உம், அந்தில், ஒரும், எம், ஏம், ஏ, தம், தில், நம், பாக்கு, பான், மன், வான், நும், அரோ, மாது, ஓ, உறை, கெழு, ஆங்கு, தெய்ய, என.

இடைப்பானிலம் - அரங்கு, நிலம், குழி.

இடையரூர்-ஆய்ப்பாடி, ஆவிரம், இடைச் சேரி, உவளகம், பல்லி, வல்லியம், வாடை முதலியன.

இடையர்-முல்லை நிலமாக்களைக் காண்க.

இடையர்வீதி-சிரேணி, சேடி, சேரி, பாடம், பாடி, வாடை, வேணி.

இடையாபரணம்-குறங்குசெறி, கவானணி, அரைப்பட்டிக்கை, மேகலை.

இண்டு-இண்டை, ஈகை, ஈங்கை, ஈண்டு, புலிதொடக்கி.

இதோபதேசம்-ஓர் வடமொழி நீதிநூல், இதனைத் தமிழிலே யாழ்ப்பாணம் நாகநாத பண்டிதர் அவர்கள் மொழிபெயர்த்துளர், நல்லுபதேசம்.

இத்திமரம்-இரத்தி, இரத்திரி, இறலி, சுவி.

இந்திரகோபம்-ஈயல், கோபம், மூதா, தம்பலம், ஈயன்மூதா, தம்பலப்பூச்சி.

இந்திரன் - அமராவதியோன், ஆயிரங்கண்ணன், சதமகன், கோபதி, போகி, சங்கிரந்தனன், பாகசாதனன், வச்சிரப்படையோன், நாகநகர்க்கு நாதன், வச்சிரபாணி, வேள்விக்கு வேந்தன், நான்மருப்பியானை யூர்தி, திருமலிசுவர்க்கன், அமரர்க்கீசன், முகிலூர்தி, அந்தரநாதன், அயிராவதபாகன், வானோர்க்கிறை, வெள்ளானை யூர்ந்தோன், மேகவாகனன், விண்முழுதாளி, வாசவன், மகவான், வானவன், கௌசிகன், ஆகண்டலன், அயிராவதன், வலாரி, புருகூதன், சக்கிரன், புரந்தரன், மருத்துவன், மருதக்கிழவன், வஜ்ரச்சிறகரிந்தோன், அரி, சசிவல்லவன், திருமலி, சுவர்க்கன், வேள்விநாயகன், புலவன், வேந்தன், புரோகிதன், சுரூசி, கரியவன், புனிதன், காண்டாவனன், மால், வெள்ளைவாரணன், தேவர்வேந்தன், பொன்னகர்ச் செல்வன், ஐந்தருநாதன், வச்சிராயுதன், காமன், மகபதி.

இந்திரன்அணிவது-சிந்தாமணி, சூளாமணி.

இந்திரன்உணவு - அமுதம், அமிழ்தம், அமிர்தம்.

இந்திரன்சாரதி - மாதலி, வருணத்மஜன்.

இந்திரன்சேமநிதி - கவநிதி.

இந்திரன்தேவி - இந்திராணி, புலோமசை, ஐந்தருச் செல்வி, சுந்தரி, அயிராணி, சசி.

இந்திரன்நகரம்-அமராவதி, தேவலோகம்.

இந்திரன்புனைவது - கற்பகமலர், கற்பகம்.

இந்திரன்மகன்-இந்திரகுமாரன், சயந்தன்.

இந்திரன்மேகம் - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என ஏழாம்.

இந்திராணி-அயிராணி, இந்திரன் மனைவி, சசி, சுந்தரி, புலோமசை, ஐந்தருச்செல்வி.

இந்திராணிகூத்து-கடையம்.

இந்திரியம் - இந்தியம், கந்தம், காரணம், பொறி, வாயில்.

இந்துப்பு - சயிந்தவம், மதிலவணம்.

இப்பிறப்பு - இம்மை, இப்பவம், இகம்.

இப்போழ்து-இன்று, இன்னே, இப்போது, இப்பொழுது.

இமயமலை-இமயம், இமாசலம், பனிமலை, பார்வதி பிறந்த மலை.

இயமம்-பொய், கொலை, களவு, காமம், பொருளாசையென்னும் இவ்வைந்தையுமடக்கியது.

இயமன் - யமன், அரி, அந்தகன், தென்றிசைக்குரியோன், சமன், சண்டன், சண்பன், தருமன், நமன், மறலி, தண்டதரன், சைமினி நகரோன், வைதரணி நதியோன், செங்கோற்கடவுள், காசவன், நடுவன், கூற்று, எருமையூர்தி, வைவச்சுதன்.

இயமானன்கணவகை-நேர் நேர் நேர், தேமாங்காய், ஓர் வெண்டளை.

இயம்புதல்-இசைத்தல், பிதற்றல், பேசல், இறுத்தல், கதை, நுவல், காதை, கிளவி, பனுவல், அறை, பறை, வாணி, கூற்று, மொழி, குயிரல், புகறல், மாற்றம், மறை, நொடி, பரவல், இசை, இயம், பேச்சு, உரை, எதிர்ப்பு, இயம்பல்.

இயற்பகைநாயனர் - அறுபத்து மூவருள் ஒருவர். சிவனடியார்க்கு விரும்பிய பொருள்கள் யாவுங் கொடுப்பர். சிவபெருமானே வஞ்சவேடங் கொண்டுவந்து தின் காதலியைத் தருகவென்ன அன்போடுங் கொடுத்தவர், இவர் குருபூசைத்தினம் மார்கழி மாதத்து வரும் உத்தர நட்சத்திரமேயாம். இவர் காவிரிப்பூம்பட்டின

த்திலே வணிகர் குலத்திற் பிருவவதாரஞ் செய்தவர்.

இணையு - இசைப்பு, புணர்ச்சி.

இரக்கச்சொல் - அக்கோ, அச்சோ, அந்தோ, அய்யோ, அன்னே, ஆஅ, ஏறே, என்னே, ஓஓ.

இரங்குதல் - இளைதல், இனைதல், குனிதல், நைதல், பரிதல், எற்றித்தல்.

இரட்டைக்கை - பிணையல், இணைக்கை

இரட்டைக்கைவகை - அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம்.

இரட்டையர் - இரு வித்துவான்கள், இவர்களில் இளையவர் அந்தகர், மூத்தவர் முடவர். இவ்விருவரும் தெய்வத் திருவருளாற் றமிழில் வல்லமைபெற்று அந்தகர் முடவரை முதலில் சுமந்து பலதல யாத்திரை செய்து வந்தவர். ஆமாத்தூர்க் கலம்பகம், ஏகாம்பர நாதருலா முதலிய சொற்சுவை பொருட்சுவைக ணிறைந்த அருமையான பாடல்களை பாடியுள்ளார்.

இரண்டாம்பக்கம் - உபயபக்கம், பத்திரை.

இரண்டாம்வேதம் - யசு, தைத்திரியம்.

இரண்டு - யுகளம், உபயம், இணை, துணை. [தி.

இரதம் - சபலம், சூதம், பாதரசம், பாரதம், பே

இரத்தக்கண்ணன் - இராவண சேனை வீரருள் ஒருவனை ஓரசுரன். [கிய ஓரசுரன்.

இரத்தபீசன் - சும்ப நிசும்பருக்கு மருமகனை

இரத்தம் - அரத்தம், ஆர்க்கம், உதிரம், எருவை, கறை, கீலாலம், குருதி, சுடுவல், செந்நீர், செம்பால், செம்புனல், சோணிதம், சோரி, தோரை, தோன்றி, நெய், நெய்த்தோர், புண்ணீர், புலானீர், சுடுவன்.

இரத்தல்-இரவு, ஏற்பு, ஏற்றல், குறைகோள், யாசித்தல், வேண்டல், வேண்டுதல்.

இரத்தினகுணம்-எட்டுப் பலவகையும் ஆறு கோடியும் தாரையும் சுத்தியும் தராசமும்.

இரத்தினக்குற்றம் - சரசமலம், கீற்று, சம்படி பிளத்தல், சூலை, கரி, விந்து, காகபாதம், மிருத்து, கோடியில்லன, கோடி முறிந்தன, தாரை, மழுங்கல் என்னும் இப் பன்னிரண்டு.

இரப்போர் - இரவலர், இரவோர், தீனர், நிரப்போர், பரிசிலாளர், மார்க்கணர், யாசகர், வறிஞர், வறியர்.

இரப்போர்கலன் - கடிஞை, கப்பரை, பாத்திரம், மண்டை, ஓடு, சிரட்டை, குடுவை.

இரப்போர்க்கீயுமிடைவள்ளல் - அந்திமான், சிசுபாலன், அக்குரன், வக்கிரன், சந்திமான், கன்னன், சந்தன்.

இராகப்புள் - மிதுனம், கின்னரம்.

இராகு - கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி, கறுப்பு, கோமேதகம்.

இராகுகாலம் - சுபகருமங்கள் செய்யத் தகாத காலம். [பலம் வருங்காலம்.

இராகுதசை - இராகுவின் அனுபவ பலா

இராக்கதர் - அரக்கர், இடும்பர், இராட்சதர், சாலகடங்கடர், நிருதர், பிசிதாசனர், யாது, யாதானவர், வானோர்மாற்றலர்.

இராசதகுணவகை - தானம், தவம், தமம், பேணல், ஞானம், கல்வி, நலன், கேள்வி.

இராசதானி-புரம், புரி, நகரம், பட்டணம்.

இராசதேவிமனை - அந்தப்புரம், கந்தவாசம்.

இராசப்பகவிராயர் - (1) இவர் திரிகூடராசப்பகவிராயர் எனவும் பெயர் பெறுவர். திருநெல்வேலிக்குற்றாலத்தில் வேளாண் மாபிற் பிறந்தவர். இவர் இயற்றிய நூல்கள் திருக்குற்றாலப் புராணம், திருக்குற்றாலக் குறவஞ்சி, குற்றாலமாலை, குற்றாலச் சிலேடை வெண்பா, குற்றாலயமகவந்தாதி, குற்றாலவுலா, குற்றாலக் கோவை, குற்றால வெண்பா அந்தாதி முதலியன. குறவஞ்சி பாடியதால் களிப்படைந்த அரசன் இவர்க்குக் கொடுத்த இடம் குறவஞ்சி மேடு என்று இன்றும் வழங்குகின்றது. (2) இவர் நடு நாட்டுத் திருவெண்ணெய் நல்லூரினர். திருநாவலூர்ப் புராணம் பாடியவருமிவரே.

இராசமனை-அரமனை, குலம், கோயில், சாலை, நகரம், பவனம், மந்திரம், மாலை, மாளிகை.

இராசா - அண்ணல், அதிபதி, அதிபன், அயன்றேரூன், வந்தோன், அரசன், ஆண்டகை, இறை, இறைவன், இனன், எந்தல், ஓங்கல், காரணன், காவலன், குரிசில், கோ, கொற்றவன், கோமான், கோன், சக்கிரி, தராபதி, தலைவன், தோன்றல், நரபதி, நிருபன், பதி, பார்த்திவன், புரவலன், பூபதி, பூபாலன், பெருந்தகை, பெருமகன், பெருமான், பொருநன், மண்டலீகன், மன்னவன், மன்னன், மீளி, முதல்வன், வாகுசன், வேந்தன், இவற்றுண் மற்றொருவரைப் பணியா தலைகாள்வோன் பெயர்:—சக்கிரவர்த்தி, சார்வபௌமன், மண்டலேசுவரன். குறுநில மன்னர் பெயர் - அரட்டர், குறும்பர், புரோசர், வேளிர், சாளுவர் பெயர்-சளு

க்கு வேந்தர், வேல்புல வரசர்.

இராசாவாகணம்-கஞ்சிகை,மணிக்காற்பள்ளி

இராசிகளின்பொது - இல், ஓரை, பவனம்.

இராசியின்பெயர் - மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம்,கும்பம்,மீனம்.

இராசிவீதி - மேடவீதி, இடபவீதி, மிதுன வீதி. இவற்றுள் மேடவீதியாவது-இடபம், சிங்கம், மிதுனம், கர்க்கடகம். இடப வீதியாவது—மீனம், மேடம், கன்னி, துலாம். மிதுனவீதியாவது—தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம் என்பனவாம்.

இராத்திரி - அல், அல்கல், அல்லி, இரசனி இரவு, இரா,எல்லி,எமம், கங்குல், திநாந்தகம், திதீ, நத்தம், நிசா, நிசி, மாலை, யாமம்,யாமினி,விபாவரி,மூதலியனவாம்.

இராமகவிராயர் - சென்னைக் கடுத்த பொன்னேரியிற் பிறந்தவர். திருவாய்ப்பாடிப் புராணம், சாரப்பிரபந்தம், என்னுமிரண்டனையுஞ் செய்தவர், பிரம்பூர் அனந்தரங்கனைப் பாடிப் பரிசுபெற்றவர்.

இராமசுவாமிஐயர் - வேத வேதாந்த கணித சாத்திரங்களில் வல்லவர். யாழ்ப்பாணத்திலே வட்டுக்கோட்டையிற் பிறந்தவர். நாடகத் தமிழில் நன்கு பழகியவர்.

இராமன் - தசரதபுத்திரன், விட்டுணுவின் அவதாரமென்ப. சீதையின் நிறைமீட்டு இராவணதியரைச் சங்கரித்தவர்.

இராமாநுசன் - வைணவ சாரியருள் ஒருவர். வியாச சூத்திரத்திற்குப் பாடியஞ் செய்தாருள் ஒருவர். உடையவர், எம்பெருமானார், வேதாந்தசாரியர் எனவும் பெயர் பெறுவர்.

இராமாயணம் - இதிகாசத்து ளொன்று; இராமனது சரித்திரங்களையும் பிறவற்றையும் உணர்த்துவது. இது பாலராமாயணம், முல்ல ராமாயணம், வால்மீகி ராமாயணம், அத்தியாத்ம ராமாயணம், கம்பராமாயணம், சம்புராமாயணம் எனப் பலவகைத்து.

இரிதல் - ஓடல், உடைதல், கெடுதல், நீளல், பாறல், நிமிர்தல் முதலியனவாம்.

இருடிகள் - முனிவர், மாதவர், இலிங்கிகள், முனைவர், படிவர், உறுவர், பண்ணவர், ஐயர், அறவோர், தபோதனர், அறிஞர், அந்தணர், துறவோர், கடிந்தோர், மேனியர், யோகியர், கோபங்காய்ந்தோர், நீத்தோர், மெய்யர், மோசனியர். [றை.

இருதுறையின்வகை - செந்துறை, வெண்டு

இருத்தல்விகற்பம் - யானை, தேர், புரவி, பூனை முதலியன இவை திரிதரவுடைய பகுதியவாம். பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிபுடம், மண்டிலம், ஏக பாதம். இவை திரிதரவில்லாத பகுதியனவாம்.

இருந்தையூர்க்கருங்கோழிமோசியார்- இவர் இடைச் சங்கப் புலவர்களு ளொருவர்.

இருபத்தைந்துதத்துவம்-பூதம் (5)ஞானேந்திரியம் (5) கன்மேந்திரியம் (5) புலன் (5) அந்தக்கரணம் (4) ஆன்மா (1).

இருப்புக்காந்தம் - சும்பகம், இரும்புள் வாங்குஞ் சலாகை. [குற்றுங்கோல், தாறு.

இருப்புமுள் - யானை அல்லது குதிரையைக்

இருப்புலக்கை - இரும்பு உலக்கை,முசலம்.

இருப்பை - மதுகம், குலிகல், மதூகம்.

இருமல்-ஐ,கூயம்,[கருந்தாது,கரும்பொன்.

இரும்பு - அகி, அயம், அயில், தருங்கொல்,

இரும்புள்வாங்குஞ்சலாகை - சும்பகம், ஊசிக் காந்தம். [அகங்கம்.

இருவாட்சி - அனங்கம், கருமுகை, மயிலை,

இருவேலி - மூலகந்தம், வேரி, பீதகம்.

இருள் - அந்தகாரம், அந்தரம், அல், கங்குல், கச்சளம், கருவரி, கருள், கார், சருவரி, தமம், திமிரம், துணங்கறல், துவாந்தம், நத்தம், நீசி, நீலம், மங்குல்.

இரேவதிநாள் - இரவிநாள், கடைநாள், கலம், குலம், சூலம், தொழு, தோணி, நாவாய், பஃறி, புருடநாள், பெருநாள், கடைமீன்.

இலக்கியப்பொருட்டொடர்-நிலைச் செய்யுட் கூறுபாடு,அத்தியாயம், இலம்பகம், காண்டம், சருக்கம், படலம், பரிச்சேதம். இவற்றுள், வேதநூல் விரிக்கும் இலக்கியத்திற்கும், முனிவருரைத்த இலக்கியத்திற்குங் கூறுபாடு - அத்தியாயம் தொடுத்த பொருண் முடிக்குங் கூறுபாடு - இலம்பகம் என்று கூறுப.

இலக்குமணன்-இராமன் தம்பி,இலக்குமன்; இலக்குவன், இளையவன்.

இலக்குமி - அரிப்பிரியை, ஆக்கம், இந்திரை, இரமை, இளையாள், உலகமாதா, மலர் மகள், மாறிருமார்பினள், கமலை, கோகனகை, சீதேவி, செய்யாள், செல்வி, திரு, திருமகள், நளினி, பதுமாசனி, பதுமாலயை, பதுமை, பார்க்கவி, பாற்கடற் பிறந்தாள், பின்னை, பொருட் செல்வி, பொறி, பொன், மா,முண்டகாசனை,

விமலை, கடற் பிறந்த கோதை, அலர்மகள், தாக்கணங்கு.

இலக்குமிகூத்து - பரவை.

இலதைக்கை-அஃதாவது நடுவிரலுஞ் சுட்டுவிரலுங்கூடி நிமிரப் பெருவிரலவற்றின் கீழ்வரைசேர, ஒழிந்த இரண்டு விரலும், வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது.

இலந்தை - இரத்தி, குலவலி, குல்லரி, கோலி, கோற்கொடி, வதரி, குவலி.

இலந்தைக்கனி-குலம்,கொண்டை,கோலம்

இலவங்கம் - வராலம், வராலகம்.

இலவமரம் - சான்மலி, பூரணி, பொங்கர்.

இலவம்பஞ்சு - இலவமரத்தின் பஞ்சு, பூளை.

இலாபம் - அதிகம், ஆக்கம், ஆயம், ஊதியம், சலபம், நந்தல், நயன், பசை, பயம், பயன், பலன், பலித்தல், பேறு, பொலிசை. அன்றியுந் தொழிலிலாபம்-உருத்திதம், விருத்தி.

இலை - அடை,சதம், சதனம்,தகடு, தண்ணடை, தமாலம், தலம், தழை, தளம் பத்திரம், பத்திரி, பலாசம், பலாசு, பண்ணம், உலவை, பச்சிலை, ஓலை, சாகை, பாசாடை, பாசிலை, முறி, அன்றியும், எடுபனைக்கும் பூவிதழுக்கு முரித்து. மடல்-ஈந்தில், கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழைக்கு முரித்து, அன்றியும், தோடு-தாழை, தெங்கு, பனை, பூவிதழ்க்கு முரித்து என்பர். [னம்.

இலைக்கறி - அடகு, அடை, சாகம், பன்

இலைதுகர்வில்லங்குணு - குளகு.

இலைமுதலியவற்றூல் எழுமொலி - மருமராஞ்சம், மருமாம்.

இலைமூக்கரிகத்தி - குளிர், கணிச்சி.

இல்லறத்தின்றுறை - தன்னே யொழிந்த மூவர்க்கும், துறந்தார்க்கும், தூவாதவர்க்கும், இறந்தார்க்கும், தேவர்க்கும், முனிவர்க்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், பிறர்க்குந் துணையாதலும், வேள்வி செய்தலும், ஒழுக்கங்காத்தல் முதலியனவுமாம்.

இல்லெலி - ஆகு. [இலண், ஈங்கு; ஈண்டு.

இவ்விடம் - இங்கு, இங்ஙனம், இப்பர்,

இழிகட்பெருங்கண்ணனூர் - கடைச் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின் மருள் ஒருவர். திருவள்ளுவமாலையில் இவர் இயற்றிய பாடலொன்று மிருக்கின்றது.

இழிந்தோறும்வழி - பதிகர்.

இழிப்பினவிநயம் - இடுங்கிய கண்ணும், வெளிப்பட்டபற்களும்,ஒடுங்கியமுகமும், நடவாக்காலும், சோர்ந்தவுடலும்,சொல் நிரம்பாமையும் உடைத்தாதல்.

இழிவு - அவமானம், இழிதகவு, இளிவு, தாழ்வு, பரிபவம்.

இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் என்னும் பஞ்சகாவியங்களுள் ஒன்றைச்செய்தவர். இவர் சேரநாட்டில் வஞ்சி நகரத்திருந்து அரசுசெய்த சேரலாத னென்னும் அரசனுடைய புத்திரர். சேரன் செங்குட்டுவனுடைய தம்பி. இதனுல் இவர் முதலில்இளங்கோவென்று சொல்லப்பட்டுப் பின்பு துறவுபூண்டமையால் இளங்கோவடிகளென்று பெயர் பெற்றனர். பதிவிரதமுடைய மகளிரைத் துதித்தலேயுட் கொண்டும் இக்கதைமுகமாகச் சிலதருமங்களே உலகத்தார்க்குத் தெரிவிக்கவேண்டுமென்பதைக் கடைப்பிடித்துமே சிலப்பதிகாரஞ் செய்தனர். இவர் மலைநாட்டினராதலால் அந்நாட்டுச் சொற்கள் பலவற்றை நுழைத்திருக்கின்றனர். இவர்சமயம் சைவசமயமென்று கொள்ளற்றுணிபு. சைனமதக் கொள்கையை அதிகங்கூறி யிருத்தலால் ஆஃதென்றுங் கூறுவர், இவர்காலங் கடைச்சங்கப்புலவர் காலமே. அஃதாவது இலங்கைச் சரித்திரத்திற் கூறிய படி முதலாங்கயவாகுவின் காலமேயாம். இவர்க்கு இளங்கோவேந்தன், சேரமுனி எனவும் பெயர்.

இளஞ்சூல் - மீட்டை, மீட்டை.

இளஞ்சென்னி- வெற்றிவேற்செழியன் என்றும் பெயர். இவன் பாண்டிய அரசர்களுள் ஒருவன்.

இளந்திரயன் - தொண்டைமான், தொண்டைமானிளந்திரையன், ஆதொண்டைச் சக்கிரவர்த்தி யெனவும் பெயர் பெறுவன். நாக பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தாற் சென்று பாதல லோகமடைந்து நாககன்னியைப் புணர்ந்து பிரியுங்காலத்து, மகவை யென்செய்வதென்று கன்னி கேட்டாளாகச் சோழன் நோக்கி, மாதே! ஆண் குழந்தை பிறக்கும். அதனைத் தொண்டைச் செடியாற் கட்டிக் கடற்கணெறியக்கடவாய். அது நம்மூர் வந்துசேரும். அப்போது எம் மரபினே யதற்களிப்ப மென்று சென்றனன். நாகமங்கை யங்ஙனமே குழந்தை பிறந்தவுடன் கணவன் கட்டளைப்படி தொண்டைச் செடியாற்கட்டிக் கடலகத்

திட்டாள். திரைகொண்டுவந்து கரை யிற் சேர்த்தது. குழந்தையை யெடுத்து அரசனிடங் கொண்டு சென்றுகாட்ட, அரசனதை வாங்கி, அளவிலா ஆனந்தங் கொண்டு திரைதருதலால் திரையன் எனவும் தொண்டைச் செடியாற் கட்டி னமையின் தொண்டைமான், தொண்டைச் சக்கரவர்த்தி யெனவும் பெயர் வைத்து அரசாள வைத்தனன் என்று பத்துப் பாட்டுட் கூறப்பட்டது.

இளமரம் - கன்று, குழவி, பிள்ளை, போதகம், போத்து.

இளமை - இளை, எழில், கயம், கன்னி, குருகு, குருளை, குழவி,குழவு,கொம்மை, கோமளம், சேடு, சேய், தருணம், நவ்வி, நாகு, புருவை, போதகம், மஞ்சு, மண்ணை, மழவு, முருகு, விளரி, விளர், வெண்மை.

இளமைநாயனார்குளம் - சிதம்பரத்தின்க ணுள்ள ஓர் தீர்த்தம். திருநீலகண்ட நா யனாரும் அவர் தேவியாருஞ் சிவனடியா ரின் றிருவோடு காரணமாகச் சத்தியஞ் செய்தற்கு இதன் கண் முழுகியெழுந்த போது இளமைப் பருவமடைந்து முத்தி பெற்றாராகலின் இளமை நாயனார் குள மெனப்பட்டது. பெரிய புராணத்திற் காண்க.

இளம்புல் - சட்பம், பதம்.

இளம்பூரணர் - தொல்காப்பியத்திற்கு உரை செய்தாருள் இவரும் ஒருவர்,இவர் அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் என்பவர்க்கு முற்பட்டவர். தொல்காப்பி யத்திற்கு இவரே முதன் முதல் உரை யெழுதிய காரணத்தினால், இவர்க்கு "உரையாசிரியர்" என்னும் பொதுப் பெயர் இவர்க்குரிய சிறப்புப் பெயராக வழங்கப்பட்டது. இனி நன்னூலியற்றிய பவணந்தி முனிவர், தம் சூத்திரங்கள் சிலவற்றை, இளம் பூரணர் உரைக்கருத் தைத் தழுவியே இயற்றிப் போந்தமை யால், பவணந்தியாருக்கு மூத்தியவர் இவரென்று ஊகிக்க இடந் தருகிறது.

இளவேட்டனார் - கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின் மருள் ஒருவர். திரு வள்ளுவர் குறட்குச் சிறப்புக் கவி கூறி யுள்ளார். "மதுரையறுவை வாணிகர் இளவேட்டனார்" எனக் கூறுவதனால் இவர் ஊர் மதுரை யெனவும், குலம் ஆடை விற்கும் வணிக குலமெனவும் கொள்ளக் கிடக்கின்றது.

இளவேனில் - மது, மாதவம், வசந்தம்.

இளைஞன் - ஆடவன், இளவல், உவா, காளை, சேடன், மைந்தன், மழவன், குமரன், சேய், மழவு, முருகன், யுவா.

இழைத்தல் - எய்த்தல், கிரிசம், சிக்கல், சிங்கல், ஞொள்கல், தகைதல், தேம்பல், தேய்தல், நாம்பல், பழங்கண், மெலிதல்.

இளைஞனூர்வேலூர் - தொண்டை மண்ட லத்திலே செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஓர் சுப்பிரமணிய ஸ்தலம்.

இளையான்குடிமாறநாயனார் - அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவர். வே ளாண்குடியிலே திருவவதாரஞ் செய்த இவர் வறுமையால் உணவின்றி மிகப் பசித்திருந்தும் இருளோடுகூடிய மழைக் காலத்துச் சிவபெருமான் அடியார் வே டங்கொண்டு எழுந்தருள, வயலையுழுது விதைத்த சம்பா னென் முளைகளே மனை யலக்கால் அமுதாக்கிக் குழி நிரம்பாத புன்செய்ப் பயிரின் கீரையாலாகிய கறி யமுதைச் சமைப்பித்துக் கொடுத்துச் சிவபெருமான் திருவருளான் முத்தி யடைந்தனர். முத்தியடைந்த தினம் ஆவணி மாதத்து மகநட்சத்திரமேயாம்.

இறகடிமுள் } முருந்து, முருந்தம்.
இறகினடிமுள் }

இறகு - இறை, குரல், கூறல், கூழை, சதம், சதனம், சிறகு, சிறை, செட்டை, தூவி, தோகை, பக்கம், பத்திரம், பர்ணம், பறை, பிச்சம், பிஞ்சம், வாசம், கூரல். [இழிதல்.

இறக்குதல் - அவசோகணம், அவாவுதல்,

இறங்குதல் - அவா, அவதாரம், சுதம்.

இறலி - இத்தி மரம், இரத்தி மரம்.

இறுமாப்பு - செம்மாப்பு, எக்கழுத்தம்.

இறை - பொறி, வரை, பிறங்கு, வரி.

இறைகூடை - அம்பி, இடார், இறைவை, காராம்பி, கிழார், பிழார், புட்டில், பூட்டை, பட்டை அன்றியும், நீரிறைக்கு மரப்பத்தல் - இறைவை.

இறைச்சி - சதை, துன்னு, மாமிசம், மேதை, வள்ளரம், பலலம், ஊழ்த்தல், தசை, தடி, ஊன், பிசிதம், வீடக்கு, தூ, பூழ்தி. இவற்றுளாவினிறைச்சி - வள்ளரம், சூட்டிறைச்சி - சூசியம், படித்திரம்.

இறையனாரகப்பொருள் -அன்பினைந்திணை, களவியல், அகப்பொருளெனவும் பெயர் பெறும். இஃது "அன்பினைந்திணை",

முதலாய அறுபது சூத்திரங்களை யுடைத்து. இறைவனாலருளப்பட்டு அவன் திரு நாமத்துடன் விளங்கும் அகப்பொருளால் இதுவன்றி வேறொன்றுமின்று. இந்நூற்குக் கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரும் உரை செய்தார்கள். அவற்றுள் மதுரைக்கணக்காயன் மகனார் நக்கீரனார் செய்தவுரையே உருத்திரசன்மர் ஓரிடத்துமாத்திரம் கண்ணீர் சொரிந்தும் மயிர்சிலிர்த்தும், பரணனாருரை கேட்டகாலத்து சிலசிலவிடங்கள் தோறும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தும் மயிர்சிலிர்த்தும், நக்கீரனாருரை கேட்ட காலத்து ஒவ்வோர் பதந்தோறும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தும் மயிர்சிலிர்த்தும் வியப்புக் காட்டினர். நக்கீரர் தமது உரையைக் கீரவி கொற்றனார்க்கும், அவர் தேனூர்க்கிழார்க்கும், அவர் படியங்கொற்றனார்க்கும், அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கும், அவர் மணலூர் ஆசிரியர், புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கும், அவர் சொல்லூர் ஆசிரியர் ஆண்டைப்பெருங் குமாரனார்க்கும், அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கும், அவர் மாதளவனார் இளநாகனார்க்கும், அவர் முசிறி ஆசிரியர் நீலகண்டனார்க்கும் முறையே உரைத்தனர் என்ப.

இறையனார் - பாண்டியனும் கடைச்சங்கப் புலவர்களும் பொருளால் இல்லாது வருந்த, ஆலவாயடிகளே 'அன்பினைந்திணை' என்னும் அகப்பொருளிலக்கணத்தை யருளிச்செய்தனர்.

இனிமை - அமிழ்து, ஆனு, இமிழ், இரதம், இழுமெனல், சாரம், சுவை, சேறு, தமிழ், நீ, நீம், மதுரம், அமுது, தேம்.

இனியவைநாற்பது-பதினெண் கீழ்க்கணக்கினுளொன்று, இனியனவாகிய விஷயங்களே நாற்பது பாக்களாற் றெரிவிக்கும் ஓர் சிறந்த நூலாகு மென்பர் இந் நூல்- பூதஞ்சேந்தனார் என்பவராற் செய்யப்பட்டது. கடைச்சங்கத்திலரங்கேறப்பட்டதென்ப. முழுவதும் இன்னிசை வெண்பாவாற் செய்யப்பட்டுச் சொற் சுவை பொருட்சுவைகளையுடைத்து.

இனியென்பது - ஞாங்கர், புறம், மற்று, முன், மேல், வருங்காலம்.

இன்சுவை- நீம், இரதம்.

இன்பமொடுபுணர்ந்தோனவிநயம் - துன்ப நீங்கப்பெற்றுத் துவர்த்த யாக்கையும் பெரு மகிழ்வுடைமையும் செலவு மிகுதியுடைமையும் அழகுபொதிந்த சொற் பொலிவுடைமையும், அழகுடனே மலர் சூடியிருத்தலும் பருத்த புயமுடைமையுங் கொண்டுளது.

இன்பம் - ஏமம், கடி, களிப்பு, சுகம், சேமம், தெளிவு, நகை, நயன், நலன், நன்னிலை, பரிவு, மகிழ்ச்சி, அன்றியும், பேரின்பம்- ஆனந்தம், ஆநந்தம், நயம், அகமலர்ச்சி.

இன்னாநாற்பது- இதுவும் பதினெண்கீழ்க்கணக்கினுளொன்று. இனியவையல்லாத விஷயங்களே நாற்பதுபாக்களாற் றெரிவிக்கும் நூல். கபிலதேவராற் செய்யப்பட்டது. கடைச்சங்கத்தார் காலத்திற் செய்யப்பட்டது. முழுவதும் இன்னிசை வெண்பாவால் இயற்றப்பட்டுளது.

இன்னிசையளபெடை - அளபெடை யிருபத்தொன்றனுளொன்று. பாட்டிலோசை குறையாதாயினும் அளபெடுக்கிற் சந்தவின்ப முடைத்தாயின் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு ஒலிப்பதாம். "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றூங்கே-யெடுப்பதூஉ மெல்லா மழை" என்னுந் திருவள்ளுவநாயனார் திருக்குறளானறிக.

இன்னிசைவெண்பா-வெண்பாவகை; அஃது: முதன்மூன்றடியும் நான்கு சீர்பெற்றும், இறுதியடியொன்று முச்சீர்பெற்றுந் தனிச்சொல்லின்றி வருவதாம். "வேதசிவாகமத்தான் மெச்சமய மென்று தெளி- போதசிவ சித்தாந்த பூடண வொண்மைக்கருளு - மீரா யிரமருப்பி யேறிவீளை யாட்டருளு மோரா யிரமருப்பியோர்" என்னுஞ் சைவ பூஷண சந்திரிகைச் செய்யுளானறிக.

ஈ

ஈகை - அளி, இடுகை, உதவி, உதாரம், உபகாரம், கடப்பாடு, கவிகை, கொடை, தத்தம், தானம், தியாகம், பிரதம், புரவு, வண்மை, வாகை, விதரணம், வேளாண்மை, வேள்வி, அன்றியும் வரையாக்கொடையின் பெயர்-கொடை, மடம்.

ஈகையாளன் - உபகாரி, கொடையாளன், தனதன், தாதா, தியாதி, புரவலன், உதானியன், வேளாளன் வேள்வியாளன், ஈகையன், அன்றியும் வரையாது கொடுப்போன் பெயர்-ஔதாரியன், வள்ளல், வள்ளியோன்.

ஈசல் - சிதல் ஈயல்.

ஈசன்செயல் - படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல்.

ஈசன்நவபேதம் - சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் என்பனவாம்.

ஈசன்வில் - பிரணகம், மகாமேரு.

ஈசானியமடம் - திருநெல்வேலியிலுள்ள திருவாவடுதுறை ஆதீன மடாலயம், சிதம்பரத்தின் கணுள்ள தருமபுரஆதீனத்தார் மடம்.

ஈடணத்திரயம் - உலகவீடணை, தனவீடணை, தாரவீடணை, யென்பனவாம்.

ஈட்டி - இட்டி, கழுக்கடை, கழுமுள், குந்தம், சலாகை, சவளம்.

ஈதல் - அருளல், அளித்தல், இகுத்தல், இகைத்தல், இடுதல், உதவல், கொடுத்தல், தருதல், நல்கல், நீட்டல், நேர்தல், பகுத்தல், பணித்தல், புரத்தல், பொழிதல், வழங்கல்.

ஈயம் - சீருள், தகரம், வங்கம், சீசம்.

ஈரப்பலா - ஆசினி, பலாசம்.

ஈரல் - ஈருள், குண்டி., சுருள்.

ஈரெண்வகைக்கூலம் - நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை.

ஈர்வாள் - அரி, இரம்பம், கரபத்திரம், வேதினம், அரிவாள்.

ஈழதேசம்-சிங்களம், பொன்னகரம், இலங்கை, சிம்மளம், சிங்களத்வீபம்.

ஈனம் - அடம், இகழ்ச்சி, இரதம், இழிவு, இழுக்கு, கீழ், கீழ்மை, குறைவு, தாழ்வு, நிரப்பு, புன்மை, பொல்லாங்கு, மறவி.

ஈன்றணிமை - புனிறு, ஈணு மணிமை.

ஈன்றபசு - வற்சலை, வற்சலம்.

ஈன்றவள் - அவ்வை, அம்மனை, அம்மை, அன்னை, ஆயி, தம்மனை, தாய், பயந்தாள், மோய்.

ஈன்றவன் - அச்சன், அத்தன், அப்பன், அம்மான், ஐயன், தந்தை, தாதை, பிதா.

உ

உகமுடிவு - ஊழி, மடங்கல்.

உகலை - தலைப்பாட்டுக்கூத்தியர்.

உகிர்நிலைப்பாசாசக்கை - சுட்டுவிரலும் பெருவிரலும் நகநுனியைக் கௌவி நிற்பது.

உக்காரி - அஃகுல்லி, பிட்டு.

உக்கிரப்பெருவழுதி - சோமசுந்தரபாண்டிய குமாரர். இவரைக் குமாரக்கடவுளது திருவவதாரமென்ப. "கலியுணர்புலமையிற் றலைமையோனுஞ் - விதிமுறைவழாது முதுநிலம் புரக்கும் - பெருந்தகையுக்கிரப் பெருவழுதியென்னுந்-தன்னிகரில்லாமன்னவர்பெருமான்" எனச் சிறப்பித்துக்கூறப்பட்டவர்சங்கப்புலவராயிருந்து தமிழாராய்ந்தாருள் ஒருவர். இவர்வரலாறுகளைத் திருவிளையாடற் புராணத்திற் காண்க.

உக்கிரம்-கீதவடிவுகள் மூன்றனுளொன்று.

உசிலமரம்
உசிலம்
உசிலை
உசில்
} சிக்கிரி மரம், துரிஞ்சில்.

உச்சாகம்-உள்ளத்தின் மிகுதியைக்காண்க.

உச்சி - குடுமி, சிகரம், சிக்கம், சுடிகை, சூழி, நவிரம், நனந்தலை.

உச்சிப்பொழுதில் வந்தோனவிநயம்-சொரியாநின்ற பெருந்துன்பில் வருந்தவன் உடம்பு எரிவுற்றுச் சிவந்த கண்ணும் அயர்ந்த நோக்கமு முற்று இருப்பதாம்.

உஞ்சல் - ஊசல், விண்டாண்டு.

உஞ்சை-உச்சயினிமாநகரம், அவந்திதேசத்துள்ளது.

உடலவர்த்தனை - மொய்சாய்தல், இடைநெரித்தல், கழித்தல், அணைத்தல், தூக்குதல், அசைத்தல், பற்றல், விரித்தல், குவித்தல், என்பன. "மெய்சாய் விடைநெரிவு மேற்கழிவோ டாங்கணைத்தல்-கைதூக் கசைத்தல் கலைபற்றல்-கைகள், விரித்தல் குவித்தலிவை சிங்களமா மென்று - தெரித்தனர் தண்டமிழோர் தேர்ந்து" என்றதனுணர்க.

உடல் - அங்கம், அவயவம், ஆகம், ஆதாரம், உடம்பு, உயிர்நிலை, உரு, உறுப்பு, கடம், களேபரம், காத்திரம், காயம், குரம்பை, சடம், சட்டகம், சரீரம், தனு, தாவரம், விம்பிதம், தொக்கு, தாபரம்,

உருவம், களேவரம், துவக்கு, தேகம், தேயம், படிவம், பிண்டம், புகல், புணர்வு, புகை, புரம், புற்கலம், பூட்சி, பூதியம், மூர்த்தம், மெய், யாக்கை, விக்கிரகம், வியம், அவ்வுருவத்தின் பெயர், சட்டகம், படிவம், மேனி, வடிவம், சடலம், புணர்ப்பு, பூதிகம்.

உடற்குறை - கவந்தம், மட்டை, முண்டம், பூபம், அங்கஈனம்.

உடற்றழும்பு - அங்கிதம், சேர்க்கை, வசி, வடு, செதுக்கை, சுவடு, சேக்கை, கச்சை, தழும்புவகை.

உடனிகழ்ச்சியிடைச்சொல் - ஓடு, ஒடு.

உடன்படல் - இசைதல், ஒட்டல், சம்மதித்தல், நேர்தல், வலித்தல், நேரல்.

உடன்பிறந்தாள் - சகோதரி, சோதரி, பகினி, தங்கை, அக்காள்.

உடுக்கை } பறைவகையி னொன்று,
உடுக்கைப்பறை } துடி.

உடுத்தல் - இறுக்கல், ஒற்றல், சுற்றல், சுற்றுதல், தரித்தல், தற்றல்.

உடும்பு - அண்டசம், கோதா, தடி, முசலி, முசலிகை.

உடைவாள் - சுரிகை, பத்திரம், குறும்பிடி.

உட்சொல்லிலக்கணம் - நெஞ்சொடுகூறும் நீர்மைக்காக அது சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகமென நான்குவகைப் படுமென்பர்.

உட்டணம் - அழல், அனலம், உருப்பம், உருமம், கருமம், கோரம், தகம், தாபம், வெப்பம், வெம்மை, கருமை, அழனம், உஷ்ணம், சூடு.

உட்டுவா - அரி, குழல், குழாய், சுகிர், சுரை, தசிரம், தூம்பு, நாடி, நாழி, நாளம், புரை, புழை, வேணு, வேய், பொள்.

உட்பகையாறு - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், என்பன.

உணவு - அசனம், ஆகாரம், இரை, உறை, உணு, உண்டி, ஊட்டி, ஓதனம், சோறு, துப்பு, பதம், போசனம், வல்சி. அன்றியும் பேருணவின் பெயர் - பிறப்பு. சிற்றுணவின் பெயர் - அப்பவர்க்கத்தைக் காண்க.

உண்கலம் - கலம், தட்டம், தளிகை, தாலம், பாசம், பாசனம், போசன பாத்திரம்.

உண்டல் - புசித்தலைக்காண்க.

உண்டாக்கல், காண்டல், சிருட்டித்தல், தோற்றுவித்தல், நியமித்தல், நிருமித்தல், படைத்தல், பயத்தல், பாரித்தல், விதித்தல்.

உண்டாதல் - அஞ்சிதம், சுரத்தல், நந்தல், படல், பூத்தல், விளைதல், படுதல்.

உண்டிப்பொருத்தவகை-ஒகரநெடிலையுயிர்க் குற்றெழுத்து நான்கும், க ச த ந ப ம வ என்னும் மெய்யெழுத்து ஏழும், அமுதெழுத்தாகக் கூறலால் இவ்வெழுத்துக்களுளொன்றை முதலாகவுடைய முதற்சீர்க்குக் கூறியகணத்திற்குரிய நட்சத்திரத்தோடு பாடவேண்டுதல் முறையாம். இதுவுமன்றித் தலைவன் பிறந்த நாளேனும் பெயர் நாளேனும் இரண்டிலொன்று பொருந்தக்கூறிய அடியை முதலெடுத்துச் சொன்னல் அப்பாட்டுடைத் தலைவனுக்குச் செல்வம் எப்போதும் வளர்ந்து வருமெனப் புலவர் கூறுவர்.

உண்ணு - அண்ணம் உண்ணுக்கு.

உண்பன - துற்றி, தூற்றி, உண்ப.

உண்மைநெறிவிளக்கம்-சித்தாந்தசாத்திரம் பதிநான்கனு ளொன்று. ஆறு திருவிருத்தங்களை யுடையது. திருக்கடந்தை மறைஞான சம்பந்த தேசிகரது மாணக்கராகிய கொற்றவன்குடி உமாபதிதேவநாயனாற் செய்தருளப்பட்டது. தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவபோகம், சிவானந்தம், என்னுந் தசகாரியங்களையு மெடுத்து விளக்குவது. இது சாலிவாகன சகாத்தம் 1234 ஆவுத்திற் செய்யப்பட்டது.

உண்மைவிளக்கம்-சித்தாந்தசாத்திரம் பதினொன்கனு ளொன்று. சிவஞானபோதம், சிவஞானசித்தியார், என்னு முதநூல்களின், உண்மைப் பொருள்களைச் சுருக்கமாகத் தெரிவிப்பது. மெய்கண்டதேவநாயனார் மாணக்கருள் ஒருவராகிய திருவதிகை மனவாசங்கடந்த தேவநாயனாற் செய்தருளப்பட்டது. ஐம்பத்து நாலு-திருவெண்பாக்களையுடையது. இது சாலிவாகன சகாத்தம் 1177-ஆவுத்தில் இயற்றப்பட்டுள்ளது.

உதடு-இதழ், துடி, பாலிகை, முத்தம், அன்றியு மேலுதடு-ஓட்டம், கீழுதடு-அதரம்.

உதயகிரி - உதயமலை, உதயமனகிரி, சூரிய சந்திரர் தோன்றுமலை, இஃது கிழக்கின் கண்ணுள்ளது.

உதயணன்கதை - இஃது பைசாச பாடையிற் குணாட்டியரென்னும் மகா பண்டித ரொருவரால் மூற்காலத்துச் செய்யப்பட்டுள்ள பிருகத் கதையின் மொழிபெயர்ப்பாக வுள்ளது. நூலாசிரியர் பெயர் புலப்படவில்லை. சொற்சுவை பொருட்சுவைகளிலே, மிகச்சிறந்தது. உதயணன் என்னும் இராச குமாரனெருவனது சரித்திரத்தைக் கூறுவது. சிந்தாமணி முதலிய காட்பியங்களினும் இதனை மேலாகமதித்து அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு சிற்றுறுப்புக்களும் மிகப்பெரிய ஆசிரியப்பா ஒவ்வொன்றால் இயற்றப்பட்டுள்ளது. அவ்வுறுப்புக்கள் பலவமைந்து காண்டம் என்னும் பேருறுப்பு விளங்கும். அவற்றுள் முதலாவது உஞ்சைக்காண்டம் 58-பகுப்பினையும், இரண்டாவது இலாவாண காண்டம், 20-பகுப்பினையும், மூன்றாவது மகதகாண்டம் 27-பகுப்பினையும், நான்காவது வத்தவகாண்டம் 17-பகுப்பினையும், ஐந்தாவது நரவாணகாண்டம் 9-பகுப்பினையும் உடையன. இப்பொழுது கிடைத்த கையெழுத்துப் பிரதியின் முதலுங் கடையுஞ்சிதைந்து காணப்பட்டமையால் ஐந்தாவது காண்டத்திற்குமேல் இத்தனை காண்டங்களுள்ளன வென்றும், அவற்றின் சிற்றுறுப்புக்கள் இவ்வளவின வென்பதும் புலப்படவில்லை. இது கதை யெனவும் பெருங்கதை யெனவும் வழங்கும். இஃது இடைச்சங்கத்துப் புலவர்க்கே செய்யுளிலக்கியமாயிருந்ததென்றும், அவர்கள் அதனை யாராய்ந்தறிந்து கலி, குருகு, வெண்டாளி முதலிய நூல்களை யியற்றினர் எனவுங் கூறப்பட்டிருக்கின்றது. உதயணகுமாரன் கதையென்று விருத்தப்பாவினாலமைந்த தமிழ் நூலொன்றுளதெனர்களது ஆட்சியிலுள்ளது. அதனை யுரையாசிரியர் அங்கீகரிக்கவில்லை எனத் தெரிகின்றது.

உதயம் - புலரி, விடியல், வைகறை.

உதாத்தம்-வேதமோதுஞ்சந்தையிரண்டு

உதாரணம் - இதியாசம், இலக்கியங்காட்டல், காட்டு, இதிகாசம், பிசிதம், இலக்கியம், எடுத்துக்காட்டல். [கீழாக்குவது.

உதானவாயுவின்குணம்-உண்டன வற்றைக்

உதானன் - நாபியினிலேபெற்று நிற்பது.

உதைகாற்பசு - உதறுகாற்பசு, சுதை.

உத்தமதானம்-அறத்தானீட்டிய பொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக் கொள்ளெனப் பணிந்து குறையிரந்து மனமகிழ்ந்து கொடுத்தல்.

உத்தமத்தோற்பெருங்கருவி வகை - மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை.

உத்தமமானதோற்கருவி - மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா என்று சொல்லப்பட்ட இவைகளாம். இவற்றுள் மத்தளம் மத்து-ஓசைப் பெயர், இசையிடனுகிய கருவிகட் கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று. இக்கருவி பல கூத்திற்கும் உரித்தாகலானும், பாடல் எழுத்தான் உள்ளே பிறத்தலானும், முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும், இதனை நான்முழ வென்றுங் கூறுப. சல்லிகை சல்லென்ற ஓசையுடைத்தாதலாற் பெற்றபெயர். இடக்கை யென்னுங் காரணப்பெயர் முன்னுரைத்தாம், கரடிகை - கரடி கத்திலுற் போலும் ஓசையுடைத் தாதலினப் பெயருடைத்தாயது.

உத்தரட்டாதிநாள் - அறிவனுள், நீபம், பிற் கொழுங்கோல், மன்னன், முரசு.

உத்தரநாள் } கடையெழுஞ்சனி, கதிர்
உத்தரம் } நாள், செங்கதிர்நாள், செங்கதிர் பிறந்தநாள், பங்குனி, மானேறு, உத்திரம்.

உத்தரன் - கனகவிசயர்க்குத் துணையாய ஓர் அரசன் பெயர்.

உத்தராடநாள் } ஆடி, ஆனி, கடைக்குளம்,
உத்தராடம் } விசுவநாள், விச்சுவநாள்,
உத்திராடம் } உத்திராசாடம், உத்தராஷாடம்.

உத்தரீயம்-உத்தராசங்கம், ஏகாசம், அன்றியு மேற்போர்வை, மீக்கோள்.

உபகரணம்-ஆயுதம், ஏது, காரணம், துணைக்காரணம், சாமக்கிரி, துப்பு.

உபகாரம்-நலம், நன்மை, வேளாண்மை.

உபசாரம் - சன்மானம், சம்மானம், நயம், முகமன், உபசரணை, உபசரிதம், இன்னயம், உபசரிப்பு, கௌரவித்தல்.

உபபுராணம் - நாரசிங்கம், சனற்குமாரம் நாரதீயம், சிவதருமம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாம்பேசம், பராசரம், பார்க்கவம், காபிலம், மானவம், வாசிட்டலிங்கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம் எனப் பதினெட்டு.

உருவம், களேவரம், தூவக்கு, தேகம், தேயம், படிவம், பிண்டம், புகல், புணர்வு, புதை, புரம், புற்கலம், பூட்சி, பூதியம், மூர்த்தம், மெய், யாக்கை, விக்கிரகம், வியம், அவ்வுருவத்தின் பெயர், சட்டகம், படிவம், மேனி, வடிவம், சடலம், புணர்ப்பு, பூதிகம்.

உடற்குறை - கவந்தம், மட்டை, முண்டம், யூபம், அங்கஈனம்.

உடற்றழும்பு - அங்கிதம், சேர்க்கை, வசி, வடு, செதுக்கை, சுவடு, சேக்கை, கச்சை, தழும்புவகை.

உடனிகழ்ச்சியிடைச்சொல் - ஒடு, ஓடு.

உடன்படல் - இசைதல், ஒட்டல், சம்மதித்தல், நேர்தல், வலித்தல், நேரல்.

உடன்பிறந்தாள் - சகோதரி, சோதரி, பகினி, தங்கை, அக்காள்.

உடுக்கை } பறைவகையி னொன்று,
உடுக்கைப்பறை } துடி.

உடுத்தல் - இறுக்கல், ஒற்றல், சுற்றல், சுற்றுதல், தரித்தல், தற்றல்.

உடும்பு - அண்டசம், கோதா, தடி, முசலி, முசலிகை.

உடைவாள் - சுரிகை, பத்திரம், குறும்பிடி.

உட்சொல்லிலக்கணம் - நெஞ்சொடுகூறும் நீர்மைக்காக அது சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகமென நான்குவகைப் படுமென்பர்.

உட்டணம் - அழல், அனலம், உருப்பம், உருமம், கருமம், கோரம், தகம், தாபம், வெப்பம், வெம்மை, கருமை, அழனம், உஷ்ணம், சூடு.

உட்டுளே - அரி, குழல், குழாய், சுஷிர், சுரை, தசிரம், தூம்பு, நாடி, நாழி, நாளம், புரை, புழை, வேணு, வேய், பொள்.

உட்பகையாறு - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், என்பன.

உணவு - அசனம், ஆகாரம், இரை, உறை, உணு, உண்டி, ஊட்டி, ஓதனம், சோறு, துப்பு, பதம், போசனம், வல்சி. அன்றியும் பேருணவின் பெயர் - பிறப்பு. சிற்றுணவின் பெயர் - அப்பவர்க்கத்தைக் காண்க.

உண்கலம் - கலம், தட்டம், தளிகை, தாலம், பாசம், பாசனம், போசன பாத்திரம்.

உண்டல் - புசித்தலைக்காண்க.

உண்டாக்கல், காண்டல், சிருட்டித்தல், தோற்றுவித்தல், நியமித்தல், நிருமித்தல், படைத்தல், பயத்தல், பாரித்தல், விதித்தல்.

உண்டாதல் - அஞ்சிதம், சுரத்தல், நந்தல், படல், பூத்தல், விஜாதல், படுதல்.

உண்டிப்பொருத்தவகை-ஒகரநீங்கியஉயிர்க்குற்றெழுத்து நான்கும், க ச த ந ப ம வ என்னும் மெய்யெழுத்து ஏழும், அமுதெழுத்தாகக் கூறலால் இவ்வெழுத்துக்களுளொன்றை முதலாகவுடைய முதற்சீர்க்குக் கூறியகணத்திற்குரிய நட்சத்திரத்தோடு பாடவேண்டுதல் முறையாம். இதுவுமன்றித் தலைவன் பிறந்த நாளேனும் பெயர் நாளேனும் இரண்டிலொன்று பொருந்தக்கூறிய அடியை முதலெடுத்துச் சொன்னல் அப்பாட்டுடைத் தலைவனுக்குச் செல்வம் எப்போதும் வளர்ந்து வருமெனப் புலவர் கூறுவர்.

உண்ணு - அண்ணம் உண்ணுக்கு.

உண்பன - தூற்றி, தூற்றி, உண்ப.

உண்மைநெறிவிளக்கம்-சித்தாந்தசாத்திரம் பதினான்கனு ளொன்று. ஆறு திருவிருத்தங்களே யுடையது. திருக்கடந்தை மறைஞான சம்பந்த தேசிகரது மாணாக்கராகிய கொற்றவன்குடி உமாபதிதேவநாயனாரால் செய்தருளப்பட்டது. தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவபோகம், சிவானந்தம், என்னுந் தசகாரியங்களையு மெடுத்து விளக்குவது. இது சாலிவாகன சகாத்தம் 1234 ஸ்ரீத்திற் செய்யப்பட்டது.

உண்மைவிளக்கம்-சித்தாந்தசாத்திரம் பதினொன்கனு ளொன்று. சிவஞானபோதம், சிவஞானசித்தியார், என்னு முதநூல்களின், உண்மைப் பொருள்களைச் சுருக்கமாகத் தெரிவிப்பது. மெய்கண்டதேவநாயனார் மாணாக்கருள் ஒருவராகிய திருவதிகை மனவாசங்கடந்த தேவநாயனாரால் செய்தருளப்பட்டது. ஐம்பத்து நாலு-திருவெண்பாக்களையுடையது. இது சாலிவாகன சகாத்தம் 1177-ஸ்ரீத்தில் இயற்றப்பட்டுள்ளது.

உதடு-இதழ், துடி, பாலிகை, முத்தம், அன்றியு மேலுதடு-ஓட்டம், கீழுதடு-அதரம்.

உதயகிரி - உதயமலை, உதயமனகிரி, சூரிய சந்திரர் தோன்றுமலை, இஃது கிழக்கின் கண்ணுள்ளது.

உதயணன்கதை - இஃது வைசாச பாண்டையிற் குணாட்டியரென்னும் மகா பண்டித சொருவரால் மூற்காலத்துச் செய்யப்பட்டுள்ள பிருகத் கதையின் மொழிபெயர்ப்பாக வுள்ளது. நூலாசிரியர் பெயர் புலப்படவில்லை. சொற்சுவை பொருட்சுவைகளிலே, மிகச்சிறந்தது. உதயணன் என்னும் இராச குமாரனுருவனது சரித்திரத்தைக் கூறுவது. சிந்தாமணி முதலிய காட்பியங்களினும் இதனை மேலாக மதித்து அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு சிற்றுறுப்புக்களும் மிகப்பெரிய ஆசிரியப்பா ஒவ்வொன்றால் இயற்றப்பட்டுள்ளது. அவ்வுறுப்புக்கள் பலவகைமந்து காண்டம் என்னும் பேருறுப்பு விளங்கும். அவற்றுள் முதலாவது உஞ்சைக்காண்டம் 58-பகுப்பினையும், இரண்டாவது இலாவாண காண்டம், 20-பகுப்பினையும், மூன்றாவது மகதகாண்டம் 27-பகுப்பினையும், நான்காவது வத்தவகாண்டம் 17-பகுப்பினையும், ஐந்தாவது நரவாணகாண்டம் 9-பகுப்பினையும் உடையன. இப்பொழுது கிடைத்த கையெழுத்துப் பிரதியின் முதலுங் கடையுஞ்சிதைந்து காணப்பட்டமையால் ஐந்தாவது காண்டத்திற்குமேல் இத்தனை காண்டங்களுள்ளன வென்றும், அவற்றின் சிற்றுறுப்புக்கள் இவ்வளவின வென்பதும் புலப்படவில்லை. இது கதை யெனவும் பெருங்கதை யெனவும் வழங்கும். இஃது இடைச்சங்கத்துப் புலவர்க்கே செய்யுளிலக்கிய மாயிருந்ததென்றும், அவர்கள் அதனை யாராய்ந்தறிந்து கலி, குருகு, வெண்டாளி முதலிய நூல்களை யியற்றினர் எனவுங் கூறப்பட்டிருக்கின்றது. உதயணகுமாரன் கதையென்று விருத்தப்பாவினாலமைந்த தமிழ் நூலொன்றுளதெனர்களது ஆட்சியிலுள்ளது. அதனை யுரையாசிரியர் அங்கீகரிக்கவில்லை எனத் தெரிகின்றது.

உதயம் - புலரி, விடியல், வைகறை.

உதாத்தம்-வேதமோதுஞ்சந்தையிலொன்று

உதாரணம் - இதியாசம், இலக்கியங்காட்டல், காட்டு, இதிகாசம், பிசிதம், இலக்கியம், எடுத்துக்காட்டல். [கீழாக்குவது.

உதானவாயுவின்குணம்-உண்டன வற்றைக்

உதானன் - நாபியினிலேபெற்று நிற்பது.

உதைகாற்பசு - உதறுகாற்பசு, சுதை.

உத்தமதானம்-அறத்தானீட்டிய பொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக் கொள்கெனப் பணிந்து குறையிரந்து மனமகிழ்ந்து கொடுத்தல்.

உத்தமத்தோற்பெருங்கருவி வகை - மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை.

உத்தமமானதோற்கருவி - மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா என்று சொல்லப்பட்ட இவைகளாம். இவற்றுள் மத்தளம் மத்து-ஓசைப் பெயர், இசையிடனுகிய கருவிகட் கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று. இக்கருவி பல கூத்திற்கும் உரித்தாகலானும், பாடல் எழுத்தான் உள்ளே பிறத்தலானும், முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும், இதனை நான்முழவென்றுங் கூறுப. சல்லிகை சல்லென்ற ஓசையுடைத்தாதலாற் பெற்றபெயர். இடக்கை யென்னுங் காரணப்பெயர் முன்னுரைத்தாம், கரடிகை - கரடி கத்திஞற் போலும் ஓசையுடைத் தாதலினாப் பெயருடைத்தாயது.

உத்தரட்டாதிநாள் - அறிவனுள், நீபம், பிற் கொழுங்கோல், மன்னன், முரசு.

உத்தரநாள் } கடையெழுஞ்சனி, கதிர்
உத்தரம் } நாள், செங்கதிர்நாள், செங்கதிர் பிறந்தநாள், பங்குனி, மானேறு, உத்திரம்.

உத்தரன் - கனகவிசயர்க்குத் துணையாய ஓர் அரசன் பெயர்.

உத்தராடநாள் } ஆடி, ஆனி, கடைக்குளம்,
உத்தராடம் } விசுவநாள், விச்சுவநாள்,
உத்திராடம் } உத்திராசாடம், உத்தராஷாடம்.

உத்தரீயம்-உத்தராசங்கம், ஏகாசம், அன்றியு மேற்போர்வை, மீக்கோள்.

உபகரணம்-ஆயுதம், ஏது, காரணம், துணைக்காரணம், சாமக்கிரி, துப்பு.

உபகாரம்-நலம், நன்மை, வேளாண்மை.

உபசாரம் - சன்மானம், சம்மானம், நயம், முகமன், உபசரணை, உபசரிதம், இன்னியம், உபசரிப்பு, கௌரவித்தல்.

உபபுராணம் - நாரசிங்கம், சனற்குமாரம் நாரதீயம், சிவதருமம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாம்பேசம், பராசரம், பார்க்கவம், காபிலம், மானவம், வாசிட்டலிங்கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம் எனப் பதினெட்டு.

உப்பிலாவியம் - குருநாட்டின் கணுள்ள ஊர் இக்குத் தருமபுத்திரர், முதலாயினோர் தங்கியிருந்தார்கள். பாண்டவர் பாரதயுத்தத்திற்கு முன்னிருந்த இடம்.

உபரிகை-மேல்நிலே,மேல்மாடம்,உப்பரிகை

உபாத்தியாயன் - அய்யன், ஆசான், ஆசாரியன், ஆசிரியன், தீர்த்தன், தேசிகன், பணிக்கன்.

உபாயம் - யோகம், விரகு.

உபேந்திரன் - இந்திரனது வேண்டுகோளின்படி காசிப முனிவர்க்கும், அதிதியென்பவட்கும் புத்திரராகத் திருவவதாரஞ்செய்த திருமாலாகும். தெய்வலோகத்தில் இந்திரனுக்குத் துணையாயிருப்பவர் இவரே. [உப்பர்.

உப்பமைப்போர்-அளவர், உமணர், கழியர்,

உப்பமைப்போர்பெண்கள் - அளத்தியர்.

உப்பளம் - அளக்கர், அளம், இருணம், உவர்க்களம்,உவர்த்தரை,உவளகம்,கழி.

உப்புவாணிகர் - அளவர், உப்பர், உமணர்.

உமாபதிசிவாசாரியர் - உமாபதிநாயனார், கொற்றங்குடியார், கொற்றங்குடி முதல், அந்தணர்பெருமான், எனவும் பெயர். தில்லைவாழந்தணர் மூவாயிரருள், ஒருவர் சிதம்பரத் தலத்தைச் சார்ந்த கொற்றங்குடி, யென்கிற ஊரிற் றிருவவதாரஞ் செய்தார். இவர் திருப்பெண்ணாடகத்திலெழுந்தருளியிருந்தமெய்கண்டதேவர்க்குச் சிஷ்யரான ஸ்ரீ அருணந்திசிவாசாரியர் மாணாக்கராய் திருக்கடந்தை மறைஞான சம்பந்தநாயனரிடந் தீக்ஷைபெற்று வேதசிவாகமாதி கலைகளில் வல்லவராய், ஞான மார்க்கத்தைக் கைக்கொண்டிருந்தனர், இருக்குநாளிலே உலகமுய்யும்படி சைவசித்தாந்த வுண்மைகளே யெல்லாந் திரட்டி, ஒவ்வோர் நூலாகத் திருவாய் மலர்ந்தருளினர், அவைகள் பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தலக்கணங்களே யெடுத்துவிளக்காநிற்கும், அவையாவன-திருவருட்பயன், சிவப்பிரகாசம், விஞவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாம். இவற்றுட்சிவப்பிரகாசம் 101 - திருவிருத்தங்களே யுடையது. இதற்கு மதுரை சிவப்பிரகாசர் உரையிட்டனர். காஞ்சிபுரம் பிள்ளையார் பாளயம் இலக்கணம் சிதம்பரநாதமுனிவர் உரையிட்டனர் எனவுங் கூறுப. இந் நூலே யாழ்ப்பாணத்து வட்டுக் கோட்டைச் சாத்திரத் தலேவரா யிருந்த "ஒயிசிங்றன்" என்னும் ஆங்கிலேய பாதிரி யொருவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க, அமெரிக்க கீழ்த்தேச சங்கத்தார் (American Oriental Society) அச்சிற் பதிப்பித்திருந்தனர். சிவப்பிரகாசம் சாலிவாகன சகாத்தம் 1228ஆவத்தும், திருவருட்பயன் 1229ம், விஞவெண்பா மூப்பதினும், போற்றிப்பஃறொடை மூப்பத்தொன்றினும், கொடிக்கவி மூப்பத்திரண்டினும், நெஞ்சுவிடுதூது மூப்பத்திரண்டினும், சங்கற்ப நிராகரணம் மூப்பத்தைந்தினும்,உண்மைநெறி விளக்கம் ஷ சகாப்தம், 1234ஆவத்தினும் அருளிச்செய்யப்பட்டது, திருவருட்பயன் 101 திருக்குறளையும், விஞவெண்பா-13-திருவெண்பாக்களையும் கொடிக்கவி கலித்துறை யொன்றையும் திருவெண்பா மூன்றனையும், நெஞ்சுவிடுதூது கலிவெண்பாவாய 258 - அடிகளையும், உண்மை நெறிவிளக்கம் - 6 திருவிருத்தங்களையும், சங்கற்ப நிராகரணம் இருபது திருவாசிரியங்களையு முடையன. சேக்கிழார் நாயனார் செய்தருளிய பெரியபுராண சரிதத்தை ஒரு செய்யுளில் இயற்றித் திருத்தொண்டர் புராணசாரம் எனப் பெயரிட்டனர். அருண்மொழித் தேவராய சேக்கிழார் சரிதத்தையும் சேக்கிழார் புராணம் என்னுநூலாற் றெளித்தருளினர். சிதம்பர மான்மியத்தை விரித்துக் "கோயிற் புராணம்" எனப்பெயரிட்டுப் பாடி முடித்தனர். அதற்கு ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள் உரைசெய்தனர். திருமுறை கண்டபுராணம் என்னு நூலையும் திருப்பதிக்கோவை, திருநட்சத்திரம் (நாயன்மார் முத்தியடைந்த நாள்) என்பவற்றையும் இயற்றினர். சிவபுண்ணியத்தெளிவு என்னு நூலையும் இயற்றினர் "அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங் - குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் - படிமிசைப், பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்ஷைசெய்தே-முத்தி கொடுக்க முறை," எனச் சிவபெருமான் பாடியனுப்பியருளிய திருமுகமேற்றுப் பெற்றான்என்னும் புலையனுக்கு முத்தி கொடுத்தருளினர். இதனே யறியாத சாம்பன் மனைவி யரசனிடஞ்சென்று,

தன்புருடனே யாதோ மோசஞ்செய்தனர் என்று முறையிட, அரசனிவரிடஞ் சென்று சந்தேகத்தை நீக்கியருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அங்கணின்ற முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்தனர் என்ப. கோயிற்புராணம் அரங்கேற்றப்படாது பெட்டகத்துளிருக்கச் சபாநாயகர் மற்றைய அந்தணர்களது சொப்பனத்திற் சென்று, 'நாம் கொற்றவன்குடி உமாபதியுடைய பெட்டகத்துளிருக்கின்றேம்' என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் விசைவில் அதனை யரங்கேற்றுவித்தனர் எனவுங் கூறுப. இம் மகானுக்கு அருணமச்சிவாய தேசிகர் முதலாம் பல மாணாக்கருளர். இம்முனிவர் பெருமானைச் சிவஞானப் பெருஞ்செல்வ சித்தாந்த தீபமாகிய தாயுமான சுவாமிகள் "குறைவில்லாத ஞானமுதற் கொற்றங்குடி யடிகணைறமலத்தாட் கன்புபெற்று நாமிருப்பதெந்நாளோ" எனத் தங்குருமரபினில் வைத்துத் துதி செய்தாராயின் இவரது பெருமையை யளவிடயார்க்கும் அரிதாது சாலவு மரிதேயாம்.

உமை-ஆரியை, காமக்கோட்டி, அம்பிகை, நாரி, சத்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவி, தருமச் செல்வி, மலைமகள், சங்கரி, இமயவல்லி, மலைமடந்தை,மாதா, ஐயை, பரை, பராபரை, உருத்திரை, பார்ப்பதி, அந்தரி, நீலி, கன்னி, நிமலி, நிமலை, குமரி, வேதமுதல்வி, விமலை, முக்கண்ணி, அமலை, இமயவதி, அயிராணி, அபிராமி, சமயமுதல்வி, தற்பரை, மணிவண்ணி, உருத்திராணி, சிவை,அம்மை, அரனிடத்தவள், உலகமாதா, பவானி, புண்ணிய முதல்வி, பார்வதி, காமக்கோட்டத்தி.

உம்பலென்னும்பெயர் - யானை, யாடு,

உயர்ச்சி - உகப்பு, உச்சம், உத்தரம், உத்துங்கம், உந்தி, உந்துதல், உம்பர், உரை, உவணம், உவப்பு, உறை, உன்னதம், ஊக்கம், எழுமை, ஏந்தல், ஒக்கம், ஒழுகல், ஒழுக்கம், ஓங்கல், சிகரம், சிறப்பு, சீர், சேண், துங்கம், நிமிர்தல், நிவப்பு, நிவர்தல், நீள், பிறங்கல், புங்கம், புரை, பொங்கல், மிசை, மீ, மேக்கு, மேடு, மேம்பாடு, மேன்மை, மோடு, யோகம், வார்தல், ஓச்சல், மீச்செலவு, வரை, பரி.

உயர்ந்தபெண்ணும் இழிந்த ஆணுங் கூடிப் பிறந்த பிள்ளை - பிரதிலோமர்.

உயர்ந்தவாணு மிழிந்த பெண்ணுங் கூடிப் பிறந்த பிள்ளை - அநுலோமர்.

உயர்ந்தோர் - உலகம், உயர்ந்தவர்.

உயிர் - அணு, ஆதன், ஆவி, ஆன்மா, இயமானன், உறவி, கூத்தன், சிவன், செந்து, சேதனன், பசு, பிராணன், புற்கலன், பூதம், சீவன், ஆத்துமா.

உயிர்த்தோற்றம் - பை, முட்டை,வியர்வை, வித்து, கொடி முதலியன. இவற்றை முறையே சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பிசம் என்பர் வட நூலார்.

உயிர்ப்பு - ஆவி, கொறுக்கை, சுவாசம், தும்மல், மூச்சு.

உயிர்வாழ்தல் - உய்தல், உய்தி, சீவனம், சீவித்தல், பிழைத்தல், வாழ்தல்.

உயிர்வேதனை - அனல், சீதம், வாதம், அசனி, புனல், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவருறுமை என்பனவாம்.

உய்தல் - ஆற்றுதல், வலிதல், வாழ்தல்.

உய்யவந்ததேவநாயனார் - திருவியலூரில் திருவவதாரஞ் செய்த காரணத்தினால் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் என்ப. சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாய் திருவுந்தியார் என்னும் நூலியற்றினர், இதனில் நாற்பத்தைந்து பாக்களுள்ளன. இதற்குத் திருவாவடுதுறையாதீனத்துத் தில்லைச்சிற்றம்பலவர் என்னுஞ் சிவப்பிரகாசனார் உரைசெய்தனர். இவர் உத்தர பூமியினின்றுந் தக்கிண பூமியிலுள்ளாரது ஆன்ம லாபத்தினிமித்தம் சேது வரைக்கும் யாத்திரை செய்து லாவிக் காவேரி நதி தீரத்தில் வந்து எழுந்தருளியிருக்கும் நாளிலே திருக்கடவூரிற் றோன்றியருளிய ஆளுடைய தேவநாயனார் இவரைக்கண்டு ஓர் ஞான நூல் இயற்ற வேண்டுமெனக் கேட்ட போது இத்திருவுந்தியாரை யியற்றினர். இதனை "வையமுழுது மலக்கயங் கண்டிடு மூய்ய வந்தானுரையுந்தீபற - வொரு பொருளாலேயென்றுந்தீபற" என்பதனானறிக.

உரல் - உலூகம், எருந்து, கறை, திட்டை.

உராய்தல் - உரிஞ்சல், உரோஞ்சல்.

உரித்து-ஆட்சி,ஆவணம்,காணி,கெழு,தகைமை, தகவு, தகுதி, தாயம், பாங்கு, பால்.

உரிமை - ஆட்சி, இதம், உரித்து, ஒற்றுமை, காணி, கிழமை, குறிக்கோள், கெழுதகைமை, தகவு, தகுதி, பாங்கு, பால்,தலைமை.

உருத்திரங்கண்ணர்-கடியலூரிற் பிறந்தமையால் "கடியலூர் உருத்திரங்கண்ணர்"

எனப் பெயர் பெறுவர். இவர் பத்துப் பாட்டுள் ஒன்ரூய பெரும்பாணற்றுப் படையைச் செய்தனர். அது 500-அடிக ளையுடையது,தொண்டைமா னிளந்திரை யனைப் பாட்டுடைத் தலைவனுக கொண்டு கூறப்பட்டது. பெறும்பாணறு, இளந்திரையன் நாட்டின் வளத்தையும், அவன் கொடையையும் புகழ்வது, பட்டி னப்பாலை கரிகால் வளவன் நாட்டினையும் ஆற்றினையும் கொடையையும் புகழ்வது. இவர் காலங் கடைச்சங்கத்தார் காலமே. இவர் செய்த நூலுக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினர்க்கினியர் ஆதி யோர் உரை செய்தனர்.

உருத்திரசன்மகண்ணர் - கடைச்சங்கப் புல வர் நாற்பத் தொன்பதின்மருள் ஒருவர். திருவள்ளுவ மாலைச் செய்யுளொன்று செய்தனர்.

உருத்திரசன்மர் - இவர் குமரக்கடவுளின் திருவவதாரமாயுள்ளவர். மதுரைமாகரி லே உப்பூரிகுடிகிழார் குலத்திற்ரோன்றி னவர். கடைச்சங்கத்துப் புலவருளொரு வராயிருந்தார். அன்பினைந்திணை யென் னும் அகப்பொருளிலக்கணநூலின் மெய் யுரையிதுவென்று தெரிவித்தார். திருவி ளையாடற் புராணத்திலே இவர் தனபதி யென்னும் வணிகர் தவத்தால் அவர்க்குப் பிள்ளையாய்ச் சென்று வளர்ந்தனர்,எனக் கூறப் பட்டிருக்கின்றது. திருவள்ளுவ நாயனர் திருக்குறளை யரங்கேற்றும்போ து அவருடன் அச்சங்கப் பலகையில்கூட யார் இருக்க வேண்டும் என்று சந்தேகம் வந்தபோது "திருத்தகுதெய்வத் திருவள் ளுவரோ-டுருத்தகு நற்பலகை யொக்க-வீருக்க, வுருத்திரசன்மனென வுரைத்து வானி-லெழுந்தருக்கவோ வென்றதோர் சொல்" என்று அசரீரியாற் குறிக்கப்பட் டார் இவரே. உருத்திரனுல் அடைந்த சன்மத்தை யுடையவர் எனப் பொருள் விரிப்பார் சிலர். சிவபெருமான் உமா தேவியார்க்குப் பிரணவ உபதேசஞ் செய் தருளிய காலத்தில் குமாரனுர் ஒளித்தி ருந்து கேட்டதனுல் மதுரையில் மூங் கைப் பிள்ளையாய்ப் பிறக்கச் சபித்தார் எனவும், அதனுல் பூமியிற்ரோன்றினர் எனவுங் கூறுப. சர்மா என்பது பிராமண சாதிக்குரியதிறப்புப் பெயராகலி ன் உருத் திரனுகிய சர்மன் எனவும் உரைப்பது மொன்று, எனவே வைசியப் பிராமணர்.

உரை-அத்தம், அருத்தம்,சொற்பயன்,பதம், பாழி, அது நால்வகையாம் - அகலவுரை, கருத்துரை, பதவுரை, பொழிப்புரை.

உரைகல் - கட்டளை, கட்டளைக்கல்.

உரைதல்-உராஞ்சல், உராய்தல்,உராய்போ தல், உரிஞ்சல், உரைஞ்சல், தேய்தல்.

உரைப்பொருள் - விரித்துரை, மெய்யுரை.

உரையுரைத்தல் - பயனுரைத்தல், மெய்யு ரைத்தல், பிரித்துரைத்தல், அன்றியும் பதவுரையுரைத்தல்-கண்ணழித்தல்,பொ ழிப்புத் திரட்டல் - பொழிப்புரைத்தல்.

உரோகணிநாள் - அயநாள், உருளி, உருளை, உருள், உரோணி,ஊற்ருல், சகடம்,சகடு, சதி,தேர், பண்டி, பார், மோனம்,வையம், பிரமனுள், விமானம், உரோகணி.

உலகத்தோற்றம் - புராண இலக்கணங்கள் ஐந்தனுளொன்று. அதாவது உலகத்தி னுற்பத்தியைப் பற்றிக் கூறுவதாம். மு தல்வனுணையாலே சுத்தமாயையினின்று அசுத்தமாயையும், அதனின்று காலதத் துவமும் நியதித்துவமும் கலாதத்துவ மும் முறையே தோன்றும். இக்கலையி னின்றும் வித்தியா தத்துவந் தோன்றி யதி னினைச் சிறிது உதிக்கப்பண்ணும். வித்தை, அராகம், புருடன் இவையொன் றினென்று முறையே தோன்றும். அதன் பின் மூலப் பிரகிருதியானது கலையினின் றும் வருகின்ற அவ்வியத்த குணவடிவாய் முதல்வனுணையாலே தோன்றிக் குண தத்துவத்தை யுண்டாக்க, அதினின்றும் புத்தித்துவமும், அதினின்றும் அகங் காரதத்துவமு முதிக்கும். அது குண வேற்றுமைபற்றிப் பூதாதி யகங்காரம், வைகரி யகங்காரம்,தைசத வகங்காரம் என மூவகைப்படும். அவற்றுள் தைசத வகங்காரத்தினின்றும் மனமும் ஞானேந் திரியங்களுந் தோன்றும். வைகரியகங்கா ரத்தினின்று கன்மேந்திரியங்க டோன் றும். ஞானேந்திரியங்களுக்கு விடயமா கச் சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்பவை பொருந்தும். பூதாதி யகங்கா ரத்தினின்றும் மேற்சொல்லப்பட்ட சத் தாதி பஞ்ச தன் மாத்திரைகளுந் தோன் றும். இத் தன்மாத்திரைகளிலிருந்து பிரு திவி முதலிய தூல பூதங்களோன்றும். இதுவே சைவ சித்தாந்தத்திற் கூறப் பட்ட முறையாகும்.

உலகம்பதினன்கு - கீழேழுலகம் மேலேழு லகம் அவையாவன:— கீழேழுலகம்-அத

லம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பனவாம். மேலேழுலகம் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், மகலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பனவாம்.

உலகவொடுக்கம் - முற்சொல்லியபடி ஒவ்வோர் காரியதத்துவங்களும் அதன் காரணத்திலொடுங்குதலாம்.

உலகின்பொது - இராச்சியம், அவனி, தலம், நாடு, புவனம், புவி, பொழில், புடவி, பல உலகங்களுமாம்.

உலக்கை - உரோங்கல், தடி, முசலம்.

உலக்கைப்பாட்டு-வள்ளை, வள்ளைப் பாட்டு.

உலண்டு - கீடம், கோற்புழு, உலண்டம்.

உலர்ந்தபுல் - திரணம், திருணம்.

உலர்ந்தபூ - உணங்கல், சாம்பல், வாடல்.

உலாப்போதல் - சாரி, பவனி. [வழங்கல்.

உலாவல் - அசைதல், தியங்கல், திரிதல்,

உலக்களம் - உரவி, உறவி. [சிரை, உதி.

உலத்துருத்தி - அத்திரி, உறை, சிவை,

உலப்பு-அகைத்தல், மிறைத்தல், வேதனை.

உலமூக்கு - குருகு, சிவை.

உலோகக்கட்டி-ஆடகம், சுவணம், தகனை, மாழை, வங்காரம்.

உலோபன் - கிருபணன், பிசுனன், பிசுனி.

உல்லாசம் - அத்தவாளம், ஏகாசம், மீக்கோள், மேற்பார்வை, வடகம்

உவகை - உகவை, ஓகை, களிப்பு, சந்தோடம், சந்தோஷம், பிரியம், பிரீதி, மகிழ்ச்சி, மாசாயம், முத்தம், மோதம்.

உவகைப்பறை - மங்கலப்பறை, துரியம்.

உவந்தோனவிநயம் - உயர்ந்து இனிதாயுள்ள கண்மலருடைமையும், இனிமையான உள்ளமுடைமையும், கோபமின்றிய முறுவலும், நகையுமுடைமையும் இருத்தலும், சோலை முதலியவற்றிற் சென்று விளையாடலுடைமையு முதலியனவாம்.

உவமை - இகல், இடை, இணை, ஈடு, உவமம், உறழ்வு, எதிர், ஒப்பு, கட்டளை, சங்காசம், சதிரிசம், சமம், சமானம், பொருவல், கடித்தல், நிகர்த்தல், கேழ், ஒத்தல், தூக்கு, அணையல், மானல், உறழ்தல், அன்ன, படிசண்ணியம், சாயல், துணை, துல்லியம், நிகர், நிகாசம், நிபம், சேர், புரை, பொருவு, பொருவுதல், போல், மலை, மானம், மான், இணைதல். [தன்மை

உவமைபின்மை - அசமானம், அதுலம்,

உவமைபுரு - அற்று, அனைய, அன்ன, ஆங்கு, இகல், இயைய, இன்ன, உழற, என்ன, எய்ப்ப, ஒப்ப, கடுப்ப, கதழ்வு, கேழ், சன்னியம், சேத்து, தூக்கு, நிகர, நேர, புரைய, பொருவ, போல, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, வென்ற, வியப்ப, வெள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப, கள்ள, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, பொற்ப, வெல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, துணைப்ப, அற்று, காய்த்த.

உவர்க்களம் - உவளகம், உப்பளம். [ணம்.

உவர்த்தரை - இருணல், கழிநிலம், இரி

உவர்த்தல் - இலவணம், உப்பு, பௌவம், உவர், கைத்தல்.

உவர்நீர் - உப்புச்சலம், உரவுநீர், உறை.

உவா - யூதநாதன், உம்பல், யானையரசு, களிறு, மதகரி.

உவாவாளி - அறுகு, பூட்கை, யானை, யாளி.

உவ்விடம் - உம்பர், உவணை.

உழக்குதல் - உழுதல், மடித்தல், உழக்கல்.

உழவு - தொய்யில், உழுதல்.

உளி-தறிக்குங்கருவியி னொன்று, இடங்கம், கணிச்சி.

உள் - அகடு, அகணி, அகம், கோட்டை.

உள்ளங்கை-அகங்கை, அங்கை, குடங்கை.

உள்ளதுசிறத்தல் - களிப்பு, கூர்ப்பு, கழிவு.

உள்ளமிகுதி - ஆட்சி, ஆண்மை, ஆள்வினை, உத்தியோகம், உரம், உரன், உற்சாகம், ஊக்கம், சால்பு, சான்றாண்மை, தாளாண்மை, உள்ளக்களிப்பு. [ளல்.

உள்ளான் - குருவிவகையி னொன்று, உள்

உள்ளோசை - ஒளிர், தெளிர், நரல்வு, நுழைவு, நுணுக்கம், முரல்பு, விழைவு, முரல்வு, ஓங்காரசப்தம்.

உறவு - இகுளை, இனம், உறவி, ஒக்கல், கடும்பு, கயிசை, கிளை, குடும்பம், கூளி, கேண்மை, கேள், சுற்றம், தொடர்பு, நட்பு, நண்பு, நள்ளி, பந்தம், பரிசனம், பாசனம், தமர், உரியர், நட்டோர், பற்றினர், துணை, மித்திரர், நட்டார், அடைந்தவர், பற்றுயார், தொடர், உற்றூர், கிளைஞர், பந்துக்கள்.

உறவோர் - அடைந்தோர், இகுளை, இனத்தார், உரியோர், உற்றூர், கிளைஞர், சார்ந்தோர், சிறந்தோர், சுற்றத்தார், சூழ்ந்தோர், தக்கார், தமர், நட்டோர், நள்ளியர், பரிசனம் பற்றினர், மேவினர், அன்றியுந் தந்தை வழிச்சுற்றம் தாயம், இல்வழி யுறவோர், ஞாதிகள், தாயத்தார்,

தாயாதிகள். குடியிலிறந்தோர் பெயர்-தென்புலத்தார், பிதிர்க்கள்.
உறி - சிக்கம், சிதர், சிமலி, தூக்கு.
உறுதிக்கட்டுரை } இடி, இடித்தல், கழறல்,
உறுதிச்சொல் } நெருங்கல்.
உறுதிப்படுத்தல் - தெருட்டல், வருட்டல், வற்புறுத்தல்; பலப்படுத்தல். [சினே.
உறுப்பு - அங்கம், அவயவம், காத்திரம்,
உறைகாரர் - காரோடர், முச்சியர்.
உறையூர்-உறந்தை, கோழி. [முருகு, விழா.
உற்சவம் - சாறு, சேறு, தூணக்கறல்,
உற்சாகம் - உளுற்று, இயற்றல், உழப்பு, உத்தியோகம், ஆள்வினை, தாளாண்மை, தாள், முயற்சி, ஊக்கம், வினை, துப்பு.
உற்பவம் - பிறப்பு, சனனம், தோற்றம்.

ஊ

ஊக்கம் - உள்ளமிகுதியைக் காண்க.
ஊசித்தூலை - பாசம், தூன்னம்.
ஊசிமுல்லை - தளவு, நாதிகை, மாகதி.
ஊடலெத்தீர்த்தல் - உணர்தல், ஒல்லல்.
ஊடல் - பிணக்கு, புலவி, துணி.
ஊதுகொம்பு - ஆம்பல், இரலை, கொம்பு, கோடு, வயிர், வாங்கா.
ஊமத்தை - உன்மத்தம், மத்தம். [மூங்கை.
ஊமை - ஊமன், சொல்லிலி, மூகன், மூகை,
ஊரிலுள்ளார் உண்ணும்நீர் - ஊருணி.
ஊர் - அகலுள், அருப்பம், இருக்கை, உறையுள், எயில், ஒக்கம், காடு, காண்டகம், குடம்பை, குடி, குடிக்காடு, குப்பம், சும்மை, சேரி, வேசனம், தாமம், அகரம், நகரம், கருவடம், குறும்பு, சேர்வு, மண்டிலம், கேடகம், நகர், கெடி, கிராமம், வசதி, ஆதரம், இல்லிடம், புரம், கோசரம், பள்ளி, பூக்கம், சம்வாகம், நொச்சி, கோட்டம், மடப்பம், குறிச்சி, நத்தம், நிவேசனம், பக்கணம், பட்டினம், பதி, பாக்கம், பாடி, பூண்டி, பூரியம், பேடு, முட்டம், மேடு, வாசம், வாழ்க்கை, வேலி, வைப்பு, அன்றியும், சிற்றூரின் பெயர் - நொச்சி, பட்டி, பட்டு, பள்ளி. இராஜதானியின் பெயர் - நகரம், புரம், புரி. நூறு குடியூரின் பெயர்-கிராமம். ஐந்நூறு குடியூரின் பெயர் - பெருங்கிராமம். ஐந்நூறு கிராமங்கட்குத் தலைக் கிராமத்தின் பெயர் - மடப்பம். மலைகள் செறிந்த ஊரின் பெயர் - கேடகம். மலையும் யாறும் சூழ்ந்தவூரின் பெயர் - கார்வடம். மலைமேலேற்றிய ஊரின் பெயர் - சம்வாகம். பகைமேற் சென்றே ருறைவிடத்தின் பெயர் - பாசறை, பாடிவீடு, முனைப்பதி. அன்றியும் பகைவரூர் - பாழி. அன்றியுங் குறிஞ்சி முதலைந்திணை யூரின் பெயர் - தத்தம் வரியிற் காண்க.
ஊர்க்குருவி - கடலகம், கலிங்கம், கல்லி, குலிங்கரி, சகடம், சடகம், புலிங்கம், குலிங்கம், அடைக்கலங்குருவி.
ஊழிக்காலம் - யுகமுடிவு, மடங்கல்.
ஊழித்தீ - கடையனல், தீத்திரள், மடங்கல், வடவாமுகம், வடவை.
ஊழ் - உண்மை, தெய்வம், வரன்முறை, விதி, உலக முடிவு, பழவினை.
ஊறுபுனல்-உறவி, ஊற்று, அசும்பு, ஊறல்.
ஊற்று - உறவி, ஊறல், மணற்கேணி.
ஊன் - ஊத்தை, ஊழ்த்தல், தசை, தடி, தூவு, பிசிதம், புண், புரணி, புலவு, புலால், புளிதம், வள்ளூரம், விடக்கு, தூ, புலை.
ஊன்விலைஞர் } சூனர், இறைச்சிவணிகர்.
ஊன்விற்போர் }
ஊன்றுகோல் - ஊற்றுக்கோல், தண்டம், தண்டு, பற்றுக்கோல்.

எ

எச்சில்-உச்சிட்டம், எச்சம், சேடம், மிச்சில்.
எடுத்தலோசை - அகவல், குமுறல், கிருமித்தல், குளிறல், சிதற்றல், ஞெளிர்தல், தெளிறல், நரல்வு, நெளிர்தல், பயிறல், முக்கல், ஊளை, முறறல்வு, பிரற்றல்.
எட்டிமரம் - கரளம், காஞ்சிரம், காஞ்சிரை, கோடரம், பதுகம், முட்டி, காளி.
எண் - கரணம், கணக்கு, கணிதம்.
எண்காற்புள் - சம்பரம், சரபம், சிம்புள், துரோணம், பெரும்பறை, வருடை, வாருண்டம்.
எண்கூட்டிப்பெருக்கல் - உறழல். அன்றியும், ஒற்றைபட வெண்ணல் - ஒன்றித்தல். இரட்டைபட வெண்ணல் - இரட்டித்தல்.
எண்டிக்கு - எண்டிசை; அவை: கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு.
எண்டிசையோனி - கொடி, புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை, காகம், யானை.
எண்ணெய் - தைலம், நேயம்.

எண்வகுப்பு - ஒன்றுமுதல் முப்பத்தாறு தானம் வருமாறு, அஃது :

(1) ஒன்று-ஏகம். இரண்டு-உபயம், துவந்துவம், துவி, மிதுனம், யுகம், யுகளம், யுகளி. மூன்று-திரி. நான்கு-சது. ஐந்து-பஞ்சம். ஆறு-சடு. ஏழு-சத்தம் எட்டு - அட்டம். ஒன்பது - ஒன்பான், தொண்டு, நவம். (2) தசம் - பத்து. (3) சதம்-நூறு. (4) சகத்திரம் - ஆயிரம். (5) ஆயுதம்-பதினாயிரம். (6) நியுதம்-இலட்சம், நூறுயிரம். (7) பிரயுதம்-பத்திலட்சம். (8) கோடி - நூறிலட்சம். (9) தசகோடி-பத்துகோடி. (10) சதகோடி-நூறுகோடி. (11) அற்புதம்-ஆயிரங்கோடி. (12) நிகர்ப்புதம் - பதினாயிரங்கோடி. (13) கர்வம்-இலட்சங்கோடி (14) மகாகர்வம்-பத்திலட்சங்கோடி. (15) பதுமம் - கோடாகோடி. (16) மகாபதுமம் - பத்துக்கோடாகோடி. (17) சங்கம் - நூறு கோடாகோடி. (18) மகாசங்கம்-ஆயிரங்கோடாகோடி (19) கோணி-பதினாயிரங்கோடாகோடி (20) மகாகோணி-இலட்சங்கோடாகோடி. (21) நிதி-பத்திலட்சங்கோடாகோடி. (22) மகாநிதி - கோடி கோடாகோடி. (23) சோபம்-பத்துக்கோடி கோடாகோடி. (24) மகாசோபம்-நூறுகோடி கோடாகோடி. (25) பராத்தம்-ஆயிரங்கோடி கோடாகோடி (26) சாகரம்-பதினாயிரங்கோடிகோடாகோடி (27) பரதம் - இலட்சங்கோடி கோடாகோடி. (28) அசிந்தியம் - பத்திலட்சங்கோடிகோடாகோடி. (29) அத்தியந்தம்-கோடி கோடி கோடாகோடி (30) அனந்தம்-பத்துக்கோடி கோடி கோடாகோடி. (31) பூரி - நூறுகோடி கோடி கோடாகோடி. (32) மகாபூரி - ஆயிரங்கோடி கோடி கோடாகோடி. (33) அப்பிரமேயம் - பதினாயிரங்கோடி கோடி கோடாகோடி. (34) அதுலம் - இலட்சங்கோடி கோடி கோடாகோடி. (35) அகம்மியம்-பத்திலட்சங்கோடி கோடிகோடாகோடி (36) அவ்வியத்தம்- கோடிகோடி கோடி கோடாகோடி.

இன்னுமோர் வகையாவது :—

ஒருபலம் - தொடி.
துலாமிருபது - பாரம்.
காற்பலம் - கஃசு.
மகாணிப்பலம் - வீசம்.
ஒன்று - ஏகம்.
பத்து - தசம்.
நூறு - சதம்.
ஆயிரம் - சகஸ்ரம்,
பதினாயிரம் - ஆயுதம்.
நூறுயிரம் - (இலட்சம்) நியுதம்.
பத்துநூறுயிரம் - பிரயுதம்.
கோடி (பிரயுதம்பத்து) தசபிரயுதம்.
அற்புதம் (கோடிபத்து) தசகோடி.
நிகர்ப்புதம் (அற்புதம்பத்து) தசாற்புதம்.
கும்பம்(நிகர்ப்புதம்பத்து) தசநிகர்ப்புதம்.
கணகம் (கும்பம்பத்து) தசகும்பம்.
கற்பம் (கணகம்பத்து) தசகணகம்.
நிகற்பம் (கற்பம்பத்து) தசகற்பம்.
பதுமம் (நிகற்பம்பத்து) தசநிகற்பம்.
சங்கம் (பதுமம்பத்து) தசபதுமம்.
சமுத்திரம் (சங்கம்பத்து) தசசங்கம்.[ரம்.
அந்தியம் (சமுத்திரம்பத்து) தச சமுத்திமத்தியம் (அந்தியம்பத்து) தசாந்தியம்.
பரார்த்தம் (மத்தியம்பத்து) தசமத்தியம்.
பூரியம் (பரார்த்தம்பத்து) தசபரார்த்தம்.
பிரமகற்பம் (பூரியம்பத்து) தசபூரியம்.

எண்வலகக்கணவகை-அறம், பொருள், இன்பம், வீடென்று சொல்லப்பட்ட இவற்றினது பாகுபாடமைய ஒருநூலைச் சொல்லுங்காலத்து நீர், நிலம், தேயு, வாயு, அந்தரம், இயமானன், சூரியன், சந்திரன், என்று சொல்லப்பட்ட எண்வகைக் கணங்களு முதற்செய்யுளின் முதலிலமையக் கூறவேண்டும்.

இவற்றுள் நீரின்கணவகை - நேர்நிரை நிரை. கூவிளங்கனி-நிலத்தின் கணவகை-நிரை நிரை நிரை கருவிளங்கனி. தேயுவின் கணவகை - நிரை நேர் நிரை புளிமாங்கனி வாயுவின் கணவகை-நேர் நேர் நிரை தேமாங்கனி. அந்தர கணவகை - நிரை நிரை நேர் கருவிளங்காய். இயமானன் கணவகை-நேர் நிரை நேர் கூவிளங்காய். சந்திர கணவகை - நிரை நேர் நேர் புளிமாங்காய். இவ்வெட்டினுள் நிலம், நீர், மதி, இயமானனுகிய தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்கனி, கூவிளங்கனிச் சீர்கள் முன்வரில் நன்று, மற்றைத் தேயு வாயு அந்தரசூரிய கணங்களாகிய தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்காய், கூவிளங்காய், முன்வறிற்றீது.

எண்வகைமாலை - வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, இவற்றுள :—

வெட்சியாவது:- அரசனுல் அனுப்பப் பட்டு முனைப்புலங் காத்திருந்த தண்டத் தலைவர் பகைநிலத்தே சென்று களவினு லே பசுக்கூட்டங்களைக் கவர்ந்து சென்று பாதுகாத்தலை யுடைத்து. இது படையியங்கரவம், பாக்கத்து விரிச்சி, புடை கெடப்போகிய செலவு புடைகெட ஒற்றி ஞகியவேய்,வேய்ப்புறமுற்றிஞகியவிறை, மூற்றிய உரர்க்கோலை துகோள், பூசன் மாற்று, நோயின் றுய்த்தல், நிவலுழித் தோற்றம், தந்து நிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை எனப் பதினென்கு வகைப் படும்.

வஞ்சியாவது:—இதுபெரு வேந்தருட் டோற்றேரு னெருவன் ஒருவன்மேற்செல் லுங்கால் வஞ்சிமாலை யணிந்து செல்வ தாம், இது முல்லை யெனப்பட்ட அகத் திணைக்குப் புறனும் இயங்கு படையரவம் எரிபரந்தெடுத்தல், வயங்கலெய்திய பெருமை, கொடுத்த லெய்திய கொடைமை, அடித்தூர்த் தட்ட கொற்றம், மாசாயம் பெற்ற தெடுமொழி பொருனின்றுய்த்த பேராண் பக்கம், வருவிசைப் புனலைக் கற்சிறை போல வொருவன் தாங்கிய பெருமை, பிண்டமேய பெருஞ்சோற்று நிலை, வென்றேர் விளக்கம், தோற்றேர் தெய்வு, குன்றுச்சிறப்பிற் கொற்றவள்ளை, அழிபடை தட்டோர் தழிஞ்சி எனப் பதின்மூன்று துறையுடைத்து.

உழிஞையாவது :— வேற்று வேந்தனு டைய அரணைச்சென்றே வேந்தன்வளைத் தலும், இருந்த வேந்தன் காத்தலுமாகிய இருவழியான விலக்கணத்தையுடைத்து. இது மருதமாகிய அகத்திணைக்குப் புற னும் கொள்ளார் தேசங் குறித்த கொற் றம். உள்ளியது முடிக்கும் வேந்தன் சிறப்பு, தொல்லெயிற்கிவர்தல், தோலின் பெருக்கம், அகத்தோன் செல்வம், முர ணிய புறத்தோன் அணங்கிய பக்கம், திறப்படவொருதான் மண்டிய குறுமை, உடன்றேர் வருபகை பேணர் எயில் கூறல் என எட்டு வகைத் துறையையு டைத்து. முரசவுழிஞை யெனவும் வே றேர் வகை கொள்ளலு மொன்று.

தும்பையாவது:— உலகம் புகழ்தலை யே பொருளாகக் கொண்ட அரசன் வே றேர் வேந்திடஞ்சென்று அவன்றலைமை தீர்க்கு மிலக்கணத்தை யுடைத்து. இது நெய்த லென்னும் அகத் திணைக்குப் புற னும். களங் குறித்துப் போர் செய்யும் வெட்சிப் புறத் தும்பை, வஞ்சிப் புறத் தும்பை, உழிஞைப் புறத் தும்பை யென வும் பாகுபாடு பெறும் நோனுருட்கு மூ வகை நிலை, தார்நிலை இருவர் தலைவர் தப திப் பக்கம், கூழை தாங்கிய வெருமை, படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம், களிறெறிந்தோர் பாடு, களிற்றேறுபட்ட வேந்தனையட்ட வேந்தன் வாளோர் ஆடு மமலை, இருபெரு வேந்தருஞ் சுற்றமு மொருவரு மொழியாத் தொகைநிலை, எள்வாள் வீசியநூல் எனப் பன்னிரு வகைப்பட்ட துறையினை யுடைத்து.

வாகையாவது:— நான்கு வகுணத்தா ரும் அறிவரும் தாபதர் முதலினேரும் ஒழுக்கத்தானே தம்மை மிகுதிப் படுத்த லாம். இது பாலைத்திணை யென்னும் அகத்திணைக்குப் புறமாகும் அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம், ஐவகை மரபி னரசர்பக்கம், அறுவகைப்பட்ட வேளிர்ப் பக்கம், அறிவின்றேயம், தாபதப் பக்கம், அறிமரபிற் பொருநர் பகுதி என வெழு வகைத் துறையை யுடைத்து.

காஞ்சியாவது:— அறம் பொருளின்ப மாகிய பொருட் பகுதியானும், அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையுஞ்செல்வ மு மிளமையு முதலியவற்றினும் நிலைபே றில்லா வுலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை யுடைத்து. இது உரிப் பொருளல்லாத பெருந் திணைக்குப் புற னும். மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெரு மை, கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட் டிய மூதுமை, புண் கிழித்து முடியுமறம் புண்ணேனைப் பேயோம்பிய பேய்ப்பக் கம். இரங்கிய மன்னை, வஞ்சினக் காஞ்சி, துன்னுதல் கடிந்த தொடாக் காஞ்சி, அஞ்சினக் காஞ்சி, முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பால், சேர்த்திக் கொண் டோன் தலையொடு முடிந்த நிலை யெனப் பத்து வகைப்படும்.

எதிர்த்தல்-எதிரூன்றல், எதிர்தல், ஏற்றல், கிடைத்தல், கிட்டல், தலைப்படல், தாக் கல், நேர்தல், மலைதல், முடுகல், முட்டு தல்

எதிர்மொழி-உத்தரம், மறுமொழி, விடை.

எப்பொருட்குமிறையோன் - அதிபன், அர சன், இறை, காரணன், இயவுள், தோன் றல், அரன், ஆதி, ஆதிபன், ஈசன், காந் தன், கொழுநன், கோன், செம்மல், நா

தன், நாயகன், பதி, பிரான், பெருமான், மன்னன்.

எப்போழ்தும்- அவிர்தம், அனவரதம், அனுதம், என்றும், சத்தம், சந்ததம், சதா, சந்தம், சர்வதா, நித்தம், நிரந்தரம், அவிரதம்.

எயிறு - விளிம்பு, தந்தம், மூரல், பல்.

எருக்கு - அருக்கம், அருச்சுனம், அர்க்கம்.

எருது - இடபம், இரலை, எறு, குண்டை, கூளி, காளை, கொட்டியம், கோ, சே, நந்தி, நூபம், பகடு, பசு, பாண்டில், பாறல், புல்லம், பூணி, பெற்றம், போத்து, மூரி, விடபம், விடை, அன்றியும், பொதியெருதின் பெயர் - தூரியம், தூர்வகம், பகடு, பாறல். டொலியெருது - கூளி.

எருத்தின்மூரிப்பு } அக்கு, இமில், முறிப்பு.
எருத்தின்றிமில் }

எருமை - கவரி, காரா, காராண், சயிரிபம், சைரிபம், காசா, கயவாய் தேனு, மகிடம், மூரி, மேதி, வடவை. இதன் பெண் - ஆ, நாகு. இதன்பிள்ளை-கன்று, குழவி. இதன் மடி - செருத்தல். இதன்மலடு - மைமை.

எருமைக்கடா-உம்மல், எறு, ஒருத்தல், பகடு, போத்து, கடா. [பை, மூடிகம்.

எலி - ஆகு, களியம், சிகரி, இரும்பன், கருப்

எலுமிச்சை-அருணம், இலிகுசம், சதாபலம், சம்பீரம், முருக்கு, முருகு, சம்பளம்.

எலும்பு-அக்கு, அங்கம், அத்தி, என்பு, கலேபரம், களேவரம், அன்றியும், தசைகழிந்த முதுகெலும்பின்பெயர்-கங்காளம், செட்டை, முழுவெலும்பு.

எல்லாம் - அகண்டம், அகிலம், அடங்கல், அடையல், அடைவு, அனைத்தும், எவையும், ஒருங்கு, சகலம், சமத்தம், சமம், சர்வம், நிகிலம், பூரணம், முடியல், முழுதும், முற்ற, முற்றும், யாவும், முழுவதும், முட்ட.

எல்லை - அவதி, அளவை, எணி, கரை, காடு, கொத்தம், பரியந்தம், வரப்பு, வரம்பு, வரைவு, கொற்றம், வரைப்பு, காட்டை.

எவ்விடம் - எங்கு, எந்தவிடம், எம்பர், எவண், யாங்கு, யாண்டு, யாண்டை.

எழாலு மயிலுமொழிந்த பறவையிஞண் - சேவல்.

எழால் மயிலென்னு மிரண்டி ஞண்பெயர்- போத்து.

எழுச்சி - அகைத்தல், இவர்தல், உம்பல், உறுமல், எற்பு, ஒழுகல், ஓங்கல், கஞறல், கதித்தல், கலித்தல், நேர்பு, பம்பல், பாச்சல், பொலிதல், மறல், பொலிவு, ஒதுக்கல்.

எழுதலை - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, என்பனவாம்.

எழுதல்-கிறுக்கல், கீறல், கீட்டல், தெரித்தல், பொறித்தல், வரிதல், வரைதல், கிறுக்குதல்.

எழுதுகோல் - கோல், துகிலிகை, தூரியம், தூவிகை.

எழுத்தாணி - ஆணி, இலேகினி, ஊசி, ஓலை கீட்டும்படை, பண்டம்.

எழுத்தின்சாரியை - கரம், காரம், கான், அகரம், எனம்.

எழுத்து - அக்கரம், அட்சரம், இரேகை, இலேகை, பொறி, வரி, கணக்கு.

எழுத்துப்பொருத்தவகை - நல்லகணமென்றும், நில நீர் மதி இயமானன் என்பவற்று ளொன்றாய் வரும் மூவகைச் சீர் நான்கும் வல்லெழுத்தேயன்றி, மெல்லெழுத்து முதற்சீராகவரத்தொடுக்கக் கூடா, எவ் வகைப்பட்ட செய்யுளுக்கு நற்கணம் வகையால் வரு மூவகைச்சீரே முதற்சீராய்ப் பாடவேண்டும்.

எழுபத்தீராயிர நாடிநிலை - மூலாதாரக்கண்ணுள்ள இந்நாடிகள் பீர்க்கம்பழக் கூட்டின் மூன்று கண்ணும்போல இடை, பிங்கலை, சுழுமுனை யென்னும் மூன்று நாடிகளுமாய் நடுவுநின்ற சுழுமுனை யொழிய இரண்டு மூக்காலும் ஓசார் பாரிசத்து ஐந்து நாழிகையாகக் கொண்டு ஒருமாத்திரையில் தூற்றிருபத்தைந்து சுவாசமாய் ஒரு சுவாசத்திலே பன்னிரண்டங்குலி வாயுப் புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண் விரலடங்கும் பிராணவாயுவாகச் செறிந்து நிற்கும் என்று கொள்க.

எழுபிறப்பு - தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.

எழுப்பல் - எடுப்பல், எற்றல், கிளப்பல்.

எழுமேகம் - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்பனவாம். இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீயென்னும் மழைகளைப் பொழி வனவாம்.

எழுவகைத்தாது - இரதம், உதிரம், என்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம்.

எழுவகைநதி - கங்கை, யமுனை, நருமதை,சரசுவதி,காவிரி,குமரி,கோதாவரி.

எழுவகைநரகவட்டம்-பெருங்களிற்றுவட்டம், பெருமணல்வட்டம், எரிபரல்வட்டம், அரிபடைவட்டம், புகைவட்டம், பெருங்கீழ் வட்டம்,இருள் வட்டமென்பனவாம்.

எழுவகைப்பெண்பருவம்- பேதை, பெதும்பை,மங்கை,மடந்தை,அரிவை, தெரிவை, பேரிளம்பெண். இவற்றிஞண்டு முறையே 7, 11, 13, 19, 25, 31, 40 ஆகும்.

எழுவகையோனிபேதவிரிவின்பெயர்-தேவரில் பதினொன்று நூறுயிரயோனி பேதம், மக்களொன்பது நூறுயிரயோனிபேதம், தாவரம் இருபது நூறுயிரயோனிபேதம், ஊர்வன பதிஞெரு நூறுயிர யோனி பேதம், நீர்வாழ்வன பத்துநூறுயிர யோனி பேதம், விலங்குபத்து நூறுயிரம், பறவை பத்து நூறுயிரம் ஆக எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதவகைகளாம்.

எளிமை-எண், எண்மை, தஞ்சம், பரிபவம், இழிதகவு.

எள் - எண், நிலம், நாவு, நூ, வெள்ளெள்-குயிகை. இளங்காய் - கௌவை.

எள்ளினளவு - இம்மி எட்டுக்கொண்டது.

எறிச்சலூர்மலாடனார் - கடைச்சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின்மருள் ஒருவர். இவர் ஊர் எறிச்சலூர் எனத் தெரிகிறது. "பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே தூய துறவறமொன் றூழாக - வாய, அறத்துப்பா லுல்வகை யாய்ந் துரைத்தார் நூலின் றிறத்துப்பால் வள்ளுவனூர் தேர்ந்து" என்று திருவள்ளுவ மாலைக்குச் சிறப்புக்கவி சொற்றுளார் இவரே.

எறிதல் - இடுதல், ஏற்றல், ஓச்சல், செலவிடல், விடுதல், விலக்கல், வீசுதல்.

எறிமணி - சேகண்டி, சேமக்கலம்.

எறியாயுதம் - எஃகம், தோமரம், பிண்டி, பாலம், பீலித்தண்டு.

எறும்பு - உறவி, பிபீலிகை, பிலஞ்சுலோபம். இதன்பேதம் - சூகை.

ஏ

ஏகதாளம்-சத்ததாளவகை, ஒரொத்துடையதாளம், அரைமாத்திரை கொண்டது.

ஏகபாதம் - கூத்து, விகற்பத்துளொன்று.

ஏகம்பவாணர் - இவர் ஓர் பண்டிதரெனக் கூறுவர். கம்பநாடன் காலத்திலே இருந்தார் என்பதற்கு ஐயமில்லையாம். இவர் வாணன் என்னும் ஓர் வேளாளப் பிரபுவின் மைந்தர். தென்னாட்டில் வசித்து 1000-ஏர்வைத்து உழவுதொழில் செய்த ஓர் வேளாளனுக்கு வாணன் என்று பெயர். அவன் மனைவி ஓராண் பிள்ளையைப் பெற்று இறந்தனள். வாணன் தனக்கும் அந்திய காலம் நேரிட்டதை யுணர்ந்து தன் பண்ணைக்காரருள் ஒருவனுய ஏகன் என்னுஞ் சாம்பானைக் கூவித் தன் புதல்வனை யவனிடமொப்புவித்து உன் பிள்ளைபோல இவனைப் பாதுகாத்தல் நின்கடமை. கொல்லையிலே நிதியம் இருக்கிறது, என்று இறந்தனன். ஏகன் என்னுஞ் சாம்பானை ஓர் வேளாளனை யேற்படுத்திப் பாலனுக்குச் சோறூட்டிவித்து வளர்த்துக் கம்பரிடங் கல்வி கற்க விடுத்தனன். பருவகாலத்திலே தகுந்த குடும்பத்திலே யோர் பெண்ணையும் விவாகஞ் செய்து வைத்திருந்தான், அப் புதல்வன் றன்னை வளர்த்த சாம்பான் இறந்தமையால் அதிக வருத்தமுற்றுச் செய்ய வேண்டிய கிரியைகளையுஞ் செய்து நிறைவேற்றினன். அதன்பின் அவ்வாலிபர் தந்தைபோலிருந்து தன்னையன்புடன் வளர்ப்பித்த ஏகன் சாம்பான் என்னும் நாமத்தில், ஏகன் என்னும் முதற்பதத்தையும் தன் ஆசிரியரான கம்பரின் நாமத்தை மத்தியிலும் தந்தையின் பெயரைக் கடையிலும் வைத்து ஏகம்பவாணன் என்னும் பெயரைத் தனக்கு வைத்துக்கொண்டார். அது ஏகம்பவாணன் என மருவிற்று. இவர் கவிபாடுவதில் மகா சாமர்த்தியராம்.

ஏகம்பவாணன்மனைவி - இவர் சொல்லப்பட்ட வாணனது மனைவியான ஓர் பண்டிதை. தன் புருடன் ஓர்நாட் கழனிக்குப்போயிருந்த காலத்துச் சேர சோழ பாண்டியர் என்னு மூவரும் ஏகம்பவாணனைக் காணுமாறு அவன் வீட்டிற்குவந்து, முதலியார் யாண்டுப் போயினர் என வினவ, அவன் காதலியாகிய இப்பண்டிதை, அவர் கழனிக்குப் போயினர் என உத்தரமனுப்ப, அரசர்கள் கேட்டு, ஆ! ஆ!! "முதலியார் முடிநடப்போயினரா" என்று உழவுத் தொழிலை யிழித்துப்பேச அச்சுடு சொற்

கள் காதில் விழப்பெற்ற பதிவிரத சிரோமணியாகிய இம்மாது பெருங் கோபமுற்று, அரசர் என்றதையும் பாரா மல், "சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி - யானை மிதித்த வருஞ்சேற் றின்-மானபரன், பார்வேந்த னேகம்ப வாணன் பறித்து நட்டான் - மூவேந்தர் தங்கண்முடி" என்னும் பாடலைவரைந்து உடனே யரசர் சமுகத்திற் கனுப்பின ராம். அரசர்கள் அதனைப்பார்த்தவுட னே யதிக சந்தோஷமும் வெட்கமுமுற் றுத் தத்தம் பதி யேகினர், பின்னர்த் தனது நாயகன் வீட்டுக்கு வந்து ழி நடந்த வரலாற்றை யெல்லாஞ்சொல்ல, வாணன் ஓர் பூதத்தின் சகாயத்தால் அவர்களைச் சிறைப்படுத்தி, அவர்கள் பகுதிகொடுப்ப ஒப்பியபின் சிறையினின் றும் விடுத்து ஆண்டனன் என்ப.

ஏகம்பன் - ஏகம்பநாதன், ஏகன், ஏகாம் பரன், கம்பன், கம்பநாதன், எனவும் பெயர். இவை காஞ்சிபுரத்தில் திருக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்குஞ் சுவாமி பெயர்.

ஏகலவன் - பாண்டவர் இருந்த காலத் துள்ள ஓர் வேடன். இவன் துரோணரி டஞ்சென்று வில்வித்தை கற்றுக்கொடுக் கும்படி பிரார்த்திக்க, அவர் வீட்டும ராதியரின் அபிப்பிராயப்படி மறுத்தனுப் பினர். அகன்றவனை இவன் தானிருக்கு மிடஞ் சென்று ஆண்டுத் துரோணரைப் போல ஒருருவஞ் செய்து அத்தியந்த அன்புடனே யவர் கற்பிப்பதுபோலத் தன் மனத்தே பாவகம் பண்ணிக் குரு வழிபாட்டின் மிகுதியினுலே தேர்ந்து விசயனைப்போல விளங்கினன். பின்னர்த் துரோணர் ஓர் கபடங் காரணமாக அழைப்பித்து உனது பெருவிரலை யெனக்குக் குரு தக்ஷிணையாகக் கொடு வென்னத் தடையின்றிக் கொடுத்தனன் என்று மகாபாரதம் கூறுகின்றது.

ஏகன்சாம்பான் - வாணமுதலியாரின் பண் ணை யாள். (ஏகம்பவாணரைக் காண்க.)

ஏகாதசிநோன்பு - தேவர்கள் பாற்கடல் கடைந்த காலத்திற் றோன்றிய ஆலகா லத்தைச் சிவபெருமான் தேவஸ்திரீக ளின் மங்கலநாண் நிலைபெறும் பொருட் டாக உண்டு கண்டத்தி லடக்கினர். அத் தின மேகாதசியாம். அற்றையிரவு முழு தும். தேவர்கள் சிவபெருமானைப் பூசித்து நற்பேறு பெற்றனர். இதனை "பொங்குங் கங்காதரன் காளமயின்றே யொன்றும் புகலாமலிருந்தனன்" எனவருஞ் சகலாக மத் திரட்டுச் செய்யுளானறிக. இது யாவருமநுட்டிக்க வேண்டிய விரதமாம்.

ஏகாதசிநோன்புப்பலன் - புரூரவாகு என்ப வன் அநுட்டித்துத் தன் விலங்குருவொ ழிந்துசக்கிரவர்த்தியாயினன். அயோத்தி நகரத்திருந் தரசாண்ட உருக்குமாங் கதன் அநுட்டித்துப் பரமபத மடைந் தான். அவன் ஏவற் பெண்ணொருத்தி யநுட்டித்து ஓரரமகள் கொம்மட்டிக் கொடியிற் சிக்குண்டு நின்றமையை விலக் கித் தேவலோகஞ் செல்ல விடுத்தனள் அம்பரீடனென்பவன் அநுட்டித்து உல கை யொருகுடையினீண்டு வைகுந்தம டைந்தான். வீமன் அநுட்டித்து நினைத் தது பெற்றான். மற்றையோர் சரித்திரங் களை மேற்கூறுதும்.

ஏகாதசிபுராணம்-இஃது சொற்சுவை பொ ருட்சுவைகளா னிறைந்துள்ள ஓர் காப் பியம். யாழ்பாணத்துச் சுன்னாகப்பதியி லெழுந்தருளியிருந்த அ.வரதராஜபண்டி தர் அவர்களாற் செய்தருளப்பட்டது. சைவர், வைணவர், ஸ்மார்த்தர் முதலாயி னோர் அநுட்டிக்க வேண்டிய ஏகாதசி யின் கூறுபாடுகளையும், அநுட்டித்தார் பெற்ற பேறுகளையும் எடுத்து விளக்கு வது. கடவுள் வாழ்த்து, கால நிர்ணயச் சருக்கம், உருக்குமாங்கதச் சருக்கம், வீ மேகாதசிச் சருக்கம் என நான்கு பாகங் களை யுடைத்து, முந்நூற்றைம்பத்தெட் டுச் செய்யுள்களை யுடையது. காருட புரா ணம், சூரிய சித்தாந்தம், பிரமகைவர்த் தம், ஆக்கினேயம், விஷ்ணு புராணம், பவிடிய புராணம், பதுமம், பிரம புரா ணம், கந்த புராண முதலிய நூல்களிலி ருந்து கண்ணுவர், உத்தாலகர், சனற் குமாரர், காத்தியாயனர், பிருகற்பதி, மார்க்கண்டர், வியாதர், சேடர், தேவலர், கபிலர், பயிட்டினசி, யாக்கியவற்கியர், இருசியசிருங்கர் முதலாயினோர் சொல் லிய சாரங்களையெல்லாம் வித்தியாரணிய முனிவர் திரட்டி யோர்நூல் செய்தனர் அதனையுங் கொண்டு இயற்றினர்.

ஏகாதசிமாதவிரதம்-பன்னிருமாதங்களிலே வருகின்ற இருபக்க ஏகாதசிகளின் பெய ரும் அநுட்டித்தார் பெயரும் வருமாறு:- ஏகாதசிவிரதம்-அநுட்டிப்போர் மார்கழி

மாதத்திலே பூருவபக்கத்தில் வரும் ஏகாதசியையே முதலாகக் கொண்டு அநுட்டிக்கவேண்டும்-ஆகலின் அது ஆரம்ப ஏகாதசி யெனப்பெயர் பெறும். முற்காலத்து நாடிசங்கன் மகளுய மரு என்னும் அசுரனுக்குத் தோற்றோடிய இந்திரன், திருமால் சமுகத்திற்சென்று முறையிட அவரது திருமேனியினின்றும், ஓர்சத்தி பெண்ணுகத் தோன்றி யவ்வசுரனைக் கொன்று இந்திரனுதியிமையவர் துன்பத்தையிரியச்செய்தனள். அதனுல் அச்சத்தி யானவள் ஏகாதசி யென்னும் பெயருடையவளாய்,அத்தினத்தையும் ஏகாதசியென நோற்பிக்கும் வரத்தையும் பெற்றுள். மற்றைய அபரபக்கத்து வரும் ஏகாதசிக்கு மோகூ ஏகாதசி யென்று பெயர். இதனைக் கோகுல புரத்து வைகானசர் என்னும் இராசவிருடி யநுட்டித்து முத்தியடைந்தனர்.

தைமாதத்திலே பூர்வபக்கத்தில் வரும் ஏகாதசிக்குப்புத்திரதா ஏகாதசி யெனறு பெயராம். இதனைப் பத்திரவதி புரக்கணிருந்த சுகேது என்னும் அரசனும், அவன் றேவியாய சைப்பியா என்னும் அரசியும் அநுட்டித்துப் புத்திரப்பேற்றை யடைந்தனர். அபரபக்கத்து வருவதற்குச் சபல ஏகாதசி என்று பெயர். இதனைச் சம்பகாவதி பட்டினத்து அரசகுமாரனுய ஏகலன் உபாசித்துத் தத்துவஞானஞ் சாரப் பெற்று முத்தியடைந்தான்.

மாசிமாதத்திலே பூருவபக்கத்து வரும் ஏகாதசியைச்சயஏகாதசி என்று கூறுவர். இதனைக் கந்தருவகுலத்து மாலியவானும், அவன் மனைவியான புட்பவதியும் அநுட்டித்து இந்திரன் சாபத்தானேர்ந்த பிசாசவடிவு நீங்கப் பெற்றனர், அபரபக்கத்து வரும் ஷட்டில ஏகாதசியை ஓர் பிராமண நங்கை நோற்று இட்டசித்தி யெய்தினள்.

பங்குனிமாதத்திலே பூருவ பக்கத்து வரும் ஏகாதசிக்கு ஆமலக ஏகாதசி யென்று பெயர். இதனை வைதிசநகர்ச் சசபிந்து மன்னனும், சயந்தி புரத்து விதுர வேந்தனும் நோற்று வேண்டிய பெற்றனர் மற்றைய அபரபக்கத்து வருகின்ற விசய ஏகாதசியை இராம சந்திரர் உபாசித்து இராவணவதஞ்செய்து, சீதா பிராட்டியையுஞ் சிறைமீட்டு அரசாட்சி பெற்றனர்.

சித்திரை மாதத்திலேபூர்வ பக்கத்தில் வரும் ஏகாதசிக்குக் காமதா ஏகாதசி யென்று பெயர். அதனை நாகலோகத்திருந்த லலிதன் என்னும் கந்தருவன் அநுட்டித்துப் புண்டரீகன் என்னும் அரசன் சாபத்தாலடைந்த இராக்கத ரூபம் மாறப்பெற்றுன், மற்றைய அபரபக்கத்தாய பாவமோசன ஏகாதசியை மஞ்சூடா வென்னுந் தேவ கன்னிகையதுட்டித்துப் பாவங்கள் தொலையப் பெற்றுள்.

வைகாசிமாதத்துப் பூருவ பக்கத்தில் வரும் மோகினி ஏகாதசியைத் துதிமான் என்னும் அரசனும், திருட்டபுத்தி என்னும் வைசியனும் நோற்றுப் பரமபத மடைந்தனர், அபர பக்கத்து வருதீனி ஏகாதசியை அநேக மகா பாதகர்கள் அநுட்டித்து வைகுண்டபதவி யடைந்தனர்.

ஆனிமாதத்திலே பூர்வ பக்கத்துப் பொருந்தும் பாண்டவ ஏகாதசியைப் பாண்டவர்கள் அநுட்டித்துக் கண்ண மூர்த்தியைத் துணையாகக் கொண்டனர். மற்றைய அபர ஏகாதசியில் நித்திரை கொள்ளாத அநேக மகாபாதகர்கள் திருவருள் பெற்று வைகுண்ட மடைந்தனர்.

ஆடிமாதத்து வரும் பூருவபக்கத்துப் பதும ஏகாதசியை மாந்தாதா என்னுஞ் சக்கிரவர்த்தி யநுட்டித்து மழை பெய்வித்துத் தேசவளப்பஞ் செழிக்கப் பரிபாலனஞ் செய்தான். அபர பக்கத்து வரும் யோகினி ஏகாதசியை இயக்கனய ஏமமாலியும், அவன் மனைவியான விசாலாட்சி, கருபை யென்பவர்களும் அநுட்டித்துக் குபேரனுல் நேர்ந்த சாபவிமோசனமாயினர்.

ஆவணிமாதத்திலே பூருவ பக்கத்து வரும் ஏகாதசிக்கு நந்தன ஏகாதசி என்று பெயர். அதனை மகிழித்துவசன் என்பவன் நோற்று மகப்பேறடைந்தான். அபர பக்கத்து வரும் ஏகாதசிக்குக் கர்மிக ஏகாதசி யென்று பெயர். அத்தினத்திற் பசியாயிருந்து உயிர் நீங்கிய பஞ்சபாதகர் யாவரும் பரமபதஞ் சேர்ந்தனர்.

புரட்டாசிமாதத்திலே பூருவ பக்கத்து வரும் ஏகாதசிக்கு வாமன ஏகாதசி யென்று பெயர். இதனை யுபாசித்த விசோசன குமாரனுய மாவலிச் சக்கிரவர்த்தி

யதுட்டித்து இன்புற்றான். மற்றைய அபர பக்கத்து ஏகாதசிக்கு அசா ஏகாதசி யென்று பெயர். இதனை யரிச்சந்திர மகா ராசன் நோற்று இராச்சியங் கொண் டான்.

ஐப்பசி மாதத்திலே பூருவ பக்கத்து வரும் ஏகாதசிக்குப் பாசாங்குச ஏகாதசி யென்று பெயர். இதனைத் தருமராசன் மெய்யன்புடனேற்றுத்தருமத்திற்கு அதி பதியானான். மற்றைய இந்திர ஏகாதசி யை இந்திரசேனன் அநுட்டித்துத் தன் தந்தைக்குச் சுவர்க்கங் கொடுத்தான்.

கார்த்திகைமாதத்துப் பூருவ பக்கத்து ஏகாதசியாகிய பிரபோதினி ஏகாதசியே சிறப்புடைத்து. இத்தினத்திற்றான் அரி மூர்த்தி யறிதுயிலொருவி யெழுந்திருப் பர், இதனிற் போகமுத்தி யடைந்தார் தொகையைப் புகலுத லரிதேயாம். மற் றையது இசமா ஏகாதசியாம். இதனைச் சந்திரபாகை யென்னும் இராச குமாரி யநுட்டித்துத் தன் காதலனையடைந்து வாழ்ந்தாள், இது ஏகாதசி புராணத்தி னின்றும் எடுக்கப்பட்டது.

ஏகாதசிவகை-சொல்லப்பட்ட ஏகாதசிகளு டன் பரம ஏகாதசி, பதுமினியேகாதசி, கௌரிக வேகாதசி, கைசிக வேகாதசி, சர்வசீ வேகாதசி, தத்த வேகாதசிகளு மூண்டு; இவைகளே நூலிற்காண்க.

ஏகாந்தம் - ஒருவந்தம், தனியிடம், வேறிடம்.

ஏட்டையென்னும்பெயர்-வெருகு, எருமை.

ஏணி - இறைவை, கடவை, சேணி, அன்றி யுங் கண்ணேணியின்பேர்-மால்பு.

ஏமாப்பு - எக்கழுத்தம், செம்மாப்பு, இறு மாப்பு, காவல், மிகுகளிப்பு.

ஏயர்கோன் கலிக்காமநாயனார் - அறுபான் மும்மை யடியார்களிலொருவர். பெரிய புராணமென்னுந் திருத்தொண்டர் புரா ணத்தில் அவர் சரித்தத்தைக்கண்டு தெ ளிக. அவர் மூத்தியடைந்த தினமாகிய குருபூசை நட்சத்திரம் ஆனி மாதத்து அசுவினி நட்சத்திரமாம். கலிக்காமநாய னார் எனவும் பெயர் பெறுவர்.

ஏரகம் - திருவேரகம், சுவாமிமலை. இஃது சுப்பிரமணியக் கடவுளின் திருப்படை வீடு ஆறனுளொன்று. அருணகிரிநாத சுவாமிகளாற் புனையப்பட்ட திருப்புகழு டையது.

ஏலம் - ஆஞ்சி, இலாஞ்சி, தகடி.

ஏலாதி - பதினெண் கீழ்க்கணக்கு நூல்க ளுள் ஒன்றென்பது "நாலடி நான்மணி நாலுற்ப தைந்திணைமுப்-பால்கடுகங்கோ வை பழமொழி - மாமூல, மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே - கைந் நிலைய வாங்கீழ்க்கணக்கு" என்ற வெண் பாவாற் றெரியக் கிடக்கின்றது. இது தமிழாசிரியர் மகனரும் மாக்காயனார் மாணாக்கருமாகிய கணிமேதாவியாரால் இயற்றப்பட்டது.

ஏவலிற்சிறந்தவள் - சேடி, தோழி, சகி.

ஏவலிற்சிறந்தவன் - பாங்கன், தோழன்.

ஏவல்-ஆணை, பணி, பரிசாரம், வியங்கோள்.

ஏவல்செய்வோர் - உழையோர், கிங்கரர், சில தர், சிலதியர், சேடர், சேடியர், பரிசனம், பரிசாரகர், தொண்டு செய்வோர்.

ஏவற்சிலதியர் - மடைப்பள்ளியார்.

ஏவுவான் - ஏவுகிறவன், வியவன்.

ஏழிசை - சட்சம், இடபம், காந்தாரம், மத் திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என் பனவாம். என்னை? "சரி கம பத நி யென் றேழெழுத் தாற்றானம் - வரிபரந்த கண்ணினாய் வைத்தத்-தெரிவரிய, வேழி சையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிற் குஞ் - சூழ்முதலாஞ் சுத்தத் தூலே" என்று கூறினாதலின்.

ஏறுதல் - ஆரோகணம், இவர்தல், உந்து தல், ஊக்கல், எக்கல், எஃகல், மிக் கோள்.

ஏறென்னும் பெயர் - புலி, உழை, மரை, ஆ, புல்வாய், எருமை, பன்றி, சுரு, சங்கு,

ஏற்குமட்கலம் - கடிஞை, ஐயம், பாத்திரம்.

ஏற்போன் - இரவலன், பரிசிலான், யாச கன், தீனன்.

ஏற்றல் - இரத்தல், குறைகோள், வேண்டு தல், யாசித்தல்.

ஏனாதிநாயனார் - அறுபத்துமூன்று அடியார் களுளொருவர். இவர் சரித்திரத்தைப் பெரிய புராணத்தில் காண்க. மூத்தியடைந்தினம் புரட்டாதி மாதத் திருவோண நட்சத்திரமேயாம்.

ஐ

ஐக்கியவாதி-சமயிகளுளொருவன். அவன் கொள்கையாவது பதி பசு பாசம் என் னுந் திரிபதார்த்த வுண்மைகளைச் சொல் லுமிடத்துப் பதியென்று சொல்லப் பட்ட பரமசிவனொரு முதலாயிருப்ப

தொன்று. பசுவென்று சொல்லப்பட்ட ஆன்மாக்கள் பல முதலாயிருப்ப தொன்று. பாசமென்று சொல்லப்பட்டது மாயை யென்றுங் கன்மமென்று மிரு வகைப் பட்டிருப்பதொன்று. பிரபஞ்சத் திற்குத் தாய்தந்தையாக வுள்ள சிவபெரு மான் தமது காருணியத்தினாலே ஆன் மாவுக்குப் புண்ணிய பாவங்களுக்கீடான சரீரங்களை மாயையினின்றுங்கொடுப்பர். கருமேகஞ் சூரியனிற் சென்று பொருந் தும் மிடத்து அவ்வாதித்தனது கிரணங்க ளெல்லாம் நீங்கின தன்மைபோல் முத லிற் சுத்தமாய் அறிவாயிருக்கு மான் மாவினிடத்தில் மாயாதேகமொருக்காலு நீக்காமற் பொருந்திவரும், முன்னே செய்த புண்ணியபாவங்களை யிச்சரீரத் திற் கர்த்தாவினுக் கெங்ஙாளும் புசிப் பிப்பன். புண்ணியபாவ மிரண்டுந்தலை யொத்து ஒரு சனனத்தி லெல்லாக்கன் மங்களும் புசித்துத்தொலையத் தக்கதாக வேதேனுமொரு சிவபுண்ணியம் வந்தெ திர்ப்பட்ட வவசரத்து, இவ்வான்மா வுக்குச் சத்திநிபாத மென்பதொன்றுண் டாக இறைவன்றன் காருண்யமே தனக் குத் திருமேனியாகக் கொண்டருளி, உலகத்தவர் யாவருங்கொண்டாடத்தக்க ஆசாரியனாக வெழுந்தருளிவந்து, அழுக் கினால் மிகுத்திருக்கும் புடைவையை வண்ணான் வெள்ளாவியிலே வைத்து அவ்வழுக்கை நீக்கிச் சுத்தமாக வெள்ளை யாக்கின தன்மையைப்போல, இவனி டத்திலுள்ள பாசத்தைத் தீக்கைசெய்து கிரமத்திற் போகத்தக்கதாக உபதேச மருளுமாம். அங்ஙனஞ்செய்யவே யிவ் வான்மா விடத்துள்ள குறைகளெல்லாம் நீங்கச் சுத்தஞ்சித் தண்ணீருந் தண்ணீ ருந் தன்னிற்கூடி, ஐக்கியமா யொன்று பட்டு நிற்குந்தன்மைபோலச்சிவனுடைய அறிவோடுதன்னறிவுகூடி ஐக்கியம் பிறந் தொன்றி நிற்றலே முத்தியாம் என்க. சங் கற்ப நிராகரணத்தாற் பூர்வபக்கம் பண் ணப் பட்டமையறிக.

ஐங்கணைச் செயல்களாவன - பெருமயக்கு, சிந்தாகுலம், புணர்ச்சிக் கிணங்குதல், மோகனம், சந்தாபம், வசீகரணம் என்பன.

ஐங்கணையவத்தைகளாவன-சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பனவாம். அவற்றுட் சுப்பிர யோகமாவது பேசாது ஒழியாதினவாம். விப்பிரயோகமாவது பெருமூச் செறிந்து வருந்துதலாம். சோகமாவது வெதும்பி யுணவு வெறுத்தலாம். மோகமாவது அழுதலும் பிதற்றலுமாம். மரணமாவது உயிர்சோர்தலு மயங்குதலுமாம்.

ஐந்தக்கினி - தவாக்கினி, பஞ்சாக்கினி இது தவஞ்செய்வோர்க்குரியதெருப்பாம். அஃதாவது கிழக்கு மேற்கு வடக்குத் தெற்கு என்னும் நான்கு திசைகளினும் மூடப்பட்ட அக்கினிகளுடன் மேலே சூரியாக்கினியு மொன்று கூடிய ஐந் தாம்.

ஐந்தடி - பாக்களி னடிவகைகள்; அவையா வன:- குறளடி, சிந்தடி, அளவடி, நேரடி, கழிநெடிலடியென்னு மைந்துமாம். அவற் றுள் இருசீரான் வருவது குறளடி. மூச் சீரான் வருவது சிந்தியடியாம். நாற் சீரான் வருவது அளவடியாம். ஐஞ்சீ ரான் வருவது நேரடியாம், ஐந்தின் மிக்க சீர்களான் வருவது கழிநெடிலடியாம்.

ஐந்தருவருக்கம் - சந்தானம் தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம். இவை யிற்றைத் தெய்வமர மென்றுங் கூறு நிற்பர்.

ஐந்தறிவுயிர் - மக்களேயன்றிக் கடவுளை யும் அவனருள்வெளிப் பட்டோரையும் உள்ளவாறுணர்ந்து வழிபடாத மாக்களு மாம்.

ஐந்திணை - குறிஞ்சி, பாலை, முல்லை, மரு தம், நெய்தல் என்பனவாம், இவற்றுள் மலையும் மலைசார்ந்த விடமும் குறிஞ்சி, குறிஞ்சியும் முல்லையுந் திரிந்தவிடம் பாலை,காடுங் காடு சார்ந்தநிலமும் முல்லை, வயலும் வயல்சார்ந்த நிலமும் மருதம், கடலுங் கடல் சார்ந்த நிலமும் நெய்தல்.

ஐந்திணைத்தெய்வம்-குறிஞ்சிக்கு முருகன், பாலைக்குத் துர்க்கை, முல்லைக்குத் திரு மால், மருதத்திற்கு இந்திரன், நெய்த லுக்கு வருணன் என்க.

ஐந்திணைநிலமாவது - மலையும் மலைசார்ந்த நிலமுங்குறிஞ்சி. குறிஞ்சியும் முல்லையுந் திரிந்த நிலம் பாலை. காடுங் காடு சார்ந்த நிலமும் முல்லை. வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம். கடலுங் கடல் சார்ந்த நிலமும் நெய்தலாம்.

ஐந்திணைப்பொழுது-குறிஞ்சித் திணைக்குப் பெரும்பொழுது கூதிரும் சிறுபொழுது நள்ளியாமமுமாம். பாலைக்குப் பெரும்

பொழுது இளவேனில் முதுவேனில் என்னும் இருவகை வேனிலும், சிறு பொழுது நண்பகலுமாம். முல்லே நிலத் திற்குப் பெரும் பொழுது காரும், சிறு பொழுது மாலேக்காலமுமாம். மருதத் திணேக்குப் பெரும்பொழுது இளவேனி லும், சிறுபொழுது யாமமும் வைகறையு மாம். நெய்தற் றிணேக்குப் பெரும்பொழு து கார்க்காலமும், சிறுபொழுது இரு வகை வேனிலுமாம்.

ஐந்திந்திரியங்கள் - மெய், வாய், கண், மூக்கு, செவி யென்பனவாம். இவை ஞா னேந்திரியம் எனப்படும். இவற்றைத் துவக்கு, சிகுவை, சட்சு, ஆக்கிராணம், சுரோத்திரம் என்பர் வடநூலார்,வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஐந்துங் கன்மேந்திரியம்.

ஐந்திர வியாகரணம் - இந்திரனுற் செய்யப் பட்ட ஓரிலக்கணநூல். "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" எனத் தொல்காப்பி யப் பாயிர வுரையினும், "புண்ணிய சர வணம் பொருந்து விராயின்-விண்ணவர் கோமான் விழுநூலெய்துவிர்" எனச் சிலப்பதிகாரம் காடுகாண் காதைச் செய் யுளானும் அதனே யறியலாம்.

ஐந்துகாவியம் - சீவகசிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலே, வளேயாபதி, குண் டல கேசி யென்பனவாம்.

ஐந்துசத்தி - ஆதிசத்தி, பராசத்தி, இச்சா சத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என்பன.

ஐந்துசுத்தி - சிவபூசைக்கு முன்னர்ச் செய் யப்படும் கிரியையிலொன்று. அதாவது பூதசுத்தி, மந்திரசுத்தி, திரவியசுத்தி, ஆன்மசுத்தி, இலிங்கசுத்தி யென்பன வாகும்.

ஐந்துதந்திரம் - மித்திரபேதம், சுகிர்லாபம், சந்திவிக்கிரகம், லப்தஹானி அல்லது அர்த்தநாசம், அசம்பிரேக்ஷிய காரித்துவ மென்பனவாம். இவை நட்புப்பிரிவு, நட் புப்பேறு, அடுத்துக்கெடுத்தல், பேறழிவு, ஆராயாது செயல் எனவும்படும். அவற் றுள் மித்திரபேதமாவது சிநேகிதத்தைக் கெடுத்துப் பகையுண்டாக்கல். சுகிர்லாப மாவது தங்களுக்குச் சமானமானவர்க ளோடு கூடிப் பகையில்லாமல் வாழ்ந் திருத்தல். சந்திவிக்கிரகமாவது பகை வரையடுத் துறவு செய்து செல்லுதல். அர்த்தநாசமாவது தன்கையிற் கிடைத்த பொருளேயழித்தல், அசம்பிரேக்ஷிய கா ரித்துவமாவது காரியத்தைத் தேற விசா ரியாமற் செய்தல்.

ஐந்துதிரவியம் - கடல்படு திரவியம்(5)காடு படுதிரவியம் (5) மலேபடுதிரவியம்(5)நாடு படுதிரவியம் (5) நகர்படுதிரவியம் (5).

ஐந்துபுலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவாம். இவை தன் மாத் திரை, விடயம் எனவுஞ் சொல்லப்படும்.

ஐந்துமந்திரம் - ஈசானய, அகோராய, தற் புருடாய, வாமதேவாய, சத்தியோசா தாய, என்பனவற்றின் இறுதியில் நம சப் தம் வைத்து உச்சரித்தலாம்.

ஐந்துமலம் - ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதாயி.

ஐந்துமுகம் - ஈசானம், தற்புருடம், அகோ ரம், வாமதேவம், சத்தியோ சாதம்.

ஐந்துமூர்த்தி - பிரமன், விஷ்ணு, உருத்தி ரர், மகேசுரர், சதாசிவர் இவர்கள் அணு பக்ஷம், சம்பு பக்ஷம் என விருவகைப்படு வர் என்ப.

ஐந்துலோகம் - இரும்பு, பொன், வெள்ளி, ஈயம், செம்பு முதலியன.

ஐந்துவிசை - கோட்டம், துருக்கம், தகரம், ஐந்துறுப்பு - பகுதி, விகுதி, இடைநிலே, சாரியை, சந்தி யென்பனவாம்.

ஐந்தெழுத்து-பஞ்சாக்கரம், சீவிதமந்திரம், மகாமனு, நமசிவய.

ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித் தல், மறைத்தல், அருளல். இவற்றை முறையே சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என வட நூ லார் கூறுவர்.

ஐப்பசிமாதம் - ஆசுவிகம், ஆசுவீசம்.

ஐம்படை - சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு, என்பன. இவற்றிற்குப் பெயர்க ளாவன - பாஞ்சசன்னியம், சுதரிசனம், சார்ங்கம், நாந்தகம், கௌமோதகி.

ஐம்பால்வகை - ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல இவை முறையே ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பனவாம்.

ஐம்பான்முடி - முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள் இவற்றின் விவரமா வது: முடி-மயிரை யுச்சியின் முடித்தல், குழல் - சுருட்டிமுடித்தல், தொங்கல் - மயிரை முடிந்து தூங்கவிடுதல், பனிச் சை - பின்னிவிடுதல், சுருள் - பின்னே சொருகல் என்பர்.

ஐம்பூதங்களின்குணம் - ஆகாயம் சத்தகுண

முடைத்து. காற்று சத்த பரிசங்களே யுடைத்து. நெருப்பு சத்தம், பரிசம், உரு வம் என்னு முக்குணங்களேயுமுடைத்து. சலம் அம்மூன்றனோடு இரசகுணத்தையு முடையது. மண் அந்நான்களோடு கந்த மென்னுங் குணத்தையுமுடையது.

ஐம்பூதங்கள் - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பனவாம். மண், சலம், நெருப்பு, காற்று, வெளி யெனவுங் கூறப் படும்.

ஐம்பூதத்தின்றொழில் - ஆகாயம்இடங்கொ டுக்கும். காற்று - சலித்து எவைகளேயுந் திரட்டும். நெருப்பு சுட்டு ஒன்றுவிக்கும். சலம் நெகிழ்ச்சி செய்து குளிர்விக்கும். மண் உரத்துத்தரிக்கும்.

ஐம்பூதக்ஷேத்திரம்-பிருதிவி-காஞ்சி, அப்பு-திருவானைக்கா, தேயு-திருவண்ணாமலை, வாயு-திருக்காளத்தி, ஆகாயம்-சிதம்பரம்.

ஐம்பொறிநிகர்ச்சி-துப்புரவு, துளவு. [யாது.

ஐயச்சொல் - என்னை, கொல், எவன், எது,

ஐயடிகள் காடவர்கோனயனார் - அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவர். தொண் டை மண்டலத்திலே, காஞ்சிபுரத்திலே யிருந்து அரசுபுரிந்த, பல்லவராயன் என் னும் அரசனது குடும்பத்திற் பிறந்தவர். உலகமெல்லாவற்றையு மொருகுடையி லாண்டு விரத்தியுற்று, சிவாலயசேவை செய்தலேயே தமக்கு அரசாகக்கொண்டு சிதம்பர க்ஷேத்திரத்தையடுத்துச் சிவ காமி சமேத சபாநாயகரது திருப்பணி விடைகளைச் செய்து அவரது திருவருள் பெற்று, மற்றைய தலங்களோறுஞ் சென்று தலவெண்பாக்கள் பாடியருளி முத்தியடைந்தனர். இவருக்கு ஐயடிகள் நாயனார் எனவும் பெயர். இவர் அருளிய பிரபந்தங்கள் க்ஷேத்திரத் திருவெண்பா முதலியன. இவர் குருபூசைத்தினம் ஐப் பசி மாசத்து வரும். மூலநட்சத்திரமே யாம்.

ஐயமுற்றோனவிநயம்-அஃது வாடிய வுறுப் பும், மயங்கிய பார்வையும், பீடழி புல னும், பேசாதிருத்தலும், வேறுபட்ட செய்கையும், ஆகாயத்தையுந் திசைகளே யும் பன்முறை மாறிமாறிப் பார்த்தலே ஞ்யு செய்வதாம்.

ஐயனார் } அரிகரபுத்திரன், அறத்தைக்காப்
ஐயன் } போன், ஆரியன், கருங்கடல் வண்ணன், காரி, கோழிக்கொடியோன், சாதவாகனன், சாத்தன், செண்டாயு தன், புட்கலைமணாளன், புறத்தவன், பூரணை கேள்வன், யோகி, வெள்ளை யானையூர்தி, இவருக்கு ஆயுதம் வளை, செண்டு. அரி, அரர், கூடப்பிறந்ததால் அரிகர புத்திரர் என்ற பெயர் ஆயிற்று.

ஐயனார்கொடி - கோழிக்கொடி.

ஐயனார்தேவிமார்-பூரணை, புட்கலை. [திரை.

ஐயனார்வாகனம் - வெள்ளையானை, காரிக்கு

ஐயை - மாதரிமகள். இவள் கண்ணகியி னிடத்து மிக்க அன்புள்ளவளாக விருந் தமையாற் றேவந்தியோடு சேராது சென்று கண்ணகியின் கோயிலை யடைந் தாள்.

ஐராவதம்-இந்திரனுக்குரியதாகிய, சுவர்க்க லோகக்கண்ணுள்ளதோர் வெள்ளானை, நாலுகொம்பர்களே யுடையது. கந்தசு வாமியின் றேவியாரு ளொருவராய தெய்வயானை யம்மையாரை வளர்த்த திதுவே. இது பூசித்ததலம் ஐராவதே சம் எனப்படும்.

ஐவகைத்தந்தையர் - அரசன், தலைவன், தந் தை, முன்னோன், குரு.

ஐவகைத்தாயார் - ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், செவிலித்தாய், கைத்தாய்.

ஐவகைநாதம் - கஞ்சம், கண்டம், தோல், துளை, நரம்பு என்பன.

ஐவகைமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்தே யுள்ளன அவையாவன-வெள்ளிடை மன் றம், இலஞ்சி மன்றம், கல்மன்றம், பூத சதுக்கம், பாவைமன்றம் என்பனவாம் அவற்றுள்.

(1) வெள்ளிடைமன்றமாவது அளவும் நிறையும் எண்ணுமாகிய இலக்கங்கள் தம்மிடத்திடப்பட்ட பெயர் பொறித்த பொதிகள் பண்டசாலை வாயிலையும், மற்றையத்துக் கருந்தாழாகிய காவலையு முடையோர் காத்திருக்கும் அரியவாய காவலையும் விடப்பட்ட வாகலான் இந் நகர்க்குப் புதியமாக்கள் சென்கட் போ ருளராயின், அவர் கழுத்துக்கடுக்கப் பொதியை வைத்து ஊரைச் சூழ்ப்பினல் லாது அவர்க்கே யவற்றைக் கொடுத்து விடாதாதலாற் களவென்பதனை மனத் தாற் கனவில் நினைப்பினும் நினைப் போரை நடுக்குவிக்கும் வெளியான இடத்தை யுடையதாம்.

(2) இலஞ்சிமன்றமாவது கூனர் முத லா யுள்ளோரும், தொழுநோயால் அழுகு மெய்யினை யுடையோரும் புகுந்து முழுகி

ன வளவிலே பழுதில்லாத தோற்றத்தை யுடைய நல்ல நிறம் பெறுகையினாலே தன்னை வலஞ்செய்து தொழுது ஆடி நீங்கும் பொய்கை செறிய விருப்பதாம்.

(3) கல்மன்றமாவது வஞ்சனையாற் சிலர் மருந்தூட்டவுண்டு பித்தேதினாரும் நஞ்சையுண்டு நடுங்கு துயரமுற்றோரும், அழலும் விடத்தையுடைய அரவின் வாயிற் கூர்த்த எயிறழுந்தக் கடியுண்டாரும், பிதுங்கின கண்ணையுடைய பேய் பிடிக்கப்பட்டாரும், என்னுமிவர்கள் ஒருகால் வலம்வந்து வணங்க அதனுடனே யத்துயர்கள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளியைக்கால்வதோர் நெடியகல் நாட்டி நாட்டப்பட்டிருப்பதாம்.

(4) பூதசதுக்கமாவது தம்மைப் பிறர் நம்புவதற்குத் தவவேடத்தின் மறைந்து நின்று அத்தவத்திற்கு இழுக்கானவற்றின் கலைழுகும் பொய்வேடத்தாரும், தம்மைத் தங்கணவர் நம்புவதற்குப் பொய்யொழுக்கத்தின் மறைந்து நின்று வசீகரிப்பினெழுகும் அலவைப்பெண்டிரும், தம்படைகுடி முதலிய வைந்திலெடு உயிருறுப்புரிமைக்குத் தம்மைத்தேறிய ளித்த அரசரைக் கீழ்மை யெண்ணுவாரையும், தமது மனைவியர் தனிப்பத் தனித்த பிறர் மனைவியரை விரும்புந் துச்சாரிகளும், தமது நெஞ்சறிபொருளே வஞ்சித்துப் பொய்ச்சான்று எறுவாறும், சிறப்புச் செய்துழி அவர் முன்னிலையிற் புகழ்ந்து புறம்போக்கிற் றூற்றுவாரும், ஆகிய இவர்களே யென்கையிற்கொண்ட இப்பாசத்திடத்து அகப்படும் பெயரென அவ்வூர் நாற்காத வெல்லையுங் கேட்கும் படி தனது கடியகுரலா லுணர்த்திப் பின் அங்ஙனஞ் செய்வாரைப் பாசங்கட்டிவா நிலத்திற் புடைத்துண்ணும் பூதநிற்கப் பெறுதலையுடைத்தாம். இது நாற்சந்தியாயுள்ளது.

(5) பாவைமன்றமாவது அரசனுடைய செங்கோன்மையிற் சிறிது கோடிற்றாயினும் தருமநூன் முறைமையின் அறங்கூறுந் தருமாசனத்தார் உரைக்கும் நடுவுநிலைமைகோடியொருமருங்கு பற்றினும், நாவாற் கூறுது நீருகுத்திக் கண்ணுற் கூறும் பாவை நிற்கப் பெறுவதாம்.

ஐவகைமெய்க்குற்றம் - கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டு வீழல் முதலியனவாம்.

ஐவகைலோகத்தின்பொது - பொன் இவற்றின் கட்டி - தகனம், மாழை, வங்காரம்.

ஐவகைவேள்வி - கடவுள் வேள்வி, (தேவயாகம்,) பிரமவேள்வி, (பிரமயாகம்) பூத வேள்வி (பூதயாகம்) மானுடவேள்வி (மானுடயாகம்,) தென்புலத்தார் வேள்வி (பிதிர்யாகம்,) என்பனவாம்.

ஒ

ஒடிதல்-இடிதல், இறுதல், ஒசிதல், ஞெமிர்தல், பரிதல், மூரிதல், முறிதல். [டகாலும்.

ஒடு-உடுப்பை, மூன்றுமுருபு(உ-ம்)கையொடுங்கல் - கூம்பல், சாம்பல்.

ஒட்டகம் - அத்திரி, இரவணம், ஒட்டை, கனகதம், தாசோகம், தாசேரம், தாசேரகம், அயவணம், நெடுங்கழுத்தன், இதன் பெண்-பிடி, பெட்டை. இதன் குட்டி-கன்று, குழவி.

ஒட்டக்கூத்தர் - மகாகவிகளாகிய புகழேந்திப் புலவர், கம்பர் என்னுஞ் சைவதாசர் கட்கு எதிரியாயிருந்த ஓர் பண்டித சிரோமணியாம். கம்பர் சிவபதப்பிராப்தியாய காலத்திலே "இன்றைக்கோ கம்பனிறந்தநா ளிப்புவியி - லின்றைக்கோ வென்கவிதை யேற்குநான் - இன்றைக்கோ, பூமடந்தைவாழப்பொறைமடந்தை வீற்றிருக்க-நாமடந்தை தூலிழந்த நாள்" எனப்பாடிக்களித்தும் ஓர்காற் றுக்கத்திற் குளித்தமுள்ள புலவர் உறையூரிலிருந்து அரசுபுரிந்த இராஜேந்திர சோழனுக்கும் அவன் மகன் குலோத்துங்க சோழனுக்குஞ் சமஸ்தான வித்துவானாயிருந்தவர். தந்துவாயர், செங்குந்தர் என்னு நாமங்களாற்பெற்ற கைக்கோளர் மரபிற்பிறந்தவர். கூத்தர் என்பது இவரியற் பெயராம். இவரது சாதியாசாரமிய கைக்கோளர் வந்து இவரை நோக்கிப் புலவர் ஏறே. வேளாளர், வணிகர் முதலிய சாதியார்க்குச் சிறப்புப்பாடல்களிருப்பதுபோல எஞ்சாதியார்க்குப் பாடல்களொன்று மில்லையே யென்று வருந்தியபோது அவரைநோக்கி யங்ஙனம் பாடல் செய்யின் அதற்குப்பரிசாக நுங்குலத்தலைப்பிள்ளைகள் எழுபது பேரது தலைதலைக் கொடுப்போமாவென்று கேட்டனர்.

அதற்குச் செங்குந்தர் எக்கமுற, அவர்

களைத் திருப்புவித்தனர். செங்குந்தர் தம் பிள்ளைகள் தலைகளை யறுத்துக் கொண்டுவர இவர் சோழராசனது ஆசாரவாயலிற் குவியுங்களெனக் கட்டளையிட்டனராம். அங்ஙனங் குவித்ததைக் கண்ட சோழராசன் கூத்தரைக் கூவி, ஐய கூத்தரே, இஃதென்னை கூத்து என்று வினவ, இவர் நடந்த விடயங்களைக் கூறி யத்தலைகளை யெல்லாங் குவித்துச் சிங்காசனம்போலச் செய்து அவற்றின்மேலேறி யிருந்து "சுட்டி யெழுபது" என்னும் பிரபந்தத்தைப்பாடி முடித்து இறுதியில் "கலைவாணி நீயுலகி லிருப்பதுவும் கல்வியுணர் கவிவல்லோரை, நிலையாகப் புரப்பதுவு மவர் நாவில் வாழ்வது நிசமேயன்றே" என்னுஞ் செய்யுளைப் பாடி யுயிர் கொடுத்துத் தலையுமுடலு மொட்டச் செய்தெழுப்பினமையால் ஒட்டக்கூத்தர் எனச் சிறப்புப் பெயர் பெற்றனராம், கலிங்கத்துப் பரணி என்னும் பிரபந்தத்தை யிவர் பாடினர் என்ப. அது செயங்கொண்டான் செய்ததாகும். இவர் வீரபத்திரபரணி யென்னும் பரணியே செய்தனராம். இராமாயணத்தில் உத்தரகாண்டம் இவராற் பாடப்பட்டது; 'புகழேந்திப் புலவர்க்கும் இவர்க்கும் வாக்குவாதமாக, நிகழ்த்திய பாடல்கள் பலவுள. புகழேந்திப் புலவரைச் சிறைச்சாலையி லடைப்பித்து அவர்க்குப் பலவித விடும்பைகளைப் பொறுமை காரணமாகச் செய்த கோளர் இவரே. இவரது அகங்காரம், புகழேந்திப் புலவரிடம் சிறைச்சாலையிற் கற்பித்துத் தேர்ந்த குயவன், அம்பட்டன், கொல்லன், தச்சன், என்னுமிவர்களாலடக்கி மடக்கப்பட்டது. இவர் புகழேந்திக்குத் துன்பஞ் செய்ததன்றி, இராசசபைக்கு வந்த வேறநேக புலவர்களையும் சிறை செய்வித்தும், சிரச்சேதம் பண்ணுவித்தும் வந்தனர். இவரே பின்னும் கைக்கோளர் வேண்டுகோட்படி செங்குந்தரைப்பற்றி யாயிரக்கணக்காகப் பாடல் செய்து ஸ்ரீமத் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளாற் றிருவாய் மலர்ந்தருளப்பட்ட கந்தபுராணத்தி னிறுதியிலுள்ள கந்தவிரதப் படலத்திற் சேர்க்க விருந்தனர் என்று கூறுப. இதன் உண்மை யறியாத மூடர்கள் சிலர் "கந்தப்புராணம் பதினாயிரஞ் சொன்ன கச்சியப்பர்" என்னுந் தொண்டை மண்டலசதகச் செய்யுளை, "கந்தபுராணம் பன்னீராயிரஞ் சொன்ன கச்சியப்பர்" எனமாற்றியும், தஞ்செங்குந்த சரிதத்தை யருட் பெருங் காப்பியமாய வதனுள் நுழைக்க வெண்ணி யொழிந் தெரிவாய் நரகிற் கிறையாயினர். இற்க, இவர் கோவை, உலா, அந்தாதிகள் பாடுவதின் மிக்க சாமர்த்தியராம். அது "வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோசயங் கொண்டான் விருத்தமென்னு-மொண்பாவி னுயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தன்" என்னும் பாவிற் காண்க. அதற்கத்தாட்சியாக இவர் பாடிய ஒலியலந்தாதி, குலோத்துங்கன் கோவை, விளக்குகின்றன. இவர்காலம் கந்தபுராணகாரர்க்குப் பிற்பட்ட கம்பர் புகழேந்தி காலமே.

ஒட்டலர்காடழித்தல் - கொற்றவள்ளை.
ஒட்டினர்மேற்சாராமை - தழிஞ்சி.
ஒட்டுதல் - அணைவல், கிட்டல், பொருந்தல்.
ஒட்டுப்புதவம் - இரட்டைக்கதவு.
ஒண்டி - ஊற்றுணி.
ஒதுக்கிடம் - ஒதுங்குமிடம், துச்சில்.
ஒதுங்கல் - ஒடுங்கல், பதுங்கல். [தல்.
ஒத்தறுத்தல் - தட்டல், வட்டணை, வட்டித்
ஒத்து-அந்தரக்கொட்டு, முகமெனவும் பெயர். இந்தவொத்து ஆடின பின்னர் அல்லது உருக்காட்டுதல் வழக்கல்ல வென்ப. என்னை? "முகமாடுத றிரி யோகப் பொருட்டே" என்றாசாகவின்.
ஒப்படியிருக்கை - யாழ்வாசிக்கு மிருப்பினுளொன்று.
ஒப்பனை - அணிதல், அலங்கரித்தல், கைசெய்தல், புனைதல், பூசல், மண்ணல், வனைதல், வேய்தல், பொற்பு.
ஒருகட்பறை - மொந்தை.
ஒருகலை - அமா, திதி, பக்கம்.
ஒருகலைவருமதிநாள் - சினிவாலி.
ஒருகுடி - உதிரப்பிரிவினர், தாயத்தார்.
ஒருகுடியிற்கொண்டோன் - சகலன்.
ஒருங்கு - உடங்கு, ஒருமிக்க.
ஒருதலைக்காமம் - ஆடவனும் பெண்ணுமங் கங்கிருந்து வருந்தல், கைக்கிளை.
ஒருத்தல் - கவரி, யானை, பன்றி, கரடி.
ஒருபலம் - கரடி, தொடி.
ஒருபறைவிகற்பம் - பீலி. [ன்று.
ஒருபாவொருபது-பிரபந்த வகையினுளொ

ஒருபிறப்பு - ஒருமை.

ஒருவகைப்புல் - புதவு.

ஒலி-அதிர்தல், அமலை, அரவம், ஆகுலம், ஆம்பி, ஆரவாரம், ஆர்ப்பு, ஆர்வம், இசை, இடி, இமிழ், இயம், இரக்கம், இரட்டு, இரை, உரை, ஓசை, ஓதை, ஓலை, கம்பலை, கலி, கவ்வை, களன், குரல், குரை, குளிறு, கோடணை, சிலை, சும்மை, சுருதி, ஞிமிர், துவை, ஒளிர், தூழனி, தொனி, நாதம், நினதம், பாடு, பிளிறு, புலம்பு, சத்தம், உளை, ஓசணை, கர்ச்சனை, புலம்பல், முழக்கம், வகுணி, வகுளி, அன்றியும், பறவையாலெழு மொலியின் பெயர்-கலகலம், தூழனி, பயிர். விலங்கினலெழு மொலியின்பெயர்-கோலாகலம். அசையுஞ் சீலையானு மிலையாலு மெழுமொலியின்பெயர் — மருமராஞ்சம். அசையு மாபரணத்தாலெழுமொலியின்பெயர் - சிஞ்சிதம்; அன்றியும் பேரொலியைக் காண்க.

ஒலிக்குறிப்பு - அனுகரணவோசை, அவையாவன அம்மெனல், இம்மெனல், இழுமெனல், ஒய்யெனல், ஒல்லெனல், கல்லெனல், கொம்மெனல், கொல்லெனல் கோவெனல், சரேலெனல், ஞொள்ளெனல், துடுமெனல், நெரேலெனல், பெரம்மெனல், பொள்ளெனல், முகரெனல், வல்லெனல், விடேலெனல், அன்றியு மீரடுக்கொலியின் பெயர் - உபயவோசை. அக்குறிப்புச் சொல்லாவன - கடகடெனல், கலகலெனல், களகளெனல், குளுகுளெனல், சடசடெனல், சரசரெனல், சலசலெனல், சளசளெனல், திடுதிடெனல், நெடுநெடெனல், நெறநெறெனல், பகபகெனல், படபடெனல், பதபதெனல், மடமடெனல், மளமளெனல், முகமுகெனல், முடமுடெனல், இது அநுவாதமென்க.

ஒலித்தலினுட்பேசலாலெழுமொலி - இரத்துதல், உழைத்தல், கரைத்தல், கல்லல், கவலல், குமுதல், குருமித்தல், குளிறல், சிரத்துதல், தெளிர்தல், நாலல், நெளிர்தல், பயிர்தல், பயிர்த்தல், பயிறல், பிதற்றல், பிளிறல், மருளல், மிழற்றல், மூக்கல், மூரலல்.

ஒலித்தல் - அரற்றல், அரிம்பல், அலறல், அழுங்கல், அர்த்தல், ஆலல், இசைத்தல், இடித்தல், இமிர்தல், இமிழ்தல், இயம்பல், இரங்கல், இரட்டல், இரைத்தல்: இணைத்தல், உறற்றல், உரைத்தல், உலம்பல், உழம்பல், உளைத்தல், எங்கல், கதித்தல், கரைதல், கவித்தல், கறங்கல், களைத்தல், குமுறல், குரைத்தல், குளிறல், சலித்தல், சிதைத்தல், சிம்பல், சிரத்துதல், சிலம்பல், சிலும்பல், சிலைத்தல், ஞெள்ளல், தழங்கல், துவைத்தல், தெவிட்டல், தெழித்தல், தொளித்தல், நரலல், நரற்றல், பயிறல், பிளிறல், பிறங்கல், புலம்பல், முரலல், முரற்றல், முழங்கல், விம்மல்.

ஒலியலந்தாதி - ஒட்டக்கூத்தர் பாடியநூல்.

ஒலியின்காரியம் - எழுத்து.

ஒழிதல் - ஒய்தல், ஓவல், ஓவு, மன்.

ஒழியாமை - ஓவாமை, நீங்காமை.

ஒழுக்கமின்மை - கையறல், கையறை.

ஒழுக்கம்-ஆசாரம், இயல்பு, கை, கையாறு, சரிதை, சரித்திரம், சாரித்திரம், செயல், செய்கை, செய்தி, தினை, நடை, நன்னிலை, பத்தி, மஞ்சரி, சரியை, முறை, வாகை. அன்றியு நல்லொழுக்கம் - சீலம், ஞானம், விருத்தி. ஒழியாவொழுக்கத்தின் பெயர் - கைதவாமை, கையொழியாமை.

ஒழுங்கு - அணி, ஆவளி, ஆளி, இராசி, ஒளி, கோதை, சிரேணி, தாமம், தாரை, நிரல், நிரை, பத்தி, மாலை, வீதி.

ஒளி - அரி, ஆதபம், இலக்கம், எல், கடி, கதிர், கரம், காந்தி, கானல், கிரணம், கிளர், கேழ், சவி, சுடர், செடி, சோதி, தாமம், தூணி, துளக்கம், தேசிகம், தேசு, நகை, நிலவு, நிழல், நிறம், நீமம், மின், வாமம், வாள், விரியல், வில், வெயில். மிகுமொளி - சுப்பிரம்.

ஒளிசெயல் } அலக்கல், அவிர்தல்,
ஒளிசெய்தல் } இமைத்தல், இலகுதல், இலங்குதல், ஒடித்தல், ஒளிர்தல், சுடர்தல், தயங்கல், திகழ்தல், தூலங்கல், தூளங்கல், நகுதல், நிகழ்தல், ஒளிர்தல், அலங்குதல், நிலவல், பிறழ்தல், மிளிர்தல், மின்னல், வயங்கல், விரிதல், விளங்கல், நகல்.

ஒளித்தல்-கரத்தல், கரப்பு, கரவு, குவித்தல், மறைதல்.

ஒளிமழுங்கல்-அழுங்கல், அழுக்குதல், புல்லெனல், மட்கல், மழுக்கல், மழுங்குதல்.

ஒற்றர் - சாரணர், சாரர், வேயர்.

ஒற்று - வேய்.

ஒற்றுமை-ஒருவந்தம், ஒருமை, குறிக்கோள், தோட்டிமை, குறிப்பு.

ஒற்றெழுத்து-உடம்பு, உடல், புள்ளி, மெய், வியஞ்சனம், விராமம், உறுப்பு, புலுதம்.

ஒற்றைக்கைவகை - இணையா வினைக்கை யெனவுஞ் சொல்லப்படும். அவையா வன:- பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அ ரா ளம், இளம்பிறை, சுக துண்டம், முட்டி கடகம், சூசி, கமல கோசிகம், காங்கூலம், கபித்தம், விற் பிடி, குடங்கை, அலா, பத்திரம், பிர கரம், தாம்பிரசூடம், பசாசம், குமுளம், பிண்டி, தெரிகிலை, மெய்ந்கிலை, உன்னம், மண்டலம், சதுரம், ம ரா ன் ற லை, சங்கு, வண்டு, இலதை, கபோதம் மகரமுகம், வலம்புரி யென்னு மிப்பத்து மூன்றுமாம்அதனை"இணையாவினைக்கை யியம்புங்காலை - யணைவுறு பதாகை திரிப தாகையே - கத்திரிகை தூபமரா ள மிளம் பிறை - சுகதுண்டம்மே முட்டிகடகஞ் - சூசிபதும கோசிகந்துணிந்த மாசில் காங் கூலம் வழுவறுகபித்தம் - விற்பிடிதெரி கிலை யலாபத்திரம்மே-பிரமரந்தனெடு தாம்பிர சூடம் - பசாச முகுளம் பிண்டி தெரிகிலை - பேசிய மெய்ந்கிலை யுன்னமண் டலஞ் - சதுரமான்றலை சங்கே வண்டே- யதிர்வினிலதைகபோத மகரமுகம்-வலம் புரி தன்னெடு முப்பத்து மூன்றென்-றில ங்குமொழிப் புலவரினைத் தனென்ப:: என்பதானறிக.

ஓ

ஓசனித்தல்-போதற்கொருப்பட்டு முகறல்.

ஓசுநர் - எண்ணெய் வாணிகர், பரவர்.

ஓசைசெய்தலை - குடச்சூல், ஞெகிழம்.

ஓடம் - அம்பி, நாவாய், பகடு, பஃறி.

ஓடல்-இரிதல், நிமிர்தல், நீளல், நெறிதரல், பாறல், அன்றியு நேரோடல் - ஆதி, தாரை,வீதி வட்டமாயோடலின் பெயர்- சாரிகை, சுற்றல், மாதி, வாளி.

ஓடவகை - அரிமுகவம்பி, கரிமுகவம்பி, பரி முகவம்பி. சிங்கமுக ஓடம் அரிமுகவம்பி யாம். யானைமுக ஓடம் கரிமுகவம்பி யாம். குதிரைமுக ஓடம் பரிமுக வம்பி யாம்.

ஓடை-தடாகம்,நீர்நிலை, யாற்றிடைக்குறை.

ஓடைமரம் - உலமை, உலவை.

ஓட்டல் - செலுத்தலின் பெயரைக்காண்க.

ஓணன்- அண்டசம், ஒதி, ஓந்தி, ஓமான், சர டம், சாயாதனம், தண்டு, முசலி, காம ரூபி, கோம்பி, ஓத்தி, தோகைப்பகை.

ஓதல் - பாடம், மையாடல்.

ஓதும்பள்ளி - அறப்புறம், அறச்சாலை.

ஓத்து - நேர்மையான இனம் பொருந்திய இரத்தினங்களை வரிசையாக வைத்தாற் போல ஒரினப் பொருளை யொருவழி வைப்பதாம்.

ஓத்துரைப்போர் - கணக்காயர்.

ஓமகுண்டம் - தடம், தடவு, நித்திய வீதி, வேதி,வேள்வி, வேள்விக்குண்டம்,நித்தம்.

ஓமமண்டபம் - ஓமாலயம், சமித்தம்.

ஓமவிறகு - சமிதை, முளரி.

ஓமாலிகை - முழுகுதற் குரிய நன்னீரிலே யிடப்படுஞ் சுகந்தப் பொருள்களு ளொன் று. அதுமுப்பத்திருவகைப்படும்.அவை யாவன:-இலவங்கம், பச்சிலை,கச்சோலம், எலம், நாகணம், கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சம், கண்டில், வெண் ணெய், கடுநெல்லி, தான்றி, துத்தம், வண்ணக்கச்சோலம், அரேணுகம், மாஞ் சி,சயிலேகம், புழுகு, புன்னைத்தாது,புலி நகம், பூஞ்சாளம், தமாலம், வகுளம், பது முகம், ஞண்ணேலம், கொடுவேரி நாகம், மதாவரிசி, தக்கோலம், நன்னாரி, வெண் கோட்டம்

ஓமமரம்-(மரவகையினொன்று)உகா. [து.

ஓய்வு-ஒரினப்பொருளை வரிசைபட வைப்ப

ஓரறிவுயிர் - பரிசவுணர்ச்சி யொன்றனையே யுடைய புல் மரம் முதலியனவாம்.

ஓரீற்றுப்பசு-கிட்டி.

ஓரொற்றுவாரம் - ஒருமாத்திரை பெற்று வரும் நாடகச் செய்யுள்.

ஓலியற்குடியிற்பிறந்தோன் - நல்லியக்கோ டன் என்னும் அரசன். இவனிலங்கையிற் பிறந்து இந்தியாவில் வந்து ஆமூர், எயிற் பட்டினம், வேலூர் என்னும் மூன்றாரினு மிருந்து அரசாண்டவன்.பகைவரா லடிக் கப்பட்ட ஓர் காலத்திலே குன்றமெறிந்த குமரவேளை வழிபட்டு அவராஞ்ஞைப்படி தானீராடிய கேணிப்பூவை வேலாகப் பாவித் தெறிய அது சென்று பகைவரை யழிக்கத் தான் அரசுகைக் கொண்டா னென்க.

ஔ

ஔகம் - இசைப்பாட்டு.

ஔகி - இடைப்பாட்டுக்கூத்தி.
ஔசு - நோற்பாகுணவு.
ஔவையார் - இவர் சரசுவதியின் அவதார மென்ப கருவூர் ஆதியென்பாள் வயிற்றிற் பகவன் என்னும் பிராமணர்க்குப் புத்திரி யாக அவதரித்து "நரப்புக் கருவியோர் நண்ணிடுசேரியிற்-பாணரகத்திலௌவை பிறந்தனள்" என்பதனால் பாணர்சேரி யில் வளர்ந்து வந்தனர். "இல்லறமல்லது நல்லறமன்று" என்று கூறினராயினும், பிரமசரிய விரதத்தை யநுட்டித்து வந்த னர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, கல்வியொழுக்கம், மூதுரை, நல்வழி, விநாயகரகவல், பந்தனந்தாதி, அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான் மணிக்கோவை, அருந்தமிழ்மாலை, தனிச னப்பத்து, ஞானக்குறள் என்பவற்றோடு பிடகநிகண்டு என்னு நூலையும் பாடினர். முன்னையவாய ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்னு மிரண்டினையும் (Dr. Jhone) டாக்டர். ஜோன் என்பவரும், (Rev. Bissot And Sudgen) றெவறெ ண்டு பிஸ்ஸெட் என்பவரும் சட்சென் என்பவரும் ஆகிய ஆங்கிலர் மூவரும் விய ந்து இங்கிலீஷ்பாடையில் மொழிபெயர்த் திருக்கின்றனர்.

அன்றி, ஜர்மனிபாடையாரும் உலாந் தாக் காரரும்தத்தம் பாஷையின் மொழி பெயர்த்திருக்கின்றனர். இவர் அதிகமான் வஞ்சியினூற் கொடுக்கப்பட்ட அழிந்து வீணையும் கருநெல்லிப் பழத்தைப் புசித்து அநேக காலம் வசித்திருந்தனர் எனத் தெரிகிறது. அது புறநானூற்றுச் செய்யு ளாற் காட்டியுள்ளாம். இவர்பற்பல தனிப் பாடல்களைப் பாடினர். கணபதிபூசை செய்து அவர் துதிக்கையாற் கையேக்கு விட அங்கு வாழ்ந்திருக்கின்றனராம்.

உயிர்வருக்கப் பொருட்டொகுதி
முற்றிற்று.

க

கக்கரி - வாலுங்கி.
கங்கணம் - தொடி, கடகம், வளை.
கங்கை-சானவி, சுரநதி, திரிபதகை, பகீரதி, பாகீரதி, தேவநதி, மந்தாகினி, வரநதி, உமைகரநதி, தசமுகநதி, சிரநதி, தெய்வ நதி, வானதி, விமலை. [சித்தம்.
கசப்பு - கடு, கைக்கை, கைத்தல், கைப்பு,
கச்சபாலயஐயர் - காஞ்சிபுரத்தில் பிறந்வர். ஆதிசைவப் பிராமண குலத்தவர். சைவ சித்தாந்தக்கோட்பாடுடையவர். பார்க்கவ புராணமென்னும் விநாயக புராணத்தை வசனநடையில் எழுதினவர் இவரே. இவர் அநேக தனிப்பாடல்கள் செய்துள்ளார்.
கச்சியப்பசிவாசாரியசுவாமிகள்-தொண்டை மண்டலத்திற் சிறந்து விளங்கா நின்ற காஞ்சிபுரத்தின் கண்ணே ஆதி சைவர் குலத்திலே, கல்வியறி வொழுக்கங்களி னலுஞ் சிவபக்தி சிவஞானங்களினலுஞ் சிறப்புற்றோங்கிய காளத்தியப்பசிவாசாரி யர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் காஞ்சிபுரத்துள்ள குமரகோட்டத் தருச் சகருள் ஒருவர் அவர் நெடுங்காலம் புத் திர னில்லாமையாற் பெருங்கவலை கொ ண்டு புத்திர பாக்கியத்தின் பொருட்டுக் குமரகோட்டத்தின் கண் எழுந்தருளிய பெருங் கருணைக் கடலாகிய சுப்பிரமணி யக் கடவுளை விதிப்படி சிரத்தையோடும் உபாசித்துக்கொண்டு வந்தார். வரும் பொழுது, அக்கடவுளது திருவருளினலே தமிழ்நாட்டார்கள் சுப்பிரமணிய பத்தி பெற்றுய்யும் பொருட்டு, அச் சிவாசாரிய ருக்கு அவருடைய கற்பினிற் சிறந்த பத் தினியாரது அருமைத் திருவயிற்றில் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார்.

அப் புத்திரருக்குக் கச்சியப்பர் என நாமகரணஞ் செய்யப்பட்டது. அவர் ஐந் தாம் வயசிலே வித்தியாரம்பஞ் செயப் பெற்று, சம்ஸ்கிருதம், தமிழ் என்னும் இரண்டு பாஷைகளையும் கற்பாராயினர். அன்பு, அருள், வாய்மை, பொறைஅடக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் அவரோ டுடன் வளர்ந்தன. அவர் ஏழாம்வயசிலே உபநயனஞ் செயப்பெற்று, வேதாத்திய யனஞ் செய்வாராயினர். சிலகாலத்துள் ளே சம்ஸ்கிருதத்தில் வேத வேதாங்கங் களையும் தமிழில் இலக்கண விலக்கியங் களையும் கற்று வல்வராயினர்.

அவர் சிலகாலமாய பின் சமய தீக்ஷை பெற்று, தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதுவாராயினர். அதன் பின் விசேஷ தீக்ஷைபெற்றுச் சைவாகமங் களிற் கிரியா காண்டங்களைக் கற்றறிந்து கொண்டார். அதன் பின் நிருவாண தீக்ஷையும் ஆசாரியா பிஷேகமும் பெற்று

சைவாகமத்தின் ஞானகாண்டங்களே ஒதி, அவற்றின் பொருளையும் தேவாரதிருவாசகங்களின் பொருளையுங் கேட்டு, அப்பொருள் வேதத்தின் ஞான காண்டங்களாகிய உபநிடதங்களின் பொருளோடு அபேதமா யிருக்கக்கண்டு, அதனைச் சிந்தித்துத் தெளிந்து கொண்டார்.

இவ்வியல் புடையராய் விளக்க முற்ற கச்சியப்பசிவாசாரியர்குமரகோட்டத்துச் சுப்பிரமணியக் கடவுளே மெய்யன்போடு பூசை செய்துகொண்டு வந்தார். ஒருநாட் சுப்பிரமணியக் கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி "அன்பனே, நீ காந்தபுராணத் தாறு சங்கிதைகளுட் சங்கரசங்கிதையின் முதற் கண்டமாகிய சிவரகசியகண்டத்தினுள்ள நமதுசரித்திரத்தைக் கந்தபுராணம்எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக்கொடுத்து மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் விழித்தெழுந்து அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, உரோமஞ் சிலிர்ப்ப, உரைதடுமாற, கரையற்ற இன்பக்கடலில் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒரு பொருட்படுத்தி வந்தருளிச் செய்த எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுளது பெருங்கருணைத்திறம் இருந்தபடி என்னேஎன்னே" என்று ஆனந்தக் கூத்தாடினார்.

மற்றைத்தினத்திலே கச்சியப்பசிவாசாரியர் நித்தியகரும முடித்துக்கொண்டு சுப்பிரமணிய பூசை செய்தபின், புராணம்பாட ஆரம்பித்தருளினார். நாடோறும் நூறு செய்யுள் பாடி, அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்தாணியையும் இராத்திரி காலப் பூசை முற்றியபின் குமரகோட்டத் தடிகளுடைய திருவடிக்கீழ் வைத்துவிட்டுத் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு தமது திருமாளிகைக்குப் போவார். பிற்றை நாட் காலையிலே நித்திய கரும முடித்துக்கொண்டு, பூசையின் பொருட்டுத் திருக்கோயிலினுள்ளே புகுந்து ஏட்டை எடுத்துப் பார்த்து, அதிற் சிலவிடங்களிலே திருத்தப்பட்டிருத்தல் கண்டு அதனைச்சிரமேற் கொண்டு ஆனந்த பரவசராய்ச் சிறிது பொழுது நின்று பின் பூசை செய்வார்.

இவ்வாறே கச்சியப்ப சிவாசாரியர் கந்த புராணம் பாடி முடிந்த பின், அதனைக் குமர கோட்டத்தில் அரங்கேற்றும் பொருட்டுச் சுப தினமுஞ் சுப முகூர்த்தமும் நிச்சயித்துக்கொண்டு எங்கு முள்ள சிவனடியார்க ளெல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளினார். ஏவலாளர்கள் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். சுட்டப்பட்டசுபதினத்திலே, திருநெறித் தமிழாகிய தேவார திருவாசகங்களில் வல்லபெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேத வேதாங்க பண்டிதர்களும், தமிழ்ப் புலவர்களும், இராசாக்களும், பிரபுக்களும், பிறருமாகிய எல்லாரும் வந்து கூடினார்கள்.

கச்சியப்ப சிவாசாரியர் குமரகோட்டத் தடிகளைப் பூசைசெய்து, அவர் சந்நிதானத்திலே மெழுகிப் பீடமிட்டு, அதின் மேற் பட்டை விரித்து, புஷ்பங்களைத் தூவித்தூபங்கொடுத்து ஆசனங் கற்பித்து கந்தபுராணத்திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து வணங்கித் துதித்தார். பின்பு இருந்துகொண்டு, "திகட சக்கரச் செம்முகமைந்துளான்" என்னும் முதற் செய்யுளை ஒரு முறை வாசித்து, "திகழ் தசக்கரச்செம்முகம் ஐந்து உளான்" என்றெடுத்து, "விளங்கா நின்ற பத்துத் திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களுமுள்ள சிவபெருமானுடைய" என்று பொருளருளிச் செய்தார். உடனே அங்கிருந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர் "சுவாமிகள், திகழ் தசம் திகடசம் என்புணர்தற்கு விதி தோல்காப்பிய முதலிய இலக்கண நூல்களுள் ஒன்றிலாயினும் இலையே" என்றார். அதற்குக் கச்சியப்ப சிவாசாரியர் "தாங்கள் கூறியதொக்கும், ஆயின் இம்முதலடி என்வாக்கன்று, சங்கப்புலவராகிய சுப்பிரமணியக் கடவுளது திருவாக்கு, அவரே எனக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளினார் என்றார். அது கேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "சுப்பிரமணியக்கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆகுக ஆயினும் அது இரகசியம்; அதனை நாங்கள் அங்கீகரிப்பதெங்ஙனம்? அக்கடவுள் சுவாமிகளுக்குத் தோன்றியது போல எங்களுக்குந் தோன்றி இவ்வடி நாமே எடுத்துக்

கொடுத்தருளினேம் என்று திருவாய் மலர்ந்தருளின் அங்கீகரிப்போம். அன் றேல், இதற்கு யாதானு மோரிலக்கண நூலில் விதிகாட்டின் அங்கீகரிப்போம். அல்லாக்கால், அரங்கேற்ற வொட் டோம்'' என்றார். கச்சியப்ப சிவாசாரி யர் ''இவ்விரண்டினுள் ஒன்று நாளைச் செய்யப்படும்'' என்றருளிச் செய்து சபையாரைப் போக்கிவிட்டு, அற்றைத் தினத்திலே திருவமுதுசெய்யாது இராத் திரிகாலப் பூசை முற்றியபின் திருக்கத வந் திருக்காப்பிட்டுக் கொண்டு சந்நிதி யிலே தரையிலே சயனித்தருளினர். அப் பொழுது சுப்பிரமணியக் கடவுள் கச்சி யப்ப சிவாசாரியருக்குச் சொப்பனத் திலே தோன்றி, ''அன்பனே சோழ தேசத்தில் வீரசோழியம் என்று ஓரிலக் கண நூலிருக்கின்றது திகழ்தசம திக டசம் எனப் புணர்தற்கு அந்நூலிற் சந்தி படலத்திற் பதினெட்டாஞ் செய்யுளி லிருக்கின்றது; சோழ தேசத்துப் புலவ னொருவன் அந்நூலை நாளைக்கு இவ்வி டத்திற் கொண்டு வந்து அவ்விதியை எல்லாருக்குங் காட்டுவன்'' என்று திரு வாய் மலர்ந்து மறைந்தருளினர்.

மற்றை நாட் சபையாரெல்லாருங் கூடியிருந்தபொழுது, கச்சியப்ப சிவாசா ரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்ப னத்தில் அருளிச் செய்தமையை அவர்க ளுக்குச் சொல்லியருளினர். உடனே ஒரு புலவர் ஒரு புத்தகங் கையிற் கொண்டு அங்கே வந்தனர். அவரை அங் குள்ளோர்கள் நோக்கி, ''நீர் யாவர்? உமது கையிற் புத்தகம் யாது?'' என்று வினவினர்கள். அதற்கு அப்புலவர் ''நாம் சோழதேசத்துள்ளேம், இப் புத்த தகம் வீரசோழியம்'' என்றார். அப்பொ ழுது முன்னை நாளின் ஆக்ஷேபித்த புல வர் விரைந்து சென்று, அப்புத்தகத்தை வாங்கிச் சந்திபடலத்திற் பதினெட் டாஞ் செய்யுளை வாசித்துத் திகடசக்க ரம் என்னும் புணர்ச்சிக்கு விதி அதிலி ருத்தலை உணர்ந்து விம்மிதமும் மகிழ் ச்சியு முற்றனர். மற்றைத் தமிழ்ப் புல வர்களும் ஒருவர் பின் ஒருவராக அதனை வாங்கிப் பார்த்து விம்மிதமும் மகிழ்ச் சியு முற்றார்கள். இறுதியிலே சோழ தேசத்துப் புலவர் அப் புத்தகத்தைக் கச்சியப்பசிவாசாரியர் கையிற் கொடுத்து சபையாரெல்லாரையும் நோக்கி, ''ஆக்ஷே பம் ஒழிந்ததா'' என்று சொல்லிவிட்டு மறைந்தருளினர். உடனே கச்சியப்ப சிவாசாரியர் தம்மை யாண்டருளிய அறு முகக் கடவுளது பெருங் கருணைத் திறத் தை நினைந்து நினைந்து, சரீரம் விதிர்ப் புற, மயிர்க்காறூறும் திவலை உண் டாக என் பெல்லாம் நெக்கு நெக்குருக, மதகிடைப் புறப்படும் சலம்போல் ஆ னந்தபாஷ்பம் பொழியப் பரானந்த பர வசராய்எழுந்தருளியிருந்தார்.அப்போது சபையாரெல்லாரும், ''இங்ஙனம் எழுந் தருளிவந்த புலவர் குமாரக் கடவுளே'' என்று துணிந்து ஆச்சரியமடைந்து, வெயிலிடைப் பட்ட வெண்ணெய்போல மனங் கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்பக் குறு வேர்வை கொள்ள ஆனந்த வருவி சொரிய ஆனந்தக் கூத்தாடிக் கச்சியப்ப சிவாசாரியருடைய பெருமையை நன்கு ணர்ந்து, அவர் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து, அவ ரைத் தோத்திரஞ் செய்தார்கள். ஆக்ஷே பஞ் செய்த புலவர் கச்சியப்பசிவாசாரி யரைப் பலதரமும் நமஸ்கரித்து, ''எம் பெருமானே, புழுத்த நாயினுக்கடையே னாகிய தமியேன் சுவாமிகளுடைய மகி மையைச் சிறிதும் அறியாது ஆக்ஷே பித்த பெருங் குற்றத்தைப் பொறுத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக'' என்று அதிவிநயத்தோடு பிரார்த்தித்து, மீட்டும் அடியற்ற மரம்போல் வீழ்ந்து கிடந்தார். கச்சியப்பசிவாசாரியர் எழுந்து, அப் புலவருடைய இரண்டு கைகளையும் தம்முடைய அருமைத் திருக் கைகளினாலே பற்றி யெடுத்து இறுகத் தழுவி, ''ஐயரே, தங்கள் ஆக்ஷே பத்தினாலன்றே இச் சபையாரெல்லா ருக்கும் திருவருளினுண்மை வெளிப்பட் டது. இதன்பொருட்டுத் தங்களுக்குச் செயற்பாலதாகிய கைம்மாறு யாது, அறியேம் அறியேம்'' என்று பாராட்டி யருளினர்.

அதன்பின் சபையாரெல்லாரும் நமஸ் கரித்து, ''சுவாமிகள், இனிப் புராணத் தைத் தடையின்றி அரங்கேற்ற ஆரம் பித்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.அங்ஙனமே கச்சியப்பசிவா சாரியர் அரங்கேற்றுவாராயினர். காஞ் சித் திருநகரத்திலுள்ள ஆதிசைவர்கள்

முதலானவர்களுக்கும் கந்தபுராணங் கேட்கவந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசன முதலியவைகளெல்லாம் தொண்டை நாட்டுள்ள இருபத்து நான்கு கோட்டத்து வேளாளப் பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாக வந்து பேராசையோடு கேட்கக் கச்சியப்பசிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி ஓராண்டிலே முடித்தருளினர்.

புராணமுற்றுப் பெற்றவுடனே கச்சியப்பசிவாசாரியர் புராணத் திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து நமஸ்கரித்தார். அப்பொழுது அங்குள்ள எத்திரத்தார்களும் அன்பினோடு விம்மி விம்மித் தண்டாகாரமாக விழுந்து, கச்சியப்பசிவாசாரியரை நமஸ்கரித்தெழுந்து, இரண்டு கைகளுஞ் சிரசின் மேலேறிக் குவிய நின்று துதித்தார்கள். கச்சியப்சிவாசாரியர் கந்தபுராணத் திருமுறையோடுந் தந்தச் சிவிகையில் எழுந்தருளி, இருபத்துநான்கு கோட்டத்துமுள்ள வெள்ளாண்மையுள்ள வேளாளப் பிரபுக்களுள்ளே சிலர் சிவிகை தாங்க, சிலர் வெண்சாமரம் வீச, சிலர் குடை கொடி பிடிக்க, நாளுவித மங்கல வாத்திய வொலியினாலே திக்குகளெல்லாஞ் செவிடுபட பிராமணர்கள் வேத கோஷஞ் செய்ய சிவனடியார்கள் சரவணபவ ! சரவணபவ !! என்று சொல்லும் பேரொலி தழைக்க திருநகர வாசிகள் திருவீதிகடோறுஞ் சுத்திசெய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரண கும்பங்கள் வைத்துப் பொரிதூவித் திருவிளக்கேற்றி அறகெடுக்க, தமது அருமைத்திருமேனியிலே தரிக்கப்பட்ட திருபுண்டரத்தின் அழகையும், உருத்திராக்ஷ மாலைகளின் அழகையும், சின்முத்திரையையும், திருக் கண்களினின்று பொழியும் பரமானந்த வாரியையும், அடியார்கள் கண்டு மன நெக்கு நெக்குருக வணங்கித் துதித்து, ஆனந்தக்கூத்தாட திருவீதி வலஞ்செய்து, குமரகோட்டச் சந்நிதியை அடைந்து சிவிகையினின்றும், இறங்கித் திருமுறையைத் திருக்கோயிலுள்ளே கொண்டு போய்த் திருமுன்னே வைத்தருளினர். உடனே எல்லாரும் கச்சியப்ப சிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்ற வழியும் தவிராது, ஆரமையினாலே பலகாலும், நமஸ்கரித்து "பரமகருணாநிதியாகிய எம் பெருமான் தமிழ் நாட்டார் செல்லாரும் பிழைக்கும் பொருட்டுத் திருவாய் மலர்ந்தருளிய அப்புராணமாகிய திவ்யாமிர்தத்தை அடியேங்கள் எஞ்செவி வாய்மடுத்து உய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ் செய்து இன்புழற்றூர்கள்.

தமிழ்நாடெங்குமுள்ள சிவனடியார்களெல்லாரும் இக்கந்தபுராணத்தை மிகப் பாராட்டி, சிரத்தையோடு எழுதுவோரும், வாசிப்போரும், பொருள் சொல்வோரும், கேட்போருமாய் இதன் சொற் சுவை பொருட்சுவைகளை அனுபவித்துப் பேரானந்தப் பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.

பெருங்கருணைப் பிழம்பாகிய கச்சியப்பசிவாசாரியர் பின்னருஞ் சிலகாலம் குமரக்கோட்டத் தடிகளைப் பூசை பண்ணிக்கொண்டும் ஞானநிட்டை செய்துகொண்டும் இருந்து, அகண்டாகாரநித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தனர்.

இந்தக் கந்தப்புராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம் சத்தியம், முக்காலுஞ் சத்தியம்.

கச்சியப்பமுனிவரர்- இந்நூலாசிரியர் பெயர் கச்சியப்பமுனிவர் ஸ்ரீகைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினத்து ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் மரபில் அநுக்கிரகம் பெற்றவரும் தமிழ்ப்பாஷை தழைத்தோங்கும் வண்ணம் அவதரித்த மகான்களுள் ஒருவருமாய் இச்சிரேஷ்டாசிரியர் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றைம்பது வருஷத்திற்கு முன் தொண்டைமண்டலத்திலே, தணிகைத் திருப்பதியிலே, காஞ்சிபுரத்துப் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே அபிஷிக்தர் மரபிலே அவதரித்து ஒழுக்கம், அன்பு, அருள், முதலியநற்குணங்களோடு வளருவராயினர்.

தந்தை தாயர்களாற்றக்க பிராயத்தி லே வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற் றுச் சிறிது கல்வி கற்ற அளவிலே அவர் சிவபுண்ணிய மேலீட்டினாலே சிவக்ஷேத் திர யாத்திரை செய்யத் தொடங்கினர். தொண்டை நாட்டினுள்ள சிவஸ்தலங்கள் யாவுந் தரிசித்துக்கொண்டு, சோழ நாட் டிலே வீராட்புருடனுக்கு இருதய ஸ்தா னமாகிய சிதம்பரம் முதலிய திருப்பதி களைத் தரிசித்தார். பின்னர் ஸ்ரீஞானக் கோமுத்தி, கவகோடி சித்தவாசபுரம், அரசவனம் ஆதியாகிய திருப்பெயர்கள் பூண்ட திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து, திருக் கைலாச பரம்பரைச் சித்தாந்த சைவ பானுவாகிய ஸ்ரீநமச்சிவாய மூர்த்தி களைத் தரிசித்துத், திருவருணைக்கஞ் சித்திக்கப் பெற்று, அப்பொழுது அத் திருமரபிற் சின்னப்பட்டத்தில்எழுந்தரு ளியிருந்த ஞானசாரியராகிய பின்வேலப் ப தேசிகரை ஒடுக்கத்திலேபோய்த் தரி சித்துப் பேரன்போடு வணங்கினர். வணங்கியபின் அந்த ஞானதேசிகரிடத் திற்றானே சைவசங்கியாசமும் சிவதீக்ஷை யும் பெற்றுக்கொண்டார்.

இங்ஙனம் சிவதீக்ஷைபெற்ற கச்சியப்ப முனிவர், அகத்திய மஹாரிஷியின் வரத் தினுற் றென்னாட்டில் அவதரித்து, எளி திலே வடமொழி தென்மொழிக் கடல் கள் கரைகண் டுணர்ந்து அவ்வேலப்ப தேசிகராகிய ஞானசாரியரிடத்தே அ னுக்கிரகம் பெற்று, மெய்யுணர்வின் முதிர்ந்து சித்தாந்த சைவ சிவஞான யோகீஸ்வரரை வித்தியா குரவராகக் கொண்டு அம்மெய்ஞ்ஞான முனிவரி டத்தே தென்மொழியிலே பல இலக் கண நூல்களும் இலக்கியங்களுந் தருக்க முஞ், சிவஞான நூல்களாசிய மெய் கண்ட சாஸ்திரம் பதினொன்றும் பண் டார சாஸ்திரம் பதினொன்றும் மற்றும் பல நூல்களும் ஓதி யுணர்ந்து, கல்வி கேள்விகளில் முற்றப்பேறுடைய மஹா வித்துவானெனப் பெயர்பெற்று, அச் சிவஞானயோகிகளுடைய மாணாக்கரா கிய இலக்கணம் சிதம்பரநாதமுனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனி வர், காஞ்சிபுரம் சரவணபத்தர், சிதம்பர பத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை முதலிய பல்லோருள்ளும் மிகச் சிறந்தவராய் வீற்றிருந்தார்.

"இணரூழ்த்தநாரு மலரனேயர் கற்ற-துணர விரித்துரையாதார்" எனவும் "உய்த்துணர்ந்துஞ் - சொல்வன்மையின் றெனினென்னுமஃதுடைத்தேற்-பொன் மலர் நாற்ற முடைத்து" எனவும் நாயனா ராதியர் கூறியதற்கு இவரோர் இலக்கிய மாகத்திகழ்ந்தனர். இவரது வாக்குவல்ல பத்தையும் பிரசங்க சாதுரியத்தையும் புகழாதார் இல்லை. இவர் செய்யுளியற் றும் விரைவு கேட்டுருப் பண்ணிய பழம் பாடம் ஒப்பித்தல்போல் இருந்ததென்று சொல்லுவர். இது மட்டோ? காலம் இடங்கட்குத் தக்கபிரகாரம் நூதனம் நூதனமான யுக்திகள் வேண்டியவாறு அவரது வாயினின்றுஞ் சனித்துக் கொண்டிருக்குமானால் அவர் பெருமை இத்துணைத்தென்று சொல்லற் பாலதா?

பின்பு கச்சியப்பமுனிவரர் சிவபெரு மான் அப்புலிங்க மூர்த்தியாக எழுந்த ருளியிருக்கப் பெற்ற திருவானைக்காவில் அமர்ந்திருந்த பொழுது அத்தலமான் மியமாகிய திருவானைக்காப் புராணமும் பூவாளூர்ப் புராணமும் மொழிபெயர்த் தருளினர்.

பின்னர்க் கொங்கநாட்டிலே வீராட்பு ருடனுக்கு விருந்துள்தானமாகிய ஆதிபுரி யென்னுந் திருப்பேரூரிற்கு எழுந்தருளி, ஆண்டுச்சின்னாள் வதிந்து, பேரூர்ப்புரா ணம் மொழிபெயர்த் தருளினர்.

அதன்பின் திருத்தணிசென்று ஆங் குச்சிலகாலம் வீற்றிருந்து இயற்றமிழ்ப் போதகாசிரியர் விசாகப்பெருமாளையர், வித்வான் சரவணப்பெருமாளையர் இரு வருக்கும் பிதாவாகிய கந்தப்பையர் முத லாயினோர்க்குக் கல்வி கற்பித்தருளினர். அப்பொழுது அன்னோரும் அன்னோ ரன்ன பிறருந் தமிழிற்கு ஓர் புறச்சமயி யாற் செய்யப்பட்ட சீவகசிந்தாமணி யைப் பேரிலக்கியமாகக் கொண்டாடு தலேப் பார்த்துத் தமிழில் அவ்வித மாட் சிமை பொருந்திய இலக்கியம் பிறிதின் மையான் மனக்கவற்சி யுடையராய் அக்குறையைத்தாமே முடித்தல்வேண்டு மென்று திருவுளத் தமைத்து இத்தணி கைப் புராணத்தை அருளிச் செய்தார். சொல்வளம் செய்யுணடை, சந்தம், பொருட்சுவை யென்றிவற்றில் தமி ழுள்ள எந்த இலக்கியமும் இதற்கு மேற்

பட்டில தென்பது இதனை வாசிப்போர்க்கு எளிதில் விளங்கும். சீவகசிந்தாமணியின் சந்தமும் வனப்பும் இதில் யாண்டுங் காணலாம்.

தம்மாணக்கரிற் சிறந்தவராகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே ஓர் குன்மநோயுண்டான பொழுது தணிகையாற்றுப் படையைப்பாடி அவர் நோயைமாற்றியருளினர். அதனன் அவர் எத்துணைச் சிவானுபூதிமா னென்பது தெள்ளிதிற் புலப்படும். இவையன்றித் திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதியும் வேறு சில பிரபந்தங்களும் அங்கே இருந்த பொழுது இயற்றினர். பின்பு சென்னைமாநகருக்குச் சென்று ஙங்குச் சிறிது காலம் வதிந்தார். அப்பொழுது அவ்விடத்துப் பக்த ஜனங்களுட் பிரபுக்களாயுள்ளோர் பலரது வேண்டுகோட்கிசைந்து விநாயகபுராணம் சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலியன இயற்றி அவர்கள் அடியுறையாக இரண்டாயிரம் வராகனிட அதைக்கொண்டு திருவாவடுதுறையில் ஆதீன பரமாசாரியராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி மண்டபப்பணி அணிபெறச் செய்வித் தருளினர். விநாயகபுராணம் அரங்கேற்றிய சபைக்கு ஐயாப்பிள்ளை என்னும் ஒரு பெரியபிரபு தாம்வர இதென்ன இராமாயணமா என்று சற்றிகழ்ந்தனர். மற்றப் பிரபுக்கள் முனிவர்க்கு அதனை மறைத்தும், அவர் யாரும் பிரமிக்கத் தமது புராணத்தைஆரம்பியாது இராமாயணத்தை எடுத்துக்கொண்டு,முதல் ஆறு செய்யுளில் நூறு குற்றம் கூறினர் உடனே அப்பிரபு, நூறுவராகனும் மிக உயர்ந்த பட்டுவஸ்திராதிகளும் கொண்டு போய்ப் பாத காணிக்கையாக வைத்துத் தீர்க்க தண்டஞ் சமர்பித்துத், தேவரீர், சுவாமிகள் மகத்துவம் அறியாத ஏழையை மன்னித்தருள்க வென்று விண்ணப்பஞ்செய்ய அதன்மேற்றமது புராணத்தை ஆரம்பித்து அரங்கேற்றினர்.

இம் முனிவர் சென்னப்பட்டணத்திலிருக்கும்போது, காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருந்த அவராசிரியராகிய சிவஞான யோகிகள்பால் ஆக்குள்ள தமிழ் வித்துவான்கள் ஒருங்கு சேர்ந்து நீவிர் காஞ்சிமான்மியஞ் செய்யப்புகுந்து அதன்கட் கடவுள் வாழ்த்திற் "சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளு மறைக்கோவுந் தழல்கால்சூல-மங்கேந்து மம்மானுந் தத்தமது தொழிறலின் முற்றச் செய்தோர் - பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப விருமுனிவர் பணிந்து போற்றக்-கொங்கேந்து மணிமன்றுட் குனித்தருளும் பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்" என்னுஞ் சபாநாயகர் துதியை முன்னர் அமைத்துத் "தணந்தபெருந் துயர்க்கடன் மீக் கூர்தலிஞன் மலை பயந்த தாளமூரற்-கணங்குழையாள் புரி பூசை முடிவளவுந் தரியாம லிடையே கம்பை - யணங்கினேத்தா தென விடுத்து வலிந்திறுகத் தழீஇக்கொள்ள வமையாக் காதன்-மணந்தருளிக்குறி பூண்டவொரு மாவிற்பெருமானே வணக்கஞ்செய்வாம்" எனத்தல நாயகராகிய ஏகம்பநாதர் துதியைப் பின்னர் வைத்தது தவறென்று சாதித்தனர். அவர் தமது மாணக்கனைக் கொண்டு அவர்களைப் பங்கப்படுத்துவதே தகுமென்று திருவுளத்தமைத்துஅதனைக் கச்சியப்ப முனிவருக்குத்தெரிவித்தார். உடனே முனிவரர் சென்னையினின்றும் புறப்பட்டுக் காஞ்சிக்குச் சென்று அனைவரையும் ஏகம்பநாதர் மண்டபத்திற் சேரச் செய்து பிரசங்கம்பண்ண ஆரம்பிப்பாராகி, அந்த ஸ்தலத்து ஓதுவாரை நோக்கிச் சமயகுரவர்களாகிய நாயன்மாராற் பாடப்பட்ட தேவாரத் திருமுறையில் இந்த ஸ்தலத்துப் பதிகங்களுள் ஒன்றனை முதலிலே ஓதும்படி சொல்ல அவர்கள், "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கினர். அப்பொழுது அவர் வித்துவான்களை நோக்கி இவர்கள் "திருச்சிற்றம்பலம்" என்று ஆரம்பிக்கின்றார்களே, இது உங்கட்குச் சம்மதி தானே? இவர்களை யெல்லாம் நீங்கள் சேர்ந்து இச்சந்நிதியில் இந்த ஸ்தலத்துப் பதிகங்களைப் பிருதுவியம்பலம் என்று சொல்லி ஆரம்பிக்கும்படி செய்யக்கூடாதா வென்ன அனைவரும் வாயெடாது ஊமர்கள் போலத் தலைவணங்கியிருந்தனர். அதன்மேற் கடவுள் வாழ்த்தில். முன்னர் விநாயக வணக்கமும், அதன் பின்னர் சபாநாயகர் துதியுங் கூறுதலேசிறந்ததென்று பல பல பிரபல நியாயங்கள் காட்டி அவ்வித்துவான்கள் அவமான மடையச் செய்தனர்.

பின்னர் ஸ்ரீ காஞ்சிநகரத்தில் எழுந்த

ருளியிருக்கத் திருவுளங் கொண்டார். அங்கே வீற்றிருந்தபோது தமது ஆசிரியர் சொல்லத் தலைமேற்கொண்டு காஞ்சிப்புராணத்து இரண்டாங் காண்டஞ் செய்தருளிப், பின்பு கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது, கச்சியானந்த ருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி, பஞ்சாக்கரவந்தாதியென்று, இன்னோரன்ன பலநூல்கள் இயற்றியருளினர்.

இங்ஙனம் லோகோபகாரமாகப் பல நூல்கள் இயற்றிப், பல நன்மாணாக்கர்களுக்குக் கற்பித்துத் தமிழ்மொழியை அபிவிருத்திசெய்து, சிவப்பேற்றிற்குக் காரணமாகிய சிவத்தியானநிதி களினுறைப்பில் வதிந்தருளிக், கச்சியப்பமுனிவரர் ஸ்ரீ காஞ்சிபுரத்திலே சாலிவாகன சகாப்தம் 1712-க்குச் சரியான சாதாரண ஸ்ரீ சித்திரை மீ 11 உ யாகிய மங்களவாரம், புனர்பூச நக்ஷத்திரம் பூருவபக்ஷம் சத்தமிகூடிய கும்பலக்கினத்திற் பரிபூரண தசையடைந்தனர்.

கச்சின்றலைப்பு - கஞ்சகம், சார்வாரம்.

கச்சு - பண்டிகை, வம்பு, வார், சிவிகை, விசிகை, பட்டிகை, வட்டுடை.

கஞ்சா - கஞ்சம், குல்லை.

கஞ்சி - காடி, குழம்பு, பாகு, பாத்து மோழை, வர்க்கு, வசிலம், அவாகு, யவாகு.

கடகக்கை - பெருவிரல்நுனியும், சுட்டுவிரலின் நுனியைப் பொருந்த வளைத்து நகநுனியைப் பொருந்திநிற்ப மற்றை யமூன்று விரல்களும் நிமிர்ந்து நிற்பனவாம். அதனை "கடகமுகமேகருதுங் காலைப்-பெருவிரனுனியுஞ்சுட்டுவிரனுனியு-மருவ வளைந்தவ் வுகிர் தனிகௌவ்வி-யொழிந்த மூன்றும் வழி வழி நிமிர-மொழிந்தன ரென்ப முடிபறிந்தோரே" என்னுஞ் சூத்திரத்தானறிக.

கடகம் - கங்கணம், கண்டிகை, கைவளை.

கடகாவருத்தக்கை - இரண்டுகையுங் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயைந்து நிற்பது. அதனை "கருதியகடகா வருத்தக்கையே-யிருகையுங்கடக மணிக்கட்டியையது" என்னுஞ் சூத்திரத்தானறிக.

கடத்தல் - அகறல், இகத்தல், உகளுதல், கழித்தல், குதித்தல், குப்புறல், ஓவல், பாறுதல், சேறல், பரிகரி, நடத்தல், தாண்டல், தாவுதல், நீடுதல், நீத்தல், வாவுதல், இறத்தல்.

கடமையின்குட்டி - கன்று, குழவி.

கடம்பு - அரத்தம், இந்துளம், கதம்பம், நீபம், விசாலம், அன்றியும் நிலக்கடம்பு-கேகதனம், வெண்கடம்பு - மரா, மராமரம்.

கடலை - (ஒரு பயறு) சூரம், மஞ்சூரம்.

கடல் - அத்தி, அப்பு, அம்பரம், அம்புராசி, அம்போதி, அரி, அருணவம், அலை, அழுவம், அளக்கர், ஆர்கலி, ஆழி, ஊழி, உத்தி, உந்தி, உப்பு, உவரி, உவாவு, உவர், ஓதம், கலி, கார்கோள், குரவை, சக்கரம், சமுத்திரம், சலதி, சலநிதி, சலராசி. சாகரம், சிந்து, அன்னவம், உததி, கார், கோள், சிந்துவாரம், திரை, தோயநிதி, தெண்டிரை, நதிபதி, நரலை, நீராழி, நேமி, பயோததி, பரப்பு, பரவை, பாராவாரம், புணரி, பெருநீர், பௌவம், மகராலயம், மகோததி, முந்நீர், வலயம், வாரம், வாரணம், வாராசி, வாரி, வாரிதி, வாருணம், வீசை, வெள்ளம், வேலாவலயம், வேலை, தோயம், நீர், தொன்னீர்.

கடல்சார்ந்தநிலம் - நெய்தல், கடற்சார்பு, நெய்தனிலம், சமப்பால்.

கடல்படுதிரவியம்-உப்பு, ஒக்கோலை, சங்கு, பவளம், முத்து என்னும் திரவிய மைந்து.

கடவுண்மகாமுனிவரர் - இவர் கச்சியப்பமுனிவரர் காலத்திலிருந்த வோர்புலவர். இவர் ஓர் குரூர நோய்வாய்ப்பட்டு, உழந்தைக்கண்ணுற்ற முனிவரனுர் தம் உள்ளத்தாற் கிளர்ந்த அன்பு மேலீட்டாலே அவரை நோக்கி, நீவிர் வாதவூரடிகள் திருச்சரிதத்தைப் புராணமாகப் பாடுதிரென்ன, அங்ஙனம் பாடி முடித்துத் தம் நோய் நீங்கப்பெற்றனர் என்ப. இவர் பாடிய புராணத்திற்குத் திருவாதவூரடிகள் புராணம் என்று பெயர். அது ஏழு சருக்கங்களையும், 544-செய்யுள்களையு முடைத்து. இவர் இலக்கணம் சிதம்பரநாதமுனிவரர் சோதரரென்பர்.

கடவுண்மணி - நிதானம், நிதி. [மடலை.

கடவுமரம் - கடலை, கவரிறுக்கு, நடலை,

கடவுள் - அகண்டாகண்டன், அகநிலை, அகாரி, அசலன், அச்சயன், அச்சுதன், அடிகள், அதிகுணன், அதுலன், அத்தன், அந்தாதி, அபயன், அமலன், அருட்குடையோன், அருளாழி வேந்தன், அரூபி, அறக்கொடியோன், அறவாழி மன்னன், அறுகுணன், அனகன், அனந்தஞானி, அனந்தலோசனன், அனந்தன், அனுதி, ஆதி, ஆதிபுங்கவன், இறை

கண்மூடல் - சிமிழ்த்தல், கண்மூடுதல்.
கண்வரி - அரி, அலரி, கண்ணின்வரி.
கதவு - அரணம், அரவம், கதவம், கவாடம், காப்பு, தோட்டி, புதவம், புதவு, வாரி, ஒபு, கிளர்வி, உதைபு, நிகுத்தை, கபாடம், அரரி. [மூசற்றல், கதறுதல்.
கதறல் - அரற்றல், அழைத்தல், கத்தல்,
கதிர் - அலகு, ஏனல், குரல்.
கதிர்காமக்கலம்பகம் - இஃது யாழ்பாணத் திற் பிறந்த சரஸ்வதி பீடம் கந்தப்ப சுவாமிகள் என்னு நாமமுடைய வேளாள குலதிலகரால் செய்தருளப்பட்டது. இது முடிந்தவுடன் அவர்க்குள்ள குரூரநோய் நீங்கியது. சொற்சுவை, பொருட்சுவை நிறைந்துள்ளோர் பிரபந்தம்.
கதிர்காமம் - ஈழநாட்டிலேயுள்ள திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய ஸ்தலங்களுளொன் று. இது கதிரை, கதிரைமலை, ஏமகூடம், முத்திநகர், குன்றுதோறுடற்பதி, ஆகாய குமாரகேஷ்த்திரம் எனவும் பெயர்பெறும். அருணகிரிநாத சுவாமிகள் ஆண்டுச்சென் று தரிசித்துத் திருப்புகழ் கூறியுள்ளார். சிவஸ்தலங்களுட் சிதம்பரம் எங்ஙனஞ் சிறந்ததோ அங்ஙனமே சுப்பிரமணிய ஸ்தலங்களுள் இது விசேடித்தது. சூரபன் மனைச் சங்காரிக்க அமர்ந்தருளியபாடிவீடு என்று கூறப்பட்ட ஏமகூடமிதுவே, எவ் விடத்தும் எக்காலத்துங் கண்டு கேட்டி ராத அத்தியற்புதத் திருச் செய்கைகள் இத் தலத்து இப்போதும் நடந்து வரு கின்றன. உக்கிர சோழமகாராசன், நர சிங்கச்சோழன் முதலாயினர்க்கு இராச தானியாயிருந்தது. சிவஞானவொளியால் பேரின்பத்தைக் கொடுப்பது என்பது காரணமாய்க் கதிர்காமம் என வந்தது. இதன் விசேடத்தை கேஷ்த்திரக்கோவை ப்பிள்ளைத்தமிழ், திருப்புகழ், கதிர்காமக் கலம்பகம், கந்தபுராணம், கதிர்காம மான் மியமென்பவற்றுட் காண்க. இது இலங் கையின் தென்பாகத்திலே மகேந்திரகட லாய இந்து சமுத்திரத்திற்கு வடக்கே யுள்ள காலி என்னும் பட்டினத்துக்குச் சமீபமாயுள்ளது. இத்தலத்தின் உபய கதிர்காமமா யுள்ளது யாழ்ப்பாணத்து மேலைப்புலோலியிலே யுள்ள "புதுச்சந் நிதி" என்னுந் தலமேயாம். அகன் மகி மையை மேலே காண்க.
கதிர்த்தொகுதி - கற்றை. [கொடியது.
கதுப்பு - அலு, கபோலம், கவுள், கன்னம்,
கத்தரிக்கைக்கை-திரிபதாகைபோலவளைந்த பவித்திர விரலின் பக்கத்து அங்குவியா கிய நடுவிரலைச் சுட்டு விரலோடு பொரு ந்த நிமிர்ப்பது. [வழுதுணை.
கத்தரிச்செடி - பிரகதி, வங்கம், வழுதலை,
கத்தரித்தல்-கொய்தல். [துருக்கம், நரந்தம்.
கத்தூரி - நானம், மான்மதம், மிருகமதம்,
கத்தூரிமிருகம் - இரம்பம், காசறை, துருக்கம், நரந்தம், நாரசம், நாவி, நான் மா, நானம், மறுவல், மறுவி, மான்மதம், மிருகமதம்.
கந்தபுராணச்சுருக்கம் - குமாரக்கடவுள் கதை. இதில் தெய்வயானை, வள்ளிநாயகி யார் திருமணம், சூராதிகளுற்பத்தி, ஒடுக்க முதலிய கூறப்பட்டிருக்கிறது. இதனை யியற்றியவர் சம்பந்தசரணலையசுவாமிகள்.
கந்தபுராணம் - ஓரிலக்கங் கிரந்தங்களையும் ஆறுசங்கிதைகளையு முடையது. இதன் ஒவ்வோர் பாகங்கள் கந்தபுராணமென வும், உபதேச காண்டம் எனவும், சூத சங்கிதை யெனவுந் தமிழிற் செய்யப் பட்டுள்ளன.
கந்தருவர்-காந்தருவர், கின்னரர் கந்திரர், யாழ்வல்லோர், வீணைவல்லோர், இயக்கர்.
கந்தித்தல்-மணம், முருகு, மன்றல், வாசம், விரை, வதுவை, நானம், வேரி, கடி, தேன், வம்பு, கான், கந்தம், மோதம், நாற்றம், கமழல், வெறி நறை.
கபிலநிறம் - குரால், புகர், புற்கு.
கமண்டலம் - கரகம், கரண்டம், காண்டம், குண்டிகை. [விடர், விடவு, விளவு.
கமர் - கது, நிலப்பிளப்பு, விடப்பு, விடம்பு,
கமுகு - கந்தி, கமுகம், கிரமுகம், பூகம், பூக்கம். இதனிலை - கூந்தல், மடல்.
கமுக்கட்டு - வாகுமூலம், கைம்மூலம்.
கம்பளி - கம்பலம், கம்பளம், சிம்புளி.
கம்பு - செந்தினை, கவலை.
கம்மாளர் - அக்கசாலையர், அறிவர், அற் புதர், ஓவர், கண்ணுளர், கண்விணஞர், கம்மியர், கொல்லர், சிற்பியர், தபதியர், தூவட்டர், புலவர், பூனைவர், யவனர், வித்தகர், வினைஞர், ஓவியர்.
கயிலை-இரசதாசலம், கயிலாசம், விசயார்த் தம், வெண்மலை, வெள்ளிமலை, வேதண் டம், சயிலாதி, நொடித்தான் மலை.
கயிறு - அக்கம், இரச்சு, கச்சை, கடம், தாமம், தாம்பு, நாண், நாரம், நார், பழுதை, பாசம், புரி, வடம்.

கரகம் - கற்கரி, கன்னல், சிரகம், சீகரம், வற்கரி, கர்க்கரி.

கரடி - உளியம், எண்கு, எலு, குடாவடி, பல்லம், பல்லுகம், பல்லூகம், செங்கண் மா, வல்லூகம், மிளிறு. இதனுண் - ஒருத்தல்.

கரடிப்பறை - தட்டை.

கரடிப்பறைக்காரணம் - கரடி போலக் கத்துவதனால் அப்பெயர்த்து.

கரடு - மிசைத்திரள், காலடி, பரடு.

கரண்டி-சிற்றகப்பை, கரண்டம், கரண்டகம்.

கரத்தல் - நிறுத்தல், மறுத்தல், மாற்றல்.

கரந்துவரலெழினி - மேற்கட்டுத் திரையாகவுஞ் செயற்பாட்டுடனே வகுக்கப்படுவது.

கரந்துவரலெழினி கட்டுதற்குக் காரணம் - ஆகாய சாரிகளாய்த் தோன்றுவார்க்கென்க.

கரந்துவர லெழினியி னிலக்கணம் - ஒரு மூகவெழினி, பெ ரு மூக வெழினியினுஞ் சிறப்புடைத்தாய், அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரென்று சொல்லப்பட்ட வச்சிரதேகன், வருணன், இரத்தகேசுவரன் என்னு நால்வகை வருணப் பூதர்களையுஞ் சித்திரத்தாலமைக்கப்பட்டு அரங்கிற்றாங்க விடுவது. இதனை "கூறிய வரங்கிற் குறியொடு புணர்ந்தாங் - காடுநர்க்கியற்று மரங்கினெற்றிமிசை - வழுவில் பூத நான்கு முறைப்பட - வெழுதின ரியற்றலியல் புணர்ந்தோரே" எனவும் "முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்" எனவும் மதிவாணர் நாடகத் தமிழ்நூலினும் "அரிதரங்கிற், செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற்பூதரையு-மெய்தவெழுதி யியற்று" எனப் பரத சேனுபதீயத்துங் கூறிய வாற்றுணர்க. இப்பூத நான்கின் உண்டியும், அணியும் ஆடையும், அணியும் மாலையுஞ் சாந்தமும் பொழுதுஞ் செயலு முதலியவற்றையெல்லாம் சிலப்பதிகாரம் அழற்படு காதைக்கண் உரைத்தவற்றுணர்க.

கரி-இருத்தை, கந்துள், இருந்தை, நல்லம்.

கரிகாடு - பொச்சை, சுரம், பொதி.

கரிக்குருவி - கஞ்சரீடம், கஞ்சனம், கயவாய், காரி, கிகிணி, பாரத்துவாசம், பிள்ளை, வஞ்சுளன், வயவன், வயான், வலியான்.

கரியபோளம் - மூஷாம்பரம், மூசாம்பரம்.

கரு - சினை, பீள், சூல், வயா, கருப்பம்.

கருக்குவாளிமரம் - கத்திகை, மூத்தகம்.

கருங்காலிமரம் - கதிரம், காயத்திரி, குடக்கினி.

கருங்கிளி - கீரம், கிள்ளை, அரி.

கருங்குரங்கு - காருகம், காரூகம், பூகம்.

கருங்குவளை - பானல், காவி, குவலயம்.

கருடன் - இமையிலி, உவணன், ககபதி, கதேசுவரன், கலுழன், சிதமுகன், சிதாநநன், சுபர்ணன், உவணம், சௌரி, பறவை வேந்தன், தார்க்கியன், நாகாசனன், நாகாந்தகன், பன்னகவயிரி, பன்னகாசனன், புதனுக் கினையோன், புள்ளரசு, மாலூர்தி, வயினதேயன், விஷ்ணுரதம், வைனன்.

கருணைக்கிழங்கு - கந்தம், சூரணம்.

கருதல் - உன்னல், எண்ணுதல், கண்ணுதல், காணல், குறித்தல், சிந்தித்தல், சுட்டல், சூழல், நினைத்தல், நுதலுதல், புகறல், பேணல்.

கருத்து - இங்கிதம், உளம், உள்ளம், உன்னம், ஊகம், எண்ணம், குறிப்பு, சிந்தனை, சிந்தை, சேத்து, தியானம், நண்ணயம், நாட்டியம், நினைவு, படர்மதம், முன்னம்.

கருநாரை - (ஒருவகைநாரை) சிகரி.

கருநிறம் - அசிதம், அஞ்சனம், இருள், கருள், கறை, காரி, காழகம், காளம், காளிமம், கார், சாமளம், சாமம், நீலம், நல்லம், மால், மா.

கருநெய்தல் - நீலம், இந்தீவரம், உற்பலம்.

கருநெய்தற்பேதம் - நீலோற்பலம்.

கருந்தினை - இறடி, கங்கு.

கருப்பம்பயிலிடம் - பைங்குழி, பைசந்தி.

கருப்பூரத்தின்வகை - மலைச்சரக்கு, மலை அடைவுச்சரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மார்ப்பற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாரூசு, சூடன், சீனச்சூடன், என்பனவாம்.

கருமணல்-அலை, அறல், (மணலைக்காண்க.)

கருமபூமியியல் - உழவு, தொழில், வரைவு, வாணிகம், விச்சை, சிற்பம் என அறுவகைப்படுந் தொழிற்பாகுபாட்டினையுடையது.

கரும்பு - இக்கு, கழை, கன்னல், வேழம்.

கரும்புரு - கபோதம், பாராவாரம், பாராவதம்.

கருவழலை - (ஒருவகைப்பாம்பு) இராசமா

நாகம்.

சட்டை - அங்கி, கஞ்சுகம், கஞ்சுகி, கஞ்சுளி, காஞ்சுகம், காஞ்சுகி, குபுசம், குப்பாயம், தைப்பை, மெய்ப்பை, வாணம், வாரணம்.

சண்டாளர் - அகலர், இழிஞர், கவுண்டர், களஞர், கனகதர், குணுங்கர், கொலைஞர், புலைஞர், மாதங்கர், வங்கர், வீழோர்.

சண்பகமரம் - சம்பகம், செண்பகம்.

சதங்கை - காலணி, கிண்கிணி, சிறுமணி, கிங்கிணி.

சதயநாள் - குன்று, சுண்டன், செக்கு, போர்; வருணனுள்.

சதுரக்கள்ளி - கண்டீவரம், வச்சிரம், வச்சிராங்கம், கண்டீரம், அயிலி.

சதுரக்கை - சுட்டுவிரலும் நடுவிரலுந் தம்முட் சேர்ந்து இறைஞ்சப் பெரு விரல் அகம்வர வைத்துச் சிறுவிரல் பின்பே நிமிர்ந்து நிற்பது. என்னை? "சதுரமென்பது சாற்றுங்காலை - மருவிய மூன்று நிமிர்ந்தகம் வளையப் - பெருவிரலகமுறப் பொற்பச் சேர்த்திச் - சிறுவிரல் பின்பே நிமிர்ந்த செவ்வியி னிறுமுறைத் தென்ப வியல் புணர்ந்தோரே" என்று சுத்தானந்தப் பிரகாச பரத நூலார் சொற்றராகலின்.

சத்தமருத்துக்களின்பெயர் - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல், கீழ், பல யோனியுயிர்.

சத்திக்கொடி - தாடிமஞ்சம்.

சத்திசெய்தல் } அபனம், உக்காரம், உமிழ்தல்,
சத்திபண்ணல் } ஓங்கல், கக்கல், வமி, வமநம், வாந்தி, தெவிட்டல், கான்றல், உற்காரம்.

சத்தியம் - ஆணை, சபதம், வஞ்சினம், வட்டித்தல், பிரமாணம், சூள், விரதம்.

சத்தியவகை - சூள், சூளுறவு, விகற்பம்.

சத்து - கத்து, கந்து, கொளுத்து, பொருத்து, மூட்டு.

சந்தனம் - அனுக்கம், ஆரம், ஈகம், கோரவாரம், சத்தம், சந்திரதிலகம், சந்து,

சாந்தம், படீரம் மலயசம், மலையாசம், சந்தம், சாந்து.

சந்தி - அரி, அந்தி, கவலை, கோடகம், வரி.

சந்திரகாந்தம்-சந்திர கிரணத்தானீர் கால்வது.

சந்திரனுள் - கலை. திதி, விளக்கம். அன்றியுஞ் சந்திரனெரு கலை தெரியுமிரா - சிவாலி. கலை தெரியாவிரா - குகு. முன் பக்கத்தின் பெயர் - சுக்கிலம், பூருவம். பின்பக்கத்தின் பெயர் - அபரம், கிருட்டிணம். அன்றியுஞ் சந்திரனுட் கூறுபாடு - கலை. மூன்று நாள் வட்டம் - பக்கம். முதற்பக்கம் - நந்தை. இரண்டாம் பக்கம் - பத்திரை. மூன்றும் பக்கம் - சயை. நான்காம் பக்கம் - இருத்தை. ஐந்தாம் பக்கம் - பூரணை.

சந்திரனூர்தி - விமானம்.

சந்திரனெளரி - சந்திரகிரணம், சந்திரிலை.

சந்திரன் - அமுத கதிரோன், அமுத கிரணன், அம்புலி, அரி, அரிச்சிகன், அலவன், அல்லோன், ஆலோன், இந்து, இமகரன், இராக்கதிர், இனன், உடுபதி, உடுவின் வேந்தன், கலாநிதி, கலையினன், களங்கன், குபேரன், குமுத நண்பன், குரங்கி, சசி, சீதன், சுதாகரன், சோமன், குமுதசகாயன், இமகிரணன், தண்சுடர், தண்ணவன், தாராபதி, தானவன், திங்கள், தெவ்வு, நிசாகரன், நிசாபதி, நிலவு, பசுங்கதிர்த்தே, மதி, மதியம், மானேந்தி, முயலின்கூடு, விது, வீபத்து, வெண்கதிரோன், வேந்தன். அன்றியும் இளஞ் சந்திரன் பெயர் - குழவி, பிறை.

சந்து - சதுக்கம். [யா, யாது, யாதோ.

சந்தேகத்தின்சொல் - எவன், என், கொல்,

சந்தேகம் - அயிர்ப்பு, அனுமானம், ஐயம், கடுத்தல், சகடு, சங்கை, செத்து, விப்பிரமம்.

சபை - அவை, குழு, கோட்டி, கூட்டம், கணம், சமவாயம், சமூகம், சங்கம், தொகுதி.

சமணதவத்தோர்பெயர் - சமண நீத்தோர், சௌமியர், யோகர், நிகம்பர், ஆசீவகர், சமணமுனிவர், சாரணர், தாபதர்.

சமணர்-அருகர், சாவகர், சைனர், அமணர்.

சமப்பால் - முல்லை, நெய்தல்.

சமயம் - அமைதி, அவகாசம், அற்றம், காண்டம், தருணம், வேளை, வேலை, ஓரை.

சமனிசை - துத்தம், மதுரம், மத்திமம்.

சமாதியாவது - ஆதார தரிசனத்தையும் நிராதார தரிசனத்தையும் கடந்து மீதானத்து நிற்றல். [பது.

சமானவாயு-கந்தரசக்குழியிற் சந்திடை நிற்

சமானவாயுவின்குணம் - அறுவகைச் சுவைகளையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத் தாதுவின் கண்ணுங் கலப்பிப்பதாம்.

சம்பங்கோழி - (ஒருவிதக் கோழி) கம்புள்.

சம்மதித்தல் - அமைதல், அனுமதி, இணங்கல், இதையல், உடன்படல், நேர்தல். அன்றியும், உடன்படலைக் காண்க.

சயந்தக்கை - இணைக்கை வகை பதினைந்தனுளொன்று.

சயந்தம் - ஓர் நாடகத் தமிழ் நூல்.

சரசுவதிநதி - சோணை, சோணைநதி.

சரச்சுவதி - அயன் மனைவி, இசை மடந்தை, உலக மாதா, கலைமகள். காயத்திரி, சாவித்திரி, ஞானமூர்த்தி, தண்டாச் சிறப்பினள், தூயாள், நாமகள், நான்முகன் கிழத்தி, பனுவலாட்டி, பாமகள், பாமுதல்வி, பாரதி, பிராமி, பூரவாகினி, வாக்காள், வாணி, வெண்டாமரையாள், வெண் சலசமுற்றுள், வெள்ளை நிறத்தாள், வெள்ளை மெய்யாள்.

சரபம் - எண்காற்புள், சம்பரம், சிம்புள், துரோணம், வருடை, வாருண்டம்

சரப்பணி - வைரச்சங்கிலி.

சரமணிக்கோவை - கலாபம், தோரை.

சரளகத்திற்குரியவெழுத்து - நகரவருக்கம்.

சரளகம் - இசை வகையிலொன்று, சரளி.

சரி - கைவளை. காற் சரிக்கும் கைச் சரிக்கும் பெயர் - பரியகம். [திரம், சீலம்.

சரித்திரம் - கையாறு,சரிதம்,சரிதை,சாரித்

சரிமணி } கலாபம், தோரை.

சரிமணிக்கோவை }

சரியை - மெய்ஞ் ஞானம், அபர ஞானம், சிவஞான சாதனம், தாத மார்க்கம், தவம்.

சரியைப் பொதுத்தொழில்-சிவபெருமான், தேவி, விநாயகர், குமாரக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், என்னு மிவர்கள் எழுந்தருளி யிருக்குந் திருக் கோயிலிற் சென்று திருவலகிடல் திருவொழுக்கிடல் கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப் பூ, நிலப்பூ வென்னும் நால் வகை மலர்களையுங் குற்றமறக்கொண்டு இண்டை, தார், மாலை, படலை, கண்ணி யென்னும் மாலை வகை

சமைத்துச் சாத்தல், புகழ்பாடல், திரு விளக்கிடல், திருநந்தனவனம் வைத்தல், சிவனடியாரது திருவேடத்தைக் கண்ட மாத்திரையே எதிர்சென்று வணங்கல், அவர் பணி செய்தல் முதலியனவாம்.

சரியைமுத்தி - சிவசாலோகம்.

சரியையில்ஞானம் - அத்தியான பாவனை யின் உறைப்பினல் ஓர் அநுபவ வுணர்வு நிகழ்தல்.

சரியையில்யோகம் - இருதயத்தில் உருத் திரக் கடவுளைத் தியானஞ் செய்தலாம்.

சரியையிற்கிரியை - சந்திரசேகரர், உமாம கேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாண சுந்தரர், பிச்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீர பத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிர கர். நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகா நுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணமூர்த்தி, இலிங்கோற் பவர் என்னும் இருபத்தைந்து மாகேசுர வடிவங்களுளொன்றனையாதல், விநாய கக் கடவுள் முதலிய ஆவரண மூர்த்தி களில் ஒன்றனையாதல் வழிபடுதலாம்.

சரியையிற்சரியை - திருக்கோயிலிற் றிரு வலகிடல், திருமெழுக்கிடுதல், திருவிளக் கிடல், விதானங் கட்டல், தோரணநாட் டல், தூபமிடல், திருநந்தனவனம் வைத் தல், பூக் கொய்தல், மாலை சமைத்தல், யாத்திரை செய்தல், நதி மூழ்கல், பிர தக்கிணஞ் செய்தல், தோத்திரம் பாடல், புல்லுச் செதுக்குதல், திருக்குள முதலிய சுத்தி செய்தல், பசுக் காத்தல் முதலிய னவாம்.

சரியைவகை - சரியையிற் சரியை, சரியை யிற் கிரியை, சரியையில் யோகம், சரி யையில் ஞானம்.

சரியைவழிபாடு - புறத்தொழின் மாத்திரை யாதே உருவத் திருமேனியை வழி படு தல்.

சரீரவீனையினிலக்கணம் - மண் முதலாய ஐம்பூதங்களானுமாகிய உடம்பின் மத்தி மத்தால் நாதத்தைத் தொழில் செய்யு மிடத்து மூலாதாரத்தினின்றும் எழுந்து பெருந் தானமெட்டானும் கிரியைகள் எட்டானும் தோன்று மிசையை யுடைத் தாம்.

சருக்கரை } அக்காரம், அயிர், அழகு,
சர்க்கரை } கட்டி, கன்னல், குடம், குளம், சயம், பஞ்சதாரை, பாகு, விச யம், மீஞண்டி.

சருச்சரை } (எண் வகை யூற்றினொன்று)
சர்ச்சரை } பிணர்.

சலகொதுகு - துள்ளல், மசகம்.

சலசூத்திரம் - அம்பி, காம்பி, காராம்பி, கிழார், பூட்டை.

சலஞ்சலம் - அரன்சங்கு, பணிலம், கலம் புரிச்சங்கு ஆயிரஞ் சூழ்ந்தது.

சலஞ்சாதித்தல் - கறுவு, சாதனை, செறும்பு, செற்றம், தொந்தம், வயிரம், வேரம்.

சலதாரை - அங்கணம், சுருங்கு, தூம்பு, புழல்.

சலாகை - சராவம், நாராசம்.

சலியாதுநிற்றல் - திருவம், துவம்.

சல்லி - அறை, துணி, தூக்கு.

சல்லிகை - பேரி, அகமுழவு.

சல்லிகையென்னும்பெயர்க்காரணம் - சல் லென்ற ஓசை யுடைத்தாதலாற் பெற்ற பெயர்.

சவரி - ஆகு, கவரி, சீகரம்.

சவரிவிகற்பம் - மரம், வெண்மயிர்.

சவை - அவை, கோட்டி, சங்கம், சமூகம், சாலம். அன்றியும், தருமசவை - ஆத் தானம்.

சளுக்குவேந்தர் } வேள்புலவரசர், சாளு
சளுக்கையர் } வர்.

சனி - அந்தணன், அந்தன், கதிர்மகன், கரியவன், கலியன், காரி, கீழ்மகன், சந்தில், சவுரி, சாவகன், தமனியன், நீலன், நோய்முகன், பங்குபாதன், மந்தன், முடவன், முதுமகன், மேற் கோள், பங்கு, சௌரி.

ச ரி

சரடி - அகளம், தளம், தாழி, பதலை.

சாட்சி - கரி, சான்று.

சாணி - புண்ணியசாந்தம், சாணகம்.

சாணைக்கல் - சிலாவட்டம்.

சாதகப்புள் - சாரங்கம்.

சாதகமெழுதல் - சனனமெழுதல்.

சாதல்-அருகல், அலன்றல், இல்லென்றல், இல்லெனல், இறத்தல், உலத்தல், ஒழி தல், ஓய்தல், கழிதல், கழிவு, தவறல், தபுதல், துஞ்சல், துஞ்சுதல், துவன்றல், பொன்றல், மடிதல், மாய்தல், மரணம், மாளல், முஞ்சல், முடிதல், மூசல்,

வீடல், வியோகம், விளீதல், வீடல், வீதல், விளிவு, வீவு.

சாதிக்காய்-அட்டிகம், ஆதிபரம், கடுங்காய்.

சாதிபத்திரி - ஏத்திரி, வசுவசி, வசுவாரி.

சாதிப்பூ - (சாதிக்காய்ப்பூ) கருமுகை, பித்திகை.

சாதியின்பெயர் - குலத்தைக்காண்க.

சாதிலிங்கம் - இங்குலிகம், இரசலிங்கம், குலிகம், ஓர் சரக்கு.

சாதிவகை - சுவையின் பின்னர் காட்டுதற் குரியன பத்து; அவையாவன: அங்கம், ஈகாமிருகம், சம்வாகாரம், இடிமம், நாடகம், பாணம், பிரகசனம், பிரகரணம், வியாயோகம், வீதியென்பனவாம்.

சாதுரங்கமாணிக்கநிறம் - தாமரை, கழுநீர், சாதகப்புள்ளின்கண், இந்திரகோபம், மின்மினி, சூரியன், விளக்கு, மாதுளம்பூ, அதன்விதை, நெருப்பு என்னும் பத்து வகைப்பட்ட நிறத்தினவாம் "சாதகப் புட்கண் டாமரை கழுநீர் - கோடமின் மினி கொடுங் கதிர்விளக்கு - வண்ணி மாதுளம் பூவிதை யென்னப் - பன்னு சாதுரங்க வொளிக்குணம் பத்தும்" என்றூர் கல்லாடராகலின்.

சாத்துவதிவிருத்தியிலக்கணம் - அறம்பொருளாகத் தெய்வ மானிடர் தலைவராக வருவது.

சாந்து-கலம்பகம், கலவைச்சேறு, களபம், காலேகவண்ணம், பீதம், வண்ணம், விரை, கலவை. நால்வகைச் சாந்தின் பெயர்-காலேகம், பீதம், புலி, வட்டிகை, பலவற்றூற் கூட்டிய குழம்பின் பெயர்-கலம்பகம், கலவை, களபம், செச்சை, தேய்வை சாந்திஞலுடலிலிடுங்கோலத்தின் பெயர்-தொய்யில். இதலிலிடுக்குறியின் பெயர்-திலகம், திலதம், புண்டரம்.

சாமம்-யாமம் [சீகரம், நசை, வெண்மயிர்.

சாமரம்-ஆகு, கவரம், கவரி, சவரம், சவரி,
சாம்பர் } அடலை, பலி, பூதி, வெண்
சாம்பல் } பலி.

சாயை - இயல், சாயல், நிழல்.

சாய்தல் - இடைதல், இரிதல், உடைதல், கெடுதல், சரிதல், நெரிதல், வழுவுதல், சோரல், நுண்மை, அசைதல்.

சாய்ந்தோர்மேற்படாமை - தழிஞ்சி.

சாரி - நாய், சூறைக்காற்று, சூதாடுகருவி.

சாரிப்புத்தன் - சம்பந்த சாரணுலயரால் தோல்வி பெற்றுச் சைவஞனபுத்தன்.

சாரியை - அம், அற்று, இற்று, அத்து, அல், இல், இன், வற்று, இக்கு, ஒன், அக்கு, கு, அன், ஆன், ஐ, தம், நும், அ, குன் முதலியனவாம்.

சாரியைகள் - அக்காஞ்சார்ந்து வருவன, அகரம், கரம், காரம், கான்.

சாரியையிலக்கணம் - அஃதாவது சொல் தொடர்ந்து செல்லு நெறிக்க ணின்று அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்தும் பயவாதுமாய் நிற்பது.

சாரைப்பாம்பு - இராசிலம், இலஞ்சி, துண்டம்.

சார்தல் - அணைவுதல், அணுகல், அண்ணுதல், சார்ச்சி, தொடல், தோய்வு, நணுகுதல், பிடித்தல், புணர்தல், புல்லல்.

சாவு - அந்தம், அணிமாவினம், இலயம், இறப்பு, இறுதி, உலப்பு, சமாதி, நாசம், நிதனம், நெடுந்துயில், பஞ்சதம், பஞ்சதை, மரணம், மாய்வு, யோகம், விளிவு, வீ, வீவு.

சாளரவாயில் - சாலேகம், வாதாயனம், சாலம், சுழை, சாலகம், காலதர்.

சாறடை - சாறணத்தி, சாறணை, திரிபுரி.

ஸ

ஸிங்கம் - அரி, அறுகு, ஆளி, கண்டீரவம், காளி, கேசரி, கொடும்புலி, கோளரி, சீயம், தெரிமா, நகாயுதம், பஞ்சாசியம், பஞ்சானனம், மடங்கல், மாபுலி, மிருகபதி, மிருகராசன், மூடங்குலை, வாளரி, மிருகாபதி, அரிமா, பஞ்சநகாயுதம், பூட்கை, வட்புலி, வயப்புலி, வயப்போத்து, வயமா. இதன் பெண்-பெட்டை. இதன் குட்டி - போதகம்.

ஸிங்கவிராசி - அரிமா, ஆளி, ஐயானனம், புலி, அரி, கொடும்புலி, யாளி, மா, சிங்கம் முதலியவற்றின் பெயரெல்லாம் பெறும்.

ஸிங்களம்-ஈழம், இலங்கை, பொன்னகரம், தக்ஷிணகைலாசவாசம், திரிகூடபுரம், சிம்மளம். இது பூர்வம் குபேரனுக்குத் தம் தந்தையரால் கொடுக்கப்பட்டுப் பின் இராவணனுல் கொள்ளப்பட்டுப் பின் தமிழ்நாட்டரசர், மகததேசத்தவர்களால் ஆளப்பட்ட பூர்வ இலங்கையின் ஒரு சிறுகூறு. மற்றவை கடல் கொள்ளப்பட்டன.

சிங்காசனம் - அரியணை, பத்திராதனம், பத்திராசனம்.

சிங்காரம் - அணி, பொற்பு, கை, அலங்காரம், ஒப்பனை.

சிச்சிலிக் குருவி - (மீன்குத்திப்புள்) கவுதம், சிரல், தித்திரி, பொன்வாய்ப்புள்.

சிதம்பரம் - தில்லை, புலியூர், மன்றம்.

சித்திரகாரர் - ஓவியர், சித்திரர், சிற்பர், மோகர், யவனர்.

சித்திரகார்வீதி - ஆவேசனம்.

சித்திரகூடம் - அம்பலம், தெற்றி, தெற்றியம் பலம்.

சித்திரப் புணர்ப்பாவது - இசை கொளும் எழுத்தின் மேலே வல்லொற்று வந்தழி மெல்லொற்றுப் போலப் பண்ணீர்மை நிறுத்தல்.

சித்திரமூலம் - கொடிவேலி, கொடுவேலி.

சித்திரமெழுதல் - இரேகை தீட்டல், பொறித்தல், வரித்தல், வரைதல்.

சித்திரம் - ஓவியம், துகிலிகை, வட்டிகை.

சித்திரைநாள் - அறுவை, ஆடை, சுவை, செவ்வி, தச்சன், துவட்டாநாள், தூசு நடு நாள், நெய், பயறு, மீன், நேர்வான்.

சித்திரைமாதம் - சைத்திரம், மது.

சித்து - அறிவுடைப்பொருள், சீவன், சேதனம், ஞானம், புற்கலன், ஆன்மா.

சிந்தல் - உகுத்தல், உளர்தல், சிதர்தல், தவர்தல், தூவல்.

சிந்தூரம் - சேலேகம், திலகம்.

சிந்தையுட்பட்டோனவிநயம் - முற்பட்ட தாயினு மறியாத நிலையும், பிடித்தகையின் மேலடைத்த வழகும், மூடிக்கப்படாத கருமநிலையும் பொருந்து மென்ப.

சிரமஞ்செய்தல் - உழக்குதல், பருமித்தல்.

சிரமாலை - அழிதலை, கபோடி.

சிரிப்பு - ஆசம், ஆர்ப்பு, இளி, நகை, முறுவல், மூரல். அன்றியும் அவமதிச் சிரிப்பு- அசி, ஆசியம், இளி.

சிரேணி - வாடை, சேடி.

சிலந்திக்கொடி - தலைச்சுருள்வள்ளி, தலைச்சுருளி, பெருமருந்து.

சிலந்திப்பூச்சி - உலூதை, சிலம்பி, காவன்.

சிலம்பக்கூடம் - அரங்கம்.

சிலம்பிற்பெய்தபருக்கைக்கல் - அரி, சிரம்பம், சிலம்பம்.

சிலம்பு-அரவம், அரி, ஒலிகிழி, தூளை, நூபுரம், பரிபுரம்.

சிவசமயத்தோர்-காளாமுகர், சைவர், பாசுபதர், மாவிரதியர்.

சிவபதநான்கு-தாளுளுல கிருத்தல், தன்பாடிருத்தல், தாளும்பதம்பெறல்,தாளுதல்.

சிவப்பு - அத்து, அரக்கு, அரத்தம், இங்குலிகம், இராகம், லோகிதம், கிஞ்சுகம், குருதி, குலிகம், சிந்தூரம், சிந்தூரம், செக்கர், செம்மை, செய், சே, சேதகம், சேது, சேத்தல், சேத்து, சேந்து, சேப்பு, சோணம், சோணிதம், துப்பு, துவர், படீரம், பாடலம், பூவல். அன்றியு மிகு சிவப்பு - அருணம், கறுப்புகலந்த சிவப்பு, தாமலம், தாமிரம். பொன்மை கலந்த சிவப்பு - பிங்கம், பிசங்கம்.

சிவல் - பகண்டை, கோரசம், புல், இதல்.

சிவனழித்தமுப்புரம் - பொன்மதில், வெள்ளி மதில், இரும்புமதில்.

சிவனுயுதங்கள் - சூலம், பாசம், பிணுக மென்னும் வில், பரசு.

சிவனுர்வேம்பு - மூதிக்கம், தலைநிம்பம்.

சிவனிருத்தம் - (சிவன் கூத்து) காபாலம், கொடு கொட்டி, பாண்டரங்கம்.

சிவனுர்தியுங்கொடியும் - இடபம்.

சிவனெண்குணம் - பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, ஒருவினையின்மை, குறைவிலறிவுடைமை, நேத்திரமின்மை, என்பனவாம்.

சிவனேம்முகம் - அகோரம், ஈசானம், சத்தியோசாதம், தற்புருடம், வாமம்.

சிவன் - அந்தகாரி, அந்திவண்ணன், அரவணிந்தோன், அரன், அழலாடி, அழலேந்தி, ஆலமர்கடவுள், சயம்பு, அங்கணன், ஆதி, கயிலைவெற்பன், வீடையன், விமலன், சடையன், பன்னகப்பூணிஞன், அரவன், புராரி, புராந்தகன், அண்ணல், பரமன், பரசுதரன், கிரியைவளைத்தோன், புலித்தோலோன், ஐந்துமுகத்தோன், அழற் கரத்தோன், நஞ்சுண்டோன், தந்தியுரி போர்த்தோன், மாதேவன், துந்தித்தற்கரியோன், பூதபதி, நாரிபாகன், அக்கரவார்த்தோன், மூக்கண்ணன், ஈசுரன், பாசுபதன், பஞ்சானனன், காளகண்டன், சூலபாணி, அட்டமூர்த்தி, சோமதரன், ஆலதரன், நீறுடி, மன்னுடி, நித்தன், அத்தன், எண்குணன், ஆறுனனன்முதை, ஈசன், நாசமிலாதோன், நடன், கங்கைதரித்தோன், கறைக்கண்டன், கண்ணுதலோன், அரூபி, அனந்தன், பரன், பிஞகி, சோதி, முன்னவன், நாயகன், பிதா, கருணுலயன், முத்தன்,

தேவதேவன், முதல்வன், சுத்தன், வேத முதல்வன், அநாதி, நிருத்தன், பூதேசன், தற்பரன், நிமலன், நீறணிகடவுள், அமலன், ஆனந்தன், மகேச்சுவரன், நாதன் ஞானமூர்த்தி, பகவன், வாமன், புண்ணியன், கொன்றைமாலையன், இறைவன், பிரான், இறையோன், அரவணிந்தமூர்த்தி, கடுக்கையங்கண்ணிசூடி, முன்னோன், நிருமலன், மறைமுதலி, சோதி, பிரமன் மாற்கரியோன், பகவான், ஏகன், ஈசானன், ஈச்சுரன், ஈமத்தாடி, உமாபதி, உருத்திரன் எண்டோளன், ஏறார்ந்தோன், கங்காதரன், கங்காளன், கங்கைவேணியன், கண்ணுதல், கபாலி, கயிலையாளி, கரியன், கறைமிடற்றன், காமநாசன், காமாரி, காலகாலன், கிரிசன், கிரீசன், குன்றவில்லி, கூற்றையுதைத்தோன், கொன்றைசூடி, சங்கரன், சசிதரன், சடைமுடியோன், சதாசிவன், சந்திரசேகரன், சம்பு, சுடலையாடி, சூலபாணியன், சூலி, தந்தியுரியோன், தாணு, திரிபுராந்தகன், திரியம்பகன், நக்கன், நந்தி, நந்திகேச்சுரன், நம்பன், நீலகண்டன், நீறணிந்தோன், பசுபதி, பரசுபாணி, பவன், பாண்டரங்கன், பார்வதிகொழுநன், பிஞ்ஞகன், பித்தன், பிறப்பிலி, பிறைசூடி, பினாகபாணி, புரமூன்றெரித்தோன், புலித்தோலுடையோன், பூதநாதன், பெருமான், பேயுடனாடி, மங்கைபாகன், மழுவாளி, மாலயற்கரியோன், மானிடமேந்தி, மூர்த்தி, யானையுரித்தோன், யோகி, வரன், வாமதேவன், விடையோன்.

சிவன்கூத்து - (சிவனிருத்தம்) காபாலம், பாண்டரங்கம், கொடுகொட்டி.

சிவன்சத்தி - ஆதிசத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, என்னுமிவ்வகைச் சத்திகளுமாம்.

சிவன்புதல்வர் - விநாயகக் கடவுள், குமரக் கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள். அன்றியும், சிவனிந்திரியத்தாற் றிருமால் கையிற்பிறந்த பிள்ளை - ஐயனார், அரிகரபுத்திரன்.

சிவன்மனைவி - பார்வதி.

சிவாகமநூற்பயன்-தர்மம், (அறம்) அர்த்தம், (பொருள்) காமம், மோக்ஷம்.

சிவிகை - அணிகை, தண்டிகை, யானம், வையம், அணிகம்.

சிவேதை - பகன்றை.

சிள்வண்டு, சிள்வீடு, சிள்வீடு } சிதடி, சிமிலி, சில்லி, சில்விகை, சில்லை, சில்வண்டு, நெடி.

சிறப்பில்லா எண்வகைப் பெயரெச்சத்தின் பெயர்- சிதடு, உறுப்பில் பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள்.

சிறுகிழங்கு - (ஒரு கிழங்கு) சுரசம்.

சிறுகீரை-சாகம், சாகினி, சில்லி, மேகநாதம்.

சிறுகொடி - கத்திகை. [மாலதி.

சிறுசண்பகம் - கருமுகை, சாதி, பித்திகை,

சிறுசவளம் - குந்தம் என்னு மோராயுதம்.

சிறுசின்னம், சிறுசிங்கம் } தாரை, பீலி. (ஒரு குழற் கருவி.)

சிறுசெய் - குண்டில், பாத்தி. [சொல்.

சிறுசொல் - இழிச்சொல், பழிச்சொல், நீச்

சிறுதிடர், சிறுதிடல், சிறுதிட்டை } திட்டை, பதுக்கை, பாறை, மேடு, முரம்பு.

சிறுதுகில் - கந்தை, விரிபம், கண்டை, பிடியல், வேதகம், புங்கம், பங்கம், கத்தியம், சூரியம், சிற்றில். [பொற்றை, இறல்.

சிறுதூறு - அரில், அறல், இரும்பு, பதுக்கை,

சிறுபறை - (ஒரு பறை) ஆகுளி.

சிறுபூழை - (ஒருபூடு) உழிஞை, சிறுபூளை.

சிறுமலை - இறும்பு, குறும்பொறை, குன்று, பதலை, பொச்சை, பொற்றை, குவடு.

சிறுமை-அணு, அற்பம், ஆசு, இறை, கன்று, கிஞ்சம், கிலம், கை, சிறுவரை, சின்னம், தனு, தன்னம், தினை, தொகம், பையுள், முளரி, வஞ்சம், வறிது, இலேசம், இலகு, தோகம், துடி, பேடு.

சிறுவட்டில் - கிண்ணம், வள்ளம்.

சிறுவழி - விடங்கர்.

சிறுவாள் - முசுண்டி.

சிறை - காவல், சிக்கம், சேமம்.

சிறைப்படல் - தளைப்படல், வலைப்படல்.

சிற்பத்தொழிலின்பத்தூறுப்பு - கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு.

சிற்பர்வீதி - ஆவேசனம்.

சிற்பாசாரியர்-மண்ணீட்டாளர், முறைதெரிந்தோர், கல்வினையர், கற்றொழிலோர். [ம்.

சிற்றரும்பு-முகை, முகிழ், மொக்குள், முகிள

சிற்றூலவட்டம் - சாந்தாற்றி, சிவிறி, பீலி, வீசனம், விசிறி.

சிற்றில்-குடங்கர், குடிசை, குடில், குரம்பை, கூரை.

சிற்றுண்டி-அஃகுல்லி, அப்பம், இடி, பிட்டு.

சிற்றூர் - நொச்சி, பட்டு, பள்ளி, பேடு, குடி.

சினக்குறிப்பு - களுறல், கறுப்பு, கன்றல், காந்தல், குறுகுறுப்பு, கொதித்தல், சிவப்பு, சுளித்தல், சுளிவு, புகைதல், புழுங்கல், பைத்தல், வெதிர்ப்பு, வெய்துறல்.

சினம் - உடற்றல், உடன்றல், உருத்தல், உறுக்கல், கடிதல், கடுத்தல், கதம், கலாம், கறுவம், காத்திரம், காய்தல், குரோதம், கோபம், சினவுதல், சீற்றம், சுளித்தல், சுளிவு, செயிர், செற்றம், துனி, தெழித்தல், தெழுத்தல், மறம், முனிதல், முனிவு, மூளவு, விடைதல், வியர்ப்பு, வெகுளி, வெறுத்தல், வேகம். அன்றியும் பெருங் கோபத்தின் பெயர் - உரறல், உருத்தல், உருத்திரம், கரிதல், கனிதல், குருத்தல், கொந்துதல், கோம்பல், சீறல், தீவிரம், விடைத்தல், வெம்பல். தணியாக்கோபத்தின் பெயர் - கறுவு, சலம்.

சினேகம் - இசூை, கருவி, களன், கேண்மை, கேள், ஞேயம், தொடர்பு, நண்பு, நட்பு, நவம், பக்கம், மித்திரம்.

சினேகிதர் - அன்பர், ஆர்வலர், ஆவலர், இல்லுநர், எட்டினர், ஒட்டுநர், ஒல்லுநர், ஒன்னுநர், காதலர், காதலித்தோர், சேர்ந்தோர், துன்னுநர், தொடர்ந்தோர், நசைநர், நண்பர், நயந்தார், நயவர், நல்லவர், நள்ளுநர், நேர்ந்தார், பசைந்தார். புரிந்தோர், புல்லுநர், பெட்டார், மித்திரர், மேவினர், விழைந்தோர், வேட்டோர்.

சீ

சீக்கிரத்தின்குறிப்பு - ஐயெனல், கதுமெனல், குத்திரம், கோரம், சண்டம், ஞரேலெனல், ஞள்ளல், நொய்தெனல், பொருக்கெனல், பொள்ளெனல், வெய்தெனல்.

சீக்கிரமுடையோன் - கவனன், வேகி.

சீக்கிரம் - ஆசு, ஈண்டு, ஒல்லை, கடி, சடுதி, சபதி, சவம், துணவு, துரிதம், துருசு, துவல், நொறில், பரி, முடுகல், வல், வல்லை, விசை, விதப்பு, விரைவு, வெம்மை, வெறி, வேகம், கடுகல், கடுப்பு, கதழ்வு, கவனம்.

சீக்கிரான் / சீக்கிரி / சீக்கிரியான் } முன்னம், துரிஞ்சில், உசிலை, உசிலமரம்.

சீதமுற்றுரோனவிநயம் - சொல்லப்பட்ட துன்பமுற்ற மனத்துட னுழத்தலும், நினைந்த புடைவை யுறுத்தலும் வெயிலிற் கிடத்து அக்கினியிற் காயவிரும்புதலும், சோர்ந்தும், தடுமாறிய நெட்டுயிர்ப்பு விட்டு முரைத்தலு முடைமையுமாம்.

சீதை - சானகி, செய்யாள், மைதிலி, வைதேகி.

சீந்திற்கொடி - அமுதவல்லி, சீவந்தி.

சீப்பு - கங்கம், சிக்கம், மயிர்வாரி, கங்கதம்.

சீரங்கம் - விஷ்ணுவாசம், போலியாணிருக்கை, அரங்கம், ஏறுகட்டிய கொட்டில், உபயகாவிரிமுகம், அந்தர் நடு.

சீலை - அம்பரம், அறுவை, ஆசாரம், ஆசிடை, ஆடை, ஆவரணம், இடைதல், இலக்காரம், உடுக்கை, உடை, ஏடகம், ஒலியல், கஞ்சிகை, கண்டை, கத்தியம், கந்தை, கப்படம், கலிங்கம், கூலை, காடகம், காண்டம், காழகம், கூறை, கோசிகம், கோடி, கோடிகம், சம்படம், சம்பரம், சாடி, சிற்றில், சீரை, சூடி, சேலை, தானை, துகில், தூசு, தூட்டி, தூரியம், தோக்கை, நீவி, நீவியம், பஞ்சு, படாம், பட்டம், பட்டி, பட்டிகை, பரிலட்டம், பிடியல், புங்கம், புடவை, புட்டம், பூசை, மடி, மாதுகம், மேகலை, வட்டம், வட்டுடை, வத்திரம், வாசம், வாதனம், அன்றியும் பட்டுச்சீலையின் பெயர் - கவுசிகம், கரம்பு, கோசிகம், தேவாங்கம், நேத்திரம், பணி, பரணம், பாளிதம், நற் சீலையின்பெயர் - நாகம், பாரி. மரவுரியின் பெயர் - ஆசினி, இறைஞ்சி, சீரம், சீரை, வற்கலை மயிர்ப்படாத்தின் பெயர் - மயிரகம், வயிரியம். சீலைத்துணியின் பெயர் - சிதர், சிதலை, சீரை, பட்டிகை, பறிவை. சித்திரைபடாத்தின் பெயர் - புத்தகம்.

சீவன் - ஆதன், அணு, ஆன்மா, இயமானன், சேதனன், பசு, சீவன், புற்கலன், கூத்தன்.

சு

சுகதுண்டக்கை - சுட்டுவிரலும், பெருவிரலுஞ்சேர்ந்துநகநுனியைப்பற்றிவளைந்து சிறுவிரல் அணிவிரலுடன் முடங்கி நிமிரற்பதாம்; இது பரதத்திலொருவகை.

சுகம் - சந்தம், தருமம், அழகு, மகிழ்வு.

சுக்கிரன் - அசுரர்மந்திரி, அநாவிலன், ஆசான், உசனன், ஒள்ளியோன், கவி, காப்பியன், சல்லியன், சிதன், சீதகன், சுங்கன், தயித்திய மந்திரி, நற்கோள், பளிங்கு, பார்க்கவன், பிரசுரன், பிருகு, புகர், புயல், மழைக் கோள், வெள்ளி.

சுக்கு - சுண்டி, நாகரம், சுண்டியம், சுச்சு.

சுங்கவிறை - ஆயம், உல்கு, சாரிகை.
சுடல் - சந்தாபம், தாபிதம்.
சுடுகாடு - அறக்காடு, இடுகாடு, இறந்தோர் சேரிடம், ஈமம், காடு, காளவனம், சுடலை, சுடுநிலம், படுகாடு, பிணக்காடு, பிதிர்வனம் புறங்காடு, மயானம், முதுகாடு, வனம்.
சுட்டசாந்து - களபம், சுடுசுண்ணம், சுதை, மண்.
சுட்டி-சுட்டிகை, திலகம், திலதம், சுடிகை.
சுட்டுக்கோல் - உலையாணிக்கோல், ஆணி.
சுட்டுச்சொல் - (ஒன்றைக் குறித்துக் காட்டு மொழி) அது, அவன், அவை, அவ், இது, இவன், இவை, இவ், உது, உவன், உவை, உவ் என்பனவாம்.
சுட்டுவகை-அகச்சுடடு, புறச்சுட்டு என்பன.
சுண்ணச்சாந்து - களபம், சுதை, மண்.
சுண்ணாம்பு - சுண்ணம், நீறு. [கல்.
சுத்தஞ்செய்தல் - உவளித்தல், துப்புரவாக்
சுத்தத்திற்குரியவெழுத்து- மகரவருக்கம்.
சுத்தம்-உபலாளனம், சௌசம், சுசி, துப்பு, தூ, தூய், தூய்து, தூய்மை, பவித்திரம், பாவனம், புனிதம், பூதம், மேத்தியம், வால்.
சுப்பிரயோகம் - பேசாதொழியா நினைவு.
சுமத்தல்-தரித்தல், தாங்கல், தரியம், தூர்வகம், பரித்தல், பொறுத்தல், வகித்தல்.
சுமை - பரி, பாரம், [யடை, சுடு.
சும்மாடு-சுடும்பு, சிம்புரி, சுடுவு, சுமடு, சுமை
சுரபுன்னை - வாழை, வழை. [பையர்.
சுரர்மகளிர்-அரமகளிர், சுராரமகளிர், அரம்
சுரை - அலாபு, தும்பி.
சுவத்திகக்கை - மணிக்கட்டிற் பொருந்திய பதாகையிரண்டையும் மணிக்கட்டிலேற்றிவைப்பது. "சுவத்திகமென்பது சொல்லுங்காலை மணிக்கட்டமைந்த பதாகையிரண்டையு மணிக்கட்டேற்றி வ்வப்பதாகும்" என்றூர் தொன்னூலார்.
சுவசகழ்கருவி - கன்னம், கன்னக்கோல்.
சுவர் - குட்டியம், பித்திகை.
சுவர்க்கம்-பொன்னுலகு, துறக்கம், புத்தேளுலகு, விண்ணுலகு, மேலையுலகு, விசும்பு, மன்னுலகு, நாகம், கற்பம், வானுலகு, வியனுலகு, தானம், உவணை, சுவவு, சுரரிடம், உயர்நிலை.
சுவர்த்தலம் - உவமாநிலம், பித்திகை.
சுவாசத்தினளவு - மனுடரது இருமூக்காலும் ஒவ்வோர் நாளிசத்து ஐந்து நாழிகையாகக்கொண்டு ஒருமாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாதமாய் ஒருசுவாதத்திலே பன்னிரண்டங்குலிவாயுப் புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண்விரலடங்கு மென்க.
சுவாலை - இந்தனம், கீலம்.
சுவை - இரதம், சுதை, உருசி.
சுழலல்-அலமரல், உழலல், உழிதரல், கறங்கல், கொட்பு, சுலவுதல், சுர்த்தல், சொரிதரல், திரிதரல், தெருமரல், பிரமணம், பிரமரி, மறுகல், திரிதல். [வளி.
சுழல்காற்று - சாரிகை, சூறுவளி, சூறை,
சுழல்படை - பாராவாரம், வட்டம்.
சுளகு - சூர்ப்பம், முறம், தட்டு.
சுறு-ஏறு, கலி, களிறு, சுறவு, தகர், மகரம்.
சுற்றம்-உற்றவர், இகுளை, நட்டோர், உறவு, ஒக்கல், கிளை, சார்ந்தோர், பற்றினர், பிறந்தோர், நட்பு, பந்தம், பரிசனம், கேள், நண்பு, கூளி, குடும்பம், கடும்பு, நள்ளி, பாசனம்.

சூ

சூசிக்கை - நடுவிரல் பெருவிரலென்னு மிவ்விரு விரலு மொன்றோடொன்று சேர்ந்து சுட்டுவிரனிமிர்ந்து நிற்ப வொழிந்தவிரல் வழிவழியே முடங்கி நிற்பதாம்.
சூடு - சந்தாபம், தாபிதம், தூபிதம். [தல்.
சூடுதல்-அணிதல், மலைதல், மிலைதல், வேய்
சூட்டிறைச்சி - சூரியம், படித்திரம்.
சூதகப்பொது - ஆசூசம், புனிறு, ஆசௌசம். அன்றியும், மகளிர் சூதகம் - இருது, தொடக்கு, பூப்பு, வாலாமை.
சூதாடுகருவி-ஆயம், கவறு, கழங்கம், சாரி சாரிகை, தாசு, தாயம், வட்டு, வல்.
சூதாடுதற்கு வகுத்தவறை - அரங்கு.
சூது - கழங்கு, காசு, வல்லு.
சூத்திரயாப்பு - நூற்பாவகவல்.
சூத்திரர் - அயன்பதத் துதித்தோர், இசையுந் தொழிலர், உழவர், வளமையர், முத்தொழிலர், மண்மகள் புதல்வர், எளினர், வாணர், மேழியர், எளின்வாழ்நர், களமர், காராளர், சதுர்த்தர், பின்னவர், மண்மக்கள், வினைஞர், வெண்களமர், வேளாளர், பிரமன் பாதத்தில் வந்தோர், எர்த்தொழிலுடையோர், பெருக்காளர்.
சூரியகிரணம் - கதிர், கரம், தீவிரம், கோ.
சூரியசந்திரரைச் சூழத்தோன்றும் வட்டம்-ஊர்கோள், பரிவேடம், பரிதி வட்டம்.

சூரியமண்டலம் - விசயம், சூரியமண்டிலம்.
சூரியஒளியிற்றீக்கால்சலாகை - சூரியகாந்தம்.
சூரியன் - அண்டயோனி, அரி, அரியமா, அருக்கன், அருணன், அலரி, அழலோன், அனலி, ஆதபன், தேரோன், ஆயிரங்கதிரோன், கனலோன், பாற்கரன், செங்கதிர், திமிராரி, சுடர், வெயிலோன், கதிரோன், பகலவன், அழலவன், பொழுது, பகவன், வேந்தன், தாபநன், எல்லி, சாயாபதி, மாலி, ஆதவன், ஆதித்தன். ஆயிரஞ்சோதி, இரவி, இருள் வலி, இனன், உதயன், எல், எல்லை, எல்லோன், என்று, என்றூழ், எழ்பரியோன், ஒளி, ஒளியோன், கதிரவன், கனலி, கிரணமாலி, சண்டன், சவிதா, சான்றோன், சித்திரபானு, சுடரோன், சூரன், செங்கதிரோன், சோதி, ஞாயிறு, தபனன், தரணி, திவாகரன், தினகரன், தினமணி, நபோமணி, பகலோன், பகல், பங்கயன், பதங்கன், பரிதி, பர்க்கன், பனிப்பகை, பானு, மார்த்தாண்டன், மித்திரன், விகர்த்தனன், விண்மணி, விரிச்சிகன், விரோசனன், வெஞ்சுடர், வெயில், வெய்யோன், மணி, செஞ்சுடர். [றேர்.
சூரியன்வாகனம்-ஒற்றையாழித்தேர், பொற்
சூரியன்றேர்க்குதிரைகள் - காயத்திரி, பிருகதி, உஷ்ணிக், ஜகதீ, திருஷ்டுப்பு, அநுஷ்டுப்பு, பங்தி, என்னும் வேதச் சந்தசுகளேழுங் குதிரைகளாம்.
சூரியன்றேர்ப்பாகன் - அருணன், அனூரு, கருடன், மூத்தோன், காலிலி, சூரசூதன்.
சூலம் - கழு, கழுமுள், நல்வசி, மூவிலைவேல், முத்தலைவேல், காளம், குளிர், சத்தி, மூக்குடுமி, முத்தலை, மூவிலை.
சூழ்ச்சி - உசா, தேர்ச்சி, விசாரம், யாப்பு, எண்ணம், மந்திரம், நூல், ஆய்தல், தேர்தல், கபடம், வஞ்சகம்.
சூழ்ந்திடல் - கோலல், சுற்றுதல், சூழ்தல், சூழ்போதல், வலத்தல், வளாகம், வளைத்தல், முற்றுகையிடல்.
சூளை - காளவாய், சுள்ளை.

செ

செக்கான் - சக்கிரி, நந்தி, வாணியன்.
செக்கு - காணம், பூட்டை, எண்ணெயாலை.
செங்கருங்காலி - சிறுமராடம்.
செங்கல் - இட்டிகை, தாது, காரிகம்.
செங்கழுநீர் - சுவளையக்காண்க.
செங்காந்தள் - இலாங்கலி, காந்தள், தோன்றி, பற்றை.
செங்கிடைச்சி
செங்கிடை } கந்தூரி, முதலை.
செங்குடை - மீனை, சிந்தூரம். [கல்லாரம்.
செங்குவளை-அரத்தம், உற்பலம், எருமணம்,
செங்கோட்டியாழ்நரம்பு - ஏழு.
செங்கோல்வேந்தன்எழுவகைகிலை - அறம், பொருள், இன்பம், இம்மை, மறுமை, புகழ், மதிப்பு. [பிசனம், மதுரம்.
செஞ்சந்தனம் - அட்டி, அனுகம், சல்லியம்,
செஞ்சாந்து - செங்குங்குமம், தளம்.
செட்டிகள் - அயனூருவில் வந்தோர், இப்பர், எட்டியர், சிரேட்டியர், சிலேபியர், தனவைசிகர், தூணிகர், தேசிகர், தோன்றினர், நாய்கர், பரதர், வணிகர், வைசியர்.
செத்தை - காடு, சீக்கு, சோதினை, தூரல், தூர்வை, நரல், மயல்.
செத்தோனவிநயம் - பயமும் அழிப்பும், நிரைப்பல்லின் வெடித்துப் பொடித்துப் போந்த துணிவுடைமையும் வலித்த உறுப்புக்களும் மெலிவுபட்ட வயிறும் மிருதுத்தன்மையுடைமையும், வெண்மணி காணப்படக் கருமணி யொளித்தலும் உடைமை.
செந்தினை - கம்பு, கவலை.
செந்நாய் - அண்டிகம், கொக்கு, கோகம், முடுவல், விருகம்.
செந்நெல் - செஞ்சாலி, நன்னெல், வீரீகி.
செந்நெல்வினை - சாலேயம்.
செப்பஞ்செய்தல் - சீத்தல், தூய்தாக்கல்.
செம்பஞ்சு-அரத்தம், அலத்தகம், அலத்தம்.
செம்படாம் - சிம்புளி, செவ்வாடை.
செம்பரத்தை - மந்தாரம்.
செம்பாலைத் தோற்றம் - உழை முதற் கைக்கிளை யிறுதியாக மெலிவு நான்குஞ் சமம் ஏழும் வலிவு மூன்றுமாய் உழை முதலாகச் செம்பாலை யாயதென்க. செம்பாலை முதலியவற்றின் றோற்றம் - குரல் குரலாயது செம்பாலை, துத்தம் குரலாயது படுமலைப்பாலை, கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை, உழை குரலாயது அரும்பாலை, இளி குரலாயது கோடிப்பாலை, விளரி குரலாயது விளரிப்பாலை, தாரம் குரலாயது மேற்செம்பாலை என

வரன்முறையே ஏழு பாலையுங் கண்டு கொள்க.

செம்பாலையுட்பிறக்கும் பண்கள் - குரலிற் பாதியும் தாரத்திலொன்றும் இரண்டின் அந்தரத்திலே நிலையாகி நின்ற ஓர் அலகை விளரியின் மேலேறப் படுமாலைப் பாலையாம், இம்முறையே துத்தங்குரலாயது செவ்வழிப்பாலையாம்.

செம்பு - உதும்பரம், எருவை, சீருணம், சீருள், சுற்பம், தாமிரம், தாம்பிரம், வடு.

செம்புளிச்சை - தேவதாரம்.

செம்போத்து - குக்கில், சகோரம்.

செம்மறிக்கடா - அரி, ஏழகம், கம்பளம், தகர், திண்ணகம், மேழகம்.

செம்மறியாடு - கொறி, துருவை, மை, உதள், அருணம், மேடம்.

செம்முள்ளி - (ஒரு முள்ளி) குறிஞ்சி.

செயலின்மை - கையறல், செயலறல்.

செய்கடன் - நியதி, நியமம். [டம்.

செய்கண்டி - பரந்த வட்டிகை, பரந்த வட்

செய்கரை - அணை, குரம்பு, குலை, சேது.

செய்குன்றுசேர்ந்தசோலை - தோப்பு.

செய்தல் - அழைத்தல், அயர்தல், ஆடல், ஆற்றல், இழைத்தல், குயிறல், குயிற்றல், சமைத்தல், செய்கை பண்ணல், புரிதல், மாடல், வினைதல். அன்றியு மிக்க செயல்- ஊராண்மை. அரியசெயல்-பேராண்மை, தொழிற் பயில்வு, தொறு.

செய்தி-செயல், செய்கை, செய்தல். [வினை.

செய்தொழில்-விதி,கன்மம்,கருமம்,செயல்,

செருந்திமரம் - செங்கோடு, பஞ்சரம்.

செருப்பு - கழல், காலுறு தோல், தொடு தோல், பாதகவசம், பாதகாப்பு, பாதரக்கை.

செலவு - கதி, தாவு, படர், செல்கை.

செலுத்தல்-அகைத்தல்,இயக்குதல்,உகைத்தல், உய்த்தல், ஊர்தல், ஏவல், ஓச்சல், ஓட்டல், கடத்தல், தூண்டல், நடத்தல், முடுக்கல், தாண்டல், ஒய்தல், கடவல்.

செல்வப்பகுதி - தடம், மல், வளம், வாரி.

செல்வம் - ஆக்கம், இடம், உத்தி, சீர், திரு, நடை, நிழல், பூதி, பெருக்கம், பொறி, போகம், மா, மாடு, வாழ்க்கை, விபவம், விபூதி,விருத்தி,வெறுக்கை.[சோத்திரம்

செவி-அள், காது, கேள்வி, சுருதி, கன்னம்,

செவிடர் - செவிமந்தர், பதிரர், வதிரர்.

செவிமலர்ப்பூ - கன்னவதஞ்சம்.

செவியறிவு - சத்தம். [வளர்த்தாள்.

செவிலித்தாய் - கைத்தாய்,கோடாய்,தாதி,

செவ்வந்தி - பட்டிகை.

செவ்வழியாழ்த்திறத்தின்பெயர் - சாதாரி, நேர்திறம், பெயர்திறம், முல்லை.

செவ்வழியாழ்த்திறன்வகை - ஆரிய வேளர், குறண்டி, கொல்லி, தனுக்காஞ்சி, இயந்தை, யாழ்பதங்காளி, கொண்டைக்கிரி, சேவனி, யாமை, சாளர், பாணி, நாட்டம், தாணு, முல்லை, சாதாரி, பைரவம், காஞ்சி.

செவ்வாம்பல் - அரக்காம்பல், சேதாம்பல்.

செவ்வாய் - அங்காரகன், அரத்தன், அழலோன், உலோகிதன், அழலவன், தரை மகன், அழல், அறிவன், ஆரல், உதிரன், குசன், குருதி, செந்தீவண்ணன், சேய், நிலமகன், பௌமன், மங்கலன், வக்கிரன்.

செவ்விது - செப்பம், செம்மை, செவ்வை, செவ்வன்.

செவ்வீரல் - இரத்தம்.

செவ்வை-அத்து,இருசு,செப்பம், செம்மை. செவ்வன், செவ்வுநெறி, நேர்.

செறிகுழம்பு - செச்சை, தேய்வை.

செறித்தல் - அளித்தல், பாதீடு, பெயர்த்தல், பெய்தல்.

செறிமயிர்ப்பரப்பு - உரோமம், சிரோந்தம்.

செறிவு - துறுதல், உறுப்பு, பிறப்பு, துதைதல், மிடைதல், வெறிதல், துற்று, ஓதி, செற்று, வெறுப்பு, கௌறல், அடர்தல், நெருங்குதல், திணுங்குதல்

சே

சே - எருது, குதிரை, புல்வாய்.

சேகு - ஆனெி, காழ், காழ்ப்பு, அரி, சம்பம், சாரம், வைரம், கலை. [வீரசாலி.

சேங்கொட்டைமரம் - எரிமுகி, பல்லாதகி,

சேமக்கலம் - சேகண்டி, எறிமணி.

சேமை
சேம்பு
சேம்பை
} (ஒரு செடி) சகுடம், சாகினி.

சேரன் - உதியன், குடகன், குடக்கோன், குட்டுவன், கோளன், கொங்கன், கொல்லிச் சிலம்பன், போந்தின் கண்ணியன், குடக்கோ, பெருநையாற்றோன், கொல்லிவெற்பன், கோதை, சேரலன், பனந்தாரான், பூழியன், பொருநைத்துறைவன், பொறையன், போந்திற்றோன், மலையமான், மலையன், வஞ்சி

வேந்தன், வானவரம்பன், வானவன், வில்லவன், குடநாடன்.

சேரன்குதிரை - பாடலம். அவன்கொடி-விற்கொடி. அவன் மாலை - பனம்பூ.

சேரி - பாடி, வாடம், வேணி, வாடை, முறி, சிரேணி, சிற்றூர், தெரு. [வேணி.

சேரிவகை-சிரேணி, பாடம், முறி, வாடை,

சேவலென்னும் பெயர் - அன்னம், கோழி.

சேறு - அங்கணம், அசறு, அளக்கர், நுரம்பு, அசும்பு, பூதி, அளறு, அள்ளல், கலவை, கழனி, காலாழ், கும்பி, குழம்பு, குழை, கூழை, கொள்ளம், சகதி, சிறுமியம், செதும்பு, செய்யல், சேதகம், தொய்யல், தாளி, தாள்ளம், தொள்ளி, தோணி, பங்கம், பூழி, வதி. அன்றியும் பெருஞ்சேறு - நொதி.

சேற்றிலெழுங்குமிழி - பூழி, பொகுட்டு.

சேனைமுகமென்பது-படையிலோர்தொகை; அது: பதாதி மூன்று பங்கு கொண்டது.

சை

சைசவபருவம் } பாலப்பருவம், பாலாவத்
சைசவம் } தை, இளமைக்காலம்.

சைத்தியோபசாரம் - சீதவுபசாரம்.

சைமினிமுனி - வியாசசீடன்.

சைரந்திரி-வண்ணமகள், திரௌபதி, பாஞ்சாலி, பாண்டவர்தேவி. [வாமர், வைரவர்.

சைவர்-மாவிரதியர், பாசுபதர், காளாமுகர்.

சொ

சொக்கநிருத்தம்-சுத்தநிருத்தம்; அது: தூற்றெட்டுக்கரண முடைத்து.

சொரிதல்-உமிழ்தல், எக்கர், சோனை, பனித்தல், பெய்தல், பொழிதல்.

சொலித்தல் } இடத்தல், பிரகாசித்தல்.
சொலித்திடல் }

சொல் - அசைப்பு, அறை, இசை, இசைப்பு, இயம், வாசகம், வார்த்தை, எதிர்ப்பு, கூவல், உத்தி, உரை, கதை, கூரை, காதை, கிளவி. கீர், குயில், கூற்று, செப்பு, தோல், தோற்றம், நுலை, நுவற்சி, நொடி, பகர்ச்சி, பணி, பதம், பயில், பறை, பனுவல், பாணி, புகறல், பேச்சு, மறை, மாற்றம், மொழி, வாக்கு, வாணி, வாய்மை, விளம்பு, விஞ்ஞை. அன்றியும் பயனில் சொல்லின் பெயர் - அநர்த்தம். பலரறிசொல்லின் பெயர் - பெருஞ்சொல். மறைத்த சொல்லின் பெயர் - இடக்கரடக்கல், எக்கர், கூசனம். நிரம்பாமெல்லியசொல்லின்பெயர்-உல்லாபம், குதலை, கொஞ்சல், மழலை, மிழலை, மிழற்றல். தேவர் மொழியின் பெயர் - சங்கதம், சானுக்கிரகம். இழிசனர் மொழியின் பெயர் - அவப்பிரஞ்சம். எல்லா நாட்டின் மொழியின் பெயர் - பாத்தம். இவை மூவகைப்படும். வடசொற்றிரிந்த மொழி-தற்பவம். வடமொழிக்கும் பிறபாடைக்கும் பொதுமை - தற்சமம். அவ்வவ நாட்டிற்குரிய சொல் - திசைச்சொல், தேசியம்.

சொல்லின்பாகுபாடு - உட்சொல், புறச்சொல் ஆகாயச்சொல்எனமூவகைப்படும்; அவை: கேட்போர்க் குரைத்தல், தானே கூறல், நெஞ்சொடுகிளத்தல் என்பன.

சொல்லின்வகை- சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம். சுண்ணம்-நான்கடியான் வருவது. சுரிதகம் - எட்டடியான் வருவது. வண்ணம் - நாலுன்கடியான் வருவது. வரிதகம் - முப்பத்திரண்டடியான் வருவது.

சொல்லுதல்-அதிர்த்தல், அறைதல், ஆடல், இசைத்தல், இயம்பல், இறுத்தல், உரைத்தல், ஓதுதல், கதைத்தல், கத்துதல், கரைதல், கிளத்தல், குயிறல், கூவல், கூறல், சாற்றல், செப்பல், சொற்றல், தெரித்தல், நவிலல், நவிறல், நுவலல், நொடித்தல், பகர்தல், பணித்தல், பயிலல், பயிறல், பரவல், பறைதல், பன்னல், பிதற்றல், பிறழ்தல், புகலல், புகறல், பேசல், மிழற்றுதல், மொழிதல், வகுத்தல், வலத்திடல், வழங்கல், விதித்தல், விரித்தல், விளம்பல். அன்றியும் விடாது பேசலின் பெயர்-கத்துதல், பிதற்றல். சிரித்துப் பேசலின் பெயர்-அசதி.-நகைச்சொல்லின் பெயர்-நயச்சொல், நனிசைச்சொல். கூறியதுகூறலின் பெயர்-புனருக்தி. பரிந்து பேசலின் பெயர் - கொண்டாடல், மெச்சல்.

சொறி - கண்டூதி, திணவு. [றம், மெய்ப்பு.

சொன்மாலை - ஒளி, சீர், சுலோகம், தோற்

சோ

சோகம்-வெதும்பியுரைத்தல், வெறுத்தல்.

சோணிதம் - செம்பால், சுரோணிதம்.

சோதி } அனிலஙாள், காற்று, தீபம்,
சோதிஙாள் } தூணி, தூளக்கம், மரக்கால், விளக்கு, வீழ்க்கை, வெறுதுகம், காற்றிஞள்.

சோதிடநூல், - எண், கணிதம்.

சோபனம் - பல்லாண்டு, சோபநம்.

சோமசாகம் - குறுங்கலி.

சோமாசியாண்டான் - வைணவமத சிம்மாசனபதிகளில் ஒருவர்.

சோம்பல் - அசைதல், அலசல், அலைதல், அழுங்கல், ஆஞ்சி, ஆலசியம், சடம், சம்படம், சோகம், சோபம், சோம்பு, ஞொள்கல், தளர்ச்சி, துஞ்சல், தூங்கல், மடி, மந்தம், மாழ்தல், மூரி, அலைசுதல், தள்ளாவாரம்.

சோர்வு - கயக்கு, சோர்பு.

சோலை-அடவி, அரி, ஆராமம், உத்தியானம், உய்யானம், கா, கானம், கோடரம், தண்டலை, செய்கால், உபவனம், தருக்குழாம், இளமரக்கா, தூடலை, நந்தனவனம், பூந்தோட்டம், பொழில், மரச்செறிவு. அன்றியுமூர்செறிந்த சோலையின் பெயர்-பாணி, வனம். கடற்கரைச் சோலையின் பெயர்-கானல்.

சோழன்-அபயன், புனலுடன், ஆரின் கண்ணியன், ஆரின் மாலையன், புலியுயர்த்தோன், ஆரக்கண்ணியன், எலுநன், கிள்ளி, கோழி வேந்தன், சூரியன், செம்பியன், சென்னி, நேரியன், நேரிவெற்பன், புலிக்கொடியோன், கேசவன், பொன்னித்துறைவன், மால், வளவன்.

சோழன்குதிரை - கோரம். கொடி - புலிக்கொடி. மாலை - ஆத்திமாலை.

சோளம்- (ஒரு பயிர்) இறுங்கு, சொன்னல்.

சோறு - அசனம், அடிசில், அமலை, அமுது, அயினி, அவி, அழுப்பு, அன்னம், உணு, உண்டி, உணவு, புகா, நிமிரல், துற்று, உதரகம், ஊண், ஓதனம், கவளம், கூழ், சதி, சரு, சாதம், சொன்றி, துப்பு, தொடுபதம், தோரி, நிமிர்தல், பதம், பருக்கை, பலி, பாத்து, பாளிதம், பிசி, பிண்டம், புகர்வு, புழுக்கல், புளகம், புற்கை, புன்கம், பொம்மல், பொருகு, போசனம், போனகம், மடை, மிசை, மிதலை, மூரல், வல்சி. அன்றியும்கட்டுச்சோறு-குற்றுணு, தோட்கோப்பு, பாதேயம், பொதிசோறு.

சோனகர் - உவச்சர், யவனர்.

சவ்வருக்கப் பொருட்டோகுதி முற்றிற்று.

ஞ

ஞஞ்ஞையுற்றேனவிநயம்-பற்கள் மென்று இறுகப்பட்ட நாவழி வுடைமையும், நுரை சேர்ந்து கூம்பும் வாயும் பார்த்த வர்க்குரைப்பவன் போல அறிவிலாமையும், விழிப்போன்போல விழியாதிருத்தலும், விழுத்தகவுடைமையும் ஒழுக்கிலாமையும், பிரகாசிக்கு முகம் வாடிப்போதலும் பிறவும் மயங்கியதென்ப.

ஞா

ஞாதியர் - தங்குடிச்சுற்றம், தாயத்தார்.

ஞாழல் - பலினி, நாகம்.

ஞானசதுட்டயம் - நித்தியாநித்தியவத்து விவேகம், இகமுத்திரார்த்த பல போக விராகம், சமாதிசட்க சம்பத்து, முமூட்சுத்துவம் என்பனவாம்.

ஞானபேதம் - பதிஞானம், பசுஞானம், பாசஞானம்.

ஞானம் - அறிவு, ஆற்றல், உரம், ஓதி, காக்ஷி, கியானம், சிதம், போதம், விச்சை, வித்தகம், வித்தை, விவேகம்.

ஞானவகை - பரஞானம், அபரஞானம் என்பனவாம். இவற்றுள் பரஞானம் சிவஞானமாம். அஃது திருவடிஞானம், அருண்ஞானம், பதிஞானம், அத்துவிதஞானம், சத்தஞானம், சன்மார்க்கஞானம், சுத்தவஞானம், மெய்யுணர்வு. உண்மை ஞானம், அபரோக்ஷஞானம் - பரமஞானம் எனப்பெறும், அபரஞானம் - சரியை, கிரியை, யோகம் என்பனவாம். இவை மெய்ஞ்ஞானம், பரோக்ஷஞானம் எனப் பெயர்பெறும். இவற்றுள் யோகம், அட்டாங்கயோகம், சிவயோகம், கன்மயோகம், மாயோகம், பரயோகம், இராஜயோகம், ஆதாரயோகம், நிராதாரயோகம், மீதானயோகம் எனப் பலவகைப்படும்.

ஞவ்வருக்கப் பொருட்டோகுதி முற்றிற்று.

த

தகடு - அரி, அடர், ஐம்மை.
தகழி - இடிஞ்சில், பாண்டில்.
தக்கேசி - நவிர்.
தங்கல் - அசைதல், அல்கல், ஆர்தல், இயங்கல், இருத்தல், இறுத்தல், இறை, தரித்தல், தாழ்தல், தெவுட்டல், தேறல், வதிதல், வலிதல், வைகல், விடுத்தல், வசித்தல்.
தங்குடித்தமர் - தாயத்தார், ஞாதியர்.
தங்கை - பின்னை, பின்னவள்.
தசவாயுவின்வகை - பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.
தசாதின்போர் - கூழலி, சாழலி.
தச்சர் - சித்திரர், சூத்திரர், தபதியர், மரவினேயாளர், யாணர், ஸ்தபதியர்.
தடவல் - ஊர்தல், தைவரல், நீவல், வருடல், இவற்றுட் காலேத்தடவலின்பெயர்-தைவரல்.
தடாகம் - அயம், அலங்தை, ஆவி, இலஞ்சி, உவளகம், ஏரி, எல்வை, ஓடை, கயம், கிடங்கு,குட்டம், குண்டம், குழி,குளம், கேணி, கோட்டம், சரசு, சலதரம், சுனை, சூழி, தடம், தாங்கல், நளினி, நீர்நிலே, பங்கம், படு, படுகர், பட்டம், பண்ணே, பயம், பல்வலம், பொய்கை, மடு, வட்டம், வாவி.
தடி - எறழ், கதை, தண்டு. அன்றியுங் குருந்தடியின் பெயர் - குணில்.
தடுத்தல் - ஞேணை, தகைதல், தட்டல்,மறித்தல், மறுத்தல், வாரணம், வாரணே, வாரணேயம், வாரித்தல்.
தட்டார் - அக்கசாலேயர், செங்கொல்லர், சொன்னகாரர், பொன்வினே செய்வோர், பொன்செய்கொல்லர், பொன்வினேமாக்கள்.
தணக்குமரம் - துணைவை, தணக்கு.
தணியாக்கோபம் - கனிதல், கொந்தல், கோம்பல், வெதும்பல், வம்பல். [வைரம்.
தணியாமுனிவு-சலம், செற்றம், சொற்றம்,
தண்டனிடல் - வந்தனம், பணிதல், காண்ல், வழிபடல், பணிவு, இறைஞ்சல், வணங்கல், பார்த்தல், தாழ்தல்.
தண்டாயுதம் - எறழ், கதை, சீர், முளே வயிரம், தண்டு, தடி.
தண்டை - (ஒருகாலணி) காற்றண்டை,சீர்,
தண்ணீர்க்குடம் - கானவாழை.
தண்ணீர்விட்டான்பூடு - மிருந்தவனம்.
தண்ணுமையோனமைது - எல்லாக் கூத்துகளும் எல்லாப் பாட்டுக்களும் எல்லா விசைகளும், வடவெழுத்தோரீ இவந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கடவுளேக் கூறுபாடுகளும் எல்லாப்பண்களும் இருவகைத்தாளங்களும், எழுவகைத் தூக்குக்களும், இவற்றின் குற்றங்களும் இயற்சொல் முதலிய நால்வகைச் சொற்களு மென்று சொல்லப்பட்டனவற்றை நுண்ணிதாக வுணர்ந்து ஒரோருருவையிரட்டிக் கிரட்டி சேர்த்த விடத்து வெகிழாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப்பெறு மிரட்டியேயாய்ப் பாகவுருவானவழி நிற்குமானுறுத்திக் கழியுமானங் கழிக்கவும் வல்லவனும். இப்படி நிகழ்ந்த வருக்களில் யாழ்ப்பாடலுங் குழலின் பாடலும், கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக்கொள்ள அமைந்த காரணத்தாற் குறியறிந்து சேர வாசித்து மற்றைக் கருவிகளிற் குறை நிறப்புதலும், மிகுதியடக்குதலும், ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையில் இரந்திரன் தோன்றுத படியே செய்தலும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச் செய்து காட்டலும் வல்லவனும், அழகு தக்க தண்ணுமைக் கருவியினேயும் அரிய தொழிலினேயு முடைய ஆசிரியனும்.
ததியுணவு - தயிரிற்றிமிரல்.
தந்திரம் - உபாயம், சூழ்ச்சி, மிருதி, ஆரிடம், பனுவல்.
தந்திரிகரம் - செங்கோட்டியாழினது அறுவகையுறுப்பினுளொன்று. அஃதாவது நரம்பு துவக்குவதற்குத் தகைப்பொழிய இருசாணல் விரல் நீளமாகக் குறுக்கிடத் துச்சேர்த்த ஐம்பத்தோருறுப்பு.
தந்திரியர்-அமாத்தியர், எஞ்தியர், விதியர்.
தந்தை - அத்தன், அப்பன், அம்மான், ஐயன், ஈன்ருன், குரவன், சனகன், தகப்பன், தாதா, தாதை, பிதா.
தமிழ் - திரமிடம் திரவிடம், திராமிடம், திராவிடம், திரமிளம், தென்மொழி.
தமிழ்கூத்தர் - தமிழ், நாடகர், வாயிலோர்,
தமையன் - அண்ணல், அண்ணன், சேட்

டன், தலைவன், முன்றோன்றல், முன்னவன் மூத்தோன், வரன்.

தம்பட்டம் - ஆனகம், திண்டி, படகம், பணவம், முரசு, முழவு.

தம்பதி - இரட்டையாண்பெண்.

தம்பலப்பூச்சி - இந்திரகோபம், ஈயல், கோபம், மூதா.

தம்பலம் - தம்பல்.

தம்பி-அலரசன், அனுசன், இளவல், இளையோன். உவா, கனிட்டன், பிள்ளை, பின்றோன்றல், பின்னவன், பின்னோன்.

தயிர் - அளை, ததி; பெருகு, முசரு.

தயிர்கடைகோல் - மத்து.

தயிர்கடைதறி - வெளில், மந்ததண்டகம்.

தயிர்கடைதாழி-குடாரு, கர்க்கரி, மந்தனி, மந்தினி, மந்தநகடி.

தரா - மதுமம், மதுகம்.

தரித்திரம் - அல்கல், இரப்பு, இலம்பாடு, இல்லாமை, இன்மை, உறுகண், ஒற்கம், குறுவாழ்க்கை, குறை, சிறுமை, நல்குரவு, நிரப்பு, மறல், மிசை, மிச்சை, மிடி, வறுமை.

தரித்திரன் - அற்றான், ஆதுலன், ஆற்றான், இலம்பாட்டோன், இல்லோன், உறுகண்ணன், ஏழை, கிஞ்சன், தீனன், துயருறுவோன், நல்கூர்ந்தோன், பேதை, மிடியன், வறியன், வறியோன், அகிஞ்சனன்.

தருக்கம் - நியாயம், யூகம், வாதம்.

தருப்பை - குசம், குசை, குமுதம், கூர்ச்சம், பவித்திரி.

தருமதேவதை - மகாதவல்லி, பூகநிழலுற்ற வஞ்சி, பரம சுந்தரி, இயக்கி, பகவதி, அம்மை, அருகனே முடிதரித்தாள், அம்பிகை, அறத்தின்செல்வி, அம்பாலிகை.

தருமநூல் - மநு, அத்திரி, விட்டுணு, வாசிட்டம், யமம், ஆபத்தம்பம், யாஞ்ஞவற்கியம், பராசரம், ஆங்கீரசம், உசனம் காத்தியாயனம், சமவர்த்தம், வியாசம், பிருகற்பதி, சங்கலிதம், சாதாதபம், கௌதமம், தர்க்கம் என்னும் பதினெட்டுமாம்.

தருமம் - அறம், சீலம், சுகிர்தம், புண்ணியம், சத்தியத்தினின்றும் பிறழா நெறி.

தருமராஜன் - அறத்தின் மைந்தன், உதிட்டிரன், மெய்மை விரதமாகக்கொள்வோன், தருமன், தருமபுத்திரன், பொறையாளன், குந்திபுதல்வன், குவளைத்தாரான், பாண்டுமைந்தன், பொறையன், மூரசக்கொடியோன், மெய்விரதன், அறத்தின் சேய்.

தலை - உச்சி, உத்தமாங்கம், உவ்வி, கம், சிகரம், சிரம், சீரிடம், சென்னி, சேகரம், நவிரம், மத்தகம், முடி, மூண்டம், மூர்த்தம், மூர்த்தினி. தலையோட்டின் பெயர் - ஓடு, கபாலம், வெண்டலை. தலையோட்டுப் பொருத்து - கபோடி. தலையிற்றரிப்பதின் பொது - சேகரம், தலைச்சாத்து.

தலைக்காவல் - இளை, உக்கிரம்,

தலைக்கோலம் - தலைச்சாத்து, பங்குசம், பிஞ்ஞகம். [த்திராணம்.

தலைச்சீரா - கிசகம், சித்தகம், சிரகம், தலை

தலைப்பாளை - தொய்யகம். [தளி.

தலைப்பெய்தமழை - ஆவி, தலையல், உறை,

தலைமயிர் - சிரோருகம், மூர்த்தசம்.

தலைமையள் - குரத்தி, பெருமாட்டி; ஆசாள், இறைவி, கொமகள், தலைவி, அடிகள், ஐயை, சாமி, அத்தை, தலைமைப் பெண்.

தலையணை - உபதானம், உபதை.

தலையிலாக்குருவி - மழைக்குயில்.

தலையோடு - கபாலம், வெண்டலை.

தலைவனைப்பிழைத்தீன்றசோர புத்திரன்-குண்டகன்.

தலைவன் - அன்பன், ஆர்வலன், இறைவன், உரியோன், கணவன், கண்டன், காதலன், காந்தன், காவலன், கேள்வன், கொண்கன், கொழுநன், தலைமகன், தவன், துணைவன், நண்பன், நாயகன், பதி, பத்தர், பிரியன், புருடன், மணமகன், மணவாளன், வல்லவன், வேட்டோன்.

தலைவி - அடிகள், அத்தை, அரசி, ஆசாள், ஆட்டி, இறைமையாட்டி, இறைவி, ஐயை, கிழத்தி, கோமாட்டி, கோமாள், சாமி, சீமாட்டி, செல்வி, பிராட்டி, பெருமாட்டி, முதல்வி.

தலைவிரிபறை - (ஒருவகைப் பறை)கத்திரி.

தவத்தோரிருக்குமிடம் - கரண்டை, குகை, தாபதம், பள்ளி, பாழி, மடம்.

தவத்தோர்பீடம் - விட்டரம், பீடிகை.

தவப்பெண் - அம்மை, அவ்வை, ஐயை, கந்தி, கவுந்தி, கன்னி, பைமை.

தவம் - உவவு, உவ்வு, தபம், தவசு, நன்னியை, நோற்றிடல், நோன்பு, நோன்மை, படிவம், மாதவம், வாகை, விரதம்.

தவளை - அண்டசம், அரி, காலூரம், தேரை, நீகம், நூனலை, பேகம், மண்டூகம், மசை.
தவிடு - முட்டை, முடை, பொதி.
தவிர்தல் - வாளா, தணத்தல், தீர்தல்.
தழும்பு - அங்கிதம், கசடு, கச்சை, காய்ப்பு, சுவடு, வசி, வடு. அன்றியும் வடுப்படலின் பெயர் - கதுவாய். [கல், வில்லல்.
தழுவுதல் - அணைத்தல், ஆலிங்கனம், முயங்
தஸ்ழ - உலைவை.
தளர்வு - இட்டளம், உடைப்பு, எளிமை, வட்டை, சோர்வு, அசா, தளர்ச்சி.
தளிர் - அலங்கல், உலஞை, உல்லரி, கிசம், கிசலம், கிசலயம், கூளை, குழை, தழை, துளிர், பல்லவம், மஞ்சரி, முறி, வல்லரி.
தளிர்த்தல் - தளிர்தல், இழுக்கல், ஒல்கல், சேர்தல், குழைத்தல், இவிர்த்தல், சிவிர்த்தல்.
தள்ளல் - ஊன்றல், நூக்கல், நோன்றல்.
தறித்தல் - ஏற்றல், கண்டித்தல், காதுதல், கடிதல், குண்டித்தல், பருத்திடல், பரிதல், வெட்டல். [வேறிடம்.
தனித்திருக்குமிடம் - ஏகாந்தம், ஒருவந்தம்,
தனிமை - அந்தரம், ஏகம், ஒருமை, கேவலம், புலம்பு, வீறு.
தனுவிராசி - காண்டீபம், கொடுமரம், சாபம், சிலை, துரோணம், வில்.
தன்மேம்பாடுதானிகழ்த்தல் - நெடுமொழி.
தன்னையறிந்தவர் - சாயுச்சியத்தர்.
தன்னையறியாதவர் - பிறப்போர்.

தா

தாடி - கட்டம், கீழ்வாய், மோவாய்.
தாண்டல் - அகறல், இகுத்தல், கடத்தல், தத்துதல், தரணம், தாண்டுதல், தாவுதல், நீடுதல், பாய்தல், பாவுதல், வாவல்.
தாதிற்றூள் } சுண்ணம், பிரசம், மகரந்
தாதின்றூள் } தம், பராகம்.
தாதுமாதளை } பூமாதளை, பூமாதுளை,
தாதுமாதுளை } தாடிமம்.
தாமதகுணம் - பேருண்டி, நீதிகேடு, உறக்கம், மறதி, பொய், சோம்பு, ஒழுக்கம் வழுவுதல், கொலை, வஞ்சம். [பனம்.
தாமதம்-ஆலசியம், பாணி, விளம்பம், விளம்
தாமரை - அம்புயம், அம்போருகம், அரவிந்தம், ஆய்மலர், இண்டை, கஞ்சம், கமலம், குசேசயம், சதபத்ரி, சரோசம், சரோருகம், சலசம், சாரசம், சூது, திருமலர், திருமாலுந்தி, தோடகம், நளினம், நீரோருகம், பங்கசம், பங்கயம், பங்கேருகம், பதுமம், பற்பம், புட்கரம், முண்டகம், மூளரி, வனசம், வாரிசம், கோகனதம், வாரீசம். அன்றியுஞ் செந்தாமரையின் பெயர் - சேகாகனகம். வெண்டாமரையின் பெயர் - சிதாம்புசம், புண்டரிகம், புண்டரீகம்.
தாமரைக்காய் - வராடகம், வராண்டம்.
தாமரைக்கொட்டை - கன்னிகை, பராகுட்டு.
தாமரைப்பூ - இராசீவம், இறும்பு.
தாமரையுட்சுருள் - பீசம், வலயம், விசி.
தாம்பிரசூடமாவது - நடுவிரலுஞ் சுட்டுவிரலும் பெருவிரலும் தம்மில் நுனியொத்துக்கூடி வளைந்து சிறுவிரலு மணிவிரலு முடங்கி நிமிர்வது.
தாம்பு - கண்ணி, கயிறு, தாமணி.
தாய் - அம்மனை, அம்மை, அவ்வை, அன்னை, ஆயி, ஆய், ஈன்ருள், சனனி, தம்மனை, தல்லி, தெளவை, பயந்தாள், மாதா, மொய்த்தாய், யாய், மோய், தன்னை.
தாரணை - முழங்கால், குதம், இதயம், கண்டம், கபாலமாகிய இத்தானங்களிற் பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களையொடுக்கி, அத்தானங்களில் பிரமன் முதலிய பஞ்ச மூர்த்திகளையும் பாவித்தல்.
தாழி - அகளம், அகளி, சாடி, தளம், பதலை.
தாழை - கண்டல், கேதகை, கைதை, மடி, முகரி, முசலி, மூடங்கல், மூண்டகம்.
தாழ் - கடிகை, காழ், சிப்பு. [தல், குனிவு.
தாழ்தல் - இறைஞ்சல், குரங்கல், குரங்குசாழ்த்தல் - ஆழ்த்தல், இருத்தல், நாலல்.
தாழ்வாரம் - ஆலோகணம், சோபானம்.
தாழ்வு - அகப்பு, அதம், இழிபு, குண்டு, சாய்வு, தஞ்சம், தண்மை, தூங்கல், வட்டம், தலையிழிபு, சாய்ப்பு, இழிவு.
தாளம் - கஞ்சம், கஞ்சனம், கிட்டி, பாண்டில், சீர்.
தாளம்போடல் - ஒத்தறுத்தல், ஒற்றறுத்தல், தட்டல், வட்டித்தல், வட்டணை.
தாளவொத்து } சதி, சீர்.
தாளவொற்று }
தாளிக்கொடி - மஞ்சிகம், மஞ்சிகை, விந்துசம்.
தாள் - கடிகை, சீப்பு, தாழ், தாழ்ப்பாள்.
தானப்பொருத்தவகை - குற்றெழுத்தைந்தும் அவற்றிற்கினமாகிய நெட்டெழுத்

துக்களேழும் பாட்டைடைத் தலைவனியற் பெயர் முதலெழுத்தெந்தவெழுத்தோ அந்த வெழுத்தே பாலத் தானமாகக் கொண்டு மற்றை யெழுத்துக்களைக் குமாரன், இராசன், மூப்பு, மரணமாக எண்ணுதலால் தன்னெழுத்தைப் பால னாகவும், இரண்டாமெழுத்தைக் குமர னாகவும், மூன்றாமெழுத்தை யிராசனாக வும், நான்காமெழுத்தை மூப்பாகவும், ஐந்தாமெழுத்தை மரணமாகவும் காப் பியத்தின் முதற் செய்யுளின் முதற் சீரிற் கொள்க. [வர், மள்ளர், மறவர், படர்.

தானைத்தலைவர்-கூனியர், எருளர், வாளுழ

தான்றிமரம் - கலித்தருமம், தான்றி, விபீ தகம்.

த

திசை - அம்பரம், அரிதம், ஆசை, உலகு, ககுபம், காட்டை, கோ, திகை, திக்கு, மாதிரம், வம்பல், விசும்பு, புலம்.

திசைச்சொல் - திசைமொழி, தேசிகம், இராமியம்

திசைநாற்கோணம் - அந்தராளம்.

திட்டை - திடர், பதுக்கை, பாறை, முரம் பு. அன்றியும் மணற்றிட்டையின் பெ யர் - புளினம்.

திண்ணியன் - அவணன், சமர்த்தன், திற லோன், பண்ணவன், பொருநன், மள் ளன், மிண்டன், மீளி, வண்டன், வய வன், வல்லான், வல்லுநன், வியவன், விற லோன், வீரன், விடலை.

திண்ணை - குறடு, திட்டை, மண்ணீடு, வேதி, வேதிகை, தெற்றி.

தித்திப்பு அமுதம், இழுது, இழுமு, இனி மை, கணி, சுவை, சுவாது, சேறு, தமிழ், தீயம், தேக்கு, தேம், மதுகம், மதுரம், கனி.

திப்பிலி - ஆர்கதி, கலினி, காமன், சிறுமூ லம், மாகதி, பிப்பிலி, சிறுமூலகம்.

திமி - பெருமீன், யானைமீன். [மீன்.

திமிங்கிலகிலம் - திமிங்கிலத்தை விழுங்கு

திமிங்கிலம் - யானைமீனை விழுங்குமீன்.

திமிர்தல் - துவர்தல், துளும்பல்.

திமிலை } (பறை வகையிலொன்று)
திமிலைப்பறை } சல்லரி.

தியானம் }
தியாகம் } யோகம், உள்ளுணர்வு.

திரட்கோலை - (ஒருவகைக் கோலைப்புல்) எருவை, சாய், பஞ்சாய், பஞ்சாய்க்கோ லை, திரள்கோலை.

திரட்சி - அவயல், இராசி, இணம், உண் டை, கணம், கணை, காண்டம், குடந் தம், குப்பை, குவடு, குவிதல், குவை, குழியம், கொம்மை, சமூகம், சேடு, சேர்வு, சோகம், தாளம், திரள், தூறு மல், தொகுதி, தொழுதி, பந்தம், பிண் டம், பிழம்பு, புஞ்சம், பூகம், மாலை, முடலை, முண்டம், முத்தை, வட்டு, வழி, குவவு. [டல், தெழித்தல், பிளிறல்.

திரட்டோலை - அலறல், கூப்பிடல், உரப்பி

திரண்டகல் - உலங்கு, உலம், குண்டு.

திரண்டோர் - சபை, சமவாயம், சங்கம், சமூதாயம், சமூகம், கோட்டி, அவை, குழாம், குழு, கூட்டம், திரள், கணம்.

திரள் - உண்டை, கொம்மை, குழியம், குப்பை, முத்தை, பூகம், சோகம், புஞ் சம், பந்தம், மாலை, வட்டு, பிண்டம், வழி, சேர்வு.

திரிகடுகம் }
திரிகடுகு } சுக்கு, திப்பிலி, மிளகு.

திரிகை - தட்டு, பந்து, வட்டம், மாவாலை.

திரிசங்கு - சத்தியாதனன் எனவும் பெயர் பெறும். இச் சூரிய குலத் தோன்றலின் வரலாற்றை விளங்க வுரைப்பாம். அயோத்தியை யாண்ட அரசர்களுள் அம்பரீடன் என்னும் அரசனிருந்தான். அவன் மகன் உவணச்சுவன், அவன் புதல்வன் அரிதன், அரிதன் புத்திரன் திரிசதேச்சு, அவன் மகன் சம்பூகி, அவன் மகன் மால்விருத்தன், அவன் மகன் அரண்ணியன், அவன் மகன் விட தச்சுவன், அவன் மகன் வசுமது, அவன் மகன் திரிதனு, அவன் மகன் சூரியவண் ணன் ஆகும். இச் சூரியவண்ணன் என் னும் அரசனுக்குப் புத்திரனுகப் பிறந்து சத்தியாதனன் என் னும் பெயருடன் திரிசங்கு மகாராஜன் உலகை யொரு குடைநீழலில் இருந்து அரசாண்டு வந் தான். இவன் மனைவி பெயர் சத்தியவதி. இவ்விருவரும் புத்திரப்பேறின்மையால் தன் குல குருவாகிய வசிட்ட முனிவரை அடைந்து செய்வதென்னென்று பிரார்த் திக்க, வள்ளி மணாளக் குமரனே யீன்ற புள்ளி மான் கரத்தனே னினைந்து, தவஞ் செய்க வென்ன அங்ஙனந் தவங்கிடந்து, அவன் திருவருளால் வாய்மை

நிறுத்திய பெரும் புகழோனுகிய அரிச்சந்திரனைப் புத்திரனுகப் பெற்று மகிழ்ந்திருந்தனர். மூன்று தோஷங்களையுடையமையால் திரிசங்குவென்ப. இவ்வரசன் பின்னரும் தனது குருவாகிய வசிட்டரை யடைந்து உடலொடு சுவர்க்கமடைதற்கு ஓர் யாகஞ் செய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். முனிவனுர் கூடாதென்று மறுத்தனர். அவர் புத்திரர்களிடஞ் சென்று கேட்கவே அவர்களு மவ்வாறு மறுத்தனர். அரசன் கோபங்கொண்டு பிற முனிவரிடஞ் சென்று நினைத்தது முடிப்பனென்று அகல, அதனை யறிந்த வசிட்டமுனிவர் குருநெறி பிறழ்ந்தமையால் நீசனுகக்கடவாய் எனச் சபித்தார். அதனுல் புலையுரு வேற்று வசிட்டமுனிவர்க்குப் பகைவர் யாரென்று ஆய்ந்து, காதிமைந்தனைக் கருதி அவரிடஞ் சென்று நிகழ்ந்தவை லாம் வருந்தியறைந்தான். முனிவர் தினமுற்று அபயங்கொடுத்து, மற்றைய முனிவர்களை யாகஞ்செய்தற்காக அழைத்தனர். அவர்களை வசிட்டமுனி புத்திரர்கள் தடுத்தார்கள். அதனை விசுவாமித்திர முனிவர் அறிந்து முனிபுத்திரர்களையெல்லாம் வைது கொன்றனர். பின்னர்த் தாமே துணிந்து தனித்து யாகத்தைச் செய்து அவிசாரியத் தேவர்கள் யாவரும் அவ்வவியை யேற்க வாராதிருந்தனர். அதனுல் விசுவாமித்திரர்க்கு அதிக கோபமூண்டு, திரிசங்குவை நெய்யிறைக்குஞ் சுருவையினேற்றிச் சுவர்க்கம் போவென்னப் போனன். அதுகண்ட தேவர்கள் 'நீசனே இவ்விடம்வராதொழி' யென்று தலைகீழாய்த் தள்ளினர். உடனே திரிசங்கு விஸ்வாமித்திரரை நோக்கி யோலமிட்டனன். அவர் அரசனைத்தந்தவவிமையினுல்அவ்வந்தரத்தினிற்றூனே வீழாது நிற்கச் செய்து வேறூர் சுவர்க்கத்தைச் செய்வேனென்று, நட்சத்திரங்கள் தேவகணங்கள், சராசரங்கள் முதலிய சிலவற்றைப் படைத்தனர். தேவர்களும் இந்திரனும் இவற்றையெல்லாம் பார்த்துப் பயந்து விசுவாமித்திர முனிவரிடம் வந்து 'ஐயனே! தேவரீர் இனிப் படைத்தலை விடுத்தருளும். இப்போ படைத்தவைகளும் திரிசங்குவும் நட்சத்திரமண்டலத்தின் அருகில் இருக்கட்டும்' எனவேண்டினர்கள். முனிவர் திரிசங்குவை அங்ஙனமெந்நாளு மிருத்தியென்று வரங்கொடுத்தனர். அதுவே திரிசங்கு சுவர்க்கம் எனப் பெயர் பெற்று வழங்கப்படும். அரிச்சந்திரனை குல குருவாகிய வசிட்டனுரையே யடுத்திருந்தான். இதனுல் விஸ்வாமித்திரர் அரிச்சந்திரன் மீது அதிக கோபமுடையரா யிருந்தார். பின்பு அது காரணமாகவே யவனை யவ்வளவு துன்பத்துக் குட்படுத்தினர்.

திருடர் - கரவடர், கரவர், கள்ளர், கையர், சோரர், தேனர், பட்டிகள், பித்தர், புரையோர். [திருடுதல்.

திருடல் - கரத்தல், கவர்தல், வவ்வல்,

திருநீறு - விபூதி, பூதி, ஒமப்பொடி, காப்பு, புண்ணியசாந்தம், சாரம், வெண்டாது, பொடி, பற்பம், பஸ்மம். [திக்குடுக்கை.

திருநீறுவைக்கும்பாத்திரம் - சம்புடம், விபூ

திருமகளாடல் - பரவை, பாவை.

திருவாதிரைநாள் - ஆதிரை, ஈசனுள், செங்கை, மூதிரை, யாழ், ஈசன்றினம், அரனுள், மார்கழித்திருநாள்.

திருவாரூர் - கமலை. [தூணங்கறல், முருகு.

திருவிழா-உற்சவம், சாறு, சேறு, தீர்த்தம்,

திருவோணநாள் - உலக்கை, ஓணம், சிரவணம், சோணை, நள்ளு, மாயோனுள், முக்கோல், வயிரம்.

திரை - அலை, அறல், அறை, ஓதம், கல்லோலம், சீகரம், தரங்கம், வாரம்.

திரைச்சீலை - அவிடி, எழினி, ஏமம், கஞ்சிகை, கஞ்சுசி, கண்டம், கவழிகை, கழனி, காண்டம், கையடம், படகம், படாம், பாரகம்.

திலகம் - சுடிகை, சுட்டி, திலதம்.

திறக்குதல் - அங்காந்திடல், திறத்தல்.

திறமென்பது - குறைநரம்புள்ளது.

தினவு - கண்டூதி, சொறி.

தினை-எனல், அன்றியுங் கருந்தினை-இறடி, கங்கு. செந்தினையின்பெயர்-கம்புகவலை. பைந்தினையின்பெயர் - எனல்.

தினைத்தாள் - அருவி, இருவி. [வாளகம்.

தினைப்புனம் - (தினைவிளைபுலம்) எனல், தினைமா-இடி, நவணம், நுவணை, பிண்டி.

தின்பன - (தின்றற்குரியன) திற்றி.

தீ

தீ - அக்கினி, அங்காரகன், அக்கி, அயவா

கனன், அரி, அழல், அனல், ஆரல், உதகவன், உதாசனன், எரி, எழுஞா, ஒளி, கருநெறி, கனலி, கனல், காலவம், காற்றின் சகாயன், சாதவேதா, சிகி, சித்திரபானு, சுசி, சுடர், சூரன், சுவலன், செஞ்சுடர், சேர்ந்தார்க்கொல்வி, சோதி, ஞெகிழி, தகனன், தபனன், தழல், தனஞ்சயன், தூமகேது, தென்கீழ்த்திசையோன், தேயு, நெருப்பு, பாவகன், மூளரி, வசு, வன்னி, வாயுசகன், அன்றியும் ஆறுஆழித்தீயின் பெயர் - உத்தரம், உற்கம், கடையனல், தீத்திரள், மடங்கல், வடவாமுகம், வடவை. [ஞெகிழி.

தீக்கடைகோல் - அரணி, ஞெலிகோல்,

தீக்கணத்தின்பெயர் - அந்தரகணம் வேறு தேசத்திற் செலுத்துதலும், வாயுகணம் செல்வதைப் போக்கலும், சூரியகணஞ் சூனியஞ் செய்தலும், தீக்கணம் நோய் செய்தலுமாகிய குற்றத்தைத்தருமென்று நூலினே யாராய்ந்த புலவர் கூறுகின்றார்.

தீக்கணவகை - தேயு, வாயு, அந்தரம் இயமானன் இந்நான்குந் தீது.

வேளாளர் - மண்மகள்புதல்வர், வளமையர், களமர், மள்ளர், நான்காம் வருணத்தவர், சூத்திரர், கங்கைமைந்தர், காவிரிப்புதல்வர், உழவர், மேழியர், எரின் வாழ்நர், இளங்கோ, பூபாலர், பின்னவர், பெருக்காளர், அறு தொழிலாளர், வாணர், காராளர், வினைஞர்.
வேளாளர்பட்டப்பெயர் - வேள், வேளிர் அரசு, எஞ்தி, காவலர், காவிதி, உழார், கிழார், தேவர், காவலர், முதலியார், பிள்ளை, தாசன்.
வேள்வியின்பெயர் - யாகத்தைக் காண்க.
வேறுபடுத்தல் - விகற்பித்தல்.

வேற்றுமை - அந்தரம், திரிபு, பங்கம், பின்னம், பேதம், மாற்றம், விகடம், விகற்பம், விகாரம், விகிர்தம், விபரீதம், விரூபம், விரோதம், வில்லல், வீற்று, வேறுபாடு.

வேற்றுமையுருபு - ஐ, ஆல், ஆன், ஒடு, ஒடு, கொண்டு, உடன், கு, பொருட்டு, நிமித்தம், இன், இல், நின்று, இருந்து, அது, உடைய, கண், கால், தனை, இடம், திசை, வாய், வயின், மூன், பின், சார், வலம், இடம், கீழ், மேல், அத்து, கடை, புடை, கல், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல்.

வேற்றேற்குப்பெற்றபிள்ளை - குண்டகன்.

வை

வைகறை - புலரி, விடியல், வெள்ளாப்பு.

வைகாசிமாதம் - மாதவம், வைகாசம், வைசாகம்.

வைகையாறு - வேகவதி, வையை, வைகை.

வைக்கோல் - பலாலம், வழுது, வை.

வைசியர் - அயனுருவில்வந்தோர், ஆன் காவலர், இப்பர், இளங்கோக்கள்.

வைசவ்வை - அந்தரங்க சிவபக்தியுள்ள வீரசைவப்பெண். இவளுடைய கணவன் சமணசமயத்தைச் சார்ந்தவன். கணவன் சைநசந்நியாசிகளை இட்டுக்கொண்டு வந்து அவர்களுக்குப்பலவகைப் பண்ணிகாரங்களோடு அறுசுவையுண்டி விருப்பத்தோடளித்து அவர்களை உண்பித்துக் கொண்டு வருகையில் ஒரு நாள் இதே பிரகாரம் வைசவ்வை கணவன் கட்டளைப்படி பலவகைப் பண்ணி காரங்களும் அறுசுவைப் பதார்த்தங்களும் அன்ன முதலியவைகளும் சைநசந்நியாசிகளுக்கு விருந்திடச் சமைக்கையில், இவை சிவநேசருக்குப் படைப்பின் புண்ணியமாகுமே என்று கருதினாள். ஆனால் அவ்வாறு தன் கணவன் செய்யாமைக்காக மனமிக வருந்தினாள். கணவன் சைநசந்யாசிகளை அழைக்கச் சென்றவுடன் இவள் கருத்துணர்ந்த சிவபெருமான் ஒரு சங்கமராய் வடிவங்கொண்டு வைசவ்வையிடம் எழுந்தருளினர். சங்கமரைக் கண்டவுடன் மிக்க ஆனந்தங் கொண்டவளாகி அவரை எதிர்கொண்டழைத்துத் தான் சமைத்த அன்னமுதலிய வற்றைப் பரிமாறினள். அச்சமயத்தில் கணவனும் சைநசந்நியாசிகளுடன் வந்தனன். சங்கமரைக் கண்டவுடன் மனம் பொறாது மனைவியை நையப்புடைத்தனன். அச்சமயம் சிவபெருமான் மறைந்தனர். ஆனால் இங்கு ஒரு ஆச்சரியம். அதாவது கணவன் அவளை அடித்த அடி ஒன்றேனும் அவள்மீது படாமல் அவ்வடிகள் முழுதும் சைநசந்நியாசிகள் மீதுபட அவர்கள் வருந்தினர். அவர்களும் தங்களுக்குப்பட்ட அடிகள் பூசாவும் வைசவ்வையை அவள் புருஷன் அடித்ததால் தங்களுக்கு நேரிட்ட தீங்கென்றியம்பினர். புருஷன் இவள்எனக்கு ஆகாளென்று விலக்கினன். வைசவ்வை சைநவிக்கிரகத்திடஞ் சென்று சிவபெருமானைக்கருதி வணங்கினள். அது சிவலிங்க மூர்த்தமாயிற்று. அதனால் வைசவ்வை களிப்படைந்தனள்.

வைசியர் - எட்டியர், கிலேபியர், செட்டியர், கிரேட்டிகள், தருமக்கிழவர், தாளாளர், தூணிகர், தேசிகர், தோன்றிகர், நாய்கர், பரதர், மன்னர்பின்னர், முத்தொழிலோர், வணிகர், வாணிகர், வினைஞர்.

இவர் தொழிலால்மூவகையர் - கோவைசியர், தனவைசியர், பூவைசியர் அவர் இடையர், செட்டிகள், எருழவர் இவரைத் தத்தம் வரியிற் காண்க.

வைசியர்சேரி - வாசிகை.

வைசியர்தொழில் - ஏர்த்தொழில், ஓதல், ஓதுவித்தல், பொருளீட்டல்.

வைடூரியம்-வாலவாயசம், வாலவாயம், கேதுப்பிரியம், கேதுரத்தினம், வயிடூரியம்.

வைத்தியர் - ஆமாத்தியர், ஆயுள்வேதியர், ஆரியர், பண்டிதர், பிடகர், மருத்துவர்.

வைரச்சாதியின்பயன் - பிராமணசாதிவைரமணிந்தால் மறையோனுகிப் பிறவியேழும் பிறந்து வாழ்குவர், அரசசாதிமணியணிந்தால் எழுபிறப்பும் வேந்தனுகப் பிறந்து இந் நிலவேந்தர்சூழ விருந்தரசாள்வார், வைசிய சாதி மணியணிந்தால் மணியும்பொன்னுமலியவாழ்வர். சூத்திரசாதி மணி பூணின் அளவில்லாத பொன்னு நெல்லும் பசுவுநிலமும் பொலிய வாழ்வர்.

வைரவம் - ஒருமதம். இம்மதத்தவர்க்குச் சைவசமயக்கொள்கைகள் பலவும் ஒப்பு. இம்மதத்திற்குச் சிவமூர்த்தி தமருகம்

தரித்த மூர்த்தியாய் அருள்செய்வர் என் பர் இம்மதமேற்கொண்டோர்.

வைரவர் - மார்த்தாண்ட பைரவர், ஆனந்த பைரவர், பிரமோதபைரவர் எனப்பல ராவர். இவர்கள் மணித்வீபசக்ராலய காவலர்.

வைரவவிரதம் - மங்கலவாரவிரதம் - தை மாதத்து முதல் செவ்வாய்க்கிழமை முதல் பிரதி செவ்வாய்க்கிழமையிலும் அநுஷ்டிக்கும் விரதம்.

வைராசன் - ஆரிமன் வந்தரத்து விஷ்ணு மூர்த்தியைக் குமாரனாகப் பெற்றவன்.

வைவச்சத பட்டணம் - ஆன்மா இமயபுரத் திற்குப் போகும் வழியில் உள்ள பட்ட ணம். இதில் தண்ணீர் கிடையாது. இரத்த மழை பெய்துகொண்டிருக்கும்.

வைனதேயர் - வசிஷ்டருக்குச் சூத்திர ஜாதிப்பெண்ணிடம் பிறந்தவர்.

வைஜயந்தம் - (1) வருண தேவனுல் இலக் குமிக்குக் கொடுக்கப்பட்ட பூமாலை (2) இது விடாத தாமரைகளை யுடையதும், விஜயத்தைத் தருவதும், யுத்தங்களில் ஆயுதங்களால் காயமடையாமற் காப் பாற்றுவதும், பாக்கியத்தைக் கொடுப் பதுமாம். இதனை இந்திரன் உபரிசரவ சுவிற்குக் கொடுத்தனன். (3) திருப் பாற்கடலிலுள்ள ஒருமலை. பிரம தேவ னுக்கு இருக்கை.

வௌ

வௌ - கவர்தல், கொள்ளையிடல்.

வௌவால்-அஞ்சலிகை, ஆவாலம், தருஞ் சில் வாவல்.

ஸௌ

ஸௌபாக்கியசங்கிராந்தி - இது சங்கி ராந்தி வாரத்தில் முதலில் சூர்யனை அர்சித்து வஸ்திர முதலியவை கலசத் திற்கு அணிந்து வேதியர்க்குத் தானஞ் செய்வது.

ஸ்

ஸ்தூணன் - துருபதனுக்குப் பிறந்த பெண்ணுகிய சிகண்டியை ஆணக்குவித்த யக்ஷன் பெயர்.

க்ஷ

க்ஷத்ரதன்-ஆயுவம்சத்திற்பிறந்த அரசன்.

க்ஷத்ரதருமன் - புரூரவன் மகனுகிய க்ஷத்ர விருத்தன் குலத்தவன்.

க்ஷத்ரவிருத்தன் - புரூரவன் குமாரன். நகுஷன் தம்பி.

க்ஷீ

க்ஷீராப்திசயனவிரதம் - இது கார்த்திகை மாதம் சுக்கில த்வாதசியில் அநுஷ்டிப் பது. இதில் லக்ஷ்மீ நாராயண பூஜை செய்து விரதமிருப்பது. இதில் விஷ்ணு மூர்த்தி க்ஷீராப்தி சயனத்திலிருந்து பிருந்தாவனத்தில் எல்லாத் தேவர்களா லும் பூசிக்கப்பட்டனர்.

கடவுள் துணை

மூன்றாவது

தொகையகராதி.

அருட்டொகை வகைவகுத் துலகினைத்து
மங்கையி லேந்திய தையிற்காத்
திருட்டொகை துடைத்தெழும் பரிதியைப்போ
லெங்களும் விளக்கிய வேரொன்பான்
மருட்டொகை விலகெனப் பணிந்தேத்தி
வழக்கொடு புலமையோர் முன்னுரைத்த
பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்திப்
புகலுதுந் தொகையக ராதியென்றே.

அகக்காழிற்குரியன — **அகத்தியர்மாணக்கர்**

அ

அகக்காழிற்குரியன - உக - இலை, குருத்து, தளிர், மலர், தோடு, கப்பு, கம்பு, கொத்து, கொம்பு, நனை, இதழ், தாது, அல்லி, புல்லி, மூலை, கிழங்கு, காய், பழம், தோல், செதில், வீழ்.

அகக்கூத்து - உ - சாந்திக்கூத்து, விநோதக் கூத்து. என்னை? "அவதாம் சாந்திக்கூத்தும் விநோதக் கூத்து மென்றுரைந்துற வகுத்தன னகத்தியன்றனே" என்றாகலின் அவற்றுள் — சாந்திக்கூத்தாவது நாயகன் சாந்தமாக ஆடியகூத்து. விநோதக்கூத்தாவது குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை யென்பனவாம். [கை.

அகக்கூத்துக்கை - உ - எழிற்கை, தொழிற்

அகங்காரவகை - ஊ - தைசதாங்காரம், பௌதிகாங்காரம், வைதிகாங்காரம்.

அகச்சமயம் - சு - சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம். [மதம்

அகச்சுவை - ரு - இராசதம், சாத்துவிகம், தா

அகதத்துவம் - டு - சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம்.

அகத்திணை - எ - கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை.

அகத்திணைமெய்ப்பாடு - உசு - புகுமுகம் புரிதல், பொறிதுதல் வியர்த்தல், நகுநயமறைத்தல், சிதைவு, பிறர்க்கின்மை, கூழைவிரித்தல், காதொன்று கேளாதல், ஊழனிதைவரல், உடைபெயர்த்துரைத்தல், அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இவ்வலியுறுத்தல், இருகையுமெடுத்தல், பாராட்டெடுத்தல், மடந்தபவுரைத்தல், ஈரமில்கூற்றம், ஏற்றலர்நாணல், கொடுப்பவை கோடல், தெரிந்துடம்படுதல், தெளிப்பு வினைமறுத்தல், கரந்திடத்தொழிதல், கண்டவழியுவத்தல், புறஞ்செயச்சிதைதல், புலம்பித் தோன்றல், கலங்கிமொழிதல், கையறவுரைத்தல்.

அகத்தியர்மாணக்கர் - கஉ - செம்பூட்சேஎய்,

வையாபிகர். அதங்கோட்டாசான், அவி நயர், காக்கை பாடினியர், தொல்காப்பி யர், துராலிங்கர், வாய்ப்பியர், பனம்பார னர், கழாரம்பர், நற்றத்தர், வாமனர்.

அகத்திலக்கணம்-ம - எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, போலி.

அகநாடகவுரு-உஅ-கந்தமுதலாகப் பிரபந்த வுருவீறாக என்பனவாம். அவற்றுள் கந்த மாவது அடிவரை யறையுடைத்தாய் ஒரு தாளத்தாற் புணர்ப்பது. பிரபந்தமாவது அடிவரை யறையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது. மற்றைய பெயர்களை வந் துழிக் காண்க.

அகப்பகை - சு - காமம், குரோதம், உலோ பம், மோகம், மதம், மாச்சரியம்.

அகப்பாட்டுசமயம் - சு - பாடாண வாத சைவம், சங்கிராந்த வாதசைவம், பேத வாதசைவம், பேதசைவம், சுத்தசைவம், அவிகாரவாத சைவம்.

அகப்பாட்டுத்தலைவன் - உ - பாட்டுடைத் தலைவன், கிளவித்தலைவன், இவருள் உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவனும்.

அகப்புறதத்துவம் - எ - காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை.

அகலக்கவி - அக - பிள்ளைக்கவி, கலம்பகம், பன்மணிமாலை, மும்மணிக்கோவை, அக ப்பொருட் கோவை, தொகைநிலைச் செய் யுள், இணைமணிமாலை, இரட்டைமணி மாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, இருபாவிருபஃது, ஒருபா வொருபஃது, ஒலியந்தாதி, ஊரின் இன்னிசை, வருக்க மாலை, கைக்கிளைச் செய்யுள், மங்கலவள் ளை, இரட்டைமாலை, ஊர்நேரிசை, பெ யர் நேரிசை, மெய்க்கீர்த்தி, கரப்புமாலை, வேனின் மாலை, பல்சந்த மாலை, அங்க மாலை, வசந்தமாலை, நவமணிமாலை, பரணி, தசாங்கப் பத்து, பதிற்றந்தாதி, நூற்றந் தாதி, அட்டமங்கலம், அலங்காரபஞ்சகம், ஊசல், சின்னப்பூ, சதகம், எண்செய்யுள், ஐந்திணைச்செய்யுள், நாழிகை வெண்பா, நாலுற்பது, பயோதரப்பத்து, நயனப் பத்து, வில்விருத்தம், வேல்விருத்தம், வாள் விருத்தம், செங்கோல் விருத்தம், யானைவிருத்தம், குதிரைவிருத்தம், நாட்டு விருத்தம், ஊர்விருத்தம், கொடைவிருத் தம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம், வளமடல், உலாமடல், உலா, அநுராக மாலை, மெய்க்கீர்த்திமாலை, புகழ்ச்சிமாலை, நாமமாலை, தாரகைமாலை, உற்பவமாலை, தானைமாலை, வரலாற்றுவஞ்சி, செருக்கள வஞ்சி, பொருள்வஞ்சி, குழுமகன், பாதாதி கேசம், கேசாதிபாதம், யானைத்தொழில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை, திருமுரு காற்றுப் படை, கூத்தராற்றுப் படை, தணிகையாற்றுப் படை, மலைபடுகடாம், குறிஞ்சிப் பாட்டு, அகப்பாட்டு, புறப் பாட்டு என்பனவாம்.

அகலக்கவிவகை-உ-தொடர்நிலை, தனிநிலை.

அகவலிறுவன - சு - ஏ ஓ ஈ ஆய் என ஐ.

அகவலோசை - கூ - ஈற்றிசை யகவலோசை, ஒழுகிசை யகவலோசை, துங்கிசை யகவ லோசை.

அகவற்சீர் - ச - நேர்நேர், நிரைநேர், நிரை நிரை, நேர்நிரை, இவற்றிற்கு வாய்பாடு, தேமா, புளிமா, கருவிளம், கூவிளம், என்பனவாம்.

அகவற்பாவகை - ச - நேரிசை யாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டிலவா சிரியப்பா, மடிமண்டில வாசிரியப்பா.

அகவற்பாவினம் - கூ - ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம்.

அகவற்றளை - உ - நேரொன்றாசிரியத்தளை, நிரை யொன்றாசிரியத்தளை.

அகவாயுக்கள் - நி - வைரம்பன், முக்கியன், பிரபஞ்சனன், அந்தரியாமி, மகாப் பிரா ணன். [காசு, தேன், ஏலம்.

அகிற்கூட்டு - நி - சந்தனம், கர்ப்பூரம், எரி

அகிற்கூட்டு - சு - சந்தனம், கர்ப்பூரம், எரி காசு, ஏலம், தேன், நேர்கட்டி.

அக்கினி - கூ - ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணக்கினியம்.

அக்கினி - நி - ஆகவனீயம், தக்ஷிணக்கினி, காருகபத்தியம், சப்பியம், ஆவசத்தியம்.

அக்கினி - நி - கிழக்குமேற்கு, வடக்குதெற்கு என்னும் நான்கு பக்கத்தும் அக்கினி மூட்டப்பட்டு மேலிற் சூரியாக்கினியுங் கொண்டுள்ளனவாம். [சடம், தீபனம்.

அக்கினி - நி — இராகம், கோபம், காமம்,

அக்கினிகீடம்-உச-கௌடிந்யம், கண்டபம், லாதரி, பத்திர விருக்ஷிகம், சோதுகம், பிர்மணிகம், விடபப்பிரமணம், பாகியகி, பிச்சிலம், கும்பி, வர்ச்சகீடம், அருமேத கம், உண்டுபம், பதுமகீடம், மகரம், சத பாதி, பஞ்சாவம், பாந்தமச்சம், சூட்சும துண்டம், அதிகர்த்தபி, கீடக்கிரமம், சாரஷி, சீதபி, சிலேஷ்மகம் என்பன.

இவற்றின் விஷத்தினுல் கடிவாயில் இரத்தங்கம்மி யிருப்பைப் பூ, பேரீச்சங்காய் இலைகளேப்போலக் கொப்புளம் எழும்புதலும் எரிச்சலும், பேதியும் உண்டாகுமென்பர். [பாவகன்.

அக்கினிதேவர்வகை -ரு- சுரி, பவமானன்,

அங்கக்கிரியை - கசு - சரிகை, திரிகை, புரிகை, சமகலிகை, ஊர்த்துவகலிகை, பிருட்டகம், அர்த்தபிருட்டகம், சுவத்திகம், உல்லோலம், குர்த்தனம், வேட்டனம், உபவேட்டனம், தானப்பதப்பிராயவிருத்தம், உக்ஷபணம், அவக்ஷபணம், நிருஞ்சனம்.

அங்கதருமம் - அ - ஐயப்படாமை, அவாவின்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, பழிநீக்கல், உறுதிநிறுத்தல், பேரன்புடைமை, அறம் விளக்கல்.

அங்கம்-சு—தேர், கரி, பரி, காலாள், இவை சதுரங்கமெனவும் படும்.

அங்கம் - கி—திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் இவை பஞ்சாங்கமெனப்படும்.

அங்கம் - சு— மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம்.

அங்கம் - சு—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அங்கம் - ம—மலே, யாறு, நாடு, ஊர், மாலே, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல், இவையரசர்க்குரிய தசாங்கம்.

அங்கயோகம் - அ—இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணே, தியானம், சமாதி; இவற்றுள் இயமம் - கொல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர் பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல்; நியமம்-தவம், தூய்மை, தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல்; ஆதனம் - சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம்; அவையாவன சுவத்திகம் - தொடைக்கு முழங்காற்கு நடுவே யிரண்டுள்ளங்காலேயுஞ் செலுத்தி யிறுமாந்திருத்தல், கோமுகம் - சகன பக்கத்தி லிருகாற்பரட்டையுமாறவைத் தவ்விருகாற் பெருவிரலேக் கைப்பிடித்திருத்தல், பதுமம் - இருதொடை மேலு மிரண்டுள்ளங்காலேயுமாறித் தோன்றவைத்தல், வீரம்-வலத்தொடையி லிடக்காற்பரட்டைச் சேர்த்தி யிறுமாப்புற்றிருத்தல். கேசரி-பீசத்தின் கீழ்ச்சீவனியிடத்துப்பரட்டை வைத்து இடமுழங்கையை முழந்தாளில் வைத்தங்குலிவிரித்து நாசியைப் பார்த்திருத்தல், பத்திரம்-பீசத்தின் கீழ்ச்சீவனிடத் திருகாற்பரட்டையும் வைத்தவ்விருபதத்தையுமிருகையா லிறுகப்பிடித்தசையாதிருத்தல், முத்தம் - இடக்காற் பரட்டாற் சீவனியை யழுத்தி வலக்காற் பரட்டின் கீழுந்தவிருத்தல், மயூரம்-முழங்கையிரண்டு மூந்திப்புறத்திலழுந்தப் புவியிற் கையூன்றிக் காணீட்டித் தலே நிமிர்ந்திருத்தல், சுகம் - சுகமுந் திடமு மெவ்வாறிருக்கி னெய்துமோ அவ்வாறிருத்தல், பிராணயாமம் - பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ்செய்தல், பிரத்தியாகாரம் - உபாதியை நீக்கியுண்ணேக்கல், தாரணே - கண்டம் இதயம் நெற்றி கபாலம் நாபி இவற்றிலொன்றிற் சந்ததம் சிந்தைவைத்தல், தியானம் - ஐம்புலனடக்கியோகஞ்சேர்தல், சமாதி-இந்திரியமுதலிய தத்துவ சேட்டைகட் கேதுவாயாக்கையுணின் றவற்றேறு கூடினுமவற்றிற் பற்றின்றி யிருக்கு மான்மாவாகிய தன்னேத்தான் காண்டல், இவற்றுள் இயமம் நியமம் ஆதனம் பிராணயாமம் என்பனயோகத்திற் சரியை, பிரத்தியாகாரம் தாரணே என்னு மிரண்டும் யோகத்திற் கிரியை, தியானம் யோகத்தில் யோகம், சமாதி யோகத்தில் ஞானம்.

அங்காமத்தின் பகுப்பு-கஉ—ஆசாராங்கம், சூத்திரகிருதாங்கம், தானாங்கம், சமவாயாங்கம், வியாக்கியாப் பிரஞ்ஞப்பத்யாங்கம், ஞாத்ருகதாங்கம், உபாசகாத்தியயனாங்கம், அந்தக்கிருத்தசாங்கம், அநுத்தரோபபிரதிகதசாகம், பிரச்சின வியாகரணாங்கம், விபாகசூத்திராங்கம், திருட்டிவாதாங்கம்.

அசங்கதவிரி - சு- அர்த்தசந்திரம், உத்தானம், சிருங்காடம், கர்க்கடகசிருங்காரி, காகபாரி, கோதிகா.

அசிதாகமோபபேதம் - சு-பிரபூதாகமம், பரோற்பூதாகமம், பார்வதீதந்திரம், பதுமசாங்கிதை.

அசுவினிதேவர் உ— தத்திரன், நாதத்தியன்.

அசை - உ— நேரசை, நிரையசை.

அஞ்சுமானுபபேதம்-கஉ - வித்தியாபுரா

ணம், பாஸ்வராகமம், நீலலோகிததந்திரம், பிரகரணாகமம், பூததந்திரம், ஆத்மாலங்காரம், காசிபாகமம், கௌதாகமம், மகேந்திராகமம், பிரமாகமம், வசிட்டாகமம், ஈசானியோத்தரம்.

அஞ்ஞானவிரோதம் - ஈ—சிரவணம், மகநம், நிதித்தியாசனம்.

அடி - இ— குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி.

அடித்தொடை - இ-அடிமோனைத்தொடை, அடியெதுகைத்தொடை, அடிமுரண்டொடை, அடியியையுத்தொடை, அடியளபெடைத்தொடை.

அடியவரிலக்கணம் - ஈ- உள்ளிலக்கணம், புறத்திலக்கணம், பொதுவிலக்கணம்.

அடியவருள் தொகையார் - ஊ- தில்லைவாழந்தணர், பத்தராய்ப் பணிவார்கள், பரமனேயேபாடுவார், சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார், பொய்யடிமையில்லாப்புலவர், திருவாரூர்ப்பிறந்தார், மூப்பொழுதுந்திருமேனிதீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார். [பிராகிருதர்.

அடியவர் - ஈ— சாமுசித்தர், வைநயிகர்,

அடியவர் - ஊஈ— சுந்தரமூர்த்திநாயனர், திருநீலகண்டர், இயற்பகைநாயனர், இளையான்குடிமாற நாயனர், மெய்ப்பொருணாயனர், விறன்மிண்ட நாயனர், அமர்நீதி நாயனர், எறிபத்த நாயனர், ஏனாதிநாத நாயனர், கண்ணப்ப நாயனர், குங்கிலியக்கலயநாயனர், மானக்கஞ்சாற நாயனர், அரிவாட்டாயநாயனர், ஆனாயநாயனர், மூர்த்திநாயனர், முருகநாயனர், உருத்திரபசு பதிநாயனர், திருநாளைப்போவார் நாயனர், திருக்குறிப்புத்தொண்டநாயனர், சண்டேசுரநாயனர், தண்டியடிகணாயனர், திருநாவுக்கரசு நாயனர், குலச்சிறைநாயனர், பெருமிழலைக்குறும்ப நாயனர், காரைக்காலம்மையார், அப்பூதியடிகணாயனர், திருநீலநக்க நாயனர், நமிநந்தியடிகணாயனர், திருஞானசம்பந்த நாயனர், எயர்கோன்கலிக்காம நாயனர், திருமூலநாயனர், மூர்க்கநாயனர், சோமாசி மாறநாயனர், சாக்கியநாயனர், சிறப்புலி நாயனர், சிறுத்தொண்ட நாயனர், கழறிற்றறிவார் நாயனர், கணநாதநாயனர், கூற்றுவ நாயனர், புகழ்ச்சோழ நாயனர், நரசிங்கமுனையரைய நாயனர், அதிபத்தநாயனர், கலிக்கம்பநாயனர், கலியநாயனர், சத்திநாயனர், ஐயடிகள்காடவர்கோ ணாயனர், கணம்புல்லநாயனர், காரிநாயனர், நின்றசீர்நெடுமாறநாயனர், வாயிலார் நாயனர், முனையடுவார்நாயனர், கழற்சிங்கநாயனர், இடங்கழி நாயனர், செருத்துணைநாயனர், புகழ்த்துணை நாயனர், கோட்புலி நாயனர், பூசலார்நாயனர், மங்கையர்க்கரசியார், நேசநாயனர், கோச்செங்கட்சோழநாயனர், திருநீலகண்டயாழ்ப்பாண நாயனர், சடைய நாயனர், இசை ஞானியார்.

அடியவர்சாதனம் - ஈ— குரு, இலிங்கம், சங்கமம்.

அடுக்குநிலைப்பொருள் - ஐ - அசை நிலை, விசைவு, துணிவு, உடம்பாடு, ஒரு தொழில் பல காணிகழ்தல், வெகுளி, உவகை, அச்சம், அலவம், இசை நிறை.

அணிவகுப்புவகை - சு-தண்டம், மண்டலம், அசங்கதம், போகம். அவற்றுள் தண்டமாவது சேனையைக் குறுக்காக நிறுத்துவது. மண்டலமாவது பாம்பு மண்டலமிடுவது போலச் சேனையை நிறுத்துவது. அசங்கதமாவது சேனையைவேறு வேறாக நிறுத்துவது. போகமாவது நால்வகைச் சேனைகளையும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக நிறுத்துவது.

அணிவகுப்புறுப்பு - எ— உரம், இறக்கை, இரண்டு, மத்தியம், பிரதிக்கிரகம், பிரிட்டம், கோடி.

அணிவியூகவிரி- ஈ0 - பிறதரம், திருடகம், திருயாவத்தம், குட்சி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம், சியேநம், விசயம், சங்கயம், விசாலம், நிசயம், சூசீ, சூணகர்ணம், சமுமுகம், இரதாசியம், வலயகம், சர்வதோபத்திரம், துர்சயம், அர்த்தசந்திரம், உத்தானம், சிருங்காடகம், கர்க்கடக சிருங்காரி, காகபாரி, கோதிகா, கோமூத்திரிகை, கிஞ்சகம், சஞ்சாரி, சகடம், பத்மம் என்பனவாம். இவற்றைக் காமந்தகம் என்னுநூலிற் காண்க.

அணுவகை - ஈ-அணு, பரமாணு, இலேசம்.

அண்டம்- இ-பிருதிவி யண்டம், அப்பு அண்டம் தேயுவண்டம், வாயுவண்டம், ஆகாய அண்டம்.

அதமதானவகை எ-ஆர்வம், புகழ், அச்சம் கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு.

அதிகதுக்கங்கள் - கஅ- கோள், துணிவு,

துரோகம், பொறுமை, பிறன் குணத்திற்குச் சகியாமை, பிறர்பொருள் அபகரித்தல், காரணமின்றிக் கடிதல், வைதல், வேட்டையாடுதல், சூதாடுதல், பகனித்திரை, பயனில் கூறல், பிறனில் விழைதல், மதுப்பருகல், கூத்தாடல், இசைபாடல், வாத்தியமுழக்கவிரும்பல், வீணைதிரிதல் என்பனவாம்.

அதிகதுன்பங்கொடுப்பன- ச - மதுபானம், சூது, பரதாரகமனம், வேட்டை.

அதிகாரர் ஊ - கர்மகாண்டி, பத்திகாண்டி, ஞானகாண்டி. [யாசி, அநுபவி, ஆரூடன்.

அதிகாரிகள் - டு- கருமி, முமூட்சு, அப்பி

அதிசயமொழி - ஙி- ஆஅ, ஓஒ, அத்தோ, அந்தோ, அன்னே, ஐயோ, அக்கோ, அச்சோ, என்னே, எற்றே.

அதிசயம் - ஊ- கர்மக்கயாதிசயம், சகசாதிசயம், தெய்வீகாதிசயம்.

அதிசயாலங்காரவகை - சு-பொருளதிசயாலங்காரம், குணதிசயாலங்காரம், தொழிலதிசயாலங்காரம், துணிவதிசயாலங்காரம், திருவதிசயாலங்காரம், ஐயவதிசயாலங்காரம்.

அதிபாதவகை - ஊ - மானசிக பாதகம், வாயிக பாதகம், காயிக பாதகம்.

அத்தியாசம் - ச - மித்தி யாத்தியாசம், இதராத்தியாசம், இதரேதராத்தியாசம், சத்தியாத்தியாசம்.

அத்தியாச்சிரமிநாமம் - சு - சீவன் முத்தன், அவதூதன், திகபிரக்ஞன், குணீதன், பகவத்பக்தன், பிராமணன்.

அத்திராதி முத்திரை - உசு - அத்திர முத்திரை, சக்கரமுத்திரை, மகர முத்திரை, சோதரை முத்திரை, சங்கார முத்திரை, பஞ்சமுக முத்திரை, சுரபி முத்திரை, தீவிவிர முத்திரை, முகிளிகா முத்திரை, பதும முத்திரை, சசகன்ன முத்திரை, சத்தி முத்திரை, பீச முத்திரை, சாந்தி முத்திரை, ஆவாகன முத்திரை, மனோரம்மிய முத்திரை, துவச முத்திரை, இலிங்க முத்திரை, காயத்திரி முத்திரை, யோனி முத்திரை, காலகண்ட முத்திரை, சூல முத்திரை, நமக்கார முத்திரை, விசோடண முத்திரை, ஆச்சியாகுண முத்திரை, மகாசங்கார முத்திரை.

அத்துவா - சு - மந்திரத் துவா, வன்னத் துவா, பதாத் துவா, தத்துவாத் துவா, புவனத் துவா, கலாத் துவா.

அநுபந்தலக்கணம் - ச - விடயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகாரம்.

அந்தணர்க்குரியபொருள் - ஊ - சமித்து, தருப்பை, முஞ்சிப்புல்.

அந்தணர்தொழில் - சு - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

அந்தணர்மார்க்கம் - உ - வைதிக மார்க்கம், தாந்திரீக மார்க்கம்.

அந்தணவருணமாகு மெழுத்துக்கள்-கஅ-அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ க ங ச ஞ ட ண.

அந்தராயம் - டு - தாழுந்த ராயம், லாபாந்த ராயம், போகாந்த ராயம், உபபோகாந்த ராயம், வீர்யாந்த ராயம்.

அந்நுவயலக்கணம் - டு - விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.

அபாவஅலங்காரம் - டு - என்றும பாவம், இன்மையத பாவம், ஒன்றினொன்ற பாவம், உள்ளதன பாவம், அழிவுபாட்ட பாவம் என்பனவாம். அவையாவன - எக்காலத்து மில்லாமையும், இல்லாமைய தில்லாமையும், ஒன்றின தின்மையும், அதன்கணஃதின்மையும், ஓரிடத்து மொருகாலத்துமுள்ளபொருள் பிறிதோரிடத்தும் பிறிதோர் காலத்து மில்லாமையும், முன்னுள்ளதழிவுபட் டில்லாமையுமாம்.

அபாவம் - ச - பிராக பாவம், பிரத்துவம் சா பாவம், அந்நியோந்நியா பாவம், அத்தியந்தா பாவம்.

அபாவவேறுபாடு - டு - ஒரு வழிக் காரணம் நிகழப் பிறிதொரு வழிக் காரிய நிகழ்தல், காரண காரியங்கள் ஒருங்கு நிகழ்தல், காரணத்தின் முன்னர்க் காரியம் நிகழ்தல், காரணத்திற்கேற்ற காரியம் நிகழ்தல், காரணத்திற்கேலாக் காரியம் நிகழ்தல்.

அபானவாயுவின்பெயர் - உ - மலத்தைக் கழிக்கல், மூத்திரம் விடுத்தல்.

அபிடேக திரவியங்கள் - உஐ - எண்ணெய்க் காப்பு, மாக் காப்பு, நெல்லிக் காப்பு, மஞ்சற் காப்பு, பஞ்சகவ்வியம், இரச பஞ்சாமிர்தம், பல பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, தமரத்தம் பழச்சாறு, குளஞ்சிப் பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, இளநீர், சந்தனக் குழம்பு என் பவைகளாம்.

அப்பவருக்கம் - ஔ - அபூபம், இலேயடை, கஞ்சம், சஃகுல்வி, நொலேயல், பூரிகை, பொள்ளல், போனகம், மண்டிகை, மெல்லடை.

அமுதவெழுத்துக்கள் - கக - அ - இ - உ - எ - க - ச - த - ந - ப - ம - வ என்பனவாம்.

அம்பரசித்திகள் - அ - சாயர வீசினதை, இத்திரியதிரிசியதை, குகச்சதி, தேட்டவிடயசங்கதி, சயிலலங்கம், சயிலகர்ப்பீகரணம், ஆகாசபிண்டீகரணம், அசரீரத்துவம்.

அரங்கிற்காகாநிலம் - க - என்புள்ள நிலம், உமியுள்ளது, கன்னிலம், பரனிலம், களித்தரை, உவர்த்தரை, ஈரத்தரை, பொல்லாச் சாம்பற்றரை, பொடித்தரை.

அரங்கினெழினி - ஈ - ஒரு முகவெழினி, பெருமுகவெழினி, கரந்துவரலெழினி.

அரங்கின்பூதர் - ச - அந்தணர், அசுரர், வணிகர், வேளாளர் என்று சொல்லப்பட்ட நால்வகை வருணப்பூதராகிய வச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்தகேசுவரன் என்னுமிவராம்.

அரங்கின்வாயில் - உ - உட்புகுவாயில், வெளிவருதற் கொரு வாயில்.

அரங்கின்வாயில் - ச - வருவாயில், புறப்படு வாயில், கரந்துபோக்கிடன், கண்ணுளர் குடிஞைபள்ளி.

அரங்குறப்பு - நி - வாயில், கரந்துபோக்கிடன், கண்ணுளர் குடிஞைப் பள்ளி, அவையரங்கம், புவி நிறை மாந்தர் பொருந்துகோட்டி.

அரசசின்னம் - உக - முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

அரசப்பிரகிருதிகள் - ஔ - புரோகிதன், பிரதிநிதி, பிரதானன், சசிவன், மந்திரி, நீதியதிபன், பண்டிதன், சுமந்திரன், அமாத்தியன், தூதன்.

அரசர் - ஈ - சேரன், சோழன், பாண்டியன்.

அரசர்குலம் - ஈ - சூரியகுலம், சந்திரகுலம், அக்கினிகுலம்.

அரசர்கொடி - ஈ - சேரனுக்கு விற்கொடி, சோழனுக்குப் புலிக்கொடி, பாண்டியற்கு மீனக்கொடி.

அரசர்க்குத்தானை - சு - களிறு, தேர், பரி, வாள், வில், வேல்.

அரசர்க்குத்துணைவர் - அ - மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளி மறவர், யானை வீரர்.

அரசர்க்குரியன - ஔ - படை, குடை, கொடி, முரசு, புரவி, களிறு, தேர், தார், மாலை, செங்கோல்.

அரசர்க்குழு - நி - மந்திரியர், புரோகிதர், சேனபதியர், தூதர், சாரணர்.

அரசர்க்குறுதிச்சுற்றம் - நி - நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலர், மருத்துவக் கலைஞர், நிமித்திகப் புலவர்.

அரசர்தொழில் - சு - ஈதல், உலகுபுரத்தல், ஓதல், படைபயிறல், பொருதல், வேட்டல்.

அரசர்நிலை - எ - அறம், இம்மை, இன்பம், புகழ், பொருள், மதிப்பு, மறுமை.

அரசர்மாலை - ஊ - சேரனுக்குப் பனந்தார், சோழனுக்கு ஆத்திமாலை, பாண்டியனுக்கு வேப்பமாலை. [ம - ய - ர.

அரசவருணவெழுத்துக்கள் - சு - த - ந - ப

அரசியல் - சு - படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அரசியல்வகை - சு - அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம்; அவையாவன தத்தம் வருணத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்த லறநிலையறம். நிரை மீட்டுப் பகை வென்று செஞ்சோற்றுக் கடன் கழியாதாரைத் தண்டித்துக் குறைவறச் செய்தன் மறநிலையறம். நெறிவழி நின்று தத்தநிலையினின் முயன்று பெறு பொருள் அறநிலைப் பொருள். பகைஞர் பொருளுந் திறைப் பொருளுஞ் சூதில் வெல் பொருளு மறநிலைப்பொருள், பருவமுங் குலமு மொழுக்கமுங் குணமொத்த கன்னிகையைத் தீவேட் டில்லத்திருத்த லறநிலையின்பம், எறுதழுவியும் வில்லிற்றொடுத்த வம்பினுக்க மெய்து மிவ்வாறு மாறுடை நெறியின் மணத்தன் மறநிலையின்பம்.

அரண் - ச - மலை, காடு, மதில், கடல்.

அரண் - க - களர்நிலவரண், அகழியரண், மதிலரண், காட்டரண், நிலவரண், நீரரண், மலையரண், படையரண், துணையரண்.

அரிட்டதேவதைகள் - ஈநி - தந்தை, பீணி, காளிகை, வீமரூபி, அங்குசினி, பூதினி, முத்தகேசி, ஆகாசினி, அரிகேசாதினி, சகுனி, பூமாயி, உத்தமி, பிங்கலை, கோ

கர்ணி, பங்கயை, சீமுகி, சேனி, கும்ப கர்ணி, தாபதை, காலார்க்கி, நந்தினி, சுசோதினி, தானுனி, சாகினி, பஞ்சாலை, காமினி, மேதினி, நளினி, மகாகும்பினி, அரனி, ஆகாசகர்ணி, வாயுவிசாக்கினி, சுகந்தினி, வனதேவி, சுண்டனி.

அரிபிறப்பு - கஙி - சனகன், சனந்தனன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, வேள்வியின்பதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

அருகன்குடை - ஈ - சகலபாசனம், சந்திராதித்தியம், நித்திய விஞ்ஞதம். இவை முறையே பொற்குடை, முத்துக்குடை, இரத்தினக்குடை யென்று சொல்லப்படும்.

அருகன்குணம் - அ - அநந்தசுகம், அநந்தஞானம், அனந்ததரிசனம், அநந்தவீரியம், நிர்க்கோத்திரம், நிர்நாமம், நிராயுஷ்யம், அழிவின்மை.

அருகன்சிறப்பு - அ - தூபதீபக் காட்சி, தேவதுந்துபி, தெய்வத்துவனி, சிங்காதனம், பிண்டி, வெண்சாமரை, புட்பமாரி, மும்மைக்குடை.

அருகன்மதில் - ஈ - உதயதரம், கல்யாணதரம், பிரீதிதரம்.

அருகன்வென்றஉபாதி - ச - அசக்கு தரிசனு வரணீயம், அவதிதரிசனுவரணீயம், கேவலதரிசனு வரணீயம், சக்குதரிசனு வரணீயம்.

அருகன்வென்றவினை - ச - ஆயுஷ்யம், கோத்திரம், சேதனீயம், நாமம்.

அருக்கியதிரவியம் - அ - சலம், பால், தருப்பை நுனி, அக்கதம், எள், யவம், சம்பாநெல், வெண்கடுகு. [விந்து.

அருவவடிவம் - ச - சிவம், சத்தி, நாதம்,

அருவுருவடிவம் - க - சதாசிவம்.

அருள் - உ - மறக்கருணை, அறக்கருணை.

அலங்காரப்பா - ஙி - வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம், சந்தவிருத்தம் முதலியன.

அலங்காரம் - ஊஙி - தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்னர்விலக்கு, வேற்றுப்பொருள், வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரனிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாயுதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக் கூட்டம், விரோதம், புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம்.

அலங்காரம்-கஐஐ-உவமை, இயைபின்மை, புகழ்பொருளுவமை, எதிர்நிலை, உருவகம், திரிபு, பலபடப்புனைவு, நினைப்பு, மயக்கம், ஐயம், ஒழிப்பு, தற்குறிப்பு, உயர்வுநவிற்சி, ஒப்புமைக்கூட்டம், விளக்கு, பின்வருவிளக்குதொடர், முழுதுவமை, எடுத்துக்காட்டுவமை, காட்சி வேற்றுமை, உடனிகழ்ச்சி, இன்மை நவிற்சி, சுருங்கச்சொல்லல், கருத்துடையடை, கருத்துடையடை கொளி, பல பொருட்சொற்றொடர், புனைவிலிபுகழ்ச்சி, புனைவுளி விளைவு, பிறிதினவிற்சி, வஞ்சப்புகழ்ச்சி, வஞ்சிப்பழிப்பு, எதிர்மறை, முரண்விளைந்தழிவு, பிறிதாராய்ச்சி, காரணவாராய்ச்சி கூடாமை, தொடர்பின்மை, தகுதியின்மை, தகுதி, வியப்பு, பெருமை, சிறுமை, ஒன்றற்கொன்றுதவி, சிறப்புநிலை, மற்றதற்காக்கல், காரணமாலை, ஒற்றைமணிமாலை, மாலை, விளக்கு, மேன்மேலுயர்ச்சி, நிரனிரை, முரையிற்படர்ச்சி, மாற்றுநிலை, ஒழித்துக்காட்டு, உறழ்ச்சி, கூட்டம், வினைமுதல் விளக்கு, எளிதின்முடிபு, விறல்கோள், தொடர்நிலைச் செய்யுட்பொருட்பேறு, தொடர்நிலைச் செய்யுட்குறி, வேற்றுப் பொருள், வைப்பு, மலர்ச்சி கற்றோர் நவிற்சி, உய்த்துணர்வு, பொய்த்தற் குறிப்பு, வனப்பு நிலை, இன்பம், துன்பம், அகமலர்ச்சி, இகழ்ச்சி, வேண்டல், இலேசம், குறிநிலை, அதனமாலை, பிறிதின்குணம் பெறல், தொல்லுருப் பெறல், பிறிதின் குணம் பெறுமை, தன்குணமிகை, மறைவு, பொதுமை, மறையாமை, சிறப்பு, இறை, நுட்பம், கரவு, வெளிப்படுப்பு, வஞ்சநவிற்சி, குறிப்பு நவிற்சி, வெளிப்படை நவிற்சி, யுத்தி, உலகவழக்கு நவிற்சி, வல்லோர் நவிற்சி, மடங்குதனவிற்சி, தன்மை நவிற்சி, நிகழ்வினவிற்சி, வீறுகோள், மிகுதிநவிற்சி, பிரிநிலை நவிற்சி, விலக்கு, விதி, ஏது.

அலிக்கிரகம் - ஈ - சனி, கேது, புதன், அஃது உள்ளமுடையான் கஉக - ஆங்கவியாற் பெறப்படும்.

அலிக்கை - ஊ-சர்ப்பசிரம், வண்டு, முகுளம்,

கத்தரிகை, கோசம், சபித்தம், என்பன வாம். இவற்றுள் வண்டாவது பெருவிரலும், அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச் சிறுவிரணிமிர்ந்து சுட்டு விரலும், நடுவிரலும், நெகிழ வளைந்து நிற்பது என்னை? "வண்டென்பதுவே வகுக்குங்காலை, யநாமிகை பெருவிர னனி மிகவளைந்து, தாநுனியொன்றித் தகைகால் சிறுவிரல், வாலிதினிமிர மற்றைய வளைந்த, பாலினதென்ப பயனறிந்தோரே" என்றுராகலின்.

முகுளமாவது:-ஐந்து விரலுந் தம்மிற் றலைகுவிந்து உயர்ந்து நிற்பது, என்னை? "முகுளமென்பது மொழியுங்காலை, யைந்துவிரலுந் தலைகுவிந்தேற்ப வந்து நிகழுமாட்சித்தாகும்" என்றுராகலின்.

கத்தரிகையாவது:—திரிபதாகையின் முடங்கிய அணிவிரற் புறத்ததாகியநடுவிரலைச்சுட்டுவிரலோடு பொருந்தநிமிர்ப பது. என்னை? "கத்தரிகையே காண்டக விரிப்பி, னத்திரி பதாகையினணி யின் புறத்தைச், சுட்டகமொட்டவிட்டு நிமிர்ப்பதுவே" என்றுராகலின்.

கபித்தமாவது:— சுட்டுவிரனுனியும் பெருவிரனுனியும் உகிர்தானே கௌவிப் பிடிப்பது. ஒழிந்தமூன்று விரலும் மெல்லெனப் பிடிப்பது. என்னை? "கபித்த மென்பது காணுங்காலைச் சுட்டு பெருவிர லொட்டி நுனிகௌவி, வொல்லமூன்று மெல்லப் பிடிப்பதுவே" என்றுராகலின் ஏனைய வந்துழிக்காண்க.

அவசியகருமஞ்செயலாகாவிடங்கள் - கஅ - வழி, குழிநீர்நிலை, நீர்க்கரை, கோமய முள்ள இடம், சாம்பர் உள்ளவிடம், சுடுகாடு, பூந்தோட்டம், மரநிழல், உழுத நிலம், அறுகம்பூமி, பசுமந்தைநிற்குமிடம், இடிவீழிடம், காற்றுச்சுழலிடம், புற்று, அருவிபாயுமிடம், மலை, திருக்கோயில்தானம், திருமடம்.

அவதி - ஈ - காரணம், சுவரூபம், காரியம். இவையன்றி, ஞாலவதி, வைராக்கியாவதி, உபரதி யவதி எனவுமாம். [தை.

அவத்தை - உ - கேவலாவத்தை சகளாவத்

அவத்தை - ஊ - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

அவத்தைக்காரணவகை - ஈ - கேவல அவத்தை, சகல அவத்தை, சுத்த அவத்தை.

அவத்தைக்காரியவகை - ஈ - கீழாலவத்தை, மேலாலவத்தை, மத்தியாலவத்தை.

அவத்தைக்காரியவிரி - ஐ - கீழாலவத்தையிற் சாக்கிரம், கீழாலவத்தையிற் சொப்பனசுழுத்தி, கீழாலவத்தையிற்றுரியம், கீழாலவத்தையிற் றுரியாதீதம், மேலாலவத்தையிற் சாக்கிரம், மேலாலவத்தையிற் சுழுத்தி, மேலாலவத்தையிற் சொப்பனம், மேலாலவத்தையிற் றுரியம், மேலாலவத்தையிற் றுரியாதீதம்.

அவதூதி - ச - சிறப்பவதூதி, பொருளவதூதி, குணவவதூதி, வினைபற்றியசிலேடையவதூதி.

அவஸ்தை - எ - கர்ப்பாவஸ்தை, ஜன்மாவஸ்தை, பாலியாவஸ்தை, யௌவனாவஸ்தை, ஜராவஸ்தை, மரணாவஸ்தை, நரகாவஸ்தை.

அவாந்தரதிசை - ச - தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு.

அவிகயநிலம் - ச - இயங்கல், இருத்தல், கிடத்தல், நிற்றல். இதனை, "நிற்றலியங்கலிருத்தல், கிடத்தலென்றத்தகு நான்கே யவிநயக்களனே" என்னுஞ் சூத்திரத்தானறிக.

அவிநயம் - உச - வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பினோனவிநயம், களித்தோனவிநயம், உவந்தோனவிநயம், அழுக்காறுடையோனவிநயம், இன்பமுற்றோனவிநயம், தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், உடன்பட்டோனவிநயம், உறங்கினோனவிநயம், துயிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், வெயிற்றலைப்பட்டோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்தமுற்றோனவிநயம், கண்ணோவுற்றோனவிநயம், தலைநோவுற்றோனவிநயம், அழற்றிறம் பட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயம், இவற்றின், வரலாற்று முறைமையைப் பொருளகாதிக்கண் தத்தம் வரியிற் கண்டு தெளிக.

அவிபாதகவிரி - உடு - சிவனுக்கொப்பாகவும், உயர்வாகவும், வேறுதெய்வமுண்டென்று நினைத்தல், சொல்லுதல், வேத சிவாகமங்களுக்கு ஒப்பாகவும், உயர்வாகவும், வேறுநூல்கள் உள்ளனவென நினைத்தல், சொல்லுதல், சிவதூடணஞ் செய்தல், வேத நிந்தை, சிவாகமநிந்தை,

சிவனடியார் நிந்தை, குருநிந்தை, சிவ திரவியம், சிவாகம், நூல், குருதிரவிய மென்பவற்றை யபகரித்தல், இவரோ டிணங்குதல், சிவபத்தியில்லாமை, குரு பத்தியில்லாமை, நியதிவிடுதல், தவத் தரையிகழ்தல், ஆசாரமில்லாமை, புறச் சமய நூல்படித்தல், ஞான நூல்களை விலைக்கு விற்றல், கொலை, கட்குடித் தல், பிறனில் விரும்பல், பிறர்பொருள் விரும்புதல், பிறரைக் கெடுக்கநினைத் தல், பிறர் எங்க அழுதல், கோள்சொல் லல், பொய்சொல்லல்.

அழகு - அ - அம்மை, வனப்பு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழை.

அழகு - ஐ - சுருங்கச் சொல்லல். விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை, நன் மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழ முடைத்தாதல், முறையின்வைப்பு, உலக மலையாமை, விழுமியது பயத்தல், விளங் கு தாரணத்ததாகுதல் என்பனவாம்.

அழுகை - ச - இளிவு, இழவு, அசைவு, வறு மை.

அளபெடை - உ - உயிரளபெடை, ஒற்றள பெடை. செய்யுளில் ஓசைகுறையின் உயி ரும் ஒற்றும் தமக்குச் சொன்ன அளவைக் கடந்து நீண்டொலிப்பது. (நன்னூல்)

அளபெடைவகை - கூ - செய்யுளிசை நிரை யளபெடை, இன்னிசை நிரைக்குமள பெடை, சொல்லிசை நிரைக்கும் அள பெடை. [நீட்டல்.

அளவு - ச - எண்ணல், எடுத்தல், முகத்தல்,

அளவை - டு - எண்ணல், எடுத்தல், முகத் தல், நீட்டல், தெறித்தல்.

அளவை - எ - நிறுத்தளத்தல், பெய்தளத் தல், சார்த்தியளத்தல், நீட்டியளத்தல், தெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், எண்ணியளத்தல்.

அளவை - அ—காட்சி, அனுமானம், உவமா னம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம்; அவையாவன காணல் காட்சி, புகையைக் கண்டு நெருப்புண் டென லனுமானம்; மரைபசுப்போ லெனலுவமானம்; பெரியோர்வாய்ச்சொ லாகமம்; பகலுண்ணுன் பருத்திப்பா னென்புழியிரவிலொளித் துண்பானென வுணர்தலருத்தாபத்தி, முன்னுமில்லை பின்னுமில்லைஒன்றிலுண்றில்லையொரு காலத்துமில்லை யெனலபாவம்; இம்மரத் திற் பேயுளதென்ப தைதிகம்; ஆயி ரத்தினூறுண்டெனல் சம்பவம். [வழக்கு

அறத்துகை - கூ - ஒழுக்கம், தண்டம்,

அறத்துப்பால் - கூடு - கூறன்வலி யுறுத் தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், புதல்வரைப்பெறுதல், அன்புடை மை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி யறிதல், நடுவு நிலைமை, அடக்க முடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறை யுடை மை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ், அருளுடைமை, புலான் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய் யாமை, கொல்லாமை, துறவு, மெய் யுணர்தல், அவாவறுத்தல், ஊழ் என் பனவாம்.

அறத்துறுப்பு - அ - ஐயப்படாமை, விருப் பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல், அழித்தோரை நிறுத்தல், அறம் விளக்கல், பேரன்புடைமை.

அறத்தொடுநிலையின்வகை - உ - முன்னிலை மொழி, முன்னிலைப்புறமொழி.

அறத்தொடுநிற்குங்காலம் - கூ - இயற்கைப் புணர்ச்சிக் காலம், பாங்கற் கூட்டக் காலம், இடந்தலைப்பாட்டுக் காலம், ஒரு விழித் தணத்தற் காலம், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதற்காலம், தலைவனைச்செவிலிகுறியிடத்துக்காணுங் காலம், மனையிடத்துச் செறிக்குங்காலம், தலைமகளைப் பாங்கி வினவிய காலம், வினவாத காலம்.

அறத்தொடுநிற்பார்க்கு வினைநிகழுமிடம்-ச- பாங்கி தலைவியை வினவல், செவிலி பாங் கியை வினவல், பாங்கியை நற்றாய் வின வல், நற்றாய் செவிலியை வினவல்.

அறத்தொடு நிற்றல்விரி-கடு-கையறுதோழி கண்ணீர் துடைத்தல், தலைமகள் கலுழ் தற் காரணங்கூறல், தலைமகன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை யெய் தக்கூறல், தலைவனிகந்தமை யியம்பல், அதுகேட்ட தோழி இயற்பழித்துரைத் தல், தலைமகளியற்பட மொழிதல், இல் வயிற் செறித்தமை சொல்லல், செவிலி கனையிருளவன் வரக் கண்டமை கூறல், தலைமகள் வேற்றுமை கண்டு பாங்கியை வினுதல், வெறிவிலக்கல், வெறிவிலக்கிய வழிச் செவிலி தோழியை வினுதல்,

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத் தொடு நிற்றல், புனறரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல், களிறுதரு புணர்ச்சி யால் அறத்தொடு நிற்றல், தலைமகள் வேற்றுமை கண்டு நற்ரூய் செவிலியை விஞதல், செவிலி நற்ரூய்க்கு முன்னிலை மொழியான் அறத்தொடு நிற்றல்.

அறத்தொடு நிற்றற் குரியார் - ச - தலைவி, பாங்கி, செவிலி, நற்ரூய்.

அறப்பகுதி - உ - இல்லறம், துறவறம்.

அறம் - ஊஉ - ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க் குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக் குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின் பண்ட நல்கல், அறவைச்சோறு, மகப் பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடுதல், அற வைத்தூரியம், சுண்ணம், நோய்க்குமருந் து, வண்ணர், நாவிதர், கண்ணுடி, கா தோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண் போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற் குணவு, ஏறு விடுத்தல், வீலைகொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம்.

அறவகை - ஊ - ஒழுக்கம், வழக்கு, தண்டம். இவற்றை முறையே ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்பர் வடநூலார்.

அறிவின்வேறுபாடு-இ-புத்தி, மதி, ஸ்மிருதி, பிரக்ஞை, பிரதிமை. [யோசனம், அதிகாரி.

அனுபந்தம் - ச - விடயம், சம்பந்தம், பிர

அனுமானவநுப்பு - இ - பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம்.

அன்மொழித்தொகைகூறுபாடு -கூ- இரண் டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, மூன்ரும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, நான்காம் வேற் றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை, ஐந்தாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, ஆரும்வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, ஏழாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, வினைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, உவமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

அன்னுவயவிலக்கணம் - இ - விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.

அஃறிணைப்பால் - உ - ஒன்றன்பால், பல வின்பால்.

அஃறிணைப்பெயர் - கக - அஃறிணையொரு மைப் பெயர், அஃறிணைப் பன்மைப் பெயர், அஃறிணையொன்றன் படர்க்கை, இறந்தகாலம் நிலைதெரிவினையாலணையும் பெயர், அஃறிணை யொன்றன்பாற் பட ர்க்கை நிகழ்காலத் தெரிநிலை வினையா லணையும் பெயர், அஃறிணை யொன்றன் பாற் படர்க்கை யெதிர்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர், அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர், அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை யிறந்த காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர், அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர், அஃறிணைப் பலவின்பாற் படர் க்கை யெதிர்காலத் தெரிநிலை வினையால ணையும்பெயர், அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர், பால்பகா வஃறிணைப் பெயர்.

அஃறிணை வினைமுற்று - அ - அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை யிறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று, அஃறிணையொன் றன்பாற்படர்க்கை நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை எதிர்காலத் தெரிநிலை வினை முற்று, அஃறிணைப் பலவின்பாற் படர் க்கை யிறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று, அஃ றிணைப் பலவின்பாற் படர்க்கை யெதிர் காலத் தெரிநிலை வினைமுற்று, ஷை பல வின்பாற்குறிப்புவினைமுற்று, ஷையொன் றன்பாற் குறிப்பு வினைமுற்று.

அ

ஆகமங்களிற் ரேன்றினவர் - சுஉ - பிரண வன், திரிகலன், அரன், சுத்தாக்கியன், வெகு, வீபு, காரணக்கியன், சருவன், ஆதிபிரசாபதி, சிவன், சுசிவன், அச்சுதன், ஈசன், திரிமூர்த்திகள், சிவோதாசனன், சூக்குமன், வைப்பிரணவன், சுப்பிரபஞ் சன், காலருத்திரன், தருமன், மபு, உக்

கிரன், தெளரசன், தசகன், விக்கினேச் சுரன், சசி, உருத்திரன், அநாதி, பரமே சுவரன், உதயன், கிரியை, நிதநேசன், சுயம்புவன், வியோமன், உருத்திரோசா தனன், தேசசன், பிரசாபதி, பிரமணே சன், நந்தி, சேடாக்கியன், மகாதேவன், கருவாத்து, மகன், வீரபத்திரன், அநந் தன், பிரகற்பதி, பிரசாந்தன், ததிசி, சூலிகசவாக்கிகன், மூலயன், இவலிதன், இந்திரன், தண்டேச்சுரன், வசிட்டன், சைசபாயன், சோமன், நரசிங்கன், தேவ பிதன், சர்வவார்த்தகன், பவோற்பவன், சிவாத்துமன், மகாகாளன்.

ஆகமங்களின் சார்புநூல் - அ - தத்துவப்பிர காசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத் திரய நிர்ணயம், போககாரிகை, மோக்க காரிகை, நாதகாரிகை, பரமோக்க கா ரிகை, இரத்தினத்திரயம்.

ஆகமசிவபேதம்-ம-காமிகம்,யோகசம்,சிந்தி யம், அசிதம், தீத்தம், காரணம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம்.

ஆகமஞானம்-உ- அபரஞானம், பரஞானம்.

ஆகமபாதம்-ச- கிரியாபாதம், ஞானபாதம், சரியாபாதம், யோகபாதம்.

ஆகமபேதம்-உ-சிவபேதம்,உருத்திரபேதம்.

ஆகமப்பிரிவு - உ - கிரியாகாண்டம், ஞான காண்டம். [பசுலக்கணம், பாசலக்கணம்.

ஆகமப்பொருளிலக்கணம்-ஈ-பதிலக்கணம்,

ஆகமமார்க்கம்-ச-நன்மார்க்கம், சகமார்க் கம், புத்திரமார்க்கம், தாதமார்க்கம்.

ஆகமவகை - உ - ஆகமம், உபாகமம்.

ஆகமவுபபேதம் - உஎ - சாமிசத்திற்கு உத் தரம் நாரசிங்கம் வயிரோத்தரம் என-ஈ, யோசசத்திற்கு - வீணசிகோத்தரம் தார தந்திரம் சௌக்கியாகமம் சாந்தாத்தி யாகமம் ஆத்மயோகம் என-டு, சித்தியத் திற்கு - சுசிந்தியாகமம் சுபகாகமம் வாம தந்திரம் பாபநாசகம் சர்வோற்பவம் அமிர்தாகமம், என-சு, சாரணத்திற்கு - காரணதந்திரம் பாவனதந்திரம் தெளர்க் கியதந்திரம் மகேந்திரதந்திரம் என-எ, அசிதம்- பிரபூதாகமம் பரோற்பூதாகமம் பார்வதிதந்திரம் பதுமசங்கிதை என-ச, தீப்தம் - அமேயாகமம் அப்பிரமாகமம் அசுவாகமம் அசங்கியாகமம் அமிதௌ சேசாகமம் ஆனந்தாகமம் மாதோற்பூதா கமம் அற்புதாகமம் அமிர்தாகமம்என-ஈ, சூக்குமம் - சூக்குமசங்கிதை என-க, சகத் திரம்-அதிதாகமம் அமலதந்திரம் சுத்தம் அப்பிரமேயாகமம் சாதிபஞகமம் பிரபுத் தாகமம் விபுதாகமம் அத்ததந்திரம் அலங் காரதந்திரம் சுபோதாகமம் என-ம, அஞ் சுமான் - வித்தியாபுராணம் பாஸ்வராக மம் நீலலோகித தந்திரம் புரகரணகமம் பூததந்திரம் ஆன்மாலங்காரம் காசிபதந் திரம் கௌதமதந்திரம் மகேந்திரம் பிரம தந்திரம் வசிட்டாகமம் ஈசானியோத்த ரம் என-கஉ, சுப்பிரபேதம் - சுப்பிரபேத தந்திரம் என-க, விசயம் - விசயதந்திரம் உபவதந்திரம் சௌமியதந்திரம் அகோர தந்திரம் மிருத்தியுநாச தந்திரம் குபேரே சாகமம் விமலதந்திரம் மகாகோர தந்தி ரம் என-அ, நிசுவாசம்- நிசுவாசம் உத்தர நிசுவாசம் நிசுவாசமுகோதயம் நிசுவா சயன நிசுவாசகாரிகை கோரசங்கிதை சுச வுக்கியம் குய்யம் என-அ, சுவாயம்புவம்- சுயவம்பூதம், பிரசாபதிபதம், பதுமதந்தி ரம்என-ஊ,அனலம்-ஆக்கினேயம் என-க, வீரம்-பிரஸ்தாரதந்திரம், பிரஸ்புர தந்தி ரம் பிரபோத தந்திரம், போத தந்திரம், போதக தந்திரம், அமோச தந்திரம், மோகசமய தந்திரம், சகட தந்திரம், சக டக தந்திரம், அலதந்திரம், விலேகன தந்திரம், புத்திர தந்திரம், வீரதந்திரம் என கூ, இரௌரவம் - காலதகனம் இரௌரவோத்தரம் கௌமாரம் காளம் மகாகாளம் இந்திராகமம் என - சு, மகு டம் - மகுடம் மகுடோத்தரம் என உ, விமலம் - அநந்த போகாகமம் ஆக்கிராந் தாகமம் இருத்தகாச தந்திரம் அலிக்கிரு தாகமம் அற்புதாகமம் மாரணதந்திரம் என-சு, சந்திரஞானம் - திரசங்கிதை தாணுசங்கிதை மகாந்தசங்கிதை நாதிசங் கிதை நந்திகேச்சுர சங்கிதை ஏகபாத புராணம் சங்காரகம், நீலபத்திரதந்திரம், சிவபத்திராகமம் கலாபேதாகமம், ஸ்ரீ மு காகமம் சிவசாதனகமம் சிவசேகராகமம் தேவிமதம் என- கச, விம்மம் - சதுமுக தந்திரம் மலயதந்திரம் மகாயோகம் சோந்தோ பாகமம் பிரிதிவிம்பாகமம் அருத்தாலங்காரம் வாயவிய தந்திரம் கௌடாக தந்திரம் குஞ்சுடினிகாகமம் துலாவிருத்தம் துலாயோகம் குட்டிம தந்திரம் வருக்கசேகரம் மகாவித்தியம் மகாசூரம் என-கடு, புரோற்கீதம்-கவு சாகமம் வராக தந்திரம் பிங்களமதம்பாச பந்தசங்கிதை தண்டதரதந்திரம் குசதந் திரம் தாரணம் சிவஞானம் விஞ்ஞானம்

திரிகாலஞானம் ஆயுர்வேதம் தனுவேதம் சருதமட்டிரி விபேதம் சங்கீதம் பரதம் ஆதோத்தியம் என கசு, இலளிதம்-இலளிதம் இலளிதோத்திரம் குமார தந்திரம் விக்கினேசராகமம் என-ஈ, சித்தம்-சாரோத்தரம் தேவேசசாத்தம் காலபேதம் சசிமண்டலம் என-ஊ, சந்தான சருவோத்தம்-இலிங்காதிக்கம் சுரத்தியக்கம் சங்கர தந்திரம் மகேச்சுராகமம் அசங்கியா தந்திரம் அனிலாகமம் துவந்துவாகமம் சிவதருமோத்தரம் வாயுப்புரோக்தம் திவ்வியபுரோக்தம் ஈசானியம் என-கக, பாரமேசுரம்-மதங்கதந்திரம் யக்ஞனி சாத்திரம் பதுமாகமம் பௌட்கரம் சுப்பிரயோகம் அம்சாகமம் சாமானியாகமம் என-எ, கிரகணம்-கருடாகமம் ஈசருதாகமம் நீலதந்திரம் விருக்காகம்பரஞகமம் வைக்கிரமாகமம் புத்தாகமம் பிரபுத்தாகமம் காலதந்திரம் என-ஊ, பேதம்-பேதாகமம் என-க, வாதுளம்-வாதுளம் உத்தரவாதுளம் காலாஞ்ஞானம் பிரலோகிதம் சர்வாகமம் சர்வாட்டாகமம் சிரேட்டாகமம் நித்தியாகமம் சுரதாகமம் மகான்னம் விசுவாகமம் விசுவாத்மாகமம் என-கஉ, ஆக நூற்றுத் தொண்ணூற்றெட்டு; எனைய வந்துழிக் காண்க.

ஆகமவுருத்திரபேதம்-கஅ-ஷிசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இளொசவம், மகுடம், விமலம் சந்திரஞானம், விம்பம், புரோர்க்கிதம், இலளிதம், சித்தம், சந்தானம், பாரமேசுரம், கிரணம், வாதுளம்

ஆகமவுற்பத்தித்தானம்-ஙி-ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்.

ஆசமனீயதிரவியங்கள்-சு - எலம், கிராம்பு, சாதிக்காய், சண்பகப்பூமொட்டு, பச்சைக்கர்ப்பூரம், பூலாங்கிழங்கு.

ஆசனபேதம்-ஈஅ-சித்தாசனம், சிங்காசனம், சுவத்திகாசனம். சௌவியாசனம், சூலாசனம், சுகாசனம், சருவதோபத்திராசனம் கோமுகாசனம், கருடாசனம், மயூராசனம், மச்சேந்திராசனம், மற்சாசனம், மூற்கராசனம், மண்டூகாசனம், மிருகாசனம், நாகாசனம், குக்குடாசனம், குஞ்சராசனம், கூர்மாசனம், காவ்ஷ்டாசனம், சிரவுஞ்சாசனம், கடகாசனம், காம தகனாசனம், யோனியாசனம், வியாக்கிராசனம், வைகிகாசனம், வத்திராசனம், வாசவாசனம், வீராசனம், வராகாசனம், பரியங்காசனம் பதுமாசனம், பதாசனம், பச்சிமத்தாணாசனம், திரிபதாசனம், அத்தனாசனம், அயிம்மாசனம், அர்த்தாசனம், என்பனவாம்.

ஆசாரவகை -ஈ-சதாசாரம், கணாசாரம், நிதாசாரம். இவற்றுள் தனது சன்மார்க்கத்தால் சகலசராணருக்குஞ் சந்தோஷங் கொடுப்பதே சதாசாரமாம். சிவனையும் அடியார்களையும் நிந்தை செய்கின்றவரை தண்டிப்பனென்று தண்டிப்பதே கணாசாரமாம். அன்பினால் தான்கொண்ட ஆசாரம் பிராணாந்தம் விடாமல் கைக்கொள்வதே நிதாசாரமாம்.

ஆசாரவிதம்-ஈ-ஒழுக்கம், வழக்கு, தண்டம்.

ஆசாரியபுருஷர்கள்-எச - திருக்குருகைப் பிரான், கூரத்தாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான், தெற்காழ்வான், இளையாழ்வான், கோமடத்தாழ்வான், சேட்டலூராழ்வான், வேதாந்தியாழ்வான், அனந்தாழ்வான், நடுவிலாழ்வான், மிளகாழ்வான், நெய்யுண்டாழ்வான், உக்கலாழ்வான், திருக்கோவலூராழ்வான், திருமோகூராழ்வான், கோயிலாழ்வான், அருணபுரத்தாழ்வான், கணியனூர் சிறியாழ்வான், திருமலை நல்லான், கிடாம்பியாச்சான், வங்கிபுரத்தரசன், ஈச்சம்பாடியாச்சான், கொங்கிலாச்சான், திருக்கண்ணப்புரத்தாச்சான், எம்பார், சிறிய கோவிந்தப்பெருமாள், கிடாம்பிப் பெருமாள், அம்மங்கிப்பெருமாள், ஆசூரிப்பெருமாள், பிள்ளையப்பன், பிள்ளைத்திருமலை நம்பி, வங்கிபுரத்துநம்பி, சொட்டைநம்பி, முடும்பை நம்பி, பராங்குச நம்பி, திருக்குறுங்குடி நம்பி, தொண்டனூர் நம்பி, அருணபுரத்து நம்பி, மருனூர் நம்பி, மழைவூர் நம்பி, வடுக நம்பி, குரவி நம்பி, புண்டரிகாக்ஷர், முதலியாண்டான், கந்தாடையாண்டான், மாருதியாண்டான், மதுரையாண்டான், ஈயுண்ணியாண்டான், சோமாசியாண்டான், ஸ்ரீயராண்டான், ஈசாண்டான், பெரியாண்டான், சிறியாண்டான், அம்மங்கியாண்டான், ஆளவந்தாராண்டான், சுந்தரத் தோளுடையார், உக்கலம்மாள், பரித்திக்கொல்லையம்மாள், சொட்டையம்மாள், முடும்பையம்மாள், வைத்தமாநிதியார், பராசரபட்டர், சோமபிள்ளைப்பட்டர், சிறுப்பள்ளி தேவராஜபட்டர், பிள்ளையுறங்கை யுடையார், பிள்ளை திருவாய்மொழி யரையர்,

பிள்ளை திருநாரையூரரையர், பிள்ளை ராஜ மகேந்திரம் பெருமாளரையர், அதிகாரிப் பிள்ளை, திருநகரிப்பிள்ளை, குமரன் பேரப்பிள்ளை, ஆனந்தசோமயாஜியார், காஞ்சிசோமயாஜியார்.

ஆசாரியராதற்குரியகுலம் - ச - பிராமணர், அரசர், வைசியர், வேளாளர்.

ஆசாரியர் - ச - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தர மூர்த்தி நாயனர், மாணிக்கவாசக சுவாமிகள். [குரு.

ஆசாரிவகையர் - உ - தீட்சாகுரு, வித்தியா

ஆசான்சாதி - ச - காந்தாரம், சிகண்டி, தசாக்கரி, சுத்தகாந்தாரம், இவற்றுள் ஆசான் என்னும் பண்ணியலுக்கு அகச் சாதி காந்தாரம், புறச்சாதி சிகண்டி, அருகு சாதி தசாக்கரி, பெருகு சாதி சுத்தகாந்தார மெனக் கொள்க.

ஆசிரியர் - ரு - உரையாசிரியர், நூலாசிரியர், போதகாசிரியர்.

ஆச்சிரமம் - ச - பிரமசாரி, இல்வாழ்வோன், வானப்பிரத்தன், சந்நியாசி, இவருள் பிரமசாரி - ஆசிரியனிடத்தோதி விரதங் காத்து விவாக மின்றி யிருப்போன், இல்வாழ்வோன் - இல்லறத்தின் வழாதில்லாளோடுங் கூடி வாழ்வோன், வானப்பிரத்தன் - இல்லந் துறந் திலாளோடாயினுந் தனித் தாயினும் வனத் திற்றவஞ் செய்வோன், சந்நியாசி - முற்றத் துறந்தோன். [டியம், கிருத்தம்.

ஆடலின்கூறுபாடு - ரு - தாண்டவம், நாட்

ஆடல்வகை - ரூசு - வசைக்கூத்து, புகழ்க் கூத்து, வேத்தியல், பொதுவியல் வரிக் கூத்து, வரிச் சாந்திக்கூத்து, சாந்திக் கூத்து, விநோதக்கூத்து, ஆரியம், தமிழ், இயல்புக்கூத்து, தேசிக்கூத்து, சுத்தகிருத்தம், வடுகு, சிங்களம், குரவை, கலி நடம், கரணம், நோக்கு, தோற்பாவை, நகைத்திறச்சுவை, அல்லியம், கொடு கொட்டி, குடை, துடி, குடம், பாண்ட ரங்கம், மல், கடையம், பாவை, மரக் கால், பேடு, கழங்கு, பந்து, அம்மனை, பொழில்வினோயாட்டு, நீர்வினோயாட்டு.

ஆடவர்குணம் - ச - அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி.

ஆடற்பேதம் - உ - நின்றாடல், வீழ்ந்தாடல்.

ஆட்டின்வகை - ரு - காராடு, செம்மறியாடு, கம்பளியாடு, மலையாடு, துருவாடு, பள்ளையாடு.

ஆணவமலகாரியம் - அ - விகற்பம், கற்பம், குரோதம், மோகம், நகை, கொலை, அஞர், மதம்.

ஆண்கை - சு - மூட்டி, சிகரம், பதுமம், சந்தஞ்சம், சிலந்தி, சூசி, சதுரம், பதாகம், திரிபதாகம் என்பனவாம்.

ஆண்டருளுமுறை - உ - மர்க்கட சம்பந்தம், மார்ச்சார சம்பந்தம்.

ஆண்நட்சத்திரம் - கo - பரணி, கார்த்திகை, உரோகணி, புனர்பூசம், பூசம், அத்தம், அதுடம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி.

ஆண்பாலெழுத்து - கஉ - அஆ, இஈ, உஊ, எஏ, ஐ, ஒஓ, ஔ. சிலர் உயிர்க்குற்றெழுத்தைந்தும்உயிர்மெய்க்குற்றெழுத்துத் தொண்ணூறும் ஆகிய தொண்ணூற் றைந்தும் என்பர்.

ஆண்பாற்பிள்ளைக்கவிப்பருவம் - ம - காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிறுபறைப் பருவம், சிற்றில் சிதைத்தற் பருவம், சிறுதேருருட்டற் பருவம். இவை முறையே இரண்டாம் மாதம், ஐந்தாமாதம், எட்டாமாதம், ஒன்பதாம் மாதம், பதினோராமாதம், பன்னிரண்டாமாதம், பதினெட்டாமாதம், இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு, நான்காமாண்டு என்னும் காலங்களிற் கூறப்படுவனவாம்.

ஆதனம் - க-சுபத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என்பனவாம்.

ஆதாரதலம் - சு-மூலாதாரம் - திருவாரூர், சுவாதிட்டானம் - திருவானைக்கா, மணிபூரகம்-திருவண்ணாமலை,அநாகதம்-சிதம்பரம், விசுத்தி-திருக்காளத்தி, ஆக்ஞினை காசி.

ஆதாரதேவதைகள் - சு-விநாயகக்கடவுள்-மூலாதாரம், பிரமன்- சுவாதிட்டானம், விட்டுணு - மணிபூரகம், உருத்திரன்-அநாகதம், மகேசுரன்- விசுத்தி, சதாசிவன் ஆக்ஞினை.

ஆதாரதோற்றம் - சு-பந்தம், விளக்கு, மின்னல், மின்மினி, சூரியன், சந்திரன்,

ஆதாரம் -சு-மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞினை; இவற்றிற்கு முறையேயிடம்குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி.

ஆதித்தன் பிள்ளைகள்-அ-மனு, யமன், சனி, காளிந்தி, சுக்கிரீவன், கன்னன், நாதன், தத்தியன்.

ஆதித்தன்றேவிமார்-உ-உஷாதேவி, சாயாதேவி.

ஆதிமருந்து - ரு-சுக்கு, மிளகு, திப்பிலி.

ஆதிமார்க்கீக சாத்திரம் - ரு-பாசுபதசாத்திரம், காபாலிகசாத்திரம், மாவிரதம்.

ஆதியான் மிகசாத்திரம் - ரு-சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தம்.

ஆயுதங்கள் - ல-வச்சிராயுதம், த்வஜாயுதம், கதாயுதம், பத்மாயுதம், சக்கராயுதம், சத்தியாயுதம், தண்டாயுதம், வாளாயுதம், பாசாயுதம், திரிசூலாயுதம். இவற்றைத் தசாயுதங்கள் என்பர்.

ஆயுதத்தொகை - ரூ0-வில், வாள், சக்கரம், மழு, சூலம், தோட்டி, வேல், வச்சிராயுதம், தண்டு, ஈட்டி, கைவேல், இருப்புலக்கை, பெருஞ்சவளம், சிறுசவளம், வலைக்கயிறு, ஊசி, முசுண்டி,உளி, கைக்கட்டி, குருந்தடி, கத்தி; கைவாள்,அடைவாள், அரிவாள், கொடுவாள், வட்டம், கழுமுள், நாராசம், பிண்டிபாலம், அம்பு.

ஆயுதவகை - உ-அத்திரம், சத்திரம்: இவற்றுட்கைவிடு மாயுதமத்திரம், கைவிடாவாயுதஞ் சத்திரம்.

ஆய்தக்குறுக்கம் - உ-லகரவீற்றிற் குறுகல், ளகரவீற்றிற் குறுகல்.

ஆய்தம் - உ - குற்றுயத்தம், முற்றுயத்தம்.

ஆரபடியிலக்கணம்-உ-பொருள் பொருளாக வருதல், வீரமானுடர் தலைவராக வருதல்.

ஆரவகை - எ-மலையாரம், தீமுரன் பச்சை, கிழான்பச்சை, பச்சை வெட்டை, அரி, சந்தனம், வேர் சுக்கொடி.

ஆலயவகை - உ- இருதயப் பிரத்தம், சரீரப் பிரத்தம். [பண்ணுளத்தி.

ஆளத்தி - ரு- காட்டாளத்தி, நிரவாளத்தி,

ஆளத்திக்குவருமெழுத்து - கஉ-அகரமுதல் ஔகாரமிறுதியனவாம்.

ஆற்றுப்படை - ஙி- திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, தணிகையாற்றுப்படை.

ஆனந்தம் - அ-விடயானந்தம், பிரமானந்தம், வாகனானந்தம், முக்கியானந்தம், நிசானந்தம், ஆன்மானந்தம், அத்துவிதானந்தம், வித்தியானந்தம்.

ஆன்மசரீரம் - ரு-தூலசரீரம்,சூக்குமசரீரம், காரணசரீரம்.

ஆன்மதத்துவம் - உசு- பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், மெய், வாய், கண், மூக்கு, செவி, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம், குணம்.

ஆன்மவறிவு - சூ-சுவையறிவு, ஒளியுணர்வு, ஊறுணர்தல், ஓசையுணர்வு, கந்தறிவு, பகுத்தறிவு என்பனவாம்.

ஆன்மா-உ-சீவான்மா, பரமான்மா; அவையாவன - சரீராவச்சின்னவான்மா - சீவான்மா, இதரபதார்த்தமான வச்சின்னவான்மா பரமான்மா. [பரமாத்துமா.

ஆன்மா - ரு-ஜீவாத்துமா, அந்தராத்துமா,

ஆன்மாக்களின் வகை - ரு-விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்.

இ

இகழ்ச்சிக்குறிப்புச்சொல் - கூ- என், இனி, எயே, சீச்சீ, என்னே, எற்று, எவன், எல், சை.

இசை - ரு-மந்தரம், மத்திமம், தாரம்.

இசை - எ-குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். இவற்றுண்மிடற்றூற்குரல், நாவிஞற்றுத்தம், அண்ணத்தாற் கைக்கிளை, சிரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்சால்விளரி, மூக்காற் றாரம், இங்ஙனந் தனித்தனி பிறக்கும்; இவையே யேழ்சுரமெனவும், வீணையிலேழ் நரம்பெனவும் படும்; இவற்றிற்கோசை யுவமை-மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை. சுவையுவமை-பால், தேன், கிழான்நெய், எலம், வாழை, மாதுளங்கனி. வாசனையுவமை-மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னிவிரை, புன்னை. அக்கரம் - ஆ, அ, ஈ, இ, ஊ, உ, ஏ, எ, ஐ, இ, ஓ, ஒள உ. மாத்திரை-நான்குகுரல், நான்கு துத்தம். இரண்டு கைக்கிளை, மூன்றுழை, நான்கிளி, மூன்றுவிளரி, இரண்டு தாரம் இவற்றிலெழுபாலை பிறக்கும். அவையாவன: குரலே குரலாயிற் செம்பாலை, துத்தமே குரலாயிற் படுமலைப்பாலை, கைக்கிளையே குரலாயிற்செவ்வழிப்பாலை. உழையே குரலாயினரும்பாலை, இளியே குரலா

யிற்கொடிப்பாலே, விளரியே குரலாயின் விளரிப்பாலே, தாரமே குரலாயின் மேற் செம்பாலே. இவற்றுட் செம்பாலைக்குக் கொடிப்பாலைவலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலையும் மேற்செம்பாலையும் வலிது. அன்றியுந் தாரத்து ளுழையு முழையுட்குரலுங் குரலுளிளியு மிளி யுட்டுத்தமுந் துத்தத் துள்விளரியும், வி ள ரி யு ட் கைக்கிளையும் பிறப்பது தருதி - இவற்றிற்கிறைவர் விசுவாமித் ரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன், இவற்றிற் குயிர் ஈசன்.

இசைக்கரணம்-அ-பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், லதைவரல், செலவு, வீளை யாட்டு, கையூழ், குறும்போக்கு இவற் றின் வரலாற்றைப் பொருளகராதி வரி யிற் காண்க.

இசைக்கருவி - கு-தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி.

இசைக்கிரியை - அ-எடுத்தல், படுத்தல், நவிதல், கம்பிதம், குடிலம், எலி, உருட்டு, தாக்கு.

இசைக்குரியசுவை - எ - பால், தேன், கிழான், நெய், எலம், வாழை, மாதுளங் கனி.

இசைக்குரியதேவர் - எ-விசுவாமித்திரன், யமன், அக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன் எனவுங்கூறுப.

இசைக்குரியமணம் - எ-மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், தாமரை, புன்னை.

இசைக்குரியவகை - அ-வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட் டல், அள்ளல், பட்டடை, இவற்றுள் வார்தலாவது - சுட்டு விரலாற்றொழில் செய்தல். வடித்தலாவது - சுட்டுவிரலும் பெருவிரலுங்கூட்டி நரம்பை யகமும் புற முமாராய்தல், உந்தல் - நரம்புகளைத் தெ ரித்து வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்ட தும் நிரல்பட்டது மறிதல், உறழ்தலா வது-ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட் டும் இரண்டிடையிட்டு நரம்புகளைத் தெ றித்தல், உருட்டலாவது-இடக்கைச் சுட் டுவிரலுருட்டலும், வலக்கைச் சுட்டுவிர லுருட்டலும் சுட்டொடு பெருவிரற்கூட் டியுருட்டலும், இருபெரு விரலுமியைந் தட னுருட்டலுமாம். பிறவற்றை வந் தழிக் காண்க.

இசைக்குழற்குரியன - கி - கருங்காலி, சந் தனம், செங்காலி, மூங்கில், வெண்கலம் என்பனவாம். இவற்றுள் மூங்கிலிற் செய் வது உத்தமம். வெண்கலம் மத்திமம். ஏனைய அதமமாம்.

இசைநிறையசைச்சொல் - சு - எ, ஓ, உம், அம்ம, அரோ, குரை.

இசைபிறக்கும்வகை - சு-தாரத்துள் உழை, உழையுட்குரல், குரலுள் இளி, இளியுள் துத்தம், துத்தத்துள் விளரி, விளரியுட் கைக்கிளையுமாம்.

ஏதுப்போலிவகை - கூ - அசித்தன், விருத்தன், அநைகாந்திகன்; இவற்றுள் அசித்தனுவது நிச்சயிக்கப்படாத பக்க விருத்தியை யுடையது. விருத்தனுவது பக்கத்திலும் விபக்கத்திலும் உடைத்தாயிருக்கை. அநைகாந்திகனுவது பக்கத்திரயத்தினுலும் விருத்தி யிருத்தல், அசித்தபேதம் பன்னிரண்டாம். அவையாவன - சொரூபாசித்தன், வியாத்திகரணசித்தன், விசேடியாசித்தன், விசேடணாசித்தன், பாகாசித்தன், ஆசிரயாசித்தன், ஆசிரயஏகதேசாசித்தன், வியாத்தவிசேடியாசித்தன்,வியாத்தவிசேடணாசித்தன், சந்தேகாசித்தன், சந்தித்த விசேடியாசித்தன்,சந்தித்தவிசேடணாசித்தன் என்பன. விருத்த பேதம் (2). அவையாவன:— பக்கவிபக்க வியாபக விருத்தன், பக்க விபக்க ஏகதேச விருத்தன், அநைகாந்திகபேதம்ஏழாம்.அவையாவன:- பக்கத்திரய விபகவிருத்தி, பக்கவியாபக சபக்க விபக்க ஏகதேசவிருத்தி, பக்க விபக்க வியாபக சபக்க ஏகதேசவிருத்தி, பக்கத்திரய ஏகதேசவிருத்தி, விபக்க வியாபகன், பக்க விபக்க வேகதேசவிருத்தி, சபக்க வியாபகன் என்பனவாம்.

ஏதுப்போலிவிரி - உக - சார்பில்லது, சார்புண்மை யறியப்படாதது, சொரூபமில்லது, சொரூபமுண்மையறியப்படாதது, சொரூபத்தின் விசேடணமில்லது, சொரூபவிசேடணவுண்மை யறியப்படாதது, விசேடியமில்லது, விசேடியமுண்மையறியப்படாதது, ஒரு மருங்கில்லது, ஒரு மருங்குண்மை யறியப்படாதது, பரனுக்குடன்பாடில்லது, சாத்தியத்தோடு வியாத்தியுண்மை யறியப்படாதது, செயற்கைபற்றி வியாத்தியுடையது, மறுதலைப் பொருள் சாதிப்பது, மறுதலைப் பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோ ரேதுவை யுடன் கொண்டு வருவது, காட்சியளவையான் மறுக்கப்பட்டு வருவது, பக்கசபக்க மாத்திரையினன்றி விபக்கத்துஞ் சேறலுடையது, சபக்கத்திற் சேறலின்றிப் பக்கமாத்திரையினுள்ளது, சபக்கவிபக்க விலக்கணங்கள் கிடைக்கப் பெறுதது, கருதலளவையான் மறுக்கப்பட்டு வருவது, உரையளவையான் மறுக்கப்பட்டு வருவதுமாம்.

ஏவல்வினை - உ - முன்னிலையேவல்வினை, ஏவல்வினை. இவற்றுள் முன்னிலையேவலாவது தன்மைவினை படர்க்கை வினைகளுக்கினமாய் முன்னின்றுன்றொழிலை யுணர்த்துவது, ஏவல்வினையாவது இனமின்றி முன்னிலை யொன்றற்கே உரியதாய் முன்னின்றுனைத் தொழிற் படுத்தும் வினை.

ஏவல்வினைமுற்று - உ - முன்னிலையேவலொருமை வினைமுற்று, முன்னிலையேவற் பன்மை வினைமுற்று.

ஏறு - ரூ - அதிகார நந்தி, திருமால் நந்தி, தரும நந்தி.

ஏஷணை - ரூ - அர்த்தவேஷணை, புத்திர வேஷணை, உலகவேஷணை. அர்த்தவேஷணை - பொருள் தேட ஆசைப்படல். புத்திரவேஷணை - புத்திரனுண்டாக ஆசைப்படல். உலகவேடணை - உலக விஷயங்களைத் தேட ஆசைப்படல்.

ஐ

ஐசுவரியம் - அ - இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐந்தாம்வேற்றுமைபொருள்கோள் - எ - எல்லைப் பொருள், ஏதுப்பொருள், ஒப்புப்பொருள், நீக்கப்பொருள், முதற்காரணப்பொருள், வேற்றுமைக்கெதிர்ப்பொருள். இவற்றிற்கு முறையே உதாரணம் வருமாறு: — மதுரையின் வடக்குச் சிதம்பரம், கல்வியிற் பெரியன் கம்பன், காக்கையிற் கரிது களம் பழம், மலையின் வீழருவி, மாயையிற் ரோன்றியதுலகம், பாவத்தின் வெறுக்கின்றான், மண்ணுலகின் வேறு விண்ணுலகம்.

ஐந்தாம்வேற்றுமையுருபுகள் - சு - இன், இல், நின்று, இருந்து, காட்டிலும், பார்க்கினும்.

ஐந்தினைக்குரியகருப்பொருள் - ஐ - புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் இவற்றினிமித்தம். [கற்பு.

ஐந்தினைக்குரியகைகோள் - உ - களவு,

ஐம்புலதாக்கியினிறப்பன - நி - சுவையாவிறப்பது மீன், நாற்றத்தால் வண்டு, பரிசத்தால் யானை, ஓசையால் அசணம், ஒளியால் விட்டில்.

ஐயமற்ரோனவிலக்கணம் - சு - வாடிய உறுப்பு, மயங்கிய பார்வை, பீடழிபுலன், பேசாதிருத்தல், வேறுபட்ட செய்கை, ஆகாயத்தையுந் திசைகளையும் மாறி மாறிப் பார்த்தல்.

ஐயவிலியம் - சு - வாடியவுறுப்பு, மயங்கிய பார்வை, பீடழிபுலன், பேசாதிருத்தல், வேறுபட்ட செய்கை, திசைவெளிகளோ மாறிமாறிப் பார்த்தல்.

ஐயனர்தேவிமார் - உ - புட்பகலை, பூரணை.

ஐயனர்வாகனம் - உ - காரிக்குதிரை, வெள்ளையானை.

ஒ

ஒதிக்கம் - நி - நித்தியப்பிரளயம், நைமித்திகப் பிரளயம், பிராகிருதப் பிரளயம், ஆத்தியந்தப் பிரளயம், மகாப் பிரளயம்.

ஒத்தாழிசைக்கலிப்பா - ரூ - வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா, நேரிசையொத்தாழிசைக் கலிப்பா.

ஒருமை - க - இறையுணர்வு.

ஒழிவு - ரூ - பரப்பாழ், சீவப்பாழ், மாயைப் பாழ்.

ஒழுக்கவகை - உ - இல்லறவொழுக்கம், [துறவறவொழுக்கம்.

ஒற்றர் - ரூ - தலைத்தூதுவர், இடைத்தூதுவர், கடைத்தூதுவர்.

ஒற்றெழுத்துவகை - ரூ - வல்லினம், மெல்லினம், இடையினம்.

ஒற்றைக்கை - ரூரூ - பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், மூட்டி, கடகம், சூரி, கமலகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, கிடங்கை, அலபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பசாசம், முகுளம், பிண்டி, தெரிகிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரமுகம், வலம்புரி, இவை பிண்டி வகை, இணையா வினைக்கை வகை யெனவும் படும்.

ஓ

ஓசைக்குற்றம் - ரூ - அறுத்திசைப்பு, வெறுத்திசைப்பு, அகன்றிசைப்பு.

ஓடவகை - நி - கரிமுக வம்பி, பரிமுக வம்பி, அரிமுக வம்பி, தோணி, கப்பல்.

ஓமதிரவியம் - ரூ - கிருதம், அகிருதம், கிருதா கிருதம்.

ஓமதிரவியம் - கஅ - விறகு, நெய், பால், தயிர், தூவரை, பொரி, கடுகு, சமித்து, பயறு, பணிகாரம், வெல்லம், பொரிமா, தேன், குழைச் செந்நெல், உளுந்து, சம்பாநெல், எள், சருவாகிய அமுது.

ஓமாலிகை - ரூஉ - இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கோட்டம், நாகம், மாதவரிசி, தக்கோலம், நன்னரி,

வெண்கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சம், கண்டில் வெண்ணெய், கடுக்காய், நெல்லி, தான்றி, குத்தம், மாசேணுகம், மாஞ்சி, சயிலேகம், புழுகு, புன்னேத்தாது, புலி நகம், பூஞ்சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், நுண்ணேலம், கொடுவேரி.

ஒலக்கஅரசர் - கசு - அரிச்சந்திரன், நளன், புருகுச்சன், புரூரவன், முசுகுந்தன், கார்த்தவீரியன், கயன், அம்பரீடன், சசிபிந்து, சிபி, பிருது, மருத்துவான், பரதன், சுகோத்திரன், இராமன், திலீபன், இரகு, அந்திதேவன், யயாதி, மாந்தாதா, பகீரதன், அனங்கன்.

ஒலக்கலக்கணம் - நிநி - அட்டஐசுவரிய யுக்தம், அட்டபோக சம்பன்னம், சப்த சந்தானம், சதுர்வித சம்பந்நம், அறுகுணமூடைமை, பஞ்சதந்திரப் பிரவீண மூடைமை, வருக்கத்திரய விசிட்ட மூடைமை, சதுரங்கபலம், சபாசத்தாங்கபரிவேடித்த ருடைமை, கவீச்சுரர், காயகர், தாதிகள், பாரங்கதர், சதுர்விதமகாநாயகர், பிரமாண புருடர், இரதபரிணிதர், சதுர் வித போக சங்கரர், காயசாதிபுருடர்கள், திரிவிதநாயகியர், விசேடவனிதையர், சீமந்தியர், திரிவித கோபப் பிரசாத லக்கணலக்ஷிதலலிநியர், பிரபுடைகன்னியர், அவத்தகாமியர், தசவிதகேளிபால லீலாசதியர், காயஸ்திரீகள், பருணிதபிரமதேயர், இரதிபேதகாந்தியர், பன்னிருசத்துவிசதியர், நால்வகைப்பிரீதியர், நால்வகை மோகமயர், திருக்கிரமலக்கணர், ஆலிங்கனம், எண்வகைத்தாடனலக்கணிகர், சத்தநகோபாதிவிதர், நாடிவருணமகீபர், அநேகதரணபரிணிதர், இரதிகலாகுசலர், வியோகசதுட்டயர், விப்பிரலம்பவித்தகர், அவத்தாத்திரயபரீட்சகர், பஞ்சமந்திரவன்னப் பிரதாபப்பிரவீணர், பஞ்சலிசுமாத்திரிகோபிதர், பித்துவகையவத்தாவிசாரபரர், ஐவகை மாகாவாத்திய நவீக்ஷணர், வேத்தியர், மத்தளிகர், ஆசியக்காரர், நிருத்தநாயகியார், வாத்தியம், நிருத்தம், வத்திரம், ஆபரணம், இராச்சியபாரம், விநயம், சத்தக கதர்.

க

கடல் - எ - உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன். இவையே யெழுகடல் எனப்படும்.

கடல்பதிதிரவியம்-நி-பவளம், முத்து, சங்கு, ஓர்க்கோலை, உப்பு. இவையே கடலமிர்து எனவும் படும்.

கடற்றிணை -உ- உல்லோலம், கல்லோலம். அவற்றையுணைக்கின் பெருந்திணை, சிறுதிணை எனக்கொள்க. [வர்கடன்.

கடன்-ஈ-தேவர்கடன், பிதிரர்கடன், முனிகடகம்-ஈ-சுக்கு, திப்பிலி, மிளகு; இவையே திரிகடுகமெனப்படும்.

கடைப்படுதானம்-எ-ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு என்பவை காரணமாகக் கொடுக்கப்படுவது. அதமதானம் என்பது மிஃதே.

கடைவள்ளல்-ஏ-பாரி, ஆய், எழிலி, நள்ளி, மலயன், பேகன், ஓரி. [கழிவு.

கணக்குவகை-ஈ-தொகை, பிரிவு, பெருக்கு,

கணத்தலைவர் - கக-நந்திகேச்சுவரர், பிருங்கி, மாகாளர், கிரீடி, கண்டர், காலர், கால கண்டர், கண்டாகர்ணர், சுபோஷர், தண்டி, ஈசானியர், இவர்களே ஏகாதச முக்கிய கணேஸ்வரர் எனப்படுவர்.

கணநாதர் - அ-நந்தி, மகாகாளர், பிருங்கி, கணபதி, இடபம், கந்தர், பார்வதி, சண்டர். இவர்கள் கணத்தலைவ ரென்மரெனவும், கணேசுரரென்ம ரெனவும் பெயர் பெறுவர்.

கணபங்கவகை - ஈ - கெட்டுவர்த்தித்தல், கெட்டுகூபித்தல், கெட்டொத்து நிற்றல், கெட்டுக்கெட்டோபோதல் (பௌத்தம்).

கணம்-அ-நிலம், நீர், மதி, இயமானன், சூரியன், தீ, வாயு, ஆகாயம். இவற்றுண் முன்னர் நான்கு நன்று, பினனர் நான்கும் கலகம், நிரைநிரைநிரை நிலக்கணம், நேர்நிரை நிரை நீர்க்கணம், நிரை நேர் நேர் மதிக்கணம், நேர் நேர்நேர் உயிர்க்கணம், நேர் நிரைநேர் சூரியகணம், நிரை நேர் நிரை தீக்கணம், நேர் நேர் நிரைவாயுக்கணம், நிரை நிரைநேர் ஆகாயகணம்.

கணம்-கஅ-அமரர், சித்தர், அசுரர், தைதியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புரு

டர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியார்.

கணக்கிரகண்ணியர் - கஉ - தண்டதரர், தண்டமாதர், தண்டவாகு, பிரசண்டர், பிரசண்டார்ச்சிதர், பிரசண்டகாவர், பலர், பலவிகரணர், சுமாலியர், சர்வபூதர், தமனர், மஞ்ஞன்மனர்.

கணிதபரிகர்மம் - கச - வக்கிரதுண்டர், சிந்தாமணி விநாயகர், விக்கினராசர், பாலசந்திரர், கசானனர், மல்லாலசெனவந்தமயூரேசர், கணேசர், கணபதி, மகவாகவந்த மயூரேசர், தூமகேது, உடுண்டி விநாயகர், துண்டிராஜர், மகோற்கடர், வல்லபை கணேசர்.

கணிகையர்-ச-தலைங்கோலரிவை, தோரிய மடந்தை, தலைப்பாட்டுக்கூத்தி, இடைப்பாட்டுக்கூத்தி.

கணிதம்-அ-சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம்; இவற்றுள் சங்கலிதம்-கூட்டல், விபகலிதம் - கழித்தல், குணனம் - பெருக்கல், பாகாரம் - பங்கிடல், வர்க்கம் - சமமாகிய வீரெண்ணின் பெருக்கம். அஃதாவது நிலத்தைச் சமமாக நாற்கோணஞ் செய்தல். வர்க்கமூலம் அவ்வர்க்கத் தொகையினின்றதன் மூலமாகிய வரம்பறிதல், கனம்-சமமாகிய மூவெண்ணின் பெருக்கம். அஃதாவது - குழியைச்சமமாகப் பண்ணிரு கோணப் படுத்தல், கனமூலம்-அக்கனத் தொகையினின்றதன் மூலமாகிய வொரு மூலையறிதல்.

கணேசுரர் - உஎ - நந்தியீசுரர், பிருங்கிமகாளர், கிரீடி, கண்டர், காலர், காலகண்டர், மண்டாகருணர், சுபோடர், தண்டியீசானர், பிரமமுனி, காலாக்கினி ருத்திரர், வீரபத்திரர், பிருங்கி, காளகண்டர், அங்கிரிதராளர், கசகராளர், முககராளர், நேத்திரகராளர், சோத்திரகராளர், சண்டர், மாலாதரர், திரிசூலி, விசுவமாலாபதி, அண்டாதிநாதர், காலாந்தகர், இலகுலீசர், மயூரானனர்.

கணை - ஙி - மன்மதன் கணை (ஙி) காண்க.

கண் - உ - அகக்கண், புறக்கண்.

கண்டம் - க - கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம்; இவையேநவகண்டம்.

கண்டவகை - கூ - பரதகண்டம், குருகண்டம், கிம்புருடகண்டம், இளாவிருதகண்டம், அருவருடகண்டம், கேதுமாலகண்டம், இரமியகண்டம், பதிராசுவகண்டம், இரணிய கண்டம்.

கண்ணன்மனைவியர்-அ-உருக்குமணி, இலக்குமணை, சத்தியபாமை, சாம்பவதி, நீளாதேவி, காளிந்தி, மித்திரவிந்தை, பத்திரை.

கண்ணெழுத்தோனவிநயம்-சா-கண்ணீர்த்துளியை விரலாற் றெளித்தல் வளைந்தபுருவமுடைமை, வாடியமுகம் வெள்ளிடை நோக்கியஞ்சுதல். [கதி, நரககதி.

கதி - ச - தேவகதி, மக்கட்கதி, விலங்கின்

கதிர்காமக்கடவுடிருநாமங்கள் - கூ - கதிர்காமசுவாமி, கதிரைநாயகன், கதிரைவேலன், மாணிக்கசுவாமி, கந்தக்கடவுள், ஆறுமுகப்பெருமான், பரஞ்சோதிப்பெருமான், சிதாகாயநாதன், அவ்வியத்த மூர்த்தி.

கதிர்காமதலத்திருநாமங்கள் - கஉ - ஏமகூடம், பூலோககந்தபுரி, காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்திவாசம், வில்வகானனம், சகலசித்திகரம், அகத்தியப்பிரியம், பிரமசித்து, அவ்வியத்த மூர்த்தம், சித்தகேத்திரம், கதிரை.

கந்தபுராணசங்கிதை-சு-பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சனற்குமாரசங்கிதை, சூரசங்கிதை, சங்கரசங்கிதை, சூதசங்கிதை.

கந்தம் - உ - நற்கந்தம், துர்க்கந்தம்.

கந்தம் - அ - சந்தனம், அகரு, கஸ்தூரி, கருப்பூரம், பச்சிலை, குங்குமம், இலாமிச்சை, கோட்டம்.

கமகபேதம்-உஉ-சுவரிதம், பிரமதம், தீர்க்கம், இல்லிதோற்சாரம், கிருதம், திதம், உல்லாசிதம், உல்லோசிதம், கம்பிதம், சூக்குமிதம், தீர்க்கம், உலோலிதம், இலீலோ தீர்க்கம், தீர்க்கலீதம், பிரத்துதம், தாந்திகம், ஊர்ச்சிதம், சிட்டபதம், அடவி, மூலம், இரசிதம், கோமளம்.

கம்பம்-ச-தாலம்பம், வெள்ளை, சாலாங்கம், கற்பரி முதலிய பாஷாணங்கள்.

கரகரணம் - ஙஙு - இணையாவினைக்கை (ஙஙு) காண்க. [தம்.

கரணம்-ச-மனம், புத்தி, அகங்காரம், சித்

கரணம்-கக-பவம், பாலவம், கவுலவம், தை, தூலை, கரசை, வணசை, பத்திரை, சகுனி, சதுர்ப்பாதம், நாகவம், கிமிஸ்துக்கினம்.

கருங்கை - உ - கொன்றுவாழ் தொழிலிற் கன்றியகை, வன்பணித் தொழிலிற்கன் றியகை.

கருணை-ஈ-(1)இடர்காத்தல், வேண்டியதை யுணர்தல், செய்தல், (2) காறு கருணை, காரீக் கருணை, புளிக்கருணை என்ற மூவ கைக் கருணைச் செடிகளின் கிழங்குகள்.

கருமம்-அ-ஆதானம், விசர்க்கம், பிரஷ்டம், நிஷேதம், சார்த்தவசநம், வியவகாரேக்ஷ ணம், தண்டம், சுத்தி.

கருமேந்திரியம்-இ-வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், கன்மேந்திரியம் என் பதுமிது.

கரும்பூமிக்குறிமை - சு - வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.

கருவி - இ - இசைக்கருவி (இ) காண்க.

கருவுளமைப்பு - சு - பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

கருவுள்வாதனை-இ-கருப்பாசயப்பை யுறுத் தல், சலம்பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிராணவாயு முறித்துத் தள்ளுதல், யோ னித்துவாரத்தானெருக்குண்ணல்.

கர்மம் - அ - வசியம், மோகனம், உச்சாட னம், தம்பனம், பேதனம், ஆக்ருஷ்ணம், வித்வேஷணம், மாரணம்.

கலம்பகவுறுப்பு - கஅ - புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்க ல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல்.

கலித்துறைவகை - உ - காப்பியக் கலித் துறை, கோவைக்கலித்துறை.

கலிப்பா - ஊ - ஒத்தாழிசைக்கலிப்பா, வெ ண்கலிப்பா, கொச்சகக்கலிப்பா.

கலிப்பாவினம்-ஊ-கலித்தாழிசை, கலித்து றை, கலிவிருத்தம்.

கலை - உ - சூரியகலை, சந்திரகலை. [கலை.

கலை - ஊ - தந்திரகலை, மந்திரகலை, உபதேச

கலை-இ-நிவர்த்திகலை, பிரதிட்டாகலை,வித்தி யாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை.

கலை - கசு - கன்மேந்திரியமைந்து, ஞானே ந்திரியமைந்து, மனம், அகங்காரம், புத்தி, வித்தை, வாக்கு, சத்தி.

கலைஞானம் - சுஉ - அக்கரவிலக்கணம், இ லிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிட சாத்திரம், தருமசாத்திரம், யோகசாத்தி ரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உரு வசாத்திரம், இதிகாசம், காவியம், அலங் காரம், மதுரபாடனம், நாடகம், நிருத் தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிரு தங்கம், தாளம், அத்திரபரீட்சை, கனக பரீட்சை, இரதபரீட்சை, கசபரீட்சை, அசுவ பரீட்சை, இரத்தின பரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராமவிலக்கணம், மல் யுத்தம், ஆகருடணம், உச்சாடணம், வித் துவேடணம், மதனசாத்திரம், மோக னம், வசீகரணம், இரசவாதம், காந்தரு வவாதம், பைபீலவாதம், கவுத்துகவா தம், தாதுவாதம், காருடம், நட்டம், மூட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகம னம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கி னித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத் தம்பம், கனனத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப்பிரயோகம்.

கலைத்தொழில் - அ - பண்ணல், பரிவட் டணை, ஆராய்தல், தைவரல், செலவு, வீளையாட்டு, கையூழ், குறும்போக்கு.

கலைவகை - இ - பிரதிட்டாகலை, நிவர்த்தி கலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை, வித் தியாகலை.

கல்யாணப்பொருத்தம் - ய - நட்சத்திரப் பொருத்தம், கணப்பொருத்தம், மகேந் திரப் பொருத்தம், ஸ்த்ரீதீர்க்கப்பொ ருத்தம், யோனிப்பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசியதிபதி பொருத் தம், வசியப்பொருத்தம், வேதைப்பொ ருத்தம், ரச்சுப்பொருத்தம்.

கல்யாணம் - இ - சொர்க்காவதானம், மந்த் ராபிஷேகம், மகாப்பிரஸ்தானம், கேவ லோத்பத்தி, பரிநிர்வாணம்.

கல்விவருமாறு - ச - கேள்வி, தானுணர் தல், பயிற்சி, வோதுவித்தல்.

கவி - ச-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். இவற்றுள் பொருளடிபாவணி முதலிய கொடுத்து மற்றொருவன் பாடுக வென்ற வுடனேபாடுவோனுசுகவி, பொருட்செல் வம், சொற்செல்வம், தொடை, தொடை விகற்பஞ் செறிய வுருவகமுதலிய வலங் காரத்தோடின்னேசைத்தா யமுதமுறப் பாடுவோன் மதுரகவி, மாலைமாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற் றிருக்கை, காதைகரப்பு கரந்துறை, தா சங்கொளல், வாவனஞாற்று, பாதம யக்கு, பாவின் புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூத்திரி, ஒழுத்தினம், ஒற்றெ

ழுத்துத் தீர்ந்தவொரு பொருட்பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, விஞவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தன மிவைமுதலிய மிறைக்கவிதெரிந்து பாடுவோன், சித்திரக்கவி, மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரீடை, இயல், இசை, கூத்து, பாசண்டத்துறை இனையன விரித்துப்பாடுவோன் வித்தாரகவி.

களித்தோனவிநயக்குணம் - அ - இரகசியத்தை மறையாமை, சொல்லுதலின்மை, கவிழ்தல், சோர்தல், தாழ்தல், தளர்தல், வீழ்ஞ்சொற்கருடைமை, களிகவர்ந்த கண்ணேக்குடைமை.

கற்பபேதம் ரு - ஆன்மகற்பம், சிவகற்பம், சத்திகற்பம்.

கற்பம் - உ - அகற்பம், சகற்பம்.
[கற்பம்.

கற்பம் - உ - பதுமகற்பம், சுவேதவராக

கற்பிதம் - உ-அத்தியாரோபம், அபவாதம்.

கற்பிற்கூற்றிற்குரியார் - கரு - நற்றாய்,கண்டோர், பாணன், கூத்தர், விறலி, பரத்தையர், அறிவர், தலைவன், தலைவி,பார்ப்பான்,பாகன்,பாங்கி,செவிலி.[எனப்படும்

கனி - ரு-கதலி, மா, பலா, இவைமுக்கனி

கனி - நி - பழம், (நி) காண்க.

கன்மமலகாரியம் - சு - ஒவ்வோர் தலங்களைப் பற்றியிருத்தல், நோயாய்க்கிடத்தல், புண்ணியபாவங்களைச் செய்தல், ஒவ்வொரு பற்றுக்களாய் நின்ற தொந்தனைகளை விடுத்தல், சர்வரையும் நிந்தித்தல், இகழ்ந்தாருடன் பொருந்தல்.

கன்மம் - ரு - ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம்.

கன்மம் - அ - ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷியம், நாமம், கோத்திரம், அந்தராயம் இவை காதிகள் எனவும், காதிகன்மங்களெனவும்படும்.

கன்னிகை - நி - அகலிகை, திரௌபதை,

கர

கரக்கைப்பாடினியம் - உ -பெருங்காக்கை பாடினியம், சிறுங்காக்கை பாடினியம்.

கர்ங்கூலக்கை - ரு - குவிகாங்கூலம்,முழுங்காங்கூலம், விரிகாங்கூலம்.

காஞ்சிபுரியின்றிருநாமங்கள் - கரு - கஞ்சிபிரளயசித்து, சிவபுரம், விண்டுமாபுரம், திரிமூர்த்திவாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகற்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம்.

காடுபடுதிரவியம் - நி - அரக்கு, இருள், தேன், மயிற்பீலி, நாவி.

காட்சி - சு - ஐயக்காட்சி, வாயிற்காட்சி, விகற்பக்காட்சி, அந்துவயக்காட்சி,வெதிரேகக்காட்சி, திருவுகாட்சி.

காட்சியளவைவகை - ஈ - வாயிற்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக்காட்சி.

காதலர் - ரு - புருடன், தோழன், மகன்.

காப்பியம் - நி - சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை,குண்டலகேசி,வளையாபதி. இவைஐங்காப்பியமெனவும்படும்.

காப்பியலக்கணம் - ருஅ - வாழ்த்து,தெய்வவணக்கம், உரைக்கும் பொருளுணர்தல், சிறந்த நாயகனைக் கோடல், நாட்டுவருணனை, நகரவருணனை, மலைச்சிறப்பு, கடல் வருணனை, பருவச்சிறப்பு, உதயாத்தமயவலங்காரம், கல்யாணம், முடிகவித்தல், பொழில் விளையாட்டு, நீர் விளையாட்டு, மதுபானம், மக்கட்பேறு, கலவியிற் களித்தல், புலவியிற் புலத்தல், மந்திரம், தூது போர்மேற்செலவு, போர்புரிதல், வெற்றி, வழிநடை, பவனி, களவொழுக்கம், கற்பொழுக்கம், ஆற்றுச்சிறப்பு, திணைவளம், சூதுவிளையாட்டு, உருத்திகூறல், காண்ட, சருக்காதிகளின் பாகுபாடு, பொருட்டுறை, மெய்ப்பாடு, நவரசம், வனப்பு, உத்தி, மதம்.

காப்பியவகை - உ - பெருங்காப்பியம், சிறுகாப்பியம்.
[நெறி, கௌடநெறி.

காப்பியவமைப்புவகை - உ - இவை தருப்ப

காமஅவிநயக்குணம் - எ - சுத்தமாகிய அலங்காரமுள்ள வடிவும், தொழில் காரிகையை நோக்குங்கடைக்கண்ணுடைமை, பற்களும் நகையுஞ் சந்திரனுநிலவும் போலத் தோன்றல், மலர்ந்தமுகமுடைமை, இசந்த சொற்களுடைமை.

காயசாதிபுருடர் - ஈ - பூமான், சந்தனன், பத்திரசன்னியன், பாஞ்சசாலின்னியன்.

காயம்-நி - கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம். கடுகுநீக்கி, மிளகு கூட்டியும், ஓமம் நீக்கி, சுக்குக்கூட்டி காயம் ஐந்தென்பாருமுளர். இவையே ஐங்காயம் எனச்சொல்லப்படும்.

காய்ச்சீர் - ⏑ – தோமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய். இவை வெண்பா உரிச்சீர் எனப்படும்.

காரகம் - நி - கருமேந்திரியம் (நி)காண்க. இவையே காரகபஞ்சகம் எனவும்படும்.

காரசாரப்பிறப்பு - க0 - சூடன், சீனம், பூநீறு, வஹாயலுப்பு, பச்சைக்கர்ப்பூரம், கல்லுப்பு, கறியுப்பு, பொன்னம்பர், மீனம்பர், கடல்நுரை என்பனவாம்.

காரணதத்துவம் - நி-தத்துவம்(நி)காண்க.

காரணதன்மாத்திரை - நி - தன்மாத்திரை (நி) காண்க.

காரணமூர்த்திகள் - நி - சதாசிவர், மகேசுவர், உருத்திரர், விட்டுணு, பிரமா.

காரணம் - ரூ - முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம், எனவே உலகிற்கு முதற்காரணம் மாயை, துணைக்காரணம் சிவசக்தி நிமித்தகாரணம் சிவபெருமான் இவற்றோடு அவாந்தர காரணமொன்றும் கொள்வர்; இவை காரணத்திரயம் எனவும்படும்.

காரம்-நி-வெங்காரம், சீனிக்காரம், சௌக்காரம், பொரிகாரம், நவச்சாரம்.

காருகத்தொழில் - உ-ஆடையாக்கல், சுமத்தல். [எதிர்காலம்.

காலம் - ரூ - இறந்தகாலம், நிகழ்காலம், காலம்-சூ-பருவத்தைக் காண்க.

காலம் - கஉ - சிறுபொழுதாறும், பெரும்பொழுது ஆறுமாம்.

காலவகை-உ-சூக்குமகாலம், தூலகாலம்.

காலவகை - ஊ - நிமிடம், காட்டை, கலை, முகூர்த்தம், சாமம், பகல், இரவு, நாள், வாரம், பக்கம், மாதம், இருது, அயனம், வருடம், சந்தியம்சம், சந்தி, யுகம், சதுர்யுகம், மகாயுகம், பிரளயம், கற்பம், பரார்த்தம், பரம்.

காவியகுணம்-ய-செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உயத்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி.

காவிரிப்பூம்பட்டினப்பெயர்கள் - கக - இந்திர விருத்தி, மூதூர், சம்பாபதி, பூம்புகார், பட்டினம், காகந்தி, முசுகுந்த நகரம், சோமம்பிரியம், சகலாகாரம், காகநதி, சங்கமுகநகர்.

காவிரிப்பூம்பட்டினப்பொய்கை - உ - சூரியகுண்டம், சோமகுண்டம்.

காவேரிக்குத் தென்கரையிலுள்ள சிவாலயங்கள்-கஉ-வாட்போக்கி, கடம்பந்துறை, திருப்பராய்த்துறை, கற்குடி, முக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, எறும்பியூர், நெடுங்களம், மேலைத் திருக்காட்டுப்பள்ளி, ஆலம்பொழில், திருப்பூந்துருத்தி, கண்டியூர், சோற்றுத்துறை, திருவேதிகுடி, தென்குடித்திட்டை, புள்ளமங்கை, சக்கிராப்பள்ளி, திருக்குருகாவூர், திருப்பாலைத்துறை, நல்லூர், ஆவூர்ப்பசுபதீச்சரம், திருச்சத்திமுற்றம், பட்டீச்சரம், திருப்பழையாறை வடதளி, திருவலஞ்சுழி, குடமூக்கு, குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக் குடந்தைக் காரோணம், திருநாகேச்சுரம், திருவழுந்தூர், தென்குரங்காடுதுறை, திருநீலக்குடி, வைகன் மாடக்கோயில், திருநல்லம், திருக்கோழம்பம், திருவாவடுதுறை, திருத்துருத்தி, திருவிடைமருதூர், திருமயிலாடுதுறை, வீழகர், திருப்பறியலூர், திருச்செம்பொன்பள்ளி, திருநனிபள்ளி, திருவலம்புரம், தலைச்சங்காடு, திருவாக்கூர்த்தான் றோன்றிமாடம், திருக்கடவூர், திருக்கடவூர் மயானம், திருவேட்டக்குடி, தெளிச்சேரி, தருமபுரம், திருநள்ளாறு, கோட்டாறு, திருவம்பர் பெருந் திருக்கோயில் திருவம்பர்மாகாளம், திருமீயச்சூர், திருமீயச்சூர் இளங்கோயில், திலதைப்பதி, திருப்பாம்புரம், சிறுகுடி, திருவீழிமிழலை, வன்னியூர், கருவிலி, பேணுபெருந்துறை, திருநறையூர், அரிசிற்கரைப்புத்தூர், சிவபுரம், கலையநல்லூர், சுருக்குடி, திருவாஞ்சியம், திருநன்னிலத்துப் பெருங்கோயில், திருக்கொண்டீச்சுரம், திருப்பனையூர், திருவிற்குடி, திருப்புகலூர், திருப்புகலூர் வர்த்தமானீச்சரம், திருக்கண்ணபுரம், திருப்பயற்றூர், திருச்செங்காடு, திருமருகல், திருச்சாத்தமங்கை அயவந்தி, நாகைக்காரோணம், சிக்கல், கீழ்வேளூர், தேவூர், திருவாரூர், பள்ளியின் முக்கூடல், திருவாரூரகநெறி, திருவிளமர், திருவாரூர் பரவையுண்மண்டளி, கரவீரம், பெருவேளூர், தலையாலங்காடு, குடவாயில், திருச்சேறை, நாலூர்மயானம், கடுவாய்க்கரைப் புத்தூர், இரும்பூளை, அரதைப்பெரும்பாழி, அவளிவணல்லூர், பரிதியப்பம், வெண்ணியூர், பூவனூர், பாதாளீச்சரம், திருக்களர், சிற்றேமம், திருவுசாத்தானம், இடும்பாவனம், கடிக்குளம், தண்டலை நீணெறி, கோட்டூர், வெண்டுறை, கொள்ளம்பூதூர், பேரெயில்,

கொள்ளிக்காடு, தெங்கூர், நெல்லிக்கா, நாட்டியத்தான்குடி, காரையல், கன்றுப்பூர், வலிவலம், கைச்சினம், கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு, அகத்தியான்பள்ளி, கோடிக்குழகூர்.

காவேரிக்கு வடகரையிலுள்ள சிவாலயங்கள் - கூ - தில்லை, திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை, திருநெல்லூர்ப்பெருமணம், திருமயேந்திரப்பள்ளி, திருமுல்லைவாயில், திருக்கலிக்காமூர், திருச்சாய்க்காடு, திருப்பல்லவனீச்சுரம், திருவெண்காடு, திருக்காட்டுப்பள்ளி, திருக்குருகாவூர், சீர்காழி, திருக்கோலக்கா, புள்ளிருக்குவேளூர், குருமாணக்குடி, திருக்கடைமுடி, திருநின்றியூர், திருப்புன்கூர், நீடூர், அன்னியூர், வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி, குறுக்கை, கருப்பறியலூர், குரக்குக்கா, வாழ்கொளிபுத்தூர், திருப்பழமண்ணிப்படிக்கரை, ஓமாம்புலியூர், காஞ்டுமுள்ளூர், திருநாரையூர், கடம்பூர், பந்தணைநல்லூர், கஞ்சனூர், திருக்கோடிக்கா, திருமங்கலக்குடி, திருப்பனந்தாள், திருவாய்ப்பாடி, திருச்சேய்ஞலூர், திருந்து தேவன்குடி, திருவியலூர், கொட்டையூர், இன்னம்பர், திருப்புறம்பயம், விஜயமங்கை, திருவைகாவூர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த்தானம், பெரும்புலியூர், திருமழபாடி, திருவழுவூர், காளூர், அன்பிலாலந்துறை, மாந்துறை, திருப்பாற்றுறை, திருவானைகா, திருப்பைஞ்ஞீலி, திருப்பாச்சிலாச்சிராமம், ஈங்கோய்மலை.

காற்றின்குணம்-இ-போக்கு, வரவு, நோய், கும்பித்தல், பரிசம்.

கி

கிரகசமித்து - கூ - எருக்கு, முருக்கு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அறுகு, தருப்பை. [கணம்.

கிரகணம் - உ - சூரியகிரகணம், சந்திரகிர

கிரகதானியம்-கூ-கோதுமை, பச்சையரிசி, துவரை, பச்சைப்பயிறு, கடலை, மொச்சை, எள், உளுந்து, கொள்ளு இவை முறையே கொள்க. [சனி.

கிரகத்துட்குறியர்-கூ-சந்திரன், செவ்வாய், கிரகத்துட்சத்திரியர் - உ - சூரியன், செவ்வாய்.

கிரகத்துட்சமர் - உ - சூரியன், சுக்கிரன்.

கிரகத்துட்பிராமணர் - உ - குரு, சுக்கிரன்.

கிரகத்துட்பெண் - கூ - சந்திரன், சுக்கிரன், இராகு.

கிரகத்துளலி - கூ - புதன், சனி, கேது.

கிரகத்துளாண் - கூ - சூரியன், செவ்வாய், குரு.

கிரகத்துள்நெடியர்-ஈ-புதன், குரு, இராகு, கேது.

கிரகத்துள்வேளாளர் - உ சனி, கேது.

கிரகத்துள்வைசியர் - உ - சந்திரன், புதன்,

கிரகபாஷைவகை - இ - ஆரியம், தெலுங்கு, தமிழ், வடுகு, அந்நியபாடை.

கிரகபுட்பங்கள் - கு - செந்தாமரை, வெள்ளாம்பல், சண்பகம், வெண்காந்தள், முல்லை, வெண்டாமரை, கருங்குவளை, மந்தாரை, செவ்வாம்பல், இவற்றை முறையே சூரியன் முதற் கேது இறுதியாகவுள்ள கிரகங்களுக்குக் கொள்க.

கிரகம் - கூ - ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவையே நவக்கிரகங்களெனவும், நவகோள்களெனவும், கூறப்படும்.

கிரகரத்தினம் - கு - மாணிக்கம், பவளம், புட்பராகம், நீலரத்தினம், வைடூரியம், முத்து, பச்சை, வைரம், கோமேதகம், இவை முறையே சூரியன், செவ்வாய், குரு, சனி, கேது, மதி, புதன், வெள்ளி, இராகு என்பவற்றிற்குக் கொள்க.

கிரகரன் குணம்-கூ-தும்மல்செய்வது, சினமூள்வது, வெம்மைவீளப்பது.

கிரகலோகம்-கு-தம்பாக்கு, ஈயம், செம்பு, பித்தளை, பொன், வெள்ளி, இரும்பு, கருங்கல், தூருக்கல்.

கிரகவகை - கூ - ஆண், பெண், அலி.

கிரகவடிவம்-கூ-நெடுமை, குறுமை, சமம்.

கிரகவாகனம் - கு - மயில், முத்துவிமானம், அன்னம், குதிரை, யானை, கருடன், காகம், ஆடு, சிங்கம்.

கிரககாரகம் - கஙி - சூரியன்-பிதுர்காரகன், சரீரகாரகனும், சந்திரன் - மாதுர்காரகன், செவ்வாய் சகோதரகாரகன், புதன் வித்தியாகாரகன், குரு - புத்திரகாரகன், சுக்கிரன் - களத்திரகாரகன், வாகனகாரகன், சனி - ஆயுட்காரகன், இனி குரு பிதா மககாரகன், யோககாரகன், போக

காரகன் கேது-மாதாமககாரகன், ஞான காரகன், மோக்ககாரகன், எனக்கொள்க.

கிரகாங்கங்கள் - கூ - செவ்வாய்க்குத் தலை, சுக்கிரனுக்குமுகம், புதனுக்குக் கழுத்து, சந்திரனுக்குத் தோள், சூரியனுக்கு மார்பு, குருவுக்கு வயிறு, சனிக்குத் தொடை, இராகுவிற்கு முழங்கால், கேது விற்கு உள்ளங்கால் ஆகுமென்ப.

கிரகாசனம்-கூ-வட்டவடிவம், சதுகரம், திரிகோணவடிவம், அம்பு, வடிவம், நீண்ட சதுரம், ஐங்கோணம், வில்வடிவம், கொடிவடிவம், முச்சில் வடிவு.

கிராணி - கூ - பித்தக்கிராணி, உட்டணவாதக்கிராணி, சிலேட்டுமவாதக் கிராணி, மேகக்கிராணி, மூலக்கிராணி, பாதக் கிராணி.

கிரியையவகை-சு-கிரியையிற் சரியை கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் இவற்றுள் கிரியையிற் சரியையாவது - சிவபூசைக்கு வேண்டும் உபகரணங்கள் செய்துகோடல், கிரியையிற் கிரியையாவது-சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச்சுத்தி முன்னுகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனையாம். கிரியையில் யோகமாவது - அகத்தே பூசை ஓமம் தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம். கிரியையில் ஞானமாவது - அவ்வந்தரியாகவுறைப்பின் கணிகழும் ஓரறிவுணர்வு.

கிருகத்தர்வகை - உ-உதாசீனன், சாதகன்.

கிளிகள் - கூ - பச்சைக்கிளி, வெள்ளைக் கிளி, பஞ்சவர்ணக்கிளி.

கீ

கீடபேதம் - சு - வாயுக்கீடம், அக்கினிக்கீடம், சோமக்கீடம், சங்கீரணக் கீடம், இவற்றின் விரி - சுஎ - வருமாறு வாயுக் கீடம் 18 அக்கினி கீடம் 24 சோமக்கீடம் 13 சங்கீரணக்கீடம் 12 இவற்றின் விவரம் தத்தம் வரியிற்காண்க.

கீடம் - அ - ஒணான், தவளை, அடலியீ, வீட்டுப்பல்லி, காட்டுமசகம், மக்ஷிகா, மலையெறும்பு, சிலந்தி.

கீதவரு - கூ - உக்கிரம், திருவம், ஆபேகம். திருவமென்பது திருமை யெனவும், ஆபோகமென்பது ஆயோமெனவுஞ் சொல்லப்படுதலுமுள. [கம், பிரகலை.

கீதவுறுப்பு - சு - உக்கிரம், திருவை, ஆபோ

கீழுலகம் - எ - அதலம், விதலம், சுதலம், தாதாதலம், இரசாதலம், மகாதலம், பாதலம்.

கீழ்நிலைநாள் - கூ - அசுவனி, உத்திரம், உத்திராடம், கார்த்திகை, பரணி, பூரம், பூராடம், மகம், மூலம்.

கீழ்நோக்குநாள் - கூ - உரோகணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதையம், உத்திரட்டாதி.

கு

குடிமக்கள் - கஅ - வண்ணன், நாவிதன், குயவன், தட்டான், கன்னன், கற்றச்சன். கொல்லன், தச்சன், எண்ணெய்வாணிகன் உப்புவாணிகன், இலைவாணிகன், பள்ளி, பூமாலைக்காரன், பறையன், கோவிற்குடியான், ஓச்சன், வலையன், பாணன்.

குட்டம் - அ - கருங்குட்டம், இரணக்குட்டம், வெண்குட்டம், செங்குட்டம், கிருமிகுட்டம், நீர்குட்டம், விரல்குறைகுட்டம், சொரிகுட்டம்.

குணம் - கூ - சத்துவம், இராசதம், தாமதம், அவையாவன - ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி யடக்கலென வெட்டுஞ் சத்துவம்; மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென வெட்டுமிராசதம், பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை இவைதாமதம்.

குணம் - அ - அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு இவற்றுள் முன்னைய நான்கும் ஆடூஉக் குணம். பின்னைய நான்கும் மகடூஉக் குணமென்றறிக.

குணம் - கஅ - பசி, தாகம், பயம், கோபம், சந்தோஷம், விருப்பம், நினைவு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், துன்பம், செயலின்மை.

குணம் - உசு - ரூபம், ரஸம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்தவம், சையோகம், விபாகம், பரத்வம், அபரத்

வம், குருத்வம், திரவத்வம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்னம், தருமம், அதருமம், சமஸ்காரம்.

குண்டத்தில் அக்கினி இலக்கணவகை - சு - வர்னம், சத்தம், கந்தம், சுவாலை, தூமம், ஈணம்.

குண்டத்தில் அக்கினி இலக்கணவிரி - இ0 - வர்னம், (கக) சப்தம், (இ) கந்தம், (கஈ) சுவாலை, (இ) தூமம், (ச) ஈணம், (கஉ).

குதிரைக்குரற்குணம் - இ - கடல், முகில், சங்கம், இடபம், முழவம்.

குதிரைச்சுழி - எ - சந்திரசுழி, அண்டாவர்த்தம், சௌவகம், காகாவர்த்தம், கேதாரி, தேசாவர்த்தம், பட்டடை.

குதிரைச்சுழியளவு - ஐ - சிரத்தில் இரண்டு, காதில் நான்கு, மார்பில் இரண்டு, நெற்றியினிடத்து ஒன்று, குளம்பி லொன்று மாகப் பத்துச்சுழிகள் குறையாதிருக்க வேண்டும்.

குதிரைநடை - இ - சுவரிதகம், ஆக்கிரந்திகம், வல்கிதம், இரேசிதம், புலிதம் இவற்றிற்கு முறையே மெல்லிய நடை விசை நடை இரு காற்றூக்கியாடி வருநடை, சுற்றியோடல், முழுவோட்டம்.

குதிரைநிறக்குற்றம் - அ - புலி, கரடி, கழுதை, செந்நாய், பூஞை, நரி, காகம், புகை யென்னுமிவை போன்ற நிறம்.

குதிரைநிறம் - எ - முத்து, சந்திரன், தாமரைப் பூந்தாது பொன், காயாமலர், செவ்வரத்தமலர், பசுங்கிளி யிவை போன்ற நிறமுடைமை நன்மை.

குதிரைப்பெயர்கள் - கஇ - மங்காளன், சாரங்கன், கங்காநீலன், மௌவழகன், கொங்காளன், சன்னசம்பான், குங்குமச் சோரன், கரியான், நீலன், சாரன், மள்ளான், உரஞ்சிவந்தான், நல்லான், பொல்லான், கருங்காற் சம்பான்.

குதிரையின்பிறப்பிடம் - எ - பிரமன் விழிப் புனல், வசுக்கள், பாற்கடல், அக்கினி, கருப்பை, கோட்டான் முட்டை, அமிர்தம்.

குதிரைவழுவிலக்கணம் - க - கொம்பு கன்னம், திருகுகன்னம், நஞ்சபாதம், கொள்ளிக்கால், வெள்ளிக்கண், சுடலைமுகம், காளகண்டம், அண்டமின்மை, அண்டப்பெருக்கம். [குமஞ்சான்.

குமஞ்சான் - உ - ஆண் குமஞ்சான், பெண் குய்யதராட்டகபுவனம் - அ - கயை, குருக்கேத்திரம், நாகலம், நகலம், விமலம், அட்டகாசம், மகேந்திரம், பீமேசம்.

குய்யாட்டகர் - அ - அமரேசன், பரீரிபாசன், நயிமிசன், புட்கரன், ஆஷாடி, டிண்டி, பராபூதி, நாகுலன். இவர்கள் அப்புதத்துவத்திலிருப்பவர்கள்.

குரங்கு - ச - சாதாரணக்குரங்கு, வாலில்லா குரங்கு, குட்டைவாற்குரங்கு, கருங்குரங்கு.

குரவர் - இ - அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன். இவ்ஐவருள் தேசிகனே நீக்கி, தாயெனக் கூறினுருமுளார். (உ-ம்) "அரசனுவாத்தியாயன் றூய்தந்தை தம்மு - ணிகரில் குரவரிவ ரைவரைத்-தேவரைப் போலத் தொழுதெழுக". எனவே இவர்களைத் தேவர்களைப்போலத் தொழல் வேண்டும் என்பது பெறப்பட்டது. இவர்கள் வணக்கத்திற்கு ஐங்குரவர் வணக்கம் என கூறுவது வழக்கம்.

குரவர் - அ - போதககுரு, வேதககுரு, தீக்ஷிதககுரு, காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரககுரு, விக்ஷிதகுரு.

குருவிந்தமாணிக்கநிறம் - அ - மஞ்சாடி, உலோத்திரம், செம்பருத்திப்பூ, முருக்கவலர், குன்றிமணி, முயலிரத்தம், சாதிலிங்கம், குக்கிற்கண்.

குவளை - உ - கருங்குவளை, செங்குவளை.

குழு - இ - அரசர்க்குழு (இ) காண்க. இவர்களே ஐங்குழு எனப்படும்.

குறள்வெண்பாவிற்கினம் - உ - குறள் வெண்டாழிசை, குறள் வெண் செந்துறை.

குறிக்கோள் - அ - இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம்.

குறிஞ்சியாழ்த்திறன் - ஈஉ - அந்தாளி, நட்டபாடை, மலகரி, விபஞ்சி, காந்தாரம், செருந்தி, கௌடி, உதயகிரி, பஞ்சுரம், பழம்பஞ்சுரம், மேகராகக் குறிஞ்சி, கேதாளி, குறுஞ்சி, கௌவாணம், பாடை, சூர்துங்கராகம், நாகம், மருள், பழந்தக்கராகம், திவ்வியவராடி, முதிர்ந்தவிந்தளம், அறுத்திர பஞ்சமம், தமிக்குச்சரி, அருட்புரி, நாராயணி, நட்டராகம், இராமக்கிரியை, வியாழக்குறிஞ்சி, பஞ்சமம், தக்கணுதி, சாவகக்குறிஞ்சி, ஆனந்தை.

குற்றம் - ஈ - காமம், வெகுளி, மயக்கம்.

குற்றம் - ஈ - அதிவியாப்தி, அவ்வியாப்தி, அசம்பவம்.

குற்றம் - பி - கொட்டாவி, நெட்டை, குறு குறுப்பு, கூன்பிடை, நட்டுவிழல்.
குற்றம் - பி - அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, வெகுளி. இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசமென்பர்.
குற்றம் - அ - ஞாணவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்திரம், அந்தராயம்.
குற்றம் - ஐ - குன்றக்கூறல், மிகபடக்கூறல், கூறியது கூறல், மாறு கொளக் கூறல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், வழுஉச் சொற் புணர்த்தல், மயங்க வைத்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை.
குற்றெழுத்து - பி - அ, இ, உ, எ, ஒ.
குன்மம் - அ - சூலகுன்மம், வாதகுன்மம், பித்தகுன்மம், வலிகுன்மம், சன்னிகுன்மம், சாத்தி குன்மம், வெய்ய குன்மம், எரி குன்மம்.

கூ

கூத்தின்விகற்பம் - கஙி - அலைப்பு, இலயம், உள்ளாளனம், கடகம், காரணம், குனிப்பு, கூடை, கொந்தளம், சிங்களம், தேசிகம், பவுரி, பிரமரி, மலைப்பு, மல், வீராட்டானம்.
கூத்து - உ - சாந்தி, விநோதம்.
கூத்துவகை - உ - தேசிகம், மார்க்கம். பின்னது வடுகு என்றுஞ் சொல்லப்படும்.
கூந்தற்பால் - பி - முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள். இவற்றுள், மயிரை உச்சியின் மூடித்தல் முடி, சுருட்டி முடித்தல் குழல், மயிரை முடிந்து விடுதல் தொங்கல், பின்னி விடுதல் பனிச்சை, பின்னே செருகல், சுருள்.
கூலம் - அ - நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, மூங்கினெல், "பதினெண் கூலமுமுழவர்க்கு மிருக" என்னூர் மதிவாணநாடகத் தமிழ் நூலாராகலின், பலசரக் கென்பாரு முளர்.
கூலம் - கசு - நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என்பர் கூத்த நூலாசிரியர்.
கூழைத்தொடை - பி - கூழைமோனை, கூழையியையு, கூழைஎதுகை, கூழை முரண், கூழைஅளபெடை.
கூறைவிகற்பம் - கஎ - கச்சை, விரிபம், கண்டை, பிடியல், வேதகம், புங்கம், பங்கம், கத்தியம், தூரியம், சிற்றில், நாகம், பாரி, பாளிதம், காம்பு, நேத்திரம், மயிரகம், வயிரியம்.

கே

கேடு - அ - விட்டில், தன்னரசு, யானை, மிகு மழை, மிகு காற்று, நட்டம், வேற்றரசு, கிளி.
கேத்திரம் - சு - உதயம், சு, எ, பத்தாம் இராசிகள். [இந் நான்குங் கேட்டல்.
கேள்வி - சு - அறம், பொருள், இன்பம், வீடு.
கேள்வி - பி - அறம், பொருள், இன்பம், வீடு இந் நாற்கேள்வியோடிவற்றின் வழி நிற்றல்.

கை

கை - சஅ - பதாகை, திரிபதாகை, கத்தரிக்கை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, கமல கோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெங்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதமுகம், மகரமுகம், வலம்புரி, அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம்.
கைத்தொழில்-பி-எண்ணல், எழுதல், இலகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.
கைவட்டணை - சு-அபவேட்டிதம், உபவேட்டிதம், வியாவர்த்திதம், பரிவர்த்திதம்.

கோ

கோங்குநாட்டுச்சிவாலயங்கள் - எ- திருவெஞ்சமாக்கூடல், திருக்கருவூர்த்திருவானிலை, திருப்பாண்டிக் கொடுமுடி, திருச்செங்குன்றூர், திருநணா, திருமுருகன்பூண்டி, திருப்புக்கொளியூர்.

கொச்சகக்கலிப்பா - இ- தரவுகொச்சகக்கலிப்பா, தரவினைக்கொச்சகக்கலிப்பா, சிஃறழிசைக் கொச்சகக்கலிப்பா,பஃறழிசைக்கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

கொடுந்தமிழ்நாடு - கஉ- பொங்காநாடு,ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு,சீதநாடு, பூழிநாடு, மலையமாநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு இதனை "தென் பாண்டிகுட்டம் குடம் கற்காவேண்பூழி, பன்றியரு வாவதன் வடக்கு- நன்றுய, சீதமலாடு புனனாடு செந்தமிழ்சேர், ஏத மில் பன்னிருநாட்டெண்" என்பதா னறிக.

கொடை-எ-வழக்கத்திற் கொடுத்தல், உரிமையிற்கொடுத்தல், அச்சத்திற் கொடுத்தல், பாவனையிற்கொடுத்தல், உவகையிற் கொடுத்தல், வெகுளியிற் கொடுத்தல், அவலத்திற் கொடுத்தல். உதாரணம் வருமாறு:— மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் என்பது வழக்கத்திற் கொடுத்தல், மகனுக்கரசுகொடுத்தான் என்பது உரிமையிற்கொடுத்தல், அரசற் குத் திறைகொடுத்தா னென்பது அச்சத் திற்கொடுத்தல், தந்தை தாய்க்குத்திதி கொடுத்தானென்பது பாவனையிற் கொ டுத்தல், அவனுக்குப் பரிசுகொடுத்தா னென்பது உவகையிற்கொடுத்தல், அவ னுக்குத் தண்டனை கொடுத்தான் என் பது வெகுளியிற் கொடுத்தல், வாய்க் கரிசியிட்டான் என்பது அவலத்திற் கொடுத்தல்.

கொடைப்பயன்-உ- காமியம், நிட்காமியம்.

கொடைமாட்சி - சு- சம்வித்தத்தம், பாரி தோஷிகம், சிரீதத்தம்,இலஜ் ஜாதத்தம், பயதத்தம், பாபதத்தம்.

கொடைவகை-ரு- வரைவின்றியாவர்க்குங் கொடுத்தல், புகழ்வோர்க்குக் கொடுத்தல், இரப்போர்க்குக் கொடுத்தல்.

கோ

கோசம் - ரு- பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம். இவைகோசத்திரயமாம்.

கோசம் - இ - அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், அவையாவன-உடல் அன்னமய கோசம், கருமேந்திரியமும் பிராணனும் பிராண மயகோசம். கருமேந்திரியமும் மனமும் மனோமயகோசம், ஞானேந்திரியமும், பு த்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தை யானந்தமய கோசம்.

கோடல்வகை-ய-கேளாதேற்றல், கேட்டே யேற்றல்,ஏலாதேற்றல்,ஈவோனேற்றல், உயர்ந்தோனேற்றல்,இழிந்தோனேற்றல் ஒப்போ னேற்றல், உணர்வின் றேற்றல், விருப்பா யேற்றல், வெறுப்பா யேற்றல். இவற்றிற்கு முறையே உதாரணம்-ஆவிற் குநீர்விட்டான், வறியார்க்கீந்தான், மா ணாக்கனுக்கறிவு கொடுத்தான், தனக்குச் சோறிட்டான், அரனுக்குக் கண்ணலர் கொடுத்தானரி, அரிக்குச் சக்கரங்கொடு த்தானரன், சோழனுக்குவிருந்திட்டான் சேரன், சோற்றிற்கு நெய்விட்டான். மா ணாக்கற்குக் கசையடி கொடுத்தா னரிரியன், கள்ளனுக்குக் கசையடி கொடுத்தா னரசன்.

கோடிவகை--ரு- கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்பி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பாத்தி,செம்பொத்தி, பணிப்பொத்தி,

கோவாங்குமணிநிறம் - சு - செங்கல், குராமலர், கோவை, மஞ்சள்.

கோவைவகை-இ-மேகலை, காஞ்சி,கலாபம், பருமம், விரிசிகை. மேகலை, எண்கோவையும், காஞ்சி எழுகோவையும், கலாபம், பதினாறு கோவையும், பருமம் பதினெட்டுக் கோவையும், விரிசிகை மூப்பத்திரண்டு கோவையுமாம். (கோவை-மணிச்சரம்.)

கௌ

கௌடநெறி-ய-செறிவு,தெளிவு, சமாதி இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தவில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி யென்னும் பத்துச் குணங்களுக்கும் மாறுக வருவனவாம். இது கௌடதேசக் கவிஞ

சால்விரும்பிக்கைக் கொள்ளப்பட்டநெறி.
கௌடம் - பி - சுத்தகௌடம், கானகுப்சம், சாரசுவதம், உற்கலம், மைதிலை.
கௌலியம்-பி-கோசலம், கோமயம், பால், தயிர், நெய், இவற்றுடன் கோரோசனம் சேர, ஷட்கௌலியம்.

ச

சகலர்வகை - கூ - அதிபக்குவர், மந்த பக்குவர், அபக்குவர். இவர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையுடையவர்கள். இவர்களுக்குக் காரண சரீரம், புரியஷ்டக சரீரம், தூல சரீரம் என மூவகைச் சரீரங்களுண்டு.
சகளமூர்த்திகள் - பி - ஈசானன், ஈசுவரன், பிரமன், சிவன், சதாசிவன்.
சக்கிரவர்த்திகள்-சு- அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன், இவர்கள் மற்றெருருவனைப் பணியாது தரணியாண்டோர்.
சக்தி-கூ-உத்சாகசக்தி, பிரபுசக்தி, மந்திரசக்தி. இவை அரசனுக்கு யுத்தகாலத்தில் இருக்க வேண்டியவை. இவற்றுள் உத்சாக சக்தி-மனோவேகம், பிரபுசக்தி-தனமுதலியன, மந்திரசக்தி-ஆலோசனை.
சங்கமர்வகை - உ-பட்டாதிகாரர்கள், சரமூர்த்திகள்.
சங்கிரணகீடம் - கஉ- துங்கிரசம், கலகஸ்தம், பகம், பாஹுடகம், கோஷ்டகாகி, கிருமிகரம், மண்டலபுஷ்பகம், காளநாபம், சாஷபகம், மத்குளி, சம்பளி, அக்னிகீடம்.
சங்கு - ச-இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம்.
சஞ்சிதம் - கூ- ஔபநிதிகம், யாதிதம், ஔத்தமர்ணிகம். (பழையவரவு)
சடக்குணப்பண்பு-பி- பல்வகைவடிவு, இருகந்தம், ஐவண்ணம், அறுசுவை, எட்டூறு.
சடுவிதவாதம் -சு-அருத்தவாதம், உபாசநாபரவாதம், துதிபரவாதம், உபசாரிகவாதம், சகுணசாதிரிசவாதம், சாதிவியத்திவாதம்.
சட்குணம் - சு- (1) சருவஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, சுவதந்திரத்துவம், (2) ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்.
சதி-சை- சாரிகை, சதுரிகை, சகஞ்சாதிகை, ஆதிகை. இவைசதுர்விதசதிஎனப்படும்.
சதுரங்கம் - அங்கங்காண்க.
சதுர்விததானங்கள் - சை-அபயம், ஆகாரம், சாஸ்திரம், ஔஷதம்.
சத்ததீவு - எ- தீவு (எ) காண்க.
சத்தம் - பி- தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி. இவையே சத்தத்துக்கைகந்து காரணம்.
சத்தவிடங்கத்தலம் - எ- திருவாரூர், நாகப்பட்டினம், திருநள்ளாறு, திருமறைக்காடு, திருக்காரூயல், திருவாய்மூர், திருக்குவளை.
சத்தாவத்தை - எ அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷ ஞானம், அபரோக்ஷ ஞானம், துக்கநிவர்த்தி, ஆனந்தம். இவை சீவனது எழுவகைப்பட்ட அவஸ்தை.
சத்தி - கூ- இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, இவற்றுள் இச்சாசத்தியுயிர் கருணேசம், ஞானசத்தி கருமங்களையறிந்தூட்டல், கிரியாசத்தி உலகங்களாக்கல்.
சத்தி -பி- சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி; அவையாவன:- உயிர்க்கொளியாகநிற்பது சிற்சத்தி, பிராணன் முதலியவாயுவாக நிற்பது பராசத்தி, பஞ்சபூதமாகநிற்பது இச்சாசத்தி, ஐம்பொறியுணர்ச்சியாக நிற்பது ஞானசத்தி, மற்றை வினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி.
சத்தி-கை- (1) வாமை, ஜேஷ்டை, ரௌத்ரீ, காளி, கலவிகாரணி, பலவிகாரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி, மனோன்மனி. (2) தீப்தை, சூக்ஷமை, ருஜை, பத்மை, விபூத்தியை, விமலை, அமோகை, வித்யுதை சர்வதோமுக்யை. இவர்களே நவசத்திகளாம்.
சத்தி - அ- ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி, ஆரிணி, ரோதயித்திரி, ஜநி.
சத்தி - அ- சயை, விசயை, சயந்தி, அபராசிதை, சித்தை, ரத்தை, அலம்புசை, உற்பலை.
சத்தி - அ- வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகாரணி, பெலவிகாரணி, பெலப்பிரதமனி, சர்வபூததமனி.
சத்தி-அ- ஆரிணி, ஜநி, ரோதயித்திரி என்னும் மூன்று பரிக்கிரகசத்திகளும், ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம்,

சத்தியோசாதம் என்னும் பஞ்சசத்தி களுமாம்.

சத்திகள் - சஉ- அதிக்கிராந்த வித்துகபரா சத்தி, அந்திக்கிராந்த வித்துகபராசத்தி, பராசத்தி,திரோதானசத்தி. இச்சாசத்தி, ஞானசத்தி,கிரியாசத்தி,சிவசத்தி, வித்து சத்தி, மனேன்மனி, மகேசுவரி, உமை, திருவாணி, ஆரணி, செனனி, உரோத யித்திரி, வித்தாரை, சுதாரை, போதினி, ஆப்பியாயினி,தீத்தை,சூக்குமை,சேயை, வியூதி, விமலை, அமோகை, வித்துதை, சருவதோமுகி,பத்திரை,பலப்பிரமதனி, பலவிகரணி, கணம்பிகை, காளி, துர்க் கை, திருமால், சர்வபூததமனி, இரௌத் திரி, வாமை.

சத்திநிபாதம் - சு- மந்ததரம், மந்தம், தீவிர தரம், தீவிரம். இவை முறையே தீக்கை பெற்றவுடன் உரோமஞ் சிலிர்த்தலும், சரீரம், நடுங்குதலும், மூர்ச்சித்தலும், சரீரம் விழுதலுங் குறிகளாமென்று சித் தாந்த சாராவளியார் கூறுவர். அன்றியும் பதியின்றிரு நாமங் கேட்டமாத்திரையே இவை நிகழப்பெறும்.

சத்தியோசாத கலை - அ - வித்தி, இருதி, சித்தி, இலக்குமி, மேதா, காந்தி, ஸ்வதி, திருதி. இவற்றிற்கு முறையே வலப் பாதம், இடப்பாதம், வலதுகை, இடது கை, நாசி, சிரசு, வலத்தோள், இடத் தோள்(எட்டிடங்களும்)நியசித்தற்குரிய.

சத்து - கூ - வியாவகாரிக சத்து, பிராதிபா லிக சத்து, பாரமார்த்திக சத்து, இவை சத்துத்திரய மெனப்படும்.

சத்துவம் - ஔ - மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண் ணீர்வார்த்தல்,நடுக்கமடுத்தல்,வியத்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும் பல், சாக்காடு, குரற்சிதைவு எனப்படும்.

சந்தசு -எ- காயத்திரி, பிருகத்தி, உட்டிணு க்குசகதி, திருட்டிப்பு,அநுட்டிப்பு,பக்தி.

சந்தபேதம் - உசு - உத்தம், அதியுத்தம், மத் திமம், சலஜ்ஜை, நன்னிலை, காயத்திரி, உண்டி, அநுட்டிப்பு, பகுதி, பந்தி, வனுப்பு, சயதி, அதிசயதி, சக்குவரி, அதிசக்குவரி, ஆடி, அதியாடி, திருதி, அதிதிருதி, கிருதி, பிரகிருதி, விக்குருதி, சங்கிருதி, அபிகிருதி, உற்கிருதி.

சந்தானம்-ச-தீபசந்தானம், வாயுசந்தானம், தாரா சந்தானம், பிபீலிகா சந்தானம்.

சந்தாஞசாரியர் - ச - (கயிலாய பரம்பரை) மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரி யர், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர். [வு, துய்த்தல்.

சந்தி-டு-முகம், பிரதிமுகம், கருப்பம், விஜ

சந்தியாவந்தனம் -சு- பிராதக்கால சந்தி, மத்தியானசந்தி, சாயங்காலசந்தி, அர்த்த யாமசந்தி. இவற்றுள் சமய தீக்ஷிதருக்குப் பிராதக்கால சந்தியொன்றே யுரியது, வி சேட தீக்ஷிதருக்கு அதனோடு சாயங்கால சந்தியென்னுமிரண்டு முரியன, நிரு வாண தீக்ஷிதருக்கு அவ் விரண்டினோடு மத்தியான சந்தியுங்கூட்டி மூன்று முரியன, ஆசாரியருக்கு நான்கு சந்திகளு முரியன.

சந்திரன் - கூ - ஆதிதைவிக சந்திரன், ஆதி யாத்மிகசந்திரன்,ஆதிபௌதிகசந்திரன்.

சந்நியாசிகள் - கூ - தபசுவிகள், விவிதிஷா கள், வித்துவான்கள்.

சபை-டு-இரத்தினசபை, கனகசபை, வெள் ளிச்சபை, தாமிர சபை, சித்திர சபை. திருவாலங்காட்டில் இரத்தின சபை, சிதம்பரத்தில் கனக சபை, மதுரையில் வெள்ளிச் சபை, திருநெல்வேலியில் தாமிரசபை, திருக்குற்றாலத்திற் சித்திர சபையுமுள.

சமயகுரவர் - ச - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந் தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள்.

சமயபதார்த்தம் - அ - பதி, பசு, பாசம், பதிகிருத்தியம், பசுகருமம், பசுபோகம், முத்திசாதனம், முத்தி.

சமயம் -சு- சைவம், வைஷ்ணவம், சாத்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம். இவை வைதிக மதம் என்க.

சமயம் - சு - கபிலமதம், கணாதமதம், பதஞ் சலி மதம், அக்ஷபாத மதம், வியாசமதம், ஜைமினி மதம். இவை வேதாந்த மதம் எனப்படும்.

சமயம் -சு- பௌத்தம், ஜைனம், பைரவம், காளாமுகம், உலோகாயதம், சூனியவா தம். இவை புறச்சமயமென்பர் வைதிகர்.

சமயம் -சு- வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம்,சைவம். அன்றியும் புறச் சமயமாவன — சு - உலகாயதம், புத்தம்,சமணம், மீமாஞ்சை, பாஞ்ச ராத் திரம், பாட்டாசாரியம், இது சைவர் கொள்கை.

சமயவகை - கூச - உலகாயதம், சௌத்தி ராந்திகம், யோகாசாரம், மாத்திமிகம்,

வைபாடிகம், நிகண்டாவாதம், ஆசீவகம், பட்டாசாரியம், பிரபாகரம், சத்தப்பிரம வாதம், மாயாவாதம், பாற்கரீயம், நீரிச் சுர சாங்கியம், சிவ சாங்கியம், விஷ்ணு சாங்கியம், பாஞ்சராத்திரம், தருக்கம், மீமாஞ்சை, சைவம், பாசுபதம், மாவிர தம், காளாமுகம், வாமம், வைரவம், பா டாண வாதசைவம், நிமித்தகாரணபரிணா மவாதசைவம், சுத்தசைவம், பேதவாத சைவம், சங்கிராந்தவாதசைவம், அவிகார வாதசைவம், ஐக்கியவாதம், சிவமத வா தம், கிரீடாப்பிரமவாதம்.

சமஸ்காரம் - ம - ஆவாஹனம், ஸ்தாபனம், சாந்நித்யம், நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை காட்டல், பாததீர்த்தம் சமர்ப்பித்தல், ஆசமனம் சமர்ப்பித்தல், அர்க்கிய தீர்த்தம் சமர்ப்பித்தல், புஷ்ப பஞ் சமர்ப்பித்தல்.

சமாதி - சு - புறத்திருசியாது வித்தம், புறச் சத்தாநுவித்தம், புறநிருவிகற்பம், அகத் திருசியாநு வித்தம், அகச்சத்தாநுவித் தம், அகநிருவிகற்பம். இவையே சட் சமாதிகளாம்.

சமாதி - சு - தத்வலய சமாதி, சவிகற்ப சமாதி, நிருவிகற்பசமாதி, சஞ்சாரசமாதி, ஆரூடசமாதி, மவுனசமாதி. (இந்திரிய மடக்கி ஒரு வழியிருத்தல்.)

சம்பந்தம் -ச- தேகசம்பந்தம், ஆன்ம சம்பந் தம், விடயசம்பந்தம், காரணசம்பந்தம்.

சம்பந்தம் -சு- பரசம்பந்தம், மகாசம்பந்தம், அந்தராள சம்பந்தம், திவ்விய சம்பந்தம், திவ்வியா திவ்விய சம்பந்தம், அதிவ்விய சம்பந்தம் என்பன. அவற்றுள், சிவனுக் கும் அணுசதாசிவர்க்கும் நிகழும் சம்பந் தம் பரசம்பந்தம், அநந்த தேவர்க்கும் ஸ்ரீ கண்டர்க்கும் நிகழும் சம்பந்தம் மகா சம் பந்தம், ஸ்ரீ கண்டர்க்கும் தேவர்க்கும் நிகழும் சம்பந்தம் அந்தராள சம்பந்தம், தேவர்கட்கும் இருடிகட்கும் நிகழும் சம் பந்தம் திவ்விய சம்பந்தம், முனிவர்க்கும் மனுஷர்க்கும் நிகழும்சம்பந்தம்திவ்வியா திவ்விய சம்பந்தம், குருவுக்குஞ் சீடனுக் கும் நிகழும் சம்பந்தம் அதிவ்விய சம்பந் தம். இவற்றையேஅறுவகைச் சம்பந்தம் எனவும், சம்பந்தம் ஆறு எனவும் கூறு வர். பரசம்பந்தத்தை நீக்கிப் பஞ்ச சம் பந்த மென்றுங் கூறப்படும்.

சம்பாஷணை - உ - வினு, விடை.

சயனம் - டு - இலவம்பஞ்சி, செம்பஞ்சி, வெண்பஞ்சி, மயிர், அன்னத்தூவி, இவற் றுற் செய்யப்பட்ட வமனி. இவையே பஞ்ச சயனம்.

சரகரணம் - எ - பவம், பாலவம், கௌல வம், தைதுலம், கரசை, வணிசை, விட்டி.

சரணம் - ச - அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணம்.

சரநட்சத்திரம் - ரு - சோதி, புநர்பூசம், திரு வோணம், இம்மூன்றுடன், அவிட்டம், சதையம் என்னும் இரண்டையுங் கூட்டி ஐந்தெனக் கூறுவாருமுளர். இவையே இயங்கு நட்சத்திரம் எனவும் சரநாளென வும் கூறப்படும். இச் சரநட்சத்திரத்தில் யானை குதிரை ஏறல், கொள்ளுதல், ஆறு குளங்கரை கட்டுதல், யாத்திரைபோதல், மரத்தோப்பு, பூந்தோட்டம் வைத்தல் என்னும் இவை கொள்ளப்படும்.

சரமாதம் -ச- சித்திரை, ஆடி, ஐப்பசி, தை.

சராசி - ச - மேஷம், கர்க்கடகம், துலாம், மகரம் என்பனவாம்.

சரியைவகை -ச- சரியையிற்சரியை, சரியை யிற்கிரியை, சரியையில் யோகம், சரியை யில் ஞானம், இவற்றுள் சரியையிற் சரி யையாவது திருக்கோயிலிற் றிருவலகி டல், திருமெழுக்கிடல், திருவிளக்கிடல், தூபமேற்றல், நந்தவனம் வைத்தல், புட் பங்கொய்தல், மாலை, இண்டை, கண்ணி, தார்முதலிய மாலை சமைத்தல், விதானங் கட்டல், தோரண நாட்டல், யாத்திரை செய்தல், நதிமூழ்கல், திருவீதிப் பிரதக் கிணஞ் செய்தல், தோத்திரம் பாடல், புல்லுச் செதுக்குதல், திருக்குள முதலி யன சுத்திசெய்த லாதியவாம். சரியை யிற் கிரியையாவது சந்திரசேகரர், இட பாரூடர், உமாமகேசர், சபாபதி, கல்யா ணசுந்தரர், பிச்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீர பத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுவர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்க ரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ் கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்கிண மூர்த்தி, இலிங்கோற்பவர் என்னுமிரு பத்தைந்து மூர்த்தங்களு ளொன்றனை யாதல் விநாயகர் முதலிய ஆவரணமூர்த் திகளு ளொன்றனை யாதல் வழிபடுத லாம், சரியையில் யோகமாவது இருத யத்தில் உருத்திரக் கடவுளோத் தியானஞ் செய்தலாம், சரியையில் ஞானமாவது அத்தியான பாவனையினல் ஓதுபவ

வுணர்வு நிகழ்தலாம்,
சரீரம்-சு-தூலசரீரம், சூக்குமசரீரம், காரண சரீரம். சரீரத்திரயமென்பது மிதுவே.
சர்வசாரமூலிகை - சு - கற்றுழை, நீராரை, சிறுசின்னி, பற்பாடகம், வெள்ளறுகு, வல்லாரை, பெருங்கரந்தை, விஷ்ணு காந்தி, சிவனார்வேம்பு. [சவுக்கியம்.
சவுக்யம்-உ- இகலோக சவுக்யம், பரலோக

ச ரா

சாங்கியம் - சு - யோகசாங்கியம், ஞான சாங்கியம், நிரீஸ்வர சாங்கியம், இச்சா சாங்கியம், புருட சாங்கியம், பேதசாங்கியம், இவற்றினையே அறுவகைச் சாங்கியமெனவும் சாங்கியமாறு எனவும் கூறுவர்.
சாதனம்-சு- நித்யா நித்யவஸ்து விவேகம், இகபர புத்ரார்த்த பல போகவிராகம், சமாதி சட்கசம்பத்தி, முமூக்ஷுத்வம்.
சாதாக்கியம்-டு-சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கர்மசாதாக்கியம், சிவ சாதாக்கியம் பராசத்தியிலும், அமூர்த்தி சாதாக்கியம் ஆதிசத்தியிலும், மூர்த்தி சாதாக்கியம் இச்சா சத்தியிலும், கர்த்திருசாதாக்கியம் ஞானசத்தியிலும், கருமசாதாக்கியம் கிரியா சத்தியிலும் தோன்றும்.
சாதாரணநட்சத்திரம் - சு - கார்த்திகை விசாகம், பூராடம், அவிட்டம், சதயம், பூரட்டாதி. [மகாட்டிரம்.
சாதி-சு-ஆந்திரம், கன்னடம், திராவிடம்,
சாதி - கக - குண்டகர், கோளகர், சவர்ணர் நகூத்திரசீவகர், அம்பட்டர், கும்பகாரர், பாரசவர், நிடாதர், போசர், நாவிதர், சூதர், கூவிரர், மாகிட்டியர், விசன்மர், உக்கிரர், சூலிக்கியர், மணிகாரர், புளிந்தர், கூத்தர்,மிலேச்சர், மாகதர், அத்தர், தெளட்டியந்தர், கடகாரர், மாலாசிதர், உற்பலர், சண்டாளர், பாகுதாயர், வைதேகர், பலதர், அயோகவர், சத்திரியர், ஆவந்தியர், மல்லர், சுதன்மர்,மைத்திரர், பலகண்டர், இரசகர்,புட்பதர், தக்ககர், சுவபசர், குகபர், கரணர், சருமகாரர், பாரகர், வேணுகர், கனகர், அத்திகர், வர்த்தனசாலிகர், கருமகாரர், தண்டக போலர், மார்க்கவர், சல்லர், வந்திகர், வாடதானர், கண்டகர், கற்பர், சவுண்டிகர், சாத்துவதர், தசியவர், பைரவர், ஆசிரயிகர், கரண்டர், சாமுத்திரர், மாலாகாரர், கைவர்த்தர், நீலகாரர், வருணகரர், பிங்களர், நர்த்தகர், மாதங்கர், நடர், திரமிளர், கர்மசீவியர், நீலாதிவர்ணவிக்கிரேதர், சுவபாகர், குக்குடர், வேணர், புலகசர், ஆவிரதர், ஆபீரர், திக்குவணர், கசர் சைசாந்திரியர், மைத்திரேயர், பார்க்கவர், காருவாரர், பாண்டுசோபாகர், ஆகிண்டிகர், சோபாகர், அந்தியாவசாயிகர், இப்பஞ்சமசாதியாரின், வரலாறுவன நான்கு வருணத்தவருள்ளும் உயர்குலத்தாணும் இழிகுலப் பெண்ணுங்கூடிப் பிறந்தவர் அநுலோமர். இழிகுலத்தாணும் உயர்குலப்பெண்ணுங் கூடிப்பிறந்தவர் பிரதிலோமர். அநுலோமத்தாணுக்கும் பிரதிலோமப்பெண்ணுக்கும் பிறந்தவர் அந்தராளர். பிரதிலோமத்தாணுக்கும் அநுலோமப் பெண்ணுக்கும் பிறந்தவர் விராத்தியர். பார்ப்பனக்கன்னி தன் குலத்துச் சோரராயகளோடு கூடிப் பிறந்தவர் சூண்டகர். பார்ப்பனவிதவை அங்ஙனங்கூடிப்பிறந்தவர் கோளகர்பிராமணர். விவாகமுறைப்படி கூத்திரிய கன்னிகையுடன் சேரப்பிறந்தவர் சவர்ணர்; இவர் சவர்னர் எனவும் தெலுங்கர் எனவும் வழங்கப்படுவர். பிராமணன் கூத்திரியகுல மகளிரைச்சோரத்தாற் சேரப்பிறந்தவர் நக்கத்திரசீவகர்; இவர் யாவரும் விரும்புங் குடியா ராதலின், வீழ்குடியார் எனவும், காணியாளர் எனவும், சிற்றரசராகலின் வேளாண் சாமந்தர் எனவும் பெயர் பெறுவர், பிராமணன் வைசியகுலக் கன்னியை விவாகஞ் செய்து பிறந்தவர் அம்பட்டர், வைசிய குலப் பெண்களைச் சோரத்தாற் கூடிப் பிறந்தவர் கும்பகாரர்; இவர்க்கு நாவிதர், குயவர் எனவும் பெயர். பிராமணன் சூத்திர குலக்கன்னியை விவாகஞ்செய்து பிறந்தவர் பாரசவர். சோரத்தாற் கூடிப் பிறந்தவர் நிடாதர். இவர்க்குச் சித்தர் வேட்டைக்காரர் எனவும் பெயர், கூத்திரியகன்னியும் விதவையும் தங்குலத்துச் சோரபுருடரைக் கூடிப் பெற்றவர் முறையே போசர், நாவிதர் எனப்படுவர், கூத்திரியன் பார்ப்பன மகளிரை விவாகமுறையாகவுஞ் சோரத்தாணுஞ் சேரப்பிறந்தவர் முறையே சூதர் கூவிரர் எனப்படுவர்; அரசர் சபையில் நின்றே

திதி-கடு-பிரதமை-க, துவிதியை-உ, திரிதியை-ரு, சதுர்த்தி-சு, பஞ்சமி-டு, சட்டி-சு, சத்தமி-எ, அட்டமி-அ, நவமி-கு, தசமி-கo, ஏகாதசி-கக, துவாதசி-கஉ, திரயோதசி-கரு, சதுர்த்தசி-கசு, இவற்றிற் சுக்கில பக்கத்திற் சுத்தமென்றுங் கிருட்டின பக்கத்திற் பகுளமென்றுங் கூட்டுக; பதினைந்தாந் திதியாவது சுக்கிலபக்கத்திற்குப் பௌர்ணமி. கிருட்டிண பக்கத்திற்கு அமாவாசியை. சுக்கிலபக்ஷம் சினிவாலி என்றும், கிருஷ்ணபக்ஷம் குரு என்றும் பெயர் பெறும். இவற்றுள் பிரதமை, சஷ்டி, ஏகாதசி மூன்றும் நந்தையெனப் படும். துவிதியை, சப்தமி, துவாதசி மூன்றும் பத்திரையெனப்படும். திரிதியை, அஷ்டமி, திரயோதசி மூன்றும் சயையெனப்படும். சதுர்த்தி, நவமி, சதுர்தசி மூன்றும் இருத்தை யெனப்படும். பஞ்சமி, தசமி, பௌர்ணமி மூன்றும் பூரணை யெனப்படும். இவற்றுள் நந்தையும், பத்திரையும் சுபகாரியங்கள் செய்ய ஆகா. [டம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.

திரவிடம் டு - திரவிடம், ஆந்திரம், கன்னடம், மலையாளம், இவை பஞ்சதிரவியமெனப்படும்.

திரவியம் - டு - நிலம், இலவங்கம், அதிமதுரம், கோவ்டம், சண்பகமொட்டு இவை பஞ்சதிரவியமெனப்படும்.

திரவியம்-டு-மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம், கடல்படுதிரவியம்; இவற்றுள் மலைபடுதிரவியம்- மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம். காடுபடுதிரவியம்- இறல் தேன், அரக்கு, மயிற்பீலி, ஈரவி, நாடுபடுதிரவியம் - செங்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர். நகர்படுதிரவியம்-அரசன், பித்தன், மந்தி, யானை, கண்ணுடி. கடல்படுதிரவியம் - உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை.

திரிதராவில்லாவிருக்கை - கூ-பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், கணிப்புடம், மண்டிலம், ஏகபாதம்.

திருட்டாந்தப்போலி - கஅ - சாத்திய விகலன், சாதகவிகலன், உபயவிகலன், ஆச்சயவிகலன், அவ்யாப்தியபிதானன், விபரீத வியாத்தியபிதானன், சாதனவியாவிருத்தன், சாத்யாவியாவிருத்தன், உபயவியா விருத்தன், ஆச்சயவிரத்தீனன், வியாவிருத்தியபிதானன், விபரீத வியாப்திய பிதானன், சந்தித்தசாத்தியன், சந்தித்தசாதனன், சந்தித்தவுபயன், சந்தித்தஆச்சயன், சந்தித்தசாத்யாவியாவிருத்தன், சந்தித்தசாதனவியா விருத்தன்.

திருமாலவதாரம்-ஐ - மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி. சிவசத்தியாகியும், சிவனடியவருட்சிறந்த வராயும் விளங்கும் நந்திருமால் இவற்றை யெடுத்தற்குக் காரணம் யாதெனில் கூறுதும். வேதத்தைத் திருடிக் கடலிலொளித்த சோமுகாசுரனெனு மிராக்கதனைக் கொல்ல மச்சாவதாரம்; கடலைக் சுடையும் போது மந்தரமலையைத் தாங்கக் கூர்மாவதாரம், பூமியைப் பாயாக விரணியாக்கன் சுருட்டினதை விரிக்கவு மவனைக்கொல்லவும் வராகாவதாரம்; இப் பழி வாங்கச் சருவ தேவ வணக்கம் விலக்கினவவன்றம்பி இரணியகசிபுனைக் கொல்ல நரசிங்காவதாரம்; இந் நான்கவதாரத்துக்குந் தந்தை தாயரில்லை. மாவலியை யடக்கக் காசிபனுந் திதியுந் தந்தை தாயாக வாமனவதாரம். அரசரால் ரூழ்த்தப்பட்ட பார்ப்பார் நிமித்த மவ்வரசரைக் கொல்லச் சமதக்கினியு மிரேணுகையுந் தந்தை தாயாகப் பரசுராமாவதாரம். இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத் தசரதனும் கௌசலையுந் தந்தை தாயாக விராமாவதாரம். பிரலம்பன் முதற் பலவிராக்கதரைக் கொல்ல வசுதேவனுந் தேவகியு மூரோகணியுந் தந்தை தாயாகப் பலபத்ராமாவதாரம். பாரதநடத்த வசுதேவனுந் தேவகியுந் தந்தை தாயாகக் கண்ணனவதாரம். அறத்தை நிலைபெறச் செய்யக் கற்கியவதாரம்.

திருமாலவதாரம் - கடு - சனகன், சனந்தனன், சனாதன், சனற்குமாரன், நாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

திருமாலாடல் - ச - அல்லியம், குடம், மல், மராக்கால், அஞ்சன வண்ணனுடிய வாடலுள் என்ற சிலப்பதிகாரச் செய்யுளில், அஞ்சன வண்ணனுடிய வாடல் பத்துள் என்று அடியார்க்கு நல்லாரும், அங்ஙனே அரும் பதவுரை ஆசிரியரும் உரைத்தலால் பத்தென்று விளங்குகின்றது. அவற்றை வந்துழிக் காண்க.

திருமாலாயுதம் - கி - சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

திறம் - கஉ - நேர்திறம், வனேய வந்துழிக் காண்க. இத்திறத்தைச் சாடவமென்பர் வடநூலார்.

திறவகை - ச - தாரப்பண்டிறம், பையுள், காஞ்சி, படுமலை இவை விரியான் நூற்று மூன்றாகும்.



தீ - ஈ - உயிரிலுள்ள தீ, உதரத்துள்ள தீ, சினத்திலெழுந் தீ. அன்றியும், வேதாக்கினி - ஈ - காருகபத்தியம், தக்கணாக்கினியம், ஆகவனீயம்.

தீக்கணத்தின்பெயர் - ச - அந்தரகணம், வாயுகணம், சூரியகணம், அக்கினிகணம்.

தீக்கணப்பயன் - ச - அந்தரகணம் வேறு தேசத்திற் செலுத்தலும், வாயு கணம் செல்வத்தைப் போக்கலும், சூரியகணம் சூனியஞ் செய்தலும் தீக்கணம் நோய் செய்தலுமாகிய பயனைத் தரும்.

தீக்குணம் - ஐ - பொய் சொல்லல், கோட் சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனில் சொல்லல் இந்நான்கும் வாக்கின் தீக்குணம், களவாடல் போதல், வறிதே தொழில் செயல், கொலை செயல் இம் மூன்றும் காயத் தீக்குணம், கொலை நினைக்கை, காமப்பற்று, ஆசை இம் மூன்றும் மனத் தீக்குணம்.

தீர்த்தவகை - நிஈ - கங்கை, யமுனை, சரச்சுவதி, கௌதமை, நருமதை, காவிரி, பொருநை, குமரி, ஆன்பொருந்தம், மணி, கன்றிலை, மாணிக்கங்கை, வைகை, கோதாவரி, பிரமதீர்த்தம், குருக்ஷேத்தம், கோகன்னம், சித்தவாசம், மதுவனம், சோமம், விசிவதீர்த்தம், விரசை, மகாகாளம், கனகலம், வைதரணி, சித்தி நதி, வியாததீர்த்தம், பிருது, துங்கம், கவசிகம், கனகம், நந்தை, தேசாச்சுவ

மேதம், மாதுங்கம், சுவாமிதீர்த்தம், சுழுமுனை, சிந்து, புண்டரீகம், குபேரதுங்கம், பஞ்சநதம், பாவநாசம், சொன்னவதி, பிலக்காவதானம், காலசற்பி, மானசவாவி, கேதாரம், அசுவம், கிட்டிணவேணி, மாகாளம், ஒக்கிசபிருட்டம், தன்மம், புருடை, சந்திரம், சாளக்கிராமம். இவையே விதக்கப்பட்ட புண்ணிய தீர்த்தங்களாம்.

தீவு - எ - நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு இவ்வெழுவகைப் பொருளு, மவ்வத்தீவின் மிக்கனவாகையாலிவற்றுப் பெயர் பெற்றன.

து

துரககதி - இ - மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

துவர் - ம - நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்தளிர்.

துறவறத்தின்றுறை - ச - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னு மிவைகளே. நாகம் தோலுரித்தாற் போல அகப் பற்றும் புறப்பற்று மறுத்து இந்திரிய வசமறுத்து, முற்றத் துறத்தலையுடைய துறவறத்துறை யெனச் சித்தாந்த மெய்ந்நூலாசன்றி சிலப்பதிகார மூர்காண் காதைக்கணு முரைத்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

தூ

தூக்கு - எ - செந்தூக்கு, மதலைத்தூக்கு, தூணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு. இவற்றுள் ஒரு சீர் செந்தூக்கு, இருசீர் மதலைத்தூக்கு, மூச்சீர் தூணிபுத்தூக்கு, நாற்சீர் கோயிற்றூக்கு, ஐஞ்சீர் நிவப்புத்தூக்கு, அறுசீர் கழாற்றூக்கு, எழுசீர் நெடுந்தூக்கு எனக் கொள்க.

தூபம் - இ - குந்துருக்கம், சூடன், அகில், சந்தனம், கருஞ்சீதாரி.

தெ

தெங்கிக்குரியகால் - உச - கீற்று, கடிசரி, மண்டலம், வர்த்தனை, கரணம், ஆலீடம், குஞ்சிப்பு, கட்டுப்புரியும், களியம், உள்ளாளம், கட்டுதல், கம்பித்தல், ஊர்தல், நடுக்கல், வாங்குதல், அப்புதல், அணுக்குதல், வாசிப்பு, குத்துதல், நெளிதல், மாறுக்கால், இட்டுப்புகுதல், சுற்றிவாங்குதல், உடற்புரிவு.

தேயம் - கசு - அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னுடம், காசம், காசிமீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மாடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

தேவராடல் - கக - கொடுகொட்டி, பாண்டரங்கம், குடை, துடி, அல்லியம், மல், குடம், பாவை, மரக்கால், பேடி, கடையம். இவற்றுள் கொடுகொட்டியாவது - தேவர் புரமெரியவேண்டுதலால் வடவை யெரியைத் தலையிலேயுடைய பெரியவம்பு ஏவல் கேட்டவளவிலே அப்புரத்திலுணர் வெந்து விழுந்த வென்பலிக்குவையாகிய பாரதியரங்கத்திலே யுமா பிராட்டியார் ஒரு கூற்றினராய் நின்று பாணிகூக்குச் சிசென்னும் தாளங்களைச் செலுத்தத் தேவர்யாரினும் மிக்கவனும் எம்மையாட்கொள்வான் புதுச்சங்கிதியொரு பெருங் கோயிலுழை வீற்றிருந் தருளு மெந்தை கந்தவேளின் றந்தையாய் விளங்கும் இறைவன் சயானந்தத்தாற்கை கொட்டி நின்று ஆடியதாம். திரி புரந் தீ மடுத்தெரியக் கண்டும் இரங்காது கை கொட்டி நின்று ஆடுதலிற் கொடுமையுடைத் தாதலேக்கிக் கொடுகொட்டி யென்று பெயர் கூறுப. கொடுங்கொட்டி யென்பது கொடுகொட்டி யென விகாரமாயிற்றென்பர் ஆசிரியர் நச்சினார்கினியரும் இதற் குறுப்பு நான்கு என்னே? "கொட்டி கொடுவிடையோ ணடிற்றதற் குறுப் - பொட்டிய நான்கா மெனல்" என்றாராகலின.

உ - பாண்டரங்கமாவது - வாஞ்ஞரா கிய தேரில் நான்மறைக் கடும்பரி பூட்டி நெடுப்புற மறைத்து வார் துகின் முடித் துக் கூர் முட்பிடித்துத் தேர்முன்னின்ற திசைமுகன் பாரதியைப் பிரிந்த பரிவா னழுங்க வதுதபுப்பான் பாரதி வடிவாய இறைவன் அவற்கு மலநீற்றும் வெண் ணீற்றை யணிந்து ஆடியதாம். அது ஆ றங்கமுடைத்து என்னே? பாண்டரங்க முக்கணனுடிற்றதற்குறுப் - பாய்ந்தன வாரூமெனல் என்றாகலின்.

ஊ - குடையாவது - எதிரிலாதகதிரை வேறரித்த முருகவேள் அவுணர் விடுத்த படைக்கலங்களையெல்லாம் போரிற்காற் றது போகட, அவர் வருத்தமுற்றாக அவ்வளவிலே பெருமானர் தங்குடையை முன்னே சாய்த்து அதுவே ஒருமுக வெ ழினியாக நின்றுடி யருளியதாம். அது நான்கங்க முடைத்து என்னே? "அறு முகத்தோடல் குடை மற்றதற்குப் பெருமுறுப்பு நான்காமெனல்" என்றாகலின்.

ஙு - துடியாவது - புதுச் சங்கிதிக் கதி ரைநாயகக் கடவுள் கரியகடலி னடுவு நின்ற சூரபன்மனது வேற்றரு வாகிய வஞ்சத்தை யறிந்து அதனடு வண்திரை யே அரங்கமாநின்று துடிகொட்டியாடி யருளியதாம். அஃது ஐந்தங்க முடைத்து. என்னே? "துடியாடல்வேன் முருகனுட லதனுக் - கொடியா வுறுப் போசைந் தாம்" என்றாகலின்.

ஙி - அல்லியமாவது - அஞ்சன வண்ண னைய கண்ணபிரான் கஞ்சன் வஞ்சத்தின் வந்த குவலயாபீடம் என்னும் யானையின் கோட்டை ஒசித்தற்கு நின்றுடியதாம். இதனை அலிப்பேடென்றும், வைணவ நிலையென்றுங் கூறுவாருமுளர். அஃதா றங்கமுடைத்து என்னே? "அல்லியமாய வனுடிற்றதற் குறுப்புச் - சொல்லுபவரூ மெனல்" என்றாகலின்.

ஙூ - மல்லாவது - வாணசுரனை வெல்லு தற்கு மல்லனுய்ச் சென்ற நெடுமால் சேர்ந்தாரிற் சென்று அறைகூவி உடற் கரித்தெழுந்து அவனைச் சேர்ந்த வள விலே சடங்காகப் பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்தற் காடியதாம். அஃது ஐந்தங்க முடைத்து என்னே? "நெடியவ னுடிற்று மல்லாடன் மல்லிற்- கொடியா வுறுப்போ சைந்து" என்றாகலின்.

எ - குடமாவது - வாணசுரனுனவன் காம குமாரனுகிய அநிருத்தனென்பவ னைத் தன் மகள் உஷை காரணமாகச் சிறைவைத்தலின் அவனை மீட்டற்கெண் ணிய கண்ணன் அவ்வசுர நகரமாகிய சோர்வென்னும் புரவீதிக்குட் சென்று, பஞ்சலோகங்களானும் மண்ணனுஞ்செய் யப்பட்ட குடங்கொண்டாடிய கூத்தாம். இஃது விநோதக் கூத்தாறினுளொன்று. இதற்குறுப்பு வைந்தாம். என்னே? "குடத்தாடல் குன்றெடுத்தோ னுடலத னுக்கடைக்குப - வைந்துறுப் பாய்ந்து" என்றாகலின்.

அ - பாவையாவது - அவுணர்போர்க் கோலத்தோடு மோகித்து விழும்படி கொல்லிப்பாவை வடிவாய்ச்செய்யோளா கிய திருமகளால் ஆடப்பட்டதாம். இதற் குறுப்பிரண்டு. என்னே? "பாவை திரு மகளாடிற்ற தற்குறுப் - போவாம லென் றுடனே யொன்று" என்றாகலின்.

கூ - மரக்காலாவது - மாயவளாகிய தூர்க்காதேவி போர்முகத்தில் அவுணர் செய்யும் வஞ்சத்தைப் பொறுதவளாய் அவர்மாயமெலாம் நீங்கமரக்கால்கொண் டாடியதாம். மாயையாவது அசுரர் அவனை வேறல் கருதிப் பாம்பு, தேள் முதலிய வாய்ப்புகுந்தமை. இதற்குறுப்பு நான்கு. என்னே? "மாயவளாடன் மரக் காலதற்குறுப்பு - நாமவலகையிற் சொலுங் காலுன்கு" என்றாகலின்.

ஙி - பேடியாவது - காமன் தனதுமகன் அநிருத்தனைச்சிறைமீட்டற்காகவாணன கரிடைச்சென்று ஆண்மைத் தன்மையிற் றிரிந்த விகாரமும் தாடியும், மூலமுத லிய, பெண்ணுறுப்புப் பலவுமுடைய ஆண்பேட் டுருக்கொண்டு ஆடியதாம். அதனை "சுரியற் றுடிமருள்படு பூங்குழற் பவளற்செவ்வாய்த் தவளவொண்ணகை, நீலிலமனந்தோன் மகன் முன்னுடிய - பேடிக் கோலத்துப்பேடு காண்குநரும், என மணிமேகலையினும், "ஆண்மை திரிந்த பெண்மைகோலத்துக்காமனுடிய பேடியாடலும்" எனச்சிலப்பதிகாரத்தும் கூறப்பட்டதனுனறிக. இதற்கு உறுப்பு நான்கு. என்னே? "காமன தாடல்பே டாடலதற்குறும் - வாய்வையினுராயி னுன்கு" என்றாகலின்.

ஙக - கடையமாவது - முற் கூறியவா

ணன் கரத்துவடக்கு வாயிற்கணுள தாய வயவிடத்து நின்று இந்திராணி யாடிய தாம். அதற் குறப்பு ஆறுகும். என்னே? கடைய மயிராணியாடிற்ற தனுக்கடைய வுறப்புக்களாறு" என்றாகலின்.

தேவர் - கு-பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன். இவர் பஞ்சதேவ தையும், பஞ்சகருத்தாக்களுமாம்.

தேவர்வகை - கூ - ஆதித்தர் - கஉ, அச்சு வினிகள் - உ, உருத்திரர் - கக, வசுக்கள் - அ இவற்றை யவ்வவ்வரியிற்காண்க.

தேவேந்திரர் - கச - அரி, விபச்சித்து, சுசாந்தி, சிவி, விபு, மனோசவன், புரந்த ரன், மாவலி, அற்புதன், சாந்தி, விரு டன், இருதுதாமன், திவற்பதி, சுசி, என் பவர்களாம். இவருள் விபுவைவசு, இரவி யெனவும், புரந்தரனே ஓசஸ்வியெனவும் கூறுப.

தொ

தொகை - சு - வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவ மைத்தொகை, உம்மைத்தொகை, அன் மொழித்தொகை.

தொகைநிலை-அ-இயமம், நியமம், ஆதனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி.

தொழில்-கூ-ஆக்கல், காத்தல், அழித்தல்.

தொழில் - கு-படைத்தல், காத்தல், அழித் தல், மறைத்தல், அருளல். இவையே சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம். இவையே இறைவன் செய் யும் பஞ்சகிருத்தியங்களாம்.

தொழில் - சு - உழவு, தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

தொழில்-சு - அந்தணரறுதொழில்-ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், அரசரறுதொழில்-ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், பொருதல். வைசியரறுதொ ழில்-ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல். சூத்திர ரறுதொழில் - முதன் மூவர்க்கேவல்செ யல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத் தல், குயிலுவத்தொழில் செய்தல், காருக வினைகளாக்கல். இவற்றுட்குயிலுவத் தொழில்களாவன:—தோற் கருவிகளைக் கொட்டலுந் துளைக் கருவிகளை யூதலு மாம். காருகவினைகளாவன:— பட்டு நூலையும், பருத்திநூலையுங் கொண்டா டையாக்கலுஞ்சுமத்தலு முழத்தலுமாம்.

தோ

தோற்கருவிகள் - கூக - பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவலயம், மொந்தை, முரசு, கண்டுவிடுதூம்பு, நிசா ளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகு ணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், ஈழிகைப்பறை, துடி, பெரும்பறை. இவை அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணைமைமுழவு, நாண் முழவு, காலைமுழவு, எனவெழுவகைப் படும்.

தோற்றம் - உ - சரம், அசரம். இவற்றுட் சரம்நடையுள்ளன, அசரம் நடையில்லன.

தோற்றம்-ச-பை, முட்டை, நிலம், வியர்வை.

ந

நகர்பதிதிரவியம் - கு - கண்ணுடி, பித்தன், கருங்குரங்கு, யானை, வேந்தன்.

நட்சத்திரம் - உஎ - அசுவினி, பரணி, கார்த் திகை, உரோகணி, மிருகசீரிடம், திரு வாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோ ணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி; இவற்றுள் ஒவ்வொன்றும் முறையே மேடமுதற் பன்னிரண்டிராசிகளிற் பதின் மூன்று பாகமு மிருபது கலையுங்கொண்டவிடம். இவற்றுள் இடவோட்டுநட்சத்திரம் - கஉ - ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, மகம், பூரம், உத்திரம், விசாகம், அனு ஷம், கேட்டை, திருவோணம், அவிட் டம், சதயம். ஏனைய பதினைந்தும் வல வோட்டுநட்சத்திரம்.

நதி - எ - கங்கை, யமுனை, சரச்சுவதி, நரு மதை, காவேரி, குமரி, கோதாவரி.

இவையே சத்ததீர்த்த மெனப்படும்.

நதி - கக - மேற்சொல்லிய வேழின்மேல் சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரி, கிட்டினி யென்று கூட்டுக.

நரகம் - எ - அள்ளல், இரௌரவம், கும்பீபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

நரகவகை - உஅ - கோரம், கீழ்க்கோரம், அதிகோரம், கோரதரம், கோரரூபம், தாளதரம் பயாநகம், காளராத்திரி, பயோற்கடம், சண்டம், மகாசண்டம், சண்டகோலாலம், சண்டதரம், சரோருகம், சலசவதி, வீமம், வீமவீடணம், கரளம், விகரளம், குலிசம், மூக்கோணம், ஐந்துகோணம், தீர்க்கதரம், பரிவர்த்துளம், மகாரௌரவம், அதிதமம், அதிசீதம், அதிவெப்பம்.

நரகவட்டம்-எ-தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை, அவையாவன - இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

நரம்பு - எ - இசைகாண்க.

நரம்பு-ச-இணை, கிளை, பகை, நட்பு, இவற்றுள் இணையி ரண்டுநரம்பு, கிளையைந்து நரம்பு, பகையாறு மூன்றுமாம். நட்பு நான்கு நரம்பினையுடைத்தாய் நிற்கு மென்ப.

நற்கணப்பயன்-ச-நிலக்கணம், பெருக்கஞ் செய்தல்,சந்திரகணம் வாழ்நாள் தருதல், நீர்க்கணம் தீர்த்தியைத்தருதல், இயமானன் கணஞ் செல்வத்தைத்தருதலாம்.

நற்கணப்பெயர் - ச - நிலன், நீர், மதி, இயமானன்.

நற்குணம் - ம - மெய்யுரை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயன்படுசொல், இந்நான்கும் வாக்கினற்குணம், கோயில் வலம்வரல், தவம்புரிதல், தானஞ்செயல், இம் மூன்றுங் காயநற்குணம். அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று இம் மூன்றும் மனநற்குணம்.

நன்னுட்டமைதி - சு - செல்வம், விளையுள், பல்வளம், செங்கோல், குறும்பின்மை, பிணியின்மை.

நா

நாகம் - அ - வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், இவற்றைக் கடவுட்பாம் பென்ப. இவை முறையே கிழக்கு முதலெண்டிக்கிற் பூமியைத்தாங்குவ தன்றி நடுவேயுள்ள சேடனென்னு நாகமும் பூமியைத்தாங்காநிற்கும். இந்நவ நாகமுங் காசிபப் பிரமாவுக்கு மவன் மனைவிகள் பதின்மூவருட் கத்துருவைக்கும் பிறந்தன.

நாடகத்தரம்பையர்-ச-உருப்பசி, மேனகை, அரம்பை, திலோர்த்தமை.

நாடகநூலின்கூறுபாடு - உ- வேத்தியல், பொதுவியல்.

நாடி - ம- சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி; அவையாவன-சுழிமுனை யாதாரமாறினு மூடுருவி நிற்பது; இடை பிங்கலை யிரண்டுங் கத்திரிகைக் கோல்போற் பின்னி நிற்பன; காந்தாரி நாபியிற்றோன்றிச் சத்தமேழுக்கு மேழு நாடியாய்க் கண்டத்துறுவது; அத்தி சிகுவை யிரண்டும் பத்து நாடியுற்றுக் கண்ணினிற்பன; அலம்புடை புருடனி ரண்டுஞ் செவினூற்றிருபது நரம்புற்றிருப்பன; குரு நாபியுறைந்துகுய்யம்பற்றி நிற்பது; சங்கினி உபத்தத்தைப்பற்றியிருப்பது.

நாடுபடுதிரவியம் - இ-செந்நெல், செவ்விளநீர், சிறுபயறு, கரும்பு, வாழை.

நாட்டமைதி - சு - செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை.

நாட்டுக்குற்றம் - எ- தொட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

நாட்டுக்குற்றம் - அ- விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை,மிகுமழை, மிகுகாற்று, கிள்ளை, நட்டம்.

நாமகளமிசமாய கடைச் சங்கப்புலவர்கள்-நிக- நக்கீரர், பரணர், கபிலர், மாமூலனார், பல்லாடர், சீத்தலைச்சாத்தனார், மருத்துவன்நல்லமோதரனார், நாகன்றேவனார், அரிசிற்கிழார், பொன்முடியார், கோதமனார் நத்தத்தனார், மூலையனூர்ச் சிறுகருந் தும்பியார், ஆசிரியர் நல்லந்துவனார், கீரந்தையார், சிறுமேதாவியார், நல்கூர்வேள்வியார், தொடித்தலை விழுத்தண்டினார், வெள்ளிவீதியார், மாங்குடி மருதனார், எரிச்சலூர் மலாடனார், போக்

கியார், மோசிகீரனார் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், மதுரைத் தமிழ் நாயனார், பாரதம்பாடிய பெருந்தேவனார், உருத்திரசன்மகண்ணனார், பெருஞ்சித்தனார், நரிவெருத்தலையார், மதுரைத்தமிழாசிரியர், செங்குன்றூர்க்கிழார், மதுரையறுவைவாணிகர், இளவேட்டனார், கவிசாகரப்பெருந்தேவனார், மதுரைப் பெருமருதனார், கோவூர்க்கிழார், உறையூர் முதுகூற்றனார், இழிகட் பெருங்கண்ணனார், செயிர்க்காவிரியார் மானார், சாத்தனார், செயலூர்க் கொடுங்கண்ணனார், வண்ணக்கஞ்சாத்தனார், களத்தூர்க்கிழார், நச்சமனார், அக்காரக்கனி நச்சனார், நப்பாலத்தனார், குலபதி நாயனார், தேனீக் குடிக்கீரனார், கொடிஞாழன் மாணிபூதனார், கவுணியனார், மதுரைப்பாலாசிரியனார், ஆலங்குடிவங்கனார், நாற்பத்தொன்பதின்மரே சங்கப் புலவரென்பது தொல்லோர் கருத்துந் துணிபுமாம்.

நி

நிதி- உ- சங்கநிதி, பதும நிதி.

நியமம்-ய-தவம், மனமுவந்திருத்தல், கடவுளுண்டென்னும் விசுவாசம், பாவத்துக்குப் பயந்து தேடிய பொருளைச் சற்பாத்திரமாயுள்ளவருக்குக் கொடுத்தல், தன்னின் மூத்தோரை வழிபடுதல், உயிர்க்குறுதிபயக்கு முண்மை நூல்களைக்கேட்டல், குலம் செல்வம் அதிகாரம் முதலியவைகளினுலே கருவம் இன்றியடங்கியொழுகுதல், தக்கனவுந் தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம்.

நிருத்தக்கை-கூo- சதுரச்சிரம், உத்துவீதம், தலமுவம், சுவத்திகம், விப்பிரகீர்ணம், அருத்தரேசிதம், அராளகடமுகம், ஆவித்தவத்திரம், சூசீமுகம், இரேசிதம், உத்தானவஞ்சிதம், பல்லவம், நிதம்பம், கசதந்தம், இலதை, கரிக்கை, பக்கவஞ்சிதம், பக்கப்பிரத்தியோகம், கருடபக்கம், தண்டபக்கம், ஊர்த்துவமண்டலி, பக்கமண்டலி, உரோமமண்டலி, சுவார்த்தமண்டலி, முட்டிகச்சுவத்திகம், நளனீபதும கோசிகம், அலபதுமம், உற்பணம், இலளிதை, வலிகை இவை சுத்தானந்தப் பிரகாச பரதநூலிற் காணப்பட்டன.

நிருத்தம் - கக - தேவராடல் காண்க.

நிர்வாணதீக்கை - சு- சத்யோ நிர்வாணம், அசத்யோ நிர்வாணம், லோகதர்மிணி, சிவதர்மிணி.

நிலம்-ச-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

நிலம்-டு-குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்.

நிலம் - எ- ச, ஞ, க, ம, ப, த, ந, யென்னு மெழுவகைப்பட்ட வெழுத்தடியாகப் பிறக்கும் குரன் முதலாயவேழுமாம்.

நிலை - ச- பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம்; இவைநான்கும் விற்றொடுத்தம்பினை யெய்வார்க்குரிய நிலை, இவற்றிலொருகாலினின் றொருகான் முடக்கல் பைசாசநிலை. இருகாலும் பக்கல்வளைய மண்டலித்தலை மண்டலநிலை. வலக்கான் மண்டலித் திடக்கான் முந்துறலை யாலீடநிலை. வலக்கான் முந்துற்றிடக்கான் மண்டலித்தலை பிரத்தியாலீடநிலை.

நிலை - சு- வைணவம், சமநிலை, வைசாதம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம்.

நின்றூடல் - கூ- அல்லியம், கொடிகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், என்னை? "அல்லியங்கொட்டி குடை குடம் பாண்டரங்க - மல்லுடனின்றூடலாறு" என்றூராகலின்.

நீ

நீர்நிலைவகை - ஈசு- இலஞ்சி, பண்ணை, எல்லை, குண்டம், அலந்தை, பொய்கை, வலயம், சுனை, சிறை, பட்டம், உடுவை, பயம்பு, படுகர், குட்டம், தாங்கல், கோட்டகம், எரி, ஏரி, உவளகம், மடு, ஓடை, படு, தடம், வாவி, தடாகம், ஆவி, சூழி, கிடங்கு, சலதரம், கேணி, பணை, கயம், பல்வலம், நளினி, இலந்தை, மூழி, குழி குளம்.

நீலமணிச்சாதி-ச-வெள்ளை, பச்சை, சிவப்பு, கருமை.

நூ

நூல்-ஈ- முதனூல், வழிநூல், சார்புநூல். இவற்றுளொருவன் முன்கண்டுரைத்ததே முதனூல், முதனூல் வழியே

விகற்பித்துரைத்த நூலே வழிநூல், அவ்விருநூற்பொருட் கூட்டித்திரிபுவே றுடையநூலே சார்புநூல்.

நூல்யாப்பு - ச- தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்ப்பு.

நூற்பயன் - ச- அறம், பொருள், இன்பம், வீடு.

ப

பகை - கூ- பைசாசர், உலகு, உடல்.

பகை - சூ- காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

பகைநரம்பு-ச-அதிர்வு, ஆர்ப்பு,கூடம்,செம்பகை இவற்றுள் செம்பகையாவதுதாழ்ந்தவிசை என்னுல் இன்பமின்றி யிசைத்தல்,ஆர்ப்பாவது மாத்திரை யிறந்தசுருதி என்னுல் ஒங்கவிசைத்தல், அதிர்வாவது நரம்பைச் சிதறவுந்தல், கூடமாவது இசை நிறவாதது, என்னின் தன்பகையாகிய ஆறுநரம்பினிசையிற் குன்றித் தன் னே ணை ச மழுங்கலெனக்கொள்க. இதனை "இன்னிசை வழியதன்றி யிசைத்தல் செம்பகையதாகுஞ், சொன்ன மாத்திரையினுங்க விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே, மன்னிய விசைவராது மழுங்குதல் கூடமாகு, நன்னுதால் சிதறவுந்தலதிர்வென நாட்டினரே," என்று பஞ்சபாரதீயம் கூறியதனுற் கொள்க.

பக்கம் - உ- சுக்கிலம், கிருட்டினம்.

பக்குவர் - கூ- கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பசாசக்கை-கூ- அகஸிலேப்பசாசம், முகஸிலேபசாசம், உதிர்ஸிலேப்பசாசம்.

பசு - டு- நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை.

பஞ்சபரமேட்டிகள் - டு- அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள்.

பஞ்சபூதத்தலம் - டு- திருக்காஞ்சி, திருவானைகா, திருவண்ணுமலை, திருக்காளத்தி, ஸ்ரீ சிதம்பரம்.

பஞ்சப்பிரமம் - டு - மூர்த்திப்பிரமம், தத்துவப்பிரமம், பூதப்பிரமம், பிண்டப்பிரமம், கலாப்பிரமம், பதப்பிரமம், (2) மந்திரப்பிரமம், கிரியாப் பிரமம், தத்வப்பிரமம், பீஜப்பிரமம், முகப்பிரமம்.

பஞ்சமூலம் - டு- செவ்வியம், சித்திரமூலம், கண்டுபரங்கி, பேராத்தை, சுக்கு.

பஞ்சாங்கம் - உ- வாக்கியம், சித்தாந்தம்.

படைவகுப்பு - ச- அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

படைவகை - சு- மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை.

பட்சி- - டு - வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் இவற்றிற்கு முறையே யெழுத்து அ, இ, உ, எ, ஒ, உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு பிற்பக்கமாயின் உண்டி, சாவு, தூக்கம் நடை, அரசு, சாவு, தூக்கமில்லாத பொழுதிந்து செய்யுண் முதலியசெய்தனன்மை.

பட்டை-டு-நாவற்பட்டை, அத்திப்பட்டை, மாம்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை. இவை யாகத்துக்குரியவையாய் பஞ்சபட்டை எனப்படும்.

பட்டினத்திற் குரியன-அசு-படகு, நாவாய்கள், பிணிக்கும்பக்கம், இளமரக்கா,தோப்பு, படப்பை, உத்தியானம், எரி, அகழி, மதில், கோட்டை, அரணம், நால்வகைச் சேனைகளிருக்கை, ஆயுதசாலை, அறச்சாலை, பாகசாலை, பண்டகசாலை, பொதுதெற்றியம்பலம், நாற்குலத்தார் இருக்கை, அத்தாணி மண்டபம், பட்டி, மண்டபம், மந்திரம், அந்தப்புரம், அரங்கம், பரதவரிருப்பு, நூதனப் பொருட்சாலை, கலாசாலை, நாளங்காடி, அல்லங்காடி, தேவர்கோயில், அறவோர்பள்ளி, முனிவர் உறைவிடம், பசுக்கோட்டம், முரசமுழக்கம், அரசனரண்மனை, உவராசன், பிரதானி அமைச்சர், புரோகிதன்,சேனபதி, தளவாரிகன், அந்தர்வம், சிகன், காராகாராதிக்கிருதன், அர்த்தசஞ்சயக்கிருது, காரியநியோசகன், பிராட்டு, விவாகனன், சேனநாயகன், நகராத்தியக்கன், கருமாந்திகன், சப்பியன், தருமாத்தியக்கன், தண்டபாலன், துர்க்கபாலன், இராட்டிராந்தபாலன், சபிகர், தூதுவர், வித்துவாம்சர், காயகர், கவிகள், பட்டர், பாரங்கதர், தீரோதீத்தன், தீரோதப்பிதன், தீரலலிதன், தீரசாந்தன், இதரபரிணிதர், சதுர்விதபோகசங்கரர், மோக்காயிகை, விரபோக லலிதை, இலீலை, லீலகிஞ்சிதை, விசித்தை, விலாசை, விப்பிரலம்பை, குட்டிமை, தயை, இலலிதை என்னும் கேளிபாலலீலாசதியர்,மோகமயர்,கரணபரிணிதர், வித்தகர், அவத்தாத்திரய, பரீக்ஷகர்,

அவத்தாவிசாரபரர், சந்தாவிசர், அடாவிசர், குடுபாவிச ரென்னும் ஆசியக்காரர், முதலினோர் இருக்கைகளுமாம்.

பண்-ச-பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி

பண்-கo - பன்னிரு பாலையி னுருதொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப்பண்கள் நூற்றுமூன்றுதற்குக் காரணமா மெனக் கொள்க. பெயர்களை - வந்துழிக் காண்க.

பதவி-ச - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம். இவற்றுட் கடவுளுலகத்தில் வாழ்தலே சாலோகம். கடவுள் சமீபத்து வாழ்தலே சாமீபம். கடவுளுருப் பெற்று வாழ்தலே சாரூபம். கடவுளோ டத்துவித முற்று வாழ்தலே சாயுச்சியம்.

பதார்த்தங்கள்-எ - திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம்.

பதிவிரதையர்-கக-பரிசுவ, பிரசூதி, கூதி, கியாதி, திதத்துதி, சம்பூதப்பிரீதி, கூஷமை, சந்நதி, அனசூயை, தேவபாகை, அருந்ததி.

பத்தி - அ - தொண்டரடி தொழுதல், சிவபூசையின் மகிழ்தல், சிவார்ச்சனை இயற்றல், சிவனுக்குப் பணிவிடை செய்தல், சிவசரிதங் கேட்டானந்தபாஷ்பம் சொரிதல், அதனுற் புளகமுறுதல், அதனைப் பலகாற் சிந்தித்தல், திருப்பணிக்குரிய பொருளை அபகரியாமை, இவையே எண்வகைப் பத்தியெனப்படும்.

பரிச்சேதம்-கூ-கால பரிச்சேதம், தேயபரிச்சேதம், வத்துபரிச்சேதம்,அவையாவன-ஒருகாலத்துண்டொரு காலத்தின் றென்பது காலபரிச்சேதம், ஒரு தேயத்துண்டொரு தேயத்தின்றென்பது தேய பரிச்சேதம், ஒரு பொருளிதுவாகு மொரு பொருளிதன்றென்பது வத்து பரிச்சேதம்.

பருவகாலம்-சு-கார், கூதிர், முன்பனி,பின்பனி, இளவேனில், முதிர்வேனில்; இவையே யாவணி முதலாக விரண்டிரண்டு மாதமாக வொவ்வொன்றும்.

பருவங்கள்-கு- இருஷ்ணபக்ஷத்து அஷ்டமி, இருஷ்ணபக்ஷ சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு.

பருவம்-ச-பால, தருணி, பிரவிடை, விருத்தை, இவை பெண்கட்குரிய பருவமாம்.

பருவம் - எ - பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண். இவர்க்கு முறையே வயதெல்லை, ஐந்து முதலேழளவும் பேதை, எட்டு முதல் பதினொன்றளவும் பெதும்பை - பன்னிரண்டு முதற் பதின்மூன்றளவும் மங்கை - பதினான்குமுதற் பத்தொன்பதளவும் மடந்தை, இருபது முதல் இருபத்தைந்தளவும் அரிவை, இருபத்தாறு முதன் முப்பத்தொன்றளவுந் தெருவை, முப்பத்திரண்டு முத னாற்பதளவும் பேரிளம் பெண், ஆகையா லொவ்வொரு பருவங்கொண்ட வருடம், கூ, ஐ, உ, சு,சு, சு, கூ, இவை பெண்கட்குரிய பருவமாம்.

பலை-கூ-கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவையே திரிபலை யென்ப.

பவளக்குணம்-சு-நிறம், உருட்சி, சிந்தூரம், மிக்கசெங்காய், முசுமுசுக்கைக் கனி, துளை வழுதுணம்பழம்.

பவளக்குற்றம் - கூ - கருப்பத்திற் றோபட்டன,கல்லிடுக்கிற்புக்கு முடங்குபட்டன. திருக்கு முறுக்குண்டெழுந்தன. [பழம்.

பழம் - கூ - பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம் - ஙி-எலுமிச்சம் பழம், நாரத்தம்பழம், மாதுளம்பழம், தமரத்தம்பழம், குளுஞ்சிப் பழம். இவையே ஐங்கனி எனப்படும்.

பற்று - உ - அகப்பற்று, புறப்பற்று.

பா

பா - ச-வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்று கூட்டி ஐந் தென்பாரு முளர்.

பா - சு - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபாடற்பா.

பாடை - கஅ-அங்கம், அருணம்; கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பாணிவிகற்பம் - கக - ஒன்றன் பாணி முதலாக எண்கூத்துப்பாணி யீறாக வுள்ளனவாம்.

பாதகம் - ஙி - கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை, இவையே பஞ்சமபாதகம்.

பாதகம் - கூ - தூலம், சூக்குமம், அதிசூக்குமம் இவை முறையே பாதகம், அதிபாதகம், மகாபாதகமென்றுஞ் சொல்லப்படும்.

பாதகம் - எ - சித்தசமுன்னதி, அருத்த லோபம், காமம், வைடம்மியம், அசனப் பிரியம், கோபம், அநுட்டணம், இவையே சத்தவிசனம். இவை முறையே அகங்கா ரம், உலோபம், காமம், பகை, போச னப் பிரியம், காய்தல், சோம்பல் இவை யேழுந் தலைமையான பாதகமெனப் படும்.

பாயிரம் - உ - பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம், இவைமுறையே-முகவுறை, பதி கம், அணிந்துரை, பாயிரம் எனப் படும்.

பாலை - எ - இசையைக் காண்க.

பாலைவகை - ச - ஆயப்பாலை, சதுரப்பாலை, திரிகோணப்பாலை, வட்டப்பாலை,

பாலைப்பண்ணின்றிறம் - நி - தக்க ராகம், நேர்திறம், காந்தாரபஞ்சமம், சோமரா கம், காந்தாரம். என்னை? "தக்க ராக நேர்திறங் காந்தார பஞ்சமமே-துக் கழி சோமவிராகமே-மிக்கதிறற்காந்தார மென்றைந்தும்பாலைத் திறமென்றார்-பூந் தா ரகத்தியனார் போந்து" என்றார ாகலின்.

பாலையாழ்த்திறம் - நி - அரராகம், ஆசான், உறுப்பு, குறுங்கலி, நேர்திறம். பாலை யாழ்த்திறன் வகை-உக-அந்தாளி, தக்க ராகம், பாடை, அந்தி, மன்றல், நேர்தி றம், வராடி, பெரியவராடி, சாயரி, பஞ் சமம், திராடம், அழுங்கு, தநாசி, சோம ராகம், மேகராகம், துக்கராகம், கொல் லிவராடி, காந்தாரம், சிகண்டி, தேசாக் கரி, சுருதிகாந்தாரம்.

பால்-கச-கைக்கிளைத்திணை, முல்லை, குறிஞ் சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வா கை, காசி, பாடாண்டிணை.

பால்-நி - ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல.

பாவுபுண்ணியவழக்கம் - ஈ-செய்தல், செய் வித்தல், உடன்படல்.

பாவனை - ஈ - பிராமிபாவனை, அவ்வியத்த பாவனை, உருவ பாவனை, இவற்றின் விரிவுகளைக் கூர்மபுராண விருத்தியுரைக் கட் காண்க.

பாவினம் - ஈ - தாழிசை, துறை, விருத்தம்.

பாஷாணம் - கூ - சாதிலிங்கம், மஞ்சிலை, காந்தம், தாரம், கெந்தி, இரசகற்பூரம், வெள்ளைப் பாஷாணம், கௌரி பாஷா ணம், தொட்டி பாஷாணம், இவை நவ பாஷாணம்.

பி

பிணி - ஈ - வாதம், பித்தம், சிலேட்டுமம்.

பிரபந்தம் - கூசு - அவையாவன - சாதகம், திதிநிலை, வாரநிலை, நாண்மீனிலை, யோக நிலை, கரணநிலை, ஓரைநிலை, நிரகநிலை, இவ் வேழ்வகையுறுப்புக்களினிலையையுஞ், சோதிட நூலால், நன்குணர்ந்தவற்றை யமைத்தவற்றூற் றலைவற்குறுவன கூறு வது, மற்றும் யுகாதியாண்டு முதலியவுங் கொள்க. இப் பிரபந்தம் தொண்ணூற் றூறும் அகலக்கவி யெனவும், வித்தாரக் கவியெனவும் பெயர் பெறும்.

க.பிள்ளைக்கவி-இதனிலக்கணத்தைத் தெளிவுறக் கூறுங்கால், ஆண்பாற் பிள் ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என விருவகைத்து. இவற்றுள் இரண்டா மாதத்திற் காப்புக் கூறுதலும், ஐந்தா மாதத்திற் செங்கீரை கூறுதலும், ஆறு மாதத்திற் சொற் பயில்வு கூறுதலும், ஏழாமாதத்தில் அமுதூட்டலும், எட்டா மாதத்திற் றூளாட்டுக் கூறுதலும், ஒன் பதா மாதத்திற் சப்பாணி கூறுதலும், பத்தத்தொடன்றின் முத்தமொழிதலும், பன்னிரண்டா மாதத்தில் வாரானை யிளத்தலும் பதினெட்டா மாதத்திற் சந்திரனை யழைத்தலும், இரண்டாமாண் டிற் சிறுபறை கொட்டலும், மூன்று மாண்டிற் சிற்றில் சிதைத்தலும், நான்கா மாண்டிற் சிறுதேருருட்டலும், பத்தா மாண்டிற் பூணணிதலும், பன்னிரண் டாம் ஆண்டில் கச்சினோடு உடைவாளை விரும்பத் தரித்தலுமென்று சொல்லப் பட்டவும் பிறவுமுடைத்து. பெண்பாற் பிள்ளைத்தமிழாவது அம்புலி யிறுதியாய நின்ற பருவங்களுடன்மூன்றும் ஆண்டிற் றான் விளையாடும் பாவைக்கு மணம் பே சுதலும், ஐந்தாம் ஆண்டுமுதல் ஒன்ப தாம் ஆண்டுகாறும் மன்மதனையொத்த புருடனைப் பெறத் தவஞ் செய்தலும், குளிர்ந்த நீராடலும், பதுமை வைத்து விளையாடலும், அம்மனை யாடலும், கழங் காடலும், பந்தாடலும், சிறு சோறடுத லும், சிற்றிலிழைத்தலும், ஊசலாடலும் என்று சொல்லப்பட்ட இவற்றுள் ஏற் பன கூறப்படுமென்க. இவ்வந்தி மூன் றுமாத முதலாகவு முரைக்கப்படுமென் பர் வெண்பாப் பாட்டியற்காரர். காப்பு,

செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாராணை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை முறையே அகவல் விருத்தத்தாற் பப்பத்தாகக் கூறுவதாண் பாற் பிள்ளைக்கவி, இவ்வுறுப்பினுட்கடை மூன்றெழுத்துக் கழங்கு, அம்மனை, ஊசல் என்பவற்றைக் கூட்டி மேற்சொல்லி யவாறு கூறுவது பெண்பாற் பிள்ளைக் கவியாம், இங்ஙனமே முத்துக்குமாரசு வாமி பிள்ளைத்தமிழ், திருப்போரூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், திருவிரிஞ் சை முருகன் பிள்ளைத்தமிழ், புதுச்சங்கி திக் கந்தர் பிள்ளைத்தமிழ், திருஞான சம் பந்தமூர்த்தி நாயனார் பிள்ளைத் தமிழ் முதலிய ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல் களினும், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகையம்மைபிள்ளைத்தமிழ், சே க்கிழார்பிள்ளைத்தமிழ், கொடியிடை நாய கி பிள்ளைத்தமிழ், வடிவுடையம்மை பிள் ளைத்தமிழ் முதலிய பெண்பாற் பிள்ளைத் தமிழ்நூல்களிலுங்கூறப்பட்டமையறிக.

உ. பரணி - போர் முகத் தாயிரங் களிற்றி யானையைக் கொன்ற வீரனைத் தலைமகனுகக் கொண்டு கடவுள் வாழ்த் துங் கடை திறப்பும் பாலைநிலமுங் காளி கோயிலும், பேய்களோடு காளியுங் கா ளியோடு பேய்களுஞ் சொல்லத் தான் சொல்லக்கருதிய தலைவன் கீர்த்தி விளங் கலுமவன் வழியாகப் புறப்பொருடோன் ற வெம்போர் வழங்க விரும்பலு மென் றிவையெல்லா மிருசீரடி முச்சீரடி யொ ழித்தொழிந்த மற்றையவடியாக வீரடிப் பஃறொழிசையாற் பாடுவது. இவற்றை யிலக்கியங்களா வமைக்கப்பட்ட கலிங் கத்துப்பரணி, மோகவதைப்பரணி, அஞ் ஞவதைப் பரணி, அண்டத்துப் பரணி, வீரபத்திர பரணி முதலிய நூல்களாற் றெளிக.

ஊ. கலம்பகம் - ஒருபோகும், வெண் பாவும், கலித்துறையு முதற்கலி யுறுப் பாக முற்கூறப்பெற்றுப் புயவகுப்பு, மதங் கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல், என்னுமிப் பதினெட்டுறுப் புக்களுமியைய, மடக்கு, மருட்பா, ஆசிரி யப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவி ருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டு றை யென்னு மிவற்றுளிடையே வெண் பா, கலித்துறை விரவ வந்தாதித் தொ டையான் முற்றுறக் கூறுங்காற் றேவர்க் கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற் றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க் கைம்பதும், சூத்திரர்க்கு மூப் பதுமாகப் பாடுவது. இவ்விலக்கணங்கள மையத் தில்லைக்கலம்பகம், மறைசைக்க லம்பகம், மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், அருணைக்கலம்பகம், கதிர்கா மக்கலம்பகம், கச்சிக் கலம்பகம், வெங் கைக் கலம்பகம், புள்ளிருக்கு வேளூர் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம் முதலிய செய்யப்பட்டிருத்தல் காண்க.

ரு. அகப்பொருட்கோவை - இரு வ கைப்பட்ட முதற்பொருளும் பதினென்கு வகைப்பட்ட கருப்பொருளும் பத்து வ கைப்பட்ட வுருப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலுற்ற வன்புடைக் காமப் பகுதிய வாங் கள வொழுக்கத் தினையுங் கற்பொழுக்கத்தினையுங் கூறுதலே யெல் லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற் றுற்றிணைமுதலாகத்துறையீறாகக் கூறப் பட்ட பன்னிரண்டகப் பாட்டுறுப்பும் வ ழுவின்றித் தோன்றப் பாடுவது. இது வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண் ணம் இவற்றுளும் வழங்கப்படும். இவற் றிற்குதாரணமாகத் திருக்கோவையார், தஞ்சை வாணன் கோவை, வெங்கைக் கோவை, கோடீசுரக் கோவை, ஒரு து றைக் கோவை, அம்பிகாபதிக் கோவை, திருவாரூர்க் கோவை, காழிக் கோவை முதலியன விருத்தல் காண்க.

ரூ. ஐந்திணைச்செய்யுள்புணர்தன் முத லியவைந்துரிப் பொருளும் விளங்கக் கு றிஞ்சி முதலிய வைந்திணையினையுங் கூ றுப.

சு. வருக்கக்கோவை அகர முதலாகிய வெழுத்து வருக்கமொழிக்கு முதலாமெ ழுத்து முறையே காரிகைத்துறைப் பாட் டாகப் பாடுவது.

எ. மும்மணிக்கோவை - ஆசிரியப்பா வும், வெண்பாவும், நேரசையு நிரையசை யுங் கொண்டெழுத் தெண்ணிப் பாடிக் கலித்துறையு முறையே தொகைமுப்பது பெற வடுக்கி யந்தாதித் தொடையாற் பாடுவது. சிதம்பர மும்மணிக்கோவை, திருவொற்றியூர் மும்மணிக்கோவை, தி ருவிடை மருதூர் மும்மணிக்கோவை

முதலியன வமைந்திருத்த லறிக.

அ. அங்கமாலை - ஆண் மகனுக்கும் பெண் மகளுக்கு மிக்கனவெடுத்துக் கூறும் அவயவங்களே வெண்பாவா லாயினும் வெளி விருத்தத்தாலாயினும் பாதாதிகேசங் கேசாதிபாத முறை பிறழாது தொடர்புறப் பாடுவது.

கூ. அட்டமங்கலம் - கடவுளைப் பாடியக் கடவுள் காக்கவென வாசிரிய விருத்தமெட்டிலந்தாதித்துக் கூறுவது.

க0. அநுராகமாலை - தலைவன் கனவின்க ணைருத்தியைக் கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றினிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப் பாங்கற் குரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

கக. இரட்டைமணிமாலை - முறையானே வெண்பாவுங் கலித்துறையு மிருபஃதந்தாதித் தொடையான் வருவது. நேரிசை வெண்பாப் பத்தும், ஆசிரிய விருத்தம் பத்து மந்தாதித் தொடையாற் பாடுவது. மூத்த நாயனார் இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை யிரட்டை மணிமாலை முதலியன விலக்கியமா யுள்ளன.

கஉ. இணைமணி மாலை - வெண்பாவும கவலும் வெண்பாவுங் கலித்துறையுமாக விரண்டிரண்டாக வினைத்து வெண்பாவகவலினை மணிமாலை, வெண்பாக் கலித்துறையினை மணிமாலை என நூறு நூறு அந்தாதித் தொடை நான்கானும் பாடுவது.

கங. நவமணிமாலை - வெண்பா முதலாக வேறு பட்டபாவும் பாவினமுகமாகவொன்பது செய்யுளந்தாதித்துப் பாடுவது. பிங்கூடன நவமணி மாலையிதற்கிலக்கியமா யுள்ளது.

கச. நான்மணிமாலை - வெண்பாவுங் கலித்துறையும் விருத்தமு மகவலுமந்தாதித் தொடையாக நாற்பது பாடுவது. கோயிஞன் மணிமாலை, நால்வர் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை முதலியன விதற்கிலக்கியங்கள்.

கடு. நாமமாலை - அகவலடியுங் கலியடியும் வந்தமயங்கிய வஞ்சிப்பாவாலாண்மகனைப் புகழ்ந்து பாடுவது.

கசு. பலசந்தமாலை - பப்பத்துச் செய்யுளொவ்வோர் சந்தமாக நூறு செய்யுட் கூறுவது.

கஎ. பன்மணிமாலை - மேற்சொல்லிய கலம்பகத்துள் வருமொரு போகுமம்மானையு மூசலு மின்றி யேனை யுறுப்புக்களெல்லா மமைய வவ்வாறு கூறுவது. இதையே கலம்பகமாலை யென்ப.

கஅ. மணிமாலை - எப்பொருண் மேலும் வெண்பா விருபதுங் கலித்துறை நாற்பதும் விரவிவருவது.

ககூ. புகழ்ச்சிமாலை -அகவலடியுங் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக் கூறுவது.

உ0. பெருமகிழ்ச்சி மாலை - தலைவியினழகு குணமாக்கஞ் சிறப்பினைக் கூறுவது.

உக. வருக்கமாலை - மொழிக்கு முதலாம் வருக்க வெழுத்தினுக் கொவ்வோர் செய்யுட் கூறவது.

உஉ. மெய்க்கீர்த்திமாலை - சொற்சீரடியென்னுங் கட்டுரைச் செய்யுளாற் குல முறையிற் செய்த கீர்த்தியைக் கூறுவது.

உங. காப்புமாலை - தெய்வங் காத்தலாக மூன்றுசெய்யுளானும், ஐந்து செய்யுளானும், ஏழுசெய்யுளானும் பாடுவது.

உச. வேனின்மாலை - இளவேனிலையு முதிர் வேனிலையுஞ் சிறப்பித்துப் பாடுவது.

உடு. வசந்தமாலை - தென்றலை வருணித்துப் பாடுவது.

உசு. தாரகைமாலை - அருந்ததிக் கற்பின் மகளிர்க்குள்ள வியற்கைக் குணங்களை வகுப்பாற் கூறுவது. தூசிப் படையினணியைப் புகழ்ந்த வகுப்பென்பாரு முளர்.

உஎ. உற்பவமாலை - திருமால் பிறப்புப் பத்தனையு மாசிரிய விருத்தத்தாற் கூறுவது.

உஅ. தானைமாலை - அகவலோசையிற் பிறழாதாசிரியப் பாவான் முன்னெடுத்துச் செல்லுங் கொடிப் படையைச் கூறுவது.

உகூ. மும்மணிமாலை - வெண்பாவுங் கலித்துறையு மகவலு மந்தாதித் தொடையான் மூப்பது பாடுவது.

ஈ0. தண்டகமாலை - வெண்பாவான் முந்நூறு செய்யுட் கூறுவது. இது வெண்புணர்ச்சி மாலை யெனவும் படும்.

ஈக. வீரவெட்சிமாலை — சுத்தவீரன், மாற்றரசரிற் சென்று பசுநிரைகோடற்கு வெட்சிப் பூமாலை சூடி யவ்வண்ணம் போய் நிரைகவர்ந்து வரினவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப் போய்வந்த

வெற்றி பாடுவது.

கூஉ வெற்றிக்கரந்தைமஞ்சரி,—பகை வர்கொண்ட தங்கிரைமீட்போர் கரந் தைப் பூமாலை சூடிப்போய் மீட்பதைக் கூறுவது.

கூக. போர்க்கெழுவஞ்சி, — மாற்றூர் மேற்போர்குறித்துப் போகின்ற வய வேந்தர் வஞ்சிப்பூமாலை சூடிப்புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை யாசிரியப் பாவாற் கூறுவது.

கூச. வரலாற்றுவஞ்சி, — குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையுங் கீர்த்தியையும் வஞ்சிப்பா வாற் கூறுவது.

கூடி. செருக்களவஞ்சி, —போர்க்களத் திலே யட்டமனிதருடலையும் யானைகுதி ரை யுடலையு நாயும் பேயும் பிசாசமுங் கழுகும் பருந்துங் காகமுந்தின்று களித் தாசவாசமாயிருக்க, பூதமும்பேயும் பாடி யாட விங்ஙனமிருந்த சிறப்புப்பாடுவது. இதையே பறந்தலைச் சிறப்புப் பாட்டு மென்ப.

கூசு. காஞ்சிமாலை,—மாற்றூரூர்ப்புறத் துக் காஞ்சிப் பூமாலை சூடியூன்றலைக் கூறுவது.

கூள. நொச்சிமாலை, — புறத்தூன்றிய மாற்றூர்க்கோடலன்றி நொச்சிப் பூமாலை சூடித் தன்மதில்காக்குந்திறங்கூறுவது.

கூஅ. உழிஞைமாலை, — மாற்றூர ரூர்ப்புறஞ்சூழ வுழிஞைப்பூமாலை சூடிப் படைவளைப்பதைக் கூறுவது.

கூக. தும்பைமாலை, — மாற்றூரோடு தும்பைப் பூமாலை சூடிப்பொருதுவதைக் கூறுவது.

சஅ. வாகைமாலை, — மாற்றூரை வென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதை யாசிரியப்பாவாற் கூறுவது.

சக. வாதோரண மஞ்சரி, — கொலை புரி மதயானை வயப்படுத்தி யடக்கினவர் கட்கு மெதிர்பொரு களிற்றைவெட்டி யடக்கினவர்கட்கும் பற்றிப்பிடித்துச் சேர்ந்தவர்கட்கும் வீரப்பாட்டின் சிறப் பை வஞ்சிப்பாவாற் றொடுத்துப் பாடு வது.

சஉ. எண்செய்யுள், — பாட்டுடைத் தலைவன தூரினையும் பெயரினையும்பத்து முதலாயிரமளவும் பாடியெண்ணற் பெயர் பெறுவது.

சஙு. தொகைநிலைச்செய்யுள், - நெடில டிச் செய்யுளாற் றொகுத்தது நெடுந்தொ கையும், குறளடிச் செய்யுளாற்றொ குத் தது குறுந்தொகையும்,கலிப்பாவாற் றொ குத்தது, கலித்தொகையும் போல்வன.

சஎ. ஒலியலந்தாதி, — பதினெறுகலை யோரடியாகவைத் திங்ஙன நாலடிக்கறு பத்து நாலுகலை வகுத்துப் பலசந்தமாக வண்ணமுங் கலைவைப்புந் தவறுமலந் தாதித்து முப்பது செய்யுள்பாடுவது. சிறு பான்மை யெட்டுக் கலையானும் வரப் பெறும்; அன்றியும் வெண்பா வகவல் கலித்துறை யாகிய இம் மூன்றையும் பப்பத்தாக வந்தாதித்துப் பாடுவதுமாம் ஒட்டக்கூத்தரால் இவ்விலக்கணங்களும் பெயருமமையச் செய்யப்பட்ட வந்தாதி யிதற்குதாரணமாம்.

சஙி. பதிற்றந்தாதி,—பத்து வெண்பா பத்துக் கலித்துறைப் பொருட்டன்மை தோன்ற வந்தாதித்துப் பாடுவது.

சஙூ. நூற்றந்தாதி,—நூறு வெண்பா வினுலேனும் நூறுகவித்துறையினுலேனு மந்தாதித் தொடையாற் கூறுவது. அரு ணகிரியந்தாதி, கந்தரந்தாதி, திருக்கரு வை வெண்பா வந்தாதி, திருக்கருவைக் கலித்துறையந்தாதி, பொன்வண்ணத்தந் தாதி, அற்புதத்திருவந்தாதி, பழமலையந் தாதி, அபிராமியந்தாதி, மறைசையந் தாதி, கல்வளையந்தாதி, கைலைபாதி, காளத்திபாதி,வெண்பாவந்தாதி,கம்பந் தாதி, மருதூரந்தாதி, பந்தனந்தாதி முதலியன உதாரணங்களாயுள்ளன.

சஎ. உலா,-இளமைப் பருவ முற்ற தலைமகனைக் குலங்குடிப்பிறப்பு மங்கலம் பரம்பரை யிவற்றுனின்னு னென்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங் கிய வீதியிடத்தவன் பவனிவரப் பேதை முதலிய வேழு பருவப் பெண்களுங் கண்டு தொழுததாக நேரிசைக் கலி வெண்பாவாற் கூறுவது. திருக்கைலை யுலா, கச்சியேகம்பருலா, காழியுலாவைக் காண்க.

சஅ. உலாமடல்-கனவிலொரு பெண் ணைக்கண்டு கலவியின்ப நுகர்ந்தோன் விழித்தபின் னவள் பொருட்டு மடலூர் வேனென்பதைக் கலி வெண்பாவான் முற்றுவிப்பது.

சகூ. வளமடல், அறம் பொருளின்ப மாகிய வம்மூக் கூறுபாட்டின் பயனை யெள்ளி மங்கையர் திறத்துறுங் காம

வின்பத்தினையே பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலைமகனியற் பெயர்க்குத் தக்கதை யெதுகையாக நாட்டியுரைத் தவவெதுகை படத் தனிச் சொலின்றி யின்னிசைக் கலிவெண்பாவாற் றலைமக னிரந்து குறைபெறுது மடலேறுவதா யீரடி யெதுகைவரப் பாடுவது.

நூல். ஒருபா வொருபஃது,—அகவ லும் வெண்பாவுங் கலித்துறையு மாய விவற்றி லொன்றை லந்தாதித் தொடை யாற் பத்துப் பாடுவது.

நூக. இருபாவிருபஃது,—பத்துவெண் பாவும் பத்தகவலு மந்தாதித் தொடை யானிருபதினேந்து வருவது. சித்தாந்த சாத்திரம் பதினுன்கனு ளொன்றிதற் கிலக்கியமாவுள்ளது.

நூஉ. ஆற்றுப்படை,—அகவற்பாவால் விறலி, பாணர், கூத்தர், பொருந ரிந் நால்வரு ளொருவர் பரிசிற்குப் போவாரைப் பரிசு பெற்று வருவா ராற் றிடைக் கண்டு தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கொற்றமுஞ் சொல்வது. பத்துப் பாட்டுள் முதலாவது பாட்டால் நக்கீரனாற் சொல்லப்பட்டு மூந்நூற் றுப் பதினேழடிகளையுடையதாய் முருக வேளது படை வீடாறனையும் நிரம்பப் பாராட்டிக் கூறுதிற்குந் திருமுருகாற் றுப்படை, இரண்டாவது பாட்டாய் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்த ராற்றுப்படை, தணிகையாற்றுப் படை முதலியன விதற்கிலக்கியங்களாம்.

நூங. கண்படைநிலை, — அரசரு மரசரைப் போல்வாரு மவைக்களெடுது வைகியவழி மருத்துவரு மமைச்சரு முதலியோரவர்க்குக் கண்டுயில் கோட லைக் கருதிக் கூறுவது.

நூச. துயிலெடைநிலை,-தன்வலியாற் பாசறைக் கண்ணெரு மனக்கவற்சி யின் றித் துயின்ற வரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் துயிலெழுப் புதலாகப் பாடுவது.

நூஞ. பெயரின்னிசை,—பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார, இன்னிசை வெண்பாவாற் றொண்ணூறேனு மெழுப தேனும் ஐம்பதேனும் பாடுவது.

நூசு. ஊரின்னிசை,— பாட்டுடைத் தலைவனூரினைச் சார வின்னிசைவெண் பாவாற் றொண்ணூறேனு மெழுபதே னும் ஐம்பதேனும் பாடுவது.

நூள. பெயர்நேரிசை,—பாட்டுடைத்த தலைவன் பெயரினைச்சார நேரிசை வெண்பாவாற் றொண்ணூறேனு மெழு பதேனு மைம்பதேனும் பாடுவது.

நூஅ. ஊர்நேரிசை,— பாட்டுடைத் தலைவனூரினைச்சார நேரிசை வெண்பா வாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

நூக. ஊர்வெண்பா, —வெண்பாவா லூரைச் சிறப்பித்துப் பத்துச் செய்யுள் கூறுவது.

சூல். விளக்குநிலை,—வேலும் வேற் றலையும் விலங்கா தோங்கியவாறு போ லக் கோலொடு விளக்கு மொன்றுபட் டோங்குமா றேங்குவதாகக் கூறுவது.

சூக. புறநிலை,—நீ வணங்குந் தெய்வ நின்னைப் பாதுகாப்ப நின்வழிவழி மிகுவ தாகவென்னக் கூறுவது.

சூஉ. கடைநிலை,-சான்றோர் சேணிடை வருதலாற் பிறந்த வருத்தந்தீர வாயில் காக்கின்றவனுக் கென் வரவினைத் தலை வற்கிசையெனக் கடைக்கணின்று கூறு வது.

சூங. கையறுநிலை,—கணவ னொடு மனைவி கழிந்துழி யவர்கட்பட்ட வழி வுப்பொருளெல்லாம் பிறர்க் கறிவுறுத் தித் தாமிறந்து படாதொழிந்த வாயத் தாரும் பரிசில் பெறும் விறலியருந் தனிப் படருழந்த செயலறுநிலையைக் கூறுவது.

சூச. தசாங்கபத்து,—நேரிசை வெண் பாவா லரசன் படைத்த தசாங்கத்தி னைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

சூடு. தசாங்கத்தியல்,-அரசன் தசாங் கத்தினை யாசிரிய விருத்தம் பத்தினுற் பாடுவது.

சூசு. அரசன் விருத்தம்,— பத்துக் கலித்துறையு மூப்பது விருத்தமுங் கலித் துறையு மூப்பது விருத்தமுங் கலித்தா ழிசையுமாகிய விவற்றுல் மலை, கடல் நாட்டு வருணனையு நில வருணனையும், வாண் மங்கலமுந் தோண் மங்கலமும் பாடி முடிப்பது, இது முடியுனைந்த வேந் தர்க்காம்.

சூள. நயனப்பத்து—கண் ணினை ப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

சூஅ. பயோதரப்பத்து, முலையினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

சூக. பாதாதிகேசம்,- கலிவெண்பா

வா லடிமுதன் முடியளவுங் கூறுவது.

எ0. கேசாதிபாதம்,—கலிவெண்பா வான் முடிமுத லடியளவுங் கூறுவது.

எக. அலங்கார பஞ்சகம்,-வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், சந்தவிருத்த மிவற்றையே மாறி மாறி நூறுசெய்யுளாகவந்தாதித்துப் பாடுவது.

எஉ. கைக்கிளை,- ஒரு தலைக் காமத் தினை யைந்துவிருத்தத்தாற் கூறுவது அன்றி வெண்பா மூப்பத்திரண்டு செய்யு ளாற் கூறுவதுமாம்.

எங. மங்கலவள்ளை - உயர்குலத் துதித் த மடவரலை வெண்பா வொன்பானு லும் வகுப்பொன்பானுலும் பாடுவது.

எச. தூது,-ஆண்பாலும் பெண்பாலு மவரவர் காதல் பாணன் முதலிய வுயர் திணையோடுங் கிள்ளை முதலியவஃறிணை யோடுஞ் சொல்லித்தூதுபோய் வாவெ னக் கலிவெண்பாவாற் கூறுவது. நெஞ்சு விடுதூது,கிள்ளைவிடுதூது, கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது முதலியன விலக்கியமாம்.

எஙி. நாற்பது,-காலமுமிடமும் பொரு ளுமாகிய விவற்று ளொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது. கார்நாற்பது, களவழிநாற்பது, இன்னுநாற்பது, இனிய வை நாற்பது முதலியவற்றைக் காண்க.

எசு. குழமகன், - கலிவெண்பாவான் மாதர்கடங்கையிற் கண்டவிளமைத் தன் மையுடைய குழமகனைப்புகழ்ந்துகூறல்.

எஎ. தாண்டகம்,-இருபத்தே ழெழுத் து முதலாக வுயர்ந்த வெழுத்தடியினவா யெழுத்துங் குருவு மிலகுவுமொத்து வந் தன அளவியற்றுண்டகமெனவும், எழுத் தொவ்வாது மெழுத்தல கொவ்வாதும் வந்தன அளவழித் தாண்டகமெனவும் படும்.

எஅ. பதிகம், - ஒரு பொருளைக் குறித் துப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

எக. சதகம், - அகப்பொரு ளொன் றன் மேலாதல் புறப்பொரு ளொன்றன் மேலாதல் கற்பித்து நூறுசெய்யுள் கூறு வது. அறப்பளீசுரசதகம், குமரேசர் சத கம், வைராக்கியசதகம்முதலியனகாண்க

அ0. செவியறிவுறூஉ,- பொங்குதலின் றிப் புரையோர் நாப்பண்விறல் கட னெனவவை யடக்கியற் பொருளுற வெண்பா முதலுமாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

அக. வாயுறைவாழ்த்து,-வேம்புங் கடு வும் போல்வனவாகிய வெஞ்சொற்கண் முன்னர்த்தாங்கக் கூடாவாயினும் பின் னர்ப்பெரிதும் பயன்றருமென மெய்ப் பொருளுற வெண்பா முதலு மாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

அஉ.புறநிலைவாழ்த்து,-வழிபடுதெய்வ நிற்புறங் காப்பப் பழிதீர் செல்வமோ டொருகாலைக் கொருகாற் சிறந்துபொலி வாயென வெண்பா முதலு மாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் பாடுவது

அங. பவனிக்காதல்,-உலாக்காட்சியா லெய்திய காமமிகுதியா லவை பிறசொடு முரைத்து வருந்துவது.

அச. குறத்திப்பாட்டு,-தலைவன் பவனி வரவு,மகளிர்காமுறுதல், மோகினிவரவு, உலாப்போந்த தலைவனைக்கண்டு, மயங் கல், திங்கள் தென்றல் முதலியவு வாலம் பனம், பாங்கியுற்றதென்னென வினவல், தலைவி பாங்கியோடுற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக்கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங் கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கி யோடு தலைவனடையாளங் கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியை மலை வள முதலிய வினவல், குறத்திமலைவள நாட்டுவள முதலிய கூறல், தலைவன் றல வளங் கிளைவள முதலிய கூறல், குறி சொல்லி வந்தமைகூறல், தலைவி குறி வினவல், குறத்தி தெய்வம் பராவல்,குறி தேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசி லுதவி விடுத்தல், குறவன்வரவு, புள்வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத்தேடல்,குறவன் பாங்கனெடு குறத்தி யடையாளங்கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல்,குறவ னணி முதலிய கண்டையுற்று வினவலு மாண்டாண்டு குறத்தி விடை கூறலுமா கக் கூறல், பெரும்பான்மையு மிவ்வகை யுறுப்புக்களால் அகவல், வெண்பா, தரவு கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம் இச்செய்யு ளிடைக்கிடைச் சிந்து முதலிய நாடகத் தமிழாற் பாடுவது.

அடி. உழத்திப்பாட்டு,-கடவுள்வணக்க முறையே மூத்தபள்ளி யிளையபள்ளிகுடும் பன் வரவோ டவன்பெருமை கூறல், முறையே யவர் வரலாறு, நாட்டுவளம், குயிற்கூக் கேட்டல், மழைவேண்டிக்

கடவுட்பரவல், மழைக்குறி யோர்தல், ஆற்றின்வரவு, அதன் சிறப்புக்காண்ட லிவற்றிற் கிடையிடை யகப்பொருட் டுறையுங்கூறிப் பண்ணேத்தலவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையாளை யவனுரைப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணேச்செயல் வினவல், அவனது கூறல், ஆயரை வருவித்தல், அவர்வரல், அவர்பெருமைகூறல்,மூத்தபள்ளி முறை யீடு, குடும்பன் கிடையிலிருந்தான்போல் வரல், அவனேத்தொழுவின் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி யடிசில் கொடுவரல், அவனவளொடுகூறல், அவ னவளை மன்னித்தல், கேட்க வேண்டல், அவன் மறுத்தல், அவன்சூளுறல், அவ ளவனை மீட்கவேண்டிப் பண்ணேத்தலே வனைப் பரவல்,விழிமுதலிய வளங்கூறல், உழவருழல், காளைவெருளல், அது பள் ளத்துப்பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவனெழுந்துவித்தல், அதைப்பண்ணேத் தலேவர்க்கறிவித்தல், நாற்றுநடல் விளைந் தபின் செப்பஞ்செயல், நெல்லளத்தல், மூத்தபள்ளிமுறையீடு, பள்ளிகளுளொரு வர்க்கொருவ ரேசலென லிவ்வுறுப்புக் களுறப் பாட்டுடைத்தலேவன் பெருமை யாங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்த மூம் விரவிவரவிவற்றுற் பாடுவது.

அசு. ஊசல், - ஆசிரிய விருத்தத்தானு தல்,கலித்தாழிசையானுதல், சுற்றத்தோ டும் பொலிவதாக ஆடிரூசல், ஆடாமோ வூசலென்றிறக் கூறுவது.

அஎ. எழுகூற்றிருக்கை, - எழுசையாக் கக் குறுமக்கண் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழு வாமையா லொன்று முதலாக வேழிறுதி யாக முறையானே பாடுவது.

அஅ. கடிகைவெண்பா,-தேவரிடத்து மரசரிடத்தும் நிகழுங் காரியங்கடிகை யளவிற்றேன்றி நடப்பதாக முப்பத்தி ரண்டு நேரிசை வெண்பாவாற் கூறுவது.

அகூ. சின்னப்பூ,-நேரிசைவெண்பாவா லரசனது சின்னமாகிய தசாங்கத்தினேச் சிறப்பித்து விரித்து நூறு,தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னு மெண்படக் கூறுவது.

கூ0. விருத்தவிலக்கணம்,-வில்,வாள், வேல், செங்கோல், யானை, குதிரை,நாடு, ஊர், கொடை, இவ்வொன்பதினேயும் பப்பத்து விருத்தத்தாலொன்பது வகை யாற் பாடுவது.

கூக. முதுகாஞ்சி,-இளமைகழிந்தறிவு மிக்கோரிளமை கழியாத வறிவின் மாக் கட்குக் கூறுவதாம்.

கூஉ, இயன்மொழி வாழ்த்து, - இக் குடிப் பிறந்தோர்க்கெல்லா மிக்குண மியல்பென்று மவற்றை நீயுமியல்பாக வுடையையென்று முன்னோர்போல் நீயு மியல்பாகவியென்று முயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக் கூறுவது.

கூஙு. பெருமங்கலம்,-நாடோறுந்தான் மேற்கொள்கின்ற சிறைசெய்தன் முத லிய செற்றங்களேக்கைவிட்டுச் சிறை விடு தன் முதலிய சிறந்ததொழில்கள் பிறந்த தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.

கூச. பெருங்காப்பியம்,-தெய்வவணக் கமுஞ் செயப்படுபொருளு மிவற்றிற் கியைய வாழ்த்து முன்னுளதாய் அறம் பொருளின்பம் வீடென்னும் நாற்பொரு ளும் பயக்கு நெறியுடைத்தாய் நிகரில் லாத் தலவனை யுடைத்தாய், மலையுங் கடலுநாடுநகரும் பருவமுமிருசுடர்த் தோற்றமுமென்றிவற்றின் வளங் கூறுத லும் மணமும் முடிகவித்தலும் பொழில் விளையாட்டும் நீர்விளையாட்டும் உண் டாட்டும் மகப்பேறும் புலவியுங் கலவியு மென்றிவற்றைப் புகழ்தலும்; மந்திரமுந் தூதுஞ் செலவும் போரும் வென்றியு மென்றிவற்றைத்தொடர்ந்து கூறலுமா கிய விவை முறையேதொடர்வுறச் சருக் கமிலம்பகம் பரிச்சேதமென்னும் பகுதி யையுடைத்தாய், வீரமுதலிய சுவையு மவற்றை விளக்குங்கருத்து விளங்கக்கற் ரோ னியற்றப்படுவதாம். சீவகசிந்தா மணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சூடாமணி, கந்தபுராணம், தணிகைப்புராணம், கூர்ம புராணம், முதலியன காண்க.

கூடு. சிறுகாப்பியம்,-அறம்பொருளின் பம் வீடென்னு நான்கனுளொன்றும் பல வுங் குறைந்தேனைய வுறுப்புக்கண் மேற் கூறியவா றியல்வது, உலாமடல் முதலி யனவாம்.

பிரிவு - சு - பரத்தையிற் பிரிவு, ஓதற் பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணேவயிற் பிரிவு, பொருள் வயிற் பிரிவு.

பிறப்பு - எ - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் இவற்

றின் யோனிபேத மெண்பத்துநான்கு நூறுயிரம். அவையாவன, தேவர்பதினெண்குநூறுயிரம்; மக்களொன்பது நூறுயிரம்-விலங்கு பத்துநூறுயிரம், புள்பத்து நூறுயிரம், ஊர்வன பதினெருநூறுயிரம், நீர்வாழ்வன பத்துநூறுயிரம், தாவரமிருபதுநூறுயிரம், அன்றி, தேவர்பதினெறு நூறுயிரமெனவுந் தாவரம் பதினெட்டு நூறுயிரமெனவுங் கூறுப.

பு

புடம் - உ - சூரியபுடம், அக்கினிபுடம்.

புட்பம் - அ - புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்தாமரை இவை அட்டபுட்பம் எனப்படும்.

புண்ணியத்தோற்றம் - ஈ - தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புண்ணியம் - ஈ - தானம், கல்வி, தவம், ஒழுக்கம்.

புண்ணியம் - எ - நகங்கிருதி, தானம், விரதம், சினேகம், நயபோசனம், கமை, உற்சாகம்.

புண்ணியம் - க - எதிர்கொளல், பணிதல், ஆசனத்திருத்தல், தாள்கழுவல், அருச்சித்தல், தூபங் கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல் இவை துறந்தோர்க்குச் செய்வனவாம்.

புத்தர் - உஎ - தண்ணகாரர், மேதங்கரர், சுரணங்கரர், தீபங்கரர், கௌண்டின்னியர், மங்களர், சுமங்களர், இரேவதர், சோபிதர், அநோமதர்சி, பதுமர், நாரதர், பதுமோத்தரர், சுமேதர், சுஜாதர் பிரியதர்சி, அர்த்ததர்சி, தர்மதர்சி, சித்தார்த்தர், திஷ்யர், புஷ்யர், விபச்சித், சிகி, விசுஷ்பர், ககுந்தர், கோவகாமர், கசியபர். இவர்கள் கௌதம புத்தருக்கு முன்னிருந்தவர்கள்.

புரம் - ஊ - இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதில் இவையே மூப்புரம்.

புராணம் - கஅ - (க) பிரம்மம். (உ) பதுமம். (ஊ) வைணவம். (ஈ) சைவம். (ஊ) பாகவதம். (ஊ) நாரதீயம். (எ) மார்க்கண்டேயம். (அ) ஆக்கினேயம். (க) பவிடியம் (ஐ) பிரமகைவர்த்தம். (கக) இலிங்கம். (கஉ) வராகம். (கஊ) காந்தம். (கஈ) வாமனம். (கஊ) கூர்மம. (கஈ) மற்சம். (கஎ) காருடம். (கஅ) வாயவியம்.

இவற்றுள் சைவம், மார்க்கண்டேயம், பவிடியம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், வாயவியம் என்னுமிப் பத்துஞ் சிவபுராணங்களாம். வைணவம், பாகவதம், நாரதீயம், காருடம் என்னுமிந் நான்கும் விஷ்ணு புராணங்களாம். பிரமம், பதுமம் என்னுமிரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயம் என்னுமொன்று அக்கினி புராணம், பிரமகைவர்த்தம் என்னுமொன்று சூரிய புராணமாம். யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்குஞ் சிவபெருமான் கௌரிபங்கு வடிவினராயும் எங்குமுறங்காது பிராமணதிபராயும் அருட்செய்கை யுடையராயும் விளங்கலால் சிவ புராணங்கள் பத்தும் சுத ஞானங்களுக்கு இடமாயதும், வெண்ணிறமுடையதுமாயசாத்விககுண புராணங்களாம். விட்டுணுசரியரும் சேஷசயனஞ் செய்வோரும், பத்தரை மோகிப்பவரும் பிரமாதம் வஞ்சன முதலியவுடையரும் மருட்செய்கை யுடையருமாதலால் விட்டுணுபுராணங்கள் நான்கும் உதாசீனரூபமும் கூடகிருத்திய சமர்த்தமும், நித்திரை, சோம்பு, பிரமாதவஞ்சனங்களும் கருநிறமுமுடைய தாமதகுண புராணங்களாம். பிரமா செந்நிறமுடையராய், சஞ்சலரூபியாய் விளங்கலால் பிரமபுராணங்கள் இரண்டுஞ் சிவந்த நிறமுடையதும் துக்கத்துக்கிடமாயதும் சஞ்சலரூப முடையது மாகிய இராசத குண புராணங்களாம். அக்கினிதேவனும் சூரியமூர்த்தியும் முக்குண வடிவினராய்த் தோன்றலால் அக்கினி புராணமுஞ் சூரியபுராணமும் திரிகுண யுக்தங்களாம். பிரமபுராணம் பிராமியம் எனவும் பெயர் பெறும் பதினாயிரங் கிரந்தங்களையுடைத்து. பதும புராணம் பாத்மம் என்றுஞ் சொல்லப்படும் ஐம்பத்தையாயிரங் கிரந்தமுடையது. வைணவபுராணம் விஷ்ணு புராணம், விண்டுபுராணம் எனவும் பெயர். ஆறுயிரங் கிரந்தங்களையுடையது. சைவபுராணம் வாயு புராணம் எனவும் பெயர். இருபத்து நாலாயிரங் கிரந்தங்கள் கொண்டது. பாகவதமானது, இதிகாச பாகவதம், புராண பாகவதம், சங்கிதா பாகவதம், உபசங்கிதா பாகவதம், விட்டுணு ரகசிய பாகவதம், விட்டுணுயாமள பாகவதம், கௌதமசங்கிதா பாகவ

தம், தேவி பாகவதம் என எண்பகுப்பி னதாயிருத்தலான் அவற்றுள் சுகர் பாக வதமே புராண பாகவதமாம். சிலர் தே வி பாகவதமே யஃதென்றுங் கூறுவர். அஃது பதினெண்ணூயிரங் கிரந்த முடைத்து. நாரதீய புராணம் இருபத் தையாயிரங் கிரந்த முடையது. மார்க் கண்டேய புராணம் முப்பத்தீராயிரங் கி ரந்தமுடையது. ஆக்கினேய புராணம் எண்ணூயிரங் கிரந்தமுடையது. பவிடிய புராணம் பவிஷ்யத் எனவும் பெயர் பெ றும் முப்பத்தோராயிரங் கிரந்தமுடைய து. பிரமகைவர்த்த புராணம் பன்னீரா யிரங் கிரந்தமுடையது; இலிங்கபுராணம் பதினோராயிரங் கிரந்தமுடையது. வரா கபுராணம் இருபத்துநாலாயிரங் கிரந்த முடையது. கந்தபுராணம் ஒரிலக்கமு டையது. வாமன புராணம் பதினொலாயி ரங் கிரந்த முடையது. கூர்மபுராணம், கௌர்மம், தத்துவசாகரம் எனவும் பெ யர் பெறும்; ஆறுயிரங் கிரந்தங்களையு டையது. மச்சபுராணம் மத்ஸயம் என் றுஞ் சொல்லப்படும் பதினொலாயிரங் கி ரந்தங்களையுடையது. காருட புராணம் ஆறுயிரங் கிரந்தமுடையது. வாயவிய புராணம், பிராமம், பிரமாண்டம் என வும் பெயர் பெறும் பன்னீராயிரங் கிரந்த முடையது. இவைகள் வேதாகமங்க ளின் சாரங்கள் இன்னவென்று நியாயப் பிரமாணங்களால் தேற்றி விளக்குத லால் உபாங்கம் எனவும், உபப்பிருங்க ணம் எனவும், யாவரானுங் கொள்ளப்படு வதுடன் முதல்வனுல் அருளப்பட்டமை பற்றிச் சுத்த வித்தையெனவும், பழைய வரலாற்று முறைகளையுணர்த்தலால் பு ராணங்கள் எனவும் சொல்லப்படும். புரா ணம் பதினெட்டிற்குங் கிரந்தத் தொகை நாலிலக்கத் தெண்ணூயிரமாகும். இவை களின் ஏனைய வரலாற்றிலக்கணங்களை யெல்லாங் கூர்மபுராணம் இந்திரத் துய்ம் மன் முத்தி யடைந்த அத்தியாயத்தில் "பிரமநற்பதுமம்" என்னுந் திருவிருத் தத்து விசேடவுரைக்கண் கண்டுதெளிக. உபபுராணங்கள் முன் காட்டப்பட்டன.

புராணலக்கணம் - இ - உலகத் தோற்றம், ஒடுக்கம், முனிவர், அரசர், மரபு, அவர் சரிதம், மந்வந்தரம்.

பிராணலக்கணம் - ஐ - சர்க்கம், விசர்க்கம், விருத்தி, இரட்சை, மந்வந்தரம், வமி சம், வமிசாநுசரிதம், சங்கிதை, ஏது, ஆ சிரியம்.

புரி - எ - அயோத்தி, மதுரை, மாயை, கா சி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

புருடார்த்தம் - ச - அறம், பொருள், இன் பம், வீடு.

புலத்தவர் - இ - பிதிரர், தெய்வம், விருந்து, சுற்றத்தவர், தான். (உ-ம்) "தென்புலத் தார்தெய்வம் விருந்தொக்கருனென்றாங்- கைம்புலத்தாறோம்பறலே"

புலமையோர் - ச - கவி, கமகன், வாதி, வாக்கி, இவருள் ஆசு, மதுரம், சித்திரம், வித்தார மென்னு நாற் கவிகளைப் பாடு வோன் கவி;-அரும்பொருளைச் செம்பொ ருணடையாகக் காட்டி விவகரிப்போன் கமகன்;- காரணமு மேற்கோளு மெடுத் துக் காட்டிப் பிறன்கோண் மறுத்துத் தன்மத நிறுத்துபவன் வாதி;-அறம், பொ ருள், இன்பம், வீடெனு நாற்றிறங்களைக் கேட்க வேட்க விரித்துக் கூறுவோன் வாக்கி. [றம்.

புலன் - இ - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்

புறச்சமயம் - சு - தருக்கம், மீமாஞ்சை, எ காந்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ் சராத்திரம்.

புறத்திலக்கணம் - உ - பதம், புணர்ச்சி. இஃது எழுத்திலக்கண வகையினொன்று.

புறத்திலக்கணம் - ஐ - வியூதிருத்திராக்கம் என்னுஞ் சிவ சின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவ பெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களையுச் சரித்தல், சிவபெருமானைப் பூசை செய் தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுரா ணங்களைக் கேட்டல், சிவாலய தரிசனஞ் செய்தல், சிவனடியாரிடத்தன்பிப் போ சனம் பண்ணுமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பனவாம். உடலிலக்க ணமும் பத்து அவையாவன - சிவபெரு மானுடைய பெருமையைப் பேசுந்தோ றும், சிந்திக்குந்தோறும் கண்டம் விம்மு தல், நாத்தடித்தல், உதடு துடித்தல், சரீ ரநடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறு வேர்வை கொள்ளல், நாக்குத் தழுதழுத் தல், ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய் விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அ யர்த்தல் என்பவைகளாம்.

புறப்புறச்சமயம் - சு - உலகாயதம், சௌத் திராந்திகம், யோகாசாரம், மாத்மிகம், வைபாடிகம், ஆருகதம்.

புறப்பொருள்வகை - அ - பசுக்கவர்தல், நிரைமீட்டல், பகைமேற் செல்லல், பகை முன்னெதிரூன்றல், தன்னரண்காத்தல், பகை யரண் வளைத்தல், பொருதல், போர் வெல்லல்.

பூ

பூ - ச - கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ; நிலப்பூ என ஒன்றுகூட்டி ஐந் தென்பாருமூளர்.

பூதம் - நி - வேதாளம், பிரம்மரக்ஷஸ், இருளன், மாடன், கருப்பன்.

பூதம் - நி - நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

பூமி - கஉ - சைவீபூமி, பிராம்மபூமி, வைஷ்ணவபூமி, ஐந்தீரபூமி, பசுபூமி, பூதபூமி, ஆசுரபூமி, பைசாசபூமி, ராக்ஷஸபூமி, வாயுபூமி, வருணபூமி, ஆக்நேயபூமி.

பூஜை - உ - பாஷ்யபூஜை, அந்தரபூஜை.

பெ

பெண்கள்பருவம் - ச - வாலை, தருணி, பிரவிடை, விருத்தை.

பெண்கை - அ - கடகம், சுகதண்டம், காங்கூலம், பிறைக்கை, அராளம், பக்கம், தாம்பிரசூடம், மான்றலை.

பெண்பாற்பிள்ளைத்தமிழ் - ல - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.

பெண்வகை - ச-பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

பெரியோரியல்பு-எ-அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

பெருங்கல விலக்கணம் - எ - கோட்டின தளவு பண்ணிருசாண், வணரளவுசாண், பத்தரளவு பண்ணிருசாண் இப்பெற்றிக் கேட்ட ஆணி, திவவு, உந்தி ஆயிரங் கோற்றொடுப்பு.

பெருங்காப்பியம் - இ - சிந்தாமணி, நிலப் பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.

பெருந்தானம், - அ - நெஞ்சு, மிடறு, நா, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை.

பெரும்பண்ணின் வகை - பாலையாழ், செந்து, மண்டலியாழ், பௌரி, மருதயாழ், தேவதாளி, நிருபதுங்கராகம், நாகராகம், குறிஞ்சியாழ், ஆசாரி, சாயவேளர், கொல்லி, கின்னராகம், செவ்வழி, மௌசாளி, சீராகம், சந்தி.

பே

பேடியிலக்கணவகை - உஇ-நச்சுப்பேசல், நல்லிசையோர்தல், அச்சமாறல், ஆண் பெண்ணுதல், ஒருகை வீசி நடத்தல், தலையிலொருகை வைத்தல், எதிர்ந்தோர் தோளைக் கண்டுவிலகல், எதிர்ந்தோர் மேற் செல்லுதல், பார்வைவேறுபடுதல், பிறருக்கு நடுநடுங்கிச் சுழன்று திரிதல், பிறரைக் கண்டு நகைத்தல், நாணுதல், பலநாடகஞ்செய்தல், பக்கம் பார்த்தல், பதுங்கித் திரிதல், காரணமில்லாமற் பல வற்றைக் கோபங்கொண்டு பேசல், தானே முலையைத் தானே வருத்தல், அசக்கல், அழுதல், சோர்ந்தருவருத்தல், குறுக்கிக் கூட்டிப் பார்த்தல், இடையிலொருகை வைத்தல், அதனைவாங்கல், இரங்கிப் பேசல், எல்லெல்லென்று பாடுதல்.

பேதம் - ஈ - சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம்; அவையாவன - மரத்துக் கிலையரும்பு பூ காய்கனி முதலிய சுகத பேதம். மரத்துக்கு மறுமரஞ் சுசாதி பேதம். மரத்துக்குக் கல் விசாதிபேதம்.

பேராயம் - அ - காரணத்தியல்வர், கருமாதிகாரர், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவரின்மறவர். எண்பேராய மெனவும்படும்.

பேறு - கசு - புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, தாணிவு, நோயின்மை, வாழ்நாள்.

பொ

பொதுப்பாயிரம் - இ - நூல்வரலாறு, ஆசிரியனிலக்கணம், நூவலுற்கிறன், கொள்வோன்றிறன், கோடன் மரபு.

பொருளாராய்ச்சிவகை - அ - திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழுவழக்கு, இடம்; இவற்றுள் திணையிரண்டு, பால் பதினைஞ்சு, செய்யுளறுவகை, நிலன்,

நால்வகை, காலம் பன்னிரண்டு, வழு பதினொன்கு, வழக்கிருவகை.

பொருளின்பொதுத்தொழிற்பண்பு - கூ - தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல்.

பொருள் - உ - கல்விப்பொருள், செல்வப் பொருள்.

பொருள் - ச - அறம், பொருள், இன்பம், வீடு.

பொருள் - அ - வேர், இழங்கு, பட்டை, பிசின், இலை, பூ, கனி, வித்து, இவையே எண் பொருளெனப்படும்.

பொருள் - கூ - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனம், இவைதருக்கத்திற் கொண்ட பிரமேயப் பொருள்கள்.

பொருள்கள் - ஈ - பதி, பசு, பாசம்.

பொருள்கோள் - அ - யாற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அலைமறி பாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று.

பொருள்வகை - ச - நாடகம், பிரகரணப் பிரகரணம், பிரகணம், அங்கம்.

பொழுது - உ - காலை, மாலை.

பொழுது - சு - மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, இவையேயத்த மயகால முதலொவ் வொன்று பப்பத்து நாழிகையாக முறையே கொள்க. இவற்றைச் சிறுபொழுதென்பர். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில், என்னு மாறனுமாம். இவை பெரும்பொழுதாம்.

பொறி - ஈ - மனம், வாக்கு, காயம்.

பொறி - இ - மெய், வாய், கண், மூக்கு; செவி.

பொறிக்காட்சிவகை - சு - சையோகம், சையுத்த சமவாயம், சையுத்த சமவேத சமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடண விசேடிய பாவம், இவற்றுள், க - சையோகம் ஆவது யாதொரு பொழுதுகடம் விடயமாயிருக்கிற ஞான மான தண்டாக நின்ற தப்பொழுது கண் இந்திரியம், கடம், விடயம் இந்த விரண்டினுடைய கூட்டுறவு இது பிரிந்திருக்கிற வத்துக்களினுடைய சம்பந்தமாகையாலே சையோகமெனப் பெயராயிற்று. சையுத்த சமவாயமாவது யாதொரு பொழுது கண்ணிலே கடத்திலேயிருக்கிற உருவமானது அறியப் படுகின்றதோ அப்பொழுதே கண் இந்திரியம் கடத்தையடைந்திருக்கிற நீலாதிரூபம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம். சையுத்தசமவேதசமவாயமாவது யாதொரு பொழுது கண்ணிலே கடத்தையடைந்திருக்கிற உருவத்திலேயிருக்கின்ற ரூபத்துவமானது அறியப்படுகின்றது. அப்பொழுது கண் இந்திரியம் உருவத்துவம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம். சமவாயமாவது - எக்காலத்திற் சோத்திரேந்திரியத்திலே சத்தமானது அறியப்படுகிறதோ அப்போது சோத்திரம் இந்திரியம் சத்தம் விடயம் இவைகளினுடைய சம்பந்தமாம். சமவேதசமவாயமாவது எக்காலத்தில் சோத்திரத்திலே சத்தத்தின்றன்மை காணப்படுகிறதோ அப்போது சோத்திரம் இந்திரியம், சத்தத்துவ சாமானியம் விடயம் இவைகளினுடைய சம்பந்தஞ் சோத்தரத்திலே சமவேகமாயிக்கிற சத்தத்திலே சத்தத்துவஞ் சமவாய சம்பந்தமாயிருக்கையினலென வறிக. விசேடண விசேடிய பாவமாவது எக்காலத்திற் கண்ணுடனே கூடியிருக்கிற பூமியிலே கடத்தினுடைய சுபாவமான தறியப்படுகின்றது. அஃதாவது இந்தப் பூமியிற் கடமில்லையென்றல் அப்போது கண்ணுடனே கூடியிருக்கிற பூமிவிசேடணம், கடாபாவம் விசேடியம். கடாபாவத்தையுடையது, பூதலம் என்றபோது கண்ணுடனே கூடின பூமி விசேடியம். கடாபாவம் விசேடணம்; இதன் விரிவையெல்லாம் பௌட்கராகமத்திற்காண்க.

பொன்வகை - ச - ஆடகம், இளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

போ

போககரணம் - சுச - ஆலிங்கனம் - இ, அதரபானம் - க, அபிர்தனிலை கசு, நகக்குறி, - அ, பற்குறி - அ, குரல் - அ, தாடனம்-அ, இதனை "ஆலிங்கன மைந்தும் மிதழ்ப் பானம்பதி னொன்று மமிர்தம் பதினறும் முதிரெழுதுங்குறி யெட்டுங், கோலம்புனை தந்தக்குறி யெட்டுங் குரலெட்டுங் குவிதாடன மிருநான்

கொடு கூடுங்கலவிக்கே'' என்னுஞ்செய்யுளான றிக. விரிவுகள் மதனுகமத்தும், கந்தபுராணம், இந்திரபுரிப் படலத்தும், பார்க்கவபுராணம் இந்திரன் சாபம் பெற்றபடலத்தும், பிறவற்றும் உரைக்கப்பட்டமை காண்க.

போகபூமி - சு - ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

போகம் - அ - பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போதப்பிரகாரம் - ரு - உத்தேசம், இலக்கணம், பரீட்சை, அவையாவன - தான் விவகரிக்கும்பொருளைப் பெயர்மாத்திரங் கூறலுத்தேசம், அப்பொருளின் சிறப்புத் தன்மை கூறலிலக்கணம்,-அப்பொருளிலிவ்விலக்கணமுண்டோ வின்றோவெனப் பார்த்தல், பரீட்சை.

போது - உ - பகல், இரவு.

ம

மகளிரான் மலர் மரம் - ய - மகிழமரஞ் சுவைக்க, எழிலம் பாலைமரம் நட்புற, பாதிரிமரம் நிந்திக்க, முல்லைக்கொடி நகைக்க, புன்னையாட, குராவணைக்க, அசோகுதைக்க, குருக்கத்திபாட, மராபார்க்க, சண்பக நிழல்படத் தளிர்த்துப் பூப்பனவாம்.

மங்கலச்சொல் - உஉ - திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம், இவற்றின் பரியாயப் பெயரும், பிறவுமாம்.

மங்கலம் - அ - சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல்; இவையே யட்டசுப மெனவும் படும்.

மங்கலம்-உக-முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், நீபம், இடபம், சிங்காசனம், கடல் என்பன அரசர்க்குரிய மங்கலப் பொருள்களாம்.

மங்களாசரணை - ரு - வாழ்த்து, வணக்கம், செயப்படுபொருள்.

மணப்பொருத்தம்-ய-தினம், கணம்,மாகேந்திரம், ஸ்திரீதீர்க்கம், யோனி, ராசி, ராசியதிபதி, வசியம், ரச்சு, வேதை. இவை தசப் பொருத்தம் எனவும் படும்.

மணம்-அ-பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம்; இவற்றுட் பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது பிரமமணம்; தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத்தாருட்பட்ட வளைத் தீமுன்னர்க்கொடுப்பது பிரசாபத்தியமணம். ஒன்றிரண்டு பசுவுமெருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பசாரிடமணம்; வேள்வியால் வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது தெய்வமணம், கொடுப்பாருங் கேட்பாருமின்றி யிருவருந்தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது காந்தருவ மணம்; பெண்ணுக்குப்பொன் பூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன்வேண்டுவனகொடுத்துக் கொள்வ தசுரமணம்; பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற் கொள்வதிராக்கதமணம், துயின்றாளைச் சென்று கூடுவது பைசாசமணம்.

மணி - கூ- கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம்,முத்து, வைடூரியம், வைரம். இவை நவமணிகள் எனப்படும். வைரம் எல்லாவற்றினும் சிறந்ததாம். கோமேதகமும் பவழமும் எல்லாவற்றினுந் தாழ்ந்தனவாம். மரகதமும் மாணிக்கமும் முத்தும் தலையாய மணிகளாம்.இந்திரநீலமும், வைடூர்யமும் இடையாய மணிகளாம்.

மண்டலம்-ரு-அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திரமண்டலம்.

மண்டலம்-ஙி- பூமண்டலம், ஜலமண்டலம், அக்கினிமண்டலம், வாயுமண்டலம்,ஆகாசமண்டலம்.

மண்டலம்-எ- வாயுமண்டலம், வருணமண்டலம்,சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திரமண்டலம்,அக்கினிமண்டலம், திரிசங்குமண்டலம்.

மதநீர்-எ- கன்னமிரண்டு, கண்ணிரண்டு, கரத்துவாரமிரண்டு, கோசம் ஒன்று, என்னும் ஏழிடத்திலிருந்து யானைக்குத் தோன்றுமதநீர்.

மதம்-எ- உடன்படல், மருத்தல், தாஅளுட்

டித்தலுது நிறுப்பு, பிறர்தம்மத மேற் கொண்டு கூலவு, இருவர் மாறுகொ ளொருதலேதுணிவு, பிறனூற் குற்றங் காட்டல், பிறிதொடுபடான் தன்மதங் கொளல்.

மத்திமதானவகை - நி- ஆதுலர், அந்தகர், அவயவ மிழந்தவர், பற்றுக்கோடில்லாத வர், பெண்கள் என்பார்க்குக்கொடுத்தல்.

மரகதக்குணம் - அ-நெய்த்தல், மயிற்கழுத் தொத்தல், பசுமையாதல், பொன்மை, அதனுட்பசுத்தல், வக்கிபாய்தல், பொன் வண்டின்வயிறுபோலிருத்தல், தெளிதல்.

மரகதக்குற்றம் - அ- கருகல், வெள்ளை, கல், மணல், கீற்று, பரிவு, தார், சாயையிறுகல்.

மரபு - உ- தந்தைவழி, தாய்வழி. [ஆக்கம்.

மருட்கை - சு- புதுமை, பெருமை, சிறுமை,

மருதயாழ்த்திறன்வகை - கசு- தக்கேசி, கொல்லி, ஆரியகுச்சரி, நாகதொனி, சாதாளி, இந்தளம், தமிழ் வேளாளர் கொல்லி, காந்தாரம், கூர்ந்தபஞ்சமம், பாக்கழி, தத்தளபஞ்சமம், மாதுங்க ராகம், கௌசிகம், சீகாமரம், சாங்கிமம்.

மருத்துக்குகள் - எ-கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பல யோனியுயிர்.

மருந்து-சு- சல்லிய கரணி, சந்தான கரணி, சமனிய கரணி, மிருதசஞ்சீவினி.

மலடு - உ- பெண்மலடு, ஆண்மலடு.

மலம் ஙு- ஆணவம், மாயை, காமியம்.

மலை - எ- கைலை, இமயம், மந்திரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி; அன்றிக் கந்தமாதனங்கூட்டியெட்டெனவும்படும்.

மலைநாட்டிலுள்ள சிவாலயம் -க- திருவஞ் சைக்களம்.

மலைபடுதிரவியம் - நி- அகில், குங்குமம், கோட்டம், தக்கோலம், மிளகு.

மறத்துறைவகை - எ- வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை.

மன்மதன்கணை-நி-வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம்; இவற்றின் பெயர் முறை யே உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசிகரணம், இவை செய்யும வத்தை- சுப்பிரயோகம், விப்பிரயோகம், கோசம், மோகம், மரணம், அவையாவன —சுப்பிரயோகம் சொல்லுகினவும், விப் பிரயோகம் வெய்துயிர்த் திரங்கல், சோ கம் வெதுப்புந் துய்ப்பனதெவிட்டலும், மோகம் அழுங்கலு மொழிபல பிதற்ற லும், மரணம் அயர்ப்புமயக்கமும்.

மன்னவர்சகாயர் அ- கரணத்தியல்வோர், கடைகாப்போர், நகரமக்கள், படைத் தலைவர், சுற்றத்தார், இவுளிமறவர், யானை வீரர், கருமவதிகாரர்.

மஹாராஜாக்கள்-கசு-அங்கன், அம்பரீஷன், இரந்திதேவன், சசிபிந்து, சிபி, சுகோத் சன், திலீபன், பரதன், பகீரதன், பிருது, நிருகன், மாந்தாதா, மருத்து, யயாதி, கயன், இராமன், இவர்கள் சோடச மகா ராஜாக்கள் எனப்படுவர்.

மா

மாணிக்கச்சாதி - சு- பதுமம், நீலம், விந் தம், படிதம்.

மாதம் - கஉ-சைத்திரம், வைசாகம், சேட் டம், ஆஷாடம், சிராவணம், பாத்திர பதம், ஆசுவீசம், கார்த்திகம், மார்க்க சிரம், புசியம், மாகம், பாற்குணம். இவை முறையே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி. இவற்றிற்கு முறையேயுரிய நட்சத்திரம் - சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அசுவினி, கார்த்திகை, மிருக சீரிடம், பூசம், மகம், உத்திரம்.

மாதர்கள்-எ- அபிராமி, மகேச்சுவரி, கௌ மாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி; இவர்க்கு முறையேவாகனம்-அன் னம், இடபம், மயில், கருடன், சீயம், யானை, பேய், முன்றையே யாயுதம்-மறை, பிநாகம், வேல், ஆழி, கலப்பை, வச்சி ரம், சூலம்.

மாயை - ஙு- சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை.

மாயை - நி- தமம், மாயை, மோகம், அவித் தை, அநிர்தம்; அவையாவன:—சீவ சைதன்னியத்தை மறைக்கையாற்றமம், ஜகரூபமான வந்நிதாத்தோற்றத்திற்குக் காரணமாகையான் மாயை, விபரீதஞான மூண்டாக்குகையான்மோகம், உணர் வழிக்கையா லவித்தை, சத்துரூபத்துக் கந்நியமாகையா லநிர்தம்.

மாயைக்குணம் - எ- அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசாசுந்நியம், மாச் சரியம், பயம். இவற்றுள் அஞ்ஞானமா வது, பொய்யை மெய்யென்று பொல் லாங்குசெய்தல், பொய்யாவது, உள்ளதை

யில்லதாகவும், இல்லதையுள்ளதாகவுஞ் சொல்லுதல், அயர்வாவது கண்டதை வழுந்திமயங்கல், மோகமாவது காமத் தான் மூர்ச்சித்தல், பைசா சுன்னியமா வதுஆசையுண்டாயதனையில்லையாகவொ ளித்தல், மாற்சரியமாவது பிறவுயிர் களைத் தாக்கவுங் கொல்லவுநினைத்தல், கேடுநினைத்தல், பயமாவது உயிர்க்கிறுதி வருமென்று அச்சமுற்றுத் திரிதல்.

மாயையிற் ரோன்றுவன - ஈ - காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், முதலாய வித்தியாதத்துவ ஆன்ம தத் துவங்களாம்.

மார்க்கம் - சு- சரியை, கிரியை, யோகம், ஞானம்.

மாலை - அ- வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ் சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை. இவை முறையே நிரைகவர்தல், நிரை மீட்டல், பகைமேற்சேரல், எதிரூன்றல், மதில்காத்தல், அரண்வளைத்தல், அதிரப் பொருதல், போர் வெல்லுதல் என்னு மிவற்றிற்குரியனவாம்.

ழ

ழகம்-கசு-அஞ்சிதம், அதோமுகம், ஆகம் பிதம், பிரகம்பிதம், ஆலோலிதம்,உலோ லிதம், உத்துவாகிதம், சமம், சௌந்தரம், துதம், விதுதம், பராவிருத் தம், பரிவாகிதம், திரச்சீனம்; இவற்றுள் வருத்த மாற்ரு திருதோண்மேற் றலை சாய்த்த லஞ்சிதமுகம், தலைகுனிந்து பார்த்த லதோமுகம், சம்மதித்தற்கு மேல்கீழ்த்தலையாட்ட லாகம்பிதமுகம், அதிசயத்தாற் சிறிது தலையாட்டல் பிர கம்பிதமுகம், ஆசையான் மலர்ந்தமுகமா யொருவனை யழைத்தலாலோலிதமுகம், சிந்தையாலொரு தோண்மேற் றலை சாய்த்தல் உலோலிதமுகம், தலையண் ணைந்து பார்த்தலுத்துவாகிதமுகம், தியா னிப்பதுபோலத்தலையசையாதிருத்தலே சமமுகம், பூரித்தமகிழ்ச்சியான் மலர்ந்த முகங்காட்டலே சௌந்தரமுகம், வேண் டாததற்கிடம் வலந்தலையாட்டலே துத முகம், உணவுணி முதலியவேண்டா மைக்குத் தலைநடுக்கலே விதுதமுகம், வேண்டாததற்கு முகந்திருப்பலே பரா விருத்தமுகம், மதத்தாலொருபுறஞ்சாய்ந் ததலையைச்சிறிதாகச் சுற்றியாட்டல் பரி வாகிதமுகம்-நாணத்தாற்றலையாட்டலே திரச்சீனமுகம்.

முதல்வள்ளல் - எ- குமுணன், சகரன்,சகா ரன், செம்பியன், துங்துமாரி, நளன், நிருதி.

முத்திவகை - உ- பரமுத்தி, அபரமுத்தி. பரமுத்தியாவது சிவசாயுச்சியம், அபர முத்திகளாவன சிவசாரூப்பியம், சிவசா மீப்பியம், சிவசாலோக்கியம்.

முத்திவிக்கினம் - ஈ- அறியாமை, ஐயம், திரிபு.

முத்துக்குணம் - சு-தெளிந்தவொளி, சந்தி ரன்போன்றிருத்தல், வெள்ளிபோல் வெண்ணிறமுடைமை, அங்காரகன் போற்செங்நிற முடைமை.

முத்துக்குற்றம் - சு- காற்றேறு,மணலேறு, கல்லேறு, நீர்நிலை.

முத்துச்சனிக்குமிடம் - உ0 - மதி; மேகம், சங்கு, சிப்பி, மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு,கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக் கொம்பு, பன்றிக்கொம்பு, பசுவின் பல், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து.

மும்மை - ஈ - உம்மை, இம்மை, மறுமை.

முரசு-உ-யானைமுரசு, ஒட்டகமுரசு, போர் தொடுக்க அறைதல் யானைமுரசு, போர் விடுக்க அறைதல் ஒட்டகமுரசு, இதனை இரணபேரிகை என்பர்.

முரசு - ஈ - வீரமுரசு, கொடை முரசு, மண முரசு.

முழவு - எ-அகமுழவு, அகப்புறமுழவு, புற முழவு, புறப்புறமுழவு, பண்ணைம முழவு, காலமுழவு, நாண்முழவு.

முனிவர் - எ - அத்திரி, ஆங்கீரசன், கௌத மன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட் டன், விசுவாமித்திரன், அன்றியும் அகத் தியன், ஆங்கீரசன், கௌதமன், காசி பன், புலத்தியன், மார்க்கண்டன்.

முனிவர் - ஊக - அகத்தியன், அத்திரி, ஆங் கீரசன், இரண்யன், மாமுனி, உரோம மாமுனி, ஏரண்டமாமுனி, கலைக்கோட் டுமுனி, காசிபன், கௌதமன், சத்த கூன் முனி, சச்சிதானந்தன், சமதக்கினி, சனகன், சனக்குமாரன், சுகன், தத்திமகா முனி, துருவாசன், நாரதன், பதஞ்சலி, பரத்துவாசன், பராசுரன், பற்பமாமுனி, பிருகுமாமுனி, பிஞகிமாமுனி, புலத்தி யன், மார்க்கண்டன், வசிட்டன், வான்

மீகன், விசுவாமித்திரன், வியாக்கிரபாதன், வியாசன்.

மூ

மூர்த்தம் - அ - பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.

மூர்த்தவதிதேவதை - அ - பவன், சருவன், ஈசானன், பசுபதி, வீமன், மாதேவன், உக்கிரன், உருத்திரன்.

மூர்த்தவதிதேவதைகளின் மனைவியர் - அ - சுவர்ச்சலை, உரோகிணி, உசை, சுகேசி, சுவாகை, திசை, சிவை, தீக்கை.

மூர்த்தவதிதேவதைகளின் மைந்தர் - அ-மந்தன், புதன், சுக்கிரன், செவ்வாய், குகன், சுவர்க்கன், மனோசிவன், சந்தனன்.

மூர்த்தி - ஈ - சிவன், திருமால், பிரமன்.

மூலம் - ஐ - கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர், (இவ்வைந்துஞ்சிறுபஞ்சமூலமென்ப.) வில்வவேர், பெருங்குமிழம் வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர். (இவ்வைந்தும்பெரும்பஞ்சமூலமென்ப.)

மெ

மெய்க்கூத்து-ஈ - தேசி, வடுகு, சிங்களம். இவை மெய்த்தொழிற் கூத்தாகலின் மெய்க் கூத்தாயின. அகச்சுவைபற்றி யெடுத்தலின் அகமார்க்கமெனவுங்கூறப்படுமென்னே? "குணத்தின் வழியதகக் கூத்தெனப்படுமே" எனக் குணநூலுடையாரும், "அகத்தெழு சுவையானகமெனப் படுமே" எனச் சயந்த நூலுடையாரும் கூறினராகலின்.

மெய்ப்பாசம் - அ-ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல். இவை மெய்ப்பொறியாற் செயப்படுந் தொழில்.

மெய்யெழுத்துவகை - ஈ-வல்லினம், மெல்லினம், இடையினம்.

மே

மேகம் - எ - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், இவைபொழிவன முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.

மேடவீதி - ஈ - இடபம், சிங்கம், மிதுனம், கர்க்கடகம்.

மேலுலகம் - எ - பூலோகம், புவலோகம், சுவர்க்கலோகம், மகலோகம், தவலோகம், சனலோகம், சத்தியலோகம்.

மொ

மொழி - ஈ-மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.

யா

யாகம்-ஈ-பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம், இவற்றுள் வேதமோதல் பிரமயாகம், ஓமம்வளர்த்தலே தெய்வயாகம், பலியீதல் பூதயாகம், தர்ப்பண முடித்தல் பிதிர்யாகம், இரப்போர்க் குணவு முதலிய வீதலே மானுடயாகம்.

யாகம் - கஅ - சோதிட்டோமம், அங்கிட்டோமம், உத்தியம், சோடசீ, வாசபேயம், அத்திராத்திரம், சோமயாகம், சாதுர்மாசியம், மவத்திரமேதம், சௌந்திராமணி, புண்டரீகம், அங்கிசயன், இராசசூயம், அச்சுவமேதம், விச்சுவசித்து, பிரமமேதம், பிரணவமேதம், பசுபந்தம்.

யாகம்-உக-அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உத்தியம், சோடசீ, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினி கோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூடபசுமந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணீ, ஆக்கிரகாயணீ, சைத்திரி, ஆசுவயுசி.

யாக்கைக்குறுகுற்றம் - கஅ-பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு.

யாழ்வகை-ச-பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்.

யாழ்வகை நரம்பு - சை - எ, கசு, கள, உக, இவற்றுள் செங்கோட்டி யாழிற்கு ஏழு, சகோடயாழிற்குப் பதினாறு, மகரயாழிற்குப் பதினேழு, பேரியாழிற்கு இருபத்தொன்று.

யானை-ஈ-நதிசரம், வனசரம், கிரிசரம்.

யு

யுகம்-சை - கிரேதயுகம், திரேதயுகம், துவாபரயுகம், கலியுகம்.

யுக்தி-ஈ-ஞானம், சோதனை, பொருத்தம்.

யோ

யோகம் - ஐ - அட்டாங்கயோகம், மந்திரயோகம், பரியோகம், பாவயோகம், மாயோகம், பாசுபதயோகம், கருமயோகம், ஞானயோகம், சாங்கியயோகம், தியானயோகம், இவற்றின் விரிவுகளை யெல்லாம் கூர்மபுராணம், இலிங்கபுராணம், வாயுசங்கிதை முதலியவற்றிற் காண்க.

யோகம் - உள - விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி. இவை முறையே, கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், தூணை, சூலம், கண்டம், ஆக்கம், நிலை, உரவு, எக்களிப்பு, வேல், வல்லமை, கொலை, காயம், தாழ்வு, காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரமா, இந்திரன், பேய், இவற்றுள் கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதிபாதம், பரிகம், வைதிருதி யென வொன்பதன்றி மற்றவை நல்லன. இவற்றுள்ளும் கம்பத்தின் மூன்றும், சூலத்திலொன்றும், கண்டத்திலு மதிகண்டத்திலுமாறும், வியாகாதத்தி லொன்பதுங்கழித்து நின்றநாழிகையுமாம்.

யோகவகை-�ை-மரண யோகம், சித்த யோகம், அமிர்தசித்தயோகம், அமிர்தயோகம்.

யோகாசனம் - சு - மூற் கூறிய எண்வகை யாசனங்களன்றி நிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல், சமயம், சுகமுமாம்.

யோனிவகை - சை - உள்ளோன் றலைவனுகவுள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் றலைவனுகவுள்ளதோர் பொருண்மேற் செய்தலும், உள்ளோன் றலைவனுகவில்லதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் றலைவனுகவில்லதோர் பொருண்மேற் செய்தலுமாம். இஃது நாடக லக்கணம்.

வ

வங்கியத்தின்கூறுபாடு - கி-மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி.

வங்கியப்பண்-எ-சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம்.

வசுக்கள்-அ-அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன். [பொதுவியல்.

வசைக்கூத்தின் வகை - உ - வேத்தியல், வடுகிற்குறிய கால்கள் - கசை-சுற்றுதல், எறிதல், உடைத்தல், ஒட்டுதல், கட்டுதல், வெட்டுதல், போக்கல், நீக்கல், முறுக்கல், அணுக்கல், வீசல், குடுப்புக்கால், கத்திரிகைக்கால், கூட்டுதல்.

வணிகர்குணம்-அ-தனிமை யாற்றல், முனிவிலனுதல், இடனறிந்தொழுகல், பொழுதொடு புணர்தல். உறவது தெரிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல், பகுத்தல்.

வண்டுவகை - சை - சுரும்பு, தேன், ஞிமிறு, வண்டு.

வண்ணக்கூறுபாடு-சு-செம்முறை, உறழ்பு, மெய்ந்நிலை, கொட்டல், நீட்டல், நிமிர்த்தல்.

வண்ணம் - ஈ-பெருவண்ணம், வனப்புவண்ணம், இடைவண்ணம்.

வண்ணம்-கி-வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

வரி - அ - கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி.

இவற்றுள் கண்கூடுவரியாவது பிரியதரிசனம் அஃதாவது காட்சி, அஃது ஒருவர் கூட்டமின்றித் தானே வந்து நிற்கும் நிலைமை. ஆகவே எதிர்முகமாக நின்று நடிக்கும் நடிப்பு.

காண்வரியாவது - புயல்சுமந்து வருந்திக் கதிரைப் பொழியும்மதியிடத்தேகயல் கலுலாவித் திரிகின்றசெவ்வியோடே

பாகைப் பொதிந்த பவளத் திறந்து ஒளியைத் தருகின்ற முத்தை யொத்த நகைமுகத்தைக்காட்டி வருகென வந்து போவெனப் போகிய கரிய நெடிய கண்ணுள் கூத்தாம்.என்னே? "காண்வரியென்பது காணுங்காலை - வந்தபின்னர் மனமகிழ் வுறுவன - தந்து நீங்குந் தன்மைய தாகு" என்றுராகலின்.

உள்வரியாவது - வேற்றருக் கொண்டு நடித்தல். "உள்வரியென்ப துணர்த்துங் காலை - மண்டலமாக்கள் பிறி தோருருவம் - கொண்டுங்கொள்ளாது மாடுதற் குறித்தே" என்றதனுலறிக. ஈண்டு மண்டலமாக்கள் என்றது அரசரை. பாண்டவர்களுள் பிறிதுருவங் கொண்டது மிவ்வரிப்பாலதாம்.

புறவரியாவது - தலைவனுட னணையாது புறத்துநின்று விளையாடுவது. இதனை "புறவரியென்பது புணர்க்குங்காலை-யிசைப்பவந்து தலைவன் முற்படாது - புறத்து நின்றுடி விடை பெறுவதுவே" என்ற சூத்திரத்தானறிக.

கிளர்வரியாவது - நடுநின்றூர் இருவருக்குஞ் சந்து சொல்லக் கேட்டு நிற்பது. என்னே? "கிளர்வரியென்பது கிளக்குங் காலை யொருவருய்ப்பத் தோன்றியவர் வா - யிருபுற மொழிப்பொருள் கேட்ட நிற்பதுவே" என்றுராகலின்.

தேர்ச்சிவரியாவது - நாயகன் கிளை கட்குத் தன் துன்பங்களைத் தேடித்தேடிச் சொல்லுதல். என்னே? "தேர்ச்சியென்பது தெளியுங்காலைக் - கெட்டமாக்கள் கிளைகண்டவர்முன் - பட்டதுமுற்றது நினைஇ யிருந்து தேர்ச்சியோடுரைப்பது தேர்ச்சி வரியாகும்" என்றுராகலின்.

காட்சிவரியாவது - தன்வருத்தத்தைக் காணும்படி நடித்தல். என்னே? "காட்சிவரியென்பது கருதுங்காலைக் - கெட்டமாக்கள் கிளைகண்டவர் முன்னர்ப் - பட்டது கூறிப் பரிந்து நிற்பதுவே" என்றுராகலின்.

எடுத்துக்கோள் வரியாவது - தான் கையறவெய்தி வீழ்ந்தாளாக வீழ்ந்து, பிறர் எடுத்துக் கொள்ளும்படி நடித்தல். இதனை "எடுத்துக் கோளையிசைக்குங் காலை - யடுத்தடுத்தழிந்து மாழ்கி யயலவ ரெடுத்துக் கோள்புரிந்த தெடுத்துக்கோளே" என்ற சூத்திரத்தானறிக.

வரிக்கூத்து - கூ - சிந்துப்பிழுக்கைசந்தி, கொந்தி, கவுசி, குடப்பிழுக்கை, கந்தன் பாட்டு, ஆலங்காட்டாண்டி, பருமணனெல்விச்சி, சூலநட்டம், தாண்டில், ஆண்டி, அமண், புனவேடு, ஆளத்தி, கோப்பாளி, பாண்டிப்பிழுக்கை, பாம்பாட்டி, ககவுட்சடைவீரம், மாகேசம், காமன், சிந்து, வாமனம், விகடம், கொற்றி, பலகை, வாள், பப்பரப்பு, தகுணிச்சம், சித்து, முண்டிதம், பறை, பண்டிதன், பத்தன், குரவை, பப்பறை, காவதன், பித்தன்மாணி, பெருபிழுக்கை, மது விளையாட்டு, களியாடல், பறைக்குடும்பு, தேர்ற்கூத்து, மூத்தகிழவன், கிழவி, கிள்ளுப்பிரண்டி, பள்ளி, விக்கட்டாங்கம், அம்மனை, பந்து, கழங்காடல், வீண்ணகக்காளி, விறற்கொந்தி, வண்டு, வாரிச்சி, பிச்சி, சடாதாரி, பிடர்கிருத்தம், தளிப்பாட்டு, சதுரங்கம், சோணண்டு, மலையாளி, வேதாளி, வாணி, குதிரை, வில்வேடு, செந்தலைவிளக்குப் பிச்சி, மலைச்சி, இருண்முகப்பேதை, இருவன், பல்லாங்குழி, பகடி, பகவதியாள், சாழல், உந்தி, அவலிடி, ஊராளி, யோனிச்சி, பாரன், குணலை, மாலைவிளையாட்டு, உள்ளிப்பூ, ஐயனுக்குப் பாடும் பாட்டு, ஆடும் பள்ளி, கும்பிடு நாட்டம், குணுட்டம், குணலை, சும்மைப்பு, சோனகம், மஞ்சிரி, உழைமை, பறைமை. இவற்றைப் பல்வரிக் கூத்தென்பாருமுளர்.

வருடம் - சுo - பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கிரச, சீமுக, பவ, உவ, தாது, ஈச்சுர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, வீய, (இவ்விருபது முத்தமவருடம்) சருவசித்து, சருவதாரி, விரோதி, விகிர்த்தி, கர, நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, எவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாசு, பராபவ, (இவ்விருபதும் மத்திம வருடம்) பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சச, நள, பிங்கள, காலயுத்தி, சித்தார்த்தி, ரௌத்திரி, துன்மதி, துந்துபி, உருத்திரோற்காரி, இரத்தாட்சி, குரோதன, அட்சய (இவ்விருபது மதம வருடம்.)

வருணம் - ச - பிரம சத்திரிய, வைசிய,

சூத்திரர். இவற்றைச் சாதியென்றுங் கூறுப.

வருத்தனை - ச - அபவேட்டிதம், உபவேட்டிதம், வியாவர்த்திதம், பராவர்த்திதம்.

வருஷம் - ரு - பரதவருஷம், ஏமகூடவருஷம், நிஷதம், இளாவிருதம், நீலம், சுவேதம், குரு, பத்திராச்வம், கேதுமாலம். இவையே நவவருஷம் எனப்படும்.

வலவோட்டுநட்சத்திரம் - கடி - அசுவனி, பரணி, கார்த்திகை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், அஸ்தம், சித்திரை, சுவாதி, மூலம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி.

வலி - றி - அமரகண்டம், குமரகண்டம், பிரமகண்டம், காக்கை, முயல்.

வழக்கு - உ - செய்யுள்வழக்கு, உலக வழக்கு.

வழக்கு - சு - தொகையுண்மை வழக்கு, தொகை யின்மை வழக்கு, தொடர்ச்சி யுண்மை வழக்கு, தொடர்ச்சி யின்மை வழக்கு, மிகுத்துரை யுண்மை வழக்கு, மிகுத்துரை யின்மை வழக்கு.

வழக்கு - சு - உள்வழக்கு, இல்வழக்கு, உள்ளதுசார்ந்த உள்வழக்கு, உள்ளதுசார்ந்த இல்வழக்கு, இன்மைசார்ந்த உள்வழக்கு, இன்மைசார்ந்த இல்வழக்கு.

வழு - கசை - கைக்கிளைத்திணை வழு, முல்லைத்திணை வழு, குறிஞ்சித்திணை வழு, மருதத்திணை வழு, நெய்தற்றிணை வழு, பாலைத்திணை வழு, பெருந்திணை வழு; வெட்சிவழு, வஞ்சிவழு, உழிஞைவழு, தும்பைவழு, வாகைவழு, காஞ்சிவழு, பாடாண்டிணை வழு.

வளம் - றி - கறி, கோட்டம், குங்குமம், காரகில், தக்கோலம். இவை ஐவள மெனப்படும்.

வள்ளல் - உக - வரையாது கொடுப்போன் வள்ளலென்ப. இவர் முத லிடை கடை யென மூவகைப்படுவர். அவருள்முத லெழு வள்ளல்-குமணன், சகரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி, -இடை யெழுவள்ளல் - அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், - கடையெழு வள்ளல் எழினி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன்.

வா

வாசம்-றி-இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

வாசவகை - கசை - அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு. தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், விசுவாசி, நிரியாசம், தைலம்.

வாச்சியக்கூறுவகை - ரு - கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம். அவற்றுள் கீதாங்கமாவது கீதத்திற்கு வாசிப்பது; நிருத்தாங்கமாவது நிருத்தத்திற்கு வாசிப்பது, உபயாங்கமாவது இரண்டிற்கும் வாசிப்பது.

வாதனை-உறி-நரம்பு முதலிய பிருதிவியின் கூறு ஐந்தும், நீர்முதலியஅப்புவின் கூறு ஐந்தும், பசி முதலிய அக்கினியின் கூறு ஐந்தும், போக்கு முதலிய வாயுவின் கூறு ஐந்தும், வெகுளி முதலிய ஆகாயத்தின் கூறு ஐந்துமாம். [குய்யம்.

வாயில் - சு-கண், காது, மூக்கு, வாய், குதம்,

வாயு - ய -பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்; இவையுடலினிற்பன. அவை யாவன:- இதயத்தியங்குவது பிராணன், உச்சர்க்கத்தலத்திடை நிற்ப தபானன், கந்தரசக்குழியிற் சந்திடை நிற்பது சமானன், நாபியினிற்பது உதானன், சரீரமுழுவதும் வியாபித்திருப்பது வியானன், நீட்டலு முடக்கலுங் கிளக்கலுஞ் செய்வது நாகன், உரோமம் புளகித்திமைப்பது கூர்மன், முகத்திடை நின்று தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது கிருகரன், ஒட்டமுமிளைப்பும் வியர்த்தலும் விளைப்பது தேவதத்தன், உயிர்போகினும் போகா துடலினை வீக்கித் தலை கிழித் தகல்வது தனஞ்சயன்.

வாயுகீடம்-கஅ - குன்னசம், துண்டிகேரம், சிருங்கிசரம், குருந்தகம், உச்சிலிங்கம், அபிலாபம், சுவேதகம், மயூரகம், அபிசாரு, உலூகம், விருத்தம், சாரிபம், வைதளம், சராலம், கூர்மம், வருஷம், சித்திர சீரிஷம், துவிராசிகம்.

வாயுக்கள் - றி - கிருகரன், கூர்மன், தனஞ்சயன், தேவதத்தன், நாகன். (2) அபானன், உதானன், சமானன், பிராணன்,

வியானன். இவையே பஞ்ச வாயுக்க ளெனப்படும்.

வாரச்செய்யுள் - உ - ஒரொற்று வாரம், ஈரொற்று வாரம். அவை தாளத்து ஒரு மாத்திரையும் இரு மாத்திரையும்பெற்று வருவனவாம். வாரமென்பது பற்று.

வாரம் - எ - ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

வாழ்த்து - உ - மெல்வாழ்த்து, இருபுற வாழ்த்து; இது உண்மையாக வாழ்த்த லும் மனம் வேறுபட்டு வாழ்த்தலுமாம்.

வாஞ்ஞர்கணம் - கூ-அக்கணத் தோராவார்-பத்திச்சுவாலகர், ஞாஞதிக்கர், பத்திரா சனர், நாதகிருத்தியர், சத்துவகர், பல வத்தர், பிராதமிகர், அதிதூதர், தூதர், இவையே நவவிலாச சபையாம்; அவை யாவன - பத்திச்சுவாலகர் கடவுளைக் குறித்த பத்தியினலே சுவாலிக்கிறவர், ஞாஞதிக்கர் கடவுளைக் குறித்த ஞானத் திலாதிக்கம் பெற்றவர், பத்திராசனர் கடவுளெழுந்தருளியிருக்கும் தேவசிங்கா தனத்தைப் புகழ்ந்திருப்பவர். இவர் முத லாம் அர்ச்சியப் பிரபுத்துவமுடையோ ராம், நாதகிருத்தியர் நாதனுடைய கிருத் தியத்தை யவனருளாற் புரிபவர், சத்து வகர் கடவுளருளாற் பற்பல வற்புதங்க ளைச் செய்யுஞ் சத்துவம் பெற்றவர், சத்திகளென்றுமாம்.பலவத்தகர் கடவுட் டிரு வுளப்படி யெய்துங் கருமங்கட்கு வரு மிடையூற்றையவனருளாற்றடுக்கும் பலாத்காரம் பெற்றவர், இவரிரண்டா மர்ச்சியப் பிரபுத்துவ முடையோராம். பிராமிகர், கடவுட் டிருவுளப்படியே யிராச்சிய சம்பந்தமான சாதாரண நன் மைகளை நடத்துந் தலைமை பெற்றவர், அதிதூதர் பிரதானமாகிய விசேடங்களை யுலகத்தி லறிவிக்கத் தானுதிபதியாக வருபவர்கள்,—தூதர் மனிதர் பிறந்த கண முதலாகத் தனித்தனியே யவரவ ரைப் பாதுகாத்து நன்னெறியி னடத்தி மற்றும் பிரதான விசேடங்கட் கனுப்பப் படுவர்-இவர் மூன்றும் அர்ச்சியப் பிரபுத் துவ முடையோர்,—அர்ச்சியப் பிரபுத் துவத்திற்கு அதீச்சுரபதவி யென்பாரு முளர். இவைபோப்புமார்க்க கிறிஸ்த வர்களாற் கூறப்படுவன.

வாஞ்ஞர்வரம் - ச - இலகு, சுக்குமம், அட் சயம், பிரகாசம். இவை கனமின்மை, கண்டிப்பின்மை, கேடின்மை, விளக்கம்.

வி

விகாரம் - ரு - தோன்றல், திரிதல், கெடு தல், இவை எழுத்துப்புணர்ச்சிக்குரியன.

விகாரம் - சு - வலித்தல், மெலித்தல், நீட் டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல். இவை செய்யுள் விகாரம்.

விகாரம் -சு- காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், அன்றி இடு ம்பை, அசூயையோ டெட்டெனவுமாம்.

விடை -அ- சுட்டு, எதிர்மறை, உடன்படல், ஏவுதல், எதிர்வினுதல், உற்றதுரைத்தல், உறுவதுகூறல், இனமொழி.

விட்டுணுவின்குரு- ச -சிவபெருமான், நந்தி தேவர், உபமன்னிய முனிவர், வசிட்டர்.

விட்டுணுவின் மனைவிமார் - உ - பூதேவி, சீதேவி. [பொது.

வித்தாடகக் கூத்துவகை - உ - வேத்து,

வித்தியாதத்துவம் - எ - காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை.

வித்தைகள்-கச- வேதம்-ச, வேதாங்கம்-சு, மீமாஞ்சை, தருக்கம், புராணம், தரும நூல். ஆகிய உபாங்கம்-ச.

விநாயகமூர்த்தம் - கசு - சுமுகர், ஏகதந்தர், கபிலர், கஜகர்ணிகர், லம்போதரர், விக டர், விக்கினராசர், கணாதிபர், தூமகேது, கணாத்தியக்ஷர், பாலசந்திரர், கஜானனர், வக்கிரதுண்டர், சூர்ப்பகர்ணர், ஏரம்பர், ஸ்கந்தபூர்வர்.

விநாயகமூர்த்தவகை -கஉ- சிந்தாமணிவிநா யகர், விக்கினராசர், வக்கிரதுண்டர், பாலசந்திரர், கசானனர், மல்லாரென வந்த மயூரேசர், தூமகேது, உடுண்டி விநாயகர், துண்டிராசர், மகோற்கடர், வல்லபை கணேசர், கணேசர். [பை.

விநாயகர்சத்திகள் - ரு - சித்தி புத்தி, வல்ல

விரதம் - ரு - அனுவிரதம், குணவிரதம், சிக்ஷாவிரதம்.

வில்வகை -ஙி- அங்குட்டம், தர்ச்சனி,பேடி, அநாமிகை, கனிட்டை. அவற்றுள் அங் குட்டம் பெருவிரல், தர்ச்சனி சுட்டுவிர ல், பேடி நடுவிரல், இது மத்திமை, அலி யெனவும்பெயர்பெறும், அநாமிகை யாழி விரல், கனிட்டை சிறுவிரல்.

விருத்தி - ச - சாத்துவதி, ஊரபடி, கைசிகி, பாரதி. [அகில், சந்தனம்.

விரை - ஙி - கோட்டம், தருக்கம், தகரம்,

விலக்குறுப்பு - கச - பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம்.

விஞ -ஞி- அறியான்விஞவல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவுதான் கோடல், மெய்யவற்குக்காட்டல்.

விஞ - சு - அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை, எவல்.

வீன - உ - நல்வீன, தீவீன.

வீன - ஞி - பாதகம் (ஞி) காண்க.

விஞைதக்கூத்துவகை-சு-குரவை, கலிநடம், குடம், கரணம், நோக்கு, தோற்பாவை.

விஷயம் - ஙு - பிறிதிவிஷயம், துவேஷ்ஷா விஷயம், உபேக்ஷா விஷயம்.

வீ

வீடுபேறு - க - முத்திப்பேறு.

வீணையினரம்பு - எ - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். [லை.

வீரமுழவு-ச-முரசு, நிசாளம், துடுமை, திமிலை

வீழ்ந்தாடல் - ஞி - துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை.

வெ

வெற்றி -அ- பகைஞரைகவர்தல், பகைவர் கவர்ந்த தன்னிரைமீட்டல், பகை மேற் செல்லல், வரும்பகை முன்னெதிரூன்றல், தன்னரண் காத்தல், பகையரண் வளைத்தல், பொருதல், போர்வெல்லல், இவற்றிற்கு முறையே வெற்றிமாலையாவன: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.

வே

வேதப்பிரிவு - உ - கன்மகாண்டம், ஞான காண்டம்.

வேதம்-ச- இருக்கு, யஜுர்வேதம், சாமம், அதர்வணம்—அன்றியு முபவேதம், ச—ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம் இவையே அப்பிரதான வேதம் எனப்படும்.

வேதாங்கம் - சு - சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோபிசிதம். இவற்றுட் சிக்ஷையாவது வேதத்தின் உச்சாரண லக்கணத்தை யுணர்த்துவது. வியாகரணமாவது வேதத்தின் பதலக்கணத்தை விவரிப்பது. நிருத்தமாவது வேதத்தின் பதங்களுக்கு விவரணங்கூறுவது. சோதிடமாவது இலக்கினம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரண முதலியவற்றால் வைதிக கருமங்களைச் செய்தற்குரிய காலத்தை யறிவிப்பது. கற்பமாவது ஆசுவலாயநீயம், போதாயநீயம், ஆபத்தம்பம் முதலிய சூத்திரங்களிலிருந்து வைதிக கருமங்களைப் பிரயோகிக்கும் முறைமைகளைக் கூறுவது. சந்தோபிசிதமாவது வேதங்களின் உக்தை முதலிய சந்தோபேதங்களுக்கு அக்கர சங்கியை கற்பிப்பது. வேதபுருடனுக்குச் சந்தோபிசிதம் பாதமும், கற்பங்களும், நிருத்தங் காதுகளும், சிட்சை நாசியும், சோதிடங் கண்களும், வியாகரணம் முகமுமாம். [மரங்கள்.

வேல் - உ - வெள்வேல், கருவேல் ஆகிய

வேளாண்மை மாந்தரியல்பு -ய- ஆணைவழிநிற்றல், அழிந்தோரை நிறுத்தல், கைக்கடனுற்றல், கசிசுவகத்துண்மை ஒக்கல் போற்றல், ஒவாமுயற்சி, மன்னிறை தருதல், ஒற்றுமைகோடல், விருந்துபுறந்தருதல், திருந்தியவொழுக்கம்.

வேற்றுமை - அ - எழுவாய், வேற்றுமை முதல் விளிவேற்றுமை யீறுகக்கொள்க.

வேற்றுமையுருபுகள் - சுஞ - ஐ, ஆல், ஆன், ஓடு, ஒடு, கொண்டு, உடன், கு, பொருட்டு, நிமித்தம், இன், இல், �ின்று, இருந்து, அது, உடைய, கண், கால், தலை, இடம், திசை, வாய், வயின், முன், பின், சார், வலம், இடம், கீழ், மேல், அத்து, கடை, புடை, முதல், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புரம், இல்.

வை

வைசியகுல அடியார்கள் - ஞி - அமர்நீதி நாயனார்; இயற்பகை நாயனார், கலிக்கம்ப நாயனார், காரைக்காலம்மையார், மூர்த்திநாயனார், என்பவர்களாம். இவர் சரித்திரங்களைத் திருத்தொண்டர் பெரிய புராணத்திற் காண்க.

வைசியர்-ரூ-தனவைசியர், பூவைசியர், கோவைசியர், இவர்க்கு முறையே தொழில் பொருளீட்டல், பயிர் செய்தல், ஆன்காத்தல், இவர் வருணத்தா லொன்றுயினும் தொழிலான் மூவராயினர்.

வைசியர் தசாங்கம்-ல-திட்கிந்தமலே, பம்பையாறு, கருடக்கொடி, காந்தண்மலர், பைநாகமுரசம், கலிமாருதப்புரவி, கமலகண்டிகைத்தேர், உபலாயபுரிபட்டணம், வைகுந்த வளநாடு, ஜயவாரணம். [நசம்.

வைணவாகமம்-உ-பாஞ்சராத்திரம், வைகா

வைதிகசருமங்கள்-கஉ-கருப்பாதானம், பும்சவனம், சீமந்தம், சனனம், நாமகரணம், உபநிட்கிரமணம், அன்னப் பிராசனம், சௌளம், உபநயனம், விரதம், சந்தியாவந்தனம், போசனவிதி.

வைதிகமதம்-ரூ-மிசிரவைதிகமதம், வைதிகமதம், பரமவைதிகமதம்.

வைத்தியஞ் செய்விப்போன்முறை-ச- பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய்நிலே யுரைத்தல், வன்மை, மருந்துத் துன்பம் பொறுத்தல்.

வைத்தியஞ்செய்வோன்வகை - ச - நோய்ப் பார்த்தற்கஞ்சாமை, ஆசிரியனேவழிபட்டு அடைந்த கல்வி நுண்ணறிவுடைமை, பல காலுந்தீர்த்து வருதல், மனமொழிமெய்கள் பரிசுத்தமாதல்.

வைத்தியமருந்தின்வகை - ச - பல பிணிகளுக்குமேற்றல், சுவைவீரியம் விபாவாற்றல் களான் மேம்படுதல், எளிதிலே பெறப்படுதல், சரீரசுபாவத்தோடு பொருந்தல், இங்ஙனமே அம்மருந்தினையியற்றுவோனும், நோயாளி யிடத்தேயன்புடைமையும், மனமொழிமெய்கள், பரிசுத்தமாதலும், சொல்லியபடியே செய்தல் வல்லமையும், அறிவுடைமையும் பயிறலுற்றவனுதல் சால்பு.

வைத்தியன்செய்யும்வகை -கசு- வியாதியையறிதல், அதன்காரணமறிதல், அதுநீங்குமுபாயந்தேர்தல், பிணிகாலங்களினளவுணர்தல், நோயாளியளவறிதல், சரீரசுபாவமறிதல், பருவகாடல், வேதனைகளினளவறிதல், சாத்தியமாய்தல், அசாத்தியமோர்தல், யாப்பியமுணர்தல், மருந்துசெய்தல், பழையமருத்துவர் முறையிற்றவருமை, உதிரங்கழுதல், அறுத்தல், சுடுதல்.

வைப்புச்சரக்குகள்-கஙி-இந்துப்பு, வைப்பு, பொட்டிலுப்புவைப்பு, வெங்காரவைப்பு, தூரிசுவைப்பு, எவாட்சாரவைப்பு, நவாச்சார வைப்பு, சத்திச்சாரவைப்பு, ஏகாம் பச்சாரவைப்பு, கெந்தியுப்பு வைப்பு, திலாலவண வைப்பு, கெந்திலவண வைப்பு, காய்ச்சலவண வைப்பு, பிடாலவண வைப்பு, சிந்துலவணவைப்பு, காசிலவணவைப்பு.

வைரத்தினக்குணம் - ஙி - எட்டுப்பலகை, ஆறுகோடி, தாரை, சுத்தி, தாரசம்.

வைரத்தினக்குற்றம் - கஉ - சரமலம், கீற்று, சம்படிபிளத்தல், தூளி, காவிந்து, காகபாதம், மிருத்துகோடியில்லன, கோடி முரிந்தன, தாரைமழுங்கல்.

வைரத்தினப் பெருங்குற்றம் - ச - காகபாதம், களங்கம், விந்து, கீற்று இவற்றின் பயன்களாவன - காகபாதங் கொல்லும், களங்கம் நிலந்தருகிளைகெடுக்கும்; விந்து மனத்திற் சந்தாபந்தரும்; கீற்று வசவினையேற்றவர் மாய்வர்.

வைரத்தினவருணநிறம் - ச - அந்தணன், வெள்ளை, அரசன் சிவப்பு, வைசியன் பச்சை, வேளாளன் கருமை.

வைரத்தின வருணப்பயன்-ச-வெள்ளைநிறமுடைய அந்தணசாதிமணியணிந்தக்கால், பிறவியேழும் மறையவராகப் பிறந்து வாழ்வர். சிவப்புநிறமுடைய அரசசாதிமணி யணிந்தக்கால் பூபாலர் தற்சூழப்பூமிபுரப்பர்; பச்சை நிறமுடைய வணிகசாதிமணியணிந்தக்கால் மணியும் பொன்னுமலிந்துதணிவுறவடைந்து தரணியில் வாழ்வர்; கருநிறமுடைய வேளாளசாதிமணி யணிந்தக்கால் தொகையில்லாத கனகமு நெல்லுமலிய மன்னிவாழுவர். [அரசன், வணிகன் சூத்திரன்.

வைரத்தினவருணம் - ச - அந்தணன்,

இலக்கத்தொகைமுறை.



க - ஒருமை, வீடுபேறு.

உ - அகக்கூத்து, அகக்கூத்துக்கை, அகப்பாட்டுத்தலைவன், அகலக்கவிவகை, அகவற்றளை, அசுவனி தேவர், அசை, அந்தணர் மார்க்கம், அபான வாயுவின் தொழில், அரங்கின்வாயில், அருள், அறத்தொடுநிலையின்வகை, அறம், அஃறிணைப்பால், ஆத்மஞானம், ஆகமப் பிரிவு, ஆகமபேதம், ஆகமவகை, ஆசாரியர்வகை, ஆடற்பேதம், ஆண்டருளு முறை, ஆதித்தன்றேவிமார், ஆயுதவகை, ஆய்தக்குறுக்கும், ஆய்தம், ஆரபடியிலக்கணம், ஆலயவகை, ஆன்மா, இடம், இதிகாசம், இந்திரியவகை, இயக்கர் நகரம், இயற்கைப்புணர்ச்சி, இரவுக்குறியிடை யீட்டுவகை, இரப்பு, இரவிமனேவியர், இராமன்குமாரர், இராமோபதேசமந்திரம், இருத்தலின்பகுதி, இருமை, இலக்கணவகை, இலக்கியம், இலங்கைச்சிவதலம், இறைவனிலக்கணம், உருத்திராக்கவளவு, உவா, உழிஞையிலக்கணம், எச்சம், எழுத்திலக்கணம், எழுத்து, எவல்வினை, எவல்வினைமுற்று, ஐயனார் தேவிமார், ஐயனார் வாகனம், ஒழுக்கவகை, கண், கந்தம், கருங்கை, கற்பம், கற்பிதம், காப்பியவகை, காப்பியவமைப்புவகை, காருகத்தொழில், காலவகை, காவிரிப்பூம் பட்டினப்பொய்கை, கிரகத்துட் சமர், கிரகத்துட் சத்திரியர், கிரகத்துட் பிராமணர், கிரகத்துள் வேளாளர், கிரகத்துள் வைசியர், கிருகத்தர்வகை, கூத்துவகை, கொடைப்பயன், சிவசின்னம், சுடர், சுப்பிரமணியர் தேவிமார், ஞானம்தரும் வகை, திணைவகை, தோற்றம், பாயிரம், புறத்திலக்கணம், பொருள், மரபு, முத்திவகை, முத்துக்குணம், முத்துக்குற்றம், வசைக்கூத்தின்வகை, வழக்கு, வாரச்செய்யுள், விட்டுணுவின் மனேவியர், விநோடக்கூத்துவகை, வினை, வேதப்பிரிவு, வைணவாகமம்.

ஊ-அகங்காரவகை, அகச்சமயம், அகச்சுவை, அகவிற்பாவினம், அக்கினி, அக்கினிதேவர்வகை, அஞ்ஞானவிரோதம், அடியவரிலக்கணம், அடியவர்சாதனம், அணுவகை, அதிகாரர், அதிசயம், அதிபாதகவகை, அந்தணர்க்குரியபொருள், அரங்கினெழினி, அரசர், அரசர்குலம், அரசர்க்கொடி, அரசர்மாலை, அருகன்குடை, அருகன்மதில், அவத்தை, அவதி, அவத்தைக் காரணவகை, அவத்தைக் காரியவகை, அறத்துவகை, அறவகை, ஆகமப்பொருளிலக்கணம், ஆசாரவகை, ஆசாரவிதம், ஆசிரியர், ஆடலின்கூறுபாடு, ஆதமார்க்கீகசாத்திரம், ஆதியான்மீகசாத்திரம், ஆளத்தி, ஆன்மசரீரம், ஆன்மாக்களின்வகை, இசை, இசைப்பாச்சாதியோசை, இசைபிறக்கும் வகை, இடந்தலைப்பாட்டின்வகை, இடம், இதிகாசம், இயல்புவழக்கு, இராசிவீதி, இலக்கின வகை, ஈச்சுரன் வகை, ஈடணம், உடம்பிற்றோன்றும்பாவம், உடல், உடல்வகை, உண்மைப்பொருள், உயிர்த்தீ, உலகம், ஊழ்வகை, எழினி, எது, எதுப்போலிவகை, ஏறு, ஒழிவு, ஒற்றர், ஒற்றெழுத்துவகை, கடன், கடுகம்கற்பபேதம், காங்கூலக்கை, காதலர், காரணம், காலம், கிரகவகை, கிரகத்துட்பெண், கிரகவடிவம், கிரகத்துட்குறியர், கிரகத்துளலி, கிரகத்துளாண், கீதவுரு, குணம், குற்றம், கொடைவகை, சத்தி, சந்திரன், சாதியோசைகள், சாத்திரம், சிந்தையுட்பட்டோனவிநயம், சிவன்வகை, சீவதேகம், சீவாவத்தை, சுடர், சூரியசந்திரர் முதலியவீதி, தகுதிவழக்கு, தமிழ், தாளம், தீ, தொழில், நூல், பக்குவர், பசாசக்கை பரிச்சேதம், பலி, பவளக்குற்றம், பழம், பாதகம், பாவபுண்ணியவழக்கம், பாவனை, பாவினம், பிணி, புரம், போதம், பொறி, போதப்பிரகாரம், மங்களாசாசனை, மண்டலம், மலம், மாயை, முத்திவிக்கினம், மும்மை, முரசு, மெய்க்கூத்து, மெய்யெழுத்துவகை, மொழி, யானை, யுத்தி, வண்ணம், வாச்சியக்கூறுவகை, விநாயகன் சத்திகள், விரதம், வைதிகமதம், வைதிகசருமங்கள்.

சு-அகவற்சீர், அகவற்பாவகை, அங்க

தருமம், அங்கம், அசிதாகமோபபேதம், அணிவகுப்புவகை, அதிகதுன்பங் தொடுப்பன,அத்தியாசம், அதுபந்தலக்கணம், அபாவம், அரங்கின்பூதர், அரங்கின்வாயில், அரண், அருகன்வென்றவினை, அருகன்வென்றவுபாதி, அருவவடிவம், அவதூதி, அவிநயஇலம், அளவு, அறத்தொடுநிற்பார்க்கு வினை நிகழுமிடம், அறத்தொடுநிற்றற்குரியார், அனுபந்தம், ஆகமபாதம், ஆசான்சாதி, ஆசாரியராதற்குரியகுலம், ஆசாரியர் ஆச்சிரமம், ஆடவர்குணம், இடத்தையச்சொல், இயக்கம், இயற்சொல், இராகத்தகுதி, இராமர், இழிச்சொல், இறைவன்றேவிமார், ஈகைவகை, உகம், உண்டி, உதயணன், மந்திரிமார், உத்தமகுலத்தார், உத்தமத்தோற் பெருங்கருவிவகை, உபாயம், உம்மைத்தொகைவகை, உயிர்த்தோற்றம், உரிச்சொல், உரை, உருத்திராக்கத்தின் பெயர்கள், உருத்திராக்கவருணம், உவமத்தொகை, ஊறுபாடு, ஒடுக்கம், கணக்குவகை, கணிகையர்,கண்ணேவுற்றோனவிநயம், கதி, கரணம், கவி, காட்சியளவைவகை, காயசாதிப்புருடர், கிரகத்துள் நெடியர், கிரியைக்கை, கீதவுறுப்பு, கேந்திரம், கேள்வி, கோவாங்குமணிநிறம், சங்குசதுரகம் சத்திநிபாதம், சந்தானாசாரியர், சந்தியாவந்தனம், சமயகுரவர், சம்பந்தம், சரியைவகை, சாதி, சாதிப்பெரும்பண்,சாந்திக்கூத்து,சாந்துவகை, சிவபூசையியல்பு, சிவாகமபாதம், சொல், சொற்பாகுபாடு,ஞானசதுட்டயம், ஞானவகை, தாளப்பகுதி, திருமாலாடல், திறவகை, தீக்கணத்தின் பெயர், தீக்கணப்பயன், துறவறத்தின்துறை,தோற்றம், நீலமணிச்சாதி, நூற்பயன், பகைநரம்பு, படைவகுப்பு, பண், பதவி, பருவம், பா, பாலைவகை, புண்ணியத்தோற்றம், புண்ணியம், புருடார்த்தம், புலமையோர், பூ, பெண்வகை, பொருள், பொருள்வகை, பொன்வகை, மருந்து, மாணிக்கச்சாதி, மேடவீதி, யாழ்வகை, யாழ்வகைநரம்பு, யுகம், யோகவகை, யோகினிவகை, வண்டு, வருணம், வருத்தனை, வாஜைர்வரம், விட்டுணுவின்குரு, விருத்தி, வீரமுழவு, வேதம், வைரரத்தினப் பெருங்குற்றம், வைரரத்தினவருணம், வைரரத்தினநிறம், வைரரத்தினப் பயன், வைத்தியன், மருந்து வகை.

ஙி - அகதத்துவம், அகிற்கூட்டு, அக்கினி, அங்கம், அடி அடித்தொடை, அண்டம், அதிகாரிகள், அந்நுவயலக்கணம், அபாவாலங்காரம், அபாவவேறுபாடு, அரங்குறுப்பு, அரசர்குழு, அரசர்க்குறுதிச்சுற்றம், அலங்காரப்பா, அவத்தை, ஆகமவுற்பத்தித்தானம், ஆற்றுப்படை, இசைக் கருவி, இசைக்குழற்குரியன, இடந்தலைப் பாட்டின் விரி, இந்திரன்றருக்கள், இரவிமைந்தர், இராமன் பூசித்தவிடம், இலக்கணம், இலிங்கம், இல்லறத்தார் பொதுச்சீலம், இறைவன் சத்திகள்,இறைவன்றொழில், ஈச்சுரசத்தி, ஈச்சுரன்முகம், உடற்குறைவு, உணவு, உப புராண விலக்கணம், உயிர்ப்பொருள்களின் றொழிற்பண்பு, உரையிலக்கணம், உருத்திராக்கவகை, உலோகம், எழுத்துத் தானம், ஐம்புல நுகர்ச்சியினிறப்பன, ஒடுக்கம், ஓடவகை, கடல்படுதிரவியம், கருமேந்திரியம், கருவுள்வாதனை, கலைவகை, கன்னிகை, காற்றின் குணம், கிரகபாடைவகை, குதிரைக்குரற் குணம், குதிரைநடை, குரவர், குற்றம், குற்றெழுத்து, கூந்தற்பால், கேள்வி, கௌடம், கோசம், கௌலியம், சடக்குணப்பண்பு, சத்தம், சத்தி, சந்தி, சபை, சயனம், சிவதத்துவம், சூதகம், தந்தையர், தரு, தாயர், தாளம், திராவிடம், திருமாலாயுதம், துரககதி, தூபம், தேவர், தொழில், நகர் படுதிரவியம், பஞ்சபரமேட்டிகள், பஞ்சமூலம், பசு, பாதகம், பாலைப் பண்ணின்றிறம், பாலையாழின்றிறம், பால், புராணலக்கணம், புலன், பூதம், பொதுப்பாயிரம், பொறி, மத்திமதானவகை, மலைபடுதிரவியம்,மன்மதன்கணை, மாயை, யாகம், வங்கியத்தின் கூறுபாடு, வண்ணம், வாசம், விரல்வகை, விசை, விழு, வீழ்ந்தாடல், வைசியகுல அடியார்கள், வைரரத்தினக் குணம்.

சு - அகப்பகை, அகப்பாட்டுச் சமயம், அகவலிறுவன, அகிற்கூட்டு, அங்கம், அசங்கதவிரி, அந்தணர் தொழில், அத்துவா, அத்தியாச்சிரமிநாமம், அரசர்க்குத்தானை, அரசர் தொழில், அரசவருண எழுத்துக்கள், அரசியல், அரசியல்வகை, அலிக்கை, ஆசமனீய திரவியங்கள், ஆட்டின்வகை, ஆணகை, ஆதாரதலம், ஆதாரதேவதைகள், ஆதாரதோற்றம்,

ஆதாரம், ஆன்மவறிவு, இசை நிறைய சைச்சொல், இராமாயண வகை, இலக்கியப் பொருட்டொடர் நிலைச் செய்யுள், இலங்கைச் சுப்பிரமணியதலம், இழிப்பினவிசயத்தன்மை, ஈச்சுரன் முக்கிய குணம், உட்சமயம், உட்பகை, உதயணகாவிய காண்டம், உயிர்ப் பிறப்பு, - உருத்திராக்கந்தரிக்கலாகாத காலங்கள், உவர்ப்பு, ஐந்தாம் வேற்றுமையுருபுகள், ஐயமுற்றுனவி நயக் குணம், ஐயவிநயம், கந்தபுராண சங்கிதை, கருமபூமிக்குரிமை, கருவுளமைப்பு, கன்மமல காரியம், காடுபடு திரவியம், காட்சி, காலம், சக்கிரவர்த்திகள், சமயம், சாத்திரம், சுப்பிரமணியர் சட்குணம், சுப்பிரமணியர் திருமுகம், சுப்பிரமணியர் பிரதானதலம், சுவை, சூத முனிவர், மாணக்கர், தானை, தொழில், பருவகாலம், பவளக் குணம், பா, புறச் சமயம், பொழுது, போகபூமி, யோகாசனம், வண்ணக்கூறுபாடு, விகாரம், விஞ, வேதாங்கம்.

எ-அகத்திணை, அகப்புறத் தத்துவம், அணிவகுப்புறுப்பு, அதமதானவகை, அரசர்நிலை, ஆரவகை, இசை, இசைக்குரிய சுவை, இசைக்குரியதேவர், இசைக்குரிய ராணம், இசைமாத்திரைகள், இசை யெழுத்து, இசையோசை, இடைவள்ளல், இந்திரன் மேகம், இலிங்கவகை, ஈசுவரி பேதம், ஈதி, உலோகம், ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கோள், கடல், கடைவள்ளல், கடைப்படுதானம், காமவவிநயக்குணம், கீழுலகம், குதிரைச்சுழி, குதிரைநிறம், குதிரையின் பிறப்பிடம், கொடை, சத்தசு, சிரஞ்சீவியர், சீதமுற்றுனவிநயம், சுரம், சூரியன்றேர்க் குதிரைகள், ஞஞ்ஞையுற்றுனவிநயம், தாபதி நிலை, தலைவள்ளல், தாது, தாளப் பகுதி, தீவு, தூக்கு, பருவம், பாதகம், பாலை, பிறம்பு, புண்ணியம், புரி, பெரிரியோரியல்பு, பெருங்கல விலக்கணம், மதம், மண்டலம், மருத்துக்கள், மலை, மறத்துறைவகை, மாதர்கள், மாயைக் குணம், முழவு, முனிவர், மேகம், மேலுலகம், வங்கியம், பண், வாரம், வித்தியா தத்துவம், வீணையினரம்பு.

அ-அங்கதருமம், அங்கயோகம், அம்பரசித்திகள், அரசர்க்குத் துணைவர், அருகன்குணம், அருகன்சிறப்பு, அருக்கியதிரவியம், அளவை, அறத்துறுப்பு, அஃறிணை வினைமுற்று, ஆகமங்களின் சார்பு நூல், ஆகமமார்க்கம், ஆணவமலகாரியம், ஆதித்தன் பிள்ளைகள், ஆனந்தம், இசைக்காரணம், இசைக்கிரியை, இசைக் குரியவகை, இசைப்பெருந்தானம், இராசதகுணவகை, இல்லறநிட்டாபரர் சீலம், ஈசன் வீரநிகழ்ந்த இடம், ஈசன் வீரம், ஈச்சுரன் குணம், உடற்குறை உழிஞைத் துறை, ஊறு, எச்சம், ஐசுவரியம், கணம், கணிதம், கண்ணன், மனவியர், களித்தோனவிநயக் குணம், குதிரை நிறக்குற்றம், குருவிந்த மாணிக்கநிறம், குறிக்கோள், குற்றம், கூலம், சாரணர், சித்தி, சுபம், சைவாகமச் சார்பு நூல், தயாவிருத்தி, தாமத குணசித்தி, திக்கு, திக்குநாகம், திக்கு பாலகர், திக்குயானைகள், தொகைநிலை, புறப்பொருள்வகை, பெண்ணக பெருந்தானம், பொருள்கோள், பொருளாராய்ச்சிவகை, போகம், மங்கலம், மணம், மரகதக்குணம், மகரதக்குற்றம், மன்னவர்சகாயர், மூர்த்தம், மூர்த்த வதிதேவதை, மூர்த்தவதி தேவதைகளின் மனவியர், மூர்த்தவதி தேவதைகளின் மைந்தர், மெய்ப்பரிசம், வசுக்கள், வணிகர்குணம், வரி, விடை, வெற்றி.

கூ-அடியவருள் தொகையார், அதிசயாலங்காரவகை, அரங்கிற்காகாநிலம், அறத்தொடு நிற்குங்காலம், ஆண்மை, இகழ்ச்சிக் குறிப்புச்சொல், இசையிலக்கணம், இரதம், இரவுக்குறிவகை, இராசியுச்சக்கோள், ஈசன்பேதம், உடலவர்த்தனை, உலோகம், கண்டம், கதிர்காமக் கடவுடிருநாமங்கள், கிரகதானியம், கிரகபுட்பங்கள், கிரகரத்தினம், கிரகலோகம், கிரகவாகனம், கிரகாங்கங்கள், கிரகாசனம், கிரகம், குதிரைவழுவிலக்கணம், சித்தர்சேரு வெள்ளவகை, தாமத குணம், தாரனை, தாளம், புண்ணியம், பொருளின் பொதுத்தொழிற் பண்பு, மணி, வாயில்,

ஔ-அகத்திலக்கணம், அங்கம், அடுக்கு நிலைப்பொருள், அதிசய மொழி, அப்பவருக்கம், அரசர்க்குரியன, அவத்தைக் காரியவிரி, அழகு, அன்மொழித் தொகைக் கூறுபாடு; ஆகமசிவபேதம், ஆண்பாற்பிள்ளைக்கவிப் பருவம், இந்திரியங்கள், இறையனாரகப் பொருளினுரையை

முறை கூறினவர், இயமம், ஈழமண்டலப்பிரிவு, உருத்திராக்கந் தரிக்குந் தானங்கள், குதிரைச்சுழியளவு, குற்றம், கோடல்வகை, கௌடதெறி, சத்துவம், சாதி, சாதுரங்கமாணிக்கநிறம், சிற்பத் தொழிற் குறுப்பு, சேனைத் தொகை, சொல்வகை, தாளப்பிரமாணம், திக்கு, திருமாலவதாரம், தீக்குணம், துவர், புராணலக்கணம், புறத்திலக்கணம், மகளிரான் மலர்மரம், மூலம், யோகம், வாயு, வேளாண்மை மாந்தரியல்பு.

ககக - அழுதவெழுத்துக்கள், அவசிய கருமஞ் செய்யலாகா விடங்கள், அஃறிணைப் பெயர், இடைச் சொல், உருத்திராக்கந் தரிக்குங் காலங்கள், கரணம், காவிரிப்பூம் பட்டினப் பெயர்கள், தேவசாடல், பாணிவிகற்பம், வானோர் கணம்.

